ஐரோப்பிய வரலாறு

(1870 முதல் 1919 வரை)

(மேற்பட்டப் படிப்பிற்குரியது)

ஆசிரியர்கள்

D. பாலசுப்பிரமணியன், எம். ஏ.,
எம். ஏ. (Wis. U.S.A.), F. I. H.,
தலைவர் (வரலாறு, அரசியல் துறை);

R. இராதாகிருஷ்ணன், எம். ஏ., பி. எட்.,
விரிவுரையாளர்,
வரலாற்றுத் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
சிதம்பரம்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

அணிந்துரை

(திரு. செ. அரங்கநாயகம், தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினெட்டாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் இளங்கலை வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளில் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்துள்ள நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில் கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகமும் சென்னைப் பல்கலைக் கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வரலாற்றியல், அரசியல், உளவியல், பொருளியல், மெய்ப் பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணித வியல், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்ட வியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூலநூல்கள், மொழி பெயர்ப்பு நூல்கள் என்று இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றுான ஐரோப்பிய வரலாறு (1870 முதல் 1919 வரை), என்னும் இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 808 ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 843 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு, கல்வி, சமுக நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக் கழக நூல்கள் வெளியிடும் 'திட்ட'த்தின்கீழ் வெளியிடப் படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கலையியற் பாடங் களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளரவேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பது தான். 'எதிலும் தமிழ்; எங்கும் தமிழ்' என்னும் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு தமிழக ஆசிரியப் பெருமக் களையும், மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப் புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரித்தாகுக!

செ. அரங்கநாயகம்

முன்னுரை

ஐரோப்பிய வரலாற்றில் 1870ஆம் ஆண்டு, ஒரு முக்கிய மாறுதலைக் குறிக்கும் ஆண்டாகும். இவ்வாண்டு ஒரு சகாப்தத்தின் முடிவையும், பிறிதொரு சகாப்தத்தின் தொடக்கத்தையும் குறிப்பிடுகிறது.

பத்தொன்பதாம் நூற்றுண்டு முதற்கொண்டு பிரிட்டனில் தொழிற்புரட்சி தீவிரமாகப் பரவியதன் காரணமாக இந் நாடு ஐரோப்பிய நாடுகளின் அரசியலில் அவ்வளவாக ஈடுபடாமலிருந்தது. மேலும், இச்சமயத்தில் பிரிட்டன் வெளிநாடுகளில் தனது முழுக் கவனத்தையும் செலுத்தித் தனது கடல் வலிமையையும், வாணிபத்தையும் பெருக்குவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தது. எனவே, இக்காலத்தில் ஐரோப்பிய அரசியலில் பிரான்சு அதிகச் செல்வாக்குப் பெற்று விளங்கியது.

1789ஆம் ஆண்டில் ஏற்பட்ட பிரஞ்சுப் புரட்சியைப் பயன்படுத்திக்கொண்டு முதலாம் நெப்போலியன் பிரான்சின் ஆட்சியைக் கைப்பற்றிப் படிப்படியாக உயர்ந்து பிரான்சின் பேரரசராகத் தமக்குத்தாமே முடிசூட்டிக் கொண்டு ஐரோப்பா முழுவதிலும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினுர். இதனுல் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் பிரிட்டனின் தலைமையில் ஒன்றுபட்டு பிரான்சை எதிர்த்தன. இருப்பினும் இந் நாடுகள் அனைத்தும் 1814ஆம் ஆண்டுவரை பிரான்சைக் கண்டு அஞ்சின. 1814ஆம் ஆண்டில் முதலாம் நெப்போலியன் இறுதியாகத் தோற்கடிக்கப்பட்டு செயின்ட் ஹெலினு என்ற தீவில் சிறை வைக்கப்பட்டவுடன் ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னுவில் ஆஸ்திரியாவின் முதலமைச்சரான மெட்டர்னிக்கின் தலைமையில் 1815-ல் கூடிய வியன்னு மாநாடு ஐரோப்பாவின் பழைய நிலையை மீண்டும் நிலைநாட்டியது. இருப்பினும் பிரான்சு ஐரோப்பாவில் ஒரு வலிமைவாய்ந்த வல்லரசு நாடாகவே கருதப்பட்டது. 1815ஆம் ஆண்டிலிருந்து 1848ஆம் ஆண்டுவரை ஐரோப்பிய நாடுகளின் அரசியலில் மெட்டர்னிக்கின் கருத்துகளுக்கு அதிகச் செல்வாக்கு இருந்ததால் இக்காலம் 'மெட்டர்னிக்கின் காலம்' என அழைக்கப்பட்டது.

1848ஆம் ஆண்டிற்குப் பின்னர் மத்திய ஐரோப்பிய நாடுகளில் விடுதலைக் கருத்துகளும், தேசியக் கருத்துகளும் பரவ ஆரம்பித்தன. அதனுல் 1848-ல் இரண்டாம் முறையாக பிரான்சில் ஒரு குடியரசு நிறுவப்பட்டு லூயி நெப்போலியன் என்பவர் அக் குடியரசின் தலைவரானுர். இக் குடியரசு 1852 வரை நிலைத்திருந்தது. இக்காலத்தில் லூயி நெப்போலியன் பல சீர்திருத்தங்களைப் பிரான்சில் ஏற்படுத்தினுர். இதனுல் இவர் பிரான்சில் மட்டுமன்றி ஐரோப்பிய நாடுகளின் அரசியலிலும் சற்றுச் செல்வாக்குப் பெற்றுர். படிப்படியாக அதிகாரங்களைப் பெற்ற இவர் இரண்டாம் பிரஞ்சுக் குடியரசை 1852-ல் இரண்டாம் பிரஞ்சுப் பேரரசாக மாற்றித் தாமே மூன்ரும் நெப்போலியன் என்ற பட்டப் பெயருடன் பிரான்சின் பேரரசரானுர். இவர் பிரான்சின் பேரரசராக 1870 வரை ஆட்சி புரிந்தார்.

ஆஸ்திரியாவில் இரண்டாம் பிரான்சிஸ் என்பவர் 1804 முதல் 1835 வரை பேரரசராக விளங்கினுர். இவருக்குப் பின்னர் முதலாம் ஃபெர்டினண்டு என்பவர் 1835 முதல் 1848 வரை ஆஸ்திரியாவின் பேரரசராக விளங்கினுர். இவருக்குப்பின் ஆஸ்திரியாவின் பேரரசரான பிரான்சிஸ் ஜோஸப் என்பவர் 1848 முதல் 1916 வரை ஹாப்ஸ்பர்க் பேரரசராக விளங்கினுர். இவரது காலத்தில்தான் பல குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் ஐரோப்பாவில் நடைபெற்றன. இவர் ஆஸ்திரியப் பேரரசராக இருந்தபொழுது ஆஸ்திரியா, ஐரோப்பிய அரசியலில் மிக வலிமை வாய்ந்த பேரரசாகக் கருதப்பட்டது. இவரது காலத்தில் தான் ஆஸ்திரியாவின் தென்பகுதியில் அமைந்துள்ள இத்தாலி, சார்டீனியாவின் மன்னரான விக்டர் இமானுவேல் என்பவரது தலைமையின்கீழ்க் கவூர், கரிபால்டி, மாஜினி என்பவர்களது பெரு முயற்சியாலும் ஒத்துழைப்பாலும் ஐக்கியமடையத் தொடங்கியது. 1870-ல் பிரான்சுக்கும் பிரஷ்யாவிற்குமிடையே ஏற்பட்ட பிரஞ்சு-பிரஷ்யப் போரின் மூலமாக இத்தாலி முழு ஐக்கியம் அடைந்து 1870முதல் ஒரே நாடாக விளங்க ஆரம்பித்தது.

இதே காலத்தில்தான் பிரஷ்யாவில் 1861 முதல் மன்னராக இருந்த முதலாம் வில்லியத்தின் தலைமையின்கீழ் ஜெர்மனி ஐக்கியமடையத் தொடங்கியது. ஐரோப்பாவின் 'இரும்பு மனிதர்' என்று பெயர் பெற்றவரும், அக்கால ஐரோப்பிய அரசியலை நன்குணர்ந்தவருமான ஆட்டோ வான் பிஸ்மார்க் என்ற பிரஷ்யாவின் முதலமைச்சர் ஜெர்மனிய ஐக்கியத்திற்குப் பிரஷ்ய மன்னரான முதலாம் வில்லியத்துடன் பெரிதும்

ஒத்துழைத்துப் பாடுபட்டார். இத்தாலிய ஐக்கியத்தைப் போலவே, 1870ஆம் ஆண்டில் ஏற்பட்ட பிரஞ்சுப்-பிரஷ்யப் போரினால் ஜெர்மனியின் ஐக்கியம் முழுமையடைந்தது. இப் போரின் விளைவாக ஜெர்மனி அல்சேஸ், லொரைன் ஆகிய இரு பகுதிகளைக் கைப்பற்றியதுடன், பிரான்சு நாட்டின் தலைநகரான பாரிஸ் நகரத்திற்கருகில் இருந்த வார்சே மாளிகையில், பிஸ்மார்க்கினால் முதலாம் வில்லியத்திற்கு ஜெர்மனிய அரசர் என்ற பட்டம் சூட்டப்பட்டு, முடிசூட்டு விழாவும் நடைபெற்றது.

இவ்வாறு 1870-ல் பிரிட்டன், பிரான்சு, ஆஸ்திரியா-ஹங்கேரி, ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகள் ஐரோப்பிய வல்லரசுகளாகத் திகழ்ந்தபொழுது தாழ்நில நாடுகளான, பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பர்க் போன்ற நாடுகளிலும், ஸ்காண்டிநேவியத் தீபகற்பத்திலும், ஸ்பெயின் போர்ச்சுகல் ஆகிய நாடுகளிலும், சுவிட்சர்லாந்திலும் அரசியலில் அதிக மாற்றங்கள் இல்லாமல் பழைய வாரிசுரிமை முறையில் முடியாட்சிமுறை நடைபெற்று வந்தது.

இரஷ்யாவின் ஸார் மன்னர்கள் தெய்விக அரசுரிமைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஆட்சிபுரிந்து வந்தனர். இவர்களில் இரண்டாம் அலெக்ஸாந்தர் என்பவர் 1855முதல் 1881வரை இரஷ்யாவின் 'ஸார்' மன்னராக விளங்கினார். இவரது ஆட்சிக்காலத்தில் இரஷ்யாவில் பல உள்நாட்டுச் சீர்திருத்தங்கள் ஏற்பட்டதுடன் இரஷ்யா ஒரு வலிமைவாய்ந்த வல்லரசாகவும் விளங்கத் தொடங்கியது.

கான்ஸ்டான்டிநோபிளைத் தலைநகராகக்கொண்ட உதுமானியப் பேரரசில் இருந்த ஐரோப்பியப் பகுதிகள் அப் பேரரசுக்குக் கட்டுப்பட்டு இருந்தன. உதுமானியப் பேரரசின் பிற பகுதிகளைப்போலவே இப் பகுதிகளிலும் எவ்வித வளர்ச்சியும் ஏற்படவில்லை. பால்கன் நாடுகளிலும் பழைய முடியாட்சியே நடைபெற்று வந்தது.

ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் குறிப்பாக 1870ஆம் ஆண்டிற்குப் பின்னர் இவ் ஐரோப்பிய நாடுகளில் தொழிற்புரட்சி சிறிது சிறிதாகப் பரவத் தொடங்கி, இந் நாடுகளின் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகிக்கத் தொடங்கியது. அதனுடன் இக்காலத்தில் தேசியக் கருத்துகளும், ஏகாதிபத்தியக் கொள்கைகளும் ஐரோப்பிய மக்க

ளிடையே செல்வாக்குப் பெற்றன. தொழிற்புரட்சி பொருளா தாரத் துறையில் குறிப்பிடத்தக்க மாறுதல்களை ஏற்படுத்தியதால் தொழிற்சாலைகளில் பணியாற்றிய தொழிலாளர்கள் அரசியலில் செல்வாக்குப் பெறத் தொடங்கினர். தொழிலாளர்களின் நன்மைகளுக்காகப் பல சட்டங்கள் இயற்றப்பட்டதுடன் பல சமுதாயச்சீர்திருத்தங்களும் இக்காலத்தில் ஏற்பட்டன. தேசியக் கருத்துகள் வளர்ச்சியடைந்ததன் காரணமாக ஐரோப்பிய மக்களிடையே ஜனநாயகக் கருத்துகள் செல்வாக்குப்பெற்றன.

ஏகாதிபத்தியக் கொள்கைகளின் வளர்ச்சியின் காரணமாக ஐரோப்பிய நாடுகளிடையே தொழில்துறையில் போட்டி ஏற்பட்டது. இதனுல் தங்கள் தொழில் வளர்ச்சிக்காகவும், பொருளாதாரநிலையை மேம்படுத்துவதற்காகவும் இவ் ஐரோப்பிய நாடுகள் பிற உலக நாடுகளில் தங்கள் கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தன. இதனுல் உலகின் பல பகுதிகளிலும் ஐரோப்பியர்களின் ஆதிக்கம் ஏற்பட்டு ஐரோப்பிய நாகரிகமும், பரவியது. மேலும், இதன் பயனுக பன்னுட்டு வாணிபமும், கடல் வாணிபமும் வளர்ச்சியடைந்தன. ஐரோப்பாவில் மட்டுமே இருந்த கிறிஸ்தவ மதமும் உலகின் பிறபகுதிகளிலும் பரவ ஆரம்பித்தது.

அடுத்து ஏகாதிபத்தியக் கொள்கைகளின் காரணமாகவும் தேசியக் கருத்துகளின் காரணமாகவும், ஐரோப்பிய வல்லரசுக ளிடையே போட்டிகள் ஏற்பட்டன. அதன்பயனுக ஐரோப்பிய நாடுகளிடையே 1901 முதல் 1913 வரை அரசியல், இராணுவம் ஆகிய முக்கியத் துறைகளில் சில பிரச்சினைகள் ஏற்பட்டன. இதனைத் தொடர்ந்து சில நாடுகளில் அரசுக்கும் திருச்சபைகளுக்குமிடையே அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டு, திருச்சபை அரசாங்கத்தினின்றும் தனியாகப் பிரிக்கப்பட்டது. வளர்ச்சியடையாத நாடுகளில் இருந்த இளைஞர்கள் குறிப்பாகத் துருக்கிய இளைஞர்கள், தங்கள் நாட்டின் அரசுகளுக்கு எதிராகச் செயல்பட்டு ஆங்காங்கே புரட்சிகளை ஏற்படுத்தத் தொடங்கினர்.

மேலும் தேசியக் கருத்துகளின் காரணமாகவும், ஏகாதிபத்தியக் கொள்கைகளின் காரணமாகவும், ஐரோப்பிய நாடுகள் தற்காப்பு என்ற பெயரில் தங்கள் நாடுகளின் இராணுவத்தைப் பலப்படுத்தியதுடன், இராணுவத்திற்காகப் பெருந் தொகைகளையும் செலவு செய்தன. இவ்வாறு ஐரோப்பிய நாடுகளிடையே இராணுவத் துறையில் போட்டிகள் ஏற்பட்டன. தேசியக் கருத்துகளின் காரணமாக ஆஸ்திரியர்களுக்கும் செர்பியர்களுக்குமிடையே கருத்துவேற்றுமை தீவிரமடைந்ததில்

நிகழ்ந்த ஒரு கொலை 1914-ல் முதல் உலகப்போர் ஏற்படக் காரணமாயிற்று. நன்கு பயிற்சிபெற்ற போர் வீரர்கள் போதிய போர்க் கருவிகளைப் பெற்றிருந்ததால் இப்போரில் பங்குபெற்ற நாடுகள் ஒவ்வொன்றும் தனது எதிரிகளைத் தோற்கடித்து வெற்றி பெற முயன்றன. எனவே, இப் போர் 1918வரை தொடர்ந்தது. கடற்படையில் வலிமைபெற்று இருந்த தனது முக்கிய எதிரியான பிரிட்டனைத் தன்னிடம் சரணடைய வைப்பதற்காக ஜெர்மனி நீர்மூழ்கிக் கப்பல்களைத் தனது கடற்போரில் பயன்படுத்தியதால் முதல் உலகப் போரில் ஐக்கிய அமெரிக்கா ஜெர்மனிக் கெதிராக இறங்கியது. இதனால் நேச நாடுகளின் பலம் அதிகரிக்கவே மத்தியப் பேரரசுகள் தோற்கடிக்கப்பட்டு இறுதியில் ஜெர்மனி 1918-ல் நேசநாடுகளிடம் சரணடைந்தது.

ஜெர்மனி சரணடைந்த பின்னர் நேசநாடுகளும் மத்தியப் பேரரசுகளும் தங்களிடையே சமாதான உடன்படிக்கைகளைச் செய்து கொள்வதற்காகப் பாரிஸில் ஒரு மாநாட்டைக் கூட்டின. இம் மாநாட்டில் முதல் உலகப் போரில் பங்குபெற்ற எல்லா நாடுகளின் பிரதிநிதிகளும் பங்கு பெற்றனர். இதன்பயனாக இம்மாநாட்டின் இறுதியில் ஜெர்மனியுடனும், அதன் நட்பு நாடுகளுடனும் பாரிஸ் அமைதி உடன்படிக்கைகள் என்ற பெயரில் வெற்றிபெற்ற நாடுகள் பல உடன்படிக்கைகளைச் செய்துகொண்டன. ஐக்கிய அமெரிக்காவின் குடியரசு தலைவரின் பெரும் முயற்சியின் காரணமாக எதிர்காலத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்காகவும் உலக நாடுகளிடையே ஏற்படும் தகராறுகளை சமாதானமுறையில் தீர்த்துக் கொள்வதற்காகவும் சர்வதேசச் சங்கம் என்ற பன்னாட்டு நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டுச் சில காலம் அமைதிகாக்கப்பட்டது.

இவ்வாறு 1870ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஐரோப்பிய நாடுகளில் தொழில் வளர்ச்சியும், தேசியக் கருத்துகளும், ஏகாதிபத்தியக் கொள்கைகளும் வளர்ச்சியடைந்து புதிய மாற்றங்கள் ஏற்பட்டதால் 1870ஆம் ஆண்டு ஐரோப்பிய வரலாற்றில் ஒரு முக்கிய ஆண்டாகக் கருதப்படுகிறது. இவ்வாண்டு ஐரோப்பாவில் நீண்டகாலப் பிரஞ்சு ஆதிக்கத்தை முடித்து ஜெர்மனிய ஆதிக்கத்தைத் தொடங்கச் செய்தது. இதனை மார்லி பிரபு என்பவர் ஐரோப்பாவின் ஆதிக்கம் ஒரு தலைவியிடமிருந்து மாறித் தலைவனின்கீழ் வந்தது என்று பொருள்படும் வகையில் குறிப்பிட்டுள்ளார். எனவே, 1870ஆம் ஆண்டிற்குப்பின் பிரஞ்சு ஆதிக்கத்தின்கீழ் இருந்த ஐரோப்பா எவ்வாறு ஜெர்மனியின்

ஆதிக்கத்தின்கீழ் வந்தது என்பதுபற்றியும், இவ்வாண்டில் ஐரோப்பாவில் எவ்வாறு தொழில் வளர்ச்சி ஏற்பட்டது என்பது பற்றியும் தேசியக் கருத்துகளும், ஏகாதிபத்தியக் கருத்துகளும் ஐரோப்பிய மக்களிடையே எவ்வாறு செல்வாக்குப் பெற்றன. என்பது பற்றியும், இவற்றின் விளைவாக ஐரோப்பாவிலும் மற்ற உலக நாடுகளிலும் ஏற்பட்ட நிகழ்ச்சிகள், போர்கள், மாற்றங்கள், அமைதி உடன்படிக்கைகள், பன்னாட்டு நிறுவனம் ஆகியவைபற்றியும் அடுத்துவரும் அத்தியாயங்களில் விரிவாகக் காண்போம்.

ஆசிரியர்

பொருளடக்கம்

பக்கம்

முன்னுரை iv

1. 1870முதல் 1900வரை ஐரோப்பாவின் நிலை ... 1

1. பிரிட்டன் ... 1

பிரிட்டனின் பொருளாதார வளர்ச்சி—பிரிட்டனில் பாராளுமன்ற அரசும் ஜனநாயகமும்—அயர்லாந்தில் தேசியக் கருத்துகள்—பிரிட்டிஷ் பேரரசும் அதன் சுயாட்சிப் பகுதிகளும்—பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளும் இந்தியப் பேரரசும்.

2. மூன்றும் பிரஞ்சுக் குடியரசு ... 38
3. தாழ்நில நாடுகள் (பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பர்க்) ... 74
4. சுவிட்சர்லாந்து நாட்டில் கூட்டிணைவரசு ... 84
5. ஸ்காண்டிநேவிய அரசுகள் ... 87
6. போர்ச்சுகல், ஸ்பெயின் ஆகிய நாடுகள் ... 93
7. இத்தாலிய அரசு ... 107
8. ஜெர்மனியப் பேரரசு ... 121
9. 1867-க்குப் பின்னர் ஹாப்ஸ்பர்க் பேரரசின் நிலை ... 164
10. இரஷ்யப் பேரரசு ... 176
11. உதுமானியப் பேரரசும் பால்கன் நாடுகளும் ... 200

2. உலகின் பல பகுதிகளில் ஐரோப்பியர்களின் ஆதிக்கம் ... 223

1. தேசியப் போர்க் கருவிகளும் தேசிய ஏகாதிபத்தியமும் ... 223
2. அமெரிக்கா ஐரோப்பியமயமாதல் ... 239
3. ஆசியாவில் ஐரோப்பியரின் ஆதிக்கம் ... 255
4. ஆப்பிரிக்காவை ஐரோப்பியர்கள் கைப்பற்றுதல் ... 284
5. ஐரோப்பியர்களின் அமைதிக்கான முயற்சிகளும் பிரச்சினைகளும் ... 294

பக்கம்

3. கி. பி. 1901முதல்1913 வரை ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல் இராணுவப் பிரச்சினைகள் ... 314

1. பிரிட்டனில் சமுதாயச் சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதில் ஏற்பட்ட பிரச்சினைகளும் அயர்லாந்தின் சுயாட்சியும் ... 315
2. பிரான்சு, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் அரசுக்கும், திருச்சபைக்குமிடையே நடைபெற்ற மோதல்களும், போர்ச்சுகல் நாட்டில் முடியாட்சி அகற்றப்படுதலும் ... 330
3. இரஷ்ய-ஜப்பானியப் போரும் அதன் விளைவுகளும் ... 345
4. இளந் துருக்கியர்களின் புரட்சியும் இத்தாலிய பால்கன் போர்களும் ... 355
5. ஆஸ்திரிய செர்பியப் பிரச்சினைகளும் வல்லரசுகளுக்கிடையே போட்டியும் ... 364

4. முதல் உலகப் போர் (1914—1918) ... 373

1. முதல் உலகப் போரின் தொடக்கம் ... 373
2. முதல் உலகப் போரின் போக்கு ... 386
3. முதல் உலகப் போரில் மேலும் பல சிக்கல்கள் (1915 முதல் 1916 வரை) ... 395
4. பிரிட்டிஷ் கடற்படையின் வெற்றிகள் (1914 முதல் 1916 வரை) ... 414
5. உலகப்போரின் பிரச்சினைகள் (1917—1918)... 422
6. நேச நாடுகளின் வெற்றி ... 440

5. பாரிஸ் நகரத்தில் ஏற்பட்ட அமைதி உடன்படிக்கை (1919—1920) ... 453

1. உலகப்போரின் காரணமாக ஏற்பட்ட புரட்சிகள் ... 453
2. பாரிஸ் மாநாடும் வார்சே உடன்படிக்கையும் ... 465
3. பிற அமைதி உடன்படிக்கைகள் ... 474
4. சர்வதேசச் சங்கம் ... 482
5. அமைதி உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துதல் ... 494

வம்சாவளி ... 515

படங்கள் ... 521

1. 1870 முதல் 1900 வரை ஐரோப்பாவின் நிலை

1. பிரிட்டன்

அ. பிரிட்டனின் பொருளாதார வளர்ச்சி

பதினாறும் நூற்றாண்டில் ஸ்பெயினும், பதினேழாம் நூற்றாண்டில் பிரான்சும் சிறப்பு அடைந்திருந்ததுபோல, ஐரோப்பாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டு முதல் உலகப் போர் வரை எல்லாத் துறைகளிலும் சிறப்புப் பெற்று விளங்கிய ஐரோப்பிய நாடு பிரிட்டன். பிரிட்டனின் பொருளாதார நிலையே இதற்கு முக்கியக் காரணமாகும். உலகில் எல்லா நாடுகளும் பின்தங்கிய நிலையிலிருந்த பொழுது பிரிட்டனில் மிகப் பெருமளவில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டது.

பிரிட்டனில் தொழிற் புரட்சி ஏற்பட்டபொழுது இந் நாட்டின் மக்கள் தொகையும் வெகுவாக உயர்ந்தது. பிரிட்டனில் தொழிற்சாலைகள் நிறைந்திருந்த பகுதிகளில் மக்கள் தொகை கணிசமான அளவு உயர்ந்தது. ஆனால் சிறிய பிரிட்டன் எனப்பட்ட அயர்லாந்தின் மக்கள் பெரும்பாலும் விவசாயிகளாக இருந்தனர். இவர்கள் ஒரு காலத்தில் ஏறத்தாழ ஆங்கிலேயர்களைப் போலவே அதிக அளவு இருந்தனர். ஆனால் தொழிற் புரட்சியின் காரணமாக 1841-க்கும் 1911-க்கும் இடைப்பட்ட காலத்தில், அயர்லாந்தில் விவசாயத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குக் குடிபெயர்ந்து சென்றுவிட்டனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரிட்டனில் விவசாயத் தொழில் நலிவடைந்தது. இது 1854-க்குப் பிறகு ஓரளவு வளர்ச்சியடைந்தது. ஆனால் 1873 - 1874-ல் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தின் காரணமாக பிரிட்டனில் விவசாயமும், பிற தொழில்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. இருப்பினும் பிரிட்டனின் பிற தொழில்கள் விரைவாக வளர்ச்சியடைந்து

விட்டன. ஆனால் விவசாயத் தொழில்மட்டும் வளர்ச்சியடைய வில்லை. மேலும் ஐக்கிய அமெரிக்கா, அர்ஜென்டைனா, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் மிகப் பெருமளவில் விவசாயப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இதனால் இந் நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட விவசாயப் பொருள்கள், பிரிட்டனில் உற்பத்தி செய்யப்பட்ட விவசாயப் பொருள்களைவிட மிகக் குறைந்த விலையில் பிரிட்டனில் விற்பனை செய்யப்பட்டன. பிரிட்டனில் கப்பல் கட்டும் தொழில் வளர்ச்சியடைந்ததும் இதற்கு ஒரு முக்கியக் காரண மாகும். இதனால் 1871-ல் சுமார் 83½ இலட்சம் ஏக்கர்கள் சாகுபடி செய்யப்பட்ட பிரிட்டனில், 1901-ல் சுமார் 57½ இலட்சம் ஏக்கர்கள் மட்டுமே பயிர் செய்யப்பட்டன. மேலும், பிரிட்டனின் விவசாயிகள் வெளிநாட்டவர்களுடன் விவ சாயத்தில் போட்டியிட முடியவில்லை. எனவே, பிரிட்டனின் விவசாயம் நலிவடையத் தொடங்கியது.

பிரிட்டனின் விவசாயம் நலிவடைவதைத் தடுக்க அந் நாட்டின் அரசாங்கம் அவ்வளவாக முயற்சிகளை மேற்கொள்ள வில்லை. மேலும் பெருநிலச்சுவான்தாரர்களாக இருந்த பிரிட்டிஷ் காரர்களும் வாணிபம், வட்டிக்குப் பணம் கொடுத்தல் போன்ற துறைகளில் தங்கள் கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தனர். எனவே, விவசாய நலிவின் காரணமாகப் பாதிக்கப்பட்ட வர்கள் சாகுபடியாளர்களே. எனவே, இவர்கள் பிழைப்பைத் தேடி வெளிநாடுகளுக்குக் குடிபெயர்ந்து சென்றனர். இச் சமயத்தில் பெருநிலப் பிரபுக்கள் தங்கள் நிலங்களைக் பூங்காக் களாகவும், பொழுதுபோக்கு இடங்களாகவும் மாற்றியமைத் தனர். மேலும் பலர் தங்கள் பண்ணைகளைக் காட்டிலும் நகரங் களில் அலுவல்களைப் பெற்றிருந்ததால் நகரங்களுக்குக் குடி பெயர்ந்தனர். அதனுடன் நகரங்களிலிருந்த தொழிற்சாலைகளி லேயே இவர்கள் தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தினர். இதனால் பிரிட்டனின் விவசாயம் மேலும் நலிவடையத் தொடங்கியது. ஆனால் பிரிட்டனின் பிற தொழில்துறைகள் முன்னேறத் தொடங்கின.

பிரிட்டன் விவசாயத்துறையில் நலிவடைந்தாலும் வாணி பம், தொழில் ஆகிய துறைகளில் சிறப்பாக முன்னேறியது. குறிப் பாக வாணிபத் துறையில் முதல் நிலை வகித்தது. இதனால் 1865-ல் 4180 இலட்சம் பவுன்கள் அளவிற்கு வியாபாரம் செய்து வந்த பிரிட்டன், 1890-ல் 6000 இலட்சம் பவுன்களுக் கும், 1910-ல் 10850 இலட்சம் பவுன்களுக்கும் வியாபாரம்

செய்தது. மேலும், இலண்டன் உலகிலேயே மிகப் பெரிய வியாபாரத் துறைமுகமாக விளங்கியது. லிவர்ப்பூல் முக்கிய ஏற்றுமதி நகரமாக விளங்கியது. எல்லாவற்றிற்கும் மேலாக, பிரிட்டனின் கப்பல்கள் உலகில் வேறு எந்த நாட்டையும்விட மிக அதிக அளவில் பொருள்களை வியாபாரத்திற்காகச் சுமந்து சென்றன. இதன் பயனாக பிரிட்டன் உலகில் வேறு எந்த ஒரு நாட்டைக் காட்டிலும் மிகச் சிறந்த நிலையிலிருந்தது.

வியாபாரத்துறையில் சிறந்து விளங்கிய பிரிட்டன் பொருளாதாரத் துறையிலும் மிகச் சிறந்து விளங்கியது. இந்நாட்டு மக்கள் வியாபாரத்தில் கிடைத்த இலாபத்தை எல்லாம் பிற தொழில்களிலும் வெளிநாடுகளிலும் முதலீடு செய்தனர். இதனால் 1865-ல் 60000 இலட்சம் பவுன்களாக இருந்த பிரிட்டனின் உள்நாட்டுச் செல்வம், 1910-ல் 140000 இலட்சம் பவுன்களாக உயர்ந்தது. இதனால் பிரிட்டன் உலக நாடுகளிலேயே செல்வம்மிக்க நாடாகவும் விளங்கியது. மேலும் 1913-ல் பிரிட்டன் வெளிநாடுகளில் முதலீடு செய்திருந்த தொகை 37600 இலட்சம் பவுன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 18250 இலட்சம் பவுன்களை வெளிநாடுகளில் இருந்த தன்னுடைய பேரரசிலும், 7550 இலட்சம் பவுன்களை ஐக்கிய அமெரிக்காவிலும், மேலுமொரு 7550 இலட்சம் பவுன்களை இலத்தீனமெரிக்காவிலும், 1100 இலட்சம் பவுன்களை இரஷ்யாவிலும், 650 இலட்சம் பவுன்களை ஜப்பானிலும், 250 இலட்சம் பவுன்களை உதுமானியப் பேரரசிலும், 2250 இலட்சம் பவுன்களைப் பிறநாடுகளிலும் பிரிட்டன் முதலீடு செய்திருந்தது. இதனால் உலகின் எல்லாப்பகுதிகளிலிருந்தும் தனது முதலீட்டுத் தொகைக்கு வட்டி என்ற பெயரில் பெருந் தொகை ஆண்டு தோறும் பிரிட்டனுக்கு வந்து கொண்டிருந்தது. இதனால் பிரிட்டனின் பொருளாதார நிலை மேலும் வலுவடைந்தது.

பிரிட்டனின் பொருளாதாரம் வளர்ச்சியடையவே பிரிட்டிஷ் அரசாங்கமும் தனது வரவு செலவுத் திட்டங்களை விரிவு படுத்தியது. இதனால் 1867-ல் 710 இலட்சம் பவுன்களாக இருந்த அரசின் செலவு, 1910-ல் 1500 இலட்சம் பவுன்களாக உயர்ந்தது. இவ்வாறே ஸ்தல சுயாட்சி நிறுவனங்களும், தங்கள் வரவு செலவுத் திட்டங்களை விரிவுபடுத்தின. எனவே பிரிட்டிஷ் அரசாங்கம் தனது வரவு செலவுத் திட்டத்தில் மக்களின் நலன்களுக்காகவும், பிற நலன்களுக்காகவும் பெருமளவுத் தொகையை ஒதுக்கீடு செய்தது.

பிரிட்டன் பொருளாதாரத் துறையில் வளர்ச்சியடைந்த தால் அதன் அரசியல் துறையும், சமூகத்துறையும் நன்கு வளர்ச்சியடைந்தன. ஒரு புறம் தொழில் வளர்ச்சியடைந்து கொண்டிருந்த பொழுது, மறுபுறம் பெரும்பாலான பிரிட்டிஷ் காரர்கள் ஏழைமையிலேயே இருந்தனர். ஆனால், பிரிட்டனின் தொழில் வளர்ச்சி காரணமாகப் படிப்படியாக ஏழைமை பிரிட்டனை விட்டகன்றது. இருப்பினும் விவசாயம் அவ்வள வாக வளர்ச்சி யடையவில்லை.

அடுத்து, பிரிட்டனில் புரட்சிகள் எதுவும் நடைபெறுமல் தொழில் வளர்ச்சிக்கு ஏற்ப பிரிட்டனின் சமுதாயத்திலும், அரசியலிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. பிரிட்டனில் சமாதானம் என்ற சொல் மிகப் புனிதமாகக் கருதப்பட்டது. எனவே, பிரிட்டிஷ் அரசியல் வாதிகள் தங்களுக்குள் எவ்விதப் போராட் டமும் நடத்தாமல் அரசியலில் ஒத்து வாழ்ந்தனர். அதனுடன் பிரிட்டனின் அரசரும் பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதி யில் இறைவனின் அருளால் மக்களை எதேச்சாதிகாரத்துடன் ஆளாமல் பெயரளவில் மன்னராக ஆட்சி புரிந்தார். திருச்சபை யின் அதிகாரிகள், திருச்சபையின் ஆதரவாளர்கள், பிரபுக்கள் ஆகியோர் பிரிட்டனின் சமுதாயத்தின் உயர்ந்த மட்டத்தில் இருந்தாலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுமக்கள் சபை அரசியலில் அதிகாரம் பெற்று விளங்கியது. தங்க ளிடையே பல தனித்தன்மைகள் இருந்தாலும் ஆங்கிலேயர் கள் தங்களின் சமுதாயப் பாரம்பரியத்தையும், அரசியல் தலைவர்களையும் மதித்து நடந்தனர். அதனுடன் இந்நாட்டு மக்கள் பொருளாதாரத்துறையில் எந்த நிலையில் இருந்தாலும் தங்கள் நாட்டின் செல்வத்தையும், பிரிட்டனின் பொது நலத்தை யும் மேம்படுத்தப் பாடுபட்டனர். அதனுடன் தங்களுக்குத் தேவையான சீர்திருத்தங்களைப் புரட்சிகள் செய்யாமல் தங்கள் அரசின் மூலம் நிறைவேற்றிக் கொண்டனர். இதனால் உள்நாட்டு ஒற்றுமையும், வெளிநாட்டுப் புகழும் பிரிட்டனின் அரசியல், சமுதாய நிலைகளை உயர்த்தின.

உலகில் மிகச் சிறிய நாடாக இருந்த பிரிட்டன் உலகின் வங்கியாகவும், தொழிற்சாலையாகவும் விளங்கியதும், உலகின் எல்லாப் பகுதிகளிலும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியதும் இந்நாட்டின் பெருமைகளாகும். மிகச் சிறிய பரப்பளவு நிலத் தையும் 400 இலட்சம் மக்கள்தொகையையும் கொண்டிருந்த பிரிட்டன் தன்னுடைய திறமையின் காரணமாகவும், மக்களின் ஒத்துழைப்பின் காரணமாகவும் உலகின் வேறெந்தப் பேரரசை

யும் விட மிகப் பெரிய பேரரசை நிறுவியது. இதனால் பிரிட்டிஷ் பேரரசின் கொடி உலகில் மக்கள் வாழும் மொத்தப் பரப்பளவில் ¼ பங்கில் பறந்தது. அதனுடன் பிரிட்டனின் கப்பல்கள் எல்லாக் கடல்களிலும் சென்றுவந்ததுடன், பிரிட்டிஷ்காரர்கள் எல்லா நாடுகளுடனும் வியாபாரத் தொடர்பு கொண்டிருந்தனர். மற்றெந்த நாட்டிற்கும் அமையாத இந்நிலை பிரிட்டனுக்கு மேலும் பெருமையைச் சேர்த்தது.

ஆ. பிரிட்டனில் பாராளுமன்ற அரசும் ஜனநாயகமும்

பிரிட்டனில் 1867-ல் இயற்றப்பட்ட சீர்திருத்தச் சட்டம் (Reform Act of 1867) அரசியலில் ஒரு புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்தது. இச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னால் உயர் வகுப்பினருக்கும் மத்திய வகுப்பினருக்கும் மட்டுமே பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்குரிமை இருந்தது. இதற்குமுன்னர் விக்டோரியா சமாதானத்தின் (Victorian compromise)படி பிரபுக்களுக்கும், பூர்ஷுவா முதலாளிகளுக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டது. இதனையடுத்து, பிரபுக்களாட்சிக்கும் மக்களாட்சிக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டது. இதனால் பிரிட்டனில் செல்வ நிலையில் இருந்த பிரபுக்களும், நிலச்சுவான்தாரர்களும் அரசியலில் செல்வாக்குப் பெற்று மிதவாதக் கட்சி, பழைமை விரும்பிக் கட்சி ஆகிய இரு கட்சிகளை அமைத்தனர். இவர்கள் தங்கள் நாட்டு அரசாங்கத்தின் எல்லாத் துறைகளிலும் தலைமை அதிகாரத்தைக் கைப்பற்றி இருந்தனர். இது ஒரு புறமிருக்க, மறுபுறம் பிரிட்டனின் பெரும்பான்மையான மக்கள் பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையில் அதிக அதிகாரம் பெற்று உயர்குடியினர் அரசியலில் அதிக ஆதிக்கம் பெற்றிருந்ததை ஓரளவு தடுத்தனர். எனவே செல்வந்தர்களின் ஆட்சிக்கும், மக்களாட்சிக்குமிடையே பிரிட்டனில் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இதனால் பிரிட்டனின் அரசியல் பெயரளவில் செல்வந்தர்களின் கையிலிருந்தாலும், நடைமுறையில் பொது மக்களின் விருப்பப்படியே ஜனநாயக முறையில் நடைபெற்றது.

கிளாட்ஸ்டன் அமைச்சரவை (1868 — 1874)

சீர்திருத்தச் சட்டத்தின்படி (1868) பிரிட்டனில் நடைபெற்ற முதல் பாராளுமன்றத் தேர்தலில் மிதவாதிகள் பெரும்பான்மைப் பலம் பெற்றனர். எனவே, இவர்களின் தலைவரான வில்லியம் கிளாட்ஸ்டன் என்பவர் அமைச்சரவை அமைத்து பிரிட்டனின் புதிய பிரதமரானார். இவர் 1868 முதல் 1874 வரை

இந் நாட்டின் பிரதமராகப் பதவி வகித்தார். இவர் பிரிட்டிஷ் பிரதமராகப் பதவி ஏற்றவுடன் 'அமைதி, ஆட்குறைப்பு' ஆகிய மிதவாதக் கட்சியினர் கொள்கைகளைப் பின்பற்றி, அரசின் செலவுகளைக் குறைத்து, வருவாயை அதிகரிக்கச் செய்யத்தக்க முயற்சிகளை மேற்கொண்டார். அதனுடன் வெளிநாட்டு விவகாரங்களிலும் குடியேற்ற நாட்டு விவகாரங்களிலும் அமைதிக் கொள்கைகளைப் பின்பற்றினர். பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் நடைபெற்ற பிரஞ்சு – பிரஷ்யப் போரில் (1870) நடுநிலை வகித்தார். ஐக்கிய அமெரிக்காவின் உள்நாட்டுப் போரின் (1861) போது பிரிட்டனுக்கும் அமெரிக்காவிற்கும் ஏற்பட்ட கருத்து வேற்றுமையைப் பேச்சு வார்த்தைகளின் மூலம் தீர்த்துக் கொள்ள முயற்சிகளை மேற்கொண்டார். இதனால் 1872–ல் 15·5 கோடிப் பவுன்களை பிரிட்டன் ஐக்கிய அமெரிக்காவிற்குக் கொடுத்தது. அடுத்து பிரிட்டிஷ் பேரரசின்கீழ் இருந்த பல பகுதிகளுக்கும் சுயாட்சி உரிமைகளை வழங்கினர். அதனுடன் அயர்லாந்தில் ஆங்கிலத் திருச்சபையைத் தடைசெய்து, பல நிலச் சீர்திருத்தங்களைப் புகுத்தினர். எல்லாவற்றிற்கும் மேலாகத் தொழிலாளர்களின் வேண்டுகோளுக்கிணங்கப் பல சீர்திருத்தங்களை ஏற்படுத்தினர்.

பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்கக் கல்விச் சட்டம் (Education Act) ஒன்றை இவர் 1870–ல் இயற்றினர். இச் சட்டம் இயற்றுவதற்கு முன்னர், 1833–ல் இருந்து, பிரிட்டனில் கல்வி நிலையங்களைத் திருச்சபைகளும் பிற தனியார் நிறுவனங்களும் மட்டுமே நடத்தி வந்தன. ஆனால், இச் சட்டம் இயற்றப்பட்ட பின்னர் பிரிட்டனில் திருச்சபை, தனியார் நிறுவனம் ஆகியவற்றால் நடத்தப்பட்ட கல்வி நிலையங்களைத் தவிர, 'கல்விக் கழகம்' என்ற ஓர் அரசாங்க அமைப்பின் கண்காணிப்பின்கீழ்ப் பல கல்வி நிலையங்கள் அரசாங்கத்தால் நிறுவப்பட்டன. இதனால் 1871–ல் கல்வியறிவற்றோரின் விழுக்காடு 24 ஆக இருந்தது. 1910–ல் ஒரே ஒரு விழுக்காடாகக் குறைந்தது. இதனால் 1910–ல் 55 இலட்சம் ஆங்கிலக் குழந்தைகள் கல்வி நிலையங்களுக்குச் சென்றனர். இவர்களில் 25 இலட்சம் பேர்கள் திருச்சபை, தனியார் நிறுவனம் ஆகியவற்றின் கல்வி நிலையங்களுக்கும், 30 இலட்சம் பேர்கள் அரசாங்கத்தின் கல்விக் கழகத்தால் நடத்தப்பட்ட கல்வி நிலையங்களுக்கும் சென்றனர்.

இதனை அடுத்து, தொழிலாளர்களின் வேண்டுகோள்களுக்கிணங்க 1871–ல் தொழிற்சங்கச் சட்டங்களை இவரது அமைச்

சரவை இயற்றியது. இச் சட்டத்தின்படி தொழிலாளர்களின் சங்கங்கள் சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டன. அதனுடன் தொழிற்சங்கங்கள் தங்களுக்கெனச் சொத்துகளை வைத்துக் கொள்ளவும், தங்களின் உரிமைகளுக்காகப் போராடவும் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டது. ஆனால், தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் என்ற பெயரில் வன்முறைகளில் ஈடுபடுவதையும் சூறையாடுவதையும் இச் சட்டங்கள் தடை செய்தன. இதனால் 1871-க்குப் பின்னர் பிரிட்டனின் தொழிற் சங்கங்கள் அதிகரித்தன.

அடுத்து, பொதுமக்கள் தங்கள் வாக்குகளை இரகசிய முறையில் பயன்படுத்தும் வகையில் 1872-ல் ஒரு சட்டத்தை இயற்றினர். இச் சட்டம் 1867-ல் இயற்றப்பட்ட சீர்திருத்தச் சட்டத்தில் மேலும் சில மாற்றங்களைச் செய்து, வாக்காளர்கள் தங்கள் விருப்பப்படி வாக்குரிமையைப் பயன்படுத்த வழிவகை செய்தது.

டிஸ்ரேலியின் அமைச்சரவை (1874—1880)

பிரிட்டனில் 1874ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கிளாட்ஸ்டனுடைய மிதவாதக் கட்சியின் அமைச்சரவை மாறி, பெஞ்சமின் டிஸ்ரேலி என்பவரது தலைமையில் பழைமை விரும்பிக் கட்சி அமைச்சரவையை அமைத்தது. கிளாட்ஸ்டன் பிரிட்டனின் பிரதம அமைச்சராக இருந்த பொழுது நிலவிய பொருளாதார மந்தமும், இவரது காலத்தில் இயற்றப்பட்ட தொழிற் சங்கச் சட்டங்களில் இருந்த குறைபாடுகளும், இவரது வெளிநாட்டுக் கொள்கைகளுமே மிதவாதக் கட்சி 1874-ல் தோல்வியடைவதற்கும், பழைமை விரும்பிக் கட்சி அமைச்சரவை அமைப்பதற்கும் முக்கியக் காரணங்களாகும்.

டிஸ்ரேலியின் தலைமையிலான பழைமை விரும்பிக் கட்சியின் அமைச்சரவை 1874ஆம் ஆண்டு முதல் 1880ஆம் ஆண்டு வரை பதவியிலிருந்தது. இவ்வமைச்சரவை பதவியிலிருந்த பொழுது 1871ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தொழிற்சங்கச் சட்டத்திலிருந்த குறைபாடுகள் 1875-ல் நீக்கப்பட்டன; 1878-ல் தொழிற்சாலைகளுக்கான விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டு அவை செயல்படுத்தப்பட்டன. இவ்வமைச்சரவை தொழிலாளர்களுக்கு அதிக நன்மைகள் செய்தாலும் பிரிட்டனைத் தேசிய மயமான நாடாக்குவதற்காகவே இது பாடுபட்டது. இவ்வமைச்சரவை நாட்டுப் பற்று மிக்கதாகவும், பிரிட்டனின்

ஒற்றுமை, பெருமை, புகழ் ஆகியவற்றை உயர்த்தப் பாடுபடுவ தாகவும் இருந்தது. இவ்வமைச்சரவையின் தலைவரான டிஸ்ரேலி விக்டோரியா அரசியாரின் பெருமையை நிலைநாட்டப் பாடு பட்டதுடன், பிரிட்டிஷ் மக்களிடையே நாட்டுப் பற்றை உண்டாக்குவதற்கு பிரிட்டிஷ் அரசியாரை ஒரு சின்னமாகவும் பயன்படுத்தினர். அதனுடன் பிரிட்டனின் ஏகாதிபத்தியப் பாரம்பரியத்தை மேலும் பலப்படுத்தவும், அயர்லாந்து, பிரிட்ட னுடன் சேர்ந்து இருப்பதற்காகவும் டிஸ்ரேலி பாடுபட்டார். அயர்லாந்துக்காரர்கள் பிரிட்டனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய் வதை இவர் விரும்பவில்லை. பிரிட்டனுக்கு இந்தியா எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது என்பதை இவர் தம் முடைய மக்களுக்கு விளக்கியதுடன், பிரிட்டிஷ் அரசிக்கு இந்தியாவின் பேரரசியார் என்னும் பட்டப் பெயரையும் வழங்கி னர். இதனையடுத்துச் சூயஸ் கால்வாய்ப் பகுதியின் பொரு ளாதாரத்தில் பிரிட்டன் ஆதிக்கம் செலுத்துமாறு செய்தார். அத னுடன் இவர் 1877-78ஆம் ஆண்டில் ஏற்பட்ட இரஷ்ய-துருக் கியப் போரில் பிரிட்டனை ஈடுபடுத்தினர். இப்போரின் இறுதியில் ஏற்பட்ட பெர்லின் உடன்படிக்கையின் நிபந்தனைகளை விதிப் பதில் பிரிட்டன் அதிகச் செல்வாக்குப் பெற்றிருந்தது. இதனல், சைப்ரஸ் தீவைப் பிரிட்டன் பெற்றது.

இதனையடுத்து, 1880ஆம் ஆண்டில் பிரிட்டனில் நடை பெற்ற பொதுத் தேர்தலில் பழைமை விரும்பிக் கட்சியினரைத் தோற்கடித்து, மிதவாதக் கட்சியினர் மீண்டும் அமைச் சரவையைக் கைப்பற்றினர். இதனல் கிளாட்ஸ்டன் மீண்டும் இரண்டாவது முறையாக 1880-ல் பிரிட்டனின் பிரதமரானர். இவர் 1885 வரை பிரிட்டனின் பிரதமராக இருந்தார். இம் முறை இவரை பிரிட்டிஷ் அரசியார் அவ்வளவாக விரும்பாத துடன், இவரது கொள்கைகள் ஆபத்தானவை என்றும் கருதினர். இவருக்குப் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இருந்த பெரும் பான்மை பலத்தினல் 1884ஆம் ஆண்டில் பண்ணைகளில் இருந்த தொழிலாளர்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் வாக்குரிமை வழங்கி, மேலும் பல ஜனநாயகச் சீர்திருத்தங்களை பிரிட்டனில் ஏற்படுத்தினர். அதனுடன் பழைமை விரும்பிக் கட்சியினரின் ஒத்துழைப்புடன் தேர்தல் தொகுதிகளை 1885-ல் புதிதாக மாற்றியமைத்தார். இதனல் பிரிட்டனில் ஜனநாயகக் கருத்துகள் மேலும் வளர்ச்சியடையலாயின.

வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தமட்டில் பிரிட்டிஷ் படைகள் எகிப்தில் ஆதிக்கம் பெறுவதற்குக் கிளாட்ஸ்டன்

தாற்காலிகமாக அனுமதியளித்தார். அயர்லாந்தில் 1881-ல் மேலுமொரு நிலச் சட்டத்தைக் கொண்டு வந்ததுடன், அயர்லாந்து மக்களை பிரிட்டனுக்கு அடங்கி இருப்பதற்காக முன்னர்ச் செய்யப்பட்ட ஏற்பாடுகளைப் புதுப்பித்தார்.

இருப்பினும், உள்நாட்டில் பொதுமக்கள் தங்கள் மிதவாத அரசுக்கு அவ்வளவு ஆதரவளிக்கவில்லை. தொழிலாளர்கள் தங்களுடைய நிலையை உயர்த்துவதற்கு மிதவாதக் கட்சியின் அரசு எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை எனக் குறைகூறினர். நாட்டுப் பற்று மிக்க பிரிட்டிஷ்காரர்கள் தங்கள் அரசு வெளிநாடுகளில் வழங்கிய சில உரிமைகளைக் கடிந்துரைத்தனர். 1881-ல் அயர்லாந்து மக்களுக்காக இயற்றப் பட்ட நிலச் சட்டத்தைச் செல்வந்தர்கள் குறைகூறினர். இந் நிலச் சட்டத்தால் அயர்லாந்து மக்கள் திருப்தியடையாமல் மேலும் பல தீவிரச் சட்டங்கள் தங்களுக்கு வேண்டுமெனக் கோரினர். மேலும், இவர்கள் பிரிட்டனுக்கு அடங்கி நடப்பதற் காகப் புதுப்பிக்கப்பட்ட வழிமுறைகளுக்கெதிராகச் 'சுய ஆட்சி'க் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தனர். அன்றியும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையான மக்கள் சபை கிளாட்ஸ் டனுக்கு எதிராக வாக்களிக்கவே இவர் 1885-ல் தமது பதவியை இராஜிநாமா செய்தார். இதனையடுத்துப் புதிய பொதுத் தேர்தல் நடைபெறும்வரை பழைமை விரும்பிக் கட்சியினர் சாலிஸ்பரி பிரபுவின் தலைமையின்கீழ் அமைச்சரவையை அமைத்து அரசாங்கப் பொறுப்புகளை ஏற்றனர். சாலிஸ்பரி பிரபு 1874 முதல் 1880 வரை பழைமை விரும்பிக் கட்சியில் டிஸ் ரேலியுடன் சக உறுப்பினராக இருந்தார். இவர் இக்கட்சியின் வெளிநாட்டுக் கொள்கைகளுக்கு முழுப் பொறுப்பேற்று இருந் தார். 1883-ல் டிஸ்ரேலி இறந்துவிடவே சாலிஸ்பரி பிரபு பழைமை விரும்பிக் கட்சியின் தலைவரானார்.

இதனையடுத்து, பிரிட்டனில் 1885-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் விவசாயிகளும் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழி லாளர்களும் மிக அதிக அளவில் பங்கேற்றனர். இதனால் பழைமை விரும்பிக் கட்சியினரைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையுடைய மிதவாதிகள் பாராளுமன்றத்திற்குத் தேர்ந் தெடுக்கப்பட்டனர். ஆனால், அயர்லாந்து தேசியவாதிகள் பாராளுமன்றத்தில் சற்று அதிகமாக இருந்ததால் இவர்கள் மிதவாதக் கட்சிக்கும் பழைமை விரும்பிக் கட்சிக்கும் இடையே சம பலத்தைத் தோற்றுவித்தனர். இந்நிலையில் தம் கட்சியின் எதிர்காலத்தைக் கருதி கிளாட்ஸ்டன் அயர்லாந்தின் சுயாட்சிக்கு உறுதியளித்து, அயர்லாந்து தேசியவாதிகளின் ஒத்துழைப்பைப்

பெற்று, 1886-ல் மூன்றாவது முறையாகத் தமது அமைச்சரவையை அமைத்தார்.

கிளாட்ஸ்டன் பிரதம அமைச்சரானதும் அயர்லாந்தின் சுயாட்சிக்கு வழிசெய்து, டப்ளின் என்ற இடத்தில் அயர்லாந்துப் பாராளுமன்றத்தை ஏற்படுத்தும் வகையில் ஒரு மசோதாவைத் தயார்செய்து, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அயர்லாந்து தேசியவாதிகளும் மிதவாதக் கட்சியினரும் இம்மசோதாவிற்கு ஆதரவாக வாக்களித்தனர். ஆனால், மிதவாதக் கட்சியின் ஒரு பிரிவினர் தங்களை 'மிதவாத ஒற்றுமைவாதிகள்' (Liberal Unionist) எனக் கூறிக்கொண்டு, பழைமை விரும்பிக் கட்சியினருடன் சேர்ந்துகொண்டு அயர்லாந்தின் சுயாட்சி மசோதாவிற்கு எதிராக வாக்களித்தனர். எனவே, இம் மசோதா பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையில் தோல்வியடைந்தது. இதனால் கிளாட்ஸ்டன் பிரிட்டிஷ் பாராளுமன்றப் பாரம்பரியப்படி உடனே இராஜிநாமா செய்யவே, சாலிஸ்பரி, மிதவாத ஒற்றுமைவாதிகளின் ஆதரவுடன் அமைச்சரவையை இரண்டாவது முறையாக அமைத்தார்.

இதனால் 1846 ஆம் ஆண்டில் பழைமை விரும்பிக் கட்சியினரிடையே பிளவு ஏற்பட்டது போல், 1886 ஆம் ஆண்டில் மிதவாதக் கட்சியினரிடையே பிளவு ஏற்பட்டது. மேலும் 1886 ஆம் ஆண்டில் தேசியக் கருத்துகளும், ஏகாதிபத்தியக் கொள்கைகளும் பிரிட்டிஷ் மக்களிடையே அதிகச் செல்வாக்குப் பெற்றிருந்ததால், பிரிட்டன் அயர்லாந்து ஆகிய இரண்டும் ஒன்றாக இருந்ததைப் பிரிப்பதற்கு கிளாட்ஸ்டன் முயற்சி செய்தபொழுது மிதவாதக் கட்சியினரும், பழைமைவிரும்பிக் கட்சியினரும் தங்களிடையே காணப்பட்ட வேற்றுமைகளை மறந்து ஒருங்கிணைந்து செயல்பட்டனர். எனவே அடுத்த இருபதாண்டுகளுக்கு மிதவாத ஒற்றுமை வாதிகளின் ஒத்துழைப்புடன் பழைமை விரும்பிக் கட்சியினர் தொடர்ந்து நிலையான அரசை அமைத்தனர். ஆனால், இந்த இருபதாண்டுகளில் ஒரு மூன்றாண்டுகள் (1892-95) மட்டில் கிளாட்ஸ்டனின் ஆதரவாளர்களான மிதவாதக் கட்சியினர் அமைச்சரவையை அமைத்தனர். மற்ற ஆண்டுகளில் பழைமை விரும்பிக் கட்சியினர் அமைச்சரவையில் நிலையாக இருந்தனர்.

மிதவாதக் கட்சியின் பிளவுக்குத் தேசிய ஏகாதிபத்தியக் கருத்துகள் மட்டுமன்றி வேறுசில காரணங்களும் இருந்தன. மிதவாதக் கட்சியிலிருந்த பலர், குறிப்பாக இளைஞர்கள்

கிளாட்ஸ்டனின் பழைய கொள்கைகளையும் முறைகளையும் விரும்பாமல் புதிய கருத்துகளையும் கொள்கைகளையும் பின் பற்றி அரசியல், சமுதாயம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய எண்ணினர். இவ்வாறு புதிய கருத்துகளைப் பின்பற்ற வேண்டுமென எண்ணிய மிதவாத ஒற்றுமை வாதிகளின் தலைவராக விளங்கியவர் ஜோசப் சேம்பர்லின் என்பவராவார். இவர் பர்மிங்காமில் தொழிலதிபராகச் சிறந்து விளங்கியவர்; மதச் சீர்திருத்தங்கள், சமுதாயச் சீர்திருத்தங்கள் ஆகியவற்றிற்காகப் பாடுபட்ட தீவிர வாதியாவார். மேலும், இவர் 1870-க்கும் 1879-க்கும் இடைப் பட்ட காலத்தில் பர்மிங்காம் நகரின் தலைவராக இருந்தபொழுது அந் நகரத்தைத் தூய்மைப்படுத்தியதுடன் குடிநீர் வசதியை யும் நகராட்சி மூலம் மேம்படுத்தினர்.

இவ்வாறு படிப்படியாக பிரிட்டிஷ் அரசியலில் ஈடுபட்டுச் சமுதாயச் சட்டங்கள், ஏகாதிபத்தியம், காப்புவரி ஆகியவற்றின் மூலம் புகழ்பெற்ருர். கிளாட்ஸ்டனின் அயர்லாந்துப் பிரிவினைக் கொள்கையின் காரணமாக, சேம்பர்லினும் அவரது ஆதரவாளர் களும் மிதவாதக் கட்சியினின்றும் தனியாகப் பிரிந்தனர்.

சாலிஸ்பரியின் அமைச்சரவை (1886-1892)

சாலிஸ்பரி, டிஸ்ரேலி பின்பற்றிய கொள்கைகளைக் கடைப்பிடித்து 1886 முதல் 1892 வரை தேசியவாதிகள், ஏகாதி பத்திய வாதிகள் ஆகியவர்களின் ஒத்துழைப்புடன் பிரதம அமைச்சராகப் பதவி வகித்து பிரிட்டிஷ் அரசாங்கத்தைச் சிறப் பாக நடத்தினர். இவர் பிரதம அமைச்சராக இருந்த காலத்தில் விக்டோரியா அரசியார் பதவி ஏற்பு வைபவத்தின் 'பொன் விழா' 1887-ல் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ் வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு பிரிட்டிஷ் பேரரசின் கீழ் இருந்த பகுதிகளின் பிரதிநிதிகள் கொண்டாட்டங்கள், குடியேற்ற நாடுகளின் பிரதிநிதிக் கூட்டங்கள் ஆகியவற்றில் கலந்துகொண்டு தங்கள் நாடுகளில் மக்களுக்கும் பிரிட்டிஷ் அரசுக்கும் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை அரசியாருக்கும் அமைச்சர்களுக்கும் எடுத்துரைத்தனர். எனவே, பிரிட்டிஷ் பேரரசுப் பகுதிகளின் பாதுகாப்பிற்காகப் பிரிட்டிஷ் கப்பற் படை குறிப்பிடத்தக்கவகையில் பலப்படுத்தப்பட்டது. இதனை யடுத்து பிரிட்டன் 1890-91 ஆம் ஆண்டில் ஜெர்மனி, பிரான்ஸ், போர்ச்சுக்கல் ஆகிய நாடுகளுடன் பல உடன் படிக்கைகளைச் செய்துகொண்டு ஆப்பிரிக்காவில் எஞ்சி

யிருந்த பகுதிகளைப் பங்கு போட்டுக் கொண்டது. இதனால் பிரிட்டிஷ் பேரரசின் பகுதிகள் மேலும் விரிவடைந்தன. இருப்பினும், அயர்லாந்தைப் பொறுத்த அளவில் சுயாட்சி இயக்கத்தையும், பிரிவினைக்கிளர்ச்சிகளையும் பிரிட்டிஷ் அரசு தொடர்ந்து எதிர்த்து வந்தது. ஆனால் அயர்லாந்து பிரிட்டனுடன் சேர்ந்திருக்க வேண்டும் என்பதைக் கருதி அயர்லாந்தின் விவசாயத் தொழிலாளிக்குப் பிரிட்டிஷ் அரசு பல சலுகைகளை வழங்கியது. இதனால் அயர்லாந்தின் விவசாயிகள் தாங்கள் பயிரிட்டு வந்த நிலத்திற்கான கிரயத் தொகையைத் தங்கள் பிரபுக்களுக்குச் சிறிது சிறிதாகக் கொடுத்து இறுதியில் நிலத்தைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ள வழிசெய்யும் 'நிலம் வாங்கும் மசோதாக்கள், சில செயல்படுத்தப்பட்டன. இத்தகைய மசோதாக்களால் சிறு நிலச் சொந்தக்காரர்கள் பலர் அயர்லாந்தில் தோன்றினர்.

சாலிஸ்பரி, கிளாட்ஸ்டனைப் போலச் சமூகச் சீர்திருத்தங்களில் அதிக ஆர்வம் காட்டாமல், விவசாயிகளுக்குச் சலுகைகளை வழங்குவதில் அதிக ஆர்வம் காட்டினர். மேலும் மிதவாதக் கட்சியினரைக் காட்டிலும் பழைமை விரும்பிக் கட்சியினர் விவசாயிகளின்பால் அதிக இரக்க சிந்தனை உடையவர்களாகக் காணப்பட்டனர். இதற்கிடையில் பல பழைமை விரும்பிகள் தொழில் வளர்ச்சியின் காரணமாக மிதவாதக் கட்சியினரின் கொள்கைகளுடன் தங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டு இயந்திரத் தொழில், வாணிபம், வங்கியியல் ஆகிய துறைகளில் வளர்ச்சியடைந்தனர். இவர்கள் தொழிலாளர்களுக்காகப் பல மசோதாக்களை நிறைவேற்றி அதிக இலாபம் சம்பாதிக்க முற்பட்டனர். இத்தகைய பழைமை விரும்பிகளில் இளைஞர்கள் தங்களை டோரி ஜனநாயகவாதிகள் எனக் கூறிக் கொண்டு, ராண்டோல்ஃப் சர்ச்சில் பிரபு என்பவரின் தலைமையின்கீழ்ச் செயல்படத் தொடங்கினர். ஜோசப் சேம்பர்லினும் இவருடைய ஆதரவாளர்களான மிதவாத ஒற்றுமைவாதிகளும் டோரி ஜனநாயக வாதிகளுக்கு ஆதரவுகாட்டத் தொடங்கினர். இதன் காரணமாகச் சாலிஸ்பரியின் அமைச்சரவை தொழிலாளர்களுக்குச் சில சலுகைகளை வழங்கியது. இதன்படி 1887-ல் சுரங்கத் தொழிலாளர் சட்டம் என்ற ஒன்று இயற்றப்பட்டது. இச்சட்டம் 12 வயதிற்குக் குறைந்த சிறுவர்களிடமிருந்து வேலை வாங்குவதைத் தடைசெய்தது. பின்னர் 1891-ல் இயற்றப்பட்ட மற்றொரு சட்டம் தொடக்கப் பள்ளிகளில் பயிற்சிக் கட்டணத்தை இரத்து செய்தது.

அடுத்து, 1892-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மிதவாதக் கட்சியினர் அயர்லாந்து தேசியவாதிகளுடன் சேர்ந்து கொண்டு ஓரளவு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றனர். இவர்களின் தலைவரான கிளாட்ஸ்டன் நான்காவது முறையாக அமைச்சரவையை அமைத்தார். இக்காலத்தில் அயர்லாந்தின் சுயாட்சி மசோதா மீண்டும் பிரிட்டிஷ் மக்கள் சபையில் கொண்டு வரப்பட்டு நிறைவேறியது. ஆனால் பிரபுக்கள் சபையில் இம் மசோதா ஏற்றுக்கொள்ளப்பட வில்லை. எனவே 84 வயது நிரம்பிய கிளாட்ஸ்டன் 1894-ல் பதவியைத் துறந்து தமது பண்ணையில் குடியேறினார். நான்காண்டுகள் இப் பண்ணையில் வாழ்க்கை நடத்திய பின்னர், 1898-ல் கிளாட்ஸ்டன் இவ்வுலக வாழ்க்கையை நீத்தார். கிளாட்ஸ்டனை யடுத்து, 1894-ல் ரோஸ்பெரி என்பவர் பிரிட்டனின் பிரதமரானார்.

பிரிட்டனில் 1895-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பழைமை விரும்பிகளும் மிதவாத ஒற்றுமைவாதிகளும் சேர்ந்து பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றனர். எனவே இவ்விருகட்சியினரும் சேர்ந்து கூட்டு அமைச்சரவையை அமைத்தனர். இதனால் சாலிஸ்பரி மீண்டும் பிரிட்டிஷ் பிரதமரானார். ஜோசப் சேம்பர்லின் குடியேற்ற நாடுகளின் செயலாளராகப் பிரிட்டிஷ் அமைச்சரவையில் பொறுப்பேற்றார். இதனை யடுத்து, 1900 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மீண்டும் கூட்டு அமைச்சரவை பிரிட்டனில் அமைக்கப்பட்டது. இதனால் சாலிஸ்பரி மீண்டும் பிரதமரானார். ஆனால், தமது தள்ளாமையின் காரணமாக 1902-ல் சாலிஸ்பரி பதவி துறந்தார். இவருக்குப்பிறகு ஆர்தர் ஜே. பால்ஃபோர் என்பவர் பிரிட்டனின் பிரதமரானார். இவர் ராண்டோல்ஃப் சர்ச்சிலின் சீடராக விளங்கியவர். இவர் 1905 வரை பிரிட்டனின் பிரதமராகப் பதவிவகித்தார். 1895 முதல் 1905 வரை உள்ள பத்தாண்டுகளில் பிரிட்டனில் பொறுப்பேற்றிருந்த கூட்டு அமைச்சரவை பல சமூகச் சட்டங்களை இயற்றியது. இவற்றுள் தொழிலாளர் நஷ்டஈட்டுச் சட்டமும், கல்வி மசோதாவும் குறிப்பிடத் தக்கவைகளாகும். தொழிலாளர் நஷ்டஈட்டுச் சட்டம், கல்விமசோதா ஆகிய இரண்டில் முன்னர்க் கூறப்பட்டது சில குறிப்பிட்ட தொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஆபத்தினின்றும் பாதுகாப்பளித்தது; பின்னர்க் கூறப்பட்டது பொதுக் கல்வி நிலையங்களிலும், திருச்சபைப் பள்ளிகளிலும் வசதிகளை மேம்படுத்தியது.

ஆனால், பிரிட்டனில் கூட்டு அமைச்சரவை பதவி வகித்த 10 ஆண்டுகளில் மிகக் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சி

-யடைந்தது தேசியமும், ஏகாதிபத்தியமுமே யாகும். மேலும், இக்காலத்தில் உள்நாட்டுப் பொருள்களின் பாதுகாப்பிற்காகப் பல கிளர்ச்சிகள் தோன்றின. இச் சமயத்தில்தான் பிரிட்டன், ஜெர்மனி, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையே பொருளாதாரத் துறையில் பலத்த போட்டி ஏற்பட்டது. இதனல் பிரிட்டன் இரஷ்யாவிலும், பிரான்சு ஆப்பிரிக்கா விலும், ஜெர்மனி அண்டைக் கிழக்கு நாடுகளிலும், பசிபிக் பெருங்கடல் பகுதியிலும் தங்கள் வியாபாரத்தைத் தீவிரப் படுத்தின. இக்காலத்தில்தான் பிரிட்டனில் சில கவிஞர்கள் 'வெள்ளையரின் பொறுப்பு' (Whiteman's Burden) என்பது பற்றிப் பல கவிதைகளை இயற்றினர். எல்லாவற்றிற்கும் மேலாக இக்காலத்தில் ஜோஸப் சேம்பர்லின் தம்முடைய கனவுகளை நினைவாக்க பிரிட்டிஷ் அரசாங்கத்தைத் தூண்டினர்.

பிரிட்டனில் அரசு பொறுப்புகளை வகித்த பழைமை விரும் பிக் கட்சியின் அமைச்சரவையும் உள்நாட்டில் கிடைத்த வாய்ப்புகளை எல்லாம் பயன்படுத்தித் தன்னுடைய நாட்டின் ஏகாதிபத்திய வளர்ச்சிக்குப் பாடுபட்டது. மேலும், இவ்வமைச் சரவை 1897-ல் விக்டோரியா அரசியாரின் ஆட்சியின் 60 ஆம் ஆண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடியது. அரசி விக்டோரியா 1901-ல் இறந்துவிடவே அவரை நல்லடக்கம் செய்துவிட்டு, அவரது மகனை ஏழாம் எட்வர்டு என்பவரை அரியணையில் இவ்வமைச்சரவை அமர்த்தியது. அதனுடன், பிரிட்டன் அயர்லாந்து ஆகிய பகுதிகளின் அரசர் என்றும், நம்பிக்கையின் பாதுகாவலர் என்றும், இந்தியாவின் பேரரசர் என்றும் பட்டங்களை இவ்வமைச்சரவை ஏழாம் எட்வர்டுக்கு வழங்கியது.

ஏழாம் எட்வர்டு பிரிட்டனின் மன்னராக இருந்தபொழுது ஜோஸப் சேம்பர்லின் காப்புவரிச் சீர்திருத்தங்கள் பலவற்றை ஏற்படுத்தத் தொடங்கினர். வளர்ச்சியடைந்த ஏகாதிபத்தியக் கொள்கைகளின் காரணமாகவும், வியாபாரப் போட்டிகளின் காரணமாகவும் பிரிட்டன் தன்னுடைய பேரரசின் பிற பகுதி களிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள் களின்மீது இறக்குமதி வரியை விதித்தது. இதனல் உள் நாட்டுத் தொழில்களும், குடியேற்ற நாடுகளின் விவசாயமும் வளர்ச்சியடைந்தன. இதே சமயத்தில் பிரிட்டிஷ் பேரரசின் ஒற்றுமையைக் கருதி, இப் பேரரசின்கீழ் இருந்த பகுதிகளில் பாதுகாப்பிற்காக இருந்த பிரிட்டிஷ் படைகளுக்கு ஆகும் செலவை அப் பகுதிகளே ஏற்க வேண்டுமென பிரிட்டன்

கூறியது. மேலும் பேரரசின் ஒற்றுமைக்காகப் பல துறைகளில் பேரரசின் பகுதிகளில் இருந்து பிரதிநிதிகளைக் கூட்டிப் பல மாநாடுகளையும் பிரிட்டிஷ் அரசு நடத்தியது. இம் மாநாடு களின் வாயிலாகப் பிரிட்டன் தனது வியாபாரத்தை மேலும் வலுப்படுத்தக் கருதியது.

இதற்கிடையில், பிரிட்டனில் மிதவாதக் கட்சியினரிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளின் காரணமாகப் பிளவு ஏற்பட்டது. இதனுடன் 1903-க்கும் 1905-க்கும் இடைப்பட்ட காலத்தில் 'காப்புவரி', 'சுதந்திர வியாபாரம்' ஆகியவற்றின் காரணமாகப் பழைமை விரும்பிக் கட்சியினரிடையே கருத்து வேற்றுமைகள் தோன்றின. இந்நிலையில் இவ்விரு கட்சிகளிலும் தோன்றிய கருத்து வேறுபாடுகளைக் களைந்து ஒற்றுமையை ஏற்படுத்த பிரிட்டிஷ் பிரதமரான பால்ஃபோர் தம்மாலான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டார். தம்முடைய முயற்சிகள் பலனளிக்காமல் போகவே பால்ஃபோர் 1905-ல் தமது பதவியை இராஜிநாமாச் செய்தார். இதனால் ஏழாம் எட்வர்டு மிதவாதக் கட்சியின் தலைவரான சர் ஹென்றி காம்பெல் பன்னர்மென் (Sir Henry Cambell Bannerman) என்பவரை அழைத்து அமைச்சரவையை அமைக்குமாறு கேட்டுக்கொண்டார். மேலும் 1905-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில், பழைமை விரும்பிக் கட்சினரிடையே ஏற்பட்ட கருத்து வேற்றுமையின் காரணமாக, மிதவாதக் கட்சியினர் மிகப் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றனர். காம்பெல் பன்னர்மெனுக்குப் பாராளுமன்றத்தில் மட்டுமன்றி நாட்டு மக்களிடையேயும் மிகுந்த ஆதரவு காணப்பட்டது. இதனால் பழைமை விரும்பிக் கட்சியின் தலைவரால் கொண்டு வரப்பட்ட காப்புவரிச் சீர்திருத்தங்கள் நிறுத்திவைக்கப்பட்டன. பழைமை விரும்பிக் கட்சி பிரிட்டனில் தாற்காலிகமாகச் செல்வாக்கு இழந்தது. இந்தியாவில் 1977-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலின்பொழுது ஆட்சிப்பீடத்தில் இருந்த காங்கிரஸ் கட்சி அகற்றப்பட்டுப் புதிய ஜனதா கட்சி ஆட்சிப் பீடத்தில் அமர்ந் தது போல, பிரிட்டனில் பழைமை விரும்பிக் கட்சி அரசு பொறுப்புகளினின்றும் நீக்கப்பட்டு மிதவாதக் கட்சி அமைச் சரவைப் பொறுப்புகளை ஏற்றது. இம் மாற்றம் அமைதியாக ஏற் பட்டதால் இதனை 'அமைதிப் புரட்சி' என்றும் கூறுகின்றனர்.

இ. அயர்லாந்தில் தேசியக் கருத்துகள்

1801 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட 'ஐக்கியச் சட்டத்தின்' படி பிரிட்டன், அயர்லாந்து ஆகிய இரண்டும் ஒரே அரசின்கீழ்

இணைந்தன. வெஸ்ட்மின்ஸ்டர் என்ற இடத்தில் அமைந்திருந்த பிரிட்டிஷ் பாராளுமன்றமே இவ்விரு பகுதிகளுக்கும் சட்டங்களை இயற்றியது. ஆனால் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரிட்டனில் விரைவாக வளர்ச்சியடைந்த தேசியக் கருத்துகளின் காரணமாகவும், ஏகாதிபத்தியக் கொள்கைகளின் காரணமாகவும் அயர்லாந்தில் தேசியக் கருத்து மக்களிடையே பரவலாயிற்று. இதனால் 1870ஆம் ஆண்டிற்குப் பின்னர் அயர்லாந்துப் பிரிவினை இயக்கம் வளர்ச்சியடைய ஆரம்பித்தது.

1870 ஆம் ஆண்டிற்கு முன்னரே அயர்லாந்தில் தேசிய இயக்கம் வளர்ச்சியடையத் தொடங்கியது. இதன் காரணமாக அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில கிளர்ச்சிகள் தோன்றின. ஆனால், 1870 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அயர்லாந்தில் தேசிய இயக்கம் மிக வேகமாக வளர்ச்சியடைந்தது. இதற்குச் சார்லஸ் ஸ்டீவர்டு பர்நெல் என்பவரும், மைக்கேல் டேவிட் என்பவரும் முக்கியக் காரணமாயினர். இவ்விருவரில் சார்லஸ் ஸ்டீவர்டு பர்நெல் என்பவர் புராட்டஸ்டன்டு மதத்தைச் சேர்ந்த ஆங்கிலேய-ஐரிஷ்காரர். அமெரிக்கப் பெண்மணியான இவரது தாயின் மூலமாக இவரிடம் இங்கிலாந்துக்காரர்களுக்கு எதிரான வெறுப்புணர்ச்சி வளர்ச்சியடைந்தது. எனவே, இவர் 1875-ல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொழுது, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இருந்த மற்ற அயர்லாந்துப் பிரதிநிதிகளை ஒன்றுசேர்த்து, 'அயர்லாந்து தேசியக் கட்சியை' உருவாக்கினார். அடுத்து மைக்கேல் டேவிட் என்பவர் கல்வி பயிலாத விவசாயத் தொழிலாளியாவார். இவர் தம்முடைய தந்தை இறந்த பிறகு இங்கிலாந்துக்குச் சென்று ஒரு பருத்தி ஆலையில் தொழிலாளியாகப் பணியாற்றினார். அச்சமயத்தில் ஒரு கிளர்ச்சியில் இவர் ஈடுபடவே, இவர் ஏழாண்டுகள் சிறைத் தண்டனை பெற்றார். 1867-ல் இவர் விடுதலை செய்யப்பட்டவுடன் ஐக்கிய அமெரிக்காவிற்குச் சென்றார். பின்னர் 1879-ல் பிரிட்டனுக்குத் திரும்பியவுடன் விவசாயத் தொழிலாளர்களின் அமைப்பு ஒன்றை ஏற்படுத்தினார்.

அச்சமயத்தில் அயர்லாந்தில் தேசிய இயக்கம் வலுவடைந்து வந்தது. இதனால் ஒருபுறம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இருந்த அயர்லாந்துப் பிரதிநிதிகள் ஒன்றுகூடி 1880 இல் தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரினர். மறுபுறம் டேவிட் தமது விவசாயத் தொழிலாளர் அமைப்பின் மூலமாகவும், பர்நெல் தமது தேசியக் கட்சியின் மூலமாகவும் அயர்லாந்துப் பிரதிநிதிகளின் கோரிக்கைகளுக்கு ஆதரவளித்

தனர். அத்துடன் இவர்களுக்கு அட்லாண்டிக் கடலின் மறுகரையிலிருந்து பொருளுதவியும் கிடைத்தது.

கிளாட்ஸ்டன் பிரதமராக இருந்த பொழுது அயர்லாந்து தேசிய வாதிகளைத் திருப்திப்படுத்த 1881 இல் நிலச் சட்டம் (Land Act of 1881) என்ற ஒன்றை பிரிட்டிஷ் பாராளு மன்றத்தில் நிறைவேற்றினர். இதன்படி ஒருதனி நீதிமன்றம் சாகுபடிதாரர்கள் நிலச் சுவான்தாரர்களுக்குக் கொடுக்க வேண்டிய நியாயமான வாரத்தை நிர்ணயம் செய்து வாரத்தை ¼ பங்காகக் குறைத்தது. ஆனால் அயர்லாந்து மக்கள் இச் சட்டத்தால் திருப்தியடையாமல் போகவே கிளர்ச்சிகள் மேலும் பரவ ஆரம்பித்தன. சில வன்முறைச் செயல்களும் நடைபெற்றன. எனவே வேறு வழியின்றி பிரிட்டிஷ் அரசு அயர்லாந்தில் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு இராணுவச் சட்டங்களை அமுல் நடத்தியது. பர்நெலும், டேவிட்டும் கைது செய்யப்பட்டனர். கொள்ளையடிப்பதும் வன்முறைச் செயல் களும் ஒடுக்கப்பட்டன.

பின்னர் 1886 இல் பிரிட்டனில் எந்த ஒரு கட்சியும் பெரும் பான்மை பலத்தைப் பெறுமல் போகவே கிளாட்ஸ்டன் அயர் லாந்து தேசீய வாதிகளுக்கு நன்மைதரும் சில உறுதி மொழிகளைக் கூறி, அவர்களின் ஒத்துழைப்பைப் பெற்று அமைச்சரவையை அமைத்தார்.

தாம் முன்னர் அயர்லாந்து தேசியவாதிகளுக்குக் கொடுத்த உறுதிமொழிப்படி "அயர்லாந்து சுயாட்சி மசோதா"வை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் கொண்டுவந்தார். இதனை விரும்பாத சில மிதவாதக் கட்சியினர் தங்களை மிதவாத ஒற்றுமை வாதிகள் எனக் கூறிக்கொண்டு மிதவாதக் கட்சி யினின்றும் பிரிந்தனர். கிளாட்ஸ்டனின் மசோதாவும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையில் தோல்வியடைந்தது. இதனை யடுத்து கிளாட்ஸ்டன் தனது பதவியை இராஜினமா செய்யவே பழமை விரும்பிக் கட்சியினர் ஆட்சியைக் கைப்பற்றி ஆறு ஆண்டுகள் நிலையாக ஆட்சி புரிந்தனர்.

பிரிட்டிஷ் அரசியலில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக 1893-ல் கிளாட்ஸ்டன் மீண்டும் பிரதமராகவே, "அயர்லாந்தில் சுயாட்சி மசோதா" மீண்டும் பாராளுமன்றத்தில் கொண்டுவரப் பட்டது. இச்சமயத்தில் இம் மசோதா கீழ்ச் சபையில் நிறை வேறியது. ஆனல் மேல் சபையான பிரபுக்கள் சபை இம் மசோதாவை நிராகரித்தது. எனவே கிளாட்ஸ்டனின் தலைமை

யில் இருந்த மிதவாதக் கட்சியின் அமைச்சரவை மீண்டும் பதவி விலகவே பழமை விரும்பிக் கட்சியினரும், மிதவாத ஒற்றுமை வாதிகளும் ஒன்று சேர்ந்து அமைச்சரவையை அமைத்தனர். இவ்வமைச்சரவை 1895 முதல் 1905 வரை நிலையாக இருந்தது. இக்காலத்தில் அயர்லாந்து மக்களின் நம்பிக்கையும் பகற்கனவாகியது.

ஒற்றுமை வாதிகள் பிரிட்டிஷ் அரசியலில் மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்ததால் அயர்லாந்தின் தேசிய வளர்ச்சியில் ஒரு புதிய மாறுதல் ஏற்பட்டது. இதனால் அயர்லாந்தில் விவசாயப் புரட்சி ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து பல நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்டன. பல புதிய விவசாயப் பண்ணைகள் அயர்லாந்தில் தோன்றின. இதன் பயனாக 1894-ல் விவசாயக் கழகம் (Agricultural Organisation Society) ஒன்று நிறுவப்பட்டது. அயர்லாந்தின் விவசாயிகள் இக் கழகத்தின் உறுப்பினர்களாக இருந்தனர். விவசாயப் பண்ணைகளும் கூட்டுறவு இயக்கங்களும் ஒன்றுபட்டுச் செயல்படத் தொடங்கின. இதனால் கிராமப் புறங்களில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைத் தரம் உயர ஆரம்பித்தது.

இச் சமயத்தில் அயர்லாந்தில் இலக்கியத் துறையிலும் மறுமலர்ச்சி ஏற்பட்டது. ஐரிஷ் மொழி மக்களின் ஆதரவைப் பெற்றது. ஐரிஷ் மொழி வளர்ச்சியின் காரணமாகப் பல புலவர்களும், கட்டுரையாசிரியர்களும், நாடக ஆசிரியர்களும் தோன்றினர். இவ்வாசிரியர்கள் அனைவரும் அயர்லாந்தின் தேசிய மொழி, பழக்க வழக்கங்கள், பண்பாடு ஆகியவற்றை மையமாகக் கொண்டு ஆங்கிலத்தில் கட்டுரைகளையும், கவிதைகளையும், நாடகங்களையும் எழுதினர். இதனால் இளைஞர்களிடையே ஐரிஷ் நாகரிகமும் ஆதிக்கம் பெறத் தொடங்கியது.

மேலும் அயர்லாந்தின் அரசியல் கட்சிகளிடையே நிலவிய கருத்து வேறுபாடும் இலக்கிய மறுமலர்ச்சியின் காரணமாக மறையத் தொடங்கியது. அயர்லாந்தின் பொருளாதாரம், பண்பாடு ஆகிய இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு இரண்டு கழகங்கள் செயல்படத் தொடங்கின. இதன் பயனாக இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அயர்லாந்தின் தேசிய இயக்கத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. இம்மாற்றம் எவ்வாறு அயர்லாந்தின் பிரிவினைக்குக் காரணமாக இருந்தது என்பதைப் பற்றிப் பின்னர் கவனிப்போம்.

4. பிரிட்டிஷ் பேரரசும் அதன் சுயாட்சிப் பகுதிகளும்

பதினேழாம் நூற்றாண்டு முதற்கொண்டு பிரிட்டனின் கடற்படையின் காரணமாகவும், தொழிற்புரட்சியின் காரணமாகவும் பிரிட்டிஷ் பேரரசு நவீன முறையில் வளர்ச்சியடைய ஆரம்பித்தது. இப்பேரரசு 19ஆம் நூற்றாண்டிலேயே மிக அதிக அளவில் வளர்ச்சியடைந்தது. குறிப்பாக நெப்போலியனுடைய கண்டத் திட்டமும், தேவையற்ற போர்களும் பிரிட்டிஷ் பேரரசின் வளர்ச்சிக்குப் பேருதவியாக இருந்தன. 1840க்கும் 1879க்கும் இடைப்பட்ட பகுதியில் மிதவாதக் கட்சியினர் பிரிட்டிஷ் பேரரசின் பெரும் பகுதிகளுக்குச் சுயாட்சி வழங்கினர். ஆனால் மிதவாதக் கட்சியினரின் இச் செய்கை பிரிட்டிஷ் பேரரசை எந்த வகையிலும் பாதிக்கவில்லை. 1874ஆம் ஆண்டிற்குப் பின்னர், அதாவது டிஸ்ரேலியின் தலைமையின் கீழ் பிரிட்டன் ஏகாதிபத்தியக் கொள்கைகளைத் தீவிரமாகப் பின்பற்றித் தொடங்கியதும், தொழில் வளர்ச்சியின் காரணமாக பிரிட்டிஷ் பேரரசின் எல்லைகள் மேலும் விரிவடைந்தன. இவ்வாறு வளர்ச்சியடைந்த பிரிட்டிஷ் பேரரசு பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் உலகின் மொத்த நிலப்பரப்பில் ¼ பங்கைத் தன்னகத்தே கொண்டு விளங்கியது. எல்லா இனத்தைச் சேர்ந்தவர்களும் இப்பேரரசில் இருந்தனர். எல்லா நாகரிகமும் இப்பேரரசில் இருந்தது.

பிரிட்டனின் மக்கள் தொகைப் பெருக்கமும், ஆசியா, ஆப்பிரிக்கா ஆகிய பகுதிகளில் வாழ்ந்த ஐரோப்பியரல்லாதவர்களின் மீது செலுத்திய அரசியல், பொருளாதார ஆதிக்கங்களும், இராணுவ நடவடிக்கைகளின் வெற்றியும், இராஜ தந்திர முறைகளில் ஏற்பட்ட நன்மைகளும் பிரிட்டிஷ் பேரரசின் வளர்ச்சிக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன. இதனால் கனடா, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா ஆகிய பகுதிகள் பிரிட்டனின் குடியேற்ற நாடுகளாயின.

பிரிட்டிஷ்காரர்களின் ஆதிக்கத்தின்கீழ் இருந்த இந்தியப் பகுதிகள் (British India) 1877-ல் ஒரு பேரரசாக மாற்றப்பட்டது. விக்டோரியா மகாராணியார் இப்பேரரசின் பேரரசியாக விளங்கினார். இப்பேரரசின் மேற்கே இருந்த பலுசிஸ்தானம் 1870-க்கும் 1879-க்கும் இடைப்பட்ட காலத்தில் பிரிட்டிஷ்காரர்களால் கைப்பற்றப்பட்டு இப்பேரரசுடன் இணைக்கப்பட்டது. இப்பேரரசுக்குக் கிழக்கே இருந்த பர்மா 1880 ஆம் ஆண்டிற்குப் பிறகு இப்பேரரசுடன் இணைக்கப்பட்டது. அத்துடன் சீனாவிடமிருந்து 1842-ல் கைப்பற்றப்

பட்ட ஹாங்காங் என்ற பகுதியும், 1898-ல் கைப்பற்றப்பட்ட வை-கூ-வை என்ற துறைமுகமும் இப்பேரரசில் இணைக்கப் பட்டன. அடுத்து திபேத்தில் பிரிட்டிஷ்காரர்களின் செல்வாக்கு அங்கீகரிக்கப்பட்டது. பசிபிக் பெருங்கடலில் இருந்த ஃபிஜித் (Fiji) தீவுகள் 1874-ல் பிரிட்டனின் ஆதிக்கத்தின்கீழ் வந்தன. இதனையடுத்து தென்கிழக்கு நியூகினியாவில்(பாபுவா) 1884லும், வடக்கு போர்னியோவில் 1888லும், டோங்காவில் (Tonga) 1900லும் பிரிட்டனின் ஆதிக்கம் ஏற்பட்டது.

பிரிட்டனுக்கு அருகாமையில் மத்திய தரைக்கடல் பகுதியில் இருந்த சைப்ரசை பிரிட்டன் 1878-ல் கைப்பற்றியது. இதனை யடுத்து ஆப்பிரிக்காவில் சில பகுதிகளை பிரிட்டன் கைப்பற்ற முனைந்தது. 1880-ல் ஆப்பிரிக்காவின் தென்கோடி முனையில் அமைந்துள்ள கேப் குடியேற்றப் பகுதியும், நேட்டால் (Natal) பகுதியும், மேற்கே சில துறைமுகங்களும் பிரிட்டனின் ஆதிக் கத்தின்கீழ் வந்தன. ஆனால் 1880க்குப் பிறகு ஆப்பிரிக்காவின் பெரும் பகுதி பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வந்தது. 1882-ல் பிரிட்டன் எகிப்தைக் கைப்பற்றியது. இதனையடுத்து 1885-ல் பெசுவானலாந்தும் (Bechnaland), 1887-ல் சோமாலிலாந்தும், 1890-ல் ஸான்ஸிபாரும் (Zanzibar), 1896-ல் உகாண்டாவும் (Uganda) பிரிட்டிஷ் பேரரசின் கீழ் வந்தன. பிரிட்டனின் வியாபாரக் கம்பெனிகள் 1886-ல் நைஜீரியாவையும், 1888-ல் பிரிட்டிஷ் கிழக்கு ஆப்பிரிக்காவையும், 1889-ல் ரொடீஷியா வையும் கைப்பற்றி பிரிட்டிஷ் பேரரசுடன் இணைத்தன. ஸுலுலாந்து (Zululand) 1887லும், அஷாந்தி (Azhanti) 1896லும், எகிப்திய சூடான் 1897லும், டிரான்ஸ்வால்(Transvaul), ஆரஞ்சு சுதந்திர நாடு ஆகிய டச்சுக் குடியரசுகள் 1902லும் இராணுவ நடவடிக்கைகளின் மூலம் பிரிட்டிஷ் பேரரசுடன் இணைக்கப்பட்டன.

இவ்வாறு பரந்த நிலப் பரப்பையும், பல்வேறுபட்ட மக்களையும், நாகரிகத்தையும் தன்னகத்தே கொண்டிருந்த பிரிட்டிஷ் பேரரசு நிர்வாகத்தின் காரணமாக, சுயாட்சிப் பகுதிகள் அல்லது டொமினியன்கள் என்றும், பிரிட்டிஷ் அரசின் பாதுகாப்பின்கீழ் இருந்த பகுதிகள் அல்லது புரொ டெக்ட்ரேட்டுகள் என்றும், இந்தியப் பேரரசு என்றும் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வந்தது.

டொமினியன்கள் அல்லது சுயாட்சிப் பகுதிகள்

பிரிட்டிஷ் பேரரசில் ஏறத்தாழ பாதி நிலப்பரப்பு டொமினி யன்களாக அல்லது சுயாட்சிப் பகுதிகளாக இருந்தன. இப்

பகுதிகளின் அரசாங்கம் இப் பகுதிகளில் வாழ்ந்த மக்களின் பிரதிநிதிகளால் பிரிட்டிஷ் அரசருக்குக் கட்டுப்பட்டு நடத்தப் பட்டது. ஆனால் இப் பகுதிகளுக்கு முழு சுதந்திரம் அளிக்கப் படவில்லை. பிரிட்டிஷ் அரசின் செல்வாக்கே இப் பகுதிகளில் மேலோங்கி இருந்தது. இப் பகுதிகளில் இருந்த பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு இப் பகுதிகளை நிர்வகிக்க முழு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. சிறுபான்மையினரான இவ்வதிகாரிகள் இப் பகுதிகளில் வாழ்ந்த மக்களின் ஒத்துழைப்புடன் நிர்வா கத்தை நடத்தி வந்தனர். எனவே இப் பகுதிகள் சுயாட்சிப் பகுதிகள் என வழங்கப்பட்டன. கனடா, நியூபவுண்ட் லாந்து, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா ஆகியவை பிரிட்டிஷ் பேரரசில் சுயாட்சிப் பகுதிகளாக விளங்கின.

கனடா

பிரிட்டிஷ் பேரரசின் பேரரசியாக விக்டோரியா மகாராணி யார் பதவி ஏற்றபொழுது பிரிட்டிஷ் பேரரசில் ஒரு சுயாட்சிப் பகுதிகூட இல்லை. ஆனால் 1910-ல் ஏழாம் எட்வர்டு இறந்த பொழுது இப்பேரரசில் சுமார் 21 சுயாட்சிப் பகுதிகள் இருந்தன.

பிரிட்டிஷ் பேரரசிலேயே முதன்முதலாக சுயாட்சி அந்தஸ்து பெற்ற பகுதி கனடாவாகும். இதனால் பிற்காலத்தில் கனடா சுயாட்சிப் பகுதிகளின் கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தியது.

நோவாஸ் கோஷியா (Novas Cotia), நியூ பிரன்ஸ்விக் ஆகிய இரு குடியேற்றப் பகுதிகளும், 1867-ல் கியூபெக், அண்டாரியோ ஆகிய இரு பகுதிகளுடன் கூட்டாக இணைக்கப் பட்டு கனடா சுயாட்சிப் பகுதி என வழங்கப்பட்டது.

இவ்வாறு அமைக்கப்பட்ட கூட்டமைப்பு 1867-ல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டத்தின் மூலமாக அமைக்கப்பட்டது (British North America Act of 1867). இச் சட்டம் பிரிட்டனில் இயற்றப்பட்டு கனடா சுயாட்சிப் பகுதியாக அமைக்கப் படுவதற்கு 1864-ல் கியூபெக்கில் கூட்டப்பட்ட ஒரு மாநாடே முக்கிய காரணமாகும். இந்த பிரிட்டிஷ் வட அமெரிக்கச் சட்டத்தை கனடாவின் அரசியலமைப்பு என்று சுருக்கமாகச் சொல்லலாம். இச் சட்டத்தின்படி பிரிட்டனைப் பின்பற்றி இரு சபைகள் கொண்ட பாராளுமன்றம் ஒன்று கனடாவில்

அமைக்கப்பட்டது. இதில் மேல்சபை செனட் என்றும், கீழ்ச் சபை மக்கள் சபை என்றும் சொல்லப்பட்டன. மக்கள் சபையின் அங்கத்தினர்கள் ஜனநாயக முறையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் பாராளுமன்றத்துக்குக் கட்டுப்பட்ட அமைச்சரவையை அமைத்து அரசாங்கத்தை நடத்தி வந்தனர். கவர்னர் ஜெனரல் என்பவர் கனடா அரசாங்கத்தின் தலைவராக இருந்து அரசருக்காக ஆட்சி புரிந்து வந்தார். இவ்வாறு கனடாவின் கூட்டமைப்பில் இருந்த நான்கு பகுதிகளும் தனித்தனி சட்டசபைகளைப் பெற்றிருந் தாலும் கனடாவின் மத்திய பாராளுமன்றத்திற்குக் கட்டுப் பட்டே செயல்பட்டு வந்தன.

கனடாவில் முக்கிய அரசியல் கட்சியாக விளங்கியது பழமை விரும்பிக் கட்சியாகும். இக் கட்சி பிரிட்டன் மீது பற்று உடையதாக இருந்தாலும், கனடாவின் தேசியத்திற் காகவும் பொருளாதார வளர்ச்சிக்காகவும் பாடுபட்டது. இக் கட்சியின் தலைவராக விளங்கிய சர் ஜான் மாக்டோனல்டு (Sir John Macdonald) 1867 முதல் கனடாவின் பிரதம அமைச் சராக இருந்தார். இவர் 1891-ல் இறக்கும்வரை கனடாவின் பிரதம அமைச்சர் பதவியை வகித்து அரசாங்கத்தைத் திறமை யாக நடத்தி வந்தார். கனடா சுயாட்சி அந்தஸ்து பெற்றதும் தனக்கென்று தனி இராணுவம், காவற்படை, சிவில் நிர்வாகம் ஆகியவற்றைக் கொண்டிருந்ததுடன், பொருளாதாரத் துறையில் தனியாக வங்கி, நாணயம் ஆகியவற்றையும், தபால் துறை யையும் பெற்றிருந்தது. இந்நாட்டு அரசு கனடாவின் தொழில் வளர்ச்சிக்காக அந்நிய நாட்டுப் பொருள்களின்மீது வரியை விதித்தது. அத்துடன் விவசாய வளர்ச்சிக்காகவும் புதிய கனடா அரசு பாடுபட்டது.

நியூ பிரன்ஸ்விக், நோவாஸ்கோஷியா, கியூபெக், அண்டாரியோ ஆகிய நான்கு பகுதிகளைக் கொண்ட கனடா வெகு விரைவாக வளர்ச்சியடைந்தது. முதலில் ஹட்சன் வளைகுடாக் கம்பெனியிடமிருந்து பெருத்த அளவில் நிலங்கள் வாங்கப்பட்டு, 1870-ல் மானிடோபா (Manitoba) என்ற புதிய மாநிலம் உருவாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1871-ல் பிரிட்டிஷ் கொலம்பியாவும், 1873-ல் எட்வர்டு இளவரசர் தீவும் (Prince Edward Island) கனடா கூட்டமைப்பில் இணைக்கப்பட்டன. இறுதியாக 1878-ல் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தின்படி நியூ பவுண்ட்லாந்தைத் தவிர ஐக்கிய அமெரிக்காவிற்கு வடக்கே இருக்கக்கூடிய எஞ்சிய பிரிட்டிஷ்

பகுதிகள் கனடா சுயாட்சிப் பகுதியில் இணைக்கப்பட்டன. நியூபவுண்ட்லாந்து 1949 வரை ஒரு தனி குடியேற்ற நாடாகவே இருந்தது. இவ்வாறு விரைவாக விரிவடைந்த கனடாவில் இருந்த வளப்பமான பிரெய்ரி பகுதிகளும், மேற்கே இருந்த சுரங்கங்களும் வெளிநாட்டவரை வெகுவாகக் கவர்ந்தன. இதனால் பிரிட்டிஷ்காரர்களும் ஐக்கிய அமெரிக்கர்களும் கனடாவிற்குச் சென்று குடியேற ஆரம்பித்தனர். வெளி நாட்டவரின் குடியேற்றத்தால் கனடாவின் மேற்குப் பகுதி வளர்ச்சியடைந்ததால் 1905-ல் இப்பகுதி ஆல்பெர்டா (Alberta), சஸ்கட்செவான் (Saskatchewan) என்ற இரு புதிய மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு கனடா கூட்டமைப்பில் இணைக்கப்பட்டன.

இதற்கிடையில் சர் ஜான் மாக்டோனல்டு இறந்துவிடவே அவரது பழமை விரும்பிக் கட்சியும் கனடாவில் செல்வாக் கிழந்தது. அடுத்து மிதவாதக் கட்சி, மக்களின் செல்வாக்கைப் பெற்று, சர் வில்பிரட் லௌரியர் (Sir Wilfred Laurier) என்பவ ரின் தலைமையின்கீழ் 1896 முதல் 1910 வரை கனடாவின் ஆட்சிப் பொறுப்பிலிருந்தது. மிதவாதக் கட்சியின் தலைவரான லௌரியர் கியூபெக் பகுதியைச் சேர்ந்தவர்; கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றியவர். இவர் பிரதம அமைச்சராக இருந்த பொழுது ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளுடன் நெருங்கிய வியாபாரத் தொடர்பு கொண்டிருந்தார். இவர் பிரிட்டனிடம் இரக்கம் காட்டியதால் போயர் போர்களின் பொழுது கனடியப் படையை பிரிட்டனுக்கு உதவியாகத் தென்னாப்பிரிக்காவுக்கு அனுப்பினார்.

ஆஸ்திரேலியா

கனடாவைப் போலவே பிரிட்டிஷ் பேரரசின் பகுதியாக சுயாட்சி அந்தஸ்து பெற்ற மற்றொரு பகுதி ஆஸ்திரேலியா வாகும். இப் பகுதியில் இருந்த விக்டோரியா, குயின்ஸ்லாந்து, தெற்கு ஆஸ்திரேலியா, மேற்கு ஆஸ்திரேலியா, டாஸ்மே னியா, நியூ சௌத்வேல்ஸ் ஆகியவை ஒன்று சேர்ந்து ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்தி, கனடாவைப்போல சுயாட்சி பெற விரும்பின. இவற்றில் நியூ சௌத்வேல்ஸில் முதன்முதலில் 1788-ல் பிரிட்டிஷ் குடியேற்றம் அமைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இப் பகுதியில் ஆடு வளர்த்தலின் காரணமாகவும், தங்கம் கண்டுபிடிக்கப்பட்டதன் காரணமாகவும் பிரிட்டிஷ் காரர்கள் ஏராளமாகக் குடியேறினர். இதனால் ஆஸ்திரேலியா பிரிட்டிஷ் குடியேற்ற நாடாக மாறியது.

தொடக்கத்தில் ஆஸ்திரேலியப் பகுதிகளிடையே 1885–ல் காப்புவரியின் காரணமாகக் கருத்து வேறுபாடு நிலவியது. இருப்பினும் தங்களுக்கு ஏற்படும் தீமைகளை அறிந்து இவ் ஆஸ்திரேலியப் பகுதிகள் கனடாவைப்போல ஒரு கூட்ட மைப்பை ஏற்படுத்த விரும்பின. ஆஸ்திரேலியப் பகுதிகளில் வாழ்ந்த மக்களின் உணர்வுக்கு மதிப்புக் கொடுக்கும் வகையில் பிரிட்டிஷ் பாராளுமன்றம் 1900–ல் ஆஸ்திரேலியக் காமன் வெல்த் சட்டம் (Commonwealth Australia Act) என்பதை இயற்றியது. இச் சட்டமே ஆஸ்திரேலிய அரசியலமைப்பு என வழங்கப்படுகிறது. இந்த காமன்வெல்த்தில் நியூசிலாந்து சேராமல் தனித்து பிரிட்டிஷ் குடியேற்ற நாடாக விளங்கியது.

ஆஸ்திரேலியா காமன்வெல்த் சட்டத்தின்படி ஆஸ்தி ரேலியாவில் இருந்த விக்டோரியா, குயின்ஸ்லாந்து, தெற்கு ஆஸ்திரேலியா, மேற்கு ஆஸ்திரேலியா, டாஸ்மேனியா, நியூ சவுத் வேல்ஸ் ஆகியவை இப்புதிய காமன்வெல்த்தின் மாநிலங் களாகப் பிரிக்கப்பட்டு ஆஸ்திரேலிய காமன்வெல்த் கூட் டமைப்பு என்ற பெயரில் விளங்கியது. இக் கூட்டமைப்பில் இரு சபைகள் கொண்ட ஒரு பாராளுமன்றம் இருந்தது. இப் பாராளுமன்றத்தில் மாநிலங்களால் சம அளவில் தேர்ந்தெடுக் கப்பட்ட பிரதிநிதிகள் செனட் என்ற மேலவையிலும், மக்கள் தொகையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகள், பிரதிநிதிகள்சபை என்ற கீழவையிலும் அங்கம் வகித்தனர். ஆஸ்திரேலிய காமன்வெல்த்தின் உயர் நீதிமன்றம் ஆஸ்திரேலிய அரசியலமைப்பின் பாதுகாவலராக விளங்கியது. இவ்வாறு எல்லா வகையிலும் ஐக்கிய அமெரிக் காவை ஒத்திருந்த ஆஸ்திரேலிய காமன்வெல்த் இரு வகை களில் பிரிட்டனைப் பின்பற்றியது. இந்த நாட்டின் தலைவராக விளங்கிய கவர்னர் ஜெனரல் பிரிட்டிஷ் அரசரைப் போலவே பெயரளவில் ஆட்சிபுரிந்து வந்தார். ஆனால் உண்மையில் ஆட்சி புரிந்தது ஆஸ்திரேலியப் பாராளுமன்றமே. அடுத்து ஆஸ்திரேலியப் பாராளுமன்றத்தில் இருந்த அமைச்சர்கள் தங் கள் பாராளுமன்றத்திற்குக் கட்டுப்பட்டு இருந்தனரே ஒழிய கவர்னர் ஜெனரலுக்குக் கட்டுப்பட்டு இருக்கவில்லை. இவ் வாறு ஆஸ்திரேலிய காமன்வெல்த் ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய இரு நாடுகளின் அரசியலமைப்பையும் பின் பற்றி சுயாட்சிப் பகுதியாக விளங்கியது. ஐக்கிய அமெரிக் காவைப் போலவே இப்பகுதியில் வாழ்ந்த பெண்களும் வாக் குரிமை பெற்றனர்.

தொழில் துறையிலும், நகர நாகரிகத்திலும் ஆஸ்திரேலியா வளர்ச்சியடைந்ததே இந் நாட்டில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். ஆடுகள் வளர்த்தல், விவசாயம், சுரங்கத் தொழில் ஆகியவையே இந்நாட்டின் முக்கிய தொழில்களாக விளங்கின. ஆனால் 1871ஆம் ஆண்டிற்குப் பின்னர் இந்நாடு வியாபாரத் துறையில் மிகச் சிறப்பாக வளர்ச்சி பெற்றது. 1871க்கும் 1914க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்நாட்டின் மக்கள் தொகை மூன்று மடங்காகப் பெருகியது.

தொழிற்சாலைகளின் வளர்ச்சியின் காரணமாகவும், மக்கள் தொகைப் பெருக்கத்தின் காரணமாகவும், நகர நாகரிக வளர்ச்சியின் காரணமாகவும், ஆஸ்திரேலியாவில் தொழிற்கட்சி வளர்ச்சியடைந்தது. இக்கட்சி 1890 க்கும் 1910 க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆஸ்திரேலியாவில் விக்டோரியா மாநிலத்தின் ஆட்சியைக் கைப்பற்றித் தொழிலாளர் நலச் சட்டங்கள் பலவற்றை இயற்றியது. படிப்படியாக குயின்ஸ்லாந்து, தெற்கு ஆஸ்திரேலியா, நியூ சௌத்வேல்ஸ் ஆகிய மாநிலங்களிலும் தொழிற்கட்சி செல்வாக்கு பெற்றது. இதனால் இம்மாநிலங்களிலும் தொழிலாளர்களுக்காகப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. மேலும் ஆஸ்திரேலிய காமன்வெல்த் 1904இல் ஒரு கூட்டு நீதிமன்றத்தை ஏற்படுத்தி ஆஸ்திரேலிய மாநிலங்களுக்கிடையே தொழில் துறையில் நிலவிய தகராறுகளைத் தீர்த்து வைத்தது. 1908-ல் முதியோர் உதவித்தொகை முறையை ஆஸ்திரேலிய காமன்வெல்த் அமுல்படுத்தியது. இப்பகுதியில் 1910-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தொழிற்கட்சி பெரும்பான்மையான பலத்தைப் பெற்றது. இக் கட்சியின் தலைவரான ஆன்ரூஃபிஷ்ஷர் (Andrew Fisher) என்பவர் சுயாட்சி அந்தஸ்து பெற்ற ஆஸ்திரேலியாவின் முதலமைச்சரானார். இவர் 1911-ல் எல்லா ஆஸ்திரேலிய இளைஞர்களுக்கும் கட்டாய இராணுவப் பயிற்சியளித்து ஆஸ்திரேலிய இராணுவத்தை பிரிட்டிஷ் முறையில் மாற்றியமைத்தார். இவ்வாறு ஆஸ்திரேலியா படிப்படியாக பிரிட்டிஷ் பேரரசில் சுயாட்சி அந்தஸ்தைப் பெற்றது.

நியூசிலாந்து

நியூசிலாந்து 1856 முதல் சுயாட்சி உரிமையுடன் இயங்கி வந்தது. இது 1907இல் டொமினியன் என அழைக்கப்பட்டது. ஆஸ்திரேலியாவைப் போலவே இந்நாடும் தொழில் துறையிலும் பிற துறைகளிலும் படிப்படியாக வளர்ச்சியடைந்தது. இந்நாட்டின் மக்கள்தொகையும் கணிசமான அளவு உயர்ந்தது.

இந்நாடும் ஆஸ்திரேலியாவைப் போல பெண்களுக்கு வாக்குரிமை வழங்குதல், முதியோர் உதவித்தொகை வழங்குதல் ஆகிய நன்மைகளைத் தன்னுடைய மக்களுக்கு வழங்கியது. இவற்றுடன் தொழிலாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்பளிக்கும் இன்ஷூரன்ஸ் முறையையும் இந்நாட்டின் அரசாங்கம் தனது மக்களுக்கு வழங்கியது.

இந்நாட்டிலும் கட்டாய இராணுவப் பயிற்சித்திட்டம் அமுல் நடத்தப்பட்டது. தேசியக் கருத்து வளர்ச்சியடைந்தாலும் இந்நாடு பிரிட்டிஷ் பேரரசிடம் விசுவாசமாக நடந்து கொண்டது.

தென்னுப்பிரிக்கா

பத்தொன்பதாம் நூற்றுண்டில் தென்னுப்பிரிக்காவில் இரண்டு முக்கியப் பிரச்சினைகள் நிலவின. இவற்றில் முதலாவது இனத்தை அடிப்படையாகக் கொண்டது. தென்னுப்பிரிக்காவில் வெள்ளைநிற ஐரோப்பியர்களைக் காட்டிலும் கறுப்பர்களான நீக்ரோக்களும் இந்தியர்களும் மிக அதிக அளவில் இருந்தனர். இரண்டாவது பிரச்சினை தேசியத்தை அடிப்படையாகக் கொண்டது. இப்பிரச்சினையில் ஆங்கிலேயர்களும் டச்சுக் காரர்களும் தங்கள் ஏதேச்சாதிகாரத்தின் காரணமாக தென்னுப் பிரிக்காவில் அடிக்கடி மோதிக் கொண்டனர். இப்பிரச்சினையே முதல் பிரச்சினையைவிட மிகக் கடுமையானதாக இருந்தது.

தென்னுப்பிரிக்காவில் கேப் குடியேற்ற நாடு, நேட்டால் ஆகிய பிரிட்டிஷ் குடியேற்றப் பகுதிகளும், டிரான்ஸ்வால், ஆரஞ்சு சுதந்திர நாடு என்ற டச்சு குடியேற்றப் பகுதியும் அடுத்தடுத்து அமைந்திருந்தன (டச்சுக்காரர்கள் போயர்கள் என்றும் அழைக்கப்பட்டனர்). இதனுல் போயர்களுக்கும் பிரிட்டிஷ்காரர்களுக்குமிடையே அடிக்கடி கைகலப்புகள் ஏற்பட்டன. பிரிட்டிஷ்காரர்கள் 1877இல் டிரான்ஸ்வால் பகுதியின் மீது சொந்தம் கொண்டாடினர். இதனுல் மீண்டும் இவ்விரு ஐரோப்பியர்களிடையே ஆப்பிரிக்காவில் தகராறுகள் ஏற்பட்டன. இத்தகராறுகளின் போது பிரிட்டிஷ்காரர்களை 1881-ல் மஜூபா (Majuba) குன்றுகளில் போயர்கள் தோற்கடித்தனர். இதனுல் டிரான்ஸ்வால் ஏறத்தாழ சுதந்திரமடைந்தது. பிரிட்டிஷ்காரர்களின் மீது வெற்றியடைந்ததன் காரணமாக போயர்கள் என்றழைக்கப்பட்ட டச்சுக்காரர்கள் கேப் குடியேற்ற நாடு, நேட்டால் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த டச்சுக்

காரர்களை ஒன்று சேர்த்து டச்சு தென்னாப்பிரிக்காவை ஏற்படுத்த முனைந்தனர்.

இச்சமயத்தில் பிரிட்டிஷ் பிரதமரான சேம்பர்லினின் முயற்சியினாலும், சிசில் ரோட்ஸ் என்பவரது தென்னாப்பிரிக்கத் திட்டத்தின் காரணமாகவும் பிரிட்டிஷ் மக்களிடையே ஏகாதிபத்தியக் கருத்துக்கள் ஆதிக்கம் பெறத் தொடங்கின. ஆங்கிலேயர்களுக்கும் போயர்களுக்குமிடையே நிலவிய நட்புறவு வளர்ச்சியடையாத நிலையில், ஆயிரக்கணக்கான ஆங்கிலேயர்கள் டிரான்ஸ்வால் பகுதிகளுக்குச் சென்று தங்கள் செல்வாக்கை அப்பகுதிகளில் ஏற்படுத்தி, படிப்படியாக அப்பகுதியைத் தங்களுடன் இணைத்துக்கொள்ள முற்பட்டனர். இச்சமயத்தில்தான் ஆங்கிலேயர்கள் இப்பகுதியில் உலகிலேயே அதிக அளவு தங்கம் இருப்பதைக் கண்டறிந்தனர்.

இந்நிலையில் 1895 முதல் 1899 வரை டிரான்ஸ்வால் அரசின் தலைமைப் பதவியை பால் குருகர் (Paul Kruger) என்ற டச்சுக்காரர் வகித்து வந்தார். இவர் இப்பகுதியில் இருந்த பிரிட்டிஷ் மக்களிடையே மிகுந்த வெறுப்புக் கொண்டிருந்தார். அத்துடன் பிரிட்டனிலிருந்து தென்னாப்பிரிக்காவில் குடியேறி சுரங்கத் தொழிலில் ஈடுபட்டிருந்த யுட்லாந்தர்கள் (Uitlanders) என்பவர்களும் பால் குருகரால் வெறுக்கப்பட்டனர். மேலும் இவர்களது கோரிக்கைகளுக்கு போயர்கள் மதிப்பளிக்காததுடன், இவர்களுக்கு வாக்குரிமை அளிக்கவும் மறுத்து விட்டனர். இது ஒருபுறமிருக்க, பிரிட்டிஷ்காரர்களின் ஆக்கிரமிப்பை அமைதியான முறையில் தடுத்து நிறுத்த முயற்சி செய்து தோல்வி கண்ட டிரான்ஸ்வால், ஆரஞ்சு சுதந்திர நாடு ஆகிய இரண்டும் ஒன்றுபட்டு பிரிட்டன்மீது போர் தொடுத்தன. இது போயர் போர் என வழங்கப்படுகிறது. இப்போரின் தொடக்கத்தில் போயர்கள் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு நேட்டால் என்ற பகுதியையும், கேப் குடியேற்றப் பகுதியில் இருந்த வைர வயல்கள் நிறைந்த கிம்பெர்லி (Kimberley) என்ற பகுதியையும் ஆக்கிரமித்துப் பல வெற்றிகளைப் பெற்றனர். டச்சுக்காரர்களின் திறமையும், போதிய போர்த் தளவாடங்களுமே இவ்வெற்றிக்கு முக்கிய காரணமாகும். இதற்கிடையில் கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய பிரிட்டிஷ் சுயாட்சிப் பகுதியின் படைகள் பிரிட்டிஷ்காரர்களின் உதவிக்கு வந்து சேர்ந்தன. இப்படைகள் ஆங்கிலப் படையுடன் சேர்ந்து போயர்களை எதிர்த்ததால் வெற்றி ஆங்கிலேயர்களின் பக்கம் திரும்பியது. நேட்டால், கேப் குடியேற்றப் பகுதி ஆகியவற்றிலிருந்து போயர்கள்

விரட்டப்பட்டனர். டிரான்ஸ்வாலின் தலைநகரான பிரிடோரியா ஆங்கிலேயர் வசமாயிற்று. டிரான்ஸ்வால் குடியரசின் தலைவர் குரூகர் ஐரோப்பாவிற்குத் தப்பியோடினார். இதனையடுத்து டிரான்ஸ்வாலையும், ஆரஞ்சு சுதந்திர நாட்டையும் பிரிட்டன் தன்னுடைய பகுதியுடன் இணைத்துக்கொண்டதாக அறிவித்தது. இருப்பினும் போயர்கள் ஆங்கிலேயர்களை மறைந்திருந்து தாக்கி வந்தனர். 1902இல் போயர் தளபதியுடன் ஏற்பட்ட வெரீநிக்கிங் (Vereeniging) உடன்படிக்கையின்படி போயர்கள் தங்கள் தாக்குதல்களை நிறுத்திக் கொண்டனர். பிரிட்டிஷ் அரசாங்கம் தென்னாப்பிரிக்காவில் டச்சு மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்க ஒப்புக்கொண்டதுடன், முந்திய டச்சுக் குடியரசுகளுக்கு சுயாட்சி அந்தஸ்தை வழங்கவும் ஒப்புக் கொண்டு, 1906-1907இல் சுயாட்சி அந்தஸ்தை டிரான்ஸ்வால், ஆரஞ்சு சுதந்திர நாடு ஆகியவற்றிற்கு வழங்கியது.

அடுத்து பிரிட்டன் 1909 இல் கேப் குடியேற்றப் பகுதி, நேட்டால், டிரான்ஸ்வால், ஆரஞ்சு சுதந்திர நாடு ஆகிய நான்கு தென்னாப்பிரிக்கப் பகுதிகளையும் ஒன்றாக இணைத்து, தென்னாப்பிரிக்க யூனியன் என்ற ஒன்றை அமைத்தது. தென்னாப்பிரிக்க யூனியன் ஒருவகையில் போயர்களின் வெற்றியாகவே கருதப்பட்டது. இந்த யூனியனில் பிரிட்டிஷ்காரர்களை விட போயர்கள் அதிக அளவில் இருந்ததுடன், பிரிட்டிஷ்காரர்களைப் போல சமஉரிமைகளை அனுபவித்தனர். அத்துடன் தங்கள் பிரதிநிதிகளையும் தென்னாப்பிரிக்க மத்திய பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்தனர். எல்லாவற்றிற்கும் மேலாகத் தங்கள் பிரதிநிதிகள் மத்தியப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் பெற்றிருந்ததால் தளபதி லூயி போதா என்பவர் தென்னாப்பிரிக்க யூனியனின் முதல் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் போயராக இருந்தாலும் தென்னாப்பிரிக்காவில் மொழி, கல்வி, விவசாயம், பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபட்டதுடன், பிரிட்டனுடன் நட்புறவு கொண்டு பிரிட்டிஷ் பேரரசுக்குக் கட்டுப்பட்டு ஆட்சிபுரிந்தார். போயர்களில் தீவிரவாதிகளும் பிரிட்டிஷ்காரர்களில் தீவிரவாதிகளும் இவருக்குத் தொல்லைகள் கொடுத்தாலும், பெரும்பான்மையான நடுத்தரவாதிகளின் ஒத்துழைப்புடன் இவர் அத்தொல்லைகளைச் சமாளித்தார்.

இவ்வாறு 1910 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் பேரரசு தென்னாப்பிரிக்க யூனியன், ஆஸ்திரேலிய காமன்வெல்த், கனடா, நியூபவுண்ட்லாந்து, நியூசிலாந்து ஆகிய ஐந்து சுயாட்சிப் பகுதி

களைத் தன்னகத்தே கொண்டிருந்தது. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் நியமிக்கப்பட்ட கவர்னர் ஜெனரல் இப்பகுதிகளைப் பெயரளவில் நிர்வகித்து வந்தாலும், இப்பகுதிகளின் பாராளுமன்றங்களுக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சரவைகளே பெரும்பாலும் ஆட்சி நடத்தி வந்தன. இருப்பினும் பிரிட்டிஷ் பாராளுமன்றம் இப்பகுதிகளில் இயற்றப்பட்ட சட்டங்களை நிராகரிக்கும் உரிமையையும், சில வழக்குகளில் தீர்ப்பு வழங்கும் உரிமையையும் பெற்றிருந்தது. பிரிட்டனின் அனுமதியின் பேரிலேயே இப்பகுதிகள் பிற வெளிநாடுகளுடன் நட்புறவு கொண்டிருந்தன.

பொருளாதாரத் துறையில் இப்பகுதிகள் தங்கள் விருப்பப்படியே கொள்கைகளை மேற்கொண்டன. சில சமயங்களில் தங்கள் தாய்நாடான பிரிட்டனுக்கு எதிராகக் காப்புவரியைத் தங்கள் நாட்டின் தொழில்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் விதித்தன. இப்பகுதிகளில் இருந்த அரசுகள் தங்கள் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டுத் தங்கள் நாடுகளுக்குப் புதிதாகக் குடியேறுபவர்களைத் தடை செய்தன. இப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் பிரிட்டிஷ் பேரரசுடன் ஒத்துழைத்ததன் காரணமாக, கனடாவில் ஒரு பிரெஞ்சுக்காரரும், ஆஸ்திரேலியாவில் ஒரு சோஷியலிஸ்டும், தென்னாப்பிரிக்க யூனியனில் ஒரு போயரும் பிரதம அமைச்சர்களாகப் பதவி வகித்தனர்.

இவ் வைந்து சுயாட்சிப் பகுதிகளிடையே நட்புறவு வளர்வதற்காகப் பிரிட்டிஷ் பாராளுமன்றம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதன் பயனாகவே பேரரசுப் பகுதிகளின் பிரதிநிதிகள் அடங்கிய மாநாடுகளும், பேரரசின் பாதுகாப்பு மாநாடுகளும் பிரிட்டிஷ் பிரதமரான சேம்பர்லினால் அடிக்கடி கூட்டப்பட்டன. இத்தகைய மாநாடுகள் முதன் முதலில் 1887 ஆம் ஆண்டில் இலண்டனில் தொடங்கி வைக்கப்பட்டன. இதனையடுத்து தொடர்ந்து பல மாநாடுகளில் பிரிட்டிஷ் பேரரசின் பகுதிகள் தங்களிடையே கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டன.

மேலும் பிரிட்டிஷ் பேரரசின் பகுதிகள் ஒன்றுக் கொன்று முக்கியத்துவம் கொடுத்து, தங்களிடையே நட்புறவை வளர்த்துக் கொண்டதுடன், தங்கள் தாய்நாடான பிரிட்டனுடனும் நட்புறவு கொண்டிருந்தன. இப்பகுதிகள் அமைதிக் காலங்களில் தங்கள் பகுதிகளில் கவனம் செலுத்தினாலும்,

போர்க் காலங்களில் பேரரசின் பாதுகாப்பிற்கு உதவின. குறிப்பாக போயர் போர்களின் பொழுதும், முதல் உலகப் போரின் பொழுதும் பிரிட்டிஷ் பேரரசின் சுயாட்சிப் பகுதிகள் தங்கள் தாய்நாடான பிரிட்டனுக்குத் தங்கள் இராணுவத்தை அனுப்பிப் பெரிதும் உதவின.

5. பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளும் இந்தியப் பேரரசும்

பிரிட்டிஷ் சுயாட்சிப் பகுதிகளைத் தவிர, பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளும், கடற்படைத் தளங்களும், பிரிட்டிஷ் பாதுகாப்பின்கீழ் இருந்த பகுதிகளும் பிரிட்டிஷ் பேரரசில் அடங்கியிருந்தன. இப்பகுதிகளில் பெரும்பாலும் ஐரோப்பியரல்லாதவர்களே வாழ்ந்து வந்தனர். ஆனால் இவர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு ஆளுநரால் எதேச்சாதிகார முறையில் ஆளப்பட்டனர். இப்பகுதிகளில் நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருந்த ஆளுநர்களுக்கு ஆலோசனைகள் கூற சட்டசபைகள் இருந்தாலும், இவ்வாளுநர்கள் எல்லோரும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கே கட்டுப்பட்டு ஆட்சிபுரிந்து வந்தனர்.

இவ்வாறு பிரிட்டிஷ் பேரரசின் ஒரு பகுதியாக இருந்த பிரிட்டிஷ் குடியேற்றப் பகுதிகளில் அமெரிக்காவிலிருந்த பிரிட்டிஷ் ஹாண்டுராஸும், பிரிட்டிஷ் கயனாவும், மேற்கிந்தியத் தீவுகளும் மிகப் பழமையானவையாகும். இப்பகுதிகளில் நீக்ரோ அடிமைகளே பெருமளவில் வாழ்ந்து வந்தனர். இப்பகுதிகள் தவிர ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரையில் அமைந்திருந்த கோல்டு கோஸ்டு, காம்பியா, சயிரா லியோனி (Sierra Leone) ஆகிய பகுதிகளும் பிரிட்டனின் குடியேற்றப் பகுதிகளாக விளங்கின. இக் குடியேற்றப் பகுதிகளில் பல பிரிட்டிஷ் கடற்படைத் தளங்கள் நிர்வகிக்கப்பட்டு வந்தன. இக் கடற்படைத் தளங்கள் பெரும்பாலும் ஜிப்ரால்டர், மால்டா, சைப்ரஸ் ஆகிய மத்திய தரைக் கடல் பகுதிகளிலேயே அமைந்திருந்தன. இப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் முறையே ஸ்பானியர்களாகவும், இத்தாலியர்களாகவும், கிரேக்கர்களாகவுமே இருந்தனர். மால்டா, சைப்ரஸ் ஆகிய இரு பகுதிகளிலும் தேசிய வளர்ச்சி ஏற்பட்டிருந்ததன் காரணமாக, பிரிட்டன் இப்பகுதிகளைச் சுயாட்சிப் பகுதிகளுக்குத் தகுதியற்றவை எனக் கருதியிருக்கக் கூடும். இவை தவிர இலங்கை, ஹாங்காங், ஜலசந்திக் குடியேற்றங்கள், ஃபாக்லாந்து தீவுகள், கென்யா எனப்படும் பிரிட்டிஷ் கிழக்காப்பிரிக்கா ஆகியவையும் பிரிட்டிஷ் குடியேற்றப் பகுதிகளாக விளங்கின.

இவை தவிர பிரிட்டிஷ் பேரரசின் பாதுகாப்பின்கீழ் பல பகுதிகள் இருந்தன. இவையும், பிரிட்டிஷ் பேரரசுப் பகுதி களாகவே கருதப்பட்டன. ஏனெனில் இப்பகுதிகளில் நாகரிக வளர்ச்சி ஏற்படாததால் இப்பகுதிகளின் தலைவர்கள் பிரிட்டிஷ் பேரரசின் ஆலோசனையின் பேரிலும், பிரிட்டிஷ் பேரரசின் பாதுகாப்பிலும் ஆட்சிபுரிந்து வந்தனர். பெரும்பாலும் இப் பகுதிகளில் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஆளுநர்களே ஆதிக்கம் செலுத்தி வந்தனர். இவ்வாறு பிரிட்டிஷ் பேரரசின் பாதுகாப்பின்கீழ் இருந்த பகுதிகளில் குறிப்பிடத்தக்கவை சிசில் ரோட்ஸ் என்பவரது பிரிட்டிஷ் தென்னாப்பிரிக்கக் கம்பெனியின்கீழ் இருந்த பகுதிகளும், ராயல் நைஜர் கம்பெனியின்கீழ் இருந்த நைஜீரியாவும், மலாய் கூட்ட மைப்பு நாடுகளும் (Federated Malay States), சாரவாக் (Sarawak) என்ற பகுதியும், டோங்கா (Tonga) என்ற பகுதியும், சான்சிபார் (Zanzibar) என்ற பகுதியும், உகாண்டா என்ற பகுதியும், பிரிட்டிஷ் மத்திய ஆப்பிரிக்காவும் குறிப்பிடத்தக்க வையாகும்.

எகிப்து

எகிப்து பெயரளவில் உதுமானியப் பேரரசின் ஒரு பகுதி யாக இருந்தது, ஆனால் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இங்கு துருக்கிய ஆளுநராக இருந்த முகமது அலி (Mehemet Ali) என்பவர் கான்ஸ்டாண்டி நோபிளில் இருந்த உதுமானியப் பேரரசிடமிருந்து எகிப்திற்கும், தனக்கும், தன்னுடைய குடும் பத்திற்கும் சில சலுகைகளைப் பெற்றார். பின்னர் முகமது அலி யின் பேரரான இஸ்மாயில் (Ismail) என்பவர் 1863 முதல் 1879 வரை இப்பகுதியின் அரசராக இருந்தார். இவரது ஆட்சிக் காலத்தில்தான் எகிப்தில் விடுதலைக் கருத்துக்களும், தேசியக் கருத்துக்களும் வளர்ச்சியடைந்தன. மேலும் இவர் உதுமானியப் பேரரசின் அனுமதி பெற்று கேடிவ் (Khedive) என்ற பட்டத்தை 1867-ல் சூட்டிக் கொண்டார். இவர் ஐரோப்பிய மோகம் கொண்டிருந்ததால் தன்னுடைய பகுதியை நவீனமயமாக்க முயற்சிகளை மேற்கொண்டார். இதன் பயனாக எகிப்தில் நிர்வாக முறை மாற்றி அமைக்கப்பட்டது; ஐரோப்பிய பொறியியல் வல்லுநர்களின் ஒத்துழைப்புடன் பல புதிய இருப்புப் பாதைகள் போடப்பட்டன; தந்தி முறை அமைக்கப்பட்டது; சூயஸ் கால்வாய்ப் பகுதியில் ஒரு துறைமுகம் கட்டப்பட்டது; பின்னர் எகிப்தில் ஐரோப்பியர்கள் ஆராய்ச்சிகளை மேற் கொள்ள உதவித் தொகைகள் வழங்கப்பட்டன; இந்நாட்டின் தலைநகரான கெய்ரோவில் ஒரு பொருட்காட்சிச்சாலை அமைக்

கப்பட்டது. இதனையடுத்து பிரஞ்சுக்காரர்களின் உதவியுடன் சூயஸ் கால்வாய் வெட்டப்பட்டு, 1869-ல் திறப்பு விழாவும் நடைபெற்றது. ஆனால் இவையாவற்றிற்கும் எகிப்திய அரச ரான இஸ்மாயில் மிகப் பெருந்தொகையை பிரிட்டனிட மிருந்தும், பிரான்சிடமிருந்தும் கடனைகப் பெற்றார். இக்கடன் களுக்கு வட்டி செலுத்துவதற்காக ஏழ்மையில் வாடிய எகிப்தி யர்கள்மீது மேலும் பல வரிகளை இஸ்மாயில் விதித்தார். அத் துடன் இவரது முயற்சிகளின் காரணமாக எகிப்தியக் கருவூலம் காலியாகியது. எனவே வெளிநாட்டவர்கள் எகிப்தில் தலையிட ஆரம்பித்தனர்.

இந்நிலையில் பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபடு வதற்காக இஸ்மாயில் 1875-ல் சூயஸ் கால்வாய்ப் பகுதியை 200 இலட்சம் டாலர்களுக்கு பிரிட்டிஷ் அரசிடம் விற்றார். இவ்வாறு சூயஸ் கால்வாய் பிரிட்டன் வசமாயிற்று, ஆனால் எகிப்தின் பொருளாதார நெருக்கடி தீர்ந்தபாடில்லை. எனவே எகிப்தின் பணத்தட்டுப்பாட்டை நீக்கும் பொறுப்பை, பிரிட் டன், பிரான்சு ஆகிய இருநாடுகளிடம் இஸ்மாயில் 1876-ல் கொடுத்தார். எகிப்தில் பண நெருக்கடி ஓரளவு சரியான பின்னர், இஸ்மாயில் வெளிநாட்டவரைத் தன்னுடைய நாட்டி னின்றும் வெளியேற்ற முயற்சி செய்தார். இதனால் இஸ்மாயில் 1879-ல் பதவி நீக்கம் செய்யப்பட்டார். இவருக்குப்பின் பட்டத்திற்கு வந்த எகிப்திய அரசரும் பிரிட்டன், பிரான்சு ஆகிய இருநாடுகளும் தன்னுடைய நாட்டின் பொருளாதாரத் துறையில் ஆதிக்கம் செலுத்துவதை அனுமதித்தார். இதனால் எகிப்திய மக்கள் இவரை வெறுத்ததுடன், 1882-ல் அகமது அராபி என்பவரது தலைமையின்கீழ் ஒரு புரட்சியும் செய்தனர். இச்சமயத்தில் பிரஞ்சுக்காரர்கள் புரட்சியை அடக்கத் தங்கள் இராணுவத்தைப் பயன்படுத்தி அலெக்ஸாண்டிரியா என்ற நகரைத் தாக்கினர். இறுதியில் பிரிட்டிஷ்காரர்கள் எகிப்தைக் கைப்பற்றினர். இதனால் 1882 முதல் எகிப்திய அரசர் பிரிட்ட னின் உதவியுடன் ஆட்சிபுரிந்தார். இருப்பினும் இப்பகுதியில் பிரிட்டிஷ் படை தொடர்ந்து இருந்ததுடன் பிரிட்டிஷ்காரர்களின் விருப்பங்கள் எகிப்தில் சட்டங்களாக நிறைவேற்றப்பட்டன. எகிப்து பிரிட்டிஷ் பாதுகாப்பின்கீழ் இருந்த காலத்தில் எகிப் தியப் பொருளாதாரம் படிப்படியாக ஸ்திரத்தன்மையடைந்தது. நீதி நிர்வாகம் சீர்திருத்தமடைந்தது; மதவெறிக்கும், குழப்ப நிலைக்கும் பெயர்பெற்ற எகிப்திய சூடான் கைப்பற்றப்பட்டு காவல் துறையால் கண்காணிக்கப்பட்டது; நீர்ப்பாசன வசதிகள் மேம்பாடு அடைந்தன; எகிப்தில் மிகப் பெரிய அணைக்

கட்டான அஸ்வான் அணைக்கட்டு இக்காலத்தில் கட்டப் பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக 1883-ல் மன்னருக்கு ஆலோசனைகூற ஓர் ஆலோசனை சபை நிறுவப்பட்டது. இச் சபைக்கு 1913-ல் ஓரளவு சட்டமியற்றும் அதிகாரமும் வழங்கப் பட்டது. பல எகிப்திய இளைஞர்கள் ஐரோப்பாவிற்குச் சென்று கல்வி பயின்றனர். இதனால் தேசியக் கருத்துக்கள் எகிப்தில் வளர்ச்சியடையவே "எகிப்து எகிப்தியர்களுக்கே" என்ற கோஷம் எங்கும் பரவலாயிற்று.

இந்தியா

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் பேரரசிலேயே மிகப் பெரிய பகுதியாக விளங்கியது இந்தியா. இந்நூற்றாண் டின் இறுதியில் பிரிட்டிஷ் பேரரசின் மொத்த மக்கள் தொகை யில் $\frac{3}{4}$ பங்கு மக்கள் இந்தியாவில் வாழ்ந்து வந்தனர். பிரிட் டனின் ஒவ்வொரு சதுர மைலிலும் குறைந்தது 15 இந்தியர் களாவது காணப்பட்டனர்.

பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளிலும், பத்தொன்ப தாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் வியாபாரிகளும், தேசியவாதிகளும் பிரிட்டிஷ் காரர்களின் ஆட்சி இந்தியாவில் ஏற்பட வழிகோலினர். பின்னர் 1857-ல் ஏற்பட்ட சிப்பாய்க் கலகத்தின் காரணமாக 1858-ல் இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை ஆங்கிலக் கிழக்கிந் தியக் கம்பெனியிடமிருந்து பிரிட்டிஷ் பாராளுமன்றம் எடுத்துக் கொண்டது. பின்னர் 1876-ல் இப்பாராளுமன்றம் ஒரு மசோதாவை இயற்றி அதன்படி பிரிட்டிஷ் இந்தியாவை ஒரு பேரரசாக நிறுவியது. இம் மசோதாவின்படி பிரிட்டிஷ் அரசரே இந்தியாவின் பேரரசரானார்.

பிரிட்டிஷ் இந்தியா புவியியல், இனம், மொழி, மதம், பண்பாடு ஆகிய துறைகளில் பல வேறுபாடுகளைக் கொண்டி ருந்ததால் இதனைப் பேரரசு என்று அழைத்தது பொருத்த முடையதாக இருந்தது. புவியியல் அடிப்படையில் பிரிட்டிஷ் இந்தியாவை இமயமலைப் பகுதிகள் என்றும், சிந்து கங்கைச் சமவெளி என்றும், தக்காண பீடபூமி என்றும், பர்மா என்றும் நான்கு பகுதிகளாகப் பிரித்திருந்தனர். இவற்றில் முதலில் கூறப் பட்ட இமயமலைப் பகுதிகள் என்பது வடக்கேயுள்ள இமயமலை யும் அதன் பகுதிகளுமாகும். அடுத்து கூறப்பட்ட சிந்து கங்கைச் சமவெளி என்பது இந்தியாவின் பாசனத்திற்குப் பெரிதும் பயன்படும் இரு முக்கிய ஜீவ நதிகளான சிந்து,

கங்கை ஆகிய நதிகளின் சமவெளிகள் ஆகும். மூன்ருவதாகக் கூறப்பட்ட தக்காண பீடபூமி என்பது நர்மதை, தபதி நதிகளுக்குத் தெற்கே முக்கோண வடிவில் அமைந்துள்ள பகுதியாகும். இறுதியாகச் சொல்லப்பட்ட பர்மா என்பது இந்தியாவிற்கு வடகிழக்கே அமைந்துள்ள பகுதியாகும். இப்பகுதிகளில் முகம்மதியர்கள் வடக்கேயுள்ள பகுதிகளிலும், இந்து ஆரியர்கள் சிந்து கங்கைச் சமவெளிகளிலும், திராவிடர்கள் தக்காண பீடபூமியிலும், மங்கோலிய இனத்தவர்கள் பர்மாவிலும் வாழ்ந்து வந்தனர். இவர்களைத் தவிர மற்ற இனத்தவர்களும் ஆங்காங்கே காணப்பட்டனர். சில பகுதிகளில் கலப்பு இனத்தவர்களும் காணப்பட்டனர்.

பிரிட்டிஷ் இந்தியாவில் பல்வேறு இனத்தவர்கள் வாழ்ந்து வந்ததன் காரணமாகப் பல்வேறு பண்பாடுகள் இங்கு காணப்பட்டன. பிரிட்டிஷ் இந்தியாவில் இருந்த மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ $\frac{2}{3}$ பங்கு மக்கள் ஆரியர்களாக இருந்தனர். இவர்களது மதம் இந்து மதம் எனப்பட்டது. இந்து மதத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாடும், புனித முறைகளும், பலவேறுபட்ட சடங்குகளும் புனித யாத்திரைகளும் முக்கிய அம்சங்களாக விளங்கின. அத்துடன் இந்து மதத்தில் கட்டுப்பாடுகள் மிகுந்திருந்தன. இந்து மதத்திலிருந்து கி. மு. ஆரும் நூற்ருண்டில் பௌத்த மதமும், சமண மதமும் தோன்றின. இந்து மதத்தின் மற்ருெரு பிரிவினர்கள் சீக்கியர்களாவர். இவர்கள் பஞ்சாப் பகுதியில் வாழ்ந்து வந்தனர். இவர்களல்லாமல் பிரிட்டிஷ் இந்தியாவின் வடபகுதியில் ஏறத்தாழ 700 இலட்சம் முகம்மதியர்கள் வாழ்ந்து வந்தனர். இவர்களுக்கிடையே பல பிரிவுகள் காணப்பட்டன. ஐரோப்பியர்களின் வருகையால் 1498-க்குப் பிறகு இந்தியாவில் கிறிஸ்தவர்களும் குடியேறிப் பல இந்தியர்களைக் கிறிஸ்தவர்களாக்கினர். இவ்வாறு பல்வேறு இனத்தையும் மதத்தையும் சேர்ந்த மக்கள் பிரிட்டிஷ் இந்தியாவில் வாழ்ந்து வந்ததால் பல மொழிகளும் இம்மக்களால் பேசப்பட்டு வந்தன. இம்மொழிகளின் மொத்த எண்ணிக்கை சுமார் 200-க்கு மேலாகும். பிரிட்டிஷ் இந்தியாவில் $\frac{3}{4}$ பங்கு மக்கள் ஆரியர்கள். இவர்கள் ஆரிய மொழிகளைப் பேசி வந்தனர். இவர்களைத்தவிர திராவிடர்கள் திராவிட மொழிகளையும், பர்மாவில் வாழ்ந்த மக்கள் திபெத்-சீனமொழியையும் பேசி வந்தனர். இதனுல் பிரிட்டிஷ் இந்திய மக்களின் பண்பாடும் பலதரப்பட்டதாக இருந்தது. இவர்களில் சிலர் மிகுந்த நாகரிகமுடையவர்களாகவும், மற்றவர்கள் பழங்கால முறையிலும் வாழ்ந்து வந்தனர். முகம்மதியர்களும், இந்துக்

களில் உயர் வகுப்பினர்களும் செல்வந்தர்களாகவும், ஆடம்பர மான முறையிலும் வாழ்ந்து வந்தனர். மற்றவர்கள் விவசா யத்தில் ஈடுபட்டு ஏழ்மை நிலையில் வாழ்ந்து வந்தனர்.

இவ்வாறு பல துறைகளிலும் பிரிட்டிஷ் இந்திய மக் களிடையே வேறுபாடுகள் காணப்பட்டதால் இவர்களிடையே அரசியல் ஒற்றுமை இல்லாதிருந்ததில் வியப்பில்லை. அத்துடன் இவர்களின் அரசாங்கங்களும் ஒன்றுக்கொன்று முரண்பாடு உடையனவாகக் காணப்பட்டன. இருப்பினும் பிரிட்டிஷ் இந் தியாவில் பிரிட்டிஷ் அரசின் நேரடி ஆட்சியின் கீழ் இருந்த பகுதிகள் இந்தியப் பேரரசுப் பகுதிகள் என்றும், சுதேச அரசர் களின் கீழ் இருந்த பகுதிகள் சிற்றரசுப் பகுதிகள் என்றும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்தனர். இவற்றில் பேரரசின்கீழ் இருந்த பகுதிகளில் இந்தியாவின் மொத்தப் பரப்பளவில் $\frac{3}{5}$ பங்கும், மொத்த மக்கள்தொகையில் $\frac{7}{9}$ பங்கும் இருந்தன. இவற்றை பிரிட்டிஷ் அரசு ஒன்பது மாநிலங்களாகப் பிரித்து ஒவ்வொரு மாநிலத்தையும் ஒரு பிரிட்டிஷ் ஆளுநரின் ஆதிக் கத்தின்கீழ் வைத்திருந்தது. இந்த ஒன்பது ஆளுநர்களுக்கும் தலைவராக வைஸ்ராய் என்ற ஒரு தலைமையதிகாரி பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் நியமிக்கப்பட்டு எதேச்சாதிகார முறை யில் ஆட்சிபுரிந்து வந்தார். இவர் பிரிட்டிஷ் அமைச்சரவைக் குக் கட்டுப்பட்டு இந்தியாவில் பிரிட்டிஷ்காரர்களுக்காக ஆட்சி புரிந்து வந்தார். சுமார் 600 நாடுகள் சிற்றரசர்களின் ஆளுகை யின்கீழ் இருந்தன. இவர்கள் சுதந்திரமாக ஆட்சி புரிந்து வந் தனர். இச் சிற்றரசுகளில் சில பெரியனவாகவும், சில சிறியன வாகவும் இருந்தன. எடுத்துக்காட்டாக மைசூர், ஹைதராபாத், குவாலியர், பரோடா, நேபாளம், பூடான், காஷ்மீர் போன்றவை பெரிய சிற்றரசுகளாக இருந்தன. இவை சுதந்திரமாக ஆட்சி புரிந்து வந்தன. இச் சிற்றரசுகளைப் பெரும்பாலும் "ராஜா" என்ற பட்டப் பெயருடன், முகம்மதிய அரசர்கள் அல்லது இந்து அரசர்கள் ஆட்சி புரிந்து கொண்டிருந்தனர். இச்சிற் றசுரகள் யாவும் பிரிட்டிஷ் இந்தியப் பேரரசுடன் நட்புறவு கொண்டிருந்தன. இதனால் பிரிட்டிஷ் இந்தியாவில் உள்நாட்டு அமைதியும் பொருளாதார வளர்ச்சியும் ஏற்பட்டன.

பிரிட்டிஷ் இந்தியாவில் பிரிட்டிஷ் சிவில் சர்வீஸ் (பணி) உயர்ந்த பதவியாகக் கருதப்பட்டது. இத்தகைய பணியில் இருந்த ஆட்சியாளர்கள் சிறந்த அறிவாளிகளாகவும் இருந் தனர். பிரிட்டிஷ்காரர்கள் பெரும்பாலும் இந்திய மக்களின் பரம்பரை பழக்கங்களிலும், பண்பாடுகளிலும் தலையிடாமல் இந்தியாவை ஐரோப்பிய மயமாக்க முயற்சிகளை மேற்கொண்

டனர். இதன் பயனாகப் புதிய சாலைகளும், இருப்புப் பாதைகளும் போடப்பட்டன; விவசாயம் ஊக்குவிக்கப்பட்டது; புதிய இயந்திரத் தொழில்கள் புகுத்தப்பட்டன; துறைமுகங்கள் கட்டப்பட்டன; சுகாதார வசதிகள் மேம்படுத்தப்பட்டதுடன் கல்விக்கான வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்பட்டன. பாதுகாப்பிற்காகவும், இந்திய எல்லைகளை விரிவுபடுத்தவும் பிரிட்டிஷ் இராணுவம் ஒன்று பிரிட்டிஷ் அதிகாரிகளின் உதவியுடன் அமைக்கப்பட்டது.

இந்தியாவில் பிரிட்டிஷ்காரர்கள் பல நன்மைகளைச் செய்தனர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இருப்பினும் பிரிட்டிஷ்காரர்கள் இந்த நன்மைகளை எல்லாம் தங்கள் நலன் கருதியே செய்தனர் என்பதையும் மறுப்பதற்கில்லை. எனவே ஒரு புறம் தங்கள் நலன்களுக்காகவும், மறுபுறம் இந்தியாவின் வளர்ச்சிக்காகவும் பிரிட்டிஷ்காரர்கள் பாடுபட்ட பொழுது பல இந்தியர்கள் பிரிட்டிஷ்காரர்களின் செய்கைகளில் குறைகாணத் தொடங்கினர். பிரிட்டிஷ்காரர்களிடமிருந்து நன்மையைப் பெற்ற சிற்றரசர்களும், சில வறியவர்களும் அமைதியாக இருந்த பொழுது இந்திய இளைஞர்கள், குறிப்பாக ஐரோப்பாவில் கல்வி கற்ற இந்திய இளைஞர்கள், படிப்படியாகத் தேசியக் கருத்துக்களால் கவரப்பட்டனர். வளர்ச்சியடைந்த தேசியக் கருத்துக்களின் காரணமாக "ஐரோப்பா ஐரோப்பியர்களுக்கே" என்று ஐரோப்பியர்கள் கருதிய பொழுது, ஏன் "இந்தியா இந்தியர்களுக்கே இருக்கக் கூடாது" எனப் பல இந்திய இளைஞர்கள் சிந்திக்கத் தொடங்கினர். இதன் பயனாகத் தேசியக் கருத்துக்களால் உந்தப்பட்ட இந்திய இளைஞர்கள் தங்களிடையே நிலவிய வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு, இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்க்கத் தொடங்கினர். இதன் பயனாக 1885-ல் "இந்திய தேசிய காங்கிரஸ்" என்ற ஓர் இயக்கம் பிரிட்டிஷ்காரர்களுக்கு எதிராக இந்தியாவில் நிறுவப்பட்டது. இது ஆண்டுதோறும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் தனது மாநாட்டைக் கூட்டியது. நாட்டின் பல்வேறு பகுதிகளினின்றும் பெரும்பாலான மக்கள் இம் மாநாடுகளில் கலந்து கொண்டு தங்கள் ஆதரவை இவ்வியக்கத்திற்குத் தெரிவித்தனர்.

தேசியக் கருத்துக்கள் இந்தியர்களிடையே வளர்ச்சியடைந்ததன் காரணமாக 1909-ல் பிரிட்டிஷ் பாராளுமன்றம் இந்திய கவுன்சில் சட்டத்தை நிறைவேற்றியது. இதன்படி தகுதி அடிப்படையில் வாக்குரிமையைப் பெற்றவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபைகள் ஒன்பது மாநிலங்களுள் ஆறில் ஏற்

படுத்தப்பட்டன. இச்சட்டசபைகள் வைஸ்ராய்க்கு ஆட்சி புரிய ஆலோசனைகளை வழங்கின. இருப்பினும் இச்சட்டத்தால் திருப்தி அடையாத இந்திய தேசியவாதிகள் தங்கள் கிளர்ச்சி களையும், எதிர்ப்புக்களையும் மேலும் தீவிரப்படுத்தினர். இவர் களின் பிரச்சாரங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் பிரிட்டிஷ் அரசு பத்திரிகைகளின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தியதுடன், தணிக்கை முறைகளையும் கையாண்டது. தேசியவாதிகளின் கூட்டங்களும், ஊர்வலங்களும் தடை செய்யப்பட்டன. இந் திய தேசியவாதிகளில் தீவிரவாதிகள் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டனர். இதனால் இந்தியாவில் பிரிட்டிஷ்காரர்களுக்கு எதிரான இயக்கங்கள் மேலும் தீவிரமடைந்தன.

இந்தியாவின் மூலம் பிரிட்டன் பொருளாதாரத்துறையில் அதிக இலாபம் பெற்றதால் இந்தியாவைத் தன்னுடைய ஆதிக்கத்தின்கீழ் வைத்திருக்க பிரிட்டன் விரும்பியது என்பதை நாம் இங்கு மறக்கலாகாது, இந்தியா விவசாய நாடாக இருந்த தால் குறைந்த விலையில் நிறைந்த உணவுப் பொருள்களை பிரிட்டன் இந்தியாவிலிருந்து பெற்றது. இத்துடன் மிகுதியான கச்சாப் பொருள்களையும் பிரிட்டன் குறைந்த விலையில் இந்தியா விலிருந்து பெற்று, அவற்றை இங்கிலாந்திலிருந்த தன்னுடைய தொழிற்சாலைகளில் பொருள்களாக உற்பத்தி செய்து, அப் பொருள்களை மீண்டும் இந்தியாவிற்குக் கொண்டுவந்து அதிக விலைக்கு விற்றது. இதனால் பிரிட்டன் வியாபாரம் 1857-க்கும் 1914-க்கும் இடைப்பட்ட காலத்தில் ஐந்து மடங்காக உயர்ந் தது. முதல் உலகப் போரின்பொழுது ஜெர்மானியைவிடப் பத்து மடங்கு பொருள்களை பிரிட்டன் இந்தியாவில் விற்பனை செய்தது. இதனால் இந்தியாவின் மொத்த கடல் வாணிபத்தில் $\frac{3}{4}$ பங்கு பிரிட்டனின் மூலமாகவே நடை பெற்றது. மேலும் பிரிட்டிஷ் கப்பல் தொழிலதிபர்களும் இந்தியாவில் பிரிட்டிஷ்காரர்களின் ஆதிக்கத்தை விரும்பினர். இதனால் பிரிட்டனின் தொழில்கள், குறிப்பாகப் பருத்தி நெசவுத் தொழிலும், இரும்புத் தொழிலும், இந்தியாவில் அதிக இலாபம் ஈட்டின. அத்துடன் பல பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவில் சிவில், இராணுவம் ஆகிய துறைகளில் பணியாற்றிப் பெரும் பொருளீட்டி வாழ்ந்து வந்தனர். இவர்கள் பிரிட்டிஷ் ஆட்சி யினால் இந்தியாவிற்கு ஏற்பட்ட நன்மைகளை விளம்பரப்படுத்தி வந்தனர். எல்லாவற்றிற்கும் மேலாகப் பல பிரிட்டிஷ்காரர்கள் தங்கள் சேமிப்புக்களை இந்தியாவில் முதலீடு செய்திருந்தனர். இதன் பயனாகப் பல இந்தியர்கள் ஆங்கிலக் கல்வியறிவு பெற்று பாராளுமன்ற முறைக்குப் பயிற்சியளிக்கப்பட்டனர்.

அத்துடன் இருப்புப்பாதை போடுவதற்காகவும், நீர்ப்பாசன வசதிக்குப் புதிய கால்வாய்களை வெட்டுவதற்காகவும் ஏறத் தாழ 600 இலட்சம் டாலர்களை பிரிட்டிஷ் அரசு இந்தியாவில் செலவு செய்தது; சுமார் 1000 இலட்சம் டாலர்களை இராணுவத் திற்காகவும், 300 இலட்சம் டாலர்களைக் கல்விக்காகவும் பிரிட் டிஷ் அரசு இந்தியாவில் செலவு செய்தது. அதிக மக்கள் தொகை இருந்த இந்தியாவில் மிகக் குறைந்த அளவு தொகையை மட்டுமே பிரிட்டிஷ் அரசு இந்தியாவில் கல்விக் காகச் செலவிட்டதால் இந்தியாவின் மொத்த மக்கள் தொகை யில் சுமார் 94 விழுக்காடு மக்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர் களாக இருந்தனர்.

இருப்பினும் பொதுப்படையாகப் பத்தொன்பதாம் நூற் றுண்டு முழுவதும் பிரிட்டன் கடல்கடந்து தனது ஆதிக்கத்தை வெற்றிகரமாகச் செலுத்தி வந்ததுடன், பிரிட்டிஷ் பேரரசின் ஆதிக்கத்தின்கீழ் இருந்த பகுதிகளையும் சிறப்பாக நிர்வகித்து வந்தது. உலகில் வேறு எந்தவொரு நாடும் இவ்வளவு பரந்த நிலப்பரப்பை நிர்வகிக்கவில்லை. மேலும் உலகின் எல்லாப் பகுதிகளிலும் பிரிட்டன் தனது ஆதிக்கப் பகுதிகளைக் கொண் டிருந்ததால் "பிரிட்டிஷ் பேரரசில் சூரியன் மறைவதில்லை" என்ற சிறப்பை பிரிட்டன் பெற்றது. இவ்வளவு பெரிய பேரரசு தேசியக் கருத்துக்களின் காரணமாகப் படிப்படியாகக் குறைந்து, உலக வல்லரசுகளுள் முதன்மையாக விளங்கிய தனது நிலையை இழந்தது. இதனைப் பின்வரும் அத்தியாயங் களில் விரிவாகக் காண்போம்.

2. மூன்றும் பிரஞ்சுக் குடியரசு

தேசிய சபை

பிரான்சு நாட்டிற்கும். ஜெர்மன் நாட்டிற்குமிடையே நடைபெற்ற போரில் பிரஞ்சு நாட்டின் படை ஜெர்மானியர் களால் சேடான் (Sedan) என்ற இடத்தில் தோற்கடிக்கப் பட்டது. இரண்டு நாட்களுக்குப் பின் பிரஞ்சுப் பேரரசரான மூன்றும் நெப்போலியன் சரணடைந்தார். பிரஞ்சு நாட்டுக் காரர்கள் தங்கள் நாட்டின் தலைநகரான பாரிஸில் (Paris) மூன்றும் பிரஞ்சுக் குடியரசை (Third French Republic) 1870 செப்டம்பர் நான்காம் நாள் நிறுவினர். இவ்வாறு அமைக்கப் பட்ட புதிய பிரஞ்சுக் குடியரசில் சிறந்து விளங்கியவர் லியோன் காம்பேட்டா (Leon Gambetta) என்பவராவார். இவர் இரண்

டாம் நெப்போலியப் பேரரசின் பிற்பகுதியில் சிறந்த ஜனநாயக வாதியாகவும், பேச்சாளராகவும் புகழ் பெற்றார். மூன்றுவது பிரஞ்சுக் குடியரசின் மூலமாக இவர் ஜெர்மானியர்களிடம் பிரஞ்சுப்படை அடைந்த தோல்வியால் இழந்த படைப் பெருமையைத் திரும்பப்பெறுவதற்காகவும்,பிரஞ்சுப்புரட்சியின் பொழுது 1792-ல் ஏற்படுத்தப்பட்ட முதல் பிரஞ்சுக் குடியரசு பிரஞ்சு மக்களுக்குச் செய்யத் தவறியவற்றை நிறைவேற்று வதற்காகவும் பேராவலுடன் பாடுபட்டார்.

1870-ல் பிரான்சில் ஜனநாயகக் கொள்கை மக்கள்மனத்தில் அதிக நம்பிக்கையை ஏற்படுத்தியது. இக் கொள்கை 1848ஆம் ஆண்டிலிருந்தே அந் நாட்டில் மிகுதியாகப் பரவிவந்திருந்தது. மூன்றும் நெப்போலியனுடைய ஆட்சிக் காலம் முழுவதும் இது நன்கு வளர்ச்சி பெற்றது. குடியரசின் விரோதிகள்கூட அதனைப் பற்றிப் பேசத் தொடங்கினர். மூன்றும் குடியரசு பிரான்சு நாட்டில் பிரகடனப் படுத்தப்பட்டபொழுது, அந் நாட்டில் ஜனநாயகவாதிகளைவிட மன்னராட்சியில் பற்றுள்ள வர்கள் அதிக அளவில் இருந்தனர். ஆனல் பிரஞ்சுப் படை ஜெர்மானியர்களால் தோற்கடிக்கப் பட்டதால் பெரும்பான்மை யான பிரஞ்சுக்காரர்கள் தங்களுடைய பகைவர்களை எதிர்க்கத் தாங்கள் அனைவரும் தங்களுக்குள் உள்ள வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட வேண்டுமென எண்ணினர். எனவே மன்ன ராட்சிக் கொள்கையில் நம்பிக்கையுடையவர்கள் பலர் தங்கள் நாட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அரசாங்கமான மூன்றும் குடியரசை ஆதரித்தனர்.

ஆனல் விரைவில் மன்னராட்சிக் கொள்கையில் நம்பிக்கை உடையவர்களுக்கும், ஜனநாயகவாதிகளுக்குமிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டது. பாரிஸில் ஜெர்மானியர்களிடம் சரணடைந்தபொழுது, பிரஞ்சு மக்கள் ஜெர்மனியுடன் சமாதானம் செய்து கொள்வதா அல்லது ஜெர்மனியுடன் போரைத் தொடர்ந்து நடத்துவதா என்பதைத் தீர்மானிக்கப் புதிய தேசிய சபையைத் தேர்ந்தெடுத்து அச்சபையின் விருப் பப்படி முடிவு செய்வது என்ற நிபந்தனையில் மன்னராட்சிக் கருத்துடையவர்களுக்கும், ஜனநாயகவாதிகளுக்குமிடையே 1871 ஜனவரியில் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. ஜனநாயகக் கட்சியில் புகழ்பெற்று விளங்கிய காம்பேட்டா (Cambetta) என்பவர் ஜெர்மனியுடன் போரைத் தொடர்ந்து நடத்த வேண்டுமெனக் கருதினர். ஜெர்மானியுடன் சமாதானம் செய்துகொண்டால் அச் சமாதானம் மூன்றும் பிரஞ்சுக் குடியர

சுக்குத் தீமையாக விளங்கும் எனக் கருதி பிரான்சு ஜெர்மானி யுடன் சமாதானம் செய்துகொள்ள வேண்டாமென அவர் விரும் பினர். இவ்விருசாராருக்குமிடையே புதிதாக 1871ஆம் ஆண்டு ஜனவரியில் ஏற்பட்ட நிபந்தனையின்படி, புதிதாக அமைக்கப் பட்ட அரசாங்கமான மூன்றும் பிரஞ்சுக் குடியரசின்கீழ் 1871ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் புதிய தேசிய சபையைத் தேர்ந்தெடுக்கத் தேர்தல் நடைபெற்றது. இத் தேர்தலில் வயது வந்த ஆண்கள் மட்டுமே தங்கள் வாக்குகளைப் பதிவு செய்தனர். புதிய தேசிய சபைக்கு மொத்தம் 650 பேர் தேர்ந் தெடுக்கப்பட்டனர். இவர்களில் மன்னராட்சிக் கொள்கையில் நம்பிக்கையுடையவர்கள் 400 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பெரும்பான்மையினராகவும், ஜனநாயகவாதிகள் 200 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சிறுபான்மையினராகவும் இருந்தனர்.

புதிய தேசிய சபை போர்டியோ (Bordeaux) என்ற இடத் தில் கூடியது. மன்னராட்சிக் கொள்கையில் நம்பிக்கையுடை யவர்கள் இச் சபையில் பெரும்பான்மை பலம் பெற்றிருந்ததால் அடால்ப் தையர் (Adolphe Thiers) என்பவர் இச்சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் லூயி பிலப் (Louis Philipe) என்ற அரசரின் ஆட்சிக் காலத்தில் புகழ் பெற்று விளங்கியவர். எனவே இப் புதிய தேசியசபை புதிய பிரஞ்சு அரசாங்கத்தின் ஜனநாயகக் குடியரசு (Republic) என்ற பெயரை ஒப்புக்கொள்ள மறுத்தது. அத்துடன் தேசிய சபையும் வார்சே என்ற நகரத்திற்கு மாறியது. இவற்றுக்கெல் லாம் மேலாக பிராங்க்பர்ட் உடன்படிக்கையை (The treaty of Frankfurt) 1871ஆம் ஆண்டு மேமாதத்தில் ஏற்றுக்கொண்டது. இவ் உடன்படிக்கையின் படி பிரான்சு ஜெர்மனியப் பேரர சுக்கு அல்சேஸ் (Alsace) என்ற பகுதியையும், லொரைன் (Lorraine) என்ற பகுதியின் பெரும்பாகத்தையும் விட்டுக் கொடுத்தது. அத்துடன் ஜெர்மனிக்குப் போர் நஷ்ட ஈட்டுத் தொகையாக 50 இலட்சம் பிராங்குகள் பிரான்சு கொடுப்பதாக வும், அத் தொகையைக் கொடுக்கும்வரை ஜெர்மனியப் படை ஒன்றை பிரான்ஸில் நிறுத்தி வைக்கவும் இணங்கியது.

இதற்கிடையில் பாரிஸ் நகரத்தின் தீவிரவாதிகள் தேசிய சபைக்கு எதிராக வேறு சில ஏற்பாடுகளைச் செய்தனர். பிரான்சு நாட்டின் தலைநகரை ஜெர்மானியர்கள் முற்றுகை யிட்டபொழுது பாரிஸ் நகரத்தில் இருந்த தீவிரவாதிகள் அந் நகரத்தின்ஆட்சிப் பொறுப்பிற்காக கம்யூன் (Commune) என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தினர். இவ்வமைப்பு பாரிஸ் நகரத்தில்

ஏற்பட்டபொழுது பாரிஸ் நகரம் ஜெர்மனியர்களின் முற்றுகை யால் பிரான்சின் பிறபகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டிருந்தது. மேலும் கம்யூனில் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த தீவிர ஜன நாயகவாதிகளும், சோஷியலிஸ்ட் தொழிலாளர்களும் நிறைந் திருந்தனர். இவ்விரு பிரிவினர்களுக்குமிடையே கருத்து வேற் றுமைகள் இருந்தாலும் இவ்விருசாராரும் தேசிய சபையின் நடவடிக்கைகளை வெறுத்தனர். மன்னராட்சிக் கொள்கையில் நம்பிக்கையுடையவர்கள் பெரும்பான்மையினராக இருந்தனர் என்பதாலும், இவர்கள் தீவிர ஜனநாயகவாதிகளுக்கும், சோஷியலிசத் தொழிலாளாகளுக்கும் விரோதிகள் என்பதாலும் இச்சபை பாரிஸ் நகரத்தில் அமைந்து இருப்பதற்குப் பதிலாக வார்சே என்ற இடத்தில் அமைக்கப்பட்டது. மேலும் இவர்கள் ஜெர்மனியுடன் தொடர்ந்து போரை நடத்தாமல் அந்நாட் டுடன் பிராங்க்பர்ட் உடன்படிக்கை செய்துகொண்டதாலும் கம்யூன் என்ற அமைப்பை ஏற்படுத்திய பாரிஸின் தீவிரவாதி கள் தேசிய சபையை வெறுத்தனர். எல்லாவற்றிற்கும் மேலாகத் தேசிய சபை தொடர்ந்து இருந்துவரும் பொருளாதார நெருக் கடியில் அல்லல்பட்ட பாரிஸ் நகரத்தின் கடைநிலை மக்களைக் காப்பாற்ற எந்தவித முயற்சியும் மேற்கொள்ளவில்லை. எனவே பாரிஸ் நகரத்தில் நிறுவப்பட்ட கம்யூன் தேசிய சபையை அடியோடு வெறுத்தது. எனவே பாரிஸ் கம்யூன் தன்னை பாரிஸ் நகரத்தின் அரசர் என்று கருதி பாரிஸ் சுயாட்சி புரிகிறது என்று அறிவித்து தேசிய சபைக்கு எதிராகப் புரட்சி யைத் துவங்கியது. அத்துடன் மற்ற நகரங்களில் உள்ள தீவிர வாதிகளையும் பாரிஸ் கம்யூனைப்போல தேசிய சபைக்கு எதிராகக் கம்யூன்களை அமைத்துத் தங்களை பாரிஸ் கம்யூனுடன் கூட்டமைப்பு ஏற்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தது. லியான்ஸ் (Lyons), மார்செய்ல்ஸ் (Marseilles) ஆகிய பிரஞ்சு நகரங்களும், வேறு சில பிரஞ்சு நகரங்களும் பாரிஸ் கம்யூனின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்தன. தேசியசபைக்கு எதிராக பாரிஸ் கம்யூனைப்போலவே அந்நக ரங்கள் கம்யூன்களை ஏற்படுத்தின. ஆனால் இத்தகைய கம்யூன் கள்வெகு விரைவில் நீக்கப்பட்டன. வெளிநாட்டுடன் நடை பெறும் போரை முற்றுப்பெறச் செய்வதற்குப் பதிலாக, உள் நாட்டில் காணப்படும் வேற்றுமைகளை முறியடிக்கும் மனப் பான்மையானது, தேசிய சபை, பாரிஸ் கம்யூன் ஆகிய அமைப்புகளுக்கு இடையே ஏற்பட்ட போராட்டங்களினால் வெறுப்படைந்த பெரும்பான்மையான பிரஞ்சுக்காரர்களிடம் காணப்பட்டது. இவ்வாறு வெறுப்படைந்தவர்கள் தேசிய சபையின் தலைவரான தையர் (Thiers) என்பவரின் தலைமையில்

பாரிஸ் நகரத்தையும், கம்யூன்களின் ஆட்சியையும், படைகளின் உதவிகொண்டு கைப்பற்றுவதற்கு ஆதரவாக இருந்தனர்.

1871-ஆம் ஆண்டு ஏப்ரல், மே ஆகிய இரண்டு மாதங்களிலும் பாரிஸ் இரண்டாவது முறையாக முற்றுகைக்குட்பட்டது. இவ்விரண்டாவது முற்றுகையின்பொழுது பாரிஸ் நகரம் பிரஞ்சுப் போர் வீரர்களால் முற்றுகையிடப்பட்டது. பாரிஸ் நகரத்தைப் பாதுகாத்தவர்களும், தேசிய சபையின் போர்வீரர்களும் மிகப் பயங்கரமாகப் போரிட்டனர். பாரிஸ் கம்யூனைக் காப்பாற்றுவதற்காகப் போரிட்ட பாரிஸ் தீவிர வாதிகள் அதிக கோபத்துடன் போரிட்டார்கள். ஆனால் தேசிய சபையின் போர்வீரர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்த தாலும், அதிக தளபதிகளைப் பெற்றிருந்ததாலும், பாரிஸ் கம்யூனின் போர்வீரர்கள் தேசிய சபையின் படைவீரர்களுக்குப் படிப்படியாகப் பணிந்தனர். பலம் குறைந்ததால் பாரிஸ் கம்யூனின் போர்வீரர்கள் தங்களிடம் இருந்த பணயக் கைதிகளை அழிக்கத் தொடங்கினர். அவ்வாறு அழிக்கப்பட்டவர்களில் பாரிஸ் நகரத்தின் ஆர்ச்பிஷப்பும் ஒருவராவர். மேலும் நகர சபைக் கட்டிடம், தூலரிஸ் (Tuileries) அரண்மனை போன்ற கட்டிடங்களைத் தீக்கிரையாக்கினர். இறுதியாக மாண்ட் மார்டி (Montmarte)யில் தங்கள் இறுதிப் போராட்டத்தைத் துவக்கினர். தேசிய சபையின் படைவீரர்களும் ஈவிரக்கமின்றிப் போரிட்டதுடன் தங்களால் பிடிக்கப்பட்ட பல கைதிகளைக் கொலையும் செய்தனர். கம்யூன்கள் ஒடுக்கப்பட்ட பின்னர் அமைதி நிலை நாட்டப்பட்டது. பாரிஸ் முழுவதும் தேசியசபையின் ஒரு வகையான பயங்கர ஆட்சி தொடர்ந்து நடைபெற்றது. ஏறத்தாழ ஒரு தலைமுறைவரை பாரிஸ் கம்யூனின் கருத்துக்கள் குறிப்பிடத்தக்க சில மாற்றங்களை பிரான்சு நாட்டில் ஏற்படுத்தின. குறிப்பாக கம்யூன்களின் முடிவு உயர்குடி மக்கள், நடுத்தர மக்கள், கடைநிலை மக்கள் ஆகிய மூவகையின ரிடத்தும் தோன்றிய சோஷியலிச இடதுசாரிகளை (அதிதீவிர வாதிகளை) வலிமையற்றவர்களாக்கியது. சில நகரங்களில் வாழ்ந்த முக்கிய புரட்சிவாதிகள் இரகசியமாகக் கொல்லப்பட்டனர். நகரங்களில் வாழ்ந்த சில முக்கிய தலைவர்கள் மக்களுக்குத் தெரியாமல் நாடுகடத்தப்பட்டனர்.

இதே சமயத்தில் மன்னராட்சிக் கொள்கையில் நம்பிக்கையுடைய தேசியசபையின் அங்கத்தினர்களும், அதன் ஆதரவாளர்களும் பிரஞ்சு மக்களின் ஆதரவை இழக்கத் தொடங்

கினர். இவர்களுடைய சபைகளும் அமைச்சரவையும்கூட மக்களின் வெறுப்புக்கு இலக்காகத் தொடங்கியது. இந் நிலையைப் பயன்படுத்திக் கொண்டு குடியரசுக் கட்சியினர் தீவிர வாதிகளிடமிருந்து தங்களை நடுத்தரவாதிகளாக மாற்றிக் கொண்டு வலிமையடைந்தனர்.

தேசியசபையும் அதன் தலைவரான தையரும் (Thiers) 1871-ஆம் ஆண்டு மே மாத இறுதியில் ஜெர்மன் நாட்டுடன் சமாதானம் செய்து கொண்டனர். அத்துடன் பிரான்சு நாட்டிலும் ஒழுங்கை நிலைநாட்டினர்.

சிறுபான்மையினரான ஜனநாயகவாதிகள் மக்களின் கருத்தை அறிந்து புதிய தேர்தலை நடத்தி அதன்மூலம் தேர்ந் தெடுக்கப்பட்ட சபை பிரஞ்சுக் குடியரசின் புதிய அரசிய லமைப்பை ஏற்படுத்தவேண்டும் என்று விரும்பினர். ஆனால் பெரும்பான்மையினராயிருந்த மன்னராட்சிக் கொள்கையில் நம்பிக்கை உடையவர்கள், புதிய தேர்தலை நடத்துவதற்கு அவ்வளவாக விரும்பவில்லை. எனவே தங்களின் வலிமையைப் பயன்படுத்தி 1871-ஆம் ஆண்டு ஆகஸ்டில் ரைவெட் சட்டம் (Rivet Law) என்ற ஒரு சட்டத்தை இயற்றினர். இச்சட்டம் தேசிய சபைக்கு பிரான்சு நாட்டின் புதிய அரசியல் அமைப்பு ஏற்படுத்துவதற்குத் தேவையான எல்லா அதிகாரங்களையும் வழங்கியது. பிரஞ்சுக் குடியரசின் தலைவர் என்ற பட்டத்தை தையருக்கு வழங்கியது. 1871-முதல் 1875 வரை இச்சபை பிரான்சு நாட்டில் அதிக அதிகாரம் வாய்ந்ததாக ஆட்சிபுரிந்த தோடு மட்டுமல்லாமல், அந்நாட்டின் அரசியலமைப்பை இயற்றும் சபையாகவும் விளங்கியது.

இச் சபை பிரான்சு நாட்டில் சில குறிப்பிடத்தக்க மாற்றங் களைச்செய்தது. முதலாவதாக, தேசிய சபையின் அதிகாரத்துக்கு இணங்க பிரஞ்சு அரசாங்கம் அந்நாட்டின் பொது நிதியை (Public Finance) அங்கீகரித்தது; அதிகப்படியாகக் கடன் வாங்கியது. எனவே 1873-இல் போர் நஷ்ட ஈடாக ஜெர்மனிக்குக் கொடுக்க வேண்டிய தவணையைக் குறுகிய காலத்தில் கொடுத்து முடித்தது. எனவே ஜெர்மனியப் படை முழுவதும் பிரான்சு நாட்டிலிருந்து விலக்கிக்கொள்ளப்பட்டது.

இரண்டாவதாக, அரசு, இராணுவத்தில் சில சீர்திருத்தங் களைச் செய்தது. வெற்றியடைந்த பிரஷ்யாவை உதாரணமாகக் கொண்டு பிரான்சில் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்குக் கட் டாய இராணுவச் சேவை முறை பின்பற்றப்பட்டது. ஜெர்மன்

நாட்டிற்கும், பிரான்சு நாட்டிற்குமிடையே இருந்த எல்லைப் பகுதிகளில் பாதுகாப்பிற்காகப் பல புதிய கோட்டைகள் கட்டப்பட்டன. பாரிஸ் நகரத்தின் பாதுகாப்பு மேலும் பலப் படுத்தப்பட்டது.

மூன்றாவதாக, தேசிய சபை மிகுந்த கால தாமதத்திற்குப் பிறகு, பிரான்சு நாட்டிற்குப் புதிய அரசாங்கம் ஏற்படுத்துவதற் கான அரசியல் அமைப்பு ஒன்றை அதிக இடர்ப்பாடுகளுடன் தயாரித்தது. தேசியசபை தயாரித்த புதிய அரசியல் அமைப்பில் அதிக மாற்றங்கள் இல்லை. சட்டசபை ஜனநாயக முறையில் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதையோ அல்லது கட்டுப்படுத்தப்பட்ட ஸ்தல ஆட்சி நிறுவனங்கள் ஏற்படுத்து வதையோ மாற்றவில்லை. ஆனால் இவ்வாறு பொதுமக்களால் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்படும் அமைப்புக்களை பிரிபெக்டுகள் (Prefects), துணை பிரிபெக்டுகள் (Sub Prefects) ஆகியோரின் அதிகாரத்தின்கீழ் இயங்கும் முறையை மீண்டும் ஏற்படுத்தியது. இம்முறை பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நெப்போலியனால் ஏற்படுத்தப்பட்டதென்பது ஈண்டு நினைவுகூரத் தகும்.

இவ்வமைப்பில் மத்திய அரசின் தலைமை பற்றி பெரும் பான்மையாளர்களான மன்னராட்சிக் கொள்கையில் நம்பிக்கை யுடையவர்களுக்கும், சிறுபான்மையினரான ஜனநாயகவாதி களுக்குமட்டும் அல்லாமல் முதலில் கூறப்பட்ட பெரும்பான்மை யாளர்களிடையேயும் பிளவுகளை ஏற்படுத்தியது. மன்னராட்சிக் கொள்கையில் நம்பிக்கையுடைய பெரும்பான்மையாளர் களிடையே பழைய போனபார்ட் (Bonaparte) வம்சத்தைச் சார்ந்த பேரரசுவாதிகள் (Imperialists) மதவாதிகள், காரணவாதி கள் (Legitimists), ஆர்லியனிஸ்டுகள் (Orleanists) எனமூன்று பிரிவுகளாக இருந்தனர். இவற்றுள் முதல் பிரிவைச் சேர்ந்த வர்கள் போனபார்ட் வம்சத்தை ஆதரித்த பேரரசுவாதிகள். காரணவாதிகள் என்ற இரண்டாம் பிரிவைச் சேர்ந்தவர்கள், பாரிஸ் நகரத்திலும், பிற நகரங்களிலும் சமுதாயத்தில் அதிக செல்வாக்குப் பெற்றவர்களாக இருந்த பழம் பிரபுக்கள், இவர்கள் பெரும்பாலும் பிரான்சு நாட்டின் வடபகுதியில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் எண்ணிக்கையில் மிகுந்து காணப் பட்டனர். மேலும் இவர்கள் பழைய கொள்கைகளை மிகுந்த நம்பிக்கையுடன் பின்பற்றியதோடு புரட்சிகரமான மாறுதல் களுக்கு அஞ்சியவர்களாக வாழ்ந்தனர். இவர்கள் பிரான்சு நாட்டின் அரியணைக்கு ஹென்றி என்ற காம்போர்டு பெரு

மகனுரை (Count of Cambord) ஆதரித்தனர். இவர் பத்தாம் சார்லஸின் பேரராவர். மூன்ரும் பிரிவினரான ஆர்லியனிஸ்டுகள் (Orleanists) முடியரசுக்கும் குடியரசுக்குமிடையேயும், புரட்சிக்கும் எதிர்வாதத்திற்கு மிடையேயும் திருச்சபைக்கும் புதிய சமுதாயத்திற்குமிடையேயும் உடன்பாடு காண முற்பட்டவர்களாவர். இப்பிரிவில் விடுதலை கருத்துக்களை உடைய நிலச்சுவான்தாரர்களும், பழைய கருத்துக்களையுடைய பெரும் பணக்காரர்களும், சற்று வசதிபடைத்த விவசாயிகளும் இருந்தனர். இவர்கள் பிரிட்டனில் இருப்பதைப் போல ஓர் அரசை பாரிஸ் இளவரசரின் (Count of Paris) தலைமையின்கீழ் ஏற்படுத்த விரும்பினர். இவர் லூயி பிலிப்பின் (King Louis Philippe) பேரராவர்.

காம்போர்ட் இளவரசருக்கும், பாரிஸ் இளவரசருக்குமிடையே உறவில் ஒரு மாற்றமும் ஏற்படவில்லை. ஆனுல் இவர்களின் ஆதரவாளர்களிடையே அதிக கருத்து வேற்றுமைகள் காணப்பட்டன. தேசிய சபையும், மூன்ருவது பிரெஞ்சுக் குடியரசுக்குப் புதிய அரசியலமைப்பு ஏற்படுத்துவதில் காலம் தாழ்த்தியது. எனவே மன்னராட்சிக் கொள்கையில் நம்பிக்கையுடையவர்கள் காரணவாதிகளாகவும், ஆர்லியனிஸ்டுகளாகவும் பிரிந்தனர். இவ்விரு பிரிவினர்களுக்குமிடையே 1873-இல் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இவர்கள் பிரான்சு நாட்டில் குடியரசு ஆட்சிதான் ஏற்புடையது எனக் கருதினர். எனவே பொது மக்களின் ஆதரவுடன் தையர் என்பவரைப் பதவி துறக்குமாறு கட்டாயப்படுத்தினர், இவருடைய பதவியில் மார்ஷல் மக்மஹான் (Marshal MacMahon) என்பவரை அமர்த்தினர். மார்ஷல் மக்மஹான் போர்வீரராயிருந்து புகழ்பெற்றவராவர்.

இதற்கிடையில் பாரிஸ் இளவரசர் காம்போர்டு பெருமகனுரை ஆஸ்திரியாவில் சந்தித்து (அப்பொழுது காம்போர்டு இளவரசர் ஆஸ்திரியாவிலிருந்தார்) ஓர் உடன்பாடு செய்துகொண்டார். இவ்வுடன்பாட்டின்படி காம்போர்டு இளவரசர் உடனடியாக பிரான்சு நாட்டில் ஐந்தாம் ஹென்றி என்ற பட்டத்துடன் அரியணை ஏறுவதென்றும், குழந்தை இல்லாததால் இவருக்குப் பிறகு பாரிஸ் இளவரசர் பிரான்சின் அரசராவது என்றும் ஒப்புக்கொண்டனர். மன்னராட்சிக் கொள்கையில் நம்பிக்கையுடையவர்களின் கனவுகள் பலிக்கத் தொடங்கின. மூன்ருவது பிரெஞ்சுக் குடியரசில் இரண்டாவது முறையாக ஆட்சியைக் கைப்பற்றிய போர்பன் மன்னர்களால் புதிய திட்டங்கள் உருவாயின.

ஐந்தாம் ஹென்றி 1873 அக்டோபரில் தான் தெய்வீக அரசுரிமைக் கோட்பாட்டை எவ்வித ஐயப்பாட்டிற்கும் இடமின்றி பின்பற்றப் போவதாகவும், மீண்டும் பிரான்சு முழுவதையும் பழைய போர்பன் வம்சக் கொடியின்கீழ் கொண்டு வரப் போவதாகவும் அறிவித்தார். இது முடியாட்சியில் நம்பிக்கையுடைய சிலருக்குக்கூட அச்சத்தை உண்டாக்கியது. முடியாட்சிக் கொள்கையாளர்களுக்கும் , ஜனநாயகவாதிகளுக்குமிடையே புதிய எதிர்ப்புக்களுடன் தேர்தல்கள் நடத்தப்பட்டு சட்ட சபையில் காலியிடங்கள் நிரப்பப்பட்டன. இது முதற்கொண்டு ஐந்தாம் ஹென்றி தன்னுடைய வெண்கொற்றக் குடையைக் குழிதோண்டிப் புதைக்கும்வரை, பிரான்சு நாட்டில் முடியரசு ஆதரவாளர்கள், ஜனநாயகவாதிகள் ஆகிய இருசாராரின் ஒத்துழைப்புடன் கூட்டரசாங்கமே இருந்து வந்தது.

தேசியசபை 1873ஆம் ஆண்டு நவம்பரில் ஐந்தாம் ஹென்றியின் ஆட்சியில் முதன் முதலாக ஒரு சட்டத்தை இயற்றியது. இதன்படி மார்ஷல் மக்மஹான் என்பவர் பிரான்சு நாட்டின் குடியரசுத் தலைவராக ஏழாண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்டார். இதனால் முடியாட்சியின் ஆதரவாளர்களுக்கும். ஜனநாயகவாதிகளுக்குமிடையே வேற்றுமைகள் வளர்ந்தன, எனவே 1875ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை எவ்வித சட்டங்களும் இயற்றப்படவில்லை. ஆனால் 1875 ஜனவரிக்குப் பிறகு ஒரே ஒரு ஓட்டு வித்தியாசத்தில் எதிர்காலத்தில் குடியரசுத் தலைவரை தேர்தல் முறையில் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து பிப்ரவரியில் இரண்டு அரசியல் சட்டங்களும், ஜூலையில் மூன்றாவது சட்டமும் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டங்களின்படி தேசிய சபையின் அங்கத்தினர்களின் பதவிக்காலமும், குறித்த சில மாறுதல்களும், மூன்றும் பிரெஞ்சுக் குடியரசுக்கு ஒரு நிரந்தர அரசியல் அமைப்பும் ஏற்படுத்தப்பட்டது.

இப்புதிய அரசியல் அமைப்பில் சட்டம் இயற்றுகின்ற அதிகாரத்தைத் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு சபைகள் அடங்கிய ஒரு பாராளுமன்றம் பெற்றிருந்தது. இவ்விரு சபைகளும் ஒன்றாகக் கூடும்பொழுது "தேசிய சபை" (National Assembly) எனப் பெயர் வழங்கப்பட்டது. குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுத்தல், அரசியல் அமைப்பில் புதிய மாற்றங்களைச் செய்தல் ஆகிய இரண்டு சமயங்களில் மட்டுமே தேசியசபை கூடும். மற்ற சமயங்களில் இவ்விரு சபைகளில் மேல்சபை "செனட்" (Senate) என்றும், கீழ்ச்சபை பிரதிநிதி சபை என்றும் அழைக்கப்

பட்டது. மேல்சபையான செனட்டில் 300 அங்கத்தினர்கள் இருந்தனர். இவர்கள் ஒன்பது ஆண்டுகளுக்கு ஒருமுறை மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கீழ்ச்சபையான பிரதிநிதிகள் சபையில் அங்கத்தினர்கள் எண்ணிக்கையில் அதிக அளவில்இருந்தனர். இவர்கள் வயது வந்த ஆண்கள் அனைவருக்கும் ஓட்டுரிமை என்ற அடிப்படையில் நேர்முகமாக நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டனர். குடியரசுத் தலைவர், செனட் ஆகிய இரு சாராரும் சேர்ந்து ஆணை பிறப்பித்து கீழ்ச் சபையைக் கலைக்காத வரையில் இவர்கள் நான்கு ஆண்டுகள் இச் சபையின் அங்கத்தினர்களாக இருக்கலாம்.

சட்டங்களைச் செயல்படுத்துகின்ற அதிகாரம் பெயரளவில் குடியரசுத் தலைவரிடம் இருந்தது. குடியரசுத் தலைவர் ஏழாண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒருமுறை குடியரசுத் தலைவராக இருந்தவர் மீண்டும் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படலாம். ஆனால் குடியாசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் பெரும்பாலும் கேபினெட் அந்தஸ்து பெற்ற அமைச்சராகவே இருப்பார்.

அமைச்சர்களாக இருப்பவர்கள் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையான அங்கத்தினர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் ஏதாவது ஒருசபை அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை நிறைவேற்றினல் உடனே அமைச்சரவை பதவி விலக வேண்டும். அடுத்து யார் பெரும்பான்மை பலத்தைப் பாராளுமன்றத்தில் பெற்றிருக்கிறார்களோ, அவர்களைக் கொண்டு புதிய அமைச்சரவையை ஏற்படுத்தும் பொறுப்பு குடியரசுத் தலைவருக்கு வழங்கப்பட்டிருந்தது. இது ஏறத்தாழ பிரிட்டிஷ் பாராளுமன்ற முறையை ஒத்திருந்தது.

இப்புதிய அரசியல் அமைப்பில் மன்னராட்சிக் கொள்கையில் நம்பிக்கை உடையவர்களுக்கு அவர்கள் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையான பலம் பெற்றால் அமைச்சரவை அமைப்பதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. மேலும் இவர்கள் தங்கள் விருப்பப்படி குடியரசுத் தலைவர்களுக்குப் பதிலாக அரசர்களையும் நியமித்துக் கொள்ள வாய்ப்புக்கள் பெற்றிருந்தனர். இவ்வாறு மாற்றி அமைக்கப்படும் அரசர்கள் பெயரளவில் அரசர்களாக இருந்து ஆட்சிபுரியலாமே தவிர அதிகாரங்களைப் பயன்படுத்தி ஆட்சி செய்ய முடியாது.

அரசியல் சட்டங்களை இயற்றியவுடன் தேசியசபை தன்னுடைய நடவடிக்கைகளை 1875-இல் முடித்துக் கொண்டது.

மூன்றும் பிரெஞ்சுக் குடியரசின் அரசியல் அமைப்புப்படி முதல் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் பாராளு மன்றத்தின் கீழ்ச் சபையான பிரதிநிதிகள் சபையில் (Chamber of Deputies) ஜனநாயகவாதிகள் பெரும்பான்மை பலத்தையும், மேல்சபையான செனட்டில் மன்னராட்சிக் கொள்கையில் நம்பிக்கை உடையவர்கள் பெரும்பான்மை பலத்தையும் பெற்றனர். எனவே மீண்டும் இருசாரர்களுக்குமிடையே முரண் பாடுகள் ஏற்படத் தொடங்கின.

குடியரசுத் தலைவராக இருந்த மார்ஷல் மக்மஹான் செனட் சபையின் ஆதரவுடன் தன்னுடைய பதவியைத் தொடர்ந்து வைத்துக் கொண்டார். தன்னுடைய கௌரவத்தையும் அதி காரத்தையும் பயன்படுத்தி மார்ஷல் மக்மஹான் மன்னராட்சிக் கொள்கையில் நம்பிக்கையுடையவர்களுக்கு அதிக ஆதர வளித்தார். மேலும் இராணுவ அதிகாரிகளை ஊக்குவித்து முடி யாட்சியை பிரான்சு நாட்டில் மீண்டும் ஏற்படுத்துவதற்கு அவர்கள் விளம்பரக் கருவிகளாக விளங்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். மதத்துறையில் தன்னுடைய செய்கை களுக்கு ஆதரவு திரட்டுவதற்காக மன்னராட்சிக் கொள்கையில் நம்பிக்கை உடையவர்களையே உயர்மட்டச் சபைகளில் அதி காரிகளாக நியமித்தார். இதன்மூலம் தன்னால் இயன்ற அளவு கத்தோலிக்கர்களின் வேண்டுகோளை நிறைவேற்றினர். புரட்சியின் பொழுது நடந்த பாவகாரியங்களுக்கு எல்லாம் பரி காரமாக மாண்ட்மார்ட்டி (Montmarte) மீது கட்டப்பட்ட தூய இதயக் கட்டடத்திற்குத் தாராளமாக நிதிஉதவி அளித்தார். இத்தாலியில் போப்பாண்டவருடைய சார்பில் புகழ்பெற்ற கத்தோலிக்கர்களால், பிரெஞ்சுக்காரர்கள் இத்தாலிய அர சியலில் ஈடுபடவேண்டும் என்பதற்கான கிளர்ச்சிக்கு ஆதரவு அளித்தார்.

குடியரசுத் தலைவருக்கு எதிராகப் பிரதிநிதிகள் சபையில் பெரும்பான்மை பலம் பெற்றிருந்த ஜனநாயகவாதிகள் காம் பேட்டா (Gambetta) என்பவரைத் தங்கள் தலைவராகத் தேர்ந் தெடுத்தனர். இவர் திருச்சபை அதிகாரிகளுக்கு எதிராக இயங்கிய சக்திகளை எல்லாம் ஜனநாயக சக்திகளுடன் ஒன்று சேர்த்தார். பிரான்சிலும், அந்நாட்டின் கீழ்ச்சபையிலும் மன்ன ராட்சிக் கொள்கையைச் சார்ந்தவர்கள் தங்களுக்கு அதிக பலம் சேர்ப்பதற்காகவே திருச்சபைகளுக்கு உதவி புரிகின்றனர் என்றும், திருச்சபை மன்னராட்சிக் கொள்கையின் ஆதரவாளர் களிடமிருந்து பெரும் பணத்திற்காக மட்டுமே அவர்களுக்கு

ஆதரவளிக்கிறது எனவும் குற்றம் சாட்டினர். மே 1877-ல் கீழ்ச்சபையில் இவர் பேசும் பொழுது "திருச்சபையாட்சி" என்ற சொல்லைப் பயன்படுத்தி மேலும் புகழ் பெற்றார். இந்த ஒரு நிகழ்ச்சியே குடியரசுத் தலைவருக்கும் இவருக்கும் உள்ள வலிமையைப் பரிசோதிக்கும் நிகழ்ச்சியாக அமைந்தது.

மார்ஷல் மக்மஹான் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, 1877ஆம் ஆண்டு மே 16ஆம் நாள் மன்னராட்சிக் கொள்கையில் நம்பிக்கை உடையவர்களை அமைச்சரவை அமைக்கச் செய்து, பிரதிநிதிகள் சபையின் கூட்டத்தை ஒருமாத காலத்திற்கு ஒத்திப் போட்டார். உடனடியாக மேல்சபையின் ஆதரவு பெற்று, கீழ்ச்சபையைக் கலைத்துவிட்டு, நாடு முழுவதும் புதிய கீழ்ச்சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் உத்தரவுகளைப் பிறப்பித்தார்.

குடியரசுத் தலைவரும், காம்பேட்டாவும் தேர்தல் சுற்றுப் பயணம் செய்தனர். இரண்டு தலைவர்களின் பேச்சுக்களுமே மக்களுக்கு நம்பிக்கையூட்டுவனவாக அமைந்தாலும், காம்பேட்டாவின் பேச்சுத் திறமை வெற்றி வாய்ப்பைத் தோற்றுவித்தது. புதிய தேர்தல் மன்னராட்சிக் கொள்கையில் நம்பிக்கையுடையவர்களுக்கு ஒரு பாடம் புகட்டும் வகையில் ஜனநாயகவாதிகளுக்குப் பெரும் வெற்றியைத் தேடிக் கொடுத்தது.

புதிய கீழ்ச்சபை கூடிய உடனேயே மன்னராட்சிக் கொள்கையில் நம்பிக்கை உடையவர்களின் அமைச்சரவை இராஜினமா செய்யவேண்டும் எனக் கட்டாயப்படுத்தி, அதற்குப் பதிலாக ஜனநாயகவாதிகளின் அமைச்சரவையைத் தேர்ந்தெடுத்தது. இதனை அடுத்து ஏறத்தாழ ஓராண்டுக் காலம், தலைவரான மக்மஹான், தன்னுடைய எதிரிகளின் அமைச்சரவையுடனும், கீழ்ச்சபையுடனும் போராடினர்.

செனட் சபையின் ஒரு பகுதியினருக்கான தேர்தல் 1879ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே நடைபெற்றது. இத்தேர்தலினல் ஜனநாயகவாதிகள் மேல்சபையிலும், கீழ்ச்சபையிலும் அதிக அதிகாரம் பெற்றவர்களாகத் திகழ்ந்தனர். மக்மஹான் நம்பிக்கையற்ற நிலையில் தனித்து விடப்பட்டதால் இராஜினமா செய்தார்.

தேசியசபை ஜனநாயகவாதிகளின் பெரும்பான்மை பலத்தின் ஜூல்ஸ் கிரீரி (Jules Grerey) என்பவரைக் குடியரசுத்

தலைவராகத் தேர்ந்தெடுத்தது. இவ்வாறு மூன்றாவது பிரஞ்சுக் குடியரசு, செயல்படத் தொடங்கிய ஒன்பதாண்டுகளுக்குப் பிறகு ஜனநாயகவாதிகளின் கைக்கு மாறியது. இதனையடுத்து 1880ஆம் ஆண்டு பிரான்சு நாட்டின் அரசாங்கத்தின் இருப்பிடம், ஜனநாயகவாதிகளின் வெற்றியைப் பிரதிபலிக்கின்ற வகையில் வார்சேயில் இருந்து பாரிஸுக்கு மாற்றப்பட்டது.

காம்பேட்டா தன்னுடைய இலட்சியங்களை நிறைவேற்றுவதற்கு வெகு நாட்கள் உயிருடன் வாழவில்லை. 1882-ல் அவர் பிரதம அமைச்சராக இருக்கையில் ஒரு விபத்தில் கொல்லப்பட்டார். இவருக்குப் பின்னர் இவரைப் பின்பற்றியவர்களுக்கிடையே சில கருத்து வேற்றுமைகள் இருந்தாலும், அதிக விசுவாசமுள்ள ஜனநாயகவாதிகள் பிரஞ்சுக் குடியரசில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். முடியாட்சி ஆதரவாளர்கள் இன்னும் செல்வாக்குடன் பிரான்சில் இருந்தனர். ஆனால் பின்னர் இவர்களிடத்தில் பொறுப்புக்களை ஏற்று நடத்தக்கூடிய ஒரு தலைவர் இல்லாததால் படிப்படியாகப் பொதுமக்களின் செல்வாக்கை இழந்தனர். கம்போர்டு இளவரசரான ஐந்தாம் ஹென்றியும் 1883-ல் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவருடன் அவருடைய கொள்கைகளும் மறைந்தன. மன்னராட்சி ஆதரவாளர்களும் ஊக்கமிழந்தனர். பொதுமக்களும் ஜனநாயகவாதிகளும் பாரிஸ் இளவரசரை அரியணை ஏற்றுவதற்கு மேற்கொண்ட உடனடி முயற்சிகளுக்கு ஆதரவளித்தனர்.

ஆனால் 1886ஆம் ஆண்டு, பாராளுமன்றம் தனது நடவடிக்கை மூலம் இளவரசரின் அதிகாரத்தை நீக்கியதோடு, மற்ற போர்பன் வம்ச அரசகுமாரர்களின் உரிமைகளையும் பறித்துக் கொண்டது. 1879-ல் ஜனநாயகவாதிகள் அரசாங்கத்தைக் கைப்பற்றியது முதற்கொண்டு பிரஞ்சுக் குடியரசின் வரலாற்றில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள் அரசியலில் செல்வாக்குப் பெற்று அரசியல்வாதிகளாயினர். பார்லிமெண்டில் இரு சபைகளின் அங்கத்தினர் பதவிகள், குடியரசுத் தலைவர் பதவி, அமைச்சர் பதவிகள், ஸ்தல ஸ்தாபன ஆட்சியில் முக்கிய பதவிகள் ஆகியவற்றை இத்தகைய நடுத்தர வகுப்பைச் சேர்ந்த அரசியல்வாதிகள் கைப்பற்றினர். இவ் வரசியல்வாதிகள் சட்டம், மருத்துவம், கல்வி, பத்திரிகை, தொழில் போன்ற துறைகளிலும் சிறந்து விளங்கினர். பொதுவாகக் கல்வி அறிவு பெற்றவர்கள் அரசியல்வாதிகளாயினர். இவர்களில் பிரபுவாகவோ, மத போதகராகவோ ஒருவரும் இல்லை.

மன்னராட்சிக் கொள்கையில் நம்பிக்கையுடையவர்களுடன் எண்பது ஆண்டுகள் இடைவிடாமல் போராடி அரசாங்கத்தைக் கைப்பற்றிய பிறகுகூட, ஜனநாயகவாதிகள் தங்களுக்கென்று ஒரு வலிமை வாய்ந்த குடியரசுக் கட்சியைத் ஏற்படுத்தத் தவறிவிட்டனர். அதனால் இவர்களிடையே போட்டி பிரிவுகளையும், கருத்து வேறுபாடுகளையும் தவிர்க்க இயலவில்லை.

மார்ஷல் மக்மஹானைக் குடியரசுத் தலைவர் பதவியிலிருந்து இறக்குவதற்காக, ஜனநாயகவாதிகளால், காம்பேட்டாவின் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட இடதுசாரி இயக்கம் தனது பணியைச் செய்து முடித்தவுடனேயே கலைந்துவிட்டது. ஜனநாயகவாதிகளிடையே தனிப்பட்ட உணர்ச்சிகளும், பிரிவினை உணர்ச்சிகளும் தோன்றின. இவர்கள் மிதவாதிகள் (Moderates) என்றும், தீவிரவாதிகள் (Radicals) என்றும் இரு பகுதிகளாகப் பிரிந்தனர். இவர்களில் முதல் பிரிவினர் பழைய சுதந்திரக் கருத்துக்கள் அடங்கிய கோஷங்களை மக்களின் ஆதரவைப் பெறப் பயன்படுத்தினர். தீவிரவாதிகள் 1789ஆம் ஆண்டு துவங்கிய பிரெஞ்சுப் புரட்சியின்போது தோன்றிய ஜாக்கோபியர்களையும், முதல் குடியரசையும் கூறி மக்களின் செல்வாக்கைப்பெற முயற்சி செய்தனர். ஆனால் இரண்டு பிரிவினர்களுமே நாட்டுப்பற்று மிகுந்தவர்களாகக் காணப்பட்டனர்.

மிதவாதிகள் குடியேற்ற நாடுகளின் அமைப்பை விரிவுபடுத்துவதில் ஆர்வம் மிக்கவர்களாக இருந்தனர். தீவிரவாதிகள் உள்நாட்டில் தேசியத்தை ஏற்படுத்துவதில் அக்கறை மிகுந்தவர்களாக விளங்கினர். இவ்விரு பிரிவினர்களுமே கத்தோலிக்க எதிர்சக்திகளின் ஆதரவைப் பெற்றனர். இவற்றின் முக்கியமான தலைவர்கள் எல்லாம் திருச்சபைக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டனர். ஏறத்தாழ 1879-க்கும் 1899-க்கும் இடைப்பட்ட இருபதுஆண்டுக் காலத்தில் மிதவாதிகள் ஜுல்ஸ் பெர்ரி (Jules Ferry)என்ற தலைவரின்கீழ் தீவிரவாதிகளைவிட அதிக செல்வாக்குப் பெற்று விளங்கினர். ஜுல்ஸ் பெர்ரி சட்டம், பத்திரிகை ஆகிய துறைகளில் புலமைபெற்று விளங்கினர். இவர் 1879 முதல் 1895 வரை குடியரசில் சட்டங்களை இயற்றுவதில் பெரும் பங்கை வகித்தார்.

தீவிரவாதிகளின் தலைவர் ஜார்ஜ் கிளமென்ஸோ (George Clemencean) என்பவர். இவர் சிறந்த மருத்துவர். ஜான்ஸ்டுவர்ட் மில், அகஸ்ட்காம்ட் (John Stuart Mill, August Comte) போன்றவர்களின் புத்தகங்கள் வாயிலாகவும், சொந்த அனுபவத்தின்

மூலமாகவும் தான் பெற்ற கருத்துக்களைப் பயன்படுத்தி, சமயம் சமுதாயம் ஆகிய துறைகளில் தீவிரவாதிகள் கொண்டிருந்த கருத்துக்களை வளர்ச்சியடையச் செய்தார். மேலும் 1880-ல் தான் துவங்கிய செய்தித்தாள் வாயிலாகத் தன் பிரிவுக்கு மக்களின் ஆதரவைத் தேடி அம் முயற்சியில் வெற்றியும் அடைந்தார். எல்லாவற்றுக்கும் மேலாக பெர்ரிக்கும், மற்ற ஜனநாயகவாதிகளில் பெரும்பான்மையான மிதவாதிகளுக்கும் கிளமென்சோ நேர் எதிரியாகத் திகழ்ந்தார். ஆனால் அரசாங்கத்தைக் கைப்பற்றுவதற்குத் தேவையான தீவிர ஜனநாயகவாதிகள் இவருடன் இல்லை. எனவே மூன்றும் பிரஞ்சுக் குடியரசு அமைச்சரவையில் அடிக்கடி மாற்றங்கள் ஏற்பட்டன. 1871 முதல் 1914 வரை பிரான்சு நாட்டில் ஏறத்தாழ ஐம்பது அமைச்சரவைகள் அமைக்கப்பட்டன. இதே காலத்தில் பிரிட்டனில் ஒன்பது அமைச்சரவைகள் மட்டுமே அமைக்கப்பட்டன என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

ஜனநாயகவாதிகளில் மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே அதிக கருத்து வேற்றுமைகள் இருந்தாலும், மத்திய அரசுக்குக் கட்டுப்பட்ட ஒரு நிலையான நிர்வாகம் பிரான்சில் தொடர்ந்து இருந்து வந்தது. அமைச்சரவையில் ஏற்பட்ட மாறுதல்கள் அரசுக் கொள்கையில் குறிப்பிடத்தக்க எவ்வித மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை. அரசியல்வாதிகள் விரைந்து ஒவ்வொரு பகுதியாக அரசாங்கத்தின் உயர்ந்த பதவிகளைக் கைப்பற்றினாலும், ஒரே பாராளுமன்றம் தொடர்ந்து செயலாற்றிச் சட்டங்களுக் கிடையே ஒருங்கிணைப்பினை வெகுகாலம் நிலை நாட்டியது. உதாரணமாக மன்னராட்சிக் கொள்கையில் நம்பிக்கையுடையவர்கள் சிலர் உதவியுடன், எல்லா ஜனநாயகவாதிகளுக்கும் தனி மனித உரிமைகளுக்கு உத்திரவாதம் அளிக்கும் வகையில் 1881-ல் ஒரு சட்டத்தை இயற்றினர். இதன்படி பாராளுமன்றத்தின் அனுமதியின்றியே பேச்சுரிமை, பொதுக் கூட்டங்களை நடத்தும் உரிமை ஆகியவை மக்களுக்கு வழங்கப்பட்டன. பத்திரிகை உரிமைகளின் மீதான கட்டுப்பாடுகளும் தளர்த்தப் பட்டன.

நகரப் பகுதியில் உள்ள தொழிலாளர்களைத் திருப்திப்படுத்தும் வகையில், தொழிலாளர் யூனியன்களை அமைத்துக்கொள்ள அவர்களுக்கு முழு சுதந்திரம் வழங்குவதில் ஒருமனதான கருத்துக்கள் குறைந்து காணப்பட்டன. இருப்பினும் வால்டெக் ரூஸோ (Waldeck Rousseau) என்பவரின் பெருமுயற்சியால்

1884-ல் தொழிலாளர்களின் இயக்கங்களே அங்கீகரிப்பதற்கும் பாதுகாப்பு கொடுப்பதற்கும் ஒரு சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறியது. இவர் ஜுல்ஸ் பெர்ரியின் அமைச்சரவையில் செல்வாக்குப் பெற்ற உறுப்பினராக விளங்கினர்.

ஜனநாயகவாதிகள் வாணிபம், தொழில், விவசாயம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு அதிக ஆதரவு அளித்தனர். ஏறத்தாழ முப்பதாயிரம் கிலோ மீட்டர் நீளத்திற்கு இருப்புப்பாதை போடப்பட்டது. துறைமுகங்கள் ஆழப்படுத்தப்பட்டதுடன் அதிக இடதிவசதிகொண்ட புதிய துறைமுகங்களும் லா ஹாவீர் (Le Havre), செயின்ட் நஸெய்ர் (St. Nazaire) போன்ற இடங்களில் கட்டப்பட்டன. பாரிஸ் நகரத்தை விரிவுபடுத்தும் திட்டங்களும், அழகுபடுத்தும் திட்டங்களும் நிறைவேற்றப் பட்டன. மிகப் பெரிய அளவில் பன்னுட்டுப் பொருட்காட்சி 1878, 1889, 1900 ஆகிய ஆண்டுகளில் பாரிஸில் நடைபெற்றது. இவையனைத்தும் வாணிப வளர்ச்சிக்காகச் செய்யப் பட்ட ஏற்பாடுகளாகும்.

பாராளுமன்றமும், அமைச்சரவையும் விவசாயிகளுக்குப் பல நன்மைகளேச் செய்தன. ஒருபுறம் நேர்முக நிலவரிமீது விதிக்கப்பட்ட மறைமுக வரிச்சுமையை மறைக்க ஏற் பாடுகள் செய்தாலும், மறுபுறம் பயன்தரும் நன்மைகள் பல வற்றை அவர்களுக்கு அரசு வழங்கியது. விவசாயத் துறைக் குத் தனி அமைச்சகம் ஒன்று 1881-ல் நிறுவப்பட்டது. 1879 முதற்கொண்டு பொருளாதார உதவிகள் பல விவசாயி களுக்கு வழங்கப்பட்டன. நெசவாளர்கள், கால்நடை பராமரிப்பாளர்கள் ஆகியவர்களுக்கும் பல புதிய சலுகைகளே அரசாங்கம் வழங்கியது.

விவசாயிகள் தங்களுக்குத் தேவையான பொருள்களேக் கூட்டுறவு முறையில் வாங்குவதற்கும், விற்பதற்கும் வழி செய் யும் வகையில் கூட்டுறவுச் சங்கங்களே அமைத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. நிலச்சுவான்தாரர்களுக்கு உதவும் வகையில் அரசாங்கத்தின் உத்திரவாதத்துடன் புதிய வங்கி களும், ஆயுள்காப்பு உறுதிக் கழகங்களும் செயல்படத்தொடங் கின. விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காகப் பல விவ சாயப் பள்ளிகள் நிறுவப்பட்டு அவற்றிற்கு மானியங்களும் வழங்கப்பட்டன. 1885ஆம் ஆண்டு இயற்றப்பட்ட ஒரு சட்டத்தின் மூலமாக, பிரஞ்சு நாட்டின் விவசாயத்திற்கு ஊக் கம் அளிக்கும் வகையில் வெளிநாட்டு விவசாயப் பொருள்கள்

மீது சுங்கவரி விதிக்கப்பட்டது. இச்சட்டம் 1892-ல் மேலும் தீவிரப்படுத்தப்பட்டது. இத்தகைய அரசுக் கொள்கைகளால் பிரான்சு நாட்டின் தெற்குப் பகுதியிலும், மத்தியப் பகுதியிலும் வாழ்ந்த விவசாயத் தொழிலாளர்களில் பெரும்பான்மையானவர் குடியரசுக்கு முழு ஆதரவு அளித்தனர். 1800க்கும் 1860க்கும் இடைப்பட்ட அறுபதாண்டு காலத்திற்குள் நாட்டின் விவசாய, உற்பத்தி நான்கு மில்லியன் பிராங்குகளில் இருந்து ஆறு மில்லியன் பிராங்குகளாக உயர்ந்தது. இது 1913ல் பதினேரு மில்லியன் பிராங்குகளைத் தாண்டியது.

விவசாய வளர்ச்சிக்கு இணையாக பிரான்சில் இயந்திரத் தொழில் வளர்ச்சியும், நகரங்களின் வளர்ச்சியும் குறிப்பிடத் தக்க அளவில் மூன்ருரம் குடியரசுக் காலத்தில் முன்னேற்ற மடைந்தன. தொழிற்சாலைகளில் இயந்திரங்கள் பத்து மடங் குக்கும் மேற்பட்ட அதிக சக்தியுடன் இயங்கின. சுரங்கங் களிலிருந்து வெட்டியெடுக்கப்படும் நிலக்கரியின் அளவும் இருமடங்காக உயர்ந்தது. எனவே உலைகளுக்குத் தொடர்ந்து எரிபொருள் கிடைத்து வந்தது.

பிரான்சு நாடே அந்நாட்டின் உற்பத்திப் பொருள்களுக்குப் பிரதான சந்தையாக விளங்கினுலும், அந்நாட்டின் ஏற்றுமதி 25 விழுக்காடு உயர்ந்தது. தொழில்களின் பாதுகாப்பிற்காகவும், விவசாயத்தின் வளர்ச்சிக்காகவும் பிரஞ்சு அரசாங்கம் 1892-ல் சுங்கவரியை மேலும் சீர்திருத்தித் தீவிரப்படுத்தியது.

இவ்வளர்ச்சிகளின் பலனுக பிரஞ்சு நாட்டின் மூலதனம் வளர்ச்சியடைந்தது. இருநூறு மில்லியன் பிராங்குகள் என்று 1872-ல் கணக்கிடப்பட்ட பிரஞ்சு நாட்டின் மூலதனம், 1913-ல் முன்னூறு மில்லியன் பிராங்குகளாக உயர்ந்தது. இம்மூலதன உயர்வின் ஒரு பகுதியின் பெரும்பகுதி குறைந்த எண்ணிக்கை யுள்ள உற்பத்தியாளர்களுடைய பல தொழிற்சாலைகளுக்கு இலாபமாக இருந்தது. இதன் பெரும்பகுதி தொழிலாளர்கள், கலைஞர்கள், சிறு வியாபாரிகள் ஆகியோரின் சேமிப்பாக இருந் தது. இத்தொகையை பிரஞ்சுக்காரர்கள் தங்கள் நாட்டு அர சாங்கம் வெளியிட்ட கடன் பத்திரங்களில் முதலீடு செய் தனர். சில சமயங்களில் வெளிநாட்டில் கூட முதலீடு செய் தனர்.

இந்த அளவு வளர்ச்சிகள் ஏற்பட்டாலும், பிரிட்டனைப் போலவோ ஜெர்மனியைப் போலவோ பிரான்சு தொழில்

துறையில் வளர்ச்சி அடையாததற்குக் காரணம் அந் நாட்டு மக்கள் தங்கள் மூலதனத்தை வியாபாரத்தில் முதலீடு செய்வதற்குப் பதிலாக, உத்திரவாதங்களுடைய அரசாங்கக் கடன் பத்திரங்களில் முதலீடு செய்ததேயாகும். இம்மக்கள் தங்கள் மூலதனத்தைத் தொழில்களில் முதலீடு செய்திருப்பார் களானல் பிரான்சு நாடும் தொழில்துறையில் ஜெர்மனிக்கு இணையாக முன்னேறியிருக்கும். அரசியலிலும் பிரான்சு இரு பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜெர்மனி, பிரிட்டன் போன்ற நாடுகளைப் போல வல்லரசாகத் திகழ்ந்திருக்கும். ஜெர்மனியின் வளர்ச்சி கூட ஓரளவு பாதிக்கப்பட்டு இருந் தாலும் வியப்படைவதற்கில்லை.

பிரான்சைப் போல அதிக அளவில் பொதுமக்களிடம் கடன் வாங்கிய நாடு உலகில் வேறு எந்த நாடுமில்லை. ஆனால் இக் கடன்கள் முழுவதும் தன்னுடைய நாட்டு மக்களிட மிருந்தே பெற்றது. எனவே பலர் தாங்கள் அரசுக்குக் கொடுத்த கடன் தொகைக்கான வட்டியை ஓய்வுகால ஊதியம் பெறு பவர்களைப் போலப் பெற்று வந்தனர். இத்தகைய நிலையில் பிரஞ்சுக்காரர்களில் சிலர் தங்கள் மூலதனத்தை வெளிநாடு களில் முதலீடு செய்ததன் காரணமாக, பிரான்சின் அந்தஸ்து உலக நாடுகளிடையே உயர்ந்தது. 1871-ல் பன்னிரண்டு மில்லியன் பிராங்குகளாக இருந்த பிரஞ்சுக்காரர்களின் வெளி நாட்டு முதலீடு, 1914-ல் ஐம்பத்தி ஐந்து மில்லியன்களாக உயர்ந்தது. பிரான்சு நாட்டின் வெளிநாட்டு முதலீட்டின் வளர்ச்சி அந்நாட்டின் தேசிய பொருளாதார வளர்ச்சியைவிட அதிகமாகும்.

குடியேற்ற வளர்ச்சி

மூன்றாவது பிரஞ்சுக் குடியரசில் ஏற்பட்ட மற்றொரு முக்கிய நிகழ்ச்சி, இந்நாட்டின் குடியேற்ற வளர்ச்சியாகும். ஆனால் இந்த வளர்ச்சி பொருளாதார வழியிலும், கடல்கடந்து ஆதிக்கம் செலுத்துவதிலும் பிரிட்டனுக்கு அடுத்தபடியாகத்தான் விளங் கியது. பதினெட்டாம் நூற்றாண்டில் பிரான்சு பேரரசாகத் திகழ்ந்தது என்பதை நினைவுபடுத்துகின்ற வகையில், அந்நாட் டின் வசமிருந்த மேற்கிந்தியத் தீவுகளில் சில தீவுகளும், இந் தியப் பெருங்கடலில் அமைந்துள்ள ரீயூனியன் தீவுகளும், இந் தியாவில் உள்ள பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனம், சந்திர நாகூர் ஆகிய ஐந்து வியாபார ஸ்தலங்களும், தென் அமெரிக்காவின் வடபகுதியில் அமைந்துள்ள பிரஞ்சு கயானு வும், ஆப்பிரிக்காவில் செனிகலிஸ் கடற்கரையில் அமைந்

திருந்த சில பகுதிகளும் மட்டுமே 1879–ல் பிரஞ்சு அரசாங்கத்தை ஜனநாயகவாதிகள் கைப்பற்றியபொழுது அதன் வசமிருந்தன. இவற்றுடன் லூயி பிலிப் கைப்பற்றிய அல்ஜீரியாவும், மூன்றும் நெப்போலியன் கைப்பற்றிய தென் கிழக்கு ஆசியாவின் பசிபிக் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள சில பகுதிகளும் பிரான்சின் குடியேற்ற நாடுகளாக விளங்கின. இப்பகுதிகளில் புதிய கலிசோனியா, கொச்சின்–சீனு, கம்போடியா ஆகிய பகுதிகள் அடங்கும்.

கிளமென்ஸோவும், மற்றும் சில தீவிர ஜனநாயகவாதிகளும், குடியேற்ற நாடுகளினுல் பிரான்சு நாட்டிற்குக் கிடைத்த புகழையும். பெருமையையும் விரும்பாத மனப்போக்கு உடையவர்களாக இருந்தனர். இவர்கள் குடியேற்ற வளர்ச்சியை இடித்துரைத்தனர். குடியேற்ற நாடுகள் தங்கள் தாய்நாட்டின் சக்திகளை எல்லாம் உறிஞ்சிவிடும். தாய்நாட்டில் ஏற்படுத்தப்படும் தீவிர சீர்திருத்தங்களை அந்நாட்டு மக்கள் உணர முடியாத வகையில் அவர்களின் கவனத்தைத் திசை திருப்பிவிடும் என்ற கருத்துக்களில் அசைக்க முடியாத நம்பிக்கை இவர்களுக்கு இருந்தது.

ஆனுல் ஜுலியஸ் பெர்ரியும், அவருடன் சேர்ந்த மிதவாதிகளும் தீவிர குடியேற்றக் கொள்கையை ஆதரித்தனர். இவர்கள் இவ்வாறு இருந்ததற்குக் காரணங்களாவன:

1. ஆங்கிலேயர்கள் குடியேற்ற நாடுகளை மற்ற ஐரோப்பிய நாடுகளைவிட மிக அதிகமாகப் பெற்றிருந்ததால் பிரஞ்சுப் புரட்சியின்பொழுது ஆங்கிலேயர்களுக்கும், பிரஞ்சுக்காரர்களுக்கும் ஏற்பட்ட சண்டையில் கடற்படையில் பிரிட்டனை வெல்ல முடியாது என்று கருதிய பேரரசர் நெப்போலியன் அந்நாட்டைப் பட்டினி போட்டுக் கொல்ல நினைத்தார். எனவே பெர்லின் ஆணைகளைப் (1806) பிறப்பித்து, பிரிட்டிஷ் பொருள்களுக்கு ஐரோப்பாவில் தடை விதித்தார். பிரிட்டன் தனது குடியேற்ற நாடுகளில் தங்கள் பொருள்களை விற்றுத் தனது பொருளாதாரம் பாதிக்கப்படாமல் தன் நிலையைக் காத்துக் கொண்டது. எனவே பிரிட்டனின் பொருளாதார மேம்பாட்டிற்கு அந் நாட்டின் குடியேற்ற நாடுகள் ஒரு முக்கிய காரணமாக அமைந்தன என்று இவர்கள் கருதினர். அந் நாட்டின் பொருளாதார மதிப்பும் பன்மடங்கு உயரும் எனக் கருதினர்.

2. ஐரோப்பாவிற்கு வெளியே பிரஞ்சு நாட்டின் ஆட்சி பரவினால் பிரான்சுக்கும், ஜெர்மனிக்கும் நடைபெற்ற போரில் சேடான் (Sedan) என்ற இடத்தில் தோல்வியடைந்து பிரான் சுக்கு ஏற்பட்ட அவப்பெயர் சிறிது மறையும் என நம்பினர்.

3. எல்லாவற்றிற்கும் மேலாக பிரான்சு நாட்டின் வியாபாரி களும், செல்வந்தர்களும் தங்கள் மூலதனங்களை வெளிநாடு களில் வெவ்வேறு துறைகளில் முதலீடு செய்தால் வியாபாரம் இலாபகரமாக இருப்பதோடு மட்டுமல்லாமல, இலாபம் முழு வதும் தங்கள் நாட்டிற்கே சேரும் என்று எண்ணினர்.

குடியேற்ற வளர்ச்சியில் நாட்டம் கொண்ட பெர்ரியும் அவரது சகாக்களும் பழைமையை விரும்பும் கத்தோலிக்கர் களும் உடன்பாடு கொண்டதற்குக் காரணம், பிரஞ்சுக் குடி யேற்ற வளர்ச்சியைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, புதிய பகுதிகளில் மதபோதகர்கள் அடங்கிய தங்கள் குழுக்களை அனுப்பித் தங்கள் மதத்தைப் பரவச் செய்ய வேண்டும் என்பதே.

இந்நிலையில் பிரான்சு நாட்டின் சிறந்த வீரராகத் திகழ்ந்தார் ஜுல்ஸ்பெர்ரி. இவர் 1881-ல் பிரதம அமைச்சராக இருந்த பொழுது அல்ஜீரியாவிலிருந்து (Algeria) குழப்பநிலையிலிருந்த அந்நாட்டின் அண்டை நாடான டுனிஸ் (Tunis)க்கு ஒரு பிரஞ்சுப் படையை அனுப்பினர். மேலும் அந்நாட்டின் முகம்மதிய அரசரான பெய் (Bey) என்பவருக்கு ஓர் உறுதி மொழியைக் கொடுத்து அவரை பிரான்சு நாட்டின்கீழ் ஆட்சி புரியுமாறு கேட்டுக் கொண்டார்.

பின்னர் இவர் 1883 முதல் 1885 வரை இரண்டாம் முறையாக பிரான்சின் பிரதம அமைச்சராக இருந்தபொழுது சில பகுதி களைக் கைப்பற்றினர். அவையாவன :

1. ஒரு பிரஞ்சுப் படையைத் தூரக் கிழக்கு (Far East) பகுதி களுக்கு அனுப்பி, சீனவைக் கட்டாயப்படுத்தி, அந்நாட்டின் ஆதிக்கப் பகுதியாக விளங்கிய இந்தோ-சீன பகுதியில் உள்ள அன்னம் (Annam), டான்கின் (Tonkin) ஆகிய பகுதிகளில் பிரஞ்சு ஆதிக்கத்திற்கு அனுமதி பெற்றர்.

2. மற்ருெரு பிரஞ்சுப் படையின் உதவி கொண்டு தென் ஆப்பிரிக்காவின் கிழக்குப் பகுதியில் இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள மடகாஸ்கர் (Madagascar) என்ற தீவின் முக்கிய துறைமுகத்தைத் தாக்கினுர். மேலும் அத் தீவின் பூர்வீக அரசனை அச்சுறுத்தி அம்மன்னனுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். இவ்வுடன்படிக்கையின்படி அத்தீவு முழுவதும் பிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கம் பரவியது.

3. இதேபோன்று வேறு ஓர் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு செங்கடலின் தெற்கு வாயிலில் உள்ள ஆப்பிரிக்கக் கடற்கரையில் அமைந்துள்ள சோமாலிலாந்தின் ஒரு பகுதியைத் தன்னுட்டின் ஆட்சியில் கொண்டு வந்தார்.

4. ஆப்பிரிக்காவின் உட்பகுதியைக் கைப்பற்ற முயற்சி செய்த ஒரு குழுவிற்கும், வியாபார நிறுவனங்களுக்கும் (கம்பெனிகளுக்கும்) பிரஞ்சுக்காரர்கள் ஆதரவளித்தனர். பெரும்பாலும் இவர்கள் காங்கோ நதி, நைஜர் நதி ஆகியவற்றின் போக்கிலேயே சென்று தங்கள் நாட்டின் ஆதிக்கத்தை ஏற்படுத்த முயன்றனர்.

பிரஞ்சுக் குடியேற்ற நாடுகளை அமைப்பதற்கு பெர்ரியும் அவரது ஆதரவாளர்களும் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளை இவரது எதிரிகளான தீவிரவாதிகளும், கிளமென்ஸோவும் இடித்துரைத்தனர். ஆனுல் குடியேற்ற நாடுகளை அமைத்த பிறகு எந்த ஒரு பிரஞ்சு அரசியல் பிரிவினரும் அந்நாடுகளை இழக்க விரும்பவில்லை. எனவே இந்நிலையைத் தனது கருத்துக்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு பெர்ரி, குடியேற்றப் பேரரசை நிறுவும் முயற்சியை விரைவு படுத்தினுர். உள்நாட்டிலும் இம்முயற்சிக்கான எதிர்ப்புக்கள் வலிவடையவில்லை.

பிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்தின்கீழ் இருந்த இந்தோ-சீனுப் பகுதி, சையாம் (Siam), சீனு (China) ஆகியவை அந்நாடுகளின் செலவிலேயே படிப்படியாக வளர்ச்சியடைந்தன. 1880க்கும் 1899க்கும் இடைப்பட்ட காலத்தில் பிரஞ்சுப் பேரரசின் ஆப்பிரிக்கக் கொள்கையில் பேராசைகள் நிறைந்திருந்தன. ஆனுல் அவ்வாசைகள் யாவும் வெற்றி பெற்றன. சகாரா (Sahara)வில் பல பகுதிகளும், மேற்கு சூடானில் (Sudan) சில பகுதிகளும் கைப்பற்றப்பட்டு அவை வடக்கே அல்ஜீரியா, டூனிஸ் ஆகியவற்றுடனும், தெற்கே காங்கோ,

நைஜர், ஒனிகல் ஆகியவற்றுடனும், இணைக்கப்பட்டன. 1892-ல் நீக்ரோக்களின் பகுதியான தஹோமே (Dahomey) என்ற மேற்கு ஆப்பிரிக்கக் கடற்கரைப் பகுதியை பிரஞ்சுக் காரர்கள் கைப்பற்றினர். 1896-ல் மடகாஸ்கர் தீவில் ஏற்பட்ட புரட்சியை அடக்கினர். இதனால் பிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கம் பெற்றதாக இருந்த இப்பகுதி பிரஞ்சுக் குடியேற்ற நாடாக மாறியது. 1912ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பன்னாட்டு உடன்பாட்டு முயற்சிகளின் பலனாக மொராக்கோ வின் பெரும் பகுதியில் பிரஞ்சு ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டது.

முதல் உலகப் போர் தொடங்குவதற்கு முந்திய ஆண்டில், பிரஞ்சுப் பேரரசில், 1871-ல் பிரான்சு நாட்டின் கீழ் இருந்த பகுதிகளும், புதிதாகக் கைப்பற்றப்பட்ட இந்தோ-சீனா, மடகாஸ்கர் ஆகிய பகுதிகளும் இருந்தன. இவற்றுடன் ஆப்பிரிக்காவில் அல்ஜீரியா, டூனிஷியா, மொராக்கோ, பிரஞ்சு மேற்கு ஆப்பிரிக்கா, பிரஞ்சு ஆப்பிரிக்காவின் பூமத்திய ரேகைப் பகுதிகள் ஆகியவை இப்பேரரசில் இருந்தன. பிரஞ்சுக் குடியேற்ற நாடுகளின் மொத்தப் பரப்பளவு சுமார் $3\frac{1}{2}$ மில்லியன் சதுரமைல்களாகும். இப்பரப்பளவு பிரான்சின் பரப்பள வைக் காட்டிலும் ஏறத்தாழ 14 மடங்கு அதிகம். இப்பகுதி களில் சுமார் 30 மில்லியன் மக்கள் வாழ்ந்தனர். இது ஏறத்தாழ பிரஞ்சு மக்கள் தொகையில் $\frac{4}{5}$ பங்காகும்.

பிரஞ்சுக் குடிமக்களாக ஆப்பிரிக்காக் கண்டத்தில் நீக்ரோக்களும், பெர்பர்கள் அல்லது அரேபியர்கள் என்று சொல்லப்பட்ட முகம்மதிய மதத்தைச் சார்ந்தவர்களும் இருந் தனர். இந்தோ-சீனா, அன்னம், சீனா ஆகிய நாடுகளில் இருந்தவர்கள் பெரும்பாலும் புத்த மதத்தினர். மடகாஸ்கர், பஸிபிக் கடற்பகுதி ஆகியவற்றில் போலினீஷியர்கள் இருந் தனர். இவ்வாறே மேற்கிந்தியத் தீவுகள், தென் அமெரிக் காவில் இருந்த பிரஞ்சு கயானா ஆகிய பகுதிகளில் நீக்ரோக் களும், முலாட்டர்களும் (Mulattoes) இருந்தனர்.

பெரும்பாலான பிரஞ்சுக் குடியேற்ற நாடுகளில் குறைந்த அளவு மக்கள் பரவலாக வாழ்ந்தனர். ஆனால் இப்பகுதிகள் மண்வளம், தட்பவெப்ப நிலைகளால் ஐரோப்பிய மக்களின் வாழ்க்கைக்கு ஏற்றதாக இல்லை. எல்லாவற்றிற்கும் மேலாகத் தங்கள் வாழ்க்கைக்கு ஏற்ற இடத்திலேயே சிறப்பாக வாழ முடியாத பிரஞ்சுக்காரர்கள், தங்களுக்கு ஏற்ற சூழ்நிலை

இல்லாத பகுதிகளுக்குக் குடிபெயர்வதில் 1871-க்குப் பிறகு ஆர்வம் குறைந்தனர்.

பிரஞ்சுக் குடியேற்ற நாடுகளிலேயே வடக்கு அல்ஜீரியா தான் மிகச்சிறப்பாக வளர்ச்சியடைந்தது. மேலும் இது பல பிரஞ்சுக்காரர்களைத் தன்பால் கவர்ந்தது. எனவே சுமார் 5 இலட்சம் பிரஞ்சுக்காரர்கள் இப்பகுதியில் 1871-க்கும் 1914-க்கும் இடைப்பட்ட காலத்தில் குடியேறினார்கள். இவர்கள் ஏறத்தாழ 6 பேர்களுக்கு ஒரு பிரஞ்சுக்காரர் என்ற எண்ணிக்கையில் இருந்தனர். டூனிஷியாவில் 75 ஆயிரம் பிரஞ்சுக்காரர்கள் குடியேறினர். இவர்கள் இத்தாலியில் இருந்து குடியேறியவர்களைவிட எண்ணிக்கையில் குறைந்தவர்களாக இருந்தனர். இத்தாலி, பிரான்சு ஆகிய நாடுகளில் இருந்து குடிபெயர்ந்தவர்களின் எண்ணிக்கை 12 டூனிஷ்யர்களுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் இருந்தது. மற்ற பிரஞ்சுப் பகுதிகளில் மிகக் குறைந்த அளவு பிரஞ்சுக்காரர்களே குடியேறினர். இவ்வாறு குடியேறியவர்கள் பெரும்பாலும் பிரஞ்சு அரசாங்கத்தின் அதிகாரிகளாகவும், பிரஞ்சுப்படை அதிகாரிகளாகவும், மதத்தைப் பரப்புவதற்காக ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்களைச் சார்ந்தவர்களாகவும், வியாபார நிறுவனங்களின் பிரதிநிதிகளாகவும் இருந்தனர்.

பிரஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயர்களைக் காட்டிலும் தங்களுடைய மொழி, நாகரீகம், பண்பாடு ஆகியவற்றைத் தங்கள் குடியேற்ற நாட்டு மக்களிடம் பரப்புவதில் வெற்றி பெற்றனர் என்பதில் எந்தவித ஐயப்பாடுமில்லை. குடியேற்ற நாடுகளில் வாழ்ந்த மக்களும், பிரஞ்சுக்காரர்களுக்கு விசுவாசமுள்ளவர்களாக இருந்ததுடன், அவர்களுடன் ஒத்துழைத்தும் வந்தனர். பிரான்சு நாடு பிரிட்டனைப் போல குடியேற்ற நாடுகள் அடங்கிய மிகப்பெரிய பேரரசை நிறுவாவிட்டாலும், தன்னுட்டில் திருப்தியடையாத பிரஞ்சுக்காரர்களுக்கு வெளிநாடுகளில் வாழும் வசதியைச் செய்து கொடுக்கும் வகையில் வெற்றி பெற்றது. தனது குடியேற்ற நாடுகளில் வாழ்ந்த பிரஞ்சு மக்களுக்காக, வெளிநாடுகளில் பிரஞ்சுப் பள்ளிகளை பிரஞ்சு அரசாங்கம் நிறுவியது. அம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அவர்களுக்குத் தேவையான பொருள்களையும் எளிதில் கிடைக்கும்படி வழி செய்தது. இதனால் வெளிநாடுகளில் வாழ்ந்த பிரஞ்சுக்காரர்கள் ஐரோப்பியக் கட்டுக்கோப்புக்குள் வாழ்ந்தனர்; பிரஞ்சு நாகரிகத்தையும் பேணிக் காத்தனர். பிரஞ்சுக் குடியேற்ற நாடுகளில் இருந்த ஆளுநர்கள்

(Governors), பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் வெள்ளையர்களுக்கும், கறுப்பர்களுக்குமிடையே ஒரு பெரிய இடைவெளியை ஏற்படுத்தி ஆட்சி புரிந்ததைப் போலல்லாமல், திறமையான முறைகளைப் பின்பற்றி ஆட்சி புரிந்தனர். எந்த ஒரு பிரெஞ்சுக் குடியேற்ற நாடும் சுய ஆட்சிப் பகுதியாக விளங்கவில்லை. சில பிரெஞ்சுப் பகுதிகள் பிரான்சின் ஒரு பகுதியாகவே கருதப்பட்டன. பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளில் வாழ்ந்த மக்கள் பாரிஸ் நகரத்தில் இருந்த மத்திய பாராளுமன்றத்திற்கான மேல்சபை உறுப்பினர்களையும் (Senators), கீழ்ச்சபை உறுப்பினர்களையும் (Deputies) தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றிருந்தனர். செனட்டர்களையும், பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுத்து அனுப்புவதற்கு உரிமை பெற்று இருந்த பிரெஞ்சுப் பகுதிகள் அமெரிக்காவில் இருந்த குவாடுலூப் (Guadeloupe), மார்ட்டினிக் (Martinique), கயானா (Guiana) ஆகிய பகுதிகளும், இந்தியாவில் பிரெஞ்சு வியாபார ஸ்தலங்களாக விளங்கிய சந்திரநாகூர், பாண்டிச்சேரி, காரைக்கால், ஏனம், மாஹி என்பனவும், ரீயூனியன் தீவுகளும், வடக்கு அல்ஜீரியா என்பனவும் ஆகும். எல்லாப் பிரெஞ்சுப் பகுதிகளிலும், பாரிஸ் நகரத்தில் இருந்த ஜனநாயக அரசு டுனிஷியா, மொராக்கோ, அன்னம், கம்போடியா, ஆகிய பகுதிகளில் பிரெஞ்சு ஆட்சியைச் செயல்படுத்திய அந்நாடுகளின் அரசர்களைப்போல மறைமுகமாகவோ, மேற்கு ஆப்பிரிக்கா, பூமத்தியரேகைப் பகுதியிலுள்ள ஆப்பிரிக்கா, மடகாஸ்கர் ஆகிய பகுதிகளில் பிரஞ்சு ஆட்சியைச் செயல்படுத்திய பிரெஞ்சு ஆளுநர் ஜெனரல்களைப்போல நேர்முகமாகவோ ஆட்சிபுரிந்தது.

வெளிநாடுகளில் அமைந்திருந்த பேரரசின் காரணமாகப் பிரான்சு நாட்டின் தொழில்துறையிலும் குறிப்பிடத்தக்க நன்மைகள் ஏற்பட்டன. பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகள் தாய் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் மீது சுங்கவரி வசூலிக்கும் உரிமையைப் பெற்றிருக்கவில்லை. அதே சமயத்தில் இந்நாடுகள் பிரெஞ்சு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்கும், பிரெஞ்சு நாட்டின் வியாபாரம், முதலீடு ஆகியவற்றிற்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டன.

இதன் பயனாக பிரான்சு நாட்டிற்கும், அதன் குடியேற்ற நாடுகளுக்குமிடையே நடைபெற்ற வாணிபம் ஆண்டொன்றுக்கு 1879-ல் 35 கோடி பிராங்குகளாக இருந்தது. இது1913-ல்

200 கோடி பிராங்குகளாக உயர்ந்தது. 1913–ல் பிரான்சு நாட்டின் மூலதனமுடக்கம் தன்னுடைய குடியேற்ற நாடுகளில் ஏறத்தாழ நாற்பது இலட்சம் பிராங்குகளாகும். மேலும் பிரான்சு குடியேற்ற நாடுகளை அமைப்பதற்கு இராணுவம், போலீஸ், சிவில்நிர்வாகம், கப்பல் போக்குவரத்து ஆகியவற்றிற்கான செலவைவிட அதிக அளவில் ஒருநிலையான பொருளாதார வருமானம் பிரான்சுக்கு வந்து கொண்டிருந்தது. குடியேற்ற நாடுகள் முழுவதும் வளர்ச்சியடையும் பொழுது, பொருளாதார வருமானமும், கொள்கைக்கான ஆதரவுகளும் மிக அதிக அளவில் இருக்கும் என்பதற்கான நம்பிக்கைகள் வளர்ச்சி யடைந்தன.

மூன்றும் பிரெஞ்சுக் குடியரசின் எகாதிபத்தியக் கொள்கை ஜூல்ஸ் பெர்ரி என்பவரது செய்கையாலும், பிரெஞ்சுப் பாராளுமன்றத்தில் மிதவாதிகளிடமிருந்து அவருக்குக் கிடைத்த ஒத்துழைப்பாலும் வலுப் பெற்றது, இதற்கு ஓரளவு மன்னராட்சிக் கொள்கையில் நம்பிக்கையுடையவர்களும், பழைமையை விரும்பும் கத்தோலிக்கர்களும் காரணமாவார்கள். மிதவாதிகள் கண்மூடித்தனமாகத் தங்கள் தலைவருக்கு ஆதரவு கொடுத்ததுடன், ஜனநாயகவாதிகளாகவும் விளங்கினர். இவர்கள் அனைவரும் திருச்சபை ஆட்சிக்கு எதிராக இருந்தனர். எனவே இவர்களில் எவரும் தாங்கள் மன்னராட்சிக் கொள்கையில் நம்பிக்கையுடைய கத்தோலிக்கர்களுடன் இருக்கும்பொழுது அன்னியர்களாக எண்ணிக் கொள்ளவில்லை.

திருச்சபை ஆட்சிக்கு எதிர் இயக்கம்

மிதவாதிகள் திருச்சபையாட்சியின் கொடுமைகளை நீக்க வேண்டுமென்பதற்காகத் தங்களுடைய கருத்து வேறுபாடுகளை மறந்து, தீவிர ஜனநாயகவாதிகளுடன் ஒத்துழைத்து, மதகுருமார்களை எதிர்த்து, அவர்களுக்கு இருந்த செல்வாக்கினையும் அழித்தனர். ஏகாதிபத்தியக் கொள்கையைப் பின்பற்றி பிரான்சின் தீவிர ஜனநாயகவாதிகளை வேற்று நாட்டவர்களாக ஆக்கிக்கொண்டு இருந்த அதே சமயத்தில், ஜூல்ஸ்பெர்ரி உள்நாட்டில் குருமார்களின் ஆட்சிக்கு எதிராக ஓர் இயக்கத்தை ஆரம்பித்தார். இந்த இயக்கத்திற்கு குருமார்களின் ஆட்சிக்கு எதிரான இயக்கம் என்பது பெயர். இவ்வியக்கத்தில் கல்வி முக்கியமான பங்கு வகித்தது.

முதலாம் நெப்போலியன் காலந்தொட்டு பிரான்சு நாட்டில் உள்ள கல்வி நிலையங்களில் கத்தோலிக்க மதச்சார்புடைய

கல்வியே போதிக்கப்பட்டு வந்தது. முதலாம் நெப்போலியன் உள்நாட்டில் கத்தோலிக்கர்களின் ஆதரவைப் பெறுவதற்காக, கத்தோலிக்க மதத்தை அரசாங்க ஆதரவு பெற்ற மதமாக பிரகடனப்படுத்தியதே இதற்கு முக்கிய காரணம் ஆகும். மூன்றாம் நெப்போலியனுடைய காலத்தில் கத்தோலிக்க மதத்தினரால் நடத்தப்பெற்ற கல்வி நிலையங்களின் எண்ணிக்கை அதிகமாயிற்று.

ஆனால் மூன்றாவது பிரெஞ்சுக் குடியரசில் கல்வியில் இரண்டுவித சீர்திருத்தங்களைப் புகுத்தவேண்டுமென பிரெஞ்சு மக்கள் விரும்பினர். அவை:

1. பிரெஞ்சு அரசாங்கத்தின் கல்வியமைப்பின் அடிப்படையில் நாடு முழுவதும் புதிய பள்ளிக்கூடங்கள் அமைக்க வேண்டும். அதன் பயனாக ஜெர்மனியில் அந்நாட்டின் கல்வி எவ்வாறு அந்நாட்டு மக்களைத் தூண்டி, பிரான்சை 1870-ல் தோற்கடித்ததோ, அதேபோல பிரெஞ்சு நாட்டுக் கல்வி அந்நாட்டு மக்களனைவரையும் தூண்டி, எதிர்காலத்தில் ஜெர்மனியுடன் ஏற்படும் போரில் ஜெர்மனியர்களைத் தோற்கடிப்பதற்குப் பயன்படும் வகையில் நாட்டு மக்களின் அறியாமையைப் போக்கி, பிரெஞ்சு மக்களைச் சிறந்த குடிமக்களாக ஆக்க வேண்டும் என பிரெஞ்சுக்காரர்கள் விரும்பினர்.

2. இரண்டாவது சீர்திருத்தம் கிளமென்ஸோவாலும், அவருடைய ஆதரவாளர்களான தீவிர ஜனநாயகவாதிகளாலும் வற்புறுத்தப்பட்டது. இச்சீர்திருத்தத்தைப் புகுத்துவதன் மூலமாக ஆரம்பக் கல்வி மன்னராட்சிக் கருத்துக்களையும், மதகுருமார்களின் கருத்துக்களையும் அழித்து, ஜனநாயகக் கருத்துக்களை இளைஞர்களின் மனத்தில் தோற்றுவிக்கும் வண்ணம் அமைய வேண்டுமென எண்ணினார்கள். மேலும் இதன் பயனாக ஜனநாயகக் கருத்துக்கள் பிரெஞ்சு இளைஞர்களின் இரத்தத்துடன் இரண்டறக் கலக்கும் என்பதுடன், ஜனநாயகத்தின் எதிர்ப்புச் சக்திகளைச் சமாளிக்கத் தேவையான சக்திகளும் வளர்ச்சியடையும் என எதிர்பார்த்தனர். ஜூல்ஸ் பெர்ரி கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் (1880-ஆம் ஆண்டு முதல்) சிறுபான்மையினர்களின் எதிர்ப்புக்கிடையே பல கல்விச் சீர்திருத்தங்களைப் பாராளுமன்றத்தில் கொண்டுவந்து அவற்றைச் சட்டங்களாக்கினார்.

இச்சட்டங்களின் பலனாகச் சில பள்ளிகளில் மாணவர்களின் வருகை கட்டாயப்படுத்தப்பட்டது. பெற்றோர்கள் தாங்கள்

விரும்பினால் தங்கள் குழந்தைகளைத் திருச்சபைப் பள்ளிகளுக்கு அனுப்பலாம். அவ்வாறு திருச்சபைப் பள்ளி (Church School) களுக்குத் தங்கள் குழந்தைகளை அனுப்புகிறவர்கள் அக்கல்விக் காகும் செலவைத் தாங்களே ஏற்கவேண்டும் என்று ஒரு ஏற்பாடு செய்யப்பட்டது. அதே சமயத்தில் புதிய அரசுப்பள்ளிகள் பல நிறுவப்பட்டன. இப்பள்ளிகளுக்கான செலவைக் குடியரசின் அரசாங்கமே ஏற்றது. வருகைப் பதிவு இத்தகைய பள்ளிகளில் கட்டாயப்படுத்தப்படவில்லை. மேலும் இத்தகைய பள்ளி களில் அரசாங்கக் கருத்துக்களை உடையவர்கள் மட்டுமே ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். இங்கு மத சம்பந்தமான கருத்துக்கள் எந்தவகையிலும் புகட்டப்படவில்லை. தீவிர கத்தோலிக்க மதபோதகர்கள் அரசாங்கத்தால் ஏற்படுத்தப் பட்ட புதிய பள்ளிகளில் கடவுள்தன்மை இல்லை என்றும், அவையனைத்தும் நாத்திகர்களின் நிலையங்கள் என்றும் சாடி வந்தனர்.

பெர்ரியும், அவரது ஆதரவாளர்களும் தீவிர கத்தோலிக்க மதபோதகர்களை அடக்குவதற்காகவும், திருச்சபைப் பள்ளி களுக்கு இன்னல்கள் பல கொடுப்பதற்காகவும் ஏற்பாடுகள் செய்தனர். அரசாங்கம் சில ஆணைகளைப் பிறப்பித்து ஏசுசபை (Society of Jesus) எனப்படும் ஜெஸுட் இயக்கத்தை (The Jesuit order) அரச விரோத சக்தி என்று கூறிக் கலைத்தது. அத்துடன் ஜெஸுட்டுகளும் பிரான்சு நாட்டிலிருந்து வெளி யேற்றப்பட்டனர். பாதிரிமார்கள் மீதும், கத்தோலிக்கப் பெண் துறவிகள் மீதும் (Nuns) சில கட்டுப்பாடுகளை அரசாங்கம் விதித்தது. அவர்களுடைய மதபோதக நிலையங்களின் மீது தடை விதிக்கப்பட்டது. இவர்களால் நடத்தப்படும் பள்ளி களின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டது. தீவிர ஜன நாயகவாதிகளின் வேண்டுகோளுக்கிணங்க, சிவில் மாஜிஸ்ட் ரேட்டுகளின் முன்னிலையில் நடைபெறும் திருமணங்கள் சட் டப்படி செல்லுபடியாகும் என்று அறிவிக்கப்பட்டது. மற்றொரு சட்டத்தின் மூலம் சிவில் நீதிமன்றங்களுக்கு விவாக ரத்து வழங்கும் உரிமையும், திருமணங்களைப் பதிவு செய்யும் உரிமையும் வழங்கப்பட்டது. கல்வித்துறைக்காகவும், திருமண முறைகளுக்காகவும் இயற்றப்பட்ட சட்டங்கள் 'லெய்க் சட்டங் கள்' [Laic Laws] என்று அழைக்கப்பட்டன. பிரான்சு நாட்டில் ஜனநாயகவாதிகள் தங்களுடைய எதிர்ப்புச் சக்திகளை நசுக்கு வதற்காகவும், ஜனநாயக இயக்கங்களின் வளர்ச்சிக்காகவும் அரசாங்கச் சட்டங்களைப் பயன்படுத்திக் கொண்டனர். ஜன நாயகவாதிகளில் வலதுசாரிகள், மதத்துக்கு எதிராக (குறிப்பாக

கத்தோலிக்க மதத்துக்கு எதிராக) எதிர்ப்புச் சக்திகளை வளர்ப்ப தற்காக இச்சட்டங்களைப் பயன்படுத்திக் கொண்டனர்.

பிரான்சு நாட்டில் வாழ்ந்த பெரும்பாலான வாக்காளர்கள் "லெய்க் சட்டங்களை" இயற்றியதற்கும், அவற்றைச் செயல் படுத்தியதற்கும் ஆதரவு அளிப்பதுபோலக் காணப்பட்டனர். ஆனால் கத்தோலிக்கப் பாதிரிமார்களும், பாமரமக்களும் (Lay-men) பிரஞ்சு நாட்டில் திருச்சபை பாதுகாக்கப்படவேண்டு மாயின், குடியரசு ஆட்சி பிரான்சிலிருந்து அகற்றப்படவேண்டு மென்றும், லெய்க் சட்டம் நீக்கப்படவேண்டுமென்றும் கருதி னார்கள். இந்தக் கருத்தானது, ஜனநாயகவாதிகளை ஒடுக்கு வதற்கு அவர்கள் மேற்கொண்ட முயற்சியை இரு மடங்காக் கியது. எனவே 1871-ல் பாரிஸ் கம்யூன் அமைக்கப்பட்ட பொழுது புரட்சிவாதிகளாகத் திகழ்ந்த சோஷியலிஸ்டுகள் திரும் பவும் செயல்படத் தொடங்கினர். தொழில் வளர்ச்சியின் பயனாக நகரங்களில் வாழ்ந்த தொழிலாளர்கள் தங்கள் இன்னல்களுக்கு ஜனநாயக அரசியல்வாதிகளே காரணம் எனக் குற்றம் சாட்டி னார்கள். ஆனால் சோஷியலிஸ புரட்சிவாதிகளுக்கும், நகரத் தொழிலாளர்களுக்கு மிடையே எவ்வித உடன்பாடும் ஏற்பட வில்லை. எனினும் இருபிரிவினர்களும் பொதுவாக ஜனநாயக வாதிகளின் அரசியலில் மனநிறைவற்றிருந்தனர். இது ஜன நாயகவாதிகளுக்கு அச்சத்தை ஏற்படுத்தியது. சோஷியலிஸ்டு களும், மத போதகர்களும் சேர்ந்து நாடு முழுவதும் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்து, ஒரு சர்வாதிகார ஆட்சியை அல்லது ஒரு முடியாட்சியை ஏற்படுத்த வாய்ப்பு ஏற்பட்டது. குடியரசுக்கு ஏற்பட்ட இவ் வபாயமானது ஜார்ஜ் பௌலங்கர் (George Boulanger) என்பவரின் தலைமையில் அரசியலில் வெளிப்பட்டது.

ஜார்ஜ் பௌலங்கர் என்பவர் ஒரு படைத்தளபதியாவார். இவர் பிரான்சுக்கும், ஜெர்மனிக்கும் நடைபெற்ற போரிலும், டூனிஸில் நடைபெற்ற பிரஞ்சுப் படையெடுப்பிலும் பங்கு பெற்றவர். இவர் தளபதியாக இருந்தபொழுது, சகஇராணுவ அதிகாரிகளைக் காட்டிலும் சிறந்து விளங்கினார். இவர் முடியாட் சியின் விரோதியாகவும், ஜனநாயகவாதிகளின் நண்பராகவும் விளங்கினார். தீவிர ஜனநாயகவாதிகளின் கருத்துக்களை இவர் பரப்பினார். தீவிர சமுதாயச் சீர்திருத்தங்களுக்காகச் சிறப்பாகப் பாடுபட்டார். எனவே இவர் கிளமென்ஸோ என்பவரின் பரிந் துரையின் பேரில் 1886-ல் அமைச்சரவையில் இராணுவ அமைச் சரானார். பின்னர் தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தித்

தன் சொந்தக் கருத்துக்களைச் செயல்படுத்த ஆரம்பித்தார். ஜெர்மனிக்கு எதிராக அந்நாட்டின்மீது பழிதீர்த்துக் கொள்ளும் வகையில் ஒரு போரைத் தொடங்கவேண்டுமெனப் பேசினர். தானே நேரடியாக, பிரஞ்சு இராணுவத்தின் நடவடிக்கைகளில் கலந்துகொண்டார். இவரது இச்செய்கைகள் கிளெமென் ஸோவையும், அவரது ஆதரவாளர்களையும் தூண்டியது. நெப்போலியன் எவ்வாறு பிரெஞ்சு மன்னனுனன் என்பதை நினைவுகூர்ந்து, தளபதி பௌலங்கரை 1887-ல் கட்டாயப் படுத்தி இராஜினமா செய்யவைத்தனர். இவரை இராணுவத்தை விட்டும் வெளியேற்றினர்.

படிப்படியாக, பிரான்சு நாட்டில் ஜனநாயகவாதிகளுக்கு எதிராகவும், பௌலங்கருக்கு ஆதரவாகவும் ஓர் இயக்கம் தோன்றி வலிமையடைந்தது. ஜூல்ஸ் கிரீவி (Jules Grevy) என்பவர் 1886-ல் இரண்டாம் முறையாக ஏழாண்டுகளுக்கு ஜனதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் முதல் முறை ஜனதிபதியாக இருந்தபொழுது பொருளாதாரத் துறையில் பல தவறுகளைச் செய்தார். எனவே இரண்டாம் முறை இவர் ஜனதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதால் அஞ்சிய ஜனநாயக வாதிகளின் கட்டாயத்தின்பேரில், 1887ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இவர் இராஜினமா செய்தார். இவருக்குப் பதிலாக சாதி கார்நோ (Sadi Carnot) என்பவர் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் தன் திறமையாலும், இவரது முன்னோர்களின் சிறப்பினலும் புகழ்பெற்றவராவார். தளபதி பௌலங்கர், பிரதிநிதிகள் சபைக்குத் தேர்தல்கள் நடக்கும் பொழுதெல்லாம் தேர்தல்களில் போட்டியிட்டு ஒவ்வொரு மாவட்டமாகத் தனக்கு ஆதரவைத் தேடிக்கொண்டார். இவ் வாதரவு இவர் 1889-ல் பாரிஸில் கூட்டிய கூட்டத்தின் வாயிலாக வெளிப்பட்டது. பௌலங்கருடைய ஆதரவாளர்கள் இவர் சரியான முறையில் செயல்பட்டிருந்தால் ஒரு சர்வாதிகாரியாக வந்திருக்க முடியுமென்றும், அவ்வாய்ப்பை இவர் தவறவிட்டு விட்டார் என்றும் நினைத்தனர். இதற்கிடையில் ஜனநாயக அரசு, அரசாங்கத்திற்கு எதிராகச் சதிசெய்கின்றார் என்று இவர் மீது குற்றம் சுமத்தி இவரைக் கைதுசெய்ய உத்தரவிட்டது. உடனே பௌலங்கர் பிரான்சு நாட்டின் எல்லையைக் கடந்து பெல்ஜியம் நாட்டிற்கு ஓடிவிட்டார். பிரெஞ்சு அரசாங்கம் இவரைத் தண்டித்து, இவர் தப்பி ஓடியதைக் கடிந்துரைத்தது. இந் நிகழ்ச்சிக்குப் பிறகு நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் பௌலங்கருடைய ஆதரவாளர்கள் நலிந்து செல்வாக்கு இழந்தனர். பௌலங்கர் 1891-ல் பிரசல்ஸ் (Brussels) என்ற

இடத்தில் தற்கொலை செய்துகொண்ட பிறகு அவரது கருத்துக் களும் மறைந்தன. பௌலங்கர் இயக்கத்தினுல் சில விளைவு கள் ஏற்பட்டன. அவையாவன :

1. தனக்கு எதிரான சக்திகளை முறியடித்து மக்களைத் தன்பக்கம் கவர்வதற்காக ஜனநாயக அரசாங்கம் இராணுவம், வெளிநாட்டுக் கொள்கை ஆகிய துறைகளின் கொள்கைகளில் சில மாற்றங்களைச் செய்தது.

அதன்படி 1889-ல் இராணுவத்தில் கட்டாய சேவை ஐந்து ஆண்டுகள் என்ற அடிப்படையில் பிரான்சு இரஷ்யாவுடன் ஒரு நட்பு உடன்படிக்கையைச் (1891 முதல் 1894 வரை) செய்து கொண்டது. இதனைக்கண்டு பொருமையடைந்த நாடுகள் மூன்றும் பிரஞ்சுக் குடியரசு வெளிநாட்டுக் கொள்கையில் பகைமை உணர்ச்சியுடன் நடந்து கொள்கிறது எனக் குற்றம் சாட்டின.

2. இரண்டாவதாக பௌலங்கருடைய இயக்கம் முடியாட்சியை மீண்டும் ஏற்படுத்துவதில் ஓரளவு மக்களின் ஒத்துழைப்பைப்பெற்றது. ஆனுல் அவ் ஒத்துழைப்பைப் பயன்படுத்தி ஒரு முடியாட்சியை அல்லது ஒரு சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்த அது தவறிவிட்டது. பௌலங்கர் தற்கொலை செய்துகொண்டதுடன், முடியாட்சிக்கான ஆதரவும் நலியத் தொடங்கியது. மேலும் மன்னராட்சிக் கொள்கையில் நம்பிக்கையுடைய இராணுவ அதிகாரிகளாக இருந்த பலர் தங்கள் பதவியில் இருந்து விலகினர். இதேபோன்று குடியரசுக்கு எதிராக இருந்த கத்தோலிக்கர்களிடையே பிளவு ஏற்பட்டது. அதன் பயனுக 1892-ல் போப்பாண்டவரான பதின்மூன்றும் லியோ (Pope Leo XIII) என்பவர் பிரஞ்சுக் கத்தோலிக்கர்கள் தங்களை ஜனநாயகவாதிகளுடன் ஐக்கியப்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும், அவர்களின் அரசாங்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

இதனுல் பிரஞ்சுக் கத்தோலிக்கர்களிடையே பிளவு ஏற்பட்டது. போப்பாண்டவரின் வேண்டுகோள் பல கத்தோலிக்கர்களிடையே மாற்றத்தை ஏற்படுத்தியது. இவ்வாறு மாறியவர்களில் மிகக் குறிப்பிடத்தக்கவர் கீழ்ச்சபையான பிரதிநிதிகள் சபையில் சிறந்த பேச்சாளராக விளங்கிய கவுண்டு ஆல்பர்ட்-டி-முன் (Count Albert-de-Mun) என்பவராவார். இவர் முடியாட்சிதான் பிரான்சுக்குத் தேவை என்றும், குடியாட்

சியை பிரான்சில் இருந்து விரட்டியடிக்க வேண்டும் என்றும் பேசி வந்தார்.

3. இறுதியாக பௌலங்கரின் இயக்கத்தின் காரணமாகத் தீவிர ஜனநாயகவாதிகளுக்கு எதிராகவும், முடியாட்சிக்கு எதிராகவும் தற்காலிகமாக ஒரு எதிர்ப்புச் சக்தி தோன்றியது. ஜனநாயகம் ஆபத்துக் கட்டத்தில் இருந்தபொழுது தீவிர ஜனநாயகவாதிகள் மிகுந்தபலம் பெற்றிருந்தனர். ஆனால் குடியரசு ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்ட பிறகு தீவிரவாதிகள், குறிப்பாக கிளமென்ஸோவின் ஆதரவாளர்களுக்கான ஆதரவு பெரும்பாலும் குறைந்து விட்டது. உள்நாட்டில் சீர்திருத்தங்களையும் அமைதியையும் மிதவாதிகள்தான் ஏற்படுத்த முடியும்; தீவிரவாதிகளால் ஏற்படுத்த முடியாது என்ற உணர்வு பிரஞ்சு மக்களிடையே பரவியது. இச்சமயத்தில் மார்க்ஸிச சோஷியலிஸம் பிரான்சில் பரவத் தொடங்கியது. இது தீவிரவாதிகளுக்கு மற்றொரு எதிரியாக அமைந்தது. தீவிரவாதிகளாக இருந்த சில தொழிலாளர்கள் சோஷியலிஸப் பிரிவில் சேர்ந்தனர். சில தீவிரவாதிகள் மிதவாதிகளின் பக்கம் சேர்ந்தனர். பழைமையை விரும்பியவர்கள் சோஷியலிஸத்திற்கு எதிரான இயக்கத்தில் சேர்ந்தனர்.

சோஷியலிச இயக்கம்

மார்க்ஸிஸ சோஷியலிஸம் பிரான்சு நாட்டில் தோன்றவில்லை. இருப்பினும் 1871-ல் பாரிஸ் கம்யூன் முரட்டுத்தனமாக அடிக்கப்பட்டபொழுது இதன் வளர்ச்சிக்கு ஒரு தூண்டுகோல் கிடைத்தது. விவசாயமும், நிர்வாகமும் தொடர்ந்து செல்வாக்குப் பெற்றன. பிரஞ்சுத் தொழிலாளர்களின் தனித்தன்மை, பிரஞ்சு சோஷியலிஸக் கருத்துக்களின் வளர்ச்சி ஆகியவைகளின் காரணமாகவும் பிரஞ்சு நாட்டில் மார்க்ஸிஸ சோஷியலிஸம் பரவியது. மத்திய வகுப்பைச்சார்ந்த அறிஞர்களும் தீவிரவாதிகளும் தொழிற்கூடங்கள் நிறைந்த பகுதியில் தொழிலாளர்களிடையே மார்க்ஸியக் கருத்துகளைப் போதித்தனர். இவ்வாறு மார்க்ஸியக் கருத்துக்களைத் தொழிலாளர்களிடையே போதித்தவர்களுள் முக்கியமானவர் ஜூல்ஸ் கூஸ்டி (Jules Guesde) என்பவராவர். இவர் பாரிஸில் எழுத்தாளராகவும், பத்திரிகையாளராகவும் இருந்தவர். பாரிஸ் கம்யூனுக்காகப்பாடுபட்டதால் இவர் நாடு கடத்தப்பட்டார். நாடு திரும்பிய பின்னர் 1876-ல் தொழிலாளர் கட்சி (Labour Party) என்ற ஒரு கட்சியை ஏற்படுத்தினர். இக்கட்சி நான்கு ஆண்டுகள் கழித்து மார்க்ஸிஸ

மேடைகளில் தோன்றியது. இதன் பயனாக 1880 முதல் 1889 வரை பிரான்சில் பல சோஷியலிஸ இயக்கங்கள் தோன்றின. ஆனால் தனது தனித்தன்மையைப் பயன்படுத்தி சோஷியலிஸ இயக்கங்கள் அனைத்தையும் ஒன்றுபடுத்த ஜூல்ஸ் கூஸ்டி தவறிவிட்டார். எனவே 1893 வரை சோஷலிஸ இயக்கம் குறிப்பிடத் தக்க எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்படுத்தவில்லை.

இந்நிலையில் தௌலோஸ் (Toulouse) பல்கலைக்கழகத்தில் தத்துவப் பேராசிரியராக இருந்த ஜீன் ஜௌரஸ் (Jean Jaures) என்பவரும், அலெக்ஸாந்தர் மில்லிராண்டு (Alexandre Millerande), அரிஸ்டைடு பிரையாண்டு (Aristide Briand) என்ற இரு வழக்கறிஞர்களும், பல இளம் அறிஞர்களும் சோஷியலிஸ இயக்கத்தில் சேர்ந்ததன் பயனாக, கூஸ்டி (Guesde) யின் சோஷியலிஸ இயக்கம் புதிய வலிமையைப் பெற்றது. 1893-ல் பிரஞ்சுப் பாராளுமன்றத்தின் கீழ்ச்சபைக்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில் சோஷியலிஸ்டுகள் அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுபட்டு 50 இடங்களைக் கைப்பற்றினர்.

பிரஞ்சுப் பாராளுமன்றம் 1890 க்குப் பிறகு தொழிலாளர் சட்டங்கள் பலவற்றை இயற்றியது. ஆனால் இச்சட்டங்கள் மார்க்ஸிஸ சோஷியலிஸ்டுகளின் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்யவில்லை. இதேபோல கவுண்ட்-ஆல்பர்ட்-டி-முன் என்பவரின் வேண்டுகோள்களையும், சோஷியலிஸ கத்தோலிக்கர்களின் வேண்டுகோள்களையும் இச்சட்டங்கள் பூர்த்தி செய்யவில்லை. எனவே கத்தோலிக்கர்களும், சோஷியலிஸ்டுகளும், தீவிர ஜனநாயக வாதிகளும் பொதுப்படையாக சோஷியலிஸக் கொள்கைகளினால் கவரப்பட்டு ஒன்று சேர்ந்தனர். இவர்கள் தீவிர சோஷியலிஸ்டுகள் (Radical Socialists) என்று சொல்லப்பட்டனர். ஆங்கிலேயர்கள் இவர்களை சோஷியலிஸத் தீவிர வாதிகள் (Socialist Radicals) என்று கூறினர்.

இச்சமயத்தில் பிரஞ்சுப் பாராளுமன்றத்திலும், அமைச்சரவையிலும் மிதவாத ஜனநாயகவாதிகள் பெரும் அளவில் இருந்தனர். இவர்கள் சமுதாயச் சீர்திருத்தச் சட்டங்கள் சிலவற்றை இயற்றினர். இச்சட்டங்களுள் மூன்று சட்டங்கள் குறிப்பிடத் தக்கவை. முதலாவது சட்டம், 1892-ஆம் ஆண்டின் சிறந்த சட்டம் (The great act of 1892) எனப்படும். இச்சட்டம் பெண் தொழிலாளர்களின் நிலையை ஒழுங்குபடுத்தியது. பதின்மூன்று வயதுக்குக் குறைந்த சிறுவர்களிடமிருந்து வேலை வாங்குவதைத் தடை செய்தது. எல்லாத் தொழிலாளர்களும் ஒரு

நாளைக்கு உயர்ந்தபட்சம் பத்துமணி நேரம்தான் வேலை செய்ய வேண்டுமென்று கூறியது. சுரங்கத்தில் வேலை செய்பவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தது. இரண்டாவது சட்டம், 1893ஆம் ஆண்டுச் சட்டம் எனப்படும். இது தொழிலாளர்களுக்கும், தொழிலாளர்களின் குடும்பத்தினர்களுக்கும் இலவச மருத்துவ வசதிக்கு உத்திரவாதமளித்தது. மூன்ருவது சட்டம், 1898 ஆம் ஆண்டுச் சட்டம் ஆகும். இது தொழிலாளர்களுக்குத் தொழிற்சாலையில் ஏற்படும் தீங்குகளின் நஷ்ட ஈட்டிற்கு உத்திரவாதமளித்தது.

சமுதாயச் சீர்திருத்தங்கள் தோன்றிய காலம் பிரஞ்சு வரலாற்றில் நல்லுணர்ச்சிக் காலம் (Era of good feelings) எனப் பெயர்பெறும். இக்காலம் பௌலங்கருடைய இயக்கத்திற்குப் பிறகு தோன்றியது. இதனை டிரீஃபஸ் செய்கைகள் (Dreyfus Affairs) வளர்ச்சிக்காலம் என்றும் கூறுவர். இக்காலத்தில் எட்வர்டு ட்ருமண்ட் (Edovard Drumont) என்பவர், யூதர் (Jews) களுக்கும், அவர் சமுதாய அரசியல் வாழ்க்கையில் அடைந்திருந்த செல்வாக்கிற்கும் எதிராக பாரிஸில் 1892–ல் லா லைப்ரா பரோல் (La Libra Parole) என்ற ஒரு பத்திரிகையைத் தொடங்கினர். இப் பத்திரிகையின் வாயிலாகத் தகாத முறையில் பிரபலமானர். இவருடைய நோக்கம் யூதர்களுக்கு எதிராக பிரஞ்சு நாட்டை ஒன்றுபடுத்துவதே. பிரெஞ்சுத் தொழிலாளர்களை உண்மையில் கொடுமைப்படுத்துபவர்கள் யூதர்களே; இவர்களே தொழிலாளர்களின் விரோதிகள்; இவர்கள்தான் பிரான்சு நாட்டில் தொழிற்சாலை முதலாளிகளாக இருக்கின்றனர்; பிரெஞ்சு அரசியலிலும் இவர்கள் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றனர் என்று தொழிலாளர்களிடையே பிரச்சாரம் செய்துகொண்டு வந்தார். ஜனநாயகவாதிகளின் மதப் பற்றற்ற போக்கிற்குக் காரணம் யூத அறிஞர்களும், அரசியல்வாதிகளும், ஜனநாயக வாதிகளின்மீது பெற்றிருந்த செல்வாக்கே என்று மதபோதகர்கள் குற்றம் சுமத்தினர். எல்லாவற்றிற்கும் மேலாக யூதர்கள் பிரெஞ்சு அரசாங்கத்திலும் இராணுவத்திலும் செல்வாக்குப் பெற்றுள்ள வரையில் பிரான்சு ஜெர்மனியிடம் இழந்த அல்சேஸ், லொரைன் (Alsace, Lorraine) பகுதிகளை மீண்டும் அந்நாட்டுடன் போரிட்டுத் திரும்பப் பெறமுடியாது என்று பிரெஞ்சு மக்களின் நாட்டுப் பற்றைத் தூண்டும் வகையில் கூறினர். அத்துடன் பிரான்சு நாட்டின் இரகசியங்களை யூதர்கள் ஜெர்மனியில் உள்ள அவர்களின் உறவினர்களுக்கு ஒருவரும் அறியா வண்ணம் தெரியப் படுத்தி விடுகின்றனர் என்றும் குற்றம் சுமத்தினர்.

ஜனநாயகவாதிகளுக்கு எதிராக மிகவிரைவில் தேசியக் கட்சி (Nationalist Party) வளர்ச்சியடைந்தது. இக்கட்சி பௌலங்கருடைய கொள்கைகளைச் சார்ந்து செயல்பட்டது. 1894ல் குடியரசு ஆட்சிக்கு எதிராக மக்கள் புரட்சி செய்யக் காரணமாக இரண்டு முக்கிய நிகழ்ச்சிகள் அமைந்தன. முதலாவதாக, பிரஞ்சு ஜனநாயக அரசாங்கத்தால் வட அமெரிக்காவுக்கும், தென்அமெரிக்காவுக்கும் இடையே உள்ள பனாமா என்ற குறுகிய பகுதியில் ஒரு கால்வாய் வெட்டுவதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழு செய்த பொருளாதார ஊழல் அப்பொழுது வெளிப்படத் தொடங்கியது. இக்குழுவில் பல யூத செல்வந்தர்களும், பாராளுமன்ற அங்கத்தினர்களும் இருந்தனர். இரண்டாவதாக, ஆல்ஃபிரட் டிரீஃபஸ் (Alfred Dreyfus) என்ற யூதர் பிரஞ்சு இராணுவத்தில் ஓர் அதிகாரியாக இருந்தனர். இவர் பிரஞ்சு இராணுவ இரகசியங்களை ஜெர்மனியின் அரசாங்க ஏஜெண்டுகளுக்குப் பணம் வாங்கிக் கொண்டு கூறிவிட்டார் என்று இராணுவ நீதிமன்றம் இவர்மீது குற்றம் சுமத்தியது. அத்துடன் இவரது பதவியைக் குறைத்து பேய்த் தீவில் (Devils islands) குற்றவாளியாக வாழ்நாள் முழுவதும் இருக்கவேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கியது.

இச்சமயத்தில் டுருமண்ட்டும் (Drumont), அவரைப் போன்றவர்களும் யூதர்கள்மீதும் ஜனநாயக அரசியல்வாதிகள் மீதும் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களை எல்லோரும் எளிதில் நம்பும் வகையில் சுமத்தினர். தேசியக் கட்சியைச் சார்ந்தவர்களும், மூன்றும் குடியரசின்பால் மாற்றுந்தாய் மனப்பான்மை கொண்டிருந்தவர்களும், நாட்டுப்பற்று மிக்க ஜனநாயகவாதிகளும், பல தொழிலாளர்களும் இக்குற்றச்சாட்டுக்களை நம்பினர். எனவே இவர்கள் யூதர்களையும், ஜனநாயகவாதிகளின் அரசியலையும் தீர்த்துக்கட்ட வேண்டுமென்று கருதினர். இதற்கிடையில் ஜனநாயகவாதிகளுக்குச் சோதனை மிகுந்த ஆண்டான 1874-ல் குடியரசுத் தலைவராக இருந்த சாதி கார்நோ (Sadi Carnot) என்பவர் அரசாங்கத்தில் நம்பிக்கையற்றவர் ஒருவரால் கொலை செய்யப்பட்டார். இந்நிகழ்ச்சி பிரான்சு நாட்டில் குடியரசு தன் முடிவை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியது.

உண்மையான ஜனநாயகவாதிகளால் பனாமா ஊழல்களுக்கு எந்தவித சமாதானமும் கூற இயலாததால், வருத்தத்துடன் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. இதற்கிடையில் டிரீஃபஸ் (Dreyfus) வழக்கில் சில புதிய தகவல்கள்

கிடைத்தன. பிரஞ்சு இராணுவத்தில் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கும் (Espionage Section) பகுதியில் தலைவராகப் பணி யாற்றிய கர்னல் பிக்குவார்ட் (Colonel Picquart) என்பவர் கவனமாகப் புலனாய்வு செய்து, இராணுவ நீதிமன்றம் தவறு செய்திருக்கிறது என்று தான் நம்புவதாக 1897-ல் அறிவித்தார். மேலும் பிரஞ்சு இராணுவ இரகசியங்களை ஜெர்மனிக்கு விற்றவர் டிரீஃபஸ் அல்லர் என்றும், அதனைச் செய்தவர் மேஜர் ஈஸ்தர்ஹேஸி (Major Esterhazy) என்றும் அறிவித்த துடன், இவ்விவகாரத்தை மீண்டும் விசாரணை செய்யவேண்டு மென்றும் அறிவித்தார். உடனே தீவிர ஜனநாயகவாதிகள் பிக்குவார்ட்டுக்கு ஆதரவு தெரிவித்து மீண்டும் விசாரணை செய்ய வேண்டுமென வற்புறுத்தினர். தங்களுடைய புகழும், பெருமை யும் பிரஞ்சு இராணுவத்தின் புகழுடன் மடிந்துவிடும் என்று இராணுவ உயர் அதிகாரிகள் உணர்ந்து, இராணுவ நீதிமன்றத் தினுடைய தீர்ப்பை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மறுத்து விட்டனர். அத்துடன் அவர்களில் சிலர் உண்மைக்குப் புறம்பான தஸ்தாவேஜுகளை டிரீஃபஸ்ஸுக்கு எதிராகத் தயாரித்தனர். பிக்குவார்ட்டையும் இதன்மூலம் குற்றவாளி யாக்க முயன்றனர்.

இவை இவ்வாறு இருக்கையில் புதிய இராணுவ நீதிபதி தஸ்தாவேஜுகளை ஆதாரமாகக் கொண்டு ஈஸ்தர் ஹேஸியையும், பிக்குவார்ட்டையும் தண்டித்தார். ஈஸ்தர் ஹேஸி தண்டனைக்குள்ளாக்கப்பட்டார். பிக்குவார்ட் இராணுவ இரகசியங்களைப் பாதுகாக்கத் தெரியாதவர் என்று அறிவிக்கப் பட்டார். இதனை வைத்துக் கொண்டு இமைல் ஸோலா (Emile Zola) என்ற நாவலாசிரியர் பிக்குவார்ட், டிரீஃபஸ் ஆகியோர் களுக்கு ஆதரவாக ஒரு பட்டியல் தயார் செய்து அதனை ஜனநாயகவாதிகளின் பத்திரிகைகள் வாயிலாக வெளியிட்டார். போலி தஸ்தாவேஜுகளைத் தயாரித்தவர்களின் பெயர்கள், தயாரித்த முறை, அதனைத் தயாரிப்பதற்கு உதவியாக இருந்த இராணுவ அதிகாரிகளின் பெயர்கள் ஆகியவை இப்பட்டியலில் அடங்கியிருந்தன. இதனால் ஸோலா தண்டனைக்குள்ளானர். உரியகாலத்தில் ஸோலா தண்டனைக்குள்ளாக்கப்பட்டாலும் இவர் வெளியிட்ட பட்டியல் டிரீஃபஸ்ஸின் ஆதரவாளர்களை அவர்களுடைய எதிரிகளுக்கு எதிராகத் தூண்டி, அதிக சக்தி யைக் கொடுத்தது. இதனால் டிரீஃபஸ்ஸின் ஆதரவாளர்களுக் குச் சாதகமாகக் குழம்பியிருந்த மன்னராட்சிக் கொள்கையில் நம்பிக்கையுடையவர்களும், குருமார்களும், தீவிர தேசியவாதி களும் குடியரசு அரசாங்கத்திற்கு ஆதரவு காட்டி மக்களாட்சி

யைக் காப்பாற்றுவதற்கு முற்பட்டனர். இப்பொழுது பிரஞ்சுக் குடியரசில் ஜனநாயகவாதிகளின் இருபிரிவினரான மிதவாதிகள் தீவிரவாதிகள் ஆகியோரும், சோஷியலிஸ்டுகளும் இருந்தனர். பாராளுமன்றத்திலும் பல்வேறு கருத்துடைய டிரீஃபஸ்ஸின் ஆதாரவாளர்கள் எல்லாம் அரசியலில் ஓர் உடன்பாடு செய்து கொண்டனர். இது 'பிளாக்' எனப்பட்டது. இதன்படி தங்களுக்குள் உள்ள வேற்றுமைகளை மறந்து, ஒன்றாக இணைந்து பாராளுமன்றத்தில் தங்களுக்கு உள்ள பெருபான்மையைப் பயன்படுத்திக் கொண்டு குடியரசைக் காப்பாற்ற ஒத்துக் கொண்டனர். ஆனால் இவர்களின் முயற்சிக்கு அவ்வளவு முக்கியத்துவம் காணப்படவில்லை.

இதன் பின்னர் உண்மைக்குப் புறம்பான தஸ்தாவேஜு களைத் தயாரித்த ஓர் இராணுவ அதிகாரி தற்கொலை செய்து கொண்டார். ஈஸ்தர்ஹேஸி 1898-ல் பிரான்சு நாட்டினின்று ஓடி விட்டார். பிளாக் என்ற உடன்பாட்டின்படி ஒன்று சேர்ந்தவர் கள் 1899-ல் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்துடன் எமிலி லௌபெட் (Emili Loubet) என்பவரைக் குடியரசுத் தலை வராகத் தேர்ந்தெடுத்தனர். இவருடன் வால்டெக் ரூஸோ (Waldeck Rousseau) என்பவரைக் குடியரசு அமைச்சரவையின் தலைவராகத் (பிரதம அமைச்சராக) தேர்ந்தெடுத்தனர். இந்த ஆண்டில் குடியரசுக்கு எதிராகச் சதி செய்ததாகக் கூறி பால் டெரௌலிடே (Paul Derovlede) என்ற புலவர் உட்பட டிரீஃபஸ்ஸின் எதிரிகள் பலர் தண்டிக்கப்பட்டனர். இத்துடன் சிலர் கடத்தப்பட்டனர். பிரெஞ்சு உயர்நீதி மன்றம் டிரீஃபஸ் ஸின் வழக்கை மீண்டும் விசாரணை செய்து நீதி வழங்கவேண்டு மென இராணுவத்திற்கு உத்திரவிட்டது. இவ்வுத்திரவின்படி தீர்ப்பு வழங்கிய இராணுவ நீதிபதி, டிரீஃபஸ் குற்றமுடையவர் தான் என்று கூறி, அப்பொழுது பிரான்சில்இருந்த சூழ்நிலையினை அனுசரித்து, அவருக்கு மன்னிப்பு அளிக்கலாம் என்று பரிந் துரைத்துத் தீர்ப்பு வழங்கினார். இந்தத் தீர்ப்பிற்கு அதிக முக்கி யத்துவம் கொடுத்து குடியரசுத் தலைவர் லௌபெட் டிரீஃ பஸ்ஸை மீண்டும் இராணுவ அதிகாரியாக நியமித்தார். இவருடன் கர்னல் பிக்குவார்ட்டும் திருப்பி அழைக்கப்பட்டு மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டார். இந்நிகழ்ச்சிகளுக்கு முக்கிய காரணமாக இருந்த ஸோலா 1920-ல் உயிர்நீத்தார். இவரது உடம்பு அரச மரியாதையுடன் பேந்தியான் (Pantheon) என்ற இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

இவ்வாறு மூன்றாம் பிரெஞ்சுக் குடியரசு தன்னுடைய ஒவ்வொரு முயற்சியிலும் பல இன்னல்களுக்கிடையே வெற்றி

பெற்றுத் தன்னுடைய எதிர் சக்திகளை முறியடித்து இருபதாம் நூற்றுண்டில் வெற்றிகரமாகக் காலடி வைத்தது. இக்குடியரசு பதினெட்டாம் நூற்றுண்டு முதற்கொண்டு பிரான்சு நாட்டில் ஆட்சி புரிந்த எல்லா ஆட்சியையும் விட அதிக காலம் ஆட்சி புரிந்து தொடர்ந்து ஆட்சியில் இருந்தது. இத்துடன் தொடர்ந்து தன்னுடைய வெளிநாட்டுக் கொள்கைகளிலும், குடியேற்ற நாட்டியக்கங்களிலும் வெற்றி பெற்றது. உள்நாட்டிலும் கணிச மான அளவு பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தியது. இக் குடியரசு வலிமை பெறுவதற்காகவும், அதிக ஆதரவு பெறுவதற் காகவும் தொடர்ந்து பாடுபட்டது.

இந்த நிலையில்கூட பிரான்சில் அரசியலை அடிப்படையாகக் கொண்டு மக்களிடையே அல்லது கட்சிகளிடையே எவ்வித உடன்பாடுகளும் ஏற்படவில்லை. (இக்காலத்தில் பிரிட்டனிலும் இதேநிலை நிலவியது). பிரஞ்சுக் குடியரசு தன் வெற்றிகளினுலும், தேர்தல்களில் கிடைத்த ஆதரவுகளினுலும் தொடர்ந்து நிலைத்திருந்தது. இவ்வாட்சியில் வலதுசாரிகள் ஒரு நிலையான அரசாங்கத்தைத் தொடர்ந்து நடத்த முயற்சி செய்தனர். இடது சாரிகள் சோஷியலிஸ நாட்டை உருவாக்குவதற்குப் பலாத்கார முறையைக் கையாள வேண்டுமெனக் கூறினர். இருபதாம் நூற்றுண்டின் முதல் பத்தாண்டுகளில் ட்ரீஃபஸ் செயல்களினுல் ஏற்பட்ட விளைவுகள் செயல்படத் துவங்கின. இச்சமயத்தில் ஜனநாயகப் பிரிவுகளை அமைத்தவர்கள் கத்தோலிக்க திருச் சபைகளுக்கு எதிராகக் கொடிய நடவடிக்கைகளை மேற்கொண் டனர். இந்நடவடிக்கைகள் வலதுசாரிகளுக்கும் இடதுசாரி களுக்குமிடையே இருந்த கருத்து வேறுபாடுகளுக்கு இடையிலே நடைபெற்றன. ஆனுல் இத்தகைய நடவடிக்கைகள் காலப் போக்கில் ஜனநாயகக் குடியரசுக்கு ஆபத்தைத் தேடித் தந்தன.

3. தாழ்நில நாடுகள்

(19 - ஆம் நூற்றுண்டில் பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பர்க்)

தாழ்நில நாடுகள்: வியன்னு மாநாட்டிற்குப் பிறகு வரலாற்றில் புகழ்பெற்ற ஆரஞ்சு வம்ச அரசரான முதலாம் வில்லியம் என்ற டச்சு அரசர் நெதர்லாந்தை ஆட்சிபுரிந்து வந்தார். பிரான் சுக்கும், ஜெர்மனிக்கும் இடையே வடகடல் கடற்கரைப் பகுதியில் அமைந்திருந்த தாழ்வான பகுதிகள் இவரது ஆளு கையின் கீழ் இருந்தன. இவரது அரசின்கீழ் இருந்த தெற்கு

மாநிலங்கள் 1830க்கும் 1839க்கும் இடைப்பட்ட காலத்தில் கிளர்ச்சி செய்தன. இப்பகுதியில் வாழும் மக்கள் சுதந்திரம் பெற்ருல் நடுநிலைமைக் கொள்கையைப் பின்பற்றுவார்கள் என்று பல நாடுகள் உத்தரவாதம் அளித்ததின் பேரில் இந்நாட்டிற்குச் சுதந்திரம் வழக்கப்பட்டது. இப்பகுதி பெல்ஜியம் எனப் பெயர் பெற்றது. சாக்ஸ் கோபர்க் (Saxe-Coburg) என்ற பகுதியில் வாழ்ந்த லியோபோல்டு (Leopoled) என்பவர் பெல்ஜியத்தின் அரசராஞர். எஞ்சியிருந்த வட மாநிலங்கள் நெதர்லாந்து என்ற பழைய பெயரிலேயே இருந்தன. லக்ஸம்பர்க்கின் பெரிய டியூக் (Grand Duke of Luxemburg) 1890 வரை இப்பகுதியின் அரசராக விளங்கினர். பெல்ஜியம், நெதர்லாந்து ஆகிய இரு அரசுகளுமே சிறிய அரசுகளாக இருந்தாலும், நிலவளமிக்க னவாக இருந்தன. இவற்றின் மக்கள் தொழில் துறையில் ஆர்வம் மிக்கவர்களாக இருந்தனர். ஆனல் பொருளாதாரத்தில் இந் நாடுகள் அவ்வளவாக முக்கியத்துவம் பெற்று விளங்கவில்லை.

பெல்ஜியம் : பத்தொன்பதாம் நூற்ருண்டில் பெல்ஜியம் நன்கு வளர்ச்சியடைந்தது. இவ்வளர்ச்சி முக்கியமாக மூன்று வகையில் வெளிப்பட்டது. முதலாவதாக, பிரிட்டனைப் போலவோ பிரான்சு நாட்டைப் போலவோ பெல்ஜியம் முழுமையான தேசிய நாடாக விளங்கவில்லை. இந்நாட்டில் ஃபிளிமிஷ், வாலூன் (Flemish, Walloon) என்ற இரண்டு வேறுபட்ட இனத்தவர்கள் ஏறத்தாழ சமஅளவு எண்ணிக்கையில் வாழ்ந்து வந்தனர். இவர்களில் ஃபிளிமிஷ் (Flemish) என்பவர்கள் வடமேற்குப் பகுதியில் வாழ்ந்தவர்கள். இவர்கள் பேசிய மொழி டச்சு (Dutch) மொழி ஆகும். இவர்களில் பெரும்பான்மையோர் வியசாயிகள். ஏறத்தாழ இவர்கள் எல்லோரும் கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றினர். வாலூன் (Walloon) என்பவர்கள் தென்கிழக்குப் பகுதியில் வசித்து வந்தனர். இவர்கள் பேசிய மொழி பிரஞ்சு (French) மொழி. இவர்கள் பிரஞ்சுப் பண்பாட்டைப் பின்பற்றினர். இவர்களில் பெரும்பாலோர் தொழிலாளிகளாகவும், வியாபாரிகளாகவும் விளங்கினர்கள். மேலே சொல்லப்பட்டது போல மொழி, இனம், தொழில், மதம் ஆகியவற்றின் அடிப்படையில் பல வேற்றுமைகள் இவ்விருபாலாரிடையே காணப்பட்டாலும், நாட்டுப்பற்று மிக்கவர்களாகவும், சுதந்திரம், ஜனநாயகம் ஆகிய கொள்கைகளுக்காக உண்மையில் பாடுபடுபவர் களாகவும் இவர்கள் விளங்கினர்கள். கல்வி, செல்வம், ஆகிய வற்றின் காரணமாகப் பத்தொன்பதாம் நூற்ருண்டின் பெரும் பகுதியில் வாலூன்கள் என்ற பிரஞ்சு இனத்தைச் சார்ந்தவர்கள்

பெல்ஜியத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். ஆனால் ஃபிளிமிஷ்கள் படிப்படியாக வளர்ச்சியடைந்து வாலூன்களின் நிலைக்குத் தங்களை உயர்த்திக் கொண்டார்கள்.

இரண்டாவதாக, பெல்ஜியம் நாட்டில் வாலூன்கள் வாழ்ந்து வந்த தென்கிழக்குப் பகுதி தொழில்மயமாகக் காட்சியளித்தது. ஆனால் அந்நாட்டின் தொழில் வளர்ச்சி ஆரம்பநிலையிலே இருந்தாலும், தொழில் துறையைப் பொறுத்த அளவில் பெல்ஜியம் இங்கிலாந்தை ஒத்திருந்தது. மற்ற ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும் பெல்ஜியம் தொழில் துறையில் முன்னணியில் இருந்தது. தொழிற்சாலைகளும், தொழில் பட்டறைகளும் அதிக அளவில் நெருக்கமாக இருந்ததால், இந்நாட்டின் மக்கள் தொகையும் அதிகமாக இருந்தது. மேலும் செல்வமிக்க நாடுகளில் ஒன்றாக பெல்ஜியம் விளங்கியது.

மூன்றாவதாக, பெல்ஜியம் நாட்டின் வளர்ச்சி அந்நாட்டின் நிலையான அரசாங்கத்தின் வாயிலாகவும், கட்டுப்பாடு நிறைந்த அரசியல் வாழ்க்கையின் வாயிலாகவும் வெளிப்பட்டது. அரசியல், தொழில், ஆகிய துறைகளில் பெல்ஜியம் பிரிட்டனுடன் நட்புறவு கொண்டிருந்தது. இத்தகைய நட்புறவு கிளர்ச்சிகளினாலோ, இராணுவத்தினாலோ மன்னராட்சித் கொள்கையில் நம்பிக்கையுடையவர்களுக்கும், ஜனநாயகவாதிகளுக்கும் ஏற்பட்ட கருத்து வேற்றுமைகளின் மோதல்களினாலோ பாதிக்கப்படவில்லை. பெல்ஜியத்தில், 1831-ல் இங்கிலாந்தில் இருந்த அரசியல் அமைப்பைப் பின்பற்றி, அரசியல் அமைப்புக்குட்பட்ட மன்னராட்சியை ஏற்படுத்தினர். இவ்வாட்சியில் அரசர் ஆட்சி செய்தாரே யொழிய, அதிகாரம் செய்யவில்லை. இவர் ஆட்சி புரிவதற்கு உயர்குடி மக்களையும், நடுத்தர வகுப்பினரையும் கொண்ட இரண்டு சபைகள் அடங்கிய பாராளுமன்றம் உதவி புரிந்தது. சட்டம் இயற்றும் அதிகாரம் இப்பாராளுமன்றத்துக்கு அளிக்கப் பட்டிருந்தது. இப் பாராளுமன்றத்திலிருந்த அமைச்சர்கள் அடங்கிய அமைச்சர்குழு, பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்திற்குக் கட்டுப்பட்டு நாட்டின் நிர்வாகத்தைக் கவனித்தது. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தை அடிப்படையாகக் கொண்டு ஐரோப்பிய நாடுகளில் அமைக்கப்பட்ட எல்லா அரசியல் அமைப்புக்களைக் காட்டிலும், பெல்ஜிய நாட்டின் அரசியல் அமைப்பு அதிக அளவில் இங்கிலாந்தின் அரசியல் அமைப்புக்கு ஒத்திருந்தது. பிரிட்டனில் காணப்பட்டது போலவே, பெல்ஜியத்திலும் இரண்டு அல்லது மூன்று அரசியல்

கட்சிகள் இருந்தன. இந்நாட்டில் அமைச்சரவைகள் பெரும் பாலும் நிலையானவையாக இருந்தன. செல்வர்களின் கையில் இருந்த அதிகாரங்கள் படிப்படியாக எல்லா மக்களிடமும் சமமாகப் பரவி, ஜனநாயக அமைப்பு ஏற்பட்டபொழுது, வாக்குரிமையும் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது. ஆனால் இவை யாவும் அரசியல் அமைப்புக்குட்பட்ட முடியாட்சி—எனற வரம்புக்கு உட்பட்டே செயல்பட்டு வந்தன.

திருச்சபைக்கும், அரசாங்கததிற்கும் இடையே நிலவிய உறவில் காணப்பட்ட வேற்றுமைகளே அரசின் உள்நாட்டுக் கொள்கைகளிலும் காணப்பட்டது. குறிப்பாகக் கல்விமுறையில் இவ் வேற்றுமை காணப்பட்டது. மக்கள் தொகைப் பெருக் கத்தின் காரணமாக நிறையப் பள்ளிகள் தேவைப்படும்பொழுது, மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கடமைப்பட்ட அரசாங்கம், நிறைய அரசுப் பள்ளிகளை நிறுவியது. இவ் வரசுப் பள்ளிகளில் சமய சம்பந்தப்பட்ட கருத்துக்களைப் போதிக்க வேண்டுமா? வேண்டாமா? என்ற கேள்வி எழுந்தது. இக்கேள்வியை அடிப்படையாகக் கொண்டு கத்தோலிக்கக் கட்சி (Catholic party) என்றும், மிதவாதக் கட்சி (Liberal party) என்றும் இரண்டு கட்சிகள் தோன்றின. இந்நிலை ஏறத்தாழ 1847-லிலேயே தோன்றியது. இவர்களில் கத்தோலிக்கக் கட்சி யினர் பள்ளிகளில் நீதிக் கருத்துக்களையும், சமயக் கருத்துக் களையும் போதிக்க வேண்டுமென்றும், அந்தப் பொறுப்பைக் கத்தோலிக்க குருமார்களிடம் விட்டுவிட வேண்டுமென்றும் விரும்பினர். ஆனால் மிதவாதக் கட்சியினர் மதச்சார்பற்ற பொதுக்கல்வியையே பள்ளிகளில் போதிக்கவேண்டுமென்றும், திருச்சபையாட்சி கூடாது என்றும் கருதினார்கள்.

மிதவாதிகளின் கட்சி 1847 லிருந்து 1884 வரை பாராளு மன்றத்தில் பெரும்பான்மை பலத்தைப் பெற்று இருந்தது. இதனால் அதன் அமைச்சரவை அதிக எதிர்ப்புக்கள் இல்லாமல் பெல்ஜியத்தை நிர்வாகம் செய்து வந்தது. அதன் ஆட்சிக் காலத்தில் பள்ளிக்கூடங்களில் சமயக் கருத் துக்களைப் போதிப்பது நிறுத்தப்பட்டது. சிலகாலம் போப் பாண்டவருடன் இராஜதந்திர உடன்பாடுகள் மேற்கொள்ளப் பட்டன. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சோஷியலிஸ்டுக் கட்சி 1885-ல் நிறுவப்பட்டது. இக்கட்சி மிகக் குறுகிய காலத்தில் நகரத் தொழிலாளர்கள் பலரையும், தீவிர சீர்திருத்தங்களைச் செய்ய விரும்பிய பல அறிஞர்களையும் தன் கருத்துக்களால் கவர்ந்தது.

கத்தோலிக்கக் கட்சி

மிதவாதக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும், சோஷியலிஸ்டு களுக்கும் இடையே நடைபெற்ற சச்சரவுகளைப் பயன்படுத்திக் கொண்டு சமுதாயச் சீர்திருத்தங்கள் சிலவற்றை கத்தோலிக்கக் கட்சி சிறப்பாக நிறைவேற்றியது. பாராளுமன்றத்துக்கு 1884-ல் நடைபெற்ற தேர்தலில் பெரும்பான்மை இடத்தை இக்கட்சி பெற்றது. தொடர்ந்து அடுத்த முப்பதாண்டுகளுக்கு இப் பெரும்பான்மை பலத்தைப் பெற்றுவந்தது. இத்துடன் பாராளுமன்றத்துக்குக் கட்டுப்பட்ட அமைச்சரவையை அமைத்தது. இக்கட்சி ஆட்சி செய்த காலத்தில் அரசுப்பள்ளி களில் மீண்டும் சமயக் கொள்கைகளைப் போதித்ததோடு மட்டு மல்லாமல், பெல்ஜியம் நாட்டின் அறியாமையைப் போக்கும் வகையில், அந்நாட்டின் அடிப்படைக் கல்வி அமைப்பை விரிவு படுத்தியது. கத்தோலிக்க அடிப்படையில் அரசாங்கத்தை ஜனநாயக மயமாக்கியது. ஓட்டுரிமை பெறுவதற்குத் தேவை யாயிருந்த சொத்துரிமையை 1894-ல் நீக்கியது. மேலும் 24 வயது நிரம்பி, ஓர் ஆண்டு அதே தொகுதியில் வாழ்ந்த எல்லா ஆண்களுக்கும் நாடாளுமன்றத் தேர்தல்களிலும், ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களிலும் ஓட்டளிக்கும் உரிமைகளை வழங் கியது. ஆனால் ஓட்டுரிமைத் தகுதிகளை நீக்கிய அதே சமயத்தில் கல்வியையோ, செல்வத்தையோ, பெற்றிருந்தவர்களுக்கு அவற்றின் அளவு அடிப்படையில் ஒன்று அல்லது இரண்டு ஓட்டுக்கள் அதிகமாக கொடுக்கப்பட்டு, பல ஓட்டு முறையை (Plural voting) நடைமுறைக்குக் கொண்டு வந்தது. அடுத்து ஜனநாயக முறையை விரிவுபடுத்த பெல்ஜியத்தின் வடபகுதியில் வாழ்ந்த, தாழ்ந்த இனத்தவரான ஃபிளிமிஷ் களின் குறைகளை நீக்க, அவர்கள் பேசிய டச்சு (Dutch) மொழிக்கு அரசியலில் பிரெஞ்சு மொழிக்குச் சமமான இடத்தை 1898-ல் வழங்கியது. மற்றொரு தேர்தல் சீர்திருத்தத்தின் மூல மாக 1899-ல் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையைக் (Proportional Representation) கொண்டு வந்தது. இதன் மூலம் ஒவ்வொரு மாநிலத்திலும் அம்மாநிலத்தில் ஓட்டளித்தவர்கள் சார்ந்திருந்த கட்சியை அல்லது அப்பகுதியில் போட்டி யிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு, பாராளுமன்றத்திலிருந்த காலியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டன. சோஷியலிஸ்டுகளும் மிதவாதக் கட்சிக்காரர் களும், கத்தோலிக்கக் கட்சிக்கு எதிராக இக்கட்சி கொண்டு வந்த சீர்திருத்தங்களை அடிப்படையாகக் கொண்டு குற்றங் களைச் சுமத்தினர்: இவற்றுள் பெல்ஜியம் நாட்டின் கல்வி

முறையில் திருச்சபை ஆதிக்கத்தை கத்தோலிக்கக் கட்சி ஏற்படுத்தியது என்பதும், பலவோட்டு முறையை இக் கட்சி புகுத்தியது என்பதும் முக்கியமான குற்றச் சாட்டுக்களாகும். சோஷியலிஸ்டுகள் கத்தோலிக்க அரசாங்கத்திற்கு எதிராக 1913-ல் "ஒருவருக்கு ஒரு ஓட்டு" (one man one vote) என்ற கொள்கைக்காக மிகப் பெரிய பொதுவேலே நிறுத்தம் ஒன்றை வெற்றிகரமாக நடத்திக் காட்டியது. ஆனுல் 1914-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கத்தோலிக்கக் கட்சியினர் பெரும்பான்மை பலம் பெற்று வெற்றி பெற்றனர்.

பெல்ஜியம் நாட்டின் பாராளுமன்றம் குறிப்பாக 1890க்குப் பிறகு பல சமுதாயச் சட்டங்களேக் கொண்டு வந்தது. தொழிற்சாலேகள் ஒழுங்குபடுத்தப்பட்டன. தொழிலாளர்களின் நிறுவனங்கள் சட்டங்கள் மூலமாக அங்கீகரிக்கப்பட்டன. தொழிலாளர் நிறுவனங்களின் நிதிகளுக்கு 1898-ல் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. முதியோர் ஓய்வுகால ஊதியம் (Old age pension) முறை 1900-ல் அமுல் செய்யப்பட்டது. தொழிலாளர்களின் வீட்டு வசதியிலும், பொருளாதார வாழ்க்கையிலும் கணிசமான அளவு முன்னேற்றம் காணப்பட்டது.

இரண்டாம் லியோபோல்டும், காங்கோ சுதந்திர நாடும்

ஒரு சில தனித்தன்மைகளால் பெல்ஜியம் தனியாகக் குடியேற்ற நாடுகளே அமைத்து வலிமையடைந்தது. சூழ்நிலேகளேப் பயன்படுத்தி மிக விரைவில் நன்மையடையும் இயல்புடைய இரண்டாம் லியோபோல்டு, 1865-ல் பெல்ஜியத்தின் மன்னரானுர். இவர் 1909 வரை இந்நாட்டின் மன்னராக ஆட்சி புரிந்தார். ஹென்ரி ஸ்டான்லி (Henry Stanley) என்பவர் 1870க்கும் 1879 க்கும் இடைப்பட்ட காலத்தில் புதிய பயணங்களே மேற்கொண்டு மத்திய ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள காங்கோ என்ற பெரும்பகுதியில் அதிக அளவில் ரப்பர் காணப்படுவதாக இரண்டாம் லியோபோலிடம் அறிவித்தார். ஹென்றி ஸ்டான்லி (Henry Stanley) என்பவர் ஒரு ஆங்கிலேய அமெரிக்கப் பத்திரிகையின் ஆசிரியராகவும் விளங்கினுர். இவ்வறிவிப்பைப் பயன்படுத்திக் கொண்டு இரண்டாம் லியோபோல்டு தன்னுடைய தலேமையில் தனியார் வியாபாரக் கம்பெனி ஒன்றை நிறுவினுர். இவரே அக் கம்பெனியின் முக்கிய இருப்பு வைத்திருப்பவராகவும் விளங்கினுர். இக் கம்பெனி தலேவர் என்ற முறையில் காங்கோ பகுதியின் ஆட்சி

யாளரைச் சந்தித்துத் தன்னுடைய கம்பெனியை நிறுவுவதற்கான இடத்தைப் பெற்றுத் தன்னை காங்கோ சுதந்திர நாட்டில் எல்லா அதிகாரங்களையும் பெற்ற மனிதனாக ஆக்கிக் கொள்வதற்காக அந்நாடு முழுவதும் 1884-முதல் 1885-வரை சுற்றுப் பயணம் செய்தார். தன்னுடைய தலைமையில் காங்கோவில் தனியார் வியாபாரக் கம்பெனியை நிறுவியவுடன் இதில் மிக அதிக அளவில் முதலீடு செய்தார். அதனால் மிக அதிக அளவில் இலாபமும் அடைந்தார். எனவே பல இடங்களில் இக் கம்பெனியின் கிளைகள் பெருமளவில் திறக்கப்பட்டன. நாளடைவில் காங்கோவில் வாழ்ந்த பூர்வீகக் குடிகள் பலர் தங்கள் புதிய அரசரான இரண்டாம் லியோபோல்டுக்காகவும், அவருடைய கம்பெனிக்காகவும் ரப்பர் சேகரிப்பதற்காக அடிமைகளாக மாறினர். எனவே பெல்ஜியத்தின் மக்கள் உள்நாட்டில் மேலும் பல சீர்திருத்தங்களுக்காகவும், பெல்ஜியத்துக்கு வெளியே காங்கோ சுதந்திர நாட்டின் நிலைமையை அடியோடு மாற்றும் வகையில் அதிக சீர்திருத்தங்களைச் செய்வதற்காகவும் பெல்ஜியத்தில் பலர் குரல் எழுப்பினர். பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இரண்டாம் லியோபோல்டு 1908-ல் காங்கோ சுதந்திர நாட்டை, பெல்ஜியத்தின் குடியேற்ற நாடாக மாற்றுவதற்கு ஒப்புக்கொண்டார். ஆனால் அதே சமயத்தில் பெல்ஜிய அரசாங்கம் அவருடைய தியாகத்திற்காகவும், அவருக்காகவும் தாராளமான நஷ்டஈடு வழங்க வேண்டுமெனக் கேட்டார். பெல்ஜிய அரசாங்கம் பாராளுமன்றத்தில் சிறுபான்மையினரின் பலத்த எதிர்ப்புக்களிடையே 1908-ல் தன்னுடைய நாட்டின் நிலப்பரப்பைவிட ஏறத்தாழ 8 மடங்கு அதிக பரப்பளவுள்ள நிலப் பகுதியைப் பெற்றது.

நெதர்லாந்து (அல்லது) ஹாலந்து:

டச்சுக்காரர்கள் வாழ்ந்து வந்த நெதர்லாந்தில், பெல்ஜியம் புரட்சி செய்து பிரிந்து தனி நாடாக விளங்கியது. இருப்பினும் பெல்ஜியத்திற்கு இணையாக அளவற்ற தொழிற்சாலைகளை ஏற்படுத்த நெதர்லாந்து விரும்பவில்லை. ஆனால் இந்நாட்டில் பர்கர்களும், விவசாயிகளும், மீனவர்களும் அதிகமாக வாழ்ந்தனர். இருப்பினும் அந்நாட்டின் தொழிற்சாலைகளுக்கும், மக்களுக்கும், நில பாகங்களுக்குமிடையே சரியான அளவு விகிதாசாரம் இருந்ததால், பொருளாதாரத்துறையில் இது முக்கியத்துவம் பெற்றது. பதினேழாம் நூற்றாண்டில் நெதர்லாந்து பெற்றிருந்த குடியேற்ற நாடுகளையும், வியாபார நாடுகளையும் இப்பொழுதும் டச்சுக்காரர்களின் நெதர்லாந்து பெற்றிருந்தது.

ஐரோப்பாவில் 1798க்கும் 1814 க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் நடைபெற்ற நெப்போலியப் போர்களின் (Napoleonic wars) பொழுது ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தின் காரணமாக, பல பகுதிகளை டச்சுக்காரர்கள் இழந்தாலும், டச்சுக்காரர்களின் கிழக்கிந்தியப் பேரரசு தொடர்ந்து நெதர் லாந்திடமே இருந்தது. ஜாவா, சுமத்ரா, நறுமணத் தீவுகள், போர்னியோவின் பெரும்பகுதி, புதிய கயானவில் பாதி ஆகிய பகுதிகள் இந்த டச்சுப் பேரரசில் அடங்கும். இப்பகுதிகளின் நிலப்பரப்பு இவற்றின் தாய் நாட்டின் நிலப் பகுதியைக் காட்டி லும் சுமார் 58 மடங்கு அதிகமாகும். இவற்றின் மக்கள் தொகை இவற்றின் தாய் நாட்டின் மக்கள் தொகையைக் காட்டிலும் 6 மடங்கு அதிகம். இவற்றுடன் தென் அமெரிக்காவில் டச்சு கயானவும், மேற்கிந்தியத் தீவுகளில் குராகோ (Curacao) வும் டச்சு நாட்டின் பெருமைக்குக் காரணமாக இருந்தன. இவை மிகுந்த வருவாயைக் கொடுக்கின்ற பகுதிகளாகவும் இருந்தன. இவ்வாறு வருவாயைக் கொடுத்த பகுதிகளில் குறிப்பிடத் தக்கவை கிழக்கிந்தியத் தீவுகள். கிழக்கிந்தியத் தீவுகளில் நிர்வா கப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்த டச்சுக்காரர்கள் அதிக அளவில் ஊதியம் பெறுவதற்கு இத்தீவுகள் காரணமாக இருந்ததுடன், இவர்கள் அப்பகுதி மக்களைச் சுரண்டி வாழ்வதற்கும் போதிய வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தன. டச்சு வியாபாரிகளும், டச்சு செல்வந்தர்களும் கிழக்கிந்தியத் தீவுகளில் வியாபாரத்திலும், முதலீட்டிலும் ஏகபோக உரிமையை அனுபவிப்பதற்கான வழிவகைகளை அந்நாட்டிலிருந்த டச்சு நிர்வாகிகள் அதிகப்படுத்தினர். மேலும் வெளிநாட்டு வியாபாரத்தையும், டச்சுக்காரர்களே ஏற்கும் வண்ணம் அந்நாட்டின் நிலைமைகளையும் முறைப் படுத்தி, அதிக மூலதனத்தை முதலீடு செய்து, உள்நாட்டில் வளர்ச்சியை ஏற்படுத்தினர்.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் எல்லா நாடுகளிலும் பரவிவந்த தொழிற் புரட்சியின் காரணமாக டச்சு நெதர்லாந்தின் வியாபாரம், விவசாயம் ஆகியவை நன்ருக வளர்ச்சியடைந்தன. நெதர்லாந்து வெளி நாடுகளுடனும், தன் குடியேற்ற நாடுகளுடனும் செய்து வந்த வியாபாரத்தின் மொத்த மதிப்பு, 1913-ல் சுமார் 30 இலட்சம் டாலர்கள் இருக்கும். வெளிநாட்டு வாணிபத்தின் காரணமாக பிரிட்டன், ஜெர்மனி, பெல்ஜியம் ஆகிய நாடுகளின் வியாபார சந்திப்பு நிலையங்களில் டச்சுக்காரர்களும் மேற்சொன்ன நாட்டவர் களைச் சந்தித்தனர். இதனுல் டச்சுப் போக்குவரத்து வாகனத்

தொழிற்சாலைகளும், பால்பண்ணைகளும், ஆழ்கடல் மீன் பிடிப்புத் தொழிலும் அதிக அளவில் வளர்ந்துகொண்டே இருந்தன. நெதர்லாந்து நகரங்களில் மக்கள் தொகையும் அதிகரித்தது. டச்சு மாலுமிகளும், நடுத்தர வகுப்பினரும் இதனால் அதிக இலாபம் அடைந்தனர்.

மற்ற ஐரோப்பிய நாடுகள் சுங்க வரியையும், அந்நியப் பொருள்களின் மீது அதிக வரியையும் விதித்து உள்நாட்டுத் தொழில்களுக்கு ஆதரவு அளித்துக் கொண்டிருந்த பொழுது, நெதர்லாந்து தனக்குச் சாதகமான சுதந்திர வியாபாரக் கொள் கையைப் பின்பற்றி அதிக இலாபம் சம்பாதித்தது. நெதர்லாந் தின் பொருளாதார முன்னேற்றத்தைக் கருதி, டச்சுக்காரர்கள் இத்தகைய அரசியல் கொள்கையைக் குறை கூறத் தொடங்கி னர். ஆனால் இந்நிலை 1848 வரை நிலைத்திருந்தது. நெதர்லாந்தின் அரசரான இரண்டாம் வில்லியம் என்பவர் 1849-ல் அரசியல் அமைப்பு ஒன்றை ஏற்படுத்தினார். அதன்படி எஸ்டேட்ஸ் ஜெனரல் (Estates General) என்ற இரண்டு சபைகள் அடங்கிய ஒரு பாராளுமன்றத்தை ஏற்படுத்தினார். இப் பாராளு மன்றத்திற்கு அரசருடைய அமைச்சர்கள் கடமைப்பட்ட வர்கள் என்று அறிவித்தார். மத சுதந்திரத்தை அனுபவிப்பதில் இருந்த பல கட்டுப்பாடுகளை நீக்கினார்.

இதே சமயத்தில் மன்னரிடம் பாராளுமன்றம் இயற்றும் எல்லாச் சட்டங்கள் மீதும் ஏகோபித்த வெட்டுரிமை அதிகாரம் (Obsolute veto power) இருப்பதற்கு ஏற்பாடு செய்தார். பாராளுமன்ற வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்க, ஓட்டளிக்கும் அதிகாரத்தை, நிறைந்த சொத்துடையவர்க்கு மட்டுமே வழங் கினார். நாளடைவில் இவ்வுரிமையின்மீது இருந்த கட்டுப்பாடு கள் சிறிது சிறிதாகக் குறைக்கப் படுவதற்கான சூழ்நிலைகள் காணப்பட்டன. மேற்கு ஐரோப்பாவில் இருந்த மற்ற எல்லா நாடுகளையும் விட, நெதர்லாந்தில் அரசியல் ஜனநாயகம் மிகக் குறைந்த அளவிலேயே வளர்ச்சி பெற்றது. சுருக்க மாகச் சொன்னால் அரசியல் ஜனநாயகம் நெதர்லாந்தில் வளர்ச்சி பெறவில்லை என்றே கூறிவிடலாம்.

இரண்டாம் வில்லியத்திற்குப் பிறகு நெதர்லாந்தில் மூன்றாம் வில்லியம் (William III) என்பவர் 1849-ல் மன்ன ரானார். இவர் 1890 வரை அந்நாட்டின் மன்னராக ஆட்சி புரிந் தார். இவருடைய காலத்தில் அரசியல் வாதிகள் பொதுக் கல்வி யைப் பற்றி அதிகமாகப் பேசிவந்தனர். ஒருபுறம் மிதவாதக்

கட்சியினர் (Liberal Party) நெதர்லாந்து நாட்டில் இலவச, பொது, மதச்சார்பற்ற பள்ளிக் கூடங்களை நிறுவ வேண்டும் என்றும், பள்ளிக் கூடங்களில் எந்தவிதமான சமயக் கருத்துக் களையும் போதிக்கக் கூடாது என்றும் கூறிவந்தனர். மறுபுறம் கத்தோலிக்கக் கட்சியும், புராட்டஸ்டண்டுகளின் கட்சியும் நெதர்லாந்து நாட்டில் திருச்சபைகளின் ஆலோசனைகளுக்கு ஏற்ப, பொதுக் கல்வி நிலையங்களை ஏற்படுத்த வேண்டும் என்றும், இக்கல்வி நிலையங்கள் அரசாங்கத்தால் பராமரிக்கப் படவேண்டுமென்றும் கூறினர்கள். இவர்களில் மிதிவாதக்கட்சி யினர் சிலகாலம் செல்வாக்குப் பெற்றிருந்ததால் அரசாங்கம் "கட்சிச் சார்பற்ற" (Neutral) பொதுப் பள்ளிகளை நிறுவியது. கத்தோலிக்கர்களும், புராட்டஸ்டண்டுகளும் 1889-ஆம் ஆண்டிற்குப் பிறகு அரசாங்கத்திடமிருந்து மானியங்களைப் பெற்று, அவர்களுடைய மதச்சார்புடைய கல்வி நிலயங்களைத் தேவைக்கு ஏற்ப அமைத்துக் கொண்டனர்.

மூன்றும் வில்லியத்தை அடுத்து நெதர்லாந்தின் அரியணை ஏறியவர் இவரது மகளான வில்ஹெல்மினு (Wilhelmina) என்ற அரசியாவார். இவர் வயதுக்கு வந்த மூன்ருண்டுகள் கழித்து 1901-ல் மெக்லென்பர்க் என்ற பகுதியில் ஜெர்மன் இளவரச ராக இருந்த ஹென்றி (Henry of Mecklenburg) என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். இத்திருமணம் ஜெர்மனிக்கும் ஹாலந்து நாட்டிற்குமிடையே இருந்த வியாபார உறவுகளையும், பண்பாட்டு உறவுகளையும் அதிக அளவில் பிணைத்தது. இதனல் வெறுப்படைந்த டச்சுத் தேசியவாதிகள் பொது இயக்கம் ஒன்றைத் தங்கள் நாட்டின் பாதுகாப்புக்காகத் தொடங்கினர். பிறகு ஹாலந்து மக்களின் விருப்பத்தை அறிந்து ஒரு படையை ஏற்படுத்தினர்கள். பெருந்தொகையைச் செலவு செய்து பல கோட்டைகளைக் கட்டினர்கள்.

நெதர்லாந்தின் அரசர்கள் 1815 முதல் 1890 வரை ஆரஞ்சு வம்சத்தைச் சார்ந்தவர்கள் என்பதினல் லக்ஸம்பர்க் என்ற நாட்டின் அரசர்களாகவும் இருந்து ஆண்டு வந்தனர். லக்ஸம் பர்க் என்பது ஜெர்மனி, பிரான்சு, பெல்ஜியம் ஆகிய நாடுகளின் எல்லைப் பகுதியில் அமைந்திருந்த மிகச் சிறிய ஒரு நாடு. ஆரஞ்சு வம்சத்தினர்கள் செய்துகொண்ட ஓர் உடன்பாட்டின் படி, மூன்றும் வில்லியம் இறந்த பிறகு நெதர்லாந்தின் அரசியாக அவரது மகள் அரியணை ஏறியபோது, லக்ஸம்பர்க் அவ்வரசி யாரின் ஆட்சியின்கீழ் வரவில்லை. நாசௌ என்ற பகுதியைச் சார்ந்த அடால்பஸ் (Adolphus) என்பவர் 1850 முதல் லக்ஸம்

பர்க்கின் அரசரானார். இவர் 1905 வரை அந்நாட்டின் அரசராக இருந்தார். இவரது ஆட்சிக்குப் பிறகு லக்ஸம்பர்க் தனி சுதந்திர நாடாக இயங்கி வந்தது. இந்நாட்டின் ஒற்றுமையும், நடுநிலைமையும் 1867 முதல் ஐரோப்பிய நாடுகளின் தலையீட்டுக் குள்ளாகியது. லக்ஸம்பர்க், பெல்ஜியத்தைப் போல தொழில் வளம் நிறைந்த நாடு. இந்நாட்டின் அரசாங்கமும் அரசிய லமைப்பும், ஹாலந்து நாட்டின் அரசியலமைப்பையும் அரசாங்கத்தையும் ஒத்திருந்தன.

4. ஸ்விட்சர்லாந்து நாட்டில் கூட்டிணைவரசு

தாழ்நில நாடுகளைப் போலல்லாமல், ஸ்விட்சர்லாந்து கடற் கரையும், கடல் வணிகர்களும் இல்லாத ஒரு மலை நாடாகும். பெல்ஜியம் நாட்டைக் காட்டிலும் ஸ்விட்சர்லாந்து பரப்பளவில் சிறிய நாடாகும். ஆனால் ஹாலந்து நாட்டைவிட அதிக பரப்பளவுள்ளது. பல்வேறு இனத்தைச் சார்ந்தவர்களின் கூட்டிணைவரசு இந்நாட்டை ஆட்சி புரிந்தது. எல்லாத் துறை களிலும் முன்னேறிய மக்களாட்சி இந்நாட்டில் நடைபெற்றது. முடியாட்சி இந்நாட்டில் வெற்றி பெறவில்லை.

ஸ்விட்சர்லாந்து நாட்டின் கூட்டிணைவரசில் 22 குடியரசுப் பகுதிகள் இருந்தன. இக்குடியரசுப் பகுதிகளைக் காண்டன்கள் (Cantons) என்று சொல்கின்றனர். காண்டன்களில் மொழி, மதம், பழக்க வழக்கங்கள், பண்பாடு ஆகிய துறைகளில் வேறு பாடுகள் காணப்படுகின்றன. ஜெர்மனிக்கு அருகில் வாழ்ந்த ஸ்விட்சர்லாந்துக்காரர்கள் பிரஞ்சு, இத்தாலிய மொழி களையும், மதம், பண்பாடுகளையும் பின்பற்றினர். பதினைந்து காண்டன்களில் ஜெர்மன் மொழி பேசும் மக்கள் வாழ்ந்து வந்தனர். இவர்களின் மொத்த எண்ணிக்கை ஸ்விட்சர் லாந்தின் மொத்த ஜனத்தொகையில் $\frac{2}{3}$ பங்காகும். எஞ்சிய ஏழு காண்டன்களில் ஐந்தில் பிரஞ்சு மொழி பேசுபவர்களும், இரண்டில் இத்தாலிய மொழி பேசுகின்ற மக்களும் வாழ்ந்து வந்தார்கள். மொத்தத்தில் 12 காண்டன்களில் புராட்டஸ்டண்டு கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையினராகவும், எஞ்சிய 10 காண் டன்களில் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையின ராகவும் வாழ்ந்து வந்தனர். இத்தகைய பல வேற்றுமைகளை யுடைய ஸ்விட்சர்லாந்து மக்கள், தேசியக் கொள்கைகள் வளர்ந்து வரும் காலத்தில், நிலையான ஓர் அரசியல் ஒற்றுமையை ஏற்படுத்தியதோடு நாட்டுப்பற்று மிகுந்தவர்களாகவும் இருந் தனர். மேலும் இத்தகைய வேற்றுமைகள் எதுவும் அவரவர்கள்

பகுதிகளில் வாழும் மக்களின் கலாச்சாரங்களையோ, ஸ்விட்சர்லாந்து நாட்டின் சுதந்திரத்தையோ பாதிக்கவில்லை. மாருக அவையனைத்தும் ஸ்விட்சர்லாந்தின் தேசிய உணர்ச்சிகளை வலிமையடையச் செய்தன. அதே சமயத்தில் இவை அவரவர்களுடைய தனித் தன்மைகளுக்கும் வலுவூட்டின. ஆனால் ஒவ்வொரு காண்டன்களிலும் வாழ்ந்த மக்கள், அவர்கள் வாழ்ந்த பகுதிகளுக்கு அடுத்துள்ள நாடுகளைப் பொருத்து, பூர்வீகத்தில் ஜெர்மானியர்களாகவோ, பிரஞ்சுக்காரர்களாகவோ, இத்தாலியர்களாகவோ இருந்தனர். ஒவ்வொரு காண்டனும் தத்தமக்கென ஒவ்வொரு வகையான அரசியலமைப்பைப் பெற்றிருந்தது. தங்களுடைய பகுதியின் நிர்வாகக் காரியங்களை இவ்வரசுகள் மேற்கொண்டன. காண்டன்கள் சேர்ந்து மத்தியில் கூட்டு அரசாங்கத்தை அமைத்து இருந்தன. மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் காண்டன்களில் நடைபெற்ற அரசுகளையோ, மொழிப் பிரிவினர்களையோ எந்தவகையிலும் பாதிக்காவண்ணம் வரையறுக்கப்பட்டிருந்தன.

சுவிட்சர்லாந்து நாட்டில் இருந்த கூட்டிணைவரசு சில தனித் தன்மைகளைப் பெற்றிருந்தது. இந்நாட்டில் 1874-ல் அரசியலமைப்பில் கொண்டு வரப்பட்ட ஒரு சிறு மாற்றத்தின் மூலமாக, சட்டசபைகள் இயற்றிய சட்டங்களை நிறைவேற்றும் பொழுது, பொதுமக்களின் தீர்ப்பெடுத்தல் முறை (Referendum) கொண்டு வரப்பட்டது. இதனால் அரசியலமைப்பிலிருந்த பழைய முறைகள் எந்தவிதத்திலும் மாற்றம் பெறவில்லை, பொதுமக்கள் சட்டமியற்றுவதில் அதிக அதிகாரங்களைப் பெற்றனர். அதே சமயத்தில் மத்திய அரசாங்கத்திற்கு, எல்லா சுவிட்சர்லாந்து நாட்டுச் சிறுவர்களுக்கும் கல்வி அளிக்கும் வகையில், அந்நாட்டின் ஆரம்பக் கல்வி நிலையங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கும், அவற்றைக் கண்காணிப்பதற்கும் அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

மேலும் சுவிட்சர்லாந்து மக்கள் தங்களுக்குத் தேவையான சட்டங்களை மத்திய அரசுக்குத் தெரிவித்து, அவ்வரசின் மூலமாக அவற்றைச் சட்டங்களாக்கப் பெறும்முறை (Initiative) யும் 1891-ல் கொண்டுவரப்பட்டது. இதனால் அந்நாட்டு மக்கள் சட்டங்களை இயற்றுவதில் மேலும் அதிக அதிகாரங்களைப் பெற்றனர். சட்டங்களை நிறைவேற்றுவதற்கு மக்களின் கருத்து அறியும் முறை (Referendum) மூலமாகவும், தங்களுக்குத் தேவையான சட்டங்களை மத்திய அரசு இயற்றும்படி

ஆலோசனை கூறும் முறை (Initiative) மூலமாகவும் ஸ்விட்சர் லாந்து மக்கள் 1890க்குப் பிறகு தங்கள் பாராளுமன்றத்தின் வாயிலாகத் தங்களுக்குத் தேவையான சட்டங்கள் பலவற்றை இயற்றிக்கொண்டனர். ஆனால் இச்சட்டங்கள் எந்தப் பகுதி யினரையும் பாதிக்காதது மிகவும் குறிப்பிடத் தக்கது.

ஏறத்தாழ 1874க்கும் 1914க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் சுவிட்சர்லாந்தின் பொருளாதாரம் பல காரணங்களால் வளர்ச்சி யடைந்தது. முதலாவதாக, மலைப்பகுதிகளில் வாழ்பவர்கள் இயற்கையாகவே கடின உழைப்பாளிகளாய் இருப்பார்கள். ஸ்விட்சர்லாந்து மலைப் பாங்கான பிரதேசமாதலால் இந்நாட் டின் மக்கள் நல்ல உழைப்பாளிகளாகவும், எதிர்ப்புக்களைச் சமாளிக்கும் திறமை பெற்றவர்களாகவும் விளங்கினார்கள். மேலும் அறிவியல் முறைகளைத் தீவிரமாகக் கையாண்டு குறுகிய சமவெளிகளில் அதிக அளவு விளைபொருள்களை உற்பத்தி செய்தனர். இரண்டாவதாக, இந்நாட்டின் பல இடங்கள் உல்லாசப் பயணிகளை அதிக அளவு கவர்கிற வண்ணம் அமைந்திருந்தன. இவ்வாறு இருந்த இடங்களைச் சுற்றிப் பார்ப்பதற்காக வரும் உல்லாசப் பயணிகள் இந்நாட்டில் தாராளமாகச் செலவு செய்தனர். இதுவும் இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு ஒரு காரணமாக இருந்தது. மூன்றாவ தாக, தொழில் வளர்ச்சியின் காரணமாகப் பெருகிய பொருள் உற்பத்தி வளர்ச்சி, சுங்கவரிச் சட்டங்களால் விரைவு படுத்தப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட இவ்வளர்ச்சியின் போது துணி, உறைகள், பாண்டங்கள், கடிகாரங்கள், பால், சாக்லெட் போன்றவற்றை உற்பத்தி செய்கின்ற நிறுவனங்கள் பல தோன்றின. இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்தது. நாட்டின் பாதுகாப்பைப் பொறுத்தவரையில் சுவிட்சர்லாந்தைச் சுற்றியுள்ள நாடுகள் பெற்றிருந்த இராணுவ ஆயுதங்களும், தளவாடங்களும் இந் நாட்டை நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றச் செய்தன. மேலும் 1815 ஆம் ஆண்டில் ஐரோப்பாவில் கூட்டப்பட்ட வியன்னா மாநாட்டில் அது ஒரு நடுநிலைக் கொள்கைக்காக வாதாடியது. மேலும் ஐரோப்பியப் போர்க்குத் தன்னுடைய நடுநிலைக் கொள்கையின் காரணமாக அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இருப்பினும் சுற்றியுள்ள நாடுகளின் நாடு பிடிக்கும் கொள்கைகள், சுவிட்சர்லாந்து மக்களில் தகுதியான வர்கள் ஒவ்வோர் ஆண்டும் ஒரு குறிப்பிட்ட நாட்களுக்குக் கட்டாய இராணுவப் பயிற்சிபெறும் நிலையை உருவாக்கி

விட்டது. இத்தகைய தகுதியானவர்களுக்கான கட்டாய இராணுவப் பயிற்சி பிரான்சுக்கும், ஜெர்மனிக்கும் இடையே ஏற்பட்ட போரின் பொழுது 1874-ல் புகுத்தப்பட்டது. இது 1907 ஆம் ஆண்டு மற்றொரு சட்டத்தின் மூலமாக மேலும் தீவிரப்படுத்தப்பட்டது. இத்தகைய பயிற்சியால் ஸ்விட்சர் லாந்து மக்கள் தங்கள் நாட்டை எந்தச் சமயத்திலும் பாது காப்பாக வைத்திருந்தனர்.

5. ஸ்காண்டிநேவிய அரசுகள்
(The Scandinavian Kingdoms)

மேற்கு ஐரோப்பாவின் வடகோடியில் உள்ள தீபகற்பத் தில் அமைந்துள்ள டென்மார்க், ஸ்வீடன், நார்வே ஆகிய நாடுகள் ஸ்காண்டிநேவிய அரசுகள் எனப்படும். இந் நாடுகளில் வாழும் மக்களின் தோற்றம், மொழி, இனம் ஆகியவை ஏறத்தாழ ஒன்றுகக் காணப்படுகின்றன. இம்மக்கள் கடந்த நூற்றுண்டிலும் இந்த நூற்றுண்டிலும் சமுதாயம், அரசியல் ஆகிய துறைகளில் பல மாற்றங்களைப் பெற்றனர். இம் மூன்று பிரிவினர்களும் இயந்திரத் தொழில்களைவிட விவசாயம், வாணிபம், மீன்பிடித்தல் ஆகிய தொழில்களையே நம்பி வாழ்ந்தனர். டென்மார்க், ஸ்வீடன் ஆகிய பகுதிகளிலும் நிலச்சுவான்தாரர்கள் அதிக முக்கியத்துவம் பெற்று விளங்கினர். நார்வே தொழிலாளர்களின் நாடாக விளங்கியது. இம்மூன்று நாடுகளில் ஸ்வீடன் நாட்டில் அதிக அளவில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டது. எனவே இங்கு சோஷியலிஸம் வளர்ந்தது, சோஷியலிஸக் கருத்துக்களும் மக்களிடையே தீவிரமாகப் பரவின. இருப்பினும் மூன்று நாடுகளுமே பழைய கருத்துக் களில் நம்பிக்கை கொண்டு மன்னராட்சியை ஆதரித்து வந்தன, அத்துடன் புரட்சியையும் தவிர்த்து வந்தன. இருப்பினும் ஐரோப்பாவின் மற்ற பகுதிகளில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாகப் படிப்படியாக முன்னேறி, சுதந்திரக் கோட்பாடு களுக்குத் தங்கள் அரசியலமைப்புக்களில் இடமளித்துத் தங்களை ஜனநாயக நாடுகளாக மாற்றிக்கொண்டன.

ஸ்வீடன்: (Sweden) பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் (1801-1814) ஐரோப்பாவில் நடைபெற்ற நெப்போலியப் போர்களால் ஸ்வீடன், பின்லாந்தை (Finland) ருஷ்யாவிடம் இழந்தது. நார்வே (Norway) யை டென்மார்க் (Denmark) கிடமிருந்து பெற்றது. பிரஞ்சு அரசு இனத்தைச் சார்ந்த மார்ஷல் பெர்னடோட் (Marshal Bernadotte) என்பவர்

பதினான்காம் சார்லஸ் என்ற பெயருடன் 1818-ல் இந்நாட்டின் அரசரானார். இவர் 1844 வரை ஸ்வீடன் நாட்டின் அரசராக ஆட்சி புரிந்தார். இம்மாறுதல்கள் எல்லாம் 19ஆம் நூற்றாண்டு முழுவதும் ஸ்வீடன் நாட்டில் பல முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்குக் காரணமாக அமைந்தன, பெர்னடோட் வம்சம் பிரான்சு நாட்டில் தோன்றியது என்பதாலும், புரட்சிக் கருத்துக்களைக் கொண்டது என்பதாலும் டேனிய அரசர்களைக் காட்டிலும் ஸ்வீடன் தன்னுடைய அரசர்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கியது. மேலும் அது பல தீவிரக் கொள்கைகளையும் பின்பற்றியது. பின்லாந்தின் இழப்பு ஸ்வீடன் மக்களின் உள்ளத்தில் ரஷ்யர்களை வெறுக்கும் உணர்ச்சியைத் தோற்றுவித்தது. மேலும் டென்மார்க்கைக் காட்டிலும் அதிக இராணுவ பலத்தை ஸ்வீடன் பெற்றிருக்க வேண்டும் என்ற மனப்பான்மையும் இம் மக்களிடையே வளர்ச்சியடைந்தது. (நார்வேயை டென்மார்க்கிடமிருந்து பெற்றதால் டென்மார்க் எப்பொழுதும் இதனைத் திருப்பிப் பெற முயற்சி செய்யும் என்பதே இதற்குக் காரணம்). நார்வே மக்களைக் கட்டாயப் படுத்தி, ஸ்வீடனுடன் ஏற்படுத்திய ஒற்றுமை, இவ்விருமக்களும் இயற்கையில் சில வேறுபாடுகளைக் கொண்டிருந்ததால், இவ்விரு சாராரிடையேயும் விரும்பத்தகாத பூசல்களைத் தோற்றுவித்தது.

ஸ்வீடன், நார்வே ஆகிய இரண்டு நாடுகளும் சமுதாய அடிப்படையிலும் பல வேற்றுமைகளைக் கொண்டிருந்தன. அதிக நிலங்களையுடைய பண்ணைகள் பல ஸ்வீடனில் இருந்தன. மேலும் இந்நாட்டில் நிறைந்த செல்வம் படைத்த பிரபுக்கள் பலர் இருந்தனர். தொழிலாளர்கள் இப்பிரபுக்களை நம்பி வாழ்க்கை நடத்தினர். ஆனால் நார்வே நாட்டில் சிறிய பண்ணைகளே இருந்தன. இந்நாட்டில் வாழ்ந்த தொழிலாளர்களும், மீனவர்களும் யாரையும் சார்ந்திராமல் பொருளாதார சுதந்திரம் பெற்றிருந்தனர். இவர்கள் எல்லோரும் சமுதாயத்தையும், தொழிலாளர்களையும் பிரபுக்கள் சுரண்டி வாழ்கிறார்கள் என்பதனால் அவர்களை வெறுத்தார்கள்.

ஸ்வீடன் நாட்டில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் பரவிய தொழிற்புரட்சியின் காரணமாகப் பல தொழிற்சாலைகள் ஏற்பட்டன. இதனால் செல்வந்தர்கள் தொழிற்சாலை நிறுவனர்கள் ஆகியோரின் எண்ணிக்கை ஸ்வீடன் நாட்டின் நகரங்களில் அதிகரித்தது. நகரங்களும் கணிசமான அளவு வளர்ச்சியடைந்தன. அதே சமயத்தில் நார்வேயில் பெரும்பாலும் வியாபாரிகளும், விவசாயிகளும்

எண்ணிக்கையில் நிறைந்திருந்தனர். இத்தகைய வேறுபாடுகள் இவ்விரு நாடுகளின் அரசியலமைப்புக்களிலும் பிரதிபலித்தன.

நார்வே

நார்வேயில் சுதந்திரக் கோட்பாடுகளே அடிப்படையாகக் கொண்ட அரசியலமைப்பு முறை பின்பற்றப்பட்டது. இவ்வரசியல் அமைப்புமுறை நார்வே, ஸ்வீடனுடன் இணேக்கப் படுவதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர்தான் ஏற்படுத்தப் பட்டது. இவ்வரசியல் அமைப்புப்படி நார்வே நாட்டின் இறைமை (Sovereignty) வரி செலுத்துபவர்களால் தேர்ந்தெடுக் கப்பட்ட பாராளுமன்றத்திடம் இருந்தது.

ஆனல் ஸ்வீடன் நாட்டில் மன்னரின் போக்குகளேக் கட்டுப்படுத்தும் அதிகாரம், 1863 வரை, பழைய முறையில் அமைக்கப்பட்டிருந்த எஸ்டேட்ஸ் ஜெனரல் என்ற நான்கு சபைகள் அடங்கிய ஒரு சபையிடம் இருந்தது. இவ்வகையில் பிரபுக்கள், குருமார்கள், நகரமுப்பர்கள், தொழிலாளர்கள் என்ற நான்கு பிரிவினர்களும் நான்கு சபைகளில் இருந்தனர். இந் நான்கு சபைகளும் இணேந்த அமைப்புக்குத்தான் எஸ்டேட்ஸ் ஜெனரல் (Estates General) என்பது பெயர். 1863-ல் இந்நாட்டில் நான்கு சபைகளேக் கொண்ட எஸ்டேட்ஸ் ஜெனரலுக்குப் பதிலாக இரண்டே சபைகளேக் கொண்ட பாராளுமன்றம் நிறுவப்பட்டது. இப் பாராளுமன்றத்தில் நிலச்சுவான் தாரர்களே அதிக செல்வாக்கையும், அதிகாரங்களேயும் பெற்றிருந்தனர். 1863க்கு முன்னர் இருந்தது போலவே அரசர் எல்லாச் சட்டங்களின் மீதும் வெட்டு அதிகாரத்தைப் பெற்றிருந்தார்.

நார்வே நாடு, ஸ்வீடனுடன் 1815-ல் இணேக்கப்பட்ட பொழுது ஏற்பட்ட நிபந்தனேகளின்படி, ஸ்வீடனில் இருந்து பிரிக்க முடியாத, தனி சுதந்திர நாடாக, ஸ்வீடன் நாட்டுடன் இணேந்து செயல்பட ஆரம்பித்தது. ஸ்வீடன் நாட்டு மன்னரை நார்வே தன்னுடைய நாட்டு மன்னராக ஏற்றுக் கொண்டது. இவ்விரு நாடுகளுக்கும் அரசராக விளங்கிய ஸ்வீடன் நாட்டு அரசர், 1815-ல் ஏற்பட்ட நிபந்தனேகளின்படி, நார்வே நாட்டுப் பாராளுமன்றம், அந்நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் முழு அதிகாரம் செலுத்தி வந்ததைத் தொடர்ந்து அனுமதித்தார். ஆனல் இந்நாட்டு இராணுவத்தின் தலேமை அதிகாரம், வெளிநாட்டு உறவுகள், நிர்வாகத்தின் முக்கிய பதவிகள் ஆகியவற்றை ஸ்வீடன் நாட்டு அரசர் தானே அந்

நாட்டிற்கும் அரசர் என்ற முறையில் தன்னுடைய நேரடி அதிகாரத்தின் கீழ் வைத்திருந்தார். மன்னர் ஸ்வீடன் நாட்டில் நிலவிய மக்கள் கருத்துக்கு இணங்க, இரண்டு நாடுகளும் ஒன்ருக இணையவேண்டும் என்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். இரண்டு நாடுகளும் நிரந்தரமாக ஒன்ருக இணைவதற்கான வாய்ப்புக்களும் தோன்ற ஆரம்பித்தன.

இந்நிலையில் வெளிநாடுகளில் நட்புறவை வளர்ப்பதற்காக நியமிக்கப்பட்ட நார்வே நாட்டின் கான்சல் பிரதிநிதிகளை (Norwegien Consular Agents), ஸ்வீடன் அரசர் இரண்டாம் ஆஸ்கர் (Oscar II) என்பவர் (1872-1907), அவர்கள் தன் நாட்டின் பிரதிநிதிகள் என்று ஒத்துக்கொள்ள மறுத்தார். எனவே 1905-ல் நார்வே நாட்டின் பாராளுமன்றம், நார்வே நாடு ஸ்வீடன் நாட்டிலிருந்து நிரந்தரமாகப் பிரிந்து விட்டது என்று ஏகமனதாக அறிவித்தது. அத்துடன் அரசர் பெர்னடோட்டையும் நார்வே நாட்டின் அரச பதவியினின்றும் நீக்கியது. நார்வே நாட்டுப் பாராளுமன்றத்தின் இச் செயலை நார்வே நாட்டு மக்களும் பொது வாக்கெடுப்பின் (Plebiscite) மூலம் அங்கீகரித்தனர். ஸ்வீடன் நாட்டு அரசும் வேறு வழியின்றியும், விருப்பமில்லாமலும், நார்வே நாட்டுப் பாராளுமன்றத்தின் செய்கையை ஏற்றுக்கொண்டது, நார்வே நாடு ஸ்வீடன் நாட்டிலிருந்து பிரிக்கப்பட்டது. இதனுல் டென்மார்க் அரசரின் இரண்டாம் மகன் ஏழாம் ஹாக்கோன் (Haakon VII) என்ற பட்டப் பெயருடன் நார்வே நாட்டின் அரசரானுர்.

நார்வே, ஸ்வீடன் நாட்டிலிருந்து பிரிந்து சென்ற பிறகு இரண்டு நாடுகளிலும் ஜனநாயகக் கிளர்ச்சிகளுக்கு ஆதரவுகள் பெருகின. இதற்கு முக்கிய காரணம் நார்வே மக்கள் பெரிதும் வாக்களிப்பு மூலம் தங்கள் நாட்டுப் பாராளுமன்றத்தின் செய்கைக்கு ஒப்புதல் அளித்ததேயாகும். நார்வே நாட்டில் 1898-ஆம் ஆண்டு வயது வந்த எல்லா ஆண்களுக்கும் ஓட்டுரிமை வழங்கப்பட்டது. மறைமுகத் தேர்தல்களுக்குப் பதிலாக நேர்முகத் தேர்தல்கள் 1906-ஆம் ஆண்டில் கொண்டுவரப் பட்டன.

இதற்கு அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் சொத்துள்ள பெண்களுக்கு ஓட்டுரிமை அளிக்கப்பட்டது. பின்னர் 1913-ல் ஆண்களைப் போலவே வயது வந்த பெண்கள் அனைவர்க்கும் ஓட்டுரிமை வழங்கப்பட்டது. அதே ஆண்டில் அரசருக்குள்ள

வெட்டுரிமை நீக்கப்பட்டது. அரசர் ஊதியம் பெறுமலும் அதிகாரமின்றியும் பெயரளவில் ஆட்சி செய்தார்,

ஸ்வீடன் நாட்டில் இரண்டாம் ஆஸ்கர் 1907-ல் விண்ணுலகெய்தினர். அவருடைய மகனை ஐந்தாம் கஸ்டாவஸ், (Gustavus) அந்நாட்டின் மன்னரானர், அவர் ஆட்சிக்கு வந்தவுடனேயே ஸ்வீடன் நாட்டின் அரசியல் அமைப்பில் சில முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டன. இம்மாற்றங்கள் அந்நாட்டின் பாராளுமன்றத்தில் உள்ள இரு சபைகளிலும் விகிதாச்சாரத்தை (Proportional Representation) ஏற்படுத்தியது. கீழ்ச்சபைப் பிரதிநிதிகள் வயதுவந்த ஆண்கள் அனைவர்க்கும் ஓட்டுரிமை என்ற அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்,

இதற்கிடையில் மற்ற எல்லா ஸ்காண்டிநேவியா நாடுகளைக் காட்டிலும் ஸ்வீடன் நாட்டில் பொருளாதார மாற்றம் ஏற்பட்டது. இதனால் ஸ்வீடன் நாடு தொழில் வளர்ச்சி பெற்ற மற்ற நாடுகளுடன் தொழில் துறையில் போட்டியிட்டது. இப்போட்டியினால் இந்நாட்டின் சமுதாயத்தின் கீழ் மட்டத்தில் வாழும் மக்கள் தங்கள் நாட்டு அரசுக் கொள்கையை வெறுத்தனர். பின்னர் ஸ்வீடன் நாட்டு அரசாங்கம் சமுதாய மேம்பாட்டிற்காகச் சில சட்டங்களை இயற்றியது. இருப்பினும் ஸ்வீடன் நாட்டு மக்களின் பொருளாதார நிலை திருப்திகரமானதாக இல்லை. இந்நிலை, அந்நாட்டு மக்களிடையே சோஷியலிஸக் கொள்கை பரவியதாலும், பலர் அமெரிக்காவிற்குக் குடி பெயர்ந்ததாலும் தெரிய வருகிறது. 1870 க்கும் 1914க்கும் இடையே சுமார் 5, 00, 000 மக்கள் ஸ்வீடன் நாட்டை விட்டு வெளி நாடுகளில் குடியேறினர். இவர்களில் பெரும்பாலோர் அமெரிக்காவில் நிரந்தரமாகத் தங்கி விட்டனர். தங்கள் நாட்டு மக்கள் வெளி நாடுகளுக்குக் குடி பெயர்ந்ததன் காரணமாக ஐரோப்பிய நாடுகளிடையே அதிக அளவு பாதிக்கப்பட்ட நாடு ஸ்வீடன் நாடே ஆகும்.

3. டென்மார்க்: ஸ்காண்டிநேவியா தீபகற்பத்தில் அமைந்துள்ள நாடுகளிடையே மிகச் சிறிய நாடு டென்மார்க். இந்நாடு 1814-ல் நெப்போலியப் போரின் காரணமாக நார்வே நாட்டை ஸ்வீடன் நாட்டுக்குக் கொடுத்தது. ஸ்லீஷ்வீக் (Schleswig), ஹோல்ஸ்டீன் (Holstein) ஆகிய தன்னுட்டுப் பகுதிகளை 1864-ல் ஜெர்மனிக்குக் கொடுத்தது. எனவே ஐரோப்பியப் பகுதியில் 1864-க்குப் பிறகு ஜட்லாந்து (Jutland) தீபகற்பமும், அதனைச் சுற்றியுள்ள சில தீவுகளும் மட்டுமே டென்மார்க் நாட்டின் நிலப் பகுதிகளாக இருந்தன. மிகச்

சிறிய நாடான டென்மார்க் தனித்திருந்து ஐரோப்பாவிற்கு வெளியே ஒரு குடியேற்றப் பேரரசை (Colonial Empire) நிறுவியது. ஐஸ்லாந்து, கிரீன்லாந்து, ஃபரோ தீவுகள், மேற்கிந்தியத் தீவுகளில் சில ஆகியவை டென்மார்க்கின் குடியேற்ற நாடுகளாகும்.

டென்மார்க் நாட்டின் அரசர், 1849-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு 1866-ல் திருத்தியமைக்கப்பட்ட ஓர் அரசியலமைப்பின்படி, தன்னுடைய அதிகாரங்களைப் பாராளுமன்றத்துடன் பகிர்ந்து கொண்டார். டென்மார்க் பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையில் சொத்துரிமை உடைய 30 வயதுக்கு மேற்பட்ட பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்தனர். ஒன்பதாம் கிறிஸ்டியன் (Christian IX) என்ற அரசர் இந்நாட்டில் 1863 முதல் 1906 வரை ஆட்சி புரிந்தார். இவருடைய ஆட்சிக் காலம் முழுவதும் (சுமார் 43 ஆண்டுகள்) பாராளுமன்றத்தின் கீழ்ச்சபைக்கும், மேல் சபைக்கும் இடையே தொடர்ந்து கருத்து வேறுபாடுகள் இருந்து வந்தன. மன்னர் பாராளுமன்றத்தின் மேல்சபையுடன் சேர்ந்து கொண்டார்.

பாராளுமன்றத்தின் கீழ்ச்சபை, மன்னருடைய அமைச்சர்கள் பாராளுமன்றத்துக்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என வாதாடி வந்தது. ஆனால் மன்னர் டேனிய நாட்டின் இராணுவத்தைப் பலப்படுத்த வேண்டுமென விரும்பியபோது தன்னாலும், தன்னுடைய அமைச்சர்களாலும் கொண்டு வரப்பட்ட இராணுவ மசோதாவிற்கு ஆதரவு தராத கீழ்ச்சபைக்கு எந்தவிதச் சலுகையும் அளிக்க மறுத்தார். ஏறத்தாழ 1872 முதல் இருபதாம் நூற்றுண்டின் தொடக்கம் வரை, அரசியலமைப்புச் சட்டம் எந்த வகையிலும் பயன்படுத்தப்படாமல் இருந்தது. ஒவ்வோர் ஆண்டும் பொது மக்களிடமிருந்து பல துறைகளில் வரிகள் வசூலிக்கப்பட்டாலும் அவை அனைத்தும் பாராளு மன்றத்தின் அனுமதியின்றியே அரசாங்கத்தில் மன்னரால் செலவு செய்யப்பட்டன.

பாராளுமன்றத்தின் இரு சபைகளுக்கிடையே நடைபெற்ற சச்சரவுகளின் பொழுது அரசரின் போக்கை மக்கள் கண்டிக்க விரும்பவில்லை. ஆனால் அதே சமயத்தில் தங்களுடைய சிறிய நிலப்பகுதிகளில் தீவிர சாகுபடி முறைகளைக் கையாண்டு பொருளாதார நிலைகளை உயர்த்திக் கொண்டனர். மற்றவர்கள் பால் பண்ணைகள், கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவற்றை ஏற்படுத்தி அவற்றின் மூலமாகத் தங்கள் பொருளாதார நிலையை உயர்த்திக் கொண்டனர்.

பொருளாதார நிலையில் உயர்ந்த பிறகு இந்நாட்டு மக்கள் அரசியல் விவகாரங்களில் ஈடுபட ஆரம்பித்தனர். படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்த நடுத்தர வகுப்பினர் மன்னருடைய எதேச்சாதிகாரப் போக்கைக் குறைகூற ஆரம்பித்தனர். மன்னர் முதுமை அடைந்துவிட்டதால் தன்னுடைய எதிர்ப்பாளர்களுக்கு எதிராகச் செயல்பட விரும்பாமல், 1901-ல் பொது மக்களுடைய விருப்பத்திற்கிணங்க, தன்னுடைய அமைச்சரவையைப் பாராளுமன்றத்துக்குக் கட்டுப்பட்ட அமைச்சரவையாக்கினர். மேலும் இந்த அமைச்சரவையில் பாராளுமன்றத்தின் கீழ்ச்சபை அங்கத்தினர்கள் பெரும்பான்மையினராக இருந்தனர்.

டென்மார்க்கின் பாராளுமன்றம் பின்னர் சிறிதளவு சுதந்திரமாகச் செயல்படத் தொடங்கியது. ஆனால் ஜனநாயகப் பாராளுமன்றமாக விளங்கவில்லை. ஆனல் டேனியர்கள் ஜனநாயக அரசாங்கத்திற்காகத் தொடர்ந்து கிளர்ச்சி செய்து கொண்டே இருந்தனர். இக்கிளர்ச்சிகள் 1914-15 ஆண்டுகளில் ஏற்பட்ட அரசியல் திருத்தங்களின் மூலம் பலனளித்தது. இவ்வரசியல் மாற்றத்தின் காரணமாக ஓட்டுரிமை பெறும் வயது 30-ல் இருந்து 25 ஆகக் குறைக்கப்பட்டது. பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையைத் தேர்ந்தெடுப்பதற்கான உரிமை 25 வயது நிரம்பிய எல்லா ஆண்களுக்கும், பல பெண்களுக்கும் வழங்கப்பட்டது. பாராளுமன்றத்தின் மேல்சபையில் அங்கத்தினர்கள் நியமனம் செய்யும் முறை ஒழிக்கப்பட்டது. ஃபரோ தீவுகள் (Faroe Islands) ஐஸ்லாந்து ஆகிய பகுதிகளுக்கான சுயஆட்சிச் சட்டங்கள் (Home Rule) முறையே 1902, 1903 ஆகிய ஆண்டுகளில் இயற்றப்பட்டன. கன்னித் தீவுகள் (Virgin Islands) என்ற டென்மார்க்குக்குச் சொந்தமான மேற்கிந்தியத் தீவுகளை ஒட்டு மொத்தமாக அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு டென்மார்க் விற்றுவிட்டது.

6. போர்ச்சுகல், ஸ்பெயின் ஆகிய நாடுகள்

மேற்கு ஐரோப்பாவின் ஒரு பகுதியாகத் தென்கோடியில் அமைந்திருப்பது ஐபீரியன் தீபகற்பம். வடக்கே பிரான்சும் கிழக்கே மத்தியதரைக் கடலும், தெற்கே ஜிப்ரால்டர் ஜலசந்தியும், மேற்கே அட்லாண்டிக் பெருங்கடலும் இத்தீபகற்பத்தின் எல்லைகளாக அமைந்துள்ளன. ஸ்பெயின், போர்ச்சுகல் ஆகிய இரண்டு நாடுகள் இத்தீபகற்பத்தில் அடங்கி

யுள்ளன. பிரான்சு நாட்டைக் காட்டிலும் இத்தீபகற்பத்தின் பரப்பு ஓரளவு அதிகமாக இருந்தாலும், இங்கு வாழும் மக்களின் எண்ணிக்கை குறைவு. இத் தீபகற்பத்தின் மொத்தப் பரப்பள வில் ¼ பங்கு போர்ச்சுகல் நாட்டின் பரப்பாகும். எஞ்சிய பகுதி ஸ்பெயின் நாடாகும். ஸ்பெயின், போர்ச்சுகல் ஆகிய இரண்டு நாடுகளின் வரலாறு, பண்பாடு, நாகரிகம் ஆகியவை ஏறத்தாழ ஒன்றையொன்று ஒத்திருந்தன. மேலும் இவ்விரு நாடுகளிலும் 19-ஆம் நூற்றுண்டில் ஏற்பட்ட அரசியல் மாறுதல்களும், வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று அதிக வேறுபாடுகள் இல்லாமல் இருந்தன.

போர்ச்சுகல், ஸ்பெயின் ஆகிய இருநாடுகளும் பல ஆண்டு களுக்கு முன்பிருந்தே தேசிய நாடுகளாக விளங்கி வந்தன. இவ்விரு நாடுகளும் கடல் கடந்து, மிகப் பெரிய அளவில் நிலப்பரப்பைக் கைப்பற்றி அவற்றைத் தங்கள் குடியேற்ற நாடுகளாக வைத்திருந்தன. தாய்நாட்டில் திருப்தியடையாத மக்களும், தாய்நாட்டின் வலிமையைக் குடியேற்ற நாடுகளை ஆளுவதன் மூலம் அதிகப்படுத்த வேண்டும் என்ற எண்ணமும் உடைய ஸ்பானியர்களும், போர்ச்சுகீஸியர்களும் தங்கள் தங்கள் நாடுகளுக்குச் சொந்தமான அமெரிக்க நாடுகளுக்குச் சென்று அங்குள்ள மக்களைத் தங்கள் மொழியையும், பண் பாட்டையும் பின்பற்றுமாறு செய்தனர். இதனால் ஜெர்மன் மொழியையும், பிரஞ்சு மொழியையும் பேசுகின்ற மக்களைக் காட்டிலும், ஸ்பானிய மொழியையும், போர்ச்சுக்கீஸிய மொழியையும் பேசுகின்றவர்கள் எண்ணிக்கையில் அதிக அளவில் இருந்தனர்.

அரசியல் வாழ்க்கையைப் பொருத்த அளவில் ஸ்பெயின் நாட்டிலோ, போர்ச்சுகல் நாட்டிலோ பிரிட்டன், பெல் ஜியம், ஸ்காண்டிநேவியா தீபகற்ப நாடுகள் ஆகியவற்றில், படிப்படியாக ஜனநாயகம் வளர்ச்சியடைந்ததைப் போல அவ்வளவாக வளர்ச்சியடையவில்லை. பத்தொன்பதாம் நூற் ருண்டின் தொடக்கத்தில் நெப்போலியன் தன்னுடைய தீப கற்பப் போரில் ஸ்பெயின் நாட்டு அரசரையும், அவரது மகனை யும் தந்திரமாக ஏமாற்றித் தனது சகோதரனை ஸ்பெயின் நாட் டரசனாக்கினர். இதனால் வெறுப்படைந்த ஸ்பானியர்கள் தங் கள் நாட்டில் பிரஞ்சு ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். அதேபோல போர்ச்சுகல் நாடும் நெப்போலியனுடைய படை யெடுப்பால் பல இன்னல்களுக்கு உள்ளாகியது. இதனை அடுத்து பிரஞ்சு ஆட்சி இந்நாடுகளில் சில காலம் நிலவியது.

பின்னர் மக்கள் வெளிநாட்டு ஆட்சிக்கு எதிராக உள்நாட்டில் கிளர்ச்சி செய்து வெற்றியும் பெற்றனர். இதனை அடுத்து அரியணையைக் கைப்பற்றுவதற்கு இந்நாட்டு அரசர்களுக் கிடையே போட்டியும், பூசல்களும் ஏற்பட்டன. எனவே பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் கால் பகுதியில் இவ்விரு நாடுகளிலும் அமைதியற்ற சூழ்நிலை உருவாகியது.

இந் நாடுகளில் பாராளுமன்றத்தையுடைய ஓர் அரசியல் அமைப்பு 1812க்கும் 1865க்குமிடையே ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இவ்வரசியல் அமைப்பு இந்நாட்டு மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத அளவிற்கு இருந்ததுடன் சரியான முறையில் செயல்படவும் இல்லை. இவ்விரு நாடு களிலும் இருந்த பெரும்பான்மை மக்களான உழைப்பாளர்கள் கல்வியறிவு அற்றவர்களாக இருந்தனர். எனவே இவர்கள் கண்மூடித்தனமாகத் தங்கள் பகுதியில் நிலவிய கருத்துகளை ஏற்றுக் கொண்டு முறைகேடற்ற ஆட்சிக்குத் தங்கள் ஒத்துழைப்பையும் கொடுக்கவேயில்லை. அரசியல் அமைப்புக்கு ஏற்ப அரசாளும் பொறுப்பை, அரசியலை நம்பி வாழும் சிறுபான்மையினரான அரசியல்வாதிகள் ஏற்றுக்கொண்டிருந் தனர். இவர்கள் சுதந்திரத்தையும், மக்களாட்சிக் கருத்தையும் அதிகமாகப் பேசிக்கொண்டு இருந்தார்களே தவிர அவற்றைச் செயல்படுத்த சிறிதும் முயலவில்லை. மேலும் மக்களாட்சிக் கொள்கைகளையும், சுதந்திரத்தையும் பேசுவதன் மூலம் இவர்கள் தங்கள் வாழ்க்கையையும் வசதிகளையும் பெருக்கிக் கொண் டார்கள். தங்கள் நாட்டின் நலனுக்காகவோ, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவோ இவர்கள் பாடுபடவில்லை. இராணுவம்தான் நாட்டில் உண்மையான அதிகாரத்தைப் பெற்றிருந்தது. இந்நாடுகளில் இராணுவம் அராஜக அரசுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. அரசியல் அமைப்புக்கு உட்பட்டோ, உட்படாமலோ இருந்தாலும், அரசாங்கங்கள் அவற்றின் உயர்மட்ட அதிகாரிகளின் ஒத் துழைப்பு இல்லாமல் முறையாக இயங்க முடியாது. ஸ்பெயின், போர்ச்சுகல் ஆகிய இரு நாடுகளிலும் உயர்மட்ட அரசாங்க அதிகாரிகள் தங்கள் அரசுடன் முழுமனத்துடன் ஒத்துழைக்க வில்லை.

ஸ்பெயின் நாட்டில் அராஜக ஆட்சிக்கு எதிராக அந்நாட்டு மக்கள் 1868-ல் ஒரு கிளர்ச்சி செய்தனர். இக்கிளர்ச்சி அராஜக ஆட்சியில் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமை உச்ச கட்டத்தை அடைந்தபொழுது துவங்கப்பட்டது. இக்

கிளர்ச்சிக்கு இராணுவம் முழு ஒத்துழைப்பைக் கொடுத்தது. தளபதி பிரிம் (Prim) என்பவர் தலைமை தாங்கி, கிளர்ச்சியை நடத்தினர். இக்கிளர்ச்சியின் பொழுது ஸ்பெயின் நாட்டை ஆண்டு வந்தவர் இரண்டாம் இஸபெல்லா என்பவராவார். இவரிடம் அரசியாக இருப்பதற்கான தகுதிகள் ஒரு சிறிதும் காணப்படவில்லை. மேலும் இவர் நல்லொழுக்கமற்றவராகவும் இருந்தார். எனவே அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் இவருக்கு ஒத்துழைப்பு கொடுக்காததால், கிளர்ச்சியின் உச்சகட்டத்தில் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காகத் தன் நாட்டை விட்டே ஓடிவிட்டார்.

இரண்டாம் இஸபெல்லா ஸ்பெயின் நாட்டை விட்டு ஓடிய பிறகு அந்நாட்டில் ஒரு புதிய அரசியல் அமைப்பு ஏற்பட்டது. இவ்வரசியல் அமைப்பு பிரிட்டனில் இருந்த அரசியல் அமைப்பைப் போலவே அமைக்கப்பட்டது. இதன்படி மன்னரின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டன. ஜனநாயக முறையை அடிப்படையாகக் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சட்ட மன்றம் ஏற்படுத்தப்பட்டது. இது கார்டஸ் (Cortes) என வழங்கப்பட்டது.

புதிய சட்டமன்றம் ஏற்படுத்தப்பட்ட பொழுது ஸ்பெயின் நாட்டின் அரியணை காலியாக இருந்தது. சட்டமன்றம் ஏற்பட்டபின் இரண்டாண்டுக் காலம் தளபதி பிரிம் (Prim) ஸ்பெயின் நாட்டில் அமைதியையும், ஒழுங்கையும் நிலை நாட்டத் தேவையான எல்லா அதிகாரங்களையும் உபயோகப் படுத்தினர். சில சமயம் சர்வாதிகாரி போலவும் விளங்கினர். ஆனல் அதே சமயத்தில் வெளிநாட்டில் உள்ள ஒவ்வொரு இளவரசரையும் தூண்டி, ஸ்பெயின் நாட்டின் அரச பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். ஆனல் எல்லா இளவரசர்களும் மறுத்து விட்டனர். இறுதியாக அமாடியோ (Amadeo) என்ற இளவரசரை ஸ்பெயின் நாட்டின் அரியணையை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினர்.

அமாடியோ இளவரசர், இத்தாலி நாட்டில் ஆட்சி புரிந்த சவாய் குடும்பத்தைச் சேர்ந்தவர். மேலும் இவர் இத்தாலி நாட்டை ஆண்டு வந்த இரண்டாம் விக்டர் இமானுவேல் என்பவரின் இளைய மகனவார். இளவரசர் அமாடியோ, தளபதி பிரைம்மின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு, 1870ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஸ்பெயின் நாட்டிற்கு வந்தார். இத்தாலிய இளவரசர் ஸ்பெயின் நாட்டில் புதிய அரசராகக்

காலடி வைத்த அதே நாளில் துரதிர்ஷ்டவசமாக தளபதி பிரிம் படுகொலை செய்யப்பட்டார். எனவே, ஸ்பெயின் நாட்டின் அரசியல் சூழ்நிலைகளையும், மக்களின் கருத்துக்களையும் நன்கு அறிந்து கொள்ளாமலேயே அமாடியோ ஸ்பெயின் நாட்டின் அரசபதவியை ஏற்கத் தொடங்கினர்.

ஏறத்தாழ இரண்டாண்டுக் காலம் அரசர் அமாடியோ ஸ்பெயின் நாட்டில் பல இன்னல்களைச் சமாளித்தார். இக் குறுகிய காலத்தில் பல திசைகளிலிருந்து வந்த எதிர்ப்புக்களை இவர் சமாளிக்க வேண்டியதாயிற்று. ஸ்பெயின் நாட்டு மக்கள் வெளிநாட்டைச் சேர்ந்த ஓர் இளவரசர் தங்கள் நாட்டின் அரச பதவியை ஏற்றுக் கொண்டு தங்கள் மீது அதிகாரம் செலுத்துவதை விரும்பவில்லை. அத்துடன் தங்கள் நாட்டின் அரியணையில் தங்கள் நாட்டு அரசவம்சத்தைச் சார்ந்த ஒருவரையே முறைப்படி அரசராக்க விரும்பினர்.

இந்நிலையில் ஸ்பெயினில் அரசர் அமாடியோவை விரும்பாத சில தீவிரவாதிகள் கார்லிஸ்ட் இயக்கம் (Carlist Movement) என்ற ஓர் இயக்கத்தைத் தோற்றுவித்து, அதன் மூலம் தங்கள் நாட்டின் அரச பதவியில், தங்கள் நாட்டு அரச குடும்பத்தைச் சேர்ந்த, தகுதியான ஒருவரை அமர்த்த முயற்சி செய்தனர். இவ்வியக்கங்கள் பாஸ்க், நவாரே (Basque, Navarre) போன்ற சில முக்கிய பகுதிகளில் நன்கு வளர்ச்சியடைந்து மக்களின் நல்லாதரவைப் பெற்றது.

இத்தாலிய ஒருமைப்பாட்டு இயக்கம் வலுவடைந்த பொழுது சவாய் குடும்பத்தைச் சார்ந்த இத்தாலிய அரசர் ரோம் நகரத்தில் இருந்த போப்பாண்டவருக்கு எதிராகச் செயல் பட்டார். தங்களது மதத்தின் தலைமை இடத்து போப்பிற்கு எதிராகச் செயல்பட்ட ஒரு மன்னனுடைய வாரிசில் வந்த இளவரசரைத் தங்கள் நாட்டின் அரசராக ஏற்றுக் கொள்ள ஸ்பெயின் நாட்டில் இருந்த குருமார்களும், தீவிர கத்தோலிக்கர்களும் விரும்பவில்லை. பே லும் அமாடியோவைத் தங்கள் மதத்தின் எதிரியாகவே கருதினர். எனவே கத்தோலிக்கக் குருமார்களும், தீவிர கத்தோலிக்கர்களும் அமாடியோவிற்கு எதிராக கார்லிஸ்ட் இயக்கத்திற்குத் தங்கள் ஆதரவை நல்கினர்.

அரசாங்க அதிகாரிகள், சில இராணுவ அதிகாரிகள், பொதுமக்கள், மதவாதிகள் ஆகிய அனைவரும் அமாடியோ விற்கு எதிராகச் செயல்படத் தொடங்கியதால் கார்லிஸ்ட் இயக்கம் (Carlist movement) மேலும் வலுவடைந்தது. இவ்

வியக்கத்தினர் டான்கார்லாஸ் என்பவரைத் தங்கள் நாட்டின் அரசராக்கத் திட்டமிட்டனர். இவர் இரண்டாம் இஸபெல் லாவிற்கு எதிராகப் போராடிய டான்கார்லாஸ் என்பவரின் பேரராவார்.

இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, புரட்சி செய்யும் தீவிரவாதிகள் தங்கள் நாட்டில் மதச் சார்புடைய மன்னராட்சியை ஒழித்துவிட்டு, மக்களாட்சி முறையை அடிப் படையாகக் கொண்டு ஓர் அரசை ஏற்படுத்த முயற்சி செய் தனர். இம்முயற்சி அரசர் அமாடியோவிற்குள்ள எதிர்ப்பை மேலும் பலப்படுத்தியது. புதிய சட்டமன்றமான கார் டெஸ்ஸில் இருந்த நடுத்தரவாதிகள் மன்னருக்கு ஓரளவு ஆதரவாக இருந்தனர். இவர்களுடன் இராணுவத்தினர் சிலரும் மன்னருக்கு ஆதரவாக இருந்தனர். மார்ஷல் செர்ராேேனா (Marshal Serrano) என்பவர் இராணுவத்தில் மன்னருடைய ஆய் வாளர்களின் தலைவராக இருந்தார். இவர் பிரிம் ஸ்பெயின் நாட்டின் இராணுவத் தளபதியாக இருந்தபொழுது லெப்டி னன்டாகப் பணியாற்றியவர். முதலில் மார்ஷல் செர்ராேனா, கார் லிஸ்டுகளின் நடவடிக்கைகளையும், அவர்களின் இயக்கத் தையும் ஒடுக்குவதில் தீவிரக் கவனம் செலுத்தி, ஓரளவு வெற் றியும் பெற்றார். ஆனால் இராணுவத்தினரை மன்னருக்கு ஆதரவாக ஒன்று திரட்டும் தன்னுடைய முயற்சியில் இவர் படு தோல்வி அடைந்தார்.

இதற்கிடையில் புதிய சட்டமன்றமான கார்டஸில் இருந்த நடுத்தரவாதிகளுக்குள் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. அமாடியோ ஸ்பெயின் நாட்டின் அரசராகப் பதவியேற்ற இரண்டு ஆண்டுகளுக்குள் ஐந்து முறைகளுக்கு மேல் அமைச் சரவை மாற்றி அமைக்கப்பட்டது. எனவே புதிய சட்டசபை யான கார்டஸிலும் நிலையில்லாத கொள்கைகள் மாறி மாறிப் பின்பற்றப்பட்டன. மூன்று முறை பொதுத் தேர்தல்கள் நடத் தப்பட்டன. தனக்கு எந்த ஒரு வகையிலும் ஆதரவு பெறாத நிலையில் அரசர் அமாடியோ வெறுப்படைந்து, 1873ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஸ்பெயின் நாட்டின் அரச பதவியைத் துறந்து தன்னுடைய நாட்டிற்குக் கப்பலேறினார். நாட்டில் அரசர் ஒருவரும் இல்லாத நிலையில் புதிய பாராளு மன்றமான கார்டஸ், அண்டை நாடான பிரான்சு நாட்டில் ஏற் பட்ட மாறுதல்களை அப்படியே பின்பற்றி குடியரசு நாடு என ஸ்பெயின் நாட்டைப் பிரகடனப் படுத்தியது.

குடியரசு பிரகடனப்படுத்தப்பட்டதால் திருப்தியடைந்த ஜனநாயகவாதிகள் ஸ்பெயின் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் மிகச் சிறுபான்மையினராக இருந்தனர். மேலும் புதிய பாராளுமன்றமான கார்டஸில் இருந்த இவர்களுடைய தலைவர்கள் பேச்சு வீரர்களாக இருந்தார்களே யொழிய, தங்கள் கொள்கைகளைச் செயல்படுத்தும் திறமை மிக்கவர்களாக இல்லை. மேலும் கார்டஸில் இருந்த ஜனநாயகவாதிகளிடையே கருத்து ஒற்றுமை காணப்படவில்லை. ஒவ்வொருவரும் தங்கள் கருத்துக்களைச் செயல்படுத்த முனைந்தனர். இவர்கள் சிறுபான்மையினராக இருந்ததால் எந்த ஒன்றையும் இவர்களால் செயல்படுத்த முடியவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக இவர்களிடையே ஒரு நிலையான கொள்கை காணப்படவில்லை. குடியரசு பிரகடனப் படுத்தப்பட்டவுடன் மார்கல்(Margall) என்பவருக்கு அதிக ஆதரவு இருந்தது. இவரும், இவருடைய ஆதரவாளர்களும் கூட்டுக் குடியரசை (Federal Republic) விரும்பினர். இக்கூட்டுக் குடியரசில் பல தன்னாட்சி உரிமை பெற்ற ஸ்தல ஸ்தாபனப் பிரிவுகள் அடங்கியிருந்தன. இதனால் விரைவில் குழப்பமும், அமைதியின்மையும் ஏற்படத் தொடங்கியது. நாளடைவில் ஜனநாயகவாதிகளின் ஆதரவு சால்மெரான் என்பவருக்குக் கிடைத்தது. சால்மெரான் என்பவர் தனிக் குடியரசை (Unitary Republic) விரும்பினர். இத்தனிக் குடியரசின் அரசியல் பொறுப்புக்கள் அனைத்தும் மத்திய அரசாங்கத்திடம் இருந்தது. மத்திய அரசின் இருப்பிடம் மாட்ரிட் (Madrid) என்ற இடத்தில் இருந்தது. இவ்வமைப்பு நாளடைவில் மக்களின் எதிர்ப்புக்கு உள்ளாகியது. எனவே ஸ்பெயின் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் அதிருப்தியடைந்த மக்கள், தங்கள் நாட்டின் புதிய அரசாங்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சிகள் செய்யத் தொடங்கினர்.

ஸ்பெயின் நாட்டின் வடபகுதியில் டான்கார்லாஸ் என்பவர் 75,000 போர் வீரர்கள் கொண்ட ஒரு படையைத் தயார் செய்து உள்நாட்டுப் போரைத் துவக்கினர். உள்நாட்டுப் போர் துவங்கிய உடனேயே கார்டெஸ் என்ற புதிய சட்டமன்றம் பல இன்னல்களைச் சமாளிக்க வேண்டியிருந்தது. எனவே முதல் நடவடிக்கையாக இச்சட்டமன்றம் சால்மெரான் என்பவரை நீக்கிவிட்டு, தீவிர ஜனநாயக வாதியான எமிலோ காஸ்டெலார் (Emilio Castelar) என்பவரிடம் அரசாங்கப் பொறுப்புக்களை ஒப்படைத்தது. இவர் அரசியல் பொறுப்புக்களை ஏற்ற உடனேயே தன்னுடைய முழு அதிகாரங்களையும் பயன்படுத்தி, சட்டமன்றமான கார்டஸை ஒத்திப் போட்டு

விட்டு, ஆட்சி புரிவதற்கு இராணுவத்தின் ஆலோசனையை நாடினர்.

நாட்டின் அரசியல் நிலைமையை நன்கு புரிந்து கொண்ட ஸ்பெயின் நாட்டு இராணுவம், காஸ்டெலாரின் நடவடிக்கைகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது. அன்றியும் மார்ஷல் செர்ராஞே என்பவரின் தலைமையின்கீழ் ஓர் இராணுவ அரசாங்கத்தை ஏற்படுத்தியது. இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட இராணுவ அரசாங்கத்தில் ஓர் அங்கத்தினராக இருந்தவர் மார்ஷல் மார்டினஸ் டி-கேம்போஸ், (Marshal Martinez de Campos). இவர் குடியரசை ஒழித்துவிட்டு, இரண்டாம் இஸபெல்லாவின் இளைய மகனை ஆல்பான்ஸோ (Alphonso) என்பவரை ஸ்பெயின் நாட்டின் மன்னராக்குவதற்கான திட்டத்தைத் தீட்டினர். மேலும் கேம்போஸ், ஆல்பான்ஸோவிடம் அரசியல் அமைப்புக்குக் கட்டுப்பட்டு ஆட்சிபுரிய ஓர் உறுதிமொழி வாங்கிக் கொண்டு, 1875-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அவரை மாட்ரிட்டில் ஸ்பெயின் நாட்டின் அரசராக அறிவித்தார். இவ்வறிக்கையின்படி ஆல்பான்ஸோ பன்னிரண்டாம் ஆல்பான்ஸோ என்ற பட்டப் பெயருடன் ஸ்பெயின் நாட்டின் மன்னரானர்.

ஆல்பான்ஸோ ஆட்சிப் பொறுப்பினை ஏற்றவுடன் பல ஆண்டுகளாக நடைபெற்ற கிளர்ச்சிகள் அடங்கி, ஸ்பெயின் நாட்டில் அமைதி நிலவத் தொடங்கியது. இவ்வமைதி ஏறத்தாழ முப்பதாண்டுக்காலம் நிலைத்திருந்தது. ஆல்பான்ஸோ ஆட்சிப் பொறுப்பேற்ற அடுத்த ஆண்டிலேயே கார்லிஸ்டுகளும், அவர்களுடைய இயக்கமும் அடியோடு ஒடுக்கப்பட்டன. 1876-ல் புதிய அரசியலமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இப்புதிய அரசியலமைப்பு தனிமனித உரிமைகளுக்கும், பாராளுமன்ற அரசியல் முறைக்கும் வழிவகை செய்தது. மேலும் மன்னர் ஆல்பான்ஸோ 1868-ஆம் ஆண்டு ஸ்பெயினில் ஏற்பட்ட கிளர்ச்சியைப் பின்பற்றி, 1878-ல் கியூபாவில் ஸ்பானிய அரசுக்கு எதிராகத் துவங்கிய கிளர்ச்சியை, மார்ஷல் கேம்போஸ், இராணுவத்தின் ஒத்துழைப்புடன் அடக்கினர்.

ஸ்பெயின் நாட்டில் ஆல்பான்ஸோவின் தலைமையிலான புதிய அரசு, தனது அரசியல் அலுவல்களை 1865-ஆம் ஆண்டிற்குப் பின் மிகத் துரிதமாகச் செயல்படுத்தத் துவங்கியது. இவ்வரசியலமைப்பு செயல்படத் துவங்கும் போது ஸ்பெயின் நாட்

டில் பழமைக் கட்சி (Conservative Party), மிதவாதக் கட்சி (Liberal Party) என்று இரு கட்சிகள் தோன்றிச் செயல்படத் தொடங்கின.

பழமைக் கட்சியை ஸ்பெயின் நாட்டில் தோற்றுவித்தவர் கனோவாஸ் டெல் காஸ்ட்டிலோ (Canovas del Castillo) என்பவராவார். இவர் ஒரு சிறந்த வழக்கறிஞராகவும், பத்திரிகையாசிரியராகவும் விளங்கினர். இவருக்கு மார்ஷல் கேம்போஸ் என்பவரின் தலைமையின்கீழ் இருந்த அதிகாரிகளும், போர் வீரர்களுமான ஸ்பானிய இராணுவத்தின் ஒரு பகுதியினரும் உதவிபுரிந்தனர். மிதவாதக்கட்சி மாடியோ சகாஸ்டா (Mateo Sagasta) என்ற பொறியியல் வல்லுநரால் நிறுவப் பட்டது. இவருக்கு மார்ஷல் செர்ரானோ என்பவரின் தலைமையின்கீழ் பணியாற்றிய அதிகாரிகளும், போர் வீரர்களுமான இராணுவத்தின் ஒரு பகுதியினரும் உதவி புரிந்தனர்.

பழமைக்கட்சியைச் சார்ந்தவர்களுக்கும், மிதவாதக் கட்சியைச் சார்ந்தவர்களுக்குமிடையே கொள்கையளவில் மிகச் சிறிய வேறுபாடே காணப்பட்டது. பழமைக்கட்சி திருச்சபைக்கும், நிலச்சுவான்தாரர்களுக்கும் சற்று ஆதரவாக இருந்தது. ஆனல் மிதவாதக் கட்சி அரசியலில் திருச்சபையின் செல்வாக்குக்குச் சிறிது எதிர்ப்புத் தெரிவித்தது. அரசியல் ஜனநாயகம் என்ற கொள்கையை உதட்டளவிலே பின்பற்றியது. ஆனல் பெரும்பாலான கொள்கைகளில் இவ்விரு கட்சினரும் இணைந்தே செயல்பட்டனர். பன்னிரண்டாம் ஆல்பான்ஸோவின் ஆட்சிக்காலம் முழுவதும், அவரது மனைவியான மரியா கிறிஸ்தியானு (Maria Christina) என்பவர் தனது மகனை பதின்மூன்றும் ஆல்பான்ஸோவிற்காக ஆட்சிப் பொறுப்புகளை ஏற்றிருந்த காலம் முழுவதும் (1885 முதல் 1902 வரை) மிதவாதக் கட்சித் தலைவரும், பழமைக்கட்சித் தலைவரும் குறிப்பிடத்தக்க மாற்றமெதுவுமில்லாமல் அரசியலில் மாறிமாறி ஆட்சிப் பொறுப்பேற்று வந்தனர்.

உள்நாட்டு நிர்வாகம்

ஸ்பெயின் நாட்டில் 1902க்கு முன் உள்ள 27 ஆண்டுகளில் உள்நாட்டு அமைதி நிலைநாட்டப்பட்டது. கார்லிஸ்ட்டுகளின் கிளர்ச்சிகளும், ஜனநாயக வாதிகளின் குற்றச்சாட்டுகளும் நசுக்கப்பட்டன. 1851-ஆம் ஆண்டு திருச்சபையுடன் செய்து கொண்ட உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டது. இதன்படி மதசம்பந்தமான இயக்கங்கள் அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்

படவில்லை. நாட்டில் மக்களுக்குக் கல்வியறிவைப் புகட்டும் பொறுப்பு மதகுருமார்களுக்கு அளிக்கப்பட்டது. இத்தகைய ஏற்பாட்டின் காரணமாக, கத்தோலிக்கர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்தனர்.

இதேபோன்று இராணுவத்தின் பெரும்பகுதியினரும், நிர்வாக அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்களில் பெரும் பான்மையோரும், புதிய ஸ்பானிய அரசுக்கு ஆதரவு அளித்த னர். பெரும்பான்மை பலத்தைப் பெற்ற பிறகு ஸ்பானிய அரசாங்கம் சுய ஆட்சிக் கோஷங்களை ஒடுக்குவதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டு அதில் வெற்றியும் பெற்றது.

ஸ்பெயின் நாட்டின் தெற்குப் பகுதியிலும், மேற்குப் பகுதியிலும் அதிக நிலங்களை உடைய பண்ணைகள் பல இருந்தன. வடக்குப்பகுதியிலும், கிழக்குப் பகுதியிலும் குறைந்த எண்ணிக்கையில் விவசாயிகளை உடைய சிறிய பண்ணைகள் பல இருந்தன. எனவே இக்காலத்தில் ஸ்பெயின் நாட்டின் முக்கிய தொழில் வேளாண்மையாகவே இருந்தது. இருப்பினும் மற்ற ஐரோப்பிய நாடுகளில் பரவிய தொழிற் புரட்சி ஸ்பெயின் நாட்டையும் விட்டு விடவில்லை. படிப் படியாகப் பல தொழிற்சாலைகள் இந்நாட்டில் இக்காலத்தில் நிறுவப்பட்டன. குறிப்பாக,முன்னதாகவே வாணிபத்தில் சிறந்து விளங்கிய பகுதியான பார்சிலோனு (Barcelona), நெசவாலை களுக்குப் பெயர்பெற்ற நகரமாகவும் மாற ஆரம்பித்தது. பில்பாவோ (Bilbao) என்ற பகுதியைச் சுற்றிலும் சுரங்கத் தொழில் வளர்ச்சியடையத் தொடங்கியது. தொழில் வளர்ச்சி ஏற்படத் தொடங்கியதுமே அதன் விளைவுகளாகத் தோன்றும் புதிய நகரங்கள், தொழிலாளர்களின் இனம், நடுத்தர வகுப் பினரின் எண்ணிக்கைகள் ஆகியவை பெருகத்தொடங்கின. ஸ்பெயின் நாடு முழுவதும் பல தொழிற்சாலைகள் நிறுவப் பட்டன, போக்குவரத்துத் துறையில், இரும்புத்தொழில் வளர்ச்சியின் காரணமாக, இருப்புப்பாதைகள் பெரும்பங்கு பெற்றன. இதனுல் ஸ்பெயின் நாட்டின் எல்லாப் பகுதியிலும் உள்ள மக்களிடையே ஒற்றுமையுணர்ச்சி வேரூன்ற ஆரம் பித்தது.

ஸ்பெயின் நாட்டின் அரசாங்கமும் தன் நாட்டு விவசாயத் திற்கும், தொழிலுக்கும் ஆதரவு அளிப்பதற்காகச் சுங்க வரியை விதித்தது, மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பொருளாதாரத் துறையில் பல மாற்றங்களைச் செய்த பின்னர்

அரசியல் துறையிலும் சில மாற்றங்களை இவ்வரசு செய்தது. இதன் பயனாக, கார்டெஸ் என்ற சட்டமன்றத்திற்கான உறுப்பினர்களைப் பொதுத் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. வயது வந்த எல்லா ஆண்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. இவ்விரு அரசியல் சீர்திருத்தங்களும் சகாஸ்டா (Sagasta) என்பவராலும், நடுத்தரவாதிகளின் முயற்சியாலும் 1890–ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டன. பின்னர் நகரங்களில் வாழும் தொழிலாளிகளுக்கும், கிராமங்களில் வாழும் விவசாயிகளுக்கும் சம அந்தஸ்தும் உரிமையும் வழங்கும் பொருட்டு பொதுத் தேர்தல்களில் ஆண் வாக்காளர்கள் அனைவரும் வாக்களிக்குமாறு கட்டாயப்படுத்தப் பட்டனர்.

வெளி நாடுகளில் ஸ்பெயினின் ஆதிக்கம்

பன்னிரண்டாம் ஆல்பான்ஸோ ஸ்பெயின் நாட்டு மன்னராகப் பதவி ஏற்ற பொழுது கியூபா, போர்டோரிகோ, பிலிப்பைன்ஸ் தீவுகள், கரோலையன் தீவுகள், மொராக்கோவின் ஒருபகுதி ஆகியவை ஸ்பெயின் நாட்டு ஆதிக்கத்தின் கீழ் இருந்தன. இப்பகுதிகள் ஸ்பெயின் நாட்டிலிருந்து வெகு தொலைவில் அமைந்து இருந்தமையின் இப் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்துவதற்கு ஸ்பெயின் மிக அதிக அளவில் செல்வத்தையும், மனித உழைப்பையும் செலவிட வேண்டியிருந்தது. மேலும் பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் வேகமாக வளர்ச்சியடைந்த தேசிய இயக்கங்கள் ஸ்பெயின் நாட்டின் குடியேற்ற நாடுகளில் வாழ்ந்த மக்களையும் தட்டி எழுப்பியது. இதனால் ஸ்பெயின் நாட்டிற்கு மேலும் பல இன்னல்கள் ஏற்பட்டன. தங்களுடைய உழைப்பும் பணமும் தங்கள் நாட்டிற்கு வெளியே விரையமாவதை விரும்பாத சில பழமை விரும்பிகளும், மிதவாதக் கட்சிக்காரர்களும் வெளிநாடுகளில் தங்கள் அரசு ஆதிக்கம் செலுத்துவதை நிறுத்திக்கொள்ள வேண்டுமென விரும்பினர்.

இருப்பினும் ஸ்பெயின் நாட்டு அரசு மற்ற ஐரோப்பிய நாடுகளைப் போலவே, தானும் குடியேற்ற நாடுகளைப் பெற்றிருக்க வேண்டுமென எண்ணியதுடன், தனது நிலை மற்ற ஐரோப்பிய நாடுகளுடன் வளர்ச்சியடைய வேண்டுமெனவும் எண்ணியது. அத்துடன் மேலும் சில பகுதிகளைத் தன்னுடன் இணைத்து, பெரிய கடலாதிக்கத்தைப் பெறவேண்டும் எனவும் எண்ணியது. கடலாதிக்கம், வளர்ச்சியடைவதால் ஸ்பெயின் நாட்டு மன்னரின் பெருமையுடன், அந்நாட்டின் புகழும் வளர்ச்சியடையும் என அரசு கருதியது. எனவே 1875 க்குப்

பின்னர் குடியேற்றக் கொள்கையை மேலும் தீவிரப்படுத்த அரசு முயற்சித்தது.

ஸ்பெயின் நாட்டு ஆதிக்கத்தின்கீழ் இருந்த பகுதியில் வாழ்ந்த மொராக்கோ நாட்டு மக்கள், தங்கள் நாட்டில் அன்னிய ஆட்சிக்கு எதிராக 1893-ஆம் ஆண்டு கிளர்ந்தெழுந் தனர். ஆனால் இக்கிளர்ச்சி மார்ஷல் கேம்போஸ் என்பவரின் தலைமையின்கீழ் இயங்கிவந்த ஆக்கிரமிப்புப் படைகளால் ஒடுக்கப்பட்டது. கிளர்ச்சி ஒடுக்கப்பட்ட இரண்டாண்டுகளுக் குப் பின்னர், மேற்கிந்தியத் தீவுகளில் ஸ்பெயின் நாட்டுக்குச் சொந்தமான கியூபா தீவில் வாழ்ந்த மக்கள் தங்கள் தாய் நாட்டிற்கு எதிராகப் புரட்சி செய்தனர். இதே சமயத்தில் ஐக்கிய அமெரிக்காவின் தூண்டுதலால் பிலிப்பைன் தீவுகளில் வாழ்ந்த மக்களும் தங்கள் நாட்டில் ஸ்பானிய ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். எனவே ஸ்பானிஷ் அரசாங்கத் திற்கு கியூபாவில் ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்குவதில் அதிக சிரமங்கள் ஏற்பட்டன. இந்நிலையில் 1898-ல் மெயின் (Maine) என்ற அமெரிக்கப் போர்க்கப்பல் ஒன்று கியூபா துறைமுகத்தில் மூழ்கடிக்கப்பட்டது. இதனை மூழ்கடித்தவர்கள் கியூபா நாட்டு மக்களா? ஸ்பெயின் நாட்டு மக்களா? அல்லது அமெரிக்கர் களா? என்பது விளங்காமல் இருந்தது. இருப்பினும் கப்பல் மூழ்கடித்த குற்றம் ஸ்பெயின் நாட்டின்மீது சுமத்தப்பட்டு அமெரிக்க ஜனாதிபதியான மெக்கின்லி (Mekinley) யின் வேண்டுகோளுக்கிணங்க அமெரிக்க காங்கிரஸ், ஸ்பெயின் நாட்டிற்கு எதிராகப் போர்ப்பிரகடனம் செய்தது. இது ஸ்பானிய -அமெரிக்கப்போர் என்று சிறப்புற வழங்கப்படுகிறது. இப் போரின் பொழுது ஸ்பெயின் நாட்டின் கப்பற்படை ஐக்கிய அமெரிக்கக் கடற்படையால் ஒடுக்கப்பட்டது. ஸ்பெயின் நாடு கடற்படையை இழந்தது என்று சொல்லும் அளவுக்கு அதன் கடற்படை வலிமையற்றதாயிற்று. மேலும் இப்போரில் பல்லா யிரக் கணக்கான ஸ்பெயின் நாட்டுக்காரர்கள் உயிரிழந்தனர். ஸ்பெயின் நாட்டுக் கடன் சுமையும் தாங்க முடியாத அளவு பெருகியது. எனவே வேறு வழியின்றி ஸ்பெயின் நாடு ஐக்கிய அமெரிக்காவுடன் பாரிஸ் உடன்படிக்கை என்ற ஓர் ஒப்பந் தத்தை அமெரிக்காவில் தங்கியிருந்த பிரஞ்சு நாட்டுத் தூதுவர் மூலமாக, 1878ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12ஆம் தேதி செய்து கொண்டது. இவ்வுடன்படிகையின்படி ஸ்பெயின் நாடு கியூபா நாட்டிற்குச் சுதந்திரம் வழங்க ஒத்துக்கொண்டது. அத்துடன் போர்டோரிகோ, பிலிப்பைன்ஸ் தீவுகள் ஆகிய பகுதிகளையும் ஐக்கிய அமெரிக்காவிற்கு விட்டுக் கொடுத்தது.

இதனையடுத்து, 1899-ல் கரோலியன் தீவுகளை ஜெர்மனியிடம் ஸ்பெயின் விற்றுவிட்டது.

ஸ்பானிய அமெரிக்கச் சண்டையின் விளைவுகள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஸ்பெயின் நாட்டைப் பாதிக்கத் தொடங்கின. ஸ்பெயின் நாடு 1898-ல் அமெரிக்காவுடன் போரிட நேர்ந்ததால், ஸ்பெயின் நாட்டின் பொருளாதாரம் கணிசமான அளவு குறைந்தது. போரின் பொழுது ஸ்பெயின் நாடு போரிட முடியாமல் உடன்படிக்கை செய்துகொண்டதால், ஸ்பெயின் நாட்டு மக்கள் தங்கள் அரசாங்கத்திடம் வைத்திருந்த நம்பிக்கையை இழந்தனர். 1875 முதல் 1902 வரை அரசியலில் முக்கிய பங்கு வகித்த தலைவர்களான கனோவாஸும், ஸகாஸ்டாவும் முறையே 1897, 1903 ஆகிய ஆண்டுகளில் மாண்டனர். இவ்விருவரில் கனோவாஸ் என்பவர் 1897-ல் அவரது எதிர்ப்பாளர் ஒருவரால் கொல்லப்பட்டார். எனவே மக்களை ஒரு வழிப்படுத்தி அமைதிப் பாதையில் அழைத்துச் செல்லத்தக்க தலைவர்கள் யாரும் அப்பொழுது ஸ்பெயின் நாட்டில் இல்லை. இதுவும் மக்கள் தங்கள் அரசாங்கத்திடம் வைத்திருந்த நம்பிக்கையை இழந்ததற்கு ஒரு சான்றாக அமைந்தது. இதற்கிடையில் பல ஆண்டுகளாகப் பெயரளவில் அரசனாக இருந்த பன்னிரண்டாம் ஆல்பான்ஸோவின் மகன் தக்க வயதை அடைந்து பதின்மூன்றாம் ஆல்பான்ஸோ என்ற பட்டப் பெயருடன் ஸ்பெயின் நாட்டின் மன்னரானார். இவருடைய காலத்தில் மீண்டும் கிளர்ச்சிகளும், கட்சிப் பூசல்களும் தலை தூக்க ஆரம்பித்தன. இது ஒருபுறமிருக்க, இனி போர்ச்சுகல் நாட்டைச் சிறிது கவனிப்போம்.

போர்ச்சுகல்: போர்ச்சுகல் நாடு பிரிட்டனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, தன்னுடைய குடியேற்ற நாடுகளைத் தக்க வைத்துக் கொண்டதுடன், அவற்றை விரிவுபடுத்தும் முயற்சியையும் செய்தது. ஸ்பெயின் நாட்டைப் போலவே போர்ச்சுகல் நாடும் பெரும்பாலும் விவசாய நாடாகவே விளங்கியது. இந்நாட்டு மக்கள் வியாபாரத்தில் அதிக நாட்டம் உடையவர்களாகக் காணப்பட்டனர். தொழிலும் இந்நாட்டில் அவ்வளவாக வளர்ச்சியடையவில்லை.

அதிர்ஷ்டவசமாக 1860க்கும் 1879க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் இந்நாட்டில் எந்தவிதப் புரட்சிகளும் தோன்றவில்லை. இருப்பினும் போர்ச்சுகல் நாடும் வேறு பல இன்னல்களுக்குள்ளாகியது. போர்ச்சுகல் நாட்டிலும் ஸ்பெயின்

நாட்டில் தோன்றிய பழைய கட்சியினர், மிதவாதிக் கட்சியினர் ஆகியோர்களைப் போலவே, புத்துயிர்ப்பிகள் (Regenerators), முன்னேற்றவாதிகள் (Progressives) என இரண்டு பிரிவினர் தோன்றினர். இவர்கள் படிப்படியாக வளர்ச்சியடைந்து உள்ளாட்சித் துறைகளையும், பின்னர் மத்திய நிர்வாகத்தையும் கைப்பற்ற முயற்சி செய்தனர்.

போர்ச்சுகல் நாட்டில் 1853-ஆம் ஆண்டு ஏற்பட்ட அரசியல் மாறுதலால் ஐந்தாம் பெட்ரோ (Pedro V) வின் தலைமையில் அரசியலமைக்குட்பட்ட ஓர் அரசாங்கம் அமைக்கப்பட்டது. இம்மன்னர் 1861-ல் இறந்துவிடவே, இவருக்குப் பின் இவரது மகனான முதலாம் லூயி (Louis I) தனது தந்தையால் ஏற்படுத்தப்பட்ட புதிய அரசியல் அமைப்பைப் பின்பற்றி ஆட்சி புரிந்து வந்தார். இவர் 1861 முதல் 1889 வரை சிறப்பாக ஆட்சி புரிந்தார். இவருடைய ஆட்சிக் காலத்தில் போர்ச்சுகல் நாட்டில் அரசாங்கம் மக்களுக்குச் சிறப்பாகப் பணியாற்றியது. அதிருப்தியாளர்கள் எவ்விதக் கிளர்ச்சியும் செய்யவில்லை.

ஆனால் அரசியல்வாதிகள் ஊழல் மிகுந்தவர்களாகக் காணப்பட்டனர். குடியேற்ற நாடுகளைப் பராமரிப்பதற்கு போர்ச்சுகல், தன் நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் பகுதியைச் செலவிட வேண்டியிருந்தது. இதனால் அரசாங்கம் மக்களுக்கு நன்மை புரியும் பணியிலிருந்து சற்று விலகி, அதிக அளவில் வரிகளை விதித்தது. மேலும் பொதுமக்களுக்குக் கல்வி புகட்டுவதில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்த முடியாமல் போய்விட்டது. போதிய வசதி பெறாததால் பொதுக் கல்வி புறக்கணிக்கப்பட்டது. பல சமுதாயச் சீர்திருத்தங்கள் ஒத்திப்போடப்பட்டன. எனவே பல்லாயிரக்கணக்கான போர்ச்சுக்கீசியர்கள் தங்கள் நல்வாழ்வைத் தேடி தங்கள் நாட்டிலிருந்து குடிபெயர்ந்து, தங்கள் மொழி பேசப்பட்டு வந்த பிரேசில் (Brazil) நாட்டில் குடியேறினர். முதலாம் லூயிக்குப் பின்னர் 1889-ல் முதலாம் சார்லஸ் (Charles I) என்பவர் போர்ச்சுகல் நாட்டின் அரச பதவியை ஏற்றார். இவர் 1908 வரை போர்ச்சுகல் நாட்டின் அரசராக இருந்தார். இவருடைய ஆட்சிக் காலத்தில் இவர் பல இன்னல்களைச் சமாளிக்க வேண்டியிருந்தது. முதலாவதாக முடியாட்சிக்கு எதிரான கருத்துக்கள் வலிமையடையத் தொடங்கின. அடுத்து அரசாங்கத்துக்கும், மக்களுக்கும் அதிக அளவில் பொருளாதார நெருக்கடி அடிக்கடி ஏற்பட்டது. மேலும் மன்னராட்சிக் கொள்கையில் நம்பிக்கையுடையவர்களுக்கும் அவருடைய எதிர்ப்பாளர்களுக்குமிடையே அடிக்கடி சச்சரவுகளும்

கைகலப்புக்களும் ஏற்பட்டன. மன்னரும் அரசியலில் தன்னுடைய அதிகாரங்களை அளவு கடந்து பயன்படுத்தினர். எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னுடைய சுய நலன்களுக்காக ஆகும் செலவை அரசாங்கக் கருவூலத்திலிருந்து பெற வேண்டுமென எண்ணினர். எனவே இவருடைய சுயநலன்களுக்குத் தேவையான தொகையைப் பாராளுமன்றம் மறுத்த பொழுதெல்லாம், தன்னுடைய தனி அதிகாரத்தைப் பயன்படுத்தி அதனைக் கலைத்தார். பாராளுமன்றம் இல்லாத சமயங்களில் அமைச்சராணைகளின் (Ministerial Decrees) மூலம் ஆட்சி செலுத்தினர்.

முதலாம் சார்லஸ், 1907-ல் ஜோவோஃபிராங்கோ (Joao Franco) என்ற தன்னுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான பிரதம அமைச்சரிடம் எல்லா அதிகாரங்களையும் ஒப்படைத்தார். ஜோவாஃபிராங்கோ முதலாம் சார்லசுக்கு அடங்கி நடக்குமாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பிரதம அமைச்சரான ஃபிராங்கோ ஒருபுறம் மன்னருடைய பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்து சார்லஸிடம் நற்பெயர் வாங்குவதற்காகவும், மறுபுறம் நிறைய சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கும் திட்டமிட்டு முயற்சிகளை மேற்கொண்டார். தன்னுடைய திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டுத் தனக்கும் அரசனுக்கும் எதிராக உள்ளவர்கள் எல்லோரையும் சிறைப்படுத்தினர். போர்ச்சுகல் நாட்டு சிறைச்சாலைகள் எல்லாம் நிரம்பி வழிந்தன. ஃபிராங்கோவின் இச்செய்கையினல் இவருக்கும் மன்னருக்கும் எதிராக இயங்கி வந்த சக்திகள் வலிமையடையத் தொடங்கின. மன்னர் சார்லஸும் பட்டத்து இளவாசரும் லிஸ்பன் (Lisbon) நகரத்து வீதிகளில் செல்லும் பொழுது படுகொலை செய்யப்பட்டனர். இதனல் அஞ்சிய பிரதமஅமைச்சரான ஃபிராங்கோ போர்ச்சுகல் நாட்டை விட்டே ஓடிவிட்டார். சார்லஸுக்குப் பின்னர் அவரது இரண்டாம் மகனை மேனுவல் (Manuval) இரண்டாம் மேனுவல் (Manuval II) என்ற பட்டப்பெயருடன் போர்ச்சுகல் நாட்டு மன்னரானர், இவர் அனுபவம் சிறிதும் இல்லாத இளைஞர். பதவி ஏற்ற உடனேயே புரட்சி ஒன்றை இரண்டாம் மேனுவல் எதிர்நோக்க வேண்டியிருந்தது.

7. "இத்தாலிய அரசு"
(The Kingdom of Italy)

ஐரோப்பாவின் தெற்குப் பகுதியில் ஐபீரியத் தீபகற்பத்திற்கும், பால்கன் தீபகற்பத்திற்கும் இடையே அமைந்துள்ள

மற்ருெரு தீபகற்ப நாடு இத்தாலி. இயற்கை அமைப்புக்களில் இத்தாலி இந்தியாவை ஒத்திருக்கிறது. வடக்கே ஆல்ப்ஸ் மலைத் தொடர்களும், கிழக்கே ஏட்ரியாடிக் கடலும், தெற்கே அயோனியக் கடல், மத்தியத்தரைக் கடல் ஆகியவையும், மேற்கே தைர்ஹீனியக் கடலும் (Tyrrhenian Sea) இத்தாலியின் எல்லைகளாக அமைந்துள்ளன.

பதினெட்டாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் இத்தாலி நெப்போலியனுடைய படையெடுப்பின் காரணமாக, பிரஞ்சு ஆதிக்கத்திற்கு உள்ளாகியது. நெப்போலியனை இறுதியாகத் தோற்கடித்த பின்னர், வெற்றி பெற்ற நாடுகள் 1815-ல் ஆஸ்திரிய நாட்டின் முதலமைச்சராக (Chancellor) இருந்த மெட்டர்னிக் என்பவரின் தலைமையின் கீழ் ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னுவில் கூடி, ஐரோப்பாவின் பழைய நிலையை மீண்டும் நிலைநாட்டினர். இதனுல் இத்தாலியில் ஆஸ்திரியாவின் ஆதிக்கம் மேலோங்கி இருந்தது. பத்தொன் பதாம் நூற்ருண்டில் மிக விரைவாகப் பரவத் தொடங்கிய தேசிய இயக்கம் இத்தாலி, ஜெர்மனி ஆகிய இரு மத்திய ஐரோப்பிய நாடுகளில் மிக விரைவாக வளர்ச்சியடைந்தது. இதனுல் சார்டீனியாவின் அரசராயிருந்த சவாய் குடும்பத்தைச் சேர்ந்த இரண்டாம் விக்டர் இமானுவெல் என்பவர் இத்தாலியை ஒன்று படுத்தி, ஆஸ்திரிய ஆதிக்கத்தை இத்தாலியினின்றும் விரட்டி யடிக்க முயற்சி செய்தார். பிரெஞ்சுக்காரர்களின் உதவியால் லம்பார்டி என்ற இத்தாலியப் பகுதியிலிருந்து ஆஸ்திரியர்களை இவர் விரட்டினுர். இதனுல் இத்தாலியத் தீபகற்பத்தின் மத்தி யிலுள்ள நாடுகள் இமானுவெலை இத்தாலிய அரசராக ஏற்றுக் கொண்டன. மேலும் கரிபால்டி என்பவரால் தோற்றுவிக்கப் பட்ட "இளைய இத்தாலி" (Young Italy) என்ற இயக்கத்தைச் சார்ந்த இளைஞர்களின் உதவியால், இத்தாலியின் தெற்கே மத் தியத் தரைக்கடலில் அமைந்துள்ள சிசிலித் தீவையும், தெற்கு இத்தாலியப் பகுதியான நேப்பிள்ஸ் பகுதியையும் தன்னுடைய நாட்டுடன் இணைத்தார். பின்னர் 1866-ல் பிரஷ்யாவிற்கும் ஆஸ்திரியாவிற்கும் ஏற்பட்ட ஆஸ்திரிய—பிரஷ்யச் சண்டை யில் பிரஷ்யருக்கு உதவி புரிந்தார். இச்சண்டையில் இத்தாலி யர்கள் கஸ்டோஸா (Custozza) என்ற இடத்தில் ஆஸ்திரியர் களால் தோற்கடிக்கப்பட்டாலும், பெரும்பாலான ஆஸ்திரியப் படைகளை இத்தாலியப் பகுதியில் தடுத்து நிறுத்தினர். எனவே பிரஷ்யர்கள் எளிதாக ஆஸ்திரியர்களைத் தோற்கடித்தனர். இத்தாலியர்கள் பிரஷ்யாவிற்கு உதவி புரிந்தமைக்காக வெனீ ஷியா என்ற பகுதி இத்தாலியுடன் இணைக்கப்பட்டது. இதனை

அடுத்து 1870-ல் போரின் பொழுது, இத்தாலியில் இரண்டாம் விக்டர் இமானுவெலுக்கு எதிராகவும், ரோம் பகுதியில் ஆதிக்கம் செலுத்தி வந்த போப்பாண்டவருக்கு ஆதரவாகவும் அனுப்பிவைக்கப்பட்ட பிரெஞ்சுப் படைகள் பிரான்சுக்குத் திருப்பியழைக்கப்பட்டன. இந்நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, ரோம் மீது படையெடுத்து, போப்பாண்டவரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த பகுதிகளைத் தன்னுடைய பகுதிகளுடன் இரண்டாம் விக்டர் இமானுவெல் இணைத்துக் கொண்டார். இதனால் இத்தாலிய ஒருமைப்பாடு முழுமையடைந்தது.

இத்தாலி பெயரளவில் தேசிய ஒற்றுமை அடைந்தாலும் நாளடைவில் மக்களிடையே பல வேறுபாடுகள் தோன்ற ஆரம்பித்தன. நாட்டின் இயற்கையமைப்பும் நாட்டு மக்களால் பின்பற்றப்பட்ட பாரம்பரியக் கருத்துக்களும்,பன்னெடுங் காலமாகத் தனித்து இயங்கி வந்த பல்வேறுபட்ட அரசியல் அமைப்புக்களுமே இவ்வேறுபாடுகள் மக்களிடையே தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தன. குறிப்பாக வட இத்தாலிய மக்களுக்கும், தெற்கு இத்தாலிய மக்களுக்குமிடையே அதிக கருத்து வேற்றுமைகள் தோன்றின. பத்தொன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் இத்தாலியில் பரவ ஆரம்பித்த தொழிற் புரட்சி (Industrial Revolution) இத்தாலியின் எல்லாப் பகுதிகளிலும் சமமாகப் பரவாமல், அந்நாட்டின் வட பகுதியில் மட்டுமே அதிக மாற்றங்களை ஏற்படுத்தியது. பெரும்பாலான கல்வி நிலையங்களும் வடபகுதியிலேயே அமைந்திருந்தன. எனவே இத்தாலியின் வடபகுதியைக் காட்டிலும் தெற்கு இத்தாலியில் வாழ்ந்த மக்கள் அவ்வளவு கல்வியறிவு நிரம்பியவர்களாகக் காணப்படவில்லை. தெற்கு இத்தாலியில் வாழ்ந்த மக்கள் கல்வியறிவு குறைந்தவர்களாக இருந்தது வட இத்தாலியர்களுக்கும், தெற்கு இத்தாலியர்களுக்குமிடையே கருத்து வேற்றுமை வளர்வதற்கு ஒரு காரணமாக அமைந்தது.

இத்தாலிய ஒருமைப்பாடு முழுமையடைந்த பின்னர் இரண்டாம் விக்டர் இமானுவெல் ஐக்கிய இத்தாலியின் மன்னரானர். இவர் சார்டீனியாவின் மன்னராக இருந்ததனல் சார்டீனியாவின் அரசியலமைப்பு, இங்கிலாந்தின் அரசியலமைப்பைப் பின்பற்றி விரிவுபடுத்தப்பட்டு ஐக்கிய இத்தாலியில் செயல்படுத்தப்பட்டது. இப்புதிய அரசியலமைப்பின்படி இத்தாலிய மன்னர் இரண்டாம் விக்டர் இமானுவெல் அரசியலமைப்புக்குக் கட்டுப்பட்ட மன்னராக அரசபதவியில்

இருந்து ஆட்சி புரிந்தார். ஆனால் மன்னருடைய எல்லா அதிகாரங்களும் செனட்சபை, பிரதிநிதிகள் சபை என்ற இரு சபைகள் அடங்கிய ஒரு பாராளுமன்றத்துக்குக் கட்டுப்பட்ட அமைச்சர்களால் பயன்படுத்தப்பட்டன. இப்பாராளுமன்றத்தின் மேல் சபையான செனட் சபையில் ஒரு பகுதி அங்கத்தினர்கள் வாரிசுமுறையை அடிப்படையாகக் கொண்டும், எஞ்சிய மறுபகுதியினர் நியமன முறையை அடிப்படையாகக் கொண்டும் உறுப்பினர்களாக இருந்தனர். இச்சபையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே இல்லை. கீழ்ச்சபையான பிரதிநிதிகள் சபையின் அங்கத்தினர்கள் உயர்வகுப்பினராலும் நடுத்தர வகுப்பினராலும் தேர்ந்தெடுக்கப்பட்டு உறுப்பினர்கள் ஆயினர். இவ்வரசியலமைப்பில் மக்களின் உரிமைகளுக்கு ஓரளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஆனால் இவ்வரசியலமைப்பு ஜனநாயக முறையை அடிப்படையாகக் கொண்ட மக்களரசாக விளங்கவில்லை.

கத்தோலிக்க மதத்தின் தலைமைப் பீடமாக இத்தாலியின் தலைநகரான ரோம் பல நூற்றுண்டுகளாக விளங்கியதால், பெரும்பாலான இத்தாலிய மக்கள் கத்தோலிக்கர்களாக இருந்தனர். ஐக்கிய இத்தாலியின் புதிய அரசியலமைப்பில் மக்களின் உரிமைகளுக்கு ஓரளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டாலும், அரசாங்கம் கத்தோலிக்கத் திருச்சபைகளிடமிருந்து பல கடுந் தொல்லைகளை எதிர்கொள்ள வேண்டி இருந்தது. கத்தோலிக்கக் கொள்கைகளுக்கு எதிரான சிறுபான்மையினர் அரசாங்கத்தில் அதிக செல்வாக்குப் பெற்றிருந்தனர். ரோமில் இருந்த கத்தோலிக்கத் திருச்சபையும், போப்பாண்டவரும் 1870 வரை இத்தாலிய ஒருமைப்பாட்டிற்கு எதிரிகளாக விளங்கிய நிலை, இச்சிறுபான்மையினர்கள் அரசியலில் செல்வாக்குப் பெறுவதற்கு ஏதுவாக இருந்தது. மேலும் இவர்கள் கத்தோலிக்கக் கொள்கைகளையும், திருச்சபையின் சீர்திருத்த ஆட்சியையும் குறை கூறுபவர்களாகவும் இருந்தனர். இத்தகையவர்கள் இத்தாலியில் மட்டுமல்லாமல் ஐரோப்பா முழுவதும் பரவியிருந்தனர்.

இத்தாலியில் பெரும்பான்மையான மக்கள் கத்தோலிக்கர்களாக இருந்ததால் இவர்களிடம் சில தனித்தன்மைகளும் காணப்பட்டன. இவர்கள் எவ்வளவுதான் கத்தோலிக்க மதத்தையும் அதன் கொள்கைகளையும் வெறுத்தாலும், தங்களை அறியாமலே கத்தோலிக்கப் பண்பாட்டிற்கும், பழக்க வழக்கங்களுக்கும் அடிமைகளாக்கிக் கொண்டிருந்தனர்.

இது இத்தாலிய மக்களின் வாழ்க்கைப் பகுதிகள் அனைத்தி லும் காணப்பட்டது. இத்தாலிய மக்களின் பெரும்பான்மை பலத்தைப் பெறுவதற்கு வேறு வழிகள் ஒன்றும் கிடைக்கப் பெருமையால் இத்தாலிய அரசு கத்தோலிக்க மதத்தை அரசு ஆதரவு பெற்ற மதமாகப் பிரகடனப்படுத்தியது. இதனால் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர்கள் அனைவரும் அரசுக்கு ஆதரவு காட்டத் தொடங்கினர். ஆனால் அதே சமயத்தில் கத்தோலிக்கத் திருச்சபைகளின் அதிகாரங்களையும், குருமார் களின் செல்வாக்கையும் குறைப்பதற்காக, அரசு வேறு சில நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. இந்நடவடிக்கையின் படி சார்டீனியாவில் நிலவிவந்த பழக்கத்தை அடிப்படையாகக் கொண்டு திருச்சபை அதிகாரிகளின் ஊதியத்தை அரசாங்கமே வழங்கியது. மேலும் மத போதகர்களை அரசாங்கமே நியமித் தது. இதனால் திருச்சபை அதிகாரிகளும், மத போதகர்களும் அரசாங்கத்திற்கு விசுவாசமுள்ளவர்களாக மாறினர். கல்விக் கூடங்களில் சமயக் கருத்துக்களும் இடம் பெற்றன. இவை ஒரு புறமிருக்க, மறுபுறம் அரசாங்கம் திருச்சபையின் சொத்துக் களையும் பறிமுதல் செய்தது. அடுத்து படிப்படியாக நாடு முழு வதும் மடாலயங்களின் வளர்ச்சிக்குத் தடைகளை ஏற்படுத்தி நாளடைவில் அவற்றை நலிவடையச் செய்தது. மறைமுகமாக அரசியலில் திருச்சபையின் கொள்கைகளுக்கு எதிரான கருத் துக்களுக்கு அரசாங்கம் ஆதரவு கொடுத்தது. இந்நடவடிக்கை களின் காரணமாக அரசியலில் திருச்சபைகளின் செல்வாக்கை அரசு படிப்படியாகக் குறைத்தது.

இரண்டாம் விக்டர் இமானுவெல் ஐக்கிய இத்தாலியின் அரசியலமைப்புக்குக் கட்டுப்பட்ட அரசரானவுடன், கத்தோ லிக்கத் திருச்சபையின் தலைமைப் பீடமாக விளங்கிய ரோமை ஆண்ட போப்பாண்டவரின் ஆதிக்கப் பகுதிகளில் இருந்து தனிப்பட்ட சில எதிர்ப்புக்கள் தோன்றின. இமானுவெல் 1871-ல் ரோமைத் தன்னுடைய படைவலிமையால் கைப்பற்றிய பின்னர், கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமைப் பீடமான ரோம் தனித்து தேசிய இத்தாலிய அரசுக்கு இணையாக இயங்கு வதற்கான உறுதிமொழியைத் திருச்சபைக்கான உறுதிமொழிச் சட்டங்கள் (Laws of papal guarantees) என்பவற்றைப் பாராளு மன்றம் இயற்றியது. இச்சட்டங்களைப் பாராளுமன்றம் இயற்றியதன் நோக்கம் திருச்சபை பாராளுமன்றத்தின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டது என்பதை நிலைநாட்டவே யாகும். திருச்சபை உறுதிமொழிச் சட்டங்களின்படி போப் பாண்டவர், வாட்டிகன், லேட்டரன் ஆகிய திருச்சபைகளின்

முழு ஆதிக்கத்தையும் பெற்றார். (2) காஸ்டல் கோண்டாலப்போ வில்லா (Villa of Castel Gandolfo) என்ற பகுதியும் போப்பின் ஆதிக்கத்திற்குட்பட்டது. (3) இப்பகுதிகளில் அரசருக்கு இணையாக ஆட்சி செலுத்தும் அதிகாரங்களையும் போப் பாண்டவர் பெற்றார். (4) வெளிநாட்டிலுள்ள கத்தோலிக்க அரசாங்கங்களுக்கும், மக்களுக்கும் எவ்விதத் தடையுமின்றி செய்திகளை அனுப்பும் உரிமையும் போப்பிற்குக் கொடுக்கப் பட்டது. (5) திருச்சபையின் சொத்துக்களை அரசாங்கம் பறிமுதல் செய்துகொண்டதால் திருச்சபைகளுக்கு ஏற்பட்ட நஷ்டங்களுக்கு ஈடாக 32½ இட்சம் லிர்களை (Lire) அரசாங்கக் கருவூலத்திலிருந்து மானியமாகப் பெற்றுக்கொள்ள போப்பாண் டவருக்கு உரிமையளிக்கப்பட்டது.

இச்சமயத்தில் கத்தோலிக்கத் திருச்சபையின் போப்பாக ரோமில் இருந்தவர் போப் ஒன்பதாம் பயஸ் என்பவராவார். இவர் திருச்சபை உறுதிமொழிச் சட்டங்களையும் ஒட்டு மொத்த மாக ஒத்துக்கொள்ள மறுத்தார். இச்சட்டங்களைப் போப் பாண்டவர் ஒத்துக்கொண்டால், ரோமின் மீது தக்க காரணமில் லாமல் பிரவேசித்து, அதிகாரங்களைக் கைப்பற்றிய ஓர் அரசை அவர் ஏற்றுக்கொண்டதாக ஆகும் என்பதோடு மட்டுமல்லாமல் இத்தாலியின் பாராளுமன்றத்துக்குத் திருச்சபையைக் கட்டுப் படுத்தும் இத்தகைய சட்டங்களை இயற்றுவதற்கு அதிகார மில்லை என்றும் இவர் கருதினர். எனவே ஒன்பதாம் பயஸ் புதிய இத்தாலிய அரசாங்கம் கொடுத்த பணத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தார். அரசாங்கத்துக்குப் பயந்து தன்து எதிர்ப்பையும் மட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. எல்லாவற் றிற்கும் மேலாக ஒன்பதாம் பயஸ், தான் அரசாங்கக் கைதி என்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, வெளிநாட்டில் உள்ளவர்கள் அவருக்கு ஆதரவு தர வேண்டுகோள் விடுத்தார். நாட்டிலுள்ள கத்தோலிக்கர்களைப் புதிய அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க வேண்டாம் எனவும், அரசாங்க அலுவல்களை ஏற்றுக்கொள்ள வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார்.

போப்பாண்டவருடைய இத்தகைய நிலையால் அவரது கௌரவம் மற்ற நாடுகளின் கண்களுக்குச் சற்று உயர்ந்து காணப்பட்டது. வெளிநாட்டவர்கள் போப் ஒன்பதாம் பயஸ் புதிய இத்தாலிய அரசுக்கு ஒத்துழைப்பு தரவில்லை என்பதை நம்பினர். ஆனல் இத்தாலியைப் பொறுத்தமட்டில் திருச்சபை களில் பணியாற்றிய நாட்டுப்பற்று மிக்க இத்தாலியரிடம் வெறுப்புணர்ச்சியைத் தோற்றுவித்தது. இதனல் இவர்கள்

போப்பாண்டவர் நாட்டின் அரசியல் ஒற்றுமைக்குத் தடையாக இருக்கிறார் என்று கருதி அவரது கட்டளைகளை அலட்சியப் படுத்த ஆரம்பித்தனர். அதே சமயத்தில் அரசியல் வாழ்க்கை யின்மூலம் பொதுமக்களுக்குத் தொண்டாற்றிய பலர், போப் பாண்டவருக்கு ஆதரவாகத் தங்களை அரசியல் வாழ்க்கை யிலிருந்து விடுவித்துக்கொண்டனர். எனவே போப் ஒன்பதாம் பயஸின் செய்கை போப்பாண்டவருக்கும், இத்தாலிய நாட்டிற் கும் எவ்வித நன்மைகளையும் ஏற்படுத்தவில்லை.

இது ஒருபுறமிருக்க, இத்தாலிய அரசியலில் வேறுபாடு களின் காரணமாக, புதிய அரசியல் கட்சிகள் தோன்ற ஆரம் பித்தன. இத்தாலிய நாட்டில், அந்நாட்டின் புதிய அரசாங்கமும் வாக்களிக்கும் உரிமை பெற்ற மக்களும் சிறுபான்மையினராக இருந்தனர் என முன்பு கண்டோம். இவர்கள் ஏறத்தாழ இருபது ஆண்டுகள் விடுதலை, தேசியம் ஆகிய கொள்கைகளுக் காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டு ஆட்சிபுரிந்தனர். ஆனால் நாளடைவில் பிரான்சு நாட்டில் குடியரசுக் கட்சி யினரிடையே ஏற்பட்ட பிளவினைப்போல, இத்தாலிய தேசிய வாதிகளிடையேயும் கருத்து வேறுபாடுகள் தோன்ற ஆரம் பித்தன. இதனால் இத்தாலிய தேசியவாதிகள் வலதுசாரிகள் என்றும், இடதுசாரிகள் என்றும் இருவகையினராகப் பிரிந்தனர். இவர்களுள் வலதுசாரிகள் இடதுசாரிகளைப்போலல்லாமல் படிப் படியாகத் தங்கள் கருத்துக்களை அரசியலில் புகுத்த வேண்டு மென எண்ணினார்கள். இவ்விருசாராரிடையே காணப்பட்ட அடிப்படை வேறுபாடுகள் அவர்கள் சார்ந்திருந்த வகுப்பை யும், தொழிலையுமே பொறுத்திருந்தன. வலதுசாரிகளின் தலைவர்களில் பெரும்பாலோர் தொழிற்சாலைகளின் உரிமை யாளர்களாக இருந்தனர். இவர்கள் உயர்குடி மக்களாக வும், நடுத்தர வகுப்பினராயும் இருந்தனர். இவர்களில் பெரும் பகுதியினர் பிட்மாண்ட், லம்பார்டி, டஸ்கனி ஆகிய இத்தாலியப் பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். ஆனால் இடதுசாரிகள் பெரும்பாலும் தொழிலாளர்களாக இருந்தனர். இவர்கள் சிசிலி, நேப்பிள்ஸ் முதலான இத்தாலியின் தெற்குப் பகுதிகளில் வாழ்ந்து வந்தனர்.

இத்தாலிய தேசியவாதிகளில் வலதுசாரியினர் 1870 முதல் 1876 வரை அரசாங்கத்தில் அதிக ஆதிக்கம் பெற்று இருந்தனர். பிறகு ஏறத்தாழ இருபதாண்டுக் காலம் (1876-1896) இடது சாரிகள் அரசாங்கத்தில் ஆதிக்கம் பெற்று அதிகாரம் செலுத்தி வந்தனர். இவர்களின் ஆட்சிக் காலத்தின் தொடக்கத்தில் லம்பார்டி என்ற பகுதியைச் சார்ந்த அகஸ்தினோ டெப்டிரிஸ்

(Agostino Depretis) என்பவர் பிரதம அமைச்சராக இருந்தார். இவருக்குப்பின் சிசிலியைச் சார்ந்த பிரான்செஸோ கிரிஸ்ப்பி (Franceso Crispi) என்பவர் 1887 முதல் 1896 வரை பிரதம அமைச்சராக இருந்தார். இவர் தானே பிரதமராக இருக்க வேண்டுமென்ற பேராசை பிடித்தவர். எனவே இவர் பிரதம ராக இருந்த காலங்களில் அமைச்சர்கள் மாறினாலும் இவர் மட்டும் பிரதமராகத் தொடர்ந்து பணியாற்றி வந்தார்.

இவருக்குப் பின் 1896 முதல் 1903 வரை வலதுசாரியினரின் கை மேலோங்கியது. இவர்களுக்குப் பின் இருசாராருமே பெரும் பான்மை பலத்தைப் பெற முடியாவிட்டாலும், அடுத்த பத்தாண்டுகளில் (1903-1913) இடதுசாரியினர் ஜியோலித்தி (Giolitti) என்பவரின் உதவியால் கூட்டு அமைச்சரவையை அமைத்து ஆட்சி புரிந்தனர். இத்தாலிய அரசியலில் டெப்ரிடிஸ், கிரிஸ்ப்பி, ஜியோலிதி ஆகிய மூவரும் இடதுசாரியில் மிக முக்கியம் வாய்ந்தவர்களாகக் கருதப்பட்டனர். இவர்கள் தேசியவாதிகளின் இடதுசாரியினரின் அரசியல் கொள்கை களையும் வகுத்தனர். ஆனல் தேசியவாதிகளின் இரு பிரிவைச் சார்ந்தவர்களிடையேயும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அதிகமாகக் காணப்படவில்லை. வலதுசாரிகளும் இடதுசாரி களும் மாறிமாறி அமைச்சரவைகள் ஏற்படுத்தியதைத் தவிர, அரசியலில் குறிப்பிடத்தக்க எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

ஆனல் இத்தாலிய அரசாங்கம் இக்காலத்தில் தொழில் வியாபாரம் ஆகிய துறைகளில் ஓரளவு தாராள மனப்பான்மை யுடன் நடந்து கொண்டது. தொழில், வாணிபம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு ஆதரவளித்தது. ஆயிரக்கணக்கான மைல்கள் தூரத்திற்கு இருப்புப் பாதை போடப்பட்டது. பழைய சாலைகள் புதுப்பிக்கப்பட்டன. புதிய சாலைகள் பல போடப் பட்டன. பல புதிய துறைமுகங்கள் கட்டப்பட்டன. மேலும் வியாபாரக் கப்பல்களுக்கு அரசாங்கம் ஆதரவு அளித்தது. தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்காகவும், அவை அதிக இலாபம் சம்பாதிப்பதற்காகவும் காப்பு வரி (Tariff) முறை இத்தாலியில் புகுத்தப்பட்டது. தொழில் வளர்ச்சிக்குத் தேவையான இரும்பு, நிலக்கரி போன்ற முக்கிய தாதுப்பொருள்கள் வெளிநாடு களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டாலும், இத்தாலிய அரசாங்கம் அந்நாட்டின் நிலையான பொருளாதார மாற்றத் துக்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்து உதவியது. எனவே இத்தா லியின் வடபகுதியில் கணிசமான அளவு தொழில் வளர்ச்சி ஏற் பட்டது. இத்தாலிய தீபகற்பத்தின் மற்ற பகுதிகளிலும் ஓரளவு தொழில் வளர்ச்சி ஏற்பட ஆரம்பித்தது.

வளர்ந்து வரும் பொருளாதார நிலையின் காரணமாகவும், தொழில் வளர்ச்சியின் காரணமாகவும் இத்தாலிய நாட்டின் ஏற்றுமதியின் மதிப்பு 1870 முதல் 1897 வரை ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 40 கோடி டாலர்களாக இருந்தது. இது சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து 1913-ஆம் ஆண்டில் 120 கோடி டாலர்களாக உயர்ந்தது. மேலும் 1897க்கும் 1913க்கும் இடைப் பட்ட ஆண்டுகளில் ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு மூன்று மடங்கு அதிகரித்தது. உலகில் பட்டு சந்தைக்குப் பெயர் பெற்று விளங்கிய "லியான்ஸ்" என்ற நகரம் வகித்த இடத்தை இத்தாலி நாட்டின் மிலான் (Milon) நகரம் கைப்பற்றியது. இத்தாலிய பருத்தி ஆலைகள் உள்நாட்டின் ஆதரவைப் பெற்றன. எனவே இவ்வாலைகளின் வெளிநாட்டு வியாபாரத்தின் மதிப்பு 50 முதல் 500 இலட்சம் டாலர் வரை உயர்ந்தது. எல்லாவற்றிற்கும் மேலாகக் கடல் வாணிபத்தில் ஆருவது நிலையை இத்தாலி அடைந்தது. இதுவே இத்தாலியின் வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்தது.

தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார மாற்றத்திற்கும் ஆதரவு கொடுத்த இத்தாலிய அரசாங்கம், அதே சமயத்தில் தேசியத்துக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்தது. இத்தாலிய மக்களின் நாட்டுப்பற்றுதான் அவர்களின் அரசியல் ஒற்றுமைக்கு அடிப்படையாக அமைந்தது. இத்தேசியக் கருத்துக்கள் புதிய இத்தாலிய அரசியலில் அதிக செல்வாக்குப் பெற்று விளங்கின. எனவே இத்தாலி ஜெர்மனி, பிரான்சு ஆகிய நாடுகளைப் போன்று ஐரோப்பாவில் வலிமையான நாடாக விளங்கவேண்டுமென்று புதிய அரசாங்கம் விரும்பியது. தன்னுடைய விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக இத்தாலிய நாட்டின் படையைப் பலப்படுத்த முயற்சிகளை மேற் கொண்டது. குடியேற்ற நாடுகளை அமைப்பதற்காகவும் திட் டங்களைத் தீட்டியது.

தேசியக் கொள்கைகள் மேலோங்கியதன் காரணமாக இத்தாலிய அரசு தன்னுடைய நாட்டின் இராணுவத்தைப் பெருக்கியது. கட்டாய இராணுவப் பயிற்சியை 1875-ல் கொண்டு வந்தது. நாட்டின் வருவாயில் பெரும்பகுதி இராணுவத் தளவாடங்களை அதிகப் படுத்துவதிலும், புதிய கப் பற்படையை ஏற்படுத்துவதிலும், புதிய கோட்டைகளை அமைப்பதிலும் செலவிடப்பட்டது. பிரஞ்சுக்காரர்கள் 1881-ல் டியூனிஸைக் கைப்பற்றிய செய்கையானது இத்தாலிய மக்

களின் தேசியக் கொள்கைகளையும், ஏகாதிபத்தியக் கொள்கைகளையும் மேலும் தூண்டியது, டியூனிஸ் (Tunis) பிரான்சு நாட்டைக் காட்டிலும் இத்தாலிக்கு மிக அருகில் அமைந்துள்ளது. இப்பகுதியில் வாழ்ந்த மக்களில் பிரஞ்சுக்காரர்களின் எண்ணிக்கையைவிட, இத்தாலியர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகமாக இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு காலத்தில் இப்பகுதி கார்த்தஜீனியர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. டியூனிஸைக் கைப்பற்றிய பிரஞ்சுக்கா்ரர்களைவிட இத்தாலியர்களுக்கு அதிக உரிமையிருந்தாலும், அப்பகுதியை இத்தாலியர்கள் கைப்பற்றுததற்குக் காரணம் அவர்கள் பின்பற்றிய " தனித்து வாழும் கொள்கையே " என இத்தாலிய அரசாங்கம் அறிவித்தது.

டியூனிஸில் பிரஞ்சுக் காரர்களின் ஆதிக்கத்தைத் தடை செய்வதற்கும், மேலும் பிரஞ்சுக் காரர்கள் அப்பகுதியில் ஆதிக்கத்தை ஏற்படுத்தாமல் இருப்பதற்காகவும் இத்தாலி 1882-ல் ஜெர்மனி, ஆஸ்திரியா ஆகியவற்றுடன் புகழ்பெற்ற முக்கூட்டு ஒப்பந்தத்தைச் (Triple Alliance) செய்து கொண்டது. இவ்வொப்பந்தம் 1915 வரை நீடித்திருந்நது. இவ்வொப்பந்தம் செய்து கொண்ட பிறகு இத்தாலி, செங்கடல் பகுதியில் அமைந்துள்ள கிழக்காப்பிரிக்கப் பகுதிகளில் தன்னுடைய குடியேற்றப் பேரரசை ஏற்படுத்த முயன்றது. வியாபார நோக்குடன் ஏற்படுத்தப்பட்ட குடியேற்ற அமைப்புக்கள், இராணுவ ஆக்கிரமிப்புக்கள், ஆளும் உரிமை பெற்ற பூர்வீக அரசர்களுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கைகள், பிரிட்டனுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கை ஆகியவற்றின் மூலமாக, இத்தாலியர்கள் எரித்திரியா (Eritrea), சோமாலிலாந்து ஆகிய பகுதிகளைக் கைப்பற்றினர். பின்னர் இத்தாலியர்கள் தற்பொழுது எத்தியோப்பியா, என்று சொல்லப்படுகின்ற அபிசீனியாவின் மீது படையெடுத்தனர். இம்முயற்சியின் பொழுது அபிசீனியர்கள் இத்தாலியர்களை மிகக் கடுமையாக எதிர்த்தனர். அடோவா (Adowa) என்ற இடத்தில் 1896-ல் இத்தாலியப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. இதன் காரணமாக இத்தாலி அந்நாட்டுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டு, அபிசீனிய நாட்டின் சுதந்திரத்தை அங்கீகரித்தது.

தன்னுடைய நாட்டின் நிலையை மற்ற வல்லரசுகளின் நிலைக்கு உயர்த்துவதற்காகவும், இராணுவம், கடற்படை ஆகியவற்றின் செலவுக்காகவும், பொதுப்பணித்துறையின் சயல்களுக்காகவும், குடியேற்ற நாடுகளில் தங்கள் ஆதிக்

கத்தை நிலைநிறுத்துவதற்காகவும், ஊழல்கள் மிகுந்த இத்தாலிய அரதியல்வாதிகளால் ஏற்பட்ட பொருளாதார நஷ்டங்களைச் சரிக்கட்டுவதற்காகவும் இத்தாலிய அரசாங்கம் தன்னுடைய மக்கள் மீது அதிக வரிகளை விதித்தது. இதனுல் அரசாங்கக் கருவூலங்கள் முழுவதும் காலியாகி, அரசாங்கமே திவாலாகி விடுவதற்கான சாத்தியக் கூறுகள் ஏற்பட்டன. எனவே இத்தாலிய அரசாங்கம் சமுதாய நலன்களுக்காகவும், கல்வியின் வளர்ச்சிக்காகவும் செலவிடும் தொகையைக் கட்டுப்படுத்தியது. மேலும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக அரசாங்கம் இத்தாலியப் பாராளுமன்றத்தினுல் 1877ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சிறுவர்களின் கட்டாயக் கல்விச் சட்டத்தின் ஒருசில அம்சங்களை அரைமனத்துடன் செயல் படுத்தியது. இச்சட்டத்தின்படி இத்தாலிய மக்களின் அறியாமையைப் போக்குவதற்காக ஆறு வயது முதல் ஒன்பது வயது வரை உள்ள சிறுவர்களுக்குக் கல்வி கட்டாயமாக்கப் பட்டது. ஆனுல் அரசாங்கம் இச்சட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட தொகையை, வேறு காரியங்களுக்காகச் செலவிட்டது. இத்தகைய செய்கையினுல் இத்தாலியில் கல்வியறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை மிக விரைவாக வளர்ச்சி அடையவில்லை.

இந்நாட்டில் விவசாயத் தொழிலாளர்களின் பொருளாதார நிலையும், நகரங்களில் வாழும் பல்வேறு தொழிலாளர்களின் நிலையும் மிகவும் இரக்கப்படும் நிலையில் இருந்தது. மக்களின் சராசரி வருமானம் மிகக் குறைவாக இருந்தது. ஆனுல் மற்ற ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும் மக்கள் தொகைப் பெருக்கம் மிக அதிகமாக இருந்தது. தொழில் வாய்ப்புக்களும் மக்கள் தொகை வளர்ச்சிக்கு இணையாகக் காணப்படவில்லை.

இத்தகைய சூழ்நிலையில் பெரும்பாலான இத்தாலிய மக்கள் தங்கள் அரசாங்கத்தின் செய்கைகளில் நம்பிக்கை இழந்தனர். எனவே, இத்தாலிய மக்கள் சிலர், பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையை அடைவதற்காகத் தங்களுடைய நாட்டிலிருந்து வட அமெரிக்காவிலுள்ள ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கும், தென் அமெரிக்காவிலுள்ள பிரேசில், அர்ஜென்டைனு ஆகிய நாடுகளுக்கும் குடிபெயர்ந்தனர். இராணுவத்தினரால் கண்காணிக்கப்பட்ட சிலரும் தண்டனைகளிலிருந்து தப்பித்துச் செல்வதற்காக மேற் சொன்ன நாடுகளுக்குக் குடிபெயர்ந்தனர். இவ்வாறு இத்தாலியிலிருந்து குடிபெயர்ந்தவர்களின் எண்ணிக்கை சிறிது சிறிதாக அதிகரித்தது. இவர்களின் எண்ணிக்கை

1900-இல் 3, 50, 000 ஆகவும், 1910-இல் 5,30,000 ஆகவும் உயர்ந்தது.

ஆனால் குடிபெயர்ந்தவர்களில் சில இத்தாலியர்கள் ஒரு கணிசமான அளவு வெளிநாடுகளில் பொருள் ஈட்டியவுடன் சில வருடங்கள் கழித்துத் தங்கள் தாய் நாட்டிற்குத் திரும்பிவிட்டனர். இத்தாலிய அரசாங்கம் 1910-ல் வெளியிட்ட புள்ளி விபரப்படி அமெரிக்க நாடுகளில் நிரந்தரமாகக் குடியேறிய இத்தாலியர்களின் எண்ணிக்கை 55 இலட்சமாகும். இவ்வெண்ணிக்கையில் 80 சதவிகிதத்தினர் இத்தாலியின் தென் பகுதியில் விவசாயத்தை நம்பி வாழ்ந்தவர்கள். அரசாங்கத்திடம் பொதுமக்களுக்கு ஏற்பட்ட அதிருப்தியின் காரணமாக, தெற்கு இத்தாலியில் பெரும்பாலான விவசாயத் தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்குக் குடிபெயர்ந்தனர். ஆனால் தொழிற்சாலைகள் நிறைந்த இத்தாலியின் வடபகுதியில் இருந்த நகரத் தொழிலாளர்களிடையே மார்க்ஸின் சோஷியலிசக் கொள்கைகளும், புரட்சிக் கருத்துக்களும் பரவின. மிலான் நகரத்தில் 1891ஆம் ஆண்டு சோஷியலிசக் கட்சி என்ற ஒரு கட்சி தோற்றுவிக்கப்பட்டது.

இத்தாலியில் 1882ஆம் ஆண்டில் விரிவுபடுத்தப்பட்ட வாக்குரிமையால், சோஷியலிஸ்டுகள் 1891-ல் நடைபெற்ற தேர்தலில் பிரதிநிதிகள் சபைக்குப் பன்னிரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனர். இவர்களின் கட்சி பாராளுமன்றத்தில் இருந்ததைவிட அதற்கு வெளியே அதிக செல்வாக்கினைப் பெற்றிருந்தது. மேலும் இத்தாலிய அரசாங்கத்தின் அதிருப்தியாளர்கள் புரட்சி செய்து புதிய மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவும், சோஷியலிஸ்டுகளுக்கு ஆதரவாகவும் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தார்கள். இவர்கள் புரட்சி செய்து, தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு, திடீர் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் எனப் பாடுபட்டார்கள். இத்தீவிரவாதிகள் பாராளுமன்றம் இத்தாலிய மக்களுக்கு நன்மை செய்யும் என்ற நம்பிக்கையை இழந்துவிட்டனர். இவர்கள் தொழிலாளர்களின் சங்கங்களை ஏற்படுத்தி, தொழிலாளிகளை முதலாளிகளுக்கும், அரசாங்கத்திற்கும் எதிராக வகுப்புவாதக் கிளர்ச்சிகளைத் தோற்றுவிக்குமாறு ஊக்குவித்தனர்.

இந்நிலையில் 1878-ல் மறைந்த இரண்டாம் விக்டர் இமானுவெலுக்குப் பின்னர் இத்தாலிய மன்னராக விளங்கிய ஹம்பர்ட் (Humbert) அரசர், 1900-ல் ஒரு தீவிரவாதியால்

படுகொலை செய்யப்பட்டார். இவர் இரண்டாம் விக்டர் இமானுவெலின் மகனுவார். இவருக்குப் பின் மன்னரான மூன்ரும் விக்டர் இமானுவெல் 1904ஆம் ஆண்டில் இராணு வத்தைப் பயன்படுத்தி, மிலான் நகரத்தில் அரசுக்கு எதிரான ஒரு பொது வேலை நிறுத்தப் போராட்டத்தை ஒடுக்கினுர். இவ் வேலைநிறுத்தத்தின் பொழுது பல வன்முறை நிகழ்ச்சிகள் புரட்சி நோக்குடன் நடைபெற்றன.

எத்தியோப்பியாவில் தன்னுடைய ஆதிக்கத்தை விக்டர் நிலைநாட்டிய அதே சமயத்தில், தேசிய வாதிகளில் கிரிஸ்பி (Grispi) என்ற இடதுசாரிகளின் தலைவர் அரசியலிலிருந்து விலகினுர். இவர் அரசியலிலிருந்து விலகியவுடன் இத்தாலியின் எல்லாப் பகுதிகளிலும் இருந்த மக்கள், அரசாங்கம் உள் நாட்டுச் சீர் திருத்தங்களைச் செய்ய வேண்டும் என வலியுறுத்தி னுர்கள். எனவே இத்தாலிய அரசு உள்நாட்டுச் சீர்திருத் தங்கள் பலவற்றை மேற்கொண்டது. தொழிலாளர் நலன் களுக்காகப் பல புதிய தொழிலாளர் நலச்சட்டங்களை இயற்றத் தொடங்கியது.

முதியோர்களுக்கு உதவித் தொகையை (Old-age pension) 1898-ல் இத்தாலிய அரசாங்கம் வழங்கியது. விபத்துக் களுக்கும், நோய்களுக்கும் எதிராகத் தொழிலாளிகள் தங்களைக் கட்டாயமாக ஆயுள் பாதுகாப்பு (Insurance) செய்துகொள்ள வேண்டுமென அரசு வற்புறுத்தியது. மிக முக்கியமான தொழிற்சாலைச் சட்டம் ஒன்று 1902-ல் கொண்டு வரப்பட்டது. மற்ெருரு தொழிலாளர் நலச் சட்டத்தின் மூலமாக, 1908 முதல் தொழிலாளர்களுக்கு வாரத்தில் ஒருநாள் கட்டாய ஓய்வு வழங்க வேண்டுமென ஏற்பாடு செய்தது. மேலும் 1912-ல் தனியார் பாதுகாப்பு நிறுவனங்கள் தேசிய உடைமையாக்கப் பட்டன. சமுதாய நலன்களுக்காகவும் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தனியார் நிறுவனங்களிடமிருந்து இருப்புப்பாதை போக்கு வரத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. பொதுமக்களின் நலன் கருதிச் சில நிர்வாகங்களை நகராட்சிகள் ஏற்று நடத்த அதிகாரங்கள் வழங்கப்பட்டன. தொழிலாளர்களின் சங்கங்கள் சட்டங்களின் மூலம் அங்கீகரிக்கப் பட்டன. தொழிலாளர் களின் இயக்கங்களுக்கும், அவ்வியக்கங்கள் திரட்டும் நிதிகளுக் கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. தொழிலாளர்களின் தகராறு களைத் தீர்த்துவைக்கப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்

பட்டன. கூட்டுறவுச் சங்கங்கள் பல ஏற்படுத்தப்பட்டன. இவை தேவையான இடங்களில் கூட்டுறவு வங்கிகளை நிறுவின. மேலும் இக்கூட்டுறவுச் சங்கங்கள் பொருள்களை மொத்தமாக மலிவுவிலையில் வாங்கி, சில்லறையில் குறைந்த விலையில் கிராம மக்களுக்கு வழங்கிவந்தன.

தொழிலாளர்களைப் போலவே, இத்தாலியில் பொதுமக்கள் தங்கள் நாட்டில் சில பிரிவினர்கள் மட்டும் அரசாங்கத்தில் செல்வாக்குப் பெற்றிருப்பதைத் தவிர்த்து, மக்களாட்சி முறையைப் புகுத்த வேண்டுமெனக் கோரினார்கள். எனவே இத்தாலிய அரசாங்கம் 1882-ல் சில சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தது. இதன்படி சொத்துரிமை உடையவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை என்ற நிலையை மாற்றி, கல்வியறிவு பெற்றவர்களுக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டது. இதனால் கல்வியறிவு பெறாதவர்களும், சொத்துக்கள் இல்லாதவர்களுமான பெரும்பான்மையான இத்தாலியர்கள் வாக்குரிமை பெறமுடியவில்லை. இந்நிலை 1912 வரை நீடித்தது. ஆனால் 1912-ல் ஜியோலிதியும், அவரது இடதுசாரிக் காரர்களும் ஒரு தேர்தல் திருத்தத்தைக் கொண்டு வந்தனர். இதன்படி வயது வந்த எல்லா ஆண்களுக்கும், இனவேறுபாடின்றி வாக்குரிமை வழங்கப்பட்டது. இவ்வுரிமையின் அடிப்படையில் பிரதிநிதிகள் சபைக்கான அங்கத்தினர்கள் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிதாக ஜனநாயக முறையில் 1913 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பொதுத் தேர்தலில் சோஷியலிஸ்டுகளின் எண்ணிக்கை, பிரதிநிதிகள் சபையில் 43-ல் இருந்து 78 ஆக உயர்ந்தது, இதனால் பூர்ஷுவாக்களின் பிரிவைச் சார்ந்த இடதுசாரிகள் அரசாங்கத்தில் ஆதிக்கமிழந்தனர். ஜியோலிதியும் பதவியிலிருந்து விலகினார். புதிய தேசிய அமைச்சரவை அண்டோனியோ சலாண்டிரா (Antonio Salandra) என்பவரின் தலைமையில் அமைக்கப்பட்டுப் பதவி ஏற்றது.

சலாண்டிரா பிரதம அமைச்சராகப் பதவி ஏற்றவுடன் இத்தாலியின் தேசியக் கொள்கை புதிய உருப்பெற்றது. ஜனநாயகக் கருத்துக்கள், கல்வியறிவு, தத்துவம், ஆகியவற்றால் தூண்டப்பட்ட இத்தாலிய இளைஞர்கள் தங்கள் நாட்டின் தேசியத்தை நிலைநிறுத்துவதற்காகப் பாடுபட்டனர். இதன் பயனாக இத்தாலிய மக்கள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், புதிய இராணுவ தளவாடங்களுக்காகவும், அதிக அளவில் குடியேற்றங்களைப் பெறுவதற்காகவும், புதிய வெளிநாட்டுக் கொள்கையைத் தீவிரமாகப் பின்பற்றுவதற்

காகவும் இத்தாலியப் பாராளுமன்றத்திலும் பிற இடங்களிலும் வேண்டுகோள் விடுத்தனர். எல்லாவற்றிற்கும் மேலாக இவர்கள் இத்தாலியர்கள் பெருமளவில் வாழும் டிரெண்ட் (Trent), டிரிஸ்டி (Trieste), ஏட்ரியாட்டிக் கடலின் கிழக்குக் கடற்கரைப் பகுதி ஆகியவை ஆஸ்திரிய ஆதிக்கத்தின் கீழ் இருப்பதை எதிர்த்தனர். இதனால் ஆஸ்திரியாவிற்கும் இத்தாலிக்கும் இடையே போர்மூளும் ஒரு சூழ்நிலை உருவா கியது. இச்சூழ்நிலையில் சோஷலிஸ்டுகளும் இத்தாலியில் சோஷலிச ஆதிக்கத்தை ஏற்படுத்துவதற்காகக் கிளர்ச்சிகளைத் தோற்றுவிக்கத் தொடங்கினர்கள். ஆனல் இக்கிளர்ச்சிகள் ஐரோப்பிய அரசியல் மாறுதல்களால் பாதிக்கப்பட்டன.

8. ஜெர்மனியப் பேரரசு

ஜெர்மனியப் பேரரசு, 1871-ல் ஹோஹன் சோலர்ன் வம்சத்தைச் சார்ந்த பிரஷ்ய மன்னரான முதலாம் வில்லியம் என்பவரின் தலைமையில் இயங்கி வந்தது. இவருடைய முதலமைச்சராக விளங்கியவர் இரும்பு மனிதர் என்று வர்ணிக்கப்பட்ட ஆட்டோவன் பிஸ்மார்க் என்பவராவார். இவரே முதலாம் வில்லியத்தின் முக்கிய ஆலோசகராகவும், மன்னருடைய வழிகாட்டியாகவும் விளங்கியவர். சுருங்கக் கூறின், இவர் இல்லாமல் ஜெர்மனி ஒரு பெரிய பேரரசை விரைவாக ஏற்படுத்தியிருக்க முடியாது என்றே கூறலாம். ஜெர்மனியப் பேரரசில் 1871-ல் இருபத்தைந்து மாநிலங்களும், அல்சேஸ், லொரைன் என்ற பகுதிகளும் அடங்கியிருந்தன. இப்பேரரசில் இருந்த இருபத்தைந்து மாநிலங்களில் பிரஷ்யா, பவேரியா, சாக்ஸனி, வர்டிம்பர்க் என்ற நான்கும் சிற்றரசு களாக விளங்கின. பேடன் (Baden), ஹெஸ் (Hesse), மெக்லென்பர்க்-ஸ்வெரின் (Mecklenburk-Schwerin), மெக் லென்பர்க்-ஸ்ரெலிட்ஸ் (Mecklenburk-Strelitz), ஓல்டன்பர்க் (Oldenburg), சேக்ஸ்-வைமர் (Saxe-weimar) என்ற ஆறும் டச்சுக்களாகவும் (Grand duchies), ஹாம்பர்க், பிரிமென், லூபெக் என்ற மூன்றும் ஜனநாயக உரிமைபெற்ற பெரியநகரங் களாகவும் விளங்கின. எஞ்சியிருப்பனவற்றுள் ஐந்து டச்சுக் களாகவும், ஏழு பேரரசின் முக்கிய பகுதிகளாகவும் விளங்கின.

இம்மாநிலங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான அரசியல் அமைப்பைப் பெற்றிருந்தன. இவை கல்வியறிவு, பொதுச் சுகாதாரம் போன்ற உள்ளாட்சித் துறைகளில் அதிக

அதிகாரங்கள் பெற்று விளங்கின. ஆனல் ஜெர்மனியப் பேரரசு முழுவதற்குமான பண்டெஸ்ரட் (Bundesrat) என்ற கூட்டுக் கவுன்சிலின் அனுமதியின்றி எந்தச்சட்டமும் இயற்றப்படவில்லை. பண்டெஸ்ரடில் எல்லா மாநில அரசாங்கங்களின் பிரதிநிதிகளும் இருந்தனர். ஆனல் அதே சமயத்தில் மக்கள் கருத்து, ஜனநாயகக் கொள்கைகள் ஆகியவற்றிற்கும் மத்திய அரசியல் இடமளிக்கும் வகையில் புதிய அரசியல் அமைப்பு உறுதி யளித்தது.

ஜெர்மனியப் பேரரசில் 1871-ல் நடைமுறையில் இருந்த புதிய அரசியல் அமைப்புப்படி, இப்பேரரசில் வாழ்ந்து வந்த 25 வயதுக்கு மேற்பட்ட எல்லா ஆண்களுக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டது. இத்தகைய வாக்காளர்கள் ரீஷ்டக் (Reichstag) என்ற மத்திய பாராளுமன்றத்தின் அங்கத்தினர்களைத் தேர்தல் முறையில் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றிருந்தனர். சட்டங்கள் இயற்றப்படுவதற்கு ரீஷ்டக்கின் அனுமதியும் வேண்டும் என்ற ஒரு நிலையை அரசியல் அமைப்பு வகுத்திருந்தது. ஆனல் ஜனநாயகக் கொள்கைகள் யாவும் பெயரளவில் பாராளுமன்ற அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு மட்டுமே பயன் பட்டன. ஜெர்மனியில் ரீஷ்டக் என்ற பாராளுமன்றம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தைப் போலவோ, பிரஞ்சுப் பாராளுமன்றத்தைப் போலவோ அதிக அதிகாரங்களைப் பெற்றிருக்கவில்லை. மேலும் இப்பேரரசில் சான்ஸலரின் தலைமையின்கீழ் செயல்பட்ட அமைச்சர்கள் யாவரும் ஜெர்மனியப் பேரரசருக்குக் கட்டுப்பட்டவர்களாகப் பணியாற்றினர்களே தவிர, பாராளுமன்றத்துக்குக் கட்டுப்பட்டவர்களாகப் பணியாற்றவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக பிரஷ்யநாடு மக்களாட்சியின் கருத்திற்கு மாருக ஒரு பேரரசாகவே ஆதிக்கம் செலுத்தியது.

பிரஷ்யாவில் நான்காம் பிரடரிக் வில்லியம் என்பவர் அரசரின் தெய்வீக உரிமைக் கோட்பாட்டை (Divine right of king) அடிப்படையாகக் கொண்டு, 1850-ல் ஓர் அரசியல் அமைப்பைப் பிரகடனப் படுத்தினர். இதன்படி அரசருக்குத் தன்னுடைய விருப்பப்படி தன்னுடைய அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டது. டயட் (Diet) என்ற சபையோ, மாநில சட்டசபைகளோ மன்னருடைய கருத்துக்களை அப்படியே ஏற்றுக் கொள்வதற்கோ, ஒட்டுமொத்தமாக மறுக்கவோ அனுமதியளிக்கப்பட்டனவே

ஒழிய, அவற்றை விவாதிக்கும் அதிகாரங்களை அவை பெற்றிருக்கவில்லை. இத்தகைய அரசியல் அமைப்பை 1870 வரை பின்பற்றிய பிரஷ்யா, ஜெர்மனியப் பேரரசில் அதிக செல்வாக்குப் பெற்ற மாநிலமாக விளங்க ஆரம்பித்தது. பின்னர் இது தன்னைப் பேரரசாகவும் மாற்றியமைத்துக் கொண்டது.

ஜெர்மனியப் பேரரசின் மொத்த நிலப்பரப்பிலும், மக்கள் தொகையிலும் மூன்றில் இரண்டு மடங்கு பிரஷ்யாவில் இருந்தது. எஞ்சிய ஒருபங்கு மற்ற இருபத்து நான்கு மாநிலங்களில் அடங்கியிருந்தது. எனவே, இயற்கையாகவே பிரஷ்யா, பேரரசின் அரசியலிலும், நிர்வாகத்திலும் அதிகக் கட்டுப்பாட்டையும், அதிகாரங்களையும் பெற்றிருந்ததில் வியப்பொன்றுமில்லை. மேலும் பிரஷ்யாவின் தலைமையின் கீழ்தான் ஜெர்மனி ஐக்கியமடைந்தது. எனவே பிரஷ்யாவின் ஹோஹன் சோலர்ன் வம்சத்தைச் சார்ந்த பிரஷ்ய அரசர் 'ஜெர்மனியப் பேரரசர்' என்ற பட்டப்பெயருடன் ஜெர்மனியப் பேரரசராக விளங்கினர். இவர் தன்னுடைய விருப்பத்திற்கு ஏற்ப, தன்னுடைய நாட்டின் முதமைச்சர்களை நியமிக்கும் அதிகாரத்தையும், அவர்களைப் பதவியில் இருந்து விலக்கும் அதிகாரத்தையும் பெற்றிருந்தார். பிரஷ்யநாட்டின் இராணுவம், பேரரசருடைய இராணுவமாக விளங்கியது. மேலும் பண்டெஸ்ரடில் இருந்த அங்கத்தினர்களில் பிரஷ்ய அரசரால் நியமிக்கப்பட்ட அங்கத்தினர்களுக்கு, சூழ்நிலைகளுக்கு ஏற்ப அடிக்கடி மாறுபடும் எண்ணிக்கைகளைக் கொண்ட அளவு வாக்குரிமைகள் வழங்கப்பட்டன. இராணுவம், வரி, போர்க்கருவிகள் ஆகியவற்றின் அளவுகளையோ, அரசியல் அமைப்பின் மாற்றங்களையோ பெரும்பான்மை பலத்துடன் ரீஷ்டக் நிறைவேற்றினால், அவற்றைத் தன் விருப்பத்திற்கு ஏற்ப மாற்றியமைக்கும் வகையில் அரசருக்கு வெட்டு அதிகாரம் (Veto power) வழங்கப்பட்டிருந்தது. இதனை அரசர் பண்டேஸ்ரடில் தன்னுடைய நியமன அங்கத்தினர்களுக்கு வழங்கப்படும் வாக்குரிமைகள் மூலம் பெற்றார்.

ஏறத்தாழ முதலாம் வில்லியம் 1871-ல் இருந்து இருபது ஆண்டுகள் பேரரசராக விளங்கினர். பிரஷ்ய அரசரின் முதலமைச்சராக விளங்கிய பிஸ்மார்க்கும் 1871-க்குப் பிற்பட்ட இருபதாண்டுக் காலத்திற்குப் பேரரசின் முதலமைச்சராக விளங்கினர். 1871-க்கும் 1891-க்கும் இடைப்பட்ட இக்காலத்தில் பிஸ்மார்க், பிரஷ்ய நாட்டின் உள்நாட்டுக் கொள்கையிலும், ஐரோப்பிய அரசியலிலும் ஒரு முக்கியபங்கு வகித்தார். இவர்

முதலமைச்சரான முதல் ஆண்டில் ரீஷ்டக்கில் இருந்த பெரும்பாலான அங்கத்தினர்கள் இவருடைய கொள்கைகளுக்குப் பெருமளவில் ஆதரவு கொடுத்து, பேரரசின் ஸ்திரத் தன்மைக்குப் பாடுபட்டனர்.

பிஸ்மார்க்கு முதலமைச்சராக இருந்த இருபதாண்டுகளில் பல முன்னேற்றங்கள் குறிப்பிடத்தக்க வகையில் ஏற்பட்டன. பல்வேறு வகையான சட்டங்களை மாநிலங்கள் பின்பற்றி வந்தாலும் அவை அனைத்தும் சீரமைக்கப்பட்டன. ஜெர்மனியப் பேரரசு முழுவதற்கும் பொருந்தும் வகையில் ஒரே வகையான புதிய சட்டங்களும், சட்ட அமைப்புக்களும் ஏற்படுத்தப் பட்டன. பேரரசின் இரயில்வே நிறுவனம் என்ற ஒன்று 1873-ம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப் பட்டது. இப்புதிய இரயில்வே நிறுவனத்தில் ஜெர்மனியப் பேரரசில் அடங்கியிருந்த எல்லா இரயில்வேக்களும் ஒருங்கிணைக்கப்பட்டன. மேலும் 1873-ம் ஆண்டுச் சட்டம் பேரரசின் எல்லாப் பகுதிகளிலும் இரயில்வே, இராணுவம், தபால், தந்தி ஆகிய பிரிவுகளை ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்திச் சிறப்பாக செயல்படும் வகையில் ஏற்பாடுகளைச் செய்தது.

1875-ல் இயற்றப்பட்ட வங்கிச்சட்டம் மாநில அரசாங்கத்தின் அதிகாரத்தின்கீழ் செயல்பட்டு வந்த வங்கிகள் அனைத்தையும், பண்டேஸ்ரட்டின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கும் வகையில் வங்கிகளின் நிலைமையை மாற்றியமைத்தது. மேலும் 1876-ல் பேரரசின்வங்கி என்ற ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இது மத்திய அரசாங்கத்தின் பொருளாதார நிலையைப் பலப்படுத்தியதுடன், மத்திய அரசின் பொருளாதார நிலை நிரந்தரமாக ஸ்திரத்தன்மையுடன் விளங்குவதற்கும் பாடுபட்டது.

ஜெர்மனியில் 1871-க்குப் பிறகு பிஸ்மார்க்கின் ஆலோசனையின்பேரில் இயற்றப்பட்ட சட்டங்கள் யாவும் அந்நாட்டின் தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின. நிலக்கரி, இரும்பு ஆகியவை அதிக அளவில் வெட்டியெடுக்கப்பட்டன. எனவே புதிதாக ரூர், ஸார் ஆகிய ஜெர்மனியப் பகுதிகளிலும், 1870-ல் பிரான்சிடமிருந்து கைப்பற்றப்பட்ட லொரைன் பகுதியிலும் எந்திரத் தொழில் 1871-க்குப் பிறகு வெகுவிரைவாக வளர்ச்சியடைந்தது. இதனால் ஐரோப்பியக் கண்டத்திலேயே வெகு விரைவில் தொழில்துறையில் முன்னேறிய நாடுகளுள் ஜெர்மனி முதலாவதாக இருந்தது. தொழில் துறையில் மட்டுமின்றி

இராணுவத் துறையிலும் ஐரோப்பாவில் முன்னணியில் நின்றது. 1886-ல் மிகப்பழமையான அரசான ஆஸ்திரியாவுடனும், 1870-ல் தரைப்படையில் சிறந்த பிரான்சுடனும் செய்த போரில் ஜெர்மனி வெற்றி பெற்றது. இவ்வெற்றிகளால் பிரஷ்யர்கள் ஜெர்மனிய இராணுவம் நன்ருக சீரமைக்கப்பட்டு இருந்ததையும், போதிய அளவு போர்த்தளவாடங்களைப் பெற்றிருந்ததையும், மிகத் திறமையானது என்பதையும் நிலைநாட்டினர். பிஸ்மார்க் இவ்வெற்றிகளைப் பயன்படுத்தி, ஹோஹன் சோலர்களின் ஜெர்மனியப் பேரரசை ஏற்படுத்தி, அதனை நிலைநாட்டிய பின்னர், அனைத்து ஐரோப்பிய நாடுகளுக்கும் ஹோஹன் சோலர்ன் வம்சம் தலைமைப் பொறுப்பைப் பெறப் பாடுபட்டார். தனனுடைய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக, 1882-ம் ஆண்டில் பிரஷ்யாவில் ஏற்படுத்தப்பட்ட கட்டாய இராணுவப் பயிற்சித்திட்டத்தை 1871-ல் ஜெர்மனியப் பேரரசு முழுவதற்கும் விரிவு படுத்தினர்.

ஜெர்மனியப் பேரரசின் இராணுவத்தினர்களின் எண்ணிக்கை நான்கு இலட்சம் என்று வரையறுக்கப்பட்டது பேரரசின் படைகள் அதிகரிக்கப்பட்டதால் அதற்குத் தக்க அளவு இராணுவத்தின் செலவிற்காக, ஜெர்மனியின் கருவூல அமைப்பில் சில மாறுதல்களை பிஸ்மார்க் செய்தார். ஆனல் ரீஷ்டக் இதற்கு ஒப்புதல் அளிக்காததால் சில இன்னல்கள் ஏற்பட்டன. ஆனல் பிஸ்மார்க் தன்னுடைய திறமையின் காரணமாகவும், செல்வாக்கின் காரணமாகவும் இராணுவத்திற்கு மானியம் அளிக்கும் சில உத்தரவுகளைக் குறுகிய காலங்களுக்குப் பெற்ருர். முதலில் இவ்வுத்தரவுகள் ஏழு ஆண்டுகளுக்கும், பின்னர் மேலும் ஐந்தாண்டுகளுக்கும் பிறப்பிக்கப்பட்டன. எனவே இத்தகைய உத்தரவுகள் பிறப்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளும் பொழுதெல்லாம் ஜெர்மனியப் பாராளுமன்றத்தில் அங்கத்தினர்கள் இந்நாட்டின் இராணுவக் கொள்கைகளைக் காரசாரமாக விவாதித்தனர். ஆனல் பிஸ்மார்க் தங்கள் நாட்டிற்குப் பிறநாடுகளின் இராணுவக் கொள்கைகளால் ஏற்பட இருக்கும் பேராபத்தை எடுத்துக்கூறி, மிக எளிதாக இராணுவத்தினருக்காகத் தேவைப்படும் தன்னுடைய குறியீட்டை ரீஷ்டக்கின் மூலம் பெற்ருர்.

பிரான்சுநாடு படைக்குறைப்பின் காரணமாக, 1870-1871ல் அடைந்த தொல்லைகளை பிஸ்மார்க் நன்கு உணர்ந்திருந்தார். இருப்பினும் பிரான்சு தனக்கு இருக்கும் சாதகமான சூழ்நிலைகளைப் பயன்படுத்தி அல்சேஸ், லொரைன் ஆகிய பகுதிகளைத்

திரும்பவும் கைப்பற்றக் கருதியதையும் பிஸ்மார்க் நன்கு அறிந்திருந்தார். இவ்விரு பகுதிகளையும் கைப்பற்ற பிரான்சு தனித்து ஜெர்மனியுடன் போரிட்டால், அதனை ஜெர்மனியப் பெரும்படை எளிதில் வெற்றி கொண்டுவிடும் என்றே பிஸ்மார்க் கருதினர். ஆனால் பிரான்சு நாட்டின் விருப்பத்தை நிறைவேற்ற மற்ற ஐரோப்பிய வல்லரசுகள் பிரான்சு நாட்டிற்கு உதவிசெய்ய முன் வந்ததால் அதனைத் தடைச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். எனவே பிரான்சு மற்ற ஐரோப்பிய நாடுகளின் உதவியின்றித் தனித்து இருக்கச் செய்வதற்காகவும், எந்நாட்டுடனும் ஒப்பந்தம் எதுவும் செய்துகொள்ளா வண்ணம் பார்த்துக் கொள்ளவும் ஜெர்மனியப் பேரரசின் வெளிநாட்டுக் கொள்கையை பிஸ்மார்க் வகுத்தார்.

பிஸ்மார்க்கின் கருத்துக்களுக்கு ஏற்ப, ஐரோப்பிய நாடுகளின் போக்கு 1871 முதல் 1890 வரை ஜெர்மனியின் கருத்துக்களுக்குச் சாதகமாக அமைந்திருந்தது. பிஸ்மார்க் இத்தகைய சூழ்நிலைகள் முழுவதையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, ஜெர்மனியை ஒரு மிகப் பெரிய சர்வாதிகாரப் பேரரசாக மாற்றி அமைக்கத் திட்டமிட்டார்.

"பகையாளி குடியை உறவாடிக் கெடு" என்ற பழமொழிக்கேற்ப, ஜெர்மனியின் அண்டை நாடான ஆஸ்திரியா-ஹங்கேரியுடன் பிஸ்மார்க் தன்னுடைய எண்ணங்களை ஈடேற்ற நட்புறவை வளர்த்துக் கொண்டார். ஆஸ்திரியா-ஹங்கேரியப் பேரரசரான ஜோஸப் பிரான்சிஸ் என்பவருக்கு 1866-ல் வேண்டுமென்றே மிகத் தாராளமாகச் சலுகைகளை அளித்தார். பிறகு இரட்டை முடியாட்சியின் (Dual monarchy) காரணமாக, உள்நாட்டுச் சூழ்நிலைகளாலும், ஹாப்ஸ்பர்க் வம்சத்தைச் சார்ந்தவர்கள் பால்கன் தீபகற்பத்தில் பின்பற்றிய நாடுபிடிக்கும் கொள்கைகளின் காரணமாகவும், இத்தாலி, ஜெர்மனி ஆகிய நாடுகளிலும் இழந்த பகுதிகளை மீண்டும் பெறுவதற்காகவும், ஆஸ்திரிய - ஹங்கேரிய அரசர்கள் ஜெர்மனியின் படை வலிமையை நம்பி பிஸ்மார்க்கின் வலையில் வீழ்ந்தார்கள்.

இதன்பின்னர் பிஸ்மார்க் புத்துயிர் பெற்ற இத்தாலிய நாட்டுடன் நட்புறவு கொண்டார். இந் நட்புறவுக்கு இத்தாலியின் பெரும்பாலான மக்கள் பிஸ்மார்க்கின் கீழ் இயங்கிவந்த ஜெர்மனியின் நட்புறவால்தான் வெனீஷியாவை 1866-ல் இத்தாலி பெற்றது எனக் கருதியது ஒரு முக்கிய காரணமாகும். மேலும் இத்தாலிய அரசாங்கம் ரோம் நகரப் போப்புடன்

கொண்டிருந்த பகைமையை ஜெர்மனி 1870-ல் பெற்றது. இதே சமயத்தில் பிரான்சில் திருச்சபையின் ஆதிக்கம் அந்நாட்டின் அரசாங்கத்தில் அதிகரித்தது. இதனால் பல திருச்சபை அதிகாரிகள் போப்பாண்டவரின் ஆட்சியை நிலைநாட்ட இத்தாலிய விவகாரங்களில் ஈடுபடவேண்டும் என வலியுறுத்தினார்கள்.

பிஸ்மார்க் பல திறமைகளைக் கையாண்டு பிரிட்டனுடன் பகைமை கொள்வதைத் தவிர்த்தார். அடுத்து 1870-1871-ல் ஜெர்மனிக்கும் பிரான்சுக்கும் ஏற்பட்ட சண்டையின் பொழுது பெல்ஜியம் பிரிட்டனைப் போலவே நடுநிலை வகிக்க வேண்டும் என வலியுறுத்தினார். ஏறத்தாழ பத்து ஆண்டுகளுக்கு மேலாக கடல்கடந்த நாடுகளில் ஏகாதிபத்தியக் கொள்கையைப் பின்பற்றுவதில் ஜெர்மனி அதிக ஆர்வம் காட்டக்கூடாது எனவும் பிஸ்மார்க் கருதினார். எனினும் ஜெர்மனியின் கடல் வாணிகர்களும், தேசியவாதிகளும் காட்டிய ஆர்வத்தின் காரணமாக 1880-க்குப் பிறகு ஏகாதிபத்தியக் கொள்கைகளில் பிஸ்மார்க் கவனம் செலுத்தினார். ஆனால் பல இன்னல்களுக்குள்ளாகி, ஆங்கிலேயர்களின் எதிர்ப்பிற்கு ஆளாகா வண்ணம், ஜெர்மனியைப் பார்த்துக் கொண்டதே பிஸ்மார்க்கின் கொள்கை வெற்றி பெற்றதற்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்தது.

ஜெர்மனியின் ஏகாதிபத்தியக் கொள்கையைக் காட்டிலும், ஆசியாவில் இரஷ்யாவும், ஆப்பிரிக்காவில் பிரான்சும் பின்பற்றி வந்த நாடு பிடிக்கும் கொள்கைகளின் காரணமாக பிரிட்டிஷ்காரர்கள் அதிக தொல்லைகளுக்கு இலக்கானார்கள். மேலும் ஜெர்மனியிலும், பிரிட்டனிலும் வாழ்ந்த மக்கள் டியூடானியர்களின் வழிவந்தவர்கள் என்பதால்தான் ஜெர்மனி ஐரோப்பாக் கண்டத்தில் வல்லரசாகவும், பிரிட்டன் கடலாதிக்க நாடாகவும் விளங்கின என்று ஆங்கிலேயர்கள் கருதினார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, பிரிட்டன் வெளிநாட்டு அலுவலகங்களில் பணியாற்றியவர்கள், பிரிட்டன் எத்தகைய இடையூறுமின்றி, கடலாதிக்கத்தைப் பெற்றிருந்தவரை, ஐரோப்பிய நாடுகளுடன் எந்த ஓர் உடன்பாட்டையும் செய்து கொள்வதில் அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை. இவை எல்லாவற்றையும் நன்றாக அறிந்த பிஸ்மார்க் பிரிட்டனுக்கும், பிரான்சுக்கும் இடையே இருந்த நட்புறவால் ஜெர்மனிக்கு எந்த ஆபத்தும் ஏற்படாதவாறு பார்த்துக் கொண்டார்.

பால்கன் பகுதியில் இரஷ்யா, ஆஸ்திரியா ஹங்கேரி நாட்டுடன் விரோத மனப்பான்மை கொண்டிருந்தது. இதனால்

ஜெர்மனி, பால்கன் பகுதியில் ஆஸ்திரிய-ஹங்கேரியப் பேரரசுக்கு ஆதரவு தெரிவித்தால், அதனைச் சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டு இரஷ்யா, ஜெர்மனியின் பகைநாடான பிரான்சுடன் ஏதாவது ஒரு உடன்படிக்கையைச் செய்துகொள் ளும் நிலை இருந்தது. எனவே ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரியப் பேரரசுடன் எந்த ஒரு நட்புறவும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. மேலும் அரசியல் சூழ்நிலைகளின் காரணமாக, ஜெர்மனி இரஷ் யாவுடன் கட்டாயமாக ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது.

பிரான்சு நாட்டில் குடியரசாட்சி நடைபெற்று வந்ததால் அதனை வெறுத்து, இரஷ்யா, தன்னைப் போலவே மன்னராட்சி முறையில் நம்பிக்கை கொண்டு, அதனைச்செயல்முறையில் நிறை வேற்றி வந்த ஜெர்மனியிடம் அதிக ஈடுபாடு கொண்டிருந்தது. எனவே ஜெர்மனியின் செயல்களுக்கு ஆதரவு காட்டும் போக் கில் இரஷ்யா நடந்து கொண்டது. மேலும் 1855ஆம் ஆண்டு முதல் 1881ஆம் ஆண்டுவரை ஆட்சிபுரிந்த இரஷ்யாவின் பேரரசரான இரண்டாம் அலெக்ஸாந்தர் இரஷ்யப் புரட்சிக் காரர்கள் எல்லோரும் பிரான்சு நாட்டில் இருந்துதான் தங்கள் புரட்சிக் கருத்துக்களையும், கொள்கைகளையும் கற்றுக் கொண டனர் என்ற நம்பிக்கையைக் கொண்டிருந்தார். மேலும் போலந்து நாட்டுக்காரர்கள் 1863-ல் இரஷ்ய எல்லைப் பகுதி களில் ஊடுருவல் செய்தபொழுது, பிஸ்மார்க் பிரஷ்யாவி லிருந்து நல்ல சமயத்தில் இரஷ்யாவிற்கு உதவி செய்தார். இவ் உதவியினுல்தான் இரஷ்யர்கள் போலந்து நாட்டின் ஊடுருவலை முறியடித்தனர் என்பதையும், இரஷ்யா கருங்கடல் பகுதியில் தன்னுடைய ஆதிக்க உரிமையைத் திரும்பவும் பெறுவதற்கு 1871-ல் பிஸ்மார்க் மிகுந்த ஆதரவு கொடுத்ததையும் இரஷ்ய மன்னரான இரண்டாம் அலெக்ஸாந்தர் நன்குக உணர்ந்திருந் தார்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஆசியப் பகுதிகளிலும், பால்கன் பகுதிகளிலும் பிரிட்டிஷ்காரர்களின் எதிர்ப்புக்களைச் சமாளித்துத் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்த இரஷ்யர்களுக்கு ஜெர்மனி யின் ஆதரவு அதிகம் தேவை என்பதை இரண்டாம் அலெக் ஸாந்தர் நன்கு உணர்ந்திருந்தார். எனவே ஜெர்மனியுடன் பகை மையை ஏற்படுத்திக் கொள்ளாமல் இருப்பதற்கான முயற்சிகளை இரஷ்ய அரசர் மேற்கொண்டார்.

அரசியல் தலைவர்களின் மனநிலையை நன்கறிந்து, அவர்கள் போக்கிற்கு வளைந்து கொடுப்பதுபோல் நடந்து கொண்டு,

பின்னர் அவர்களைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் கலையில் வல்லவரான பிஸ்மார்க், இரண்டாம் அலெக்ஸாந்தரின் கருத்துக் களைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கினா. தன்னுடைய முயற்சியின் முதல் படியாக 1872ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பெர்லின் நகரத்தில் ஒரு மாநாட்டைக் கூட்டினார். பிரஷ்யப் பேரரசரான முதலாம் வில்லியம், ஆஸ்திரியா-ஹங்கேரி ஆகியவற்றின் பேரரசரான பிரான்சிஸ் ஜோஸப், இரஷ்யாவின் பேரரசரான இரண்டாம் அலெக்ஸாந்தர் ஆகிய முப்பெரும் பேரரசர்களும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். இம்மாநாடு முப்பேரரசர்களின் கூட்டணி (League of the three Emperors) என வழங்கப் பட்டது.

ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, இரஷ்யா ஆகிய நாடு களின் அமைச்சர்கள், இக்கூட்டணி மூலம் மேற்சொன்ன மூன்று நாடுகளிடையே நட்புறவும், நெருங்கிய தொடர்பும் இருக்கின்றன என்பதை உலக நாடுகளுக்கு எடுத்துரைத்தார் கள். மூன்று நாடுகளின் பேரரசர்களும் 1873-ல் நாடுகளிடையே அமைதியை நிலைநாட்ட ஒவ்வொருவரும் மற்றவர்களுடன் ஒத் துழைக்க ஒப்புக்கொண்டனர். அமைதியைக் குலைப்பதற்கான சூழ்நிலை உருவானாலோ, போர் ஏற்பட்டாலோ மூவரும் ஒன்றுகூடி விவாதித்து ஒரு பொதுவான முடிவு எடுக்க வேண்டு மெனவும் முடிவு செய்தனர்.

இரஷ்யாவிற்கும், ஜெர்மனிக்கும் இடையே ஏற்பட்ட நட் புறவு வெகுகாலம் நீடிக்கவில்லை. பிரெஞ்சுக்காரர்கள் 1870-ல் அல்சேஸ், லொரைன் என்ற பகுதிகளைப் பிரஷ்யர்களிடம் இழந்தபொழுது தங்கள் நாட்டில் இராணுவ தளவாடங்களைப் பெருக்குவதில் சிறிது கவனம் செலுத்தத் தொடங்கினர்கள். பிரான்சு நாட்டில் இராணுவம் வலிமை பெற்றால் தங்களுக்கு ஆபத்து ஏற்படும் என ஜெர்மனியர்கள் நினைத்தனர். எனவே ஜெர்மன் நாட்டுச் செய்தித்தாள்கள் 1875-ல் பிரஞ்சு நாட்டில் இராணுவம் பலப்படுத்தப்படுவதை இடித்துரைத்தன. ஜெர்மன் நாட்டுச் செய்தித் தாள்களின் இத்தகைய போக்கு இரஷ்ய-ஜெர்மனிய நட்புறவுகளைப் பாதிக்கத் தொடங்கியது.

ஜெர்மன் நாட்டுச் செய்தித் தாள்கள் பிஸ்மார்க்கின் தூண்டுத லால்தான் பிரான்சு நாட்டுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்கின்றன என்று இரஷ்ய அரசாங்கம் கருதியது. பிரிட்டிஷ் நாட்டுச் மக்களும் இவ்வாறே கருதினர். மேலும் ஜெர்மனி பிரான்சு

நாட்டுடன் போர் தொடங்குவதற்கு முதல்படியான நடவடிக்கை தான் ஜெர்மன் நாட்டுச் செய்தித் தாள்களின் பிரச்சாரம் என பிரிட்டன், இரஷ்யா ஆகிய இரு நாடுகளும் கருதின. இச் சமயத்தில் பிரிட்டனுடன் பகைமை கொண்டால் அது ஜெர்மனி யைப் பாதிக்கும் எனக் கருதிய பிஸ்மார்க் பிரிட்டன், இரஷ்யா ஆகிய நாட்டு மக்களின் கருத்துக்களை நன்கு அறிந்து, தான் தன் நாட்டுச் செய்தித் தாள்களை பிரான்சு நாட்டிற்கு எதிராகப் பிரச்சாரம் செய்யத் தூண்டவில்லை எனவும், தவறான ஆதாரங்களை வைத்துக்கொண்டு அவ்விரு நாடுகளும் அவ்வாறு கருதின எனவும் அறிவித்தார். அத்துடன் அமையாமல் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு ஜெர்மன் நாட்டுச் செய்தித் தாள்கள் பிரான்சு நாட்டிற்கு எதிராகப் பிரச்சாரம் செய்வதையும் தற்காலிகமாகத் தடுத்து நிறுத்தினார். பிஸ்மார்க்கின் இத்தகைய நடவடிக்கையால் 1875-ல் இரஷ்யா-ஜெர்மனிய உறவுகளைப் பாதிக்கும் நிலை மாறியது.

இரஷ்யாவிற்கும், துருக்கிக்கும் இடையே 1877-1878-ல் ஏற்பட்ட இரஷ்ய-துருக்கிய சண்டை இரஷ்யாவிற்கும், ஜெர்மனிக்கும் இடையே இருந்த நட்புறவைப் பாதிக்கும் வகையில், 1875-ல் ஏற்பட்ட நிலையைவிட மோசமான ஒரு நிலையை ஏற்படுத்தியது.

இரஷ்ய-துருக்கிய சண்டை (1877-78)யில் இரஷ்யா வெற்றி பெற்றது. துருக்கியுடன் செய்த போருக்குப்பின் ஏற்பட்ட உடன்படிக்கையின் நிபந்தனைகளை நிர்ணயிப்பதில் இரஷ்யா அதிக செல்வாக்குப் பெற்றது. இதனால் பால்கன் பகுதியில் இரஷ்யாவின் ஆதிக்கத்தைக் கண்டு ஆஸ்திரியா, ஹங்கேரி, பிரிட்டன் ஆகிய நாடுகள் அஞ்சின.

இந்நிலையில் 1878-ல் பெர்லினில் கூடிய காங்கிரஸில் பிஸ்மார்க் அதிக செல்வாக்குப் பெற்றார். துருக்கியில் இருந்து கொள்ளையடித்துப் பொருள்களைப் பங்கிட்டுக் கொடுப்பதில் பிஸ்மார்க் முக்கிய பங்கு வகித்தார். இதனால் ஆஸ்திரியா திருப்தியடைந்தது. ஆனால் பிஸ்மார்க் நடந்துகொண்ட முறை இரஷ்யாவைத் திருப்தியடையச் செய்யவில்லை. இதனால் இரஷ்யாவில் பிஸ்மார்க்குக்கு எதிரான கருத்துக்கள் மக்க ளிடையே வேகமாகப் பரவியது.

மக்களின் கருத்துக்களை மிக எளிதில் அறிந்துகொள்ளும் திறமை பெற்றவரான பிஸ்மார்க், இரஷ்யாவில் தனக்கு எதிராக

உள்ள கருத்துக்களால் ஜெர்மனிக்கு ஆபத்து ஏற்படும் எனக் கருதினர். எனவே 1879-ல் பிஸ்மார்க் ஆஸ்திரியா-ஹங்கேரியுடன் ஒரு தற்காப்பு உடன்படிக்கை செய்துகொண்டார். இவ்வுடன்படிக்கையின்படி இரஷ்யா தனியாகவோ, மற்ற நாட்டுடனே ஜெர்மனியைத் தாக்கும்பொழுது ஆஸ்திரியா-ஹங்கேரியும், ஆஸ்திரிய-ஹங்கேரியைத் தாக்கும் பொழுது ஜெர்மனியும் தங்கள் முழு இராணுவ பலத்தையும் இரஷ்யாவுக்கு எதிராகப் பயன்படுத்த ஏற்பாடு செய்யப் பட்டது. இவ்வுடன்படிக்கை ஐரோப்பா முழுவதும் நன்ருக விளம்பரப் படுத்தப் பட்டது. ஆனல் இவ்வுடன்படிக்கையின் ஷரத்துக்கள் 1888 வரை வெளியிடப்படவில்லை.

இரஷ்யாவிற்கு எதிராக ஆஸ்திரியா-ஹங்கேரியுடன் செய்து கொண்ட உடன்படிக்கையினலும் பிஸ்மார்க் திருப்தி அடையாமல் தமது கவனத்தை இத்தாலியின்மீது திருப்பி, இத்தாலியுடன் ஒரு தற்காப்பு உடன்படிக்கையை, இரஷ்யாவுக்கு எதிராகச் செய்துகொள்ளத் தக்க முயற்சிகளை மேற்கொண்டார். ஜெர்மனி ஐக்கியமடைந்த அதே சமயத்தில் இத்தாலியும் ஐக்கியமடைந்ததால் இரண்டு நாடுகளுக்குமிடையே இயற்கையாகவே நட்புறவு நிலவியது. மேலும் இத்தாலிய ஐக்கியத்தின் பொழுது பிரஷ்யா ஆஸ்திரியாவுடன் மேற்கொண்ட போரால் ரோம் நகரத்தையும் இத்தாலி கைப்பற்றியது. இதனலும் இத்தாலி ஜெர்மனியுடன் நட்புறவு கொண்டிருந்தது. ஆனல் பிஸ்மார்க் ஆஸ்திரியா-ஹங்கேரியைத் தன்னுடன் இணைத்துக் கொள்ளாத வரையில் இத்தாலியுடன் உடன்படிக்கை செய்து கொள்ள விரும்பவில்லை. பிரஷ்யா, ஆஸ்திரியா, இத்தாலி ஆகிய நாடுகளுக்கிடையே ஏற்பட்ட பகையுணர்ச்சி மறையாமல் இருந்ததும் இதற்கு ஒரு காரணமாகும். இந்நிலையில் இத்தாலிய அரசு தனித்து இருப்பதால் ஏற்படும் தீமைகளை நன்கு உணர்ந்தது. மேலும் 1881-ல் பிரஞ்சுக்காரர்கள் டியூனிஸ் (Tunis) என்ற பகுதியைக் கைப்பற்றியதால் இத்தாலிக்கும், பிரான்சுக்குமிடையே மீண்டும் பகையுணர்ச்சி வளர்ச்சியடைந்தது. ஆனல் இச்சமயத்தில் இத்தாலிய மக்கள் பிஸ்மார்க்கின் கொள்கைகளுக்கும், செயல்களுக்கும் வெளிப்படையாக ஆதரவு காட்ட ஆரம்பித்தனர். அத்துடன் ஆஸ்திரியாவுக்கு எதிரான பிரச்சாரத்தைக் கைவிட்டு விட்டு, 1882-ல் இத்தாலிய அரசாங்கம் ஆஸ்திரியா-ஹங்கேரியுடனும், ஜெர்மனியுடனும் ஒரு நட்பு உடன்படிக்கையைச் செய்துகொண்டது. இது "முக்கூட்டு உடன்படிக்கை" (Triple Alliance) என வழங்கப் பட்டது. இவ்வுடன்படிக்கையின் ஷரத்துக்கள்:

(1) இத்தாலி அல்லது ஜெர்மனி பிரான்சு நாட்டினல் தாக்கப்பட்டால், தாக்கப்பட்ட நாட்டின் வேண்டுகோளுக்குக் காத்திராமல், தாக்கப்படாத நாட்டின் இராணுவம் பிரான்சு நாட்டிற்கு எதிராகப் போர் தொடுக்க வேண்டும்.

(2) இத்தாலி, ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி ஆகிய மூன்று நாடுகளில் ஏதாவது ஒரு நாடு, அல்லது இரண்டு நாடுகள் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வல்லரசுகளால் தாக்கப்படும்பொழுது, முன்னல் சொல்லப்பட்ட மூன்று நாடுகளும் ஒன்று சேர்ந்து, தாக்கும் நாட்டிற்கு எதிராகப் போரிட வேண்டும் என்பதாகும்.

உடன்படிக்கை முதலில் 1882-ல் ஐந்தாண்டுகளுக்கு என்று கையெழுத்தாகியது. பின்னர் 1887-ல் இவ்வுடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டது. இவ்வுடன்படிக்கை புதுப்பிக்கப்படும் பொழுது இத்தாலியோ, ஆஸ்திரியாவோ பால்கன் தீபகற்பப் பகுதியில் எந்த ஒரு பகுதியையும் முக்கூட்டு உடன்படிக்கை நாடுகளுக்குத் தெரியாமல் கைப்பற்றும் முயற்சியை மேற்கொள்ளக் கூடாது என்ற நிபந்தனையும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இதனல் இம் முக்கூட்டு உடன்படிக்கை மீண்டும் 1891, 1903, 1912 ஆகிய ஆண்டுகளில் புதுப்பிக்கப்பட்டு, முதல் உலகப் போர் வரையில் நிலைத்திருந்தது. இந்நிலையில் செர்பியா (Serbia), ருமேனியா (Rumania) ஆகிய இரண்டு பால்கன் நாடுகளும் 1880க்கும் 1889க்கும் இடைப்பட்ட காலத்தில் முக்கூட்டு உடன்படிக்கையை மையமாகக் கொண்டு செயல்பட்டு வந்தன.

இதற்கிடையில் இரஷ்யாவின் ஸார் மன்னரான இரண்டாம் அலெக்ஸாந்தர் 1881-ல் கொலை செய்யப்பட்டார். இவருக்கு அடுத்து இரஷ்யாவின் மன்னராக மூன்றும் அலெக்ஸாந்தர் பட்டத்துக்கு வந்தார். மூன்றும் அலெக்ஸாந்தர் பதவியேற்றவுடன் எதேச்சையதிகார இரஷ்யாவிற்கும், குடியரசுப் பிரான்சுக்குமிடையே கருத்து ஒற்றுமையின் காரணமாக உடனடியாக ஏற்பட இருந்த வேற்றுமையைத் தவிர்த்தார். புதிய இரஷ்ய மன்னர் 1878-ல் ஏற்பட்ட பால்கன் உடன்பாடுகளில் அதிக கவனம் செலுத்தினர். இதனல் ஜெர்மனியுடன் இரஷ்யாவுக்கு இருந்த நட்புறவை மீண்டும் புதுப்பித்துக் கொள்ள விரும்பினர். தேவையானல் ஆஸ்திரியாவுடனும் நட்புறவை ஏற்படுத்திக்கொள்ளத் தயாராக இருந்தார்.

பிஸ்மார்க் ஆஸ்திரியாவைத் தன்னுடன் நட்புறவாக வைத்துக்கொள்ள வேண்டுமென எண்ணினர். எனவே மீண்டும் மூன்று பேரரசர் கூட்டணியினை, 1881-ல் ஜெர்மனி புதுப்பித்தது. இதன்படி ஜெர்மனி, இரஷ்யா, ஆஸ்திரியா-ஹங்கேரி ஆகிய மூன்று பேரரசுகளுள் ஏதாவது ஒன்று மற்ற இரண்டு நாடுகளைத் தவிர வேறு ஒரு நாட்டுடன் போரிட நேரிட்டால், மற்ற இரண்டு நாடுகளும் நடுநிலைமை வகிக்க வேண்டுமென ஏற்பாடு செய்யப்பட்டது. இதனை மூன்று பேரரசுகளும் ஏற்றுக்கொண்டன. இந்த ஏற்பாட்டை 1881-ல் முதலில் மூன்றுண்டுகளுக்குச் செயல்படுத்த ஒத்துக்கொண்டனர். பின்னர் இது 1884-ல் மேலும் மூன்றுண்டுகளுக்குப் புதுப்பிக்கப்பட்டது.

ஆனல் ஆஸ்திரியாவுக்கும், இரஷ்யாவிற்குமிடையே பால்கன் பகுதியில் ஏற்பட்ட கடுமையான போட்டியின் காரணமாக மூன்று பேரரசர் கூட்டணியிலிருந்து 1887-ல் இரஷ்யா விலகிக்கொண்டது. இதேசமயத்தில், பிரான்சு, தான் ஜெர்மனியிடம் இழந்த பகுதிகளைத் திரும்பவும் கைப்பற்ற மீண்டும் போர் தொடுக்க வேண்டும் என பிரான்சில் பௌலங்கர் தொடங்கிய கிளர்ச்சி குறிப்பிடத்தக்க அளவு வலிமையடைந்தது. பிரான்சில் தோன்றிய இக்கிளர்ச்சியும், இரஷ்யா மூன்று பேரரசுக் கூட்டணியில் இருந்து விலகிய நிகழ்ச்சியும் ஜெர்மன் முதலமைச்சரான பிஸ்மார்க்கை விழிப்படையச் செய்தன.

இச்சூழ்நிலைகளைச் சமாளிப்பதற்குப் பல்வேறு முறைகளை பிஸ்மார்க் பின்பற்றினர். இத்தாலி, ஆஸ்திரியா-ஹங்கேரி ஆகிய நாடுகளுடன் தான் செய்துகொண்ட முக்கூட்டு உடன்படிக்கையை 1891, 1903, 1912 ஆகிய ஆண்டுகளில் புதுப்பித்தவுடன் அதனை மேலும் வலுவடையச் செய்தார். பின்னர் இரஷ்யாவுடன் "மறு பாதுகாப்பு உடன்படிக்கை" (Reinsurance Treaty) என்ற ஓர் உடன்படிக்கையை மூன்று ஆண்டுகளுக்கு இரகசியமாகச் செய்துகொண்டார். இதன்படி இராஜதந்திர உதவியையும், தற்பொழுது இஸ்தான்புல் என்று வழங்கப்படும் கான்ஸ்டாண்டிநோபிளை (இதன் பழைய பெயர் பைஸாண்டியம் என்பதாகும்) இரஷ்யர்கள் கைப்பற்றுவதற்குத் தான் உதவி செய்ததையும் சுட்டிக்காட்டி அவற்றிற்குக் கைம்மாருக பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் போர் ஏற்பட்டால் அப்போரில் இரஷ்யா நடுநிலை வகிக்கவேண்டும் என பிஸ்மார்க் கேட்டுக்கொண்டார்.

இதே சமயத்தில் இரஷ்யா பால்கன் பகுதிகளில் பின்பற்றி வந்த ஆக்கிரமிப்புக் கொள்கைகளைத் தடை செய்வதற்காகவும், பிரான்சின் குடியேற்ற நாட்டுக் கொள்கை வளர்ச்சியை மத்திய தரைக்கடல் பகுதிகளிலும், தென்மேற்காசிய நாடுகளிலும் அந் நாடுகளின் நிலைமையை அப்படியே நிலைநாட்டுவதற்காகவும் பிஸ்மார்க் 1887-ல் பிரிட்டன், இத்தாலி, ஆஸ்திரியா-ஹங்கேரி ஆகிய நாடுகளுடன் ஓர் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டார். பின்னர் 1889-ல் ஜெர்மனி பிரிட்டனுடன் ஒரு நேரடி உடன்படிக்கையைச் செய்துகொள்ளும் முயற்சியில் பிஸ்மார்க் தோல்வியடைந்தார். பிரிட்டன், ஜெர்மனிக்கும் பிரான்சுக்கு மிடையே நடைபெறும் மோதலில் நேரடியாகக் கலந்துகொள்ள விரும்பாததே, பிஸ்மார்க்கினது முயற்சி தோல்வியடைந்ததற்கு முக்கிய காரணமாகும். பிஸ்மார்க்கின் முயற்சி தோல்வியடைந்தாலும், அவர் ஜெர்மனியின் முதலமைச்சராக இருந்தவரையில் (1871 முதல் 1890 வரை) பெரும்பாலான நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு, பிரான்சை ஐரோப்பிய நாடுகளினின்றும் தனித்து இருக்க வைத்ததுடன், ஜெர்மனியப் பேரரசைக் கட்டிக் காத்தார். இவர் முதலமைச்சராக இருந்த இருபதாண்டுகளில் பன்னாட்டு இராஜ தந்திரமும், இராணுவச் சிறப்புக்களும் ஜெர்மனியைப் பொறுத்தே அமைந்திருந்தன.

ஜெர்மன் நாட்டின் உள்நாட்டு நிகழ்ச்சிகளைப் பொறுத்த அளவில், 1870 முதல் அடுத்துள்ள பத்தாண்டுகளில் ஜெர்மன் நாட்டின் உள்நாட்டுக் கொள்கையை நிர்ணயிப்பதிலும், ஜெர்மன் நாட்டுப் பாராளுமன்றமான ரீஷ்டக்கிலும் பிஸ்மார்க் அதிக செல்வாக்குப் பெற்றிருந்தார். பிஸ்மார்க் ஜெர்மனியின் முதலமைச்சராக இருந்த முதல் பத்து ஆண்டுகளில் ஜெர்மனியில் தேசிய மிதவாதக் கட்சியும் (National Liberal Party), சுதந்திர பழமை விரும்பிகளின் (Free Conservative Party) கட்சியும் முக்கிய இரு அரசியல் கட்சிகளாக விளங்கின.

இவற்றுள் தேசிய மிதவாதக் கட்சியில் பொருளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த-கல்வியறிவு பெற்ற செல்வந்தர்களும், தொழிலாளர்களும் அங்கத்தினர்களாக இருந்தனர். ஜெர்மனியில் மற்ற எல்லாக் கட்சிகளையும்விட அதிக மக்கள் இக் கட்சிக்கு ஆதரவு அளித்தனர். சுதந்திர பழமை விரும்பிகளின் கட்சியில் பெரும்பாலும் நிலச்சுவான்தார்களும், குறிப்பாக பிரஷ்யர்களும் அங்கத்தினர்களாக இருந்தனர். இவ்விரு கட்சியினருமே பிஸ்மார்க் முதலமைச்சராக இருந்த முதல் பத்தாண்டுகளில் பிஸ்மார்க்கின் கொள்கைகளுக்கும், கருத்துக்

களுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்துச் செயல்பட்டு வந்தனர். இவ்விரு அரசியல் கட்சிகளைத் தவிர, 1860-க்கும் 1869-க்கும் இடைப்பட்ட காலத்தில் பழமை விரும்பிகளின் கட்சியும், முன்னேற்றக் கட்சியும் அரசியலில் ஈடுபட்டிருந்தன. இவற்றில் பழமை விரும்பிகளின் கட்சியினர் பழைய முறையில் நிலச்சுவான்தார்கள், லூதரன் மதகுருமார்கள், இராணுவ அதிகாரிகள், அதிக செல்வாக்குள்ள பதவியில் இருந்தவர்கள், பழைய மன்னராட்சி முறையில் நம்பிக்கையுள்ளவர்கள் ஆகிய பிரிவினர்களின் பிரதிநிதிகளாக விளங்கியதுடன் மேற்சொன்ன பிரிவினர்களின் கருத்துக்களுக்காகவும் செயல்பட்டு வந்தனர். மேலும் பழமை விரும்பிக் கட்சியினர் எல்லாவற்றையும் ஜெர்மன் மயமாக்கவேண்டும் என்ற பிஸ்மார்க்கின் கொள்கைகளுக்கு 1871 முதல் முழு ஆதரவு அளித்தனர். அரசு தெய்வீக உரிமைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி புரிந்த ஜெர்மன் அரசர், ஜனநாயகக் கொள்கைகளுக்கும் ஆதரவு காட்டியதால் இப் பழமை விரும்பிக் கட்சியினர் ஜெர்மன் அரசுக்குத் தங்கள் முழு ஒத்துழைப்பைக் கொடுத்தனர். எல்லாவற்றிற்கும் மேலாக, ஜெர்மன் பழமை விரும்பிக் கட்சியினர் பிஸ்மார்க்கைத் தங்களுள் ஒருவராகவே நினைத்ததால் அவருடன் கருத்து வேறுபாடு கொள்ளாததுடன், பிஸ்மார்க்கினுடைய இராணுவக் கொள்கைகளுக்கும் முழு ஆதரவு அளித்தனர்.

ஆனால் முன்னேற்றக் கட்சியில் மத்திய வகுப்பைச் சார்ந்த தீவிரவாதிகள் அதிக அளவில் இருந்தனர். இவர்கள் பிஸ்மார்க்கின் கொள்கைகளுக்கு ஓரளவு ஆதரவாக இருந்தாலும் அவ்வப்பொழுது சில தொல்லைகளைக் கொடுத்து வந்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் 1871ஆம் ஆண்டு ஜெர்மனியில் ஏற்படுத்தப்பட்ட புதிய அரசியல் அமைப்பினால் திருப்தியடையவில்லை. எனவே, பிரிட்டிஷ் அரசியல் அமைப்பை அடிப்படையாகக் கொண்டு பல புதிய மாற்றங்களைச் செய்து பாராளுமன்றத்துக்குக் கட்டுப்பட்ட அமைச்சரவையை உடைய பாராளுமன்ற அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமெனக் கோரினார்கள். இவர்கள் ஓரளவு அமைதியாகச் செயல்பட்டாலும் பிஸ்மார்க்கின் இராணுவத் திட்டங்களை முன்னேற்றக் கட்சியினர் எதிர்த்தனர். மேலும் ஜெர்மன் பாராளுமன்றமான ரீஷ்டக்கில் சொல்லாற்றலைக் காட்டிலும் செயலாற்றல் சிறந்து விளங்கிய பிஸ்மார்க்குடன் நீண்டநேரம் எதிர்த்து வாதாடிச் சோர்வடையச் செய்தனர். இருப்பினும் பிஸ்மார்க் தளர்ச்சியடையாமல் தன் கொள்கைகளையும், செயல்களையும் நிறைவேற்றி வந்தார்.

சில சோஷியலிஸ்டுகளும், சில குவல்ஃப்புகளும் (Guelfs), வடக்கு ஸ்லீஷ்விக்கின் பிரதிநிதிகளும், போலிஷ் மொழியைப் பேசும் ஜெர்மன் மக்கள் வாழும் பகுதியான போஸன் (Posen) பிரதிநிதிகளும், மேற்கு பிரஷ்யா, ஜெர்மனியின் தெற்கே உள்ள மாநிலங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் பிஸ்மார்க்கின் கொள்கைகளை ரீஷ்டக்கில் எதிர்த்தனர். இவர்கள் அனைவரும் ரீஷ்டக்கில் சிறுபான்மையினராக இருந்தனர். இவர்களில் சோஷியலிஸ்டுகள் மற்ற நாடுகளில் உள்ள சோஷியலிஸ்ட்டு களைப் போலவே தொழிலாளர்க்கு அதிக உரிமைகளுக்காகப் போராடினார்கள். ஹனோவர் (Hanovor) என்ற அரசுப் பகுதியாக இருந்ததை 1886-ல் பிரஷ்யா கைப்பற்றித் தன்னுடன் சேர்த்துக்கொண்டபொழுது ஹனோவரின் பிரதம அமைச்சராக இருந்த லுட்விக் விண்ட்தார்ஸ்ட் (Ludwig Windthrost) என்பவர் குவல்ஃப்புகளின் தலைவராக இருந்தார். இக் குவல்ஃப்புகள் தங்கள் பகுதிக்குச் சுயாட்சி நிலையைப்பெற மிகுந்த ஆர்வம் உடையவர்களாக இருந்தார்கள். வடக்கு ஸ்லீஷ்விக்கின் இரு பிரதிநிதிகளும் தங்கள் பகுதியை டென் மார்க்குடன் சேர்க்கவேண்டும் என விரும்பினார்கள். போலிஷ் மொழியைப் பேசும் ஜெர்மன் நாட்டுமக்கள் வாழும் பகுதியான போஸன், மேற்கு பிரஷ்யா ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஜெர் மனியின் தேசியக் கொள்கை போலந்தின் தேசியத்தை அழிப்பதற்கே என்ற கருத்தினைக் கொண்டவர்களாக இருந் தனர். அல்சேஸ், லொரைன் ஆகியவற்றின் பிரதிநிதிகள் 1874-ல் தான் முதன்முதலாக ரீஷ்டக்கில் அங்கம் வகிக்கத் தொடங்கினார்கள். இவர்கள் தங்கள் பகுதியான அல்சேஸ், லொரைன் ஆகிய இரு பகுதிகளையும் ஜெர்மனியப் பேரரசுடன் இணைத்தது முறையல்ல என்ற கருத்தைக் கொண்டிருந்தார்கள். எனவே ஜெர்மனியப் பேரரசுக்காக ரீஷ்டக்கில் கொண்டு வரப்படும் எல்லாச் சட்டங்களுக்கும் எதிர்ப்பு தெரிவித்ததுடன், ஜெர்மனியப் பேரரசின் போக்கிலும் குறைகள் காண ஆரம்பித் தனர். ஜெர்மனியின் தென் மாநிலங்களில் இருந்து ரீஷ்டக் கிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சற்று அதிக எண்ணிக்கையில் இருந்தார்கள். இவர்கள் பெரும்பாலும் சுதந்திரப் போக்கு உடையவர்களாக இருந்ததால் மாநிலங் களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமெனக் கோரினர். மேலும் இவர்கள் ஜெர்மனியை இராணுவ மயமாக்குவதை எதிர்த்தனர். இவர்கள் அனைவரும் பெரும்பாலும் கத்தோ லிக்க மதத்தைச் சார்ந்திருந்தார்கள். எனவே இவர்கள் ஜெர்மனியப் பேரரசில் புராடஸ்டண்டுகளின் செல்வாக்கு மேலோங்குவதைக்கண்டு அச்சம் அடைந்ததுடன், அவர்களின்

செல்வாக்கைக் குறைப்பதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டனர். இதனாலும், இவர்கள் பிஸ்மார்க்கின் கருத்துக்களை ரீஷ்டக்கில் எதிர்த்தார்கள்.

பிஸ்மார்க்கின் (உள்நாட்டு) அரசியல் கொள்கைகள்

ஜெர்மனியப் பேரரசில் கத்தோலிக்க மாநிலங்களே பிஸ்மார்க்கிற்கு அதிக எதிர்ப்பு தெரிவித்து வந்தன. ஜெர்மனியப் பேரரசின் பாராளுமன்றத்திலும், பிரஷ்யப் பாராளுமன்றத்திலும் தனக்குள்ள செல்வாக்கையும், கத்தோலிக்க திருச்சபைக்கான எதிர்ப்பையும் பயன்படுத்தி கத்தோலிக்க திருச்சபையை அடக்க பிஸ்மார்க் முயற்சித்தார். ஜெர்மனிய கத்தோலிக்கர்கள் நாட்டுப்பற்றற்றவர்களாக இருந்தார்கள் என முக்கிய இரு தேசியக் கட்சிகளான தேசிய மிதவாதக் கட்சியும், சுதந்திர பழமைவிரும்பிக் கட்சியும் கருதின. மேலும் கத்தோலிக்கர்கள் வெளிநாட்டிலுள்ள ரோமன் திருச்சபையின் அதிகாரியான போப்பின் ஆணைகளுக்கு அதிகம் கட்டுப்பட்டு வாழ்கின்றனர் எனவும், கத்தோலிக்கர்களின் இத்தகைய நிலை ஜெர்மனியின் சுதந்திரத்திற்கு மட்டுமல்லாமல் அதன் ஒற்றுமைக்கும் தீங்கு விளைவிக்கும் எனவும் இவ்விரு தேசியக் கட்சிகளும் கருதின. எனவே லூதரன் பிரிவினைச் சார்ந்த தீவிரவாதிகள் கிடைக்கக் கூடிய சந்தர்ப்பங்களையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு ரோமுடன் சண்டை செய்யத் தயாராக இருந்தார்கள்.

முன்னேற்றக் கட்சியைச் சார்ந்தவர்கள் அதிக உரிமைகளைப் பெறுவதற்காகவும், தற்கால நாகரிகத்தில் செல்வத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதற்காகவும் போராடி வந்தார்கள். திருச்சபை அரசியலில் அதிக செல்வாக்குப் பெற்றிருக்கும்வரை தங்கள் கருத்துக்களை நிறைவேற்ற முடியாது எனக் கருதிய இவர்கள் கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக பிஸ்மார்க் எடுத்த எல்லா நடவடிக்கைகளுக்கும் தங்கள் முழு ஆதரவையும் அளித்தனர். அத்துடன் அமையாமல் 1870 முதல் 1879 வரை ஜெர்மனியப் பேரரசு முழுவதும் அரசாங்கத்துக்கும், திருச்சபைக்கும் இடையே நடைபெற்ற போராட்டங்களை "நாகரிகத்தைக் காக்கும் போராட்டங்கள்" என்று ஜெர்மன் மொழியில் குல்டூர்காம்ஃப் (Kultur Kampf) என்று வர்ணித்தனர்.

பிஸ்மார்க் 1872-ல் முதன்முதலாக குல்டூர்காம்ஃப் என்று வர்ணிக்கப்பட்ட நாகரித்தைக் காக்கின்ற போராட்டங்களில்

திருச்சபையின் ஆதிக்கத்தை ஒடுக்குவதற்காக முற்பட்டார். தனது செயலின் முதற்படியாக ஜெசுட்டுகளை (Jesuits) ஜெர்மன் நாட்டிலிருந்து வெளியேற்றினர். பிரஷ்யாவிற்கும், வாடிகன் (Vatican) திருச்சபைக்கும் இடையே இருந்து வந்த இராஜிய உறவுகளைத் துண்டித்தார். பிறகு திருச்சபையின் அதிகாரங்களைக் குறைப்பதற்காக 1873-ம் ஆண்டு மே மாதத்திலும், 1874-ம் ஆண்டு மே மாதத்திலும் பிரஷ்யப் பாராளுமன்றத்தின் மூலமாக, கத்தோலிக்கர்களுக்கு எதிரான சட்டங்களை இயற்றினர். மே மாதம் இயற்றப்பட்டமையின் இச்சட்டங்கள் "மே மாதச் சட்டங்கள்" (May Laws) என்றழைக்கப்பட்டன. பிரஷ்ய நாட்டின் கல்வி அமைச்சர் ஃபால்க் என்பவரால் சில சட்டங்கள் இயற்றப்பட்டன. இவர் இயற்றிய சட்டங்கள் ஃபால்க் சட்டங்கள் (Falk laws) என வழங்கப்படுகின்றன. மே மாதச் சட்டங்களின்படி பிரஷ்யாவில் கத்தோலிக்க திருச்சபையின் அதிகாரிகள் அனைவரும் [குருமார்களும், பாதிரிமார்களும்] ஜெர்மன் குடிமக்களாக வேண்டும் எனக் கட்டாயப்படுத்தப் பட்டனர். கத்தோலிக்க திருச்சபையின் அதிகாரிகள் அனைவரும் ஜெர்மன் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்களாக இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப் பட்டனர். இவர்கள் பிரஷ்ய அரசாங்கத்தின் அங்கிகாரம் பெற்றிருக்க வேண்டுமென நிர்ப்பந்திக்கப் பட்டனர். அடுத்து இம் மேமாதச் சட்டங்களின்படி திருச்சபையின் ஆதிக்கத்தின்கீழ் இயங்கிவந்த எல்லா நிறுவனங்களும் [கல்வி நிலையங்கள், பயிற்சி நிலையங்கள் உள்பட] அரசாங்கத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன. தனிப்பட்ட முறையில் போலந்து கத்தோலிக்கர்களுக்கு எதிராக எல்லா மதபோதனைகளும் ஜெர்மன் மொழியிலேயே செய்ய வேண்டுமென அரசாங்கம் வற்புறுத்தியது. பிரஷ்யாவில் உள்ள கத்தோலிக்கப் பாதிரிமார்களும், ஜெர்மன் நாட்டின் மற்ற பகுதிகளில் உள்ள கத்தோலிக்க அதிகாரிகளும் கலந்து ஆலோசித்த பின்னர், போப் ஒன்பதாம் பயஸின் அனுமதியுடன் பிரஷ்யப் பாராளுமன்றம் இயற்றிய மே மாதச் சட்டங்களை ஒட்டுமொத்தமாக எதிர்த்ததுடன் அச்சட்டங்களைப் பின்பற்றவும் மறுத்தனர். உடனே சற்றும் தாமதிக்காமல் பிரஷ்யப் பாராளுமன்றம் மே மாதச் சட்டங்களைப் பின்பற்ற மறுத்த கத்தோலிக்க அதிகாரிகளின் குடியுரிமையை ஜெர்மனியில் இரத்து செய்யவும், அவர்களைச் சிறைப்படுத்தவும், நாடுகடத்தவும் வாய்ப்பளிக்கும் ஒரு சட்டத்தை இயற்றியது. இத்தகைய கடுமையான சட்டங்களைக் கத்தோலிக்கர்களுக்கு எதிராக இயற்றியதுடன் அமையாமல் பிஸ்மார்க் இச்சட்டங்களை ஏற்றுக்கொள்ள மறுத்த கத்தோலிக்க

அதிகாரிகளை இச்சட்டங்களின்படி தண்டிக்கவும் தவறவில்லை. பிஸ்மார்க்கின் இத்தகைய நடவடிக்கைகளால் ஒரே ஆண்டில் ஏறத்தாழ ஆறு கத்தோலிக்கப் பாதிரிமார்கள் கைது செய்யப் பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். மேலும் சுமார் 1300க்கு மேற்பட்ட மாவட்ட, வட்ட கத்தோலிக்க திருச்சபைகளிலும், அவற்றின் அலுவலகங்களிலும் கத்தோலிக்க வழிபாட்டு முறை புறக்கணிக்கப்பட்டு அழிந்துபட்டது.

நசுக்கப்பட்ட ஜெர்மன் கத்தோலிக்கர்கள் அனைவரும் ஜெர்மனியில் கத்தோலிக்க மதம் நசுக்கப்படுவதை விரும்ப வில்லை. எனவே பிரஷ்ய கத்தோலிக்கர்களும், ஜெர்மன் நாட்டின் பிறபகுதிகளில் வாழும் கத்தோலிக்கர்களும் எதிர் பாராதவிதமாக ஒன்றுதிரண்டு மே மாதச் சட்டங்களுக்கு எதிராகப் போராடினார்கள். ஆனால் இம்முறை அதிக சக்தியுடன் போராடினார்கள். இவர்கள், ரோமன் கத்தோலிக்க திருச் சபையின் போப்பாண்டவர், கத்தோலிக்க கொள்கைகளுக் காகத் தங்கள் உயிரையும் தியாகம் செய்யத் தயாராக இருந்த பாதிரிமார்கள் ஆகியவர்களின் ஆதரவுகளைப் பெற்று, கத்தோ லிக்க திருச்சபை நிர்வாக அதிகாரிகளுக்கு ஆதரவாகவும், மே மாதச்சட்டங்களுக்கு எதிராகவும் போராடினார்கள். இந் நிலையில் கத்தோலிக்க திருச்சபையின் நிர்வாக அதிகாரிகள் சட்டங்களால் ஒடுக்கப்பட்டிருந்த பாதிரிமார்களின் இரகசிய ஆலோசனைகளைப் பெற்றுச் செயலாற்றி வந்ததுடன், திருச் சபையின் நிர்வாகங்களையும் முறைப்படி நடத்தி வந்தார்கள்.

கத்தோலிக்க திருச்சபையின் அதிகாரிகளுக்கு ஆதரவாகப் போராடிய ஜெர்மன் கத்தோலிக்கர்கள் ஹனோவரின் பிரதம அமைச்சராக இருந்த விண்ட்தார்ஸ்ட் (Windthorst), குவல்லீப் ஆகிய அரசியல் தலைவர்களுக்கு அரசியலில் ஆதரவு தெரி வித்தனர். இத்தலைவர்கள் மத்தியக் கட்சி (Centre party) என்ற ஒரு கத்தோலிக்க கட்சியைத் தோற்றுவித்தனர். பிரஷ்யப் பாராளுமன்றத்தில் திருச்சபைகளுக்கு எதிரான சட்டங்களை எதிர்த்த காரணத்தினாலேயே ஜெர்மன் கத்தோலிக்கர்கள் இவர் களுக்கு அரசியலில் ஆதரவு தெரிவித்தனர். மத்தியக் கட்சி என்ற கத்தோலிக்க கட்சி மத உரிமைகளுக்காகவும், சமுதாய சீர்திருத்தங்களுக்காகவும் போராடியது. கத்தோலிக்க மதத்திற்காக இக்கட்சி பாடுபட்டதால் கத்தோலிக்கர்களும், கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த நிறுவனங்களில் பணிபுரிந்த ஊழியர்களும் இக்கட்சிக்குத் தங்கள் வாக்குரிமைகளை அளித் தனர். எனவே 1874-ல் ஜெர்மன் பாராளுமன்றமான ரீஷ்டக்

குக்கு நடைபெற்ற பொதுத்தேர்தலில் மத்தியக் கட்சியின் பிரதி நிதிகள் சற்று அதிக அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களின் எண்ணிக்கை ரீஷ்டக்கில் 60-ல் இருந்து 90-ஆக உயர்ந்தது.

ரீஷ்டக்கில் மத்தியக் கட்சி சற்று வலிமை அடைந்ததன் காரணமாக விண்ட்தார்ஸ்ட், கத்தோலிக்க கட்சியான மத்தியக் கட்சியுடன் உறவு கொண்டார். மேலும் ரீஷ்டக்கில் பிஸ்மார்க்கின் கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்த போலந்து நாட்டுப் பிரதிநிதிகள், அல்சேஸின் பிரதிநிதிகள், குவல்ஃப்கள், சோஷியலிஸ்டுகள் ஆகிய சிறுபான்மையினரை யும் தன்னுடன் இணைத்துக் கொண்டார்.

ஜெர்மன் அரசாங்கத்தின் கத்தோலிக்க மதத்திற்கு எதிரான சட்டங்களையும், அவற்றின் விளைவுகளையும் கண்ட பல பழமை விரும்பிகள் விண்ட்தார்ஸ்ட்டுடன் ஒத்துழைத்தனர். தனக்கு எதிராக ரீஷ்டக்கிலும், வெளியிலும், கத்தோலிக்கர்களும் அதன் ஆதரவாளர்களும் ஒன்று திரண்டதைக் கண்ட பிஸ்மார்க் தனது "குல்டூர்காம்ப்" போராட்டத்தை நிறுத்தி வைப்பதற்கான காலம் வந்துவிட்டதை உணர்ந்தார். தனக்கு எதிராக விண்ட்தார்ஸ்டால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பினால் தன்னுடைய மதக் கொள்கைகள் மட்டுமல்லாமல், பிற கொள்கைகளும் பாதிக்கப்படுவதை உணர்ந்ததுடன் மார்க்ஸிஸ சோஷியலிஸம், ரோமானியக் கத்தோலிக்க மதத்தைவிட, தனக்கு அதிக ஆபத்தை விளைவிக்கக் கூடியது என்பதையும் நன்கு அறிந்திருந்தார். எனவே சோஷியலிஸக் கொள்கையைத் தன்னுடைய நாட்டில் வலுவிழக்கச் செய்வதற்கான முயற்சி களை பிஸ்மார்க் மேற்கொண்டார்.

இதற்கிடையில் ஜெர்மன் பாராளுமன்றம் பிஸ்மார்க்கின் தூண்டுதலால் 1880-ல் பிரஷ்ய அரசாங்கத்திற்குச் சில சிறப்பு அதிகாரங்களை வழங்கியது. அதன்படி பிரஷ்ய அரசாங்கம் தன்னுடைய தனி அதிகாரங்களைப் பயன்படுத்தி மே மாதச் சட்டங்களைச் செயல்படுத்துவதற்குப் பாராளுமன்றம் அனுமதி வழங்கியது. இதனைத் தொடர்ந்து கத்தோலிக்கர்களால் அதிக அளவில் எதிர்க்கப்பட்ட சில சட்டங்கள் 1886-ல் செயல் படுத்தப்படாமல் தற்காலிகமாக அரசாங்கத்தால் நிறுத்தி வைக்கப்பட்டன. பிஸ்மார்க்கின் இச்செய்கைகளால் கத்தோ லிக்கக் கட்சியான மத்தியக் கட்சி மக்களின் ஆதரவைப் பெற்று ஓரளவு வளர்ச்சியடைந்ததுடன் தன்னுடைய திறமையான

தலைவரின்கீழ் ஒரு நிலையான தன்மையினையும் பெற்றது. இதனால் பிஸ்மார்க் குடியரசுக் கட்சி, சோஷியலிஸக் கட்சி, மாற்றங்களை விரும்பும் மற்றக் கட்சியினர் ஆகியவர்களுடன் கூட்டு சேர்ந்தும் செய்ய முடியாத சிலவற்றை, கத்தோலிக்கக் கட்சியான மத்தியக் கட்சி, மக்களிடம் தனக்கிருந்த செல்வாக்கினால் செய்து முடித்தது. பிஸ்மார்க் "குல்டூர்காம்ப்" என்ற தனது நாகரிகத்திற்கான போராட்டங்களை நிறுத்திக் கொள்ளவேண்டிய காலம் வந்துவிட்டதை உணர்ந்து சோஷியலிஸத்துக்கு எதிரான தன்னுடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கினார்.

தொழிற்புரட்சி விரைவாகப் பரவி, ஜெர்மனி தொழில்மயமானபொழுது சைலீஷியா (Silesia), வெஸ்ட் பேலியா (West Phalia) ஆகிய பகுதிகளில் சுரங்கத் தொழிலும், உலோகத் தொழிலும் வளர்ச்சியடைந்தன. சாக்ஸனி (Saxony), ரைன்லாந்து (Rhineland), அல்சேஸ் (Alsace) ஆகிய பகுதிகளில் நெசவுத் தொழிலும், மற்ற எந்திரத் தொழில்களும் வளர்ச்சி பெற்றன. எந்திரத் தொழில் வளர்ச்சியின் காரணமாக சோஷியலிஸக் கருத்துக்கள் ஜெர்மனியில் சற்று வலிமையடையத் தொடங்கின. ஆங்காங்கே சோஷியலிஸக் கருத்துக்கள் பிரசாரம் செய்யப்பட்டன. நகரங்களில் வாழ்ந்த தொழிலாளர்கள் படிப்படியாக சோஷியலிஸக் கொள்கைகளால் கவர்ந்திழுக்கப்பட்டார்கள். சோஷியலிஸமும் ஜெர்மன் மக்களிடையே சிறிதுபரவத் தொடங்கியது. இதன் பயனாக 1874-ல் ஜெர்மனியின் ரீஷ்டக்குக்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில் சோஷியலிஸ்ட்டுகள் ஒன்பது இடங்களைக் கைப்பற்றினார்கள். பின்னர் இவர்கள் 1875-ல் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்த இரு பிரிவினர்களை ஒன்று சேர்த்து "சோஷியலிஸ ஜனநாயக் கட்சி" என்ற ஒரு கட்சியைத் தோற்றுவித்தார்கள். அடுத்து 1877-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இவர்கள் ஏறத்தாழ ஐந்து இலட்சம் வாக்குகளைப் பெற்று ரீஷ்டக்கில் 12 இடங்களைக் கைப்பற்றினார்கள். இவர்கள் ஜெர்மனியில் தொழிலாளர்களின் அரசாங்கத்தை ஏற்படுத்தப் பாடுபட்டனர். தங்கள் வெற்றிக்குச் சாதகமாக பிஸ்மார்க்கின் நாஸ்திகக் கொள்கைகளை மக்களுக்கு எடுத்துக் கூறியதுடன், அவரது எதேச்சாதிகாரப் போக்கையும் மக்களுக்கு விளங்கும் வகையில் எடுத்துரைத்தனர்.

பொதுமக்கள் பீதியடைகின்ற முறையில் அரசரின் தெய்வீக உரிமைக் கோட்பாட்டில் ஆழ்ந்த நம்பிக்கை

உடையவர்களால் வணங்கத்தக்க பேரரசர் முதலாம் வில்லியத்தைக் கொலை செய்ய 1878-ல் இரண்டு முறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இவ்விரு முயற்சிகளும் தோல்வியடைந்தன. இம்முயற்சியில் ஈடுபட்டவர்களை சோஷியலிஸ்டுகள் என்று பிஸ்மார்க் குற்றம் சாட்டினர். எனவே 1878-ல் ஜெர்மனியின் பாராளுமன்றமான ரீஷ்டக்கைக் கலைத்துவிட்டுப் புதிய தேர்தல் ஒன்றை நடத்தினர். புதிய தேர்தலில் பிஸ்மார்க்கின் கருத்துக்களைக் கொண்ட சோஷியலிஸ ஜனநாயகவாதிகள் அதிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் மத்தியக் கட்சியினர் எனவும், முன்னேற்றவாதிகள் எனவும் பிரிந்து செயல்பட்டனர். சிறுபான்மையினராக இருந்தவர்கள் பிஸ்மார்க்கின் கருத்துக்களை எதிர்ப்பவர்களாக இருந்தனர். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ரீஷ்டக்கில் தன்னுடைய கருத்துக்களின் ஆதரவாளர்கள் பெரும்பான்மை பலம் பெற்றிருந்ததால், பிஸ்மார்க் சோஷியலிஸ்டுகளின் பிரச்சாரங்களுக்கு எதிராகவும், அவற்றைத் தடை செய்வதற்காகவும் கடுமையான சட்டங்களை இயற்றினர். இச்சட்டங்கள் யாவும் தொடக்கத்தில் நான்கு ஆண்டுகளுக்கு மட்டுமே செயல்படுத்தப்பட்டன. பின்னர் பலமுறை புதுப்பிக்கப்பட்டு பிஸ்மார்க் பதவியிலிருந்து விலகும் வரை (1890 வரை) நீடிக்கப்பட்டது. இச்சட்டங்களின்படி சோஷியலிஸ இலக்கியங்களும், ஏடுகளும் ஜெர்மனியில் தடை செய்யப்பட்டன. காவல் படையினருக்கு அதிக அதிகாரங்களைக் கொடுத்ததன் மூலம் சோஷியலிஸ்ட்டுகளின் கூட்டங்கள் நடைபெறுமல் தடை செய்யப்பட்டன. சாதாரண குற்றவாளிகளை விசாரணை செய்வதைப் போல, சோஷியலிஸ்ட்டுகள் அரசு நீதிமன்றங்களில் விசாரணை செய்யப்பட்டு தண்டனை வழங்கப்படாமல், காவல்துறையினராலேயே தண்டனை வழங்கப்பட்டனர். ஜெர்மனியில் சோஷியலிஸ்ட்டுகளை ஒடுக்குவதற்கு பிஸ்மார்க் இத்தகைய முறைகளைப் பின்பற்றினலும், கத்தோலிக்க திருச்சபைகளுக்கு எதிராக பிஸ்மார்க் மேற்கொண்ட முயற்சிகள் யாவும் கத்தோலிக்கர்களிடையே ஒற்றுமை உணச்சியை ஏற்படுத்தியதைப் போல, சேஷியலிஸ ஜனநாயகக் கட்சி மீண்டும் உயிர் வாழ்ந்து கொண்டிருந்தது. இக்கட்சிகளின் அமைப்புக்கள் கத்தோலிக்க திருச்சபையின் அமைப்புக்களைப் போல, ஜெர்மனியின் எல்லாப் பகுதிகளிலும் இருந்தன. சோஷியலிஸ்ட்டுகள் ஜெர்மனியின் அண்டை நாடுகளிலிருந்து ஓரளவு உதவி பெற்று, தங்கள் பிரச்சாரங்களை ஜெர்மனியில் தொடர்ந்து தீவிரப்படுத்தி வந்தனர். ஜெர்மன் பாராளுமன்றமான ரீஷ்டக்கில் பிஸ்மார்க்கிற்கு எதிராக சோஷியலிஸ்ட்டுகளின் பேச்சுக்களின் வலிமை

அதிகரித்தன. எனவே சோஷியலிஸ்ட்டுகளை ஜெர்மனியில் அடக்கும் முயற்சியில், கத்தோலிக்கர்களை அடக்கும் முயற்சியிலே சற்று தோல்வியடைந்ததைப் போலவே, பிஸ்மார்க் ஓரளவு தோல்வி கண்டார்.

ஜெர்மனியில் சோஷியலிஸ்ட்டுகளும், கத்தோலிக்கர்களு மட்டுமல்லாமல் வேறு சிலரும் பிஸ்மார்க்கின் கோபத்தைத் தூண்டி, அவரைக் கடுமையான வகையில் அடக்கு முறைகளைப் பின்பற்றச் செய்தார்கள். பிரஷ்யாவில் வாழ்ந்து வந்த சில சாதாரண பிரபுக்கள் போலந்து நாட்டு மக்களுக்குச் சாதகமான செயல்கள் பலவற்றில் ஈடுபட்டனர். இந்தச் சாதாரண பிரஷ்யப் பிரபுக்களை அடக்குவதற்காக பிஸ்மார்க் 1870க்கும் 1879க்கும் இடைப்பட்ட ஒன்பது ஆண்டுகளில் ஜெர்மன் மொழியைப் பாராளுமன்ற நடவடிக்கைகள் மூலமாக இவர்களின்மீது திணித்தார். மேலும் 1880க்குப் பிறகு பிஸ்மார்க்கின் தூண்டுதலால் பிரஷ்யப் பாராளுமன்றம் இப்பிரபுக்களுக்கு எதிராகச் சில சட்டங்களை இயற்றியது. ஒருபுறம் அரசியல் அதிகாரங்களைப் பயன்படுத்தி ஜெர்மனியின் வசமிருந்த போலந்துக் காரர்களை அடக்கினர். மறுபுறம் தனது ஆட்சியினகீழ் இருந்த போலந்துக்காரர்களின் பண்ணைகள் யாவற்றையும் ஜெர்மனியர்களது உடைமைகளாக்கினர். பிஸ்மார்க்கின் இந் நடவடிக்கைகளால் ஜெர்மனியின் வசமிருந்த போலந்து மொழி பேசும் மக்களும், போலந்து நாட்டு மக்களும் பிஸ்மார்க்கிற்குப் பகைவர்களானதுடன் பிஸ்மார்க்கின் எல்லா நடவடிக்கைகளையும் எதிர்த்தனர்.

பிரான்சுக்கும், பிரஷ்யாவுக்கும் நடைபெற்ற பிராங்கோ-பிரஷ்யப் போரில் பிரஷ்யா பிரான்சிடமிருந்து கைப்பற்றிய அல்சேஸ், லொரைன் ஆகிய பகுதிகளை, 1871-ல் பிஸ்மார்க் ஜெர்மன் மயமாக்குவதற்குத் தன்னுல் ஆன எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டார். ஜெர்மனியப் பேரரசின் மற்ற எல்லாப் பகுதிகளிலிருந்து அல்சேஸ், லொரைன் ஆகிய பகுதிகளில் மக்கள் குடியேறுவதை ஆதரித்ததுடன் அவர்களுக்குச் சில சலுகைகளையும் வழங்கினர். ஸ்ரெஸ்பர்க் பல்கலைக் கழகத்தை ஜெர்மனியின் பண்பாட்டிற்கும், அறிவு வளர்ச்சிக்கும் ஏற்ற ஒன்ருக ஆக்குவதற்காக ரீஷ்டக்கின் அனுமதியையும், அங்கீகாரத்தையும் பெற்ருர். இருப்பினும் அல்சேஸ், லொரைன் ஆகிய பகுதிகளின் பிரதிநிதிகள் ரீஷ்டக்கில் பிஸ்மார்க்கின் கருத்துக்களையும், செய்கைகளையும் மத்தியக் கட்சியுடன் சேர்ந்துகொண்டு எதிர்த்தனர். தங்கள் பகுதிகள்

மற்ற எல்லா ஜெர்மனிய மாநிலங்களையும்போல் மத்திய அரசாங்கத்தால் சமமாக மதிக்கப்படவேண்டுமென இவர்கள் வற்புறுத்தினர்கள். ஆனல் இவ்விரு பகுதிகளையும் பிஸ்மார்க் பகைவர்களிடமிருந்து கைப்பற்றியதாகக் கூறி அவைகளுக்கு மற்ற ஜெர்மனிய மாநிலங்களுக்குக் கொடுத்த உரிமைகளைக் கொடுக்க மறுத்தார். எனவே இவ்விரு பகுதிகளும், ஜெர்மன் கத்தோலிக்கர்களும், சோஷலிஸ்ட்டுகள் ஆகியவர்களைப் போலவே பிஸ்மார்க்கின் கொள்கைகளை எதிர்த்தனர்.

பொதுவாக பிஸ்மார்க் யூதர்களிடம் இரக்க சிந்தனை இல்லாதவராக இருந்தாலும், அரசியல் பொருளாதார காரணங்களைக் கருதி அவர்களை ஒடுக்குவதற்கு வெளிப்படையான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. அடால்ஃப் ஸ்டாக்கர் (Adolf Stocker) என்ற லூதரன் பிரிவைச் சேர்ந்த பாதிரிமார் ஜெர்மனிய மக்களிடையே அதிக செல்வாக்குப் பெற்றிருந்தாலும், 1880-க்குப் பின்னர் உள்ள ஒன்பதாண்டுகளில் யூதர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்பதற்காக பிஸ்மார்க் இவரைச் சற்று அதிகமாகவே கடிந்துகொண்டார். இருப்பினும் ஜெர்மனியின் பெரும்பாலான மக்களுக்கு ஆதரவாகக் கடுமையான நடவடிக்கைகளை பிஸ்மார்க் மேற்கொள்ளாததால்தான், அடால்ஃப் ஸ்டாக்கர் யூதர்களுக்கு எதிராக ஒரு போராட்டத்தை நடத்தி தேசிய சோஷியலிசக் கட்சியை ஜெர்மனியில் தோற்றுவித்தார். இதனல் பிஸ்மார்க் அரசியலில் யூதர்களின் ஆதரவையும் இழந்தார். எனினும் பிஸ்மார்க்கின் விடாமுயற்சியே பிரஷ்யாவை ஜெர்மனியப் பேரரசாக்கியது என்பதை யாரும் மறுக்க வியலாது.

பொருளாதாரக் கொள்கைகள்

பழமை விரும்பிக் கட்சியினரும், மத்தியக் கட்சியினரும் 1880-க்கும்1889-க்கும் இடைப்பட்ட காலத்தில் பிஸ்மார்க் தனது கொள்கைகளைச் செயல்படுத்துவதற்கு உதவியாக இருந்ததால் ஜெர்மனியின் தேசியக் கொள்கைகளில் சில முக்கிய மாறுதல்கள் ஏற்பட்டன. இம் மாறுதல்களின் பயனக ஜெர்மனியில் பொருளாதார சுதந்திரம், பொருளாதார தேசியமாக மாறியது. இவ் வளர்ச்சி பிஸ்மார்க்கின் தனிப்பட்ட கொள்கைகளாலோ, பிஸ்மார்க்கைப் போன்ற தனிப்பட்ட ஒருவராலோ ஜெர்மனியில் ஏற்பட்டது என்று கூற இயலாது. ஜெர்மனியில் தொழில் துறையிலும், விவசாயத் துறையிலும் ஏற்பட்ட மாற்றங்களினல் பெருகிவந்த தேவைகளின் காரணமாகவும்,

சோஷியலிஸ்ட்டுக் கருத்துகள் மக்களைக் கவர்ந்ததன் காரணமாகவும், 1860-க்கும் 1879-க்கும் இடைப்பட்ட இருபது ஆண்டுகளில் ஜெர்மனியில் ஏற்பட்ட தேசிய இயக்க வளர்ச்சியின் காரணமாகவும் பொருளாதார சுதந்திரமும், பொருளாதார தேசியமும் இயற்கையாகவே வளர்ச்சியடைந்தன. அரசியல் கட்சிகள் அழிந்துபடத் தொடங்கியபொழுது இப்பொருளாதார மாற்றம் ஜெர்மனியில் சற்று விரைவாக ஏற்பட்டது. தேசிய மிதவாதக் கட்சியினரும் முன்னேற்றக் கட்சிக்காரர்களும், இங்கிலாந்தின் மிதவாதிக் கட்சியினரின் பொருளாதாரக் கொள்கைகளைத் தங்கள் நாட்டில் பின்பற்றி வந்தனர். பொருளாதார வளர்ச்சியினால் ஜெர்மனியின் தேசியக் கொள்கைகளில் ஏற்பட்ட மாறுதலை பிஸ்மார்க் மூன்று முறைகளில் தன் நாட்டுக்குச் சாதகமாக்கிக்கொண்டார். முதலாவதாக, ஜெர்மனி சுதந்திரமாக வியாபாரம் செய்துவந்த நாடாக இருந்தநிலை மாறி, காப்புவரிகளால் (Tariff) தங்கள் நாட்டின் தொழில் வளர்ச்சிக்குப் பாதுகாப்பு தரும் நாடுகளுக்குத் தலைமை வகிக்கும் நிலையை அடைந்தது. இரண்டாவதாக, ஐரோப்பிய நாடாக மட்டும் இருந்தநிலை மாறி வெளிநாடுகளில் தனக்கு என்று சில பகுதிகளைப் பெற்று உலக நாடுகளுள் ஒரு வல்லரசாக மாறியது. மூன்றாவதாக, தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் ஏற்படும் தகராறுகளில் சிறிதும் தலையிடாமல் இருந்த ஜெர்மனிய அரசு அந் நாட்டில் எல்லா விவகாரங்களிலும் தலையிட ஆரம்பித்தது.

காப்புவரி (Protective Tariff)

ஜெர்மன் பாராளுமன்றமான ரீஷ்டக் காப்பு வரியைத் தன்னுடைய உள்நாட்டுத் தொழில்களின் வளர்ச்சிக்காக 1879-ல் முதன் முதலாக விதித்துச் செயல்படுத்தத் துவங்கியது. இவ் வரிகளின்மூலம் ஜெர்மனியில் வளர்ச்சியடைய வேண்டிய நிலையிலேயே இருந்த தொழில்களுக்கு மிகப் பழையதும் வளர்ச்சியடைந்ததுமான, பிரிட்டனின் தொழில் போட்டிகளிலிருந்து பாதுகாப்பு அளிக்கவும், ஜெர்மனியில் மேலும் சில சொத்து வரிகளை அதிகரிப்பதற்கும் ஜெர்மனிய அரசுக்குக் கணிசமான தொகை காப்பு வரிகளிலிருந்து கிடைக்குமாயின், அவற்றை வைத்துக்கொண்டு, 1871 முதல் வரிவிலக்குக் கேட்ட சில ஜெர்மானிய மாநிலங்களுக்குச் சில வரிச் சலுகைகளைக் கொடுக்கவும் பிஸ்மார்க் முயற்சிசெய்தார்.

பிஸ்மார்க் எதிர்பார்த்ததைப்போலவே, 1879ஆம் வருடத்திய காப்புச் சட்டம் (Tariff Act) ஜெர்மனியக் கூட்டரசுக்குப்

பொருளாதாரத் துறையில் அதிக அளவு வருவாயைத் தேடித் தந்தது. அத்துடன் ஜெர்மனியின் தொழில்களும் நன்கு வளர்ச்சியடைந்தன ஆனல், இக் காப்பு வரியினல் சிறிது பாதிக்கப்பட்ட விவசாயிகள், 1879ஆம் வருடத்திய காப்புவரிச் சட்டம் நகர்ப்புறங்களில் உள்ள தொழிற்சாலைகளுக்கு மட்டுமே அதிக ஆதரவும் ஊக்கமும் தருகிறது என்றும், விவசாயத்திற்கும் மற்ற தொழில்களுக்குமிடையே இருக்கக் கூடிய குறைகளைப்போக்கி விவசாயம், தொழில் ஆகிய இரண்டையும் சம அளவில் வளர்ச்சியடையச் செய்வதற்குத் தவறி விட்டது என்றும் குறை கூறினர்கள். மேலும், இவர்கள் விவசாயம், தொழில் ஆகிய இரண்டு தொழில் துறைகளுக்கும் சமஉரிமையும், முக்கியத்துவமும் கொடுக்கவேண்டியதும், ஜெர்மனி தன்னிறைவு பெறுவதற்குப் பாடுபடுவதும் ஜெர்மனியக் கூட்டரசின் முக்கியமான கடமை என்றும் எடுத்துரைத்தனர். இதன் பயனக அரசாங்கம் 1885, 1887 ஆகிய ஆண்டுகளில் வேறு சில காப்புச் சட்டங்களை இயற்றி விவசாயத்திற்குப் பாதுகாப்புக் கொடுத்தது. இச் சட்டங்களால் மற்ற தொழில் துறைகளில் இருந்த கட்டுப்பாடுகள் சிறிதும் மாறுதலடையவில்லை.

ஜெர்மனியின் குடியேற்ற நாடுகள்

ஜெர்மனியில் காப்புவரிச் சட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு முன்னர், பிஸ்மார்க் தம் நாடு கடல்கடந்து ஆதிக்கம் செலுத்துவதை விரும்பவில்லை. உதாரணமாக, ஃபிரான்சு 1871-ல் தனக்குச் சொந்தமான சில குடியேற்றப் பகுதிகளை அல்சேஸ், லொரைன் ஆகிய பகுதிகளுக்கு ஈடாகக் கொடுப்பதற்கு முன்வந்தது. வெளிநாடுகளில் ஆதிக்கம் செலுத்துவதை விரும்பாத பிஸ்மார்க் அதனை மறுத்ததுடன், 1870-க்கும் 1880-க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் உள்நாட்டு வளர்ச்சியிலேயே திறமை முழுவதையும் காட்டி உழைத்து ஐரோப்பாக் கண்டத்திலேயே ஜெர்மனி மிக வலிமை வாய்ந்த நாடாக விளங்கவேண்டும் என்பதற்காகப் பாடுபட்டார். ஜெர்மனி வெளிநாடுகளில் பல குடியேற்றங்களை அமைப்பதைத் தடைசெய்தார்.

இதன்பயனக, ஜெர்மனியின் வியாபாரக் கம்பெனி 1879-ல் சமோவன் தீவுகளில் (Samoan islands) சில உரிமைகளைப் பெற்றது. பின்னர், 1882-ல் ஜெர்மனி குடியேற்ற நாடுகளைப் பெறவேண்டும் என்ற கருத்துடைய மக்கள், வியாபாரிகள் பலரை ஒன்றுசேர்த்து, அவர்களின் ஆதர

வையும், ஒத்துழைப்பையும் பெற்று, தங்கள் குடியேற்ற நாடுகளில் சில இலாபகரமான காரியங்களைச் செய்தனர். இதனால் பொதுமக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணமும் மக்களிடையே வளர்ச்சியடைந்தது. ஜெர்மனியப் பொதுமக்களும் இவர்களுக்கு ஆதரவு அளித்தார்கள். எனவே, மிகக் குறுகிய காலத்திற்குள் ஹம்பர்க் (Hamburg), லூபெக் (Lubeck), பிரிமென் (Bremen) என்ற மூன்று வியாபாரக் கம்பெனிகளும் ஆப்பிரிக்காவில் வாழ்ந்துவந்த பூர்விக மக்களின் தலைவர்களிடம் அவர்கள் பகுதிகளில் தங்கள் வியாபார ஸ்தலங்களை நிறுவுவதற்குச் சில சலுகைகளைப் பெற்று தென்மேற்கு ஆப்பிரிக்கா, டோகோலாந்து (Togoland), காமரூன், கிழக்கு ஆப்பிரிக்கா ஆகிய இடங்களிலும், பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள மார்ஷல் தீவுகள், நியூகினியா (Newguinea) ஆகிய தீவுகளிலும் தங்கள் வியாபார ஸ்தலங்களை நிறுவினார்கள்.

வியாபாரம், தொழில் ஆகிய இரு துறைகளிலும் தமது கருத்துகளால் சிறந்து விளங்கிய பிஸ்மார்க், ஜெர்மனி குடியேற்ற நாடுகளை அமைப்பதற்கு ஆதரவாக இருக்கக் கூடாது என்ற தமது கொள்கையை மாற்றிக் கொண்டார். வணிகர்கள், மதபோதகர்கள் ஆகியோர்களைப் பின்பற்றிப் பல குடியேற்ற நாடுகளை அமைப்பதற்கு முன்வந்தார். முக்கிய அரசு அதிகாரிகள் பலரும் பிஸ்மார்க்கின் இப்போதைய முயற்சிக்குப் பேராதரவு தர முன்வந்தார்கள். ஜெர்மனியிலிருந்து வெகுதொலைவில் அமைந்திருந்த ஆப்பிரிக்கா, பசிபிக் கடல் ஆகிய பகுதிகளில் நிறுவப்பட்டிருந்த ஜெர்மனிய வியாபார ஸ்தலங்களில் வாழ்ந்துவந்த ஜெர்மனியர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்காக, 1884-85 ஆகிய ஆண்டுகளில் ரீஷ்டக், பிஸ்மார்க்கின் ஆலோசனையின்பேரில் சில உத்தரவுகளைப் பிறப்பித்தது. இதன் பின்னர் ஜெர்மனிக்கும், அந்நாட்டு ஆதிக்கத்தின்கீழ் இருந்துவந்த பகுதிகளான ஆப்பிரிக்கா, பசிபிக் கடற்பகுதிகள் ஆகியவற்றிற்கும் இடையே கப்பற் போக்குவரத்தை ஏற்படுத்துவதற்கு ஜெர்மன் அரசாங்கத்திடமிருந்து கணிசமான அளவு உதவித் தொகையை பிஸ்மார்க் 1886-ல் பெற்றார். ஜெர்மனியின் ஆதரவின் கீழ் ஆட்சி செலுத்திவந்த இப் பகுதிகள் யாவும் பிஸ்மார்க் பதவியைவிட்டு விலகுவதற்கு முன்னர் (1890), ஜெர்மன், நாட்டு மன்னரின் ஆட்சிப்பகுதிகளாக மாறின. இப் பகுதிகளை ஜெர்மனியப் பேரரசின் அதிகாரிகள் நிர்வகித்து வந்தார்கள். ஜெர்மன் இராணுவத்தினர் இப் பகுதிகளில் காவல் பொறுப்

புக்களை ஏற்றுக் கொண்டனர். ஜெர்மனி 1890-ல் ஏறத்தாழ 10 இலட்சம் சதுரமைல் பரப்பளவு நிலப்பகுதிகளை வெளி நாட்டில் தன் குடியேற்ற நாட்டுப் பகுதிகளாகப் பெற்றிருந்தது. இப் பரப்பளவு ஜெர்மன் நாட்டின் பரப்பளவைவிட, சற்றேறக் குறைய 5 மடங்கு அதிகமாகும். ஆனால், இவற்றின் மக்கள் தொகை மிகக் குறைவாகவே இருந்தது. இப் பகுதிகளில் வாழ்ந்துவந்த மக்கள் நாகரிக வளர்ச்சியடையாத நீக்ரோக் களாக, பாலினீஷியர்களாக இருந்தார்கள்.

தொழிலாளர் நலச் சட்டங்கள்

ஜெர்மனியில் தொழிலதிபர்களும் வணிகர்களும் அதிக இலாபம் பெறுவதற்கு வாய்ப்பளிப்பதற்காகக் காப்புச் சட்டங் களையும், ஏகாதிபத்தியக் கொள்கைகளையும் ஜெர்மனியப் பேரரசு பின்பற்றியது. இக் காப்புச் சட்டங்களை ஜெர்மனிய அரசு நடைமுறைப்படுத்தியதால் பல நிலச்சுவான்தார்களும், தொழிலதிபர்களும் தங்களின்கீழ் பணிபுரிந்த கூலியாள் களுக்கும், தொழிலாளர்களுக்கும் சிறிது ஊதிய உயர்வு அளித் தனர். அத்துடன் பல புதிய பண்ணைகளை நிறுவி வேலை வாய்ப்பை அதிகப்படுத்தினர். தொழிலாளர்களின் நன்மைக் காகப் பல தொழிலாளர் நலச் சட்டங்கள் இயற்றப்பட்டன. தொழிலாளர்கள் நோயினால் பாதிக்கப்படும்பொழுது அவர் களுக்கு உதவுவதற்காக 1883-ல் அரசு ஒரு தொழிலாளர் நலச் சட்டத்தை இயற்றியது. இதனைத் தொடர்ந்து அடுத்த ஆண்டில் தொழிலதிபர்கள் தங்களிடம் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு விபத்துகளிலிருந்து பாதுகாப்பு அளிக்க வேண்டுமென மற்றொரு சட்டத்தை அரசு இயற்றியது. பின்னர், 1887-ல் சில சட்டங்கள் இயற்றப்பட்டன. இதன்படி பெண்கள், குழந்தைகள் ஆகியோர்களிடமிருந்து வேலைகள் வாங்குவது குறைக்கப்பட்டு வரையறுக்கப்பட்டது. வெவ்வேறு தொழில் நிலையங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் வேலை நேரம் அவர்களின் தொழில் தன்மைக்கு ஏற்பத் திருத்தப்பட்டது. தொழிலாளர்களுக்குத் தொழிலதிபர்கள் வாரத்தில் ஒருநாள் (பெரும்பாலும் ஞாயிற்றுக்கிழமை) ஓய்வளிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

பின்னர், தொழிலாளர்கள் முதுமையடைந்த காலங்களிலும் (Old age) வேலை செய்ய இயலாத காலங்களிலும் அவர்களுக்கு உதவுவதற்கு 1889-ல் சில ஏற்பாடுகளை அரசாங்கம் செய்தது. அத்துடன் தொழிலாளர்கள் விருப்பப்படி எந்தத் தொழிற்சாலை களில் வேண்டுமானாலும் பணியாற்ற வாய்ப்புகள் ஏற்படுத்தப்

பட்டன. இதனால் தொழிலாளர்கள் தங்களை அடக்கி ஆளும் முதலாளிகளை விட்டு விலகித் தங்கள் விருப்பம்போல் சுதந்திரமாக வேறு தொழிற்சாலைகளில் பணியாற்றித் தங்கள் திறமையை வெளிப்படுத்தினார்கள். எனவே, தொழிலாளர் நலச் சட்டங்கள் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்கள், தொழிலாளர்களின் சங்கங்கள் ஆகியவை ஜெர்மனிய மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்ததுடன் அவர்கள் ஆதிக்கக் கொள்கைகள், தொழில் நுட்ப வளர்ச்சிகள் ஆகியவற்றிற்கு வழிகோலின. ஜெர்மனியும் தொழில்துறையில் மிகச் சிறந்த நாடாக விளங்கியது.

பிஸ்மார்க் பதவி விலகுதல்

தம்முடைய புதிய பொருளாதாரக் கொள்கைகள் யாவும் முழுமையான அளவில் செயல்படத் துவங்குவதற்கு முன்னதாக, ஜெர்மனியப் பேரரசில் பிஸ்மார்க்கின் ஆதிக்கம் ஒரு முடிவிற்கு வந்துவிட்டது. ஹோஹர்ன் சோலர்ன் வம்சத்தைச் சார்ந்தவரும், தம்முடைய நெருங்கிய நண்பருமான ஜெர்மனியப் பேரரசர் முதலாம் வில்லியம் (William I) முதுமையின் காரணமாக 1888-ல் விண்ணுலக வாழ்வை எய்தினார். முதலாம் வில்லியம் இறந்தவுடன் உடல்நலம் குன்றியிருந்த அவரது மகனை மூன்றாம் ஃபிரடரிக் (Frederick III) பிரஷ்ய நாட்டின் அரசராகவும், ஜெர்மனியப் பேரரசின் பேரரசராகவும் ஆட்சிப் பொறுப்பேற்றார். இவர் சுதந்திரக் கருத்துடையவராகக் காணப்பட்டார். ஆனால் இவர் தம்முடைய கருத்துகளையும், கொள்கைகளையும் செயல்படுத்துவதற்கு முன்னரே, உடல்நலக் குறைவின் காரணமாகத் தாம் ஆட்சிப் பொறுப்பேற்ற 99 நாட்களுக்குப் பின் 1888ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் மரணமடைந்தார். மூன்றாம் ஃபிரடரிக் இறந்த பின்னர் இவரது மகனும், முதலாம் வில்லியத்தின் பேரனுமான வில்லியம் இரண்டாம் வில்லியம் (William II) என்ற பட்டப் பெயருடன் தமது தந்தை ஆட்சி செய்த பகுதிகளுக்கு அரசரானார். இவர் 1888 முதல் 1918 வரை பிரஷ்ய நாட்டின் மன்னராகவும், ஜெர்மனியப் பேரரசின் பேரரசராகவும் விளங்கினார்.

இரண்டாம் வில்லியம் பதவி ஏற்றபொழுது அவர் இருபத்தொன்பது வயது நிரம்பிய இளைஞராக இருந்தார். தம்முடைய பாட்டனாரான முதலாம் வில்லியத்தைப் போலவே அரச தெய்வீக உரிமைக் கோட்பாட்டிலும் (Divine Right Theory) இராணுவ பலத்திலும் அதிக நம்பிக்கையுடையவராகக் காணப்பட்டார். தம்முடைய அதிகாரிகளிடம் சற்றுக் கடுமையாக

நடந்துகொண்டு, அவர்கள் அனைவரையும் தம்முடைய கட்டளைகளையும் கருத்துகளையும் நிறைவேற்றுமாறு பணித்தார். சில சமயங்களில் சற்று உணர்ச்சிவசப்பட்டார்.

ஜெர்மனியின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டிருந்த பிஸ்மார்க், முதலாம் வில்லியத்தின் ஆட்சிக் காலத்தில் தான் மன்னரைக் கலந்தாலோசிக்காமலே சில சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டது போலவே, இரண்டாம் வில்லியம் பேரரசராக இருந்தபொழுதும் தம்முடைய புதிய பொருளாதாரக் கொள்கைகளை நிறைவேற்றத் தொடங்கினார். அனுபவத்திலும் வயதிலும் பேரரசர் இரண்டாம் வில்லியத்தை விடப் பெரியவராக விளங்கியதும், பிஸ்மார்க் இவ்வாறு நடந்து கொண்டதற்கு ஒரு காரணமாகும். ஆனால் இரண்டாம் வில்லியம் பிஸ்மார்க்கின் நடவடிக்கைகளைப் பாராட்டுவதற்குப் பதிலாக அவரது கோபத்தைத் தூண்டுகின்ற வகையில் நடந்து கொண்டார். அத்துடன் அமையாமல் தமக்குப் பிஸ்மார்க்கின் மீதுள்ள வெறுப்பை வெளிப்படுத்தவும் தொடங்கினார். இதனைத் தொடர்ந்து சில சமயங்களில் ஜெர்மனியில் ஹோஹன் ஸோலர்ன் வம்சத்தவர்களின் ஆட்சி நடைபெறுகிறதா அல்லது பிஸ்மார்க்கின் ஆட்சி நடைபெறுகிறதா என்ற ஐயம் தமக்கு ஏற்படுகிறது என்றும் வெளிப்படையாகத் தமது கருத்துகளை எடுத்துரைத்தார்.

இளம் வயதினரான ஜெர்மனியப் பேரரசர் இரண்டாம் வில்லியத்திற்கும், வயதில் முதிர்ந்தவரான பிஸ்மார்க்கிற்கும் இடையே நிலவிய கருத்து வேறுபாடுகள் 1890-ல் உச்ச நிலையை அடைந்தது. இந் நிலையில் பொருளாதாரத் துறையில் தொடர்ந்து முன்னேறுவதற்கும், உள் நாட்டில் அமைதியை நிலை நாட்டுவதற்கும் ஜெர்மனி தனது அண்டை நாடான இரஷ்யாவுடன் மீண்டும் நட்புறவை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று பிஸ்மார்க் விரும்பினார். ஆனால் பிஸ்மார்க்கின் கருத்துகளுக்கு மாறாக, பேரரசரான இரண்டாம் வில்லியம் ஜெர்மனி, ஆஸ்திரியா ஆகிய இரு நாடுகளுடனும் நட்புறவு கொள்வதற்கு இரஷ்யா தகுதியற்றது எனக் கருதினார். எனவே, சோஷலிஸ்ட்டுகளின் ஒத்துழைப்பைப் பெறுவதற்காக இதுவரை நடைமுறையில் இருந்த சட்டங்களை மீண்டும் புதுப்பிப்பதற்கு பிஸ்மார்க் முயற்சி செய்தபொழுது பேரரசர் இரண்டாம் வில்லியம் சோஷலிஸ்ட்டுகளுக்கு எதிராக அவற்றைப் புதுப்பிப்பதற்கு மறுத்ததுடன் இராணுவத்தைப் பயன்படுத்தி, பாராளுமன்றத்தினரையும் நாட்டு மக்களையும் பயமுறுத்தி

அவர்கள் தமக்கு அடங்கி நடக்குமாறு செய்தார். மேலும், 1890வரை ஜெர்மனியில் அமைச்சர்கள் யாவரும் ஜெர்மன் முதலமைச்சரான பிஸ்மார்க்கின் மூலமாகவே பேரரசருக்குக் கட்டுப்பட்டுச் செயலாற்றி வந்தனர். இம் முறையை மாற்றி நேரிடையாகவே பேரரசருக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டு மென்றும், பிஸ்மார்க்கின் மூலமாக எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக் கூடாது என்றும் இரண்டாம் வில்லியம் அறிவித்தார். பிஸ்மார்க் பேரரசரின் இத்தகைய அறிவிப்பினை ஏற்றுக்கொள்ள மறுத்தார். இதனால் கோபமடைந்த பேரரசர் இரண்டாம் வில்லியம் தமது ஆணைகளுக்குக் கட்டுப்படாத முதலமைச்சரை அப் பதவியிலிருந்து விலகி விடுமாறு கட்டாயப்படுத்தினர். பேரரசருக்கு எதிராக நடக்க விரும்பாத பிஸ்மார்க், இரண்டாம் வில்லியத்தின் வேண்டுகோளுக்கிணங்க, தனது முதலமைச்சர் பதவியைத் துறந்து, தம்முடைய பண்ணைக்குச் சென்று எஞ்சிய தமது வாழ்நாள்களைக் கழித்தார். ஹோஹன் ஸோலர்ன் பேரரசை உருவாக்குவதற்கு மற்ற எந்த ஒரு நபரைக் காட்டிலும் ஏறத்தாழ இருபது ஆண்டுகள் உழைத்த பிஸ்மார்க் தமது இறுதி நாள்கள் வரை தமது பண்ணையிலேயே தங்கி இருந்தார். இவர் தமது பண்ணையில் வாழ்ந்து வந்த காலத்தில் பேரரசர் இரண்டாம் வில்லியமும், அவரது புதிய அமைச்சர்களும் பிஸ்மார்க்கையும், அவரது செய்கைகளையும் பிஸ்மார்க் உயிருடன் இருக்கும் வரை இடித்துரைத்துக் கொண்டே இருந்தனர். இவ்வாறு தனது வயதான காலத்தில் மன அமைதி குறைந்த நிலையில் ஜெர்மனியின் 'இரும்பு மனிதர்' என்றழைக்கப்பட்ட பிஸ்மார்க் 1898ஆம் ஆண்டு ஜூலை மாதம் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

இரண்டாம் வில்லியத்தின் தலைமையின்கீழ் ஜெர்மனியப் பேரரசு

அரசராகவும், பேரரசராகவும் விளங்கிய இரண்டாம் வில்லியம், 1890ஆம் ஆண்டுமுதல் 1914ஆம் ஆண்டுவரை பிரஷ்ய அரசாங்கத்திலும், ஜெர்மனியப் பேரரசிலும் மிக முக்கிய பங்கு வகித்தார். தாம் முக்கிய பங்குவகித்த 24 ஆண்டுகளில் ஜெர்மனியப் பேரரசில் பிரஷ்யா தலைமைப் பொறுப்புகளை வகிப்பதற்காகவும், ஐரோப்பிய நாடுகளிடையே ஜெர்மனியின் சிறப்பும் பெருமையும் வளர்ச்சி அடைவதற் காகவும் இரண்டாம் வில்லியம் அயராது பாடுபட்டார்.

பிஸ்மார்க்கையும் அவரது கொள்கைகளையும், இரண்டாம் வில்லியமும் அவரது புதிய அமைச்சர்களும் அடிக்கடி இடித் துரைத்தாலும், அரசியலில் பேரரசர் இரண்டாம் வில்லியத்தின்

கொள்கைகளுக்கும், பிஸ்மார்க்கின் கொள்கைகளுக்கும் அடிப்படையில் எந்தவித மாறுதலும் காணப்படவில்லை. இவர் ஹோஹன் ஸோலர்ன் வம்சத்தைச் சேர்ந்த மன்னர்களது ஆட்சியை அரச தெய்வீக உரிமைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு எப்பொழுதும் ஜெர்மனியில் நிலைநாட்டுவதற்கு உறுதிபூண்டார். மேலும், ஜெர்மனியில் பிஸ்மார்க்கின் முறையை அடிப்படையாகக்கொண்ட ஜெர்மனியின் ஐக்கியத்துக்குத் தேவையானது கத்தியும் இரத்தமுமேயன்றி, மக்களின் உரிமைகளால் ஜெர்மனியை ஐக்கியப்படுத்த முடியாது என பிஸ்மார்க் கருதினார். இராணுவமே ஜெர்மனிய அரசுடன் ஒருங்கிணைந்துள்ளது எனவும், பெரும்பான்மை பலத்தைக் கொண்ட பாராளுமன்றம் அரசுக்கு எவ்வகையிலும் உதவியாக இல்லை என்றும் அடிக்கடி தெளிவுபடுத்தினார். உள்நாட்டுக் கொள்கைகளைப் பொறுத்தமட்டில் பிஸ்மார்க் பின்பற்றிய கொள்கைகளை அப்படியே ஏற்றுக்கொண்டு அவைகளை இரண்டாம் வில்லியம் நடைமுறைப்படுத்தினார். இவர் சோஷலிஸ்ட்டுகளுக்கு எதிரான சட்டங்களைச் செயல்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தாமல் இருந்ததால் நாளடைவில் அச்சட்டங்கள் மறையத் தொடங்கின. இருப்பினும், இவர் தம்முடைய தந்தையின் முதலமைச்சரான பிஸ்மார்க்கைப் போலவே தீவிரவாதிகளையும், சோஷியலிஸ்ட்டுகளையும் இறுதி வரை எதிரிகளாகவே கருதினார்.

உள்நாட்டில் பிஸ்மார்க்கின் கொள்கைகளைப் பின்பற்றிய இரண்டாம் வில்லியம் தமது வெளிநாட்டுக் கொள்கைகளைப் பொறுத்தமட்டில் பிஸ்மார்க்கின் கருத்துகளுக்குச் சற்று மாறுபட்டே நடந்துகொண்டார். ஜெர்மனி ஐக்கியம் அடைகின்றபொழுது ஃபிரான்சும், இரஷ்யாவும் ஜெர்மனிக்கு எதிராக உடன்படிக்கை செய்துகொண்டு ஒன்றுபட்டால், ஜெர்மனி கிழக்குப் பகுதியில் இரஷ்யாவுடனும், மேற்குப் பகுதியில் ஃபிரான்சுடனும் போரிடவேண்டி ஏற்படும் என்றும், அப்படி இருநாடுகளுடனும் போரிட்டால் ஜெர்மனியின் ஐக்கியம் பாதிக்கப்படுவதுமட்டுமல்லாமல் ஜெர்மனி இரண்டு நாடுகளிடமோ அல்லது ஏதாவது ஒரு நாட்டிடமோ தோல்வியடைய வேண்டியிருக்கும் என்றும், அப்படித் தோல்வியடைந்தால் 1870-ல் தாம் கைப்பற்றிய அல்சேஸ், லொரைன் ஆகிய பகுதிகளை மீண்டும் ஃபிரான்ஸ் கைப்பற்றி ஜெர்மனியின் ஐக்கியத்திற்குக் கேடு விளைவிக்கும் என்றும் பிஸ்மார்க் கருதினார். எனவே தம்முடைய திறமையைப் பயன்படுத்தி இரஷ்யாவுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டதோடு இத்தாலி, ஆஸ்ரியதி

ஆகிய நாடுகளுடனும் ஃபிரான்சுக்கு எதிராக ஒப்பந்தம் செய்து கொண்டார். ஆனால், இரண்டாம் வில்லியமும் அவரது புதிய முதலமைச்சர்களும் (பிஸ்மார்க்கிற்குப்பின் நியமிக்கப்பட்டவர்கள்) இத்தாலி, ஆஸ்திரியா, இரஷ்யா ஆகிய நாடுகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் யாவும் ஒன்றுக்கொன்று முரண்பாடு கொண்டவை என்று கருதினர்கள், குறிப்பாக, இரஷ்யநாடு ஜெர்மனி, ஆஸ்திரிய நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதற்குத் தகுதியற்றது எனக் கருதினர்கள். எனவே, பிஸ்மார்க் இரஷ்யாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை 1890.க்குப் பிறகு மீண்டும் புதுப்பிக்காமல் அப்படியே விட்டுவிட்டனர். இதனல் ஃபிரான்சுக்கும், இரஷ்யாவிற்கும் இடையே நட்புறவு ஏற்பட்டு, அது ஜெர்மனியைப் பாதிக்கும் என்று பிஸ்மார்க் எண்ணி அஞ்சியதைப்போலவே, பிஸ்மார்க் பதவி விலகிய மூன்ருண்டுகளுக்குள் ஃபிரான்சு, இரஷ்யா ஆகிய இரு நாடுகளும் ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டன. இது ஃபிரான்சு, இரஷ்ய ஆகிய இரு நாடுகளுக்குமிடையே ஏற்பட்ட 'இரட்டை ஒப்பந்தம்' (Dual Alliance) என வழங்கப்பட்டது. இவ்விரட்டை ஒப்பந்தத்தினல் பின்னர் தனக்கு ஆபத்து ஏற்படும் எனக் கருதிய ஜெர்மனி இத்தாலியுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டது. இவ்விரு நாடுகளுடனும், ஆஸ்திரியாவும் சேரவே, இரட்டை ஒப்பந்தம் 'முக்கூட்டு ஒப்பந்தமாக' (Triple Alliance) மாறியது.

இரட்டை ஒப்பந்தம், முக்கூட்டு ஒப்பந்தம் ஆகியவற்றின் காரணமாக ஜெர்மனி, இத்தாலி, ஆஸ்திரியா, ஃபிரான்சு, இரஷ்யா ஆகிய நாடுகள் இரு கூறுகளாகப் பிரிந்தாலும் இவ்வொப்பந்தங்கள் பிஸ்மார்க் எதிர்பார்த்ததைப்போல ஜெர்மனியை அவ்வளவாகப் பாதிக்கவில்லை. ஜெர்மனியிடம் இழந்த அல்சேஸ், லொரைன் ஆகிய பகுதிகளை மீண்டும் பெறுவதற்கு ஃபிரான்சு நாடு முயற்சி செய்ய வேண்டுமென இரஷ்யா தூண்டியது. அதே சமயத்தில் இரஷ்யா, ஃபிரான்சு ஆகிய இரு நாடுகளும் சேர்ந்துகொண்டு 1890-க்கும் 1900-க்கும் இடைப்பட்ட காலத்தில் பிரிட்டனின் ஏகாதிபத்தியப் போக்கிற்கு எதிர்ப்பு தெரிவித்ததால் இவ்விரு நாடுகளையும் பிரிட்டன் பகைமை உணர்ச்சியுடன் பார்க்கத் தொடங்கியது. எனவே, இரஷ்யா ஒருபுறம் ஐரோப்பாவில் இங்கிலாந்துக்கு எதிராக ஜெர்மனியுடன் ஒத்துழைத்தது. மறுபுறம் தூரக்கிழக்கு நாடுகளிலும் (Far East), ஆப்பிரிக்காவிலும், ஃபிரான்சுடன் ஒத்துழைத்தது. ஃபிரான்சு, இரஷ்யா ஆகிய இரு நாடுகளும் சேர்ந்து கொண்டு 1899-ல் போயர் போர் (Boer war) பிரிட்டனுக்கு

எதிராக மிகப்பெரிய கூட்டணி (Grand Alliance) ஒன்றை ஏற்படுத்துவதற்கு முயற்சிசெய்தன. ஆனால், ஐரோப்பாவில் இத்தகைய ஒப்பந்தங்களின் காரணமாக 1905ஆம் ஆண்டு வரை குறிப்பிடத்தக்க எவ்வித ஆபத்துகளும் ஏற்படவில்லை.

ஜெர்மனியின் தொழில் வளர்ச்சி

பேரரசர் இரண்டாம் வில்லியம் பிரஷ்ய நாட்டின் அரசராகவும், ஜெர்மனியப் பேரரசராகவும் ஆட்சி செலுத்திய பொழுது, ஜெர்மனியின் தொழில் வளர்ச்சி மிக அதிக அளவில் வளர்ச்சியடைந்தது. இரண்டாம் வில்லியம் பதவியேற்றதி லிருந்து 1913 வரை பெரும்பாலான ஜெர்மனியர்கள் பொருள் களை உற்பத்தி செய்வதிலும் வியாபாரத்திலும் ஈடுபட்டனர். இதன் பயனாக வியாபாரம், பொருள் உற்பத்தி ஆகியவற்றில் ஈடுபட்டிருந்த ஜெர்மனியர்களின் எண்ணிக்கை 2 கோடியில் இருந்து 3.5 கோடியாக உயர்ந்தது. ஜெர்மனியின் இரும்பு உற்பத்தி 50 இலட்சம் டன்களிலிருந்து 150 இலட்சம் டன்களாக அதிகரித்தது. நிலக்கரி உற்பத்தி 7 கோடி டன்களி லிருந்து 20 கோடி டன்களாக உயர்ந்தது. உலகில் வாணிபத் திற்காக ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களின் மொத்த அளவில் 6 சதவிகிதம் அளவு மட்டுமே ஏற்றுமதி செய்த ஜெர்மனி, 1913-ல் 11 சதவிகிதம் பொருள்களை ஏற்றுமதி செய்தது. இந் நாட்டின் ஏற்றுமதிப் பொருள்களின் மொத்த மதிப்பு 720 கோடி ரூபாயிலிருந்து ஏறத்தாழ 2250 கோடி ரூபாயாக உயர்ந்தது.

தொழில் வளர்ச்சிக்கு ஏற்றாற்போல் ஜெர்மனியில் மக்கள் தொகையும் பெருகியது. எடுத்துக்காட்டாக, 1871-ல் ஜெர் மனியின் மக்கள் தொகை ஃபிரான்சின் மக்கள் தொகையை விடக் குறைவாகவே இருந்தது. ஆனால், இது 1913-ல் ஃபிரான்சின் மக்கள் தொகையை விட ⅓ பங்கு அதிகமாக இருந்தது. இத்துடன் 1880-க்குப் பின்னர் ஜெர்மனியில் குடியேறுவோரின் எண்ணிக்கை ஆண்டொன்றுக்கு 2½ இலட்ச மாக அதிகரித்தது. ஆனால் இவ்வாறு குடியேறுவோரின் எண்ணிக்கை 1900-க்குப் பிறகு படிப்படியாகக் குறைய ஆரம் பித்தது. இருப்பினும் ஆண்டொன்றுக்குச் சராசரி 25 ஆயிரம் மக்கள் ஜெர்மனியில் ஐரோப்பாவின் மற்ற பாகங்களிலிருந்து குடியேறிக்கொண்டே யிருந்தனர்.

அரசியலைப் பொறுத்தமட்டில், இரண்டாம் வில்லியத்தின் ஆட்சிக் காலத்தில் அதிக மாற்றம் காணப்படாமல் பிஸ்மார்க்

முதலமைச்சராக இருந்தபொழுது இருந்த அரசியல் நிலைமையே காணப்பட்டது. இவருடைய காலத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் அரசியலமைப்பில் ஏற்படவில்லை. ஆனால், பிரஷ்யப் பகுதி மக்கள் தங்கள் பகுதிகளில் அரசாங்கத்தை ஜனநாயக முறையில் மாற்றியமைக்க வேண்டுமென ஆங்காங்கே போராட்டங்களை நடத்தினர். இப் போராட்டங்கள் யாவும் மன்னரின் இராணுவத்தால் ஒடுக்கப்பட்டுவிட்டன. மத்தியக் கட்சி, பழமை விரும்பிக் கட்சி, தேசிய மிதவாதக் கட்சி என்ற மூன்று சிறுபான்மைக் கட்சிகள் தங்கள் பழைய நிலையிலேயே இருந்தன. முன்னேற்றக் கட்சியினர் நாளடைவில் மக்களிடையே செல்வாக்கை இழந்தார்கள். சோஷியல் ஜனநாயகவாதிகள் என்று சொல்லப்பட்ட ஜனநாயகக் கட்சியினர் மக்களிடையே மற்ற எல்லாக் கட்சிகளையும்விட ஓரளவு அதிக செல்வாக்குப் பெற்றனர். இதனால் 1912-ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஜனநாயகக் கட்சியினர் 42½ இலட்சம் வாக்குகளைப் பெற்றனர். கத்தோலிக்க மத்தியக் கட்சியினர் 20 இலட்சம் வாக்குகளைப் பெற்றனர். தேசிய மிதவாதக் கட்சியினர் 171 இலட்சம் வாக்குகளைப் பெற்றனர். முன்னேற்றக் கட்சியினரும், பழமை விரும்பிக் கட்சியினரும் ஒவ்வொருவரும் 15 இலட்சம் வாக்குகளைப் பெற்றனர்.

ஜனநாயகக் கட்சியினர் யாவரும் ஜெர்மனியில் புரட்சி செய்ய வேண்டுமென்று விரும்பவில்லை. இக் கட்சியினர்களில் பெரும்பாலோர் தொழிலாளர்களின் சங்கங்களில் உறுப்பினர்களாக இருந்தனர். இவர்கள் யாவரும் பலாத்கார முறைகளின் மூலம் இரண்டாம் வில்லியத்தின் அரசைக் கவிழ்க்க விரும்பவில்லை. ஆனால், இதற்கு மாறாக இரண்டாம் வில்லியத்தையும், அவரது முதலமைச்சர்களையும் திருப்திப்படுத்தி, தொழிலாளர்களின் இயக்கங்களுக்குப் பல நன்மைகளைப் பெற விரும்பினார்கள். இவர்களின் பொருளாதாரக் கருத்துகளையும் கொள்கைகளையும் விரும்பாத மத்திய வகுப்புத் தீவிரவாதிகள் இந்த ஜனநாயகக் கட்சியினர் பேரரசின் நிறுவனங்களின் சீர்திருத்தங்களுக்காக ஏற்பட்ட பிரதிநிதிகள் எனவும், இவர்கள் உண்மையான ஜனநாயகத்தை ஜெர்மனியில் புகுத்துவதற்கு முயற்சிசெய்தனர் எனவும் கருதினார்கள். இவர்களுடைய இக் கருத்துகளால்தான் ஜெர்மனியில் சோஷலிஸ்ட்டுகள் அதிகம் வளர்ச்சியடைந்தனர். மேலும், இவர்களின் தலைவர்கள் புரட்சிக்குப் பதிலாகச் சீர்திருத்தங்களைப்பற்றி விவாதித்தது சோஷலிஸ்ட்டுகளின் வளர்ச்சிக்கு ஒரு காரணமாக அமைந்தது.

1890-க்கும் 1914-க்கும் இடைப்பட்ட காலத்தில் ஜெர்மனியப் பேரரசில் இருந்த சான்ஸலர்கள்

பிஸ்மார்க் பதவி விலகிய 1890ஆம் ஆண்டுக்கும், 1914ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் காப்ரிவ் (Caprivi), ஹொஹன்லோ (Hohenloha), புல்லோவ் (Bullow), பெத்மென்-ஹோல்வெக் (Bethmann-Hollweg) என்ற நான்கு முதலமைச்சர்கள் ஒருவர்பின் ஒருவராக ஜெர்மனியில் பேரரசின் முதலமைச்சர்களாகப் பதவிவகித்தார்கள். இவர்களில் ஒருவர்கூட, பிஸ்மார்க் மக்களிடம் அதிக செல்வாக்கும், பெருமையும் பெற்றிருந்ததைப் போல செல்வாக்கையும், பெருமையையும் பெற்றிருக்கவில்லை. இவர்கள் அனைவரும் பேரரசர் இரண்டாம் வில்லியத்தின் ஆணைகளை இராணுவ ஒத்துழைப்புடன் சற்றும் மறுக்காமல் நிறைவேற்றி வந்தனர். இரண்டாம் வில்லியம் இவர்களைத் தம் விருப்பப்படி நியமித்தும், நீக்கியும் வந்ததே இவர்களின் இத்தகைய செய்கைக்கு முக்கிய காரணமாகும். இதனால் இயற்கையாகவே ஜெர்மனியப் பேரரசில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட சட்டங்கள் பல 1890 முதல் 1914 வரை செயல்படுத்தப்பட்டன.

காப்ரிவ் (1890—1894)

பிஸ்மார்க் பதவி விலகியவுடன் கவுண்ட் ஜார்ஜ் வான் காப்ரிவ் (Count George Von Caprivi) என்பவர் 1890-ல் ஜெர்மனியப் பேரரசின் முதலமைச்சராகப் பேரரசர் இரண்டாம் வில்லியத்தால் நியமிக்கப்பட்டார். இவர் 1866, 1870 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற ஆஸ்திரிய-பிரஷ்யப் போர், பிரஞ்சு-பிரஷ்யப் போர் ஆகியவற்றில் மிகச் சிறந்த முறையில் பணியாற்றிய புகழ்பெற்ற பிரஷ்ய இராணுவ அதிகாரியாவார். இவர் பிஸ்மார்க்கைப்போல நிலச் சுவான்தாராக இல்லாததால் அவர்களின் நிலையை இவர் நன்கு உணரவில்லை. மேலும், இவர் நிலச் சுவான்தார்களுக்கு அதிக ஆதரவளிக்காமல் வியாபாரிகளிடம் அதிக பற்றுடையவராகக் காணப்பட்டார். ஐரோப்பாவில் பிரிட்டன் கடலாதிக்கம் பெற்றிருந்ததால், இவர் இங்கிலாந்தின்மீது இயற்கையாகவே அதிக மதிப்பு வைத்திருந்தார்.

அரசியலில் ஆதரவு பெறுவதற்காக ஜெர்மனியப் பாராளுமன்றமான ரீஷ்டக்கில் இவர் பழமை விரும்பிகளைக் காட்டிலும் தேசிய மிதவாதக் கட்சியினரையும், முன்னேற்றக் கட்சியினரையும் அதிகம் நம்பியிருந்தார். இவ்விரு கட்சியினரின் விருப்பத்திற்கிணங்க காப்ரிவ் ஜெர்மனியில் சோஷ

லிஸ்ட்டுகளுக்கு எதிரான சட்டங்களை அவ்வளவாக அக்கறையுடன் செயல்படுத்தாததுடன் அவை படிப்படியாக மறைந்து போவதற்கும் காரணமாக இருந்தார்.

மேலும் இவர் இவ்விரு கட்சிகளுக்காகப் பிரிட்டனுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். ஜெர்மனியில் நடைமுறையில் இருந்த காப்புவரி (Tariff) முறைகளையும் சற்று மாற்றி அமைத்தார். இவர் பிரிட்டனுடன் 1890-ல் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி ஜெர்மனி ஆப்பிரிக்காவில் சில குடியேற்றப் பகுதிகளின்மீது கொண்டிருந்த சில உரிமைகளை இங்கிலாந்திற்கு விட்டுக் கொடுத்தது. இதற்கு ஈடாக வடகடல் பகுதியில் இருந்த ஹெலிகோலாந்தில் (Heligoland) சில உரிமைகளைப் பெற்றது. புதிய காப்புவரிச் சட்டங்களின்படி ஜெர்மனிக்கு வேற்று நாடுகள் ஏதாவது சலுகைகளை வழங்கினல் அதேபோன்று அந் நாடுகளுக்குச் சில சலுகைகளை ஜெர்மனியில் வழங்க ஏற்பாடு செய்தார். இதன் காரணமாக ஆஸ்திரியா-ஹங்கேரி, இரஷ்யா, இத்தாலி, ருமேனியா ஆகிய நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்கு ஜெர்மனி சுங்கவரிகளைக் குறைத்தது. இதனல் ஜெர்மனியில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்கு இந் நாடுகளில் சுங்கவரி மிகக் குறைவாக விதிக்கப்பட்டது. (ஆஸ்திரியா, ஹங்கேரி, ருமேனியா, இத்தாலி, இரஷ்யா ஆகிய நாடுகளைக் காட்டிலும் ஜெர்மனியில் உற்பத்திப் பொருள்கள் அதிகம்.) இதனல் பிரஷ்யப் பகுதிகளில் வாழ்ந்த விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். ஆனல் ஜெர்மனியத் தொழிலதிபர்களும், வியாபாரிகளும் அதிக இலாபம் அடைந்தனர். எனவே, விவசாயம் அதிகமாக நடைபெற்றுவந்த பிரஷ்யப் பகுதிகளில் பழமை விரும்பிக் கட்சியினர் (விவசாயிகளின் ஒத்துழைப்புடன்) காப்ரிவ்க்கு எதிராக ஒன்று திரண்டனர். இவர்களை அடக்குவதற்கு காப்ரிவ் எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவும் பலனளிக்கவில்லை. மேலும் தமக்கு மக்களின் ஆதரவு அதிகம் தேவையென்பதை விரும்பிய பேரரசர் இரண்டாம் வில்லியம் பிரஷ்ய பழமை விரும்பிகளின் வேண்டுகோளுக் கிணங்க காப்ரிவை 1894ஆம் ஆண்டு பதவியிலிருந்து நீக்கினர்.

ஹோஹன்லோ (1894—1900) :

ஜெர்மனியின் தெற்குப் பகுதியைச் சார்ந்த இளவரசர் ஹோஹன்லோ - ஸ்ஷ்லிங்ஸ் ஃபர்ஸ்ட் (Prince Hohenlohe-Schillings Furst) என்பவர் காப்ரிவ்க்குப் பின்னர் 1894-ல் பிரஷ்யாவின் முதலமைச்சராக நியமிக்கப்பட்டார். இவர்

இளமைக் காலத்தில் தம்முடைய சொந்தப் பகுதியான பவேரியாவில் (Bavaria) சிறந்த வழக்கறிஞராக விளங்கினர். பின்னர், பவேரியா மக்கள் தேசிய ஒருமைப்பாட்டிற்கு பிரஷ்யாவின் தலைமையில் ஒன்று திரண்டபொழுது தேசிய ஒருமைப்பாட்டிற்காகப் பாடுபட்டார். இதனையடுத்து ஃபிரான்சுக்கும், ஜெர்மனிக்கும் நடைபெற்ற பிரஞ்சு-பிரஷ்யப் போரில் பிரஷ்யாவுக்கு ஆதரவாக ஒரு முக்கியப் பங்குவகித்தார். அல்சேஸ், லொரைன் ஆகிய இரு பகுதிகளும் பிரஷ்யாவுடன் இணைக்கப்பட்டவுடன், அப் பகுதிகளை நன்கு அறிந்தவரான இவரைப் பேரரசர் இரண்டாம் வில்லியம் அப் பகுதிக்கு ஆளுநராக (Governor) நியமித்தார். நிலச்சுவான்தாரான இவரைப் பேரரசர் இரண்டாம் வில்லியம் 1894-ல் (ஹோஹன்லோவின் 75ஆவது வயதில்) ஜெர்மனியப் பேரரசின் முதலமைச்சராக நியமித்தார். இவர் முதலமைச்சராக நியமிக்கப்பட்டபொழுது பேரரசின் நிர்வாகம் முழுவதையும் பேரரசர் இரண்டாம் வில்லியமும், சமுதாயத்தின் தேவைகளுக்கேற்பச் சிலமாற்றங்களைப் பின்பற்ற வேண்டும் என்னும் கருத்துடைய பிரஷ்ய நிலச்சுவான்தாராகவும், ஜெர்மனியப் பேரரசின் வெளிநாட்டமைச்சகச் செயலாளராகவும் பணியாற்றிய இளவரசர் புல்லோவ் ஆகிய இருவரும் கண்காணித்து வந்தனர். முதலமைச்சர் பெயரளவில் மட்டுமே எல்லாப் பொறுப்புகளையும் மேற்கொண்டிருந்தார்.

உள்நாட்டைப் பொறுத்தமட்டில் தொழில், வாணிபம் ஆகிய துறைகளில் ஈடுபட்ட மக்களுக்கு நிறைய சலுகைகளை முதலமைச்சர் ஹோஹன்லோ வழங்கினர். பாராளுமன்றமான ரீஷ்டக்கில் தமக்கு அதிக ஆதரவு பெறுவதற்காகவும், தொழில் துறையினர், வியாபாரிகள் ஆகியோர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காகவும், பிஸ்மார்க்கின் கொள்கைகளை மேலும் செயல்படுத்துவதற்காகவும் இவர் இச் சலுகைகளை வழங்கினர். அச்சமயத்தில் பேரரசர் இரண்டாம் வில்லியம், ஹோஹன்லோ, புல்லோ ஆகிய மூவரும் தங்கள் கவனம் முழுவதையும் ஜெர்மனியின் எல்லைகளை விரிவுபடுத்துவதிலும் கடல் வாணிபத்தைப் பெருக்குவதிலும் செலுத்தினர். 'ஜெர்மனியப் பேரரசு உலகப் பேரரசாக வளர்ந்து வருகிறது' என 1895-ல் பேரரசர் இரண்டாம் வில்லியம் கூறியதிலிருந்து இவர்களின் கருத்து நன்கு புலனாகும்.

இந்நிலையில் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த இரண்டு கிறித்தவப் பாதிரிமார்கள் சீனவில் 1897-ல் கொல்லப்பட்டனர். இதனல் ஜெர்மனி தனது படையை 'கியாசௌ' (Kiachow)

விரிகுடா பகுதியில் வைத்துக்கொண்டு, தங்கள் நாட்டைச் சேர்ந்த கிறித்தவப் பாதிரிமார்கள் கொலை செய்யப்பட்டதற்கு நஷ்ட ஈடாக ஜெர்மனிய வியாபாரிகளுக்கும் லேவாதேவிக் காரர்களுக்கும் சீனாவில் சில பொருளாதாரச் சலுகைகளையும், ஷாண்டங் (Shantung) தீபகற்பத்தில் 200 சதுரமைல் பரப்பு கொண்ட நிலப்பகுதியையும் சீனா வழங்கவேண்டுமெனக் கோரி அவற்றைப் பெற்றது. இதனையடுத்து, மத்திய அமெரிக் காவிற்குக் கிழக்காக அட்லான்டிக் பெருங்கடலில் அமைந் துள்ள, மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்றான கியூபாவை (Cuba) மையமாகக்கொண்டு ஸ்பெயின், ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஆகியவற்றிற்கிடையே 1899ஆம் ஆண்டு நடைபெற்ற ஸ்பானிஷ்-அமெரிக்கப் போரின் விளைவாகப் பசிபிக் பெருங் கடலில் அமைந்துள்ள கரோலைன் தீவுகளை ஜெர்மனி ஸ்பெயின் நாட்டிடமிருந்து விலைக்கு வாங்கியது. பின்னர் 1899-1900 ஆகிய ஆண்டுகளில் பிரிட்டனுடனும் ஐக்கிய அமெரிக்க நாடு களுடனும் ஒப்பந்தம் செய்துகொண்டு சமோவாவின் (Samoa) பெரும்பகுதியை ஜெர்மனி பெற்றது.

இவ்வாறு தூரக்கிழக்குப் பகுதிகளில் பல இடங்களை ஜெர்மனி கைப்பற்றிக் கொண்டிருக்கும்பொழுது ஜெர்மனிய அரசாங்கம், துருக்கிப் பேரரசுப் பகுதியில் தனது கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தது. இரஷ்யா பால்கன் பகுதிகளில் செல் வாக்குப் பெற முயற்சி செய்ததே, ஜெர்மனிய அரசாங்கம் துருக்கிப் பேரரசுப் பகுதியில் தனது கவனத்தைச் செலுத்து வதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. தொழிற்புரட்சியின் காரணமாகப் பல மாறுதல்கள் ஐரோப்பிய நாடுகளில் நடை பெற்றுக் கொண்டிருந்தபொழுது துருக்கி மிகவலிமை குன்றிய நாடாகவே இருந்தது. எனவே, இந் நாடு 'ஐரோப்பாவின் நோயாளி' என்று அழைக்கப்பட்டது. துருக்கியின் இந் நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ஜெர் மனியப் பேரரசர் இரண்டாம் வில்லியம் பலமுறை துருக்கிய சுல்தானின் தலைநகரான கான்ஸ்டாண்டி நோபிளுக்கு (தற்பொழுது இஸ்தான்புல் என வழங்கப்படுகிறது) விஜயம் செய்தார். இதன் பயனாக இவ்விரு நாடுகளுக்குமிடையே நட்புறவு நன்கு வளர்ச்சியுற்றது. துருக்கியின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு பேரரசர் இரண்டாம் வில்லியம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

பேரரசர் இரண்டாம் வில்லியத்தின் இந் நடவடிக்கைகளின் காரணமாக, ஜெர்மனிய இராணுவ அதிகாரிகள் பலர் துருக்கிக் குச் சென்று துருக்கியின் இராணுவத்தைச் சீர்திருத்தி அமைத்

தனர். துருக்கியப் போர்வீரர்களுக்கு நவீனமுறையில் போர்ப் பயிற்சிகளை அளித்தனர். துருக்கிய நாட்டிற்குத் தேவையான இராணுவத் தளவாடங்கள் ஜெர்மனியிலிருந்து வரவழைக் கப்பட்டன. ஜெர்மனியையும், துருக்கியையும் இணைக்கும் வகை யில் பாஸ்பரஸிலிருந்து (Bosphorus) பாக்தாத் (Bagdad) வரை ஒரு புதிய இருப்புப்பாதை அமைப்பதற்கு 1899-ல் துருக்கிய சுல்தானிடமிருந்து ஜெர்மனியர்கள் அனுமதி பெற்றனர்கள்.

தரைப்படையில் அதிக வலிமை பெற்றிருந்த ஜெர்மனி, கடற்படையைப் பெருக்குவதற்குத் தனது முயற்சிகளை மேற் கொள்ளத் தொடங்கியது. ஜெர்மனிய வாணிபர்களும் தொழி லதிபர்களும் இந்தக் கப்பற்படையால்தான் தங்களுக்குப் பாதுகாப்பு ஏற்படும் எனக் கருதினார்கள். தனது கடற்படை வலிமையால் ஸ்பானியர்களை ஐக்கிய அமெரிக்கா 1899-ல் தோற்கடித்ததாலும், இதே ஆண்டில் ஏற்பட்ட போயர் சண்டை களில் ஆங்கிலேயர்கள் தங்கள் கடற்படை வலிமையால் வெற்றி பெற்றதாலும் ஜெர்மனிய அரசு தானும் ஒரு வலிமை வாய்ந்த கப்பற்படையை உருவாக்க வேண்டுமெனக் கருதி யது. நாட்டுப்பற்றுமிக்க ஜெர்மனியர்களும், ஜெர்மனிய கப்பற் சங்கங்களும் (German Naval League) ஜெர்மனியப் பேரரசு ஒரு வலிமை வாய்ந்த கப்பற்படையை அமைக்க வேண்டுமென வற்புறுத்தியதும், ஜெர்மனியப் பேரரசு கடற் படையை அமைப்பதற்குக் காரணமாக அமைந்தது. எல்லா வற்றிற்கும் மேலாக ஜெர்மனி ஐரோப்பாவில் மட்டுமன்றி உலக நாடுகளிடையே சிறந்து விளங்கவேண்டுமாயின், அது இங்கிலாந்தைப்போல ஒரு வலிமை வாய்ந்த கப்பற்படையைப் பெற்றிருக்க வேண்டுமெனக் கருதி, அதனை அமைப்பதற்குத் தக்க முயற்சிகளை உறுதியுடன் முதலமைச்சர் மேற்கொண்டார். தன்னுடைய கருத்துகளுக்கு அதிக ஆதரவு திரட்டுவதற்காக 'ஜெர்மனியின் எதிர்காலம் அந் நாட்டின் கடலாதிக்கத்தைப் பொறுத்துத்தான் அமையும்'என அடிக்கடி கூறிவந்தார். எனவே, 1897ஆம் ஆண்டு அட்மிரல் ஆல்ஃப்ரட் வான் டிர்பிட்ஸ் (Admiral Alfred Von Tirpitz) என்பவரைக் கப்பல் போக்கு வரத்துத் துறையின் தலைமைச் செயலாளராக நியமித்தார். இவர் 1916ஆம் ஆண்டு வரை இப் பதவியை வகித்துவந்தார். இவருடைய முயற்சிகளும் ஜெர்மனியக் கப்பற்படை உருவாவ தற்கு ஒரு முக்கிய காரணமாய் அமைந்தது. பின்னர் கப்பற் படையை உருவாக்குவதற்காகப் பாராளுமன்ற அங்கத்தினர் களைத் தூண்டி 1898, 1900 ஆகிய ஆண்டுகளில் இரு சட்டங் களைப் பிறப்பித்து, பேரரசரும் முதலமைச்சரும் உலகிலேயே மிக வலிமைவாய்ந்த கப்பற்படையை உருவாக்கினார்கள். ஆனால்

ஜெர்மனியின் கப்பற்படை பிரிட்டனுக்கு அடுத்ததாக இரண்டாவது நிலையைத்தான் வகிக்க முடிந்தது.

புல்லோவ் (1900 – 1909) : இதற்கிடையில் முதலமைச்சர் ஹோஹன்லோ தனது பதவியிலிருந்து 1900ஆம் ஆண்டு ஓய்வு பெற்ருர். இவருக்குப்பின் இளவரசர் வான் புல்லோவ் (Prince Von Bullow) என்பவரைப் பேரரசர் இரண்டாம் வில்லியம் ஜெர்மனியப் பேரரசின் முதலமைச்சராக நியமித்தார். ஜெர்மனியப் பேரரசில், பேரரசின் கொள்கைகளுக்கு எதிராக இருந்த சில பிரஷ்யர்களை அடக்கியாள்வதில் ஹோஹன்லோ, காப்ரிவ் ஆகியோர்களுக்கு இல்லாத திறமையை புல்லோவ் பெற்றிருந்தார். எனவே இவர் முதலமைச்சராகப் பதவியேற்றவுடன் பேரரசின் அரசாங்கத்திற்கும், பிரஷ்ய பழைய விரும்பிக் கட்சியினருக்குமிடையே நட்புறவு வளர்ப்பதற்குப் பாடுபட்டார். மேலும் இவர் இயற்கையாகவே பிரஷ்ய பழமை விரும்பிகளிடம் அதிக அனுதாபம் உடையவராகக் காணப்பட்டார்.

இவர் பேரரசருக்குக் கட்டுப்பட்ட அமைச்சராகச் செயல்படுவதைவிட, முதலமைச்சர் என்ற முறையில் அதிக சுதந்திரத்துடன் செயல்பட விரும்பினுர். ஜெர்மன் பாராளுமன்றத்தில் விவசாயிகள் நிறைந்த பழமை விரும்பிகளையும், தொழில்துறையில் ஈடுபட்டிருந்த தேசிய மிதவாதக் கட்சியினரையும் திருப்திப்படுத்தி ஒரு கூட்டணியை உருவாக்குவதில் இவர் வெற்றி பெற்ருர். காப்ரிவ் முதலமைச்சராகப் பதவி வகித்த காலத்திலிருந்து வியாபாரிகளும், தொழிலாளர்களும் விவசாயிகளுடன் ஒத்துழைப்பதற்கு வாய்ப்புக்கள் இல்லாமல் இருந்த நிலையைத் தேசிய மிதவாதக்கட்சியினருக்குச் சுட்டிக்காட்டி, அவர்களைத் திருப்திப்படுத்துவதில் புல்லோவ் வெற்றியடைந்ததே இவர் பாராளுமன்றத்தில் கூட்டணி அமைப்பதற்கு ஏதுவாக அமைந்தது. பாராளுமன்றமான ரீஷ்டக்கில் பழமை விரும்பிக் கட்சியினரும், தேசிய மிதவாதக் கட்சியினரும் ஒன்றுபட்டுச் செயல்பட்டதன் காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட விவசாயப் பொருள்கள்மீது அதிக அளவில் சுங்கவரியை ஜெர்மனியப் பேரரசு விதித்தது. இதனுல் ஜெர்மனியப் பேரரசில் இருந்த விவசாயப் பெருமக்கள் அதிக அளவில் அரசாங்கத்துடன் ஒத்துழைத்ததோடு, தொழில்துறையில் உற்பத்தி செய்யப்பட்டதைப் போலவே, அதிக அளவில் விவசாயப் பொருள்களையும் உற்பத்தி செய்து, தங்கள் பேரரசின் ஏகாதிபத்தியக் கொள்கைகளுக்கு மேலும் வலுவூட்டினர்.

ஜெர்மனியப் பேரரசின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த போலந்துப் பகுதியைப் பொறுத்த அளவில் அப்பகுதியில் வாழ்ந்த போலந்து மக்களை அடக்குவதில் ''புல்லோவ்'' அதிக ஆர்வம் காட்டினர். பிரஷ்ய பாராளுமன்றத்திலிருந்த தீவிர ஜெர்மனியர்களுக்கு ஆதரவாக அப் பாராளுமன்றத்தின் மூல மாகப் பல சட்டங்களை இயற்றினர். இவை யாவும் பிஸ்மார்க் முதலமைச்சராக இருந்தபொழுது போலந்துக்காரர்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளைக் காட்டிலும் அதிக தீவிரமாக இருந்தன. இச்சட்டங்களின் மூலம் புல்லோவ் போலந்து மக்கள் தங்கள் போலிஷ் மொழியை அரசு அலுவலகங்களில் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தினர். மேலும் போலந்து மக்களைக் கட்டாயப்படுத்தி அவர்கள் தங்கள் நிலங்களை ஜெர்மனியர்களுக்கே விற்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தின. போலந்து மக்களுக்கு எதிராக இயற்றப் பட்ட பாராளுமன்றச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலமாகவும், சில அரசாங்க ஆணைகளின்படி சுமார் 90 கோடி ரூபாய் அளவிற்கு ஜெர்மனியர்களுக்குப் பண உதவி செய்து போலந்து மக்களின் சொத்துக்களை ஜெர்மனியர்கள் வாங்க வழிவகை செய்ததன் மூலமாகவும் புல்லோவ் மேற்கொண்ட முயற்சிகள் யாவும் வெற்றி வாய்ப்பை இழந்தன. அதற்கு மாறாக, போலந்துக்காரர்கள் வாழ்ந்த போஸன் (Posen), மேற்குப் பிரஷ்யா (West Prussia) ஆகிய பகுதிகளில் 1880-ல் வாழ்ந் ததைக் காட்டிலும் 1910-ல் மிக அதிக எண்ணிக்கையினராக போலந்து மக்கள் வாழ்ந்து வந்தனர். இவர்களில் பெரும் பாலானவர்கள் போர்த் திறமை பெற்றவர்களாகக் காணப் பட்டனர்.

வெளிநாட்டுக் கொள்கைகளில் பெரும்பாலும் தேசிய மிதவாதக் கட்சியினரின் விருப்பத்திற்கு இணங்கவும், ஏகாதி பத்திய மனப்பான்மையுடைய வாணிபர்களின் விருப்பத்திற்கு ஏற்பவும் நடந்துகொண்ட புல்லோவ், தனது உள்நாட்டுக் கொள்கைகளைப் பொறுத்தமட்டில் பிரஷ்ய பழமை விரும்பி களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் நடந்துகொண் டார். வெளிநாட்டுக் கொள்கைகளைப் பொறுத்த அளவில் புல்லோவ் நடந்துகொண்ட முறை பிரிட்டன், பிரான்சு, இரஷ்யா ஆகிய நாடுகளைப் பாதித்தது. எனவே இந்நாடுகள் ஜெர்மனிக்கு எதிராக நடந்துகொள்ளத் தொடங்கின. மேலும் ஜெர்மனியின் போக்கு முதல் உலகப் போருக்கு வழிவகுப்பதாக அமைந்தது. முதல் உலகப் போருக்கு ஜெர்மனி எவ்வாறு காரணமாயிற்று என்பதை வேறு அத்தியாயங்களில் காண

போம். ஆனால் உள்நாட்டைப் பொறுத்தமட்டில் புல்லோவின் கொள்கைகளுக்கு மற்ற அரசியல் கட்சிகள் அவ்வளவாக எதிர்ப்பு தெரிவிக்காவிட்டாலும், 1906ஆம் ஆண்டு இவரது கொள்கைகளுக்கு ஒரு சோதனை ஏற்பட்டது.

ஜெர்மனியில் சோஷியலிஸ்ட்டுகளோ அல்லது மத்தியக் கட்சியினரோ அல்லது முன்னேற்றக் கட்சியினரோ புல்லோவ் இராணுவத்திற்காகவும், கடற்படைக்காகவும் அதிக பணம் செலவிட்டதைக் குறைகூறவில்லை. ஜெர்மனியின் ஆளுகையின் கீழ் இருந்த தென்மேற்கு ஆப்பிரிக்காவில் பழங்குடிகளால் ஏற்பட்ட தொல்லைகளை அடக்குவதற்காக புல்லோவ் 1906-ல் ஜெர்மனியப் பாராளுமன்றமான ரீஷ்டக்கை அதிக பணம் ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஜெர்மனியின் ஏகாதிபத்தியக் கொள்கைகளை விரும்பாத அரசியல் கட்சிகள் ஒன்று சேர்ந்து கொண்டு இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி புல்லோவின் கொள்கைகளையும், கருத்துக்களையும், ரீஷ்டக்கில் எதிர்த்ததுடன் அதிக பணம் ஒத்துக்கீடு செய்யவும் மறுத்துவிட்டனர். இதனால் கோபமடைந்த முதலமைச்சர் புல்லோவ் பேரரசரைக் கலந்துகொண்டு பாராளுமன்றமான ரீஷ்டக்கை கலைத்துவிட்டுப் புதிய தேர்தலை நடத்தினர். பாராளுமன்றத்திற்காக 1907ஆம் ஆண்டு நடைபெற்ற புதிய தேர்தலில் எல்லாக் கட்சியினரும் மிகத் தீவிரமாகப் போட்டியிட்டனர். ஆனால் பேரரசர் இரண்டாம் வில்லியம் நாட்டுப் பற்றைத் தூண்டும் வகையில் பேசி நாட்டு மக்களை அரசாங்க ஆதரவு பெற்ற கட்சிகளுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டார். முதலமைச்சர் புல்லோவும் தன்திறமைகளைப் பயன்படுத்தித் தன் ஆதரவு பெற்ற கட்சிகள் பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவதற்காகப் பாடுபட்டார். புதிய தேர்தலில் மத்தியக் கட்சியினர் ஏறத்தாழ தங்கள் பழைய எண்ணிக்கையில் இருந்தனர். சோஷியலிஸ்ட்டுகள் தங்கள் திறமையால் முன்னர் பெற்றிருந்ததைவிட சற்று அதிக வாக்குகளைப் பெற்றனர்கள். ஆனால் புதிய ரீஷ்டக்கில் பெரும்பான்மை பலம் அரசாங்க ஆதரவு பெற்ற கட்சிகளுக்குக் கிடைத்தது. சோஷியலிஸ்ட்டுகள் ரீஷ்டக்கில் பாதியாகக் குறைந்தனர்.

புதிய ரீஷ்டக் செயல்படத் துவங்கியது முதற்கொண்டு அரசு கொள்கைகளை எதிர்க்கும் அரசியல் கட்சிகளும், எதிர்க் கட்சிகளும் குறிப்பிடத்தக்க அளவில் ஒடுக்கப்பட்டன. 1907ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் ஜெர்மனியின் வளர்ச்சியில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. ஆனால்,

நாட்டுப்பற்றுமிக்க பழமை விரும்பிகள் புல்லோவ் விதித்த புதிய வரிகளை எதிர்த்ததன் பயனாக, முதலமைச்சர் புல்லோவுக்கும், நாட்டுப்பற்றுமிக்க பழமை விரும்பிக் கட்சியினருக்கும் இடையே பகையுணர்ச்சி வளர்ச்சி அடைந்தது. பலாத்காரத்தில் ஆழ்ந்த நம்பிக்கையுடையவர்களும் புல்லோவின் கொள்கைகளை எதிர்த்தனர். முதலமைச்சரின் கொள்கைகளையும், செயல்களையும் எதிர்க்கின்றஎல்லாப் பிரிவினரும் அடுத்து ஜெர்மனியப் பேரரசராகப் பதவியேற்க வேண்டிய இளவரசரின் தலைமையில் ஒன்று திரண்டு புல்லோவிற்கு அரசின் கொள்கைகளை வேகமாக நிறைவேற்றுவதற்கான திறமை இல்லை எனக்கூறி முதலமைச்சர் புல்லோவைப் பதவியைவிட்டு விலகுமாறு கோரினர். எனவே தனது செயல்களால் ஜெர்மனியை முதல் உலகப் போருக்கான பாதையை நோக்கி அழைத்துச் சென்ற புல்லோவ் 1909-ல் முதலமைச்சர் பதவியை விட்டு விலகினர்.

பெத்மன்—ஹோல்வெக் (1909—1917)

புல்லோவ் பதவியை விட்டு விலகியவுடன் பெத்மன்-ஹோல்வெக் (Bethmann-Hollweg) என்பவர் ஜெர்மனியப் பேரரசின் முதலமைச்சராக நியமிக்கப்பட்டார். இவர் விவசாயம் செழித்தோங்கிய பிரஷ்யப் பகுதியில் வாழ்ந்த ஒரு செல்வக் குடும்பத்தைச் சேர்ந்தவர். சட்டத்துறையில் பயிற்சி பெற்ற இவர் பிரஷ்ய அரசாங்கத்தில் ஒரு சாதாரண அரசு அதிகாரியாகத் தன்னுடைய வாழ்க்கையைத் துவங்கினர். பின்னர் படிப்படியாக உயர் பதவிகளைப் பெற்று ஜெர்மனியப் பேரரசின் முதலமைச்சராக 1909ஆம் ஆண்டு பேரரசரால் நியமிக்கப்பட்டார். இவர் முதலமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் தனக்குமுன் முதலமைச்சர்களாக விளங்கிய பிஸ்மார்க், காப்ரிவ், ஹோஹன்லோ, புல்லோவ் ஆகியோர் பின்பற்றிய கொள்கைகளை அப்படியே பின்பற்றினர். பிரஷ்ய சட்டசபையின் உதவியைப் பெறுவதற்காக, பழமை விரும்பிகள், மத்தியக் கட்சியினர் ஆகியோர்களுடன் ஒத்துழைத்து அவர்களின் ஒத்துழைப்பைப் பெற்றர். இவருடைய பதவிக் காலத்தில்தான் வலிமையுடன் ஒன்றுபட்டிருந்த ஜெர்மனி முதல் உலகப் போரில் முழுமூச்சுடன் ஈடுபட்டது. முதல் உலகப் போரில் ஜெர்மனியின் ஈடுபாடுகளைப் பற்றி பின்னர் விரிவாகக் காண்போம்.

9. 1867க்குப் பின்னர் ஹாப்ஸ்பர்க் பேரரசின் நிலை

பிரஷ்யாவிற்கும், ஆஸ்திரியாவிற்குமிடையே 1866-ல் ஸ்லீஷ்விக் (Schleswig) என்ற பகுதியை மையமாகக் கொண்டு

ஏற்பட்ட ஆஸ்திரிய-பிரஷ்யப் போரில் ஆஸ்திரியா தோல்வி யடைந்த பின்னர், ஹாப்ஸ்பர்க் பேரரசு 1867-ல் இரட்டை முடியரசாக மாற்றியமைக்கப்பட்டது. இவ்வமைப்பின்படி ஹாப்ஸ்பர்க் வம்சத்து அரசர் ஆஸ்திரியாவின் பேரரசராகவும், ஹங்கேரியின் அரசராகவும் பொறுப்பேற்றார். இவ்விரு பகுதி களுக்கிடையே பொருளாதார நிலையில் மிகுந்த வேறுபாடுகள் காணப்பட்டன; அரசியல் துறையில் பல கருத்து வேறுபாடுகள் தோன்றின.

ஆஸ்திரியப் பகுதிகளில் தொழிற் புரட்சி மிக வேகமாகப் பரவியது. குறிப்பாக அந்நாட்டின் தலைநகரான வியன்னாவிலும், வியன்னாவைச் சுற்றிலும் உள்ள பகுதிகளிலும், பொஹிமியா விலும் (Bohemia) தொழிற்சாலைகள் மிக வேகமாக ஏற்பட்டன. இதன் காரணமாக உற்பத்தி, வாணிபம், வங்கிகள் ஆகிய வைகள் வளர்ச்சியடைந்தன. தொழிற்சாலையில் பணிபுரியும் பணியாளர்களும், அலுவலர்களும் நகர நாகரிகத்தில் அதிக முக்கியத்துவம் பெற்றனர். இவர்கள் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருந்த மக்கள் அரசியலில் அதிக முக்கியத் துவம் பெறுவதை விரும்பாமல் தாங்கள் அதிக செல் வாக்குப் பெற விரும்பினார்கள். ஆஸ்திரியா இவ்வாறிருக்க, ஹங்கேரியப் பகுதி மக்களில் பெரும்பாலோர் பழைய முறைகளைக் கையாண்டு வேளாண்மையில் ஈடுபட்டிருந்தனர். எனவே இப்பகுதியில் தொழிற்சாலைகளின் வளர்ச்சி அவ் வளவாக ஏற்படாததுடன் வலிமை வாய்ந்த நடுத்தர வகுப் பினரோ அல்லது தொழிலார்வமிக்க தொழிலாளிகளோ அதிகம் தோன்றவில்லை. பெரும்பாலான மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்க்கை நடத்தினார்கள். இதனால் இப்பகுதியில் நிலச் சுவான்தார்களின் ஆட்சிமுறை தோன்றியது.

ஹாப்ஸ்பர்க் பேரரசின் இவ்விரு பகுதிகளிலும் இயற்கை யாகவே பொருளாதார வேறுபாடுகள் காணப்பட்டன. இவ்வேறுபாட்டின் காரணமாக இவ்விரு பகுதிகளின் மக்க ளிடையே கருத்து வேறுபாடுகள் தோன்ற ஆரம்பித்தன. எனவே அரசாங்கச் செலவுகளை இவ்விரு பகுதியினரும் விகிதாச்சார முறையில் பங்கிட்டுக் கொள்ள வேண்டும் என் பதில் இவ்விரு பகுதியினருக்கு மிடையே அடிக்கடி தகராறுகள் ஏற்பட்டன. மேலும் 1868-ல் பின்பற்றப்பட்ட இராணுவ சீர் திருத்தச் சட்டங்களால் பொதுவான பல விதிமுறைகள் பின்

பற்றப்பட்டன. அன்றியும் ஒவ்வொரு பகுதிக்கும் தேவையான இராணுவ பலத்தின் அளவு நிர்ணயம் செய்யப்பட்டது. இச் சட்டங்களைக் கூட்டாகச் செயல்படுத்துவதற்கு ஆஸ்திரியா, ஹங்கேரி ஆகிய இரு பகுதிகளும் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டியிருந்தன. எனவே தேவைகளுக்கு ஏற்ப அவரவர் களின் பகுதிகளில் இராணுவத்தினரின் எண்ணிக்கையை அதிகப் படுத்துவதிலும், இரு பகுதிகளுக்கும் பொதுவான இராணுவத்தை நிர்வகிப்பதிலும் இவ்விரு பகுதிகளிடையே ஏற்பட்ட தகராறுகள் மேலும் வலுவடைந்தன.

ஆனல் ஆஸ்திரியா, ஹங்கேரி ஆகிய இரு பகுதியினரிடை யேயும் ஏற்பட்ட தகராறுகள் யாவும் முறையே பேரரசராகவும், அரசராகவும் இயங்கி வந்த இரட்டை முடியாட்சியின் அரசரால் எளிதாக நிறுத்தி வைக்கப்பட்டன. உலகின் கண்களுக்கு இவ்விரு பகுதிகளும் வெவ்வேருகக் காட்சியளித்தன. பொருள் உற்பத்தியிலும், பெருமையிலும் தனித்தனித் தன்மைகளைப் பெற்றன. ஆனல் இவ்விரு பகுதிகளும் ஒருங்கிணைந்து பொருளா தாரத்துறையில் செயல்பட்டதால் கிழக்கு மத்திய ஐரோப்பாவில் பெரும் பகுதியைக் கைப்பற்றிக் கொண்டு, உள் நாட்டுச் சுங்க வரியினின்றும் விலக்குப் பெற்றன. இதனல் ஆஸ்திரியாவின் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் ஹங்கேரியிலும், ஹங்கேரியில் உற்பத்தி செய்யப்பட்ட விவசாயப் பொருள்கள் ஆஸ்திரியாவிலும் தங்கு தடையின்றி விற்கப்பட்டன. ஆனல் இவ்விரு பகுதிகளும் ஒரு குறிப்பிட்ட அளவு வரியைச் செலுத்த வேண்டியிருந்தது. மேலும் ஆஸ்திரியா, ஹங்கேரி ஆகிய இரு பகுதிகளும் சேர்ந்து இராணுவத்தை நிர்வகித்ததால் ஹாப்ஸ்பர்க் மிக வலிமை வாய்ந்த அரசாக விளங்கியது. (மேலும் உள்நாட்டில் கிளர்ச்சி களை அடக்க அல்லது இரஷ்யாவின் ஆக்கிரமிப்பை முறியடிக்க ஆஸ்திரியா அல்லது ஹங்கேரி இரு மடங்கு வலிமையை உபயோகப்படுத்த வேண்டியிருந்தது. இதனலும் ஹாப்ஸ்பர்க் மிக வலிமை வாய்ந்த அரசாக விளங்கியது.) துருக்கிப் பகுதிகளிலும், பால்கன் பகுதிகளிலும், சிறுபான்மையினரான ஸ்லாவ் இனத்தைச் சார்ந்த மக்கள் வாழும் தங்கள் பகுதியிலும், இரஷ்யா ஆதிக்கம் செலுத்து வதைக் கண்டு ஆஸ்திரியர்களும், ஹங்கேரியர்களும் அச்சம் கொண்டு இரஷ்யாவின் ஆதிக்கத்தைத் தடை செய்ய விரும் பினர்கள். எனவே இவ்விரு பகுதியினரும் வலிமை மிக்க இராணுவத்தை ஏற்படுத்துவதற்கும், ஏட்ரியாடிக் கடல் பகுதியில் ஒரு வலிமைமிக்க கடற்படையை ஏற்படுத்து

வதற்கும் ஜெர்மானியப் பேரரசு, இத்தாலி, ருமேனியா ஆகிய நாடுகளுடன் இரஷ்யாவிற்கு எதிராகத் தற்காப்பு உடன்படிக்கைகளைச் செய்து கொள்வதற்கும், செர்பியாவின் பகுதியான யூகோஸ்லாவ் பேரரசைக் கொண்டு தன்னுடைய எல்லைகளை விரிவுபடுத்துவதைத் தடுத்து நிறுத்துவதற்கும் ஒத்துழைத்தனர். பின்னர் இவ்விரு நாட்டினரும் ஒத்துழைத்து, பிரிட்டனுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டு, 1878-ல் இரஷ்யா துருக்கியைத் தோற்கடித்து வெற்றி பெற்றதனால் ஏற்பட்ட பெருமையைக் குறைத்தனர். அதே சமயத்தில் ஐரோப்பிய வல்லரசுகளைத் திருப்திப்படுத்தி, பாஸ்னியாவின் பகுதியான யூகோஸ்லாவ், ஹெர்செகோவினு (Herzegovina), நோவிபஸார் (Novibazar) ஆகிய மூன்று உதுமானியப் பேரரசின் பகுதிகளையும் தங்கள் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தனர். பின்னர் உதுமானியப் பேரரசில் ஏற்பட்ட உள்நாட்டுப் புரட்சியையும், இரஷ்யாவில் ஏற்பட்ட குழப்ப நிலையையும் (1905ஆம் ஆண்டில் ஏற்பட்ட இரஷ்ய-ஜப்பானியப் போரில் மிகப் பெரிய நாடான இரஷ்யா, மிகச் சிறிய நாடான ஜப்பானிடம் தோற்றுவிட்டதால் ஏற்பட்ட குழப்ப நிலையை) பயன்படுத்திக்கொண்டு ஆஸ்திரியா-ஹங்கேரி ஆகியவை பாஸ்னியா, ஹெர்செகோவினு ஆகிய பகுதிகளைத் தங்கள் நாட்டுடன் சேர்த்துக்கொண்டன. ஆனால் நோவிபஸார் என்ற பகுதியைத் துருக்கிய அரசுக்குத் திருப்பிக் கொடுத்து விட்டன. மக்கள் தொகை நிறைந்த யூகோஸ்லாவ் மாநிலங்களான பாஸ்னியா, ஹெர்செகோவினு ஆகிய இரு பகுதிகளையும் பலாத்கார முறையில் வெளிப்படையாகத் தங்கள் பகுதியுடன் சேர்த்துக்கொண்ட செயல் ஆஸ்திரியா—ஹங்கேரி ஆகிய நாடுகளின் பெருமையை மீண்டும் நிலைநாட்டின. ஆனால் இந்நிகழ்ச்சி, பின்னர் இவ்விரு நாடுகளையும் முதல் உலகப் போரில் ஈடுபடும்படிச் செய்து விட்டது.

ஆஸ்திரியா : இதற்கிடையில் ஆஸ்திரியப் பேரரசின் உள்நாட்டு அரசியலில் பல குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. இந்நாட்டில் பழைய நிலச்சுவான்தார்களுடன், வியாபாரிகளும், தொழிலாளிகளும் அரசியலில் பங்குபெற வேண்டுமென விரும்பினர்கள். தொழில், மூலதனம் ஆகியவை உடைய செல்வந்தர்களுக்கும், நிலமுடைய அலுவலர்களுக்கும் 1867-ல் வாக்குரிமை வழங்கப்பட்டது. பெரும்பாலான ஆஸ்திரிய மக்களால் ஆதரிக்கப்பட்ட மிதவாதக் கட்சி (Liberal Party) 1870ஆம் ஆண்டிற்கும், 1879ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் ஆஸ்திரியச் சட்டங்களை இயற்றுவதில்

அதிக செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை. இருப்பினும் இந்த மிதவாதக் கட்சி பெரிய வியாபாரிகள், பெரும் மூலதனக் காரர்கள் ஆகியோரின் கொள்கைகளை ஆதரித்தது. கிறிஸ்துவப் பள்ளிகளுக்கு நிகரான பல பொதுப் பள்ளிகளை நிறுவியது. திருச்சபையின் ஆதிக்கத்தைக் குறைப்பதற்காக இக் கட்சி யினர் பாடுபட்டனர். இத்துடன் மக்களிடையே விழிப்புணர் வைத் தோற்றுவிப்பதற்காகவும், பாதிரிமார்களுக்கு எதிராகப் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காகவும் இவர்கள் பாடுபட்டனர். இவர்களின் கருத்துக்களைச் செயல்படுத்துவதற் காகப் பல ஜெர்மானியர்களையும், யூதர்களையும் தாங்கள் நிறுவிய பொதுப் பள்ளிகளில் ஆசிரியர்களாக நியமித்தனர். எல்லா வற்றிற்கும் மேலாக ஆஸ்திரிய மக்களின் வாழ்க்கை முறையை ஜெர்மானிய முறையில் மாற்றியமைப்பதற்குப் பாடுபட்டனர்.

செல்வந்தர் நிறைந்த மிதவாதக் கட்சி, 1880ஆம் ஆண்டிற்குப் பின்னர், கிறிஸ்தவ சமூகக் கட்சி (Christian Social Party) யின் வளர்ச்சியின் காரணமாக மக்களிடையே செல்வாக்கை இழந்தது. இப் புதிய கிறிஸ்தவக் கட்சியில் கத்தோலிக்கர்கள் நிறைந்திருந்தார்கள். கார்ல் லூகர் (Karl Luegar) என்ற வெனிஸ் நகரத்து வழக்கறிஞர் ஒருவர் இக் கட்சியினைத் தோற்றுவித்தார். தாழ்ந்த குடியில் பிறந்த இவர் யூதர்களின் முதலாளித்துவக் கொள்கையைப் பொறுத்துக் கொள்ளச் சிறிதும் மனமின்றி எதிர்த்து வந்தார். அதே சமயத்தில் அரசியலில் ஜனநாயகத் திற்காகவும், சமுதாயநலச் சட்டங்களுக்காகவும், ஆஸ்திரிய தேசியவாதிகள் நியாயமான முறையில் நடத்தப்பட வேண்டும் என்பதற்காகவும் பாடுபட்டார். இதனால் நகரங்களில் வாழ்ந்த மத்திய வகுப்பினரும், கிராமப் புறங்களில் வாழ்ந்த தொழிலா ளர்களும் இவருக்கு அதிக ஆதரவு கொடுத்தனர். கத்தோலிக் கர்களின் நலனுக்காகப் பாடுபட்ட இவர் போலந்து, செக்கோஸ்லாவாகியா ஆகிய நாடுகளின் கத்தோலிக்கர் களுடனும் நட்புறவு கொண்டிருந்தார்.

கார்ல் லூகரின் முயற்சிகளால் தொழிலாளர் நலச் சட்டங்கள் பல ஆஸ்திரியாவில் இயற்றப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டன. இச்சட்டங்களின்படி 1884—1885 ஆகிய ஆண்டுகளில் தொழிற்சாலைகளும், சுரங்க வேலைகளும் ஒழுங்கு படுத்தப்பட்டன. ஞாயிற்றுக் கிழமைகளில் (விடுமுறை நாட் களில்) தொழிலாளர்களிடம் வேலை வாங்குவது தவிர்க்கப் பட்டது. இதனைத்தொடர்ந்து தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக 1887, 1888 ஆகிய ஆண்டுகளில் தொழிலா

ளர்களின் சங்கங்களை அரசாங்கம் முறைப்படி அங்கீகரித்த துடன், அவற்றிற்குப் பாதுகாப்பும் அளித்தது. ஜெர்மனியைப் பின்பற்றித் தொழிலதிபர்கள் தங்கள் தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு விபத்து, நோய் போன்றவற்றி லிருந்து பாதுகாப்பு அளிப்பதற்காக ஆயுள் பாதுகாப்பு முறையைப் பின்பற்ற வேண்டுமென அரசாங்கம் கட்டாயப் படுத்தியது. தனது முயற்சியால் தொழிலாளர்களுக்குப் பல நன்மைகளை ஏற்படுத்திக் கொடுத்த கார்ல் லூகர் மக்களின் ஆதரவினால் ஏறத்தாழப் பத்தாண்டுகள் வரை ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னா நகரத்தின் மேயராகப் பணியாற்றினார். இவர் மேயராகப் பணியாற்றிய காலத்தில் தனது செல்வாக் கையும், அதிகாரத்தையும் பயன்படுத்தி, நகர நிர்வாகத்தில் பொதுமக்களுக்குத் தக்க பொறுப்புக்களை வழங்கி, மக்களாட் சியை ஆஸ்திரியாவில் ஏற்படுத்துவதற்கு வழி கோலினார்.

மற்ற ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட பல மாற்றங்களின் காரணமாக ஆஸ்திரேலிய மக்களிடையேயும் ஜனநாயகக் கருத்துக்கள் வேரூன்றத் தொடங்கின. இதனால் ஒரு சிலருக்கு மட்டுமே வாக்குரிமைகளைக் கொடுத்து வந்த ஆஸ்திரியா, சிறிது சிறிதாக மாற்றம் அடைந்து ஜனநாயக நாடாக மாறியது. ஆஸ்திரியப் பாராளுமன்ற அங்கத்தினர்களின் எண்ணிக்கையை 1896ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒரு சட்டம் மும்மடங்காக அதிகரித்தது. இதனை அடுத்து ஆஸ்திரியாவில் வயது வந்த ஆண்கள் யாவருக்கும் வாக்குரிமையை 1907-ல் வழங்கி, எல்லா வாக்காளர்களும் தங்கள் வாக்குரிமைகளைப் பதிவு செய்ய வேண்டுமெனக் கட்டாயப்படுத்தியது. இந்நிலையில் கார்ல் லூகர் தோற்றுவித்த கிறிஸ்துவ சமூகக் கட்சி, நகரங்களில் வாழ்ந்த தொழிலாளர்களிடையேயும், இளைஞர்களிடையேயும் அதிக மாற்றங்கள் ஏற்படுத்திய மார்க்சியக் கருத்துகளின் காரண மாகச் சிறிது சிறிதாகத் தனது செல்வாக்கை இழந்தது. ஆனால் கிறிஸ்துவ சமூகக் கட்சிக்கும், செல்வந்தர் நிறைந்த மிதவாதக் கட்சிக்குமிடையே எந்தவித மோதல்களும் ஏற்படவில்லை. மார்க்ஸின் சோஷியலிஸக் கருத்துகள் மக்களிடையே பரவிய தன் காரணமாக சமூக ஜனநாயகக் கட்சி என்ற ஒரு புதிய கட்சி ஆஸ்திரியாவில் அதிக செல்வாக்குப் பெறத் துவங்கியது. 1907ஆம் ஆண்டு ஆஸ்திரியாவில் நடைபெற்ற பொதுத் தேர்தல் முழுவதும் முதல் முறையாக ஜனநாயக முறையில் நடைபெற்றது. இத்தேர்தலில் சமூக ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதிகள் ஆஸ்திரியப் பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையில் சற்று வலிமை பெற்று வந்ததால், தேசியக் கருத்துக்கள் மக்க

ளிடையே வேரூன்ற ஆரம்பித்தன. இதனால் சோஷியலிஸ்டு களுக்கும், தேசியவாதிகளுக்குமிடையே அதிக கருத்து வேற்றுமைகளும் மோதல்களும் தோன்ற ஆரம்பித்தன.

1870ஆம் ஆண்டு முதற்கொண்டு மிதவாதக் கட்சியின் கருத்துக்களையும் கொள்கைகளையும் செயல்படுத்தி வந்த ஆஸ்திரியா, 1907ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொதுத் தேர்தலுக் குப்பின் ஜனநாயக முறைகளைச் செயல்படுத்தியது. எனவே ஆஸ்திரியப் பேரரசின் அரசுக்குப் பல்வேறு மக்களின் தேசிய கருத்துக்களை ஏற்றுக்கொண்டு அவர்கள் அனைவருக்கும் சம ஆதரவு கொடுப்பதில் பல இடையூறுகள் ஏற்பட்டன. பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றுண்டின் முதல் பத்தாண்டுகளிலும் தேசியக் கருத்துக்களை ஆஸ்திரியாவில் வாழ்ந்து வந்த ஜெர்மானியர்களல்லாத மக்க ளிடையே அரசியல் தலைவர்களும், இளைஞர்களும் மிகத் தீவிர முறையில் விளம்பரப்படுத்தி வந்தார்கள். இரஷ்யா, செர்பியா, ருமேனியா, இத்தாலி ஆகிய நாடுகளில் வாழ்ந்த ஆஸ்திரிய மக்களின் இனத்தைச் சேர்ந்த பேராசை பிடித்த பேச்சாளர் களும் ஆஸ்திரிய மக்களிடையே தேசியக் கருத்துகளைப் புகுத்தி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வந்தனர்.

ஆஸ்திரியாவில் வாழ்ந்து வந்த பல இனத்தவரைக்காட்டி லும், பிரஷ்யா, ஆஸ்திரியா, ரஷ்யா ஆகியநாடுகள் போலந்தைப் பங்கு போட்டுக் கொண்டதன் விளைவாக, ஆஸ்திரியப் பங்கில் வாழ்ந்து வந்த போலந்து மக்கள் மிக அமைதியாக பேரரசுக்குத் தொல்லை எதுவும் கொடுக்காமலிருந்தனர். போலந்து சுதந்திர நிலையில் இல்லாதிருந்தும், இரஷ்யா, பிரஷ்யா ஆகிய நாடுகளுடன் சேர்க்கப்பட்ட போலந்துப் பகுதிகளில் வாழ்ந்த போலந்துக்காரர்களைக் காட்டிலும், தாங்கள் நல்ல முறையில் ஆஸ்திரிய அரசாங்கத்தால் நடத்தப்பட்டதால் இவர்கள் ஆஸ்திரிய அரசியல் அமைதியாக இருந்தார்கள்.

இந்நிலையில் ருமேனிய தேசியவாதிகள் புகோவினு (Bukovina) என்ற ஆஸ்திரிய மாநிலத்தைச் சுதந்திர ருமேனியா வுடன் சேர்த்துக் கொள்வதற்காகப் பாடுபட்டனர். ஸ்லாவ் (Slove) இனத்தைச்சேர்ந்த தேசியவாதிகள் க்ரோட்ஸ் (Croats), செர்பியர்கள் (Serbs) ஆகிய இரு மக்களையும் ஒருங்கிணைத்து வளர்ச்சியடைந்து வந்த யூகோஸ்லாவியப் பேரரசுடன் (Yugoslav Empire) இணைப்பதற்கு முயன்று வந்தனர். இத்தாலிய தேசியவாதிகள் இத்தாலிய மொழி பேசப் பட்டு வந்த ஆஸ்திரிய மாவட்டங்களான டிரெண்ட்

(Trent), டிரைய்ஸ்டி (Trieste), இஸ்திரியா (Istria) ஆகிய பகுதிகளைத் தங்கள் நாட்டுடன் சேர்த்து இத்தாலியின் ஐக்கியத்தைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று கருதினர்கள். செக்கோஸ்லாவாக்கியாவின் தேசியவாதிகள், ஆஸ்திரிய அரசாங்கம் முன்னர் விடுதலை அடைந்த பொஹிமியா (Bohemia)வின் அரசுக்குச் சுயஆட்சி உரிமை வழங்காததாலும், ஹங்கேரி அரசு ஆஸ்திரியப் பேரரசு ஆகியவற்றுக்குச் சமமாக பொஹிமியாவை நடத்தத் தவறியதாலும், ஆஸ்திரிய தேசிய வாதிகளுக்கு எதிராக இருந்த மற்ற தேசியவாதிகள் அனைவரையும் ஒன்று திரட்டி ஆஸ்திரிய தேசியவாதிகளுக்கும், அரசுக்கும் எதிராகப் பல தொல்லைகளைக் கொடுத்து வந்தனர். சில சமயங்களில் ஆஸ்திரியஅரசுக்கு எதிராக வெளி நாடுகளில் இருந்த பகைவர்களுடன் இவர்கள் நட்புறவு கொண்டு, குறிப்பாக இரஷ்யாவுடன் நட்புறவு கொண்டு, ஆஸ்திரிய அரசுக்குத் தங்களால் இயன்ற அளவு தொல்லைகளைக் கொடுத்து வந்தனர்.

தேசிய வெறிபிடித்த சிறுபான்மையினர் மட்டுமே தொடக்கத்தில் ஒன்றுகக் கூடி ஆஸ்திரியப் பேரரசுக்கு எதிராகச் செயல் பட்டு வந்தனர். இவர்களில் பெரும்பான்மையான மக்கள் தங்கள் இனத்தின் அல்லது மதத்தின் பண்பாடுகளையும், பழக்க வழக்கங்களையும் முழு உரிமையுடன் பின்பற்றுவதற்கும், பேரரசுக்குள் அரசியல் சுய ஆட்சி உரிமையுடன் வாழ்வதற்கும் ஆஸ்திரிய அரசு அனுமதிக்க வேண்டுமெனக் கோரினர். இவர்கள் இக் கோரிக்கைகளை எழுப்புவதற்கு முன்னதாகவே ஆஸ்திரிய அரசாங்கம் தன்கீழ் உள்ள மக்களின் நலனையும், தேசிய பண்பாட்டையும் கருதி பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதி இருபது ஆண்டுகளில் ஆஸ்திரிய அரசில் வாழும் மக்களனைவரும் தத்தம் தாய்மொழியைச் சுதந்திரமாகப் பயன் படுத்தும் உரிமையை வழங்கியது. அத்துடன் பிராக் (Prague) பல்கலைக்கழகத்தை மக்களின் வசதிக்காக ஜெர்மன் பல்கலைக் கழகம் என்றும், செக் (Czech) பல்கலைக்கழகம் என்றும் இரண்டாகப் பிரித்தது. கிராகவ் (Cracow), பிராக் (Prague), டிரைஸ்டி (Trieste) ஆகிய பகுதிகளின் ஸ்தல ஆட்சியை அப் பகுதிகளில் வாழும் மக்களான போலந்துக்காரர்கள், செக் கோஸ்லாவியர்கள், இத்தாலியர்கள் ஆகிய மக்கள் மேற் கொள்ள அரசாங்கம் அனுமதி வழங்கியது. அதனல் பேரரசுக் குள்ளேயே தேசியக் கொள்கை அடிப்படையில் அரசியல் சுய உரிமைகளை அரசு அளிக்க வேண்டுமென்ற தேசியவாதி களின் பிடிவாதத் தன்மைகளை ஆஸ்திரிய அரசாங்கம் ஒட்டு

மொத்தமாக மறுத்துவிட்டது. செல்வாக்குப் பெற்ற பல ஜெர்மானியர்கள் பொஹிமியாவில் செக்கோஸ்லாவிய அரசாட்சிக்குக் கட்டுப்பட்டு இருந்தனர். வேறு பல ஜெர்மானி யர்கள் ஸ்லாவோனியர்களின் மாநிலமான கர்னியோலா (Carniola) என்ற பகுதியில் யூகோஸ்லாவியர்களின் ஆட்சியின் கீழ் இருந்தனர். எனவே ஆஸ்திரியப் பேரரசர் பிரான்ஸிஸ் ஜோஸப் ஆஸ்திரியாவை மேலும் பல துண்டுகளாகப் பிரிக்க வேண்டும் என்ற தேசியவாதிகளின் கருத்து நடைமுறைக்கு ஒவ்வாதது எனக் கருதினர்.

ஆஸ்திரிய அரசாங்கத்திற்கும், அதன்கீழ் இருந்த பல வேறுபட்ட இனத்தைச் சார்ந்த மக்களிடையே தோன்றிய தேசியவாதிகளுக்கு மிடையே ஏற்பட்ட தகராறுகள் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வந்தன. அரசாங்கம் ஜனநாயக முறைகளை நடைமுறைக்குக் கொண்டுவந்த பொழுதெல்லாம் அதனைப் பயன்படுத்திக் கொண்டு, தேசியவாதிகள் தங்க ளுடைய கோரிக்கைகளையும், தங்களின் உரிமைகளையும் மற்ற வர்களுக்கு எடுத்துரைத்தனர். எனவே ஆஸ்திரியாவில் பாராளு மன்றத்தில் அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்த பிரதிநிதி களுக்கும், தேசியவாதிகளுக்கு மிடையே ஏற்பட்ட கருத்து வேற்றுமைகளால் எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியவில்லை. எனவே பேரரசர் பிரான்ஸிஸ் ஜோஸப்பும், அவரது அமைச்சர்களும் சேர்ந்து கொண்டு பாராளுமன்றத்தின் அனுமதி இல்லாமலேயே தேவையான வரிகளை விதிப்பதற்கும், நிர்வாக வேலைகளைக்கவனிப்பதற்கும் தேவையான நடவடிக்கை களை மேற்கொள்ள எண்ணினர். இதனால் 1907ஆம் ஆண்டிற் குப்பின் வயதுவந்த எல்லா ஆண்களுக்கும் ஓட்டுரிமை அளித்து ஓர் அரசியல் அமைப்பின்கீழ் ஆஸ்திரியா விளங்கி னாலும், உண்மையில் ஒரு வரம்பில்லா முடியாட்சியைப் போலவே இயங்கி வந்தது. பல வேறுபட்ட இனத்தவர்களைக் கொண்டிருந்த ஆஸ்திரியாவில் ஜனநாயகக் கருத்துக்களைச் செயல்படுத்துவது கடினமாக இருந்ததுடன் அது ஜனநாயகக் கொள்கைகளுக்கு ஏற்புடையதாகவும் விளங்கவில்லை.

ஹங்கேரி : ஹங்கேரி நாட்டைப் பொறுத்த அளவில் இரட்டை முடியாட்சிக்கு ஆஸ்திரியாவில் இருந்ததைப்போல அவ்வளவு தொல்லைகள் இல்லை. இந்நாட்டின் அரசியலில் அதிக ஆதிக்கமும், அதிகாரமும் பெற்றிருந்த பெருநிலச்சுவான் தார்கள், ஹங்கேரியில் வாழ்ந்த மற்ற இனத்தவரிடையே

அரசியல் நிர்வாகப் பொறுப்புக்களைப் பகிர்ந்துகொள்வதற்குத் தயாராக இல்லை. மேலும் இவர்கள் தாங்கள் அனுபவித்து வந்த சொத்துக்களையும், பெரிய பண்ணைகளையும் (எஸ்டேட்டுகளையும்) பரிவர்த்தனை செய்யாமலும், அரசாங்கத்திற்குக் கொடுக்காமலும் அப்படியே அனுபவித்து வந்தனர். தங்களது மொழியான ஹங்கேரிய மொழியையே அரசாங்கப் பள்ளிகளிலும், நாட்டின் அரசாங்க அலுவலகங்களிலும் பின்பற்ற வேண்டுமென்று கட்டாயப்படுத்தினர். ஹங்கேரியின் வடக்கு மாநிலங்களில் வாழ்ந்த ஸ்லாவ் இனத்தைச் சார்ந்த தொழிலாளிகளையும், தென் மாநிலங்களில் வாழ்ந்த செர்பியர்களையும் (Serbs) தங்கள் பண்பாடான மாகியர் (Magyar) மயமாக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டனர். இத்துடன் ஹங்கேரியின் கிழக்குப் பகுதியில் ருமேனிய மொழியைப் பேசும் மக்கள் வாழும் மாநிலமான டிரான்சில்வேனியா (Transylvania) வில் சுய ஆட்சிக்காகக் காணப்பட்ட எல்லாச் சுவடுகளையும் அடியோடு நீக்கினர். ஹங்கேரியின் மேற்குப் பகுதியில் 1868-ல் குரோஷியா (Croatia) என்ற பகுதிக்குத் தாங்கள் வழங்கிய உரிமைகளின்மீது அதிக கட்டுப்பாடுகளை மேலும் மேலும் விதித்துக் கொண்டே இருந்தனர். புடாபெஸ்ட் (Budapest) என்ற இடத்தில் இருந்த ஹங்கேரியப் பாராளுமன்றத்தையும், அமைச்சரவையையும் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்தனர். மேலும் தொடர்ந்து பாராளுமன்றத் தேர்தலில் வாக்குகளை அளிக்கும் உரிமையை வயது வந்த எல்லா மக்களுக்கும் விரிவுபடுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அத்துடன் 1910ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தேர்தல் சட்டங்களின்படி, அதிக சொத்து உள்ளவர்களுக்கே வாக்குரிமை வழங்கப்பட்டது. உதாரணமாக 1910ஆம் ஆண்டில் 200 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்டிருந்த ஹங்கேரியில் 10 இட்சம் மக்கள் மட்டுமே வாக்குரிமை பெற்றிருந்தனர். எல்லாவற்றிற்கும் மேலாக ஹங்கேரி பாராளுமன்றத்திலிருந்த எல்லா இடங்களையும் மாகியர்களே கைப்பற்றினர். ஆஸ்திரியாவில் ஜனநாயகக் கொள்கைகளை நடைமுறைப் படுத்தியதால் பலவேறு இனத்தைச் சார்ந்தவர்கள் அந்நாட்டுப் பாராளுமன்றத்தில் வலிமை பெற்றுத் தங்கள் குறைகளையும், கோரிக்கைகளையும் அரசாங்கத்திற்கு எதிராக வெளியுலக மக்களுக்கும் வெளிப்படுத்த முடிந்தது. ஆனால் ஹங்கேரிய மக்கள் ஆஸ்திரிய மக்களைப் போல பல உரிமைகளைப் பெருததால் ஜனநாயக முறையில் ஹங்கேரியின் தலைநகரான புடாபெஸ்ட் என்ற இடத்திலிருந்த தங்கள் நாட்டுப் பாராளுமன்றத்தில் எந்த முறையிலும் அங்கம் வகிக்க முடியவில்லை. இதனால்

ஹங்கேரியில் வாழ்ந்த வேற்று இனத்தினர் தங்கள் குறைகளையும், கோரிக்கைகளையும் மற்றவர்களுக்குத் தெளிவு படுத்த முடியாத நிலையில் இருந்தனர். எனவே மாகியர்கள் செல்வாக்குப் பெற்றிருந்த ஹங்கேரிய அரசாங்கத்தில் ஏழை மாகியர்களும், பிற மக்களும் பல இன்னல்களுக் குள்ளாயினர்.

ஆனால் பொதுமக்களிடையே விரைவாகக் கல்வி அறிவைப் புகட்டுவதற்காகவும், நிலச்சுவான்தார்களின் கொடுமைகளிலிருந்து, நிலங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களைப் பாதுகாத்து, அவர்களின் குறைகளைப் போக்குவதற்காகவும் ஹங்கேரியப் பாராளுமன்றம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதனால் 1867ஆம் ஆண்டு முதல் 1914ஆம் ஆண்டு வரை ஹங்கேரியில் விவசாயம் வெகு சிறப்பாக வளர்ச்சியடைந்தது. இதனால் நிலச் சுவான்தார்களின் வருமானமும், அரசாங்கத்தின் வருமானமும் கணிசமான அளவு பெருகியது.

இந்நாட்டில் மாகியர்களின் செயல்களால் 1896ஆம் ஆண்டிலிருந்து 14 ஆண்டுகளில் சுமார் 10 இலட்சம் ஹங்கேரியர்கள் வெளி நாடுகளுக்குக் குடிபெயர்ந்து சென்றனர். தேர்தல் சீர்திருத்தங்கள் வேண்டி நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளில் ஏற்பட்ட ஒரு போராட்டம் ஹங்கேரியில் உள்நாட்டுப் போர் ஒன்று உருவாகும் சூழ்நிலையைத் தோற்றுவித்தது.

பேரரசர் பிரான்சிஸ் ஜோஸப் (1848 – 1916)

ஆஸ்திரியப் பேரரசராக பிரான்சிஸ் ஜோஸப் 1848-ல் பதவி ஏற்றார். பின்னர் ஹங்கேரியின் மன்னராக 1857-ல் பொறுப்பேற்றார். பல வகையிலும் வேறுபட்ட கருத்துக்களையும் பழக்க வழக்கங்களையும், அரசியல் முறைகளையும் கொண்டிருந்த ஆஸ்திரியா, ஹங்கேரி ஆகிய இவ்விரு பகுதிகளில் வாழ்ந்த மக்கள் இரட்டை முடியாட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த தங்கள் மன்னரான பிரான்சிஸ் ஜோஸப்புக்கு அதிக மதிப்பும், மரியாதையும் கொடுத்து வந்ததுடன் அவரைத் தங்களின் வணக்கத்திற்குரியவராகவும் கருதினார்கள். இவர் பேரரசராகவும் மன்னராகவும், 1848ஆம் ஆண்டு முதற்கொண்டு ஏறத்தாழ 68 ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பில் இருந்ததால், இவருடைய காலத்தில் ஐரோப்பாவில் பல வரலாற்று முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. உதாரணமாக இவருடைய காலத்தில் 1849, 1859, 1866 ஆகிய ஆண்டுகளில் பல முக்கிய போர்கள் ஏற்பட்டன.

பிரஷ்யாவிற்கும், ஆஸ்திரியாவிற்கும் 1866ஆம் ஆண்டு நடை பெற்ற போரில் ஆஸ்திரியா தோற்றதால், ஹாப்ஸ்பர்க் பேரரசு, ஆஸ்திரியா, ஹங்கேரி என இருபகுதிகளாகப் பிரிந்தது. ஹாப்ஸ்பர்க் பேரரசில் பொருளாதார, அரசியல் மாற்றங்கள் பல ஏற்பட்டன. ஆஸ்திரிய முதல்வராக விளங்கிய மெட்டர்னிக் (Metternick) கையும், முதல் உலகப் போரையும் தன்னுடைய ஆயுட் காலத்தில் இணைக்கின்ற ஒரு மனிதராக இவர் விளங்கினார். பிரஞ்சு நாட்டில் மூன்றும் நெப்போலியனது எழுச்சியும், வீழ்ச்சியும் இவர் காலத்திலேயே ஏற்பட்டன. பிரிட்டனில் டிஸ்ரேலி (Disraeli),கிளாட்ஸ்டன் (Gladstone) போன்ற பிரதம அமைச்சர்கள் இவருக்குச் சம காலத்தவர்கள். தன்னுடைய, உழைப்பால் ஜெர்மனியை ஐக்கியப்படுத்தி, 1870ஆம் ஆண்டு முதல் 1890ஆம் ஆண்டு வரை அந்நாட்டின் முதல்வராகப் பதவி வகித்து ஜெர்மனியப் பேரரசின் முடிசூடா மன்னராக விளங்கிய பிஸ்மார்க் இவரது காலத்தில் வாழ்ந்தவராவார். ஐரோப்பாவின் மற்ற நாடுகளில் அரசியல், சமுதாயம், பொருளாதாரம், ஆகிய துறைகளில் பலவிதமாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்த பொழுது, அடுத்தடுத்து நிகழ்ந்த துக்க நிகழ்ச்சிகளால் எவ்வித மாற்றத்தையும் பின்பற்றாத ஹாப்ஸ்பர்க் பேரரசர் மீது ஆஸ்திரிய ஹங்கேரிய மக்கள் அதிக இரக்கம் கொண்டனர். உதாரணமாக இவருடைய காலத்தில் இவருடைய சகோதரரும், மெக்ஸிகோ (Mexico) வின் பேரரசரும் ஆகிய மாக்ஸிமிலியன் 1867-ல் கொலை செய்யப்பட்டார். இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் 1889ஆம் ஆண்டில் இவருடைய ஒரே மகனை ருடால்ஃப் (Rudolf) தற்கொலை செய்து கொண்டார். பின்னர் 1897ஆம் ஆண்டு இவருடைய மனைவி அதிருப்தியாளன் ஒருவனால் கொலை செய்யப்பட்டாள். மனைவியை இழந்த துயர் மறைவதற்குள் 1914ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28-ஆம் தேதி இவருடைய சகோதரருடைய மகனும், பட்டத்து இளவரசருமான ஆர்ச்டியூக் பிரான்ஸிஸ் பெர்டினண்டும் (Archduke Francis Ferdinand), அவரது மனைவியும் பாஸ்னியாவின் தலைநகரான சராஜீவோ (Sarajevo) என்ற இடத்தில் செர்பிய தேசியவாதி ஒருவனால் படுகொலை செய்யப்பட்டனர். இத்துக்க நிகழ்ச்சிகளுக்கெல்லாம் மேலாகப் பேரரசர் பிரான்ஸிஸ் ஜோஸப்பின் 85-வது வயதில் முதல் உலகப்போர் தொடங்கியது. முதல் உலகப் போர் முடிவதற்கு முன்னர் பேரரசர் பிரான்ஸிஸ் ஜோஸப் இவ்வுலக வாழ்வை நீத்தார். இவருக்குப் பின் முதலாம் சார்லஸ் என்பவர் ஆஸ்திரியாவின் பேரரசராகவும், ஹங்கேரியின் அரசராகவும் 1916ஆம் ஆண்டு பதவி ஏற்றார்.

10. இரஷ்யப் பேரரசு

பிரிட்டிஷ் பேரரசின் நாடுகளைப்போலல்லாமல், ஐரோப்பா ஆசியா ஆகிய இரு கண்டங்களிலும் தொடர்ச்சியாகப் பரந்து காணப்படும் நாடு இரஷ்யா. நெடுங்காலமாகவே இரஷ்யப் பேரரசு ஆக்கிரமிப்புக் கொள்கைகளைப் பின்பற்றி, தன்னுடைய நாட்டின் எல்லைகளை விரிவு படுத்தி வந்தது. அதன் பயனாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய நிலப்பரப்பு உடைய நாடாக அது விளங்கியது. இப்பேரரசு உலகிலேயே 19ஆம் நூற்றாண்டில் மிகப்பெரிய பேரரசாக விளங்கிய பிரிட்டிஷ் பேரரசுக்கு அடுத்தபடியாக விளங்கியது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இந்நாடு உலக நிலப்பரப்பில் ஆறில் ஒரு பங்கு நிலப்பரப்பையும், உலக மக்கள் தொகையில் 1/12 பங்கு மக்கள் தொகையையும் கொண்டிருந்த ஒரு பெரிய நாடாக விளங்கியது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேற்கு ஐரோப்பா, மத்திய ஐரோப்பா ஆகிய பகுதிகளில் தொழில் வளர்ச்சி, விடுதலைக் கொள்கைகள், அரசியல் அமைப்பை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கங்கள் ஆகியவை மிக விரைவாக வளர்ச்சியடைந்து வந்த பொழுது, இரஷ்யா எவ்வித மாற்றமும் அடையாமல், பழைய முறையில் தெய்வீக அரசு உரிமைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, ஸார் (Tsar) மன்னர்கள் மக்களின் தேவைகளை உணராமல் எதேச்சாதிகார முறையில் ஆட்சி புரிந்து வந்தனர். பின்னர் 1855 முதல் 1881 வரை ஆட்சி புரிந்த இரண்டாம் அலெக்ஸாந்தர் என்ற மன்னர் 1860ஆம் ஆண்டிற்குப் பின்னர் தன்னுடைய நாட்டில் ஐரோப்பிய நாகரிகத்தைப் புகுத்துவதற்குச் சில ஆண்டுகள் பாடுபட்டார். இச்சமயத்தில் தன்னுட்டில் உள்ள செர்பிய (Serb) இனத்தைச் சார்ந்தவர்களுக்குச் சில உரிமைகளை வழங்குதல், தேர்ந்தெடுக்கப்பட்ட செம்ஸ்டோவ்ஸ் (Zemstovs) என்ற சபைக்கு ஸ்தல ஆட்சியில் சில நிர்வாக உரிமைகளை வழங்குதல், இரஷ்யப் பேரரசின் நீதித்துறையில் நவீன முறையைப் புகுத்துதல் போன்ற சில சீர்திருத்தக் கருத்துக்களைச் செயல் படுத்தினுர். ஆனுல் ஒரு சில ஆண்டுகளில் தன்னுடைய சீர்திருத்தக் கருத்துக்களைச் செயல்படுத்துவதை நிறுத்திக் கொண்டு, மீண்டும் பழைய எதேச்சாதிகார முறையை மேற்கொண்டு இரஷ்யாவின் எல்லைகளை விரிவு படுத்தத் தொடங்கினுர். தன் நாட்டில்

வாழ்ந்துவந்த மற்ற இனத்தவர்களின் உரிமைகளைக் கட்டுப் படுத்தினர். பின்னர் பிரான்சுக்கும், பிரஷ்யாவுக்குமிடையே 1871-ல் ஏற்பட்ட போரில் பிரான்சு பிரஷ்யாவிடம் தோல்வி யடைந்ததையும், பிரஷ்யாவின் ஐக்கியத்திற்கு பிஸ்மார்க் மேற்கொண்ட முயற்சிகளையும் தனக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டு கிரிமியப்போரில் (Crimean war) இரஷ்யா வின்மீது திணிக்கப்பட்ட சில கட்டுப்பாடுகளிலிருந்து தன்னுட்டை விடுவித்துக் கொள்வதற்காக முயற்சி செய்தார். இத்துடன் கருங்கடல் (Black Sea) பகுதியில் தன்னுடைய கப்பற் படையை மீண்டும் நிறுவுவதற்கும், உதுமானியப் பேரரசின் மீது மேலுமொரு தாக்குதலை நடத்துவதற்குமான சில முயற்சி களையும் மேற்கொண்டார்.

இரஷ்ய-துருக்கிப் போர் (1877—1888)

இரண்டாம் அலெக்ஸாந்தரான இரஷ்யாவின் ஸார் மன்னருக்குத் துருக்கியின்மீது போர் தொடுப்பதற்கான காரணங்களைக் கூற எவ்விதத் தொல்லையும் ஏற்படவில்லை. செர்பியர்கள் அதிகமாக வாழ்ந்த பாஸ்னியா (Bosnia), ஹெர்ஸெகோவினு (Herzegovina) என்ற மாநிலங்களில் உரிமை வேண்டி அப்பகுதியினர் மேற்கொண்ட முயற்சிகளை எல்லாம் ஸார் மன்னர்கள் முறியடித்தனர். இதே போன்று பல்கேரியர்கள் வாழும் இரஷ்ய மாநிலங்களில் அம்மக்களின் உரிமைகளைக் கொடிய முறைகளைக் கையாண்டு நசுக்குவதிலும் இரஷ்ய மன்னர்கள் வெற்றி பெற்ருர்கள். இது ஐரோப்பியர்களின் கோபத்தையும், பால்கன் பகுதியில் வாழ்ந்த கிறிஸ்துவ மக்களின் கோபத்தையும் தூண்டியது. இதனைத் தொடர்ந்து துருக்கிய முகமதியர்கள் பல்கேரிய மக்களைக் கொடுமைப் படுத்தி வருவதற்கு எதிர்ப்புத்தெரிவித்தனர். ஐரோப்பியர்களின் ஆதரவை உணர்ந்த செர்பிய இனத்து இரஷ்யர்கள் மான்டீ நீக்ரோ (Monte Negro) பகுதியில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுடன் சேர்ந்து கொண்டு, பாஸ்னியா பகுதியில் வாழ்ந்து வந்த தங்கள் இனத்தவரான செர்பியர்களுக்காக, துருக்கிப் பேரரசின் மீது போர் தொடுத்தனர். இதே சமயத்தில் கான்ஸ் டாண்டிநோபிள் (Constantinople) பகுதியில் இருந்த உதுமானியப் பேரரசு ஆற்றலற்று இருந்ததுடன், அழிவுப் பாதையை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. அமைதியை நிலைநாட்டுவதும், மாநில ஆளுநர்களைக் கட்டுப்படுத்திப் பேரர சின் கட்டளைகளை நிறைவேற்றச் செய்வதும், இராணுவ வீரர் களைப் பேரரசின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கச் செய்வதும் உதுமானியப் பேரரசுக்கு இயலாத செயல்களாகி வந்தன.

பேரரசின் கருவூலமும் காலியாகிக் கொண்டிருந்தது. பேரரசின் பல பகுதிகளில் எதிர்ப்பு அரசுகள் நிறுவப்பட்டன. எனவே 1876-ல் "அரண்மனைப் புரட்சி" (Palace revolution) ஒன்று ஏற்பட்டு, இரண்டாம் அப்துல் ஹமீது (Abdul Hamed II) என்பவர் ஆட்சியைக் கைப்பற்றினர்.

இரண்டாம் அப்துல் ஹமீது ஓர் எதேச்சாதிகார மன்னனுகவும், கொடிய அரசனுகவும் விளங்கினர். ஆனல் இவர் ஐரோப்பிய நாடுகளிடம் நற்பெயர் வாங்கிக் கொள்வதற்காக 1876-ல் உரிமைகள் வழங்கக்கூடிய ஓர் அரசியலமைப்பு ஒன்றை உதுமானியப் பேரரசில் தான் மன்னனுகப் பொறுப் பேற்றவுடன் நடைமுறைக்குக் கொண்டுவந்தார். ஆனல் இரண்டாம் அப்துல்ஹமீது தான் கொண்டுவந்த இப்புதிய அரசியல் அமைப்பிற்கு எந்த ஒரு முக்கியத்துவமும் அளிக்காத துடன் அதனைப் புறக்கணிக்கவும் தொடங்கினர். எனவே இப் புதிய அரசியல் அமைப்பின் பிரிவுகள் யாவும் பெயரளவில் ஏட்டளவிலேயே இருந்தன. உள் நாட்டைப் பொறுத்த அளவில் தன்னுட்சிக்குட்பட்ட பகுதியில் அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காக எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டார். இத்துடன் தன் பகுதிகளில் வெளிநாட்டவர் தலையிடுவதைத் தடைசெய்வதற்குத் தன்னலான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். உள்நாட்டில் அமைதியை நிலைநாட்டியதின் மூலம் தன் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் இரஷ்யர்களின் தலையீட்டைத் தடை செய்தார். கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும், கருங்கடல் பகுதியிலும் தன் ஆதிக்கம் குறைவதை விரும்பாத இரஷ்ய அரசரான இரண்டாம் அலெக்ஸாந்தர், "உதுமானியப் பேரரசில் மற்ற எல்லா இனத்தைச் சார்ந்தவர்களும், தேசிய வாதிகளும் கொடிய முறையில் நசுக்கப்படுகிருர்கள்" என்று கூறி, 1877ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இரண்டாம் அப்துல் ஹமீதுக்கு எதிராகப் போர் தொடுத்தார்.

இரஷ்யப் படைகள் ருமேனியாவைச் சுற்றிக்கொண்டு, டான்யூப் (Danube) ஆற்றைக் கடந்து, 1877ஆம் ஆண்டு ஜூன் மாதம் உதுமானியப் பேரரசுக்குள் வடக்குப் புறமாக நுழைந்தன. இரஷ்யாவின் ஆதிக்கத்தைத் தன் பேரரசுக்கு உட்பட்ட பகுதியில் முறியடிக்க வேண்டுமென்று கருதிய இரண்டாம் அப்துல் ஹமீது, பல்கேரியாவில் டான்யூப் நதிக்குச் சற்றுத் தெற்கே அமைந்திருந்த பிளிவ்ன (Plevna) என்ற பகுதியில் தன்படைகளை மறைத்து வைத்திருந்தார்.

இரஷ்யப் படைகள் இப்பகுதிக்குள் நுழைந்தவுடன், அது எதிர்பாரா வண்ணம், துருக்கியப்படை மிகக் கடுமையாகத் தாக்கியது. பின்னர் அதே ஆண்டு ஜூலை மாதத்திலும், செப்டம்பர் மாதத்திலும் பிளிவ்னு பகுதியில் இருந்த துருக்கியப் போர்வீரர்கள் இரஷ்யப் படையைத் தாக்கிப் பின்னடையச் செய்தனர்.

ஆனால் முதலில் பின்னடைந்த இரஷ்யப் படை துருக்கியின் நிலையைப் புரிந்து கொண்டு விழிப்படைந்து, சற்று அதிக வலிமையுடன் முன்னேறி, அப்பகுதியில் இருந்த துருக்கிய இராணுவ அதிகாரியான உஸ்மான் பாஷா (Osman Pasha) என்பவருடைய கோட்டையை முற்றுகையிட்டது. உஸ்மான் பாஷாவின் படைவீரர்கள் சில நாட்களுக்குப்பின் கோட்டைக்கு வெளியிலிருந்து எந்தவித உணவுப் பொருள்களும் கிடைக்காமையால் பசிப்பிணியினுல் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டு ஒவ்வொருவராக மரணத்தின் வாயிலை நோக்கிப் போகத் தொடங்கினர். உஸ்மான் பாஷா இரஷ்யப் படைகளை முறியடிப்பதற்காக எடுத்துக் கொண்ட முயற்சிகள் யாவும் தோல்வியடைந்தன. எனவே வேறு வழியின்றி உஸ்மான் பாஷா நாற்பதாயிரம் (40,000) போர் வீரர்களுடன் இரஷ்யப்படையிடம் சரணடைந்தார், இதனைத் தொடர்ந்து இரஷ்யப் படையினர் மேலும் விரைவாக முன்னேறி, 1878ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மற்றொரு துருக்கிப் படையைத் தாக்கிச் சரணடையச் செய்தனர்.

இச்சமயத்தில் செர்பியப்படைகளும், மான்டீ நீக்ரோ (Montenegro) வின் படைகளும் துருக்கியப் படைகளை முறியடித்தன. பால்கன் தீபகற்பத்தின் மேற்குப் பகுதியிலிருந்து துருக்கியர்கள் வெளியேற்றப்பட்டனர். பல்கேரியர்கள் முன்னரே பல வகையில் இரஷ்யப் படைகளுக்குப் பெரும் அளவில் உதவியிருந்தாலும், இப்பொழுது பலர் இரஷ்யப்படையில் சேர்ந்து மேலும் உதவி புரிவதற்கு முன்வந்தனர். துருக்கியப் போர்வீரர்களும் முழுமூச்சுடன் போரிட்டனர். ஆனால் அவர்களின் எண்ணிக்கையும், போர்த்தளவாட வசதிகளும் மிகக் குறைவாக இருந்தன. அத்துடன் பால்கன் பகுதியிலிருந்த பல நாடுகள் துருக்கியர்களுக்கு எதிராக இரஷ்யர்களுக்கு உதவி புரிந்தன. இதனுல் இரஷ்யப் படைகள் ஏட்ரியாநோப்பிளை (Adrianople) மிக எளிதாகக் கைப்பற்றிய பின்னர் கான்ஸ்டாண்டிநோபிளை நோக்கி விரைந்தன. எனவே துருக்கிப் பேரரசரான சுல்தான் இரண்டாம் அப்துல்ஹமீது இரஷ்யா

வுடன் உடன்படிக்கை செய்து கொள்வதற்கு முன்வந்து, 1878 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் ஸான்ஸ்டிஃபானோ உடன் படிக்கையை (Treaty of San Stefano) இரண்டாம் அலெக் ஸாந்தர் என்ற இரஷ்ய ஸார் மன்னருடன் செய்து கொண்டார்.

இவ் வுடன்படிக்கையின்படி இரண்டாம் அப்துல் ஹமீது செர்பியா, மான்டீநீக்ரோ, ருமேனியா ஆகிய நாடுகளின் சுதந் திரத்தை அங்கீகரித்தார். பெயரளவில் துருக்கியப் பேரரசின் பகுதிகளாக விளங்கி, அப்பேரரசுக்கு ஆண்டுதோறும் கப்பம் செலுத்திவந்த ஈஜிக் கடல் பகுதியிலிருந்து அல்பேனியா வரை பரவியிருந்த பெரும்பாலான மாசிடோனியப் பகுதி களையும், பல்கேரியாவையும் ஒருங்கிணைத்து, பல்கேரிய தேசிய அரசு ஒன்றை ஏற்படுத்துவதற்காகவும், இப் பகுதியைச் சேர்ந்த ஓர் இளவரசர் இப் பகுதிகளில் சுய உரிமையுடன் ஆட்சி செய்வதற்கும், போஸ்னியா (Bosnia), ஹெர்செ கோவினா (Herzegovina) என்ற பகுகளில் அப்பகுதியின் மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் சீர்திருத்தங் களைக் கொண்டுவருவதற்கும் துருக்கிய சுல்தான் ஒப்புக் கொண்டார். அத்துடன் டார்டனல்ஸ் (Dardanelles), பாஸ் பரஸ் (Bosphorus) ஆகிய பகுதிகளை எல்லா நாடுகளும் எவ் விதக் கட்டுப்பாடுமின்றி வாணிபத்திற்குப் பயன்படுத்து வதற்கும் அனுமதி அளித்தார்.

துருக்கி சுல்தான் சான்ஸ்டிஃபானோ உடன்படிக்கையை ஒத்துக் கொண்டதால் பால்கன் நாடுகளும், இரஷ்யாவும் நன்மை அடைந்தன. இரஷ்யாவில் ஸார்மன்னர், பல்கேரி யர்கள், செர்பியர்கள், ருமேனியர்கள் ஆகியோர் இரஷ்யர் களுடன் நன்றியுணர்வோடு இருப்பார்கள் எனக் கருதிப் பல நிபந்தனைகளை விதித்தார். அத்துடன் ஆர்மேனியாவின் ஒரு பகுதியையும், டோப்ருஜா (Dobruja) வின் ஒரு பகுதியையும் இரஷ்யா பெற்றது. (இரஷ்யா டோப்ருஜாவைப் பெற்றதன் நோக்கம், தான் 1856-ல் இழந்த பெஸ்ஸரேபியா (Bessarabia) என்ற பகுதியை மீண்டும் ருமேனியாவிடமிருந்து பெறுவதே யாகும்.) எல்லாவற்றிற்கும் மேலாகப் பிற்காலத்தில் இரஷ்யா துருக்கியின்மீது படையெடுப்பதற்குக் காரணத்தை உண்டாக் கிக் கொள்கிற வகையில் பெருந்தொகையைப் போர் நஷ்ட ஈடாகத் துருக்கியிடமிருந்து பெற்றது.

ஆனால் சான்ஸ்டிஃபானோ உடன்படிக்கையினால் அடைந்த பெருமையை இரஷ்யாவின் பேரரசரான ஸார் இரண்டாம்

அலெக்ஸாந்தராலும், இரஷ்யாவில் வாழ்ந்த ஸ்லாவ் இனத்தைச் சார்ந்தவர்களாலும் நீண்ட நாட்கள் அனுபவிக்க இயலவில்லை. இரஷ்யா, பால்கன் நாடுகள் ஆகிய பகுதிகளில் ஸ்லாவ் இனத்தைச் சார்ந்த மக்களின் தேசியக் கருத்துக்களைத் தடை செய்யாது விட்டுவிட்டால், அது ஸ்லாவ் இனத்தைச் சார்ந்தவர்கள் வாழும் தன்னுடைய ஆட்சிப் பகுதியில் சில குழப்பங்களை ஏற்படுத்தும் என்று ஆஸ்திரியா-ஹங்கேரி ஆகிய பகுதிகளின் பேரரசரான பிரான்ஸிஸ் ஜோஸப் கருதினார். அத்துடன் தென் கிழக்கு ஐரோப்பியப் பகுதிகளில் இரஷ்யா ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினால் இத்தாலி, ஜெர்மனி ஆகிய நாடுகளிடம் தான் இழந்த பகுதிகளை ஈடு செய்துகொள்வதற்கு பால்கன் பிரதேசத்தில் சில பகுதிகளைக் கைப்பற்றிக்கொள்ள லாம் என்ற தன்னுடைய எண்ணம் ஈடேறுவதற்குத் தடையாக இருக்கும் என்றும் அவர் கருதினார். இதே போன்று பிரிட்டனில் பிரதம அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த பெஞ்சமின் டிஸ்ரேலி (Benjamin Disraeli) என்ற நாட்டுப்பற்றுமிக்க பீகன்ஸ்ஃபீல்டு பிரபு (Earl of Beaconsfield) அண்மைகிழக்கு (Near East) நாடுகளில் ஸான்ஸ்டிஃபானோ உடன்படிக்கை யால் இரஷ்யாவின் ஆதிக்கம் வளர்ச்சி அடைந்தால் அது பிரிட்டனின் தேசியக் கொள்கைகளையும், ஏகாதிபத்தியத்தை யும் வெகுவாகப் பாதிக்கும் எனக் கருதினர். எனவே இரஷ்யா வின் வலிமையால் துருக்கியுடன் ஏற்பட்ட இவ்வுடன் படிக்கையை ஆஸ்திரிய-ஹங்கேரி, பிரிட்டன் ஆகிய நாடுகள் குறைகூறியதுடன், அதனை எதிர்ப்பதற்கும் தயங்கவில்லை.

ஹாப்ஸ்பர்க் பேரரசரான பிரான்ஸிஸ் ஜோஸப் துருக்கியப் பேரரசின் எதிர்காலத்தில் அதன் சுல்தானை இரண்டாம் அப்துல் ஹமீதுக்கும், இரஷ்யாவின் ஸார் மன்னரான இரண்டாம் அலெக்ஸாந்தருக்கும் மட்டுமின்றி, பிரிட்டன், பிரான்சு, இத்தாலி, ஜெர்மனி ஆகிய ஐரோப்பிய நாடுகளுக்கும் பங்கு உண்டு என 1856-ல் பாரிஸில் கூட்டப்பட்ட ஐரோப்பிய நாடுகளின் மாநாட்டில் முடிவு எடுக்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டி, தற்பொழுது இரஷ்யா, துருக்கி ஆகிய இவ்விரு நாடுகளுக்கிடையே ஏற்பட்ட ஸான்ஸ்டிஃபானோ உடன் படிக்கையை ஐரோப்பிய நாடுகள் ஒன்றுகூடி மாற்றியமைக்க வேண்டுமெனக் கோரினார். பிரான்ஸிஸ் ஜோஸப்பின் இக் கோரிக்கைக்கு பிரிட்டிஷ் பிரதம அமைச்சராக இருந்த பெஞ்சமின் டிஸ்ரேலி முழு ஆதரவு அளித்தார். ஆனால் பிரஷ்யாவின் முதலமைச்சரான பிஸ்மார்க், சான்ஸ்டிஃபானோ உடன்படிக்கையினால் ஏற்பட்ட சச்சரவுகளில் தான் ஈடுபட

விரும்பவில்லை என்பதை பிரான்ஸிஸ் ஜோஸப்பிற்கும், இரண்டாம் அலெக்ஸாந்தருக்கும் தெளிவுபடுத்தியதோடு, பெர்லினில் ஒரு மாநாட்டைக் கூட்டி அதில் ஆஸ்திரியா, இரஷ்யா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையேஉள்ள தகராறைத் தீர்த்து வைக்கத் தான் தயாராக இருப்பதாகவும் கூறினர். பிஸ்மார்க்கின் தலைமையில் பெர்லினில் ஐரோப்பிய நாடுகளின் மாநாடு கூட்டப்பட்டால் அது துருக்கியிடமிருந்து இரஷ்யா பெற்ற பலன்களையும், இரஷ்யாவின் பெருமையையும் பாதிக்கும் என்பதையும், பெர்லினில் கூட்டப்படும் மாநாட்டில் தான் கலந்து கொள்ளாவிடில் பிரிட்டன் தன்னுடன் போர்தொடுக்கும் என்பதையும், தான் பிரிட்டனுடன் போரில் ஈடுபடாவிட்டாலும் பிரிட்டிஷ் கப்பற்படையின் போர்க் கப்பல்கள் துருக்கியக் கடற் பகுதிகளில் நடமாடுவதன் மூலம் தன்னை பிரிட்டன் போரில் ஈடுபடுத்தும் என்பதையும் நன்கறிந்த இரண்டாம் அலெக்ஸாந்தர் ஏமாற்றம் அடைந்ததுடன், கோபமும் அடைந்தார்.

பிஸ்மார்க்கின் முயற்சியால் பெர்லின் மாநாடு 1878ஆம் ஆண்டு கூட்டப்பட்டது. இதில் பெரும்பாலும் எல்லா ஐரோப்பிய நாடுகளும், அண்டை கிழக்கு நாடுகளில் சிலவும், இரஷ்யாவும் கலந்து கொண்டு, அண்டை கிழக்கு நாடுகளின் சிக்கல்களை விவாதித்து ஓர் உடன்படிக்கையை 1878ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஏற்படுத்தின. இது பெர்லின் உடன்படிக்கை (Treaty of Berlin) என வழங்கப்படுகிறது. இவ்வுடன்படிக்கையில் ஐரோப்பாவில் இருந்த எல்லா வலிமை மிக்க நாடுகளும் கையெழுத்திட்டன. இவ்வுடன்படிக்கை சான்ஸ்டிஃபானோ உடன்படிக்கையின் முக்கியத்துவத்தைப் பெரிதும் குறைத்தது. மேலும் பால்கன் பகுதியில் இருந்த மக்களின் தேசியக் கருத்துக்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காததுடன், துருக்கியப் பேரரசின் எதிர்காலத்திற்கும், ரஷ்யா, ஆஸ்திரியா, ஹங்கேரி, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு இடையே சான்ஸ்டிஃபானோ உடன்படிக்கையில் ஏற்பட்ட கருத்து வேற்றுமையைக் குறைப்பதற்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்தது.

பெர்லின் உடன்படிக்கையின்படி (1878) இரஷ்யா 1856-ல் டான்யூப் நதிச் சமவெளியின் வடபகுதியிலும், புருத் (Pruth) நதியின் கிழக்குப் பகுதியிலும் இழந்த பெஸ்ஸரேபியப் பகுதியை மீண்டும் பெற்றது. இத்துடன் சான்ஸ்டிஃபானோ உடன்படிக்கையின்படி முன்னரே முடிவு செய்யப்பட்ட கருங்கடல் பகுதியின் கிழக்குக் கோடியில் அமைந்திருந்த ஆர்மேனிய மாவட்டங்களையும் இரஷ்யா பெற்றது. பாஸ்னியா,

ஹெர்ஸெகோவினு ஆகிய உதுமானிய மாநிலங்களைக் கைப்பற்றி நிர்வாகம் செய்யும் உரிமையையும், நோவிபஸார் (Novibazar) என்ற செர்பியாவிற்குத் தெற்கே அமைந்த மாநிலத்தின் பாதுகாப்புப் பொறுப்பினையும், செர்பியா மான்டி நீக்ரோ ஆகிய பகுதிகளில் வியாபாரம் செய்வதற்கான சில சிறப்பு உரிமைகளையும் ஆஸ்திரியா-ஹங்கேரி பெற்றது. பின்னர் துருக்கியும், பிரிட்டனும் ஒன்றுகூடிச் செய்துகொண்ட ஆங்கிலேய-துருக்கிய ஒப்பந்தப்படி (ஜூன் 1878) பிரிட்டன் பல சலுகைகளைப் பெற்றது. இதன்படி உதுமானியப் பேரரசின் ஒற்றுமையைப் பாதுகாக்கும் பொறுப்பை பிரிட்டன் ஏற்றுக் கொண்டது. இவ்வுதவிக்குக் கைம்மாருக சுல்தான் சைப்ரஸ் தீவைப் பிரிட்டனுக்குக் கொடுத்ததுடன், தன்னுடைய அரசாங் கத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்வதற்கும் ஒப்புக்கொண்டார்.

சான்ஸ்டிஃபானோ உடன்படிக்கையில் கண்டிருந்தபடி ருமேனியா, செர்பியா, மான்டி நீக்ரோ ஆகிய மூன்று பகுதி களையும் சுதந்திரப் பகுதிகளாக பெர்லின் உடன்படிக்கையும் ஒப்புக்கொண்டது. ஆனல் இப்பகுதிகளில் தேசியக் கருத்துகள் இவ் உடன்படிக்கையின்படி தடை செய்யப்பட்டதுடன் சுல்தானின் ஆதிக்கம் ஓரளவு இப்பகுதிகளில் ஏற்படுத்துவதற் கான வாய்ப்பையும் ஏற்படுத்தியது. மேலும் இவ்வுடன் படிக்கையின்படி ருமேனியா பெருமளவில் ருமேனியர்கள் வாழும் பகுதியான பெஸ்ஸரேபியாவை இரஷ்யாவிற்கு விட்டுக் கொடுத்தது. அதற்கு ஈடாகத் துருக்கியர்களும், பல்கேரியர் களும் பெருமளவில் வாழும் பகுதியான டோப்ருஜாவை (Dobruja) இரஷ்யாவிடமிருந்து ருமேனியா பெற்றது.

இத்தாலியில் சார்டீனியா, இத்தாலிய ஐக்கியத்திற்குப் பாடுபட்டதைப் போல, செர்பியர்களின் தேசிய உணர்ச்சியைப் பயன்படுத்தி, அவர்களை ஒன்றுபடுத்தி ஒரு தனி செர்பிய நாட்டை உருவாக்குவதற்கு செர்பியா முயற்சி செய்தது. பெர்லின் உடன்படிக்கையின்படி சுதந்திர நிலையைத் தவிர வேறு எந்தச் சலுகையையும் செர்பியா பெறவில்லை. இந்நிலை யில் அதன் கிழக்குப் பகுதியைத் தவிர மற்ற எல்லாப் பகுதி களும் ஹாப்ஸ்பர்க் பேரரசரால் பாதுகாக்கப்பட்டு வந்தன.

சான்ஸ்டிஃபானோ உடன்படிக்கையின்படி பல்கேரியா முழுவதையும் இரஷ்யாவின் பேரரசர் பெற விரும்பினர். ஆனல் பெர்லின் உடன்படிக்கையின்படி பல்கேரியா மூன்று தனித்

தனி பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. இவற்றில் வடக்குப் பகுதி மட்டும் பல்கேரியா என்ற பெயரில் தனி சுயாட்சிப் பகுதி யாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் இப்பகுதி ஆண்டு தோறும் துருக்கி சுல்தானுக்குக் கப்பம் கட்டிவர வேண்டுமென ஏற்பாடு செய்யப்பட்டது. ஏட்ரியாநோப்பிள் நீங்கலாக எஞ்சி யிருக்கக்கூடிய தெற்கு பல்கேரியப் பகுதி கிழக்கு ருமேலியா (Eastern Rumelia) என்று அழைக்கப்பட்டு, துருக்கிப் பேரரச ரான சுல்தானின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாக ஆக்கப்பட்டது. துருக்கிசுல்தான் இப்பகுதிகளில் இராணுவப் பொறுப்புக்களையும் அரசியல் பொறுப்புக்களையும் ஏற்றுக் கொண்டார். ஆனால் இப் பகுதியின் ஆளுநராக ஒரு கிறிஸ்துவரை சுல்தான் நியமிக்க வேண்டுமெனவும், இந்த ஆளுநர் நிர்வாக உரிமைகள் சிலவற்றைப் பெற்று ஆட்சிபுரிய வேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. மூன்றாவது பல்கேரியப் பகுதியில் மாசிடோனி யாவின் பெரும் பகுதியும், ஏட்ரியாநோப்பிள் மாநிலமும் அடங் கியிருந்தன. இப்பகுதியைத் துருக்கிய சுல்தானும், அவருடைய பிரதிநிதிகளும் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி முழு உரிமையுடன் ஆட்சி புரியலாம் என ஏற்பாடு செய்யப்பட்டது. பல்கேரியா இரஷ்யர்களுக்கு ஆதரவாக இருக்குமென்றும், இரஷ்யர்கள் பல்கேரியா முழுவதையும் கைப்பற்றினால் தெற்கு ஐரோப்பா வில் இரஷ்யா மிகவும் பலம் வாய்ந்த நாடாக மாறிவிடும் என் றும், பிரிட்டிஷ்காரர்களும், ஆஸ்திரியர்களும் நம்பினார்கள். எனவேதான் பல்கேரியாவை மேற்கண்ட மூன்று பகுதிகளாக பெர்லின் உடன்படிக்கை மூலமாகப் பிரித்தனர். ஆனால் இவ் வாறு பிரிக்கப்பட்டதால் பல்கேரியாவில் தேசியக்கருத்து மிக வேகமாக வளர்ச்சி அடைந்தது.

பால்கன் பகுதியில் அமைந்துள்ள நாடுகளிலேயே கிரீஸ் நாடு தான் பெர்லின் உடன்படிக்கையால் அதிக நன்மைகளைப் பெற்றது. இவ்வுடன்படிக்கையில் கிரீஸ் நாட்டிற்கு எந்தப் பகுதிகளையும் கொடுக்காவிட்டாலும், பெர்லின் மாநாட் டின் விளைவுகளால் வடக்குப் பகுதியில் ஒரு கணிசமான நிலப்பரப்பை கிரீஸ் தன்னுடன் இணைத்துக்கொண்டது. கிரேக்க அரசு தெஸாலியை 1881-ல் இணைத்துக்கொண்ட பொழுதுதான் கிரீஸ் நாட்டின் வடக்கு எல்லை முறையாக வரையறுக்கப்பட்டது.

இரஷ்யாவிற்கும், துருக்கிக்கும் இடையே ஏற்பட்ட போரில் ஐரோப்பிய வல்லரசுகள் தலையிட்டு பெர்லின் உடன் படிக்கையை ஏற்படுத்தியது இரஷ்யப் பேரரசுக்குச் சாதக

மாகவே அமைந்தது. இரஷ்யா கிரிமியப் போரில் தோல்வி யடைந்ததற்கு வஞ்சம் தீர்த்துக் கொண்டதுடன் தன்னுடைய இராணுவப் பெருமையையும் மீட்டுக் கொண்டது. பெஸ்ஸ ரேபியாவையும், ஆர்மேனியாவின் ஒரு பகுதியையும் இரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்டது. அத்துடன் வலிமையற் றதும், மற்ற பகுதிகளைச் சார்ந்து இருக்கக் கூடியதுமான பல்கேரிய நாட்டை பால்கன் நாடுகளின் மத்தியில் ஏற்படுத்தி, காண்ஸ்டாண்டிநோபிளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. ஆனல் இத்தகைய பலன்களைத் தன்னுடைய நாட்டிற்கு ஏற்படுத்திய இரஷ்ய மன்னரான இரண்டாம் அலெக்ஸாந்தர் தான் பெற்ற வெற்றியின் பலன்கள் முழுவதும் அனுபவிப்பதற்கு முன்னதாகவே 1881-ல் ஒரு கொலைக் காரனின் குண்டு வீச்சுக்கு இரையாகி உயிர் துறந்தார். இவருக் குப்பின் இவரது மகனை மூன்ரும் அலெக்ஸாந்தர் இரஷ்யாவின் ஸார் மன்னராக ஆட்சிப் பொறுப்பேற்று 1894ஆம் ஆண்டு வரை ஆட்சி புரிந்தார்.

புதிய மன்னராக இரஷ்யாவில் பதவியேற்ற மூன்ரும் அலெக்ஸாந்தரிடம் ஸ்லாவ் இனத்தவரின் கருத்துக்கள் அதிகமாகக் காணப்பட்டன. மேலும் இவர் சற்றுக் கொடுமை யாகவும், தன்னுடைய தந்தையைக் கொலை செய்வதற்குக் காரணமாக இருத்தவர்கள் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் வகையிலும் ஆட்சி புரிந்தார். இவர் மன்னரானவுடன் முதல் நடவடிக்கையாகத் தன்னுடைய தந்தையைக் கொலை செய்தவர் களின்மீது ஒட்டு மொத்தமாக வஞ்சம் தீர்த்துக் கொண்டார். அத்துடன் தெய்வீக அரசு உரிமைக் கோட்பாட்டின்படி இவர் ஆட்சி புரிந்ததால். அரசாங்கத்தின் தலைமைப் பொறுப்பேற்று உண்மையானதும், வலிமையானதுமான எதேச்சாதிகார அரசில் நம்பிக்கை வைத்து, மக்களின் நன்மைக்காக எல்லா வகையான முறைகளையும் பின்பற்ற வேண்டுமென்று தங்களை நியமித்த இறைவன் தங்களுக்கு ஆணை பிறப்பித்திருக்கிருர் என மக் களுக்கு அறிவித்தார். தன்னுடைய கொள்கைகளைச் செயல் படுத்துவதற்குத் தன்னைப் போலவே கருத்துக்களைக் கொண் டிருந்த பிளேஃவி (Plehve), புரோபிடோ நோஸ்டோவ் (Probedo nostsev) என்பவர்களைச் சிறப்பு அதிகாரிகளாக நியமித்தார். இவர்கள் திறமையும், வலிமையும் மிக்கவர்களாக இருந்தனர். இவ்விருவரில் பிளேஃவி என்பவர் லிதுவேனியப் பகுதியில் வாழ்ந்து வந்த ஒரு வழக்கறிஞர். இரஷ்யாவின் போலீஸ் நிர்வாகம்(காவற்படை நிர்வாகம்) இவரிடம் கொடுக்கப்பட்டது. இவர் மக்களை இரஷ்ய மன்னரின் விருப்பங்களுக்குக் கீழ்ப்

படிந்து நடக்குமாறு தன்னுடைய அதிகாரங்களைப் பயன்படுத்திக் கேட்டுக்கொண்டார். எனவே மூன்றும் அலெக்ஸாந்தரின் ஆட்சிக் காலத்தில் அமைதியான முறையில் புரட்சிக் கருத்துக்கள் இரஷ்யாவில் பரவி வந்தன.

புரோபிடோ நோஸ்டோவ் என்பவர் வயது, அறிவு, அனுபவம் ஆகியவற்றில் முதிர்ந்து காணப்பட்டார். மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் சட்டத்துறைப் பேராசிரியராக விளங்கிய இவர் மூன்றும் அலெக்ஸாந்தருடைய அவைக்களச் சட்ட ஆலோசகராகவும் பணி புரிந்தார். இரஷ்யாவின் "புனிதசினடு" (Holy Synod) என்ற திருச்சபையின் ஆட்சிக்குழுவின் மேற்பார்வையாளராகவும், இரஷ்ய திருச்சபையின் தலைவர் என்ற முறையில் தனது கருத்துக்களைச் சொற்பொழிவுகளின் மூலமாகவும், பல வெளியீடுகளின் மூலமாகவும் இரஷ்ய மக்களிடையே பரப்பி, அவை அம் மக்களின் வாழ்க்கையில் பல மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் நடந்துகொண்டார். மதத்துறையில் இவர் வெளிப்படுத்திய கருத்துக்கள் யாவும் ஸார் மன்னரான மூன்றும் அலெக்ஸாந்தரின் கருத்துக்களுக்கு ஏற்பவும், மன்னருக்கும் இவருக்கும் நம்பிக்கை ஏற்படும் வகையிலும் அமைந்திருந்தன. எல்லாவற்றிகும் மேலாக பிளேஃவியின் செயல்கள் வெற்றி பெறுவதற்கும், புரோபிடோ நோஸ்டோவ் துணையாக இருந்தார். தன்னலங்களையும், பேராசைகளையும் வளர்க்கின்ற இடம் பாராளுமன்றங்கள் என்றும், தவருன செய்திகள் வெளியிடுவதைத் தடுப்பதே பத்திரிகைத் தணிக்கை முறையின் நோக்கம் என்றும், வரம்புடைய முடியாட்சி என்பது வெறும் சொல்லலங்காரமே என்றும், ஜூரி முறையில் நீதி வழங்குவது நியாயமற்ற முறையில் தண்டனைகளை வழங்குவதற்கு ஒரு வழிமுறை என்றும் இவர் கருதினர். இக்கருத்துக்களை மக்களிடையேயும் பரப்பி வந்தார்.

மூன்றும் அலெக்ஸாந்தரும், அவருடைய முதல் அமைச்சர்களும் சுதந்திரக் கருத்துக்களைத் தடை செய்யும் முறைகளைக் கையாண்டு அலுவலகங்களை ஒருமுகப்படுத்தும் வகையில் படிப்படியாகத் தங்கள் கருத்துக்களையும், கொள்கைகளையும் செயல்படுத்தத் தொடங்கினர்கள். மிர்ஸ் எனப்படும் தொழிலாளர்களின் சுய ஆட்சி அரசாங்கங்களைப் பேரரசுக்குக் கட்டுப்பட்ட அமைச்சரவையால் அதிகாரம் வழங்கப்பட்ட நிலச்சுவான்தார்களின் மேற்பார்வையின் கீழ்க்கொண்டு வந்தார். லெம்ஸ்டோவ் எனப்பட்ட மாநில சபைகளுக்கும், நகரசபைகளில் இருந்த ரூமா என்ற சபைகளுக்கும் தன்னுடைய

தந்தையான இரண்டாம் அலெக்ஸாந்தரால் வழங்கப்பட்ட சில அதிகாரங்களை மூன்றும் அலெக்ஸாந்தர் கட்டுப்படுத்தினர். பின்னர் நாட்டின் பொதுக் கல்வி முறையில் சில மாற்றங்களை ஏற்படுத்தினர். ஆரம்பக் கல்வி முறையில் இரஷ்ய திருச் சபையின் கருத்துக்கள் செல்வாக்குப் பெறுவதற்குச் சில வழி முறைகளை ஏற்படுத்தினர். பாட திட்டத்தையும், பல்கலைக் கழக ஆசிரியர்களையும், தன்னுடைய பிரதிநிதிகள் மூலம் தீவிரமாகக் கண்காணித்தார். அதே போன்று பத்திரிகைகளின் மீதும், தனியார் துறைச் செய்தித் தொடர்புகள் மீதும் தணிக்கை முறையைக் கொண்டு வந்தார். தான் ஏற்படுத்திய கட்டுப் பாடுகளை மீறியவர்களைக் கைது செய்து அவர்களுக்குத் தக்க தண்டனை வழங்குவதற்கு பிளேஃவி என்பவரின் தலைமையின் கீழ் இயங்கிவந்த காவல் துறையினருக்குத் தக்க முறையில் அதிக அதிகாரங்களை வழங்கி இருந்தார். செர்பியாவில் தரிசு நிலங் களாகக் கிடந்த பகுதிகளில் ஒரு பெரிய சிறைச்சாலையை ஏற்படுத்தி அங்கு ஐரோப்பிய, இரஷ்யப் பகுதியில் கைது செய்யப்பட்ட அரசியல் குற்றவாளிகளையும், எதிரிகள் என்று தன்னுடைய ஏஜெண்டுகளாலும் காவல் துறையினராலும் கருதப்பட்டுக் கைது செய்யப்பட்டவர்களையும் சிறை வைத்தார்.

அடுத்து, மூன்றும் அலெக்ஸாந்தர் தன்னுடைய ஆட்சிப் பகுதி முழுவதையும், இரஷ்ய மயமாக்கும் முயற்சியில் தன் அமைச்சர்களின் துணையுடன் ஈடுபட்டார். முதலாவதாக ஸ்லாவ் இனத்தின் மேம்பாட்டிற்காகப் பாடுபட்ட நாட்டுப் பற்று மிக்க இரஷ்யர்களின் பண்பாட்டுக் கருத்துக்களை மக்கள் உணர்வதற்கான வழிகளைக் கண்டறிந்து அவற்றைச் செயல் படுத்தினர். அடுத்து இரஷ்ய மொழியைத் தவிர மற்ற மொழிகளை இரஷ்யாவில் தடை செய்வதற்கான ஏற்பாட்டை மேற் கொண்டார். பின்னர் பழைய கருத்துக்களில் நம்பிக்கையுடைய இரஷ்ய மதத்தைத் தவிர ஏனைய மதங்களைக் கட்டுப்படுத்தினர். இரஷ்யப் பேரரசில் வாழ்ந்த மக்களிடையே காணப்பட்ட வேற்றுமை யுணர்வுகளை நீக்கி, அவர்கள் அனைவரையும் ஒன்று படுத்தி இரஷ்யாவின் நன்மக்களாக்குவதற்கு இவர் பாடு பட்டார். இரஷ்யப் பேரரசில் இருந்த மக்கள் அனைவரையும் இரஷ்யாவின் ஸார் மன்னருக்குக் கீழ்ப்படியச் செய்து, அவரது ஆணைகளுக்குக் கட்டுப்பட்டு, மன்னரது நம்பிக்கைக்கு உரியவர்களாக ஆக்குவதே மேற்கண்ட முயற்சிகளில் மூன்றும் அலெக்ஸாந்தர் ஈடுபட்டதற்கான முக்கிய காரணமாகும்.

இரஷ்ய மயமாக்கும் தன் முயற்சியின் அடுத்த கட்டமாக பால்டிக் மாநிலங்களில் இருந்த லூதரன் திருச்சபைகளுக்கு எதிராகவும், போலந்தின் கத்தோலிக்க திருச்சபைகளுக்கு எதிராகவும், சில நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், தனது கருத்துக்களுக்கு எதிராக இருந்த பலரைத் தண்டிக்கவும் செய்தார். பின்னர் பழைய கருத்துக்களில் நம்பிக்கையுடைய இரஷ்யர்கள் வேறு மதங்களுக்குச் செல்வதைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தினர். போலந்து நாட்டில் இரஷ்ய மன்னர்களின் ஆதிக்கத்துக்கு எதிராக, 1863ஆம் ஆண்டில் ஏற்பட்ட கிளர்ச்சிகளை அடக்குவதற்கு இரண்டாம் அலெக்ஸாந்தர் மேற்கொண்டிருந்த கடுமையான நடவடிக்கைகள் அந்நாட்டு மக்களைப் பல இன்னல்களுக்குள்ளாகியது. இரஷ்யப் பேரரசின் அரசுப் பணிகள் போலந்து மக்களுக்கு மறுக்கப்பட்டதுடன் 1865ஆம் ஆண்டு முதல் 1897ஆம் ஆண்டு வரை போலந்துக்காரர்கள் எவரும் தங்கள் சொத்துக்களையும், நிலங்களையும் இரஷ்யர்கள் அல்லாதவர்களுக்கு விற்க அனுமதிக்கப்படவில்லை. இரஷ்யாவின் ஆட்சிப் பகுதியில் இருந்த யுக்ரெயினியாவில், சிறிய இரஷ்ய மொழி பேச்சு மொழியாக மட்டும் பிரகடனப்படுத்தப்பட்டது. இம்மொழியின் எழுத்து வடிவத்தை இரஷ்ய அரசு ஏற்றுக்கொள்ளாததால் இம்மொழியில் அச்சிடுவதும், கையொப்பமிடுவதும் தடை செய்யப்பட்டது. பால்டிக் மாநிலங்களில் இரஷ்ய மொழி 1885-ல் அரசாங்க மொழியாக அறிவிக்கப்பட்டது. மேலும் இப்பகுதிகளிலிருந்த பல்கலைக் கழகங்களில் இரஷ்ய மொழியிலேயே பாடங்கள் நடத்தப்பட்டன. தனியார் கல்வி நிலையங்களில் கூட ஜெர்மன் வழிப்பயிற்சி தடை செய்யப்பட்டு இரஷ்ய வழிப்பயிற்சி நடைமுறைப் படுத்தப்பட்டது.ஜெர்மனிய இடப்பெயர்கள் இரஷ்யப் பெயர்களாக மாற்றப்பட்டன.

அடுத்து யூதர்களைத் தண்டிப்பதும். யூதர்களில் தீவிரவாதிகளைக் கொலை செய்வதும், இரஷ்யப் பேரரசை இரஷ்ய மயமாக்கும் தன்னுடைய முயற்சியின் ஒரு பகுதியாகக் கருதினார் மூன்றும் அலெக்ஸாந்தர். இரஷ்யப் பேரரசில் ஏறத்தாழ 50 இலட்சம் யூதர்கள் வாழ்ந்து வந்தனர். இவர்களில் பெரும்பாலோர் போலந்து, லிதுவேனியா, யுக்ரெயினியா, பெஸ்ஸரேபியா போன்ற இடங்களில் வசித்து வந்தனர். இவர்கள் உயர்ந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதாலும், பொருளாதாரத் துறையில் அதிக இலாபம் பெற்றனர் என்பதாலும் பெரும்பாலான இரஷ்ய மக்கள் இவர்களை வெறுத்தனர். எல்லாவற்றிற்கும் மேலாக இரஷ்யப் பேரரசில் வாழ்ந்த யூதர்கள்

இரஷ்ய மன்னருடைய கருத்துக்களுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் எதிராகப் பல கிளர்ச்சிகளைச் செய்தனர். எனவே மூன்றும் அலெக்ஸாந்தர் பெரும்பாலான இரஷ்யர்களின் ஆதரவுடன் யூதர்களை ஒடுக்குவதற்குப் பல நடவடிக்கைகளை ஒன்றன்பின் ஒன்றாக மேற்கொண்டார். யூதர்கள் நிலங்கள் வாங்குவதை 1882-ல் தடை செய்தார். உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் யூதர்கள் சேர்வதற்குத் தடை விதித்தார். பின்னர் 1890ஆம் ஆண்டில் சில கொடிய சட்டங்களை யூதர்களுக்கு எதிராகச் செயல்படுத்தினர். இச்சட்டங்களின்படி இரஷ்யாவின் உள்நாட்டுப் பகுதிகளில் வாழ்ந்த யூதர்கள் எல்லைப்புற மாநிலங்களுக்குக் குடிபெயர்ந்து செல்லுமாறு கட்டாயப்படுத்தப் பட்டனர். அவ்வாறு குடிபெயராத யூதர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக இரஷ்ய அரசாங்கத்தின் அனுமதி பெறவேண்டுமென்று கட்டாயப் படுத்தப்பட்டனர். புதிதாகக் குடியேறிய எல்லைப்புற மாநிலங்களில் யூதர்கள் நிலம் வாங்குவதும், குத்தகைக்கு நிலங்களை மேற்கொள்ளுவதும் தடை செய்யப்பட்டதுடன், அரசாங்க இரகசிய அதிகாரிகள் யூதர்களின் நடவடிக்கைகள் யாவற்றையும் கண்காணித்து வந்தனர். மூன்றும் அலெக்ஸாந்தர் யூதர்களுக்கு எதிராக மேற்கொண்ட முயற்சிகள் காரணமாக, இரஷ்யாவின் அரசு அலுவலர்கள்பலர் தங்கள் மன்னரையும், அவரது முதல் அமைச்சர்களையும் பின்பற்றி, யூதர்களுக்கு எதிராக ஒன்று பட்டனர். இவர்கள்யாவரும் யூதர்களுக்கு எதிராக இரஷ்ய மக்கள் மேற்கொண்ட கொடுஞ்செயல்களுக்கு ஆதரவு கொடுத்ததுடன், பொக்ராம்ஸ் (Pogroms) என்ற யூதர்களுக்கு எதிரான இயக்கங்களை அங்கீகரித்தார்கள். பொக்ராம்ஸ் என்ற இயக்கத்தினர் பல இடங்களில் யூதர்கள் வாழும் பகுதிகளில் புகுந்து கொள்ளை யடித்ததுடன் பல கொடுஞ்செயல்களையும், கொலைகளையும் செய்தனர். யூதர்களுக்கு எதிராக இரஷ்யா மேற்கொண்ட இச்செயல்கள் யாவற்றிற்கும் இரஷ்ய அரசு அதிகாரிகள் ஆதரவளித்தனர். பொக்ராம்ஸ் என்ற இக் கொடுஞ் செயல்களாலும், அரசரின் அடக்குமுறைச் சட்டங்களாலும் யூதர்கள் சொல்லவொண்ணுத் துயர் அடைந்தார்கள். எனவே 1891ஆம் ஆண்டில் மட்டும் இரஷ்யப் பேரரசிலிருந்து ஏறத்தாழ 3 இலட்சம் யூதர்கள் குடிபெயர்ந்தனர். இவர்கள் அனைவரும் பெரும்பாலும் ஐக்கிய அமெரிக்க நாடுகளில் குடியேறினர்கள்.

மூன்றும் அலெக்ஸாந்தர் தன்னுடைய கருத்துக்களைச் செயல்படுத்திக் கொண்டு, இரஷ்யப் பேரரசை இரஷ்யமயமாக்கிய அதே சமயத்தில் இரஷ்யாவின் எல்லைகளை விரிவு

படுத்துவதிலும், உலக நாடுகளிடையே இரஷ்யாவின் புகழை உயர்த்துவதிலும் அதிக அக்கறை கொண்டவராகக் காணப் பட்டார். துருக்கியப் பகுதிகள் சிலவற்றைக் கைப்பற்றித் தனது நாட்டின் எல்லைகளைத் தெற்குத் திசையில் மேலும் விரிவடையச் செய்தார். பின்னர் பாரசீகத்தில் இரஷ்யாவின் ஆதிக்கம் வளர்ச்சியடைவதற்கு வழிகோலினர். இதனையடுத்துத் தன்னு டைய நாட்டிற்கு அருகில் உள்ள ஐரோப்பிய நாடுகளுடன் பெயரளவில் சமாதானம் செய்து கொண்டார். ஆனல் அதே சமயத்தில் பால்கன் பகுதிகளில் வாழ்ந்துவந்த ஸ்லாவ் இனத் தைச் சார்ந்த மக்களிடையே இரஷ்யாவின் செல்வாக்கு மேம்பாடு அடைவதற்குத் தன்னுலான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டார்.

இரஷ்யாவின் புகழை உலக நாடுகளிடையே ஓங்கச் செய்வதின் முதல் படியாக மூன்றும் அலெக்ஸாந்தர் 1890 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிரான்சு நாட்டுடன் ஓர் உடன் படிக்கையைச் செய்து கொண்டார். இலத்தீனிய நாடான பிரான்சும், ஸ்லாவ் மக்கள் வாழும் நாடுகளில் மிக முக்கிய மானதான இரஷ்யாவும் செய்து கொண்ட உடன்படிக்கையின் காரணமாக, ஐரோப்பாவில் டியுடானியர்களின் செல்வாக்கு குறையும் என்றும், ஆசியாவில் ஆதிக்க மனப்பான்மையின் காரணமாக, இரஷ்யாவிற்கும் பிரிட்டனுக்கும் ஏற்பட்ட போட்டியில் இரஷ்யாவின் வலிமை அதிகமாகும் என்றும், பிரான்ஸ் நாட்டின் மூலதனம் தேவையான அளவு இரஷ்யாவில் முடக்கப்பட்டு அந்நாட்டின் உள் நாட்டு வளர்ச்சிக்கும், பாதுகாப்புத் தளவாடங்களுக்கும் பயன்படுத்தப்படும் என்றும் மூன்றும் அலெக்ஸாந்தரும், பெரும்பாலான இரஷ்ய மக்களும் கருதினர்கள். ஆனல் தன்னுடைய கருத்துக்களைத் தானே நிறைவேற்றுவதற்கு முன்னதாக மூன்றும் அலெக்ஸாந்தர் 1894-ல் இவ் உலக வாழ்வை நீத்தார்.

மூன்றும் அலெக்ஸாந்தருக்குப் பின்னர் அவரது மகனுன இரண்டாம் நிகோலஸ் இரஷ்யாவின் ஸார் மன்னராகப் பதவி யேற்ருர். இவர் தனது தந்தையான மூன்றும் அலெக்ஸாந்தர் போலில்லாமல் திறமையற்றவராக இருந்தார். மேலும் எல்லாம் விதிப்படியே நடக்கும் என்ற கருத்திலும், பிரார்த்தனை, தியானம் ஆகியவைகளை அயராது செய்வதன் மூலம் கடவுளின் நம்பிக் கைக்குப் பாத்திரமாக முடியும் என்ற கருத்திலும் அதிக நம்பிக்கையுடையவராகக் காணப்பட்டார். இவர் தனது மனைவியும் விக்டோரியா அரசியாரின் பேத்தியுமான எலிஸ்

என்ற அலெக்ஸாந்திரியாவுக்குத் தனிப்பட்ட பல சலுகைகளை வழங்கினர். இவ்வரசியார் இரஷ்யாவில் செயல்படுத்துவதற்குக் கடினமான ஆங்கிலேயக் கருத்துக்களையும், எதேச்சாதிகாரக் கருத்துக்களையும், திருச்சபையின் பழைய கோட்பாடுகளையும் இரஷ்யாவில் செயல்படுத்த முயற்சித்தார். இந்நிலையில் இரஷ்யாவில் ஸார் மன்னருக்கு எதிராகவும், ஸார் மன்னருடைய ஆதிக்கத்தைக் குறைப்பதற்கும் மேற்கொள்ளும் முயற்சிகள் யாவும் பகற்கனவுகளாகவே முடியும் என அறிவித்தார், இருப்பினும் தனக்கு எதிரான கருத்துக்களைக் கொண்டிருந்த தனது மனைவியான அலெக்ஸாந்திரியாவை எந்த வகையிலும் கட்டுப்படுத்தவில்லை. நாட்டில் தன்னுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான போபிடோனுஸ்டாவ் (Pobedonostsev) என்பவரை புனிதசினடு (Holy Synod) க்குத் தலைவராக நியமித்தார். இதனையடுத்து பிளேஃவி (Plehve) என்ற அதிகாரிக்குப் பதவி உயர்வு அளித்ததுடன், உள்நாட்டு அமைச்சராக நியமித்து சர்வாதிகார முறையில் செயல்படுத்துவதற்கான அதிகாரங்களை வழங்கினர்.

இரண்டாம் நிகோலஸ் ஏறத்தாழ 11 ஆண்டுகள் (1804 முதல் 1905 வரை) அரசியலில் தன்னுடைய கருத்துப்படியே சில நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் வெளிநாட்டுக் கொள்கைகளைத் தனது பேரரசில், இரஷ்ய மயமாக்குதல் ஆகிய முயற்சியை மேற்கொண்டார். ஆனல் மதத் துறையில் தனது கருத்துக்கு எதிரானவர்களைத் தண்டிப்பதிலும், கத்தோலிக்க, புராட்டஸ்டண்ட் திருச்சபைகளுக்கு, எதிரான நடவடிக்கைகள் ஆகியவற்றில் அவ்வளவு கொடுமையாக நடந்து கொள்ளவில்லை. இருப்பினும் கௌகாஸஸ் என்ற இடத்திலிருந்த அமெரிக்க திருச்சபைகளு எதிராகப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். யூதர்களுக்கு எதிரான சட்டங்களை முழுமூச்சுடன் செயல்படுத்தினர். பொக்ராம்ஸ் என்ற இயக்கத்தின் மூலம் கிஷிநேவ் (Kishinev) என்ற இடத்தில் பல்லாயிரக்கணக்கான யூதர்களை 1903ஆம் ஆண்டில் படுகொலை செய்தார். தன்னுடைய ஆட்சியின் கீழிருந்த பின்லாந்து (Finland)ப் பகுதியில் நிலவிய பழைய அரசியலமைப்பையும், சட்டங்களையும் நீக்கிவிட்டு அப்பகுதியை இரஷ்ய மயமாக்கினர். இப்பகுதியின் மக்கள் அனுபவித்து வந்த உரிமைகள் எல்லாவற்றையும் நீக்கியதுடன், இப் பகுதியில் நிர்வாகத் துறையில் பணியாற்றிய பின்லாந்து, ஸ்வீடன் ஆகிய நாடுகளின் மக்கள் அனைவரையும் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, அவர்களுக்குப் பதிலாக அப்பகுதிகளில் இரஷ்யர்களை நியமித்தார். இரஷ்யக் காவல் துறையினரை

அப்பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளு மாறு பணித்தார். பின்லாந்தின் இராணுவத்தை இரஷ்ய இராணு வத்துடன் இணைத்தார். பிளேஃவி என்பவருக்கு பின்லாந்து செயலாளராகக் கூடுதல் பொறுப்புக்களைக் கொடுத்து அப்பகுதி யில் செயல்படுத்தப்பட்டு வந்த சட்டங்கள் யாவற்றையும் இரஷ்ய மொழியில் எழுத ஏற்பாடுகளைச் செய்தார்.

தன்னுடைய கருத்துக்களையும், கொள்கைகளையும் சட்டங் களாக்கி, அவற்றை எவ்விதத் தடையுமின்றிச் செயல்படுத்தி வந்ததால், தான் உலகில் ஸ்லாவ் இனத்தைச் சார்ந்த மக்களின் பாதுகாவலர் என்றும், உலக அமைதியை நிலைபெறச் செய்வது தன்னுடைய பொறுப்பு என்றும் கருதினர். எனவே போர்த் தளவாடங்களின் உற்பத்தியைக் கட்டுப்படுத்தவும், உலக நாடுகளிடையே அமைதியை நிலைநாட்ட உறுதிமொழிகளை எடுத்துக் கொள்ளவும், ஹேக் (Hague) என்ற இடத்தில் மகாநாடு ஒன்றை 1899-ல் கூட்டினர். இம்மாநாட்டிற்குப் பின்னர் தூரகிழக்கு (Far East) நாடுகளில் இரஷ்யப் பேரரசை விரிவுபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு அப்பகுதி களின் அமைதியைக் குலைத்தார். இதனால் 1904-1905ஆம் ஆண்டுகளில் இரஷ்யாவிற்கும், ஜப்பானுக்கும் இடையே ஒரு போர் ஏற்பட்டது. இப்போரைப்பற்றி வேறு அத்தியாத்தில் விளக்கமாகக் காண்போம்.

இரஷ்யாவில் தொழில் வளர்ச்சி

ஐரோப்பியப் பகுதிகளில் அமைந்திருந்த இரஷ்யப் பகுதி களில் மூன்றும் அலெக்ஸாந்தர், இரண்டாம் நிகோலஸ் ஆகியவர்களுடைய ஆட்சிக்காலங்களில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டது. தொடக்கத்தில் இத்தொழில் வளர்ச்சி அவ்வளவு விரைவாகப் பரவாவிட்டாலும், 1904 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பேரரசின் ஐரோப்பியப் பகுதிகளில் தொழில் வளர்ச்சி குறிப் பிடத்தக்க பல மாற்றங்களை ஏற்படுத்தியது. இதன் பயனாகத் தொழில், வியாபாரம் ஆகியவை வளர்ச்சியடைந்தன. யுக்ரெயினியா (Ukrainia), யூரல் (Ural) ஆகிய பகுதிகளில் நிலக்கரிச் சுரங்கங்களும், இரும்புத் தொழில்களும் மிகப்பரந்த அளவில் செயல்படத் துவங்கின. காகஸஸ் (Caucasus) என்ற இடத்திலும், காஸ்பியன்கடல், கருங்கடல் ஆகிய பகுதிகளிலும் எண்ணெய்க் கிணறுகளைக் கண்டு பிடிக்கும் பணி மேற்கொள் ளப் பட்டது. கீவ் (Kiev), செயின்ட் பீட்டர்ஸ்பர்க் (St. Petersburg), மாஸ்கோ போன்ற பெரிய நகரங்களில் அதிக அளவில் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. ரிகா (Riga), ஒடெஸா

(Odessa), விளாடிவோஸ்டாக் (Vladivostok), ஆர்க்கேஞ்சல் (Archangel) ஆகிய துறைமுகங்களில் கப்பல் கட்டும் தொழில் மேற்கொள்ளப்பட்டது. இவற்றின் பயனாக 1881ஆம் ஆண்டிற்கும் 1904ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இரஷ்யாவின் இரும்பு உற்பத்தி மூன்று மடங்கு அதிகரித்து 30 இலட்சம் டன்களாக உயர்ந்தது. இதனால் இரஷ்யா இரும்பு உற்பத்தியில் உலக நாடுகளிடையே நான்காவது இடத்தைப் பெற்றது. (பிரிட்டன் முதலிடம், ஐக்கிய அமெரிக்கா இரண்டாவது இடம், ஜெர்மனி மூன்றாமிடம்) இதே காலத்தில் நிலக்கரி உற்பத்தியும் அதிகரித்தது. 30 இலட்சம் டன்கள் மட்டுமே நிலக்கரி உற்பத்தி செய்துவந்த இரஷ்யா 180 இலட்சம் டன்கள் நிலக்கரியை வெட்டி எடுத்தது. இதனால் நிலக்கரி உற்பத்தி இரஷ்யாவில் 6 மடங்கு அதிகரித்தது. தொழிற்சாலைகள் பல இரஷ்யாவில் ஆங்காங்கே ஏற்படத் தொடங்கின. எந்திரத் தொழில் அதிக அளவில் வளர்ச்சியடைந்தது.

வெளிநாட்டவர்களின், குறிப்பாக பிரஞ்சுக்காரர்களின் மூலதனமும், பெரும்பாலான செர்பியர்கள் குறைந்த கூலிக்கு வேலை செய்ய முன் வந்ததுமே பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இரஷ்யாவில் ஏற்பட்ட இத்தகைய தொழில் வளர்ச்சிக்கு முக்கிய காரணங்களாகும். வெளிநாட்டவர்களின் மூலதனத்தினாலும், செர்பியர்கள் அதிக அளவில் குறைந்த கூலிக்குத் தொழில் செய்வதற்குத் தயாராக இருந்ததாலும், இரஷ்யாவில் இருப்புப்பாதை அமைக்கும் பணி மிக வேகமாக நிறைவேறியது. இதனால் தொழிலும், வியாபாரமும் மிகவிரைவில் வளர்ச்சியடைந்தன.

ஆனால் பொதுவாக இரஷ்யப் பேரரசு முழுவதும் விவசாய நாடாகவே கருதப்பட்டது. குறிப்பாக 1914ஆம் ஆண்டில் இரஷ்யாவின் மக்கள் தொகையில் ஏறத்தாழ $\frac{4}{5}$ பங்கு மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தனர். இந்நாட்டில் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப் பட்ட பொருள்களின் மொத்த மதிப்பு, அங்கிருந்த கால்நடைகள், உற்பத்தி செய்யப் பட்ட உணவுதானியங்கள் ஆகியவற்றின் மொத்த மதிப்பைவிடப் பன்மடங்கு குறைந்து காணப்பட்டது. ஆனால் நகரவாசிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. உதாரணமாக 1874-ல் மொத்த மக்கள் தொகையில் $\frac{1}{10}$ பங்காக இருந்த நகர மக்களின் எண்ணிக்கை, 1914-ல் $\frac{1}{7}$ பங்காக உயர்ந்தது. இதன்படி 1914-ல் இரஷ்யப் பேரரசில் நகரங்களில் வாழ்ந்

தவர்கள் 13 கோடி மக்களாவார்கள். இவர்களின் எண்ணிக்கை பிரான்சு நாட்டில் நகரங்களில் வாழ்ந்தவர்களின் எண்ணிக் கைக்கு ஏறத்தாழ சமமாக இருந்தது. இரஷ்யப் பேரரசில் காணப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கையும், ஏறத் தாழ இத்தாலிய நகரங்களில் காணப்பட்ட தொழிற்சாலைகளின் மொத்த அளவை ஒத்திருந்தது.

இரஷ்யப் பேரரசில் ஏற்பட்ட இத்தொழில் வளர்ச்சியின் காரணமாக இப் பேரரசில் நடுத்தர வகுப்பினரின் (Middle class) எண்ணிக்கை அதிகரித்தது. நகரங்களில் வாழ்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை நடுத்தரவகுப்பினர்களைவிடப் பன்மடங்கு அதிகரித்தது. ஆனால் கிராமங்களில் வாழ்ந்தோரின் எண்ணிக்கை மட்டும் நாளுக்குநாள் குறைந்து கொண்டே வந்தது. கிராமங்களில் அறியாமையில் மூழ்கி வாழ்ந்து கொண் டிருந்த கிராமமக்களைக் கட்டுப்படுத்தி, எதேச்சாதிகாரமாக வாழ்ந்து வந்த இரஷ்யாவின் ஸார் மன்னர்களுக்குக் கிராம மக்களின் எண்ணிக்கைக் குறைவும், நகர மக்களின் எண்ணிக்கை வளர்ச்சியும் பல வகைகளில் தொல்லைகளாக அமைந்தன. நகரங்களில் வாழ்ந்துவந்த தொழிலாளர்கள் சிறிது சிறிதாக சுதந்திரக் கருத்துக்களால் விழிப்புணர்ச்சி யடைந்து, ஸார் மன்னர்களின் எதேச்சாதிகாரத்தைக் கட்டுப் படுத்த முயன்றனர். தொழில் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி நகரத் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த பிளேஃவி' (Plehve) பல முயற்சிகளை மேற்கொண்டார். ஸ்லாவ் இனத்தைச் சேர்ந்த தேசியவாதிகளும், பிளேஃவியுடன் ஒத் துழைத்து, புதிய பொருளாதார, சமுதாய கருத்துக்கள் இரஷ் யாவில் பரவுவதைத் தடை செய்வதற்காக அரும்பாடு பட்டனர். ஆனால் இவர்களுடைய முயற்சிகள் யாவும் பயனற் றுப் போயின.

இச்சமயத்தில் இரஷ்யாவின் தொழில் அதிபரும், சிறந்த அரசியல் வாதியும், நாட்டுப்பற்று மிக்கவருமான கவுண்ட் செர்ஜ்விட் (Count Serge Witte) என்பவர் இரஷ்ய மக்களி டையே அதிக செல்வாக்குப் பெற்றார். இவர் இரஷ்ய மக்களின் நண்பராக விளங்கியதோடு புதிய பொருளாதாரக் கருத்துக் களுக்கும், சமுதாயக் கோட்பாடுகளுக்கும் பெரும் ஆதரவு அளிப்பவராகவும் காணப்பட்டார்.

கவுண்ட் செர்ஜ்விட் இரஷ்யாவில் காகஸஸ் என்ற பகுதி யிலிருந்த டைப்ஃளிஸ் (Tiflis) என்ற நகரத்தில் பிறந்தார்.

டச்சுக்காரர்களின் வழிவந்த இவருடைய தந்தை இரஷ்யப் பேரரசில் ஒரு நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றினர். கவுண்ட்விட் ஒடெஸா பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்ருர். பல்கலைக்கழகக் கல்விக்குப் பின்னர் இரஷ்யாவில் இருப்புப் பாதை அமைப்பதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு ஆர்வம் காட்டினர். பின்னர் தெற்கு இரஷ்யாவின் பொருளாதார முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார். இவரது கொள்கைகள் இவரைப் படிப்படியாக இரஷ்ய அரசியலில் ஈடுபடுத்தின. பின்னர் இவர் மேற்கு இரஷ்யப் பகுதியில் வாணிபம், தொழில் ஆகியவற்றின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார். எனவே இரஷ்யப் பேரரசரான மூன்ரும் அலெக்ஸாந்தர் தன்னுடைய இரயில்வே அமைச்சகத் துறை ஒன்றிற்கு இவரைத் தலைவராக நியமித்தார். இதனைத் தொடர்ந்து இவரது திறமையின் காரணமாகப் பேரரசர் இவருக்குப் பதவி உயர்வு கொடுத்து, செய்தித் தொடர்புத் துறை அமைச்சராக 1892-ல் நியமித்தார். பின்னர் 1893-ல் இவர் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டார். ஏறத்தாழ பத்தாண்டுகள் இரண்டாம் நிகோலஸின் கீழ் நிதி அமைச்சராகப் பணிபுரிந்தார். இவர் நிதி அமைச்சராகப் பணியாற்றிய பத்தாண்டுகளில் மன்னரிடத்தில் தனக்கிருந்த செல்வாக்கையும், அதிகாரத்தையும் பயன்படுத்தி, ஜெர்மனியில் பிஸ்மார்க் தன்னுடைய நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பாடுபட்டதைப் போல, இரஷ்யா எல்லாத் துறைகளிலும், குறிப்பாகத் தொழில், வாணிபம் ஆகிய துறைகளில் வளர்ச்சி யடைவதற்காகப் பாடுபட்டார். இரஷ்யாவில் தொழில் பாதுகாப்பிற்காகவும், வளர்ச்சிக்காகவும் சுங்கவரியை விதித்தார். பொருளாதாரத் துறையில் பல சீர்திருத்தங்களைப் புகுத்தி மாநில வங்கிகளை மேம்படுத்தினர். இரஷ்ய மாநிலங்களுக்குள் இருப்புப் பாதை அமைப்பதைத் துரிதப்படுத்தினர். புதிய பொருளாதார ஏகாதிபத்தியக் கொள்கைகளைப் பின்பற்றி பாரசீகம் (Persia), மஞ்சூரியா (Manchuria) போன்ற பகுதிகளில் இரஷ்யாவின் வாணிபத்தைப் பெருக்கினர். இரஷ்ய மூலதனங்களை இப்பகுதிகளில் முதலீடு செய்ததுடன், இப் பகுதிகளின் அரசியல், இராணுவம் ஆகிய துறைகளிலும் இரஷ்யாவின் ஆதிக்கத்தை வலுப்படுத்தினர்.

கவுண்ட்விட் (Count Witte) இரஷ்யாவின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட அதே சமயத்தில், இரஷ்யத் தொழிலாளர்களின் திறமையை மேம்பாடு அடையச் செய்வதற்காகவும் பாடுபட்டார். குடிப்பழக்கம் தொழிலாளர்களையும், அவர்களின் குடும்பங்களையும் நலிவடையச் செய்வதை நன்கறிந்த கவுண்ட்

விட் இப்பழக்கத்தைச் சிறிது சிறிதாக இரஷ்ய மக்களிடமிருந்து அகற்றுவதற்காகச் சில முயற்சிகளை மேற்கொண்டார். இதன் பயனாக மதுபானம் விற்பது அரசாங்கத்தின் ஏகபோக உரிமை யாக்கப்பட்டது. அன்றியும் தொழிலாளர்களுக்கும், முதலாளி களுக்குமிடையே ஏற்பட்ட தகராறுகளில் அரசாங்கம் தலை யிட்டு, நடுநிலைமை வகித்து, இரு சாராரையும் அழைத்துப் பேசி சமரசம் செய்து வைத்தது. சுரங்கங்களில் வேலை செய்ப வருக்கும், தொழிற்சாலைகளில் உழைப்பவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கும் வகையில் அரசாங்கம் சில சட்டங்களை இயற்றியது. இதன் பயனாக பூஷ்வாக்கள் (Bourgeosie) சுதந்திரக் கருத்துக் களையும், தொழிலாளர்கள் சோஷியலிசக் கருத்துக்களையும் வலியுறுத்தத் தொடங்கினார்கள்.

ஆனால் நாளடைவில் கவுண்ட்விட்டின் கருத்துக்களுக்குப் பேரரசரிடம் அதிக செல்வாக்குப் பெற்றவர்களிடமிருந்தும், எதேச்சாதிகாரக் கொள்கையில் நம்பிக்கை உடையவர்களிட மிருந்தும் அதிக எதிர்ப்பு ஏற்படத் தொடங்கியது. இதன் பயனாக பிளேஃவி போபிடோனஸ்டெவ் ஆகிய இரு முக்கிய அதிகாரிகளும், அவர்களது ஆதரவாளர்களும் கவுண்ட்விட்டின் புதிய பொருளாதாரக் கருத்துக்களைக் குறைக் கூறினார்கள். இரஷ்யப் பேரரசில் பெரும்பாலோர் விவசாயிகளாக இருந்ததால் நிதி யமைச்சர் விட் தொழில் துறையின் வளர்ச்சிக்காக விவசா யத்தைப் பலியிடுகிறார் என்றும், விவசாயிகளுக்கும், தொழிலாளி களுக்கும் சுங்கவரி எந்தவித நன்மையையும் தரவில்லை என்றும் மக்கள் கடிந்துரைத்தனர். மேலும் பிளேஃவி நகரங்களில் வளர்ச் சியடையும் தொழில்களைக் கட்டுப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொண்டதாலேயே, விட் அவருக்கு எதிராக முயற்சிகளை மேற்கொண்டார் என்றும் பலர் கருதினர். எல்லா வற்றிற்கும் மேலாக பூஷ்வாக்கள் விடுதலைக் கருத்துக்களையும், தொழிலாளர்கள் சோஷியலிசக் கருத்துக்களையும் ஆதரித்து வந்தது, நகரங்களில் தொழிலாளர்களின் வளர்ச்சி மன்னருடைய எதேச்சாதிகாரப் போக்கிற்கு இடையூறாக இருக்கிறது என்பதை நன்கு தெளிவுபடுத்தியது.

இச்சமயத்தில் 1901ஆம் ஆண்டில் பிளேஃவி என்பவருடைய கட்டுப்பாட்டையும், காவல்துறையினரின் கண்காணிப்பையும் மீறி, ஸார் மன்னர்களின் அரசுக்கு எதிராக ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது. இக்கிளர்ச்சியில் பங்கு பெற்றவர்கள் எல்லோரும் பெரும்பாலும் நிலச்சுவான்தார்களாகவும், விவசாயிகளா கவுமே இருந்தனர். இவர்களில் பலர் பிளேஃவி என்பவருடைய

ஆதரவாளர்களாகவே இருந்தனர். இவர்கள் புரட்சி செய்யும் நோக்குடனே அல்லது ஸார் மன்னர்களுடைய அதிகாரங் களுக்கு எதிராகவோ கிளர்ச்சி செய்யவில்லே. விவசாயத்தைப் பாதிக்கும் வகையில் மிக அதிக அளவில் தொழிற்சாலே களுக்கும், வாணிபத்திற்கும் கவுண்ட்விட் ஆதரவும், ஊக்கமும் அளித்ததை இரண்டாம் நிக்கோலஸ் அனுமதித்ததால் வெகுண்டு எழுந்தே இக்கிளர்ச்சியை இவர்கள் நடத்தினர். இக் கிளர்ச்சிக்காரர்களைத் திருப்திப்படுத்துவதற்காக கவுண்ட் விட் செம்ஸ்டோவ்ஸ் என்ற விவசாயப் பிரதிநிதிகள் சபையை 1902-1903ஆம் ஆண்டுகளில் கூட்டினர். இச்சபையில் விவ சாயப் பிரதிநிதிகள் தங்கள் குறைகளையும், கோரிக்கைகளையும் கூறித் தங்களுக்குத் தேவையான விவசாய சீர்திருத்தங்களையும், சட்டங்களையும் எடுத்துரைப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர். இச்சபையில் இருந்த பிரதிநிதிகளில் பெரும்பாலோர் நிதி யமைச்சர் கவுண்ட்விட்டின் புதிய பொருளாதாரக் கொள்கை களையும், அப்பொருளாதாரக் கொள்கைகளை அனுமதித்த செயலேயும்பெரிதும் குறை கூறினர்கள். இவர்களில் பெரும்பா லோர் பிளேஃவி என்பவராலும், அவருடைய ஆதரவாளர்களா தூண்டப்பட்டே கவுண்ட்விட்டுக்கு எதிராகக் குறை கூறி னர்கள் என்பது நன்கு புலனாகியது. இருப்பினும் மன்னருடைய எதேச்சாதிகாரப் போக்கிற்கு எதிராக நடப்பதுடன், மக்களையும் தயார் செய்கிறார் என்று கருதிய இரண்டாம் நிகோலஸ் 1903ஆம் ஆண்டு கவுண்விட்டை நிதியமைச்சர் பதவியிலிருந்து நீக்கினர். விட் பதவி விலகியதில் நிலச்சுவாந்தார்கள் திருப்தியடைந் தாலும், ஸார் மன்னர் விட்டின் புதிய பொருளாதாரக் கொள்கை களைத் தொடர்ந்து பின்பற்றி வந்ததால், சுதந்திரக் கருத்துக் களால் விழிப்புணர்ச்சி பெற்ற மக்கள் பலர், அவருக்கு எதிராகச் செயல்படத் தொடங்கினர்கள்.

ஆனல் புதிய பொருளாதாரக் கொள்கைகள் யாவும் பூஷ்வாக்களின் நன்மைகளுக்காக மட்டுமே மன்னரால் செயல்பட்டாலும், பூஷ்வாக்கள் யாவரும் திருப்தியடைய வில்லே. தங்களுடைய நலன்களுக்காகவும், முன்னேற்றத்திற் காகவும் பாடுபட்ட கவுண்ட்விட்டை நிதியமைச்சர் பதவி யிலிருந்து நீக்கியதை பூஷ்வாக்கள் யாவரும் விரும்பவில்லே. எனவே இவர்களும் தங்கள் மன்னருக்கு எதிராகச் செயல் படத் தொடங்கினர்கள். வளர்ந்து வரும் வாணிகர்கள், தொழிலதிபர்கள், வங்கி முதலாளிகள் ஆகியோர் தங்கள் பாதுகாப்பு மன்னருடைய எதேச்சாதிகாரப் போக்கைக் கட்டுப் படுத்துவதிலேயே இருக்கிறது எனக் கருதினர்கள். அத்துடன்

அரசியல் அமைப்புக்குக் கட்டுப்பட்ட அரசாங்கத்தைத் தங்கள் நாட்டில் நிறுவுவதின் மூலம் தங்களுடைய குறைகளையும், கோரிக்கைகளையும் நேரிடையாக மக்களுக்கு நன்கு எடுத்துச் சொல்ல முடியும் என்றும் கருதினர். எனவே வியாபாரிகள், தொழிலதிபர்கள், வங்கிகளின் அதிபர்கள் ஆகியோர் ஸார் மன்னருக்கு எதிராக ஒன்று சேர்ந்தனர். இவர்கள் விடுதலைக் கருத்துக்களாலும், மேலைநாட்டுத் தத்துவ அறிஞர்களின் கருத்துக்களாலும் மேலும் விழிப்புணர்ச்சியடைந்தனர். இவ்வாறு ஒன்றுபட்டவர்கள் 1904ஆம் ஆண்டில் ஒரு புதிய விடுதலைக் கட்சியைத் தோற்றுவித்தனர். இது "விடுதலை வீரர்களின் இயக்கம்" (Union of Liberators) என வழங்கப்பட்டது.

பழைய கருத்துக்களில் நம்பிக்கை கொண்டிருந்த நிலச்சுவாந்தார்கள் ஸார் மன்னருடைய புதிய பொருளாதாரக் கொள்கையில் அதிருப்தியடைந்து மன்னருக்கு எதிராகச் செயல்படத் தொடங்கியதாலும், பூஷ்வாக்கள் புதிய கட்சியைத் தொடங்கியதாலும், விவசாயிகளும் மன்னர் மீது வெறுப்பு அடைந்தனர். நகரங்களில் வாழும் தொழிலதிபர்களிடையே புரட்சி இயக்கங்கள் வளர்ச்சியடையத் தொடங்கின. புரட்சிக் கருத்துக்கள் மிகத் தீவிரமாக மக்களிடையே பரப்பப்பட்டன. இதன் பயனாக அறிஞர்களும் தொழிலாளர்களும், விவசாயிகளும் அரசாங்கத்திற்கு எதிராக ஆங்காங்கே இரகசியக் கழகங்களை ஏற்படுத்தினர். இக்கழகங்கள் ஸார் மன்னருடைய அரசாங்க அதிகாரிகளைக் கொலைசெய்வதற்கும், தேவையானால் விடுதலைக்காகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்வதற்கும் தங்களைத் தயார்படுத்திக் கொண்டிருந்தனர்.

தங்கள் மன்னருக்கு எதிராக இரஷ்ய மக்கள் செயல்படத் தொடங்கிய இச்சமயத்தில் முடியாட்சிக்கு எதிராக கார்ல் மார்க்ஸின் (Kral Marx) கருத்துக்கள் இரஷ்ய மக்களிடையே மிக வேகமாகப் பரவ ஆரம்பித்தன. இதன் பயனாக இரஷ்யாவில் இரண்டு புரட்சி இயக்கங்கள் தோன்றின. இவற்றில் முதலாவது, சோஷியலிச ஜனநாயகக் கட்சி (Social Democratic Party) எனப்பட்டது. இது 1898-ல் தோற்றுவிக்கப்பட்டது. இக்கட்சி மார்க்ஸின் சோஷியலிஸக் கோட்பாடுகளை மேற்கு நாடுகளின் தன்மைகளுக்கு ஏற்ப மிகத் தீவிரமாகப் பின்பற்றியது. தத்துவ அறிஞர்களும், நகரத்தில் வாழ்ந்த தொழிலாளர்களுமே இக்கட்சியில் பெரும்பாலும் அங்கத்தினர்களாக இருந்தனர். இரண்டாவது, சோஷலிஸ்ட் புரட்சிக்கட்சி

(Socialist Revolutionary Party) எனப்பட்டது. இக் கட்சி 1900ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இது மார்க்ஸின் சோஷலிஸக் கோட்பாடுகளை இரஷ்ய விவசாயிகளிடையே பரம்பரையாக நிலவி வந்த சமுதாய முறைக்கு ஏற்பப் பரப்பு வதற்கு முயற்சித்தது. மேலும் இது இரஷ்ய நாட்டின் விளை நிலங்கள் யாவும் ஒன்றுபடுத்தப்பட்டு பாரபட்சமற்ற முறையில் அவற்றை உழுது பயிர் செய்பவர்களுக்குச் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என வற்புறுத்தியது. எனவே விவசாயத் தொழிலாளர்களில் பெரும்பாலோர் இக்கட்சியில் அங்கத்தினர்களாக இருந்தனர்.

இவ்விரண்டு இயக்கங்களிலும் சோஷியலிஸ்ட் புரட்சிக் காரர்கள், விவசாயிகள் ஆகியோர் அதிக எண்ணிக்கையில் இருந்தனர். அதனால் அதிக வலிமை பெற்றிருந்த அவர்கள் மிக விரைவில் மத்திய வர்க்கத்தினருடனும், விடுதலைக் கருத்துக் களால் விழிப்புணர்ச்சி பெற்றவர்களுடனும் ஒன்று சேர்ந்து அவர்களின் தலைமையின்கீழ் அரசியல் சீர்திருத்தங்களையும் சமுதாய சீர்திருத்தங்களையும் இரஷ்யாவில் ஏற்படுத்துவதற் காகப் பாடுபட்டனர். தொடக்கத்தில் சோஷியலிஸஜனநாயகக் கட்சியினர் அதிக எண்ணிக்கையையோ அதிக செல்வாக் கையோ பெற்றிருக்கவில்லை. இவர்கள் தங்கள் கருத்துக்களைச் செயல்படுத்தும் முறைகளைக் கையாளுவதில் கருத்து வேற்றுமை கொண்டு 1903ஆம் ஆண்டில் போல்ஷிவிக் (Bolshevik) எனவும், மென்ஷிவிக் (Menshevik) எனவும் இரண்டாகப் பிரிந்தனர். இவர்களில் போல்ஷிவிக்குகள் இடதுசாரியினராக வும்,மென்ஷிவிக்குகள் வலதுசாரியினராகவும் கருதப்பட்டனர்.

இந்நிலையில் இரஷ்யப் பேரரசு இரஷ்ய மயமாக்கப்பட்ட பொழுது பாதிக்கப்பட்ட போலந்துக்காரர்களும், யூதர்களும், பின்லாந்துக்காரர்களும், மற்ற பிற இனத்தவர்களும் இரஷ்யப் பேரரசுக்கு எதிராகச் செயல்படத் தொடங்கினர்கள். இவர்கள் இரஷ்யப் பேரரசருக்கு எதிராகத் துவக்கப்படும் எந்த இயக் கமும் தங்களுக்கு ஆதரவாக இருந்ததால் தங்கள் முழு ஆதர வையும் கொடுப்பதற்குத் தயாராக இருந்தனர்.

எனவே இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் புரட்சிக் கான அறிகுறிகள் இரஷ்யாவின் ஆக்ரமிப்புக் கொள்கையா லும் இரஷ்யாவின் உள்நாட்டு நிலைகளாலும் ஏற்படத் தொடங்கின.

11. உதுமானியப் பேரரசும் பால்கன் நாடுகளும்

உதுமானியப் பேரரசு 1878ஆம் ஆண்டில் ஐரோப்பிய நாடுகளுடனும், இரஷ்யாவுடனும் செய்துகொண்ட பெர்லின் உடன்படிக்கையின்படி பல பகுதிகளை இழந்தாலும், அவ்வாண்டில் ஒரு பேரரசுக்குப் போதுமான நிலப்பரப்பைப் பெற்றிருந்தது. ஐரோப்பாவில் இப்பேரரசின் பகுதிகள் மேற்கே ஏட்ரியாடிக் கடலின் கீழ்க்கரையிலிருந்து கிழக்கே கருங்கடல் வரை பரவியிருந்தன. இப்பகுதியில் அல்பேனியா, மாசிடோனியா, தெரெஸ் என்ற பகுதிகள் அடங்கியிருந்தன. தற்பொழுது இஸ்தான்புல் என்றழைக்கப்படும் கான்ஸ்டாண்டிநோபிள் இப்பேரரசின் தலைநகரமாகப் பழங்காலந்தொட்டு விளங்கி வந்தது. ஆசியாவில் இப்பேரரசு மேற்கே ஈஜிக் கடலிலிருந்து கிழக்கே ஆசியா வரையிலும் பரவியிருந்தது. கருங்கடலும் செங்கடலும் முறையே இப்பேரரசின் வடக்கு எல்லையாகவும், தெற்கு எல்லையாகவும் திகழ்ந்தன. ஆசியா, ஐரோப்பா ஆகிய இவ்விரு கண்டங்களுக்கிடையே ஈஜிக் கடலில் கிரீட் தீவு உள்ளிட்ட பல தீவுகளையும், வடக்கு ஆப்பிரிக்காவில் டிரிபோலி (Tripoli), பார்கா (Barca) ஆகிய மாநிலங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கியது. மேலும் ஹாப்ஸ்பர்க் பேரரசான ஆஸ்திரியா-ஹங்கேரியின் ஆட்சிக்குட்பட்டிருந்த பாஸ்னியா, ஹெர்ஸெகோவினா, நோவிபஸார் ஆகிய பகுதிகளின் மீதும் பல்கேரிய இளவரசரால் ஆளப்பட்டு வந்த பல்கேரியாவின் மீதும், பிரிட்டனின் ஆட்சிக்குட்பட்டிருந்த சைப்ரஸ் (Cyprus) மீதும், 1866ஆம் ஆண்டு முதல் தனியாக இயங்கி வந்த எகிப்தின் மீதும் உதுமானியப் பேரரசு ஆதிக்கம் செலுத்தி வந்தது.

இப்பேரரசு ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா ஆகிய மூன்று கண்டங்களிலும் ஆதிக்கம் செலுத்தி வந்தாலும் இப்பேரரசின் பகுதிகள், ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின்னர் சிறிது சிறிதாக நலியத் தொடங்கியது. பதினெட்டாம் நூற்றாண்டு முழுவதும் இப்பேரரசின் அரசர்கள் இப்பேரரசை வலிமையுடையதாக்குவதற்கும், இதன் பெருமையையும் புகழையும் மேம்படச் செய்வதற்கும் எந்த வகையிலும் முயலவில்லை. இறுதியாக பிரிட்டன், ஜெர்மனி, பிரான்சு, இத்தாலி, இரஷ்யா, ஆஸ்திரியா, ஹங்கேரி ஆகிய ஆறு ஐரோப்பிய நாடுகளும் ஒன்று சேர்ந்து, துருக்கிப் பேரரசு ஐரோப்பாவின் வளர்ச்சிக்கு எந்த வகையிலும் காரணமாக இராது

என்பதை நன்கு உணர்ந்தன. துருக்கியப் பேரரசு ஐரோப்பாவிற்கு எந்த வகையில் உதவுமுடியும் என்று நினைப்பதற்குப் பதிலாக, இப்பேரரசின் நிலையை எண்ணி ஐரோப்பிய நாடுகள் இப்பேரரசுக்கு எந்த வகையில் உதவ முடியும் என எண்ணத் தொடங்கின. எனவேதான் துருக்கியின் இத்தகைய நிலையில் வரலாற்றாசிரியர்கள் துருக்கியை 'ஐரோப்பாவின் நோயாளி' (The Sick man of Europe) என அழைக்கத் தொடங்கினார்கள்.

இயந்திரத் தொழிலின் வளர்ச்சியின் காரணமாக ஐரோப்பிய நாடுகளில் பொருளாதாரம், மக்கள் தொகை, அரசியல், இராணுவம் ஆகிய துறைகளில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டு மக்களாட்சிக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அரசியலமைப்பிற் குட்பட்ட அரசாங்கங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்த பொழுது உதுமானியத் துருக்கியப் பேரரசில், எந்தவித மாற்றங்களும் ஏற்படாமல் பொருளாதாரம், அரசியல், இராணுவம் ஆகிய பேரரசின் முக்கிய துறைகள் மிகப் பழமையான முறையிலேயே செயல்பட்டு வந்தன. மற்ற ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் பெரும் பரப்பளவைக் கொண்டிருந்த இப்பேரரசில் மக்கள் தொகை அவ்வளவாக வளர்ச்சியடையவில்லை. எடுத்துக்காட்டாக 1878ஆம் ஆண்டிற்கும் 1914ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட இருபத்தாறு ஆண்டுகளில் இப்பேரரசின் மக்கள் தொகை சுமார் இரண்டு கோடியே ஐம்பது லட்சமாக மட்டுமே இருந்தது. இவர்கள் அனைவரும் பெரும்பாலும் விவசாயத்தையே நம்பி இருந்ததுடன் மிகப் பழைய முறைகளையே கையாண்டு விவசாயம் செய்துவந்தனர். மேலும் இப்பேரரசின் வருவாய் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களே இல்லாமலிருந்தது. எனவே இப்பேரரசு அரசியல், இராணுவம் போன்ற துறைகளில் ஐரோப்பிய நாடுகளுடன் எந்த வகையிலும் போட்டியிட முடிய வில்லை.

அத்துடன் ஐரோப்பிய நாடுகளில் பெரும்பாலானவை வல்லரசுகளாகவும், தேசிய இனம் சார்ந்த நாடுகளாகவும் தங்கள் நாடுகளில் வாழ்ந்து வந்த மக்களின் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுத்து, மக்களாட்சித் கொள்கையின் அடிப்படையில் அரசாங்கங்களை அமைத்துச் செயல்பட்டு வந்த பொழுது உதுமானியப் பேரரசு மட்டிலும் சமயம், இராணுவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஏகாதிபத்திய முறையில் செயல்பட்டு வந்தது. அதனால் இப்பேரரசின் கீழ் வாழ்ந்த மக்களுக்கு எந்தவித நன்மையும் ஏற்படாததுடன்

பொருளாதாரத் துறையில் நெருக்கடி நிலையும் ஏற்பட்டது. இப்பேரரசின் மன்னர் சுல்தான் (Sultan) என்ற பட்டப் பெயருடன் மதச் சார்பற்ற நிலையில் இரஷ்யாவின் ஸார் மன்னரைப் போல கொடிய யதேச்சதிகார முறையில் ஆட்சி புரிந்து வந்தார். அத்துடன் துருக்கியின் முதல்வராகவும், உலகநாடுகள் முழுவதும் வாழ்ந்து வந்த பழைய கருத்துக்களை உடைய முகம்மதியர்களுக்கெல்லாம் தலைவராகவும் காலிப் (Caliph) என்ற பட்டப்பெயருடன் விளங்கி வந்தார். எல்லா வற்றிற்கும் மேலாக உதுமானியத் துருக்கியர்கள் தங்கள் சுல்தானிடம் பெரும் அளவில் அதிகாரிகளாகப் பணிபுரிந்தனர். இவ்வதிகாரிகள் சுல்தானுடைய ஆட்சியில் முக்கிய பங்கு வகித்து வந்தனர். இவர்களில் பெரும்பாலோர் சுல்தானின் இராணுவத்தில் பணியாற்றினார்கள். இவர்கள் அனைவரும் அனடோலியா (Anatolia) என்ற பகுதியில் பன்னெடுங் கால மாக வாழ்ந்து வந்த பூர்விகக் குடிமக்களாவர். ஆனால் உதுமானியத் துருக்கியர்கள் இப்பேரரசில் சிறுபான்மையின ராக விளங்கினர். இவர்களிடம் தேசியக் கருத்துக்களும், தேசிய இயக்கங்களும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் வளர்ச்சியடைந்ததைப் போல வளர்ச்சி யடையவில்லை.

இப்பேரரசின் வளர்ச்சி மிகப்பின் தங்கிய நிலையில் இருந்ததாலும், மக்களுக்கு நன்மை செய்வதில் அதிக அக்கறை காட்டாமல் இருந்ததாலும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பல தவிர்க்க முடியாத தொல்லைகளை அனுபவிக்க வேண்டியதா யிற்று. ஆனால் அதேசமயத்தில் ஐரோப்பாவில் தொழில் வளர்ச்சி மிக வேகமாக ஏற்பட்டதுடன் தேசியக் கருத்துக்களும் தேசிய இயக்கங்களும் மிக வேகமாக வளர்ச்சி யடைந்தன.

இந்நிலையில் அப்துல் அஸிஸ் (Abdul Aziz) என்பவர் 1861ஆம் ஆண்டு முதல் 1876 வரை இப்பேரரசின் சுல்தானாக ஆட்சி புரிந்தார். இவருடைய ஆட்சிக் காலத்தில் உதுமானியப் பேரரசு நலிவுறத் தொடங்கியது. இப்பேரரசின் கருவூலமும் திவாலாகி வந்தது. இவருக்குப் பின் ஐந்தாம் முரட் (Murad V) என்பவர் 1876-ல் சுல்தானாகப் பதவியேற்றார். ஆனால் அதே ஆண்டில் அரண்மனையில் ஏற்பட்ட புரட்சியின் காரணமாக இரண்டாம் அப்துல் ஹமீது (Abdul Hamid II) என்பவர் உதுமானியப் பேரரசின் சுல்தானாகப் பதவியேற்றார். இவர் 1909ஆம் ஆண்டு வரை துருக்கி சுல்தானாகப் பதவி வகித்தார்.

இரண்டாம் அப்துல் ஹமீது

இரண்டாம் அப்துல் ஹமீது துருக்கியின் சுல்தானகப் பதவியேற்றவுடன் உதுமானியப் பேரரசை நவீனமயமாக்கும் (Modernising) முயற்சிகளை மேற்கொள்வது போலப் பாவனை செய்தார். மேற்குநாடுகளைப் போல புதிய அரசியலமைப்பு ஒன்றை ஏற்படுத்தி நடைமுறைக்குக் கொண்டுவருவதாக அறிவித்தார். ஆனால் தீவிர முகம்மதியர்கள் தங்கள் வணக்கத் திற்குரிய பழைய பேரரசின் அமைப்பிற்குப் பதிலாக எந்த ஒரு புதுமையான அமைப்பையும் ஏற்படுத்த விரும்பாமல் மிகக் கடுமையாக எதிர்த்தனர். எனவே இயற்கையாகவே, எதேச் சாதிகார மனப்பான்மை கொண்டிருந்த சுல்தான், தான் ஏற்படுத்திய புதிய அரசியலமைப்பு செயல்படுவதை நிறுத்தி வைத்தார். இந்த அரசியலமைப்பு உதுமானியப் பேரரசில் ஏறத்தாழ முப்பதாண்டுகள் வரை காகிதத்தில் மட்டுமே இருந்தது. இரண்டாம் அப்துல் ஹமீது தன்னுடைய ஆட்சிக் காலத்தின் தொடக்க காலத்தில் பாஸ்னியர்களும், பல்கேரியர் களும், பேரரசுப் பகுதியில் நுழைந்து தொல்லைகள் கொடுத்து வந்ததைத் தடை செய்ய முயற்சிகளை மேற்கொள்ளாததுடன், இரஷ்யாவின் படையெடுப்பைத் தடுப்பதற்கான முயற்சிகளை யும் மேற்கொள்ளவில்லை. சுல்தானின் இத்தகைய செய்கையால் இரஷ்ய-துருக்கிப் போர் (1877-78) ஏற்பட்டு துருக்கியின் எல்லைகள் சற்று சுருங்கியது. இப்பேரரசின் வலிமையும் குறைந்தது. உதுமானியப் பேரரசைச் சுற்றிலும் பல எதிர்ப்புச் சக்திகள் வளர்ச்சி யடைந்தன.

உதுமானியப் பேரரசில் ஐரோப்பிய வல்லரசுகளின் தலையீடு

முதலாவதாக, ஐரோப்பாவின் வல்லரசுகள் உதுமானியப் பேரரசின் வலிமைக் குறைவைப் பயன்படுத்திக் கொண்டு பொருளாதாரம், அரசியல் ஆகிய துறைகளில் அதிக இலாபம் பெற விரும்பின. தனது பேரரசின் மீது படையெடுத்த இரஷ் யாவிற்குத் தன்னுடைய பேரரசிலிருந்து சில பகுதிகளை விட்டுக் கொடுப்பதன் மூலம் சுல்தான் இரஷ்யப் படையெடுப் பைத் தவிர்த்து, மேலும் பல பகுதிகளை இரஷ்யா கைப்பற்றாமல் இருப்பதற்கான ஏற்பாட்டைச் செய்தார். இரஷ்யாவிற்கு எதிராக உதுமானியப் பேரரசுக்கு ஆஸ்திரியா, ஹங்கேரி, பிரிட்டன் போன்ற நாடுகள் உதவிபுரிவதற்கு முன் வந்தன. ஆனால் இவ்வுதவிக்காக உதுமானியப் பேரரசுக்குச் சொந்த மான சைப்ரஸ் என்ற பகுதியை பிரிட்டனும், பாஸ்னியர்கள் வாழும் ஹெர்ஸெகோவினா, நோவிபஸார் போன்றவற்றை

ஆஸ்திரியா-ஹங்கேரிக்கும் விட்டுக் கொடுத்தது. இதனை அடுத்து பேரரசின் சுல்தான் 1878-ல் பெர்லின் உடன்படிக் கையை ஏற்றுக்கொண்டு ஐரோப்பிய வல்லரசு நாடுகளைப் போல பல சீர்திருத்தங்களைத் தனது பேரரசில் ஏற்படுத்து வதற்கு ஒப்புக்கொண்டார். இவ்வாறு புதிய சீர்திருத்தங் களைத் தன்னுடைய பேரரசில் ஏற்படுத்த ஒப்புக் கொண்டதால் இவருக்குப் பல துருக்கியர்கள் பகையாயினர். இத்துடன் சீர்திருத்தங்களைச் செயல்படுத்தாததைக் காரணமாகக் காட்டி வெளிநாட்டவர்கள் உதுமானியப் பேரரசில் தலையிட்டனர்.

முன்னதாகவே சீர்குலைந்த நிலையில் இருந்த பேரரசின் வருவாய் துருக்கி-இரஷ்யப் போருக்குப் பின்னர் மேலும் சீர்கேடுற்றது. இதனையடுத்து ஏற்பட்ட பொருளாதார நெருக் கடியின் காரணமாக, சுல்தான் இரண்டாம் அப்துல் ஹமீது தனது நாட்டின் வருவாயை அந்நிய வங்கிகளின் உரிமையாளர் களிடம் 1881-ல் அடகு வைத்தார். மக்களுக்கு எவ்வித நன்மையும் செய்யாமல் மேலும் அதிக வருவாயைப் பெற வேண்டிப் பல புதிய வரிகளை விதித்தார். எனவே பேரரசின் பல பகுதிகளில் அமைதியின்மை நிலவியது. பிரிட்டன், பிரான்சு, ஜெர்மனி ஆகிய வெளிநாட்டு முதலாளிகள் தங்கள் மூலதனத்தை உதுமானியப் பேரரசில் முதலீடு செய்து அதிக இலாபத்தையும் உரிமைகளையும் பெற்றனர். மேலும் இலாபத் தையும், உரிமைகளையும் பெற வேண்டி, ஒவ்வொரு வல்லரசும் தங்கள் அரசாங்கத்தின் ஆதிக்கத்தை உதுமானியப் பேரரசில் ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்தன.

ஐரோப்பிய வல்லரசுகளின் ஆதிக்கத்தையடுத்து உதுமானியப் பேரரசுக்கு அதிக இடையூறாக அமைந்தது இப்பேரரசில் பரவிவந்த தேசியக் கருத்துக்களாகும். தேசியக் கருத்துக்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத் திலேயே உதுமானியப் பேரரசில் பரவத் தொடங்கியிருந்தன. இதன்பயனாக 1832ஆம் ஆண்டில் கிரீஸ் தனியாகப் பிரிந்து தேசிய நாடாக விளங்கியது. பின்னர் சுல்தான் ருமேனியா, செர்பியா, மான்டிநீக்ரோ ஆகிய தேசிய நாடுகளின் முழு சுதந்திரத்தையும், பல்கேரியாவின் சுயாட்சி உரிமையையும், கிழக்கு ருமேனியாவின் பகுதி சுயாட்சி (Partial autonomy) உரிமையையும், 1878-ல் ஏற்பட்ட பெர்லின் உடன்படிக்கை யின்படி அங்கீகரித்தார். ஆனால் ருமேனியா, செர்பியா மான்டிநீக்ரோ, பல்கேரியா, கிழக்கு ருமேனியா ஆகியவை தாங்கள் சுல்தானிடமிருந்து பெற்ற உரிமைகளுடன் திருப்தி

யடையாமல் உதுமானியப் பேரரசில் துருக்கியர்களின் தொல்லைகளுக்காளாகிக் கொண்டிருந்த தங்கள் இனத்தவர் களின் விடுதலைக்காகப் பாடுபடத் தொடங்கின. இதன் பயனாக மேற்சொன்ன நாடுகள் துருக்கிய சுல்தானுக்கு எதிராகத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்தன. தேவையான பொழுது துருக்கியர்களுடன் போரிடுவதற்காக ஒரு சிறிய படையைத் தயார் செய்தன. துருக்கியர்களின் நடவடிக் கைகளை அறிந்து கொள்ள ஆங்காங்கே பல இரகசியக் கழகங்களை ஏற்படுத்தின.

இத்தகைய தேசிய இயக்கங்கள் துருக்கிப் பேரரசின் கிறிஸ்துவ மக்களிடையே மட்டுமல்லாமல் அல்பேனியர் களிடத்திலும், அமெரிக்கர்களிடத்திலும், ஆப்பிரிக்கர்களிடத் திலும் அதிக செல்வாக்குப் பெற்றன. ஆனால் உதுமானியப் பேரரசில் இருந்த துருக்கியர்கள் அனைவருமே தேசியக் கருத்துக் களுக்குத் தடையாக இருக்கவில்லை. சில துருக்கியர்கள் பிரான்சு, ஜெர்மனி போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பல்கலைக் கழகங்களில் பயின்று வந்தனர். இவர்கள் மேற் கத்திய நாகரிகத்தின் விளைவாகப் பல புதிய கருத்துக்களைக் கொண்டிருந்தனர். மேலும் இவர்களிடையே தேசியக் கருத் துக்கள் செல்வாக்குப் பெறத் தொடங்கின.

இந்நிலையில் துருக்கியர்கள் தங்கள் பேரரசுப் பகுதியில் இருந்த மற்ற இனத்தவரான கிரேக்கர்கள், செர்பியர்கள், ஆர்மேனியர்கள் ஆகியவர்களை அடக்கி. அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தி வாழ நினைத்தனர். ஆனால் கிரேக்கர்களும் செர்பியர்களும், ஆர்மேனியர்களும் தாங்கள் துருக்கியர் களுக்குச் சமமானவர்கள் என்று கருதினாலும், இவர்களில் பலர் தங்களைத் துருக்கியர்களைவிட உயர்ந்தவர்கள் என்றும் கருதினார்கள். இருப்பினும் துருக்கியர்கள் இம்மக்களைத் தங்கள் பேரரசுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்ற முறையிலும், தங்களை விடத் தாழ்ந்தவர்கள் என்ற முறையிலும் அடக்கி ஆதிக்கம் செலுத்தி வந்தனர். இதன் பயனாக, துருக்கியர்களால் ஒடுக்கப் பட்ட கிரேக்கர்கள், செர்பியர்கள், ஆர்மேனியர்கள் ஆகியோர் துருக்கியர்களுக்கு எதிராக மேலும் வெகுண்டெழுந்தனர். எனவே துருக்கியர்கள் இவர்களை மேலும் நசுக்குவதற்குத் தலைப்பட்டனர். இதனால் துருக்கியர்களுக்கும், துருக்கியரல் லாதவர்களுக்கும் இடையே அடிக்கடி தகராறுகளும் கைகலப்புக்களும் ஏற்பட்டன. துருக்கியப் பேரரசில் முகம் மதியர்களும், கிறிஸ்தவர்களும் ஒன்றாக வாழ்த் தலைப்பட்ட

பொழுது பல படுகொலைகளும் நிகழ்ந்தன. இந் நிகழ்ச்சிகளால் தன்மான உணர்ச்சியும், தேசியக் கருத்துக்களின் அடிப்படையில் தேசியநாடுகளை உருவாக்க வேண்டும் என்ற உணர்வும் உதுமானியப் பேரரசின் மக்களிடையே வளர்ச்சியடைந்தன.

சுல்தான் இரண்டாம் ஹமீதைப் பொறுத்த மட்டில் ஓரளவு திறமையற்றவராக இருந்தாலும், உதுமானியப் பேரரசு அழிந்து படுவதைத் தடுத்து நிறுத்தினர். அத்துடன் ஒரு வல்லரசுக்கு எதிராக மற்ருெரு வல்லரசுடன் சேர்ந்து கொண்டார். அதே போல் ஒரு பால்கன் நாட்டிற்கு எதிராக மற்ருெரு பால்கன் நாட்டுடன் நட்புறவு கொண்டார்.

தன்னுடைய பேரரசை அழிவிலிருந்து பாதுகாப்பதற்காகவும், இரஷ்யப் படை எடுப்பைத் தடை செய்வதற்காகவும் முதலில் பிரிட்டனை நம்பினர். பின்னர் தன்னுடைய கருத்துக்களையும், கொள்கைகளையும் நிறைவேற்றுவதற்கு நம்பிக்கைக்குப பாத்திரமான நாடு ஜெர்மனிதான் எனக் கருதினர். அரசியலில் பின்தங்கிய நிலையிலும், தன்னுடைய பேரரசின் பல பகுதிகளை இழந்தநிலையிலும் உதுமானியப் பேரரசு இருந்தாலும், இரஷ்யாவையோ பிரிட்டனையோ தோற்கடிப்பதற்குத் தேவையான வலிமை துருக்கியர்களிடையே காணப்பட்டது. இருப்பினும் துருக்கிய சுல்தான் இரண்டாம் அப்துல் ஹமீது ஜெர்மனியுடன் நட்புக் கொண்டார். இதன்படி பல ஜெர்மன் இராணுவ அதிகாரிகள் துருக்கிக்குச் சென்று துருக்கியப் போர் வீரர்களுக்கு நவீன முறையில் போர்ப் பயிற்சியளித்தனர், ஜெர்மானிய இராணுவ அதிகாரிகள் துருக்கிய இராணுவத்தை அங்கீகரித்தனர். ஜெர்மனியிலிருந்து பல பொருளாதார நிபுணர்கள் துருக்கிக்குச் சென்று துருக்கிய பொருளாதாரத்தை மேம்படச் செய்வதற்கான ஆலோசனைகளைக் கூறத் தொடங்கியதுடன், அதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டனர். துருக்கிக்கும் ஜெர்மனிக்குமிடையே மேலும் நட்புறவை வலுப்படுத்துவதற்காக ஜெர்மனியப் பேரரசர் இரண்டாம் வில்லியம் 1889, 1899 ஆகிய ஆண்டுகளில் இருமுறை துருக்கியின் தலைநகரான கான்ஸ்டாண்டிநோபிளுக்கு விஜயம் செய்தார். சுல்தான், இரண்டாம் அப்துல்ஹமீது ஜெர்மனியின் மூலதனக்காரர்களுக்குத் துருக்கியில் பல பொருளாதாரச் சலுகைகளை வழங்கினர். அத்துடன் துருக்கியின் அனுமதியின் பேரில் ஆசிய-துருக்கியின் வழியாக பாக்தாத் (Bagdad)திலிருந்து பாஸ்பரஸ்

(Bosphorus) வரை ஜெர்மானியர்கள் ஓர் இருப்புப் பாதையை அமைத்தனர். பின்னர் இது 1899-ல் பாரசீக வளைகுடா வரையில் விஸ்தரிக்கப்பட்டது. இதனால் துருக்கிக்கும் ஜெர்மனிக்குமிடையே நிலவிய அரசியல் உறவு மேலும் வலுப்பட்டதுடன் இவ்விரு நாடுகளுக்குமிடையே நிலவிய வாணிப உறவும் வளர்ச்சியடைந்தது.

உள்நாட்டுக் கொள்கைகளைப் பொறுத்த அளவில் இரண்டாம் அப்துல் ஹமீது ஒற்றர்களின் உதவியினாலும், கடும் தண்டனைகளாலும் தன்னுடைய எதேச்சாதிகாரத்தை நிலை நாட்டினார். தன்னுடைய பேரரசில் கிறிஸ்துவர்கள் வளர்ச்சியடைந்து சுல்தானுக்கு எதிராகச் கிளர்ச்சிகளை மேற்கொண்டபொழுது, முகம்மதிய மதத்தின் கருத்துக்களைப் பரப்புவதில் வெறியுணர்வு கொண்டிருந்த குர்திஷ் (Kurdish) கூட்டத்தினரை அல்லது அல்பேனியர்களைத் (Albanian) தூண்டிவிட்டு கிறிஸ்துவர்களைப் படுகொலை செய்வதற்கு அனுமதித்தார்.

உதுமானியப் பேரரசின் வீழ்ச்சி

உதுமானியப் பேரரசு திடீரென்று வீழ்ச்சியடைந்து விடாமல் சிறிது சிறிதாக வீழ்ச்சியடைந்தது. பெயரளவில் உதுமானியப் பேரரசுக்குக் கட்டுப்பட்டு அப்பேரரசைச் சார்ந்திருந்த எகிப்தை, சைப்ரஸ் (Cyprus) என்ற பகுதியில் ஆதிக்கம் பெற்றிருந்த பிரிட்டன் 1882ஆம் ஆண்டில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு கைப்பற்றித் தன்னுடைய ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்தது. மேலும் அப்பகுதியின் பாதுகாப்புப் பொறுப்பையும் பிரிட்டன் ஏற்றுக்கொண்டது. இதனையடுத்து 1885-ல் கிழக்கு ருமேலியாவில் (Eastern Rumelia) இருந்த பல்கேரியர்கள் தங்கள் பகுதியில் இருந்த துருக்கிப் பேரரசின் பிரதிநிதியான ஆளுநரைத் தங்கள் நாட்டை விட்டுத் துரத்தினார்கள். கிழக்கு ருமேலியா துருக்கிப் பேரரசில் ஓரளவு சுயாட்சி பெற்றிருந்தது. ஆனால் இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் இது முழு சுயாட்சி உரிமை பெற்றது. கிழக்கு ருமேலியா சுயாட்சி பெற்றது, உதுமானியப் பேரரசுக்கு ஒரு பேரிழப்பாகும்.

பின்னர் 1896ஆம் ஆண்டில் உதுமானியப் பேரரசின் ஆட்சிக்குட்பட்டிருந்த கிரீட் (Crete) தீவில் வாழ்ந்து வந்த கிரேக்கர்கள் பேரரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார்கள். அடுத்த ஆண்டில் தங்கள் இனத்தவர்க்கு ஆதரவாக கிரீஸ் (Greece) உதுமானியப் பேரரசுடன் போர் தொடுத்தது. துருக்கிய சுல்தானுடைய போர்வீரர்கள் நேரடியாக கிரீஸ்

நாட்டுடன் போரிட்டனர். இப்போரின் தொடக்கத்தில் துருக்கிப் போர்வீரர்கள் கிரேக்கப் படையைப் பல இடங்களில் தோற்கடித்து ஏதென்ஸ் (Athens) நகரம் வரை முன்னேறினார்கள். இச்சமயத்தில் கிரீஸ் நாட்டின் பாதுகாப்பில் அக்கறை கொண்ட இரஷ்யா, பிரிட்டன், பிரான்சு, இத்தாலி ஆகிய நான்கு நாடுகளும் தலையிட்டு கிரேக்க-துருக்கிப் போரை (Greeco-Turkish War) முடிவுக்குக் கொண்டு வந்தனர். இப்போரின் விளைவாக கிரீஸ் நாடு துருக்கிக்கு ஒரு குறிப்பிட்ட தொகையைப் போர் நஷ்டஈடாகக் கொடுக்க ஒப்புக்கொண்டதுடன், துருக்கிப் பேரரசுக்குச் சாதகமாகத் தன்னுடைய வடக்கு எல்லைகளைத் திருத்தியமைத்துக் கொள்ள ஒத்துக்கொண்டது. கிரீஸ் நாடு கிரீட் தீவைத் தன்னுடன் இணைத்துக்கொள்ள முடியாமல் போனாலும் உதுமானியப் பேரரசும் இத்தீவைத் தன்னாதிக்கத்தின் கீழ் தொடர்ந்து வைத்துக்கொள்ள முடியவில்லை. நான்கு வல்லரசுகளின் பாதுகாப்பிற்குட்பட்டு கிரீட் தீவு சுயாட்சி உரிமையுடன் விளங்கத் தொடங்கியது. பிரிட்டன், பிரான்சு, இரஷ்யா, இத்தாலி ஆகிய நான்கு நாடுகளும், கிரீஸ் நாட்டின் அரசரது மகனை, கிரீட் தீவின் ஆளுநராக ஒருமனதாக நியமித்தன.

கிரேக்கர்களையடுத்து 1894-ல் ஆர்மேனியர்கள் துருக்கிய சுல்தானுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். இக்கிளர்ச்சி ஈவு இரக்கமற்ற முறையில் ஒடுக்கப்பட்டது. குர்திஷ்களும், கோபம் மிக்க முகம்மதியர்களும் சேர்ந்துகொண்டு ஏறத்தாழ இரண்டு இலட்சம் ஆர்மேனியக் கிறிஸ்துவர்களைக் கொலை செய்தார்கள். (துருக்கி, ஈரான், ஈராக், சிரியா ஆகிய பகுதிகளின் பீடபூமியில் வாழ்ந்த விவசாயிகளும், கால்நடைகளைப் பராமரிப்பவர்களும் குர்டுகள் (Kurds) என அழைக்கப்பட்டனர்.) வல்லரசுகள் சுல்தானுடன் சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடத்தின. அதன்பயனாகத் துருக்கிய சுல்தானான இரண்டாம் அப்துல் ஹமீது ஆர்மேனியாவில் சில சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதாக உறுதியளித்தார். ஆனால் இந்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே சுல்தான் அப்துல் ஹமீதினுடைய அரசாங்கத்திற்கு எதிர்ப்புக்கள் தோன்ற ஆரம்பித்தன. இதன் பயனாக ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் வாழ்ந்த முகம்மதியர்களும், கிறிஸ்தவர்களும் பாதிக்கப் பட்டனர். சுல்தானிய அரசாங்கத்துக்கு எதிரான கிளர்ச்சிகள் துருக்கிப் பேரரசு முழுவதும் பரவின. அதனால் இப்பேரரசு முழுவதும் அமைதி குலைந்தது.

துருக்கியில் இரண்டாம் அப்துல் ஹமீதின் அரசுக்கு எதிராக ஏற்பட்ட கிளர்ச்சிகள் அந்நாட்டில் தேசியக் கருத்துக்கள் மக்களிடையே வேரூன்ற ஆரம்பித்ததைப் புலப்படுத்தின. இதன் பயனாக வெளிநாட்டவர்கள் துருக்கியின் உள்நாட்டுக் கொள்கைகளில் தலையிட்டுத் துருக்கிய அரசாங்கத்தையும் மக்களையும் சுரண்ட ஆரம்பித்தனர். வெளிநாட்டவர்களின் இத்தகைய தலையீட்டிற்குக் கிளர்ச்சிக்காரர்களும் ஆதரவளித்தனர். இதன் பயனாகத் துருக்கியின் பொருளாதாரம் சீர் குலைந்தது. துருக்கிய மக்களும் கடன் சுமைக் குள்ளானார்கள். ஆனால் அந்நியர்கள் தலையீடு துருக்கியில் அமைதியை ஏற்படுத்தியதுடன், துருக்கிப் பேரரசின் பகுதிகளுக்கும் பாதுகாப்பளித்தது; துருக்கியின் புகழும் அழிவிலிருந்து ஓரளவு பாதுகாக்கப்பட்டது.

உதுமானியப் பேரரசில் இரண்டாம் அப்துல் ஹமீதின் ஆட்சிக் காலத்தில் துருக்கியில் அந்நிய ஆதிக்கம் வலுப் பெற்றாலும், அந்நியர்களின் உதவியுடன் உள்நாட்டில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாக இருப்புப் பாதைகளின் மூலம் துருக்கியின் பல பாகங்களும் இணைக்கப்பட்டன. பாக்தாத்திலிருந்து பெர்லின் வரையிலும் ஒரு புதிய இருப்புப் பாதை போடப்பட்டது. இதன் பயனாக, துருக்கிப் பேரரசின் ஒரு பகுதியில் வாழ்ந்த மக்கள் மற்ற பகுதிகளில் வாழ்ந்த மக்களுடன் எளிதாகத் தொடர்பு கொள்ளும் வாய்ப்பைப் பெற்றார்கள். மேலும் துருக்கி மக்கள் மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் நெருங்கிய தொடர்பு கொள்வதற்கு இருப்புப் பாதை வளர்ச்சி மிகவும் உதவியாக இருந்தது. ஆனால் 1908ஆம் ஆண்டில் துருக்கியில் ஏற்பட்ட உள்நாட்டுக் கிளர்ச்சிகளும் வெளிநாட்டுப் போர்களும் உதுமானியப் பேரரசு மேலும் நலிவடைந்து வீழ்ச்சியடைவதற்குக் காரணமாக அமைந்தன.

கிரீஸ் (Greece)

இரண்டாம் அப்துல் ஹமீது உதுமானியத் துருக்கிப் பேரரசின் பேரரசராக இருந்தபொழுது பால்கன் நாடுகளிடையே தேசிய உணர்ச்சிகள் வளர்ச்சியடைந்தன. இதன் பயனாக உதுமானியத் துருக்கிப் பேரரசிலிருந்து சில நாடுகள் விடுதலை பெற்றன. சில நாடுகள் ஓரளவு சுதந்திரக் கருத்துக்களுடன் விளங்குவதற்குத் துருக்கிப் பேரரசால் அனுமதிக்கப்பட்டன. தேசிய உணர்ச்சிகளால் உந்தப்பட்டு உதுமானியப் பேரரசில்

இருந்து விடுதலை பெற்ற நாடுகளைப் பற்றி இனிச் சிறிது கவனிப்போம்.

உதுமானியப் பேரரசிலிருந்து முதலாவது விடுதலை பெற்ற பால்கன் நாடு கிரீஸ் (Greece). இந்நாட்டில் தேசியக் கிளர்ச்சி முதன்முதலாக 1832 ஆம் ஆண்டு ஏற்பட்டது. பின்னர் 1860 ஆம் ஆண்டிற்கும் 1870 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றிய தேசியக் கிளர்ச்சிகளின் காரணமாகப் புதிய அரசர் ஒருவர் நியமிக்கப்பட்டு, புதிய ஜன நாயக அரசியலமைப்பு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. இப்புதிய ஏற்பாட்டின்படி முதலாம் ஜார்ஜ் என்பவர் கிரீஸ் நாட்டின் மன்னராக 1863 ஆம் ஆண்டு பதவி ஏற்றார், இவர் 1913ஆம் ஆண்டுவரை இந்நாட்டின் மன்னராக விளங்கினர். இம் மன்னரின் ஆட்சிக்காலத்தில் அரசியல், பொருளாதாரம் ஆகிய துறைகளில் பல சிக்கல்கள் இருந்தாலும், கிரீஸ் நாட்டில் குறிப் பிடத் தக்க பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாகப் பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது; மக்களிடையே அறிவு வளர்ச்சி ஏற்பட்டது.

கிரீஸ் நாட்டில் 1832ஆம் ஆண்டிற்கும் 1913 ஆம் ஆண் டிற்கும் இடைப்பட்ட காலத்தில் பல இனத்தவர்கள் வாழ்ந்து வந்தனர். ஆனல் இவர்களில் பெரும்பாலோர் கிரேக்கர்கள். கிரேக்கர்களில் பெரும்பாலோர் கான்ஸ்டாண்டிநோபிளைத் தலைநகராகக் கொண்டிருந்த மாசிடோனியா, தெரெஸ் ஆகிய பகுதிகளிலும், ஆசியாமைனரின் கடற்கரையோரப் பகுதிகளில் அமைந்திருந்த நகரங்களிலும், கிரீட் தீவிலும், ஈஜிக் கடலில் அமைந்திருந்த தீவுகளிலும் வாழ்ந்து வந்தார்கள். இப்பகுதிகள் யாவையும் உதுமானியப் பேரரசின் கீழ் இருந்தமையால் இப் பகுதிகளில் வாழ்ந்து வந்த கிரேக்கர்கள் யாவரும் உதுமானியப் பேரரசின் ஆட்சியின் கீழ் வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் 1879ஆம் ஆண்டில் உதமானியப் பேரரசின் ஆட்சிக்குட்பட்டு இருந்த கிரீட் தீவை கிரீஸுடன் இணைத்துக் கொள்ளுவதற்கு முதலாம் ஜார்ஜ் முயற்சி செய்து தோல்வியடைந்தார். ஆனல் இம்முயற்சியின் காரணமாக எலூதிரியஸ் வெனிஸீலாஸ் (Eleutherios Venizelos) என்ற ஒரு கிரேக்கத் தலைவர் தோன்றி ஞர்.

எலூதிரியஸ் வெனிஸீலாஸ் என்பவர் கிரீட் தீவில் பிறந்த வர். கிரீட் தீவை கிரீஸுடன் இணைக்க வேண்டுமென கிரீட் தீவு மக்கள் புரட்சி செய்த பொழுது இவர் அப்புரட்சிக்குத் தலைமை வகித்து நடத்தினர். மேலும் 1897ஆம் ஆண்டில்

கிரீஸுக்கும் துருக்கிக்கும் ஏற்பட்ட போரின்பொழுது கிரீட் தீவின் அரசாங்கத்தைச் சுயாட்சி உரிமையுடன் சிறப்பாக நடத்தினர். எனவே வெனிஸீலாஸின் புகழ் கிரீஸ் நாடு முழுவதும் பரவியது. இதன் காரணமாக கிரீஸ் நாட்டின் மன்னரான முதலாம் ஜார்ஜ் தன்னுடைய விருப்பத்திற்கு மாருக வெனிஸீலாஸை கிரீஸ் நாட்டிற்கு அழைத்து அவரைத் தனது முதலமைச்சராக நியமித்தார்.

வெனிஸீலாஸ் கிரீஸ் நாட்டின் முதலமைச்சரானவுடன் கிரேக்க அரசாங்கத்தில் சில சீர்திருத்தங்களைச் செய்தார். இராணுவத்தையும், கடற்படையையும் திருத்தி அமைத்தார். செர்பியா, பல்கேரியா ஆகிய நாடுகளுடன் உடன்பாடு செய்து கொண்டு, உதுமானியப் பேரரசுக்கு எதிராக பால்கன் நாடுகளின் கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தினர். இவர் தனது முயற்சிகளாலும், சீர்திருத்தங்களாலும் கிரேக்க மக்களின் ஒருமைப் பாட்டிற்கான போருக்கு கிரேக்கர்களைத் தயார் செய்தார். வரலாற்றுசிரியர்கள் சிலர் இவரை இத்தாலியின் ஐக்கியத்துக்குப் பாடுபட்ட கவூருடனும், ஜெர்மனியின் ஐக்கியத்துக்குப் பாடுபட்ட பிஸ்மார்க்குடனும் ஒப்பிடுகின்றனர்.

ருமேனியா :- ருமேனியர்கள் வாழ்ந்துவந்த மோல்டேவியா (Moldavia), வாலேசியா (Wallachia) ஆகிய உதுமானியத் துருக்கியப் பேரரசின் கீழ் இருந்த பகுதிகள், கிரீமியப் போருக்குப்பின் மூன்ரும் நெப்போலியனது முயற்சியால் 1856ஆம் ஆண்டில் சுயாட்சிப் பகுதிகளாக நிறுவப்பட்டன. இவ் வேற்பாட்டின்படி மேல்டேவியா, வாலேசியா ஆகிய பகுதிகள் தங்கள் தங்கள் பாராளுமன்றங்களின் பிரதிநிதிகளைத் தனித்தனியே தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கும், தங்கள் தங்கள் பகுதிகளின் அரசப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கும் உரிமைகளைப் பெற்றன. ஆனல் இவ்விரு பகுதிகளும் இணையக் கூடாது என்று ஏற்பாடு செய்யப்பட்டது. அலெக்சாந்தர் கூஸா (Alexander Cuza) என்பவர் இப்பகுதிகளின் இளவரசராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். பின்னர் காணப்பட்ட நிலைமைகளின் காரணமாக, மூன்ரும் நெப்போலியன் மீண்டும் முயற்சி செய்து, 1862ஆம் ஆண்டில் மோல்டேவியா, வாலேசியா ஆகிய இரு பகுதிகளையும் ஒருங்கிணைத்தார். அது ருமேனியா என வழங்கப்பட்டது. பின்னர் 1866ஆம் ஆண்டில் ருமேனியாவின் இளவரசர் நீக்கப்பட்டு ஜெர்மனியின் ஹோஹன்ஸோலன் சிக்மரிஞ்ஜன் (Hohenzollern Sigmaringan) வம்சத்தைச் சேர்ந்த முதலாம் சார்லஸ்

(Charles I) என்பவர் இளவரசராக நியமிக்கப் பட்டார். (இவர் முதலாம் க்ரோல் என்றும் அழைக்கப்பட்டார்.) இரஷ்ய-துருக்கியப் போரின் காரணமாக ஏற்பட்ட ஸான்ஸ்டீபானோ உடன்படிக்கையின் படி 1878ஆம் ஆண்டில் மால்டேவியா, வாலேசியா ஆகியவை சேர்ந்த ருமேனியா தனி நாடாக அங்கீகரிக்கப்பட்டது, பின்னர் 1881-ல் ருமேனியா தனி அரசாக அமைக்கப்பட்டது. இளவரசர் முதலாம் சார்லஸ் ருமேனியாவின் மன்னராக முடி சூட்டிக் கொண்டார். இவரது கிரீடம் (முடி) ப்ளீவ்னு என்ற இடத்தில் துருக்கியர்களிடமிருந்து கைப்பற்றப் பட்ட பீரங்கியின் இரும்பிலிருந்து செய்யப்பட்டது என்பது இங்கே குறிப்பிடத் தக்கது ஆகும்.

கிரேக்க நாட்டைப் போலவே ருமேனிய அரசும் தன்னுடைய நாட்டில் மட்டுமல்லாமல் பிற நாடுகளில் வாழ்ந்த ருமேனியர்களின் மீது தன்னுடைய ஆதிக்கத்தைச் செலுத்த ஆசைப்பட்டது. கிரேக்கர்கள் உதுமானியப் பேரரசில் மட்டும் வாழ்ந்தனர். ஆனுல் ருமேனியர்களோ உதுமானியப் பேரரசின் எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளில் மட்டுமல்லாமல் பிற பகுதிகளிலும் வாழ்ந்து வந்தனர். ருமேனியர்கள் வழ்ந்துவந்த கிராமங்கள் மாசிடோனியப் பகுதி முழுவதும் இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பரவியிருந்தன. ஆனுல் வெளி நாடுகளில் வாழ்ந்த பெரும்பாவான ருமேனியர்கள் இரஷ்ய மாநிலங்களில் ஒன்ருன பெஸ்ஸரேபியா (Bessarabia) விலும், ஹங்கேரியப் பகுதியான டிரான்ஸில்வேனியா (Transylvania)விலும், ஆஸ்திரியாவின் முக்கியப் பகுதியான புகோவினு (Bukovina) விலும் வாழ்ந்து வந்தனர். எனவே ருமேனியாவில் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவது ஓரளவு கடினமாக இருந்தது.

ஸான்ஸ்டிபானே உடன்படிக்கையின் பிரிவுகளை மாற்றி அமைப்பதற்காக 1878-ல் கூட்டப்பட்ட பெர்லின் மாநாட்டிற்குப் பிறகு இரஷ்யாவிற்கு எதிரான சக்திகள் ஐரோப்பிய நாடுகளிடையே வலிவடைந்தன. எனவே 1883ஆம் ஆண்டில் ருமேனியா ஆஸ்திரியா-ஹங்கேரி, ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளிடையே ஏற்பட்ட முக்கூட்டு ஒப்பந்தத்திற்கு ஆதரவளித்தது. ருமேனியாவின் இச்செய்கையால் அடுத்த முப்பதாண்டுகளில் ஜெர்மனியின் ஆதிக்கம் ருமேனியாவில் மேலோங்கியது. பிரஷ்ய அரசியலமைப்பை அடிப்படையாகக் கொண்டு ருமேனியாவின் அரசியலமைப்பில் சில மாற்றங்கள்

ஏற்பட்டன. இதன் பயனுக உயர் வகுப்பைச் சேர்ந்த செல்வந்தர்கள் அரசாங்கத்தில் அதிக செல்வாக்கு பெற்றனர்.

ருமேனியா தனி அரசாக அங்கிகரிக்கப்பட்டபின், 1881ஆம் ஆண்டில் அந் நாட்டின் மன்னராக முடிசூட்டிக் கொண்ட கரோல் என்றழைக்கப்பட்ட முதலாம் சார்லஸ், 1914ஆம் ஆண்டு வரை ருமேனியாவின் மன்னராக ஆட்சி செலுத்தினுர். இவரது ஆட்சிக் காலத்தில் ருமேனியா பொருளாதாரத் துறையில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றமடைந்தது. பண்ணைகளில் இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தியதன் காரணமாக விவசாயப் பொருள்களின் உற்பத்தி அதிகரித்தது. ருமேனியாவின் உற்பத்தி செய்யப்பட்ட விவசாயப் பொருள்களுக்கு ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய ஐரோப்பிய நாடுகளின் சந்தைகளில் அதிக கிராக்கி ஏற்பட்டது.

ருமேனியாவில் விவசாய அபிவிருத்தி ஏற்பட்ட அதே சமயத்தில் வெளிநாட்டினர் தங்கள் மூலதனத்தை ருமேனியாவில் முதலீடு செய்தனர். ருமேனியாவின் நிலக்கரி, பெட்ரோலியம் போன்ற கனிப் பொருள்களைத் தங்கள் முதலீட்டின் மூலம் வெளிநாட்டவர்கள் சுரண்டிச் சென்றனர். மேலும் வெளிநாட்டவர்கள் ருமேனியாவில் மூலதன முதலீடு செய்ததால் அந்நாட்டின் செல்வத்தின் பெரும்பகுதி வெளிநாட்டிற்கே சென்றது. ருமேனியத் தொழிலாளர்களுக்கோ அல்லது அந்நாட்டின் நடுத்தர வர்க்கத்தினருக்கோ ருமேனியாவின் செல்வம் போய்ச் சேரவில்லை. மேலும் ருமேனியாவில் பல பெருநிலப் பண்ணைகள் இருந்தன. இப்பண்ணைகளின் சொந்தக் காரர்கள் பெரும்பாலும் நகரங்களில் வாழ்ந்த யூதர்கள். இவர்கள் பண்ணைகளுக்குச் சொந்தக்காரர்களாய் இருந்ததோடல்லாமல், நகரங்களில் வியாபாரத்திலும், வட்டிக்குப் பணம் கொடுப்பதிலும் அதிகமாக ஈடுபட்டிருந்தனர். எந்த ஒரு சீர்திருத்தமும் தங்களைப் பாதிக்கும் என்பதால் வியாபாரம், வட்டிக்குப் பணம் கொடுத்தல் ஆகிய துறைகளில் மேலோங்கியிருந்த பெருநிலச் சொந்தக்காரர்களான யூதர்கள் எத்தகைய சீர்திருத்தத்தையும் தங்கள் நாட்டில் புகுத்த விரும்பவில்லை. அரசாங்கமும் இவர்களின் ஆதிக்கத்திற் குட்பட்டு இருந்ததால் எந்த ஒரு சீர்திருத்தத்தையும் ஏற்படுத்தாமல் இருந்தது.

பெர்லின் உடன்படிக்கையின்படி (1878) ருமேனியா தனி நாடாக அங்கீகரிக்கப்பட்ட பொழுது, ருமேனியா தன்

பகுதியில் வாழ்ந்த யூதர்களுக்கு மதத்துறையில் முழு சுதந்திரம் அளிப்பதற்கு ஒப்புக்கொண்டதுடன் சிவில், அரசியல் ஆகிய துறைகளிலும் ருமேனியர்களுக்கு இணையாக யூதர்களுக்குச் சம உரிமை வழங்க ஒத்துக் கொண்டது. ஆனால் அரசாங்கம் பின்னர் பொதுமக்களின் கருத்துக்கு அதிக ஆதரவு கொடுத்த தால் யூதர்களுக்குச் சம அந்தஸ்து கொடுக்க மறுத்து விட்டது. ருமேனியாவில் வாழ்ந்த யூதர்களின் மொத்த எண்ணிக்கை யில் ஒரு சிலருக்கு மட்டுமே குடியுரிமை, வாக்குரிமை, அரசு அலுவலகங்களில் பணிபுரியும் உரிமை ஆகியவை வழங்கப் பட்டன. எனவே சமயத் துறையில் காணப்பட்ட சமத்துவ மின்மையும் ருமேனியாவின் பொருளாதாரச் சிக்கல்களுடன் சேர்ந்து கொண்டது. இதனால் ருமேனிய சமுதாயத்திலும் அரசியலிலும் செமித்தியக் கருத்துக்களுக்கு எதிரான கருத் துக்கள் (Anti Semitism) வலுவடைந்தன. ஆனால் இத்தகைய கருத்துக்கள் அந்நாட்டின் தொழிலாளர்களின் வறுமைக்கு முழுவதும் காரணமாகி விடாமல், வெளிநாட்டவர்களின் குடி யேற்றமும், வேலையற்றோரின் திட்டமிட்ட கொள்கைகளும் தொழிலாளர்களின் வறுமைக்குப் பிற காரணங்களாக அமைந் தன. சுருங்கக்கூறின் வெளிநாட்டவர்களின் போக்கு, யூதர் களின் நிலை, நிலையற்ற பொருளாதார அமைப்பு ஆகியவையே ருமேனியத் தொழிலாளர்களின் வறுமைக்கு முக்கிய காரணங் களாக அமைந்தன.

வடக்கே ருமேனியாவிற்கும் தெற்கே கிரிஸுக்கும் இடைப்பட்ட மத்திய பால்கன் பகுதி, இக்காலத்தில் யூகோஸ் லாவியா எனப்பட்டது. இங்கு வாழும் மக்கள் யூகோஸ்லா வியர்கள் எனப்பட்டனர். இவர்கள் ஸ்லாவிக் மொழியைப் பேசி வந்தனர். இரஷ்யாவில் வாழ்ந்த ஸ்லாவ் இனத்தவர்கள் கிழக்கு ஸ்லாவ்கள் (Eastern Slavs) என்றும், போலந்து செக் கோஸ்லாவாகியா ஆகிய நாடுகளில் வாழ்ந்த ஸ்லாவ்கள் மேலை ஸ்லாவ்கள் (Western Slavs) என்றும் வழங்கப்பட்டதால் யூகோஸ்லாவிய ஸ்லாவ்கள் தெற்கு ஸ்லாவ்கள் (Southern slavs) என்று அழைக்கப்பட்டனர். இருப்பினும் பால்கன் தீபகற்பத்தின் மேற்குப் பகுதியில் வாழ்ந்த தெற்கு ஸ்லாவ்கள் யூகொஸ்லாவியர்கள் என்றே வழக்கமாக அழைக்கப்பட்டனர். இதே போன்று செர்பியா, மான்டீநீக்ரோ, ஹங்கேரியில் பானட் (Banat), உதுமானியப் பேரரசுக்குட்பட்ட மேற்கு மாசிடோனிய மாநிலம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த தெற்கு ஸ்லாவ்கள் செர்பியர்கள் என்றும், ஹங்கேரியின் முக்கியப் பகுதியான குரோஷியா (Crotia) வில் வாழ்ந்த தெற்கு ஸ்லாவ்கள்

குரோட்டுகள் (Croats) எனவும், ஆஸ்திரிய மாநிலங்களான கர்நியோலா (Carniola), காரிந்தயா (Carinthia), இஸ்திரியா (Istria) ஆகிய பகுதிகளில் வாழ்ந்த தெற்கு ஸ்லாவ்கள் ஸ்லவேனியர்கள் (Slovenes) என்றும் அழைக்கப்பட்டனர். பால்கன் தீபகற்பத்தின் கிழக்குப் பாதியில் வாழ்ந்த எஞ்சிய தெற்கு ஸ்லாவ்கள் யூகோஸ்லாவியர்கள் (Yugoslavs) என்பதைவிட வழக்கமாக பல்கேரியர்கள் என்றே அழைக்கப் பட்டனர்.

ஆனால் செர்பியர்கள் (Serbs) செர்பியா (Serbia), மான்டீநீக்ரோ (Monte negro) என்ற இரு சுதந்திர நாடுகளில் வாழ்ந்து வந்தார்கள். இவற்றுள் மான்டீநீக்ரோ என்ற நாடு கறுப்பு மலைகள் (Black mountains) என்றும் வழங்கப்பட்டது. இது ஏட்ரியாடிக் கடலுக்கு மிக அருகாமையில் அமைந்துள்ள குறைந்த அளவு நிலப்பரப்புடைய நாடாகும். இதனை மிகப் பழைய முறையில் இப்பகுதியின் அரசர்கள் வாரிசு முறையில் ஆண்டு வந்தனர். இப்பகுதி பின்னர் உதுமானியப் பேரரசுக்கு உட்பட்டிருந்தது. இரஷ்ய – துருக்கிப் போருக்குப் பின்னர் 1878ஆம் ஆண்டு ஏற்பட்ட பெர்லின் உடன்படிக்கையின்படி செர்பியா, மான்டீநீக்ரோ ஆகிய இரு பகுதிகளும் தனி சுதந்திர நாடுகளாக அங்கீகரிக்கப்பட்டன. முதலாம் நிகோலஸ் (Nicholas I) என்பவர் 1860-ல் மான்டீநீக்ரோவின் அரசப் பொறுப்புக்களை உதுமானியப் பேரரசுக்குக் கட்டுப்பட்டு நிர்வகித்தார். இவர் 1918ஆம் ஆண்டுவரை இப்பகுதியின் பேரரசுக்குட்பட்ட அரசராக ஆட்சிபுரிந்து வந்தார். இவர் முரட்டு சுபாவம் உடையவராக இருப்பினும் மக்களின் நலன் களுக்காகப் போராடக் கூடிய எதேச்சாதிகார நல்லரசராகவும் விளங்கினர். இரஷ்யாவில் ஆட்சிபுரிந்த ஸார் மன்னர்களை அப்படியே பின்பற்றும் போக்குடையவராகவும் இவர் விளங் கினர். இவரது இக் கொள்கைகளால் இரஷ்யாவின் ஸார் அரசர்களுக்கு மிக நெருங்கிய நண்பராக விளங்கினர். இவர் 1905ஆம் ஆண்டில் தன் மக்களுக்கு மக்களாட்சிக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட புதிய அரசியலமைப்பு (ஜனநாயக அரசியலமைப்பு) ஒன்றை வழங்கினர். பின்னர் 1910ஆம் ஆண்டில் மான்டீநீக்ரோவின் மன்னர் என்ற பட்டத்தைத் தானே சூட்டிக் கொண்டார்.

செர்பியா, மான்டீநீக்ரோ ஆகிய செர்பியர் வாழும் இரு நாடுகளில் செர்பியா மிகப் பெரியதும் சற்று முக்கியமானது மாகும். இப்பகுதி 1830ஆம் ஆண்டு முதல் தன்னாட்சி உரிமை

பெற்று விளங்கியது. பின்னர் 1878ஆம் ஆண்டில் பெர்லின் உடன்படிக்கையின்படி சுதந்திர நாடாக அங்கீகரிக்கப் பட்டது.

இந்நாட்டில் விவசாயிகள் மிக அதிகமாக வாழ்ந்து வந்தனர். இவர்கள் பெரும்பாலும் பின்தங்கியவர்களாக இருந்ததுடன், மிகப் பழைய முறையில் நாகரிக வளர்ச்சி எதுவும் இன்றி வாழ்ந்து வந்தார்கள். இந்நாட்டின் அரியணை யைக் கைப்பற்றுவதற்கு இரண்டு கட்சியினர் போட்டியிட்டுக் கொண்டே இருந்தனர். இந்நாட்டைக் கண்டு பொறாமை யடைந்த வெளிநாட்டுக்காரர்கள் அரியணையைக் கைப்பற்று வதற்கு இரு கட்சியினருக்கிடையே நடைபெற்ற போட்டி களைப் பயன்படுத்திக் கொண்டு இந்நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட ஆரம்பித்தனர். இந் நாட்டின் அரியணையைக் கைப்பற்றுவதற்குப் போட்டியிட்டுக் கொண் டிருந்த இரு கட்சிகளில் ஒருகட்சிக்கு காராஜார்ஜ் (Karageorge) என்பவரின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் தலைமை தாங்கினர். காராஜார்ஜ் உதுமானியப் பேரரசுக்கு எதிராக செர்பியப் புரட்சியைத் தொடங்கி வைத்தவர். இவர் விவசாயி களுக்குத் தலைவராகவும் விளங்கினர். மற்றொரு கட்சிக்கு மிலாஸ் அப்ரிநோவிக் (Milos Obrenovic) என்ற போர் வீரருடைய குடும்பத்தினர் தலைமை தாங்கினர். மிலாஸ் அப்ரிநோவிக் என்பவர் செர்பியாவிற்குச் சுயாட்சித் தன்மை வாங்கிக் கொடுத்த ஒரு செர்பியப் போர்வீரராவார். எனவே இவருடைய குடும்பத்தினர்கள் 1859ஆம் ஆண்டு முதல் 1903ஆம் ஆண்டு வரை செர்பிய அரசாங்கத்தில் அதிக ஆதிக்கம் பெற்றிருந்தனர். ஆனால் அப்ரிநோவிக்கின் ஆதரவாளர் களுக்கும், காராஜார்ஜின் ஆதரவாளர்களுக்கு மிடையே அடிக்கடி கைகலப்புக்கள் ஏற்பட்டு இரு தரப்பிலும் பலர் கொலையுண்டனர். இந்த உள்நாட்டுப் பூசல்களால் செர்பியா அமைதியற்ற நிலையில் இருந்ததுடன், வெளிநாட்டவர்களின் தலையீட்டால் இரஷ்யா, ஆஸ்திரியா-ஹங்கேரி ஆகிய இரு பேரரசுகளுக்கிடையே அகப்பட்டுக் கொண்டு, காற்பந்துப் போட்டியில் அகப்பட்டுக் கொண்ட காற்பந்து போல இவ்விரு நாடுகளின் தலையீட்டால் அல்லலுற்றது.

இந்நிலையில் மிலாஸ் அப்ரிநோவிக் என்பவர் 1877-78ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இரஷ்ய-துருக்கிப் போரின்பொழுது உதுமானியப் பேரரசுக்குட்பட்டு செர்பியாவின் சிற்றரசராக இருந்தார். இயற்கையிலேயே இவரிடம் சில நற்குணங்கள்

காணப்பட்டாலும், இவரது வாழ்க்கையில் சில தீய நடவடிக்கைகளும் காணப்பட்டன. மேலும் இவர் ஆஸ்திரியர்களுக்கு ஆதரவாக இரஷ்யர்களுக் கெதிரான சில கொள்கைகளைப் பின்பற்றி வந்தார். இவரது இத்தகைய கொள்கைகளால்தான் 1878ஆம் ஆண்டில் நடைபெற்ற உடன்படிக்கையின்படி பல்கேரியாவுக்கு அதிக இலாபம் கிடைத்தபொழுது செர்பியாவிற்கு அவ்வளவு இலாபம் கிடைக்காமல் போயிற்று. பெர்லின் உடன்படிக்கையின்படி தனக்கு அதிக இலாபம் கிடைக்காததால் இவர் 1881ஆம் ஆண்டில் ஆஸ்திரியா - ஹங்கேரியுடன் ஓர் இரகசிய உடன்படிக்கை செய்துகொண்டார். பின்னர் அடுத்த ஆண்டில் ஆஸ்திரியாவின் உதவியுடன் தன்னுடைய ஆட்சிப் பகுதியை ஒரு நாடாக மாற்றியமைத்துக் கொண்டார்.

பின்னர் 1885ஆம் ஆண்டில் பல்கேரியர்கள் கிழக்கு ருமேலியா (Eastern Rumelia) என்ற பகுதியை இணைத்துக் கொண்டபொழுது அந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி பல்கேரியாவின் ஆக்ரமிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன், அதே ஆண்டில் பல்கேரியாவுடன் போர் தொடுத்தார். இது செர்பிய-பல்கேரியப் போர் (1885) என வழங்கப்படுகிறது. இப்போரில் பல்கேரியப் படை பெருமளவில் வெற்றி பெற்றது. தனக்கும் பல்கேரியாவுக்கும் நடைபெற்ற போரில் ஆஸ்திரியா-ஹங்கேரி தனக்கு உதவிபுரியும் என்று எதிர்பார்த்து ஏமாந்த செர்பியா பல்கேரியாவுடன் தான் செய்த போரை நிறுத்திக்கொண்டது.

இப்போரின் விளைவாக செர்பியா ஹாப்ஸ்பர்க் பேரரசின் ஆதரவுடன் அரசாட்சி நடத்தும் நிலைக்குத் தளர்த்தப்பட்டது. மன்னர் மிலாஸ் அப்ரிநோவிக்கும் செர்பியாவில் செல்வாக்கிழந்தார். இருப்பினும் போரில் செர்பியாவுக்கு ஏற்பட்ட செலவினை ஈடுகட்ட மிகப் பெருமளவில் புதிய வரிகளை விதித்தார். செர்பிய மக்களின் பேராதரவைப் பெறுவதற்குத் தன்னுடைய இறுதி முயற்சியாக 1889ஆம் ஆண்டில் மக்களாட்சிக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட புதிய அரசியலமைப்பு (Democratic Constitution) ஒன்றை ஏற்படுத்தினர். இதனையடுத்து அறுபது நாட்களுக்குப் பின்னர் தன்னுடைய மகன் முதலாம் அலெக்ஸாந்தருக்குச் (Alexander I) சாதகமாக முடி துறந்தார்.

முதலாம் அலெக்சாந்தர் (1889—1903)

மிலாஸ் அப்ரிநோவிக்கின் மகனை அலெக்ஸாந்தர் தன்னுடைய தந்தை முடி துறந்தபின் செர்பியாவின் மன்னராக

முதலாம் அலெக்ஸாந்தர் என்ற பெயருடன் 1889ஆம் ஆண்டில் அரியணை ஏறினர். இவருடைய ஆட்சிக் காலத்தில் இவருடைய தந்தையின் காலத்தில் அரசுக்கு ஏற்பட்ட தொல்லைகளைவிட மிக அதிக அளவில் தொல்லைகளும், இடர்ப்பாடுகளும் ஏற்பட்டன. முதலாம் அலெக்ஸாந்தர் பதவியேற்றவுடன் தன் தந்தை ஏற்படுத்திய புதிய அரசியலமைப்பை உதாசினம் செய்துவிட்டுத் தன்னுடைய விருப்பப்படி ஆட்சி செய்யத் தொடங்கினர். முதலில் இவர் தீவிர தேசியக் கட்சியுடன் அதிக தொடர்பு கொண்டு இருந்ததால் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஆஸ்திரியா-ஹங்கேரியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். பின்னர் நாட்டில் ஏற்பட்ட எதிர்ப்புக்களின் காரணமாக, பிற்காலத்தில் ஆஸ்திரியா-ஹங்கேரிக்கு எதிராக இரஷ்யாவுடன் நட்புறவு கொள்ள வேண்டுமென்று தன்னுடைய கருத்துக்களை வெளியிட்டார். எனவே செர்பிய மக்கள் இவரை நம்பிக்கைக்கு உகந்தவர் அல்லர் என்று முடிவு செய்தனர். அன்றியும் இவர் இரக்க சிந்தனையற்ற ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டதால் செர்பியாவில் பெரும்பான்மையினரின் வெறுப்புக்கும் ஆளானுர். தன்னுடைய உறவினர்களுக்கு அரசாங்கத்தில் இவர் காட்டிய சலுகைகளும் பொதுமக்களின் ஆதரவை இவர் இழக்கச் செய்தன.

முதலாம் அலெக்சாந்தரின் இச் செய்கைகளால் "கருங் கரங்கள்" (Black Hands) என்ற இரகசியக் கழகத்தினரும், சில இராணுவ அதிகாரிகளும் காராஜார்ஜுடன் சேர்ந்து கொண்டு இரகசியத் திட்டங்களைத் தீட்டி அப்ரிநோவிக் வமிசத்தை ஆட்சிப் பொறுப்பிலிருந்து அகற்ற முடிவு செய்தனர். இவர்களது இரகசியத் திட்டங்களின்படி மன்னர் முதலாம் அலெக்ஸாந்தரும், இவருடைய ஆதரவாளர்களாக இருந்த அமைச்சர்கள், வேலைக்காரர்கள் உட்பட ஐம்பது பேரும் 1903 ஆம் ஆண்டு கொல்லப்பட்டனர். இக்கொடிய நிகழ்ச்சிக்குப்பின்னர் காராஜார்ஜின் பேரரான பீட்டர் என்பவர் முதலாம் பீட்டர் என்ற பட்டப் பெயருடன் இரத்தக்கறை படிந்த செர்பிய அரியணையில் மன்னராக அமர்ந்தார்.

முதலாம் பீட்டர் செர்பியாவின் மன்னரானதால் செர்பிய வரலாற்றில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. இவர் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அப்ரிநோவிக் வம்சத்தின் ஆட்சி செர்பியாவில் முடிவுற்றது. உள்நாட்டில் நடைபெற்ற கட்சிப் போட்டிகளும் முடிவுற்றன. எனவே செர்பிய மக்களிடையே தேசிய

ஒற்றுமை ஏற்படுவதற்கு வாய்ப்பேற்பட்டதுடன் செர்பியா, ஆஸ்திரியா-ஹங்கேரியைச் சார்ந்து ஆட்சி செய்ய வேண்டிய நிலையும் மாறியது. இரஷ்யாவின் நட்புறவுடன் தேசியக் கருத்துக்கள் செர்பியர்களிடையே வளர்ச்சியடையத் தொடங்கின. இதன் பயனாக உதுமானியத் துருக்கியப் பேரரசுக்குட்பட்ட பகுதியில் வாழ்ந்த செர்பிய இனத்தைச் சார்ந்தவர்களிடையே மட்டுமல்லாமல், ஹாப்ஸ்பர்க் பேரரசுப் பகுதியில் வாழ்ந்த செர்பியர்கள், குரோட்டுகள், ஸ்லாவேனியர்கள் ஆகியோரிடையேயும் தேசிய உணர்வு ஏற்பட்டு, தாங்கள் அனைவரும் செர்பிய இனத்தைச் சார்ந்தவர்கள் என்ற விழிப்பு ஏற்பட்டது. இந்நிலையில் புதிதாக ஆட்சிப் பொறுப் பேற்ற முதலாம் பீட்டரும் சிறந்த தேசபக்தராகவும், போர்வீரராகவும், மக்களாட்சிக்கொள்கையில் அதிக நம்பிக்கை உடையவராகவும் விளங்கினார். எனவே, தான் மன்னராகப் பதவி ஏற்றவுடன் மிலாஸ் அப்ரிநோவிக்கால் 1889ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டு, அவரது மகனை முதலாம் அலெக்ஸாந்தரால் உதாசினம் செய்யப்பட்ட ஜனநயக அரசியலமைப்பிற்கு மீண்டும் புத்துயிரூட்டினார். தன்னுடைய பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் பெற்றிருந்த தீவிரவாதிகள் (Radical) கட்சியிலிருந்து மக்களாட்சி முறைப்படி தன்னுடைய புதிய அமைச்சர்களைத் தேர்ந்தெடுத்தார்.

முதலாம் பீட்டரின் பாராளுமன்றத்தில் தீவிரவாதிகளின் கட்சித்தலைவராக இருந்தவர் நிகோலஸ் பாஸிக் (Nicholas Pasic) என்பவராவார். இவர் ஸ்விட்சர்லாந்தில் கல்வி பயின்றவர்; பொறியியல் பட்டம் பெற்றவர்; நாட்டுப்பற்று மிக்கவர். இராணுவ சீர்திருத்தத்தில் முதலாம் பீட்டர் தன் முழு கவனத்தையும் செலுத்திக் கொண்டிருந்தபொழுது, நிகோலஸ் பாஸிக் உள்நாட்டில் பொருளாதார ஸ்திரத் தன்மையை ஏற்படுத்துவதற்காகவும், வெளிநாட்டில் தேசியக் கருத்துகளைப் பரப்புவதற்காகவும் பாடுபட்டார். முதலாம் பீட்டரும் அவரது அமைச்சரும் நாட்டில் தேசியக் கருத்துக்களைத் தோற்றுவித்து ஸ்திரத் தன்மையை ஏற்படுத்தினாலும், 1908 ஆம் ஆண்டில் செர்பிய மொழியைப் பேசும் மக்கள் வாழ்ந்துவந்த பாஸ்னியா, ஹெர்ஸகோவினா என்ற பகுதிகளை ஆஸ்திரிய-ஹங்கேரிய அரசு இணைத்துக் கொண்டபொழுது அதனைத் தடை செய்ய இயலாதவர்களாக இருந்தனர். ஆனால் இவர்கள் தேசிய உணர்ச்சிகளைச் செர்பியர்களிடையே வளர்ப்பதிலும், கிடைக்கக்கூடிய எந்த ஒரு வாய்ப்பையும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு தாங்கள் இழந்த பகுதிகளுக்குக்

கூடிய விரைவில் நஷ்ட ஈடு பெறுவதிலும் கண்ணும் கருத்து மாக இருந்தனர்.

பல்கேரியா

பால்கன் தீபகற்பத்தில் கிழக்குப் பகுதியின் பாதியில் வாழ்ந்த ஸ்லாவ் இனத்தைச் சார்ந்தவர்கள் பல்கேரி யர்கள் எனப்பட்டனர். இவர்களில் பெரும்பகுதியினர் மாசி டோனியப் பகுதி முழுவதிலும் பரவலாக வாழ்ந்து வந்தனர் இரஷ்ய-துருக்கிப் போருக்குப் பின்னர் ஏற்பட்ட சான்ஸ்டிஃபானோ உடன்படிக்கை (1878) யின்படி ஸ்லாவ் இனத்தைச் சார்ந்தவர்கள் வாழ்ந்த பகுதியைத் தனி தேசிய இனம் சார்ந்த நாடாக ஏற்படுத்துவதற்கு உதுமானியத் துருக்கிப் பேரரசு ஒப்புக்கொண்டது. ஆனால் சான்ஸ்டிஃபானோ உடன்படிக் கையின் பிரிவுகளை மறு பரிசீலனை செய்வதற்காகக் கூட்டப் பட்ட பெர்லின் மாநாட்டின் முடிவுகளின்படி ஏற்பட்ட பெர்லின் உடன்படிக்கை (1878) ஸ்லாவ் இனத்தைச் சார்ந்த வர்கள் வாழ்ந்து வந்த பகுதியை இரண்டு பகுதிகளாகப் பிரித்தது. இதன்படி பல்கேரியா என்ற பகுதி சுயாட்சி பெற்ற பகுதியாகவும், கிழக்கு ருமேலியா (Eastern Rumelia) ஓரளவு சுயாட்சி பெற்ற பகுதியாகவும் இருக்கஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் இரஷ்ய மன்னரான இரண்டாம் அலெக்ஸாந்தரின் உறவினரான பேட்டன்பர்க் அலெக்ஸாந்தர் (Alexander of Batternburg) பல்கேரியாவின் அரசியல் பொறுப்புக்களை ஏற் பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பல்கேரியாவின் ஆட்சிப் பொறுப்புக்களை ஏற்ற அலெக் ஸாந்தர் தொடக்கத்தில் சில காலம் இரஷ்யப் பேரரசுக்குக் கீழ்ப் படிந்து இருந்ததுடன், அதன் கொள்கைகளுக்கும் ஆதர வாக இருந்தார். இக்காலத்தில் இவர் இவரது உறவினரும் இரஷ்யாவின் ஸார் மன்னருமான இரண்டாம் அலெக்ஸாந் தரின் விருப்பத்திற் கிணங்க பல்கேரியாவில் அந்நாட்டு மக்களால் ஏற்படுத்தப்பட்ட மக்களாட்சிக் கருத்துக்களைக் கொண்ட அரசியலமைப்பை ஒதுக்கி வைத்துவிட்டு, இரஷ்ய அரசரின் ஆலோசனைப்படி ஆட்சி செய்யத் தொடங்கினர். பல்கேரியாவின் இராணுவத் துறையிலும் நிர்வாகத் துறையிலும் இரஷ்யர்களுக்கு உயர் பதவிகளைக் கொடுத்தார். பின்னர் ஓரளவு தன்னுடைய தவறுகளை உணர்ந்து தனித்து ஆட்சி செய்வதற்குத் தீர்மானித்தார். இரஷ்யாவின் ஆதிக்கத்திலிருந்து தான் விடுபட, பல்கேரியாவின் தேசிய வாதிகளுடன் நட்புறவு கொண்டு தேசியவாதிகளின் தலைவரானர். மேலும் இவர் பல்கேரிய தேசியவாதிகள் தங்கள் நாட்டில் அந்நியரின் தலையீட்டை விரும்பாததால் இரஷ்யப் பேரரசரான ஸார்

மன்னரின் கருத்துக்கு எதிராக பல்கேரியாவில் இருந்த இரஷ்ய ஆலோசகர்களைப் பதவி நீக்கம் செய்தார். பல்கேரியாவில் அரசியலமைப்புக் குட்பட்ட அரசாங்கத்தை மீண்டும் ஏற்படுத்தினர். இதனையடுத்து கிழக்கு ருமேலியாவில் வாழ்ந்த ஸ்வாவ் இனத்தவர்கள் உதுமானியப் பேரரசிலிருந்து விடுதலை பெறுவதற்காகச் செய்த புரட்சி அப்பகுதியை பல்கேரியாவுடன் இவர் சேர்த்துக் கொள்ள உதவியாக இருந்தது. கிழக்கு ருமேலியா பல்கேரியாவுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டதை எதிர்த்து, செர்பியா 1885ஆம் ஆண்டில் பல்கேரியாவின் மீது போர் தொடுத்த பொழுது பல்கேரியப் படைகள் தேசிய உணர்ச்சியால் உந்தப்பட்டு, முழு மூச்சுடன் போராடி செர்பியப் படைகளைப் பல இடங்களில் தோற்கடித்தன.

இச்சமயத்தில் துரதிருஷ்ட வசமாகக் கிழக்கு ருமேலியாவைப் பல்கேரியா இணைத்துக் கொண்டதை அங்கீகரிப்பதில் இரஷ்யப் பேரரசரும், உதுமானியத் துருக்கிப் பேரரசரும் காலம் தாழ்த்தினர். எனவே பல்கேரியாவின் அரசுப் பொறுப்புக்களை நிர்வகித்து வந்த அலெக்ஸாந்தர் கிழக்கு ருமேலியாவைத் தான் இணைத்துக் கொண்டதை அங்கீகரிக்க இரஷ்யப் பேரரசின் மன்னரான இரண்டாம் அலெக்ஸாந்தரது உதவியை நாடினர். இதனால் கோபமடைந்த பல்கேரிய தேசியவாதிகளில் ஒரு பகுதியினர் இவரைப் பதவி துறக்கும்படி வற்புறுத்தினர் அதனால் இவர் 1886-ல் பல்கேரிய அரசியல் பொறுப்புக்களிலிருந்து விலகினர்.

இவருக்குப் பின்னர் சாக்ஸ்கோபர்க் (Saxecoburg) என்ற பகுதியில் சிறந்து விளங்கிய ஃபெர்டினண்ட் (Ferdinand) என்பவர் பல்கேரியாவின் இளவரசராக நியமிக்கப்பட்டார். இவர் அறிவும் திறமையும் ஒருங்கே அமையப் பெற்ற ஒரு ஜெர்மன் இளவரசர், இவர் பிரிட்டன், பெல்ஜியம் ஆகிய நாடுகளில் ஆட்சிபுரிந்து வந்த அரச குடும்பங்களுக்கு உறவினராகவும் இருந்தார். பல்கேரியப் பாராளுமன்றம் ஃபெர்டினண்டை பல்கேரியாவின் மன்னராக நியமித்ததால் இரஷ்ய அரசர் கோபமடைந்தார். இரஷ்ய மன்னர் இவரை ஒரு மன்னராக ஏற்றுக் கொள்ளாததுடன் இவரைக் கைது செய்ய இரகசிய நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதன் காரணமாக ஃபெர்டினண்ட் அரியணையில் சில ஆண்டுகள் அமராமலே இருந்தார். இந்நிலையில் ஃபெர்டினண்டிக்கு உதவியவர் ஸ்டீஃபான் ஸ்டாம்புலாவ் (Stefan Stambolov) என்பவராவார். இவரது பெரு முயற்சியால் ஃபெர்னண்ட் பல்கேரியாவிலும், அந்நாட்டிற்கு வெளியிலும் மிகுந்த

ஆதரவைப் பெற்றார். நாளடைவில் ஸ்டீஃபான் ஸ்டாம்புலாவ் சர்வாதிகாரியாக நடந்து கொண்டதால் தன் பதவியை இராஜினமா செய்யுமாறு வலியுறுத்தப்பட்டார். பின்னர் ஸ்டாம்புலாவ் 1895ஆம் ஆண்டில் கொலை செய்யப்பட்டார். தன்னுடைய அமைச்சரான ஸ்டாம்புலாவின் கொலைக்குப் பின்னர் ஃபெர்டினண்ட் அதிகத் துணிவுடன் பல்கேரியாவின் அரியணையில் மன்னராக அமர்ந்தார். இரஷ்யப் பேரரசரும் ஃபெர்டினண்டை வேறு வழியின்றி பல்கேரியாவின் மன்னராக அங்கிகரித்தார்.

பின்னர் பல்கேரியாவின் மன்னரான ஃபெர்டினண்ட் 1908ஆம் ஆண்டில் பல்கேரியா முழுவதும் உதுமானியப் பேரரசின் தளைகளிலிருந்து விடுதலை யடைந்து விட்டது என்று அறிவித்துத் தன்னை பல்கேரியாவின் சுதந்திர அரசராகப் பிரகடனம் செய்தார். பிறகு 1912ஆம் ஆண்டில் இவர் தன்னுடைய முயற்சியால் கிரீஸ், செர்பியா ஆகிய பகுதிகளை ஒன்று கூட்டி, பால்கன் அமைப்பு என்ற ஒன்றைத் துருக்கியர் களுக்கு எதிராகப் போரிடுவதற்காகத் தோற்றுவித்தார்.

2. உலகின் பல பகுதிகளில் ஐரோப்பியர்களின் ஆதிக்கம்

1. தேசியப் போர்க்கருவிகளும், தேசிய ஏகாதிபத்தியமும்

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில், குறிப்பாக 1870ஆம் ஆண்டிற்கும் 1910 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட நாற்பதாண்டுகளில் வேகமான தொழில் வளர்ச்சியின் காரணமாகவும்,தேசியக் கருத்துக்களின் காரணமாகவும் கடந்த நான்கு நூற்றுண்டுகளில் ஏற்பட்ட வளர்ச்சியைவிட, ஐரோப்பா விரைவாக வளர்ச்சியடைந்தது. குறிப்பாக தேசியம், தொழில் ஆகிய துறைகளில் மிக வேகமாக வளர்ச்சியடைந்தது. ஐரோப்பாவின் பொருளாதாரமும் வலிவடைந்தது. ஐரோப்பாவில் தொழில் வளர்ச்சியின் காரணமாகப் பல புதிய போர்க் கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டன. தேசியக் கருத்துக்களும், தேசிய உணர்ச்சிகளும் ஐரோப்பிய மக்களிடையே அதிக அளவில் செல்வாக்குப் பெற்றன. உள்நாட்டில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாகவும், தங்கள் நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை உள்நாட்டில் விற்பனை செய்தது போக எஞ்சியவற்றை வெளிநாடுகளில் விற்றுத் தங்கள் நாடுகளின் தொழில்களை வளர்ச்சியடையச் செய்து அதிக அளவில் பொருளீட்டுவதற்காகவும், தங்கள் தேசியக் கருத்துக்களை வலிமையடையச் செய்வதில் ஐரோப்பிய நாடுகளிடையே ஏற்பட்ட போட்டியின் காரணமாகவும், ஐரோப்பியர் உலகின் மற்ற பகுதிகளில் தங்கள் கவனத்தைச் செலுத்தி அப்பகுதிகளில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். இவ்வாதிக்கம் 1870ஆம் ஆண்டிற்குப் பின்னுள்ள நாற்பதாண்டுகளில் அதிகமாக ஏற்பட்டது. உலகின் பல பகுதிகளில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்துவதில் ஐரோப்பிய நாடுகளிடையே ஏற்பட்ட போட்டியின் காரணமாகவும், அதன் காரணமாகத் தங்கள் பகுதியின் பாதுகாப்பிற்காக ஐரோப்பிய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் காரணமாகவும் 1914ஆம் ஆண்டில் முதல் உலகப் போர் ஏற்பட்டது. ஐரோப்பிய நாடுகள் உலகின் பல பகுதிகளில் எவ்வாறு

தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தின என்பதையும், தங்கள் ஆதிக்கப் பகுதிகளைப் பாதுகாப்பதற்கு என்னென்ன இராணுவ நடவடிக்கைகளையும், அரசியல் நடவடிக்கைகளையும் மேற் கொண்டன என்பனவற்றைப் பற்றியும் இப்பகுதியில் காண் போம்.

1. தேசியப் போர்க்கருவிகள்: (a) இராணுவம்:

மறுமலர்ச்சி, மதப் புரட்சி ஆகியவற்றிற்குப் பின்னர் ஐரோப்பிய நாடுகள் தங்கள் தனித் தன்மையை நிலைநாட்டவும், தங்கள் நாடுகளின் வலிமையையும் புகழையும் தொடர்ந்து நிலை நாட்டி வருவதற்கும் நிரந்தரமான வலிமை மிக்க இராணுவம் ஒன்று இன்றியமையாதது என்பதை நன்கு உணர்ந்திருந்தன. எனவே பதினேழு பதினெட்டாம் நூற்றுண்டுகளில் ஐரோப்பிய நாடுகள் தங்கள் நாட்டின் வருவாயின் பெரும்பகுதியை அல்லது ஒரு கணிசமான தொகையை இராணுவத்திற்காகச் செலவு செய்தன. இதனுல் போர்ப் பயிற்சி பெற்றுப் போரிடுவதையே தங்கள் தொழிலாகக் கொண்டிருந்த போர் வீரர்கள் பலர் நிரந்தரமாக இந்நாடுகளின் படைகளில் பணியாற்றி வந்தனர். ஐரோப்பிய நாடுகளிலும் இராணுவ அமைப்புக்கள் பல நிரந் தரமாக இருந்தன. தங்கள் நாட்டின் வளர்ச்சிக்கும், பெரு மைக்கும் இராணுவமே மிக முக்கியமானது என்று கருதிய சில ஐரோப்பிய நாடுகள் தங்கள் நாடுகளில் இருந்த திறமை மிக்கவர்களை யெல்லாம் இராணுவத் துறையிலேயே ஈடு படுத்தின ஸ்வீடன் நாட்டில் கஸ்டாவஸ் அடால்ஃபஸ் (Gustavas Adolphus), பிரஷ்யாவில் மகாபிரடரிக் (Frederick the Great) போன்றவர்கள் இதற்கு எடுத்துக் காட்டாக விளங் கினர். இதுபோன்று 1813-1814 ஆகிய ஆண்டுகளில் நடை பெற்ற விடுதலைப் போராட்டங்களில் ஐரோப்பிய நாடுகளில் திறமை மிக்கவர்கள் இராணுவத் துறையிலேயே பணியாற்றி னர். மேலும் 1789ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டில் ஏற்பட்ட பிரஞ்சுப் புரட்சியின் பொழுது பிரான்சு நாட்டில் ஏற்படுத்தப் பட்ட முதலாம் குடியரசிலும் (First Republic of France), நெப்போலியப் பேரரசிலும் (Napoleonic Empire) திறமை மிக்கவர்கள் தங்கள் நாட்டு இராணுவத்தின் மூலம் தங்கள் திறமைகளை வெளிப்படுத்திப் புகழ்பெற்றனர். அதேபோன்று இரஷ்யாவிலும் மகாபீட்டரின் காலத்தில் இராணுவத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அக்காலத்தில் இரஷ்ய இராணுவம் ஐரோப்பாவிலேயே மிகப்பெரியது எனக் கருதப் பட்டது.

ஆனால் 1860ஆம் ஆண்டிற்குப் பிறகு தான் விருப்ப முடையவர்கள் பலர் இராணுவத்தில் சேர்ந்து பயிற்சி பெற்றுத் தங்கள் நாட்டின் படைவீரர்களாகப் பணியாற்றத் தொடங்கினர்கள். அதன் பின்னர்தான் உண்மையிலேயே தங்கள் தாய் நாடுகளின் பாதுகாப்பிற்காக உயிரையும் மதியாமல் போரிடக் கூடிய போர் வீரர்களைக் கொண்ட தேசிய இராணுவங்கள் தோன்றத் தொடங்கின. அதற்கு முன்னர் கூலிப்படைகளே ஐரோப்பாவில் மிகுந்து காணப்பட்டன. தேசிய இராணுவங்கள் தோன்றிய பின்னர்தான் தேசிய அரசுகளும் தங்கள் இராணுவத்திற்காக மிக அதிக அளவில் செலவிடத் தொடங்கின. அக்காலத்தில் ஐரோப்பாவில் மிக வேகமாக வளர்ச்சியடைந்த தொழிற் புரட்சியின் காரணமாக தேசிய இராணுவங்கள் மேலும் வலுவடைந்தன. ஒரு நாடு தொழில் மயமாகின்ற பொழுது, அந்நாட்டின் மக்கள் செய்து வந்த சாதாரணமான வேலைகளை இயந்திரங்கள் மிக அதிக அளவில் குறுகிய காலத்தில் செய்ததால், அந்நாட்டு மக்கள் தங்கள் சாதாரணமான வேலைகளிலிருந்தும் ஓய்வு பெற்றனர். இவ்வாறு ஓய்வு பெற்றவர்களில் தகுதியானவர்கள் தாங்களாக முன்வந்து தங்கள் நாட்டின் இராணுவத்தில் சேர்ந்து, தங்கள் தாய்நாட்டின் பாதுகாப்பிற்குப் [நாட்டுப்பற்றுடன்] பாடுபட முடிந்தது. இவர்களுக்குத் தேவையான உணவு, உடை, போர்க் கருவிகள் போன்றவற்றையும், இராணுவத்திற்குத் தேவையான இதர பொருள்களையும் இவர்கள் இயந்திரங்களைக் கொண்டு இயங்கி வந்த தொழிற்சாலைகளிலிருந்து பெற்று வந்தனர். இயந்திரத் தொழிற்சாலைகள் மிகக் குறுகிய காலத்தில், மிக அதிகமான பொருள்களைக் குறைவான மனிதசக்தியைக் கொண்டு உற்பத்தி செய்ததே இதற்கு முக்கிய காரணமாகும். இயந்திர மயமாக்கப் பட்ட பண்ணைகளும், வெளிநாடுகளின் கப்பல் போக்குவரத்தும் தேசிய இராணுவத்திற்கு அதிக அளவில் உணவுப் பொருள்களைத் தாமதமின்றி வழங்கி வந்தன. ஐரோப்பிய நாடுகளில் வளர்ச்சி பெற்றுவந்த இருப்புப் பாதைகளும், பேருந்து (Bus), சரக்கு உந்து (Lorry), மகிழுந்து (Geep, pleasure) வண்டிகளும் போர்வீரர்களையும், அவர்களுக்குத் தேவையான பொருள்களையும் தங்கள் நாடுகளின் ஒரு பகுதியில் இருந்து மற்றொரு பகுதிக்கு மிகக் குறுகிய காலத்தில் அதிக அளவில் கொண்டு சென்றன. செய்திப் போக்குவரத்தில் ஏற்பட்ட புதிய மாறுதல்களின் காரணமாகவும் போர்வீரர்கள் நன்மையடைந்தனர். அரசாங்கமும் தொழிற்சாலைகளின் மூலம் கிடைத்த அதிக வருவாயை மேலும் அதிக அளவில் இராணுவத்திற்குச் செலவு செய்தது.

இதனல் இராணுவத்திற்குத் தேவையான பணவசதி கிடைத்த துடன் அதில் பணியாற்றுகிறவர்களின் எண்ணிக்கையும், திறமைகளும் வளர்ச்சியடைந்தன. தேசிய இராணுவங்கள் திறமைபெற்ற இராணுவஅதிகாரிகளையும், போர் வீரர்களையும் பெற்றிருந்ததுடன், பல நவீனக் கோட்டைகளையும், துப்பாக்கி களையும், இயந்திரத் துப்பாக்கிகளையும், பெற்றிருந்தன. பொறியி யல், போக்குவரத்து, உற்பத்தி ஆகிய துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியும் தேசிய இராணுவங்களுக்கு உதவி அவற்றை வலிமையடையச் செய்தன.

தொழிற் புரட்சிக்குப் பின்னர் ஏற்பட்ட தொழில் வளர்ச்சி யின் காரணமாக, வலிமை பெற்ற ஐரோப்பிய வல்லரசுகள் திறமை மிக்கதும், மிகப்பெரியதுமான தங்கள் இராணுவங் களின் ஆற்றலை 1859ஆம் ஆண்டிற்கும் 1878ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்டகாலத்தில் நடைபெற்ற பிரஞ்சு-ஆஸ்திரியப்போர், டென்மார்க்-ஜெர்மானியப் போர் ஆஸ்திரிய-பிரஷ்யப் போர், பிரஞ்சு-பிரஷ்யப் போர், இரஷ்ய-துருக்கிப் போர் ஆகிய போர்களின் வாயிலாக வெளிப்படுத்தின. இப்போர் கள் யாவும் திடீரென்று ஏற்பட்டமையாலும், இப்போர்களின் பொழுது இராணுவங்கள் மிக விரைவாக நடவடிக்கைகளை மேற்கொண்டமையாலும் இப் போர்களினுல் ஐரோப்பிய நாடுகள் கற்றுக்கொண்ட படிப்பினைகளின் காரணமாக ஏற்பட்ட தீவிர மாற்றங்கள் ஐரோப்பிய மக்களிடையே பல புதுமைகளை ஏற்படுத்தின. இப்போர்களின் விளைவாக ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரம், மதம், சமுதாயம் ஆகிய துறைகளிலும், மக்களின் வாழ்க்கைத் துறையிலும் பல குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாக 1870-71ஆம் ஆண்டுகளில் பிரான்சிற்கும் பிரஷ்யாவிற்கு மிடையே ஏற்பட்ட பிரஞ்சு-பிரஷ்யப் போர் இராணுவத்தை எப்பொழுதும் தயார் நிலையில் வைத்திருக்கும் நாடுகள், அவ்வா றில்லாத நாடுகளின்மீது திடீரென்று தாக்குதல்களை நடத்தி அந்நாடுகளைத் தோற்கடிக்க முடியும் என்பதைத் தெளிவு படுத்தியது. எனவே ஒவ்வொரு நாடும் தங்கள் நாட்டின் பாது காப்பிற்காக நிரந்தர இராணுவம் ஒன்றை எப்பொழுதும் (போர்க் காலங்களிலும், அமைதிக் காலங்களிலும்) தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்ற கருத்தை, இப்போர், ஐரோப்பிய நாடுகளிடையே வலிவடையச் செய்தது. மேலும் இப்போரின் படிப்பினைகள் யாவும் ஐரோப்பிய அரசியல் வாதிகளிடையேயும், ஐரோப்பிய மக்களிடையேயும் அதிக

செல்வாக்குப் பெற்றன. எனவே செல்வந்தர்கள், தொழிற்சாலை களின் சொந்தக்காரர்கள் போன்றவர்களும் தங்கள் சொத்தின் பாதுகாப்பிற்காகவும் தனிக்காவல் படைகளையும், இயந்திரப் போர்க் கருவிகளையும் வைத்திருக்கத் தொடங்கினர்கள்.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட எல்லாப் போர்களுமே மிக முக்கியமானவைகளாகக் கருதப் படுகின்றன. இப் போர்களில் ஈடுபட்ட இராணுவங்கள் திறமையும், வலிமையும் ஒருங்கிணையப்பெற்ற போர்வீரர்களைப் பெற்றிருந்தன. எனவேதான் ஜெர்மனி பிரான்சு, ஆஸ்திரியா ஆகிய நாடுகளின் மீதும், இரஷ்யா துருக்கியின் மீதும் மிக எளிதாக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றிகளைப் பெற முடிந்தன. ஆனல் தேசியக் கருத்துக்களும், ஏகாதிபத்தியக் கொள்கைகளும் ஐரோப்பிய மக்களின் மனத்தில் வேரூன்று வதற்கு முன்னர் ஐரோப்பிய நாடுகளின் இராணுவங்கள் யாவும் தங்கள் நாட்டின் அரசரது ஆணைக்குக் கட்டுப்பட்டு, அரசர்களது விருப்பு, வெறுப்புப்படியே போரிட்டு வந்தன. மேலும் இத்தகைய இராணுவங்களில் நாட்டுப் பற்றற்றவர் களும், தேசிய உணர்வற்றவர்களும், ஊதியம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட கூலிப்படை வீரர்களுமே நிறைந் திருந்தனர். இவர்கள் யாவரும் போர்வீரர்களாகப் பணியாற்றி ஊதியம் பெற்று வாழ்க்கை நடத்தி வந்ததால், நாட்டின் பாதுகாப்பைவிடத் தங்கள் உயிரையே மிக முக்கியமாகக் கருதினர். எல்லாவற்றிற்கும் மேலாக இக்காலங்களில் ஐரோப் பிய நாடுகளில் அரசர்களால் போர்ப் பிரகடனம் செய்யப்பட்ட பொழுதெல்லாம், அவ்வரசர்களின் ஆட்சிப் பகுதிகளுக்குட் பட்ட பகுதியில் வாழ்ந்த மக்கள் திடீரென்று தங்கள் அரசருக்கு ஆதரவாகவும், சில சமயங்களில் தங்கள் விருப்பத்திற்கு மாருகவும் போரில் ஈடுபடவேண்டியிருந்தது. அரசர்களைப் பாதித்த போர்கள் அவ்வரசர்களின் கீழ் வாழ்ந்த மக்களையும், வெகுவாகப் பாதித்தது. இதனல் சிலர் தங்கள் அரசர்கள் மீது கூட வெறுப்படைந்தனர்.

ஆனல் பத்தொன்பதாம் நூற்றுண்டில், குறிப்பாகப் பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் மக்களிடையே வளர்ச்சியடைந்த தேசியம், மக்களாட்சி முதலிய கருத்துக் களின் காரணமாக ஐரோப்பிய மக்களிடையே ஒரு புதிய ஊக்கம் வளர்ச்சி யடைந்தது. நாட்டுப்பற்றும் மக்களிடையே மேலோங்கி இருந்தது. எனவே ஐரோப்பிய மக்கள் தங்கள் நாட்டின் பாதுகாப்பிற்காகத் தங்கள் அரசர்களோ, அரசாங்

கங்களோ மேற்கொண்ட எல்லா இராணுவ நடவடிக்கைகளுக்கும் முழுமனத்துடன் ஒத்துழைப்புக் கொடுத்தனர். அத்துடன் இம்மக்கள் யாவரும் தங்களால் இயன்ற அளவு, தங்கள் தேவைகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு இராணுவத்துக்கும், தங்கள் அரசுக்கும், அவற்றின் இராணுவக் கொள்கைகளின் வெற்றிக்கும் முழுமூச்சுடன் பாடுபட்டனர். ஜெர்மனியைப் போலவோ, இத்தாலியைப் போலவோ போராடி, சமீபகாலத்தில் அந்நிய ஆட்சியைத் தங்கள் நாட்டினின்றும் விரட்டிவிட்டு, விடுதலையடைந்து, ஒரே வகையான அரசாங்கத்தைத் தங்கள் நாடுகளில் ஏற்படுத்தி, ஒருமைப்பாடடைந்த ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்த மக்களில் பெரும்பாலோர் தங்கள் நாட்டின் புகழையும், வலிமையையும் தொடர்ந்து நிலைநாட்டத் தங்கள் நாட்டின் இராணுவம் எப்பொழுதும் தயார் நிலையிலிருக்க வேண்டுமென எண்ணினார்கள். நாட்டுப் பற்றுமிக்க ஐரோப்பிய மக்களும் இன வேறுபாடின்றி இவ்வாறே கருதினார்கள். மேலும் இவர்கள் தங்கள் நாட்டின் இராணுவம் எப்பொழுதும் தயார்நிலையில் இருப்பது உள்நாட்டில் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கும், அமைதியைப் பாதுகாப்பதற்கும் ஏதுவாக இருக்கும் என்றும் எண்ணினர். பிரான்சு-பிரஷ்யப் போரில் சில பகுதிகளையும் பெருமையையும் இழந்த பிரான்சைப் போன்ற நிலையில் இருந்த ஐரோப்பிய நாடுகளின் அரசாங்கங்களும், அந்நாடுகளில் வாழ்ந்த மக்களும் தங்கள் நாட்டின் இராணுவம் எப்பொழுதும் தயார்நிலையில் இருப்பது தங்கள் நாட்டின் பாதுகாப்பிற்குச் சாதகமாக இருப்பதுடன், மேற்கொண்டும் பல பகுதிகளை அந்நியர்கள் கைப்பற்றாமல் இருப்பதற்கும் உதவியாக இருக்குமென்று கருதினார்கள். மேலும் இவர்கள் தங்கள் நாட்டின் இராணுவம் எப்பொழுதும் தயார் நிலையில் இருந்தால் அது முடிந்த அளவு திடீர்த் தாக்குதல்களை முறியடிப்பதற்கு ஏதுவாக இருப்பதுடன், முடிந்தால் பிற பகுதிகளைக் கைப்பற்றுவதற்கும், அருகாமையிலுள்ள வலிமையற்ற நாடுகளைத் தோற்கடித்துத் தங்கள் பெருமையை (மீண்டும்) நிலைநாட்டிக் கொள்வதற்கும், வெளிநாடுகளில் தங்கள் பெருமைகளை உயர்த்திக் கொள்வதற்கும், வெளிநாடுகளில் தங்களுக்குச் சொந்தமான குடியேற்றப் பகுதிகளின் பாதுகாப்பிற்கும் மிகுந்த உதவியாக இருக்குமெனவும் கருதினர்.

இத்தகைய சூழ்நிலையில், 1866ஆம் ஆண்டிற்கு முன்னர் கட்டாய இராணுவப் பயிற்சியை மிகக் கடுமையாக எதிர்த்த ஜெர்மனியப் பாராளுமன்றம், 1866ஆம் ஆண்டில் ஆஸ்திரி

யாவிற்கும் பிரஷ்யாவிற்குமிடையே ஏற்பட்ட ஆஸ்திரிய–பிரஷ்யப் போரில் பிரஷ்யா வெற்றியடைந்ததைக் கண்டு அதனுல் பெருமையடைந்தது. இப்போருக்குப் பின்னர் ஜெர்மனியப் பாராளுமன்றம் முன்னைவிட அதிக உற்சாகத்துடன் தன்னுடைய நாட்டின் இராணுவத்திற்காகத் தாராளமாக நிதி ஒதுக்கீடு செய்தது. மேலும் ஜெர்மனி 1866ஆம் ஆண்டிற்குப் பின்னர் இராணுவத்தில் பல புதிய சீர்திருத்தங்களை ஏற்படுத்தியது. இச் சீர்திருத்தங்களின் காரணமாக ஜெர்மனியக் கொள்கைகள் அந்நாட்டின் இராணுவக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன. மேலும் இந்நாட்டின் அரசுத் திட்டங்கள் யாவும் அவற்றின் வெற்றிக்குத் தங்கள் நாட்டின் போர்க் கருவிகளையே நம்பி இருந்தன. ஜெர்மனியின் இத்தகைய இராணுவக் கொள்கைகளாலும், வலிமையினுலும் ஜெர்மனி ஐரோப்பிய நாடுகளிலேயே மிக வேகமாக வளர்ச்சியைப் பெற்றதுடன், ஒரு வல்லரசாகவும் விளங்க ஆரம்பித்தது. எனவே ஜெர்மனியைப் பின்பற்றி 1868ஆம் ஆண்டில் ஆஸ்திரியா—ஹங்கேரியும், 1872ஆம் ஆண்டில் பிரான்சும், 1874ஆம் ஆண்டில் இரஷ்யாவும், 1875ஆம் ஆண்டில் இத்தாலியும் தங்கள் நாட்டின் இராணுவக் கொள்கைகளை மாற்றியமைத்தன. இந்த நாடுகளில் கட்டாய இராணுவப்பயிற்சித் திட்டம் கொண்டு வரப்பட்டது. இத்தகைய நடவடிக்கைகள் பின்னர் முதல் உலகப் போருக்கு ஒரு காரணமாக அமைந்தன.

இக் காலத்தில் ஏறத்தாழ எல்லா ஐரோப்பிய நாடுகளுமே தங்கள் நாட்டில் முன்னர் எப்பொழுதும் பெற்றிராத அளவில் மிக அதிகமான போர்க் கருவிகளை வைத்திருந்தன. மிகச் சிறிய ஐரோப்பிய நாடுகள் கூடத் தங்கள் நாட்டில் போர்க் கருவிகளின் எண்ணிக்கையை அதிகரித்ததுடன், தங்கள் நாட்டில் இராணுவத் திறமையையும் மேம்பாடு அடையச் செய்வதில் அதிக கவனம் செலுத்தின. தங்கள் இராணுவத்தை வலிமையுடையதாக்கின. மேலும் இராணுவத்திற்காக மிக அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்தன. "இரும்பு பிடித்தவன் கையும் சிரங்கு பிடித்தவன் கையும் சும்மா இருக்காது" என்ற பழமொழிக்கேற்ப போர்க் கருவிகளையும், அவற்றைப் பயன்படுத்தும் முறைகளையும் நன்கு அறிந்திருந்த திறமையான போர் வீரர்கள், தங்களிடமிருந்த போர்க் கருவிகளைப் பயன்படுத்துவதற்கும், தங்கள் திறமைகளை வெளிப்படுத்துவதற்கும் தங்களுக்குக் கிடைத்த வாய்ப்புக்களை யெல்லாம் தக்க சமயத்தில் பயன்படுத்தியதுடன், மேலும் அதிக அளவில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்துவதற்குத் தக்க தருணத்தை எதிர்

பார்த்துக் காத்திருந்ததில் வியப்பில்லை. ஐரோப்பிய வல்லரசுகளிலேயே பிரிட்டன் மட்டுமே தன்னுடைய பழைய இராணுவ அமைப்பில் அதிக மாறுதல் எதுவுமின்றி இருந்து வந்தது. ஆனால் பிரிட்டனின் இராணுவச் செலவு இக் காலத்தில் கணிசமான அளவு நிதானமாக உயர்ந்தது. அதே போன்று பிரிட்டனின் ஆதிக்கத்தினின்றும் விடுதலையடைந்த ஐக்கிய அமெரிக்க நாட்டில், 1861ஆம் ஆண்டு முதல் 1865ஆம் ஆண்டு வரை ஏற்பட்ட உள்நாட்டுப் போருக்குப் பின்னர் குறைந்த அளவியேயே இராணுவத்தை வைத்திருந்தனர். இவ்விரு நாடுகளிலும் குறைத்த அளவில் கூலிப்படைகளும் இருந்தன. பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளின் இருப்பிடமும் இயற்கை அமைப்பும் இந்நாடுகளின் இத்தகைய இராணுவக் கொள்கைகளுக்கு முக்கிய காரணமாக இருந்தன என்பதை நாம் நினைவு கொள்வது நன்று.

இவ்வாறு பெரிய இராணுவங்களும், இராணுவத்திற்கான அதிக நிதி ஒதுக்கீடுகளும் 1870 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஐரோப்பிய நாடுகளிடையே வழக்கமாக மாறிவிட்டன. அரசியல் வாதிகளும் மற்றவர்களும் இராணுவத்தின் வலிமைக்காகவும், இராணுவத்திற்கு அதிக நிதி ஒதுக்கீட்டிற்காகவும் பாடுபட்டனர். இந் நாடுகளின் பொதுமக்களும் தேசியப் பாதுகாப்பு என்ற பெயரில், அமைதியை நிலை நாட்டுவதற்காக, இராணுவத்திற்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்வதை ஏற்றுக் கொண்டனர். எனவே 1878 ஆம் ஆண்டு முதல் 1914 ஆம் ஆண்டு வரை ஐரோப்பாவில் அமைதி நிலவத் தொடங்கியது. புதிய போர்க் கருவிகளைத் திறமை வாய்ந்த போர் வீரர்கள் பயன்படுத்துவதால் ஏற்படக் கூடிய விளைவுகளைக் கண்டு ஐரோப்பியர்கள் அஞ்சி, போர்களைத் தவிர்த்ததால், 1878 ஆம் ஆண்டிற்குப் பின் ஏற்பட்ட இவ்வமைதி, படை வலிமையால் ஏற்பட்ட அமைதி (Armed Peace) என்று சொல்லப்பட்டது. ஆனால் ஐரோப்பாவிற்கு வெளியே, குறிப்பாக ஆப்ரிக்கா, ஆசியா, இலத்தீன் அமெரிக்கா போன்ற பகுதிகளில் தொழில் புரட்சி வளர்ச்சியடையவில்லை. இப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் நாகரிகத்திலும் பொருளாதாரத்திலும் பின்தங்கிய நிலையிலேயே இருந்தனர். இவர்களது இராணுவமும் ஐரோப்பிய இராணுவத்தின் தாக்குதலைத் தடுக்கக் கூடிய அளவிற்கு வலிமையுடையதாக இல்லை. சுருங்கக் கூறின் இவர்களது இராணுவம் வலிமையற்றதாயிருந்தது. எனவே 1870ஆம் ஆண்டிற்குப் பின்னர் தங்கள் நாடுகளில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாக இலாபமடைந்து, மேலும்

அதிக இலாபம் சம்பாதிக்க வேண்டுமென்று கருதிய ஐரோப்பிய நாடுகள் இப் பகுதியில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தி, இப்பகுதிகளின் அமைதியைக் குலைத்தன.

B. கடற் படை

தங்கள் நாடுகளில் ஏற்பட்ட தொழிற் புரட்சியின் காரணமாக, ஐரோப்பிய நாடுகள் உலகின் பல பகுதிகளில் தங்கள் ஆதிக்கத்தையும், குடியேற்ற நாடுகளையும் ஏற்படுத்தின. இவ்வாறு ஐரோப்பிய நாடுகள் உலகின் பல பகுதிகளில் குடியேற்ற நாடுகளை ஏற்படுத்துவதற்கு மிகவும் உதவியாகவும், பாதுகாப்பாகவும் இருந்தது அந்நாடுகளின் கப்பற் படையேயாகும். இக்கப்பற் படைகள் (தங்கள் நாடுகளின்) கடல் வாணிபத்திற்குப் பக்க பலமாக இருந்தன. தங்கள் தொழிற் சாலைகளுக்குத் தேவையான கச்சாப் பொருள்களையும், தங்கள் மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களையும் வெளி நாடுகளிலிருந்தும், குடியேற்ற நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்வதற்கும், தங்கள் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கும், தங்கள் நாட்டின் மதப் பிரச்சாரகர்களுக்கும் வியாபாரிகளுக்கும் வெளி நாடுகளில் தக்க பாதுகாப்பும், ஆதரவும் கொடுப்பதற்கும், பின் தங்கிய பகுதிகளில் தங்கள் நாட்டின் ஆதிக்கத்தை ஏற்படுத்தி அப் பகுதிகளில் தங்கள் நாட்டவருக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கும், தங்கள் புகழை வெளிநாடுகளில் பரப்புவதற்கும் இக் கப்பற் படைகள் மிக உதவியாக இருந்தன. எனவே தொழில்களில் அதிக முன்னேற்றமடைந்த நாடுகளின் அரசாங்கங்கள் தங்கள் கப்பற்படையை வலிமையுறச் செய்வதில் மிகுந்த கவனம் செலுத்தின. நாட்டுப்பற்று மிக்க மக்கள் சமீப காலத்தில் வளர்ச்சியடைந்த அறிவியல் நுண் கலைகளைக் கப்பற் படையில் புகுத்தித் தங்கள் நாட்டின் கப்பற் படையை நவீன மயமாக்க விரும்பினார்கள். இதனால் பிரான்சு 1880 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பத்தாண்டுகளில் தன் கப்பற் படையை நவீன மயமாக்கியது. இதனைத் தொடர்ந்து தன்னுடைய கப்பற் படையை மேம்படுத்துவதற்கு நியமிக்கப்பட்டிருந்த நிபுணர் குழு (Committee of Experts) எந்த ஒரு ஐரோப்பிய நாடும் தனது கப்பற் படையை பிரிட்டிஷ் கப்பற் படையுடன் ஒப்பிடும் அளவிற்கு பிரிட்டன் தன்னுடைய நாட்டுக் கப்பற்படையை நவீனப்படுத்தாமல் இருக்கக்கூடாது என்று கூறியதற்கு இணங்க, பிரிட்டன் 1888ஆம் ஆண்டு முதல் தன்னுடைய கப்பற்படையை மேலும் நவீனமாக்கியது.

இவ்விரு ஐரோப்பிய நாடுகளையும் தொடர்ந்து ஜெர்மனி, ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் தங்கள் கப்பற்படையை 1890 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அதிக அளவில் பலப்படுத்தின. எனவே இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் பல வல்லரசுகள் சிறப்பான கப்பற்படைகளைப் பெற்றிருந்தன.

இவ்வாறு வலிமை வாய்ந்த இராணுவம், கப்பற்படை ஆகிய இரண்டையும் பயன்படுத்தி, ஐரோப்பிய நாடுகள் 1870 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஆசியா, ஆப்ரிக்கா, தென்னமெரிக்கா முதலிய இடங்களில் தங்கள் குடியேற்ற நாடுகளையும் ஆதிக்கத்தையும் ஏற்படுத்தின. இதனுல் ஐரோப்பிய நாடுகளிடையே ஏற்பட்ட போரின் காரணமாக, இந்நாடுகளிடையே ஏகாதிபத்தியக் கொள்கை வளர்ச்சி யடைந்தது. இதற்கு ஐரோப்பிய நாடுகளில் வளர்ச்சியடைந்த பொருளாதாரமும், தேசியக் கொள்கைகளுமே முக்கிய காரணங்களாகும்.

ஆனுல் 1870 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஐரோப்பியப் பேரரசுகள் தங்கள் குடியேற்ற நாடுகளில் சிலவற்றைத் தங்கள் சுதந்திரக் கொள்கைகளாலும் குடியேற்ற நாடுகளுக்காகத் தங்களால் நியமிக்கப்பட்ட ஆளுநர்களின் (Governors) போக்குகளாலும் இழந்தன. மேலும் இக்காலங்களில் குடியேற்ற நாடுகளுக்கும் அவற்றின் தாய்நாடுகளுக்கு மிடையே அடிக்கடி போர்கள் ஏற்பட்டன. இதனுல் தாய்நாடுகள் தங்கள் குடியேற்ற நாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக அதிக அளவில் செலவு செய்ய வேண்டியிருந்ததால் தாய்நாடுகளி லிருந்த தேசிய வாதிகள் பலர் தங்கள் நாடுகளின் ஏகாதிபத்தியக் கொள்கைகளைக் குறை கூறினர். உதாரணமாக பிரான்சு 1830ஆம் ஆண்டிற்கும் 1849 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் அல்ஜீரியா (Algeria) வை விருப்பமில்லாமல் கைப்பற்றியது. பின்னர் மூன்றும் நெப்போலியன் பிரான்சின் அரசராக இருந்த காலத்தில் உலகின் பிறபகுதிகளில் பிரான்சின் ஆதிக்கம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. ஆனுல் பின்னர் இவை யாவும் மாறிவிட்டன.

பிரான்சு இவ்வாறு இருக்கையில், பிரிட்டன் தன்னுடைய குடியேற்றப் பகுதிகளுக்குச் சுயாட்சி உரிமை வழங்கியதன் மூலம் வெளிநாடுகளில் தனது ஆதிக்கத்தையும் வலிமையையும் இழந்தது. ஸ்பெயின் நாடும் தனது நாட்டின் அரசியலில் ஏற்பட்ட குழப்பங்களின் காரணமாகவும், தனது வலிமையற்ற நிலை

யினும் தன்னுடைய ஆதிக்கப் பகுதிகளில் பெரும்பாலான வற்றை இழக்கும் சூழ்நிலையிலிருந்தது. டச்சுக்காரர்களும் போர்ச்சுகீசியர்களும் மேற்கொண்டு எந்தப் பகுதிகளையும், தங்கள் ஆதிக்கப் பகுதியாகவோ குடியேற்றப் பகுதியாகவோ கொள்ளுவதற்கு விரும்பவில்லை. ஆனால் இத்தாலி, ஜெர்மனி, பெல்ஜியம், ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு 1870 ஆம் ஆண்டிற்கு முன்னர் தங்கள் ஆதிக்கத்தை வெளி நாடுகளில் ஏற்படுத்துவதற்கோ குடியேற்ற நாடுகளை ஏற்படுத்துவதற்கோ எத்தகைய வாய்ப்பும் ஏற்படவே இல்லை. (சுருங்கக் கூறின் 1870 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஐரோப்பிய வல்லரசுகள் பிரிட்டன், பிரான்சு ஆகிய நாடுகளைத் தவிர மற்றவை தங்கள் ஆதிக்கத்தை வெளிநாடுகளில் ஏற்படுத்துவதற்கு அதிகமாக விரும்பவில்லை). ஆனால் 1870 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இராணுவம், கடற்படை ஆகியவற்றை வலிவடையச் செய்ததால், இந்நாடுகள் தங்கள் ஆதிக்கத்தை வெளிநாடுகளில் ஏற்படுத்தத் தொடங்கியதில் வியப்பில்லை.

C. ஏகாதிபத்தியதற்குப் பொருளாதாரத்தின் ஊக்கம்

ஐரோப்பிய நாடுகளில் இராணுவத்திற்கும் கப்பற்படைக்கும் அதிக முக்கியத்துவம் ஏற்பட்டதன் காரணமாகவும், தொழில்புரட்சியின் காரணமாகவும் 1880 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஐரோப்பிய நாடுகளின் கொள்கைகளிலும், போக்கிலும் அதிக மாற்றங்கள் ஏற்பட்டன. இச் சமயத்தில் தொழில் துறையில் மிக வளர்ச்சியடைந்த நாடுகள் தங்களுக்குத் தேவையான கச்சாப் பொருள்களையும், முக்கிய உணவுப் பொருள்களையும், அவை அதிகமாக இருந்த வளர்ச்சியடையாத நாடுகளிலிருந்து, குறிப்பாக ஆசியா, ஆப்ரிக்கா போன்ற இடங்களிலிருந்து பெற விரும்பின. பொருளாதார தேசியம் (Economic Nationalism) வளர்ச்சியடைவதற்கு அதிக அளவில் வளர்ச்சி பெறாத நாடுகளைத் தங்கள் ஆதிக்க நாடுகளாகவோ அல்லது குடியேற்ற நாடுகளாகவோ பெற்றிருக்க வேண்டுமென ஐரோப்பியர் கருதினர். மேலும், இவ்வாறு வளர்ச்சியடையாத நாடுகளையோ, குடியேற்ற நாடுகளையோ, வளரும் வல்லரசு நாடுகள் பெற்றிருந்தால் மிகக் குறைந்த விலையில் அதிக அளவு கச்சாப் பொருள்களைத் தங்கள் தொழிற்சாலைகளுக்குப் பெறுவதன் மூலமும், தங்கள் நாடுகளில் அதிக அளவு உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் உள்ள பகுதிகளில் அதிக விலைக்கு விற்பதன் மூலமும் தங்களுடைய பொருளாதார நிலை உயரும் என வல்லரசுகள் கருதின.

வளரும் நாடுகள் இயந்திரங்களின் உதவியால் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்த பொருள்களை (தங்கள்தேவைக்குப் போக எஞ்சியவற்றை) வெளிநாடுகளின் சந்தைகளில் விற்பனை செய்து வந்தன. வெளிநாடுகளில் குறிப்பாக ஐரோப்பாவில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்கு அதிக கிராக்கி இருந்தது. எனவே ஐரோப்பிய நாடுகள் தங்கள் நாடுகளுக்கும், தங்கள் ஆதிக்கத்தின் கீழ் இருந்த பகுதிகளுக்கும் வரும் பிற வெளிநாட்டுப் பொருள்களின் மீது காப்புவரியை (tariff) விதித்தன. மேலும் ஒரு வியாபாரி தன்னுடைய விற்பனைப் பகுதியில் விற்பனை செய்யும் பிற வியாபாரிகளிடமிருந்து அவர்கள் பகுதியில் தன் பொருள்களை விற்பனை செய்வதற்குச் சில சலுகைகளைப் பெற்றார். இதனால் பின்தங்கிய நாடுகளில் வளர்ச்சி பெற்ற நாடுகளிடையே பொருள்களை விற்பனை செய்வதில் போட்டி ஏற்பட்டது. இத்துடன் வளரும் ஐரோப்பிய நாடுகள் வெளிநாடுகளில் தங்கள் பொருள்களை விற்பனை செய்யும் பின்தங்கிய பகுதிகள் தங்களது குடியேற்ற நாடுகளாகவோ, தங்களைச் சார்ந்து இருக்கின்ற நாடுகளாகவோ இருந்தால் தங்கள் பொருள்களை அதிக சிரமமின்றி விரைவாக விற்பனை செய்ய முடியுமெனக் கருதின. அத்துடன் இப் பகுதிகளில் தங்கள் பொருள்களின் மீது விதிக்கப்படும் தேவையற்ற காப்புவரிகளை விலக்கிவிட முடிவதோடு வியாபாரத் துறையில் ஏற்படும் தேவையற்ற போட்டிகளையும் தவிர்க்க முடியுமெனக் கருதின. இதனால் ஐரோப்பிய நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்குக் குடியேற்றப் பகுதிகளில் அதிக மதிப்பு ஏற்படுவதுடன் இப்பகுதிகளில் ஐரோப்பியப் பொருள்களுக்கு அதிக விலை இருக்குமென எதிர்பார்க்கப் பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாகத் தங்கள் நாடுகளில் அமைதியையும் வியாபாரத்தையும் பாதுகாக்க முடிவதுடன் தங்களுடைய நாட்டு மக்களைத் தங்கள் குடியேற்ற நாடுகளில் வியாபாரப் பிரதிநிதிகளாகவும், அதிகாரிகளாகவும் நியமிப்பதின் மூலம் புகழை அடையலாமெனவும் ஐரோப்பிய நாடுகள் கருதின.

இந்நிலையில் வளரும் ஐரோப்பிய நாடுகளிடையே தங்கள் நாட்டின் ஏற்றுமதிப் பொருள்களை அதிகரிக்க வேண்டுமென்ற எண்ணம் எழுந்தது. அத்துடன் இந்நாடுகளில் வாழ்ந்த செல்வந்தர்களும், தங்கள் நாட்டைவிடப் பின்தங்கிய நாடுகளில் வட்டிவிகிதம் அதிகமாக இருந்ததால், அந்நாடுகளில் தங்கள் மூலதனத்தை முதலீடு செய்ய முன் வந்தனர். இவர்கள் அதிக இலாபம் பெற நினைத்ததும் இதற்கு ஒரு முக்கிய காரண

மாகும். ஆனால் 1870 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஐரோப்பாவில் மிக வளர்ச்சியடைந்த நாடாக விளங்கியது பிரிட்டன். இந் நாடு 1870-ல் வெளிநாடுகளில் மூலதனம் செய்திருந்த தொகையின் மொத்தமதிப்பு சுமார் 50 இலட்சம் டாலர்களாகும் இத்தொகையினைப் பிரிட்டன் முக்கியமாக ஐக்கிய அமெரிக்கா விலும், ஐரோப்பிய நாடுகளிலுமே முதலீடு செய்திருந்தது. ஐக்கிய அமெரிக்காவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் 1870-ம் ஆண்டிற்குப் பின்னர் மிக விரைவாகத் தொழில் வளர்ச்சி ஏற்பட்டதால் நாளடைவில் இந்நாடுகளும் வளர்ச்சி பெற்ற நாடுகளாக மாறின. எனவே பிரிட்டன் இந் நாடுகளில் முதலீடு செய்வதை நிறுத்திக் கொள்ள முயன்றதுடன், தங்கள் மூலதனத்தைப் பின்தங்கிய நாடுகளில் முதலீடு செய்ய முற்பட்டது. இதனால் இக்காலத்தில் (1870க்குப் பின்னர்) ஜெர்மனி, பிரான்சு, பெல்ஜியம் போன்ற ஐரோப்பிய நாடுகளும், ஐக்கிய அமெரிக்காவும் பிரிட்டனைப் போலத் தங்கள் மூலதனத்தைப் பின்தங்கிய நாடுகளில் முதலீடு செய்ய ஆரம்பித்தன. இந்நாடுகளின் மூலதனமெல்லாம் இலத்தின் அமெரிக்கா, ஆசியா, ஆப்ரிக்கா போன்ற பின்தங்கிய நாடுகளிலேயே முதலீடு செய்யப்பட்டது. வடஅமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் இந்நாடுகள் முதலீடு செய்ய அவ்வளவாக முன்வரவில்லை. இந்நாடுகளின் செல்வந்தர்கள் ஆசியா, ஆப்ரிக்கா, இலத்தீன் அமெரிக்கா போன்ற இடங்களில் தங்கள் பணத்தை முதலீடு செய்த பொழுது, அங்கே தங்களின் பாதுகாப்பிற்காகவும், தங்கள் சொத்துக்களின் பாதுகாப்பிற்காகவும் தங்கள் அரசுகளின் உதவியை நாடினர். தங்கள் நாட்டவர்க்கு வெளிநாடுகளில் தக்க பாதுகாப்பு கொடுக்க வேண்டியது தங்கள் கடமை என்று தேசிய அரசுகளும் கருதின. இதனாலும் இவ்வரசுகளின் ஆட்சிப் பகுதி விரிவடைந்ததுடன் இவ்வரசுகளுக்கும் அரசியல், பொருளாதாரம் ஆகிய துறைகளில் அதிக சலுகைகள் கிடைத்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டினிறுதியில் மிக விரைவாக வளர்ச்சியடைந்த செய்தித் தொடர்பு, போர்க்கருவிகள் ஆகியவற்றின் காரணமாகவும் வளர்ச்சியடைந்த ஐரோப்பிய நாடுகள் பின்தங்கிய நாடுகளில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தின. பின் தங்கிய நாடுகளில் இருந்த நிர்வாகச் சீர்கேடுகளும், காவல் துறையின் திறமையின்மையும் உள்நாட்டுப் பூசல்களும் தங்கள் பகுதிகளில் வல்லரசுகளின் ஆதிக்கம் ஏற்படுவதற்குக் காரணங்களாக இருந்தன. பின்தங்கிய நாடுகளின் இத்தகைய நிலையும், வளர்ச்சியடைந்த நாடுகளின்

வலிமையும் ஐரோப்பிய வல்லரசுகளின் ஆதிக்கம் ஐரோப்பா, வடஅமெரிக்கா ஆகிய பகுதிகளைத் தவிர பிறபகுதிகளில் ஏற்படுவதற்கு வழிகோலின. இதற்கு வல்லரசுகளின் தேசியக் கொள்கைகளும் காரணங்களாயிருந்தன. இதனால் பெரும் பான்மையான மக்களின் ஒத்துழைப்புடன் வியாபாரிகளும், மூலதனக்காரர்களும் ஏகாதிபத்தியக் கொள்கைகளை மேற் கொள்ளத் தொடங்கினர். இவர்களின் இத்தகைய போக்கிற்கு ஐரோப்பிய வல்லரசுகளும் ஆதரவாக இருந்தன.

தேசியக் கருத்துக்களின் ஊக்கம்

பொருளாதாரம், வல்லரசுகளின் ஏகாதிபத்தியத்திற்குக் காரணமானது என்பது ஒருபுறமிருக்க, தேசிய ஏகாதிபத்திய வாதிகள் ஏகாதிபத்தியத்திற்குத் தேசியக் கருத்துக்கள் முக்கிய காரணம் என்று கருதினர். இவர்களின் கருத்துக்கள் பெரும்பா லும் நாட்டுப்பற்றை அடிப்படையாகக் கொண்டவை. ஏகாதி பத்தித்யதிற்குப் பொருளாதாரம் மிகவும் முக்கியமானது என்பதை இவர்கள் அவ்வளவாக ஏற்றுக் கொள்வதில்லை. இவர்கள் தேசிய உரிமைகளையும் (National Rights), தங்கள் தேசியக் கருத்துக்களை வளர்ச்சியடையச் செய்யும் முறை களையும், தேசியப் புகழையும் பற்றி மிக அதிகமாகப் பேசி வந்தனர். இத்துடன் தங்கள் நாடு ஒருமைப்பாடு அடைவ தற்குத் தங்கள் நாட்டின் தேசியவாதிகள் எவ்வாறு சிறப்பாகப் பாடுபட்டனர் என்பதைப் பற்றியும் புகழ்ந்து பேசி வந்தனர். எல்லாவற்றிற்கும் மேலாகத் தங்கள் நாட்டில் தொழில் வளர்ச்சி பெருகி அது வல்லரசாக விளங்குவதுடன் பின் தங்கிய நாடுகளில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தியதற்குத் தேசியக் கருத்துக்களே முக்கிய காரணம் எனக் கூறிவந்த துடன், எதையும் நன்கு ஆராயாமல் ஏகாதிபத்தியத்தைப் போற்றிப் பேசி வந்தனர்.

இத்தகைய தேசியவாதிகள் தங்களுடைய நாட்டிலுள்ள தொழிற்சாலைகளிலும், பிற நிறுவனங்களிலும் வேலைவாய்ப்புப் பெற்ற மக்கள் போக எஞ்சியுள்ள தங்கள் மக்களைக் குடியேற்ற நாடுகளிலும் ஆதிக்க நாடுகளிலும் குடியமர்த்தி, அங்குள்ள தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்புக் கொடுத்துத் தங்கள் மொழியையும், பழக்க வழக்கங்களையும் தங்கள் நாட்டின் விதி முறைகளையும் அப்பகுதிகள் அப்படியே பின்பற்றச் செய்வதற்கு வாய்ப்பளிக்க முடியும் எனக் கூறினர். இதனால் தங்கள் நாட்டின் மீதமுள்ள மக்களுக்குத் தங்கள் அரசு தேசியத்

தன்மை கெடாமல் சம அந்தஸ்தளித்துத் தனது கடமையை நிறைவேற்ற முடியும் எனவும் இவர்கள் எடுத்துரைத்தனர். இவற்றால் இம்மக்களுடைய தேசியம், மொழி, பண்பாடு, கலாச்சாரம் ஆகியவை வளர்ச்சியடையும் என்பதும் இவர்களது வாதங்களில் ஒன்றாகும். எல்லாவற்றிற்கும் மேலாக நாகரிக வளர்ச்சியடைந்த நாடுகள், நாகரிகத்தில் பின் தங்கிய நாடுகளில் நாகரிக வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டியது கடமை என்றும் கூறி வந்தனர். இக்கடமையைத் தங்கள் நாட்டுமக்களைப் பின்தங்கிய நாடுகளில் குடியேற்றுவதன் மூலம் நிறைவேற்ற முடியும் எனக் கூறினர். இவ்வாறு செய்வது "உயர்ந்த நாகரிகம்" (Higher civilization) என்றும் இவர்கள் கூறினர். பின்தங்கிய நாடுகளில் நாகரிக வளர்ச்சியை ஏற்படுத்துவதற்குத் தங்கள் நாட்டினர் தொழில் நிறுவனங்கள் பலவற்றை நிறுவி, அவற்றில் தங்கள் நாட்டவர்க்கு வேலை வாய்ப்பு அளிப்பதும், மருத்துவம், கல்வி, மதப்பிரச்சாரம் போன்ற துறைகளில் தங்கள் நாட்டினரைப் பணிபுரிய வைப்பதும் சிறந்த வழிகள் என இவர்கள் கருதினர். இதனைத் "தர்ம கர்த்தா முறை" என்றும், "வெள்ளையரின் பொறுப்பு" (White man's burden) என்றும் இவர்கள் கூறினார்கள். சுருங்கக் கூறின் ஏகாதிபத்தியக் கொள்கைகளுக்குத் தேசியமே அடிப்படை என்பதும், அதனைத் தேசியக் கொள்கைகளின் மூலமாகவே அடைய முடியும் என்பதும் தேசிய வாதிகளின் கருத்தாகும்.

தேசியவாதிகள், மூலதனக்காரர்கள், வியாபாரிகள் ஆகியோரின் வேண்டுதல்களுக்குத் தொழில் வளர்ச்சி பெற்ற ஐரோப்பிய நாடுகளின் அரசியல் வாதிகளும் செவிசாய்த்தனர். பிரிட்டனில் 1874 ஆம் ஆண்டிற்கும் 1880 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட ஆறாண்டுகளில் பழமைவிரும்பிக் கட்சியின் அமைச்சரவை இருந்தபொழுது, பெஞ்சமின் டிஸ்ரேலி (Benjamin Disraeli) பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கருத்துக்களை வலிவடையச் செய்ததுடன் அக்கருத்து தன் மக்களிடையே விரைவாகப் பரவுவதற்கும் வழிவகை செய்தார். அத்துடன் பல புதிய பகுதிகளையும் பேரரசுடன் இணைத்தார். அதே போன்று பிரான்சு நாட்டிலும் 1880 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஜூலிஸ் ஃபெர்ரி (Jules Ferry) என்பவர் பிரான்சின் ஏகாதிபத்தியக் கொள்கைகளுக்குத் தூண்டுதலாக இருந்தார். பழைய கருத்துக்களில் அதிக நம்பிக்கை வைத்திருந்த ஜெர்மனியின் முதலமைச்சரான பிஸ்மார்க், 1880 ஆம் ஆண்டிற்குப்பின்னர் ஜெர்மனியின் ஆதிக்கத்தை வெளிநாடுகளில் ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்து ஓரளவு வெற்றிபெற்றார்.

இதன்பயனாக ஜெர்மனி சில பகுதிகளைத் தன்னுடைய ஆதிக்கப் பகுதிகளாகப் பெற்றது. இவ்வாறே கிரீஸ்பி (Crispi) என்ற தீவிரவாதியின் காலத்தில் இத்தாலி சில பகுதிகளில் ஆதிக்கம் பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள ஆரம்பித்தது. 1890 ஆம் ஆண்டிற்கும் 1909 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட இருபதாண்டுக் காலங்களில் தியோடேர் ரூஸ்வெல்ட், வில்லியம் மேகின்லீ (William Mekinley) என்பவர்களின் முயற்சியால் ஐக்கிய அமெரிக்கா தன்னுடைய ஆதிக்கததை வெளிநாடுகளில் பெருக்குவதற்கு முயற்சி செய்தது. இது மன்ரோவின் கொள்கைகளுக்கு மாறாக இருப்பினும் ஐக்கிய அமெரிக்காவின் பாதுகாப்பிற்காகவே மேற்கொள்ளப் பட்டதாகக் கூறப்படுகிறது. இவ்வாறு வல்லரசுகள் ஏகாதிபத்தியக் கொள்கைகளைப் பின்பற்றுகின்றபொழுது ஐரோப்பாவில் பெல்ஜியமும், கிழக்கிந்தியப் பகுதியில் ஜப்பானும் பிரிட்டன், ஜெர்மனி, பிரான்சு போன்ற நாடுகளைப் பின்பற்றி ஏகாதிபத்திய நாடுகளாக மாறுவதற்கு முயற்சித்ததில் வியப்பில்லை. இச்சமயத்தில் ஸ்பெயின், அமெரிக்காவில் தான் இழந்த பகுதிகளை ஈடுகட்ட ஆப்பிரிக்காவில் சில பகுதிகளைப் பெற முயன்று கொண்டிருந்தது. இரஷ்யா ஆசியப் பகுதிகளில் தனதாதிக்கத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தது.

இவ்வாறு 1870 ஆம் ஆண்டிற்கும் 1914 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் ஐரோப்பிய ஏகாதிபத்தியம் உலகின் எல்லாப் பகுதிகளிலும் பரவியது. ஐரோப்பிய நாடுகள் ஆப்ரிக்காவைத் தங்கள் ஏகாதிபத்தியக் கொள்கையால் பங்கிட்டுக் கொண்டன. ஆசியாவும் பசிபிக்பெருங்கடலில் அமைந்துள்ள தீவுகளும், அரசியல் வளர்ச்சிக்காகவும், பொருளாதார வளர்ச்சிக்காகவும் ஐரோப்பிய வல்லரசுகளை எதிர்நோக்கியிருந்தன. ஆர்ட்டிக், அண்டார்ட்டிக் பகுதிகளை ஐரோப்பிய நாடுகள் தங்கள் ஏகாதிபத்தியப் பேராசையால் ஆராய்ந்தன. அமெரிக்காவும் ஐரோப்பாவுடன் பொருளாதாரம், கலாச்சாரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நெருங்கிய தொடர்பு கொள்ள ஆரம்பித்தது. இதனால் உலகின் எல்லாப் பகுதிகளிலும் ஐரோப்பியர்கள் பரவியிருந்தனர். ஐரோப்பியக் கப்பல்கள் ஏழு கடல்களிலும் சென்று வந்தன. இதனால் ஐரோப்பா, அமெரிக்க ஆகிய நாடுகளின் தொழில், அறிவியல், கலை, பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கங்கள், மொழி போன்றவை உலகின் எல்லாப் பகுதிகளுக்கும் பரவியதுடன் அப்பகுதிகளில் அவற்றின் ஆதிக்கத்தையும் ஏற்படுத்தின.

இதனால் உலக நாகரிகமும் ஓரளவு இக்காலத்தில் சிறப்பாக வளர்ச்சி யடைந்தது. இருப்பினும் இவை யாவும் எவ்வாறு 1914 ஆம் ஆண்டில் முதல் உலகப்போர் ஏற்படுவதற்குக் காரண மாக இருந்தன என்பதைப் பின்னர் ஆராய்வோம்.

2. அமெரிக்கா ஐரோப்பிய மயமாதல்

ஐரோப்பிய நாடுகள் 1870ஆம் ஆண்டிற்குப் பின்னர் உலகின் பல பகுதிகளிலும், குறிப்பாக ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா போன்ற பகுதிகளில் எவ்வாறு தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தின என்பதை அறிந்தோம். இத்தகைய ஐரோப்பிய ஆதிக்கம் தென்னமெரிக்காவில் மட்டுமே அதிக அளவில் ஏற்பட்டது. வட அமெரிக்காவில் ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஐரோப்பிய நாடுகளுடன் தொழில் துறையிலும், ஏகாதிபத்தியத் துறையிலும் போட்டியிட்டதால் ஐரோப்பியர்களின் ஆதிக்கம் அங்கு அவ்வளவாக ஏற்படவில்லை. இருப்பினும் இப்பகுதி களிலும் ஐரோப்பியர்கள் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்த முயற்சி செய்யாமலில்லை. மறுமலர்ச்சிக் காலத்தில் ஐரோப்பிய மக்களிடையே ஏற்பட்ட அறிவு வளர்ச்சியின் காரணமாகவும், கலை, அறிவியல் ஆகிய துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாகவும், ஸ்பெயின் நாட்டின் ஃபெர்டினண்டு, இஸபெல்லா ஆகியோர்களது ஊக்கத்தின் காரணமாகவும், புதிய நாடுகளும், வழிகளும் கண்டுபிடிக்கப்பட்ட பொழுது தீரச் செயல்களைச் செய்ய வேண்டுமென்று கருதிய ஐரோப்பியர் சிலர் அமெரிக்காவின் கிழக்குக் கரைப் பகுதிகளுக்குச் சென்று அங்குத் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். போலோ சகோதரர்களின் பயணக் குறிப்பும் இவர்களுக்கு ஓர் உதவி யாக இருந்தது. பின்னர் ஐரோப்பாவில் ஏற்பட்ட மதச் சீர் திருத்தக் காலத்தில் ஏற்பட்ட மாறுதல்களின் காரணமாகப் பல ஐரோப்பியர்கள் அமெரிக்காவிற்குச் சென்று குடியேற ஆரம்பித்தனர். அதே போன்று ஐரோப்பாவில் வாழ்ந்த பலர் தங்கள் பிழைப்பைத் தேடியும், வியாபாரத்தின் காரணமாகவும், ஐரோப்பிய அரசியலின் கொடுமைகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்காகவும் அமெரிக்காவில் அட்லாண் டிக் கடற்கரைப் பகுதிகளுக்குச் சென்று குடியேறினர். இதனால் அமெரிக்கா பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளிலேயே ஐரோப்பிய மயமாகத் தொடங்கியது. அவர்கள் இப்பொழுது ஐரோப்பாவில் நிலவும் தற்கால நாகரிகத்தைப் போன்றே, தங்கள் பகுதிகளில் நாகரிகத்தைப் பின்பற்றி வருவதால், ஐரோப்பிய நாகரிகத்தைப் பின்பற்றும் இவர்கள் அட்லாண்டிக்

சமுதாயத்தார் என்று அழைக்கப்படுகின்றனர். பசிபிக் பெருங்கடல் தீவுகளான பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியா ஆகிய பகுதிகளில் நிலவும் நாகரிகமும், தற்கால ஐரோப்பிய நாகரிகத்தை ஒத்திருப்பதால் இங்கு வாழும் மக்களும் "அட்லாண்டிக் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள்" என்றே அழைக்கப்படுகின்றனர். இதனால் 16, 17 ஆம் நூற்றுண்டுகளில் அட்லாண்டிக் பெருங்கடல் ஐரோப்பிய அல்லது மேற்கத்திய நாகரிகத்தின் எல்லையாக அமைந்திருந்தது என்பதைவிட, இந்நாகரிகத்தின் முக்கிய பகுதியாக விளங்கியது என்றே கூறலாம்.

அட்லாண்டிக் பெருங்கடலின் மேற்குக் கரையில் அமைந்திருந்த அமெரிக்க நாடுகள் பெரும்பாலும் 15 ஆம் நூற்றுண்டு முதற்கொண்டு ஸ்பெயின், பிரான்சு, பிரிட்டன், ஜெர்மனி ஆகிய ஐரோப்பிய நாடுகளின் பகுதிகளாகவே இருந்து வந்தன. இங்கு வாழ்ந்து வந்த மக்கள் ஐரோப்பிய மொழிகளையே பேசி வந்தனர். எனவே இவர்களது மதக் கொள்கைகள், சமுதாயப் பழக்க வழக்கங்கள், கலாச்சாரம், பண்பாடு ஆகியவை ஐரோப்பியருடையவற்றைப் போன்றே காணப்பட்டன. இப் பகுதியில் வாழ்ந்த மக்கள் பெரும்பாலோர் ஐரோப்பிய இனத்தைச் சார்ந்தவர்களாகவே இருந்தனர். மேலும் இவர்கள் ஒரே வகையான கருத்துக்களையும் ஒரே விதமான பழக்க வழக்கங்களையும் கொண்டிருந்தனர். ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட சமுதாய மாறுபாடுகள் இவர்களையும் பாதித்தன. உதாரணமாக ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டதைப் போலவே, இயந்திரத் தொழில், அரசியல், ஜனநாயகம், தேசியக் கருத்துக்கள், ஏகாதிபத்தியக் கொள்கைகள் போன்றவை ஐக்கிய அமெரிக்காவிலும் ஏற்பட்டன. எனவே 1870 ஆம் ஆண்டு முதற்கொண்டு காணப்பட்ட ஐரோப்பிய ஆதிக்க வளர்ச்சி "அட்லாண்டிக் சமுதாயத்தின்" ஆதிக்க வளர்ச்சி என்றே கூறலாம்.

1914 ஆம் ஆண்டில் அமெரிக்க நாடுகளின் மொத்த மக்கள் தொகை சுமார் இருபது கோடியாக இருந்தது. இது ஐரோப்பாவின் மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ பாதியளவாகும். இந்த அமெரிக்க நாடுகளில் வசித்து வந்த சுமார் 20 கோடி மக்களில் 50 விழுக்காட்டைக் காட்டிலும் சற்று அதிக மக்கள் ஆங்கிலம் பேசி வந்தனர். எஞ்சிய ஒன்பது கோடியே நாற்பது இலட்சம் மக்கள் இலத்தீனமெரிக்காவில் வாழ்ந்து வந்தனர். இவர்களும் ஸ்பானிய மொழி, போர்ச்சுகீசிய மொழி, பிரெஞ்சு மொழி ஆகிய ஐரோப்பிய மொழி

களையே பேசி வந்தனர். இவர்களது பகுதியில் ஐரோப்பிய நாடுகளின் அரசியலாதிக்கம் நிலைபெற்றிருந்ததே இதற்கு முக்கிய காரணமாகும். ஐக்கிய அமெரிக்கா விடுதலையடைவதற்கு முன்னர் பிரிட்டிஷ்காரர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டு இருந்ததால், இங்கு ஆங்கில மொழி பேசப்பட்டு வந்ததும், பதினேழாம், பதினெட்டாம் நூற்றுண்டுகளில் பிரிட்டன் ஐரோப்பாவின் வல்லரசாகத் திகழ்ந்ததோடு மிக வலிமை வாய்ந்த கப்பற்படையை வைத்திருந்ததும் அமெரிக்க நாடுகளில் வாழ்ந்த மக்கள் பெருமளவில் ஆங்கிலம் பேசி வந்ததற்கு முக்கிய காரணமாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஐக்கிய அமெரிக்கா: ஐரோப்பாவின் சமுதாயம், அரசியல், பண்பாடு ஆகியவற்றை ஐக்கிய அமெரிக்க நாடு அப்படியே பின்பற்றியதை நாம் ஐக்கிய அமெரிக்கா ஐரோப்பியமயமாதல் என இங்கு நாம் கருதுகிறேம். எனவே இப்பகுதியில் நாம் ஐரோப்பாவைப் பின்பற்றி ஐக்கிய அமெரிக்க நாடு எவ்வாறு மிகச் சிறப்பாக வளர்ச்சிடைந்தது என்பதை இனிக் கவனிப்போம்.

ஐக்கிய அமெரிக்காவின் மக்கள்தொகை பத்தொன்பதாம் நூற்றுண்டில் மிக அதிகமாக இருந்தது. இந்நாட்டில் 1790ஆம் ஆண்டிற்கும் 1830ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் சுமார் 4 இலட்சம் மக்கள் ஐரோப்பாவிலிருந்து குடியேறினர். ஆனால் 1870ஆம் ஆண்டிற்கும் 1910 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட அதே நாற்பதாண்டுகளில் 200 இலட்சம் மக்கள் ஐரோப்பாவிலிருந்து ஐக்கிய அமெரிக்காவில் குடியேறினர்கள். இவர்களில் ஆங்கிலேயர்கள் முதலிலும், ஜெர்மனியர்கள், ஐரிஷ்காரர்கள் போன்றவர்கள் பின்னரும் குடியேறினர். 19ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் ஸ்காண்டிநேவியர்களும், இத்தாலியர்களும், ஹங்கேரியர்களும், ஸ்லாவ் இனத்தைச் சேர்ந்தவர்களும் ஐக்கிய அமெரிக்காவில் குடியேறினர்கள். இதனுல் ஐக்கிய அமெரிக்காவின் மொத்த மக்கள்தொகையில் 1914ஆம் ஆண்டில் 15 சதவிகிதம் பேர்கள் வெளிநாட்டில் பிறந்தவர்களாகவும், 10 சதவிகிதம் பேர்கள் நீக்ரோக்களாகவும் இருந்தனர். இவர்களில் பெரும்பாலோர் 17ஆம் நூற்றுண்டில் ஐக்கிய அமெரிக்கா பிரிட்டனின் குடியேற்ற நாடாக இருந்தபொழுது ஐரோப்பாவிலிருந்து குடியேறினர். பலர் ஐரோப்பாவில் 18ஆம் நூற்றுண்டில் ஏற்பட்ட மக்கள்தொகைப் பெருக்கத்தால் ஐக்கிய அமெரிக்காவில் குடியேறினர். ஆப்பிரிக்காவின் மக்கள் பலர் அடிமைகள் என்ற பெயரில் ஐக்கிய

அமெரிக்காவிற்குக் கொண்டு செல்லப்பட்டனர். நாளடைவில் இவர்களும் ஐக்கிய அமெரிக்காவின் குடிமக்களாயினர். இவ்வாறு ஐக்கிய அமெரிக்காவில் குடியேறியவர்கள் யாவரும் ஐரோப்பிய சமுதாயத்தின் பழக்க வழக்கங்களையே பின்பற்றி வாழ்ந்து வந்தனர்.

பதினெட்டாம் நூற்றுண்டில் வட அமெரிக்காவில் அட்லாண்டிக் கடற்கரையில் அமைந்திருந்த பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் தேசிய உணர்ச்சி ஏற்பட்டது. இதனுல் இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் தங்கள் தாய் நாடான இங்கிலாந்துக்கு எதிராகப் போராடி விடுதலை பெற்று ஐக்கிய அமெரிக்கா என்ற பெயரில் ஒரு கூட்டரசினை (Fedaration) ஏற்படுத்தினர். இதன் பின்னர் இவர்கள் தங்களுக்கென்று ஒரு தனித் தன்மையாக அமெரிக்கப் பண்பாடு ஒன்றை வளர்த்துக் கொண்டனர். இவ் வமெரிக்கப் பண்பாடு அமெரிக்க தேசியக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு விளங்கி வந்தது. இந்நாட்டிலிருந்த மக்களில் பெரும்பாலோர் ஐரோப்பியர்களாகவும், முன்னர் பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கு உட்பட்டும் இருந்ததால் பெரும்பாலும் இவர்களது பண்பாடு ஐரோப்பியப் பண்பாட்டை ஒத்திருந்தது. ஆங்கில மொழியே இம்மக்களை ஒன்று படுத்தும் சக்தியைப் பெற்றிருந்தது. ஆங்கிலக் கலாச்சாரங்களே இம்மக்களிடையே காணப்பட்டன. இருப்பினும் அரசியல் துறையிலும், சமுதாய வளர்ச்சியிலும் இவர்கள் ஒரு தனிமரபைப் பின்பற்றினர். இது அமெரிக்கப் பண்பாடு என அம் மக்களால் சொல்லப்பட்டது.

மேற்கு ஐரோப்பிய நாடுகளைப் போலத் தங்கள் நாட்டு மக்களின் அறியாமையைப் போக்குவதற்காக ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் தன்னுடைய நாட்டில் மிகப் பெரிய அளவில் இலவசப் பள்ளிகளைத் திறந்தது. இக்கல்வி நிலையங்களில் எல்லா மக்களுக்கும் ஒரே மாதிரியான கல்வி போதிக்கப்பட்டது. இதனுல் மக்களின் அறியாமை அறவே நீங்கியதுடன் நாட்டுப்பற்றும் ஐக்கிய அமெரிக்க மக்களிடையே வளர்ச்சி யடைந்தது. இதே போன்று ஐக்கிய அமெரிக்க நாடுகள் மதத் துறையிலும் சில கொள்கைகளை மேற்கு ஐரோப்பிய நாடுகளிடமிருந்து பின்பற்றின. தொடக்கத்தில் ஐரோப்பாவிலிருந்து ஐக்கிய அமெரிக்காவில் குடியேறிய மக்கள் புராடஸ்டெண்டு மதத்தைப் பின்பற்றினுலும் இந்நாட்டில் கத்தோலிக்க மதமும் பின்பற்றப்பட்டு வந்தது.

ஆனால் கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றியவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையினராகவே இருந்தனர்.

அரசியல் துறையில் ஐக்கிய அமெரிக்க நாடு ஐரோப்பாவைப் போல மக்களாட்சிக் கொள்கைகளையே பின்பற்றியது. குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்தவர்களுக்கும், சொத்துரிமை உடையவர்களுக்கும் மட்டுமே வாக்குரிமை என்ற தகுதி அடிப்படையில் வாக்குரிமை யளிக்கும் முறை படிப்படியாக இந்நாட்டில் நீக்கப்பட்டது. வயதுவந்த ஆண்கள் அனைவருக்கும் பிரான்சு நாட்டில் வாக்குரிமை வழங்கப்பட்ட பொழுது, ஐக்கிய அமெரிக்க நாட்டிலும் இம்முறை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

பிரிட்டனைப் போன்று, இந்நாட்டிலும் இரண்டு அரசியல் கட்சிகள் மாறிமாறி ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தை நடத்தி வந்தன. தேசியக் கருத்துக்களின் காரணமாக ஐரோப்பிய நாடுகள் ஒன்றுக் கொன்று சண்டையிட்டுக் கொண்டபொழுது ஐக்கிய அமெரிக்க நாட்டுப் பகுதிகளும் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டன. இப்போர் 1861ஆம் ஆண்டு முதல் 1865 ஆம் ஆண்டு வரை ஐக்கிய அமெரிக்க நாட்டில் அடங்கியிருந்த மாநிலங்களுக் கிடையே (தென் மாநிலங்களுக்கும் வட மாநிலங்களுக்கும்) நடைபெற்றது. இது ஐக்கிய அமெரிக்காவின் "உள்நாட்டுப் போர்" என ஐக்கிய அமெரிக்க வரலாற்றில் சிறப்பாகக் குறிக்கப்படுகிறது. இப்போர் ஐரோப்பாவில் இத்தாலியும், ஜெர்மனியும் ஐக்கியமடையும் பொழுது ஐக்கியஅமெரிக்காவில் நடைபெற்றது. எனவே இந்த உள் நாட்டுப் போர் (Civil war of 1861-1865) ஐரோப்பியர்கள் தேசிய உணர்ச்சியின் காரணமாகத் தங்களிடையே சண்டையிட்டுக் கொண்டபொழுது ஐக்கிய அமெரிக்க மக்களும் சண்டையிடத் தவறவில்லை என்பதையும், இவ்விரு நாட்டவரும் ஒரேவகையான கருத்துக்களை இத்துறையில் கொண்டிருந்தனர் என்பதையும் புலப்படுத்துகிறது.

தொழில் துறையிலும் ஐக்கிய அமெரிக்க நாடும் ஐரோப்பாவைப் போலவே மிக வேகமாக (பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்) முன்னேறியது. ஆனால் இந்நாடு மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் போரிடாமல் மிக அமைதியான முறையில் செய்தித் துறையில் முன்னேறியது. நிலக்கரி, இரும்பு, மின்சக்தி ஆகிய துறைகளில் இந்நாடு பிரிட்டன், ஜெர்மனி ஆகிய இரு வளர்ச்சி யடைந்த ஐரோப்பிய வல்லரசுகளைவிடப்

பெரிய அளவில் முன்னேற்றமடைந்து காணப்பட்டது. இதனால் மேற்கண்ட துறைகளிலும், இயந்திர சாதனங்களை உற்பத்தி செய்வதிலும் ஐக்கிய அமெரிக்கா முன்னணியில் நின்றது. இதனால் இயந்திரத் தொழிலிலும், விவசாயத் தொழிலிலும் ஐக்கிய அமெரிக்கா முதலாவதாக இருந்ததில் வியப்பில்லை. இந்நிலையில் இந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரமும் தொழில் வளர்ச்சிக்கு ஏற்ப உயர்ந்து காணப்பட்டது.

ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய நாட்டு மக்களிடையே அறிவுத் துறையில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியையும் உணரத் தவறவில்லை. விடுதலைக் கருத்துக்களும், நவீனக் கருத்துக்களும் ஐரோப்பிய மக்களிடையே வளர்ச்சியடைந்த பொழுது ஐக்கிய அமெரிக்க மக்களிடையேயும் இக் கருத்துக்கள் வலுவடைந்தன. இதனால் அமெரிக்க இலக்கியம் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சியடையத் தொடங்கியது. இந்நாட்டு மக்கள் சுதந்திர நாட்டில் சுதந்திரத் திருச்சபைகள் இயங்க வேண்டுமென விரும்பினார்கள். இதனால் திருச்சபைகள் அரசியலிலும், அரசு திருச்சபையின் ஆதிக்கத்திலும் தலையிடாமல் இரு துறைகளும் சுதந்திரமாக இயங்கின. கல்வித் துறை, அரசாங்கம் திருச்சபை ஆகியவற்றின் தலையீடு இன்றிச் சுதந்திரமாகச் செயல்பட்டது. விடுதலைக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு நீக்ரோக்களுக்குச் சமஉரிமை வழங்குவதற்காக அமெரிக்கர்கள் பாடுபட்டனர். இதற்காக இவர்கள் சிலரைக் கொலை செய்வதற்கும் தயங்கவில்லை. இதனைத் தொடர்ந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பொருளாதார தேசியத்தை அடைவதற்கு ஐக்கிய அமெரிக்கா முயற்சி செய்தது. எனவே தன்னுடைய நாட்டில் வெளிநாட்டுப் பொருள்களுக்கு அதிக அளவில் வரிவிதித்து, உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களுக்கு அதிக ஊக்கமளித்தது. தொழிலாளர் நலச் சட்டங்கள் பலவற்றை இந்நாட்டு அரசாங்கம் இயற்றியது. இத்தகைய ஐக்கிய அமெரிக்காவின் வளர்ச்சி அந்நாட்டு இலக்கியம், சமூகவியல், மனோதத்துவம் ஆகிய துறைகளில் பிரதிபலிக்கத் தொடங்கியது.

பிரிட்டன், பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி ஆகிய ஐரோப்பிய வல்லரசுகளைப் பின்பற்றி ஐக்கிய அமெரிக்கா, 19ஆம் நூற்றாண்டில் நிலையான ஒரு ஏகாதிபத்தியக் கொள்கையைப் பின்பற்றியது. இதனால் 1898 ஆம் ஆண்டில் ஹவாய் (Hawai)ப் பகுதியில் தனது ஆதிக்கத்தை ஏற்படுத்தியது. பின்னர் 1899–1900 ஆகிய ஆண்டுகளில் சமோவன் தீவுகளை (Samoan Islands)

ஜெர்மனி, பிரிட்டன் ஆகிய நாடுகளுடன் பகிர்ந்து கொண்டது. ஸ்பெயின் நாட்டுடன் 1898-ல் ஏற்பட்ட ஸ்பானிஷ்-அமெரிக்கப் போரின் விளைவாக பிவெர்டெரிகோ (Pvertorico) என்ற மேற்கிந்தியத் தீவையும், பிலிப்பைன்ஸ் தீவுகளையும் இந்நாடு பெற்றதுடன், கியூபா தீவின் பாதுகாப்புரிமையையும் ஐக்கிய அமெரிக்கா பெற்றது. இதனையடுத்து ஐரோப்பிய நாடுகளின் ஒத்துழைப்புடன் 1900-ல் ஒரு படையைச் சீனுவிற்கு அனுப்பியது. பின்னர் 1901ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸ் நாட்டில் ஏற்பட்ட புரட்சியைத் தன்னுடைய இராணுவத்தின் உதவியால் அடக்கியது. இதனையடுத்து 1903ஆம் ஆண்டில் பசிபிக் பெருங்கடலையும் அட்லாண்டிக் பெருங்கடலையும் மத்திய அமெரிக்காவின் பனமாப் பகுதியில் ஒரு கால்வாயின் மூலமாக இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டது. எனவே இவ்வாண்டில் பனமாப் பகுதியைக் கொலம்பியாவினின்றும் தனியே பிரித்து, பனமாப் பகுதியில் தனக்கென்று ஒரு பகுதியைப் பெற்று, அங்கு பனமாக் கால்வாயை வெட்டி இருபெருங் கடல்களையும் இணைத்தது. இதனல் ஐக்கிய அமெரிக்கா தனது கிழக்குக் கடற்கரையையும், மேற்குக் கடற்கரையையும் கடல் வழியாக இணைத்ததுடன், பசிபிக் பெருங்கடல் பகுதியில் தனது ஆதிக்கத்தை மேலும் அதிகரிக்கச் செய்வதற்கு வழிவகை செய்தது. எல்லாவற்றிற்கும் மேலாக முதல் உலகப் போரின் பொழுது தன்னுடைய படைகளைக் குறித்த காலத்தில் கொண்டு சென்று ஜெர்மனியைப் பணிய வைப்பதற்கு ஐக்கிய அமெரிக்காவிற்குப் பேருதவியாக இருந்தது பனமாக் கால்வாய்.

இலத்தீனமெரிக்கா

அமெரிக்காவின் வடக்குப் பகுதியில், குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா, கனடா ஆகிய பகுதிகளில் வாழ்ந்த மக்களில் பெரும்பாலோர் ஐரோப்பிய இனத்தைச் சார்ந்தவராயிருந்தமையின் (பெரும்பாலும் ஐரோப்பாவிலிருந்து குடியேறியவர்கள்) இவர்கள் எல்லோரும் ஐரோப்பிய நாகரிகத்தைப் பின்பற்றியதில் வியப்பில்லை. ஆனல் இலத்தீனமெரிக்க மக்கள் பெரும்பாலோர் அந்நாட்டின் பூர்வீகக் குடிகளான இந்திய மக்களாகவோ, கலப்பு இனத்தைச் சார்ந்தவர்களாகவோ இருந்தனர். இவர்களில் பலர் நீக்ரோ இனத்தைச் சார்ந்தவர்களாகவும் இருந்தனர். இலத்தீனமெரிக்காவில் மேற்கிந்தியத் தீவுகள், கரீபியன் கடற்கரைப் பகுதிகள் ஆகியவற்றில் நீக்ரோ இனத்தைச் சார்ந்தவர்கள் மிகப் பெருமளவில் காணப்பட்டனர். மெக்ஸிகோ, மத்திய அமெரிக்கா, தென்னமெரிக்கா

ஆகிய பகுதிகளில் வாழ்ந்த மக்களில் பெரும்பாலோர் இந்தியர் களின் இனத்தைச் சார்ந்தவர்களாகவும், கலப்பு இனத்தைச் சார்ந்தவர்களாகவுமே இருந்தனர். இப்பகுதிகளில் உயர் இனத் தைச் சார்ந்தவர்களாகக் கருதப்பட்ட செல்வந்தர்களும், மத் திய வகுப்பைச் சார்ந்தவர்களும், பெரும்பாலும் கலப்பற்ற ஸ்பானியர்களாகவும் போர்ச்சுகீசியர்களாகவுமே இருந்தனர். இந்நிலையில் பார்க்கும்பொழுது இலத்தீனமெரிக்கா குறைந்த அளவில்தான் ஐரோப்பிய மக்களைப் பெற்றிருந்தது. ஆனால் இப்பகுதியில் ஸ்பானியர்களும், போர்ச்சுகீசியர்களும், அரசியல், பொருளாதாரம் ஆகிய துறைகளில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்ததால் வட அமெரிக்காவைக் காட்டிலும் தென் அமெரிக்காவில் ஐரோப்பியரின் ஆதிக்கம் மிகுதியாக இருந் தது. ஐரோப்பிய முறை இம்மக்களுக்கு இன்றியமையாததாக இருந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இலத்தீனமெரிக்காவில் பெரும்பான்மையானவர்களாக இருந்த இந்திய இனத்தைச் சார்ந்தவர்களும், கலப்பு இனத் தவர்களும் தங்களது மொழியையும், கலாச்சாரத்தையும் பாது காத்து வந்தாலும், இந்நாட்டில் பொதுவாகச் சிறந்து விளங் கியவை இலத்தீனியப் பண்பாடுகளும், ஐரோப்பிய நாக ரிகமுமேயாகும். இந்நாட்டின் ஆட்சிமொழியாக இருந்தது ஸ்பானிய மொழியும், போர்ச்சுகீசிய மொழியுமேயாகும். இந் நாட்டின் அலுவலகங்களில் இவ்விரு ஐரோப்பிய மொழிகளே பயன்படுத்தப்பட்டன. இம் மொழிகளிலேயே போதிக்கப் பட்டது. நீதிமன்றங்கள், செய்தித் தாள்கள், அரசியல் ஆகி யவைகளுக்கும் இம்மொழிகளே பயன்பட்டு வந்தன. பொது வாக அரசாங்க ஆதரவுடன் கத்தோலிக்கக் கிறித்துவ மதமே பரப்பப்பட்டு வந்தது. இலத்தீனமெரிக்காவில் விவசாயமே முக்கியத் தொழிலாக இருந்து வந்தது. இந்நாட்டு அரசியல் ஸ்பெயின், போர்ச்சுகல் ஆகிய இரு ஐரோப்பிய நாடுகளின் அரசியலை ஒத்திருந்தது. ஸ்பெயின், போர்ச்சுக்கல் ஆகிய இரு ஐரோப்பிய நாடுகளில் இருந்தது போலவே இலத்தீனமெரிக்க மக்களும் தங்கள் நாட்டு அரசியலில் அவ்வளவாக ஈடுபடாத துடன் அதில் அக்கரை யில்லாதவர்களாகவும் இருந்தனர். குறிப்பிடத்தக்க பிரிவினர்களும், அரசியலைத் தொழிலாகக் கொண்டவர்களும் இந்நாட்டின் எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் பெற்றிருந்தனர். தீவிரவாதிகளுக்கும், மிதவாதி களுக்குமிடையே அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன. இராணுவ அதிகாரிகள் அரசியலில் அதிக ஆதிக்கம் பெற்றிருந்தனர்.

இந்நாட்டின் ஆளுநர்கள் திடீரெனச் சர்வாதிகாரிகளாயினர். புரட்சிகள் ஆங்காங்கே திடீரென ஏற்பட்டன.

இலத்தீனமெரிக்க நாடுகள் அனைத்திலும் அரசியலமைப்பை அடிப்படையாகக் கொண்ட குடியரசுகள் ஏற்பட்டன. ஆனால் இந் நாடுகளில் குடியரசுத் தலைவர்கள் அரசியலமைப்பைவிட மிக முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக விளங்கினர். இந்நாடுகளின் அரசாங்கங்களின் விதிகளை மாற்றியமைப்பதில் வாக்குச் சீட்டுகளைக் காட்டிலும், துப்பாக்கிகளும், போர்க் கருவிகளும் அதிக வலிமை பெற்றிருந்தன.

இலத்தீனமெரிக்க மக்களின் பழக்க வழக்கங்களும், பண்பாடுகளும் இத்தாலி, ஸ்பெயின், போர்ச்சுகல் போன்ற ஐரோப்பிய நாடுகளிலிருந்து படிப்படியாக வந்து குடியேறிய மக்களின் பழக்க வழக்கங்களினால் வலிமையும், வளர்ச்சியுமடைந்தன. இந்நாட்டின் அரசியலில் அதிக செல்வாக்குப் பெற்றிருந்த உயர்குடி மக்கள் தங்களது குழந்தைகளை உயர் கல்வி பெறுவதற்காக ஸ்பெயின், பிரான்சு ஆகிய ஐரோப்பிய நாடுகளுக்கே அனுப்பிவந்தனர். உயர்குடி மக்கள் தங்கள் குழந்தைகளை ஐரோப்பிய நாடுகளுக்கு உயர்கல்வி நிமித்தம் அனுப்பிவைத்தது அந்நாட்டின் அரசியல் வளர்ச்சிகளையும் பிற துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சிகளையும் அறிந்து கொள்வதற்காகவேயாகும். இதன் காரணமாக இலத்தீனமெரிக்காவிற்கும், ஐரோப்பிய நாடுகளுக்குமிடையே இருந்த கலாச்சார உறவுகள் வலுவடைந்தன.

அடுத்து, பொருளாதாரத் துறையில் இலத்தீனமெரிக்கா ஐரோப்பாவையும், ஐக்கிய அமெரிக்காவையுமே சார்ந்திருந்தது. "அட்லாண்டிக் சமுதாயத்தில்" (Atlantic Community) தொழிற் புரட்சி மிக விரைவாக ஏற்பட்டுக் கொண்டிருந்த பொழுது, இலத்தீனமெரிக்க நாடுகளில் விவசாயம் செழித்தோங்கியது. விவசாயமே மிக முக்கியத் தொழிலாகவும் இருந்தது. காப்பி, கோதுமை, சர்க்கரை, பழவகைகள் போன்ற விவசாயப் பொருள்களும், கால்நடைகளும் இந்நாட்டில் மிகுதியாக உற்பத்தியாயின. இவற்றை இலத்தீனமெரிக்க நாடுகள் ஐரோப்பா, வட அமெரிக்கா ஆகிய நாடுகளின் சந்தைகளில் விற்றுவந்தன. விவசாய வளர்ச்சிக்காகவும், கனிப் பொருள்களை வெட்டி யெடுப்பதற்காகவும் (சுரங்கத் தொழில்களுக்காகவும்)

இராணுவம், பொதுப்பணித்துறை ஆகியவற்றின் வளர்ச்சிக் காகவும் இந்நாடுகள் ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு ஆகிய வல்லரசு நாடுகளிடம் அதிக தொகையினைக் கடன் வாங்கி இருந்தன. அதனுல் ஐரோப்பா, வட அமெரிக்கா ஆகிய வளர்ச்சியடைந்த நாடுகளின் வர்த்தகக் கழகங்களுக்கு இந் நாடுகள் பல சலுகைகளை வழங்கின. எனவே இலத்தீன மெரிக்காவில் ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கம் வளர்ச்சி யடைந்ததில் வியப்பில்லை.

இலத்தீனமெரிக்காவில், ஐரோப்பா, ஐக்கிய அமெரிக்கா முதலியவற்றைப் போலில்லாமல், தேசியக் கொள்கைகள் வேறு முறையில் வளர்ச்சி பெற்றன. இலத்தீனமெரிக்க நாடுகள் இத்தாலியைப் போலவோ, ஜெர்மனியைப் போலவோ மொழியை அடிப்படையாகக் கொண்டு ஒரு தனி தேசிய நாட்டை உருவாக்க முயற்சி செய்யவில்லை. அதற்கு மாருகத் தங்கள் பகுதிகளில் வெகுகாலமாக இருந்த அரசியல் தனித் தன்மைகளை அப்படியே வைத்துக் கொண்டு, தங்கள் பகுதி களில் ஆட்சிபுரிந்த அரசர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து தனித்தனி சுதந்திர நாடுகளாக உருப்பெற்றன. போர்ச்சுகீசிய மொழியைப் பேசிவந்த தென்னமெரிக்கர்கள் எல்லோரும் பிரேசில் கூட்டரசில் (Fedaral State of Brazil) ஒன்றுசேர்ந்து தங்கள் ஒற்றுமையை நிலைநாட்டினர். ஆனுல் ஸ்பானிய மொழியைப் பேசிவந்த தென்னமெரிக்கர்கள் எல்லோரும் எட்டு தேசியப் பகுதிகளாகப் பிரிந்து தனித்தனியாக அரசியல் போராட்டங்கள் நடத்தினர். ஐரோப்பியர்களுக்கு எதிராக 1810ஆம் ஆண்டு முதல் 1825ஆம் ஆண்டு வரை இலத் தீனமெரிக்கர்கள் நடத்திய இக்கிளர்ச்சிகள் "இலத்தீனமெரிக்க விடுதலைப் போர்" என்று சிறப்பாக வழங்கப்படுகிறது. இலத்தீ னமெரிக்க விடுதலை போருக்குப் பின்னர் ஸ்பானிய மொழியைப் பேசிவந்த இலத்தீனமெரிக்கப் பகுதிகள் மெக்ஸிகோ (Mexico), மத்திய அமெரிக்கா (Central America), கொலம்பியா (Colombia), பெரு (Peru), பொலிவியா (Bolivia), பராகுவே (Paraguay), அர்ஜென்டினு (Argentina) சிலி (Chile) என்ற எட்டு நாடுகளாக உருப்பெற்றன. மூன்ருண்டுகளுக்குப் பின்னர் உருகுவே (Uruguay) அர்ஜென்டினுவிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தது. பிரேசில் நாட்டின் ஆக்கிரமிப்பு முயற்சிகளை முறியடித்த பின்னர் 1830ஆம் ஆண்டில் உருகுவே விடுதலை யடைந்தது. கொலம்பியாவிலிருந்து 1829ஆம் ஆண்டில் வெனிஸுலா (Venizula)வும், 1830ஆம் ஆண்டில் ஈகுவடாரும் (Ecuador) தனி நாடுகளாகப் பிரிந்தன. பின்னர் பல ஆண்டுகள்

கழித்து 1903ஆம் ஆண்டில் பனமா (Panama) கொலம்பியாவி லிருந்து பிரிந்து தனி நாடாக விளங்கியது.

இலத்தீனமெரிக்க விடுதலைப் போரின் பொழுது விடுதலை பெற்றுத் தனி நாடாக விளங்கி வந்த மத்திய அமெரிக்கா (Central America), 1840ஆம் ஆண்டிற்கும் 1849ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட ஒன்பதாண்டுகளில் குவாடிமாலா (Guatemala), ஹாண்டுராஸ் (Honduras), நிக்கராகுவா (Nicaragua), சால்வடார் (Salvador), கோஸ்டாரீகா (Costa Rica) என்ற ஐந்து குடியரசு நாடுகளாகப் பிரிந்தன. இச் சமயத்தில் மேற்கிந்தியத் தீவுகளில் ஸாண்டோ டோமிங்கோ (Santo Domingo) என்ற பகுதி ஹெய்டி (Haiti) யிலிருந்து தனி நாடாகப் பிரிந்தது. இவ்வாறு ஸ்பானிய மொழியைப் பேசிவந்த இலத்தீனமெரிக்கப் பகுதியிலிருந்து தனி நாடு களான பதினெட்டுக் குடியரசுகள் தனித்தனியாகத் தங்களு டைய தேசியக் கொள்கைகளைப் பின்பற்றலாயின. இவ் வாறே போர்ச்சுகீசிய மொழியைப் பேசிவந்த பிரேசில் குடியரசும், பிரெஞ்சு மொழியைப் பேசிவந்த பகுதியான பிரெஞ்சுநெக்ரோ (French Negro) குடியரசான ஹெய்டியும் தனித்தனியே தத்தம் தேசியக் கருத்துக்களைக் கொண் டிருந்தன.

பிரேசில்

இலத்தீனமெரிக்க நாடுகளிலேயே மிகப் பெரியதும், அதிக முக்கியத்துவம் வாய்ந்ததுமாக விளங்கியது போர்ச்சு கீசிய மொழியைப் பேசிவந்த பிரேசிலாகும். இதன் நிலப் பரப்பு அலாஸ்காவை உள்ளடக்கிய ஐக்கிய அமெரிக்காவின் மொத்த நிலப்பரப்பைவிட அதிகமாகும். 1830ஆம் ஆண்டில் 40 இலட்சமாக இருந்த இந்நாட்டின் மக்கள் தொகை 1910ஆம் ஆண்டில் 3 கோடியாக உயர்ந்தது. இந்நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சியும், பிற துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியும் குறிப்பிடத் தக்கவையாகும். முதல் உலகப்போர் தொடங்கிய ஆண்டில் (1914-ல்) உலகின் மொத்த காப்பி உற்பத்தியில் நான்கில் மூன்று பங்கை இந்நாடு உற்பத்தி செய்தது. இத்துடன் அதிக அளவில் மரங்களையும், தாதுப் பொருள்களையும், இறைச்சியையும் வெளிநாடுகளுக்கு இந் நாடு ஏற்றுமதி செய்தது. இக்காலத்தில் தொழில் வளர்ச்சியின் காரணமாக இந்நாட்டின் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய் யப்பட்ட பொருள்களின் மதிப்பு சுமார் 5 கோடி டாலர் களாகும்.

போர்ச்சுகல் நாட்டின் அரசரான நான்காம் பீட்டர் (Peter IV) என்பவர், முதலாம் பீட்டர் (Peter I) என்ற பட்டப் பெயருடன் 1822ஆம் ஆண்டில் பிரேசில் நாட்டின் பேரரசராகப் பதவியேற்ருர். இவர் 1831ஆம் ஆண்டு வரை இப்பேரரசின் பேரரசராக விளங்கினுர். இவருக்குப்பின் இவருடைய மகனுன இரண்டாம் பீட்டர் (Peter II) என்பவர் 1831ஆம் ஆண்டு முதல் 1889ஆம் ஆண்டுவரை இப்பேரரசின் பேரரசராக விளங் கினுர். இவர் பேரரசர் இரண்டாம் பெட்ரோ (Emperor Petro II) என்றும் அழைக்கப்பட்டார். இவருடைய ஆட்சிக் காலத்தில்தான் பொருளாதார வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டன. இவர் தனது மக்களின் நலன் களுக்காக ஆட்சிபுரிந்ததோடு மட்டுமல்லாமல், சிறந்த சீர்திருத்தவாதியாகவும் விளங்கினுர். மேலும் இவர் தன்னுடைய ஆட்சிக்காலத்தில் 1853ஆம் ஆண்டில் அடிமைகளை விற்கும் பழக்கத்தை (அடிமை வியாபாரத்தை) நிறுத்தினுர். பின்னர் 1871 ஆம் ஆண்டில் நீக்ரோ அடிமை முறையைத் தடை செய்து, ஐக்கிய அமெரிக்காவைப் போன்று உள்நாட்டுப் போர் ஏது மின்றி 1888ஆம் ஆண்டில் தன்னுட்டில் நீக்ரோ அடிமையை முழுவதுமாக நீக்கினுர். இதனுல் பெருநிலச் சொந்தக்காரர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இத்துடன் இவர் இராணுவ அதிகாரிகளைத் தன்னுடைய ஆணைக்குக் கட்டுப்படுத்தி வைத்திருந்தார். இதனுல் இராணுவ அதிகாரிகள் பலர் இவருக்கு எதிராகச் செயல்படத் தொடங்கினர். இரண்டாம் பெட்ரோவின் இத்தகைய சீர்திருத்தங்களால் வெகுண் டெழுந்த பெருநிலச் சொந்தக்காரர்களும், இராணுவ அதிகாரி களும் மார்ஷல் டியோதோரோ-தா-ஃபொன்ஸிகா (Marshal Deodoro da Fonseca) என்ற இராணுவ அதிகாரியின் தலைமையில் ஒன்று திரண்டு, பிரேஸில் நாட்டின் பேரரசரான இரண்டாம் பெட்ரோவை நீக்கிவிட்டு, 1889ஆம் ஆண்டில் ஒரு குடியர சாகப் பிரகடனம் செய்தனர். ஃபொன்ஸிகாவின் இத்தகைய நடவடிக்கைகளுக்குப் பேரரசர் பெட்ரோ எத்தகைய எதிர்ப்பும் தெரிவிக்காததால் பேரரசர் தன்னுடைய குடும்பத்துடன் நாடு கடத்தப்பட்டார்.

இதன் பின்னர் பிரேசில் நாட்டில் திருச்சபையும், அரசும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு, ஒன்று மற்ருென்றின் தலையீடின்றித் தனித்து இயங்கின. ஐக்கிய அமெரிக்காவின் அரசியலமைப்பை அடிப்படையாகக் கொண்ட புதிய அரசிய லமைப்பு ஒன்று பிரேசில் குடியரசில் 1891ஆம் ஆண்டில்

பின்பற்றப்பட்டது. விடுதலை உணர்வுகளையும், மக்களாட்சிக் கருத்துக்களையும் மக்களிடையே பரப்ப வேண்டிய பிரேசில் குடியரசுத் தலைவரான ஃபொன்ஸிகா இராணுவத்தைப் பயன் படுத்திச் சர்வாதிகார முறையில் ஆட்சிபுரியத் தொடங்கினர். எனவே குடியரசு நிறுவப்பட்ட அதே ஆண்டில் மற்றெரு இராணுவ அதிகாரியான மார்ஷல் ஃப்ளாரியானோ பீஸோடோ (Marshal Floriano Peixoto) என்பவர், ஃபொன்ஸிகாவைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டுத் தானே குடியரசுத் தலைவரானர். பின்னர் புதிய குடியரசுத் தலைவரான பீஸோடோவும் சர்வாதி காரப் போக்கில் ஆட்சிபுரியவே, சில தரைப்படை அதிகாரி களும், கடற்படை அதிகாரிகளும் 1893ஆம் ஆண்டில் ஒன்று சேர்ந்து கொண்டு குடியரசுத் தலைவரைப் பதவி விலகுமாறு கோரினர். தனக்கு எதிர்ப்பு அதிகமாகவே பீஸோடோ 1894ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவர் பதவியிலிருந்து விலகினர். இதன் பின்னர் பிரேசிலின் அரசியலில் பொது மக்களே ஈடுபடலாயினர். இந்நாட்டின் குடியரசும் படிப் படியாக வலுவடைந்தது. இராணுவ அதிகாரிகள் பிரேசில் நாட்டின் அரசியலில் தலையிடுவது குறைந்தது. பிரேசில் நாட்டின் குடியரசை வெளிநாடுகளும் மதிக்கலாயின.

அர்ஜென்டின

ஸ்பானிய மொழியைப் பேசிவந்த இலத்தீனமெரிக்க நாடு களில் குறிப்பிடத் தக்கனவாகவும், சிறப்பு வாய்ந்தவைக ளாகவும் விளங்கியவை அர்ஜென்டின, சிலி, மெக்ஸிகோ என்ற நாடுகளாகும். பத்தொன்பதாம் நூற்றண்டின் முதல் பகுதியில் அர்ஜென்டினவில் உள்நாட்டுப் போர் ஏற்படுவதற் கான சூழ்நிலைகள் ஏற்பட்டன. இதன் காரணமாக இந் நாட்டில் இராணுவத்தை அடிப்படையாகக் கொண்ட சர்வாதி கார ஆட்சி ஏற்பட்டது. பின்னர் 1862 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இந்நாட்டில் நிலையானதும் சிறப்பானதுமான ஒரு குடி யரசாட்சி ஏற்படுத்தப்பட்டது. இக்குடியரசின் அரசாங்கத்தில் குறிப்பிடத்தக்க வகையில் மக்கள் தொகைப் பெருக்கம் ஏற் பட்டது போலவே, பொருளாதார வளர்ச்சியும் ஏற்பட்டது. மேலும் இக்குடியரசில் தானியங்களும், இறைச்சியும் மிக அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டன. இதனல் இவ்விரு பொருள்களின் உற்பத்தியில் ஒரு சிறப்பிடத்தைப் பெற்றது. இக்குடியரசின் தலைநகரான போனஸ் அய்ரெஸ் (Buenos Aires) தென் மண்டல நாடுகளிலேயே மிகச் சிறந்த நாகரிக நகரமாகப் புகழ் பெற்றது. மேலும் இந்நகரம் உலகிலேயே

மிக அழகு வாய்ந்த நகரமாகவும், நகரப் பண்பாடுகளின் இருப்பிடமாகவும் விளங்கியது. இராணுவம், கடற்படை ஆகிய துறைகளில் இது குடியரசு நாடுகளான பிரேசில், சிலி ஆகிய நாடுகளுக்குச் சமமாக விளங்கியது. இலத்தீனமெரிக் காவில் அர்ஜென்டினா, பிரேசில், சிலி ஆகிய நாடுகளின் அமைப்பை A. B. C. வல்லரசு என்று அழைப்பர். (இங்கு " A " என்பது அர்ஜென்டினாவையும், " B " என்பது பிரே சிலையும், " C " என்பது சிலியையும் குறிக்குமென்பது குறிப் பிடத்தக்கது.)

சிலி (Chile)

தென்னமெரிக்காவின் பசிபிக் கடற்கரையோரமாகக் குறுகிய அளவில் மிக நீளமான நிலப்பரப்பைக் கொண்ட நாடு சிலி. இது அர்ஜென்டினாவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. இந்நாடு நிலையான அரசியலைத் தொடக்கத்திலேயே பெற் றிருந்தது. இந்நாடும் பிரேசில் நாட்டைப் போலவே ஒரு குடியரசு ஒன்றைப் பின்பற்றி வந்தது. பழைய கருத்துக்களை யுடைய உயர்குடியினர் இராணுவ ஒத்துழைப்புடன் இந் நாட்டின் அரசாங்கத்தை நடத்தி வந்தனர். இக் குடியரசின் கல்வித் துறையில் மிக விரைவாக வளர்ச்சி ஏற்பட்டது. விவ சாயமும், வியாபாரமும் வளர்ச்சியடைய அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற் கொண்டது. இந்நாட்டு மக்க ளிடையே கலையுணர்வு காணப்பட்டது. இதனை அடிப்படை யாகக் கொண்டு சாண்டியாகோ (Santiago), வால்பரெய்ஸோ (Valparaiso) போன்ற நகரங்கள் வளர்ச்சியடைந்தன. 1879 ஆம் ஆண்டிற்கும் 1883 ஆம் ஆண்டிற்கும் இடைப் பட்ட காலத்தில் பொலீவியா, பெரு ஆகிய நாடுகளுடன் ஏற்பட்ட போரின் காரணமாக டாக்னா (Tacna), அரிகா (Arica) என்ற இரு மாநிலங்கள் சிலி நாட்டுடன் இணைந்தன. இவ்விரு மாநிலங்களிலும் நைட்ரேட்டு படிவங்கள் மிக அதிக அளவில் காணப்பட்டமையால் இத்நாட்டின் பொருளாதாரம் மேலும் வலிவடைந்தது.

மெக்ஸிகோ (Mexico)

ஸ்பானிய மொழியைப் பேசிவந்த இலத்தீனமெரிக்க நாடு களிலேயே மிக அதிக அளவில் மக்கள்தொகையைப் பெற் றிருந்த நாடு மெக்ஸிகோவாகும். இந்நாடு அர்ஜென்டினாவை விட நிலப்பரப்பில் குறைந்திருந்தாலும் அந்நாட்டின் மக்கள் தொகையைவிட இரண்டு மடங்கு மக்கள்தொகையைப் பெற்

றிருந்தது. பண்டைய சமுதாயக் கோட்பாடுகள் மெக்ஸிகோ மக்களால் மிக அதிக அளவில் பின்பற்றப்பட்டது. எனவே இந்நாடு ஐக்கிய அமெரிக்காவிற்கு அருகிலிருந்தாலும், அர்ஜென்டினாவைவிட மிகப் பின்தங்கிய நிலையிலேயே இருந்தது.

இந்நாட்டின் முக்கியத் தொழில் விவசாயமே. ஆனால் தீவிர சாகுபடித் திட்டங்கள் இந்நாட்டில் பின்பற்றப்படவில்லை. இந்நாட்டின் பெரும்பகுதி நிலங்கள் உயர்வகுப்பினரான செல்வந்தர்களுக்கே சொந்தமாக இருந்தன. இவர்கள் எல்லோரும் பெரும்பாலும் ஸ்பானிய இனத்தைச் சார்ந்தவர்களாகவும், பழைய கொள்கைகளில் அதிக நம்பிக்கையுடையவர்களாகவுமே இருந்தனர். இவர்கள் செல்வந்தர்களாகவும், உயர் குடியைச் சேர்ந்தவர்களாகவும், பெருநிலச்சுவான்தாரர்களாகவும் இருந்தமையால் மெக்ஸிகோவின் அரசியலிலும், திருச்சபையிலும் அதிக ஆதிக்கம் செலுத்தி வந்தனர். இத்துடன் இவர்கள் அறியாமையிலும், ஏழ்மையிலும் வாடிய இந்திய இனத்தைச் சேர்ந்த தொழிலாளர்களின் உழைப்பில் வாழ்ந்து வந்தனர். பெரும்பாலும் இந்நாட்டில் செல்வந்தர்களுக்காக உழைத்து வந்த தொழிலாளிகள் அதிக உரிமைகளின்றியே வாழ்ந்தனர். இந்நாட்டிலிருந்த செல்வந்தர்கள் பழைய கொள்கைகளில் நம்பிக்கையுடைய பழமை விரும்பிகள் என்றும், புதிய கருத்துக்களைக் கொண்ட மிதவாதக் கட்சியினர் என்றும் இரு பிரிவுகளாகப் பிரிந்திருந்தனர். இவர்களில் சிலர் நாத்திகர்களாகவும், சிலர் ஆத்திகர்களாகவும் இருந்தனர். ஆனால் இத்தகைய பிரிவுகள் மெக்ஸிகோ சமுதாயத்தின் அடிமட்டத்தில் வாழ்ந்து கொண்டிருந்த தொழிலாளர்களிடையே காணப்படவில்லை.

இந்நிலையின் 1850ஆம் ஆண்டிற்கும் 1870ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் பெனிடோஜுவரெஸ் (Benito Juarez) என்பவர் தாழ்த்தப்பட்ட தொழிலாளர்களின் தலைவராக விளங்கினார். இவர் கலப்பில்லாத இந்திய இனத்தைச் சார்ந்தவர். இவர் மெக்ஸிகோவில் உயர்வகுப்பினருக்கு எதிராக ஒரு புரட்சியை நடத்தினார். ஸ்பானியர்களுக்கு ஆதரவாக பிரஞ்சுக்காரர்கள் இக்கிளர்ச்சிகளை ஒடுக்க முயற்சிகளை மேற்கொண்ட பொழுது அவர்களுடன் போரிட்டு வெற்றியும் பெற்றார். அத்துடன் தங்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்ட பேரரசர் மாக்ஸிமில்லியனை 1867-ல் கொலை செய்தார். மெக்ஸிகோவில் தொழிலாளர்களைச் சுரண்டி வந்த

உயர்குடியினர்களின் கொட்டத்தை அடக்குவதற்காகவும், தன்னுடைய புரட்சியை நசுக்குவதற்கு ஸ்பானிய இனத்தவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு எதிராகவும் தன்னுடைய ஆற்றல் முழுவதையும் பயன்படுத்திப் போரிட்டார். இவர் இத்தகைய சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்குப் பதிலாகக் கத்தோலிக்க திருச்சபைகளுக்கு எதிராகப் பல சட்டங்களை இயற்றினர்.

ஜுவரெஸ்ஸுக்குப் பின்னர் மெக்ஸிகோவின் ஆட்சிப் பொறுப்பேற்றவர் போர்ஃபிரோ டையஸ் (Porfiro Diaz) என்பவராவார். இவர் 1877ஆம் ஆண்டு முதல் 1911ஆம் ஆண்டு வரை ஏறத்தாழ இந்நாட்டின் சர்வாதிகாரியாகவே விளங்கினர். இவர் திருச்சபையின்மீது அதிக வெறுப்பு தெரிவிக்காமலிருந்தாலும், சமுதாய சீர்திருத்தங்களுக்காக அதிக அளவில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. இருப்பினும் இவருடைய ஆட்சிக் காலத்தில் (1877 முதல் 1911 வரை) மெக்ஸிகோவில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன.

டையஸின் ஆட்சிக் காலத்தில் மெக்ஸிகோவில் சுரங்கத் தொழில், எரிபொருள் ஆகியவற்றின் உற்பத்தி அந்நிய முதலீட்டினல் வளர்ச்சியடைந்தது. இந் நாட்டின் பல பகுதிகளை ஒன்றோடொன்று இணைக்க இருப்புப் பாதைகள் போடப்பட்டன. பொருளாதார வளர்ச்சிக்காகப் பொது நிர்வாகம் திருத்தி அமைக்கப்பட்டது. இதனல் பல அமெரிக்கர்களும், பிரிட்டிஷ்காரர்களும் செல்வந்தர்களாயினர். மெக்ஸிகோ மக்களில் சிலரும் செல்வந்தர்களாயினர். மெக்ஸிகோ வெளி உலகுடன் பல துறைகளில் தொடர்பு கொண்டது. ஆனல் இந்நிலையில் டையஸ் மிக அதிக அளவில் சர்வாதிகார நடவடிக்கைகளை மேற்கொண்டதால் விடுதலைக் கொள்கையில் அதிக நம்பிக்கையுடைய மெக்ஸிகோ மக்கள் பலர் டையஸுக்கு எதிராக ஒன்று திரண்டனர். டையஸின் ஆட்சிக் காலத்தில் தங்களுக்கு அதிக நன்மை ஏற்படாமையால் தொழிலாளர்களும் இவருக்கு எதிராகச் செயல்படத் தொடங்கினர்கள். இந்நிலையில் அதிருப்தி அடைந்த சில இராணுவ அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் ஃபிரான்ஸிஸ்கோ மாடரோ (Francisco Madero) என்ற செல்வந்தர் ஒருவர் அரசியல் அமைப்பின் தன்மையை நிலைப்படுத்துவதற்காகவும், விவசாயிகளுக்காகப் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்காகவும் பாடுபட்டார். ஆனல் டையஸ் சர்வாதிகாரப் போக்கிலிருந்ததால் அவருக்கு எதிராகப்

பல நடவடிக்கைகளில் மாடெரோ ஈடுபடவேண்டியதாயிற்று. இதனுல் டையஸ் தன்னுடைய பதவியைத் துறந்துவிட்டு ஐரோப்பாவிற்கு ஓடிவிட்டார். மாடெரோ மெக்ஸிகோவின் தலைவராகப் பதவியேற்ருர். இதனுல் விவசாயிகளுக்கான சீர்திருத்தங்கள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

நாளடைவில் மாடெரோவிற்கு எதிராகப் புரட்சிகள் தொடங்கின. இவற்றை நடத்திய தளபதி விக்டோரியானே ஹுவர்டா (Victoriano Huerta) என்பவர் மாடெரோவை 1914ஆம் ஆண்டில் கொலை செய்தார். இதனுல் மாடெரோவின் ஆதரவாளர்கள் ஐக்கிய அமெரிக்காவின் ஒத்துழைப்புடன் ஹுவர்டாவை 1915ஆம் ஆண்டில் பதவி நீக்கம் செய்தனர். இதனையடுத்து மெக்ஸிகோவில் மாடெரோவின் ஆதரவாளர்களுக்கும், ஹுவர்டாவின் ஆதரவாளர்களுக்கு மிடையே பல மோதல்கள் ஏற்பட்டன. இச் சமயத்தில் ஐக்கிய அமெரிக்காவும் பலமுறை ஆயுதங்களைப் பயன்படுத்தியது. இம் மோதல்களின் பொழுது வீனஸ்டியானே காரன்ஸா (Venustiano Carranza) என்பவர் அதிக ஆதரவு பெற்ருர். இவரது தலைமையின் கீழ் புதிய அரசியலமைப்பு ஒன்று 1917ஆம் ஆண்டில் மெக்ஸிகோவில் பின்பற்றப்பட்டது. இப் புதிய அரசியலமைப்பின்கீழ் திருச்சபைகளின் எதேச்சாதிகாரப் போக்கிற் கெதிராகப் பல புதிய சட்டங்கள் இயற்றப்பட்டன. ஆனுல் இச் சமயத்தில் ஜனநாயகக் கருத்துக்கள் படிப்படியாக இந்நாட்டு மக்களிடையே வலிமை பெற்றன. அதனை முதல் உலகப் போரின் விளைவுகளைப்பற்றி ஆராயும்பொழுது காண்போம்.

மெக்ஸிகோ நாட்டில் நடைபெற்றது போலவே, பிற இலத்தீனமெரிக்க நாடுகளிலும் புரட்சிகள் ஏற்பட்டன. இதன் காரணமாக இந் நாடுகளின் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்பட்டதுடன் அரசியலிலும் அடிக்கடி குழப்பங்களும், புரட்சிகளும் ஏற்பட்டன. ஆனுல் இலத்தீனமெரிக்க நாடுகளில் ஏற்பட்ட அரசியல் புரட்சிகள் யாவும் இந் நாடுகளில் ஐரோப்பிய ஆதிக்கத்தை அழிக்கவோ அல்லது பாதிக்கவோ செய்யவில்லை. மாருக இப் புரட்சிகள் யாவும் இம் மக்களிடையே ஐரோப்பிய நாகரிகம் வளர்ச்சி யடைவதற்கு ஏதுவாயின.

3. ஆசியாவில் ஐரோப்பியரின் ஆதிக்கம்

உலக நாடுகளிடையே மிகப் பெரியதும், மக்கள் தொகை நிறைந்ததுமான கண்டம் ஆசியாவாகும். இக் கண்டத்திலும் பதினரும் நூற்ருண்டு முதற்கொண்டு ஐரோப்பியரின்

ஆதிக்கம் வளர்ச்சியடையத் தொடங்கியது. ஆனால் இரண்டு ஆசிய நாடுகளில் மட்டுமே மொழி, கலாச்சாரம் ஆகிய துறைகளில் ஐரோப்பியப் பண்பாடு, அமெரிக்காவில் காணப்பட்டதைப்போல சிறந்து காணப்பட்டது. இவற்றில் ஒரு பகுதி மிகப் பரந்த நிலப்பரப்பையுடைய சைபீரியா (Siberia). இச் சைபீரியப் பகுதியில் பதினாறு பதினேழாம் நூற்றாண்டுகளில் இரஷ்ய மக்கள் அடிக்கடி ஊடுருவல் செய்தனர். இதனால் இரஷ்ய மொழியும், இரஷ்ய கலாச்சாரங்களும், இரஷ்யக் கிறிஸ்தவ மதமும், இரஷ்யாவின் ஸார் மன்னரது கருத்துக்களும் இப் பகுதியில் பதினெட்டாம் நூற்றாண்டில் பரவத் தொடங்கின. வடக்கே பனி உறைந்துள்ள பகுதியிலிருந்து தெற்கே பாலைவனப் பகுதி வரையிலும் இந் நாட்டின் பூர்வீகக் குடிகள் மிகப் பழைய முறையில் வாழ்க்கை நடத்தி வந்தனர். ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சைபீரியா பெரும்பாலும் இரஷ்ய மயமாகியது. இவ்வாறே ஐரோப்பிய மயமாகிய மற்றொரு ஆசியப் பகுதி பிலிப்பைன்ஸ் தீவுகளாகும். இத் தீவுகள் 1565 முதல் 1898 வரை ஸ்பெயின் நாட்டின் ஆதிக்கத்தின் கீழிருந்தது. இக் காலத்தில் இலத்தீனமெரிக்க நாடுகளில் ஏற்பட்டது போலவே இப் பகுதியில் முன்னேற்றங்கள் ஏற்பட்டன. இந் நாட்டின் பூர்வீகக் குடிகள் இங்கு அதிக அளவில் காணப்பட்டாலும், கலப்பு இனத்தைச் சார்ந்தவர்கள் பெருமளவில் இருந்தனர். இந்நாட்டின் மக்கள் மலாய் இனத்தைச் சார்ந்தவர்களாக இருப்பினும், ஸ்பானிய மொழியையே பேசி வந்தனர்; கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றினர். இலத்தீன் ஐரோப்பியக் கலாச்சாரம் இம் மக்களால் பின்பற்றப்பட்டது. இத்தீவுகள் சிலவற்றில் மதச் சார்பற்ற பழங்குடியினரும், சில முகம்மதியர்களும் தங்களின் முதாதையர்களின் வழியில் வாழ்ந்து வந்தனர். இத்தீவை 1898-ல் ஏற்பட்ட ஸ்பானிய அமெரிக்கப் போரின் விளைவாக ஐக்கிய அமெரிக்கா கைப்பற்றியது. அதன் பின்னர் இம் மக்களுக்கு முற்றிலும் புதிய ஐக்கிய அமெரிக்காவின் அரசியல் முறை புகுத்தப்பட்டது. எனினும் ஐரோப்பிய நாகரிகத்தின் அடிப்படைக் கருத்துக்கள் இந் நாட்டு மக்களிடையே வேரூன்றி யிருந்தன.

புதிய வழிகளையும், நாடுகளையும் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஐரோப்பியர்கள் இறங்கியபொழுது 1498ஆம் ஆண்டில் வாஸ்கோடகாமா இந்தியாவின் மேற்குக் கரையோரமாக அமைந்துள்ள கள்ளிக்கோட்டையை வந்தடைந்தார். இதனை யடுத்து டச்சுக்காரர்கள், போர்ச்சுக்கீசியர்கள், பிரெஞ்சுக்

காரர்கள், ஆங்கிலேயர்கள் முதலிய ஐரோப்பியர்கள் இந்தியாவிலும், சுமத்ரா (Sumatra), ஜாவா (Java), செலிபெஸ் (Selebes) ஆகிய கிழக்கிந்தியத் தீவுகளிலும் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். இச் சமயத்தில்தான் பிலிப்பைன்ஸ் தீவுகளில் ஸ்பானியர்களுடைய ஆதிக்கமும், சைபீரியாவில் இரஷ்யர்களின் ஆதிக்கமும் ஏற்பட்டன. பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதிவரை ஐரோப்பியர்கள் இந்தியாவிலும், கிழக்கிந்தியத் தீவுகளிலும் தொடக்கத்தில் வியாபாரத்திலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தனர். வியாபார நோக்கத்திற்காக வந்த ஐரோப்பியர்கள் நாளடைவில் இப் பகுதிகளின் ஆட்சிப் பொறுப்பினை மேற்கொள்ள முயற்சி செய்து அதில் வெற்றியும் பெற்றனா. எனவே வியாபாரம் இவர்களது முதல் நோக்கமாகவும், அரசியல் இவர்களது அடுத்த நோக்கமாகவும் இருந்தன.

பதினைரும் நூற்றுண்டின் பிற்பகுதியில் இந்தியாவின் மேற்குப் பகுதியிலுள்ள மலபார் கடற்கரையில் சில பகுதிகள் நீங்கலாக எஞ்சிய பகுதிகளில் போர்ச்சுகீசியர்கள் தங்கள் குடியேற்றப் பகுதிகளை அமைத்தனர். கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் முயற்சியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட பாதிரிமார்கள் சிலரும் இப் பகுதியில் போர்ச்சுகீசியர்களுடன் குடியேறினர். இவர்கள் போர்ச்சுகீசிய மொழியை இப்பகுதி மக்களிடையே பரப்பியதுடன் பல இந்தியர்களைக் கத்தோலிக்க கிறிஸ்தவர்களாகவும் மாற்றினர். ஆனல் இப்பகுதி மக்கள் கிறிஸ்தவர்களாக மாறினலும் ஐரோப்பிய நாகரிகம் இம் மக்களிடையே அதிக மாறுதல்களை ஏற்படுத்தவில்லை. இப் பகுதி மக்கள் இந்தியக் கலாச்சாரங்களையே முற்றிலும் பின்பற்றி வந்தனர். இருப்பினும் இப் பகுதிகளில் இருந்த ஐரோப்பிய கவர்னர்கள், வியாபாரிகள் ஆகியோரின் பழக்க வழக்கங்களும், பண்பாடுகளும் இம்மக்களிடையே ஓரளவு மாற்றங்களை ஏற்படுத்தத் தவறவில்லை.

ஆனல் பத்தொன்பதாம் நூற்றுண்டில் இந்தியாவிலும், பிற ஆசிய நாடுகளிலும் ஐரோப்பியர்களின் ஆதிக்கம் மிக அதிக அளவில் வளர்ச்சியடைந்தது. தொழில் துறையில் முன்னேறிய ஐரோப்பிய வல்லரசுகள் தங்கள் தொழிற்சாலைகளுக்குத் தேவையான கச்சாப் பொருள்களைக் குறைந்த விலையில் பெறுவதற்காகவும், தொழிற்சாலைகளில் பெருமளவு உற்பத்தி செய்த பொருள்களை அதிக விலைக்கு விற்பதற்காகவும், தங்கள் நாட்டில் உள்ள அதிக செல்வங்களை வெளிநாடுகளில் முதலீடு

செய்வதற்காகவும், ஏகாதிபத்தியக் கொள்கைகளின் வளர்ச்சியின் காரணமாகவும் ஐரோப்பாவிற்கு வெளியே தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்தன என்று முன்னரே கண்டோம். ஐரோப்பாவில் மேலும் வளர்ச்சியடைந்த ஏகாதிபத்தியக் கொள்கைகளின் காரணமாக ஐரோப்பியர்கள் ஆசியாவில் தங்கள் வியாபாரத்தைக் கடற்கரைப் பகுதிகளில் மட்டுமல்லாமல் உள்நாட்டிலும் விரிவுபடுத்துவதற்கு முயன்றனர். இதனால் இவர்கள் கடற்கரைப் பகுதிகளில் அமைந்திருந்த வியாபாரக் கம்பெனிகளின் ஆதிக்க எல்லைகளையும், இப்பகுதியில் இருந்த சிற்றரசர்களின் ஆட்சிப் பகுதிகளையும் கடந்துசெல்ல வேண்டியதாயிற்று.

எனவே ஐரோப்பியர்கள் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஆசியாவின் பலபகுதிகளைக் கடற்கரையுடன் இணைத்து இருப்புப் பாதைகளை அமைத்தனர். நாட்டின் பல பகுதிகளில் தந்திக் கம்பிகளை அமைத்துச் செய்தித் தொடர்பைத் துரிதப்படுத்தினர். அத்துடன் ஆசியாவில் வாழ்ந்தமக்களை இயந்திரங்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை உபயோகிக்குமாறு தூண்டினர். இதனால் இயந்திரத் தொழில் நாகரிகம் ஆசியாவில் பரவ ஆரம்பித்தது. மேலும் இவர்கள் ஆசியப் பகுதிகளைத் தங்களுடைய முழு ஆதிக்கத்திற்குக் கொண்டுவந்துவிட்டால் தங்கள் நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்படுவதுடன் தங்களின் பெருமையையும் நிலைநாட்ட முடியுமெனக் கருதினர். எனவே தொழில்துறையில் முன்னேறிய ஐரோப்பியர்கள் தங்கள் கடற்படையையும், இராணுவத்தையும், செல்வத்தையும் போதுமான அளவு பயன்படுத்தி ஆசிய நாடுகளின் அரசர்களைத் தங்கள் வழிக்குக் கொணர்ந்தனர்.

இவ்வாறு பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவிலும், மற்ற ஆசியப் பகுதிகளிலும், இந்நாடுகளைச் சுற்றியுள்ள தீவுகளின் பெரும்பகுதியிலும் ஐரோப்பிய ஏகாதிபத்தியம் வளர்ச்சியடைந்தது. இதனால் சில பகுதிகளில் ஐரோப்பிய அரசியலமைப்பு முறைகள் பின்பற்றப்பட்டன. சில பகுதிகளில் ஐரோப்பிய நாடுகளின் நேரடியாட்சி ஏற்பட்டது. சுருங்கக் கூறின் மதம், மொழி, சமுதாயம் ஆகியவற்றை முக்கியமாகக் கருதிய ஆசிய மக்களிடம் ஐரோப்பிய நாகரிகக் கொள்கைகளும், ஐரோப்பிய அரசியல் கருத்துக்களும் புகுத்தப்பட்டன. இதனால் ஆசியா தனது வளர்ச்சிக்குப் பெரும்பாலும் ஐரோப்பிய நாடுகளையே நம்பியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்தியாவில் எவ்வாறு ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் ஏற்பட்டது என்பதை முன்னர்க் கண்டோம். எனவே பிற ஆசிய நாடுகளான சீனு, ஜப்பான் ஆகிய நாடுகளிலும், சையாமிலும், முகம்மதிய நாடுகளான மத்தியக் கிழக்கு நாடுகளிலும் எவ்வாறு ஐரோப்பியர்களின் ஆதிக்கம் ஏற்பட்டது. என்பதை இனிக் கவனிப்போம்.

பர்மா (Burma), பலுசிஸ்தான் (Baluchistan) ஆகிய பகுதிகளை 1880ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிரிட்டன் தன்னுடைய இந்தியப் பேரரசுடன் இணைத்துக் கொண்டது. மேலும் தெற்காசியாவில் பிரிட்டிஷ் பேரரசின் எல்லை சிங்கப்பூர் (Singapore), மலாக்கா (Malacca) வரையிலும் பரவியிருந்தது. மலாய் கூட்டு நாடுகள் 1874, 1909 ஆகிய ஆண்டுகளில் பிரிட்டிஷ் பேரரசுடன் இணைந்தன. இப்பகுதிகளை அடுத்துள்ள கடல் பகுதியில் அமைந்துள்ள தீவுகளில் ஒன்ருன போர்னியோ (Borneo) தீவின் ஒருபகுதி 1881ஆம் ஆண்டிற்கும் 1888ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் பிரிட்டிஷ் பேரரசுடன் இணைந்தது. தென்மேற் காசியப் பகுதியில் செங்கடல் பகுதியில் அமைந்திருக்கக்கூடிய ஏடெனுக்கும் (Aden), பாரசீக வளைகுடாவின் வடகோடியில் அமைந்துள்ள குவெய்த்திற்கும் (Kuwait) இடைப்பட்ட பகுதிகளில் பல இடங்களை 1839, 1901 ஆகிய ஆண்டுகளுக் கிடைப்பட்ட 60 ஆண்டுகளில் பிரிட்டன் தன்னுடைய ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தது. பின்னர் 1907 ஆம் ஆண்டில் இரஷ்யாவுடன் ஓர் உடன் படிக்கை செய்து கொண்டது. அதன்படி பாரசீகத்தில் இரஷ்யாவும் பிரிட்டனும் கூட்டாக ஆதிக்கம் பெற்றன. சீனுவிடமிருந்து 1842ஆம் ஆண்டில் ஹாங்காங் (Hongkong) என்ற பகுதியை பிரிட்டன் பெற்றது. பின்னர் 1898-ல் வை-ஹீ-வை (Wei-hai-wei) என்ற துறைமுகத்தை பிரிட்டன் பெற்றது. இதனையடுத்து திபெத்திலும், யாங்ட்ஸி (Yangtze) பள்ளத்தாக்கிலும் சில சலுகைகளைப் பிரிட்டன் பெற்றது. இவ்வாறு வளர்ச்சியடைந்த ஆங்கில ஆதிக்கத்தின் காரணமாக இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் ஆசியாவின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் பிரிட்டிஷ் பேரரசின் ஆட்சிக்குட்பட்டிருந்தனர்.

இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் பாண்டிச்சேரி, காரைக்கால், ஏனும், சந்திரநாகூர் என்ற பகுதிகளிலும், மேற்குக் கடற்கரையில் தெள்ளிச்சேரிக்கு அருகில் அமைந்துள்ள மாஹி என்ற இடத்திலும் பிரஞ்சுக்காரர்கள் தங்கள் பண்

டக சாலைகளை ஏற்படுத்தினர். தங்கள் இந்தியப் பகுதிகளில் பிரஞ்சுக்காரர்கள் இந்தியாவை விட்டு வெளியேறும் வரையில் அவர்களின் ஆதிக்கம் நிலைத்திருந்தது. பிரஞ்சுக் காரர்கள் தென்கிழக்காசிய நாடுகளில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத் திய பொழுது சீனாவின் சில பகுதிகளையும், தங்கள் இந்தியப் பகுதியுடன் இணைத்து பிரான்சின் இந்தோ-சீனப் பேரரசு என்ற ஒன்றை நிறுவினர். பின்னர் பிரஞ்சுக்காரர்கள் ஆங்கிலே யருடன் சேர்ந்து கொண்டு சையாமில் 1896ஆம் ஆண்டில் தங்களின் கூட்டாதிக்கத்தை ஏற்டுத்தியதால் இவர்களின் இந்தோ-சீனப் பேரரசு மேலும் விரிவடைந்தது. இதனை யடுத்து ஆங்கிலேயர்கள் வை-ஹீ-வை என்ற சீனத் துறை முகத்தைப் பெற்ற பொழுது பிரஞ்சுக்காரர்கள் 1819ஆம் ஆண்டில் குவாங்சௌ (Kwangchow) என்ற துறைமுகத்தைச் சீனாவிடமிருந்து பெற்றதுடன், குவாங்ஸி (Kwagnsi), ஹெய்னன் (Hainan) ஆகிய சீன மாநிலங்களையும் சில சலுகைகளையும் பெற் றனர். இவ்வாறு ஆசியாவில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிய பிரான்சு, முதல் உலகப் போர் தொடங்கியபொழுது ஏறத்தாழ 2 கோடி ஆசியர்களைத் (பிரஞ்சுப் பகுதியிலிருந்த ஆசியர்களை) தனது ஆதிக்கத்தின்கீழ் வைத்திருந்தது. இவர்கள் பெரும்பாலும் புத்த மதத்தைச் சார்ந்தவர்களாவார்கள்.

பதினாறும் நூற்றாண்டில் டச்சுக்காரர்கள் ஒருசில வியாபார ஸ்தலங்களை இந்தியாவின் கடற்கரைப் பகுதிகளில் நிறுவினர். இந்தியாவிலும், இந்தியப் பெருங்கடலில் அமைந்திருந்த தீவுகளிலும் இருந்த டச்சுக்காரர்களின் ஆதிக்கப் பகுதிகள் "டச்சுக் கிழக்கிந்தியப் பேரரசு" (Dutch East Indian Empire) என வழங்கப்பட்டது. இப் பேரரசு தொடக்கத்தில் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியினால் ஆட்சி செய்யப் பட்டது. இப்பேரரசை டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி 1798ஆம் ஆண்டில் நெதர்லாந்து அரசிடம் ஒப்படைத்தது. இப்பேரரசு நெதர்லாந்து அரசிடமிருந்த பொழுது சுமத்ரா, ஜாவா, செலி பெஸ் ஆகிய தீவுகளும், போர்னியோ (Borneo) தீவின் பெரும் பகுதியும், நியூகினியாவில் பாதியும் டச்சுக் கிழக் கிந்தியக் கம்பெனியுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டன. இப் பேரரசில் நெதர்லாந்தைக் காட்டிலும் அதிக மக்கள் டச்சுக் காரர்களின்கீழ் வாழ்ந்து வந்தனர். உதாரணமாக ஜாவாவில் மட்டும் நெதர்லாந்தின் மொத்த மக்கள் தொகையைவிட நான்கு மடங்கு மக்கள் அதிகமாக இருந்தனர். இவ்வாறு தனது ஆதிக்கத்தைத் தென்கிழக்காசியாவிலும், கிழக்கிந்தியத் தீவுகளிலும் நிலைநாட்டிய டச்சுக்காரர்களின் ஆட்சியின்கீழ்

1914ஆம் ஆண்டில் சுமார் 5 கோடியே 40 இலட்சம் ஆசிய மக்கள் வாழ்ந்து வந்தனர். இவர்களில் பெரும்பாலோர் முகம்மதியர்களாவர்.

இவ்வாறே பிற ஐரோப்பியர்களும் ஆசியாவில் பல பகுதிகளில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். குறிப்பாக, போர்ச்சுகீசியர்கள் கோவா (Goa), தீயூ (Dieu) டாமன் (Doman) என்ற பகுதிகளையும், சீனாவில் மகாவோ (Macao) என்ற துறைமுகத்தையும், கிழக்கிந்தியத் தீவுகளில் அமைந்துள்ள தைமர் (Timor) என்ற தீவில் பாதியையும் தங்கள் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தனர்.

1880ஆம் ஆண்டிற்கும் 1890ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் ஜெர்மனியர்கள் நியூகினியாவின் வடக்குப் பகுதியில் ஏறத்தாழ 70 ஆயிரம் சதுரமைல்களைக் கைப்பற்றி அப்பகுதிகளில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். இப்பகுதிகள் யாவும் ஒட்டு மொத்தமாக 'கெய்சர் வில்லியம் நாடு' என அழைக்கப்பட்டது. இதனையடுத்து 1898ல் ஜெர்மனி கியாசௌ (Kiaochow) என்ற துறைமுகத்தையும், 200 சதுர மைல்கள் பரப்பளவு நிலத்தையும் சீனாவிடமிருந்து பெற்றது.

இரஷ்யர்கள் பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில் சைபீரியாவின் சில பகுதிகளில் ஊடுருவி, அந்நாட்டின் சில பகுதிகளைத் தங்கள் நாட்டுடன் இணைத்துக் கொண்டனர். பின்னர், பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் துருக்கியர்களின் வலிமையற்ற நிலையைப் பயன்படுத்தி துருக்கி, ஆப்கானிஸ்தான், பாரசீகம் ஆகிய மேற்காசிய நாடுகளில் சில பகுதிகளில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். 1907ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டு பாரசீகத்தின் வடபகுதியில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். இதனால் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு ஆசியப் பகுதிகள் 1910ஆம் ஆண்டில் இரஷ்யாவின் ஆதிக்கத்திற் குட்பட்டு இருந்தது.

ஐரோப்பியர்கள் மட்டுமல்லாமல், ஐக்கிய அமெரிக்க நாட்டினரும் 1898ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஸ்பானிய-அமெரிக்கப் போரின் விளைவாகக் கிழக்காசியப் பகுதியில் ஒன்றான பிலிப்பைன்ஸ் தீவுகளில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். இதனால் ஏறத்தாழ இலட்சம் சதுரமைல்கள் பரப்புள்ள ஆசியப் பகுதிகள் ஐக்கிய அமெரிக்காவின் ஆட்சிக்குட்பட்ட

துடன் சுமார் ஒரு கோடி ஆசியர்கள் ஐக்கிய அமெரிக்காவின் ஆட்சிக் குட்பட்டனர்.

இவ்வாறு ஆசியாவில் ஏற்பட்ட ஐரோப்பியர்களின் ஆதிக்கத்தின் காரணமாக, 1910ஆம்ஆண்டில் ஏறத்தாழ ஐந்தில் மூன்று ஆசியப் பகுதிகள் ஐரோப்பியர்களின் ஆதிக்கத்திற் குள்ளாயின. சுமார் 92 கோடியே 50 இலட்சம் ஆசியர்கள் ஐரோப்பாவின் ஆதிக்கத்திற் குள்ளாயினர். சுருங்கக்கூறின், மொத்த ஐரோப்பியர்களைக் காட்டிலும் அதிகமான ஆசிய மக்கள் ஐரோப்பியர்களின் ஆதிக்கத்திற் குள்ளாயினர். இதனால் ஐரோப்பிய தேசியக் கருத்துக்களின்படியும், மக்களாட்சிக் கருத்துக்களின்படியும் இருபதாம் நூற்றுண்டில் தங்கள்மீது ஆதிக்கம் செலுத்தி வந்த ஐரோப்பியர்களையும், அவர்களது அரசுகளையும் வாய்ப்பு நேர்ந்தபொழுது, ஆசிய மக்கள் எதிர்த்துப் போரிட்டு விடுதலை யடைந்ததில் தவறேதும் இல்லை எனலாம்.

தூரக் கிழக்கு நாடுகள்

பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றுண்டுகளில் ஆசியாவில் ஐரோப்பியர்களின் ஆதிக்கம் வளர்ச்சி யடைந்தாலும், இரு ஆசியப் பகுதிகள் ஐரோப்பியர்களின் ஆதிக்கத்திற்குட்படாம லிருந்தன. இவற்றுள் ஒன்று தூரக்கிழக்கு நாடுகள் அல்லது கிழக்காசிய நாடுகளாகும். சீனு, ஜப்பான், சையாம் ஆகியவை இதில் அடங்கும். இதில் ஆசியாவின் மொத்தப் பரப்பளவில் மூன்றில் ஒரு பங்கும், மொத்த மக்கள் தொகையில் பாதியும் அடங்கும். மற்றொரு பகுதி மத்தியக் கிழக்கு நாடுகளாகும். உதுமானியப் பேரரசு, பாரசீகம், ஆப்கானிஸ்தானம், அரேபியா ஆகிய நாடுகள் இதில் அடங்கும். இப்பகுதிகளில் ஆசியாவின் மொத்தப் பரப்பளவில் ஏழில் ஒரு பங்கும், மொத்த மக்கள் தொகையில் இருபத்துமூன்றில் ஒரு பங்கும் அடங்கும். எப்பொழுதும் இல்லாத அளவில் ஐரோப்பிய நாகரிகமும், பண்பாடும் இப்பகுதியில் வாழும் மக்களிடையே பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி யிருந்தன. ஐரோப்பியர்களின் கருத்துப் படி ஐரோப்பியர்களால் ஆளப்பட்டு வரும் எந்த ஓர் ஆசியப் பகுதியிலும் இல்லாத அளவில், ஜப்பானில் ஐரோப்பிய முறை அரசாங்கமும், தொழிலும், ஆயுதங்களும் வளர்ச்சியடைந் திருந்தன. இதனுல் ஜப்பான் கிழக்காசியப் பகுதியில் ஐரோப் பிய வல்லரசுகளுக்கு நிகராக ஓர் ஆசிய வல்லரசாகத் திகழ்ந் தது.

a) ஜப்பான்

ஜப்பான் 1542-ல் போர்ச்சுகீசியர்களால் கண்டறியப் பட்டது. இதற்குப் பின்னர் ஐரோப்பியர்கள் வியாபாரம், மதப் பிரச்சாரம் ஆகியவற்றின் காரணமாக ஜப்பானில் குடியேற ஆரம்பித்தனர். இந்நாட்டில் 1549-ல் தூய பிரான்ஸிஸ் சேவியர் (St. Francis Xavier)) என்பவர் கத்தோலிக்க மதப்பிரச்சாரக் குழுவைத் துவக்கி வைத்தார். இவர்களது அயராப் பணியின் காரணமாக அந்நூற்றுண்டின் இறுதிக்குள் ஏறத்தாழ 3 இலட்சம் மக்கள் ஜப்பானில் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினர். போர்ச்சுகீசியர்களின் வளர்ச்சியைக் கண்ட ஸ்பெயின் நாட்டுக்காரர்களும், டச்சுக்காரர்களும் ஜப்பானில் போர்ச்சுகீசியர்களுடன் வியாபாரப் போட்டியிலீடுபட்டனர். ஐரோப்பியர்களின் போட்டியால் தங்களது புத்த (அல்லது ஷிண்டோ) மதமும் தங்களது கலாச்சாரங்களும் அழிந்துபடுவதையும், ஐரோப்பியர்களின் பண்பாடும், கிறிஸ்துவ மதமும் தங்கள் நாட்டில் வளர்ச்சியடைவதையும் ஜப்பானிய அரசர்களும், தீவிர ஜப்பானியர்களும் நன்கு உணர்ந்தனர். எனவே தங்கள் மதத்தைப் பாதுகாக்கும் பொருட்டு ஐரோப்பியப் பாதிரிமார்களும், மதகுருமார்களும் கட்டாயமாக ஜப்பானிலிருந்து வெளியேற வேண்டுமென ஜப்பானிய அரசர் 1587-ல் அறிவித்தார். அதன்படி ஜப்பானை விட்டு வெளியேருத ஐரோப்பிய மதபோதகர்கள் கொலை செய்யப்படுவார்கள் என்றும் பறைசாற்றினுர். அத்துடன் 1614 ஆம் ஆண்டில் தன்னுடைய நாட்டில் ஐரோப்பியர்கள் குடியேறுவதைத் தடை செய்தார். பின்னர் 1624-ல் ஜப்பான், ஸ்பானிய வியாபாரிகளையும், மத போதகர்களையும் தன்னுட்டினின்றும் வெளியேற்றியது. இவர்களையடுத்து 1638-ல் போர்ச்சுகீசியர்கள் ஜப்பானிலிருந்து வெளியேற்றப்பட்டனர். ஐரோப்பியர்களை வெளியேற்றிய பின்னர் ஜப்பானிய அரசு உள்நாட்டில் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய பல ஜப்பானியர்களை விண்ணுலகத்திற் கனுப்பியது. ஜப்பானின் வெளிநாட்டு வாணிபம் ஒரே ஒரு துறைமுகத்தின் வாயிலாகவே நடைபெற்றது. அத்துறைமுகத்தின் கெடுபிடிகள் அதிகமாக இருந்ததால் வெளிநாட்டவர் யாரும் ஜப்பானிய அரசுக்குத் தெரியாமல் அந்நாட்டிற்குச் செல்ல முடியவில்லை. அது போலவே ஜப்பானியர் யாரும் வெளிநாடுகளுக்குச் செல்ல இயலவில்லை. மேலும் ஜப்பானில் வெளிநாட்டவரின் ஆதிக்கத்தைத் தடை செய்வதற்காக அந்நாட்டு அரசாங்கம் வெளிநாடுகளுக்குச் செல்லத் தேவையான கப்பல்களையும் கட்டவில்லை. எனவே 1638க்கும் 1853க்கும் இடைப்பட்ட இரு நூற்றுண்டுகளில் ஜப்பான் ஐரோப்பாவுடன் எவ்விதத் தொடர்புமின்றித் தனித்தே இருந்தது.

கமோடர் மேத்யூ பெர்ரி (Commodore Mathew Perry) என்பவரின் தலைமையின் கீழ் ஐக்கிய அமெரிக்கா 1853-ல் மேற் கொண்ட கடல்வழிப் பயணத்தின் காரணமாக, ஜப்பானில் மீண்டும் ஐரோப்பியர்களின் ஆதிக்கத்திற்கு வழியேற்பட்டது. பெர்ரி என்பவர் அமெரிக்க வியாபாரிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு, ஜப்பானிய அரசிடமிருந்து ஓர் உறுதி மொழியைப் பெறுவதற்காக, அமெரிக்க அரசாங்கத்தால் அனுப்பப்பட்டார். பெர்ரியின் நான்கு போர்க் கப்பல்களும் யோகஹாமா (Yokohama)விற்கு அருகிலுள்ள உராகா வளைகுடாவில் விரைந்து செல்வதைக் கண்டு ஜப்பானியர்கள் மகிழ்ச்சியடைந்தனர். மேலும் இக்கப்பல்களில் கொண்டு சென்ற தையல் மெஷின்களையும், மற்ற இயந்திர சாதனங் களையும், பீரங்கிகளையும் கண்ட ஜப்பானியர்கள் மேலைநாடு களின் சாதனைகளை எண்ணி வியப்படைந்தனர். இத்துடன் பெர்ரியும், அவரது உதவியாளர்களும் பழகிய முறையும் ஜப்பானியர்களை வெகுவாகக் கவர்ந்தது. அமெரிக்கர்களின் வருகையால் ஜப்பானில் வெகுவாகக் கவரப்பட்டவர் அந் நாட்டின் இளவரசராவார். எனவே ஜப்பானிய அரசு 1854ஆம் ஆண்டில் பெர்ரியுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டது. இதன்படி அமெரிக்க வியாபாரிகளைத் தங்கள் நாட்டின் இரு துறைமுகங்களில் வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்க ஜப்பானிய அரசு ஒப்புதலளித்தது. இதனையடுத்து பிரிட்டிஷ் காரர்களும், டச்சுக்காரர்களும், இரஷ்யர்களும் ஜப் பானில் வியாபாரம் செய்வதற்குச் சில சலுகைகளைப் பெற்றனர். பின்னர் 1859-ல் ஐக்கிய அமெரிக்கா, டவுன்சென்ட் ஹாரிஸ் (Townsend Harris) என்பவரின் தலைமையின்கீழ் ஜப்பானுக்கு ஒரு தூதுக் குழுவை அனுப்பியது. இக்குழு ஜப் பானுடன் ஒரு புதிய உடன்படிக்கையைச் செய்துகொண்டது. அதன்படி யோகஹாமா என்ற துறைமுகம் அமெரிக்க வியாபாரி களுக்குத் திறந்து விடப்பட்டது. இம்முறையைப் பின்பற்றி ஐரோப்பியர் பலரும் ஜப்பானுடன் இதுபோன்ற ஒப்பந்தங்கள் பல செய்துகொண்டனர்.

ஜப்பானில் வெளிநாட்டவர்களை வியாபாரம் செய்ய அனுமதித்தவர் ஜப்பானிய அரசரல்லர்; ஜப்பானை ஆட்சிபுரிந்து வந்த மிகாடோ (Mikado) வம்சத்து அரசரின் அதிகாரம் பெற்ற ஒரு முக்கிய அதிகாரியாவார். மிகாடோ வம்சத்துப் பேரர சர்கள் சூரியக் கடவுளின் வம்சத்திலிருந்து தோன்றியவர்கள் என இம்மக்கள் நம்பிக்கை யுடையவர்களா யிருந்தனர். இவர் கள் கி. மு. ஏழாம் நூற்றுண்டு முதல் இந்நாட்டை ஆண்டு

வருவதாகவும் இம் மக்கள் கூறி வந்தனர். இவர்கள் சூரியக் கடவுளின் வம்சத்தினர் என்று கருதப்படுவதால் புனிதத் தன்மை உடையவர்கள் என ஜப்பானியர்கள் நம்பி வந்தனர். இவர்கள் தங்கள் புனிதத் தன்மையின் காரணமாகப் பெயரள வில் அரசர்களாக கியோடோ (Kyoto) என்ற நகரில் இருந்து கொண்டு சில பிரபுக்களைத் தங்கள் சார்பாக ஆட்சிபுரியுமாறு ஏற்பாடு செய்திருந்தனர். இவ்வாறு மிகாடோ என்ற அரச வம்சத்தினரிடமிருந்து ஆட்சிப் பொறுப்பைப் பெற்றவர்கள் ஷோகன்கள் என்று அழைக்கப்பட்டனர். 16ஆம் நூற்றுண்டு முதற்கொண்டு டொகுகுவா (Tokuguwa) வம்சத்தைச் சேர்ந்த பிரபுக்கள் ஷோகன் பதவியை வகித்து வந்தனர். இப்பதவியைத் தொடர்ந்து தாங்களே வகித்து வருவதற்காக டொகுகுவா வம்சத்தினர் ஷோகன் பதவியை வகித்து வந்த மற்ருெரு இனத் தவருடன் அடிக்கடி போரிட்டுக் கொண்டிருந்தனர்.

ஷோகன் பதவியை வகித்து வந்த டொகுகுவா வம்சத்தைச் சார்ந்தவர்கள் ஜப்பானில் ஐரோப்பியர்கள் வியாபாரம் செய்ய அனுமதித்ததை மற்ற பிரிவைச் சார்ந்தவர்கள் விரும்பவில்லை. மேலும் ஷோகனுடைய இச்செயல் பேரரசரின் நிலையையும் பாதிக்குமென இவர்கள் கருதினர். ஜப்பானில் அந்நியர்களுக் கெதிரான கருத்துக்கள் மிக வேகமாகப் பரவின. ஆனுல் ஐரோப்பியர்களுக்கு எதிராகப் போராடி, அவர்களை ஜப்பானை விட்டு வெளியேற்ற வேண்டுமாயின், ஐரோப்பியர்களைப் போலத் தாங்களும் வலிமை வாய்ந்த துப்பாக்கிகளையும், பீரங்கி களையும் வைத்திருக்க வேண்டுமென ஜப்பானியர் உணர்ந்தனர். எனவே அந்நியர்களை ஜப்பானைவிட்டு வெளியெற்றவேண்டு மென்று நினைத்த ஜப்பானியர்கள் தங்கள் கருத்துக்களை மாற்றிக் கொண்டு, ஐரோப்பியர்களைத் தங்கள் நாட்டில் சுதந்திரமாக வியாபாரம் செய்ய அனுமதிக்க வேண்டுமென வாதாடினர். ஐரோப்பியர்களிடமிருந்து எல்லாவற்றையும் கற்றுக்கொண்டு, அவற்றைக் கொண்டே அவர்களை முறியடிக்க வேண்டு மென ஜப்பானியர்கள் கருதியதே இவர்களது வாதத்தின் முக்கிய நோக்கமாகும். ஆனுல் அதே சமயத்தில் ஷோகன் களின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு அவ்வதிகாரங்களை மீண்டும் தங்கள் அரசரே ஏற்றுக்கொள்ள வேண்டுமென விரும்பினர்.

ஜப்பானியர்களது இக்கொள்கையின் காரணமாக மேலை நாட்டு நாகரிகம் ஜப்பானில் வேரூன்றத் தொடங்கியது. ஆனுல் அதே சமயத்தில் ஷோகன்களுக் கெதிரான கருத்துக் களால் ஜப்பானிய ஒற்றுமைக்காகவும், தங்களுடைய தேசிய

மதத்திற்காகவும் (புத்த மதத்திற்காகவும்) ஜப்பானியர்கள் 1867-1868 ஆகிய ஆண்டுகளில் ஒரு புரட்சி செய்தனர். இது 'ஜப்பானியப் புரட்சி' என வழங்கப்படுகிறது.

ஜப்பானியப் புரட்சியின் விளைவாக ஜப்பானில் ஷோகனுகப் பதவி வகித்தவர் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டார். ஜப்பானியப் பேரரசரான முட்சிஹிடோ (Mutsuhito) என்பவர் அரசுப் பொறுப்புகளை ஏற்றார். இவர் பதவியேற்றவுடன் பிரபுக்கள் அனைவரும் நாட்டுப்பற்று மிகுதியால், தங்கள் அதிகாரங்களை அரசருக்கு வழங்கினர். மற்ற செல்வந்தர்களும் பிரபுக்களைப் பின்பற்றினர். 1871-ல் நில மானியமுறை ஜப்பானில் ஒழிக்கப்பட்டது. புரட்சியின் பொழுது புரட்சிக்குத் தலைமை வகித்தவர்களுக்கும், புரட்சியில் பங்கேற்றுக் கொண்டவர்களுக்கும் ஐரோப்பிய முறையில் புதிய பட்டங்கள் வழங்கப்பட்டன. பிரபுக்கள் அரசாங்கத்தில் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர். அரசாங்கம் ஒருமுகப் படுத்தப்பட்டு அரசருக்குக் கட்டுப்பட்டு யாவும் செயல்பட்டது. நில அடிமைகள் தங்கள் பிரபுக்களிடமிருந்து விடுவிக்கப்பட்டனர். சில நில அடிமைகள் நிலச்சுவாந்தாரர்களாயினர். இவர்கள் எல்லா மக்களையும் போல, சகல உரிமைகளையும் பெற்று ஜப்பானியக் குடிமக்களாக விளங்கினர்.

முட்சிஹிடோ (1867 முதல் 1912 வரை) ஜப்பானின் அரசராக இருந்தபொழுது இராணுவம், அரசியல், கல்வி ஆகிய துறைகளில் ஜப்பான் விரைவாக ஐரோப்பிய மயமாகியது. பல ஜப்பானிய இளைஞர்கள் ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் நடைமுறைகளைக் கண்டறிந்துவர அனுப்பப்பட்டனர். இவ்வாறே பல அமெரிக்கர்களும், ஐரோப்பியர்களும் ஜப்பானுக்கு அழைக்கப்பட்டனர். ஐரோப்பியத் தூதுவர்கள் ஜப்பானில் இடம் பெற்றனர். ஜப்பான் நாட்டின் இராணுவம் 1870 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஜெர்மனிய முறையில் மாற்றியமைக்கப் பட்டது. பிரிட்டிஷ்காரர்களின் ஆலோசனைகளுக்கேற்ப ஜப்பானில் புதிய கடற்படை ஒன்று அமைக்கப்பட்டது. பிரான்சு, ஜெர்மனி ஆகிய நாடுகளில் உள்ளவற்றைப் போல சிவில், கிரிமினல் சட்டங்கள் ஜப்பானில் தொகுக்கப்பட்டன. மேலை நாடுகளைப் பின்பற்றி அரசாங்கப் பள்ளிகள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் துவக்கப்பட்டன. டோக்கியோ, கியோடோ என்ற இரண்டு நகரங்களிலும் இரண்டு பல்கலைக் கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. எல்லாவற்றிற்கும் மேலாக அரசர் முட்சிஹிடோ 1889 ஆம் ஆண்டில் புதிய அரசிய

லமைப்பு ஒன்றை ஏற்படுத்தினர். இவ் வரசியலமைப்பின்படி சட்டம் இயற்றும் அதிகாரங்கள் இரு சபைகளைக் கொண்ட ஒரு பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டது. இப்பாராளுமன்றத்தின் மேல் சபையில் பிரபுக்கள் அங்கத்தினர்களா யிருந்தனர். கீழ்ச் சபையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அங்கத்தினர்களாக இருந்தனர். இவ்வாறு ஜப்பான் ஐரோப்பிய மயமாகியது.

இக்காலத்தில் ஜப்பானில் ஐரோப்பிய நாகரிகமும். அமெரிக்க நாகரிகமும் மிக விரைவாகப் பரவின. முதன் முதலாக 1872-ல் டோக்கியோ நகரத்தையும் யோகஹாமா நகரத்தையும் இணைத்து இருப்புப்பாதை போடப்பட்டது. இதனையடுத்து ஜப்பானில் 1914 ஆம் ஆண்டிற்குள் ஆறுயிரம் மைல்கள் நீளத்திற்கு இருப்புப் பாதைகள் போடப்பட்டன. கப்பல் கட்டுவதைத் தடை செய்யும் பழைய சட்டம் நீக்கப் பட்டது. இதனால் 138 மரக்கலங்களை மட்டுமே பெற்றிருந்த ஜப்பான் 1914-ல் பிரான்சைக் காட்டிலும் அதிக அளவில் கப் பல்களைப் பெற்றிருந்தது. இந்நாட்டின் வியாபாரக் கப்பல்கள் அமெரிக்கா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, இந்தியா ஆகிய நாடு களுக்குச் சென்று வரத் தொடங்கின. 1880 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஜப்பானில் காணப்படாத பருத்தி ஆலைகள் 1914 ஆம் ஆண்டில் பெருகி அதிக அளவில் உற்பத்தியைப் பெருக்கின.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலும், இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதியிலும் ஜப்பானில் மிக விரைவாகத் தொழில் வளர்ச்சி ஏற்பட்டதன் காரணமாகத் தொழில் துறையில் ஜப்பான் அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய நாடு களுடன் ஒப்பிடுமளவிற்கு வளர்ச்சியடைந்தது. அத்துடன் இந்நாட்டில் தொழில் வளர்ச்சியின் காரணமாகத் தொழிற்சங் கங்கள் பல தோன்றியதுடன், வியாபார அமைப்புக்கள் பலவும் தோன்றின. தொழிலதிபர்களும், நிலச் சுவாந்தாரர் களும் ஒன்று சேர்ந்து கொண்டு அரசியலில் ஈடுபட ஆரம்பித் தனர். அதே சமயத்தில் மக்களாட்சிக் கருத்துக்களும், மார்க்ஸிஸ சோஷிலிஸக் கருத்துக்களும் தொழிலாளர்க ளிடையே பரவின.

ஜப்பானியர்கள் ஐரோப்பியர்களின் போக்கினை அப்படியே பின்பற்றியதன் காரணமாகவும், ஜப்பானியத் தொழிலதிபர்கள் தங்கள் தொழிலைப் பெருக்கி அதிக இலாபம் சம்பாதிக்க விரும் பியதன் காரணமாகவும், ஜப்பானிய மக்களின் அயராத உழைப்பின் காரணமாகவும், இந்நாட்டின் இராணுவ வீரர்கள்

தங்கள் திறமையை வெளிப்படுத்திப் பல இடங்களில் ஜப்பானின் ஆதிக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென விரும்பியதாலும், ஜப்பானிய மக்கள் மற்ற ஆசிய மக்களைக் காட்டிலும் அதிக அளவில் நாட்டுப்பற்று மிக்கவர்களாக இருந்ததன் காரணமாகவும், ஜப்பானிய அரசாங்கம் தன்னுடைய நாட்டை ஐரோப்பிய மயமாக்கியதுடன் தனது பணிகளை நிறுத்திக் கொள்ள முடியாமல், ஏகாதிபத்தியக் கொள்கைகளையும் பின் பற்ற நேர்ந்தது. இதனால் ஜப்பானிய இராணுவமும், அரசியலாதிக்கங்களும் மேலும் வளர்ச்சி யடையலாயின. எனவே 1890 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஜப்பான் சீனாவின் விவகாரங்களில் தீவிரமாகத் தலையிட ஆரம்பித்தது. ஜப்பானின் இச் செய்கையால் சீனாவும் கோபமடைந்தது. எனவே இவ்விரு நாடுகளுக்குமிடையே (1894-1895-ல்) ஒரு போர் ஏற்பட்டது. இது சீன-ஜப்பானியப் போர் (1894-1895) என வழங்கப்படுகிறது. இப்போரின் விளைவாக, சீனப் பேரரசிலிருந்து கொரியா (Korea) வைத் தனியே பிரித்து, அப்பகுதியை ஜப்பான் கைப்பற்றியதுடன், ஃபார்மோசா (Formosa) தீவுகளையும் சீனாவிடமிருந்து பெற்றது. அத்துடன் போர்ட் ஆர்தர் (Port Arthur) என்ற சீனத் துறைமுகம் ஜப்பான் வசமாகியது. ஆனால் இதே சமயத்தில் இரஷ்யா பிரான்சு, ஜெர்மனி ஆகிய நாடுகளின் உதவியுடன் லியோடுங் (Liaotung) தீபகற்பத்தில் ஜப்பானியர்களின் ஊடுருவலைத் தடைசெய்ய முயற்சித்தது. இருப்பினும் இப்போருக்குப் பின்னர் கிழக்காசியப் பகுதியில் ஜப்பான் ஒரு வல்லரசு நாடாகச் செயல்படத் தொடங்கியது. அதுமுதற் கொண்டு ஐரோப்பியர்களும் ஜப்பானின் வளர்ச்சியைக் கண்டு பொறாமைப் படத் தொடங்கினர்.

சீனாவின் வலிமையற்ற நிலையைப் பயன்படுத்தி போர்ட் ஆர்தர், மஞ்சூரியா, கொரியா ஆகிய பகுதிகளை இரஷ்யா கைப் பற்ற முயற்சி செய்தது. இதனால் இரஷ்யாவின் பேராசை வெகு விரைவில் வெளிப்பட்டது. இரஷ்யாவும் ஜப்பானியர்களை லியோடுங் தீபகற்பத்தில் தடை செய்வதற்குத் தீவிரமாக முயன்று வந்தது. எனவே இவ்விரு நாடுகளுக்கு மிடையே 1904 ஆம் ஆண்டில் ஒரு போர் ஏற்பட்டது. இது இரஷ்ய-ஜப் பானியப் போர் (1904-1905) என வழங்கப்படுகிறது. இரஷ்யாவுடன் போர் ஏற்படும் என்பதை முன்னரே நன்குணர்ந் திருந்த ஜப்பான் இப்போருக்கான ஆயுதங்களை முன்னரே செய்யத் தொடங்கியது. மேலும் போர்ட் ஆர்தர், கொரியா ஆகிய பகுதிகள் ஜப்பானுக்கு அருகாமையிலிருந்ததும், நாட்டுப்பற்று மிக்க ஜப்பானிய மக்களும் போர் வீரர்களும்

தங்கள் நாட்டின் வெற்றிக்காக முழுமூச்சுடன் பாடுபடத் தயாராக இருந்ததும், ஜப்பானியர்களுக்குச் சாதகமாகவே இருந்தன. இப்போரைப் பற்றி அடுத்த பகுதியில் விளக்கமாகக் காண்போம். போர்ட்ஸ் மவுத் (Ports Mouth) உடன்படிக்கையின் (1905) விளைவாக இரஷ்ய-ஜப்பானியப் போர் முடிவுற்றது. போர்ட் ஆர்தர் என்ற துறைமுகத்தை ஜப்பான் பெற்றது. லியோடுங் தீபகற்பத்தில் தன் ஆதிக்கத்தை நிலை நாட்ட ஜப்பானுக்கு அனுமதி யளிக்கப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக கொரியா, மஞ்சூரியா ஆகியவற்றின் விவகாரங்களில் தான் தலையிடுவதில்லை என்ற உறுதிமொழியை இரஷ்யா வழங்கியது.

இரஷ்யர்களின் தொல்லை நீங்கிய பிறகு பிரிட்டிஷ்காரர்களின் ஒத்துழைப்புடன் (1902-ல் ஆங்கிலேயர்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி) ஜப்பானியர்கள் கொரியாவில் எத்தகைய இடர்ப்பாடுமின்றித் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கினர். 1910ஆம் ஆண்டு வரை கொரியாவின் அரசர் ஜப்பானிய அரசுக்குக் கட்டுப்பட்டு ஆட்சி புரிந்து வந்தார். இதனால் கொரியாவின் பெரும்பகுதி ஜப்பானுடன் இணைக்கப்பட்டது. ஜப்பானியர்கள் தங்கள் செல்வத்தைக் கொரியாவில் முதலீடு செய்யத் தொடங்கினர். இதனால் கொரியா ஜப்பானின் களஞ்சியமாக விளங்கியது.

சீனா

சீனப் பேரரசு ஜப்பானுக்கு முன்னதாகவே ஐரோப்பியர்களின் வியாபாரத்திற்குத் திறந்து விடப்பட்டது. ஆனால் சீனாவில் ஐரோப்பிய நாகரிகம் சற்று மெதுவாகவே பரவ ஆரம்பித்தது. இந்நாட்டின் பரப்பளவும், நாகரிகமுமே இதற்கு முக்கிய காரணங்களாகும். இந்நாடு பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் ஏறத்தாழ ஐரோப்பாவின் மொத்தப் பரப்பளவையும், மக்கள் தொகையையும் ஒத்திருந்தது. இந்நாட்டின் பெரும்பாலான மக்கள் (சுமார் 37 கோடியே 50 இலட்சம் மக்கள்) ஹொயாங்கோ அல்லது மஞ்சள் (Huango or Yellow) நதி, யாங்ட்சி (Yangtze) நதி, சை (Si) நதி என்ற முக்கிய சீன நதிகளின் சமவெளிகளில் வாழ்ந்து வந்தனர். இப்பகுதிகள் சுமார் 18 மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இப்பகுதிகள் சீனப் பேரரசில் மூன்றில் ஒரு பங்கு நிலப்பரப்பைத் தன்னகத்தே கொண்டிருந்தன. இவையன்றி வெளி

யிலும் சிலபகுதிகள் சீனப் பேரரசின் ஆட்சிக் குட்பட்டிருந்தன. சீனப்பேரரசின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பகுதிகளில் மஞ் சூரியா (Manchuria), அமூர் (Amur) என்ற கடற்கரைபகுதி, மங்கோலியா (Mongolia), சிங்கியாங் (Sinkiang), திபெத் (Tibet) என்பவை குறிப்பிடத் தக்கவையாகும்.

இவற்றுள் மஞ்சூரியா என்பது வடபகுதியில் அமைந் துள்ளது. இப்பகுதி பதினேழாம் நூற்றுண்டில் சீனுவுடன் இணைந்தது. இப்பகுதியின் அரசவம்சம் சிலகாலம் சீனப் பேரரசின் ஆட்சிப் பொறுப்பிலிருந்தது. எனவே இவ்வம்சம் மஞ்சுவம்சம் என வழங்கப்படுகிறது. அமூர் என்ற கடற்கரைப் பகுதி கொரியாவிற்கு வடக்கே உள்ளது. இப்பகுதி மற்ற சீனப் பகுதிகளைக் காட்டிலும் மிகப் பின்தங்கிய நிலையிலிருந் தது. மங்கோலியா என்பது சீனுவிற்கு வடமேற்கே உள்ள பகுதி. இப்பகுதி சீனுவின் ஆதரவுடன் இயங்கி வந்தது. மேலும் இப்பகுதி அதிக பரப்பளவைக் கொண்டிருந்தது. உதாரணமாக இப்பகுதியின் பரப்பளவு பிரான்சின் மொத்தப் பரப்பளவைப் போல ஏழு மடங்காகும். ஆனுல் இப்பகுதியின் மக்கள் தொகை பாரிஸ் நகரின் மொத்த மக்கள் தொகையை விடக் குறைவாகும். இங்கு மக்கள் பெரும்பாலும் நாடோடி வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். மங்கோலியாவிற்கு அருகில் இருந்த மங்கோலியப் பகுதி சீனுவின் மஞ்சுப் பேரரசர்களின் நேரடி ஆட்சியின்கீழ் இருந்து வந்தது. இப்பகுதிக்கு வெளியே யிருந்த மங்கோலியப் பகுதிகள் சீனப் பேரரசரின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகளால் ஆட்சி செய்யப்பட்டது. இப்பிரதி நிதிகள் உர்கா (Urga) என்ற இடத்திலிருந்து இப்பகுதிகளை நிர்வகித்து வந்தனர். இப்பகுதியில் ஆட்சிப் பொறுப்பேற் றிருந்த சீனப் பேரரசின் பிரதிநிதிகள் கான்கள் (Khans) என்று அழைக்கப்பட்டனர். வாரிசுரிமை முறையில் அதிகாரங்களைக் கைப்பற்றி ஆட்சிபுரிந்து வந்த இத்தகைய கான்கள் ஓரளவு சுதந்திரமாகச் செயல்பட்டு வந்தனர். சிங்கியாங் என்ற பகுதி சீனப் பேரரசிற்கு மேற்கே இருந்த பகுதியாகும். இது கிழக்கே துருக்கிஸ்தானத்தையும், குல்டுஜா என்ற பகுதியையும் தன்னகத்தே கொண்டிருந்தது. திபெத் என்ற பகுதி சிங்கியாங் கிற்குக் கிழக்கேயும், சீனுவிற்கு நேர் மேற்கேயும் அமைந் திருந்த பெருநிலப் பரப்பாகும். இங்கு மக்கள்தொகை சற்றுக் குறைவாகக் காணப்பட்டது. லாசா (Lhasa) என்பது இப் பகுதியின் தலைநகரமாகும். இந்நகரத்தில் தங்கியிருந்த புத்த சந்நியாசியான தலாய்லாமா (Dalailama) என்பவரைத் திபெத்திய மக்கள் தங்கள் மதத் தலைவராகக் கருதி அவருடைய

ஆணைக்குக் கட்டுப்பட்டிருந்தனர். இப்பகுதியில் சில சீனப் பேரரசின் அதிகாரிகளும், போர் வீரர்களும் பேரரசின் பிரதி நிதிகளாக இருந்தனர்.

இவ்வைந்து முக்கிய பகுதியையும் உள்ளடக்கிய சீனப் பேரரசு ஆசியாவிலேயே மிகப் பெரிய பேரரசாக விளங்கியது. இப்பேரரசு மிகப் பரந்த நிலப்பரப்பைப் பெற்றிருந்தது. இருப்பினும் ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும் இப்பேரரசு பின் தங்கிய நிலையிலேயே இருந்தது.

பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில் அங்கொருவர் இங்கொருவராகச் சில ஐரோப்பியர்கள் சீனப் பேரரசுக்குள் நுழைந்தனர். வியாபாரமும், மதப் பிரச்சாரமுமே இவர்களது முக்கிய நோக்கமாகும். இவ்வாறு சீனாவிற்குச் சென்ற ஐரோப்பியர்கள் சீனப் பேரரசரைச் சந்தித்து வியாபாரம் செய்வதற்கு அனுமதி பெற்றனர். பின்னர் ஐரோப்பிய வியாபாரிகளுடன் சீனாவிற்குச் சென்ற கிறிஸ்தவப் பாதிரிமார்கள் சில சீனர்களைக் கிறிஸ்தவர்களாக மாற்றினர். ஆனால் இத்தகைய நிகழ்ச்சிகள் யாவும் அவ்வளவு முக்கியத்துவம் பெறவில்லை. மேலும் ஐரோப்பியர்களின் பழக்க வழக்கங்கள் சீன நாட்டிலும், நாகரித்திலும் குறிப்பிடத்தக்க மாற்றம் எதையும் ஏற்படுத்தவில்லை. இருப்பினும் 17ஆம் நூற்றாண்டில் ஜப்பானியர்களைப் போலவே சீனர்களும் தங்கள் நாட்டில் ஐரோப்பியப் பாதிரிமார்களுக்குத் தடை விதித்தனர். பின்னர் ஐரோப்பிய வியாபாரிகள் சீனாவில் வியாபாரம் செய்வது தடுக்கப்பட்டது.

இதனையடுத்து 19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மாறுதல்களின் காரணமாகவும், தொழில் வளர்ச்சியின் காரணமாகவும் சீனா ஐரோப்பிய வல்லரசுகளுக்கு மீண்டும் திறந்து விடப்பட்டது. ஆங்கிலேயர்களே இதற்கு முக்கியக் காரணமாவார்கள். சீன அரசாங்கம் 1838-1839-ஆம் ஆண்டுகளில் பிரிட்டிஷ்காரர்கள் சீனாவிற்கு அபின் கொண்டு வருவதைத் தடுத்தது. ஆனால் பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவிலிருந்து சீனாவிற்கு அபின் கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படவேண்டுமென வற்புறுத்தினர். இதனால் 1840-ஆம் ஆண்டில் சீனாவிற்கும், பிரிட்டனுக்குமிடையே அபினிப்போர் (Opium war) ஏற்பட்டது. இச்சமயத்தில் பிரிட்டிஷ்காரர்கள் கடற்கரைப் பகுதியில் உள்ள பல சீன நகரங்களைத் தாக்கினர். பிரிட்டிஷ்காரர்களுடன் போரிட இயலாத சீனா, அவர்களுடன் நான்கிங் உடன்படிக்கையை (Treaty of Nanking) 1842-ல்

செய்துகொண்டது. இதன்படி அமாய் (Amoy), நிங்போ (Ningpo), ஃபூசௌ (Foochow), ஷாங்கெய் (Shanghai), காண்டன் (Canton) என்ற ஐந்து சீனத் துறைமுகங்களும் பிரிட்டிஷ்காரர்களுக்குத் திறந்து விடப்பட்டன. ஹாங்காங் என்ற நகரத்திலும் பிரிட்டிஷ்காரர்கள் பல உரிமைகளைப் பெற்றனர். மேலும் ஒரு குறிப்பிட்ட தொகையை பிரிட்டிஷ்காரர்களுக்கு நஷ்ட ஈடாகக் கொடுக்க சீனு ஒத்துக்கொண்டது. பிரிட்டிஷ்காரர்களின் வெற்றியினுல் ஏற்பட்ட நன்மையைப் பிற மேற்கத்திய நாடுகள் விரைவில் பகிர்ந்து கொண்டன. பிரிட்டனைத் தொடர்ந்து அமெரிக்கா, பிரான்சு, பெல்ஜியம், பிரஷ்யா, ஹாலந்து, போர்ச்சுகல் போன்ற நாடுகளும் சீன அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு, பிரிட்டிஷ்காரர்கள் பெற்றதுபோல, சீனுவில் தங்கள் மக்களுக்குப் பல சலுகைகளைப் பெற்றன.

அடுத்து ஆங்கிலேயப் பாதிரிமார்கள் சிலர் சீனுவில் கொல்லப்பட்டதால் பிரிட்டனும், பிரிட்டிஷ் கப்பலில் பிரயாணம் செய்த சில பிரஞ்சுக்காரர்களைச் சீன அதிகாரிகள் கைது செய்ததால் பிரான்சும் 1856-ல் சீனுவின் மீது போர் தொடுத்தன. இப்போரின் பொழுது பிரிட்டிஷ்காரர்கள் மீண்டும் காண்டன் துறைமுகத்தைக் கைப்பற்றினர். பின்னர் பிரெஞ்சுப் படையும், பிரிட்டிஷ் படையும் சேர்ந்து கொண்டு டியென்ஷின் (Tientsin) என்ற சீனக் காவல் பகுதியைக் கைப்பற்றின. அடுத்து இப்படைகள் சீனத் தலைநகரான பீகிங்கை நோக்கி முன்னேறின. இப்படைகள் பீகிங் நகர வாயில் வரை சென்ற பிறகே சீனப் பேரரசர் தன் நிலையை உணர்ந்து பிரிட்டிஷ்காரர்களுடன் டியென்ஷின் உடன்படிக்கையை 1860-ல் செய்து கொண்டார். இவ் வுடன்படிக்கையின்படி இரண்டாவது சீனப்போர் (Second Chinese War) முடிவடைந்தது. மேலும் ஆறு சீனத் துறைமுகங்கள் வெளிநாட்டவர்களுக்கு வியாபாரத்திற்காகத் திறந்து விடப்பட்டன. பிரிட்டிஷ்காரர்கள் சீனுவில் அபினி வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். வெளிநாட்டமைச்சர்களைத் தன்னுட்டிற்கு அழைக்க சீன அரசு ஒப்புதலளித்தது. கிறிஸ்தவப் பாதிரிமார்கள் சீனுவில் பிரச்சாரம் செய்ய அனுமதிக்கப் பட்டனர். ஐரோப்பியர்களுக்குத் தன்னுட்டில் பாதுகாப்பளிப்பதற்குச் சீன அரசரங்கம் ஒப்புக் கொண்டது.

சீனப் பேரரசர் 1860ல் பிரிட்டன், பிரான்சு, இரஷ்யா ஆகிய நாடுகளுக்குப் பல சலுகைகள் வழங்கியதால், அமூர்

என்ற சீனப் பேரரசின் கடற்கரைப் பகுதி இப்பேரரசின் ஆட்சியிலிருந்து விலகியது. இப்பகுதியில் இரஷ்யா விளாடிவாஸ்டக் என்ற இடத்தை நிறுவியது. பின்னர் இரஷ்யா இப்பகுதியிலிருந்து மஞ்சூரியாவின் மீது சிறிது சிறிதாகத் தன்னுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியது.

1894 ஆம் ஆண்டிற்குப் பின்னர் சீனப் பேரரசுப் பகுதியிலிருந்து பல பகுதிகள் பிரிந்து செல்லத் தொடங்கின. முதன் முதலாக சீன-ஜப்பானியப் போரின் (1894-1895) விளைவாகப் பல சீனப் பகுதிகள் பிரிந்து செல்ல ஆரம்பித்தன. ஃபார்மோசாவையும், லியோடுங் தீபகற்பத்தையும் சீனாவிடமிருந்து ஜப்பான் பெற்றது. கொரியாவின் தனித் தன்மையைச் சீனா அங்கீகரிக்கத் தொடங்கியது. இந்நிலையில் இரஷ்யா தலையிட்டு ஜெர்மனி, பிரான்சு ஆகிய இரு ஐரோப்பிய வல்லரசுகளின் உதவியுடன் லியோடுங் தீபகற்பத்தில் ஜப்பான் ஆதிக்கம் செய்வதைத் தடைசெய்தது. ஆனால் ஐரோப்பியர்களின் இச் செய்கைகள் சீனப் பேரரசு சிதைந்து படுவதைத் தடை செய்யவில்லை. இதனையடுத்து 1898-ல் இரஷ்யா லியோடுங் தீபகற்பத்தையும், ஆர்தர் துறைமுகத்தையும் பெற்றதுடன் மஞ்சூரியாவில் சில பொருளாதார நன்மைகளையும் பெற்றது.

இந்நிலையில் இரஷ்யா மஞ்சூரியாவில் சில பொருளாதார நன்மைகளைப் பெற்ற அதே ஆண்டில், சீனாவில் இரண்டு ஜெர்மனியப் பாதிரிமார்கள் கொலை செய்யப்பட்டனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த ஜெர்மனி இக்கொலைக்கு நஷ்ட ஈடாக கியோசௌ (Kiaochow) என்ற துறைமுகத்தை 19 ஆண்டுகளுக்கு அனுபவிக்கும் உரிமையையும், ஷான்டங் என்ற சீன மாநிலத்தில் சில பொருளாதாரச் சலுகைகளையும் பெற்றது. இதே ஆண்டில் பிரான்சு சீனாவுடன் போராடி குவாங்சௌ (Kwangchow) என்ற துறைமுகத்தைப் பெற்றது. இத்துடன் குவாங்ஸி (Kwangsi) யுன்னான் (Yunnan) என்ற பகுதிகளிலும், ஹெய்நான் (Hainan) என்ற தீவிலும் சில பொருளாதார உரிமைகளையும் பெற்றது. இதே போல பிரிட்டன் வை-கூ-வை என்ற துறைமுகத்தையும், கௌலூன் (Kowloon) என்ற துறைமுகத்தையும், யாங்ட்ஸி (Yangtze) சமவெளியில் சில உரிமைகளையும் பெற்றது.

இதனைத் தொடர்ந்து 1904-1905 ஆகிய ஆண்டுகளில் இரஷ்யாவும், ஜப்பானும் சீனப் பேரரசின் பகுதிகளை மேலும்

பகிர்ந்து கொள்ள முற்பட்டன. லியோடுங் தீபகற்பத்தில் தனதாதிக்கத்தை ஏற்படுத்த இரஷ்யா முயல்கிறது என்பதை விரைவில் உணர்ந்த ஜப்பான் 1904-1905 ஆம் ஆண்டுகளில் இரஷ்யாவுடன் போராடி லியோடுங் தீபகற்பத்தைப் பெற்றது. அத்துடன் கொரியாவில் சுதந்திரமாகச் செயல்படுவதற்கு ஜப்பான் சில சலுகைகளைப் பெற்றது. பின்னர் இரஷ்யாவும், ஜப்பானும் சேர்ந்து கொண்டு சீனப் பேரரசின் வடபகுதியில் கூட்டாதிக்கத்தை ஏற்படுத்தின. கொரியாவில் சில சலுகைகளைப் பெற்ற ஜப்பான் படிப்படியாக முயற்சி செய்து 1910-ல் கொரியாவைத் தன்னுடன் இணைத்துக் கொண்டதுடன், 1913-ல் மஞ்சூரியாவில் இருப்புப் பாதைகளை அமைப்பதற்குச் சில சலுகைகளைப் பெற்றது. இந்நிலையில் இரஷ்யா சீனப் பேரரசுக்குட்பட்டிருந்த மங்கோலியாவின் சில பகுதிகளில் தனதாதிக்கத்தை ஏற்படுத்தியது.

இதற்கிடையில் 1842 ஆம் ஆண்டிற்கும், 1912 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில், குறிப்பாக 1890 ஆம் ஆண்டிற்குப் பின்னர், சீனுவில் ஐரோப்பிய ஆதிக்கம் பலவிதத்தில் வளர்ச்சியடைந்தது. இதனுல் சீனப் பேரரசு பலவகைகளில் பாதிக்கப்பட்டது. சீனத் துறைமுகங்கள் ஐரோப்பியர்களின் வியாபாரத்திற்கு திறந்துவிடப்பட்டதன் காரணமாகவும், சீனுவில் அந்நியர்கள் வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டதன் காரணமாகவும், ஐரோப்பியப் பாதிரிமார்களுக்கும், செல்வந்தர்களுக்கும் சீனுவில் சில உரிமைகள் வழங்கப்பட்டதன் காரணமாகவும் ஐரோப்பியர்களும், சில ஜப்பானியர்களும் சீனுவிற்குச் சென்றனர். இதனுல் மேலை நாட்டுக் கருத்துக்களும், பண்பாடும் சீனப் பேரரசில் பரவ ஆரம்பித்தன. தங்கள் ஆதிக்கத்தின் கீழ் இருந்த சீனத் துறைமுகங்களிலும், நகரங்களிலும் ஐரோப்பியர்கள் தங்களுடைய குடியேற்றங்களை அமைத்த பின்னர் தங்கள் நாட்டு முறைப்படி நீதிமன்றங்களையும், கிறிஸ்தவ மடாலயங்களையும் நிறுவினர். இப்பகுதிகளில் சில ஐரோப்பியர்கள் கல்வி நிலையங்களையும், மருத்துவமனைகளையும், அநாதைக் குழந்தைகளுக்கான பள்ளிகளையும் நிறுவினர். இந்நிறுவனங்களின் மூலமாகவும், ஐரோப்பிய அதிகாரிகளின் மூலமாகவும் ஐரோப்பிய நாடுகளின் தொழில், அரசியல், வளர்ச்சி ஆகியவற்றைப் பற்றிய கருத்துக்கள் படிப்படியாக சீன மக்களிடம் பரவ ஆரம்பித்தன. சீனுவில் குடியானவர்கள் அதிகமாக இருந்ததன் காரணமாகவும், இக்குடியானவர்கள் பெரும்பாலும் பழைய சீனப் பண்பாட்டில் மிகுந்த அக்கறையுடையவர்களாக

இருந்ததன் காரணமாகவும், ஐரோப்பிய நாகரிகக் கருத்துக்கள் இம்மக்களிடையே அதிக அளவில் மாற்றங்களை ஏற்படுத்தவில்லை. ஆனல் நகரங்களில் வாழ்ந்தவர்கள், குறிப்பாக இளைஞர்கள், வெளிநாடுகளுக்குச் சென்று மேற்கத்திய நாடுகளின் நிலைகளையும் அவர்களின் முன்னேற்றதையும் கண்டறிந்து வரத் தொடங்கினர். இதனல் இவர்கள் தங்கள் நாட்டையும் மேற்கத்திய நாட்டிற்கு இணையாக முன்னேற்ற வேண்டுமெனக் கருதினர். இதனுல் ஜப்பானைப் போலவே சீனவும் ஐரோப்பிய மயமாகியது.

சீனவில் ஐரோப்பியர்கள் பலர் பல சலுகைகளைப் பெற்றதன் மூலம் ஐரோப்பியத் தொழில் நுணுக்கங்களையும், சீனர்கள் அறிந்து கொண்டனர். பல ஐரோப்பியர்கள் சீனவில் முதலீடு செய்தனர். இதனல் சீனவில் தொழில்துறை வளர்ச்சியடைந்தது. அத்துடன் சீனவின் வெளிநாட்டு வாணிபமும் பெருகியது. சீனவின் பல பகுதிகளில் புதிய இருப்புப் பாதைகள் போடப்பட்டன. சீன மக்களிடையே தேசிய உணர்வுகளும் ஆங்காங்கே தோன்ற ஆரம்பித்தன.

இருப்பினும் சீன மிகவும் பரந்த நாடாக இருந்ததாலும், பெரும்பாலான சீனக் குடியானவர்கள் ஐரோப்பியக் கருத்துக்களை (ஜப்பானியக் கருத்துக்களுட்பட) ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இல்லாததாலும், புரட்சிகரமான சீர்திருத்த நடவடிக்கைகளைத் தன்னுடைய நாட்டில் மேற்கொள்வதற்குச் சீன அரசாங்கம் விரும்பாததாலும், (சிலர் சீன அரசாங்கம் திறமையற்றதாயிருந்தது என்பர்.) சீனவின் அரசியல், இராணுவம், ஆகிய துறைகளில் ஐரோப்பியர்கள் கருத்துக்கள் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

சீனவில் மஞ்சு வம்சத்தைச் சேர்ந்த குவாங்ஸு (Kuang Hsu) என்பவர் 1875 முதல் 1908 வரை சீனப் பேரரசராக இருந்தார். இவர் பதவியேற்றபொழுது வயதில் மிகச் சிறியவராக இருந்ததால் இவரது சிற்றன்னையான பேரரசி தௌகர் த்ஸுஹி (Empreress Dowger Tzu Hsi) என்பவர் ஆட்சிப் பொறுப்புக்களை நிர்வகித்து வந்தார். இச்சமயத்தில் பழைய கருத்துக்களையே கொண்டிருந்த ஆலோசகர்களும், ஊழல் மிகுந்த இராணுவ அதிகாரிகளும், அரசாங்க அலுவலர்களும் பேரரசர் குவாங்ஸுவினுடைய பெயரால் ஆட்சிபுரிந்து கொண்டிருந்தனர். ஆட்சிப் பொறுப்புக்களை நிர்வகித்து வந்த

த்ஸுஹி வயது முதிர்ந்தவராகவும், ஐரோப்பாவின் மீதும் மற்ற மேலைநாடுகளின் மீதும் வெறுப்புக் கொண்டவராகவும் இருந்தார். எனவே சீனுவில் அதிக முன்னேற்றங்கள் ஏற்படவில்லை.

சீன-ஜப்பானியப் போருக்குப் பின்னர் பல சீனப் பகுதிகள் சீனப் பேரரசிலிருந்து பிரிந்து சென்றதால், பேரரசர் குவாங்ஸு, எல்லோரும் வியக்கும்வண்ணம் பல சீர்திருத்த ஆணைகளைப் பிறப்பித்தார். இதன்படி சீனப் பேரரசு ஐரோப்பிய முறையில் மாற்றி யமைக்கப்பட்டது. பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப் பட்டது. இப் பல்கலைக்கழகத்தில் சீன இலக்கியங்களையும், ஐரோப்பிய அறிவியலையும் கற்கும் வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டது. மேலும் இவ் வாணைகளின்படி ஐரோப்பிய முறையில் அமைச்சரவை ஒன்று ஏற்படுத்தவும், இராணுவத்தைச் சீர்திருத்தி அமைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பேரரசர் குவாங்ஸுவின் இத்தகைய சீர்திருத்த ஆணை களுக்கு நிர்வாக அதிகாரிகளும், இராணுவ அதிகாரிகளும் எதிர்ப்புத் தெரிவித்தனர். சில சீர்திருத்தவாதிகளும் இத்தகைய ஆணைகளை விரும்பவில்லை. எனவே பேரரசி தௌகர் த்ஸுஹி தானே தலைமை தாங்கி, பேரரசருக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். அத்துடன் யுவாங்-ஷி-கெய் (Yuan-Shih-Kai) என்ற இராணுவ தளபதியின் உதவியுடன் அரண்மனைப் புரட்சி ஒன்றை 1898-ல் ஏற்படுத்திப் பேரரசர் குவாங்ஷுவை அரண்மனைக் கைதி யாக்கினுர். இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் பேரரசர் குவாங்ஸு பெயரளவிலேயே சீனப் பேரரசராகத் திகழ்ந்தார். ஆனுல் எல்லாத் துறையிலும் தௌகர் பேரரசியே உண்மையில் ஆட்சி செலுத்தி வந்தார்.

தௌகர்த்ஸுஹி தக்க சமயத்தில் பேரரசர் குவாங்ஸுவின் ஆணைகளைத் தடை செய்தார்; ஆணைகளை ரத்து செய்தார்; அத்துடன் வெளிநாட்டவர் அனைவரையும் சீனுவிலிருந்து வெளியேற்ற விரும்புவதாகவும் அறிவித்தார். பேரரசியாரின் இத்தகைய செய்கைகளால் தூண்டப்பட்ட நாட்டுப்பற்று மிக்க சீனர்கள் வெளிநாட்டவர்களுக்கு எதிராகப் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கினர். இவர்களில் மிகத் தீவிரவாதிகள் பாக்ஸர் (Boxer) என்ற ஓர் இயக்கத்தை உருவாக்கினர். இவர்கள் வெளிநாட்டவர்களின் வீடுகளைத் தாக்கியதுடன், அவர்களின் பொருள்களையும் சூறையாடினர். பல கிறிஸ்துவப் பாதிரிமார்களை ஈவு இரக்கமின்றிப் படுகொலை செய்தனர். கிறிஸ்தவர்களான பல சீனர்களும் இவர்களால்

கொல்லப்பட்டனர். 1900-ல் பாக்ஸர்களின் செயல்கள் சீன நகரங்கள் பலவற்றிலும் பரவியது. சீனாவின் தலைநகரான பீக்கிங்கில் இவர்களின் செயல் உச்சகட்டத்தை அடைந்தது. இச்சமயத்தில் பீக்கிங்கில் இருந்த ஜெர்மன் அமைச்சர் கொலை செய்யப்பட்டார். பல வெளிநாட்டவர்கள் கொடுமைப் படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

எனவே பிரிட்டன், பிரான்சு, இத்தாலி, ஜெர்மனி, ஐக்கிய அமெரிக்கா, இரஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகள் ஒன்று சேர்ந்து தங்கள் இராணுவ வீரர்களை டியென்ஷின் (Tientsin) என்ற இடத்தில் ஒன்று சேர்த்து, பீகிங்கை நோக்கிப்படையெடுத்தன. சீனப் படைகள் மேலைநாட்டவரின் கூட்டுப் படையைக் கண்டு அஞ்சி ஓடின. எனவே வேறு வழியின்றி, பேரரசி த்ஸூஹி ஒப்பந்த நிபந்தனைகளை 1901-ல் ஏற்றுக்கொண்டார். இதன்படி சீனா 33கோடியே 30இலட்சம் டாலர்களைப் போர் நஷ்ட ஈடாகக் கொடுக்க ஒப்புக்கொண்டது. இத்துடன் சீனாவில் வாழும் வெளிநாட்டுக்காரர்கள் அனைவருக்கும் எவ்வித நிபந்தனையுமின்றி எல்லா வகையான பாதுகாப்பும் ஏற்படுத்திக் கொடுக்க சீன அரசு ஒப்புக்கொண்டது. மேலும் வெளிநாட்டவர்கள் தங்கள் பாதுகாப்பிற்காகத் தங்கள் இராணுவத்தைச் சீனாவின் தலைநகரிலும் டியாங்ஷினிலும் வைத்துக்கொள்ள அனுமதிக்கப் பட்டனர்.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் பேரரசி த்ஸூஹி பல சீர்திருத்தங்களைச் சீனாவில் புகுத்தினார். சீனக் கல்வி முறையில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. அறிவியல், அரசியல், பொருளாதாரம், தற்கால மொழிகள் ஆகியவற்றை அறிந்துகொள்ளுவதற்குக் கல்விக்கூடங்களில் வழிவகைகள் செய்யப்பட்டன. குழு ஒன்று அமைக்கப்பட்டு வெளிநாடுகளில் அரசாங்கங்கள் நடைபெறும் முறையை அறிந்து வருமாறு வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்டது. சீன மாணவர்கள் பலர் ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பப்பட்டனர். ஆனால் இத்தகைய சீர்திருத்தங்கள் யாவும் சீனாவை மிக விரைவில் ஐரோப்பிய மயமாக்கவேண்டும் என்ற கருத்துடைய சீன இளைஞர்களைத் திருப்திப்படுத்தவில்லை.

இச்சமயத்தில் சீன இளைஞர்கள் பலர் வெளிநாடுகளில் கல்வி பயின்று வந்தனர். இவர்கள் யாவரும் மஞ்சு வம்சத்தைச் சீனாவின் அரசியலிலிருந்து அகற்றினாலொழிய சீனாவில் சீர்திருத்தங்களை ஏற்படுத்த முடியாது எனக் கருதினர். டாக்டர்

சன்-யாட்-சென் (Sun-Yat-Sen) இவர்களின் தலைவரானார். இவர் மருத்துவத் துறையில் பயிற்சி பெற்றவர்; கிறிஸ்தவ மதத்திற்கு மாறியவர். சீன அரசாங்கம் இவர்மீது நாட்டுத் துரோகக் குற்றங்களைச் சுமத்தியதால் பல வருடங்கள் தலைமறைவாக வாழ்ந்து வந்தார். இருப்பினும் இவர் புரட்சிக் கருத்துக்களையும், தேசியக் கருத்துக்களையும் மிகத் தீவிரமாகப் பரப்பி வந்தார். அரசியல், சமுதாயம் ஆகிய துறைகளில் சீன மக்களாட்சிக் கருத்துக்களைப் பின்பற்ற வேண்டுமென மக்களுக்கு எடுத்துக் கூறினார். இந்நிலையில் 1908ஆம் ஆண்டில் பேரரசி தௌகர் த்ஸூஹிவும், பேரரசர் குவாங்ஸூவும் இறந்துவிடவே சன்-யாட்-சென்னின் புரட்சி மேலும் தீவிரமடைந்தது. இதனை யடுத்து மறைந்த பேரரசர் குவாங்ஸூவின் மகனை ஹ்ஸூவாங் டுங் (Hsuan Tung) என்ற குழந்தையைச் சீனப் பேரரசராக்கு வதற்குப் பழைய அரசுக் கொள்கையில் நம்பிக்கையுடைய வர்கள் முயன்று கொண்டிருந்தனர்.

இந்நிலையில் பீகிங்கில் இருந்த பேரரசரின் ஆதரவாளர்கள் தீவிரவாதிகளுக்குப் பல சலுகைகளை வழங்கினர். 1909-ல் மாநில சபைகள் ஏற்படுத்தப்பட்டன. பின்னர் 1910-ல் தேசிய சபை நிறுவப்பட்டது. இருப்பினும் டாக்டர் சன்-யாட்-சென்னின் ஆதரவாளர்களும், தீவிரவாதிகளும் பேரரசரின் ஆதரவாளர்களின் சலுகைகளால் திருப்தியடையாமல் மேலும் புரட்சியைத் தீவிரமாக்கினர். இது "சீனப் புரட்சி" (1911-1912) என வழங்கப்படுகிறது. இப்புரட்சியின் பொழுது அரசரின் ஆதரவாளர்கள் சீனப் படையைப் பயன்படுத்திப் புரட்சியை அடக்க எண்ணினர். சீனப் படைத் தளபதியான யுவாங்-ஷி-கெய் (Yuan -Shih-Kai) புரட்சிக்காரர்களுக் கெதிராகப் போரிடத் தயங்கவே பல முக்கிய சீன நகரங்களும், மாநிலங்களும் புரட்சிக்காரர்களால் கைப்பற்றப்பட்டன. இதனையடுத்து 1911ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நாங்கின் (Nanking) என்ற இடத்தில் ஒரு புதிய அரசாங்கம் புரட்சிக்காரர்களால் அமைக் கப்பட்டது. டாக்டர் சன்-யாட்-சென் இப்புதிய அரசாங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதனால் சிறுவரான பேரரசர் ஹ்ஸூவாங் டுங் முடிதுறந்தார். சீனாவில் மஞ்சு வம்சத் தின் ஆட்சி முடிவடைந்தது.

பின்னர் சீனக் குடியரசின் புதிய தலைவரான சன்-யாட்-சென் சீனக் குடியரசை வலிமையடையச் செய்வதற்காகத் தளபதி யுவாங்-ஷூ-கெய்யைக் குடியரசுத் தலைவராக்கினார். குடியரசுத் தலைவரும், அமைச்சர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட

பாராளுமன்றத்திற்குக் கட்டுப்பட்டு ஆட்சிபுரியும் வகையில் புதிய அரசியலமைப்பு ஒன்று 1912-ல் சீனக் குடியரசில் பின்பற்றப்பட்டது. இதனைக் கண்டு ஐரோப்பியர்கள் தங்கள் முயற்சியால் சீனாவில் வளர்ச்சி ஏற்பட்டதுடன், அந்நாட்டில் தங்களாதிக்கமும் வளர்ச்சியடைந்தது என எண்ணி மகிழ்ந்தனர்.

ஆனால் சீனப் புரட்சிக்குப் பின்னர் சீனா ஓரளவு ஐரோப்பிய மயமானாலும், சில ஆண்டுகளுக்குப் பின்னர் சீனாவின் உள் நாட்டு அரசியலில் சில விரும்பத் தகாத நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பேரரசின் அரசாங்கம் புரட்சியை அடக்கும் முயற்சியில் தோல்வியடைந்து நீக்கப்பட்டதுடன் சீனாவின் பழம்பெருமைகள் அழியத் தலைப்பட்டன. பழைய முறையில் கட்டுப்பாட்டை நிலை நாட்டிவந்த சீனாவில் அமைதியும், கட்டுப்பாடும் குலைந்தன. புதிய குடியரசு பல புதிய தன்மைகளைப் பெற்றிருந்தது. ஆனால் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் நிலைநாட்டு மளவிற்கு அது வலிமை பெற்றிருக்கவில்லை. புது அரசின் தன்மைகளை அறிந்தவர்களும், புதிய அரசின் வெற்றிக்கு உண்மையிலேயே பாடுபட்டவர்களும் சீனாவில் மிகக்குறைவு. மேலும் சன்-யாட்-சென்னின் ஆதரவாளர்களும் அரசியலில் அவ்வளவு அனுபவமில்லாதவர்களாக இருந்தனர். இந்நிலையில் புதிய சீனப் பாராளுமன்றத்தில் ஹோமின்டாங் (Huomintang) கட்சியினர் பெரும்பான்மை பலத்தைப் பெற்றனர். இவர்கள் பல புதிய சட்டங்களை இயற்றினர். ஆனால் குடியரசுத் தலைவர் இராணுவத்தின் உதவியுடன் இச்சட்டங்களை எல்லாம் தள்ளிவைத்தார். எனவே ஹோமின்டாங் கட்சியினருக்கும், குடியரசுத் தலைவருக்குமிடையே அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன. இறுதியில் ஹோமின்டாங் கட்சியினர் 1913-ல் புரட்சி செய்யத் தொடங்கினர். குடியரசுத் தலைவரான யுவாங்-ஷி-கெய் இப்புரட்சியை எளிதாக அடக்கியதுடன் டாக்டர் சன்-யாட்-சென்னை நாடுகடத்தினார். இத்துடன் புதிய சீனப் பாராளுமன்றத்தையும் கலைத்துவிட்டார். பின்னர் 1915-ல் மிகத் திறமையாக மக்களின் பொது வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் மீண்டும் சீனாவில் முடியாட்சியை ஏற்படுத்தி, தானே சீனப் பேரரசர் என்று அறிவித்துக் கொண்டார். சில மாதங்களுக்குப் பின்னர் யுவாங்-ஷி-கெய்யின் அரசுக்குச் சீனாவில் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. ஹோமின்டாங் கட்சியினரே இச்சமயத்திலும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இச்சமயத்தில் யுவாங்-ஷி-கெய்யின் அதிகாரத்தில் பொறுமையடைந்த சில இராணுவ வீரர்கள் புரட்சிக்காரர்

களுடன் சேர்ந்து கொண்டனர். இந்நிலையில் யுவாங்-ஷி-கெய் நோய்வாய்ப்பட்டு இறந்தார். இதனால் சீன நாட்டின் அரசியலில் மேலும் குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டது. இந்நிலையால் முதல் உலகப் போரில் சீனா அவ்வளவாகக் கலந்து கொள்ள இயலவில்லை.

சையாம் (Siam)

ஆசியாவில் மூன்றாவதாக ஐரோப்பியர்களின் ஆதிக்கத்திற்குள்ளான நாடு தூரக்கிழக்கில் (கிழக்காசியாவில்) அமைந்துள்ள சையாம் ஆகும். இப்பகுதி பத்தொன்பதாம் நூற்றாண்டினிறுதியில் தன்னுடைய தன்மைகளில் அதிக மாற்றங்களைப் பெறாமல் ஐரோப்பிய நாகரிகத்தின் ஆதிக்கத்திற்குள்ளாகியது. சையாமைக் கிழக்கிலிருந்து பிரான்சும், மேற்கிலிருந்து பிரிட்டனும் நெருக்கின. இதனால் இவ்விரு வல்லரசுகளின் எல்லைப் புற மாநிலமாக சையாம் விளங்கியது. பின்னர் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக 1896-ல் இவ்விரு ஐரோப்பிய வல்லரசுகளும் சேர்ந்து கொண்டு கூட்டுப் பொறுப்பில் இப்பகுதியுடன் ஐரோப்பிய நாகரிகத்தைப் புகுத்த முற்பட்டன. இச்சமயத்தில் சூலாலங்கோர்ன் (Chulalongkorn) என்பவர் சையாமின் அரசராக ஆட்சிபுரிந்தார். இவர் 1868 முதல் 1910 வரை இந்நாட்டின் அரசராக விளங்கினார். நாட்டுப்பற்று மிக்க இவருடைய ஆட்சிக் காலத்தில் சையாமில் அமைதி நிலவியதுடன் மற்ற நாடுகள் வியக்கும் வண்ணம் சிறப்பான பல மாற்றங்களும் ஏற்பட்டன.

அரசர் சூலாலங்கோர்ன் தன்னுடைய ஆட்சிக் காலத்தில் சையாமில் அடிமை முறையை ஒழித்தார்; ஐரோப்பிய முறையில் பல புதிய பள்ளிகளை ஏற்படுத்தினார்; பல மருத்துவமனைகளைக் கட்டுவித்தார்;இராணுவத்தையும்,சிவில் நிர்வாகத்தையும் நவீன முறையில் சீர்திருத்தி அமைத்தார்; அறிவியல் கண்டுபிடிப்புக்களையும், இயந்திர சாதனங்களையும் தன்னுடைய நாட்டில் பயன்படுத்தி ஐரோப்பிய முறையில் பல மாற்றங்களை ஏற்படுத்தினார்; சையாமில் நிலையான புதிய நாணய முறையை ஏற்படுத்தினார்; செய்தித் தொடர்பின் வசதிகளைப் பெருக்கத் தபால், தந்தி முறையை ஏற்படுத்தினார்; மேலும் பொது சுகாதாரத் துறையையும் நிறுவினார். இவரது ஆட்சிக்காலத்தில் சையாமில் பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கு இருப்புப் பாதை போடப்பட்டது. சையாமின் தலைநகரான போங்காக் மின்சார வசதிகளைப் பெற்றது. மன்னர் தன்னுடைய பிள்ளைகளைக் கல்வி கற்க இங்கிலாந்திற்கு அனுப்பிவைத்தார்.

இதே சமயத்தில் இவர் தன்னுடைய நாட்டில் தேசியக் கருத்துக்களை வளர்ச்சியடையச் செய்ததுடன், ஜனநாயக அரசைக் காட்டிலும் பழைய எதேச்சாதிகார அரசினால் சையாமில் பல முன்னேற்றங்கள் ஏற்படும் என்று கருதி, எதேச்சாதிகார முறையில் செயல்பட்டுவந்த முடியாட்சியை நிலைநாட்டினார்.

அண்டைக் கிழக்கு நாடுகள்

முகம்மதியர்களில்லாத தூரக்கிழக்கு நாடுகளில் ஐரோப்பிய நாகரிகம் பரவிய அதேசமயத்தில், அண்டைக் கிழக்கு நாடுகளிலும், மத்தியக் கிழக்கு நாடுகளிலும் ஓரளவே மேற்கத்திய நாகரிகம் பரவத் தொடங்கியது. இப்பகுதியில் பெரும்பாலும் முகம்மதியர்கள் வாழ்ந்து வந்தனர். முகம்மதியர்களின் சமய உணர்வின் காரணமாகவே, ஐரோப்பிய ஏகாதிபத்தியக் கொள்கைகள் இம்மக்களிடையே அவ்வளவாகப் பரவவில்லை.

ஆசியப் பகுதியிலிருந்த உதுமானியப் பேரரசில் ஐரோப்பிய நாகரிகத்தின் ஆதிக்கம் சிறிது சிறிதாக ஏற்பட்டது. இதன் பயனாக இப்பகுதிகளில் ஐரோப்பியர்களின் உதவியுடன் புதிய இருப்புப் பாதைகள் போடப்பட்டன. ஐரோப்பிய வல்லரசுகள் பெற்ற சில பொருளாதாரச் சலுகைகளின் காரணமாக, இப் பகுதியில் தொழில்துறை வளர்ச்சியடைந்ததுடன், அரசியலிலும் பல புதிய கருத்துக்கள் பரவின. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வளர்ச்சியடைந்த தேசியக் கொள்கைகளின் காரணமாகத் துருக்கியர்களும், அரேபியர்களும், பல சீர்திருத்தங்களை மேற்கொள்ள முயன்றனர். இதனால் அரேபியா, ஈராக், சிரியா ஆகிய பகுதிகளிலும் கடற்கரைப் பகுதிகளிலும் ஐரோப்பிய நாகரிகங்கள் ஆதிக்கம் பெறத் தொடங்கின. பெரும்பாலான அரேபியப் பகுதிகள் பாலைவனமாதலால் இங்குள்ள மக்கள் நாடோடி வாழ்க்கையையே நடத்தினர். பலர் கொள்ளையடித்தலைத் தங்கள் தொழிலாகக் கொண்டிருந்தனர். எனவே இவர்களிடையே ஐரோப்பியப் பண்பாடுகள் அதிக மாற்றங்களை ஏற்படுத்தவில்லை.

முகம்மதிய மக்கள் வாழ்ந்துவந்த துருக்கிஸ்தானத்தில் மக்கள் பெரும்பாலும் நாடோடி வாழ்க்கையையே வாழ்ந்து வந்தனர். ஆனால் இப்பகுதி பொருளாதாரத்தில் ஓரளவு திருப்திகரமாக இருந்ததால், இரஷ்யா இப்பகுதியில் சிறிது சிறிதாக ஊடுருவி இறுதியில் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டியது.

ஆப்கானிஸ்தானம் (Afghanistan) என்று சொல்லப்படும் ஆசியப் பகுதி பிரான்சைக் காட்டிலும் பரப்பளவில் சற்றுப் பெரியது, இது ஏறத்தாழ ஜப்பானியப் பேரரசின் மொத்தப் பரப்பளவிற்குச் சமமான நிலப்பகுதியை உடையது. மலைப்பாங்கான இப்பகுதி விவசாயத்திற்குத் தகுதியற்றதாக இருந்தது. இப்பகுதியின் மொத்த மக்கள் தொகை சுமார் 60 இலட்சம் ஆகும். இவர்கள் பெரும்பாலும் போரிடுவதைத் தங்கள் தொழிலாகக் கொண்டிருந்ததால் வடபகுதியில் இரஷ்யாவுடனும், தென்பகுதியில் பிரிட்டனுடனும் தொடர்ந்து போராடித் தங்கள் தனித்தன்மையை நிலைநாட்டியதுடன், எத்தகைய வளர்ச்சியையும் தங்கள் நாட்டில் ஏற்படுத்தாமல் பின்தங்கிய நிலையிலேயே இருந்தனர்.

பாரசீகம் (Persia)

ஈரான் என்றழைக்கப்படும் ஆசியப் பகுதியான பாரசீகம் (Persia) மிகப் பழங் காலந்தொட்டு ஒரே நாகரிகத்திற்கு இருப்பிடமாக விளங்கியது. இந்நாடு வெகுகாலமாக ஒரு சுதந்திர முகம்மதிய நாடாக விளங்கி வந்தது. இந்நாட்டின் அரசர் "அரசர்களின் அரசர்" (King of Kings) அல்லது "ஷா" (Shah) என்று அழைக்கப்பட்டார். இவரும் எல்லா முகம்மதிய அரசர்களைப் போலவே தனது மதஉணர்வுகளுடன், பழைய பொருளாதாரக் கொள்கையையே பின்பற்றி ஆட்சிபுரிந்து வந்தார். சிறந்த முகம்மதியர்களின் கலை இவ்வரசரால் பாதுகாக்கப்பட்டு வந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரிட்டிஷ்காரர்களுக்கும், இரஷ்யர்களுக்கும் இந்நாட்டின் பொருளாதாரத் துறையிலும், அரசியலிலும் ஏற்பட்ட மோதல்களின் காரணமாக இந்நாட்டின் உள்நாட்டுநிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டது. இந் நாட்டின் ஒரு பகுதியினருக்கு இரஷ்யா உதவிய பொழுது, மற்றொரு பகுதியினருக்கு பிரிட்டன் உதவி புரிந்தது. இந் நாட்டில் இரஷ்யா சில சலுகைகளைப் பெற்றபொழுது அதற்கு ஈடாக பிரிட்டன் வேறு சில சலுகைகளைப் பெற்றது. இத்தகைய நிலை ஏறத்தாழ 1907ஆம் ஆண்டுவரை நீடித்தது. பின்னர் 1907-ல் இரஷ்யாவும், பிரிட்டனும் ஒன்று சேர்ந்து கொண்டு பாரசீகத்தின் வடபகுதியில் இரஷ்யாவும், தென் பகுதியில் பிரிட்டனும் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்த ஒத்துக்கொண்டு, இவ்விரு நாடுகளும் கூட்டாகக் கொள்ளையடித்தன. இதனால், இரஷ்யர்களும், பிரிட்டிஷ்காரர்களும்

பல நன்மையடைந்தனர். ஆனால் பாரசீகர்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர்.

இத்தகைய சூழ்நிலையில் பாரசீகத்து அரசர்கள் எவரும் வெளிநாட்டவரின் ஏகாதிபத்தியத்தைத் தங்கள் நாட்டில் முறியடிப்பதற்கும், உள்நாட்டில் சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதற்கும் தேவையான திறமைகளைப் பெற்றிருக்கவில்லை. பாரசீக அரசர்களான ஷாக்கள் ஒருவர்பின் ஒருவராக ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று, அந்நாடுகளில் காணப்பட்ட களியாட்டங்களில் மகிழ்ந்து திளைத்தார்களேயொழிய, அந்நாட்டு முன்னேற்றங்களைத் தங்கள் நாட்டில் ஏற்படுத்த வேண்டுமென எண்ணவில்லை. மேலும் இவர்களுடைய செலவு நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே சென்றது. எனவே தங்களுக்குத் தேவையான பணத்தைப் பெருக்குவதற்காகத் தங்கள் நாட்டில் மக்களுக்கு வேண்டிய வாழ்க்கை வசதிகள் எதையும் செய்து தராமல், மேலும் மேலும் புதிய வரிகளை விதித்தனர். அதிகாரிகளிடையே ஊழலும் பெருகியது. வரிச் சுமையைத் தாங்கமுடியாத பாரசீக மக்கள் தங்கள் சொத்துக்களையும், தங்கள் நாட்டையும் இரஷ்யர்களிடமும், பிரிட்டிஷ்காரர்களிடமும் அடகு வைத்ததில் வியப்பில்லை.

இந்நிலையில் சில தேசியவாதிகள் கிளர்ந்தெழுந்தனர். இவர்கள் கட்டாயப்படுத்தி பாரசீகத்திற்குப் புதிய அரசியலமைப்பு ஒன்றை 1906-ல் ஏற்படுத்தினர். மேலும் இவர்கள் 1908-ல் பாரசீக அரசரான "ஷா"வைப் பதவி நீக்கம் செய்தனர். இதனால் பாரசீகத்தில் அமைதியை நிலைநாட்டுவதாகக் கூறிக்கொண்டு இரஷ்யர்கள் பாரசீகத்தின் வடபகுதியைக் கைப்பற்றினர். இதனால் இரஷ்யர்களுக்கும், பாரசீகத் தேசியவாதிகளுக்குமிடையே மோதல்கள் ஏற்படவே 1911-ல் இரஷ்ய அரசாங்கம் வெளிநாட்டவரின் உதவியுடன் பாரசீகத்தில் சில முன்னேற்றங்களை ஏற்படுத்த உறுதியளித்தது. இதன்படி ஆர்வமில்லாத ஸ்வீடன் நாட்டு அதிகாரி ஒருவர் பாரசீகத்தின் இராணுவத்தைச் சீர்திருத்தி அமைப்பதற்காக நியமிக்கப்பட்டார். மார்கன் ஷஸ்டர் (Morgan Shuster) என்ற அமெரிக்கப் பொருளாதார இளைஞர் ஒருவர் பொருளாதாரத்தை வலுப்படுத்த நியமிக்கப்பட்டார். ஆனால் நியமிக்கப்பட்ட சிலமாதங்களிலேயே ஸ்வீடன் நாட்டு அதிகாரி தன்னுடைய திறமையின்மையை வெளிப்படுத்தவே, 1912-ல் இவ்வதிகாரியை நீக்கிவிடுவதாக இரஷ்யா பாரசீகத்திற்கு உறுதியளித்தது. இவ்வாறு பாரசீகத்தை இரஷ்யா ஒரு வலிமையற்ற நாடாக்கியது. இதே

போல பிரிட்டன் பாரசீகத்தில் ஒரு திறமையற்ற அரசாங்கம் நடைபெறுவதற்குக் காரணமாக இருந்தது. இத்தகைய நிலையில் 1914-ல் முதல்உலகப்போர் ஏற்பட்டபொழுது இருபதாம் நூற்றுண்டின் தேசியக் கருத்துக்களால் விழிப்படைந்த பாரசீகர்கள் அந்நியர்களைத் தங்கள் நாட்டினின்றும் வெளியேற்றவும், தங்கள் நாட்டில் நிலையான ஓர் அரசியலமைப்பை ஏற்படுத்தவும் தக்க தருணத்தை எதிர்நோக்கி யிருந்தனர்.

4. ஆப்பிரிக்காவை ஐரோப்பியர்கள் கைப்பற்றுதல்

வட ஆப்பிரிக்காவில், மேற்காசியாவைப் போல பெருமளவில் முகம்மதியர்கள் வாழ்ந்து வந்தனர். ஏழாம் நூற்றுண்டு முதல் இப்பகுதியின் பூர்விகக் குடிகளான எகிப்தியரும், பெர்பர்களும் (Berbers) அரேபியர்களுடன் கலக்கலாயினர். இதனுல் இவர்கள் கிழக்கத்திய எதேச்சாதிகாரத்திற்குக் கட்டுப்பட்டதுடன் அரேபிய அல்லது துருக்கியப் பழக்க வழக்கங்களை மேற்கொள்ளலாயினர். நாளடைவில் முகம்மதிய மதமும், பண்பாடும் ஆப்பிரிக்காவின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்த நீக்ரோ மக்களிடம் புகுத்தப்பட்டது. பின்னர் இம் முகம்மதிய நாகரிகம் சிறிது சிறிதாகப் பரவி சகாராப் (Sahara) பாலைவனத்தைக் கடந்து சூடானில் (Sudan) பரவ ஆரம்பித்தது. இதனுல் டிம்பக்டு (Timbuctu) 16ஆம் நூற்றுண்டில் முகம்மதியர்களின் வியாபார ஸ்தலமாக மாறியது. பின்னர் படிப்படியாக முகம்மதிய நாகரிகம் மேலும் வளர்ச்சியடைந்ததன் காரணமாக, 19ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் ஆப்பிரிக்காவின் பல பகுதிகளில் முகம்மதியப் பண்பாடுகள் பின்பற்றப்பட்டன. இச்சமயத்தில்தான் ஐரோப்பிய வல்லரசுகள் தங்கள் வளர்ச்சியின் காரணமாகவும், தேசியக் கருத்துக்களைப் பரப்பும் நோக்கத்தினுலும், ஏகாதிபத்தியக் கொள்கைகளின் காரணமாகவும் ஆப்பிரிக்காவைக் கைப்பற்றித் தங்களுக்குள் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தன.

மத்தியதரைக் கடலின் கரையோரப் பகுதியில் அமைந்திருந்த ஆப்பிரிக்கப் பகுதிகள், உதுமானியப் பேரரசு நலிந்துபட்டபொழுது படிப்படியாகப் பிரிந்து ஐரோப்பிய நாடுகளுடன் தொடர்பு கொள்ளத் தொடங்கின. வலிமையற்ற இப்பகுதிகளைச் சிறிது சிறிதாக ஐரோப்பிய வல்லரசுகள் தங்களாதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்தன. இதனுல் 1830க்கும்

1870க்கும் இடைப்பட்ட காலத்தில் அல்ஜீரியா (Algeria)வையும், 1881-ல் டூனிஸையும் (Tunis) பிரான்சு கைப்பற்றியது. 1882-ல் எகிப்தை பிரிட்டனும், 1911-1912 ஆகிய ஆண்டுகளில் திரிபோலி (Tripoli), சிரெனய்கா (Cyrenaica) ஆகிய பகுதிகளை இத்தாலியும் கைப்பற்றின. மொராக்கோ என்ற ஆப்பிரிக்கப் பகுதி உதுமானியப் பேரரசிலிருந்து பிரிந்து ஒரு சுல்தானின் ஆட்சியில் சிலகாலம் அமைதியாக இருந்தது. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மொராக்கோ சுல்தானுக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பல தொல்லைகள் ஏற்பட்டன. ஐரோப்பிய நாடுகள் மொராக்கோவில் சண்டையிட்டுக் கொண்டதால் சில ஆண்டுகள் நன்மை ஏற்பட்டாலும் 1912-ல் மொராக்கோ சுல்தான் தன்னுடைய நாட்டின் பெரும்பகுதியை பிரான்சின் உதவியுடனும், பிற பகுதியை ஸ்பெயின் நாட்டின் உதவியுடனும் ஆட்சி புரியும் நிலை ஏற்பட்டது.

கி. பி. 1880ஆம் ஆண்டிற்கு முன்னர் ஆப்பிரிக்காவைப் பற்றி ஐரோப்பியர்களுக்கு ஒன்றும் தெரியாது எனலாம். எனவே இவர்கள் ஆப்பிரிக்காவைக் குறிப்பிடும் பொழுதெல்லாம் "இருண்ட கண்டம்" என்றே கூறி வந்தனர். மத்திய தரைக்கடல் பகுதியில் அமைந்துள்ள வட ஆப்பிரிக்கப் பகுதிகளையும், கடல் வழியாக இந்தியாவிற்கு வரும் வழியில் டச்சுக்காரர்கள், போர்ச்சுகீசியர்கள், பிரஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் ஆகிய ஐரோப்பியர்களால் கைப்பற்றப்பட்டிருந்த சில கடற்கரைப் பகுதிகளையும் தவிர, எஞ்சிய ஆப்பிரிக்கப் பகுதிகளைப் பற்றி ஐரோப்பியர்கள் எத்தகைய அக்கறையும் எடுத்துக் கொள்ளவில்லை. இவற்றில் போர்ச்சுகீசியர்கள் ஆப்பிரிக்காவின் கிழக்குப் பகுதியில் மொஸாம்பிக் (Mozambique) என்ற பகுதியையும், மேற்கில் அங்கோலா (Angola) என்ற பகுதியையும் கைப்பற்றினர். டச்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் தென்னாப்பிரிக்கப் பகுதிகளில் மட்டுமே தங்கள் குடியேற்றங்களை விரிவுபடுத்தினர், இதன் காரணமாக மற்ற ஆப்பிரிக்கப் பகுதிகளில் ஐரோப்பியக் குடியேற்றங்களை அமைப்பது மிகக் குறைவாகவே இருந்தது. மேலும் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இங்கு அடிமை வியாபாரம் ஓரளவு வளர்ச்சியடைந்தாலும், ஐரோப்பியர்கள் இப் பகுதிகளில் தங்கள் கவனத்தைச் செலுத்துவது மிகக் குறைவாகவே இருந்தது.

தொழில் வளர்ச்சியின் காரணமாகவும், மனிதாபிமானக் கருத்துக்களின் வளர்ச்சியின் காரணமாகவும் அடிமை வியாபாரம் தடைசெய்யப்பட்டதால், ஆப்பிரிக்காவின் எல்லாப்

பகுதிகளிலும் ஐரோப்பியர்கள் குடியேறி ஆப்பிரிக்காவைத் தங்களுக்குள் பகிர்ந்து கொள்ளத் தொடங்கினர். இதன்பயனுக ஐரோப்பிய நாடுகள் ஆப்பிரிக்காவின் கடற்கரைப் பகுதி களிலிருந்து உள்நாட்டுப் பகுதிகளில் விரைந்து தங்கள் ஆதிக் கங்களை ஏற்படுத்தத் தொடங்கின. அடிமை வியாபாரம் நீக்கப் படுவதற்குக் காரணமாக இருந்த மனிதாபிமானக் கருத்துக்களும், தொழில்வளர்ச்சியும் தொடர்ந்து செயல் பட்டதால் மனிதாபிமானிகள் (Humanitarins) ஐரோப்பிய அடிமை வியாபாரிகளின் ஆசைகளைக் கட்டுப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், அரேபியர்களிடத்திலும், நீக்ரோக்களிடத் திலும், தங்கள் மனிதாபிமான உணர்வுகளைக் காட்டத் தொடங் கினர். இவர்கள் ஆப்பிரிக்காவின் உள்நாட்டுப் பகுதிகளுக்குச் சென்று அங்கு வாழ்ந்த மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டனர். பல ஆப்பிரிக்கர்களைக் கிறிஸ்தவர்களாக மாற்றினர். ஐரோப்பிய நாகரிகத்தை அம் மக்களிடையே புகுத்தினர்.

மேலும் ஐரோப்பாவில் வளர்ச்சி பெற்று வந்த தொழில் களுக்குத் தேவையான ரப்பரும் (Rubber), பிற கச்சாப் பொருள் களும் ஆப்பிரிக்காவில் பெருமளவில் கிடைத்தன. ஐரோப் பியர்கள் ஆப்பிரிக்காவில் தங்கள் குடியேற்றங்களை அமைப் பதன் மூலமாகவும், நவீன சுகாதார வசதிகளை ஏற்படுத்து வதன் மூலமாகவும், ஆப்பிரிக்கா முழுவதையும் தங்களாதிக்கத் திற்குக் கொண்டு வருவதன் மூலமாகவும், ஆப்பிரிக்காவில் கிடைக்கும் கச்சாப் பொருள்களைப் பெறமுடியுமெனக் கரு தினர். மேலும் தங்களுடைய பொருள்களை இப் பகுதிகளில் விற்று அதிக இலாபமடைய முடியுமெனவும் ஐரோப்பியர்கள் கருதினர். எனவே பத்தொன்பதாம் நூற்ருண்டின் இடைப் பகுதியில் பல திறமைமிக்க ஐரோப்பியர்கள் "இருண்ட கண்ட மான" ஆப்பிரிக்காவின் உட்பகுதியைக் கண்டறிய ஆரம்பித் தனர். இவர்களில் நான்கு பிரிவினர் குறிப்பிடத்தக்கவர்களாவர். முதலாவது பிரிவினர் டேவிட் லிவிங்ஸ்டன் (David Living-stone) என்ற ஸ்காட்லாந்து மருத்துவரின் தலைமையில் 1840-ல் ஆப்பிரிக்காவின் உட்பகுதியைக் கண்டறியத் தொடங்கினர். டேவிட் லிவிங்ஸ்டன் புராட்டஸ்டண்டு மதப் பிரச்சாரக் குழு வின் தலைவராக ஆப்பிரிக்காவிற்குச் சென்ருர். இவர் மதத்துறை யில் பிரச்சாரம் செய்து வெற்றியடைந்ததைக் காட்டிலும் ஆப் பிரிக்காவின் உண்மைகளைக் கண்டறிவதில் அதிக வெற்றி பெற் ருர். இவர் ஏறத்தாழ 30 ஆண்டுகள் மத்திய ஆப்பிரிக்காவின் தென்பகுதியிலுள்ள அடர்ந்த காடுகளில் பயணம் செய்து பல

உண்மைகளை வெளியிட்டார். இவ்வுண்மைகள் அறிவியல் வல்லுநர்களிடையேயும், ஐரோப்பிய, அமெரிக்க மக்களிடையேயும் மிகுந்த ஆவலை உண்டுபண்ணியது. இவரது வாழ்க்கையின் இறுதியில் இவர் ஆப்பிரிக்கக் காடுகளில் தான் சென்ற வழியிலிருந்து மாறிவிடவே காடுகளில் சுற்றி அலைய வேண்டியதாயிற்று. இதனை அமெரிக்காவின் நியூயார்க் செய்தித்தாள் முன் பக்கத்தில் வெளியிடவே ஹென்றி ஸ்டான்லி (Henry Stanley) என்ற அமெரிக்கப் பத்திரிகையாசிரியர் டேவிட் லிவிங்ஸ்டனைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டார். இவர் 1871-ல் டேவிட் லிவிங்ஸ்டனை ஆப்பிரிக்கக் காடுகளில் சந்தித்தார். பின்னர் டேவிட் லிவிங்ஸ்டனுடன் சில மாதங்கள் பயணம் செய்து, தன்னுடைய ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இதன் பயனாக டாங்கனீகா (Tanganyika), விக்டோரியா (Victoria) என்ற ஏரிகளைக் கடந்து காங்கோ நதி தீரத்தைக் கண்டறிந்தார். இவரது ஆப்பிரிக்க அனுபவங்களைத் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிட்டார். பின்னர் ஸ்டான்லி பெல்ஜியத்தின் அரசரான இரண்டாம் லியோபோல்டு (Leopold II) என்பவரிடம் காங்கோ நதிப் பகுதியில் வியாபாரத்திற்கான சாத்தியக் கூறுகளைப்பற்றி விளக்கினார். இதனால் பேராசை கொண்ட லியோபோல்டின் நடவடிக்கைகளால் "காங்கோ சுதந்தர நாடு" (Congo Free State) நிறுவப்பட்டது. காங்கோவை பெல்ஜியம் கைப்பற்றியதற்கு ஸ்டான்லியே முக்கியமானவராவார்.

ஆப்பிரிக்காவில் தீரச்செயல் புரிந்த மற்றோர் ஐரோப்பியர் கார்ல் பீட்டர்ஸ் (Karl Peters) என்பவராவார். இவர் ஒரு ஜெர்மனியர். இவர் ஜெர்மன் குடியேற்ற சமுதாயத்தை நிறுவி அதன் வளர்ச்சிக்காகப் பிரச்சாரம் செய்து வந்தார். இவர் 1884-ல் சில ஜெர்மனியர்களுடன் கிழக்குக் கரையில் வந்து இறங்கினார். இப் பகுதியில் ஆட்சிபுரிந்து வந்த தலைவர்களுக்கு மதுபானங்களை வழங்கியும், பல வெகுமதிகளை அளித்தும் இவர் வந்திறங்கிய 10 நாட்களுக்குள் ஏறத்தாழ பன்னிரண்டு உடன்படிக்கைகளைச் செய்து கொண்டார். இவ் வுடன்படிக்கையின்படி 60,000 சதுர மைல்கள் பரப்புள்ள நிலத்தை இப்பகுதியின் ஆப்பிரிக்கத் தலைவர்கள் ஜெர்மனியர்களுக்குக் கொடுத்தனர். பின்னர் கார்ல் பீட்டர்ஸ் 1885-ல் தன்னுடைய நாட்டின் முதலமைச்சரான பிஸ்மார்க்கைச் சந்தித்துத் தன்னுடைய தலைமையில் ஆப்பிரிக்காவில் இருந்த வர்த்தகக் கம்பெனியை அரசாங்கம் எடுத்துக் கொள்ளுமாறும், ஆப்பிரிக்காவில் உள்ள ஜெர்மனியக் கம்பெனிக்குப் பாதுகாப்பு அளிக்குமாறும் கேட்டுக் கொண்டார். பிஸ்மார்க்கும் இவரது

வேண்டுகோளை நிறைவேற்றினர். அடுத்த ஐந்தாண்டுகளில் தன்னுடைய பழைய முறையைப் பின்பற்றி, கிழக்காப்பிரிக்கப் பகுதியில் சுமார் 20 இலட்சம் சதுர மைல்களைக் கைப்பற்றி, கிழக்கு ஆப்பிரிக்காவில் ஜெர்மனியின் ஆதிக்கத்தை நிலை நாட்டினர்.

ஆப்பிரிக்காவில் பேரரசு அமைத்ததில் மிக முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர் சிசில் ரோட்ஸ் (Cecil Rhodes) என்ற ஆங்கிலேயராவார். ஆங்கிலப் பாதிரியாரான இவரது தந்தை இவரைத் திருச்சபையின் அலுவல்களில் ஈடுபடுத்த எண்ணினர். இவர் இளமையில் நோய்வாய்ப்பட்டதால் 1870-ல் தென்னுப்பிரிக்காவில் உள்ள நேடால் (Natal) என்ற பகுதிக்கு அனுப்பப்பட்டார்; இங்கு கிம்பர்லி (Kimberly) என்ற பகுதியில் வைரங்கள் கிடைக்கவே வெகு விரைவில் இவர் செல்வந்தரானதுடன் இவரது நோயும் குணமடைந்தது. பின்னர் இவர் இங்கிலாந்திற்குச் சென்று, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று மீண்டும் தென்னுப்பிரிக்காவிற்குத் திரும்பி வந்தார். இவர் தென்னுப்பிரிக்காவிற்குத் திரும்பி வந்தவுடன் தென்னுப்பிரிக்காவின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு, இந் நாட்டின் அரசியலிலும் ஈடுபட்டார். சுரங்கத் தொழிலிலும், வியாபாரத்திலும் இவருக்கு நல்ல வாய்ப்பிருந்தது. எனவே 1889-ல் இவர் பிரிட்டிஷ் தென்னுப்பிரிக்கக் கம்பெனியை நிறுவினர். நாளடைவில் இக்கம்பெனி இப் பகுதியின் பல பகுதிகளைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது. பின்னர் இக் கம்பெனியின் பகுதிகள் ரொடீஷியா (Rhodesia) என அழைக்கப்பட்டது.

ரோட்ஸ் 1890 முதல் 1896 வரை தென்னுப்பிரிக்காவின் தென் கோடியில் அமைந்திருந்த கேப் காலனியின் (Cape Colony) பிரதம அமைச்சராக இருந்த பொழுது டச்சுக் குடியரசின் பகுதிகளாக இருந்த டிரான்ஸ்வால் (Transval), ஆரஞ்சு ஃபிரி ஸ்டேட் (Orange Free State) ஆகிய இரு பகுதிகளையும் பிரிட்டிஷ் தென்னுப்பிரிக்காவுடன் இணைப்பதற்குத் திட்டங்கள் தீட்டினர். இவர் ஆப்பிரிக்காவின் தென் கோடியில் அமைந்துள்ள நன்னம்பிக்கை முனையிலிருந்து வடக்கே மத்திய தரைக் கடல் பகுதியில் அமைந்துள்ள அலெக்ஸாண்டிரியா வரை பிரிட்டிஷ் பேரரசின் அதிகாரத்தை நிலைநாட்டப் பாடுபட்டார். ஆனல் இவர் 1902-ல் இறந்துவிடவே இவரது பெரும் சொத்துக்கள் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும்

தகுதிமிக்க ஆங்கிலோ-சாக்ஸன் நாட்டு மாணவர்களுக்கு அறக் கட்டளையாக மாற்றப்பட்டன.

இவ்வாறு லிவிங்ஸ்டன், பீட்டர்ஸ், ஸ்டான்லி, ரோட்ஸ் ஆகியோர்களைப் பின்பற்றி, பல ஐரோப்பியர்கள் புதிய பகுதி களைக் கைப்பற்றுவதற்காகவும், வியாபாரத்திற்காகவும், நல்ல எதிர்காலத்தை எதிர்பார்த்தும், மதப் பிரச்சாரத்திற்காகவும், ஆப்பிரிக்கா முழுவதிலும் குடியேற ஆரம்பித்தனர். இவர்கள் பெரும்பாலும் 1870 ஆம் ஆண்டிற்கும் 1889 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்திலேயே குடியேறினர். பின்னர் வளர்ச்சி யடைந்த தொழிற் புரட்சியின் காரணமாகவும், பிற ஐரோப்பி யச் சூழ்நிலைகளாலும், ஐரோப்பிய நாடுகள் ஆப்பிரிக்கா முழுவ தையும் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டன. ஆங்குக் குடியேறிய ஐரோப்பியர் அப்பகுதிகளின் தலைவர்களுடன் ஒப்பந்தம்செய்து கொண்டனர். பின்னர் இப்பகுதிகளில் தங்கள் நாட்டுக் கொடி களைப் பறக்கவிட்டனர். தங்கள் பாதுகாப்பிற்காக ஒரு காவல் படையை வைத்துக்கொண்டனர். படிப்படியாகத் தங்கள் ஆதிக் கத்தை அப்பகுதிகளில் வாழ்ந்த மக்களின் மீது செலுத்தி அப் பகுதிகளைத் தங்கள் குடியேற்ற நாடுகளாக்கினர். இறுதியில் அப்பகுதிகளைத் தங்கள் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தனர். ஓர் ஆப்பிரிக்கப் பகுதியின்மீது எவையேனும் இரு ஐரோப்பிய அரசுகள் உரிமை பாராட்டினுல், இரண்டு அரசுகளும் ஒன்றுகக் கூடி, விவாதித்து அதிக உரிமை உடைய நாட்டிற்கு அப் பகுதியை விட்டுக் கொடுப்பதற்கு மற்ற ஒரு ஐரோப்பிய நாடு சம்மதித்தது. அதே சமயத்தில் அப்பகுதியை விட்டுக்கொடுத்த ஐரோப்பிய நாட்டிற்கு ஆப்பிரிக்காவின் மற்ெெரு பகுதியில் சில பகுதிகள் (ஆப்பிரிக்காவின் பூர்வீகக் குடிகளின் செலவில்) நஷ்ட ஈடாகக் கொடுக்கப்பட்டது. பின்னர் ஐரோப்பியர்க ளிடையே ஆப்பிரிக்காவின் காரணமாக ஏற்படக் கூடிய சச் சரவுகளைத் தீர்த்துக் கொள்வதற்காக 1885-ல் பெர்லினில் கூட்டப்பட்ட மாநாட்டில் சில முடிவுகள் மேற்கொள்ளப் பட்டன. இதன்படி இரண்டாம் லியோபோல்டு காங்கோவில் தன்னுட்சியை ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டார். சில விதி முறைகளுக்குக் கட்டுப்பட்டு ஆப்பிரிக்காவின் எஞ்சிய பகுதிகளை ஐரோப்பிய அரசுகள் கைப்பற்றிக் கொள்ள ஒத்துக் கொண்டன. இவ்வாறு 1912 ஆம் ஆண்டிற்குள் கிழக்கே எதியோபியாவும், மேற்கே லைபீரியாவும் நீங்கலாக எஞ்சிய ஆப்பிரிக்கப் பகுதிகளை ஐரோப்பிய நாடுகள் கைப்பற்றித் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டன. இதன் இறுதிக் கட்டமாக

மொராக்கோ ஸ்பெயின், பிரான்சு ஆகிய இரு நாடுகளின் ஆதிகத்திற் குள்ளாகியது.

ஆப்பிரிக்காவை ஐரோப்பிய நாடுகள் பகிர்ந்து கொண்டதால் பன்னாட்டுறவுகளில் (International Relations) சில பிரச்சினைகள் தோன்ற ஆரம்பித்தன. இதனால் பிற்காலத்தில் ஐரோப்பிய நாடுகள் தங்களுக்குள் போரிட்டுக் கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. போர்ச்சுகீசியர்கள் ஆப்பிரிக்காவின் கிழக்குப் பகுதியிலிருந்த மொஸாம்பிக்கையும், மேற்குப் பகுதியிலிருந்த அங்கோலாவையும் ஒன்றாக இணைத்துக் கொள்ள விரும்பினர். ஆனால் 1891-ல் இங்கிலாந்துடன் ஏற்பட்ட உடன்படிக்கையால் அது நிறைவேறாமல் போய்விட்டது. அதே போன்று டச்சு போயர்கள் தங்கள் பகுதியைச் சுதந்திர நாடாக்க விரும்பினர். அவர்களது விருப்பமும் 1899 முதல் 1902 வரை நடைபெற்ற போயர் போரினால் (Boer War) நிறைவேறாமல் போய்விட்டது. ஜெர்மனியர்கள் தங்கள் பகுதியான கிழக்காப்பிரிக்காவைக் காங்கோ வரை விரிவு படுத்தியதால், நன்னம்பிக்கை முனையிலிருந்து வடக்கே கெய்ரோ வரை தங்கள் ஆட்சிப் பகுதியை அமைக்க வேண்டுமென்ற ஆங்கிலேயர்களின் ஆசை நிறைவேறாமல் போயிற்று. எனவே இவ்விரு ஐரோப்பிய நாடுகளுக்கிடையே பகைமையுணர்ச்சி வளர்ச்சி யடைந்தது. இவ்வாறே பிரான்சு அல்ஜீரியாவையும், செங்கடல் பகுதியில் தன்னாதிக்கத்தின்கீழ் இருந்த சோமாலிலாந்தையும் ஒன்று சேர்த்து, ஆப்பிரிக்காவில் ஒரு பேரரசை நிறுவ முயற்சித்தது. இம்முயற்சியும் வெற்றி பெறவில்லை.

இந்நிலையில் 1898-ல் கேப்டன் மர்ச்சந் (Marchand) என்பவரின் தலைமையில் ஆப்பிரிக்காவில் ஒரு படையெடுப்பை மேற்கொண்டது. மர்ச்சந் காங்கோ நதியின் முகத்துவாரத்திலிருந்து புறப்பட்டு நைல் சமவெளி வரை சென்றார். அங்கு ஃபஷோதா (Fashoda) என்ற இடத்தில் பிரெஞ்சுக் கொடியை ஏற்றி அப்பகுதியும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் பிரான்சுக்குச் சொந்தமானவை என அறிவித்தார். ஆனால் பிரிட்டிஷ்காரர்கள் ஃபஷோதா சூடானைச் சேர்ந்தது எனவும், சூடான் எகிப்தைச் சேர்ந்தது எனவும், எகிப்து (பிரிட்டிஷ்காரர் வசமிருந்ததால்) பிரிட்டிஷ்காரர்களுக்குச் சொந்தமானது எனவும் கூறினர். இதனால் பிரிட்டிஷ்காரர்கள் கிட்ச்னெர் (Kitchener) என்ற ஆங்கிலத் தளபதியின் தலைமையில் ஒரு படையை

அனுப்பினர். இப் படை கார்டம் (Khartum) என்ற பகுதி யிலிருந்து புறப்பட்டு பிரெஞ்சுப் படைகளை எதிர்த்தது. ஆனால் பிரெஞ்சுத் தளபதி ஃபஷோதாவிலிருந்து பின்வாங்கினர். 1899-ல் பிரான்சுக்கும், பிரிட்டனுக்குமிடையே ஏற்பட்ட உடன்படிக்கையின்படி பிரெஞ்சுக்காரர்கள் எதிப்திய சூடான் பகுதியை பிரிட்டிஷ்காரர்களுக்கு விட்டுக் கொடுத்தனர். மேலும் இவ்வுடன்படிக்கையின் விளைவாக 1904-ல் பிரான்சு எதிப்தில் பிரிட்டிஷ்காரர்களின் ஆதிக்கத்தையும், பிரிட்டன் மொராக்கோவில் பிரான்சின் ஆதிக்கத்தையும் ஆதரித்தன.

ஐரோப்பிய நாடுகளிடையே ஆப்பிரிக்காவில் ஏற்பட்ட தகராறுகளில் இறுதியானது மொராக்கோ பிரச்சினை. 1905-ல் மொராக்கோ சுல்தானுடைய வேண்டுகோளுக்கிணங்க பிரான்சு தன்னுடைய படையின் ஒருபகுதியை மொராக்கோவிற்கு அனுப்பியது. ஜெர்மனி இதனை எதிர்த்ததால் இவ்விரு நாடு களுக்கு மிடையே போர் ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்நிலையில் பிரிட்டனின் தலையீட்டால் 1912-இல் இவ்விரு நாடுகளுக்கு மிடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன்படி மொராக்கோவில் பிரான்சு ஆதிக்கம் பெற்றது. ஆப்பிரிக் காவில் மற்றொரு பகுதி ஜெர்மனிக்கு நஷ்டஈடாகக் கொடுக்கப் பட்டது. இருப்பினும் இவ்விரு நாடுகளுக்குமிடையே மனக் கசப்பு வளர்ந்துகொண்டே யிருந்தது. இது முதல் உலகப் போருக்கு ஒரு காரணமாக அமைந்தது. இந் நிகழ்ச்சியைப் பற்றி முதல் உலகப் போருக்கான காரணங்களை ஆராயும் பொழுது மேலும் விரிவாகக் காண்போம்.

ஐரோப்பியர்கள் ஆதிக்கத்தால் ஆப்பிரிக்காவில் ஏற்பட்ட மாறுதல்கள்

ஐரோப்பியர்கள் 1914 ஆம் ஆண்டிற்குள் ஆப்பிரிக்காவின் மொத்தப் பரப்பளவான 1 கோடியே 15 இலட்சம் சதுரமைல் களில் சுமார் 37 இலட்சத்து 50 ஆயிரத்தை பிரிட்டிஷ்காரர் களும், 40 இலட்சத்தை பிரெஞ்சுக்காரர்களும், 9 இலட்சத்தை ஜெர்மனியர்களும், மற்றொரு 9 இலட்சத்தை பெல்ஜியம் நாட்டி னரும், 8 இலட்சத்தை போர்ச்சுகீசியர்களும், 6 இலட்சத்து 50 ஆயிரத்தை இத்தாலியர்களும், ஓர் இலட்சத்தை ஸ்பானியர் களுமாகப் பகிர்ந்து கொண்டனர். எஞ்சிய சுமார் 4 இலட்சம் சதுரமைல்கள் ஐரோப்பியரின் ஆளுகைக்கு உட்படாத சுதந்திர நாடுகளாக இருந்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் ஐரோப்பியர்களின் வசமிருந்த

ஆப்பிரிக்கப் பகுதிகளில் பல முன்னேற்றங்கள் ஏற்படத் தொடங்கின. ஐரோப்பியர்கள் இப்பகுதிகளில் தங்கள் அரசியலாதிக்கத்தை ஏற்படுத்திய பின்னர் தென்னாப்பிரிக்காவிற்கு பிரிட்டிஷ் தீவுகளிலிருந்தும், வடஆப்பிரிக்காவிற்கு இத்தாலி, பிரான்சு ஆகிய நாடுகளிலிருந்தும் ஐரோப்பியர்கள் செல்ல ஆரம்பித்தனர். இதனால் வெப்பப் பகுதிகளில் வாழ்ந்து வந்த நீக்ரோக்கள் ஐரோப்பிய மத போதகர்களால் கல்வியறிவு பெற்றனர். இவர்கள் மத போதகர்களால் நிறுவப்பட்ட பள்ளிகளில் ஐரோப்பிய மொழிகளையும், பழக்கவழக்கங்களையும் கற்றனர். பல நீக்ரோக்கள் ஐரோப்பிய முதலாளிகளிடம் பணி புரிந்தனர். சிலர் ஐரோப்பிய இராணுவ அதிகாரிகளிடம் பணியாற்றினர். ஐரோப்பிய வியாபாரத்தின் நன்மைகளை ஆப்பிரிக்கப் பாலைவனங்களில் வாழ்ந்து வந்த சில அரேபியர்களும் அனுபவிக்க ஆரம்பித்தனர். போக்குவரத்து வசதி ஓரளவு ஏற்பட்டது. மிதவாதிகள் சிலர் தங்கள் நாடு இன்னும் ஒரு தலைமுறையில் இருளிலிருந்து விடுபடுவதுடன் எல்லாத் துறையிலும் முன்னேறிவிடும் என்றும் கூறத் தொடங்கினர். ஆப்பிரிக்கப் பகுதிகள் சிலவற்றில் இருப்புப் பாதைகள் போடப்பட்டன. தந்திமுறை ஏற்படுத்தப்பட்டது. சில பகுதிகள் விளைநிலங்களாக மாற்றப்பட்டன. சுருங்கக்கூறின் தற்கால நாகரிகத்தின் உண்மைகளை ஐரோப்பியர்களிடமிருந்து (வெள்ளையர்களிடமிருந்து) ஆப்பிரிக்கர்கள் (கறுப்பர்கள்) அறிந்துகொண்டனர்.

எத்தியோப்பியா

ஐரோப்பியர்களின் ஆதிக்கத்திற் குள்ளாகாமல் இரண்டு ஆப்பிரிக்க நாடுகள் இருந்தன என்று முன்னரே கண்டோம். அவற்றுள் மிகப் பெரியது எத்தியோப்பியா. இது ஆப்பிரிக்காவின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள ஒரு நீக்ரோ நாடு. இந்நாட்டின் நிலங்கள் பெரும்பாலும் மலைப்பாங்காகவே உள்ளன. இந்நாட்டில் வாழ்ந்த நாகரிகமற்ற மக்கள் கிறிஸ்துவ மதத்தை நான்காம் நூற்றுண்டிலிருந்து பின்பற்றி வந்தனர். பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் இந்நாட்டின் பேரரசரான இரண்டாம் மெனிலிக் (Menelek II) இப்பகுதியின்மீது படையெடுத்த இத்தாலியர்களை விரட்டியடித்து வெற்றி பெற்ருர். இவர் 1889 முதல் 1913 வரை எத்தியோப்பியாவின் பேரரசராகப் பதவி வகித்தார். இவர் அரசர் சாலமன் (Solomon), அரசி ஷிபா (Sheba) ஆகியோரின் சந்ததியைச் சேர்ந்தவர் என்று தன்னைக் கூறிக்கொண்டார். இத்தாலியர்களை யடுத்து இந்நாட்டின்மீது ஆக்கிரமிப்புச் செய்ய முற்பட்ட மற்ற ஐரோப்பியர்களையும்

இவர் முறியடித்து எத்தியோப்பியாவின் சுதந்திரத்தை நிலை நாட்டினார். பேரரசர் இரண்டாம் மெனிலிக் தன்னுடைய ஆட்சிக் காலத்தில் தன்னாட்டின் இராணுவத்தை ஐரோப்பிய முறையில் மாற்றியமைத்தார். பிரஞ்சுக்காரர்களின் மூலதன உதவியுடன் தன்னுடைய நகரத்திலிருந்து கடற்கரை வரை இருப்புப் பாதை ஒன்றை அமைத்தார்.

லைபீரியா (Liberia)

ஆப்பிரிக்காவில் சுதந்திரமாக இயங்கி வந்த மற்றொரு நாடு லைபிரியா. இது பரப்பளவில் மிகச் சிறியது. ஆப்பிரிக்காவின் மேற்குக் கரையில் அமைந்திருப்பது. ஐக்கிய அமெரிக்காவிலிருந்து விடுபட்ட நீக்ரோ அடிமைகள் 1847-ல் இந்நாட்டை நிறுவினர். இந்நாட்டில் நாகரிகமடைந்தவர்களும், ஆங்கிலம் பேசியவர்களும் இந்நாட்டின் அருகிலிருந்த நாகரிகமடையாதவர்களின் தொல்லைகளுக் குள்ளாயினர். இந்நாட்டை மேற்கிலிருந்து பிரிட்டிஷ்காரர்களும், கிழக்கு வடக்குத் திசைகளிலிருந்து பிரஞ்சுக்காரர்களும் அடிக்கடி ஆக்கிரமித்து இதன் பரப்பளவைக் குறைத்தனர். எனவே இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்நாடு அளவில் மிகச் சிறியதாகவும், ஏழை நாடாகவும் இருந்தது. இச்சமயத்தில் தங்களுடைய முயற்சியால் இந்நாட்டில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியுமா, அல்லது வெளிநாட்டவர்களின் ஆக்கிரமிப்பினால்தான் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியுமா என்பதே இந்நாட்டின் முன்னின்ற பிரச்சினையாக இருந்தது.

இவை ஒருபுறமிருக்க 1904-ல் இராபர்ட் பியரி (Robert Peary) என்பவர் வடகோடியைக் (ஆர்டிக்) கண்டு அங்கு அமெரிக்கக் கொடியை நாட்டி வைத்தார். ரோவால்டு அமண்சென் (Roald Amundsen) என்பவர் 1911-ல் அண்டார்டிக் வட்டத்தைக் கண்டுபிடித்துத் தென்கோடியைக் கண்டறிந்தார்.

இவ்வாறு உலகம் முழுவதும் ஐரோப்பியர்களின் ஆதிக்கமும் நாகரிகமும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காணப்பட்டது. ஐரோப்பிய நாடுகளிடையே தங்கள் ஆதிக்கக் கொள்கையினால் ஏற்பட்ட போட்டியின் காரணமாகப் பல புதிய பிரச்சினைகள் தோன்றின. இப்பிரச்சினைகள் யாவும் முதல் உலகப் போருக்கு வித்திட்டன. எனவே இனி ஐரோப்பியர்களின் முன் இருந்த பிரச்சினைகளைப் பற்றியும், அமைதியைக் காக்க அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பற்றியும் கவனிப்போம்.

5. ஐரோப்பியர்களின் அமைதிக்கான முயற்சிகளும் பிரச்சினைகளும்

இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் வளர்ச்சியடைந்த நாடுகளும், வல்லரசு நாடுகளும் தங்களிடையே கூட்டுறவை ஏற்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புக்களேயும், அமைதியை நிலைநாட்டுவதற்கான வாய்ப்புக்களேயும் பெற்றிருந்தன. இருப்பினும் வளர்ச்சியடைந்த வல்லரசுகள் பின்தங்கிய மக்களுடனும், உலகில் வளர்ச்சியடையாத நாகரிகமற்ற பகுதிகளில் வாழும் மக்களுடனும் போரிட்டுக் கொண்டிருந்தன. இப்போர்கள் யாவும் பின்தங்கிய நாடுகளின் முன்னேற்றத்திற்காகவே நடத்தப்பட்டனவாக வல்லரசுகள் கருதின. எனவே 1871ஆம் ஆண்டிற்குப் பினனர் பின்தங்கிய நாடுகளை முன்னேற்றுவதற்காக ஐரோப்பியர்கள் அந்நாட்டு மக்களுடன் மேற்கொண்ட போர்களைத் தவிர, ஐரோப்பாவில் பெரும்பாலும் போர்களே இல்லை எனலாம். இத்துடன் வளர்ச்சி யடைந்த ஐரோப்பிய நாடுகள் உலகின் பல பகுதிகளில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தியதன் மூலம், உலக அமைதியை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்களும் இக்காலத்தில் அதிகரித்தன எனலாம்.

மேலும் இக்காலத்தில் கூட்டுறவு முறையில் அமைதியை நிலைநாட்ட முடியும் என்பதைத் தங்கள் நடவடிக்கைகளின் மூலம் வல்லரசு நாடுகள் எடுத்துக் காட்டின. உதாரணமாக 1878-ல் ஐரோப்பிய நாடுகள் பெர்லினில் ஒன்றுகூடி பெர்லின் உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. இதனால் இரஷ்ய-துருக்கியப் போர் தடை செய்யப்பட்டது. இரஷ்யாவிற்கும், பிரிட்டன், ஆஸ்திரியா-ஹங்கேரி ஆகிய நாடுகளுக்குமிடையே நடைபெறவிருந்த மிகப் பெரிய போர் தவிர்க்கப்பட்டது. அடுத்து 1884, 1885 ஆம் ஆண்டுகளில் பெர்லினில் கூட்டப்பட்ட ஐரோப்பிய நாடுகளின் மாநாட்டில் ஆப்பிரிக்காவைக் கைப்பற்றி அந்நாட்டின் பகுதிகளை ஐரோப்பிய நாடுகள் எவ்வாறு பகிர்ந்து கொள்ள வேண்டுமென்பதற்கான விதிமுறைகளை வகுத்து அவற்றைப் பின்பற்றின. இதனால் ஆப்பிரிக்காவை ஐரோப்பியர்கள் பகிர்ந்து கொண்டபொழுது இவர்களிடையே எவ்வித மோதல்களும் ஏற்படவில்லை. இதனையடுத்து ஆஸ்திரியா 1885-ல் ஐரோப்பிய வல்லரசுகளின் வேண்டுகோளுக் கிணங்க பல்கேரியா, செர்பியா ஆகிய நாடுகளுடன் தான் நடத்தவிருந்த போரை நிறுத்திக்கொண்டது. இதன் பின்னர் பிரிட்டன், பிரான்சு, இத்தாலி, இரஷ்யா ஆகிய

நாடுகள் ஒத்துழைத்து கிரீஸிற்கும், உதுமானியப் பேரரசுக்கு மிடையே நடைபெறவிருந்த போரைத் தடுத்து நிறுத்தின. அடுத்து 1900-ல் ஐரோப்பிய வல்லரசுகள் ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா முதலிய வல்லரசுகளுடன் சேர்ந்து கொண்டு சீனாவில் பாக்ஸர் இயக்கத்தை நசுக்கின. பின்னர் அமெரிக் காவின் ஆலோசனையின் பேரில் சீன நாட்டில் சீனர்களின் ஒற்றுமையைக் குலைக்காமல் இருப்பதற்கு ஐரோப்பிய வல்லரசுகள் உடன்பட்டன. அத்துடன் சீனாவில் எல்லா நாடுகளும் வியாபாரம் செய்ய அனுமதிக்கப் பட்டன.

இதற்கிடையில் அமெரிக்க நாடுகளில் அமைதியை நிலைநாட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அமெரிக்க நாடுகள் தங்களிடையே ஏற்படக்கூடிய தகராறு களைப் போரிடாமல் கலந்து பேசித் தீர்த்துக்கொள்ள ஐக்கிய அமெரிக்கா அகில அமெரிக்க மாநாடு (Pan-American Conference) ஒன்றை 1881-ல் கூட்டியது. பல இலத்தீனமெரிக்க நாடுகளுக்கு இம்மாநாட்டில் கலந்துகொள்ள அழைப்புக்கள் அனுப்பப்பட்டன. இத்தகைய மாநாடுகள் முதன் முதலில் 1899-ல் வாஷிங்டனி (Washington)லும், பின்னர் 1901-ல் மெக்ஸிகோ (Mexico) நகரத்திலும், அடுத்து 1906-ல் ரியோ-டி-ஜெனிரியோ (Rio-de-Janeiro)விலும், நான்காவதாக 1910-ல் போனெஸ் அய்ரஸ் (Buenos Aires) லும் கூட்டப்பட்டது.

வேறு முக்கிய காரணங்களுக்காகப் பன்னாட்டு நிறுவனங்கள் பல நிறுவப்பட்டன. இதன் காரணமாக நாகரிக வளர்ச்சி யாடைந்த உலக நாடுகள் அனைத்தும் 1864-ல் நிறுவப்பட்ட செஞ்சிலுவைச் சங்கத்தில் (Red Cross Society) சேர்ந்தன. பின்னர் 1875-ல் முப்பது நாடுகள் சேர்ந்து உலகத் தந்தி நிறு வனம் (Universal Telegraph Union) என்ற ஒன்றை ஏற்படுத் தின. இருபத்திமூன்று நாடுகள் அதே ஆண்டில் மெட்ரிக் அளவு முறையைப் பயன்படுத்த இசைந்தன. ஏறத்தாழ அறுபது நாடுகள் ஒன்று சேர்ந்து 1878-ல் உலகத் தபால் நிறுவனத்தைத் (Universal Postal Union) தோற்றுவித்தன. இதன் தலைமையகம் ஸ்விட்சர்லாந்து நாட்டிலுள்ள பெர்னி (Berne)யில் நிறுவப்பட்டது. இதனையடுத்து 1883-ல் பத்தொன் பது நாடுகள் கூடித் தங்களிடையே நட்புறவை வளர்ப்பற் காகப் பல விதிமுறைகளை வகுத்து அவற்றை அங்கீகரித்தன. அடுத்து 1887-ல் பதினைந்து நாடுகள் ஒன்றுகூடி நூலாசிரியர் உரிமைச் சட்டங்களைத் (Copyright Laws) தயார் செய்து அவற்றை ஒரே மாதிரியாகப் பின்பற்றுவதாக உறுதிமொழி யளித்துக் கையொப்ப மிட்டன.

இதுபோலவே உலக நாடுகளிடையே ஏற்படும் தகராறு களை நியாயமான முறையில் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம், வளர்ச்சியடைந்த நாடுகளிடையே ஏற்பட்டது. இதனால் ஐக்கிய அமெரிக்கா அலபாமா (Alabama)வின் மீது தங்களுக்குள்ள உரிமையை 1871–1872-லும், பெர்ரிங் கடலைப் பயன்படுத்துவதில் தங்களுக்கிடையே ஏற்பட்ட கருத்து வேற்றுமைகளை 1892லும், அலாஸ்கா (Alaska) கனடா ஆகிய பகுதிகளுக்கிடையே இருந்த எல்லைத் தகராறுகளை 1903–லும் கூடிப் பேசித் தீர்த்துக் கொண்டது. இதனால் ஆங்கில மொழியைப் பேசிவந்த இரு வளர்ச்சியடைந்த நாடுகளுக் கிடையே ஏற்படவிருந்த பெரும் போர்கள் தவிர்க்கப்பட்டன. அதனால் மனிதர்கள் எண்ணிப் பார்க்க முடியாத அளவிற்கு நன்மைகளும் ஏற்பட்டன.

இதனையடுத்து ஜெர்மனி, ஸ்பெயின் ஆகிய இரு ஐரோப்பிய நாடுகளுக்கிடையே குடியேற்ற அமைப்புக்களின் காரணமாக ஏற்பட்ட தகராறுகளை 1886-ல் போப் பதிமூன்றும் லியோ (Pope Leo XIII) பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்து வைத்தார். அடுத்து சிலி (Chile), அர்ஜென்டினா (Argentina) ஆகிய இரு நாடுகளுக்கிடையே ஏற்பட்ட எல்லைத் தகராறுகளை பிரிட்டனின் மன்னரான ஏழாம் எட்வர்டு (Edward VII) 1902-ல் பேச்சு வார்த்தைகளின் மூலம் தீர்த்து வைத்தார். பின்னர் 1909ஆம் ஆண்டில் ஜெர்மனியும், பிரான்சும் மொராக்கோ நாட்டின் காரணமாகத் தங்களுக்கிடையே ஏற்பட்ட கருத்து வேற்றுமை களைத் தீர்த்துக்கொள்ள உலக நாடுகளின் உதவியை நாடின.

இவ்வாறு அரசாங்கங்களின் பேச்சுவார்த்தைகளும், மாநாடு களும், கூட்டுறவு முயற்சிகளும், குறிப்பாக அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய நாடுகளில் அப்பொழுது நடைபெற்ற மாநாடுகளும் உலக நாடுகள் தங்களிடையே நட்புறவை வளர்க்க வேண்டுமென்ற கருத்தை மக்களிடையே வலிமை யடையச் செய்தன.

மேலும் உலகின் பல்வேறு பகுதிகளிடையே வாழ்ந்த மக் களிடையே காணப்பட்ட தேசியக் கருத்துகள் பத்தொன் பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொழில் வளர்ச்சி ஏற்பட் டதன் காரணமாகவும், இருப்புப் பாதைகள், நீராவிக் கப்பல்கள், தந்தி, தொலைபேசி ஆகிய நவீன வசதிகளின் உதவி யாலும் பரிமாறிக்கொள்ளப்பட்டன. உலகின் ஒரு பகுதியில் வாழும் மக்களுக்கும், மற்றொரு பகுதியில் வாழும் மக்களுக்கும் இடையே தொடர்புகள் இருக்கவேண்டுமென்ற எண்ணம்

மக்களிடையே வளர ஆரம்பித்தது. மேலும் ஒரு நாடு தன்னுடைய நாட்டின் வியாபார உறவை மற்ற நாடுகளுடன் வளர்த்துக் கொள்ள விரும்பியது. மேலும் தாங்கள் வெளிநாடு களுக்குச் சென்றுவர வேண்டுமென்ற கருத்தும் மக்களிடையே வெகுவாகப் பரவி வந்தது.

இத்துடன் பொருளாதாரத் துறையில் வங்கிகளும், தன்னாட்சி நிறுவனங்களும், தொழில், வியாபாரம் ஆகிய இரண்டும் பன்னாட்டு அடிப்படையில் இயங்கவேண்டுமென வலியுறுத்தி வந்ததுடன், இவ்விரு துறைகளும் பல நாடுகளில் தங்கள் கிளைகளை அமைத்துத் தங்களது வெற்றிக்காகப் பாடுபட்டு வந்தன. உலகத் தொழிலாளர்களிடையே காணப்படும் பிரச்சினைகளுக்கு உலகத் தொழிலாளர் சங்கங்கள் மூல மாகவும், மற்ற பிற தொழிலாளர்களின் அமைப்புக்களின் மூலமாகவும் தீர்வு காணத் தொழிலாளர்கள் விரும்பினர். இத ஞல் உலகத் தொழிலாளர்களின் தொழிற் சங்க அமைப்புக்கள் வலிமைபெறத் தொடங்கின. இவ்வளர்ச்சிகளின் காரணமாகப் பன்னாட்டு வேளாண்மைப் பள்ளி (International Agricultural Institute) ஒன்று ரோம் நகரத்தில் 1905-ல் நிறுவப்பட்டது. இவ்வாறே பாராளுமன்ற அங்கத்தினர்களைப் பெற்றிருந்த நாடுகள் ஒன்று சேர்ந்து, 1889-ல் பன்னாட்டுப் பாராளுமன்றச் சங்கம் ஒன்றை ஏற்படுத்தின. இதனுல் பெண்களும், தாங்கள் வாக்குரிமை பெறுவதற்காகப் பன்னாட்டுப் பெண்கள் மாநாடுகளைக் கூட்டத் தொடங்கினர்.

அடுத்து மதத்துறையிலும் இவ்வாறு பன்னாட்டுணர்வுகள் ஏற்படத் தொடங்கின. இதனுல் நூற்றுக்கு மேற்பட்ட பிரிவு களைக் கொண்ட புராட்டஸ்டண்டு கிறிஸ்தவர்கள் உலக மாநாடுகளைக் கூட்டி, தங்கள் பிரச்சினைகளை விவாதித்ததுடன், தங்கள் கருத்துக்களையும் பரிமாறிக் கொண்டனர். ஒரே வகை யான கோட்பாடுகளைப் பின்பற்றவேண்டுமென்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்த கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்காகவும், தங்கள் மதத் தைப் பரப்பப் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை விவாதிப் பதற்காகவும் 1881 ஆம் ஆண்டில் பல உலக மாநாடுகள் கூட்டினர். உலகின் பல பாகங்களிலுமிருந்த கத்தோலிக்க மத போதகர்களும், திருச்சபை அதிகாரிகளும் இத்தகைய மாநாடு களில் கலந்துகொண்டனர். இவர்களுடைய மாநாடுகள் உலகின் முக்கிய நகரங்களான பாரிஸ், இலண்டன்'

ஜெருஸலம், மாண்ட்ரீல் போன்ற இடங்களில் கூட்டப் பட்டன.

இதே போன்று அறிவியல் வளர்ச்சிக்காக உயிரிய லறிஞர்கள், வேதியியல் வல்லுநர்கள், பௌதிகப் பேராசிரியர் கள் வரலாற்றுசிரியர்கள், பொருளாதார நிபுணர்கள் போன்ற அறிஞர்கள் அடிக்கடி ஒன்றுகூடித் தத்தம் துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சிகள் குறித்தும், மேலும் தங்கள் துறைகளை மேம்படுத்துவதற்கு என்னென்ன செய்யவேண்டுமென்பது குறித்தும் விவாதித்து வந்தனர். கல்வித் துறையில் பல்கலைக் கழகங்களும் பேராசிரியர்களையும், மாணவர்களையும் தங்க ளுக்குள் பரிமாறிக் கொண்டன. இதனுல் கல்வித்துறை வளர்ச்சியடைந்ததுடன் உலக மக்களிடையே பன்னுட் டுணர்வும் வளர்ச்சியடைந்தது.

இவ்வாறு பல துறைகளிலும் பன்னுட்டுணர்ச்சிகள் மக்க ளிடையே வளர்ச்சியடைந்தவுடன் 1878-க்குப் பின்னர் உலக நாடுகளிடையே அமைதியை நிலைநாட்டுவதற்காகப் பல அமைதி இயக்கங்கள் தோன்ற ஆரம்பித்தன. இவற்றின் வளர்ச்சியின் காரணமாகவும், பெருமுயற்சியின் காரணமாகவும் அமைதி மாநாடுகள் பல கூட்டப்பட்டன. இம்மாநாடுகளில் ஐரோப்பிய நாடுகளிடையே ஏற்பட்ட போட்டியின் காரண மாகப் பல புதிய பிரச்சினைகள் தோன்ற ஆரம்பித்தன. இதன் காரணமாக ஐரோப்பிய நாடுகள் தங்கள் வலிமையை நிலை நாட்டுவதற்காகப் பல இரகசிய ஒப்பந்தங்களைச் செய்து கொண்டன. அத்தகைய ஒப்பந்தங்களின் விளைவாக ஐரோப்பிய நாடுகள் இரண்டு அணிகளாகப் பிரிந்தன. இவ்விரு அணிகளுக்கிடையே ஏற்பட்ட போட்டி மனப் பான்மையின் காரணமாக ஏற்பட்ட மோதல்கள் முதல் உலகப் போரில் முடிந்தன. இதனுல் அமைதி இயக்கங்கள் எங்கெங்கு எவ்வெவ்வாறு ஏற்பட்டன என்பதையும், அவற்றின் விளைவு களையும் இனிக் கவனிப்போம்.

பன்னுட்டுணர்வு உலக மக்களிடையே வளர்ச்சியடைந் ததன் காரணமாக வல்லரசுகள் பல அமைதி நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்தன. இதனுல் பல அமைதி இயக் கங்கள் 1878-க்குப் பின் உலகின் வளர்ச்சி யடைந்த நாடுகளில் உருப் பெறத் தொடங்கின. இவ்வமைதி இயக்கங்களின் பிரதி நிதிகள் பல பன்னுட்டு மாநாடுகளைக் கூட்டி அமைதியைக்

காப்பதற்கான வழிமுறைகளை ஆராயலாயின. இத்தகைய பன்னாட்டமைதி மாநாடுகள் 1889ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஆண்டுதோறும் உலகின் பல பகுதிகளில் நடைபெறத் தொடங்கின. அமைதி இயக்கங்களுக்குப் பெரிதும் பாதுகாப்பும், ஆதரவும் அளித்தவர்கள் தொழிலதிபர்களேயாவர். ஐக்கிய அமெரிக்காவில் இரும்புத் தொழிலில் சிறப்புப் பெற்று விளங்கிய ஆன்டிரூ கார்னிஜ் (Andrew Carnegie) என்ற ஸ்காட்லாந்து அமெரிக்கர் அமைதியின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பிரச்சாரம் செய்வதற்காக அதிக அளவில் நன்கொடை வழங்கினர்; ஹேக் (Hague) என்ற இடத்தில் "அமைதிக் கோயில்" (Temple of Peace) ஒன்றைக் கட்டுவித்தார். வாஷிங்டனில் அமைதி மாநாடுகள் நடத்துவதற்காக ஓர் அரண்மனையைக் கட்டினர். ஆல்ஃப்ரட் நோபிள் (Alfred Nobel) என்ற ஸ்வீடன் நாட்டு விஞ்ஞானி தன்னுடைய வாழ்க்கையின் பெரும்பகுதியை இவ்வமைதிப் பணிக்காகச் செலவிட்டார்.

இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் நாகரிகத்தில் வளர்ச்சி யடைந்த நாடுகளில் வாழ்ந்த மக்கள் போர் மிகக் கொடுமையான தென்றும், எதிர்காலத்தில் இன்னும் பல ஆண்டுகளுக்குப் போர் ஏற்படாது என்றும் கருதினர். இந்நிலையில் இந்நாடுகளில் இருந்த செல்வந்தர்கள் தங்கள் பெரும் செல்வத்தை வெளிநாடுகளில் முதலீடு செய்தனர். பலர் தங்கள் செல்வத்தை வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபடுத்தினர். இதனால் சில சமயங்களில் இவர்கள் வெளிநாடுகளில் தங்கள் உரிமைகளைப் பெற வேண்டிப் போரிட நேரிட்டது. இவர்கள் பெரும் செல்வந்தர்களாகவும் அரசியலில் அதிக ஆதிக்கம் உடையவர்களாகவும் இருந்தனர். எனவே இச்செல்வந்தர்கள் வெளிநாடுகளில் செய்த எதேச்சாதிகாரச் செயல்களை எல்லாம் இவர்கள் நாட்டு அரசாங்கம் உதாசினப்படுத்தியது. தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளிகளும் பல வகைகளில் இலாபமடைந்தனர். போர்கள் ஏற்படாமையால் தொழில்கள் பாதிக்கப்படவில்லை. எனவே தொழிற்சாலைகளில் அதிக வேலையும். கூலியும் கிடைத்தது. மேலும் இச்சமயத்தில் பல தொழிலாளர்கள் சோஷியலிசக் கருத்துக்களால் கவரப்பட்டனர். எனவே சில சமயங்களில் இவர்கள் தங்கள் ஒற்றுமையின் மூலமாகவும், பிற தொழிலாளர்களின் ஒத்துழைப்பின் மூலமாகவும் எந்த நாடேனும் வெளி நாட்டுடன் போர் தொடுத்தால், போர் தொடுக்கும் நாட்டின் அரசாங்கத்தைத் தாங்கள் மாற்றியமைக்க முற்பட நேரிடும் எனக்கூறி அச்சுறுத்தி வந்தனர். இந்நிலையில் சிந்தனையாளர்களும் மிகத் தீவிர

மாகச் செயல்படத் தொடங்கினர். இதன் காரணமாக இவர்கள் போரினால் ஏற்படும் தற்காலிக நன்மைகளை ஏற்றுக் கொள்ளும் நிலையிலில்லை. மேலும் திருச்சபைகளும் வழக்க மாக அமைதியை நிலைநாட்டுவதில் கண்ணுங் கருத்துமாக இருந்தன.

இவ்வாறு அமைதிக்காக வளர்ச்சியடைந்த நாடுகள் அனைத்திலுமிருந்த மக்கள் பாடுபட்டுக் கொண்டிருந்த பொழுது, சில இன்னல்களும் இவர்களுக்கு ஏற்பட்டன. ஐரோப்பாவி லிருந்த வல்லரசுகளும் வளர்ச்சியடைந்த நாடுகளும் தற்காப்பு என்ற பெயரில் தத்தம் நாடுகளில் இராணுவப் போர்க்கருவி களையும், கப்பற் படையையும் பெருக்கிக் கொண்டேயிருந்தன. இது அமைதியைக் காக்க வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட் டிருந்த மக்களுக்கு ஓர் இடையூருகவும், பேரதிர்ச்சியாகவும் இருந்தது. ஆனால் படைப்பெருக்கத்தில் நம்பிக்கையுள்ள வர்கள் படைப் பெருக்கம் தற்காப்பு நடவடிக்கையாக இருப்ப தோடு மட்டுமல்லாமல், படையெடுப்பு முயற்சியில் ஈடுபடும் நாடுகளுக்கு அச்சத்தை ஏற்படுத்தி அமைதியைக் காப்பதற் காகவும் உதவும் எனக்கூறி வந்தனர். இருப்பினும் அமைதியில் அதிக நம்பிக்கையுடையவர்கள் படைப் பெருக்கத்தைக் கண்டித்துக் கொண்டே யிருந்தனர். இது இவ்வாறுஇருக்க, மற்றொரு புறம் மக்கள் பலர் வளர்ந்துவரும் வரிச்சுமையைக் குறை கூறத் தொடங்கினர், மேலும் இவர்கள் 'படைப்பெருக்கம் போருக்கு வழிவகுக்கும்' என்று கூறிவந்தனர். இத்துடன் படைப்பெருக் கத்தின் காரணமாகப் போர் ஏற்பட்டால் தொழில் வளர்ச்சியின் காரணமாக அது மிகப் பெரிய அளவில் இருக்குமென்றும், ஐரோப்பாவையும், மேற்கத்திய நாகரிகத்தையும் அழித்துவிடு மென்றும் இவர்கள் வாதிட்டனர். எனவே போரின் அழிவுகளி லிருந்து மக்களைக் காப்பாற்ற ஒரே வழி அமைதியை நிலை நாட்டுவதே என்றும், அப்படி ஏதாவது ஒரு காரணத்தினால் இரு நாடுகளுக்கிடையே தகராறு ஏற்படின் அவற்றை உலக நீதி மன்றத்தின் வாயிலாகத் தீர்த்துக் கொள்வதே சாலச் சிறந்தது எனவும் வாதிட்டனர்.

அமைதியின் முக்கியத்தை விளக்குவதற்காகவும், அதனைக் காப்பதற்குப் பின்பற்றவேண்டிய முறைகளை விவாதிப்பதற்கா கவும், இரஷ்யாவின் ஸார் மன்னரான இரண்டாம் நிகோலஸ் (Nicholas II), நெதர்லாந்து நாட்டின் அரசியான வில்ஹெல்மினா (Queen Wilhelmina) வின் ஆலோசனையின் பேரில் ஹேக் (Hague) என்ற இடத்தில் 1899-ல் ஒரு பெரிய அமைதி

மாநாட்டைக் கூட்டினர். "அமைதியைக் காப்பதே பன்னாட்டுத் தேசிய அரசுகளின் முக்கிய கொள்கையாக இருக்க வேண்டும்" என இரஷ்ய அரசர் கூறினர். ஐரோப்பா, ஆசிய ஆகிய நாடுகளிலிருந்த வல்லரசு நாடுகளும், ஐக்கிய அமெரிக்கா, மெக்ஸிகோ ஆகிய நாடுகளுமாக மொத்தம் 26 நாடுகள் இம் மாநாட்டில் கலந்து கொண்டன. ஆனால் ஒவ்வொரு நாடும் எந்த அளவில் படைகளை வைத்துக் கொள்ள வேண்டுமென்பது குறித்து இம்மாநாடு எந்தவித முடிவும் மேற்கொள்ளவில்லை. ஆனால் போர் ஏற்பட்டால் சில போர்க்கருவிகளைப் பயன்படுத்துவதைத் தடை செய்யச் சில முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், உலகநாடுகளுக்குப் பொதுவான பன்னாட்டுச் சட்டம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்றும் தங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள உலக நீதிமன்றம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்றும் இம்மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

இதனையடுத்து 1907 ஆம் ஆண்டில் ஸார் மன்னரின் அழைப்பின் பேரில் ஐக்கிய அமெரிக்கக் குடியரசுத் தலைவரான தியோடர் ரூஸ்வெல்ட் (Theodore Roosevelt) ஹேக் என்ற இடத்தில் இரண்டாம் முறையாக அமைதி மாநாட்டைக் கூட்டினர். இம்முறை 44 நாடுகள் மாநாட்டில் கலந்து கொண்டன. அமெரிக்காவிலிருந்து மட்டும் 9 நாடுகள் கலந்து கொண்டன. விவாதங்களுக்குப் பின்னர் கடல் வாணிபக் கொள்கை, தரைப் போர் ஆகியவற்றில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. சிறந்தவர்களுக்குப் பரிசு வழங்கப் பன்னாட்டு நீதிமன்றம் ஒன்றை ஏற்படுத்த பிரதிநிதிகள் அனைவரும் ஒருமனதாக ஒப்புக்கொண்டனர். மேலும் பகைமை உணர்ச்சியின் காரணமாக ஒரு நாடு மற்றொரு நாட்டின்மீது போர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முன்னர் முறையாகப் போர்ப் பிரகடனம் செய்யவேண்டுமென்றும், வெளிநாட்டுக் கடன்களை வசூலிக்கப் படைப் பலத்தைப் பயன்படுத்தக் கூடாது என்றும், கொள்கையளவில் முடிவெடுத்தனர். ஆனால் ஒவ்வொரு நாடும் எவ்வளவு இராணுவத்தை வைத்திருக்க வேண்டுமென்ற வினாவிற்கு இம்மாநாட்டுப் பிரதிநிதிகள் மீண்டும் எத்தகைய பதிலும் கூறவில்லை. இருப்பினும் எதிர்காலத்தில் இத்தகைய அமைதி மாநாடுகள் முறையாக நடத்தவேண்டுமென இம்மாநாடு பரிந்துரை செய்தது.

இம் மாநாட்டின் வாயிலாகத்தான் சில முக்கிய கொள்கைகளையும், பன்னாட்டு நீதிமன்றம் ஒன்றையும் அடிப்படையாகக்

கொண்டு ஹேக் என்ற இடத்தில் நிலையான பன்னாட்டுச் சமுதாயம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் வல்லரசுகளிடையே தோன்றியது. பலவேறுபட்ட இனத்தவர்களையும், பலவேறு மொழி, கருத்துக்கள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பின்பற்றி வந்த மக்களையும் கொண்ட ஜெர்மனியப் பேரரசு, ஐக்கிய அமெரிக்கா, ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகளில் உள்நாட்டுக் குழப்பங்கள் அதிகமின்றி, கூட்டாட்சிகள் (Fedaration) நடைபெறும் பொழுது பன்னாட்டுக் கூட்டமைப்பின் மூலம் ஏன் வெளிநாட்டுப் போரைத் தவிர்க்க முடியாது? என்ற எண்ணம் மக்களிடையே வளர்ச்சியடைந்தது. இதன் காரணமாகப் பன்னாட்டு நீதிமன்றங்கள் செயல்படத் தொடங்கின. இத்தகைய நீதிமன்றங்கள் 1901 ஆம் ஆண்டிற்கும் 1914 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் நாடுகளிடையே ஏற்பட்ட தகராறுகள் பலவற்றைத் தீர்த்து வைத்தன. இதனையடுத்து 1915 ஆம் ஆண்டில் ஹேக் என்ற இடத்தில் மூன்றாவது அமைதி மாநாடு கூட்டப்பட்டது. இம்மாநாடு பெருமளவில் பல நாடுகளின் ஒத்துழைப்பையும், அமைதியையும் மேம்பாடு அடையச் செய்வதற்குப் பாடுபட்டது.

ஆனால் உலகநாடுகளிடையே தங்கள் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்பனை செய்வதற்காக ஏற்பட்ட போட்டியைக் காட்டிலும், இந்நாடுகளிடையே அமைதியைக் காப்பதற்காக மேற்கொண்ட ஒத்துழைப்பு மிகக் குறைவாகவே காணப்பட்டது. உலக நாடுகளிடையே ஏற்பட்ட போட்டி பெரும்பாலும் தேசியக் கொள்கையின் காரணமாகவே ஏற்பட்டது. தேசியக் கொள்கைகள் வளர்ச்சியடைந்த பொழுதுதான் இத்தாலியும், ஜெர்மனியும் ஐக்கியமடையப் பல போர்கள் ஏற்பட்டன. ஆனால் இத்தகைய போர்கள் 1870 ஆம் ஆண்டிற்குப் பின்னர் விரும்பத் தகாதனவாகிவிட்டன. ஆனால் இத் தேசியக் கருத்துக்களின் காரணமாக 1870 க்குப் பின்னர் படைகளைப் பெருக்குதல், சுங்கவரிகளை வசூலித்தல், ஏகாதிபத்தியக் கொள்கைகளின் காரணமாகத் தங்கள் ஆதிக்கத்தைப் பெருக்குதல், தங்கள் பெருமையை நிலைநாட்டுதல் ஆகியவற்றில் நாடுகளிடையே கடுமையான போட்டிகள் ஏற்பட்டன. இதனால் ஐரோப்பாவில் பிரான்சுக்கும், ஜெர்மனிக்கு மிடையே இருந்த நட்புறவுகள் மறைந்து, இவ்விரு நாடுகளுக்கு மிடையே பகைமை வளர்ச்சியடைந்தது. இவ்விரு நாடுகளும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒன்றையொன்று மிகக் கடுமையாக எதிர்க்கத் தொடங்கின.

இப் பகையுணர்வு உதுமானியப் பேரரசில் மட்டுமல்லாமல் ஆஸ்திரியா-ஹங்கேரி ஆகிய நாடுகளிலும் வளர்ந்தது.

இக் காலத்தில் ஏகாதிபத்தியம் பொருளாதாரத்தைவிட, தேசியக் கொள்கைகளை மிக முக்கிய அடிப்படையாகக் கொண்டிருந்தது. இதனால் ஐரோப்பிய நாடுகளிடையே கருத்து வேறுபாடுகளும், பொறாமையும் ஏற்பட்டன. ஐரோப்பிய வல்லரசு நாடுகளிடையே இதனால் நேரிடையாகப் போர்கள் ஏற்படாவிடினும் 1898ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஸ்பானிஷ் அமெரிக்கப் போருக்கும், 1899 முதல் 1902 வரை நடைபெற்ற போயர் போருக்கும், ஜப்பானுக்கும் இரஷ்யாவிற்குமிடையே 1904-1905 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற போருக்கும் இத்தகைய தேசியக் கொள்கைகளே தூண்டுதலாக இருந்தன. மேலும் ஐரோப்பாவிலும் பிற இடங்களிலும் வலிமையற்ற நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு வல்லரசு நாடுகள் போட்டியிட்டன. உதுமானியப் பேரரசு, சீனப் பேரரசு ஆகிய இரு பெரிய நாடுகளும் வலிமையற்ற நாடுகளாயின. போர்ச்சுகல், நெதர்லாந்து, பெல்ஜியம் ஆகிய வலிமையற்ற ஐரோப்பிய நாடுகள் வெளிநாடுகளில் பெற்றிருந்த ஆதிக்கத்தைச் சிறிது சிறிதாக இழக்கத் தொடங்கின.

தேசியக் கருத்துக்களுக்கும், ஏகாதிபத்தியக் கருத்துக்களுக்குமிடையே ஏற்பட்ட போட்டிகளின் காரணமாக ஐரோப்பிய "வல்லமைச் சமநிலை"(Balance of Power) பாதிக்கப்பட்டது. குறிப்பாக 1900ஆம் ஆண்டிற்குப் பிறகு இவ்வல்லமைச் சமநிலை பாதிக்கப்படுவதற்கு முன்னர் ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி இத்தாலி ஆகிய மூன்று நாடுகளும் முக்கூட்டு ஒப்பந்தம் (Triple Alliance) ஒன்றைச் செய்து கொண்டிருந்தன. பிரான்சும், இரஷ்யாவும் இரட்டைக்கூட்டு ஒப்பந்தம் (Dual Alliance) ஒன்றைச் செய்து கொண்டிருந்தன. ஆனால், பிரிட்டன் மட்டும் இவ்விரு கூட்டுகளிலும் சேராமல் தனித்திருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டினிறுதியில் ஒப்பந்தம் செய்து கொண்ட ஐரோப்பிய நாடுகள் பிரிட்டனுக்கு எதிராக ஒன்று கூடி ஒப்பந்தம் செய்துகொள்ளத் தொடங்கின. குறிப்பாக, சீனாவிலும், போயர் போரிலும் ஐரோப்பிய நாடுகள் பிரிட்டனுக்குத் தங்கள் ஒத்துழைப்பைத் தரவில்லை. எனவே, பிரிட்டன் தன்னுடைய வலிமையையும், புகழையும் நிலை நாட்டிக் கொள்வதற்காகப் பல ஆண்டுகளாகப் பின்பற்றி வந்த தன்னுடைய தனித்திருந்த தன்மையை விட்டுவிட்டு வெளிநாடுகளில் சில நண்பர்களின் உதவியைப் பெற முயற்சி

செய்தது. ஐரோப்பிய நாடுகளின் நட்புறவைப் பெருக்குவதில் பிரிட்டனுக்குத் தொடக்கத்தில் பல சிரமங்கள் இருந்தன. இந் நிலையில் கடற்படை, வியாபாரம் ஆகியவற்றின் காரணமாக ஜெர்மனியுடனும், ஏகாதிபத்தியக் கொள்கையின் காரணமாக ஆப்பிரிக்காவில் பிரான்சுடனும், தூரக்கிழக்கு நாடுகளில் இரஷ்யாவுடனும் பிரிட்டனுக்கு எதிர்ப்பு வளர்ந்திருந்தது. எனவே பிரிட்டன் ஏதாவது ஒரு ஐரோப்பிய வல்லரசுடன் நட்புறவை வளர்த்துக்கொள்ள விரும்பியது. இரட்டைக் கூட்டு ஒப்பந்தம் செய்துகொண்ட பிரான்சு, இரஷ்யா ஆகிய இரு நாடுகளைக் காட்டிலும், ஜெர்மனியுடன் நட்புறவு வைத்துக்கொள்வது மிக எளிதாக இருப்பதுடன், தனக்குச் சில நன்மைகளையும் ஏற்படுத்துமென நினைத்த பிரிட்டிஷ் அரசாங்கம் ஜெர்மனியின் அரசாங்கத்தின் நடவடிக்கைகளைப் புகழ ஆரம் பித்தது. இதனல் இவ்விரு நாடுகளுக்குமிடையே நட்புறவு வளர்ச்சி யடைந்ததுடன் ஓர் உடன்பாடும் ஏற்பட்டது. ஜெர்மனி ஐரோப்பாவிலேயே மிக வலிமை வாய்ந்த வல்லரசாக மாறிவிட்டது எனப் பிரிட்டன் நினைத்ததும் இவ் வுடன்பாட் டிற்கு முக்கிய காரணமாகும்.

நாளடைவில் ஜெர்மனி பிரிட்டனைத் தன்னுதிக்கத்துக்கு உட்படுத்த எண்ணியது. எனவே தன்னுடைய முயற்சியால் ஏற்படுத்தப்பட்ட இக் கூட்டு ஒப்பந்தத்தில் பிரிட்டனும் சேர வேண்டுமென ஜெர்மனி பிரிட்டனை வலியுறுத்தியது. ஆனல் பிரிட்டிஷ்காரர்கள் இதற்கு உடன்படவில்லை. இதனல் பிரிட்டிஷ்காரர்களுக்கும் ஜெர்மனியர்களுக்கு மிடையே ஏற்பட் டிருந்த ஒப்பந்தம் முடிவடைந்ததுடன், பிரிட்டனும் ஜெர் மனிக்கு எதிராக வேறு நாடுகளுடன் நட்புறவு வைத்துக் கொள்ள முயற்சி செய்தது.

ஆசியாவில் இரஷ்யர்களின் வளர்ச்சியைத் தடை செய்வ தற்காக, பிரிட்டன் 1902ஆம் ஆண்டில் ஜப்பானுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டது. இதன்படி ஜப்பான் அல்லது பிரிட்டன், கொரியா அல்லது சீனவுடன் போரில் ஈடுபட்டால் போரில் ஈடுபடாத நாடு போரில் ஈடுபட்ட நாட்டிற்கு இராணுவ உதவி அளிக்க இருநாடுகளும் ஒப்புக் கொண்டன. இவ் வொப்பந்தம் 1905ல் சில மாற்றங்கள் செய்யப்பட்டு மேலும் பத்தாண்டுகட்குப் புதுப்பிக்கப்பட்டது. இதன்படி இந்தியாவில் பிரிட்டனை ஏதாவதொரு நாடு தாக்கினல் ஜப்பா னும், தூரக்கிழக்கு நாடுகளில் ஜப்பானை ஏதாவதொரு நாடு

தாக்கினுல் பிரிட்டனும் சேர்ந்து பகைநாட்டைத் தாக்க இவ்விரு நாடுகளும் ஒப்புக்கொண்டன.

ஆசியாவில் ஜப்பானுடைய உதவியுடன் தனக்குப் பாதுகாப்பைத் தேடிக்கொண்ட பிரிட்டன், ஃபிரான்சின் ஒத்துழைப்புடன் ஆப்பிரிக்காவில் தன்னுடைய ஆதிக்கத்தைப் பாதுகாத்துக் கொள்ள எண்ணி ஃபிரான்சுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள பிரதிநிதிகள் சிலரை அனுப்பியது. இவர்கள் ஜெர்மனியின்மீது விரோத மனப்பான்மை கொண்டிருந்த ஃபிரான்சின் வெளிவிவகார அமைச்சரான தியோபில் டெல்கஸ் (Theophile Delcasse) என்பவரால் சிறப்பாக வரவேற்கப்பட்டனர். மேலும், டெல்கஸ் ஜெர்மனிக்கு எதிராக மற்ெருரு நட்பு நாட்டினை ஐரோப்பாவில் பிரான்சு பெற இதனை ஒரு வாய்ப்பாகக் கருதினுர். பிரிட்டன், ஃபிரான்சு ஆகிய இரு நாட்டு அரசுகளின் முயற்சியின் காரணமாக 1904ஆம்ஆண்டில் இவ்விரு நாடுகளுக்கிடையே பல நட்புறவு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. இவ்வொப்பந்தங்கள் எகிப்தில் பிரிட்டனும், மொராக்கோவில் ஃபிரான்சும் மற்ற ஐரோப்பிய நாடுகளின் இடையீடு இல்லாமல் சுதந்திரமாக ஆதிக்கம் செலுத்துவதற்குச் சாதகமாக இருப்பதற்கும், ஃபிரான்சு, பிரிட்டன் ஆகிய இரு நாடுகளின் மக்களுக்கும் அரசுகளுக்குமிடையே கூட்டுறவு சிறப்பாக வளர்ச்சியடைவதற்கும் வழிவகுத்தன.

இதற்கிடையில் டெல்கஸ், ஜெர்மனிக் கெதிரான தன் கொள்கையின் காரணமாக, ஃபிரான்சுக்கும் இத்தாலிக்குமிடையே வெகு நாள்களாக இருந்துவந்த பகைமையுணர்ச்சி மறைவதற்குப் பாடுபட்டார். இதனுல் 1900-ல் இத்தாலி, ஃபிரான்சு ஆகிய இரு நாடுகளின் பிரதிநிதிகளும் ஒன்றுகூடிக் கலந்தாலோசித்தனர். இதன்பயனுக டூனிஸ், ஃபிரான்சின் பாதுகாப்பின்கீழ் இருப்பதையும், மொராக்கோ ஃபிரான்சின் ஆதிக்கத்தின்கீழ் இருப்பதையும் இத்தாலி அங்கீகரித்தது. இதற்குக் கைம்மாருக திரிபோலி (Tripoly),சிரெனுய்கா (Cyrenaica) ஆகிய இரு பகுதிகளிலும் தன் விருப்பப்படி இத்தாலி செயல்படுவதை ஃபிரான்சு அங்கீகரித்தது. பின்னர்,1902ஆம் ஆண்டில் இவ்விரு நாடுகளுக்கு மிடையே நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பயனுக எந்த ஒரு நாடாவது ஃபிரான்சின்மீது போர்தொடுத்தால் அல்லது ஃபிரான்சு எந்த ஒரு நாட்டின்மீதேனும் போர் தொடுத்தால் இத்தாலியும், இத்தாலியின் மீது எந்த ஒரு நாடாவது போர் தொடுத்தால் ஃபிரான்சும் நடுநிலை வகிக்க ஒப்புக் கொண்டன. ஃபிரான்சின் குடியரசுத்

தலைவர் 1904ஆம் ஆண்டில் இத்தாலிக்கு வருகை புரிந்தார். அதன் பயனாக இவ்விரு நாடுகளுக்கு மிடையே ஏற்பட்ட ஒப்பந்தங்கள் மேலும் வலுவடைந்தன. ஃபிரான்சின் கவனத்தைத் திசை திருப்ப ஜெர்மனியின் பேரரசரான இரண்டாம் வில்லியம் இரஷ்யாவை ஜப்பான்மீது போர் தொடுக்குமாறு தூண்டினர். இரஷ்யாவும் 1904ஆம் ஆண்டில் ஜப்பான் மீது போர் தொடுத்துத் தோல்வியடைந்தது. இதன் பிறகு பேரரசர் இரண்டாம் வில்லியம் இரஷ்யப் பேரரசை ப்ஜோர்கோ (Bjorko) என்ற இடத்தில் சந்தித்து பிரிட்டனுக்கு எதிராகவும், ஃபிரான்சுக்குச் சாதகமாகவும் இரஷ்ய-ஜெர்மனிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். ஆனல், இவ்வொப்பத்தத்திற்கு ஃபிரான்சு இணங்கவில்லை. மேலும் இரஷ்யா, ஜெர்மனி ஆகிய நாடுகளின் பேரரசர்களின் ஆலோசகர்களும் இவ்வொப்பந்தத்தை விரும்பாததால் இரஷ்ய-ஜெர்மனிய முயற்சி பயனற்றுப் போயிற்று.

ஆனல், இரஷ்ய-ஜப்பானியப் போரின் (1904—1905) விளைவாக ஐரோப்பாவின் வல்லமைச் சமநிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டது. ஃபிரான்சின் நட்பு நாடான இரஷ்யா பிரிட்டனின் நட்பு நாடான ஜப்பானுடன் போர் தொடுத்ததால் பிரிட்டனுக்கும் ஃபிரான்சுக்குமிடையே ஏற்பட்டிருந்த நட்புறவு ஓரளவு பாதிக்கப்பட்டது. இரஷ்யாவிற்கு எதிரான கருத்துகள் பிரிட்டனில் வளர்ச்சி யடைந்தன. இதனல் இரஷ்யர்கள் ஜெர்மனியுடன் நட்புறவு பாராட்டத் தொடங்கினர்.

ஆனல்,இரஷ்ய-ஜப்பானியப் போரின் (1904—1905) இறுதியில் இரஷ்யா தோற்கடிக்கப்பட்டதாலும், இரஷ்ய-ஜெர்மனிய ஒப்பந்தம் பலனற்றுப் போய்விட்டதாலும் ஐரோப்பிய நாடுகளின் ஒப்பந்தங்களிலும், கருத்துகளிலும் சில மாற்றங்கள் ஏற்பட்டன. ஜெர்மனியே தங்கள் தோல்விக்கு முக்கிய காரணம் என இரஷ்யா கருதியது. மிகச் சிறிய நாடான ஜப்பான் மிகப் பெரிய நாடான இரஷ்யாவைத் தோற்கடித்ததால் இரஷ்யாவைப் பற்றி பிரிட்டன் கொண்டிருந்த அச்சமும் நீங்கியது. ஃபிரான்சுடன் இரஷ்யா நட்புறவு செய்து கொண்டதால், பிரிட்டன் சில நன்மைகளையும் அடைய முயற்சிசெய்தது. இம் முயற்சியின் பயனாக 1907ஆம் ஆண்டில் இரஷ்யா, பிரிட்டன் ஆகிய இரு நாடுகளும் ஓர் உடன்பாட்டிற்கு வந்து பாரசீகம், ஆப்கானிஸ்தானம், சீன ஆகிய பகுதிகளில் சச்சரவுகளின்றித் தங்கள் ஆதிக்கத்தை உறுதிப்படுத்தின. இதனல் பிரிட்டனுக்கும் ஃபிரான்சுக்குமிடையே ஏற்பட்ட இரட்டைக்

கூட்டு ஒப்பந்தத்தைப் போன்று பிரிட்டனுக்கும், இரஷ்யாவிற்குமிடையே வேறு ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. பிரிட்டனது பெருமுயற்சியால் 1910ஆம் ஆண்டில் இரஷ்யாவும், ஜப்பானும் கூடிப் பேசித் தங்களிடையே நட்புறவை வளர்த்துக் கொள்ளத் தொடங்கின. அதனால் பிரிட்டன் 1911-ல் ஜப்பானுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது.

இதற்கிடையில் ஜெர்மனி, ஆஸ்திரியா ஆகிய நாடுகளுக்கு இத்தாலி துரோகம் செய்துவிட்டதாக ஜெர்மனியர்கள் கருதினர். ஃபிரான்சு, இரஷ்யா, ஜப்பான் ஆகிய வல்லரசுகளுடன் பிரிட்டன் ஒப்பந்தங்கள் செய்து கொண்டதால், ஆஸ்திரியாவைத் தவிர மற்ற எல்லா ஐரோப்பிய நாடுகளும் ஜெர்மனிக்கு எதிராகச் சதிசெய்வதாக ஜெர்மன் அரசாங்கம் கருதியது,

எனவே, ஜெர்மனி 1905ஆம் ஆண்டிற்கும் 1914ஆம் ஆண்டிற்கு மிடையே பல இராஜதந்திர முறைகளைப் பின்பற்றி, மற்ற நாடுகளுடன் பிரிட்டன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை முறியடிக்க முயற்சி செய்தது. தன்னுடைய முயற்சியின் முதற்படியாக ஆஸ்திரியாவைத் திருப்தியடையச் செய்து, அதன் பெருமையை உயர்த்த ஜெர்மனி பாடுபட்டது. பிறகு உதுமானியப் பேரரசுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டு, நட்புறவை வளர்த்து, உலக நாடுகளிடையே ஜெர்மனியின் நிலையை உயர்த்தப் பெருமுயற்சி செய்தது. ஜெர்மனியின் இப் புதிய முயற்சிகள் பிரிட்டன் மற்ற நாடுகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை முறியடிக்காவிடினும், பிரிட்டனும் அதன் ஒப்பந்த நாடுகளும் ஜெர்மனியுடனும், அதன் நட்பு நாடுகளுடனும் அடிக்கடி பல பிரச்சினைகளை எழுப்புவதற்குக் காரணங்களாக அமைந்தன. இப் பிரச்சினைகள் அமைதியைக் குலைப்பதற்கும், வல்லரசுகளிடையே பெரும் போர்கள் ஏற்படுவதற்கும் வழிவகுத்தன. இப் பிரச்சினைகள் பெரும்பாலும் மொராக்கோவிலும், அண்டைக் கிழக்கு நாடுகளிலும் ஏற்பட்டன. இவையாவும் முதல் உலகப் போருக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன.

மொராக்கோ பிரச்சினை

மாட்ரீட் என்ற இடத்தில் 1880ஆம் ஆண்டில் கூட்டப்பட்ட உலக மாநாட்டில் மொராக்கோவின் சுதந்திரநிலை உறுதி செய்யப்பட்டது. ஆனால், மொராக்கோ மிகப் பின்தங்கிய நாடாக இருந்ததுடன், கொள்ளைக் கூட்டத்தினரால் அடிக்கடி கொள்ளை யடிக்கப்பட்டு வந்தது. இதன் எல்லைப் பகுதியில்

பிரஞ்சு ஆப்பிரிக்கப் பேரரசும், மத்திய தரைக்கடலிலிருந்த ஸ்பானியத் துறைமுகங்களும் அமைந்திருந்தன. எனவே பிரான்சு, ஸ்பெயின் ஆகிய இரு ஐரோப்பிய நாடுகளின் உதவி யின்றித் தான் தனித்து ஆட்சிபுரிய முடியாதென மொராக் கோவின் அரசரான சுல்தான் கருதினர். இதனல் மொராக்கோ நாட்டின் பெரும் பகுதி ஃபிரான்சின் பாதுகாப்பின்கீழ் இருப்ப தற்கு டெல்கஸ் பல திட்டங்களைத் தீட்டினர். தமது திட்டங் களைச் செயல்படுத்த இத்தாலியின் ஆதரவை 1900-லும் பிரிட்டனின் ஆதரவை 1904-லும் பெற்றர். பின்னர், மொராக் கோவில் தமக்கு இயலாத பகுதிகளை ஸ்பெயினுக்கு விட்டுக் கொடுத்து அந் நாட்டுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். அத்துடன் மொராக்கோவின் எதிர்காலம் ஃபிரான்சு, ஸ்பெயின் ஆகிய இரு ஐரோப்பிய நாடுகளின் கையில்தான் உள்ளது என ஃபிரான்சின் வெளிநாட்டமைச்சர் கருதினர். ஆனல் ஜெர்மனியின் முதலமைச்சரான புயிலோ (Bulow) மொராக்கோவில் ஜெர்மனியின் ஆதிக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றும், கிடைக்கக்கூடிய வாய்ப்புகளைப் பயன் படுத்திக் கொண்டு டெல்கஸ்ஸின் முயற்சிகளைத் தடைசெய்து ஃபிரான்சிற்கும், பிரிட்டனுக்குமிடையே ஏற்பட்டிருந்த ஒப்பந் தத்தை முறியடிக்க வேண்டுமென்றும் கருதினர்.

புயிலோ தம்முடைய கருத்துகளைச் செயல்படுத்துவதற் காகத் தக்க சமயத்தை எதிர்நோக்கியிருந்தார். இரஷ்ய- ஜப்பானியப் போரில் (1904-1905) இரஷ்யா,முக்டென் (Mukden) என்ற இடத்தில் ஜப்பானல் தோற்கடிக்கப்பட்ட மூன்று வாரங்கள் கழித்து, இரஷ்யா பிரான்சுக்கு உதவாது என்று தெரிந்தவுடன் ஜெர்மனியின் முதலமைச்சர் தம்முடைய கருத்துகளைச் செயல்படுத்தத் தொடங்கினர். இதன் பயனக 1905-ல் ஜெர்மனியின் பேரரசரான இரண்டாம் வில்லியம் சுதந்திர நாடான மொராக்கோவில் மற்ற எல்லா வெளி நாட்டினரையும்போல, சம உரிமையுடன் சுதந்திர அரசரான சுல்தானைச் சந்திப்பதற்கு வந்ததாகக் கூறிக்கொண்டு டன்ஜிர் (Tangier) என்ற இடத்தில் வந்திறங்கினர். ஜெர்மனியப் பேரரசரின் வருகையால் ஐரோப்பிய நாடுகளிடையே ஓர் ஐயமெழுந்தது.

இந்நிலையில் உள்நாட்டுச் சூழ்நிலையின் காரணமாக டெல்கஸ் தமது பதவியை இராஜினமா செய்தார். டெல்கஸின் இராஜினமாவிற்குப் பின்னர் ஃபிரான்சின் அமைச்சரவை,எல்லா நாடுகளும் ஒன்றுசேர்ந்து மொராக்கோ பிரச்சினைகளுக்கு ஒரு

முடிவு காணவேண்டுமென கேட்டுக் கொண்டதற் கிணங்க அல்ஜீசிரஸ் என்ற இடத்தில் 1906-ல் ஒரு மாநாட்டைக் கூட்டியது. இம் மாநாட்டில், ஜெர்மனியின் முதலமைச்சர் எதிர் பார்த்ததற்கு மாருக, மொராக்கோவில் பிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்திற்கு பிரிட்டன் ஆதரவளித்தது. பிரிட்டனைப் பின்பற்றி இத்தாலியும் பிரான்சுக்கு ஆதரவளித்தது. இம்மாநாடு மொராக்கோவின் உள்நாட்டு ஒற்றுமைக்கு எத்தகைய முயற்சி களையும் மேற்கொள்ளாததுடன் சுல்தானின் முழு அதிகாரங் களுக்கும் வழிவகுத்துக் கொடுக்கவில்லை. ஆனல், எல்லா நாடு களும் மொராக்கோ நாடு முன்னேற வேண்டுமென வெளி யுலகிற்கு ஒத்துக்கொண்டன. இம் மாநாட்டின் இறுதியில் எல்லா நாட்டு வியாபாரிகளும் மொராக்கோவில் வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்றும், மொராக் கோவின் உள்நாட்டுப் பிரச்சினைகளை ஃபிரான்சு, ஸ்பெயின் ஆகிய இரு நாடுகளின் உதவியுடன் சுல்தான் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், உள்நாட்டின் பாதுகாப்பிற்காக ஒரு பிரஞ்சு பாதுகாப்புப் படையை சுல்தான் வைத்துக்கொள்ள வேண்டு மென்றும், மொராக்கோவில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளு வதற்கு ஃபிரான்சு பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. இம் மாநாட்டின் முடிவுகள் பெரும் பாலும் ஃபிரான்சு நாட்டின் வெற்றியாகவே அமைந்தது. மேலும் இம் மாநாட்டின் முடிவுகளால் ஜெர்மனியின் முயற்சிகள் தோல்வியடைந்தன.

அல்ஜீசிரஸ் மாநாட்டின் முடிவுகளின்படி மொராக்கோ சுல்தான் ஃபிரான்சின் உதவியுடன் ஆட்சிபுரிந்து வந்தார். ஆனல் மொரக்கோவின் உள்நாட்டுக் கொள்கைகள் எல்லா வற்றிலும் ஃபிரான்சின் ஆதிக்கமே மேலோங்கி இருந்தது. இதனல் மொராக்கோ மக்கள் வெளிநாட்டவர்களின் செல்வாக் கிற்கு, குறிப்பாக பிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனையடுத்து 1907ஆம் ஆண்டில் மொராக் கோவில் ஓர் உள்நாட்டுப் போர் ஏற்பட்டது. கிளர்ச்சிக் காரர்களை ஒடுக்க மொராக்கோ சுல்தான் பிரஞ்சு அரசாங் கத்தின் உதவியை நாடவே, ஃபிரான்சு ஒரு கப்பற்படையை அனுப்பி வைத்தது. இவ் வாய்ப்பினைப் பயன்படுத்தி ஜெர்மனி மொராக்கோவின் சுதந்திரத்தைக் காக்கத் தான் உறுதி பூண்டிருப்பதாக அறிவித்து, ஒரு கப்பற்படையை காசா பிளாங்கா என்ற இடத்திற்கு அனுப்பி வைத்தது. இதனல் ஃபிரான்சுக்கும், ஜெர்மனிக்குமிடையே போர் ஏற்படும் நிலை ஏற்பட்டது. இந்நிலையில் பிரிட்டன் தலையிட்டு ஆப்பிரிக்காவில்

டோகோலாந்து என்ற பகுதியை ஜெர்மனிக்குக் கொடுத்து 1909-ல் சமரசம் செய்து வைத்தது. இதன்படி மொராக்கோ சுல்தான் ஃபிரான்சு, ஸ்பெயின் ஆகிய இரு நாடுகளின் ஆலோசனையின்பேரில் ஆட்சி செய்ய வேண்டுமென்றும் ஏற்பாடுசெய்யப்பட்டது. ஆப்பிரிக்காவில் டோகோலாந்தை ஜெர்மனி பெற்றுக்கொண்டதால் மொராக்கோ பிரச்சினைகளில் தலையிடுவதில்லை என ஒப்புக்கொண்டது. இருப்பினும் இத்தீர்வு தன்னுடைய கொள்கைகளுக்கு ஒரு தோல்வியென்றே ஜெர்மனி கருதியது. இதனால் ஃபிரான்சுக்கும், ஜெர்மனிக்குமிடையே நிலவிய கருத்து வேறுபாடுகள் மேலும் வளர்ந்தன.

இந் நிகழ்ச்சிக்குப் பின்னர் மொராக்கோவில் பிரஞ்சு ஆதிக்கம் மேலும் உறுதியடைந்ததால், மொராக்கோவின் உள் நாட்டுப் பிரச்சினைகள் எல்லாவற்றிலும் ஃபிரான்சு தலையிட்டு, ஜெர்மன் வியாபாரிகள் மொராக்கோவில் தங்கள் நாட்டுப் பொருள்களை விற்பதற்குத் தடைவிதிக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டது. இதனால் மொராக்கோவில் மீண்டும் ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது. அல்ஜீசிரஸ் மாநாட்டின் முடிவுகளுக்கிணங்க மொராக்கோவில் தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காகத் தன்னுடைய படையொன்றை ஃபிரான்சு அனுப்பி வைத்தது. அமைதியை நிலைநாட்ட அனுப்பப்பட்ட இப்பிரஞ்சுப் படை 1911-ல் மொராக்கோவின் தலைநகரான ஃபெஸ்(Fez)என்ற நகரத்தை அடைந்தது. இதனைக் கண்ட ஜெர்மனி மொராக்கோவில் பிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்தை முறியடிக்க ஒரு போர்க் கப்பலை மொராக்கோவின் துறைமுகமான அகாடிர் (Agadir) என்ற இடத்திற்கு அனுப்பியது. பிரஞ்சுக்காரர்கள் தங்கள் படையை ஃபெஸ் நகரத்திலிருந்து திரும்பப் பெற்றுக் கொண்டால் தானும் தனது போர்க் கப்பலை அகாடிர் என்ற துறைமுகத்திலிருந்து திரும்பப் பெற்றுக்கொள்வதாக ஜெர்மனி உறுதி கூறியது. எனவே, மீண்டும் இவ்விரு ஐரோப்பிய நாடுகளுக்கிடையே ஒரு பெரும் போர் ஏற்படுவதற்கான சூழ்நிலை உருவாயிற்று. இருப்பினும் இவ்விரு ஐரோப்பிய நாடுகளும் தங்கள் போக்கினையும், கொள்கைகளையும் சிறிதும் மாற்றிக் கொள்ளவில்லை. மற்ற ஐரோப்பிய நாடுகள் இந் நிலையைக் கண்டு அஞ்சின.

இந்நிலையில் தன்னுடைய நட்பு நாடான இரஷ்யாவின் முழு இராணுவ உதவியின்றி ஜெர்மனிக்கு எதிராகப் போரிட்டுத் தான் வெற்றியடைய முடியாது என ஃபிரான்சு கருதியது. அதே சமயத்தில் இரஷ்ய-ஜப்பானியப் போரில் தோல்வியடைந்த

பின்னர் இரஷ்யாவின் இராணுவம் வலிமையற்றுத் தனக்கு உதவவியலாத நிலையிலிருந்ததை நன்குணர்ந்த ஃபிரான்சு சில சலுகைகளை ஜெர்மனிக்கு வழங்கி, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண விரும்பியது. அதே சமயத்தில் ஜெர்மனி மொராக்கோவில் ஃபிரான்சுடன் நேரடியாகப் போரிட விரும்பாமல் ஃபிரான்சைக் கட்டாயப்படுத்திச் சில பொருளாதாரச் சலுகைகளையும், ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரையில் சில பகுதிகளையும் பெறவிரும்பியது. இந்நிலையில் பிரிட்டன் மீண்டும் தலையிட்டு இவ்விருநாடுகளுக்கு மிடையே பேச்சுவார்த்தைகளை நடத்தி மொராக்கோப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முற்பட்டு, 1912-ல் இரண்டாம் முறையாக வெற்றியு மடைந்தது இதன்படி பிரான்சின் ஆதிக்கம் மொராக்கோவில் மீண்டும் நிலை நிறுத்தப்பட்டது. மத்திய ஆப்பிரிக்காவில் வேறுசில பகுதிகள் ஜெர்மனிக்கு வழங்கப்பட்டன. இதனால் இவ்விரு நாடுகளுக்கு மிடையே ஏற்படவிருந்த மோதல் தவிர்க்கப்பட்டது. இத் தீர்வின் பயனாக ஃபிரான்சுக்கும்,பிரிட்டனுக்குமிடையே இருந்த நட்புறவு மேலும் வலுவடைந்தது. ஃபிரான்சில் ஜெர்மனிக்கெதிரான கருத்துகள் விரைவாக வளர்ச்சியடைந்தன. ஆனால், இம்முறை மொராக்கோவில் தனதாதிக்கத்தையும் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் நிறைவேறாததால் பிரிட்டனும் ஃபிரான்சும் சேர்ந்து கொண்டு உலக நாடுகளிடையே தனக்கிருந்த பெருமையைக் குலைத்துவிட்டன என ஜெர்மனி கருதியது. எனவே பிரிட்டன், ஃபிரான்சு ஆகிய இரு நாடுகளுக்கும் தக்க பாடம் கற்பிக்கத் தக்க சமயத்தை எதிர்நோக்கி ஜெர்மனி காத்திருந்தது. முதல் உலகப் போருக்கு அதுவும் ஒரு முக்கிய காரணமாக அமைந்தது.

அண்டைக் கிழக்கு நாடுகளின் பிரச்சினை

ஜெர்மனிக்கும், பிரான்சுக்கும் ஏற்பட்ட போட்டிகளின் காரணமாக மொராக்கோ பிரச்சினை ஏற்பட்டதுபோல, ஆஸ்திரியா-ஹங்கேரி, இரஷ்யா ஆகிய நாடுகளின் பேராசையின் காரணமாக அண்டைக் கிழக்கு நாடுகளில் சில பிரச்சினைகள் ஏற்பட்டன. இப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதன்மூலம் சில பொருளாதார நன்மைகளைப் பெற ஜெர்மனி விரும்பியதுடன் தன்னுடைய இராணுவத்தின் மூலம் ஆஸ்திரிய-ஹங்கேரியை இரஷ்யாவிற்கு எதிராக வலிமையுறச் செய்தது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து பாஸ்னியா, மாசிடோனியா ஆகிய பகுதிகளின் வழியாக ஈஜியக்கடல் பகுதியிலுள்ள சலோநிகா (Salonica) வரையில் தனது அரசியல்,

பொருளாதார ஆதிக்கங்களை விரிவுபடுத் த ஆஸ்திரிய-ஹங் கேரி அரசு விரும்பியது. இவ்வாறே பால்கன் நாடுகளையும் உதுமானியப் பேரரசையும் ஜெர்மன் மயமாக்க ஜெர்மனியர்கள் விரும்பினர். எனவே, ஜெர்மனியும், ஆஸ்திரிய-ஹங் கேரியும் சேர்ந்துகொண்டு தங்கள் அரசியல் பொருளாதார ஆதிக்கங்களைத் தெற்கு ஐரோப்பிய நாடுகளில் விரிவுபடுத்தத் தொடங்கின. இதன் பயனாக 1899-ல் ஜெர்மனியின் பேரரசரான இரண்டாம் வில்லியம் உதுமானியப் பேரரசுக்கு வருகை புரிந்து அதன் பேரரசரான இரண்டாம் அப்துல் ஹமீதைச் சந்தித்தார். இதனால் ஜெர்மனிக்கும், உதுமானியப் பேரரசுக்குமிடையே நட்புறவு வளர்ச்சி யடைந்தது. இதனையடுத்து 1903 ஆம் ஆண்டில் பெர்லினிலிருந்து ஆசியாமைனர், ஆர்மேனியா ஆகிய பகுதிகளின் வழியாக பாக்தாத் வரை ஓர் இருப்புப் பாதையை அமைக்க உதுமானியப் பேரரசிடமிருந்து ஜெர்மனி அனுமதி பெற்றது. அதேபோல 1878 முதல் 1903 வரை ஆஸ்திரியர்கள் செர்பிய அரசவையில் அதிக செல்வாக்குப் பெற்றிருந்தனர். அத்துடன் ஜெர்மனியில் பிறந்த பல்கேரிய இளவரசரான பெர்டினண்டு வெகு நாள்களாக இரஷ்யாவுடன் கொண்டிருந்த விரோத மனப்பான்மையின் காரணமாக ஆஸ்திரிய-ஹங்கேரியை நாடி இருந்தார். இந்நிலையில் இரஷ்ய அரசர் ஜெர்மனியப் பேரரசருக்கு உறவினராக இருந்ததுடன் நண்பராகவும் இருந்தார். மேலும், கிரீஸ் நாட்டின் எதிர்கால அரசரான கான்ஸ்டன்டைனின் மனைவி ஜெர்மன் பேரரசரான இரண்டாம் வில்லியத்தின் சகோதரியாகவும் இருந்தார். இந்நிலை ஐரோப்பாவில் இரஷ்யாவையும் உதுமானியப் பேரரசையும் தோற்கடித்துவிட்டுக் கான்ஸ்ட்டான்டி நோபிளிலிருந்து ஆட்சிசெய்ய டியுடானிக் அரசுகள், விரும்பியதற்குத் தடையாக இருந்தது. இதனால் இவர்கள் இரஷ்யர்களுக்கு எதிராக உதுமானியப் பேரரசருக்கு உதவினர். துருக்கியப் போர் வீரர்களுக்குப் போர்ப் பயிற்சியளித்தனர். மேலும் இவர்கள் உதுமானியப் பேரரசைச் சுரண்டியதுடன், இரஷ்யா, பிரிட்டன் ஆகிய நாடுகள் தெற்கு ஐரோப்பிய நாடுகளில் தங்கள் ஆதிக்கத்தை விரிவுபடுத்தாவண்ணம் தடைசெய்தன.

ஆனால், 1903ஆம் ஆண்டில் ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங் கேரி ஆகிய நாடுகள் பால்கன் பகுதியில் மேற்கொண்ட முயற்சிகளுக்குத் தடைகள் ஏற்பட்டன. பெல்கிரேடு (Belgrade) என்ற இடத்தில் ஏற்பட்ட அரண்மனைப் புரட்சியின் காரணமாக செர்பியாவில் ஆஸ்திரியர்களுக்குச் சாதகமாக நடைபெற்று வந்த ஆட்சி முடிவடைந்து செர்பிய தேசியக் கருத்துகளைப் பரப்பு

கின்றவரும், இரஷ்யாவின் நண்பருமான ஒருவர் செர்பியாவின் அரசராகப் பொறுப்புகளை ஏற்றார். இதற்குப் பின்னர் 1908ஆம் ஆண்டிலும் 1912-1913 ஆண்டுகளிலும் பால்கன் பிரச்சினைகள் மேலும் வளர்ச்சியடைந்து முதல் உலகப் போருக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன. இப்பிரச்சினை களைப்பற்றி அடுத்த பகுதியில் விரிவாகக் காண்போம்.

3. கி. பி. 1901 முதல் 1913 வரை ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல், இராணுவப் பிரச்சினைகள்

ஐரோப்பாவில் 1901ஆம் ஆண்டிற்கும் 1913ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் அமைதியையும், கூட்டுறவையும் குலைக்கும் வகையில் சில பிரச்சினைகள் ஏற்பட்டன. பிரிட்டனில் சமுதாயச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதில் பல கருத்து வேறுபாடுகள் தோன்றின. அயர்லாந்து தன்னுட்சி முறையை மேற்கொண்டது. ஸ்பெயின், ஃபிரான்சு ஆகிய நாடுகளில் அரசாங்கத்திற்கும், திருச்சபைகளுக்கும் இடையே தகராறுகள் எழுந்தன. இதனுல் ஒன்றைஒன்று அழிப்பதற்கு முயன்றன. போர்ச்சுகல் நாட்டில் முடியாட்சி ஒழிக்கப் பட்டது. ஜெர்மனியின் தூண்டுதலால் இரஷ்யாவிற்கும் ஜப்பானுக்குமிடையே 1904ஆம் ஆண்டில் இரஷ்ய-ஜப்பானியப் போர் மூண்டது. 1905-ல் மாட்ரீட் என்ற இடத்தில் ஜப்பான் மிகப் பெரிய நாடான இரஷ்யாவைத் தோற்கடித்தது. இரஷ்யாவின் புகழ் மங்கத் தொடங்கியது. துருக்கியில் இளந் துருக்கியர்கள் புரட்சி செய்தனர். இத்தாலியிலும், பால்கன் நாடுகளிலும் போர்கள் ஏற்பட்டன. ஆஸ்திரியா, செர்பியா ஆகிய நாடுகளுக்கிடையே கருத்து வேற்றுமைகள் வளர்ச்சி அடைந்தன. ஐரோப்பிய வல்லரசுகளுக் கிடையே விரோத மனப்பான்மை வளர்ச்சி அடைந்தது. இவற்றின் பயனுக முதல் உலகப் போருக்கான சூழ்நிலைகள் யாவும் இக்காலத்திலேயே வளர்ச்சி அடைந்தன. இறுதியாக 1914ஆம் ஆண்டில் 'செரயாவோ' (Serafivo) என்ற இடத்தில் ஆஸ்திரிய இளவரசர் கொல்லப்பட்டது முதல் உலகப் போருக்குத் தொடக்கமாக அமைந்தது. இவற்றைப்பற்றி இப் பகுதியில் விரிவாகக் காண் போம்.

1. பிரிட்டனில் சமுதாயச் சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதில் ஏற்பட்ட பிரச்சினைகளும் அயர்லாந்தின் சுயாட்சியும்

பிரிட்டனில் 1906ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மிதவாதக் கட்சியினர் ஆட்சியைக் கைப்பற்றினர். இந் நாட்டில் 1874 முதல் பெரும்பான்மை பலத்தைப் பெற்று, அரசியல் செல்வாக்குப் பெற்று விளங்கிய பழமை விரும்பிக் கட்சி இத் தேர்தலில் தோல்வியைத் தழுவியது. எனவே, பிரிட்டனின் அரசியலில் ஏறத்தாழ 30 ஆண்டுகளாகப் பின் பற்றப்பட்டு வந்த பழமை விரும்பிக்கட்சியினரின் கருத்துகள் புறக்கணிக்கப்பட்டு மிதவாதக் கட்சியின் கருத்துகள் அதிக செல்வாக்குப் பெற்றன. அரசாங்கத்தில் மக்களாட்சிக் கொள்கை களைப் புகுத்துவதற்கும், சமுதாய சீர்திருத்தங்களைத் தீவிரமாகச் செயல்படுத்துவதற்கும் பாடுபட்ட இளந் தலைமுறையினர் மித வாதக் கட்சியில் பெருமளவில் காணப்பட்டனர். இதனால் 19ஆம் நூற்றுண்டில் செல்வாக்குடன் இருந்த மத்திய வகுப் பினரும், அரசாங்கத்தின் தலையீடு இல்லாமல் தனிப்பட்ட முறையில் தங்கள் பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றி வந்த வியாபாரிகளும் சிறிதுசிறிதாகத் தங்கள் செல்வாக்கினை இழந்தனர். நாட்டின் எல்லாத் துறைகளிலும் படிப்படியாகப் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இதனால், 1906ஆம் ஆண்டில் பிரிட்டனில் நடைபெற்ற பொதுத்தேர்தலை அமைதியான அரசியல் புரட்சி எனலாம்.

இவ்வமைதியான அரசியல் புரட்சியின் காரணமாக பிரிட்டனில் பொதுமக்களிடையே பொருளாதாரக் கொள்கை களில் (கருத்துகளில்) சில மாற்றங்கள் ஏற்பட்டன. பழைய பொருளாதாரக் கருத்துகளில் கொண்டிருந்த நம்பிக்கையும், தனியார் துறையில் ஏற்பட்ட போட்டிகளும், அரசாங்கத்தின் தலையீடு இன்றித் தனிப்பட்ட முறையில் தங்கள் பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றி வந்த வியாபாரிகளின் கருத்து களும் படிப்படியாக மாறி சமுதாயத்தின் வளர்ச்சி, கூட்டுறவு முறை, அரசியலில் பொதுமக்களின் செல்வாக்கு ஆகியவையும், இவற்றை அடிப்படையாகக் கொண்ட கருத்துகளும் அதிக செல்வாக்குப் பெற்றன. இந்நிலையில் ஜான் ஸ்டூவர்ட் மில் (John Stuart Mill) தம்முடைய புதிய அரசியல் பொருளாதாரக் கொள்கையை வெளியிட்டார். ஒரு நாட்டின் பொருளாதார நிலையை அந் நாட்டின் இயற்கை அமைப்புகள் எவ்வாறு நிர்ணயிக்கின்றன என்பதையும், நாட்டின் மொத்த

செல்வத்தை அந் நாட்டின் அரசு எவ்வாறு எல்லா மக்களுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டுமென்பதையும் மில் தனது பொருளாதாரக் கொள்கைகளின் மூலம் தெளிவுபடுத்தினர். இதே போன்று மற்றப் பொருளாதார நிபுணர்களும், அரசியல் அறிஞர்களும் பிற ஐரோப்பிய நாடுகளும், குடியேற்ற நாடுகளும் தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்காக எவ்வெவ்வாறு பாடுபடுகின்றன என்பதையும், இத் துறையில் பிரிட்டன் எவ்வாறு பின்தங்கி இருக்கிறது என்பதையும் எடுத்துரைத்தனர்.

அடுத்து பிரிட்டனில் பின்பற்றப்பட்டுவந்த நிலச்சுவான்தார முறையை (Landlordism) பல பிரிட்டிஷ்காரர்கள் குறை கூற ஆரம்பித்தனர். பிரிட்டனில் பெரும்பாலும் எல்லா விளை நிலங்களுக்கும் பிரபுக்களே சொந்தக்காரர்களாக இருந்தனர். நகர்ப்புறங்களில் இருந்த நிலங்கள் சில குறிப்பிட்ட செல்வந்தர்கட்கே உரிமையானவையாக இருந்தன. அவற்றின் சாகுபடிதாரர்களும் இவர்களுக்குக் கட்டுப்பட்டே இருந்தனர். எனவே, இம் முறையில் நிலவிவந்த பிரச்சினைகளைப் பற்றியும், நிலச் சுவான்தாரர்களின் போக்கால் பிற மக்களுக்கு ஏற்பட்ட தீமைகளைப் பற்றியும், பிரிட்டனில் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டு இருந்த குறைகளைப் பற்றியும் ஹென்றி ஜார்ஜ் (Henry George) என்ற அமெரிக்க சீர்திருத்தவாதி பல சொற்பொழிவுகளின் மூலம் மக்களுக்கு எடுத்துரைத்தார். மேலும் இவர் பிரிட்டனில் நிலவி வந்த நிலச்சுவான்தார முறையில் இருந்த சீர்கேடுகளை 'வளர்ச்சியும் ஏழ்மையும்' என்ற தம்முடைய புத்தகத்தின் வாயிலாகத் தெளிவுபடுத்தினர். ஹென்றி ஜார்ஜின் கருத்துகள் டேவிட் லாயிட் ஜார்ஜ் (David Lloyd George) என்ற வேல்ஸ் பகுதியின் இளைஞரைப் பெரிதுங் கவர்ந்தன.

அடுத்து, நகரங்களில் வாழ்ந்துவந்த தொழிலாளர்கள் அரசியல், பொருளாதாரத் துறைகளில் தங்களுக்குள்ள குறைகளைப் பொதுமக்களுக்கு எடுத்துக் கூறுவதற்காக ஆங்காங்கே பல கிளர்ச்சிகளைத் தோற்றுவித்தனர். பயிற்சி பெற்ற தொழிலாளிகளும் சுரங்கத் தொழிலில் ஈடுபட்டவர்களும் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள ஒன்றுபட்டுத் தொழிற் சங்கங்களை நிறுவ வேண்டுமெனக் கருதினர். இதனுல் நகரங்களில் தொழிலாளர்கள் பலர் ஒன்றுக இணைந்து பல தொழிற் சங்கங்களை நிறுவினர். இதனுல் பல தலைவர்களும், போர் வீரர்களும் மிதவாதக் கட்சியினரின் கருத்துகளை ஆதரிக்கத் தொடங்கினர். இவர்கள் அரசாங்கத்தின் ஆதரவுடன் தங்கள்

கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதைவிட, தங்கள் தொழிற்சங்கங்களின் மூலமாகத் தொழிலதிபர்களுடன் போராடி நிறைய நன்மைகளைப் பெற முடியுமெனக் கருதினர். தங்கள் போராட்டங்களுக்கு ஆதரவு பெறுவதற்காகச் சில தொழிற் சங்கத் தலைவர்கள் அரசியலில் மிதவாதக் கட்சியை ஆதரித் தனர். இதன் பயனாக 1885ஆம் ஆண்டிற்கும் 1895ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் பிரிட்டனில் தொழிற் சங்கங்கள் இருவகையான புதிய நடவடிக்கைகளில் இறங்கின. இவற்றில் திறமையற்ற தொழிலாளர்கள் தீவிரவாதிகளின் தலைமையில் ஒன்று சேர்ந்து முறையற்ற கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். இதனால் நாட்டின் பல பாகங்களில் பெரு மளவில் வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. சில இடங்களில் வன்முறைச் செயல்களிலும் இவர்கள் ஈடுபட்டனர். திறமையும், திடமும் இல்லாத திறமையற்ற தீவிரவாதிகளின் தலைமையே இதற்கு முக்கிய காரணமாகும். இது ஒருபுறமிருக்க மறுபுறம் மார்க்ஸின் சோஷியலிஸக் கருத்து (Marxian Socia-lism) பிரிட்டிஷ் தொழிலாளர்களிடையே மிக விரைவாகப் பரவத் தொடங்கியது.

இந் நிலையில் 1881ஆம் ஆண்டில் சில அறிஞர்கள் ஒன்று சேர்ந்து மார்க்ஸிஸ சோஷியலிஸக் கருத்துகளை மக்களிடையே பரப்புவதற்காக பிரிட்டனில் 'சமூக ஜனநாயகக் கூட் டமைப்பு' (Social Democratic Federation) என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தினர். வில்லியம் மாரிஸ் (William Morris) என்ற ஓவியரும், ஹென்றி ஹிண்ட்மென் (Henry Hindman) என்பவரும் இவர்களில் மிக முக்கியமானவர்களாகக் கருதப்பட்டனர். இதனையடுத்து 1883ஆம் ஆண்டில் ஃபேபியன் கழகம் (Fabian Society) என்ற ஒரு புதிய கழகம் நிறுவப்பட்டது. இது ஜார்ஜ் பெர்னார்டு ஷா (George Bernard Shaw), சிட்னி வெப் (Sidney Webb) போன்றவர்களின் திற மையை வெளிப்படுத்தியதுடன் மார்க்ஸிஸம் என்ற வேறுபாடு இன்றித் தொழிலாளர்கள், நிலச்சுவான்தாரர்கள், அரசாங்க அலுவலர்கள் ஆகியோர்களிடம் காணப்பட்ட இலக்கியச் சிறப்பியல்புகளை எல்லாம் வெளிப்படுத்தியது. பின்னர் 1893-ல் ஹெர் ஹார்டி (Heir Hardie) என்ற ஸ்காட்லாந்து சுரங்கத் தொழிலாளி 'சுதந்திரத் தொழிலாளர் கட்சி' (Independent Labour Party) என்ற ஒரு புதிய கட்சியைத் தோற்று வித்தார். இது புதிய மார்க்ஸிஸக் கருத்துடையவர்களுடன் நட்புறவை வளர்த்துக்கொண்டு பாராளுமன்றத் தேர்தல்களில் மிதவாதக் கட்சி, பழமைவிரும்பிக் கட்சி ஆகிய இவ்விரு

அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு எதிராகத் தன்னுடைய வேட்பாளர்களை நிறுத்தியது.

இந்நிலையில் பிரிட்டிஷ் தொழிற்சங்கங்களில் சோஷியலிஸக் கருத்துகளைப் பரப்பி வந்தவர்கள் சிறுபான்மையினராக இருந்தனர். ஆனால், இவர்கள் மிகவும் சுறுசுறுப்பாக இருந்ததுடன் பெரும்பாலான மக்களிடம் அதிக செல்வாக்குப் பெற்று இருந்தனர். தொழிற்சங்கங்களின் எண்ணிக்கைகள் அதிகரிக்க அதிகரிக்க, தீவிரவாதிகளும், அரசியலில் ஆர்வமுள்ளவர்களும் அதிகரித்தனர். தொழிற்சங்கங்கள் அதிகரித்தமையால் இவற்றின் பொருளாதார நிலையும் வலுவடைந்தது. குறிப்பாக 1890–ல் பிரிட்டனில் 490 தொழிற்சங்கங்கள் இருந்தன. இவற்றில் மொத்தம் 6 இலட்சத்து 50 ஆயிரம் பேர் உறுப்பினர்களாக இருந்தனர். இச் சங்கங்களின் மொத்த வருமானம் 10 இலட்சம் பவுன்களாக இருந்தது. ஆனால் 1906–ல் இத் தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 675ஆக உயர்ந்தது. இவற்றின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 17 இலட்சத்து 20 ஆயிரம் பேர்களாக உயர்ந்தது. இவர்களின் மூலம் இச்சங்கங்களுக்கு 27 இலட்சம் பவுன்கள் வருமானம் வந்தது.

இதற்கிடையில் வேறொரு நிகழ்ச்சி தொழிற்சங்கங்களைத் தீவிரமாக அரசியலில் ஈடுபடுத்தியது. தொழிலாளர்களின் போராட்டங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் செல்வந்தர்களே. எனவே செல்வந்தர்களின் ஆதிக்கம் மேலோங்கிய பிரபுக்கள் சபை, தான் பிரிட்டனின் உயர் நீதிமன்றம் என்ற அந்தஸ்தில், பிரிட்டனில் வேலைநிறுத்தங்களின் காரணமாகவும், வன்முறைச் செயல்களின் காரணமாகவும் ஏற்பட்ட எல்லா நஷ்டங்களுக்கும் தொழிற்சங்கங்களே காரணம் என்றும், நஷ்டஈட்டுத் தொகையைச் சட்டப்படி தொழிற்சங்கங்களே கொடுக்க வேண்டுமென்றும் கூறியது. இது டாஃப் வேல் தீர்ப்பு (Taff Vale Decision) என வழங்கப்பட்டது. இத் தீர்ப்பு தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யும் உரிமையைக் கட்டுப்படுத்தியதுடன், தொழிற்சங்கங்களின் பொருளாதாரத்தையும் பாதித்தது. இதனால் அவசரநிலைப் பிரகடனத்திற்குப் பிறகு இந்தியாவில் 1977–ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஆளும் கட்சிக்கெதிராக எல்லா எதிர்க்கட்சிகளும் ஒன்றுசேர்ந்து ஜனதா கூட்டணியைத் தோற்றுவித்ததைப்போல, டாஃப் வேல் தீர்ப்புக்குப் பின்னர் 'சமூக ஜனநாயகக் கூட்டமைப்பு', 'ஃபேபியன் கழகம்' 'சுதந்திரத் தொழிலாளர் கட்சி', ஆகிய மூன்றமைப்புகளும் அரசியல் ரீதியாக ஒன்றுசேர்ந்து 'தொழி

லாளர் கட்சி' (Labour Party) என்ற ஒரு புது அரசியல் கட்சியைத் தோற்றுவித்தது. இது ஓரளவு தொழிலாளர்களின் கட்சியாகவும், ஓரளவு சோஷியலிஸ்டுகளின் கட்சியாகவும் இருந்தது. மேலும் இக் கட்சி தொழிலாளர் நலச் சட்டங்களை இயற்றுவதற்காக எந்த அரசியல் கட்சியுடனும் கூட்டு சேருவதற்குத் தயாராக இருப்பதாக அறிவித்தபொழுது இது பெரும்பாலும் தொழிலாளர் கட்சியாகவே இருந்தது. இந் நிலையில் 1906ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 29 பிரதிநிதிகள் இக் கட்சியிலிருந்து பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தொழிலாளர் கட்சியின் தோற்றம் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்ததோடு மட்டுமல்லாமல் மற்றக் கட்சிகளிலும் சில மாற்றங்களை ஏற்படுத்தியது. மிதவாதக் கட்சியினர் தங்கள் பழைய கொள்கைகளை விட்டுவிட்டுப் பல சமூகச் சட்டங்களை இயற்றுவதில் முழுமூச்சுடன் பாடுபட்டனர். மேலும், தொழிற்கட்சியின் தோற்றத்தின் காரணமாக 1906ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பழமை விரும்பிக் கட்சி தோல்வியடைந்தது. காப்பு விதியின் மூலமாக உள்நாட்டுத் தொழில்களுக்கு ஆதரவளிப்பதுபற்றி பழமை விரும்பிக் கட்சித் தலைவர்களிடையே அதிக அளவில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இவர்கள் டாஃப் வேல் தீர்ப்பில் சில மாற்றங்களைச் செய்து, தொழிலாளர்களுடன் சமரசம் பேசிப் பொதுமக்களிடையே ஆதரவு தேட முயற்சிசெய்தனர்.

இந்நிலையில் மிதவாதக் கட்சித் தலைவர்கள் பொதுமக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றனர். இவர்களில் டேவிட் லாயிட் ஜார்ஜ் (David Lloyd George), வின்ஸ்டன் சர்ச்சில் (Winston Churchill) போன்ற தீவிரவாதிகள் சமுதாய சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதற்கு அரும்பாடுபட்டதுடன் நிலச்சுவான் தாரமுறையினைக் கடுமையாக எதிர்த்து வந்தனர். இச்சமயத்தில் ஏகாதிபத்தியவாதிகள் ஹெர்பர்ட் அஸ்க்வித் (Herbert Asquith), சர் எட்வர்டு கிரே (Sir Edward Grey) போன்ற பிரபுக்களைச் சந்தித்து மிதவாதக் கட்சியின் அரசு உள்நாட்டில் பல சீர்திருத்தங்களை மேற்கொள்வதால் வெளிநாட்டில் பிரிட்டிஷ்காரர்களின் ஆதிக்கம் சிறிதும் குறையாது என உறுதி கூறினர். எனவே, இவ்விரு பிரிவினர்களையும் ஒன்றுசேர்த்து பிரிட்டனின் வியாபாரத்தை வளர்ப்பதற்கு இந் நாட்டு மக்கள் பெருமுயற்சி செய்தனர். மேலும் அரசியல் கருத்து வேறுபாடுகளை மறந்து தங்கள் நாட்டு வியாபாரத்தை வளர்ச்சியடையச்

செய்வது பிரிட்டிஷ்காரர்களின் வழக்கமாகிவிட்டது. பிரிட்டனில் உள்நாட்டுச் சீர்தீருத்தங்கள் கொண்டுவரப்பட்ட அதேசமயத்தில், வளர்ச்சியடைந்துவந்த வியாபாரத்தின் காரணமாகத் தேசியக் கருத்துகளும், ஏகாதிபத்தியக் கருத்துகளும், சோஷியலிஸக் கருத்துக்களும் வளர்ச்சியடைந்தன.

இதனையடுத்து 1905ஆம் ஆண்டு முதல் 1915ஆம் ஆண்டு வரை (பத்தாண்டுகள்) மிதவாதக் கட்சியினர் பிரிட்டிஷ் அரசாங்கத்தை நடத்தி வந்தனர். இவர்கள் ஆட்சியிலிருந்தபொழுது மிதவாதக் கட்சியில் தீவிரவாதியான காம்பெல்-பானர்மென் (Cambell – Bannerman) முதலில் பிரதம அமைச்சராக இருந்தார். பிறகு பானர்மென் 1908-ல் நோய்வாய்ப்பட்டு இறந்துவிடவே, ஹெர்பர்ட் அஸ்க்வித் பிரிட்டிஷ் பிரதமரானார். லாயிட் ஜார்ஜ் என்பவர் இவரது முக்கிய உதவியாளரானார். இவரது காலத்தில் வியாபாரம் தடையின்றி நடைபெற்றாலும் சமுதாயச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டமை முக்கியமான நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது. இச்சமயத்தில் மிதவாதக் கட்சியினருக்குத் தொழிலாளர் கட்சி எல்லாவகையிலும் உதவியது. இவ்விரு கட்சியினரும் சேர்ந்துகொண்டு 1909ஆம் ஆண்டு வரை பழமை விரும்பிக் கட்சியைக் குறை கூறிவந்தனர். இதன் பின்னர் இவ்விரு கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஜனநாயக அமைப்பில் பல சமூகச் சீர்திருத்தங்கள் செய்யமுற்பட்டன. இச்சீர்திருத்தங்கள் யாவும் பெரும்பாலும் 1909-க்கும் 1914-க்கும் இடைப்பட்ட ஐந்தாண்டுகளிலேயே கொண்டுவரப்பட்டன. இச்சமயத்தில் அயர்லாந்தில் சுயாட்சி இயக்கம் வளர்ச்சியடைந்து மிதவாதக் கட்சியினருக்கு அரசியலில் பல தொல்லைகளைக் கொடுத்தது. இதனால் மிதவாதக் கட்சியின் கொள்கைகள் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் வெகுவாகக் குறைகூறப்பட்டதுடன், பழமை விரும்பிக் கட்சியினரும் இதன் கொள்கைகளை முழுமூச்சுடன் எதிர்த்தனர். இச்சமயத்தில் தொழிற்சங்கங்களுக்கு அரசியல், பொருளாதாரத் துறைகளில் சில அனுகூலங்கள் ஏற்பட்டன. தொழில் துறைகளில் போட்டி காரணமாக ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்க 1906ஆம் ஆண்டில் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. இச் சட்டம் டாஃப் வேல் தீர்ப்பின் ஷரத்துகளை நிறுத்தி வைத்ததுடன் தொழிற்சங்கங்களின் மூலதனத்திற்கும் பாதுகாப்பளித்தது. மேலும் இச் சட்டம் தொழிற்சங்கங்களின் மூலதனத்தை வேலைநிறுத்தக் காலங்களில் அமைதிக்குப் பங்கம் ஏற்படாத வகையில் பயன்படுத்த வழிவகை செய்தது. இதனையடுத்து, தொழிற்சங்கங்கள் தங்களுக்கு

இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக மக்கள் சபையிடம் நியாயம் பெறவும், தொழிற்சங்க உறுப்பினர்கள் முறையாக ஊதியம் பெறவும் பிரிட்டிஷ் பாராளுமன்றம் 1911ஆம் ஆண்டில் வழிவகை செய்தது. பின்னர் தொழிற்சங்கங்கள் தங்கள் மூலதனங்களைத் தேர்தல்களுக்கும், பிற அரசியல் காரணங்களுக்கும் பயன்படுத்த 1913ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டது.

இதற்கிடையில் தொழிற்சாலைகளுக்கும், தொழிலாளர்களுக்கும் மாநிலங்கள் உதவுவதற்காகப் பல சட்டங்கள் இயற்றப் பட்டன. தொழிலாளர் நஷ்டஈட்டுச் சட்டம் (Workmen's Compensation Act) என்ற ஒன்று 1906ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இதன்படி ஒவ்வொரு முதலாளியும் தங்களிடம் பணிபுரியும் நிரந்தரத் தொழிலாளர்களுக்கு விபத்துக்களிலிருந்தும், தொழிற்சாலைகளினால் ஏற்படும் நோய்களினின்றும் பாது காப்பளிக்க வேண்டுமென வற்புறுத்தப் பட்டனர். பின்னர் தொழிலாளர் இணைப்பகச் சட்டத்தின் (Labour Exchange Act) மூலம் 1909ஆம் ஆண்டில் வேலை தேடித்தரும் அலுவலகம் ஒன்று நிறுவப்பட்டது. இது பல்வேறு இடங்களில் காணப் படும் வேலை வாய்ப்புக்களை வேலையற்றோர்களுக்கு உரிய காலத் தில் அறிவித்து உதவியது. அதே ஆண்டில் இயற்றப்பட்ட தொழிலமைப்புச் சட்டம் (Trade Board Act) தொழிலாளர் களின் நன்மைக்காக வேறு சில அமைப்புக்களை ஏற்படுத்தியது. இதன்மூலம் தொழிலாளிகளும் முதலாளிகளும் சம அளவு அடங்கிய ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இது நலிந்த நிலையில் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர் களுக்குக் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயம் செய்தது. பின்னர் 1912-ல் நிலக்கரிச் சுரங்கங்களில் பணிபுரியும் தொழி லாளர்களின் நன்மைக்காகப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன.

சிறுவர்களுக்கும், வயதானவர்களுக்கும் சில முக்கிய சலுகைகளை வழங்க மாநிலங்கள் முன்வந்தன. மேலும் இவை நாட்டின் சுகாதார நிலையை வளப்படுத்துவதற்கும், தொழில் களின் தன்மையை முறைப்படுத்துவதற்கும் பல முயற்சிகளை மேற்கொண்டன. இதன் பயனாக 1908-ல் சிறுவர்களின் மேம்பாட்டிற்காகப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. இவற் றின்படி சிறுவர்களுக்கான வாழ்க்கை வசதிகளை அரசாங்கம் ஏற் படுத்திக் கொடுக்க வழிவகைகள் செய்யப்பட்டன. பெண்களுக் குப் பேறுகாலத்தில் இலவசமருத்துவ வசதியும்,குழந்தைகளுக்கு இலவச மருத்துவ வசதியும் செய்ய அரசு முன்வந்தது. மேலும்

இளமையில் ஊனமுற்றவர்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பதற்கும், கல்வி நிலையங்கள் இல்லாத இடங்களிலுள்ள குழந்தைகள் கல்வி பயில்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், குழந்தைகளுக்குப் பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள குழந்தைகளின் கல்விக்காக ஓய்வு நேரக் கல்வி வசதியை அமைத்துக் கொடுப்பதற்கும் அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. முதியோர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் முதியோர் உதவித் தொகைச் சட்டம் (Old Age Pension Act) என்ற சட்டத்தின்படி, தேவையான எல்லா முதியோர்கட்கும் மாநிலங்கள் ஓரளவு நிதியுதவி யளித்தன. இதன்படி 1913 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 10 இலட்சம் முதியோர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து உதவித் தொகை பெற்றனர். மக்களின் வாழ்க்கை வசதியை மேம்படுத்தும் முயற்சியில் வீட்டுவசதி வாரியங்களும், நகரியக் குழுக்களும் 1909 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட சட்டத்தின்படி நிறுவப்பட்டன. வீட்டு வசதி வாரியங்கள் சேரியில் உள்ள குடிசைகளை அகற்றி, சாதாரண வாழ்க்கைக்குத் தேவையான அளவில் நவீன முறையில் சில வீடுகளை வசதியற்ற மக்களுக்குக் கட்டிக் கொடுத்தன. நகரியக் குழுக்கள் மக்களின் வாழ்க்கை வசதிகளை மேம்படுத்துவதற்குப் பல முயற்சிகளை மேற்கொண்டு அவற்றைச் செயல்படுத்தத் தொடங்கின. அடுத்து சமுதாயத்தின் மேம்பாட்டிற்காக தேசிய இன்ஷூரன்சு சட்டம் (National Insurance Act) என்ற ஒன்று 1912 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இதன்படி தொழிலாளிகளிடமிருந்தும், முதலாளிகளிடமிருந்தும் ஒரு குறிப்பிட்ட தொகை வசூலிக்கப்பட்டது. அரசாங்கமும் ஒரு குறிப்பிட்ட தொகையை மானியமாக வழங்கியது. இத்தொகைகளை வைத்துக் கொண்டு தொழிலாளர்களின் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கும், நோய்களிலிருந்து தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்கும், சில குறிப்பிட்ட இனத்தில் இருந்த வேலையற்றோர்களுக்கு உதவி அளிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இத்தகைய சமுதாயச் சட்டங்களுக்கு பிரிட்டனில் பெரும்பாலும் எதிர்ப்பு மிகக் குறைவாக இருந்தது என்பதைவிட இல்லை என்றே கூறலாம். பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் மக்கள் சபையில் இருந்த பழமை விரும்பிக் கட்சியினர் இச்சமுகச் சட்டங்களைச் சில சமயங்களில் குறை கூறினர். பிரபுக்கள் சபையில் சில சமயங்களில் இச்சமுகச் சட்டங்களில் சில திருத்தங்களைச் செய்தனர். ஆனால் 1909 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இச்சமுகச் சட்டங்கள் மிக வேகமாகச் செயல்பட

ஆரம்பித்தன. இதற்கு லாயிட் ஜார்ஜே முக்கிய காரண மாவார்.

ஆனால் இச்சமூகச் சட்டங்களைச் செயல் படுத்துவதற்கும், இராணுவத்தின் செலவிற்கும், புதிய ஆயுதங்களை வாங்கு வதற்கும் பிரிட்டிஷ் அரசுக்குப் பெருமளவில் பணம் தேவைப் பட்டது. அது அப்போது பிரதமரின் ஆலோசகராக இருந்த லாயிட் ஜார்ஜுக்குப் பெரும் பிரச்சினையாக இருந்தது. புதிய நேர்முக வரிகளின் மூலம் லாயிட் ஜார்ஜ் அரசுக்குத் தேவை யான பணத்தை ஈடுகட்ட முயற்சித்தார். ஆனால் மிதவாதக் கட்சியினரும், தொழிற்கட்சியினரும் தங்கள் கட்சியின் நலன் கருதி மறைமுகவரிகளின் மூலம் அரசு தேவையான பணத்தைப் பெற முயற்சி செய்ய வேண்டுமென ஆலோசனை வழங்கினர். இதனால் ஆளும் கட்சியினரிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றினாலும் லாயிட் ஜார்ஜ் மிகத் தீவிரமாக 1989-ல் சில நேர்முக வரிகளைச் செல்வந்தர்களின் மீது திணித்து அதன் மூலம் சமூகச் சட்டங்களைச் செயல்படுத்த முயற்சி செய்தார். செல் வந்தர்களுக்கு அதிக வரியை விதிப்பதன் மூலம் மேலும் ஒரு சமூகச் சீர் திருத்தத்தை மேற்கொள்ள நினைத்தார். எனவே இவர் வழக்கமாக இருந்து வரும் முத்திரை வரியுடன் எக்ஸைஸ் வரி (Excise Tax), வருமான வரி, சொத்துக்களை அடையும் உரிமை பெறும் வரி, (Inheritance Tax) போன்றவற்றையும், உந்துவண்டிகள் (Motor Cars), தரிசு நிலங்கள்மீது வரி, சொத்து வரி ஆகிய தனி வரிகளையும் விதிக்குமாறு பாராளுமன்றத்துக்கு ஆலோசனை கூறினர். அத்துடன் தீயமுறையில் கைப்பற்றப் பட்ட சொத்துக்களைப் பொதுவாக நாட்டு மக்களுக்குப் பகிர்ந் தளிக்க நிலப் புரபுக்கள் முன் வர வேண்டுமென்று கருத்துத் தெரிவித்தார். தொழிற் கட்சியினரும், தீவிர மிதவாதக் கட்சி யினரும் இதனைப் பெரிதும் ஆதரித்தனர். ஆனால் பழமை விரும்பிகள் இவை நீதிக்குப் புறம்பானவை என்றும், புரட்சிகர மானவை என்றும் பெரிதும் குறை கூறி எதிர்த்தனர்.

லாயிட் ஜார்ஜின் மசோதா பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் மக்கள் அவையில் காரசாரமான விவாதங்களுக்குப் பின்னர் நிறைவேறியது. ஆனால் மேல்சபையான பிரபுக்கள் சபை இதனை அங்கீகரிக்கவில்லை. பிரிட்டிஷ் பாராளுமன்றப் பாரம் பரியத்தின் படி மக்கள் சபையால் நிறைவேற்றப்பட்ட பண மசோதாக்களை பிரபுக்கள் சபை எவ்விதத் தடையும் கூருமல் அப்படியே அங்கீகரித்து விடுவது வழக்கம். இந் நிலையில் பழமை விரும்பிக் கட்சியினர் இம்மசோதா பண மசோதா

அன்று என்றும், இது சமூகச் சட்ட மசோதா என்றும் கூறி பிரபுக்கள் சபைக்கு ஆதரவளித்தனர். மேலும் இவர்கள் இம் மசோதா பொதுத் தேர்தலின் மூலம் பொதுமக்களது சம்மதத்தைப் பெற வேண்டுமெனக் கூறினர். இம் மசோதாவை பிரபுக்கள் சபை அங்கீகரிக்காததால் மிதவாதக் கட்சியினரின் அரசு, பிரிட்டிஷ் அரசியலமைப்பைப் பிரபுக்கள் புறக்கணித்து விட்டனர் என்று கூறியதுடன், பிரபுக்களுக்குத் தக்க பாடம் புகட்டுமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து 1910 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் புதிய பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. இரு பிரிவினரும். தங்கள் திறமைக்கு ஏற்பத் தங்கள் கருத்துக்களைப் பொது மக்களுக்கு அமைதியான முறையில் எடுத்துக் கூறினர். புதிய தேர்தலில் மிதவாதக் கட்சியினர் சில பழைய இடங்களை இழந்தனர். இருப்பினும் மக்கள் சபையில் மிதவாதக் கட்சியினரும், பழமை விரும்பிக் கட்சியினரும் சம அளவு இடங்களைக் கைப்பற்றினர். மிதவாதக் கட்சியினரின் அமைச்சரவை தொழிலாளர் கட்சியின் ஆதரவையும், அயர்லாந்து தேசிய வாதிகளின் ஆதரவையும் பெற்றது. எனவே லாயிட் ஜார்ஜின் பணமசோதா பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் கீழ்ச் சபையில் நிறைவேறியது; மேல்சபையில் பலத்த எதிர்ப்புகளுக்கிடையே நிறைவேறிச் சட்டமாகியது. ஆனால் இம் மசோதாவின் காரணமாக அரசியல் கட்சிகளிடையேயும், சமூகப் பிரிவினர்களிடையேயும் பல கருத்து வேறுபாடுகள் தோன்றின. பிரிட்டனில் 1910 ஆம் ஆண்டிற்கும் 1914 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் பல சமூகச் சட்டங்கள் விரைவாகச் செயல்பட்ட பொழுது மக்களிடையே கருத்து வேறுபாட்டின் காரணமாகப் புதிய பிரிவுகள் ஏற்பட்டன, இதனால் சிலர் பிரிட்டன் உள்நாட்டுப் போரை நோக்கி விரைவாகப் போய்க் கொண்டிருக்கிறது எனக் கூறினர்.

நிதி மசோதாவின் காரணமாக ஏற்பட்ட பிரச்சினைகள் முடிவடைந்ததும், பிரபுக்கள் சபையின் நிலைபற்றிச் சில பிரச்சினைகள் எழுந்தன. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையில் மிதவாதக் கட்சியினர் எவ்வளவு வலிமை பெற்றிருந்தாலும், இச்சபையில் நிறைவேறும் மசோதாக்கள் யாவும் மேல் சபையின் அங்கீகாரம் பெறவேண்டும் என்பதையும், வாரிசு உரிமை முறையின் காரணமாக மேல் சபையில் பழமை விரும்பிக் கட்சியைச் சார்ந்த பிரபுக்கள் அதிக அளவில் இருப்பதால் அச்சபையின் அங்கீகாரத்தைத்

தங்கள் மசோதா பெருது என்பதையும் மிதவாதக் கட்சியினர் நன்குணர்ந்திருந்தனர். எனவே இவர்கள் பிரபுக்கள் சபையினை ஒடுக்குவதற்குத் தக்க தருணத்தை எதிர்நோக்கி இருந்தனர். மேலும் தீவிர மிதவாதக் கட்சியினரும், தொழிலாளர் கட்சியினரும் ஜனநாயக காலத்தில் பிரிட்டிஷ் மேல்சபை செல்வந்தர்களின் கொடுங்கோலாட்சிக்கு ஆதரவாக இருப்பதாகக் கருதினர். இந்நிலையில் அயர்லாந்து தேசியவாதிகள் தங்கள் நாட்டிற்குத் தேவையான சுயாட்சிச் சட்டங்கள் கீழ்ச்சபையில் நிறைவேற்றப்பட்டாலும், மேல்சபையில் நிச்சயமாக நிறைவேருது என நம்பினர். எனவே மிதவாதக் கட்சியினர், தொழிலாளர் கட்சியினர், அயர்லாந்து தேசியவாதிகள் ஆகிய மூன்று வகையினரும் ஒன்று சேர்ந்து பிரபுக்கள் சபையை ஒடுக்குமாறும், அதன் அதிகாரத்தைக் குறைக்குமாறும் புதிய அரசாங்கத்தை வற்புறுத்தினர்.

எனவே, மிதவாதக் கட்சியின் அரசாங்கம் 1910ஆம் ஆண்டில் மூன்று முக்கிய தீர்மானங்களை உள்ளடக்கிய மசோதா ஒன்றைப் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்தது. முதலாவதாக, பண மசோதாக்கள் யாவும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையால் அங்கீகரிக்கப்பட்டவுடன், மேல்சபை அங்கீகரித்தாலும், அங்கீகரிக்காவிடினும் முறைப்படி நிறைவேற்றப்பட்ட மசோதாவாகவே கருதப்பட்டது. இரண்டாவதாக, எந்த ஒரு பொது மசோதாவும் மக்கள் சபையில் மூன்ரும் முறையாக நிறைவேறினல் பிரபுக்கள் சபை அதனை அங்கீகரித்தாலும் அல்லது மறுத்தாலும் முறைப்படி மன்னர் கையொப்பமிட்டுச் சட்டமாக்க வேண்டும் என வலியுறுத்தியது. மூன்ருவதாக, மக்கள் சபைக்கான தேர்தல் ஏழு ஆண்டுகளுக்கு ஒருமுறை என்பதற்குப் பதிலாக ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டும் என வற்புறுத்தப்பட்டது. இத்தீர்மானங்களைப் பழமை விரும்பிக் கட்சியினர் எதிர்த்தாலும் கீழ்ச்சபை இம்மசோதாவைப் பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்றியது. ஆனல் பிரபுக்கள் சபை இம்மசோதாவை அங்கீகரிக்க மறுத்தது. எனவே அரசர் அரசியலமைப்புப்படி பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு மீண்டும் ஒரு பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட்டார். இரண்டாவது முறையாக 1910ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் மிதவாதக் கட்சியினரும், பழமைவிரும்பிக் கட்சியினரும் சமமாக இடங்களைக் கைப்பற்றினர். மீண்டும் மிதவாதக் கட்சியினரும் தொழிலாளர் கட்சியினரும், அயர்லாந்து தேசியவாதிகளும் ஒன்றுபட்டு, பிரபுக்கள் சபையின் அதிகாரங்களைக் குறைக்கும் புதிய

மசோதாவைப் பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையில் 1911-ல் நிறைவேற்றினர். பழமைவிரும்பிக் கட்சியினரும், பிரபுக்களும் இதனைக் கடுமையாக எதிர்த்தாலும் பின்னால் வரும் தீமைகளை உணர்ந்து சில பிரபுக்கள் இம்மசோதா மேல்சபையில் நிறைவேறுவதற்குத் தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாகப் பாடுபட்டனர். எனவே 1911ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இம் மசோதா புரபுக்கள் சபையில் நிறைவேறி 1911ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டமெனப் பெயர் பெற்றது. இம்மசோதா நிறைவேறியது பிரிட்டிஷ் அரசியலமைப்பின் வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது.

லாயிட் ஜார்ஜின் நிதி மசோதா, 1911ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டம் ஆகியவை நிறைவேற்றப்பட்டதன் காரணமாக 1911ஆம் ஆண்டிற்குப் பிறகு பிரிட்டனில் மிதவாதக் கட்சியினரின் அரசுக்கு அரசியல் பிரச்சினைகள் ஏற்பட்டன. இவை பெரும்பாலும் தொழிலாளர் கட்சியினரும், அயர்லாந்து தேசியவாதிகளும், மிதவாதக் கட்சிக்குப் பாராளுமன்றத்தில் கொடுத்த ஆதரவிற்குக் கைம்மாருகச் சில சலுகைகளை மிதவாதக் கட்சியின் பிரதம அமைச்சரும் லாயிட் ஜார்ஜும் வழங்கிய தனாலேயே ஏற்பட்டன. இவற்றில் முதலாவதாக மக்களாட்சி அடிப்படையில் சில சலுகைகளைத் தொழிலாளர் கட்சிக்கு வழங்குவதற்காகப் பழைய வோட்டுரிமை முறையை மாற்றி 1912-ல் ஒற்றைமாற்று வோட்டுரிமை நடைமுறைப் படுத்தப் பட்டது. அடுத்து மிதவாதக் கட்சியில் பெருமளவில் இருந்த மதச் சார்புடையவர்களைத் திருப்திப் படுத்துவதற்காக அரசாங்கம் அதே ஆண்டில் ஒரு மசோதாவைக் கொண்டு வந்தது. அதன்படி ஆங்கிலேயத் திருச்சபை ஒன்று வேல்ஸில் நிறுவப்பட்டது. இவ்விரு மசோதாக்களும் நிறைவேற்றப்பட்ட அதே சமயத்தில் அயர்லாந்து தேசியவாதிகளுக்குச் சில சலுகைகளை வழங்கும் பொருட்டு பிரிட்டிஷ் அரசாங்கம் அயர்லாந்துக்கான சுயாட்சி மசோதா ஒன்றைத் தயாரித்துப் பாராளுமன்றத்தின் அனுமதிக்கு அனுப்பி வைத்தது. தங்களுக்கு ஆதரவு அளித்தவர்களுக்குச் சில சலுகைகளை வழங்கும் பொருட்டு மிதவாதக் கட்சியினரின் அரசு இயற்றிய மூன்று மசோதாக்களும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் மக்கள் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றன. ஆனால் இம்மூன்று மசோதாக்களையும் மேல்சபையான பிரபுக்கள் சபை நிராகரித்தது. எனவே பாராளுமன்றச் சட்டத்தை 1911-ல் நிறைவேற்றியது போல, மீண்டும் இம்மூன்று சட்டங்களையும் பாராளுமன்றக் கீழ்ச்சபை 1914-ல் அங்கீகரித்தது. இம்

முறையும் பிரபுக்கள் சபை இம்மசோதாக்கள் மூன்றையும் நிராகரித்தது. எனவே மூன்றும் முறையாக இம்மசோதாக்கள் கீழ்ச்சபையில் நிறைவேற்றப்பட்டால் மேல்சபை அங்கீகரித்தாலும் அல்லது நிராகரித்தாலும் முறைப்படி சட்டமாகி நிறைவேற்றப்படும் என்ற நிலை உருவாகியது. இதற்கிடையில் 1913ஆம் ஆண்டிலேயே லாயிட் ஜார்ஜூம், வின்ஸ்டன் சர்ச்சிலும் நிலச்சுவாந்தாரி முறைக்கு எதிராகத் தீவிர முறையில் பிரச்சாரங்களை மேற்கொண்டு வந்தனர். இவர்கள் இச்சமயத்தில் பிரிட்டனில் நடைமுறையிலிருந்த நில உரிமை முறை மாற்றப்பட்டு, நிலங்களில் பாடுபடுபவர்கள் அவர்கள் பாடுபடும் நிலங்களை அனுபவிக்கும் முறையில் புதிய முறை ஒன்றை அமுல்படுத்த வேண்டுமெனக் கூறி வந்தனர். இவர்களது இச்செயல், அணைய இருந்த விளக்கைத் தூண்டிவிட்டது போல, பழமைவிரும்பிகளின் உணர்ச்சிகளைத் தூண்டியது. எனவே பழமைவிரும்பிக் கட்சியினர் மிதவாதக் கட்சியினரின் மீது கொண்டிருந்த பகைமை உணர்ச்சி 1914-ல் அதிகரித்தது. இந்நிலை ஒருபுறமிருக்க, பிரதமரின் ஆலோசகர் நிலச்சுவான்தாரர்களின் போக்கினைக் கடுமையாகக் கண்டித்தார். பழமைவிரும்பிக் கட்சித் தலைவர்கள் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய எல்லா வாய்ப்புக்களையும் பயன்படுத்தி மிதவாதக் கட்சியின் அரசாங்கத்தைச் சீர்குலைப்பதற்கு முயற்சி செய்தனர். அயர்லாந்தின் சுயாட்சித் தன்மை பழமைவிரும்பிக் கட்சியினருக்கு ஒரு வாய்ப்பினை அளித்தது.

இச்சமயத்தில் அயர்லாந்தின் தேசியக் கட்சியை ஜான் ரெட்மண்டு (John Redmond) என்பவர் தலைமை தாங்கி நடத்தி வந்தார். அயர்லாந்தின் பெருவாரி மக்களின் பிரதிநிதியாக இவர் விளங்கினர். இக்கட்சியினர் அயர்லாந்து சுயாட்சி மசோதாவினுல் முழுவதும் திருப்தி அடையவில்லை. இம்மசோதா ஸ்தல ஆட்சி விவகாரங்களுக்கு மட்டில் சுயஆட்சி அந்தஸ்தை அயர்லாந்துக்குக் கொடுத்தது. ஆனுல் இப்பகுதியின் இராணுவம், நிதி போன்ற விவகாரங்களில் பிரிட்டிஷ் பாராளுமன்றமே முழு அதிகாரங்களைப் பெற்றிருந்தது. எனவே அயர்லாந்தின் தேசியவாதிகள் இம்மசோதாவை முழு மனத்துடன் வரவேற்கவில்லை. இருப்பினும் இவர்கள் இம்மசோதாவைத் தற்காலிகமாக ஒப்புக்கொண்டனர். ஆனுல் மசோதாவிற்கு எதிராக அயர்லாந்தில் வேறு இரு சிறுபான்மைப் பிரிவினர் தோன்றினர். இவர்களில் சின்ஃபெயின் (Sinn Fein) என்பவரின் தலைமையிலான தீவிர தேசியவாதிகள் ஒரு பிரிவினர். மற்றொரு பிரிவினர் யூனியனிஸ்ட் (Unionist) எனப்பட்ட

ஐக்கிய வாதிகள். யூனியனிஸ்ட் எனப்பட்ட ஐக்கியவாதிகளின் பிரிவில் அல்ஸ்டெர் (Ulster) என்ற மாநிலத்தில் புராட்டஸ்டண்டுகளே பெருமளவில் காணப்பட்டனர். இவர்கள் அயர்லாந்தின் சுயாட்சி மசோதோ பிரிட்டிஷ் பேரரசின் ஒற்றுமையைக் குலைப்பதற்காக ஏற்பட்ட ஒன்று என்றும், முன்னேற்றக் கருத்துடைய அல்ஸ்டெர் புராட்டஸ்டண்டுகளை இம்மசோதா பிற்போக்கு வாதிகளான அயர்லாந்துக் கத்தோலிக்கர்களுக்கு அடிமைப்படுத்தி விட்டது என்றும் குறை கூறினர். இவ்விரு பிரிவினரில் சின்ஃபெயின் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் மிகச் சிறுபான்மையினராக இருந்தனர். யூனியனிஸ்ட் எனப்பட்ட ஐக்கியவாதிகள் எட்வர்டு கார்சன் (Edward Carson) என்ற பேச்சாளரின் தலைமையின்கீழ் தீவிரமாகப் போராடிவந்தனர். பிரிட்டிஷ் பழமைவிரும்பிகளின் உதவியுடன் இவர்கள் பொதுக் கூட்டங்கள் பல நடத்தி, தாங்கள் ஒரு போதும் கத்தோலிக்கர்கள் நிறைந்த அயர்லாந்துப் பாராளுமன்றத்துக்குக் கட்டுப்பட்டவர்களல்லர் என்ற கருத்தை மக்களுக்கு எடுத்துக் கூறியதுடன், ஓர் இலட்சம் பேர் கொண்ட இராணுவ அமைப்பையும் ஏற்படுத்தி, மிதவாதக் கட்சியினரின் அரசினை எதிர்த்து வந்தனர். இதனால் 1914ஆம் ஆண்டின் வசந்த காலத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் அல்ஸ்டெர் மாநிலத்தில் புராட்டஸ்டண்டுகளின் ஆயுதப் புரட்சி ஒன்றைச் சமாளிக்க நேரிட்டது. இப்புரட்சிக்கு எதிராக ஆங்கில தேசியவாதிகள் நடவடிக்கை எதுவும் எடுக்காததுடன் மறைமுகமாக இப்புரட்சிக்கு உதவியும் வந்தனர். ஆனால் அயர்லாந்து தேசியவாதிகள் இவ்வியக்கத்திற்கு எதிராக ஒரு படையைத் தயார் செய்தனர். இச்சமயத்தில் அயர்லாந்தில் இருந்த இராணுவ அதிகாரிகள் அல்ஸ்டெர் மாநிலப் புரட்சிக்காரர்களுக்குத் தீவிரமாக உதவி வந்தனர். பிரிட்டிஷ் பழமை விரும்பிகளில் புகழ் பெற்றவர்கள் சிலரும் இவர்களின் புரட்சிக்குத் தூண்டுகோலாக அமைந்தனர்.

பிரிட்டனில் கிளர்ச்சிகளுக்கும் உள்நாட்டுப் புரட்சிக்கும் ஏற்ற சூழ்நிலை உருவான சமயத்தில், 1914ஆம் ஆண்டின் கோடை காலத்தில் முதல் உலகப் போர் தொடங்கியது. இப் போரில் ஈடுபடாமல் இருப்பதற்கு பிரிட்டன் மிக விரைவாக முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால் வெளிநாட்டுப் பகைவர்களின் முயற்சிகளும், உள்நாட்டுப் பிரச்சினைகளும் பிரிட்டனை முதல் உலகப் போரில் ஈடுபடுமாறு செய்தன. பழமை விரும்பிகளும், யூனியனிஸ்ட் எனப்பட்ட ஐக்கியவாதிகளும் தங்கள் உள்நாட்டுப் பூசல்களை மறந்து, வெளிநாட்டுக் கொள்கையில்

மிதவாதக் கட்சியின் அமைச்சரவைக்கு முழு ஒத்துழைப்புக் கொடுததனர். அயர்லாந்தின் தேசியத் தலைவரான ரெட்மண்டு தன்னுடைய தேசியவாதிகளின் படைகளும், யூனியனிஸ்ட் எனப்பட்ட ஐக்கியவாதிகளின் படைகளும் பிரிட்டிஷ் படைகளுடன் இணைந்து வெளிநாட்டாரை முறியடிப்பதற்குப் போரிடும் என்று பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையில் அறிவித்துப் புகழ் பெற்றார். இதனால் இவருக்கும் யூனியனிஸ்ட் எனப்பட்ட ஐக்கியவாதிகளின் தலைவர்களுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கம் விருதுகளை வழங்கிக் கௌரவித்ததுடன் அயர்லாந்தின் சுயாட்சி மசோதாவையும் நிறைவேற்றியது. ஆனால் இம் மசோதா முதல் உலகப் போருக்குப் பின்னர்தான் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. இவ்வாறே மற்றொரு மசோதாவைச் செயல்படுத்துவதும் தள்ளி வைக்கப்பட்டது. இச் சமயத்தில் பிரிட்டிஷ் நாட்டின் தேசியக் கருத்துக்களும், ஏகாதிபத்தியக் கொள்கைகளும் பழமை விரும்பிக் கட்சியினருக்கு மட்டும் சொந்தமாக இல்லாமல், பிரிட்டனில் காணப்பட்ட எல்லா அரசியல் கட்சிகளுக்கும் சொந்தமாக இருந்தன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. 1905ஆம் ஆண்டிற்கும் 1914ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தீவிர மிதவாதக் கட்சியினரும், தொழிற் கட்சியினரும் சமூகச் சீர்திருத்தங்களுக்காகவும், மக்களாட்சிக் கருத்துக்களைச் செயல்படுத்துவதற்காகவும் முழுமூச்சுடன் பாடுபட்டனர். மிதவாதக் கட்சியின் தீவிரவாதிகள் முக்கிய அரசு அலுவலகங்களில் செல்வாக்குப் பெற்றனர். இதனால் பிரிட்டிஷ் வெளிநாட்டுக் கொள்கைகளுக்கும், உள்நாட்டுக் கொள்கைகளுக்கும் அதிக வேறுபாடுகள் காணப்படவில்லை. மேலும் அரசுக் கொள்கைகள் அவ்வளவாகக் குறைகூறப் படவில்லை எனலாம். இச் சமயத்தில் பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சராக இருந்தவர் சர் எட்வர்டு கிரே (Sir Edward Grey) என்பவராவார். இவர் 1904ஆம் ஆண்டில் பிரான்சுடன் கொண்ட நட்புறவு 1907-ல் மேலும் வலுவடைந்தது. அவ்வாண்டில் இரஷ்யாவும் பிரிட்டனுடன் நேச உடன்படிக்கை செய்து கொண்டது.

பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சரான சர் எட்வர்டு கிரேயின் கொள்கைகள் இராணுவ அமைச்சராகப் பணிபுரிந்த ரிச்சர்டு ஹால்டேன் (Richard Haldane) என்பவரின் கொள்கைகளால் மேலும் வலுவடைந்தன. ரிச்சர்டு ஹால்டேன் பிரிட்டிஷ் இராணுவத்தை நன்கு பயிற்சி பெற்ற ஒன்றாக ஆக்கியதுடன், பள்ளி மாணவர்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும் இராணுவப் பயிற்சியளித்துப் போர்ப் பயிற்சி பெற்ற இளைஞர்களாக்கி

இராணுவ சேவைக்குத் தயார் நிலையில் வைத்திருந்தார். அத்துடன் அறிவியல் வளர்ச்சியை இராணுவத்தில் புகுத்தி இராணுவத் திறமையை மேலும் வளர்ச்சியடையச் செய்தார். அதனால் பிரிட்டனுக்கும் அதன் கீழ் இருந்த வெளிநாடுகளுக்கு மிடையே போர் ஏற்பட்டாலோ, ஐரோப்பாவில் பிரிட்டனுக்கும் பிறநாடுகளுக்கு மிடையே போர் ஏற்பட்டாலோ பிரிட்டன் வெற்றி யடைவதற்கான வாய்ப்பினை பிரிட்டிஷ் இராணுவ அமைச்சர் ஏற்படுத்தினர்.

பிரிட்டிஷ் இராணுவம் வலுப்படுத்தப்பட்ட அதே சமயத்தில் பிரிட்டிஷ் கப்பற்படையும் வலுப்படுத்தப்பட்டது. அதற்குப் பெரும்பாலும் மிதவாதக் கட்சியினரே முக்கிய காரணமாவார்கள். பிரிட்டன் தன்னுடைய பேரரசுத் தன்மையை நிலை நாட்டுவதற்கும், தன்னுடைய நாட்டின் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும், மூலப் பொருட்களையும் உணவுப் பொருட்களையும் பிற நாடுகளில் இருந்து பெறுவதற்கும், தன்னுடைய நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வெளிநாடுகளில் விற்பனை செய்வதற்கும் தனது கப்பற்படை வலிமையாக இருக்கவேண்டும் என மிதவாதக் கட்சியினர் நன்குணர்ந்திருந்தனர். அத்துடன் ஜெர்மனி கடற்படையில் முதன்மையான நாடாக விளங்குவதற்கு முயன்று வருவதையும், அதனால் பிரிட்டனுக்கும், ஜெர்மனிக்கு மிடையே போர் ஏற்படுவதற்கான சூழ்நிலை உருவாகி வருவதையும் அவர்கள் நன்குணர்ந்திருந்தனர். எனவே மிதவாதக் கட்சியினரின் அரசு கடற்படையை வலிமையடையச் செய்வதில் தீவிர ஆர்வம் காட்டிற்று. சுருங்கக் கூறின் 1905-க்கும் 1914-க்கும் இடைப்பட்ட காலத்தில் பிரிட்டனில் சமூகச் சீர்திருத்தங்களுக்கு அதிக பணம் செலவிடப்பட்டது போலவே, அதைவிட அதிக அளவு பணம் பிரிட்டிஷ் நாட்டின் கடற்படையை வலுப்படுத்துவதற்குச் செலவிடப் பட்டது என்பதனை மறுக்கவியலாது.

2. பிரான்சு, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் அரசுக்கும் திருச்சபைக்கு மிடையே நடைபெற்ற மோதல்களும், போர்ச்சுகல் நாட்டில் முடியாட்சி அகற்றப்படுதலும்

இருபதாம் நூற்றுண்டின் முதல் பத்தாண்டுகளில் வலதுசாரிக் கட்சிகளுக்கும், இடதுசாரிக் கட்சிகளுக்கு மிடையே பிரான்சில் பல மோதல்கள் ஏற்பட்டன. ஒருபுறம் தீவிரவாதிகளும்

சோஷியலிஸ்டுகளும் சேர்ந்து கொண்டு பழைய கருத்துக்களில் நம்பிக்கையுடையவர்களையும், மன்னராட்சிக் கொள்கையில் நம்பிக்கையுடையவர்களையும் எதிர்த்து வந்தனர். இவை பெரும்பாலும் டிரைஃபஸ் விவகாரங்களின் காரணமாகவே நடைபெற்று வந்தன. மேலும் இவ்விவகாரத்தின் காரணமாக டிரைஃபஸ்ஸின் ஆதரவாளர்களில் இடதுசாரியினரிடையேயும், டிரைஃபஸ்ஸின் எதிரிகளில் வலதுசாரியினரிடையேயும் பிளவுகள் ஏற்பட்டன. இவர்களில் டிரைஃபஸ்ஸின் ஆதரவாளர்களில் இடதுசாரிகள் மிகப் பலம் பொருந்தியவர்களாகக் காணப்பட்டனர். இவர்கள் 1899-ல் அமைச்சரவையை அமைத்து வால்டெக் ரூஸோ (Waldeck Rousseau) என்பவரைப் பிரதமராகவும், எமைல் லுபெட் (Emile Loubet) என்பவரைக் குடியரசுத் தலைவராகவும் நியமித்தனர்.

வால்டெக் ரூஸோ டிரைஃபஸ் விவகாரங்களில் அதிக நாட்டம் செலுத்துவதற்குப் பதிலாகப் பழைய கருத்துக்களில் நம்பிக்கை உடையவர்களும், மன்னராட்சிக் கருத்துக்களில் நம்பிக்கையுடையவர்களும் நிறைந்திருந்த இராணுவம், திருச்சபை ஆகிய துறைகளில் தனது கவனத்தைச் செலுத்தினார். இராணுவத்தைப் பொறுத்தமட்டில் உயர் பதவிகளில் மன்னராட்சிக் கொள்கையில் நம்பிக்கையுடையவர்களுக்குப் பதிலாகக் குடியரசுக் கொள்கையில் நம்பிக்கை உடையவர்களையும், கன்சர்வேட்டிவ்களுக்குப் பதிலாகத் தீவிரவாதிகளையும் நியமித்தார். இத்துடன் இராணுவம் அமைச்சரவைக்குக் கட்டுப்பட்டு இயங்குமாறு ஏற்பாடு செய்தார். போரைத் தவிர்க்கும் முயற்சிகள் ஊக்குவிக்கப்பட்டன. எல்லாவற்றிற்கும் மேலாக 1905-ல் மூன்றாண்டுகளாக இருந்த கட்டாய இராணுவப் பயிற்சி இரண்டாண்டுகளாகக் குறைக்கப்பட்டது.

கத்தோலிக்கத் திருச்சபையைப் பொறுத்தமட்டில் மிகத் தீவிரமான கொள்கைகள் பின்பற்றப்பட்டன. வால்டெக் ரூஸோவின் அமைச்சரவை 1901ஆம் ஆண்டில் பிரான்சுப் பாராளுமன்றத்தில் சங்கங்களின் சட்டம் (Associations Act) என்ற ஒன்றை நிறைவேற்றியது. அதன்படி ஒவ்வொரு சமயச் சார்புடைய இயக்கமும் அரசாங்கத்தின் அனுமதி பெற வேண்டுமென்றும், அரசாங்கத்தின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. போப்பாண்டவரும், சமயச் சார்புடைய இயக்கங்களும், சில சாதாரண மனிதர்களும் இதனைத் தீவிரமாக எதிர்த்தனர். இருப்பினும் அரசாங்கத்தை நடத்தி வந்த இடதுசாரிகள்

1901-ல் நடைபெற்ற தேர்தலின் மூலம் பொதுமக்களின் செல்வாக்கைப் பெற்றிருந்ததால் திருச்சபைகளுக்கு எதிரான தங்கள் திட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்தினர். வால்டேக் ரூஸோவுக்குப் பின்னர் எமைல் காம்பெஸ் (Emile Compes) என்ற தீவிரவாதி பிரான்சின் பிரதம அமைச்சராகப் பதவியேற்ருர். அவரது காலத்தில் பிரான்சில் மருத்துவத் துறையில் பணியாற்றிய மதச் சார்புடையவர்களின் இயக்கங்கள், வெளிநாட்டிலாக்காவில் பணியாற்றிய மதச் சார்புடையவர்களின் இயக்கங்கள் ஆகியவை நீங்கலாக, மற்ற எல்லா மதச் சார்புடைய இயக்கங்களுக்கும் அரசாங்க அனுமதியை மறுத்தார்; பெரும்பாலான இயக்கங்களைக் கலைத்தார். இதனுல் இவ்வியக்கங்களில் இருந்த பலர் பிரான்சை விட்டு ஸ்பெயின், போர்ச்சுகல், பிரிட்டன் ஆகிய ஐரோப்பிய நாடுகளுக்கும், ஐக்கிய அமெரிக்க நாட்டிற்கும் அகதிகளாகச் சென்றனர். இதனையடுத்து பிரான்சில் திருச்சபையினுல் நடத்தப்பட்டு வந்த பள்ளிகளுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இதனுல் சாதாரண மனிதர்கள்கூட திருச்சபைப் பள்ளிகளில் ஆசிரியர்களாகப் பணியாற்ற முன்வரவில்லை. மேலும் சாதாரண ஆசிரியர்களுக்குக்கூட மதச் சார்புடைய கல்வி நிலையங்கள் மிக அதிக அளவு ஊதியம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நடவடிக்கைகளின் மூலமாக பிரஞ்சுப் பிரதமர் காம்பெஸ் படிப்படியாக மதச்சார்பற்ற பள்ளிகள் அரசாங்க உதவியின்றி அப்பள்ளிகளின் செலவிலேயே வளர்ச்சியடையச் செய்யப் பாடுபட்டார். இதனுல் 1913-1914ஆம் ஆண்டுகளில் ஏறத்தாழ 45 இலட்சம் பிரஞ்சுக் குழந்தைகள் மதச் சார்பற்ற கல்வி நிலையங்களிலும், 10 இலட்சம் பிரஞ்சுக் குழந்தைகள் மதச் சார்புடைய கல்வி நிலையங்களிலும் கல்வி பயின்று வந்தனர்.

இதற்கிடையில் பிரஞ்சுப் பிரதமர் காம்பெஸ் திருச்சபையையும், அரசாங்கத்தையும் பிரித்து, தனித்தனியாகச் செயல்படுவதற்கு வகை செய்யும் மசோதா ஒன்றை நிறைவேற்றுமாறு பாராளுமன்றத்தைக் கேட்டுக் கொண்டார். தன்னுடைய வேண்டுகோளுக்குப் பொதுமக்களிடையே ஆதரவு திரட்டும் பொருட்டு பிரஞ்சுக் குடியரசுத் தலைவர் லொபெட்டை (Loubet) இத்தாலியின் அரசவைக்கு விஜயம் செய்து, இத்தாலிய அரசரைச் சந்திக்குமாறு ஆலோசனை வழங்கினர். பிரஞ்சுக் குடியரசுத் தலைவரும் இவ்வாலோசனையை ஏற்று 1904-ல் இத்தாலிய அரசரைச் சந்தித்து அளவளாவினர். போப்பாண்டவரை அவமதிக்க வேண்டுமென்பதே இச்

சந்திப்பின முக்கிய நோக்கமாகும். இத்தாலி ஐக்கியமடைந்த பொழுது 1870-ல் ரோம் நகரத்தை இத்தாலி கைப்பற்றிய திலிருந்து போப்பாண்டவர் இத்தாலிய அரசரை ஓர் அரசராக ஏற்றுக்கொள்ளாததுடன் மற்ற நாடுகளில் இருந்த கத்தோலிக்க அரசர்களும் அவரைச் சந்திக்க வேண்டாமெனக் கேட்டுக் கொண்டார். எனவே பிரஞ்சுக் குடியரசுத் தலைவர் இத்தாலிய அரசரைச் சந்தித்தது போப்பாண்டவரை அவமதிக்கும் நிகழ்ச்சியாகவே அமைந்தது. அப்பொழுது பதவியேற்றிருந்த போப் பத்தாம் பயஸ் என்பவர் இச்சந்திப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து பிரஞ்சுப் பாராளுமன்றத்தில் சோஷியலிஸ்டுகளின் தலைவராக இருந்த ஷன் ஷோரஸ் (Jean Jaures) என்பவர் பிரான்சின் உள்நாட்டு விவகாரங்களில் அன்னியர்கள் தலையிடுகிறார்கள் என்றும், போப்பாண்டவர் தன்னுடைய எதிர்ப்புக்கு வருத்தம் தெரிவிக்கவேண்டு மென்றும் கூறினார். இதனையடுத்து காம்பெஸ்ஸின் அமைச்சரவையில் வெளிநாட்டமைச்சராக இருந்த தியோபைல் டெல்காஸி (Theophile Delcasse) என்பவர் வாடிகனில் இருந்த பிரஞ்சுத் தூதரைத் திரும்ப அழைத்துக் கொண்டார்.

இந்நிகழ்ச்சிக்குப் பின் மற்றொரு சோஷியலிஸ்டான அரிஸ்டெடு பிரியன் (Aristide Briand) என்பவர் பாராளுமன்றக் குழு ஒன்றை ஏற்படுத்தித் திருச்சபைகளைப் பிரித்து, தனித்தனியே செயல்படுவதற்கு வழி வகுக்கும் மசோதா ஒன்றினைத் தயார் செய்தார். இந்நிலையில் திருச்சபைகளுக்கும் அரசுக்குமிடையே யான உறவு சீர்கேடுற்றதால் இம்மசோதாவை போப்பாண்டவரின் அனுமதியின்றிப் பாராளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்குத் தக்க சமயம் வாய்த்தது. எதிர்பார்த்த தற்கு மாறாகப் பாராளுமன்றத்தில் இம்மசோதாவின் மீது மிகப் பெரும் அளவில் வாக்குவாதங்கள் நடைபெற்றன. இம் மசோதா விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டபொழுது பிரதமர் காம்பெஸ் பதவி விலக வேண்டுமெனச் சிலர் கோரினர். ஆனால் தீவிரவாதிகளும், சோஷியலிஸ்டுகளும் ஒன்று சேர்ந்து அமைச்சரவைக்கு ஆதரவளித்தனர். இதன் பயனாகப் பிரிவினைச் சட்டம் (Separation Law) 1905 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டது. இச் சட்டத்தின்படி கத்தோலிக்கதிருச்சபையின் பிஷப்புக்களுக்கும், பாதிரிமார்களுக்கும், புராட்டஸ்டண்டுகளுக்கும், யூதமதவாதி களுக்கும் அரசாங்கம் கொடுத்து வந்த சலுகைகளும் ஆதரவு களும் ரத்து செய்யப்பட்டன. சில வயதான கிறிஸ்தவப் பாதிரி மார்களுக்கு அளிக்கப்பட்டு வந்த உதவித் தொகை மட்டும்

தொடர்ந்து வழங்கப்பட்டது. இதுவரை திருச்சபை வழங்கி வந்த பட்டங்களை எல்லாம் அரசாங்கமே வழங்கியது. திருச்சபையின் கோட்பாடுகளுக்குக் கட்டுப்பட்டுச் சாதாரண மக்கள் பொதுவழிபாடு செய்வது மாநில அலுவலர்களின் அதிகாரத்திற்கு விடப்பட்டது. திருச்சபையின் பாதிரிமார்களின் பெயர்களைப் பரிந்துரை செய்யும் பழைய வழக்கத்தை அரசாங்கம் நீக்கிவிட்டது.

புராட்டஸ்டண்டுகளும், யூதர்களும் இப்பிரிவினைச் சட்டத்தை ஓரளவு மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். இவர்கள் கத்தோலிக்கத் திருச்சபைகளுக்கு எதிராகத் தீவிர அரசியல்வாதிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததே இதற்கு முக்கிய காரணமாகும். இவர்கள் பிரான்சில் சாதாரண மக்களுடன் தொடர்பு கொண்டு சில இயக்கங்களை ஏற்படுத்திச் செயல்பட்டு வந்தனர். ஆனால் போப்பாண்டவருக்கும் பிரான்சில் இருந்த பிற முக்கிய கத்தோலிக்கத் திருச்சபைகளுக்கும் இச்சட்டம் ஆட்சேபகரமானதாகத் தோன்றியது. இச்சட்டம் இயற்றப்படும் பொழுது அரசு திருச்சபைகளைக் கலந்தாலோசிக்கவில்லை. திருச்சபையின் முறைகளுக்கு எதிராகத் திருச்சபையின் காரியங்களைச் சாதாரண மனிதர்கள் மேற்கொள்ளுவதற்கு இம்மசோதா வழிவகை செய்தது. அன்றியும் திருச்சபைகளுக்கு உதவுவதற்கு அரசாங்கம் கடமைப்பட்டிருந்த நிலைமாறி, திருச்சபைகளுக்கு உதவுவதை அரசு நிறுத்திக்கொண்டது. பிரான்சில் மிக முக்கிய நிகழ்ச்சியாகக் கருதப்பட்ட பிரெஞ்சுப் புரட்சியின்பொழுது கூட, பாதுகாக்கப்பட்ட திருச்சபையின் சொத்து இப்போது உதாசினப் படுத்தப்பட்டது. எனவே போப் பத்தாம் பயஸ் இம்மசோதாவைக் குறை கூறி இதனைப் பின்பற்ற வேண்டாமெனக் கேட்டுக் கொண்டார். அன்றுமுதல் பிரான்சில் கத்தோலிக்கர்கள் எந்தவிதமான பொது வழிபாட்டிற்கும் ஏற்பாடு செய்யவில்லை.

இதனால் ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் திருச்சபையின் விவகாரங்களில் குழப்ப நிலை நிலவியது. இடது சாரிகளில் மிகத் தீவிரவாதிகள் கத்தோலிக்கக் கட்டிடங்கள் யாவும் மூடப்பட வேண்டுமென்றும், கத்தோலிக்க வழிபாட்டு முறை நிறுத்தப்பட வேண்டுமென்றும் அரசாங்கத்தை வற்புறுத்தினர். ஆனால் மதச் சுதந்திரத்திற்காகவும், கிறிஸ்தவ மதத்தின் பாதுகாப்பிற்காகவும் தங்கள் உயிரையும் தியாகம் செய்து வீர சொர்க்கமடையப் பல கத்தோலிக்கர்கள் தயாராயிருந்தனர்.

ஆனால் 1907-ல் பிரியன் தனது திறமையான முயற்சியின் காரண மாக பிரெஞ்சுப் பாராளுமன்றத்தின் மூலம் சமயத் துறைக்குச் சில சலுகைகளை வழங்கினார். இவற்றின்படி திருச்சபை அதி காரிகள் பொது வழிபாட்டிற்குத் திருச்சபை விதிகளைப் பின் பற்ற அனுமதி வழங்கப்பட்டது. சாதாரண மனிதர்கள் தங்களது பாதுகாப்பிற்காகச் சில சங்கங்களை அமைத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் எவ்வித சங்கங் களும் இச்சலுகைகளின்படி அமைக்கப்படவில்லை. எனினும் இச்சலுகைகளால் 1901 ஆம் ஆண்டிற்கும் 1907 ஆம் ஆண் டிற்கும் இடைப்பட்ட காலத்தில் நிறைவேற்றப்பட்ட திருச்சபை சம்பந்தப்பட்ட மசோதாக்களால் இடதுசாரியினருக்கும், வலது சாரியினருக்கு மிடையே காரசாரமான வாக்குவாதங்கள் நடை பெற்றுவந்தன. உண்மையில் வலதுசாரிகள் ஜனநாயக முறை யில் அமைக்கப்பட்ட மூன்றும் பிரெஞ்சுக் குடியரசிற்கு நெடு நாட்கள் தடையாக இல்லை. இவர்களில் சில பாதிரிமார்களும், குருமார்களும் மன்னராட்சிக் கருத்துக்களில் நம்பிக்கை உடை யவர்களாக இருந்தாலும், புதிய திருச்சபை அதிகாரிகள் குடியரசை ஏற்றுக் கொண்டு, தங்கள் முழுக் கவனத்தையும் மதம் ஒழுக்கம் ஆகியவற்றிலேயே செலுத்தி வந்தனர். இருப் பினும் பொதுவாக எல்லா இடதுசாரிகளும், திருச்சபைகளை ஒடுக்குவதற்கே பாடுபட்டு வருகின்றனர் எனக் கத்தோலிக்க வலதுசாரிகள் கருதி வந்தனர். இந்நிலையில் கிறிஸ்தவ மதத்தில் நம்பிக்கையற்ற சார்லஸ் மௌராஸ் (Charles Maures) என் பவர் பல கத்தோலிக்க பிரபுக்களையும், இளைஞர்களையும் மாற்றி 1906-ல் நிறுவப்பட்ட "பிராங்காய்ஸ் செயல்" (Action Francaise) என்ற ஓர் அமைப்பில் ஈடுபடுத்தினர்.

இந்நிலையில் 1907-ல் இடதுசாரிகளின் அமைப்பு நலி வடையத் தொடங்கியது. எனவே 1906 முதல் 1909 வரை பிரான்சின் பிரதமராக இருந்த ஜார்ஜ் கிளமென்ஸோ (George Clemenceau) குடியரசைக் காப்பாற்றுவதற்குப் பல நட வடிக்கைகளை மேற்காள்ளுவதாக உறுதியளித்து இடதுசாரி களின் அமைப்பு நலிவடைவதைத் தடுக்க முயற்சி செய்தார். ஆனால் இவரது முயற்சிகள் அவ்வளவாகப் பலனளிக்கவில்லை. இடதுசாரிகள் புதிய குடியரசிற்குத் திருச்சபைகளால் ஏற்படும் அபாயங்களைக் குறைகூறி வந்ததுடன், கன்சர்வேட்டிவ்களில் வலதுசாரிகளை விட சோஷியலிஸ்டுகளில் தீவிர இடதுசாரி களைக் கண்டு அஞ்சினர்.

பிரான்சில் சோஷியலிஸ்டுகளின் வளர்ச்சி இயற்கையாக அமைந்தது. மார்க்ஸிஸக் கருத்துக்களைப் பின்பற்றி வந்த

தனிப்பிரிவினர் 1905-ல் தனியாக ஒரு சோஷியலிஸ்ட்டுக் கட்சியை அமைத்தனர். இவர்கள் ஷன் ஷோரஸ் (Jean Jaures), ஜூல்ஸ் க்உஸ்டி (Jules Guesde) ஆகிய இரு தலைவர்களின் தலைமையில் செயல்பட்டு வந்தனர். இவர்கள் வாக்காளப் பெருமக்களைச் சந்தித்து அவர்களது ஆதரவைப் பெறுவதில் அதிக கவனம் செலுத்தினர். இதனால் இவர்கள் பிரெஞ்சுப் பாராளுமன்றத்தின் மக்கள் சபையில் 1906-ல் 54 இடங்களையும், 1910-ல் 76 இடங்களையும், 1914-ல் 101 இடங்களையும் கைப்பற்றினர். அதே சமயத்தில் இடதுசாரிகளை விட மிகத் தீவிரமாக மற்றொரு புரட்சி இயக்கம் வலுவடையத் தொடங்கியது. இதனால் 1914-ல் சுமார் 5 இலட்சம் தொழிலாளர்கள் தங்கள் தொழிற்சங்கங்களின் மூலம் நேரடிச் செயல்களில் ஈடுபட்டு, பிரான்சில் தொழிலாளர்களின் சர்வாதிகார ஆட்சி ஒன்றை ஏற்படுத்த முயற்சி செய்தனர்.

சோஷியலிஸ்டுகளின் கிளர்ச்சிகளை ஒடுக்குவதற்குப் பிரதமர் கிளமென்ஸோ தன்னால் இயன்ற அளவு முழு மூச்சுடன் பாடுபட்டார். பிரான்சின் மிதவாதிகளும், பழமை விரும்பிகளும் பெரும்பாலான தீவிரவாதிகளும், சோஷலிஸ்டுகளுக்கு எதிராகப் பிரதமருக்கு ஆதரவளித்தனர். ஆனால் பழமை விரும்பிகளும் மிதவாதிகளும் அரசின் திருச்சபைக் கொள்கைகளை விரும்பவில்லை. இந் நிலையில் பிரான்சின் நிதி அமைச்சர் ஜோஸப் கெய்லக்ஸ் (Joseph Caillaux) புதிதாக வருமான வரிச் சட்டம் ஒன்றைக் கொண்டுவந்தார். இதனால் மிதவாதிகளும், பழமை விரும்பிகளும் சமூகச் சட்டங்களை இயற்றப் பாடுபடுபவர்களுடன் ஒன்று சேர்ந்துகொண்டு, 1909-ல் கிளமென்ஸோவைப் பதவி நீக்கம் செய்துவிட்டு மீண்டும் பிரியனைப் பிரதமராக்கினர். பிரியன் மீண்டும் பிரதமரானதும் போதுமான அளவு சமூகச் சட்டங்களைக் கொண்டு வந்ததுடன், முதியோர் உதவித்தொகை (Old Age Pensions) என்ற ஒரு திட்டத்தையும் கொண்டுவந்தார். ஆனால் இவர் புரட்சிக்காரர்களின் செயல்களையும், இரயில்வே ஊழியர்களின் வேலை நிறுத்தங்களையும் சமாளிக்க வேண்டி யிருந்தது. இதனால் புதிய பிரதமர் இராணுவத்தைப் பயன்படுத்தி இக் கிளர்ச்சிகளை ஒடுக்கி நற்பெயரைத் தேடிக்கொள்ள முயற்சி செய்தார். ஆனால் இவரது அமைச்சரவையிலும், மக்கள் சபையிலும் பலர் பிரதமரின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாததால் அமைச்சரவை பலவீனமடைந்து, அடிக்கடி புதிய அமைச்சரவைகளை ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலைகள் உருவாயின. இதனால் 1911-க்கும் 1914-க்கும் இடைப்பட்ட காலத்தில், அதாவது முதல் உலகப் போர் ஏற்படுவதற்குச் சில மாதங்கள் முன்வரை, பிரான்சில்

ஒன்பது அமைச்சரவைகள் ஒன்றன்பின் ஒன்றாகப் பதவி வகித்தன.

பிரான்சில் இடதுசாரிகளின் அரசு (மிதவாதக் கட்சியினரின் அரசு) ஏறத்தாழ 1899 முதல் 1905 வரை சில குறிப்பிடத்தக்க மாறுதல்களை ஏற்படுத்தியது. இச் சமயத்தில் பிரான்சில் குடியரசு பாதுகாக்கப்பட்டது; திருச்சபை அதிகாரிகளின் செல்வாக்கு ஒடுக்கப்பட்டது. இராணுவத்தில் மன்னராட்சியில் நம்பிக்கை உடையவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டு அவர்களுக்குப் பதிலாக மிதவாதிகள் நியமிக்கப்பட்டனர். எனவே இக்காலத்தில் வெளிநாட்டுக் கொள்கைகளில் முக்கிய மாறுதல்கள் எதுவும் ஏற்படவில்லை. பெரும்பாலான பிரெஞ்சுக்காரர்கள் அல்சேஸ், லொரைன் ஆகிய பகுதிகளை ஜெர்மனியர்களிடம் இழந்ததையே மறந்துவிட்டு, தங்கள் இராணுவத்தைப் பலப்படுத்துவதிலும், மற்ற ஐரோப்பிய நாடுகளுடன் நட்புறவு கொள்வதிலும் கவனம் செலுத்தினர். இதனால் ஸார்மன்னர்கள் ஆட்சி புரிந்துவந்த இரஷ்யாவுடன் உடன்படிக்கை செய்துகொள்ள முற்பட்டனர். இதனால் தேசியக் கருத்துக்களில் நம்பிக்கையுடைய டெல்கஸ் (Delcasse) என்பவர் 1898 முதல் 1905 வரை தொடர்ந்து பிரான்சின் வெளிநாட்டமைச்சராகப் பணியாற்றி வந்தார். இவர் தன்னுடைய பதவிக் காலத்தில் இரஷ்யாவுடன் நட்புறவு வைத்துக்கொண்டதுடன், இத்தாலியுடனும், பிரிட்டனுடனும் சில ஒப்பந்தங்களைச் செய்துகொண்டார். இதனைப்பற்றி நாம் முன் பகுதியில் மொராக்கோ பிரச்சினைகளை விவாதித்தபொழுது கண்டோம்.

பிரான்சின் வெளிநாட்டமைச்சரான டெல்கஸ் ஆப்பிரிக்காவின் வடபகுதியில் அமைந்துள்ள மொராக்கோவை பிரான்சின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவர 1905-ல் பாடுபட்டதால் பிரான்சுக்கும் ஜெர்மனிக்கு மிடையே பகைமை உணர்ச்சி மேலும் வளர்ச்சி யடைந்தது. இந் நிலையில் மொராக்கோவில் ஜெர்மனிக்கும் மற்ற நாடுகளைப்போலவே சலுகைகளை வழங்க வேண்டுமென்றும், டெல்கஸ் பதவி விலகவேண்டுமென்றும் ஜெர்மனி நிபந்தனை விதித்தது. இந் நிபந்தனையை ஏற்றுக் கொள்ள பிரான்சு தவறினால் தான் பிரான்சுடன் போரிட நேரிடுமென ஜெர்மனி கூறியது. பிரான்சின் வெளிநாட்டமைச்சர் ஜெர்மனியின் நிபந்தனையை ஏற்றுக்கொள்ள மறுத்து, அந் நாட்டுடன் போர் தொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். ஜெர்மனியுடன் பிரான்சு போரிட்டால் ஏற்படக்கூடிய

விளைவுகளை அமைச்சரவையிலிருந்த தீவிரவாதிகள் நன்கு உணர்ந்து, டெல்கஸ்ஸைப்பதவிநீக்கம் செய்துவிட்டு ஜெர்மனி யுடன் சமாதானம் செய்துகொள்ள வேண்டுமென விரும்பினர்.

இந் நிலையில் 1905-ல் ஏற்பட்ட மொராக்கோ பிரச்சினை பன்னாட்டுப் பிரச்சினையாக உருவெடுத்தது. எனவே தங்கள் வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தமட்டில் பிரெஞ்சுப் பாராளுமன்ற அங்கத்தினர்களிடையே இரு வேறுபட்ட கருத் துக்கள் நிலவின. இவற்றில் ஒரு பிரிவினர் ஜெர்மனியுடன் நட்புறவு கொண்டு ஐரோப்பாவின் அமைதியைப் பாதுகாக்க பிரான்சு பாடுபடவேண்டுமெனக் கருதினர். கெய்லாக்ஸ் என்பவர் இதில் மிகத் தீவிரமாக இருந்தார். பல தீவிர சீர்திருத்தவாதிகளும், சோஷியலிஸ்டுகளும் இக் கருத்தினை ஆதரித்தனர். ஆனால் மற்றொரு பிரிவினர் ஜெர்மனியின் ஆக்கிரமிப்புத் தன்மை பிரான்சின் பாதுகாப்பிற்கு அபாயத்தை ஏற்படுத்துமென்றும், பிரான்சு ஜெர்மனியுடன் போரிடுவதற்கு எப்பொழுதும் தயாராக இருக்கவேண்டுமென்றும் கருதினர். கிளமென்ஸோவும், வலதுசாரிகளும், தேசியவாதிகளும், இடது சாரிகளில் தீவிரவாதிகளும் இக் கருத்துக்கு ஆதரவளித்தனர். இவ்விரு பிரிவினரும் பிரான்சில் சம அளவு பலம் பொருந்தி யவர்களாக விளங்கியதால் பிரெஞ்சு அரசாங்கம் எவ்வித முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை.

ஆனால் 1911ஆம் ஆண்டில் மொராக்கோ காரணமாக இரண்டாம் முறையாக ஜெர்மனிக்கும், பிரான்சுக்கு மிடையே ஒரு பிரச்சினை வளர்ச்சி யடைந்தது. அச் சமயத்தில் கெய்லக்ஸ் என்பவர் பிரான்சின் பிரதமராக இருந்தார். இவர் ஆப்பிரிக்காவில் பூமத்தியரேகைப் பகுதியில் ஒரு பகுதியை ஜெர்மனிக்குக் கொடுத்து, ஜெர்மனியுடன் சமாதானம் செய்து கொண்டு மொராக்கோவில் பிரான்சின் ஆதிக்கத்தை நிலை நாட்டினார். இம் முறையும் பிரிட்டன் தலையிட்டுச் சமரசத்திற்கு ஏற்பாடு செய்தது. பெரும்பாலான பிரெஞ்சு தேசியவாதிகள் இதனை விரும்பாததால் கெய்லக்ஸ்ஸைப் பதவி நீக்கம் செய்து விட்டு ரெய்மண்டு பான்கரா (Reymond Poincare) என்பவரைப் பிரெஞ்சுப் பிரதமராக்கினர். புதியபிரதமரான பான்கரா தீவிர நாட்டுப்பற்று மிக்கவர்; சிறந்த கல்விமான்; லொரைன் பகுதி யில் பிறந்த வழக்கறிஞர். இவரது தலைமையின்கீழ் சமூகப் பிரச்சினைகள், மதப் பிரச்சினைகள் ஆகியவை முக்கியத்துவம்

இழந்து, நாட்டின் பாதுகாப்பிற்கு முதலிடம் கொடுக்கப் பட்டது.

ஸ்பெயின்

இருபதாம் நூற்றுண்டின் துவக்கத்தில் ஸ்பெயின் நாட்டில் பல பிரச்சினைகள் ஏற்பட்டன. தொழில் வளர்ச்சியும், ஐக்கிய அமெரிக்க நாட்டுடன் 1898-ல் ஸ்பெயின் நடத்திய போரும், உள்நாட்டுப் போரின் பொழுது தீவிர வலது சாரிகளுக்கும், இடதுசாரிகளுக்கும் இடையே நடைபெற்ற மோதல்களும் ஸ்பெயின் நாட்டின் பிரச்சினைகளுக்கு முக்கிய காரணங்களாகும். இப்பிரச்சினைகள் யாவும் பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஸ்பெயின் நாட்டு வரலாற்றில் ஏற்பட்ட நிகழ்ச்சி களால் தோன்றியவையாகும். இதனுல் இச்சமயத்தில் ஸ்பெயின் நாட்டின் மன்னரான பதின்மூன்றும் அல்பான்ஸோ (Alphonso XIII)வுக்கும், பழமைவிரும்பிகளும் மிதவாதிகளும், சேர்ந்து அமைத்த அல்பான்ஸோவின் அரசாங்கத்திற்கும் தீவிர வலது சாரிகளுக்கும், இடதுசாரிகளுக்குமிடையே சமரசம் செய்து வைப்பது மிகச் சிரமமாயிற்று.

ஸ்பெயின் நாட்டில் குடியரசுக் கட்சியினரும், சோஷிய லிஸ்டுகளும், வேலை நிறுத்தங்களின் மூலம் தங்கள் பிரச்சினை களுக்குத் தீர்வு காண விரும்பிய தொழிற்சங்கத்தினரும், குழப்பங்களினுல் நன்மையடைய விரும்பியவர்களும் தீவிர இடதுசாரிகளாக இருந்தனர். இவர்களில் குடியரசுக் கட்சியினர் பல்கலைக் கழகங்களிலும், மக்கள் இல்லங்களிலும், பாராளு மன்றத்திலும் அதிக செல்வாக்குப் பெற்றிருந்ததுடன் போதிய அளவு பிரதிநிதித்துவமும் பெற்றிருந்தனர். இவர்கள் தொடர்ந்து முடியாட்சியையும், திருச்சபைகளையும் குறைகூறி வந்தனர். மார்க்ஸிஸ சோஷியலிஸ்டுகளும் வேலை நிறுத்தங்களின் மூலம் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண எண்ணிய தொழிற் சங்கத்தினரும் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகளில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தனர். இவர்கள் வேலை நிறுத்தங்களின் மூலம் தொழிலதிபர்களையும், அரசியல் ஊர்வலங் களின் மூலம் அரசாங்கத்தையும் எதிர்த்து வந்தனர். குழப்பங்களின் மூலம் நன்மையடைய விரும்பியவர்கள் நாட்டின் எல்லாத் துறைகளிலும் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சி செய்தனர். இவர்கள் ஸ்பெயின் நாட்டின் தெற்குப் பகுதியில் வாழ்ந்த விவசாயிகளிடமும், பார்ஸிலோனு (Barce-

lona) என்ற நகரத்திலிருந்த தொழிலாளர்களிடமும் ஆதரவு பெற முடியவில்லை. சில சமயங்களில் இவர்கள் அராஜகத்திலும், கொலைகளிலும் ஈடுபட்டனர். உதாரணமாக ஸ்பெயின் நாட்டு அரசர் பிரிட்டனில் 1837 முதல் 1901 வரை அரசியாக இருந்த விக்டோரியா மகாராணியாரின் பேத்தியை 1906-ல் திருமணம் செய்துகொண்ட பொழுது இவர்கள் அரசரைக் கொலை செய்வதற்கு முயற்சி செய்தனர். இச்சமயத்தில் அரசருக்கு அருகிலிருந்த சிலர் இவர்களால் கொல்லப்பட்டனர்.

தீவிர இடதுசாரிகளுக்கு எதிராக ஸ்பெயினில் போராடியவர்கள் தீவிர வலதுசாரிகளாவர். ஸ்பெயின் நாட்டின் அரியணையைக் கைப்பற்றுவதற்கு முயற்சி செய்த கார்லிஸ்டுகளும், கார்லிஸ்டுகளின் ஆதரவாளர்களும் தீவிர வலதுசாரிகளாக இருந்தனர். இவர்கள் பெரும்பாலும் நவாரே என்ற பகுதியில் அதிகமாகக் காணப்பட்டனர். இவர்கள் பதின்மூன்றும் அல்பான்ஸோவை ஸ்பெயின் நாட்டு அரசராக அங்கீகரிக்காததுடன் மிதவாதிகளின் அரசாங்கத்தைக் கடுமையாக எதிர்த்தும் வந்தனர். திருச்சபையில் புகழ் பெற்ற அங்கத்தினர்களும், சமய அமைப்புக்களிலிருந்த பல்வேறுபட்ட மக்களும், இராணுவத்தின் உயர்மட்ட அதிகாரிகள் சிலரும் கார்லிஸ்டுகளுடன் ஏறத்தாழ நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். இவர்களில் உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் சிலர் அரசியல் தகுதியற்றவர்களின் செல்வாக்கைக் குறைப்பதற்கும், ஸ்பெயினில் ஒற்றுமையை ஏற்படுத்தித் தங்கள் நாட்டின் புகழை மேலோங்கச் செய்வதற்கும் இராணுவ சர்வாதிகாரத்தை ஸ்பெயினில் ஏற்படுத்த வேண்டுமெனக் கூறிவந்தனர். இந்நிலையில் ஸ்பெயினில் காட்டலோனியா (Catalonia) பகுதியில் வாழ்ந்து வந்த காட்டலோனியர்களும், பாஸ்க்குகளும் (Basques) தேசிய உணர்ச்சியால் உந்தப்பட்டுச் சில நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இவர்களது நடவடிக்கைகள் அரசருக்கும் அரசுக்கும் மேலும் பல பிரச்சினைகளை ஏற்படுத்தின. பாஸ்க்குகள், காட்டலோனியர்கள் ஆகியோரது தலைவர்கள் அல்பான்ஸோ மைய ஆட்சி முறையில் ஸ்பெயினை ஆட்சி புரிவதைக் குறை கூறி ஸ்பெயின் நாட்டின் கலாச்சாரம், மாநில சுயாட்சி ஆகிய துறைகளில் அதிக உரிமைகள் வேண்டுமெனக் கோரினர். இத்துடன் இவ்விரு பிரிவினர்களிடையே காணப்பட்ட தேசியவாதிகள் இரண்டாகப் பிரிந்து ஒரு பகுதியினர் கார்லிஸ்டுகளுடனும், மற்றொரு பகுதியினர் இடதுசாரிகளில் புரட்சிவாதிகளுடனும் கூட்டு சேர்ந்தனர். இவர்களில் இடதுசாரிகளில் புரட்சிவாதிகள்

சோஷியலிஸ்டுகளுடனும், தொழிற்சங்கங்களுடனும் ஒன்று சேர்ந்து பார்ஸிலோனு (Barcelona) என்ற இடத்தில் 1909–ல் காட்டலோனியர்களின் புரட்சி ஒன்றைத் தொடங்கினர். பழி வாங்கும் உணர்ச்சியால் உந்தப்பட்ட இராணுவத்தினரின் உதவியால் இப்புரட்சி அடக்கப்பட்டது.

இத்தகைய கிளர்ச்சிகளுக் கிடையே அல்பான்ஸோவின் அரசு ஸ்பெயின் நாட்டில் பல இன்னல்களைச் சமாளித்து வந்தது. இக்காலத்தில் பல சமூகச் சட்டங்கள் ஸ்பெயின் நாட்டில் இயற்றப்பட்டன. இச்சட்டங்களின்படி தொழிற் சாலைகள் ஒழுங்குபடுத்தப் பட்டன. கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது; தொழிற்சங்கங்கள் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டன; தொழிலாளர்களுக்கு முதலாளிகள் பாதுகாப்பளிக்க வேண்டுமென அரசு வற்புறுத் தியது. இதனையடுத்து 1902–ல் நிறைவேற்றப்பட்ட கல்வி மசோதா ஒன்றின்படி தொடக்கப்பள்ளிகளைக் கண்காணிக்கும் அதிகாரத்தை அரசு பெற்றது. 1909–ல் நிறைவேற்றப்பட்ட மற்றொரு மசோதா தொடக்கப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவர்களின் வருகைப் பதிவேட்டைப் பதிவு செய்து வர வேண்டுமென்று கட்டாயப் படுத்தியது.

பார்ஸிலோனு என்ற நகரத்தில் 1909–ல் ஏற்பட்ட கார்ட்ட லோனியர்களின் புரட்சி ஒடுக்கப்பட்ட பின்னர், ஜோஸ் கனலி ஜாஸ் (Jose Canalejas) என்பவர் ஸ்பெயின் நாட்டின் பிரதம ரானுர். இவர் சிறந்த கல்விமான்; பொறியியல் வல்லுநர்; ஸ்பெயின் பாராளுமன்றத்தில் மிதவாதக் கட்சியின் தலைவராக விளங்கினுர். இவர் பிரான்சு நாட்டில் இருந்ததைப் போல குடி யரசுக் கட்சியினருடனும், சோஷியலிஸ்டுகளுடனும் சேர்ந்து கொண்டு திருச்சபைக்கு எதிரான மசோதாக்கள் பலவற்றை இயற்றினுர். இம்மசோதாக்கள் அனைத்தும் பெரும்பாலும் இடதுசாரிகள் ஏற்றுக் கொள்ளும் வகையில் இயற்றப்பட்டன. இந்நிலையில் பிரதமர் கனலிஜாஸ், பாட்லாக் சட்டம் (Padlock Law) என்ற ஒரு சட்டத்தைப் பாராளுமன்றத்தில் நிறை வேற்றினுர். இதன்படி புதிய கத்தோலிக்க மதச் சார்புடைய இல்லங்கள் யாவும் அரசாங்க அனுமதி பெற்ற பின்னர்தான் கட்டப்பட வேண்டுமென ஏற்பாடு செய்யப்பட்டது. இதனை யடுத்து பிரதமர் திருச்சபையையும், அரசியலையும் தனித் தனியா கப்பிரித்துச் செயல்படுவதற்காக, போப்பாண்டவருடன் இருந்த அரசாங்க உறவுகளைத் துண்டித்துக் கொண்டார். பிரதமரின்

இச் செய்கைகள் யாவும் இடதுசாரியினரைத் திருப்திப்படுத்தி ஞலும், இடதுசாரிகள் வலதுசாரிகளைக் கடுமையாக எதிர்த்து வந்தனர். இதனுல் இடதுசாரியினரிடையே கருத்து வேறு பாடுகள் தோன்ற ஆரம்பித்தன. வலதுசாரியினர் திருச்சபை களின் மூலமாகவும், இடதுசாரியினர் இராணுவத்தின் உதவி யுடனும் நாடு முழுவதும் தங்கள் கருத்துக்களைத் தீவிரமாகப் பிரசாரம் செய்து வந்தனர்.

இந்நிலையில் 1912-ல் பிரதமர் கனலிஜாஸ் கொலை செய்யப் பட்டார். அரசரைக் கொலை செய்வதற்கும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. எனவே அரசாங்கம் திருச்சபைக்கு எதிராக நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டு போப்பாண்ட வருடன் அரசு உறவுகளைப் புதுப்பித்துக் கொண்டது. இதனுல் மீண்டும் வலதுசாரிகளுக்கும் இடதுசாரிகளுக்கு மிடையே கருத்து வேறுபாடுகள் வளர்ச்சி யடைந்தன. இதனுல் தீவிர வாதிகள் திருச்சபைகளைத் தாக்கத் தொடங்கினர். புரட்சிக் காரர்கள் தீவிரவாதிகளின் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த முயன்றனர். இச்சமயத்தில் அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சியை ஏற்படுத்துவதில் விருப்பமுடையவர்கள் இவ்விரு பிரிவினரில் ஏதாவதொரு பிரிவில் சேருமாறு கட்டாயப் படுத்தப் பட்டனர்.

இதற்கிடையில் உள்நாட்டுக் கிளர்ச்சிகளிலிருந்து மன்னரின் கவனத்தைத் திசை திருப்பும் வகையில் சில வெளிநாட்டுப் பிரச்சினைகள் ஏற்பட்டன. குடியேற்றப் பகுதிகளை இழந்த தற்கு நஷ்டஈடாகப் பதின்மூன்ரும் அல்பான்ஸோவும், அவரது அமைச்சரவையும் ஆப்ரிக்காவில் ஏகாதிபத்தியக் கொள்கை களைப் பின்பற்றினர். பிரான்சு, பிரிட்டன் ஆகிய வல்லரசு களின் ஒத்துழைப்பின் பேரில் மொராக்கோவின் வட கடற் கரைப் பகுதியிலும், மொராக்கோவிற்குத் தெற்கே ஆப்ரிக் காவின் மேற்குக் கடற்கரைப் பகுதியிலும் தனதாதிக்கத்தை நிலைநாட்டியது. ஆனுல் தனதாதிக்கத்தின்கீழ் உள்ள மொராக்கோப் பகுதிகளில் நிர்வாகம் செய்வதற்கு ஒரு பெரும் படையை வைத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டு, அப் பகுதிகளில் இருந்த பூர்வீகக் குடிகளுடனும் போரிட வேண்டியிருந்தது. அரசர் அல்பான்ஸோ தீவிரக் கொள்கை களைக் குறைகூறி வந்தார். இதனுல் ஸ்பெயின் நாட்டில் முதல் உலகப் போருக்கு முன்னர் ஒரு குழப்ப நிலை ஏற் பட்டது. ஸ்பெயின் நாட்டிற்கு அருகில் இருந்த

போர்ச்சுகல் நாட்டிலும் ஸ்பெயின் நாட்டைப் போலவே குடியரசை ஏற்படுத்துவதற்காக 1910 ஆம் ஆண்டில் ஒரு புரட்சி ஏற்பட்டது.

போர்ச்சுகல் நாட்டில் குடியரசுப் புரட்சி

இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் போர்ச்சுகல் நாட்டில் ஏறத்தாழ ஸ்பெயின் நாட்டிலிருந்ததைப் போலவே குழப்பநிலை உருவாகியது. இந்நாட்டில் அரசர் முதலாம் சார்லஸ் (King Charles I) 1889 முதல் 1908 வரை ஆட்சி புரிந்து வந்தார். இவரது திறமையின்மையின் காரணமாகவும், ஒழுக்க மின்மையின் காரணமாகவும் முடியாட்சியை இந்நாட்டு மக்கள் குறைகூறி வந்தனர். அத்துடன் அமைச்சரவையிலிருந்த அரசியல்வாதிகள் ஊழல் நிறைந்தவர்களாக இருந்தனர். இவர்கள் தங்கள் நாட்டு மக்களுக்கு நன்மை தரும் நடவடிக்கைள் எதையும் மேற்கொள்ளாமல் அரசாங்கத்தின் கருவூலத்தைக் காலி செய்தனர். மத்திய வர்க்கத்தில் காணப் பட்ட அறிஞர்களும், உரிமைகளை அனுபவித்து வந்தவர்களும் காவல்துறையில் பாதுகாப்பு ஆயுதங்களைப் பெற்றிருந்த அதிகாரிகளும், அரசியல்வாதிகளின் போக்கிற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனுல் தீவிரக் குடியரசு இயக்கம் ஒன்று உருப்பெற்றது. திறமையற்ற மன்னரான முதலாம் சார்லஸ் கிளர்ச்சிகளை அடக்கும் பொறுப்பைச் சீர்திருத்தக் கருத்துடைய அமைச்சரான ஜோவே ஃபிராங்கோ (Joau Franco) என்ப வரிடம் 1907-ல் ஒப்படைத்தார். அத்துடன் நாட்டின் எல்லா அதிகாரங்களையும் இவ்வமைச்சரிடமே ஒப்படைத்தார். இதனுல் 1908-ல் முதலாம் சார்லஸும் அவரது வாரிசும் லிப்ஸம் நகர வீதிகளில் சென்று கொண்டிருக்கும்பொழுது படுகொலை செய்யப் பட்டனர். அமைச்சர் பிராங்கோ பதவியைத் துறந்து தலை மறைவானுர்.

அரசர் முதலாம் சார்லஸ் கொலை செய்யப்பட்டவுடன் இரண்டாம் மேனுவேல் (Manuel II) என்பவர் போர்ச்சுகல் நாட்டின் மன்னரானுர். நாட்டில் நிலவிய குழப்ப நிலையைச் சமாளிக்கும் திறமை ஒரு சிறிதும் இவரிடம் காணப்படவில்லை எனவே இந்நாட்டின் அரசியல் நிலை மேலும் மோசமாகியது. இந்நிலையில் 1910 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் குடியரசுக் கருத்துடைய புகழ் பெற்ற மருத்துவர் ஒருவர் கொலை செய்யப் பட்டார். இந்நிகழ்ச்சி போர்ச்சுகல் நாட்டில் குடியரசுப் புரட்சியைத் துவக்கி வைத்தது. இப் புரட்சியின்பொழுது

லிஸ்பன் நகரத்திலிருந்த போர் வீரர்கள் ஆயுதம் தாங்கிய காவல் படையினருடன் சேர்ந்து கொண்டு புரட்சிக்காரர்களுக்கு ஆதரவளித்தனர். டாகஸ் (Tagus) என்ற பகுதியில் இருந்த கப்பற் படையினரும் இராணுவத்தினருடன் சேர்ந்து கொண்டு புரட்சிக்காரர்களுக்கு ஆதரவளித்தனர். போர்ச்சுகல் நாட்டில் பெரும்பாலோர் புரட்சிக்கு ஆதரவளித்ததால் இந்நாட்டின் மன்னரான இரண்டாம் மேனுவல் முதலில் ஜிப்ரால்டருக்குத் தப்பி ஓடி, அங்கிருந்து இங்கிலாந்திற்குச் சென்றார். புரட்சிக் காரர்கள் மன்னராட்சியை ஒழித்துவிட்டுக் குடியரசைப் பிர கடனப்படுத்தினர். டாக்டர் தியோஃபிலோ பிராகா என்பவரது தலைமையின் கீழ் ஒரு தற்காலிக அரசாங்கம் அமைக்கப்பட்டது.

தற்காலிக அரசு தனது நடவடிக்கைகளை மேற்கொண் டிருந்தபொழுது போர்ச்சுகல் நாட்டில் ஒரு புதிய அரசிய லமைப்பு ஏற்படுத்தப் பட்டது. இப்புதிய அரசியலமைப்பின் படி 1911ஆம் ஆண்டில் பிரான்சில் ஏற்படுத்தப்பட்ட மூன்றும் பிரஞ்சுக் குடியரசைப் பின்பற்றி, ஜனநாயக முறையில் தேர்ந் தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு சட்டசபை அமைக்கப்பட்டது. மேனுவேல் அர்ரியாகா (Manuel Arriaga) என்பவர் போர்ச்சுகல் நாட்டின் முதல் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்புதிய குடியரசு போர்ச்சுகல் நாட்டில் நிலவிய பழைய மன்னராட்சியைவிட எல்லாத் துறை களிலும் மாறுபட்டிருந்ததது. குறிப்பாகச் சமயத்துறையில் திருச் சபைக்கு எதிரான நடவடிக்கைகளைப் பின்பற்றியது. சமயத் துறையைச் சேர்ந்த ஆண், பெண் இருபாலாரும் போர்ச்சுகல் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இவர்களுடைய சொத் துக்களையெல்லாம் அரசாங்கம் பறிமுதல் செய்தது. பிரான்சு நாட்டைப் பின்பற்றி திருச்சபைகள் அரசாங்கத்தில் ஆதிக்கம் செலுத்திவந்த முறை நீக்கப்பட்டு, இவ்விரு துறைகளும் தனியா கப் பிரிக்கப்பட்டுத் தனித்தனியாகச் செயல்பட நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டன. கல்வி நிலையங்கள் அனைத்திலும் சமயக் கருத்துக்களைப் போதிப்பது தடை செய்யப்பட்டு, நிறுத் தப்பட்டது. மதச் சார்பற்ற குடியரசைப் பாதுகாப்பதற்காகப் பெரும்பாலான பாதிரிமார்கள் கைது செய்யப்பட்டனர். சிலர் நாடு கடத்தப்பட்டனர். பல திருச்சபைகள் மூடப்பட்டன.

ஆனால் புதிய குடியரசு நிலையற்றதாக இருந்தது. குடியரசு பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர், குடியரசின் ஆதரவாளர் கள் பல கோஷ்டிகளாகப் பிரிந்து தங்களுக்குள் சண்டை

யிட்டுக் கொண்டனர். முடியாட்சியில் நம்பிக்கையுடையவர்களும், குடியரசுப் புரட்சிக்கு எதிராகப் பாடுபட்டவர்களும் குடியரசுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யத் தொடங்கினர்.

இந்நிலையில் சோஷியலிஸ்டுகளும், தீவிர புரட்சிக்காரர்களும் மக்களிடையே புரட்சிக் கருத்துக்களைத் தூண்டினர். பல இராணுவ அதிகாரிகளும், கடற்படை அதிகாரிகளும் தங்கள் ஆதரவாளர்களைப் பயன்படுத்தித் தாங்கள் விரும்பாத அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்தனர். சில சமயங்களில் தாங்கள் விரும்பும் பதவிகளில் தங்களைத் தாங்களே நியமித்துக் கொண்டனர். இதனால் 1911க்கும் 1915க்கும் இடைப்பட்ட நான்காண்டுகளில் ஏறத்தாழ பதினொரு அமைச்சரவைகள் மாறி மாறிப் பதவிவகித்தன. எனவே புதிய போர்ச்சுக்கீசியக் குடியரசு நிலையான சீர்திருத்தங்களை ஏற்படுத்தாததுடன், அமைதியையும் நிலைநாட்டவில்லை. நாட்டின் பொருளாதாரம் மிக மோசமான நிலையை அடைந்தது. இதனால் போர்ச்சுகல் முதல் உலகப் போரில் 1916-ல் கலந்து கொண்டபொழுது மேலும் மோசமான விளைவுகள் ஏற்பட்டன.

3. இரஷ்ய-ஜப்பானியப் போரும், அதன் விளைவுகளும்

இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளுக்குள் பிரிட்டனில் பிரிவினைக் கருத்துக்கள் வளர்ச்சியடைந்ததையும், அயர்லாந்தில் உள்நாட்டுப் போர் ஏற்படுவதற்கான சூழ்நிலைகள் உருவானதையும், பிரான்சு, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் உள்நாட்டுப் பிரச்சினைகள் ஏற்பட்டதையும், போர்ச்சுகல் நாட்டில் முடியாட்சி நீக்கப்பட்டுக் குடியரசு நிறுவப்பட்டதையும், நார்வே நாடு ஸ்வீடன் நாட்டிலிருந்து தனி நாடாகப் பிரிந்து செயல்பட்டதையும் பற்றியசெய்திகளை முன்னர்க் கண்டோம். பன்னாட்டுப் போர்களும், புரட்சிக் கருத்துக்களும் வளர்ச்சியடைந்ததன் காரணமாக, கிழக்கு ஐரோப்பிய நாடுகளான இரஷ்யப் பேரரசிலும், உதுமானியப் பேரரசிலும் (Ottoman Empire) ஏற்பட்ட மாறுதல்களும் மேற்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட இம்மாறுதல்களை ஓரளவு மூடி மறைத்தன.

தூரக்கிழக்கு நாடுகளில் அல்லது கிழக்காசிய நாடுகளில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதில் இரஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கிடையே அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டன.

இவை யாவும் பெரும்பாலும் மஞ்சூரியா, கொரியா ஆகிய பகுதி களிலேயே ஏற்பட்டன. இச்சச்சரவுகளைத் தொடர்ந்து பல பன்னாட்டுப் போர்கள் ஏற்பட்டன. ஜப்பான் 1894-1895 ஆகிய ஆண்டுகளில் சீனப் பேரரசின் பகுதிகளில் நுழைந்து கொரியா, பார்மோஸா, தெற்கு மஞ்சூரியாவில் அமைந்துள்ள லியோடங் தீபகற்பம் ஆகிய பகுதிகளிலும், முக்கிய துறைமுகமான போர்ட் ஆர்தரிலும் சீனாவின் செல்வாக்கைக் குறைத்தது. இவ்விவரங் களை ஆசியாவில் ஐரோப்பியர்களின் ஆதிக்கம் ஏற்பட்டதைப் பற்றி விளக்கியபொழுது கண்டோம். ஆனால் இரஷ்யா, பிரான்சு, ஜெர்மனி ஆகிய நாடுகளுடன் நட்புறவு கொண்டு, இவ்விரு நாடுகளின் உதவியுடன் கொரியாவை அல்லது லியோடங் தீபகற்பத்தை ஜப்பான் தன்னுடன் இணைத்துக்கொள் வதைத் தடுத்தது. இதனைத் தொடர்ந்து இரஷ்யா ஆர்தர் துறைமுகத்தில் ஆதிக்கம் செலுத்த முற்பட்டதுடன், கொரியா, மஞ்சூரியா ஆகிய பகுதிகளையும் ஆக்கிரமிக்கத் தொடங்கியது.

இரஷ்யாவின் இச்செய்கை ஜப்பானின் தேசியப் புகழுக்கு ஊறு விளைவித்ததுடன் கிழக்காசியப் பகுதிகளில் தனதாதிக் கத்தை நிலைநாட்ட ஜப்பானைத் தூண்டியது. தான் தனித்து நின்று இரஷ்யாவைத் தோற்கடிக்க முடியும் என்ற நம்பிக்கை ஜப்பானுக்கு இருப்பினும், ஜெர்மனி, பிரான்சு ஆகிய ஐரோப் பிய நாடுகள் இரஷ்யாவிற்கு உதவி செய்வதைக் கட்டுப் படுத்துவதற்காக ஜப்பான் பிரிட்டனுடன் 1902-ல் ஓர் உடன் படிக்கையைச் செய்து கொண்டது. இவ்வுடன்படிக்கைக்குப் பின்னர்தன்னைத் தயார்ப்படுத்திக்கொண்டு 1904ஆம் ஆண்டின் இரண்டாவது மாதத்தில் ஜப்பான் இரஷ்யாவின் மீது போர் தொடுத்தது. ஜப்பான் கடற்படையில் வலிமை பெற்றிருந் ததன் காரணமாகவும், தன்னுடைய படைகளை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மிக விரைவாகவும், எளிதாகவும் கொண்டு செல்லும் வசதிகளைப் பெற்றிருந்ததன் காரணமாக வும் தன்னுடைய எதிரிகளை எளிதாக முறியடிக்கும் வசதி பெற் றிருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக ஜப்பானிய மக்கள் தங் கள் புகழையும் பெருமையையும் நிலைநாட்ட முழுமூச்சுடன் போராடும் உறுதி பெற்றிருந்தனர். எனவே 1904ஆம் ஆண்டு மே மாதத்தில் ஜப்பானியப் படைகள் இரஷ்யப் படைகளைக் கொரியாவின் எல்லைப் பகுதிகளிலிருந்தும், ஆர்தர் துறைமுகத் தின் வடபகுதிகளிலிருந்தும் விரட்டியடித்தனர். இதனைத் தொடர்ந்து ஜப்பானியர்கள் ஜூலை மாதத்தில் இரஷயக் கடற் படையை ஆர்தர் துறைமுகத்திலிருந்தும் விளாடிவோஸ்டக்

துறைமுகத்திலிருந்தும் அப்புறப்படுத்தினர். அடுத்து செப்டம்பர் மாதத்தில் இரஷ்யாவின் முக்கிய இராணுவப் படையை மஞ்சூரியாவிற்குள் பின்வாங்குமாறுசெய்தனர். பின்னர் 1905ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் ஆர்தர் துறைமுகத்தை ஒரு முக்கிய பிரச்சினையாக்கி அதில் வெற்றியும் பெற்றனர். அதே ஆண்டில் பிப்ரவரி, மார்ச்சு ஆகிய மாதங்களில் முக்டென் (Mukden) என்ற இடத்தில் நடைபெற்ற கடுமையான சண்டையில் இரஷ்யப் படைகள் ஜப்பானியப் படைகளால் முற்றிலும் தோற்கடிக்கப்பட்டன. மே மாதத்தில் பால்டிக் கடலிலிருந்து ஜப்பானியக் கடல் வரையில் சுதந்திரமாக வந்த இரஷ்யப் போர்க் கப்பல்கள் ஒடுக்கப்பட்டன. எனவே இரஷ்யா 1905ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஜப்பானுடன் போர்ட்ஸ்மவுத் (Portsmouth) உடன்படிக்கையைச் செய்து கொண்டது. இதில் இரஷ்யாவின் ஸார் மன்னருக்காக கவுண்ட் விட் (Count Witte) என்பவர் கையெழுத்திட்டார். இவ்வுடன்படிக்கையின்படி ஆர்தர் துறைமுகம், லியோடங் தீபகற்பம், சக்காலின் தீவின் தென்பகுதியில் பாதி ஆகிய பகுதிகளை இரஷ்யா ஜப்பானுக்கு விட்டுக் கொடுத்தது. இத்துடன் கொரியாவை ஜப்பானுக்கும், மஞ்சூரியாவைச் சீனாவிற்கும் விட்டுக் கொடுக்க இரஷ்யா ஒப்புக் கொண்டது.

இரஷ்ய-ஜப்பானியப் போரின் (1904-1905) காரணமாக ஒருபுறம் இரஷ்ய அரசாங்கத்தின் திறமையின்மை வெளிப்பட்டது. மறுபுறம் உள்நாட்டுக் கொள்கைகளுக்கு எதிர்ப்பும், வெளிநாட்டுப் போர்களில் தொடர்ந்து தோல்விகளும் இரஷ்ய அரசுக்கு ஏற்பட்டது. மஞ்சூரியப் பகுதிகளில் இரஷ்யப் படைகள் தொடர்ந்து முறியடிக்கப் பட்டன. இதனால் இரஷ்யாவின் தோல்விகளுக்கு இரஷ்யப் பேரரசின் ஸார் மன்னரே முக்கிய காரணமென இரஷ்யர்கள் கருதினர். இரஷ்யப் பேரரசில் ஊழல் மிக்க அதிகாரிகள் நிறைந்திருந்ததும், திறமையற்றவர்கள் இராணுவத் தளபதிகளாக நியமிக்கப்பட்டதும், சாதாரணப் போர்வீரர்களை மன்னர் தேவையில்லாமல் தியாகம் செய்ததும், நாட்டின் பொருளாதாரம் சீர்குலைக்கப்பட்டதும், தேசியப் பெருமை மாசுபடுத்தப்பட்டதும் ஸார் மன்னர் இரஷ்ய மக்களின் வெறுப்புக்குள்ளாவதற்கு முக்கிய காரணங்களாக விளங்கின. மன்னரின் மீது மக்கள் கொண்டிருந்த வெறுப்பு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது. எனவே 1904ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் சார் மன்னரின் முக்கிய பிரதிநிதியாக விளங்கிய பிளீவ் (Plehve) என்பவர் ஒரு வெடிகுண்டு சம்ப

வத்தின் மூலமாகப் படுகொலை செய்யப்பட்டார். இதனையடுத்து நவம்பர் மாதத்தில் ஸெம்ஸ்டோவ்ஸ் என்ற கிராமசபைகளின் முக்கிய பிரதிநிதிகளும், டூமாஸ் என்ற நகரசபைகளின் முக்கிய பிரதிநிதிகளும் ஒன்றுகூடி, இரஷ்ய அரசியலில் சில சீர்திருத்தங்களை ஏற்படுத்தி, அவற்றின் மூலம் தனிமனித உரிமைகளை வழங்கவேண்டுமென்றும், தேசியப் பாராளுமன்றத்தைக் கூட்ட வேண்டுமென்றும் மன்னரை ஒரு விண்ணப்பத்தின் மூலமாகக் கேட்டுக் கொண்டனர்.

இரஷ்யாவின் பேரரசராக இருந்த இரண்டாம் நிகோலஸ் இவ் வேண்டுகோளை நிராகரித்துவிட்டு, பிளீவ்க்குப் பதிலாக டிரிபோவ் (Trepov) என்பவரை இரஷ்யக் காவல்துறையின் தலைமை அதிகாரியாக நியமித்தார். டிரிபோவ்வும் ஏறத்தாழ பிளீவின் குண நலன்களை அப்படியே பெற்றிருந்தார். ஆனால் இவருக்குப் பல ஆதரவாளர்கள் இருந்தனர்.

இந்நிலையில் நடுத்தர வர்க்கத்தினரிடையே மிதவாதக் கருத்துடையவர்கள் ஆங்காங்கே அரசியல் கிளர்ச்சிகளைத் துவக்கியதுடன் உணர்ச்சிகளைத் தூண்டும் வகையில் பிரச்சாரங்களையும் செய்து வந்தனர். தொழிலாளர்கள் அரசியல் அடிப்படையில் மாஸ்கோ, வில்னு போன்ற நகரங்களில் வேலைநிறுத்தங்களை நடத்தினர். தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி ஸார் மன்னரிடம் விண்ணப்பித்துக் கொள்ள, வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் செயின்ட் பீட்டர்ஸ் பர்க் நகரத்தில் ஊர்வலமாகச் சென்றனர். இவ்வூர்வலத்தைத் தலைமை தாங்கி நடத்திச் சென்றவர் கோபன் (Gopan) என்ற சமயத் தலைவர். 1905 ஜனவரி 22ல் மன்னரின் படைகள் இக் கூட்டத்தினரைச் சுட்டுக் கலைத்தனர். இந்நிகழ்ச்சி ஞாயிற்றுக் கிழமையில் நடைபெற்றதால் இது "செஞ்ஞாயிற்றுக்கிழமை" (Red Sunday) என்ற பெயர் பெற்றது. இதனைத் தொடர்ந்து தொழிலாளர்கள் சோஷியலிஸ்டுப் புரட்சித் தலைவர்களின் தலைமையின் கீழ் ஒன்றுதிரண்டு நிலப்பிரபுக்கள், பெருநிலக் கிழார்கள், ஆகியவர்களின் இருப்பிடங்களையும், வீடுகளையும் தீக்கிரையாக்குதல், சூறையாடல் போன்ற செய்கைகளிலீடு பட்டனர். ஸார் மன்னருடைய நெருங்கிய உறவினரான செர்ஜ் பிரபு (Duke Serge) என்பவர் மாஸ்கோ நகரத்தில் 1905ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் கொல்லப்பட்டார். இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து இரஷ்யப் பேரரசு முழுவதிலும் பல அரசியல் கொலைகள் நிகழ்ந்தன.

நாடு முழுவதும் அமைதியின்மை நிலவியதால் ஸார் மன்னர் நிலைமையைச் சமாளிக்க வேண்டி, சிறிதும் சிந்தனை செய்யாமல் பல சலுகைகளை வாரி வழங்கினர். இவற்றின்படி சமயப்பொறை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், தனியார் பள்ளிகளில் போலிஷ் மொழியைப் பயன்படுத்துவதற்கு உரிமைகள் வழங்கவும். யூதர்களுக்கு எதிரான சட்டங்களைத் தளர்த்திக் கொள்வதற்கும் மன்னர் சம்மதித்தார். விவசாயிகளைத் திருப்திப் படுத்துவதற்காக அவர்கள் நிலச்சுவான்தார்களுக்குக் கொடுக்க வேண்டிய கடன்கள் யாவற்றையும் தானே கொடுத்துத் தீர்த்து விடுவதாக உறுதியளித்தார். மிதவாதக் கட்சியினரின் வேண்டுகோளுக்கிணங்க அரசியலமைப்புக் குட்பட்ட அரசாங்கம் ஒன்றை இரஷ்யாவில் நடைமுறைப் படுத்த ஒப்புக்கொண்டார். மேலும் பல கிளர்ச்சிகளுக்குப் பின்னர் இரஷ்ய அரசின் சட்டங்களை இயற்றுவதற்காக, தேசியப் பாராளுமன்றமான டூமாவைக் கூட்ட ஒப்புக் கொண்டார். இதனையடுத்து இரஷ்யாவில் ஏற்பட்ட சூழ்நிலையின் காரணமாக போபிடொனேஸ்டெவ் (Pobedonostsev), டிரிபோவ் (Trepov) ஆகிய அமைச்சர்களையும், இவர்களைப் போன்றவர்களின் கொள்கைகளைப் பின்பற்றிய பிற அமைச்சர்களையும் பதவி நீக்கம் செய்து, கவுன்ட் விட் (Count Witte) என்பவரைப் பிரதமராக்கும் ஆணை ஒன்றை 1905 அக்டோபரில் வெளியிட்டார். இது "அக்டோபர் கோட்பாடுகள்" (October Manifesto) என வழங்கப்படுகிறது. இக்கோட்பாடுகள் தனி மனித உரிமைகளை வழங்குவதற்கும், இரஷ்யப் பாராளுமன்றமான டூமாவின் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும்வாக்குரிமைகளைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்கும் உறுதியளித்தது. இத்துடன் "டூமா"வின் ஒப்புதலின்றி இயற்றப்படும் எந்த ஒரு சட்டமும் இரஷ்யாவில் செல்லத்தக்கதன்று. என்ற உறுதியையும் இது வழங்கியது. இரண்டு மாதங்களுக்குப் பின்னர் "டூமா"வின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்குரிமையைப் பொதுமக்களுக்கு வழங்கும் உறுதிமொழியை நிறைவேற்றினர்.

இதற்கிடையில் 1905ஆம் ஆண்டு நவம்பரில் இரஷ்யப் பேரரசின் ஆட்சிக்குட்பட்டிருந்த பின்லாந்தில், ஒரு பொது வேலை நிறுத்தம் நடைபெற்றது. இதனால் 1899ஆம் ஆண்டு முதல் கூட்டப்படாமல் இருந்த "பின்லாந்து ஸ்டேட்ஸ் ஜெனரல்" என்ற சபை 1905-ல் கூட்டப்பட்டது. இச்சபை பின்லாந்திற்கு ஒரு புதிய அரசியலமைப்பைத் தயாரித்தது. இதன்படி "ஸ்டேட்ஸ் ஜெனரல்" என்ற ஒரே சபை அடங்கிய பாராளு

மன்றம் பின்லாந்தின் சட்டங்களை இயற்ற ஏற்படுத்தப்பட்டது. இதன் அங்கத்தினர்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் (Proporational Representation) என்ற முறையில் வயது வந்த ஆண், பெண் இருபாலராலும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த ஜனநாயக அரசியலமைப்பை இரண்டாம் நிகோலஸ் பின்லாந்தின் அரசாங்கத் தலைவர் என்ற முறையில் 1906-ல் அங்கீகரித்தார்.

இரஷ்யாவில் 1905-ல் மிக வேகமாகப் பரவிய புரட்சி அலை மிக வேகமாகச் செயல்பட்டு 1906-ல் சற்று அமைதியடையத் தொடங்கியது. இரஷ்யா ஜப்பானுடன் போர்ட்ஸ் மவுத் உடன்படிக்கை செய்து கொண்டதற்குப் பின்னர் இரஷ்யப் படைகள் உள்நாட்டில் தங்கள் கவனத்தைச் செலுத்திப் புரட்சியை ஒடுக்கி, அமைதியை நிலைநாட்டப் பயன்படுத்தப் பட்டன. இரண்டாண்டுகள் வெளிநாடுகளுடன் போர் செய்து தோல்விகளை ஒன்றன்பின் ஒன்ருகத் தழுவியதாலும், உள் நாட்டில் புரட்சி செய்து சோர்வடைந்ததன் காரணமாகவும் இரஷ்யர்கள் தங்கள் நாட்டில் அமைதியை ஏற்படுத்திப் பொருளாதார ஸ்திரத் தன்மையை ஏற்படுத்த பேரவாக் கொண்டனர். இத்துடன் புரட்சி செய்தவர்கள் பொறுமையில்லாமல், தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டு தங்கள் வலிமையைச் சேதப்படுத்தினர். கம்யூனிஸ்டுகளில் போல்ஷிவிக்குகளும், மென்ஷிவிக்குகளும் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொண்டனர். இவ்விரு கம்யூனிஸ்டுகளும் சோஷியலிஸ்டுப் புரட்சிக்காரர்களை எதிர்த்தனர். சோஷியலிஸ்டுப் புரட்சிக்காரர்களை மிதவாதிகள் எதிர்த்தனர். மிதவாதிகளிடையே நாளடைவில் கருத்து வேறுபாடுகள் தோன்றி இரு வேறுபட்ட கருத்தினர்களும் தங்களுக்குள் சச்சரவிட்டுக் கொண்டனர்.

தீவிர மிதவாதிகள் "கேடட்டுகள்" என்றழைக்கப்பட்ட அரசியலமைப்புக் குட்பட்ட ஜனநாயக அமைப்பு ஒன்றை ஏற்படுத்தினர். பால் மிலியூகோவ் (Paul Miliukov) என்ற வரலாற்றுப் பேராசிரியர் இவ்வமைப்பின் தலைவரானுர். இவர்கள் ஸார் மன்னரால் கொடுக்கப்பட்ட உறுதிமொழிகளை ஏற்றுக் கொள்ள மறுத்ததுடன், 'டூமா'வின் முதல் கூட்டம் அரசியலமைப்புக் கூட்டமாகச் செயல்பட்டு ஒரு புதிய அரசியலமைப்பைத் தயாராக்க வேண்டுமென்றும், அவ்வரசியலமைப்பில் ஸார் மன்னர் பெயரளவில் மட்டுமே அரசாங்

கத்தின் தலைவராக இருக்கவேண்டுமென்றும், புதிய அரசாங்கத்தின் நிர்வாகப் பொறுப்பு முழுவதும் பாராளுமன்றத்துக்குக் கட்டுப்பட்ட அமைச்சரவையிடம் இருக்கவேண்டுமென்றும் கோரினர். ஆனால் "அக்டோபரிஸ்டுகள்" (Octoberists) என்றழைக்கப்பட்ட பழைய கருத்துக்களைக் கொண்ட மிதவாதிகள் ஸார் மன்னருடைய "அக்டோபர் வேதாந்தங்களை" அப்படியே ஏற்றுக்கொண்டனர். இவர்கள் 'டூமா' எனப்படும் இரஷ்யப் பாராளுமன்றம், ஸார் மன்னரின் யதேச்சாதிகாரப் போக்கைத் தடைசெய்யும் ஓர் அமைப்பாக இருக்கவேண்டுமே ஒழிய, பழங்காலமாக இருந்துவரும்முடியாட்சிக்கு மாற்றரசாகச் செயல்படக் கூடாது என விரும்பினர். எனவே இரஷ்ய மக்களிடையே காணப்பட்ட இத்தகைய கருத்து வேறுபாடுகளின் காரணமாக இரஷ்யாவில் புரட்சிக்காரர்கள் வலிமையிழந்ததுடன், தங்களுக்குள் அடிக்கடி சச்சரவுகளை ஏற்படுத்திக் கொண்டனர்.

புரட்சிக்காரர்களிடையே ஏற்பட்ட அமைதியின்மையைப் பயன்படுத்திக் கொண்டு மன்னராட்சியை இரஷ்யாவில் நிலை நாட்ட வேண்டுமென்ற கருத்துடையவர்களும், புரட்சிக்காரர்களுக்கு எதிராகத் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற கருத்துடையவர்களும் படிப்படியாக வலிமை பெற்றனர். இவர்கள் தங்களுக்கிடையே நிலவிய கருத்து வேறுபாடுகளை மறந்து முடியாட்சியை இரஷ்யாவில் பாதுகாப்பதற்காகப் புரட்சிக்காரர்களுடன் போரிடத் தயாராயினர். பழைய ஆட்சியிலும், கொள்கையிலும் நம்பிக்கையுடையவர்களும், பெரிய எஸ்டேட்டுகளின் உரிமையாளர்களும் இப்பிரிவினர்களிடையே மிக அதிக அளவில் காணப்பட்டனர். இவர்கள் "இரஷ்ய மக்களின் கூட்டமைப்பு" (Union of the Russian People) என்ற ஒரு புதிய கூட்டமைப்பை ஏற்படுத்தினர். பெரிய பிரபுக்களும், பெரு நிலக்கிழார்களும், இராணுவ அதிகாரிகளும், மதத்தில் அதிக நம்பிக்கையுடைய பாதிரிமார்களும், நாட்டுப்பற்று மிக்க ஸ்லவோபைல்களும் (Slavophiles) இவ்வமைப்பில் அதிகமாகக் காணப்பட்டனர். இவ்வமைப்பைச் சேர்ந்தவர்கள் 1906ஆம் ஆண்டின் முற்பகுதியில் புரட்சிக்காரர்களுக்கு எதிராக ஓர் இயக்கத்தை நடத்தினர். இவ்வியக்கதைச் சார்ந்த பிரிவுகள் "கருப்புக் கூட்டம்" அல்லது "கருப்பு நூற்றுவர்" (Black bands or Black hundreds) என்றழைக்கப்பட்டனர். இவர்கள் தீவிர நடவடிக்கைகளின் மூலம் புரட்சிக்காரர்களை ஒடுக்க முயற்சித்தனர். மேலும் தீவிரவாதிகளின்

ஆதரவாளர்களுக்கும், யூதர்களுக்கும் எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இவ்வமைப்புக்களின் தலைவர்கள் 1905-ல் அக்டோபர் உறுதிமொழிகளையும், சலுகைகளையும் திரும்பப் பெறுமாறு ஸார் மன்னரான இரண்டாம் நிகோலஸைக் கட்டாயப் படுத்தினர். தன்னுடைய நிலையை வலிமைப் படுத்திக் கொள்ள எற்ற சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஸார் மன்னரும் இவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 1905-ல் தான் வழங்கிய சலுகைகள் அனைத்தையும் 1906 மார்ச்சில் ரத்து செய்தார். அத்துடன் இரஷ்யாவின் அரசியல் சட்டங்களை அந்நாட்டின் பாராளுமன்றமான "டூமா" வில் விவாதிக்காமல் பாராளுமன்றம் கூடாத சமயங்களில் பேரரசின் சட்டங்களைத் தனது அமைச்சர்களின் மூலம் செயல் படுத்தினர். மேலும் இராணுவம், கடற்படை, வெளிநாட்டு விவகாரம் ஆகிய துறைகள் தன்னுடைய விருப்பத்திற்குக் கட்டுப்பட்டு நடக்குமாறு செய்யும் ஆணை ஒன்றைப் பிறப்பித்தார். இதனைத் தொடர்ந்து நாட்டின் வரவு செலவுத் திட்டத்தை "டூமா" என்ற பாராளுமன்றம் ஏற்றுக்கொள்ளா விட்டாலும் செயல்படுத்தும் அதிகாரத்தைத் தனக்கு வழங்கும் ஆணை ஒன்றையும் பிறப்பித்தார். எல்லாவற்றிற்கும் மேலாக இரஷ்யாவின் பிரதம அமைச்சராக இருந்த கவுண்ட்விட் (Count Witte) என்பவரைப் பதவி நீக்கம் செய்துவிட்டுப் பழைய கருத்துக்களில் தீவிர நம்பிக்கையும் வலிமையும் மிக்க பீட்டர் ஸ்டோலிஃபின் (Peter Stolypin) என்பவரை உள்துறை அமைச்சராக்கினர்.

பிளீவின் முறைகளைக் கையாண்டு பீட்டர் ஸ்டோலிஃபின் புரட்சிக்காரர்களின் கிளர்ச்சிகளையும், "டூமா"வையும் ஒடுக்கினர். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட "டூமா" 1906 ல் முதன் முதலாகக் கூடி சில சீர்திருத்தச் சட்டங்களை நிறைவேற்றி மன்னரின் ஒப்புதலுக்காக இவரிடம் அனுப்பியபொழுது, தனது முழு அதிகாரத்தையும் பயன்படுத்தி, டூமாவைக் கலைத்து விட்டுப் புதிய தேர்தல்களுக்கு உத்தரவிட்டார். 'டூமா' வில் உறுப்பினர்களாக இருந்த சுமார் 200 "கேடட்டுகள்" பின்லாந்தில் வைபோர்க் (Viborg) என்ற இடத்தில் ஒன்றுகூடி இதனை எதிர்த்தனர். ஆனல் இவர்கள் முயற்சியினுல் எவ்விதப் பலனும் ஏற்படவில்லை. இவ்வெதிர்ப்பு முயற்சியில் ஈடுபட்ட பலர் தண்டிக்கப் பட்டனர்.

இரண்டாவது முறையாக நடைபெற்ற தேர்தலில் அரசாங்கத்தின் தலையீடு அதிகமாக இருந்ததால் முடியாட்சியை எதிர்ப்

பவர்கள் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 'டூமா' வில் பெரும்பான்மை பலத்தைப் பெற்றனர். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட "டூமா" சீர்திருத்தச் சட்டங்களை இயற்றும் முயற்சியில் ஈடுபட்டதால் மீண்டும் கலைக்கப்பட்டது. ஆனால் மன்னர் இரண்டாம் நிக்கோலஸ் இம்முறை ஓர் அரசியல் சட்டத்தை வெளியிட்டார். இச்சட்டம் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படும் "டூமா", அரசாங்கத்திற்கு எதிராகச் செயல்படுவதைத் தடை செய்ததுடன், வாக்குரிமையையும் கட்டுப்படுத்தியது. புதிய வாக்குரிமையின்படி நிலப் பிரபுக்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் இரஷ்யாவில் அதிக முக்கியத்துவம் பெற்றனர்.

ஸ்டோலிஃபின் விரும்பியது போலவே இரண்டாம் நிக்கோலஸின் தேர்தல் நடவடிக்கைகள் செயல்பட்டன. மூன்றாவது "டூமா" 1907 அக்டோபரில் தேர்ந்தெடுக்கப்பட்டது. இதில் நிலப் பிரபுக்களும், முதலாளிகளுமே பெரும்பாலும் அங்கத்தினர்களாக இருந்தனர். பழைய கருத்துக்களில் நம்பிக்கையுடையவர்களும், "அக்டோபரிஸ்டுகளும்" இப்புதிய 'டூமா' வில் பெரும்பான்மை பலத்தைப் பெற்றிருந்தனர். 'டூமா' ஆலோசனை சபையாகச் செயல் படுவதையே இவர்கள் பெரும்பாலும் விரும்பினர். பாராளுமன்றத்துக்கு வெளியே சோஷியலிஸ்டுப் புரட்சிக்காரர்களும், சோஷியலிஸ ஜனநாயகவாதிகளும் அரசின் கருத்துக்களையும் செயல்களையும் தொடர்ந்து எதிர்த்து வந்தனர். ஆனால் இவர்கள் அரசாங்கத்தை அதிக நாட்கள் அச்சுறுத்த இயலவில்லை. இரஷ்யாவில் 1905-ல் ஏற்பட்ட புரட்சியின் விளைவாக, இரஷ்யப் பேரரசில் ஏற்பட்ட ஒரே மாறுதல், ஜனநாயக அடிப்படையில் பின்லாந்தில் அரசியலமைப்பிற்குட்பட்ட முடியாட்சி அமைக்கப் பட்டது என்பதே என்பதை எவரும் மறுக்க இயலாது.

இரஷ்ய அரசாங்கத்திலும், நிர்வாகத்திலும் 1907ஆம் ஆண்டிற்கும் 1914ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் பழைய முறைகள் பின்பற்றப் பட்டன. அப்பொழுது இரஷ்யப் பாராளுமன்றமான "டூமா" பல இன்னல்களுக் குள்ளாகியது. ஆனால் குறிப்பிடத்தக்க சில சமயங்களில் இதன் ஆலோசனைகள் ஏற்றுக்கொள்ளப் பட்டன. மேலும் பல சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. முதலாளிகள் தங்களிடம் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ஆபத்துக்களினின்றும் பாதுகாப்பளிக்க இன்ஷூரன்ஸ்

திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆரம்பக் கல்வி மதச் சார்புடைய திருச்சபைகளின் மேற்பார்வையின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. ஆனால் பொதுவாக எல்லா முன்னேற்ற நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டது. இரஷ்யப் பாராளுமன்றமான "டூமா" இவற்றை அப்படியே அங்கீகரித்துப் பின்பற்றியது. இதனால் ஸ்டோலிஃபின் பாராளுமன்றத்தின் இடையீடு இல்லாமல் நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், பிளீவைப் போலவே புரட்சிகளை ஒடுக்கத் தீவிர நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். இவர் புரட்சிக்காரர்களை ஒடுக்கியதுடன், சிலரைச் சிறையிலடைத்தும் நாடு கடத்தியும் தண்டித்தார். யூதர்களுக்கும் போலந்துக்காரர்களுக்கும் எதிரான சட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்தினர். இத்தகைய தீவிரக் கொள்கைகளைப் பின்பற்றிய ஸ்டோலிஃபினை, யூத வழக்கறிஞர் ஒருவர் 1911-ல் சுட்டுக் கொன்றார். ஆனால் ஸ்டோலிஃபினின் கொள்கைகள் தொடர்ந்து செயல்படுத்தப் பட்டன.

இதற்கிடையில் ஸார் மன்னரிடம் குருட்டு நம்பிக்கைகள் வளர்ச்சி யடைந்தன. அவர் தனது மனைவியின் ஆடம்பர வேண்டுகோள்களைப் பெரும்பாலும் நிறைவேற்றத் தொடங்கினர். அரசி சாரினாவும் (Tsarina) மிகுந்த உணர்ச்சிவசப்பட்டவராகக் காணப்பட்டார். இந்நிலையில் 1907-ல் இரஸ்புதீன் (Rasputin) என்ற சட்ட சன்னியாசி ஒருவர் இரஷ்யப் பேரரசின் வாரிசும், ஸார் மன்னரின் நோய்வாய்ப்பட்ட மகனுமான இளவரசரை நோயினின்றும் குணமடையச் செய்வதற்காக அரசவைக்குச் சென்றார். இவர் சைபீரியாவில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். இவரது நல்ல உடற்கட்டையும், கம்பீரமான தோற்றத்தையும் கண்ட அரசி சாரினா இக் கபட சந்நியாசியினிடத்து அதிக நம்பிக்கை வைத்ததுடன், இவரை அன்பிற்குரிய நண்பராகவும் நேசித்தார். அத்துடன் இவரைத் தேவ தூதராகவும் அரசியார் கருதினர். பெரும்பாலும் எல்லா முக்கிய பதவிகளிலும் இவரது ஆலோசனையின் பேரிலும் அனுமதியின் பேரிலுமே அதிகாரிகள் நியமிக்கப் பட்டனர். புரட்சிக்காரர்களுக் கெதிரான கருத்துடையவர்களும், இச் சந்நியாசியின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களும் அரசாங்கத்தின் உயர் பதவிகளில் நியமிக்கப் பட்டனர். இதனால் தன்னுடைய கருத்துக்களை இரஸ்புதீன் தன்னால் நியமிக்கப்பட்டவர்களின் மூலம் நிறைவேற்றிக் கொண்டார்.

இச்சமயத்தில் இரஷ்ய மக்கள் இரஷ்ய-ஜப்பானியப் போரில் (1904-1905) இழந்த புகழை மீண்டும் பெறுவதற்காக

முயற்சி செய்தனர். இதனால் 1907-ல் இரஷ்யா பிரிட்டனுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டது. பிரான்சுக்கும் இரஷ்யாவுக்கு மிடையே ஏற்பட்ட இரட்டை ஒப்பந்தம் (Dual Alliance) முக்கூட்டு உடன்படிக்கையாக (Triple Entente) உருப்பெற்றது. இதனைத் தொடர்ந்து 1910-ல் இரஷ்யா வெளிநாட்டமைச்சராக நியமிக்கப்பட்டவரும், ஸ்டோலிஃபின்னுடைய மைத்துனருமான செர்ஜ்சஸோனேவ் (Serge Sazonou) என்பவரின் ஆலோசனையின் பேரில் பால்கன் பகுதிகளில் தீவிரக் கொள்கைகள் செயல்படுத்தப் பட்டன. இந்நிலையில் இரஷ்ய அரசு தேவையற்ற நிலையில் இரஷ்ய இராணுவத்தை மாற்றியமைத்ததுடன் பல முக்கிய இருப்புப் பாதைகளை 1917ஆம் ஆண்டிற்குள் புதிதாக அமைப்பதற்கும் திட்டமிட்டது. அத்துடன் இரஷ்ய அரசு புதிய கப்பற்படை ஒன்றையும் அமைக்கத் தொடங்கியது.

4. இளந் துருக்கியர்களின் புரட்சியும் இத்தாலிய, பால்கன் போர்களும்

இரஷ்யாவில் 1905, 1906 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட புரட்சிகளைப் பின்பற்றி உதுமானியப் பேரரசில் (Ottoman Empire) தேசியப் புரட்சி ஏற்பட்டது. இச்சமயத்தில் துருக்கியில் பெரிதும் மதிக்கத்தக்க அரசியல் தலைவராக விளங்கியவர் கமால் பாஷா (Kiamil Pasha) என்பவராவார். இவர் எகிப்தில் பிறந்து, பயிற்சி பெற்றுப் போர் வீரரானார். பின்னர் 1861-ல் உதுமானிய அரசாங்கப் பணியில் சேர்ந்தார். உதுமானியப் பேரரசில் தேவையான பல சீர்திருத்தங்களைப் புகுத்தவேண்டும் என்பதைப் பன்னாட்களாக உணர்ந்த இவர், 1890க்கும் 1899க்கும் இடைப்பட்ட காலத்தில் உதுமானியப் பேரரசரான இரண்டாம் அப்துல் ஹமீதின் முதலமைச்சரானார். இவர் இரண்டாம் அப்துல் ஹமீதின் முதலமைச்சராகப் பணியாற்றியபோது 1876-ல் இயற்றப்பட்ட அரசியலமைப்பைச் செயல்படுத்துமாறு ஆலோசனை கூறினார். இவ்வாலோசனையை ஏற்றுக்கொள்ள மறுத்த பேரரசர் இவரை 1896-ல் பதவி நீக்கம் செய்தார். இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் சுதந்திரக் கருத்துடைய துருக்கியர்கள் பலர் எப்போதும் இவரைச் சூழ்ந்திருந்தனர்.

தீவிர வாதிகளான பல இளைஞர்களும், தேசியவாதிகளான இளைஞர்கள் பலரும் "இளந் துருக்கியர்கள்" (Young Turks) என்றழைக்கப்பட்ட ஓர் அமைப்பை ஏற்படுத்தினர். இவ்வமைப்பைச் சேர்ந்தவர்கள் பேரரசின் பல பாகங்களில் இரகசியச் சங்கங்கள் பலவற்றை ஏற்படுத்தினர். இச்சங்கங்கள்

பெரும்பாலும் துருக்கிய இராணுவத்தினரிடையே அமைக்கப்பட்டன. இச் சங்கங்களின் வாயிலாக "இளந் துருக்கியர்கள்" உதுமானியப் பேரரசை, நாட்டுப்பற்று மிக்க மக்களையும், நவீன முன்னேற்றங்களையும் கொண்ட ஒரு தேசிய நாடாக மாற்றுவதற்குப் புரட்சி ஒன்றை நடத்த வேண்டுமெனப் பிரச்சாரம் செய்து வந்தனர்.

இளந் துருக்கியர்களுள் மிகத் தீவிரமாகச் செயல்பட்டவர் என்வெர் பெய் (Enver Bey) என்பவராவார். இவர் சலோனிகா (Salonica) என்ற இடத்தில் இராணுவ அதிகாரியாகப் பணியாற்றினர். இவர் தன்னுடன் பணியாற்றிய இதர அதிகாரிகளுடன் ஒன்று சேர்ந்து ஒற்றுமை, வளர்ச்சி ஆகியவற்றிற்கான புரட்சிக் குழு ஒன்றை நிறுவினர். இக்குழு 1908ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் சலோனிகா என்ற இடத்தில் ஓர் இராணுவப் புரட்சியை நடத்தியது. இப் புரட்சிக்காரர்கள் 1876ஆம் ஆண்டு முதல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த புதிய அரசியலமைப்பைச் செயல்படுத்தக் கோரியதுடன், அவ்வாறு அரசியலமைப்பைச் செயல்படுத்த இரண்டாம் அப்துல் ஹமீது மறுத்தால், பதவி நீக்கம் செய்யப்படுவார் என்றும் பேரரசரை அச்சுறுத்தினர். இப்புரட்சியைக் கண்டு அஞ்சிய இரண்டாம் அப்துல் ஹமீது புதிய அரசியலமைப்பைத் தயக்கத்துடன் ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டு அதனைச் செயல்படுத்தத் தொடங்கினர். பத்திரிகைத் தணிக்கை முறையும், வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் நடவடிக்கைகளும் நீக்கப்பட்டன. கமால்பாஷா மீண்டும் முதலமைச்சராக நியமிக்கப்பட்டுப் புதிய அரசியலமைப்பின் பிரதமரானர். இதனை எதிர்த்த சிலர் விரைவில் நசுக்கப்பட்டனர். புதிய அரசியலமைப்பின்படி 1908 டிசம்பரில் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய பாராளுமன்றம் கான்ஸ்டாண்டிநோபிளில் கூடி, பொதுச் சீர்திருத்தங்களின் நன்மை தீமைகளையும், அவற்றைச் செயல்படுத்தும் முறைகளையும் விவாதிக்கத் தொடங்கியது.

அச்சமயத்தில் உதுமானியப் பேரரசுக்கு வெளிநாட்டுப் படையெடுப்புக்களின் மூலம் பல பிரச்சினைகள் தோன்றின. ஆசியப் பகுதியிலிருந்த உதுமானியப் பேரரசில் குர்திஷ்களின் படை புதிய அரசியமைப்புக்கு எதிராகப் புரட்சி செய்தது. இது ஆர்மீனியர்கட்கு எதிராகப் பல புதிய நடவடிக்கைகளை மேற்கொண்டது. அரேபியா, மெஸபடோமியா ஆகிய பகுதிகளில் குழப்பம் நிலவியது. உதுமானியப் பேரரசின் முதலமைச்சருக்கும், தேசியவாதியான என்வெர் பெய்க்குமிடையே கருத்து

வேறுபாடுகள் தோன்றின. உதுமானியப் பேரரசில் நிலவிய குழப்ப நிலையைப் பயன்படுத்திக் கொண்டு ஆஸ்திரியா–ஹங்கேரி, பல்கேரியா ஆகிய நாடுகள், குறைந்து வரும் பேரரசின் புகழை மேலும் குறைக்கும் வகையில் இப்பேரரசின் பல பகுதிகளைத் துருக்கியின் ஆதிக்கத்தில் இருந்து பிரித்தன. இதனால் வெளிநாடுகளிடையே உதுமானியப் பேரரசு தனது மதிப்பையும் பெருமையையும் இழந்தது. பின்னர் 1908 அக்டோபரில் பாஸ்னியா–ஹெர்ஸிகோவினு ஆகிய பகுதிகளில் உதுமானியப் பேரரசின் ஆதிக்கம் நீங்கியது என அறிவித்து, இப்பகுதிகளை ஆஸ்திரியா–ஹங்கேரி தன்னுடன் இணைத்துக் கொண்டது. இதற்குப் பதிலாக 1878 முதல் தான் ஆதிக்கம் செலுத்தி வந்த நோவிபஸார் என்ற பகுதியை உதுமானியப் பேரரசுக்கு வழங்கியது என்பதை முன்னர்க் கண்டோம். இச்சமயத்தில் பல்கேரியாவின் இளவரசர், கிழக்கு ருமேலியாவை உள்ளடக்கிய தன்னுடைய நாடு முழுவதும் சுதந்திரமடைந்து விட்டது என அறிவித்து, அச் சுதந்திர பல்கேரிய நாட்டின் மன்னர் என்ற பட்டப் பெயரைத் தானே சூட்டிக் கொண்டார். பேரரசர் வேறுவழியின்றி இதனை ஏற்றுக்கொண்டதுடன், பாஸ்னியா–ஹெர்ஸிகோவினு ஆகிய பகுதிகளையும் போரிடாமல் விட்டுக் கொடுத்தார். இதனால் சீர்கெட்ட நிலைமையில் இருந்த உதுமானியப் பேரரசு மிக மோசமான நிலையை அடைந்தது.

இதனைத் தொடர்ந்து ஒற்றுமை, வளர்ச்சி ஆகியவற்றிற்கான குழுவும், என்வெர் பெய்யும் ஒன்றுசேர்ந்து இராணுவத்தின் உதவியுடன் 1909 ஏப்ரலில் இரண்டாவது முறையாகப் புரட்சி ஒன்றைத் துவக்கினர். இச்சமயத்தில் இரண்டாம் அப்துல் ஹமீது பதவி நீக்கம் செய்யப்பட்டுச் சிறைப் படுத்தப்பட்டார். இவரது மூத்த சகோதரர், ஐந்தாம் முகமது (Mohammad V) என்ற பட்டப் பெயருடன் பெயரளவில் சுல்தானுக்கப் பட்டார்.கமால்பாஷாவின் அமைச்சரவையில் இளந் துருக்கியர் பலர் அமைச்சர்களாக நியமனம் செய்யப் பட்டனர். புதிய அரசியலமைப்பின்படி ஏற்படுத்தப்பட்ட பாராளுமன்றம் தேசிய சபையாக மாற்றப்பட்டது.

உதுமானியப் பேரரசு 1909க்கும் 1918க்கும் இடைப்பட்ட காலத்தில் இளந் துருக்கியர்களின் ஒற்றுமை, வளர்ச்சி ஆகியவற்றிற்கான குழுவின் மூலம் இராணுவ சர்வாதிகார முறையில் ஆளப்பட்டது. அப்பொழுது என்வெர் பெய் என்பவர் "என்வெர் பாஷா" (Enver Pasha)வாகப் பதவி உயர்த்தப்பட்டு முக்கிய பங்கு வகித்தார். உதுமானியப் பேரரசைத் தேசிய

மயமாக்குவதும், அதன்மூலம் உண்மையான துருக்கிஸ்தானத்தை ஏற்படுத்துவதும் இளந் துருக்கியர்களின் முக்கிய நோக்கமாக இருந்தது. எனவே இவர்கள் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த போது துருக்கிய மொழி பேரரசின் அலுவலக மொழியாக்கப்பட்டது. துருக்கியின் தேசியக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பள்ளிகளில் கல்வி முறை மாற்றியமைக்கப்பட்டது. அத்துடன் எல்லாத் துருக்கியக் குடிமக்களுக்கும் கட்டாய இராணுவப் பயிற்சியை அளிக்கும் ஆணை ஒன்று பிரகடனப் படுத்தப்பட்டது. இதனால் அரேபியர்கள் துருக்கியர்களுக்குச் சமமாகவும், கிறிஸ்துவர்கள் முகமதியர்களுக்குச் சமமாகவும் அந்தஸ்து பெற்றனர். இளந் துருக்கியர்களுக்கு ஆதரவாகத் துருக்கிய இராணுவம் செயல்பட்டு அவர்களின் விருப்பங்களையும், கொள்கைகளையும் நிறைவேற்றியது.

உதுமானியப் பேரரசைத் துருக்கியமயமாக்கும் இளந் துருக்கியர்களின் முயற்சி பேரரசிற்கு மேலும் பல பிரச்சினைகளை உண்டாக்கியது. உதுமானியப்பேரரசில் துருக்கிய ரல்லாதவர்கள் பலர் துருக்கிய தேசியக் கருத்துக்களுக்குத் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது. இதனால் அரேபியாவில் இருந்த முகம்மதியர்களும், பால்கன் பகுதியில் இருந்த கிறிஸ்துவர்களும் இளந் துருக்கியர்களின் சர்வாதிகாரப் போக்கிற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். பால்கன் மக்களைப் பொறுத்த அளவில் இப்பகுதிக்கு அருகில் இருந்த கிரீஸ், செர்பியா, மான்டநெக்ரோ, பல்கேரியா போன்ற நாடுகளிலிருந்த மக்கள் இளந் துருக்கியர்களின் நடவடிக்கைகளை எதிர்ப்பதற்குப் பல்கேரிய மக்களுக்கு உதவினர். எனவே துருக்கிய அரசுக்கு மேலும் மேலும் எதிர்ப்புக்கள் பெருகின. இதனால் துருக்கியப் பேரரசில் பல அந்நிய நாடுகள் தலையிட ஆரம்பித்தன.

இந்நிலையில் 1911 செப்டம்பரில் வட ஆப்பிரிக்காவில் உதுமானியப் பேரரசுக்கு உட்பட்டிருந்த திரிபோலி, சிரீனகா (Cyrenaica) ஆகிய பகுதிகளை இத்தாலி தனதாதிக்கத்தின் கீழ்க் கொண்டுவரப் போவதாக அறிவித்தது. எனவே, இளந் துருக்கியர்களின் அரசு இத்தாலிக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்து, என்வெர் பாஷவின் தலைமையின்கீழ் ஒரு படையை அனுப்பி, தனது ஆப்பிரிக்கப் பகுதிகளைப் பாதுகாக்க ஏற்பாடு செய்தது. ஆனால் இவ்விரு நாடுகளுக்கு மிடையே ஏற்பட்ட பகைமையால் உதுமானியப் பேரரசுக்கு இருவகையில் நஷ்டமேற்பட்டது. இளந் துருக்கியர்களின் அரசு இத்தாலியப் படைகளைத் தடுத்து நிறுத்தப் போதுமான துருக்கியப் படைகள்

அனுப்பவில்லை. எனவே இத்தாலியப் படைகள் உதுமானியப் பேரரசின் ஆப்பிரிக்கப் பகுதிகளை மிகஎளிதாகக் கைப்பற்றினர். அத்துடன் ஏராளமான துருக்கியப் படைகள் மத்திய தரைக் கடலைக் கடந்து அனுப்பப் பட்டதால் பால்கன் நாடுகள் உதுமானியப் பேரரசின் ஐரோப்பியப் பகுதிகளைக் கொள்ளை கொண்டு செல்லத் துருக்கிய அரசின் செயல் தூண்டுதலாக அமைந்தது.

துருக்கியர்களுக்கு எதிராகப் பால்கன் நாடுகளை ஒன்று திரட்டியவர்களுள் மிக முக்கிய பங்கு வகித்தவர் பல்கேரிய அரசரான ஃபெர்டினண்டு என்பவராவார். தன்னுடைய செயல் களுக்கு ஆஸ்திரியா-ஹங்கேரி எதிர்ப்பு தெரிவிக்காது என்பதை நன்கு உணர்ந்த ஃபெர்டினன்டு, இரஷ்யர்களை மிகத் திறமை யாகப் பயன்படுத்தி, தன்னுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளுமாறு செர்பியா அரசரான பீட்டரைத் தூண்டினர். இதனல் 1912 மார்ச்சில் செர்பியா, பல்கேரியாவுடன் ஓர் உடன் படிக்கை செய்துகொண்டது. இதனை அடுத்து கிரீஸ் நாட்டின் பிரதமரான வெனிஸீலாஸ் (Venizelos) என்பவருடன் கிரேக்க-பல்கேரிய உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டார். இவ்வாறு உதுமானியப் பேரரசுக் கெதிராக பல்கேரியா, செர்பியா, கிரீஸ் ஆகிய நாடுகள் மான்டநெக்ரோவின் ஒத்துழைப்புடன் செயல்படத் தொடங்கின. கொள்ளைப் பொருட்களைப் பல்கேரியாவும், செர்பியாவும் பகிர்ந்துகொள்வ தற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. இத்துடன் வடக்கு அல்பேனியாவும், மாசிடோனியாவின் மேற்குப் பகுதியும் செர்பியாவிற்கு உதவவேண்டுமென்றும், எஞ்சிய மாசிடோனி யப் பகுதியும், தெரேஸும் (Thrace) பல்கேரியாவிற்கு உதவ வேண்டுமென்றும், ஏதாவது தகராறு ஏற்பட்டால் இரஷ்ய அரச ரான ஸார் மன்னர் சமாதான முயற்சிகளை மேற்கொள்ள வேண் டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதனல் பால்கன் நாடு களனைத்திலும் இராணுவம் தயார் நிலையில் இருந்தது. அல்பேனி யர்கள் உதுமானியப் பேரரசுக் கெதிராகப் புரட்சி செய்ய முற்பட்டனர். இந்நிலையில் மிகச் சிறிய பகுதியான மான்ட நெக்ரோ 1912 அக்டோபரில் உதுமானியப் பேரரசுக்கு எதிராகப் போர் தொடுத்தது. இதனைத் தொடர்ந்து பால்கன் நாடு கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து உதுமானியப் பேரரசுக்கு எதிராகப் போரிடத் தொடங்கின.

பால்கன் நாடுகளின் கூட்டு எதிர்ப்பைச் சமாளிக்க உதுமானியப் பேரரசு பல தீவிர நடவடிக்கைகளை மேற்

கொண்டது. கமால்பாஷா என்பவர் மீண்டும் முதலமைச்சராக நியமிக்கப்பட்டார். இவர் முதலமைச்சரானவுடன் துருக்கியின் ஐரோப்பிய நிலப்பரப்பில் எவ்வித மாற்றத்தையும் ஏற்றுக் கொள்ள, தாங்கள் உடன்பட மாட்டோம் என்ற உறுதி மொழியை ஐரோப்பிய வல்லரசுகளிடமிருந்து பெற்றார். பின்னர் திரிபோலியில் என்வெர் பாஷாவின் தலைமையிலிருந்து துருக்கியப் படையைத் தெரேஸுக்கு வருமாறு பணித்தார். தன்னுடைய கவனம் முழுவதையும் பால்கன் பகுதியில் செலுத்துவதற்காக இத்தாலியுடன் லௌசேன் (Lausanne) உடன்படிக்கையை 1912 அக்டோபரில் செய்துகொண்டார். அதன்படி திரிபோலி, சிரினைகா ஆகிய ஆப்பிரிக்கப் பகுதிகளை உதுமானியப் பேரரசு இத்தாலிக்கு விட்டுக் கொடுத்ததுடன், டோடிகனிஸ் (Dodecanese) என்ற பன்னிரண்டு ஈஜிக்கடல் தீவுகளை நிர்வகிக்கும் பொறுப்பையும் இத்தாலிக்கு வழங்கியது.

தன்னுடைய பெரு முயற்சியின் காரணமாக உதுமானியப் பேரரசு பால்கன் நாடுகளின் கூட்டு எதிர்ப்பைச் சமாளிக்கத் தொடங்கினாலும், பால்கன் நாடுகளின் முயற்சிகளைத் தடுத்து நிறுத்தப் போதுமான வலிமை பெற்றிருக்கவில்லை. இருப்பினும் வல்லரசுகளும், பால்கன் நாடுகளும் வியக்கும் வண்ணம் துருக்கியர்கள் தங்கள் எதிரிகளின் படையெடுப்பைச் சமாளித்தனர்.

செர்பிய இராணுவமும், கிரேக்க இராணுவமும் சேர்ந்து சலோனிகா (Salonica), மொனாஸ்டிர் (Monastir) ஆகிய பகுதிகளைக் கைப்பற்றிய பின்னர் மாசிடோனியாவின்மீது படையெடுத்தனர். இச்சமயத்தில் பல்கேரியர்கள் ஏட்ரியநோபிளைக் கைப்பற்றித் துருக்கிய இராணுவத்தைத் தெரேஸ் வழியாகக் கான்ஸ்டாண்டிநோபிள் வரை பின்வாங்கச் செய்தது. போர் தொடங்கிய இரண்டு மாதங்களுக்குள், எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல், உதுமானியப் பேரரசின் அரசு சமாதானம் செய்து கொள்ள விரும்பியது. இதனால் இலண்டனில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்கின.

இந்நிலையில் 1913ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கான்ஸ்டாண்டிநோபிளில் ஒரு புரட்சி ஏற்பட்டது. இதனால் கமால் பாஷா பதவி நீக்கம் செய்யப்பட்டு என்வெர் பாஷா பேரரசின் அரசாங்கத்தில் அதிக செல்வாக்குப் பெற்றார். இருப்பினும் துருக்கியர்கள் அந்நியர்களின் தொல்லைகளிலிருந்து விடுபடவில்லை. ஏட்ரியநோப்பிள் 1913 மார்ச்சில் பல்கேரியர்களிடம் சரணடைந்தது. இதனையடுத்து ஆர்டிக் பகுதியில் துருக்கியர்

களின் முக்கிய பகுதியான ஸ்குடாரி (Seutari) செர்பியர்களிடம் சரணடைந்தது. இறுதியாக 1913 மே மாதத்தில் என்வெர் பாஷா பால்கன் நாடுகளுடன் சமாதானம் செய்துகொள்ள உடன்பட்டார். இது இலண்டன் உடன்படிக்கை என வழங்கப் படுகிறது. இச்சமாதான உடன்படிக்கையில் வல்லரசுகள் சில மாற்றங்களைச் செய்தன. இவ் வுடன்படிக்கையின்படி உதுமானியப் பேரரசு கான்ஸ்டாண்டிநோபிள், டார்டனல்லிஸ் நீங்கலாக எஞ்சிய தனது ஐரோப்பியப் பகுதிகளை இழந்தது.

இலண்டன் உடன்படிக்கையினல், ஒருபுறம் உதுமானியப் பேரரசின் பகுதிகள் கொள்ளையடிக்கப் பட்டன. மறுபுறம் கொள்ளைப் பொருட்களைப் பகிர்ந்துகொள்வதில் வெற்றி பெற்ற நாடுகளிடையே கருத்து வேறுபாடுகளும் பிரச்சினைகளும் ஏற்பட்டன. இதற்குப் பின்னர் பால்கன் நாடுகளிடையே நிலவிய பொருமையும், பேராசையும் முழு அளவில் செயல் படத் தொடங்கின. இதனல் இந்நாடுகள் முரண்பட்ட கொள்கைகளைப் பின்பற்றத் தொடங்கின. வல்லரசுகளின் பேராசையும் அதிகரித்தது.

பால்கன் நாடுகள் துருக்கியர்களை வென்றதால் இரஷ்யாவின் பெருமையும், புகழும் சற்று மேலோங்கியது. ஆனல் இது ஆஸ்தி ரியா-ஹங்கேரி, ஜெர்மனி ஆகிய உதுமானியப் பேரரசின் நட்பு நாடுகட்கு ஓர் இழுக்காக அமைந்தது. அத்துடன் பாஸ்னியா, குரோஷியா ஆகிய பகுதிகளில் வாழ்ந்து வந்த யூகோஸ்லாவ் இனத்தைச் சேர்ந்த மக்களை ஒடுக்கி, அவர்களை இரஷ்யாவிற்கு ஆதரவான கொள்கைகளைப் பின்பற்றும் செர்பியாவின்கீழ் இருக்க வழிவகை செய்தது. எனவே துருக்கியின் மீது வெற்றி பெற்றதன் காரணமாகத் தான் அடைய விரும்பிய துருக்கியின் பலனை செர்பியா அடையவிடாமல் ஆஸ்திரியா-ஹங்கேரி தடை செய்தது. இதனல் பெரிய அளவில் உலகப் போர் ஒன்று உடனடியாக ஏற்படுவதற்கான சூழ்நிலைகள் உருவாயின. ஆனல் வல்லரசுகள் முயற்சி செய்து சமரசம் செய்து வைத்தன. இதன்படி செர்பியா தெற்குப் பகுதியில் தனது எல்லைகளை விரிவு படுத்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டது. ஆனல் ஏட்ரியாடிக் பகுதியில் அல்பேனியா என்ற ஒரு சுதந்திர நாடு அமைக்கப் பெற்று, செர்பியா தனது எல்லைகளை விரிவுபடுத்துவது தடை செய்யப்பட்டது. மேலும் அல்பேனியாவை ஜெர்மன் இளவரசர் ஒருவர் ஆட்சிபுரிவதற்கும், அந்நாட்டில் இத்தாலி சில சலுகைகளைப் பெறுவதற்கும் வழிவகை செய்யப்பட்டது. இவ் வுடன்படிக்கையின்படி ஓர் உலகப் போர் தவிர்க்கப்

பட்டது. ஆனால் மற்றொரு பால்கன் போருக்கு இதுவே காரண மாக அமைந்தது.

இரண்டாம் பால்கன் போர்

பல்கேரியாவுடன் தான் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி அல்பேனியா ஒரு சுதந்திர நாடாக அமைக்கப்பட்டதால், செர்பியா அல்பேனியப் பகுதிகளை இணைத்துக்கொள்வது இயலாமல் போயிற்று. எனவே பல்கேரியாவிற்குக் கொடுப்ப தாகச் சொல்லப்பட்ட மாசிடோனியப் பகுதியிலிருந்து ஒரு பகுதியை செர்பியா தன்னுடைய இழப்புக்கு ஈடாகக் கேட்டது. செர்பிய மன்னரான ஃபெர்டினண்டின் இக்கோரிக்கைக்கு ஆஸ்திரியா-ஹங்கேரி ஆதரவு அளித்தது. ஆனால் அதே சமயத்தில் செர்பியாவின் கோரிக்கையை நிராகரிக்கத் தனது இராணுவ அதிகாரிகளின் மூலம் ஆஸ்திரியா-ஹங்கேரி ஏற்பாடு செய்தது. இந்நிலையில் இரஷ்ய மன்னரான ஸார், பல்கேரியாவிற் கும் செர்பியாவுக்கு மிடையே ஏற்பட்ட இத் தகராறைத் தீர்த்து வைக்க முயற்சி செய்தார். இரு நாடுகளும் தங்கள் கொள்கை களில் பிடிவாதமாக இருந்ததால் இரஷ்ய மன்னரின் முயற்சி தோல்வி யடைந்தது. இத்துடன் இவ்விரு நாடுகளுக்கும் இடையே நிலவிய பிரச்சினைகள் மேலும் சிக்கலாயின. இதற் கிடையில் தெரேஸின் காரணமாக, பல்கேரியாவிற்கும் கிரீஸுக்குமிடையே சச்சரவுகள் ஏற்பட்டன. இதனையடுத்து 1913 ஜூன் மாதத்தில் பல்கேரியாவும் கிரீஸும் சண்டை யிட்டுக் கொண்டன. பல்கேரியர்களுக்கு எதிராக, செர்பியா கிரீஸுக்கு ஆதரவளித்தது. போர் தொடங்கிய சில நாட்களுக் குள் ருமேனியாவும், உதுமானியப்பேரரசும் கிரீஸுடன் சேர்ந்து கொண்டன. பல்கேரியாவின் வளர்ச்சியால் தனது பெருமை குறைந்துவிடும் என்ற அச்சத்தினாலும், மற்ற பால்கன் நாடுகள் தங்கள் பகுதிகளை விரிவுபடுத்தும் பொழுது தானும் தன்னுடைய பகுதியை விரிவுபடுத்த வேண்டும் என்ற ஆர்வத்தின் காரண மாகவும் ருமேனியா கிரீஸிற்கு ஆதரவளித்தது. கிரீஸிற்கும், பல்கேரியாவிற்கு மிடையே நடைபெறும் போரைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, தான் இழந்த பகுதிகளில் சிலவற்றை மீண்டும் கைப்பற்ற வேண்டுமென்ற நோக்குடன் உதுமானியப் பேரரசு கிரீஸுக்கு உதவியது.

இரண்டாவது பால்கன் போரினால் சில குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. போர் தொடங்கிய ஒரு மாதத்திற்குள் (ஜூலை 1913) துருக்கியர்கள் ஏட்ரிய நோப்பிளைக் கைப்

பற்றினர். ருமேனியா, செர்பியா, கிரீஸ் ஆகிய நாடுகளின் இராணுவம் பல்கேரியாவின் மீது படையெடுத்து சோஃபியா (Sofia) வரை முன்னேறியது. தங்களுக்குள் ஒற்றுமை இல்லாத தால் வல்லரசுகள் பல்கேரியாவிற்கு எத்தகைய உதவியும் செய்ய முன்வரவில்லை. எனவே பகைவர்களின் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல் அரசர் ஃபெர்டினண்டு மற்ற பால்கன் நாடுகளுடன் 1913 ஆகஸ்ட் மாதத்தில் ஒரு சமாதானம் செய்து கொண்டார். இது புகாரெஸ்ட் (Bucharest) உடன்படிக்கை என வழங்கப்படுகிறது. இவ் வுடன்படிக்கையின்படி முதல் பால்கன் போரில் கைப்பற்றிய கொள்ளைப் பொருட்களைத் தங்களுக்குள் பகிர்ந்துகொள்ள பல்கேரியா ஒப்புக்கொண்டது. அத்துடன் மாசிடோனியாவின் பெரும் பகுதி செர்பியாவிற்குக் கொடுக்கப்பட்டது. கிரீட் தீவும், சலோனிகா உள்ளிட்ட தெற்கு மாசிடோனியாவும், மேற்கு தெரேஸும் கிரீஸுக்கு வழங்கப் பட்டன. மாசிடோனியாவில் ஒரு சிறு பகுதியும், ஈஜியக் கடல் வரை உள்ள மத்திய கிரீஸ் பகுதியும் பல்கேரியாவுடன் இருக்க அனுமதிக்கப் பட்டது. பின்னர் இப் பகுதிகளில் டோப் ருஜா என்ற பகுதியை ருமேனியாவிற்கும், ஏட்ரியநோபிளை உதுமானிப் பேரரசுக்கும் பல்கேரியா விட்டுக் கொடுத்தது.

விளைவுகள்

1. பால்கன் போர்களின் விளைவாக தேசிய கருத்துக்கள் வளர்ச்சி யடைந்தன. 2. பால்கன் நாடுகளில் வாழ்ந்த மக்க ளிடையே பேராசைகள் வளர்ச்சியடைந்தன. இப்பகுதிகளில் இருந்த அரசுகளும் இவர்களின் பேராசைக்கு உறுதுணையாக இருந்தன. 3. துருக்கியர்களின் தோல்விக்குத் தாங்களே முக்கிய காரணமாக இருந்தும், தாங்கள் மிகக் குறைந்த நன்மையையே அடைந்ததால், எந்த ஒரு வாய்ப்பு ஏற்பட் டாலும் அதைத் தங்கட்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு செர்பியாவின் மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ள பல்கேரி யர்கள் மிக ஆவலுடன் காத்திருந்தனர். 4. அத்துடன் இவர்கள் மாசிடோனியா முழுவதையும் தங்கள் அதிகாரத்தின்கீழ்க் கொண்டுவர உரிய சமயத்தை எதிர்நோக்கி இருந்தனர். 5. துருக்கியர்களிடையே தேசியக் கருத்துக்கள் மிக வேகமாக வளர்ச்சி அடைந்தன. 6. என்வெர் பாஷா தன்னுடைய சர்வாதிகாரப் போக்கை மேலும் பலப்படுத்தி உதுமானியப் பேரரசைத் துருக்கிய மயமாக்கும் தனது முயற்சியைத் துரிதப் படுத்தினர். 7. உதுமானியப் பேரரசிற்கும் ஜெர்மனிக்கு மிடையே இராணுவம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் ஏற்பட்ட நட்புறவு மேலும் வலுவடைந்தது.

5. ஆஸ்திரிய செர்பியப் பிரச்சினைகளும், வல்லரசுகளிடையே போட்டியும்

பால்கன் பகுதிகளில் ஏற்பட்ட மாறுதல்களின் காரணமாகப் பல பிரச்சினைகளும், சச்சரவுகளும் ஏற்பட்டன. அதன்பயனாக செர்பியாவிற்கும் ஆஸ்திரியா-ஹங்கேரிக்கு மிடையே நேரிடையாக மோதல்கள் ஏற்பட்டன. இரஷ்யா, ஜெர்மனி ஆகிய வல்லரசுகளுக் கிடையே மறைமுக எதிர்ப்புக்கள் அதிகரித்தன. பெல்கிரேடில் 1905-ல் ஏற்பட்ட அரண்மனைப் புரட்சியை யடுத்து ஆஸ்திரியாவிற்கு ஆதரவான கொள்கைகளைப் பின்பற்றிய அரசர் அலெக்சாந்தர் நீக்கப்பட்டு, இரஷ்யாவிற்கு ஆதரவான கொள்கைகளைப் பின்பற்றிய பீட்டர் என்பவர் செர்பியாவின் அரசராக நியமிக்கப்பட்டார். அவரது காலத்தில் செர்பிய தேசியக் கருத்துக்கள் மிகவேகமாக வளர்ச்சி யடைந்தன. இராணுவக் கொள்கையில் நம்பிக்கையுடைய நாட்டுப்பற்று மிக்க புதிய தலைமுறையினர் அரசியலில் அதிக செல்வாக்குப் பெற்றனர். பீட்மாண்டை மையமாக வைத்து இத்தாலிய ஐக்கியமும், பிரஷ்யாவை மையமாக வைத்து ஜெர்மனியப் பேரரசும் ஏற்பட்டது போல, செர்பியா தன்னை மையமாக வைத்து ஒரு தேசிய இனம் சார்ந்த வல்லரசை ஏற்படுத்தத் தொடங்கியது. அதன் காரணமாக யூகோஸ்லாவியாவில் இருந்த செர்பியர்களையும், குரோட்டுகளையும், ஸ்லோவென்களையும் ஒன்று சேர்த்து ஒரு தேசிய இயக்கத்தை ஏற்படுத்தியது. உதுமானியப் பேரரசில் ஆஸ்திரிய மொழியைப் பேசிவந்த மாவட்டங்களை மட்டுமல்லாமல், ஹங்கேரியாவில் வாழ்ந்து வந்த செர்பியர்கள், குரோட்டுகள் ஆகியோர்களையும், ஆஸ்திரிய மாநிலங்களான கர்னியோலா, காரிந்தியா, இஸ்திரியா ஆகிய பகுதிகளில் வாழ்ந்த ஸ்லோவென்களையும் தன்னுடைய தேசிய இயக்கத்தில் சேருமாறு செர்பியா தூண்டியது.

இரட்டை முடியாட்சி நாடான ஆஸ்திரியா-ஹங்கேரி செர்பியாவிற் கெதிரான கொள்கைகளைப் பின்பற்றி வந்தது. மேலும் ஆஸ்திரியா-ஹங்கேரி செர்பியாவைப்போல, ஒரே இனத்தைச் சேர்ந்த மக்களை உடைய தேசிய நாடாக விளங்கவில்லை. இந்நாட்டில் மிகப்பழைய ஹாப்ஸ்பர்க் வம்சம், பழைய முறைகளைப் பின்பற்றி ஆட்சிபுரிந்து வந்தது. இந் நாட்டில் பல்வேறுபட்ட இனத்தவர்கள் வாழ்ந்து வந்தனர். இராணுவம், திருச்சபை ஆகியவற்றின் உதவியுடனும்,

ஜெர்மானியர்களின் ஆதரவுடனும், முடியாட்சியில் நம்பிக்கையுடைய மாகியர் (Magyar) ஆதரவுடனும் இந்நாட்டு அரசாங்கம் நடைபெற்று வந்தது. எனவே தன்னுட்டு நிலை அப்படியே நீடித்துவர ஆஸ்திரியா-ஹங்கேரி அரசு பாடுபட்டதுடன், தன்னுட்டு ஒற்றுமையைக் குலைப்பதற்கு எந்த ஒரு நாடாவது செர்பியாவைப் போல முயற்சி செய்தால் அதற்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தயாராக இருந்தது. இந்நிலையில் தேசியக் கருத்துக்கள் அண்டை நாடுகளில் வளர்ச்சி யடைந்ததால், ஹாப்ஸ்பர்க் ஏகாதிபத்தியத்தைக் காப்பாற்றுவது இவ்வரசின் முக்கியமான கடமையாக இருந்தது. ஆனுல் இதற்கிடையில் வேறுசில பிரச்சினைகளும் ஏற்பட்டன.

ஹாப்ஸ்பர்க் பேரரசு, இத்தாலி, ஜெர்மனி ஆகிய நாடுகளின் உதவியைப் பெற்றிருந்தாலும், அதன் மிகப் பெரிய நிலப்பரப்பு, செல்வம், இராணுவ வலிமை ஆகியவற்றின் காரணமாக, ஐரோப்பிய வல்லரசுகளில் ஒன்ருகவே கருதப் பட்டது. அத்துடன் இப் பேரரசு ஜெர்மனியப் பேரரசுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. எனவே பால்கன் நாடுகளில் தேசியக் கருத்துக்கள் வளர்ச்சியடைந்ததன் காரணமாக ஆஸ்திரியா—ஹங்கேரியைக் காட்டிலும் ஜெர்மானியப் பேரரசு பால்கன் நாடுகளில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தது. அத்துடன் உதுமானியப் பேரரசின் பொருளாதாரம், அரசியல், இராணுவம் ஆகிய துறைகளில் ஜெர்மனி அதிக செல்வாக்குப் பெற்றிருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக ருமேனியா, பல்கேரியா, கிரீஸ் ஆகிய நாடுகளின் அரசர்கள் ஜெர்மனி அரச குடும்பத்தினருக்கு மிக நெருங்கிய உறவினர்களாக இருந்தனர். 1903ஆம் ஆண்டிற்குப் பின்னர் செர்பியா மட்டும் ஜெர்மனியின் ஆதிக்கத்திற் குட்பட்டாலும், ஆஸ்திரியா—ஹங்கேரிக்கு எதிராகவும் தனித்தியங்கி வந்தது. செர்பியா ஆஸ்திரியா—ஹங்கேரிக்கெதிரான கொள்கையைப் பின்பற்றியதால், ஆஸ்திரியா—ஹங்கேரியின் நெருங்கிய நட்பு நாடான ஜெர்மனியும் செர்பியாவிற்குப் பகையாகியது. இவ்விரு நாடுகளின் பகைவர்கள் இயற்கையாக செர்பியாவின் நண்பர்களாயினர்.

இது ஒரு புறமிருக்க இரஷ்யா அப்பொழுது செர்பியாவிற்கு உதவ முன் வந்தது. இவ்விரு நாடுகளிலும் வாழ்ந்த மக்கள் பெரும்பாலும் ஸ்லாவ் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தினுலும், உதுமானியப் பேரரசையும், ஹாப்ஸ்பர்க்

பேரரசையும் இவ்விரு நாடுகளும் மேலும் வலிமையற்றனவாக்க விரும்பியதாலும், செர்பியா, இரஷ்யா ஆகிய நாடுகளிடையே நட்புறவு மேலும் வலுப்பெற்றது. குறிப்பாக 1907ஆம் ஆண்டிற்குப் பின்னர் இரஷ்யா, பிரிட்டனுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதால் இரட்டை ஒப்பந்தம், முக்கூட்டு ஒப்பந்தமாக மாறியது. அதனுல் ஆசியாவில் பிரிட்டனுக்கும் இரஷ்யாவுக்கு மிடையே ஏற்பட்டிருந்த சச்சரவுகள் நீங்கின. மேலும் ஸ்டோலிஃபின், ஸசோனேவ் ஆகியவர்களின் தலைமையின்கீழ் இரஷ்யா தெற்கு ஐரோப்பாவில் ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய நாடுகளின் ஆதிக்கத்தைத் தடைசெய்ய முயற்சிகளை மேற்கொண்டது.

அதனுல் ஆஸ்திரியாவிற்கும் செர்பியாவிற்கு மிடையே தொடர்ந்து சச்சரவுகள் ஏற்பட்டன. அதனைத் தொடர்ந்து 1908-ல் இரஷ்யாவிற்கும் ஜெர்மனிக்கு மிடையே நிலவிய நட்புறவில் பல சிக்கல்கள் ஏற்பட்டன. செர்பியர்களின் ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராகத் தனது பகுதிகளைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு, இளந்துருக்கியர்களின் புரட்சியைத் தனக்குச் சாதமாகப் பயன்படுத்திக்கொண்டு செர்பிய மொழியைப் பேசிவந்த பாஸ்னியா, ஹெர்ஸிகோவிஞ ஆகிய உதுமானியப் பேரரசின் மாநிலங்களைத் தன்னுடன் பெயரளவில் இணைத்துக் கொண்டது. இவ்விரு பகுதிகளும் முன்னர் பன்ஞட்டுக்குழு ஒன்றினுல் நிர்வகிக்கப்பட்டு வந்தன. இவ்விரு பகுதிகளும் செர்பியா, குரோஷியக் ஆகிய நாடுகளுக்கிடையில் இருந்தன. ஆஸ்திரியா இவ்விரு பகுதிகளையும் தன்னுடன் இணைத்துக் கொண்டதால் செர்பியர்கள் ஆஸ்திரியாவுடன் போரிட்டு, இவ்விரு செர்பிய மொழி பேசும் பகுதிகளையும் கைப்பற்ற வேண்டுமென எண்ணினர். இரஷ்யா, செர்பியர்களின் எண்ணத்திற்கு ஆதரவாக இருந்ததால் தங்களுடைய இராணுவத்தை ஆஸ்திரியாவுக்கு எதிராக ஒன்று திரட்டினர். இரஷ்யர்களும் செர்பியாவிற்கு உதவத் தங்கள் படைகளை ஒன்று திரட்டினர். இந்நிலையில் ஜெர்மனி தலையிட்டு இரஷ்யர்கள் படை திரட்டுவதை நிறுத்தவேண்டுமென்றனர். அத்துடன் இரஷ்யர்கள் ஜெர்மனியின் கோரிக்கைக்கு இணங்காவிட்டால் ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய நாடுகளின் படைகளுடன் இரஷ்யப் படைகள் போரிடநேரும் எனவும் அச்சுறுத்தியது.

இரஷ்ய-ஜப்பானியப் போரில் (1904-1905) இரஷ்யா தோல்வியடைந்ததாலும், உள்நாட்டில் ஒரு புரட்சி ஏற்பட்ட

தாலும் மிகக் குறுகிய காலத்தில் மற்றுமொரு போர்ரை ஜெர்மனி யுடன் செய்ய இரஷ்யா விரும்பவில்லை. எனவே ஜெர்மனியின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு இரஷ்யா செர்பியாவிற்கு ஆதரவாகத் தனது படை திரட்டும் உத்தரவை ரத்து செய்தது. இதனால் செர்பியா மட்டும் தனித்து நின்று ஹாப்ஸ்பர்க் பேரர சுடன் போரிட வேண்டி யிருந்தது. தனது வலிமையை உணர்ந்த செர்பியா ஆஸ்திரியாவுடன் சமாதானம் செய்து கொள்ள உடன்பட்டு, ஆஸ்திரியா-ஹங்கேரியின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டது. அதன்படி இனி ஆஸ்திரியாவிற்கு எதிரான பிரச் சாரத்தில் தான் ஈடுபடுவதில்லை எனவும், தனது அண்டை நாடான ஆஸ்திரியா-ஹங்கேரியுடன் நட்புறவு கொண்டு இருப் பதாகவும் செர்பியா உறுதி கூறியது எனவே 1908-ல் இவ்விரு நாடுகளுக்கு மிடையே ஏற்பட்ட பிரச்சினைகள் தற்காலிகமாக முடிவடைந்து அமைதி நிலவியது. ஆனால் ஜெர்மனியின் தலை யீட்டால் தங்களுக்கு ஏற்பட்ட அவமானத்தை செர்பியாவும், இரஷ்யாவும் மறக்கவில்லை. ஜெர்மனியின் இத்தலையீடு இவ்விரு நாடுகளிடையே நிலவிய நட்புறவை மேலும் வலு வடையச் செய்ததுடன், இவ்விரு நாடுகளும் ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி ஆகிய நாடுகளின் மீது பழிதீர்த்துக் கொள்ளத் தக்க வாய்ப்பை எதிர்நோக்கி இருந்தன.

இதற்கிடையில் செர்பியா ஆஸ்திரியாவின் மீது கொண் டிருந்த பழிதீர்த்துக் கொள்ளும் உணர்வு, உதுமானியப் பேரரசின் மீது திசை திரும்பியது. அதனால் செர்பியா பால்கன் போர்களை 1912, 1913 ஆகிய ஆண்டுகளில் மேற்கொண்டது. அதனைப் பற்றி நாம் முன்னர்க் கண்டோம். பால்கன் போர் களின் காரணமாகப் பிரச்சினைகள் மேலும் சிக்கலாயின. அப் போர்களின் பொழுது வல்லரசுகள் இலண்டனில் ஒன்றுகூடி பால்கன் பிரச்சினைகளுக்கு முடிவுகாண முயற்சி செய்தன. அச்சமயத்தில் வல்லரசுகளிடையே கருத்துவேற்றுமை வளர்ச்சி யடைந்ததுடன் ஒருபுறம் இரஷ்யாவும், மறுபுறம் ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரியும் அடிக்கடி கருத்து வேறுபாடுகளை வளர்த்து வந்தன. அதனால் இரஷ்யாவிற்கும் ஜெர்மனிக்கு மிடையே நிலவிய பகைமை உணர்வு மேலும் வலுவடைந்தது.

முதல் பால்கன் போரில் இரஷ்யர்கள் துருக்கியர்களுக்கு எதிராக, பால்கன் நாடுகளின் கூட்டமைப்புக்கும், இரண்டாம் பால்கன் போரில் பல்கேரியாவிற் கெதிராக செர்பியாவிற்கும் உதவிய பொழுது, ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி ஆகிய இரு நாடுகளும் முதல் பால்கன் போரில் துருக்கியர்களுக்கு ஆதர

வாகவும், இரண்டாவது பால்கன் போரில் செர்பியர்களுக்கு எதிராகவும் இருந்தனர். ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி ஆகிய இரு வல்லரசுகளும் துருக்கியிடமிருந்து செர்பியா கைப்பற்றிய பல ஏட்ரியாடிக் துறைமுகங்களை விட்டுவிடுமாறு செர்பியாவை அச்சுறுத்தின. இதனால் ஏட்ரியாடிக் கடலுக்குப் போகும் எந்தவொரு வழியையும் விட்டுவிடுவதற்கு செர்பியா தயாராக இருந்தது. எனவே மாசிடோனியாவில் செர்பியாவிற்கும் பல்கேரியாவிற்குமிடையே போர் ஏற்பட்டு இரண்டாவது பால்கன் போர் ஏற்பட்டது.

பால்கன் போர்களின் காரணமாகத் தேசியக் கருத்துக்கள் மிக வேகமாக வளர்ச்சியடைந்தன என்பதையும், ஐரோப்பிய நாடுகளிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன என்பதையும் முன்னர்க் கண்டோம். முதல் பால்கன் போரில் துருக்கியர்களின்மீதும், இரண்டாம் பால்கன் போரில் பல்கேரியர்களின் மீதும் செர்பியா வெற்றியடைந்தாலும். தனது வெற்றிகளின் பலன்களை செர்பியாவின் எதிரியான ஆஸ்திரியா-ஹங்கேரி மட்டும் அனுபவித்தது. இதனால் தனது எதிரியின் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ள செர்பியா விரும்பியது. அச்சமயத்தில் செர்பியாவின் பிரதம அமைச்சராக இருந்த நிகோலஸ் பாஸிக் (Nicholas Pasic) என்பவர், "முதல் சுற்றில் வெற்றி கண்டாகி விட்டது. இனி ஆஸ்திரியாவிற்கு எதிராக இரண்டாவது சுற்றிற்கு நம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும்" எனக்கூறி, செர்பியர்களை ஊக்கப் படுத்தினர். எனவே ஆஸ்திரியா-ஹங்கேரிக்கும் செர்பியாவிற்குமிடையே முன்னர் இருந்த பகைமை உணர்ச்சி மேலும் வளர்ச்சி யடைந்தது. இதனால் ஆஸ்திரியா 1913-ல் செர்பியாவைத் தாக்கி, அதன் சுதந்திர நிலைக்கு முற்றுப் புள்ளி வைக்க நினைத்தது. இந்நிலையில் ஜெர்மனி, இத்தாலி ஆகிய இரு ஐரோப்பிய நாடுகளின் தலையீட்டால் தன்னுடைய முயற்சியை ஆஸ்திரியா-ஹங்கேரி ஒத்திவைத்தது. ஆனால் ஒரு புறம் ஜெர்மனியும், ஆஸ்திரியா-ஹங்கேரியப் பேரரசும் செர்பியாவிற்கு எதிராக ஒன்று சேர்ந்து கொண்டு உதுமானியப் பேரரசுடனும், பல்கேரியாவுடனும் இராணுவ உடன்படிக்கைகளைச் செய்து கொண்டன. மறுபுறம் இரஷ்யா புதிய உறுதிமொழிகளை வழங்கி செர்பியாவைத் தூண்டியது.

பால்கன் நாடுகளில் ஏற்பட்ட பிரச்சினைகள் வல்லரசுகளிடையே போட்டி மனப்பான்மையை வளர்த்ததுடன், 1913-ல் பன்னாட்டுப் பிரச்சினைகளையும் உருவாக்கின. அத்துடன் மொராக்கோப் பிரச்சினையும், அண்டை கிழக்கு நாடுகளின் பிரச்

சினையும் வல்லரசுகளைத் தூண்டி, அவற்றின் பெருமையையும், புகழையும் வளர்த்துக் கொள்வதற்கு வாய்ப்புக்களை வழங்கின. மொராக்கோப் பிரச்சினையில் பிரிட்டனும் பிரான்சும் தலையிட்டு மொராக்கோவில் ஜெர்மனியின் ஆதிக்கத்தை அறவே நீக்கின. இருப்பினும் ஆப்பிரிக்காவில் பிரான்சுக்குச் சொந்தமான ஒரு பகுதியை ஜெர்மனிக்கு விட்டுக் கொடுக்குமாறு பிரான்சு கட்டாயப் படுத்தப் பட்டது. உதுமானியப் பேரரசில் ஜெர்மனி தனதாதிக்கத்தைச் செலுத்த பிரிட்டன் அனுமதித்தது. இதனையடுத்து ஏற்பட்ட அண்டைக் கிழக்குநாடுகளின் பிரச்சினைகளில் ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி ஆகிய வல்லரசுகளின் தலையீட்டின் காரணமாக, இரஷ்யா இப்பிரச்சினைகளில் தலையிடாமல் ஒதுங்கி இருந்தது. இருப்பினும் இப்பிரச்சினைகளால் ஆஸ்திரியா-ஹங்கேரி செர்பியாவின் ஏளனத்திற் குள்ளாகியது. செர்பியாவிற் கெதிராக ஆஸ்திரியா-ஹங்கேரி மேற்கொள்ளவிருந்த நடவடிக்கைகள் இத்தாலியின் தலையீட்டால் தடுத்து நிறுத்தப் பட்டன. பிஸ்மார்க்கின் காலத்தில் ஐரோப்பாவில் மிகப் பெரிய வல்லரசு நாடாக விளங்கிய ஜெர்மனியின் எல்லாப் பக்கங்களிலும் பகைவர்கள் சூழ்ந்து கொண்டனர். அதனால் மிகப் பெரிய வல்லரசாக இருந்த ஜெர்மனியின் பெருமை ஓரளவு மாசு படுத்தப்பட்டது. மேலும் இப் பேரரசு விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையைக் குறைத்துக் கொண்டதுடன் தன்னுடைய கொள்கைகளைச் செயல்படுத்துவதில் அதிக பிடிவாதமாகவும் இருந்தது. அதனால் 1913ஆம் ஆண்டின் இறுதியில் ஆஸ்திரியா-ஹங்கேரி எத்தகைய இராணுவ அச்சுறுத்தலுக்கும், இராஜதந்திர முறைகளுக்கும் விட்டுக் கொடுப்பதில்லை என முடிவு செய்தது. இரஷ்யா, ஜெர்மனி, பிரான்சு ஆகிய வல்லரசுகளும் அவ்வாறே முடிவு செய்தன.

இத்தகைய விரோதச் சூழ்நிலையில் மற்ற நடவடிக்கைகளும் மிக வேகமாக அமைந்தன. கடற்படையின் வலிமையை நிலை நாட்டுவதில் பிரிட்டனுக்கும் ஜெர்மனிக்குமிடையே என்றுமில்லாத அளவு போட்டி ஏற்பட்டது. இவ்விரு நாடுகளுக்குமிடையே நிலவிய போட்டியையும், விரோத மனப் பான்மையையும் தடை செய்வதற்காக மேற்கொண்ட எல்லா முயற்சிகளும் தோல்வி யடைந்தன. இத்தாலி, ஜெர்மனி ஆகிய நாடுகளின் புதிய நடவடிக்கைகளின் காரணமாக, ஏகாதிபத்தியப் போட்டியும் வளர்ச்சி யடைந்தது. மேலும் எல்லா நாடுகளிலும் இருந்தமக்களிடையே தேசியக்கருத்துக்கள் வேகமாக வளர்ச்சி யடைந்தன. அதனால் ஒவ்வொரு நாட்டவரும்

தத்தம் தேசியம் உயர்ந்தது எனக் கருதினர். இதனால் தேசிய அரசுகள் விளைவுகளைக் கூடச் சிந்தித்துப் பார்க்காமல் உணர்ச்சி வசப்பட்டுப் பலநடவடிக்கைகளை மேற்கொண்டன. இத்தேசிய உணர்வுகள் பெரும்பாலும் பால்கன் நாடுகளில் மிக அதிக மாகக் காணப்பட்டது. இது கிழக்கு ஐரோப்பாவின் மத்தியப் பகுதி முழுவதும் பரவியது. இவ் வுணர்ச்சிகளின் பலனாக ஹாப்ஸ்பர்க் பேரரசு ஒடுக்கப்பட்டது.

இத்தகைய தேசியக் கருத்துக்கள் ஆஸ்திரியா-ஹங்கேரிக்கு எதிராகச் செயல்பட்டதால் இரஷ்யா அச்சமடையவில்லை. மாறாக, இரஷ்யா செர்பியர்களின்பால் இரக்கம் காட்டியது. ஆனால் ஆஸ்திரியா-ஹங்கேரி, ஜெர்மனியுடன் நெருங்கிய நட்புறவு கொண்டிருந்ததால் ஜெர்மனியைக் கண்டு இரஷ்யா சற்று அஞ்சியது. இந்நிலையில், பிரான்சு செர்பியாவிற்கோ, ஆஸ்திரியா-ஹங்கேரிக்கோ தனது ஆதரவைக் காட்டாமல் நடுநிலை வகித்தது. ஆனால் தனனுடைய நட்பு நாடான இரஷ்யா ஆஸ்திரியா-ஹங்கேரிக்கு எதிராக செர்பியாவிற்கு ஆதரவு காட்டியதால் செர்பியாவிற்கும், ஆஸ்திரியா-ஹங் கேரிக்கு மிடையே நடைபெற இருந்த போரில் பிரான்சு கலந்து கொள்ளத் தயாராக இருந்தது. பிரிட்டன் எந்த ஒரு முடிவுக் கும் வரமுடியாமல் இருந்தது. இத்தாலியும் ஏறத்தாழ பிரிட் டனின் நிலையிலேயே இருந்தது. பிரான்சு, இரஷ்யா ஆகிய நாடு களுடன் பிரிட்டன் முக்கூட்டு ஒப்பந்தம் செய்துகொண்டாலும், இவ் வொப்பந்தத்தின்படி முழுமனத்துடன் பாடுபட விரும்ப வில்லை. சுருங்கக் கூறின் தன்னுடைய சொந்த நலனுக்காகவே பிரிட்டன் இம் முக்கூட்டு ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது. இந்நிலையில் இத்தாலி, ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி ஆகிய நாடுகளுடன் பெயரளவில் நட்புறவு கொண்டிருந்தாலும், இந் நாடுகளின் எதிரிகளுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாக இரகசிய உடன்படிக்கைகளைச் செய்துகொண்டது. இரஷ்யா விற்கும் ஆஸ்திரியா-ஹங்கேரிக்குமிடையே நடைபெறவிருந்த போரில் இத்தாலியும், பிரிட்டனும் நிலையான கொள்கைகளைப் பின்பற்றாதது ஒரு தனி அபாயத்தை ஏற்படுத்தியது. இவ்விரு நாடுகளும் இப்போரை ஒரு சூதாட்டமாகப் பயன்படுத்தி நன்மையடைய விரும்பின.

இராணுவப் போட்டி

இதற்கிடையில் 1913ஆம் ஆண்டு முழுவதிலும் தக்க சமயத்தில் ஒன்றை ஒன்று தாக்கித் தோற்கடிப்பதற்கு ஐரோப்பிய நாடுகள் முயற்சி செய்தன. இதனால் எல்லா

ஐரோப்பிய நாடுகளும் தங்கள் இராணுவத்தைப் பலப்படுத்தின. வல்லரசுகள் தங்கள் நாடுகளில் கட்டாய இராணுவப் பயிற்சியை ஏற்படுத்தின. ஜெர்மனியிடம் தான் இழந்த அல்சேஸ், லொரைன் ஆகிய பகுதிகளை வாய்ப்புக் கிடைத்தால் மீண்டும் பெறவும், இழந்த தன் இராணுவப் பெருமையை மீண்டும் நிலைநாட்டவும் பிரான்சு தன்னுடைய நாட்டில் இரண்டாண்டு கட்டாய இராணுவப் பயிற்சியைப் புகுத்தியது. இதனைக் கண்டு அஞ்சிய ஜெர்மனி தன்னுடைய வலிமையைத் தக்கவைத்துக் கொள்ள தன்னுடைய நாட்டிலும் கட்டாய இராணுவப் பயிற்சியைப் புகுத்தியது. இதனால் 6,56000 பேர்கள் இருந்த ஜெர்மன் இராணுவத்தின் எண்ணிக்கை 8,70,000 ஆக உயர்ந்தது. அத்துடன் ஜெர்மனி ஏறத்தாழ 100 கோடி பிராங்குகளை இராணுவத்திற்காகச் செலவிட்டது. இதனைக் கண்ட பிரான்சு தன்னுடைய நாட்டில் இரண்டாண்டுகளாக இருந்த கட்டாய இராணுவப் பயிற்சியை மூன்றாண்டுகளாக உயர்த்தியது. இவ்விரு நாடுகளையும் கண்ட இரஷ்யாவும் தன்னுடைய இராணுவத்தைப் பலப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளத் தொடங்கியது. ஜெர்மனியின் கடற்படை வளர்ச்சியைக் கண்ட பிரிட்டன், தன்னுடைய நாட்டின் கடற்படை வலிமைக்காக மிக அதிக அளவு செலவிடத் தொடங்கியது.

ஐரோப்பிய நாடுகளிடையே ஏற்பட்ட இப்பிரச்சினைகளின் காரணமாகவும், இராணுவ வளர்ச்சியின் காரணமாகவும் ஒரு பெரும் போர் ஏற்படும் என்பதை மக்கள் நம்பாததுடன் அத்தகைய போர் ஏற்பட முடியாது என்றும் தீவிரமாக எண்ணினர். மேலும் ஐரோப்பிய நாடுகளில் எந்த ஓர் அரசியல் தலைவரும் போரை விரும்பவில்லை. அன்றியும் ஜெர்மனியப் பேரரசரும், இரஷ்யாவின் ஸார் மன்னரும் பல கடிதங்களின் மூலம் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டு அமைதியை நிலைநாட்ட முயற்சி செய்தனர். பிரிட்டனும், ஜெர்மனியும் ஒன்று சேர்ந்து ஒத்துழைத்து, பாக்தாத் வரை இருப்புப் பாதை அமைக்கப் பொருளாதார உதவிகளைச் செய்துகொண்டு, தங்களுக்குள் சில இரகசிய ஒப்பந்தங்களையும் செய்துகொண்டன. அதன்படி எதிர்காலத்தில் போர்ச்சுகீசியக் குடியேற்றங்களைத் தங்களுக்குள் பகிர்ந்து கொள்ள ஒத்துக்கொண்டனர்.

இருப்பினும் வல்லரசுகளிடையே ஏற்பட்ட போட்டியின் காரணமாக, ஐரோப்பா முழுவதும் இராணுவம் தயார் நிலையில் இருந்தது. ஏதாவது ஒரு சிறு சம்பவம்கூட உலக அமைதியைக் குலைத்துப் பெரும் போரை ஏற்படுத்துவதற்கான சூழ்நிலைகளை

உருவாக்கின. அத்துடன் ஐரோப்பா முழுவதிலும் வெடி மருந்துகள் நிறைந்து இருந்ததால் எந்த ஒரு சிறு நெருப்பும் ஐரோப்பாவைச் சுக்கு நூறுக்கிவிடும் சூழ்நிலை உருவாகியது. மேலும் ஐரோப்பா முழுவதும் தேசியக் கருத்துக்களால் ஆட்கொள்ளப்பட்ட பயிற்சி பெற்ற போர் வீரர்கள் தக்க போர்க் கருவிகளுடன் நிறைந்து காணப்பட்டதால் தங்கள் போர்க் கருவிகளையும், இராணுவத் திறமைகளையும் வெளிப் படுத்துவதற்கு எந்த ஒரு சிறிய நிகழ்ச்சியையும் பயன்படுத்திக் கொள்ளக் காத்திருந்தனர். அவர்களுக்கு செரயாவோ சம்பவம் ஒரு வாய்ப்பளித்தது. அதனுல் முதல் உலகப் போர் தொடங் கியது. முதல் உலகப் போரைப் பற்றி அடுத்த பகுதியில் விரிவாகக் காண்போம்.

4. முதல் உலகப் போர் (1914-1918)

1. முதல் உலகப் போரின் தொடக்கம்

ஒரு கொலை நிகழ்ச்சி முதல் உலகப் போரைத் துவக்கி வைத்தது. ஆஸ்திரியா-ஹங்கேரியாவின் பேரரசர் பிரான்சிஸ் ஜோஸப்பின் சகோதரர் மகனும், ஆஸ்திரியா-ஹங்கேரியின் இளவரசருமான பிரான்சிஸ் ஃபெர்டினுண்டு என்பவர் அவரது மனைவியுடன் 1914ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28ஆம் தேதி பாஸ்னியாவின் முக்கிய நகரமான செரயாவோ நகரின் முக்கிய வீதிகளில் செல்லும்பொழுது தேசிய வெறிபிடித்த செர்பிய இளைஞர் சிலரால் பட்டப் பகலில் படுகொலை செய்யப்பட்டார். இப் படுகொலை ஐரோப்பா முழுவதிலும் அச்சத்தை ஏற்படுத்தி நடுநடுங்க வைத்ததுடன், ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய நாடுகளில் மக்களின் ஆதிக்கத்தைத் தூண்டியது. இதனுல் இவ்விரு நாடுகளிலும் கொலைக்குக் காரணமானவர்கள்மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற வெறியுணர்வு புயல்போல் எழுந்தது.

செரயாவோ நகரில் நடைபெற்ற படுகொலை ஆஸ்திரியாவின் வெளிநாட்டமைச்சராக இருந்த கவுண்ட் லியோபோல்டு பெர்க்டோல்டுக்கு (Count Leopold Berchtold) ஒரு சாதகமான வாய்ப்பினையளித்தது. செர்பியர்களுக்குத் தக்க பாடம் புகட்ட வேண்டுமென்று காத்திருந்த ஆஸ்திரிய வெளிநாட்டமைச்சர் ஏகாதிபத்திய ஆஸ்திரியாவிற்கும், யூகோஸ்லாவ் தேசியத்தின் முக்கிய இருப்பிடமான செர்பியாவிற்கு மிடையே இருந்த உறவுகளை இறுதியாக முறித்துக் கொண்டார். இவர் 1912, 1913 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட பால்கன் போர்களின் பொழுது மிக விரைவாகச் செர்பியப் பகுதிகளில் நுழைந்து செர்பியர்களுக்குத் தக்க பாடம் புகட்ட முயற்சி செய்தார். ஆனுல் ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகள் தலையிட்டு இவரது முயற்சியைத் தடைசெய்தன. இக் கொலை நிகழ்ச்சி ஹாப்ஸ்பர்க் பேரரசின் ஒற்றுமை குலையாமல் செர்பியாவைத் திருப்பித் தாக்க ஒரு நல்ல வாய்ப்பினை யளித்தது.

பாஸ்னியா, ஹாப்ஸ்பர்க் பேரரசில் இருந்ததால் இப்பகுதியின் மக்கள் ஹாப்ஸ்பர்க் பேரரசின் குடிமக்களாகக் கருதப் பட்டாலும், ஆஸ்திரியப் பட்டத்து இளவரசரைக் கொலைசெய்த பாஸ்னியாவின் செர்பிய இளைஞர்கள் "கருங்கரங்கள்" (Black Hands) என்ற செர்பிய இரகசியக் கழகங்களின் அங்கத்தினர்களுடன் இரகசியத் தொடர்பு கொண்டிருந்தனர். இவர்கள் செர்பியாவில் போர்ப் பயிற்சி பெற்றதுடன், இந் நாட்டிலிருந்து தங்களுக்குத் தேவையான ஆயுதங்களையும் பெற்றிருந்தனர். எல்லாவற்றிற்கும் மேலாகத் தங்களுடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு செர்பிய இராணுவத்தின் உயர்மட்ட அதிகாரிகள் பலரின் உதவியைப் பெற்றனர் என்றும் பலர் நம்பினர். அத்துடன் செர்பியப் பிரதம அமைச்சரான நிகோலஸ் பாஸிக் (Nicholas Pasic) என்பவர் இக்கொலைக்கான சதி நிகழ்ச்சியைப்பற்றி முன்னரே அறிந் திருந்தும், வேண்டுமென்றே அரசாங்கத்திற்கு இதனைத் தக்க முறையில் அறிவிக்கவில்லை என்றும் சிலர் கூறி வந்தனர். எப்படி இருப்பினும் செர்பிய அரசுக்கு இக்கொலையில் பங்கு உண்டு எனப் பலர் கருதியிருந்தனர். ஆனால் இக்கொலை நடந்த பொழுது செர்பிய அரசு இக்கொலையில் பங்கு பெற்றுள்ளது என்பதற்கான ஆதாரம் எதுவும் ஆஸ்திரிய வெளிநாட்டமைச்சரிடமில்லை. அத்துடன் இவரது இரகசிய ஒற்றர்களும் "செர்பிய அரசு இக்கொலையில் சம்பந்தப்பட்டு இருப்பதற்கான ஆதாரங் கள் எதுவும் இல்லை" என ஆராய்ந்து கூறினர். இருப்பினும் தக்க ஆதாரங்களின்றியே ஆஸ்திரிய வெளிநாட்டமைச்சர் பெர்க்டோல்டு, செர்பியா இக்கொலையில் சம்பந்தப்பட்டிருக் கிறது என்று சந்தேகித்து, அதற்கு ஏற்றவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவு செய்தார்.

தான் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு முன்னர் தன்னுடைய அரசின் அனுமதியையும், தன்னுடைய நாட்டின் நட்பு நாடான ஜெர்மனியின் அனுமதியையும் பெற பெர்க்டோல்டு விரும்பினர். ஹங்கேரியப் பிரதமரான கவுண்ட் ஸ்டீஃபன் டிஸ்ஸா (Count Stephen Tisya) என்பவரும் செர்பிய அரசு இக்கொலையில் சம்பந்தப்பட்டிருக்கும் என ஐயுற்ருர். இருப்பினும் இக்கொலை ஒரு பெரிய தீரச்செயல் என்றே இவர் கருதினர். செர்பியா தக்க பலம் இல்லாமல் இக் கொலை நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்டிருக்காது என்பதை நன் குணர்ந்த ஹங்கேரியப் பிரதமர், செர்பியாவின்மீது இராணுவத் தாக்குதல் ஏற்படுத்த வேண்டாமென்று பேரரசர் பிரான்சிஸ் ஜோஸப்பிற்கு ஆலோசனை கூறினர். வயது முதிர்ந்தவரான

பேரரசர் செர்பியாவின்மீது படையெடுப்பதற்குத் தயங்கினர். இந்நிலையில் ஆஸ்திரியாவின் பிரதமர் பெர்க்டோல்டு ஜெர்மனியப் பேரரசரான இரண்டாம் வில்லியத்திற்குத் தான் எழுதிய இரகசியக் கடிதத்தில் ஆஸ்திரியப் பேரரசின் கையெழுத்தைப் பெறுவதற்குத் தன் முழு அதிகாரத்தையும் பயன்படுத்தித் தூண்டவேண்டியிருந்தது. இக்கடிதத்தில் "என்னுடைய சகோதரரின் மகனைக் கொலை செய்தது இரஷ்யர்களும், செர்பியர்களும் எனக்கு எதிராக மேற்கொண்ட முயற்சிகளின் விளைவேயாகும். இவர்களுடைய முக்கிய நோக்கம் முக்கூட்டு ஒப்பந்தத்தை முறியடிப்பதும், என்னுடைய பேரரசை அழிப்பதுமாகும். செர்பிய அரசு இக்கொலையில் பங்கு பெற்றுள்ளது என்பதை நிரூபிப்பது இயலாதாயினும் யூகோஸ்லாவியர்கள் அனைவரையும் செர்பிய நாட்டுக் கொடியின்கீழ் ஒன்றுபடுத்தும் செர்பியர்களின் முயற்சி இத்தகைய கொலைகளைச் செய்ய அவர்களைத் தூண்டுமென்பதில் சிறிதும் ஐயமில்லை. செர்பியர்களின் இத்தகைய முயற்சி தொடர்ந்து நடைபெற்றால் என்னுடைய வம்சமும், நாடும் அபாயத்திற் குள்ளாகும். எனவே இது முதற்கொண்டு செர்பியர்களைப் பிரித்து, செர்பியாவை அடக்குவதே என்னுடைய அரசின் முக்கிய வேலை" என்று பேரரசர் எழுதியதைப் போலக் குறிப்பிட்டிருந்தார். ஆஸ்திரியப் பேரரசர் சற்றுத் தயக்கத்துடனேயே பெர்க்டோல்டு தயாரித்த இக்கடிதத்தில் கையெழுத்திட்டார்.

இக்கடிதத்தை ஆஸ்திரியத் தூதுவர் ஒருவர், பெர்க்டோல்டின் அறிவுரைப்படி, இரகசியமாக எடுத்துச் சென்று 1914 ஜூலை 5, 6-ல் போட்ஸ்டம் என்ற இடத்தில் பேரரசர் இரண்டாம் வில்லியத்திடம் சமர்ப்பித்தார். இக்கடிதத்தைக் கண்டவுடன் பேரரசர் இரண்டாம் வில்லியம் எத்தகைய தயக்கமுமின்றி, செர்பியாவிற்கு எதிராக ஆஸ்திரியா எடுக்கும் எல்லா முயற்சிக்கும் உதவிபுரிய முன்வந்தார். இதனால்தான் இரஷ்யாவுடன் போரிடுமாறு நேர்ந்தாலும் ,நேரலாம் என்று அதற்கும் தயாரானர். ஆனல், தான் ஆஸ்திரியாவிற்கு உதவி புரிவதன் மூலமாக ஓர் உலகப் போர் ஏற்படும் என்பதை இரண்டாம் வில்லியம் உணர்ந்திருப்பாரா என்பது சந்தேகத்திற்குரிய ஒன்ருகும். ஆனல் ஆஸ்திரியா செர்பியாவிற் கெதிராக விரைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென்றும், தான் ஆஸ்திரியாவிற்கு உதவிபுரிந்தால், இரஷ்யா செர்பியர்களுக்கு உதவ முன்வராது என்றும் பேரரசர் இரண்டாம் வில்லியம் எண்ணினர். அப்படி இரஷ்யா செர்பியாவிற்கு உதவியாகப் போரில் கலந்துகொண்டால் அதனை ஒரு சூதாட்டமாகப் பயன்படுத்

தலாமென்றும் ஜெர்மனியப் பேரரசர் கருதினர். இரண்டாம் வில்லியத்தின் கருத்துக்களுக்கு ஜெர்மனியப் பிரதமரான பெத்மென் ஹோல்வெக்கும் ஒப்புக்கொண்டார். எனவே ஆஸ்திரியா-ஹங்கேரியில் பெர்க்டோல்டு செர்பியாவிற்கு எதிராக மேற்கொள்ளும் எல்லா முயற்சிகளுக்கும் கண்மூடித் தனமான ஆதரவு கொடுக்க ஜெர்மனி முன்வந்தது. அத்துடன் நிரப்பப் படாத காசோலை ஒன்றையும் (Blank Cheque) கையெழுத்திட்டு செர்பியாவிற்கு வழங்கியது.

ஜெர்மனியின் ஆதரவைப் பெற்று, தன்னுடைய நிலையை வலுப்படுத்திக் கொண்ட பின்னர் செர்பியாவிற் கெதிராகத்தான் மேற்கொள்ள இருந்த நடவடிக்கைகளுக்கு, பெர்க்டோல்டு ஆஸ்திரியா-ஹங்கேரி அரசின் முக்கிய அலுவலர்களின் ஒத்துழைப்பை மிக எளிதாகப் பெற்ருர். இதனையடுத்து முக்கிய இராணுவ அதிகாரி ஒருவர் செர்பியாவின் மீது போர் தொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். ஆனல் பெர்க்டோல்டு, செர்பியா ஒத்துக்கொள்ளாமல் நிராகரிக்கக்கூடிய நிபந்தனை ஒன்றைத் தயார் செய்து, அதனை 1914 ஜூலை 23-ல் செர்பியாவிற்கு அனுப்பி வைத்தார். இதில் செர்பியா 1909-ல் ஒத்துக் கொண்டபடி ஆஸ்திரியா-ஹங்கேரியுடன் நட்புறவு கொள்ளத் தவறிவிட்டது என்றும், இதனல் ஆஸ்திரியா-ஹங்கேரி செர்பியாவிற் கெதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள, கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் செர்பியா தனது பகுதிகளில் ஆஸ்திரியாவிற் கெதிரான பிரச்சாரங்களை நிறுத்திக்கொள்ள வேண்டுமென்றும் செர்பியாவில் வெளியிடப்படும் செய்தித் தாள்களிலும், பிற பிரசுரங்களிலும் ஆஸ்திரியாவிற் கெதிரான கருத்துக்களை வெளியிடுவது தடை செய்யப்பட வேண்டுமென்றும், செர்பியப் பள்ளிகளின் பாட நூல்களில் ஆஸ்திரிய அரசுக் கெதிரான கருத்துக்களை நீக்க வேண்டுமென்றும், இரட்டை முடியாட்சிக்கு எதிராக நடத்தப் படும் புரட்சிகளை செர்பியா ஆஸ்திரியா-ஹங்கேரி ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் ஒன்றுசேர்ந்து நசுக்கவேண்டும் என்றும், இவற்றை 48 மணி நேரத்துக்குள் நிறைவேற்றத் தவறினல் ஆஸ்திரியா, செர்பியாவின்மீது போர் தொடுக்குமென்றும் பெர்க்டோல்டு செர்பியாவிற்கு நிபந்தனை விதித்தார்.

இந் நிபந்தனைக்கு 1914 ஜூலை 25-ல் செர்பிய அரசு ஆஸ்திரியாவிற்குப் பதிலளித்தது. இதில் ஆஸ்திரியாவின் நிபந்தனை செர்பியாவின் சுதந்திரத்தையும், தனித்தன்மையையும், இறைமையையும் (Sovereignty) பாதிக்கிறது என்றும்,

தங்களுக்கிடையே ஏற்படக்கூடிய எல்லாத் தகராறுகளையும் 'ஹேக் (Hague) என்ற இடத்தில் இருக்கக் கூடிய பன்னாட்டு நீதிமன்றத்தின் மூலமாக அல்லது வல்லரசுகளின் மாநாடுகளின் மூலமாகத் தீர்த்துக் கொள்ளத் தான் எப்பொழுதும் தயாராக இருப்பதாகவும் செர்பியா கூறியது. அதே சமயத்தில் படை திரட்டும் உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துத் தன்னுடைய படைகளை செர்பியா திரட்டியது.

செர்பியாவின் பதில் திருப்தியளிப்பதாக இல்லை என்று கூறி ஆஸ்திரியா-ஹங்கேரி அரசு செர்பியாவுடன் தான் கொண்டிருந்த எல்லா உறவுகளையும் முறித்துக் கொண்டு, செர்பியாவைப் போலவே ஒரு படைதிரட்டும் உத்தரவைப் பிறப்பித்துத் தனது படையைத் திரட்டியது. இதனால் ஆஸ்திரியா—ஹங்கேரிக்கும் செர்பியாவிற்கும் இடையேயான போர் தவிர்க்க முடியாத தாயிற்று. அத்துடன் இப்போர் மிகப் பெரிய போர் ஒன்று ஏற்படுவதற்கும் வழிவகை செய்தது.

ஆஸ்திரியா-ஹங்கேரிக்கும், செர்பியாவிற்குமிடையே ஏற்பட்டிருந்த சிக்கலில், 1909-ல் தான் ஈடுபடாமலிருந்ததைப் போல, ஒதுங்கி நிற்பது தனது பெருமைக்கு உகந்ததாகாது என இரஷ்ய அரசு கருதியது. அத்துடன் தனது செயல் தனது புகழுக்கு மாசு கற்பிப்பதாக அமையு மெனவும் இரஷ்யா கருதியது. எனவே தான் கொடுத்த உறுதிமொழியை எப்படியும் நிறைவேற்றி விடுவது என இரஷ்யா உறுதி பூண்டது. ஆஸ்திரியாவிற்கும் செர்பியாவிற்குமிடையே நிலவிய அரசியல் உறவுகள் முறிவடைந்ததால் ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலையில் தேசிய உணர்வின் காரணமாக இரஷ்ய மக்கள் செர்பியர்களுக்கு உதவவேண்டுமென்று எண்ணினர். இரஷ்யாவின் பெரும்பாலான மக்கள் ஸ்லாவ் இனத்தைச் சார்ந்தவர்கள் என்பதே இதற்கு முக்கிய காரணமாகும் இவ்வாறே ஐரோப்பாவில் ஸ்லாவ் இனத்தைச் சேர்ந்த மற்றவர்களும் தேசிய உணர்ச்சியின் காரணமாக செர்பியாவிற்கு ஆதரவாக இருந்தனர். இதனால் இரஷ்ய அரசு செர்பியாவிற்கு எல்லாவகையிலும் உதவி புரிய முன்வந்தது. தேவையானால் இரஷ்யப் படையைக் கூட செர்பியாவிற்கு அனுப்பத் தயாராக இருந்தது. இதனையடுத்து ஜூலை 18-ல் இரஷ்ய வெளிநாட்டமைச்சர் சொஜ் சஸாநோவ் புனித பீட்டர்ஸ்பர்க்கிலிருந்த (St. Petersburg) ஆஸ்திரியத் தூதரின் மூலம் ஆஸ்திரியாவை எச்சரித்தார். அதன்படி செர்பியாவிற் கெதிராக ஆஸ்திரியா மேற்கொள்ளும் எந்த ஒரு நடவடிக்கையையும் இரஷ்யா பொறுத்துக் கொள்ளாது என்றார்.

இதற்கிடையில் பிரஞ்சுக் குடியரசுத் தலைவர் ஜூலை 20-23-ல் இரஷ்யாவிற்கு விஜயம் செய்து இரஷ்யாவின் முயற்சிகளுக்குத் தனது முழு ஆதரவையும் கொடுப்பதாக வாக்களித்தார். அத்துடன் இரஷ்யாவிலிருந்த பிரஞ்சுத் தூதுவர் இரஷ்ய வெளிநாட்டமைச்சரைச் சந்தித்து, தனது நாடு இரஷ்யாவிற்கு எல்லா வகையிலும் உதவி புரியும் என்பதைத் தெளிவு படுத்தியதுடன், இரஷ்ய வெளிநாட்டமைச்சரான சஸாநோவை உறுதியுடனிருக்குமாறும் கேட்டுக் கொண்டார். ஆனால் ஜெர்மனியின் பேரரசுகளும் முதலமைச்சரும் எண்ணியதுபோல, இரஷ்யப் பேரரசரும் வெளிநாட்டமைச்சரும் போரை அவ்வளவாக விரும்பவில்லை. இருப்பினும் இரஷ்யாவின் முயற்சிகள் 1908 – 1909–ல் தடுக்கப்பட்டது போல், ஆஸ்திரியா–ஹங்கேரியின் முயற்சிகளும் இப்பொழுது தடை செய்யப்படும் என்று இரஷ்ய வெளிநாட்டமைச்சர் கருதினர். எல்லாம் நல்லதாகவே முடியுமென்று இரஷ்யப் பேரரசர் கருதினர். பிரஞ்சு அரசாங்கமும் இரஷ்யாவைப் போலவே, போரை அவ்வளவாக விரும்பவில்லை. இருப்பினும் 1870 ஆம் ஆண்டில் ஜெர்மனியிடம் தோல்வியடைந்த பொழுது இழந்த புகழை மீண்டும் பெற இப்போர் ஒரு வாய்ப்பளிக்கு மென்று பிரான்சு கருதியது.

சமாதான முயற்சிகளின் தோல்வி

பிரான்சும் இரஷ்யாவும் செர்பியாவுக்கு ஆதரவாகவும், ஜெர்மனி ஆஸ்திரியா–ஹங்கேரிக்கு ஆதரவாகவும் இருந்ததால் பெரும் போர் ஏற்படும் என்பதை நன்குணர்ந்த பிரிட்டனின் வெளிநாட்டமைச்சராக இருந்த சர் எட்வர்டு கிரே (Sri Edward Grey) என்பவர் ஆஸ்திரியாவிற்கும் செர்பியாவிற்கு மிடையே சமாதானம் ஏற்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொண்டார். இதன்படி இவர் ஜூலை 26–ல் இத்தாலி, பிரான்சு, ஜெர்மனி, பிரிட்டன் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் உடனடியாக ஒன்று கூடி, ஐரோப்பிய நாடுகளின் பிரச்சினைகள், குறிப்பாக ஆஸ்திரியா–ஹங்கேரி, செர்பியா ஆகிய நாடுகளுக்கிடையே ஏற்பட்ட சிக்கல்கள், மேலும் மோசமடையாமல் இருப்பதற்கான முடிவுகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், இம்மாநாடு ஐரோப்பியப் பிரச்சினைகளை விவாதித்து ஒரு முடிவுக்கு வரும் வரை எந்த ஐரோப்பிய நாடும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாதென்றும் கூறினர். கிரேயின் வேண்டுகோளுக்கு பிரான்சு, இத்தாலி ஆகிய நாடுகளின் அரசுகள் செவி சாய்த்தன. ஆனல் ஜெர்மனி, 1906–ல் அல்ஜீசிரஸ் என்ற இடத்தில் கூடிய ஐரோப்பிய மாநாட்டில் தான் அதிக

நன்மைகளை எதிர்பார்த்து ஏமாந்ததால் இம்மாநாடு தன்னுடைய பெருமையைக் குலைப்பதுடன், தன்னுடைய வலிமையையும் குறைக்கும் என்று கருதி, இப்பிரச்சினையை ஆஸ்திரியா – ஹங்கேரி, செர்பியா ஆகிய இரு நாடுகள் மட்டுமே கூடிப் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டுமெனக் கூறி, இம்மாநாட்டில் கலந்து கொள்ள மறுத்து விட்டது. ஜெர்மனியின் இறுதியான முடிவைக் கண்ட ஆஸ்திரியா–ஹங்கேரி 1914 ஜுலை 28–ல் போர்ப் பிரகடனம் செய்து செர்பியாவின் மீது படையெடுத்தது. இதனைத் தொடர்ந்து ஆஸ்திரியாவின் வெளிநாட்டமைச்சரான பெர்க்டோல்டு தன்னுடைய நாட்டின் தலைநகரான வியன்னாவிலிருந்த ஜெர்மன் தூதுவரைச் சந்தித்து, சமாதானம் செய்து கொள்ள மேற்கொள்ளப்படும் எந்த ஒரு வேண்டுகோளுக்கும் இனி செவி சாய்க்க வேண்டாமென்று கேட்டுக் கொண்டார். இதனையடுத்துப் போர் நடவடிக்கைகள் மிக்த் துரிதமாக மேற்கொள்ளப் பட்டன.

இதற்கிடையில் எந்த ஓர் ஐரோப்பிய நாட்டின் பெருமையையும் குலைக்காமல், அமைதியை நிலைநாட்டுவதற்கான வழி காண அரசியல் தலைவர்கள் பலர் ஒரு புறம் முயற்சி செய்த பொழுது, மறுபுறம் எல்லா ஐரோப்பிய நாடுகளும் தங்கள் தங்கள் படைகளைச் சேகரித்தன. இதற்கு முன்னதாகவே பிரிட்டனின் அமைச்சரவையில் கடற்படையின் பொறுப்புக்களில் முக்கிய பங்கு வகித்த வின்ஸ்டன் சர்ச்சில் (Winston Churchill) என்பவர் தன்னுடைய சொந்த முயற்சியில், பிரிட்டனின் போர்க் கப்பல்கள் எங்கும் வெளியில் செல்லக் கூடாதென்றும், அவை எப்போதும் தயார் நிலையில் இருக்க வேண்டுமென்றும் ஜுலை 26–ல் உத்தரவிட்டார். ஆஸ்திரியா செர்பியாவின் மீது போர்ப் பிரகடனம் செய்த செய்தி, ஜுலை 29–ல் புனித பீட்டாஸ்பர்க்கை எட்டியவுடனே, இரஷ்யாவின் ஸார் மன்னரான இரண்டாம் நிக்கோலஸ் தன்னுடைய நாட்டில் படை திரட்டும் உத்தரவைப் பிறப்பித்தார்.

இரஷ்யா படை திரட்டும் உத்தரவைப் பிறப்பித்த சில மணி நேரங்களுக்குள் அமைதியை ஏற்படுத்துவதற்கான ஒரு வழி தோன்றி மறைந்தது. செர்பியாவிற்கு வழங்கிய கையொப்பமிட்ட காசோலையின் காரணமாக, ஜெர்மனி மிகப்பெரிய தொகையை செர்பியாவிற்கு வழங்க வேண்டியிருந்தது. மேலும் அவ்வளவு பெரிய தொகையை செர்பியாவிற்கு வழங்கியது ஜெர்மனிக்குச் சிறிது அச்சத்தைக் கொடுத்தது. ஜெர்மனியப் பேரரசரான இரண்டாம் வில்லியமும், இவரது முதலமைச்சரும்

ஆஸ்திரியாவிற்கும் செர்பியாவிற்கு மிடையே ஏற்பட்ட பிரச்சினையை அவ்வளவாகப் பெரிதுபடுத்த விரும்பவில்லை. இந்நிலையில் இரஷ்யா செர்பியாவிற்கு உதவ, தீவிரமான முடிவுகளை மேற்கொண்டு, தன்னுடைய நாட்டில் படைதிரட்டும் உத்தரவைப் பிறப்பித்ததால் ஜெர்மனி சற்று அச்சமடைந்தது. எனவே ஜெர்மனியின் முதல்வரான பெத்மென் ஹோல்வெக் இரஷ்யாவுடன் நேரடியாக உடன்படிக்கை செய்து கொள்ளுமாறு ஆஸ்திரியாவை வற்புறுத்தினர். ஆஸ்திரியா இதற்கு உடனடியாகச் செவி சாய்க்காததால் வியன்னுவிலிருந்த ஜெர்மனியின் தூதருக்கு, "ஆஸ்திரியா தன்னுடைய வேண்டுகோளை நிராகரித்ததால் ஏற்படும் விளைவுகளால் உலகநாடுகள் முழுவதும் இன்னல்களுக் குள்ளாக நேரிடும்" என்று தெரிவித்து, "அதனுல் ஏற்படும் விளைவுகளால் ஆஸ்திரியாவிற்குத் தன்னுல் உதவமுடியாமல் போய்விடும்" என்றும் அறிவிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அதே சமயத்தில் பேரரசர் இரண்டாம் வில்லியம் இரஷ்ய மன்னர் படை திரட்டுவதைக் கண்டு, "போரினுல் ஏற்படும் விளைவுகளைத் தாம் இருவருமே விரும்பவில்லை" என்று கூறி, இரஷ்யாவின் படை திரட்டும் உத்தரவை இரத்து செய்யுமாறு சற்றுக் கடுமையாக எச்சரித்தார். இரண்டாம் வில்லியத்தின் எச்சரிக்கையால் கோபமடைந்த இரண்டாம் நிக்கோலஸ் இரகசியமாக வைத்திருந்த தன்னுடைய படை திரட்டும் உத்தரவை வெளிப்படையாக அறிவித்து, தற்காப்பிற்காகத் தன்னுடைய படைகளை ஆஸ்திரிய எல்லைக்குக் கொண்டு செல்வதாக அறிவித்து, தன்னுடைய படைகளில் ஒரு பகுதியை ஆஸ்திரிய எல்லைகளுக்கு அனுப்பி வைத்தார். இந்நிலையில் ஜெர்மனியின் முதலமைச்சர் பெத்மென்-ஹோல்வெக் தன்னுடைய கருத்துக்களுக்கு எதிராகக் கூறியவற்றையும், ஜெர்மனியின் ஆலோசனையை ஆஸ்திரியா ஏற்காவிடில் ஜெர்மனி ஆஸ்திரியாவிற்கு எதிராகச் செயல்படு மென்பதையும் ஆஸ்திரிய வெளிநாட்டமைச்சரான பெர்க்டோல்டு நம்ப மறுத்துத் தன்னுடைய முயற்சியைத் தொடர்ந்தார். இதனுல் அமைதியை ஏற்படுத்துவதற்கான வழி எவ்வளவு விரைவில் தோன்றியதோ அதைவிட விரைவாகவே மறைந்து விட்டது.

இரஷ்யப் பேரரசர் தன்னுடைய படையின் ஒரு பகுதியை ஆஸ்திரிய எல்லைக்கு அனுப்பி வைத்ததால், ஏமாற்றமடைந்த மற்ற தளபதிகள் இரஷ்ய வெளிநாட்டமைச்சரை வற்புறுத்தி, இரஷ்யாவில் படை திரட்டும் பொது உத்தரவைப் பிறப்பிக்க இரஷ்ய மன்னருக்கு ஆலோசனை வழங்குமாறு கேட்டுக்கொண்

டனர். எனவே சஸானேவ் ஜூலை 30-ல் மன்னரைச் சந்தித்துப் பொதுவாகப் படை திரட்டும் புதிய உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார். புதிய படை திரட்டும் உத்தரவைப் பிறப்பிப்பதால் பல்லாயிரக் கணக்கான போர் வீரர்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்ய நேரிடுவதையும், அதனால் இரஷ்யாவிற்கு ஏற்படும் பிரச்சினைகளையும் சிந்திக்குமாறு பேரரசர் சஸானேவைக் கேட்டுக் கொண்டார். சஸானேவ் மேலும் வற்புறுத்தவே பேரரசர் இரண்டாம் நிக்கோலஸ் தனது படை திரட்டும் உத்தரவைப் பிறப்பித்தார். இதனால் இரஷ்யப் படைகள் அனைத்தும் ஜூலை 30-ல் ஒன்று திரட்டப் பட்டன.

இரஷ்யா தனது படைகளைத் திரட்டியதைக் காரணம் காட்டி, ஜெர்மானியத் தளபதிகள் தங்கள் பேரரசரான இரண்டாம் வில்லியத்தையும், அவரது முதலமைச்சரான பெத்மென்-ஹோல்வெக்கையும் சந்தித்துத் தாங்கள் இனி தாமதித்தால் இரஷ்யப் படைகளால் ஜெர்மனிக்கு ஆபத்து ஏற்படும் எனக் கூறி, தங்கள் நாட்டிலும் படைதிரட்டும் உத்தரவைப் பிறப்பிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். தங்கள் தளபதிகளின் வேண்டுகோள் நியாயமானது என்பதை எளிதில் உணர்ந்து, பேரரசர் இரண்டாம் வில்லியம் இரஷ்யாவிற்குப் பன்னிரண்டு மணி நேர அவகாசம் கொடுத்து, படை திரட்டும் உத்தரவை இரத்து செய்யுமாறும், அப்படிச் செய்யாவிடில் ஜெர்மனி இரஷ்யாவின் மீது போர் தொடுக்குமென்றும் எச்சரித்தார். இவ்வெச்சரிக்கைக்கு இரஷ்யா பதிலளிக்காததால் ஜெர்மனி இரஷ்யாவிற் கெதிராகப் போர்ப் பிரகடனம் செய்தது.

ஜெர்மனி இரஷ்யாவிற் கெதிராகப் போரிட்டால், இரஷ்யாவின் நட்பு நாடான பிரான்சு இரஷ்யாவுக்கு ஆதரவாகப் போரில் ஈடுபடும் என்பதனை முன்னரே அறிந்திருந்த ஜெர்மனி, இரஷ்யாவிற்கு அவகாசம் கொடுத்த அன்றே, பிரான்சுக்கும் 18 மணி நேர அவகாசம் கொடுத்து எச்சரித்தது. இதன்படி ஜெர்மனிக்கும் இரஷ்யாவிற்குமிடையே போர் ஏற்பட்டால் பிரான்சு நடுநிலைமை வகிக்க வேண்டுமென்றும், அப்படி பிரான்சு நடுநிலைமை வகிக்கத் தவறினால் ஜெர்மனி பிரான்சின் மீது போர் தொடுக்குமென்றும் எச்சரித்தது. அத்துடன் தன்னுடைய எச்சரிக்கைக்கு ஒப்புக்கொண்டு பிரான்சு நடுநிலை வகித்தால், இரஷ்யாவிற்கும் ஜெர்மனிக்குமிடையேயான போர் முடிந்து அமைதி ஏற்படும் வரை, தூல் (Toul), வெர்டுன் (Verdun) ஆகிய இரு கோட்டைகளில் ஜெர்மனியின் படைகள் தங்கி இருக்க அனுமதிக்க வேண்டுமென்றும் ஜெர்மனி

பிரான்சைக் கேட்டுக் கொண்டது. பிரான்சு ஜெர்மனியின் எச்சரிக்கைக்குப் பதிலளிக்காமல் தன்னுடைய பாதுகாப்பிற் காகப் படை திரட்டும் உத்தரவைத் தன்னுடைய நாட்டில் ஆகஸ்டு முதல்தேதி இரகசியமாகப் பிறப்பித்தது. பிரான்சிட மிருந்து பதிலை எதிர்பார்த்து ஏமாந்த ஜெர்மனி 1914 ஆகஸ்டு 3-ல் பிரான்சுக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்தது. இவ்வாறு ஆஸ்திரியா-ஹங்கேரி, செர்பியா ஆகிய இரு நாடு களுக்கு மிடையே போர் ஏற்பட்ட ஒரு வாரத்திற் குள்ளாக நான்கு வல்லரசுகள் போரில் ஈடுபட்டன. இரு நாடுகளுக் கிடையே ஏற்பட்ட போர், வல்லரசுகளுக் கிடையேயான போராக வளர்ச்சி யடைந்தது.

இப்போரில் ஆஸ்திரியா-ஹங்கேரி, ஜெர்மனி ஆகிய வல் லரசுகள் இரஷ்யா, பிரான்சு ஆகிய வல்லரசுகளை எதிர்த்தன. ஆஸ்திரியா-ஹங்கேரி ஆகிய நாடுகள் தற்காப்பிற்காக இப் போரை நடத்தாமல் ஆக்கிரமிப்பு நோக்குடன் நடத்துகின்றன எனக் கூறி, ஜெர்மனியின் நட்பு நாடுகளான இத்தாலி, ருமேனியா ஆகிய இரு நாடுகளும் நடுநிலை வகித்தன. இதனால் 1902-ல் இத்தாலி பிரான்சுடன் கொண்டிருந்த இரகசிய உடன் படிக்கையை நிலைநாட்டியது. இதற்கு முன்னதாகவே இத்தாலி முக்கூட்டு ஒப்பந்தத்தின்படி, தனக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென ஆஸ்திரியா-ஹங்கேரியை வற்புறுத்தியது. இந்நிலையில் பெரும்பாலான பிரிட்டிஷ்காரர்கள் ஜெர்மனியைக் காட்டிலும் பிரான்சின் மீது அதிக இரக்கம் காட்டினர். அத் துடன் சர் எட்வர்டு கிரேயும் தன்னை யாரும் நடுநிலை வகிக்கு மாறு கட்டாயப் படுத்த முடியாது என்று ஜெர்மனிக்கு முன்ன தாகவே அறிவித்திருந்தார். இதனையடுத்து மேலும் ஒரு படி மேலே சென்று, பிரான்சு நாட்டின் கப்பல்களையும், கடற்கரை களையும் ஜெர்மனியப் போர்க் கப்பல்கள் தாக்குவதை பிரிட்டன் பொறுத்துக் கொள்ளாது என, 1914 ஆகஸ்டு 2-ல் அறிவித்தார். இச்சமயத்தில் பிரிட்டிஷ் அமைச்சரவையில் பெரும்பான்மை யானவர்கள் அமைதியாக இருந்தாலும் ஒரு சிலர் எட்வர்டு கிரே பிரான்சுக்கு ஆதரவாக இருப்பதாகக் குறை கூறினர்.

இந்நிலையில் ஜெர்மனிப் படைகள் பிரான்சை நோக்கி முன்னேறின. ஜெர்மனி, பிரான்சு ஆகிய இரு நாடுகளுக்கு மிடையே பெல்ஜியம் ஒரு வலிமையற்ற நாடாக விளங்கியது. அத்துடன் பெல்ஜியம் நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றியது. பிரான்சு, ஜெர்மனி ஆகிய இரு வல்லரசுகளும் முன்னர் ஓர்

உடன்படிக்கையின் மூலமாக பெல்ஜியத்தின் பாதுகாப்பிற்கு உறுதியளித்தன. ஆனால் இப்பொழுது ஜெர்மனிப் படைகள் பிரான்சின் மீது போர் தொடுப்பதற்கு பெல்ஜியத்தின் வழியாகச் செல்ல வேண்டியிருந்தது. பிரான்சை நோக்கிச் சென்ற ஜெர்மானியப் படைகள் பெல்ஜியத்தின் அனுமதியைப் பெறுமல் லக்ஸம்பர்க் வரை முன்னேறிச் சென்றன. ஆனால் லக்ஸம்பர்க்கின் ஆளுநர் ஜெர்மனியப் படைகள் தன்னுடைய ஆட்சிப் பகுதி வழியாகச் செல்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். எனவே ஆகஸ்டு 2-ல் ஜெர்மானிய அரசு 12 மணிநேர அவகாசம் கொடுத்து, பெல்ஜியத்திற்கு ஓர் எச்சரிக்கை விடுத்தது. அதன்படி ஜெர்மானியப் படைகள் பெல்ஜியத்தின் வழியாகப் பிரான்சுக்குள் செல்வதற்கு பெல்ஜிய அரசு அனுமதி வழங்க வேண்டுமென்றும், அப்படிச் செய்தால் பெல்ஜியத்தின் தனித் தன்மையை ஜெர்மனி அங்கீகரிக்கும் என்றும் கூறினர். அத்துடன் பெல்ஜியம் ஜெர்மனிக்கு அனுமதி வழங்க மறுத்தால், பெல்ஜியத்தின்மீது போர் தொடுக்கு மென்றும் ஜெர்மானிய அரசு பெல்ஜியத்தை எச்சரித்தது. இதற்கு பெல்ஜியம், ஜெர்மனி உலக நாடுகளால் ஒத்துக் கொள்ளப்பட்ட பன்னாட்டுச் சட்டத்தை (International Law) மீறி நடக்கிறது என்று கூறி, ஜெர்மனியின் வேண்டுகோளை நிராகரித்தது. அத்துடன் தன்னுடைய நடுநிலைத் தன்மைக்குப் பாதுகாப்பளிக்குமாறு பிரிட்டனை, பெல்ஜியம் கேட்டுக் கொண்டது. தன்னுடைய வேண்டுகோளை பெல்ஜியம் நிராகரித்ததால், ஆகஸ்டு 4-ல் பெல்ஜியத்தின் அனுமதி பெறுமலே பிரான்சுக்குள் செல்வதற்கு ஜெர்மானியப் படைகள் பெல்ஜியத்தில் நுழைந்தன.

இது ஒருபுறமிருக்க, பெல்ஜியத்தின் நடுநிலைத் தன்மை பிரிட்டனின் வெளிநாட்டுக் கொள்கையில் ஒரு முக்கியத்துவம் பெற்றிருந்தது. பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் பெல்ஜியத்தை முதலாம் நெப்போலியன் கைப்பற்றியபொழுது, பிரிட்டன் முதலாம் நெப்போலியனுடைய ஆக்கிரமிப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அவருடன் போரிட்டது. பின்னர் பெல்ஜியம் காரணமாக மூன்றும் நெப்போலியனை பிரிட்டன் விரோதித்துக் கொண்டது. இதனையடுத்து ஜெர்மனி ஐக்கியமடைந்து பேரரசாக வளர்ச்சியடைந்த பின்னர், ஜெர்மானியப் பேரரசு பெல்ஜியத்தைத் தன்னுடன் இணைத்துக்கொள்வதை பிரிட்டன் விரும்பவில்லை. எனவே பெல்ஜியத்தின் நடுநிலைமைத் தன்மைக்குப் பாதுகாப்பளிப்பதில் பிரிட்டன் அதிக அக்கறை காட்டியது. இந்நிலையில் ஆகஸ்டு 4-ல் பெல்ஜியத்தின் அனுமதி

பெருமலேயே பிரான்சுக்குள் செல்வதற்கு ஜெர்மனிப் படைகள் பெல்ஜியத்தில் நுழைந்த செய்தி இலண்டன் மாநகரை எட்டியது. இதனைச் செவிமடுத்தவுடன் சர் எட்வர்டு கிரேயும், அமைதியாக இருந்த மற்ற அமைச்சர்களும் தங்கள் அமைதிக் கொள்கையை உதறிவிட்டு ஒன்றுபட்டனர். பிரிட்டிஷ் பாராளு மன்ற அங்கத்தினர்கள் தங்களுக் கிடையே நிலவிய கருத்து வேறுபாடுகளை மறந்து ஒன்று திரண்டனர். ஜெர்மனிக்கு எதிராகப் பிரிட்டன் முழுவதும் ஒன்று திரண்டது. இதனால் சர் எட்வர்டு கிரே ஜெர்மனிக்கு 8 மணிநேர அவகாசம் கொடுத்து ஓர் எச்சரிக்கையை விடுத்தார். அதன்படி ஜெர்மனி ஆகஸ்டு 4ஆம் தேதி நள்ளிரவுக்குள் பெல்ஜியத்தின் நடுநிலைத் தன்மையை மதிப்பதாக உறுதியளிக்க வேண்டுமென்றும், அப்படி உறுதியளிக்கத் தவறினால், அன்று நள்ளிரவிலேயே பிரிட்டன் ஜெர்மனியின் மீது போர் தொடுக்குமென்றும் எச்சரித்தார். பேரரசர் இரண்டாம் வில்லியமும், அவரது முதலமைச்சரான பெத்மென் ஹோல்வெக்கும் பிரிட்டனை பெல்ஜியத்தின் விவகாரங்களில் ஈடுபடாதவாறு செய்வதற்குப் பெருமுயற்சி செய்தனர். இவர்கள் தங்கள் நாட்டிலிருந்த பிரிட்டிஷ் தூதுவரைச் சந்தித்து "போர்க் காலங்களில் முக்கியத்துவம் பெறுததும், எழுத்தளவிலேயே இருக்கக்கூடியதுமான "நடுநிலை" என்ற ஒரு சொல்லுக்காக பிரிட்டன் வலிமையற்ற ஒரு நாட்டிற்காகப் போரிட முன் வந்துள்ளது" என்றும், "பிரிட்டன் பெல்ஜியத்திற்காகப் போரிடுவதால் பெல்ஜியம் பிரிட்டனின் நட்பு நாடாவதைத் தவிர, வேறு பலன் ஒன்றையும் பிரிட்டன் அடைய முடியாது" என்றும் பலவாறாகக் கூறி, சமாதானப் படுத்த முயன்றனர். அத்துடன் தங்களுடைய படைகள் பிரான்சுக்குள் செல்ல, கட்டாயமாக பெல்ஜியத்தின் வழியாகவே செல்ல வேண்டியிருந்ததால் பிரிட்டனின் எச்சரிக்கையை நிராகரித்தனர். எனவே ஆகஸ்டு 4ஆம் தேதி நள்ளிரவில் ஜெர்மனி நடுநிலை நாடான பெல்ஜியத்தை ஆக்கிரமித்தது எனக் குற்றஞ் சாட்டி, ஜெர்மனியின் மீது பிரிட்டன் போர்ப் பிரகடனம் செய்தது.

இதனைத் தொடர்ந்து 1914 ஆகஸ்டு 7-ல் மான்டநெக்ரோ தன்னுடைய இனத்தவரான ஸ்லாவ் மக்கள் வாழும் செர்பியாவிற்கு ஆதரவாகப் போரில் கலந்து கொண்டது.

பின்னர் ஜப்பான் பிரிட்டனுடன் செய்துகொண்ட உடன் படிக்கையை நிறைவேற்றுவதற்காகவும், ஜெர்மனியைப் பழி தீர்த்துக் கொள்வதற்காகவும் இப்போரில் கலந்துகொண்டது. சீன-ஜப்பானியப் போருக்குப் பின்னர் ஆர்தர் துறைமுகத்தை

1895-ல் தான் வைத்துக்கொள்ள முடியாமல் போனதற்கு ஜெர்மனியே முக்கிய காரணமென்று ஜப்பான் கருதியது. எனவே ஆகஸ்டு 17-ல் ஜப்பான் ஜெர்மனிக்கு ஓர் எச்சரிக்கை விடுத்தது. அதன்படி ஜெர்மனி தனது போர்க் கப்பல்களை சீனு, ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து உடனடியாக திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், 1914 செப்டம்பர் 15க்குள் கியாசௌ துறைமுகத்தை ஜெர்மனி விட்டுவிட வேண்டும் என்றும், இதற்கு உடன்படாவிடில் தான் ஜெர்மனிக்கெதிராகப் போரில் ஈடுபட நேரிடும் என்றும் ஜப்பான் ஜெர்மனியை எச்சரித்தது. ஜெர்மானிய அரசு ஜப்பானின் இக்கோரிக்கைக்கு உடன்படாததால், ஜப்பான் 1914 ஆகஸ்டு 23-ல் ஜெர்மனிக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்தது.

இவ்வாறு பல பகைவர்களால் சூழப்பட்ட ஜெர்மனியும், ஆஸ்திரியா-ஹங்கேரியும் உதுமானியப் பேரரசின் உதவியைப் பெற்றன. தங்கள் நாட்டின் ஒற்றுமை ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி ஆகிய நாடுகளைக் காட்டிலும், மற்ற வல்லரசுகளின் தலையீட்டால் குலைந்துபட்டது என நாட்டுப்பற்று மிக்க துருக்கியர்கள் பலர் நம்பினர். இதனுல் ஜெர்மனி இரஷ்யாவின் மீது போர்ப் பிரகடனம் செய்த அதே நாளில் (ஆகஸ்டு 1-ல்) உதுமானிய அரசு, என்வெர் பாஷா என்பவரின் பெருமுயற்சியால், இரஷ்யாவிற்கு எதிராகத் தான் உதவி புரிவதாக, ஜெர்மனியுடன் ஓர் இரகசிய உடன்படிக்கை செய்துகொண்டது. இருப்பினும் உதுமானியப் பேரரசு நடுநிலை வகிப்பதுபோல் பாசாங்கு செய்தது. ஆனுல் 1914 அக்டோபர் 29-ல் போதுமான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்ட பின்னர் கருங்கடல் பகுதியில் இருந்த இரஷ்யத் துறைமுகங்களைத் துருக்கிப் போர்க் கப்பல்கள் தாக்கின. பதில் நடவடிக்கையாக இரஷ்யா போர்ப் பிரகடனம் செய்தது. இதனைத் தொடர்ந்து நவம்பர் 5-ல் பிரான்சு, பிரிட்டன் ஆகிய இரஷ்யாவின் நட்பு நாடுகள் உதுமானியப் பேரரசின் மீது போர்ப் பிரகடனம் செய்தன.

இவ்வாறு 1914 ஜூலை 28க்கும் அக்டோபர் 29க்கும் இடைப்பட்ட மூன்று மாதங்களுக்குள், செர்பியா, ஆஸ்திரியா-ஹங்கேரி ஆகிய இருநாடுகளுக்கிடையே ஏற்பட்ட போர் உலகப் போராக மாறியது. முதல் முதலாக உலக நாடுகள் அனைத்தும் இப்போரில் கலந்து கொண்டமையால் இது முதல் உலகப் போர் என்றும், முதல் உலகப் பெரும் போர் என்றும் வழங்கப் படுகிறது. இப்போரில் ஒருபுறம் ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி, உதுமானியப் பேரரசு ஆகிய நாடுகளும், மறுபுறம்

இரஷ்யா, பிரான்சு, பிரிட்டன், பெல்ஜியம், ஜப்பான், செர்பியா, மான்டநெக்ரோ ஆகிய நாடுகளும், பிரிட்டனின் ஆதிக்கத்தில் இருந்த கனடா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, தென்னுப் பிரிக்கா ஆகிய நாடுகளும் போரிட்டன.

எட்டு வல்லரசுகளுள் ஆறு வல்லரசுகளும், ஆறு கண்டங்களுள் ஐந்து கண்டங்களும் இப்போரில் உனடடியாகப் பங்கு பெற்றன. இப்போருக்கு எந்த ஒரு தனி நாட்டையோ பேரரசரையோ, அரசியல் தலைவரையோ, இராணுவத் தளபதியையோ முக்கிய காரணமாக்க முடியாது. ஆனால் எல்லா நாடுகளும், மன்னர்களும், அரசியல் தலைவர்களும், முதலமைச்சர்களும், தளபதிகளும், மக்களும் ஒவ்வொரு வகையில் இம்முதல் உலகப் போருக்குக் காரணமாயினர் என்றால் அது மிகையாகாது. எனவே, இனி இப்போருக்கு யார் யார் எப்படி எப்படிக் காரணமாயினர் என்பதை ஆராய முற்படாமல், இப்போரின் போக்கைக் காண்பது சிறப்புடையதாகும்.

2. முதல் உலகப் போரின் போக்கு

முதல் உலகப் போரின் தொடக்கத்தில் எல்லோரும் அதிர்ச்சி யடைந்தனர். ஆனால் இவ் வதிர்ச்சி விரைவில் மறைந்தது. அரசுகளைக் காட்டிலும் தேசியக் கருத்துக்களின் காரணமாக மக்கள் போரில் மிகுந்த ஆர்வம் காட்டினர். படை திரட்டும் உத்தரவு பிறப்பித்த 15 நாட்களுக்குள் ஐரோப்பா முழுவதிலும் ஏறத்தாழ 50 இலட்சம் போர் வீரர்கள் திரட்டப்பட்டுப் போர்க்களத்திற்கு அனுப்பப் பட்டனர். இவ்வளவு பேர்கள் தங்கள் பழைய தொழிலைத் துறந்து போரிடச் சென்றதால் ஐரோப்பியப் பொருளாதார நிலை திடீரென்று பாதிக்கப்பட்டது. போரில் ஈடுபட்ட நாடுகளின் ஒவ்வொரு குடும்பத்திலும் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டது. படைகள் திரட்டப்பட்டவுடன் நாட்டு மக்களிடையே காணப்பட்ட வேற்றுமைகள் எல்லாம் "காலைக் கதிரவனைக் கண்ட பனி போல" மறைந்தன. நாட்டின் எல்லாச் சமூகத்தினரும் தங்கள் அரசுக்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்தனர். இந்த மிகப் பெரிய பிரச்சினையான உலகப் போரில் எல்லா கருத்துக்களும் மறைந்து பட்டன. திருச்சபைகளோ, மார்க்ஸிஸ சோஷலிஸக் கருத்தினரோ, கல்வி நிலையங்களோ உலகப்போர் தொடங்கியதும் தங்கள் அரசுகளை எதிர்த்து ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை.

போர் தொடங்கியவுடன் ஒவ்வொரு நாடும் தத்தம் நாட்டின் வலிமையை உயர்த்தியும், பிற நாடுகளின் வலிமையைக் குறைத்தும் மதிப்பிட்டு, தங்கள் மக்களுக்குக் கூறிவந்தன. நாடுமுழுவதும் நாட்டுப் பற்றைத் தூண்டும் வகையில் பிரச்சாரக் கருவிகள் முடுக்கி விடப்பட்டன. இராணுவச் செய்திகள் தணிக்கை செய்து அறிவிக்கப்பட்டன. எல்லா நாடுகளும் போரில் வெற்றி பெறுவதையே தங்கள் முக்கிய குறிக்கோளாகக் கருதின. அதே சமயத்தில் நாட்டின் பொருளாதாரத்தின் ஸ்திரத் தன்மையைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளும் போரில் ஈடுபட்ட நாடுகளின் அரசுகளால் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும் எல்லா நாடுகளும் தங்கள் கவனம் முழுவதையும் இராணுவத்திலேயே செலுத்தின. சுருங்கக் கூறின் உலகப்போரின் காரணமாக எல்லா நாடுகளிலும் தேசிய உணர்ச்சி மேலோங்கி ஒற்றுமை ஏற்பட்டது.

இப்போருக்கு முன்னர் நடைபெற்ற எல்லாப் போர்களும், குறிப்பாக 1859, 1866 ஆகிய ஆண்டுகளின் போர்கள், பிரஞ்சு-பிரஷ்யப் போர் (1870), இரஷ்ய-ஜப்பானியப் போர் (1905), பால்கன் போர்கள் (1912, 1913), ஆகியவை மிகக் குறுகிய காலத்தில் முடிவடைந்து விட்டன. எல்லா நவீனப் போர்க் கருவிகளும் இப்போரில் பயன்படுத்தப் பட்டமையால், இப்போரும் மிக விரைவில் முடிவடைந்து விடுமெனப் பெரும்பாலோர் நம்பினர். ஆனால் இவர்களின் நம்பிக்கைக்கு மாறாக இப்போர் நீண்டு கொண்டே சென்றது.

போர்ப் பிரகடனம் செய்த பதினைந்து நாட்களுக்குள் ஐரோப்பிய நாடுகள் முழுவதும் தங்கள் படையைத் திரட்டியதால், வல்லரசுகளின் மிகப் பெரிய படைகள் ஒன்றோடொன்று மோதுவது உறுதியாயிற்று, ஒவ்வொரு நாட்டின் இராணுவ முக்கிய அதிகாரிகளும் என்னென்ன இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், என்னென்ன முறைகளைப் பின்பற்றினால் மிகக் குறுகிய காலத்தில் தங்கள் எதிரிகளைத் தோற்கடிக்க முடியுமென்றும் ஆராய்ந்து முழுகவனத்துடன் பல திட்டங்களைத் தீட்டினர். பிரான்சு, இரஷ்யா ஆகிய வல்லரசுகளும் ஜெர்மனியை அதன் இருவேறு பக்கங்களில் ஒரே சமயத்தில் தனித்தனியாகத் தாக்குவது என முடிவு செய்தன. இதன்படி பிரஞ்சுப் படைகள் தங்கள் நாட்டின் எல்லைப் பகுதியில் ஷார்லராய் (Charleroi) என்ற பகுதியில் இருந்து நான்சி (Nancy) வரை ஜெர்மனிப் படைகளைத் தாக்குவது என்றும், குறிப்பாக லொரைன் பகுதியில் மிகத் தீவிரமாக

ஜெர்மனியப் படைகளைத் தாக்குவது என்றும், இச்சமயத்தில் இரஷ்யப்படைகள் ஆஸ்திரியப் படைகளை ஜெர்மனிப் படைகளுக்கு உதவாமல் தடுப்பதுடன், கிழக்குப் பிரஷ்யப் பகுதியில் மிகவேகமாகத் தாக்குதல்களை மேற்கொள்ளுவது என்றும் முடிவு செய்தனர். இது ஒருபுறமிருக்க, ஜெர்மனி தன்னுடைய இரு எதிரிகளையும் தோற்கடிக்கும் முயற்சிகளுக்குத் திட்டமிட்டது. அதன்படி மிக அதிக பலத்துடன் பிரஞ்சுப் படைகளைத் தாக்கி, அவற்றை முறியடித்த பின்னர், இரஷ்யாவின் மீது தனது ஆற்றல் முழுவதையும் பயன்படுத்தி அதனைத் தோற்கடிப்பதற்கும் முயற்சி செய்தது.

மேற்குப் பகுதியில் ஜெர்மனியர்களின் வெற்றி

பிரஞ்சுப் படைகளையும், அவைகளுக்கு உதவிபுரிய வந்த பிரிட்டிஷ் படைகளையும் முறியடிக்க தளபதி வான்மோல்ட்க் (General Von Moltke) என்பவரின் தலைமையின் கீழ் வலிமை மிக்க இருபடைகளை ஒன்ருகச் சேர்த்து ஜெர்மனி அனுப்பியது. இப்படைகள் வடக்குப் பகுதியிலும் மேற்குப் பகுதியிலும் பெல்ஜியம், பிரான்சு ஆகிய இரு நாடுகளையும் நோக்கி முன்னேறின. ஜெர்மனியின் படைகள் பெல்ஜியத்தின் வழியாகப் பிரான்சுக்குச் செல்ல அனுமதி வழங்குமாறு பெல்ஜியத்தை ஜெர்மனி கேட்டுக் கொண்டது. பெல்ஜியம் அதற்கு இணங்க மறுத்து ஜெர்மனியின் படைகளை எதிர்த்தது. அதனுல் லீயஷ் (Liegue) என்ற கோட்டைக் கருகில் இவ்விரு நாட்டுப் படைகளுக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது.

இதற்கிடையில் பெல்ஜியம் ஜெர்மனிப்படைகளை எதிர்க்கத் தன்னுடைய படைகளைத் திரட்டியது. ஆனுல் பெல்ஜியம் தனது படைகளைத் திரட்டி முழுமுச்சுடன் ஜெர்மனியின் படைகளை எதிர்ப்பதற்கு முன்னுல், ஜெர்மனிப் படைகள் லீயஷ் கோட்டையைக் கைப்பற்றி முன்னேறின. இப்படைகள் பெல்ஜியத்தில் பல கொடுஞ் செயல்களைப் புரிந்தன. லௌவெய்ன் பல்கலைக்கழகத்தின் நூலகத்தைத் தீக்கிரையாக்கியது. இது ஜெர்மன் படைகளின் கொடுஞ் செயல்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். ஜெர்மனியின் இக்கொடுஞ் செயல்களால் பெரும்பாலான நடுநிலைநாடுகள் ஜெர்மனிக்கெதிராக பெல்ஜியத்திற்குத் தங்கள் ஆதரவைக் கொடுப்பதற்கு முடிவு செய்தன. ஜெர்மனியர்களின் தாக்குதல்களைத் தாங்கமுடியாமல் பெல்ஜியத்தின் படைகள் பிரான்சு நாட்டின் எல்லைப்பகுதி வரை பின் வாங்கிச் சென்றன. அங்கே பிரஞ்சுப்படைகள் பிரிட்டிஷ் படைகளின் உதவியுடன்

ஜெர்மனியின் படைகளை எதிர்த்துத் தாக்கின. ஆனால் பிரஞ்சுப் படைகள் ஜெர்மானியப் படைகளுடன் போரிட்ட பொழுது பிரிட்டிஷ் படைகளின் உதவி இருந்தும் தோல்வியடைந்தன. அது முதற்கொண்டு பிரஞ்சுப் படைகள் ஜெர்மனிப் படைகளுடன் நேருக்கு நேர் போரிட்ட பொழுதெல்லாம் தோல்வியேயடைந்தன. இதனால் ஷார்லிராயிலிருந்து நான்சி வரை மேற்கொண்ட தங்கள் இராணுவ நடவடிக்கைகளைப் பிரஞ்சுப்படைகள் நிறுத்திக் கொண்டன. அத்துடன் லொரைன் பகுதியில் மேற்கொண்ட கடுந்தாக்குதல்களும் பிரான்சுக்குப் பாதகமாக அமைந்தன. பிரஞ்சுப் படைகள், தங்கள் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல் பின்வாங்குவதைக் கண்ட ஜெர்மானியப் படைகள் மேலும் வேகமாக முன்னேறின. "இன்னும் ஆறு வாரங்களுக்குள் மேற்குப் பகுதிகளில் ஜெர்மனியின் பகைவர்கள் முறியடிக்கப்பட்டு விடுவார்கள்" என மோல்ட்க் தனது பேரரசான இரண்டாம் வில்லியத்துக்குத் தொலைபேசி மூலம் அறிவித்தார்.

ஜெர்மனியர்கள் தாங்கள் திட்டமிட்டது போலவே, தக்க சமயத்தில் வலிமைமிக்க தங்களது படைகளைத் திரட்டி, குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட இடத்தில் தங்கள் பகைவர்களைத் தோற்கடித்தனர். ஜெர்மனியின் வெற்றிகள் அவர்களது பகைவர்களை மிக அதிகமாகப் பாதித்தன. இருப்பினும் அவை ஜெர்மனிக்கு அதிக பலன்களை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. இதனால் அடுத்து ஏற்பட்ட மோதல்களில் பிரஞ்சுப்படைகள் சற்று நிதானமாக நடந்து கொண்டன. எல்லாவற்றிற்கும் மேலாக, ஜோஃப்ரே (Joffre) என்ற பிரஞ்சுப்படையின் தலைவர் சற்றுச் சோர்வடைந்த தன்னுடைய படைகளுக்கு நம்பிக்கை யூட்டி, தன்னுடைய தலைமையின் கீழ் மீண்டும் ஒன்று திரட்டினார். அன்றியும் தன்னுடைய பகைவர்களைத் திருப்பித் தாக்குவதற்கும், முறியடிப்பதற்கும் தக்க சமயம் வாய்க்கும் வரை இவர் ஜெர்மனிப் படைகளின் முன்னேற்றத்தைத் தடுக்க, தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டார். அதனால் ஜெர்மனியப் படைகள் மேலும் முன்னேற முடியாமல் இருந்தன.

மார்னிச் சண்டை (Battle of the Marne)

ஜெர்மனிப் படைகள் செப்டம்பர் 6-ல் மார்னி என்ற இடத்தில் மீண்டும் பிரஞ்சுப் படைகளை எதிர்த்துப்போரிட்டன. இவ்விடத்தைச் சுற்றிலும் ஐந்து அல்லது ஆறு இடங்களில் பிரஞ்சுப் படைகளுக்கும், ஜெர்மனிப் படைகளுக்கு மிடையே

மோதல்கள் ஏற்பட்டன. இச்சண்டை ஏறத்தாழ 150 மைல் பரப்பில் நடைபெற்றது. பெரும்பாலும் இவ்விடத்தில் நடைபெற்ற மோதல்களி லெல்லாம் இருபடைகளும் சமமாகப் போரிட்டன. ஆனால் இச்சண்டையில் ஜெர்மனிப் படைகள் மேலும் முன்னேறாமல் தடுத்து நிறுத்தப் பட்டன. இதற்கிடையில் பிரிட்டிஷ் படைகள் குலுக் (Kluck), பிலோ (Below) ஆகிய இரு பகுதிகளில் இருந்த ஜெர்மனியப் படைகளுக்கிடையே முன்னேறி, செப்டம்பர் 9-ல் மார்னியைக் கடந்து சென்றது. இதனால் ஜெர்மனிப் படைகள் வசமிருந்த குலுக்கும், பிலோவும் ஒன்றுடனொன்று தொடர்புகொள்ள முடியாமல் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டன. இதனால் தங்கள் படைகளுக்கு ஏற்படும் சேதத்தைத் தடுத்துக் கொள்ள ஜெர்மனிப் படைகள் மார்னியிலிருந்து ஆஸ்னி (Aisne)க்குச் சென்றன. கிழக்குப் பகுதியிலிருந்த ஜெர்மனியப் படைகளும் இப்படைகளைப் பின்தொடர்ந்து ஆஸ்னிக்குச் சென்றன. இதனால் தாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த ஜெர்மனிப் படைகள் செப்டம்பர் 14-ல் தங்களின் பாதுகாப்பு முயற்சிகளில் ஈடுபட்டன. எனவே பிரஞ்சுப் படை ஜெர்மானியப் படைகளை மேற்கொண்டு தாக்க முடியாத நிலை ஏற்பட்டது. இருப்பினும் மார்னிப் போரின் காரணமாக பிரஞ்சுக்காரர்களை விரைவாகத் தாக்கி, மிக எளிதாக வெற்றி கொள்ள நினைத்த ஜெர்மனியின் முயற்சிகள் முழுவதும் தோல்வி யடைந்தன. ஜெர்மனியின் தளபதி மோல்ட்க்கும் தனது படைகளின் தோல்விகளை நன்குணர்ந்தார். அதனால் இவரது படைகள் இவரையே எதிர்க்க ஆரம்பித்தன. அதனால் இவர் செப்டம்பர் 9-ல் உயிரிழந்தார். இவருக்குப் பதிலாக எரிச் வான் ஃபால்கென்ஹெயின் (Erich Von Falkenhayn) என்பவர் ஜெர்மானியப் படைகளின் புதிய தளபதியாக நியமிக்கப் பட்டார்.

இரு படைகளும் வெற்றி தோல்வியில்லாமல் ஆஸ்னியில் இருந்தபொழுது பிரஞ்சுக்காரர்களின் முகாம்கள் அதிக பாதுகாப்பில்லாமல் இருந்தன. பிரான்சின் இருப்புப்பாதைகளும் பாதுகாப்பின்றி இருந்தன. இந்நிலையில் பிரான்சு, ஜெர்மனி ஆகிய இரு நாடுகளின் படைத் தளபதிகளும் தங்கள் தங்கள் பகுதிகளை அப்படியே பாதுகாத்து வந்ததுடன், வாய்ப்பு ஏற்பட்டால் ஒருவரை ஒருவர் தாக்கி வெற்றி கொள்ளவும் முயற்சிகளை மேற்கொண்டனர்.

ஜெர்மனியின் படைத் தளபதி ஃபால்கென்ஹெயின் புத்துணர்வுடன் செயல்பட்டு, மேற்குப் பகுதியில் புதிய தாக்குதல்களை மேற்கொண்டார். இப்புதிய தாக்குதல்களின்

மூலம், பிரிட்டிஷ் படைகள் வந்திறங்கிய சானல் (Channel) துறைமுகத்தைக் கைப்பற்றி, பாரிஸ் நகரைப் பிரான்சின் வட பகுதியினின்றும் தனியாகத் துண்டிப்பதற்கு முயன்றுர். எனவே பிரஞ்சுத் தளபதியான ஜோஃப்ரே ஜெர்மனியர்களின் முயற்சி யைத் தடுத்து வடக்குப் புறமாகத் தனது கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தார். ஆனுல் ஜெர்மனியர்களின் ஊடுருவலைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. எனவே ஆஸ்னி பகுதியிலிருந்து பெல்ஜியத்தின் மேற்கு முனைவரை பிரான்சு, ஜெர்மனி ஆகிய இரு நாட்டுப் படைகளுக்கு மிடையே புதிய கைகலப்பு ஏற்பட்டது. இச்சமயத்தில் ஃபால்கென்ஹெயின் தன்னிட மிருந்த படைகளை எல்லாம் ஒன்றுதிரட்டி, ஒரு புதிய அமைப்பு ஒன்றை ஏற்படுத்திப் புதிய நடவடிக்கைகளை மேற்கொண்டார். மேலும் சானல் துறைமுகத்தைப் பலமாகத் தாக்க, தன்னுலான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டார். இதனுல் எப்ரெஸ் என்ற இடத்திலிருந்த பிரிட்டிஷ் படை ஜெர்மனியின் தாக்குதல் களைச் சமாளிக்க வேண்டியதாயிற்று. எனவே எப்ரெஸ் (Epres) என்ற இடத்தில் பிரிட்டிஷ் படைகளுக்கும், ஜெர்மனியப் படை களுக்கு மிடையே மோதல் ஏற்பட்டது. இப்போர் வெகு நாட்களுக்கு நடைபெற்றுலும், ஜெர்மனி, பிரிட்டன் ஆகிய நாடுகளுக் கிடையே இதுவரை நடைபெற்ற சண்டைகளில் இது மிக கடுமையானதாகக் கருதப்படுகிறது. இப்போரின் காரணமாக இருதரப்பிலும் பல போர் வீரர்கள் உயிரிழந்தனர். இதனுல் இருநாட்டுப் படைகளும் கணிசமான அளவு குறைந்தன. எனவே மேற்குப் பகுதியில் இரு படைகளும் நியோபோர்டிலிருந்து (Nieuport) எப்ரெஸ் வரை புதைகுழிகளை வெட்டிக் கொண்டு மறைந்திருந்து போரிட ஆரம்பித்தன. இதனுல் ஏறத்தாழ 600 மைல் நீளத்திற்கு இவ்விரு நாடு களுக்கு மிடையே இத்தகைய புதைகுழிப் போர்கள் நடை பெற்றன. புதைகுழிகளை வெட்டிக் கொண்டு, அவற்றில் மறைந் திருந்து, தாக்குதல்களை நடத்துவதில் பிரஞ்சுக்காரர்கள் மிகக் கைதேர்ந்தவர்கள் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

ஜெர்மனிக்கும் பிரஞ்சுக்குமிடையே மேற்குப் பகுதியில் நடைபெற்ற போரில் ஜெர்மனியர்கள் பெல்ஜியம், வடக்கு பிரான்சு ஆகியவற்றின் பெரும்பாலான தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகளைக் கைப்பற்றினர். இது, முதல் உலகப் போர் முடியும் வரை நேச நாடுகளுக்குப் பாதகமாகவே இருந்தது. இருப்பினும் நேசநாடுகள் சானல் துறைமுகத்தை மிகப் பெருமுயற்சியுடன் பாதுகாத்து வந்ததால் பிரான்சுக்கும்

பிரிட்டனுக்கு மிடையே தொடர்ந்து செய்தித் தொடர்பு இருந்து வந்ததுடன், நேசநாடுகள் ஜெர்மனியின் கடற்கரைகளை முற்றுகையிட வசதியாகவும் இருந்தது. மேலும் புதைகுழிகளை வெட்டி அவற்றில் மறைந்திருந்து போர் செய்ததால் பிரஞ்சுப் பகுதிகளுக்கு அப்பால் இருந்த ஜெர்மனியர்களைத் தாக்குவது நேசநாடுகளுக்கு மிக எளிதாகியது. ஆனல் பிரான்சு புதைகுழி களில் மறைந்து கொண்டு போரிட்டதால், இத்தகைய போர் முறையில் அதிக அனுபவமில்லாத ஜெர்மனி தொடர்ந்து மேற்குப் பகுதியில் தனது முழு கவனத்தையும் செலுத்தினுல் ஜெர்மனியின் மூலதனம் முழுவதும் விரையமாவதுடன், இறுதியில் ஜெர்மனி தோல்வியடையும் என்பதையும் ஜெர்மனியின் தளபதி நன்குணர்ந்திருந்தார். இதனுல் இவர் புதைகுழிகளில் மறைந்திருந்து பிரான்சுடன் போரிடும் முறை யைத் தவிர்க்க நினைத்தார்.

கிழக்குப் பகுதியில் ஜெர்மனி அடைந்த வெற்றிகள்

மேற்குப் பகுதியில் நடைபெற்ற போர்களில் எந்த ஒரு நாடும் வெற்றி தோல்விகளைத் தழுவ இயலாத நிலையிலிருந் தாலும், ஜெர்மனி புதைகுழிகளில் மறைந்திருந்து போரிடும் முறையைத் தவிர்க்க எண்ணியது. இந்நிலையில் கிழக்குப் பகுதியில் நடைபெற்ற போரில், ஆரம்பத்தில் ஜெர்மனி மேற்குப் பகுதியில் வெற்றியடைந்ததைப் போலவே சில வெற்றிகளை அடைந்தது.

ஜெர்மனி இரஷ்யாவின்மீது போர்ப் பிரகடனம் செய்ததும், இரஷ்யா தனது முழு வலிமையையும் பயன்படுத்தி ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய இருநாடுகளின் பகுதிகளையும் ஆக்கிரமிப்பதற் கான முயற்சிகளை முதலில் மேற்கொண்டது. ஆனல் 1914க்கு முன்னர், ஜெர்மனி பிரான்சின் மீது படையெடுத்தால் தங் களுடைய நாட்டுப் படைகளின் பெரும் பகுதியை ஜெர்மனிக் கெதிராகப் பயன்படுத்துவதாக, இரஷ்ய இராணுவ அதிகாரி கள் பிரான்சிற்கு வாக்குறுதி யளித்திருந்தனர். இவ்வுறுதிமொழி நிறைவேற்றப் படுவதற்கான வாய்ப்புக்கள் உலகப் போர் தொடங்கும் வரை ஏற்படாமலே இருந்தன. முதல் உலகப் போர் தொடங்கியவுடன் தன்னுடைய விரோதியான ஆஸ்திரியாவைத் தோற்கடிப்பதிலேயே தனது முழு கவனத்தையும் இரஷ்யா செலுத்தியது. எனவே கலீஷியாவில் (Galicia) ஆஸ்திரியா வுடன் போரிட்ட பொழுதெல்லாம் இரஷ்யப் படைகள் வெற்றி யடைந்தன. ஆனல் இரஷ்யப் படையினரிடையே காணப்பட்ட

கருத்து வேறுபாடுகளின் காரணமாக ஒரு பகுதியினர் கிழக்குப் பிரஷ்யாவின்மீது படையெடுத்ததால் ஜெர்மனிக்கு எதிராகப் பல பகுதிகளைக் கைப்பற்றிய இரஷ்யாவின் செயல் முடிவுற்றது.

கிழக்குப் பிரஷ்யாவை நோக்கிச் சென்ற இரஷ்யப் படைகளின் மொத்த எண்ணிக்கை ஜெர்மனிப் படைகளின் எண்ணிக்கையைவிட அதிகமாகும். ஆனல் இரஷ்ய இராணுவ அதிகாரிகள் ஒருவரோடொருவர் ஒத்துப்போகத் தவறிவிட்டதால் ஜெர்மனியர்களின் தளபதியான பால் வான் ஹிண்டென்பர்க் (Paul Von Hindenburg) என்பவர், தளபதி எரிச் லூடென்டோர்ஃப் (Erich Ludendorff) என்ற தன்னுடைய முக்கிய அதிகாரியுடன் சேர்ந்து செயல்பட்டு, இரஷ்யப்படையெடுப்பை முறியடிக்கும் முயற்சிகளை மேற்கொண்டார். இதனுல் கிழக்குப் பிரஷ்யாவில் 1914 ஆகஸ்டில் நடைபெற்ற மூன்று போர்களிலும் ஜெர்மனியர்கள் இரஷ்யர்களைவிட அதிக போர் வீரர்களை அனுப்பி, ஏராளமான இரஷ்யப் போர் வீரர்களைக் கொன்று குவித்தனர். ஆகஸ்டு 26க்கும் 29க்குமிடையே இருந்த நான்கு நாட்களில் மூன்று முறை டானென்பெர்க் (Tannenberg) என்ற இடத்தில் நடைபெற்ற போரின் முதல் கட்டத்தில் சுமார் 1,25,000 இரஷ்யப் போர் வீரர்கள் சிறை பிடிக்கப் பட்டனர். இரண்டாவது கட்டத்தில் திடீர் என்று ஜெர்மனியைத் தாக்க முயற்சி செய்த இரஷ்யப் படைகள் ஜெர்மனியின் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல் சிதறி ஓடின. மூன்ருவது கட்டத்தில் ஏறத்தாழ முதல் கட்டத்தில் இழந்த அளவு போர் வீரர்களை இரஷ்யா இழந்தது.

ஆஸ்திரியர்களின் தோல்வி

இவ்வாறு இரஷ்யர்கள் தங்கள் திட்டத்தில் முக்கிய பகுதியான கிழக்குப் பிரஷ்யாவில் மிகப்பெருந் தோல்வியடைந்ததால் இப்பகுதியிலிருந்து தங்கள் படைகளை வெளியேற்றிக் கொள்ள வேண்டியதாயிற்று. ஜூலை மாதம் முழுவதிலும் ஏற்பட்ட அரசியல் பிரச்சினைகளால் ஆஸ்திரியா செர்பியாவுடன் மட்டும் போரிடுவதற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டது. தனக்கும் செர்பியாவுக்குமிடையே ஏற்பட்ட போர் உலகப் போராக மாறும் என ஆஸ்திரியா எதிர்பார்க்காததே இதற்கு முக்கிய காரணமாகும். அன்றியும் ஜெர்மனி தனக்கு முழு ஆதரவு தர ஒப்புக்கொண்டதால் இரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைகளை ஜெர்மனியே சமாளித்துக் கொள்ளுமென ஆஸ்திரியா கருதியது.

இரஷ்யா படைதிரட்டும் உத்தரவைப் பிறப்பித்தவுடன், ஜெர்மனி இரஷ்யாவிற் கெதிராகப் போர்ப் பிரகடனம் செய்த தால், ஆஸ்திரியா தான் முன்னதாகவே திட்டமிட்டபடி செர் பியாவிற்கு எதிராகத் தனது போர் நடவடிக்கைகளை மேற் கொண்டது. நிர்வாகத் திறமைக்குறைவின் காரணமாக ஆஸ்திரி யர்களின் போர் நடவடிக்கைகளில் வெற்றித் தேவதை ஆஸ்திரி யர்களை விட்டு விலகிச் சென்றுள். ஆஸ்திரியப் படைகளும் தங்கள் நாட்டின் எல்லைகளை எதிரிகளின் ஆக்கிரமிப்புக்கு விட்டுவிட்டுப் பின்வாங்கினர்.

இந்நிலையில் ஜெர்மனியுடன் போரிட்டுக் களைத்துப் பின் வாங்கிய இரஷ்யப்படைகள் மேற்கு கலீஷியா முழுவதிலும் ஆஸ்திரியப் படைகளை மிகக் கடுமையாக எதிர்த்தன. ஆஸ்திரியப் படைகள் தங்கள் திறமையின்மையின் காரண மாகப் பின்னடைந்ததால், எண்ணிக்கையில் மிகுந்த இரஷ்யப் படைகள் மேலும் ஆஸ்திரியப் படைகளைத் தோற்கடித்தன. இதனல் ஆஸ்திரியப்படைகள் மேலும் வலிமை குறைந்து துனஜெட்ஸ் ஆற்றுக்கு (Dunajetz River) இக்கரையில் வந்து தங்கின. தளர்ச்சியடைந்த ஆஸ்திரியத் தளபதி, போர் தொடங்கிய 42 நாட்களுக்குப் பின்னர் ஜெர்மனியின் தளபதியை உதவிக்கு அழைத்தார். மேற்குப் பகுதியில் மார்னி என்ற இடத்தில் நடைபெற்ற போரில் ஜெர்மனியப் படைகள் தடுத்து நிறுத்தப்பட்ட அதே சமயத்தில் கிழக்குப் பகுதியில் ஆஸ்திரியப் படைகளைக் கலீஷியா என்ற இடத்தில் இரஷ்யர்கள் தோற்கடித்தனர். ஜெர்மனியர்கள் தங்கள் கவனத்தை மேற்குப் பகுதியில் செலுத்தி வந்ததால் ஆஸ்திரியத் தளபதியின் வேண்டுகோளுக்கு ஜெர்மனியர்கள் செவிசாய்க்க இயலவில்லை.

கிழக்குப் பகுதியில் 1914 ஆம் ஆண்டின் இறுதியில் கிழக்குப் பிரஷ்யாவிலிருந்து மேற்கு இரஷ்யாவின் போலந்து வரையிலும், கலீஷியாவிலிருந்து கார்பேதியன் மலைகள் (Carpathian Mountains) வரையிலும் ஏறத்தாழ 900 மைல் புதைகுழிகளை வெட்டி அவற்றில் மறைந்திருந்து இருபடைகளும் போரிட்டு வந்தன. எனவே மேற்குப் பகுதியைப் போலவே கிழக்குப் பகுதியிலும் இருதரப்புப் படை களும் அப்படியே நின்றன. புதைகுழிகளில் மறைந்து கொண்டு போரிடுவது இருபகுதிகளிலும் தொடர்ந்ததுடன் தவிர்க்க முடியாததாகவும் ஆகிவிட்டது.

3. முதல் உலகப் போரில் மேலும் பல சிக்கல்கள் (1915 முதல் 1916 வரை)

1914—1915-ல் குளிர்காலத்தில் உலகப் போர் மிகப் பெரும் போராக மாறியது. இலட்சக் கணக்கானோர் போரில் ஈடுபட்டு இருந்தனர். சமவெளிகளில் நேருக்குநேர் போரிடுவது மாறி, புதைகுழிகளை வெட்டிக் கொண்டு மறைந்திருந்து, எதிரிகளைத் தாக்கும்போர்முறை வளர்ச்சியடைந்தது. எதிரிகளின் படைகளும் புதைகுழிகளை வெட்டிக் கொண்டு மறைந்திருந்து தாக்க முற்பட்டதால், மூன்று அல்லது நான்கு வளைவுகளைக் கொண்ட குழிகளை வெட்டிக் கொண்டு, தங்களுக்குத் தேவையான பொருள்களை அவற்றில் மறைத்து வைத்திருந்ததுடன், பூமிக்கடியிலேயே தோண்டிக் கொண்டு சென்று எதிரிகளின் பகுதிகளை அடைந்து, எதிரிகளைத் தாக்கி எதிரிகளின் புதைகுழிகளையும் எளிதாகக் கைப்பற்றினர்.

மேற்குப் பகுதியில் நடைபெற்ற சண்டையில் ஏறத்தாழ 600 மைல் தொலைவிற்கு பிரான்சு, பிரிட்டன், பெல்ஜியம் ஆகிய நாடுகளின் படைகள் ஜெர்மனிப் படைகளுடன் போரிட்டன. கிழக்குப் பகுதியில் ஜெர்மனி, ஆஸ்திரியா ஆகிய நாடுகளின் படைகள் இரஷ்யப் படைகளைப் புதைகுழிகளில் மறைந்திருந்து போரிடும் முறையில் அவ்வளவு கடுமையான முயற்சிகளை மேற்கொள்ளா விடினும், இவர்கள் ஏறத்தாழ 900 மைல் தொலைவிற்கு எதிரிகளுடன் போரிட்டனர்.

புதைகுழிகளில் மறைந்திருந்து பகைவர்களைத் தாக்கும் முறையில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பல எந்திரப் போர்க் கருவிகளும், வேறுபல போர்க்கருவிகளும் பயன்படுத்தப் பட்டமையால் உலகப்போர் மேலும் தீவிரமடைந்தது. இப்போரில் குதிரைப்படை அவ்வளவாகப் பயன்படவில்லை. ஆனால் பீரங்கிகள் கற்பனைக் கெட்டாத அளவிற்குப் பயன்படுத்தப் பட்டன. இயந்திரத் துப்பாக்கிகள் மிக அதிக அளவில் பயன் படுத்தப்பட்டன. பீரங்கிகள் எதிரிகளை முறியடிப்பதற்காக எதிரிகளின் முகாம்களை நோக்கி நிறுத்தப்பட்டன. இரசாயனப் பொருள்களும், இரசாயனக் கருவிகளும் மிக அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. இதனால் வெடிகுண்டுகள் பயன்படுத்தப்பட்டு எதிரிகளின் சுரங்கங்கள் அழிக்கப் பட்டன. மேலும் விஷவாயுக்களும் இப்போரில் பயன்படுத்-

தப்பட்டன. இப்போரின் பிற்பகுதியில் நேசநாடுகள் "டாங்கு" களை உற்பத்தி செய்து பகைவர்களுக்கு எதிராகப் பயன் படுத்தின. கரியைப் பயன்படுத்தி ஓட்டப்பட்டு வந்த உந்து வண்டிகள் பெட்ரோல் இஞ்சின்களால் இயக்கப்பட்டன. இத்தகைய உந்துவண்டிகள் மேடுபள்ளங்களிலும், மலை களிலும் செல்வதற்கு வசதியாக இருந்தன. பெட்ரோல் இஞ்சின்கள் போர்முறையில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தின. பெட்ரோல் இஞ்சின்கள் டாங்குகளுக்குப் பயன் படுத்தப்பட்டதோடு மட்டுமல்லாமல், போர்முனையில் போரிடும் போர்வீரர்களுக்குத் தேவையான உணவுப்பொருள்களையும், ஆயுதங்களையும் அனுப்புவதற்கு வசதியாகவும், கைது செய்யப் பட்ட எதிரிகளையும், காயமடைந்த போர்வீரர்களையும் உள் நாட்டிற்குக் கொண்டு வருவதற்கும், புதிதாகப் பயிற்சி பெற்ற போர் வீரர்களைப் போர்முனைக்குக் கொண்டு செல்வதற்கும் வசதியாகவும் இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக இப்போரில் ஆகாய விமானங்கள் பயன்படுத்தப் பட்டன. அதனால் புதை குழிகளில் மறைந்திருந்த எதிரிகள் எளிதாகக் கண்டுபிடிக்கப் பட்டு, ஆகாயத்திலிருந்து விமானத்தின் மூலம் குண்டு வீசி அவர்களை அழிப்பது மிக எளிதாகியது.

புதிய போர்முறைகள் கையாளப்பட்டதாலும், இலட்சக் கணக்கான போர்வீரர்கள் போரில் நேரிடையாக ஈடுபட்ட தாலும், போரில் வெற்றியடைவது இருதரப்பினருக்கும் இயலாத ஒன்றாயிற்று. இந்நிலையில் புதைகுழிகளில் மறைந் திருந்து போரிடும் முறையில் பெரும் முயற்சிகளையும், தந்திரங் களையும் மேற்கொள்ள வேண்டியிருந்தது. அத்துடன் பெரு மளவில் போர்வீரர்களையும், பீரங்கிகளையும் பயன்படுத்த வேண்டியதாயிற்று. இதனால் போரில் ஈடுபட்டிருந்த நாடுகள் பெரும் மூலதனத்தையும், போர்க் கருவிகளையும் செலவிட வேண்டியதாயிற்று. அத்துடன் மக்களும் தங்கள் தேவை களைக் குறைத்துக் கொண்டு எல்லாவற்றையும் போர்முகாம் களுக்கு அனுப்ப அரசுடன் ஒத்துழைக்க வேண்டியிருந்தது. இதனால் உலகப்போரில் ஈடுபட்டிருந்த நாடுகளின் செலவு, வருவாயைவிட அதிகமாயிற்று. எனவே இந்நாடுகள் தங்கள் நாட்டில் பலபுதிய வரிகளை விதித்ததுடன், பெருந்தொகையைக் கடனாகவும் வாங்க நேரிட்டது.

நேச நாடுகளின் வலிமை

1915 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கிழக்குப் பிரஷ்யப் பகுதியில் ஜெர்மனி வெற்றியடைந்தாலும், பெல்ஜியம், வடக்கு

பிரான்சு, மேற்கு இரஷ்யப் போலந்து ஆகிய பகுதிகளில் நேசநாடுகளான பிரான்சு, பிரிட்டன், இரஷ்யா ஆகிய நாடுகள் வெற்றி பெற்றதால் இப்போரில் தாங்கள் வெற்றியடையலாம் என்ற நம்பிக்கை நேசநாடுகளிடையே வளர்ச்சியடைந்தது. அன்றியும் மக்கள்தொகை, செல்வம், இயற்கை வளம் ஆகியவை ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி ஆகிய பேரரசுகளைக் காட்டிலும் நேசநாடுகளில் மிக அதிக அளவில் இருந்தன. இவற்றின் உதவியுடன் ஜெர்மனிக் கோட்டைகளைக் கிழக்கிலிருந்து இரஷ்யாவும், மேற்கிலிருந்து பிரான்சு, பிரிட்டன் ஆகிய நாடுகளும் எளிதாகத் தாக்கித் தகர்க்க முடியுமென நேச நாடுகள் நம்பின. இத்துடன் பிரிட்டிஷ் தீவுகளும், கனடா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து முதலியவைகளும் நேசநாடுகளுக்கு உதவின. எனவே தங்கள் வலிமையால் மத்தியப் பேரரசு நாடுகளை மிகத் தீவிரமாகத் தாக்கிச் சமாதானத்திற்கு ஒத்துக்கொள்ள வைக்க முடியுமென நேசநாடுகள் கருதின. எல்லாவற்றிற்கும்மேலாக, பிரிட்டிஷ் கடற்படை, ஜெர்மனியின் கடல் வாணிபத்தைக் குலைத்து, அதன் குடியேற்ற நாடுகளை அதனிட மிருந்து பிரித்தது. அத்துடன் ஜெர்மனிக்குத் தேவையான பொருள்களை ஜெர்மனி பிற பகுதிகளிலிருந்து பெறுவதை பிரிட்டிஷ் கப்பற் படைகள் தடுத்தன.

போரில் தாங்கள்தான் வெற்றியடையப் போகிறோம் என்று நம்பிய நேச நாடுகளின் அரசுகள், போருக்குப் பின்னர் தோல்வியடைந்த நாடுகளிலிருந்து கைப்பற்றிய பொருள்களை எவ்வாறு தங்களுக்குள் பகிர்ந்து கொள்வது என்பதைப் பற்றியும் சிந்திக்கத் தொடங்கின. இதற்குப் பின்னர் இந் நேச நாடுகள் தனித்தனியாக அமைதி உடன்படிக்கைகளைச் செய்து கொள்வதில்லை என்றும், பொது விரோதிகளை முழுவதுமாகத் தோற்கடித்த பின்னரே போரை நிறுத்துவது என்றும் 1914 செப்டம்பரில் செய்துகொண்ட இலண்டன் உடன்படிக்கையின் வாயிலாக உறுதி கூறியிருந்தன. பின்னர் 1915 மார்ச்சில் ஓர் இரகசிய உடன்படிக்கையைச் செய்து கொண்டன. இதன்படி, கான்ஸ்டான்டிநோபிள், போலந்து ஆகிய பகுதிகளை இரஷ்யாவும், ஆல்சேஸ், லொரைன், ரைன் நதியின் மேற்குக்கரை வரை உள்ள பகுதிகள் ஆகியவற்றைப் பிரான்சும், ஜெர்மனியின் குடியேற்ற நாடுகளை பிரிட்டனும் பகிர்ந்து கொள்வது என நேசநாடுகள் முடிவு செய்தன.

ஜெர்மனியின் வலிமை

நேசநாடுகள் நம்பியதைப் போலவே ஜெர்மனியும் தான் போரில் வெற்றியடையலாம் என நம்பியது. எனவே ஜெர்மனியர்கள் முன்னர் எப்பொழுதும் இருந்ததைவிட மிக அதிக அளவில் ஒன்றுபட்டுத் தீவிரமாகப் பாடுபட்டு நேசநாடுகளைத் தோற்கடிக்க முயற்சி செய்தனர். ஆஸ்திரியா-ஹங்கேரியப் பேரரசின் இராணுவ முயற்சிகள் நம்பிக்கை யூட்டுவனவாக இல்லாவிட்டாலும், அந் நாட்டுமக்கள் தங்கள் அரசுக்கெதிராகப் புரட்சி செய்யவில்லை. ஆஸ்திரியா-ஹங்கேரியின் தோல்வியைக் கண்டு அந் நாட்டு மக்கள் இரட்டை முடியாட்சிக்கு எதிராகப் புரட்சி செய்வார்கள் என நேசநாடுகள் எதிர்பார்த்தன. இந்நிலையில் போலந்து நாட்டின் தலைவர்கள் தங்கள் நாடு இரஷ்யாவால் இரஷ்ய மயமாக்கப் படுவதை விரும்பாததால், ஹாப்ஸ்பர்க் பேரரசுக்குத் தங்கள் முழு ஒத்துழைப்பையும் கொடுத்தனர். ஆஸ்திரியா-ஹங்கேரி, உதுமானியப் பேரரசு ஆகிய இரு நாடுகளின் இராணுவங்கள் ஜெர்மனியின் இராணுவ அதிகாரிகளால் நவீனமாக்கப்பட்டுப் புத்துயிர் பெற்றுப் பயனுள்ளதாயிற்று.

ஆஸ்திரியா-ஹங்கேரி, ஜெர்மனி ஆகிய மத்தியப் பேரரசு நாடுகளைச் சுற்றிலும் எதிரிகள் சூழ்ந்திருந்ததால் இவ்விரு நாடுகளும் எதிரிகள் சூழ்ந்த கோட்டையாயிற்று. இருப்பினும் சில நன்மைகள் இந்நாடுகளுக்கு ஏற்பட்டன. இவ்விரு நாடுகளையும் பகைவர்கள் சூழ்ந்து கொண்டமையால் மத்தியப் பேரரசுகளுக்கு வெளிநாடுகளிலின்றித் தங்கள் எல்லையிலேயே போரிடும் வாய்ப்பு ஏற்பட்டது. மேலும் தங்கள் படைகளை ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு அனுப்புவது இவர்களுக்கு எளிதாயிற்று. அத்துடன் மத்தியப் பேரரசுகளின் படைகள் திறமை மிக்க ஜெர்மானியத் தளபதிகளின்கீழ் செயல்பட்டன. இதனால் ஆஸ்திரியா-ஹங்கேரி, உதுமானியப் பேரரசு ஆகியவற்றின் படைகள் ஜெர்மனியப் படைகளுடன் ஒத்துழைத்துப் பகை நாடுகளை ஒன்றன்பின் ஒன்றாகத் தாக்கி வெற்றி கொள்வதற்கு வசதியாக இருந்தது. ஆனால் நேசநாடுகளின் அதிகாரிகளிடையே போட்டியும் பொறாமையும் ஏற்பட்டு, ஒற்றுமை இல்லாமல் நேசநாடுகள் தங்கள் தாக்குதல்களை ஒருமுகப் படுத்துவதற்குச் சிரமப் பட்டன.

புதைகுழிகளை வெட்டி மறைந்திருந்து போரிடுவதில் புதிய முறைகளைக் கையாண்டதால் மத்தியப் பேரரசுகளுக்கு 1915ஆம் ஆண்டின் தொடக்கத்தில், ஆயுத வசதியின் காரணமாகவும்.

பயிற்சி பெற்ற போர்வீரர்களைக் கொண்டிருந்தமையாலும் பல நன்மைகள் ஏற்பட்டன. ஜெர்மனி தொடக்கத்தில் பகைவர்களைத் தோற்கடிப்பதற்கு ஒரு குறிப்பிட்ட அளவு போர்த் தளவாடங்களை மட்டுமே பெற்றிருந்தது. ஆனால் பின்னால் ஏற்படும் தேவையை முன்னதாகவே உணர்ந்த ஜெர்மனி அமைச்சரவை போர்க் கருவிகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஆதரவளித்தது. மேலும் இவ்வமைச்சரவை நாட்டிலுள்ள தொழிற்சாலைகளின் சக்தியை ஆராய்ந்து எவ்வளவு பொருள்களை அவை உற்பத்தி செய்ய முடியுமென நன்கறிந்தது. இதனால் தேவையான அளவு போர்க் கருவிகளை மிக வேகமாக உற்பத்தி செய்ய இத் தொழிற்சாலைகளுக்கு அரசு ஆணை பிறப்பித்தது. இதனால் உலகப் போர் தொடங்கிய உடனேயே தேவையான போர்க் கருவிகள் போர் முகாம்களுக்கு அனுப்பப்பட்டன. ஆனால் நேச நாடுகள் போதிய போர்க் கருவிகள் கிடைக்காமல் அல்லலுற்றன. பிரான்சு தன்னுடைய நாட்டில் தொழிற்சாலைகளைக் குறைத்துக் கொண்டதும், பிரிட்டன் தன்னுடைய நாட்டில் போர்க் கருவிகளை உற்பத்தி செய்வதைக் குறைத்துக் கொண்டு மற்ற வியாபாரப் பொருள்களை உற்பத்தி செய்ததும், இரஷ்யா போதுமான போர்க் கருவிகள் கிடைக்கப் பெறுமல் அல்லலுற்றதுமே இதற்கு முக்கிய காரணங்களாகும்.

இச்சமயத்தில் ஜெர்மனி தேவையான போர்வீரர்கள் போக எஞ்சிய போர்வீரர்களைத் தங்களுடைய முகாம்களில் எப்பொழுதும் தயாராக வைத்திருந்தது. பிரஞ்சுப் படைத் தளபதி ஜோஃப்ரே மிகக் குறைந்த அளவு படைகளையே தனியே வைத்திருந்தார். பிரிட்டிஷ் இராணுவ அமைச்சரான கிட்செனெர் குறைந்த எண்ணிக்கையில் புதிதாகப் போர் வீரர்களை அமர்த்திப் போர்ப் பயிற்சி யளித்திருந்தார். அத்துடன் இப்படைகளின் உதவியால் ஒரு புதிய படைக்குப் பயிற்சியளிக்கும் முயற்சிகளையும் மேற்கொண்டார். ஆனால் ஜெர்மனியின் தளபதியான ஃபால்கென்ஹெயின் போர்ப் பயிற்சி பெற்ற போர் வீரர்களையும், ஒற்றர்களையும் ஒன்று சேர்த்து, ஒரு புதிய இராணுவ அமைப்பைத் தயார் செய்து, தயார் நிலையில் தனியாக வைத்திருந்தார். இப் படையின் எண்ணிக்கை பிரான்சில் இருந்த பிரிட்டிஷ் படைவீரர்களின் எண்ணிக்கையைவிட அதிகமாக இருந்தது.

இச் சூழ்நிலையில் ஃபால்கென்ஹெயின் மேற்குப் பகுதியிலிருந்த பிரிட்டிஷ் படைகளுக்கு உதவியாகப் புதிய படைகள்

பிரிட்டனிலிருந்து வருவதற்கு முன்னல் அவற்றைத் தாக்க நினைத்தார். பிரிட்டிஷ் படைகளையும், பிரஞ்சுப் படைகளையும் தோற்கடிப்பதற்குச் சூழ்நிலைகளும், காலமும் சாதகமாக இருந்தன. ஆனல் 1914-ல் ஆஸ்திரியப் படைகள் கிழக்குப் பகுதியில் இரஷ்யப் படைகளிடம் தோல்வியடைந்ததால், இரு பகுதிகளிலும் பகைவர்களுக் கெதிராகப் படைகளைத் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் பொறுப்பு, ஜெர்மனியத் தளபதியின் மீது சுமத்தப்பட்டது. இரஷ்யப் படைகள் கார்பேதியன் மலைகளைக் கடந்து ஹங்கேரியச் சமவெளியில் நுழையத் தொடங்கின. ஆஸ்திரியர்கள் செர்பியாவில் நுழைவதற்கு முயற்சி செய்து, இரண்டாவது முறையாகத் தோல்வியடைந்ததால், ஆஸ்திரியப் படைகள் மேலும் வலிமை யிழந்தன. அன்றியும் ஆஸ்திரியப் படைகள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு வெவ்வேறு பகுதிகளில் இருந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக ஜெர்மனியில் இருந்த இராஜதந்திரிகளும், இராணுவ அதிகாரிகளும் இத்தாலி, ருமேனியா ஆகிய இரு நாடுகளும், ஆஸ்திரியா-ஹங்கேரி, ஜெர்மனி ஆகிய மத்தியப் பேரரசுகளுக்கு எதிராக, நேச நாடுகளுடன் சேர இருப்பதைக் கவனித்து வந்ததுடன், இத்தாலி, ருமேனியா ஆகிய இரு நாடுகளும் நேச நாடுகளுடன் சேர்ந்து, தங்களுக் கெதிராகப் போரில் ஈடுபட்டால் ஆஸ்திரியாவை அவை முறியடிப்பது திண்ணம் என இவர்கள் முடிவு செய்தனர்.

இத்தாலி, ருமேனியா ஆகிய நாடுகளின் போக்கு

இத்தாலி, ருமேனியா ஆகிய நாடுகள் நேச நாடுகளுக்கு ஆதரவாகப் போரில் இறங்காவண்ணம் தடுப்பு முயற்சிகளை மேற்கொண்டு, ஆஸ்திரியாவை அபாயத்தினின்றும் பாதுகாக்க ஜெர்மனி முயற்சி செய்தது. இதனல் ஃபால்கென்ஹெயின் ஆஸ்திரிய வெளிநாட்டமைச்சரைக் கட்டாயப்படுத்தி, முக்கூட்டு ஒப்பந்தப்படி இத்தாலி கேட்டுக் கொண்டிருந்த நஷ்டஈட்டை அது நடுநிலை வகிப்பதற்குக் கைம்மாருகக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார். ஆஸ்திரிய நஷ்டஈட்டைக் கொடுப்பதற்கு முழுமனத்துடன் சம்மதிக்காததுடன், நஷ்டஈட்டைப் பெற்ற பின்னரும் இத்தாலி திருப்தியடையாது என்றும் நம்பியது. இருப்பினும் ஜெர்மனி வற்புறுத்தியதால் ஆஸ்திரியா இத்தாலிக்குச் சில பகுதிகளை நஷ்டஈடாக வழங்கியது.

இந்நிலையில் நேசநாடுகள் இத்தாலிய மக்களின் ஆதரவைப் பெற்றன. மேலும் இத்தாலி நேசநாடுகளுக்கு ஆதரவாக இருந்த

தால் ஆஸ்திரியா கொடுப்பதாக உறுதியளித்த பகுதிகளைக் காட்டிலும் அதிகமான ஆஸ்திரியப் பகுதிகளை இத்தாலிக்குக் கொடுப்பதாக நேச நாடுகள் ஆசை காட்டின. எனவே இத்தாலி 1915 ஏப்ரலில் நேச நாடுகளுடன் ஓர் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன்படி இத்தாலி நேசநாடுகளுக்கு ஆதரவாகப் போரில் ஈடுபட்டால் இஸ்திரியா, டிரெஸ்டி ஆகிய பகுதி களையும், தெற்கு டைரால் பகுதியில் பாதியையும், டால்மேஷியக் கடற்கரையில் ஒரு பகுதியையும் இத்தாலி தன்னுடன் இணைத்துக் கொள்ள அனுமதிப்பதாகவும், உதுமானியப் பேரரசுப் பகுதிகளில் பங்கு தருவதாகவும், ஆப்பிரிக்காவில் தன் ஆதிக்கப் பகுதிகளை விரிவுபடுத்துவதற்கு ஆதரவளிப்ப தாகவும் நேச நாடுகள் இத்தாலிக்கு உறுதி யளித்தன.

ருமேனியாவில் ஹோஹென்ஸோலன் அரசர் ஃபெர்டி ஞண்டும், பல மூத்த அரசியல் தலைவர்களும் முக்கூட்டு ஒப்பந்தத்தை மதித்து, மத்தியப் பேரரசுகளுக்கு உதவவேண்டு மென்று விரும்பினர். ருமேனியா மத்தியப் பேரரசுகளுக்கு உதவு வதால் இரஷ்யப் பேரரசில் ருமேனிய மொழியைப் பேசிவரும் பெஸ்ஸரேபியா தங்களுக்குக் கிடைக்குமென ருமேனியர்கள் கருதினர். ஆனால் ருமேனியாவிலிருந்த மற்றொரு பகுதியினர் – குறிப்பாக இளைஞர்கள், முக்கூட்டு ஒப்பந்தத்தை மீறி நேச நாடுகளுடன் போரில் கலந்துகொள்ள வேண்டுமென்றும், அப்படிக் கலந்து கொள்வதால் ஆஸ்திரியா–ஹங்கேரியைப் பங்கு போடும்பொழுது பெஸ்ஸரேபியாவைவிட அதிக அளவு நிலப்பரப்பு தங்களுக்குக் கிடைக்கும் என்றும் கூறினர். இந் நிலையில் நேச நாடுகள் டிரான்சில்வேனியாவின் பெரும் பகுதியை ருமேனியாவிற்கு வழங்க ஒப்புக் கொண்டன. ஆனால் இரஷ்யாவும் செர்பியாவும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. எனவே ருமேனியா அரசு இன்னும் அதிக நன்மைகளைப் பெற ஏற்ற சமயத்தை எதிர்நோக்கி யிருந்தது.

கிழக்குப் பகுதியில் ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு

இத்தாலி, ருமேனியா ஆகிய இரு நாடுகளையும் நடுநிலை வகிக்குமாறு செய்ய, தன்னாலான எல்லா முயற்சிகளையும் ஃபால் கென்ஹெயின் மேற்கொண்ட பொழுது டானென்பெர்க் போரில் புகழ்பெற்ற ஹிண்டென்பர்க் இரஷ்யர்களைத் தோற் கடிப்பதற்குத் தான் முயற்சிகளை மேற்கொள்ளப் போவதாக உறுதி கூறினர். இதனால் ஜெர்மனியின் முதல்வரான பெத் மென்ஹோல்வெக்கும், கடற்படைத் தளபதி டிர்பிட்சும் (Tirpitz)

ஹிண்டென்பர்க்கை ஆதரித்தனர். எனவே இறுதியில் ஆஸ்திரியாவின் நிலையைக் கருதி ஃபால்கென்ஹெயினும் அதற்கு மனமின்றி உடன்பட்டார்.

அது முதற்கொண்டு ஃபால்கென்ஹெயின் மேற்குப் பகுதியில் வெற்றிகாண முயற்சிகளை மேற்கொள்ளுவதை விட்டுவிட்டு, கிழக்குப் பகுதிக்குத் திரும்பினர். அத்துடன் சற்று வருத்தத்துடன் ஹிண்டென்பர்க்கையும், சிறந்த போர் வீரர்கள் இருந்த தன்னுடைய படையையும் போருக்கு அனுப்பி வைத்தார். இப்படைகள் கடுங்குளிர் காலத்தில் ஒரே ஒருமுறை ஆஸ்திரியாவுக்கு ஆதரவாக இரஷ்யாவுடன் போர் புரிந்து மடிந்தன. இதற்குப் பின்னர் படையெடுப்பு நடவடிக்கைகளை ஃபால்கென்ஹெயின் தானே மேற்கொண்டார்.

இதற்கிடையில் மேற்குப் பகுதியில் பிரிட்டிஷ்காரர்களும், பிரெஞ்சுக்காரர்களும் முழுபலத்துடன் தங்கள் தாக்குதல்களைத் தொடங்கினர். எனவே கிழக்குப் பகுதிக்குத் தேவையான படைகளை மேற்குப் பகுதியிலிருந்து கொண்டுவருவது ஜெர்மனிக்கு இயலாமல் போய்விட்டது. இருப்பினும் உரிய காலத்திற்குள் தேவையான படைகளைத் திரட்டி ஆஸ்திரியாவின் பகுதிகளுக்கு ஃபால்கென்ஹெயின் அனுப்பிவைத்தார். இப்படையிலிருந்தவர்கள் எல்லாம் ஆஸ்திரியாவில் இருந்த ஜெர்மனிப் படைகளிலிருந்து தேர்ந்து எடுக்கப்பட்டனர். இவர்களில் ஆகஸ்டு வான் மாக்கென்ஸென் (August Von Mackensen) என்பவரும், ஹான்ஸ் வான் சீகெட் (Hans Von Seeckt) என்பவரும் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்கள் ஜெர்மனியின் பீரங்கிப் படையை மிகச் சிறப்பாகச் சீர்திருத்தி அமைத்தனர். இதனுல் ஜெர்மன் படைகளும், ஆஸ்திரியப் படைகளும் ஒன்று சேர்ந்து இரஷ்யாவைத் தாக்க ஆரம்பித்தன. இப்படை 1915 மே மாதம் இரஷ்யப் படைகளை முறியடித்து கோர்லிஸ் (Gorlice) என்ற இடத்தில் ஆக்கிரமிப்புச் செய்தது. இதனுல் சுமார் 95 மைல் இப்படையால் ஆக்கிரமிக்கப்பட்டது. இதுவரையில் இரஷ்யாவிற்குச் சாதகமாக இருந்த கிழக்குப் பகுதி ஜெர்மனிக்குச் சாதகமாக மாறியது.

இந்நிலையில் ருமேனியா மத்தியப் பேரரசுகளுக்கு எதிராகப் போரில் ஈடுபடும் எண்ணத்தைக் கைவிட்டது. ஆனுல் ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய நாடுகளின் படைகள் கிழக்குப் பகுதியில் வெற்றிநடை போட்ட பொழுது, இத்தாலி மத்தியப்

பேரரசுகளுக்கு எதிராகப் போரில் இறங்கியது. கிழக்கே இரஷ்யர்களை முறியடித்து, ஆஸ்திரியப் படைகளுக்குப் புத்துயிரூட்டி, தனது படைகளை இத்தாலிய எல்லைகளுக்கு அனுப்பினாலும், தங்களுக்கு எதிராக இத்தாலி போரில் இறங்கியதால், ஃபால் கென்ஹெயின் சற்று அதிர்ச்சியடைந்தார். இருப்பினும் ஆஸ்திரியப் பிரச்சினைகள் முடிவடைந்ததால் மலைப் பாங்கான இத்தாலியின் எல்லைப் பகுதிகளில் தற்காப்பு முயற்சிகளை மேற்கொள்ளுவது ஜெர்மனியின் தளபதிகளுக்கும் ஆஸ்திரியப் போர் வீரர்களுக்கும் மிக எளிதாயிற்று. இவர்கள் ஏறத்தாழ ஓராண்டு இத்தாலியப் படையெடுப்பைத் தடுத்து நிறுத்தினர்.

ஜெர்மனியர்கள் போலந்தை வெற்றி கொள்ளுதல்

ஆஸ்திரிய, ஜெர்மனியப் படைகள் போலந்தில் தொடர்ந்து முன்னேறின. ருமேனியப் படைகள் போதுமான போர்க் கருவிகளில்லாமல் அல்லலுற்றன. அத்துடன் பெட்ரோகிராடில் (Petrograd) இருந்த அமைச்சரவை கடைசி விநாடி வரை உண்மைநிலையை மறைத்து, குறைகளிலிருந்து தப்பிக்க முயற்சி செய்தது. இருப்பினும் முயற்சி செய்து ஓரளவு இராணுவத் தளவாடங்களைத் தன்னுடைய முகாமிற்கு அனுப்பியது. ஆனால் இவை காலம் கடந்து போய்ச் சேர்ந்ததால் எவ்விதப் பலனையும் அளிக்கவில்லை. இருப்பினும் இரஷ்யாவின் இராணுவ அதிகாரி டியூக் நிக்கோலஸ் (Duke Nicholas) ஜெர்மனிப் படைகளுடன் நேரிடையாகப் போரிடாமல் மறைந்திருந்து தாக்கி நிலைமைகளைச் சமாளித்து வந்தார். இந்நிலையில் இரஷ்யப் படைகள் தொடர்ந்து பின்வாங்கியதால் 1915 செப்டம்பரில் போலந்தும், லிதுவேனியாவின் பெரும்பகுதியும் மத்தியப் பேரரசின் இராணுவ அதிகாரத்தின் கீழ் வந்தன.

இப்போரில் 1915 கோடையில் இரஷ்யா மிக அதிக அளவு நிலப்பரப்பை எதிரிகளிடம் இழந்தது. இத்துடன் சுமார் 5 இலட்சம் இரஷ்யப் போர் வீரர்கள் கொல்லப்பட்டனர். 10 இலட்சம் போர் வீரர்கள் காயமடைந்தனர்; மற்றொரு 10 இலட்சம் இரஷ்யப்படை வீரர்கள் பகைவர்களிடம் போர்க் கைதிகளாயினர். எஞ்சிய போர் வீரர்கள் சில இடங்களில் தோல்வியடைந்ததாலும், சில சமயங்களில் பின்வாங்கியதாலும் உற்சாக மிழந்தனர். இந்நிலையில் இரஸ்புதீன் என்ற கபட சந்நியாசியின் வேண்டுகோளுக் கிணங்க, பேரரசி ஸாரினா (Tsarina) இராணுவத் தளபதி டியூக் நிக்கோலஸைப் பதவியிலிருந்து நீக்குமாறு மன்னரை வற்புறுத்தினர். தனது

மனைவியின் விருப்பத்தை நிறைவேற்றுவதையே தனது முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்த பேரரசர் இரண்டாம் நிக்கோலஸ் தனது படைத் தளபதியை நீக்கிவிட்டுத் தானே இரஷ்யப் படைகளுக்குத் தலைமை தாங்கிப் போரைத் தொடர்ந்து நடத்தினர். பேரரசர் இரண்டாம் நிக்கோலஸ் போரைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று எண்ணினர். ஆனல் குழப்பமான சூழ்நிலைகளில் தீவிரமான முடிவுகளை எடுப்பதற்குத் தேவையான திறமையும், துணிவும் இவரிடம் சிறிதும் காணப்படவில்லை.

இரஷ்யப் படைகளைத் தோற்கடித்த பின்னர், பிரெஞ்சுப் படைகள் காம்பக்னி என்ற பகுதியில் தாக்கும் எனக் கருதிய ஃபால்கென்ஹெயின் கிழக்குப் பகுதியில் இருந்த படைகளில் ஒரு பகுதியை உரிய நேரத்தில் மேற்குப் பகுதிக்குக் கொண்டு சென்ருர். ஜோஃப்ரே எல்லாப் பகுதிகளைக் காட்டிலும் தன்னுடைய பகுதியில் மிகத் தீவிரமாகப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஜெர்மனிப் படைகள் பின்வாங்க நினைத்த சமயத்தில் கிழக்குப் பகுதியிலிருந்து மேற்குப் பகுதிக்கு அனுப்பப்பட்ட ஜெர்மனியப் படைகள் வந்து சேர்ந்தன. எனவே பின்வாங்கும் நிலையிலிருந்த ஜெர்மனியப் படைகள் பிரெஞ்சுப் படைகளைத் திருப்பித் தாக்கியதால் பிரஞ்சுப் போர் வீரர்கள் புதைகுழிகளில் மறைந்திருந்து தாக்குவது சிறிது கடினமாயிற்று.

ஜெர்மனியர்கள் செர்பியாவைக் கைப்பற்றுதல்

ஜெர்மனியப் படைகளுக்கு மேற்குப் பகுதியில் சாதகமான நிலை ஏற்பட்டதால் தன்னுடைய படைகளில் ஒரு பகுதியைப் போலந்திலிருந்து செர்பியப் பகுதியிலிருந்த தன்னுடைய முகாம்களுக்கு ஜெர்மனி அனுப்பியது. கிழக்குப் பகுதியில் இரஷ்யப் படைகள் தோற்கடிக்கப் பட்டதால் பல்கேரியா, மத்தியப் பேரரசுகள் கொடுக்க முன்வந்த நிலப்பகுதிகளை இணைத்துக் கொண்டு, செர்பியாவைத் தாக்குவதற்கு 1915 செப்டம்பரில் ஒத்துக் கொண்டது. அதனல் பல்கேரியா, மத்தியப் பேரரசுகளுக்குச் சாதகமாக உலகப் போரில் கலந்து கொண்டது. இதனையடுத்து 1915 அக்டோபரில் கிழக்குப் பகுதியிலிருந்து பல்கேரியப் படைகளும், வடக்குப் பகுதியிலிருந்து ஆஸ்திரிய-ஜெர்மனியப் படைகளும் செர்பியாவைத் தாக்கத் தொடங்கின. இச்சமயத்தில் ஆஸ்திரிய-ஜெர்மனியப் படைகளுக்குத் தலைமை தாங்கியவர் மார்ஷல் வான் மாக்கென்ஸென் என்பவராவார்.

இரு பக்கங்களிலும் பகைவர்களின் தாக்குதல்களுக்கு ஈடு கொடுக்க முடியாமல் செர்பியா பல இன்னல்களுக் குள்ளா கியது. செர்பியாவின் நிலையைக் கண்ட நேசநாடுகள் செர் பியாவை அதன் இன்னல்களிலிருந்து விடுவிப்பதற்காகப் புதிய படை ஒன்றை நிறுவி அதனைச் சலானிகா என்ற கிரேக்கப் பகுதிக்கு அனுப்பி வைத்தன. இப் படை மிகச் சிறியதாக இருந்ததால் எதிர்பார்த்தபடி செர்பியாவிற்கு உதவ முடியாமல் போனாலும், அரசர் கான்ஸ்டன்டைனைத் (Constantine) தடுத்து, கிரீஸ்நாடு முதல் உலகப்போரில் மத்தியப் பேரரசுகளுடன் சேர்ந்து கொள்வதைத் தடை செய்தது. இரண்டு மாதங் களுக்குள் ஆஸ்திரிய, ஜெர்மனியப் படைகளும், பல்கேரியப் படைகளும் செர்பியாவைக் கைப்பற்றின. செர்பிய அரச குடும் பத்தினரும், எஞ்சியிருந்த செர்பியப் போர் வீரர்களும் பகைவர் களால் கைது செய்யப்பட்டனர். இவ்வாறே மத்தியப் பேரரசுப் படைகள் மாண்டெநெக்ரோவையும் அல்பேனியாவையும் கைப்பற்றின.

1915 ஆம் ஆண்டில் ஜெர்மனி, தனது படை வலிமையின் காரணமாகப் பகைவர்களால் சூழப்பட்ட பாதுகாப்பான கோட்டையைப் போல விளங்கியது. இவ்வாண்டின் இறுதியில் ஃபால்கென்ஹெயின் தன்னுடைய கோட்டையின் எல்லைகளை விரிவுபடுத்திப் போலந்தையும், பெரும்பாலான பால்கன் தீப கற்பப் பகுதிகளையும், ஐரோப்பாவிலிருந்த உதுமானியப் பேரரசையும், ஆசியாமைனரையும் தன்னுடன் இணைத்துக் கொண்டார். வலிமை மிக்க படையுடன் பல்கேரியா ஜெர் மனிக்கு ஆதரவாகப் போரிலிறங்கியதால், இத்தாலி நேச நாடுகளின் முகாமிற்குச் சென்றமையின் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வு மீண்டும் சமநிலை அடைந்தது. அத்துடன் பால்கன் பகுதிகள் ஜெர்மனி வசமானதால் மத்தியப் பேரரசுகளின் நட்பு நாடான துருக்கிக்கு இருவகையில் நன்மை ஏற்பட்டது.

டார்டனெல்ஸில் நேசநாடுகளின் தோல்வி

1914–1915 குளிர்காலத்தில் இரஷ்யாவிற்குப் போர்க் கருவிகள் தேவையாக இருந்த பொழுது பிரிட்டிஷ் கடற் படையின் தலைமை அதிகாரியாக இருந்த வின்ஸ்டன் சர்ச்சில் மத்தியதரைக் கடலையும், கருங்கடலையும் இணைக்கும் குறுகிய கடற்பகுதிகளையும், ஜலசந்தியையும் நேசநாடுகளின் படைகள் துருக்கியிடமிருந்து கைப்பற்ற வேண்டுமென்றும், இதனால் பிரிட்டன், இரஷ்யா ஆகிய இரு நேசநாடுகளுக்கிடையே யான

வணிக உறவு வளர்ச்சியடையு மென்றும் கூறினர். ஆனல் பிரஞ்சுப் படைத் தளபதியான ஜோஃப்ரே மேற்குப் பகுதியில் நேசநாடுகளின் படைகள் வலிவிழந்து வருவதால் ஏற்படும் அபாயத்தைத் தனது நண்பர்களுக்கு எடுத்துரைத்து, மேற்குப் பகுதியில் பகைவர்கள் தோற்கடிக்கப்படும் வரை எவ்வித மாற்றமுமில்லாமல் போரைத் தொடர்ந்து நடத்தவேண்டு மென்று கேட்டுக்கொண்டார். அத்துடன் இவர் நேசநாடு களின் படைகளைப் பாஸ்பரஸ் ஜலசந்திப் பகுதிக்கு அனுப்பும் பிரிட்டிஷ்காரர்களின் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். பிரிட்டிஷ்காரர்கள் தரைப்படை வீரர்களை விட அதிகவலிமை மிக்க கடற்படையை வைத்திருந்ததால் இவர்கள் துருக்கியிட மிருந்த ஜலசந்திகளைக் கைப்பற்ற வேண்டுமென்று கூறினர். பிரான்சு, பிரிட்டன் ஆகிய இருநாடுகளின் படைத்தலைவர் களும் ஓர் உடன்பாட்டிற்கு வந்த பின்னர் 1915 பிப்ரவரி, மார்ச்சு ஆகிய மாதங்களில் பிரான்சு, பிரிட்டன் ஆகிய இரு நாடுகளின் கடற்படைகளும் ஒன்று சேர்ந்து, டார்டெனல்ஸின் இருகரைகளிலுமிருந்த துருக்கியின் கோட்டைகளைத் தாக்கின. ஆனல் நேசநாடுகளின் இம்முயற்சி தோல்வியடைந்தது. நேசநாடுகளின் போர்க் கப்பல்கள் பல கடலில் மூழ்கடிக்கப் பட்டன. எஞ்சியவை திரும்பிச் சென்றன.

கடற்போரில் தோல்வியடைந்ததால் மீண்டுமொரு போரைத் துருக்கிப் பகுதியில் நடத்த வேண்டுமா, வேண்டாமா என்பது குறித்து நேசநாடுகளிடையே பலத்த வாக்குவாதங்கள் நடைபெற்றன. இறுதியில் துருக்கிப் பகுதியில் ஒரு போரை நடத்துவது என நேசநாடுகள் முடிவு செய்தன. பிரான்சு, பிரிட்டன், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளின் போர்வீரர்களடங்கிய ஆக்கிரமிப்புப் படை ஒன்று திரட்டப் பட்டு, டார்டனெல்லஸ்க்கு அருகிலிருந்த கலிபோலி (Gallipoli) தீபகற்பத்தின் முனைக்குக் கொண்டு செல்லப்பட்டது. இதற் கிடையில் துருக்கியர்கள் ஜெர்மனியின் தளபதியான மார்ஷல் லிமன் வான் சாண்டெர்ஸ் (Marshall Liman Von Sanders) என்பவரின் தலைமையின் கீழ் ஒரு பாதுகாப்புப் படையைத் தயார் செய்து கலிபோலி தீபகற்பத்தைப் பகைவர்கள் கைப் பற்று வண்ணம் பாதுகாத்தனர். நேசநாடுகளின் ஆக்கிர மிப்புப் படைகள் பேரரசுப் பாதுகாப்புப் படையுடன் மிகத் திறமையாகப் போரிட்டன. பேரரசுப் படையும் இப் படைக்குச் சமமாகப் போரிட்டதால் நேசநாடுகளின் படை சிறிதும் முன்னேற முடியவில்லை. இந்நிலையில் இப்படையின்

தளபதி சர் இயா ஹாமில்டன் (Sir Ian Hamilton) மேலும் ஒரு படையைத் தனக்குத் துணையாக அனுப்புமாறு நேசநாடு களைக் கேட்டுக் கொண்டார். ஆனால் நேசநாடுகள் எந்தப் படையையும் துணைக்கு அனுப்பாததால் இருதரப்பினரும் வெற்றி தோல்வி யில்லாமல் போரிட்டனர். இறுதியாக நிலைமை யைச் சமாளிக்க முடியாமல் 1915 டிசம்பரில் நேசநாடுகளின் ஆக்கிரமிப்புப் படைகள் பின்வாங்கின.

துருக்கியர்கள், ஜெர்மனியின் உதவியினாலும், ஆலோசனை யினாலும் நேசநாடுகளின் படைகளை டார்டனெல்ஸில் தோற் கடித்ததோடு மட்டுமல்லாமல், இரஷ்யப் படைகள் கௌ காஸஸ் வழியாக ஆர்மேனியாவிற்குள் நுழைவதையும் தடுத்து நிறுத்தினர். அத்துடன் இவர்கள் சூயஸ்கால்வாய்ப் பகுதியைப் பயமுறுத்துவதற்கும், மெஸபடோமியாவில் தங்கி யிருந்த ஆங்கில-இந்திய ஆக்கிரமிப்புப்படையைச்சிறைப்படுத் துவதற்கும் முயற்சி செய்தனர், அதே சமயத்தில் ஜெர்மனியர் களின் ஆலோசனையின் பேரில் பல்கேரியர்கள் பால்கன் பகுதியில் தங்கள் வலிமையை நிலைநாட்டி, நேசநாட்டுப் படைகள் முன்னேறு வண்ணம் சலோனிகா என்ற இடத் திலேயே தடுத்து நிறுத்தினர்.

ஜெர்மனி 1915 ஆம் ஆண்டில் தொடர்ந்து வெற்றி பெற்று ஒரு பெரிய சாதனையை ஏற்படுத்தினாலும், நேசநாடுகள் ஒருசில இடங்களில் மட்டுமே சிறிய தோல்விகளை அடைந்தன. மற்ற பகுதிகளில் நடைபெற்ற போர்களில் வெற்றி தோல்விகள் இல்லாமலே இருந்தது. மேற்குப் பகுதிகளில் நேசநாடுகள் தொடர்ந்து கடுமையாகத் தாக்குவதன் மூலம், ஜெர்மனி மேற்குப் பகுதியிலிருந்த தன்னுடைய படையின் ஒரு பகுதியை இரஷ்யப் படைகளுக்கு அனுப்பாமல் தடுத்து வந்தன. மேலும் இவர்கள் போதுமான போர்க் கருவிகள் இல்லாமல் போரில் ஈடுபட்டதால் சில சமயங்களில் சிறுதோல்விகளை அடைய வேண்டியதாயிற்று. இருப்பினும் இவர்கள் மேற்குப் பகுதியில் மேற்கொண்ட எதிர்ப்புக்களின் மூலம் இரஷ்யப்படையை அழிவிலிருந்து காப்பாற்றினர், ஆனால் இவர்கள் வெற்றி பெறாமலே போரிட்டுக் கொண்டிருந்ததுடன், பொருள்களையும் பெருமளவில் சேதப்படுத்தினர்.

நேசநாடுகளின் படைகள் 1915 ஆம் ஆண்டின் இறுதியில் தேவையான அளவு போர்க் கருவிகளைப் பெற்றன. இதனை யறிந்த ஜெர்மனியத் தளபதி ஃபால்கென்ஹெயின் நேசநாடு

களுக் கெதிராக நெடுநாட்கள் தன்னுடைய பாதுகாப்பு நடவடிக்கையை மேற்குப் பகுதியில் மேற்கொள்ள முடியாது எனக் கருதினாலும், தன்னுடைய முயற்சிகளின் மூலம் நேச நாடுகளின் படைகளை முன்னேறாமல் தடுத்து நிறுத்த முடியு மெனக் கருதினர். அத்துடன் நேசநாடுகளின் படைகளை முன்னேறாமல் தடுத்து நிறுத்தினால் தன்னுடை போர்க்கருவிகள் எல்லாம் தீர்ந்து விடுமென்றும், இருதரப்பினருக்கும் வெற்றி தோல்வி யில்லாத நிலை வெகுநாட்களுக்கு நிலைத்திருக்காது என்றும் இவர் நம்பினர். எல்லாவற்றிற்கும் மேலாக ஜெர்மனி யைத் தோற்கடிக்க முடியாது என்ற எண்ணம் பிரான்சின் மனததில் தோன்றும் வகையில், மேற்குப் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதை நிறுத்திக்கொள்ள வேண்டுமென ஃபால்கென்ஹெயின் விரும்பினர். எனவே பிரெஞ்சுக்காரர்களுக்குத் தக்க பாடம் புகட்ட ஒரு தீவிரமான பாதுகாப்புப் போரைத் தனக்குச் சாதகமாக உள்ள மேற்குப் பகுதியில் நடத்தவேண்டுமென மத்தியப் பேரரசுப் படை களுக்கு ஃபால்கென்ஹெயின் ஆலோசனை கூறினர்.

வெர்டுன் என்ற இடத்தில் ஜெர்மனியின் தோல்வி

ஜெர்மனிய அரசு ஃபால்கென்ஹெயினின் ஆலோசனையை ஏற்றுக் கொண்டு, குளிர்காலத்தின் முடிவுக்காகக் காத்திராமல் வெர்டுன் (Verdun) என்ற இடத்தில் ஆக்கிரமிப்பு நடவடிக் கைகளை 1916 பிப்ரவரியில் மேற்கொண்டது. ஆனால் பிரஞ்சுப் படைத் தளபதி பெடெய்ன் (Petain) என்பவரின் தலைமையின் கீழ் ஜெர்மனியின் சவாலை நேரடியாக ஏற்று மிக வீராவேச மாகப் போராடியது. ஜெர்மனியப் படைகளும் பிரஞ்சுப் படைகளை மிகக் கடுமையாகத் தாக்கின. இப்போரில் இருதரப் பிலும் போர்க் கருவிகள் பெருமளவில் பயன்படுத்தப் பட்டன. இருப்பினும் பிரஞ்சுக்காரர்கள் மிக வீராவேசமாகப் போராடி யதால் ஜெர்மனியப் படைகளால் வெர்டுனைக் கைப்பற்ற முடியவில்லை. இறுதியில் ஜெர்மனியப் படைகள் பிரஞ்சுப் படைகளைக் காட்டிலும் மிகுந்த சோர்வடைந்தன. இதனால் ஜெர்மனி எதிர்பார்த்ததற்கு மாறாக, பிரஞ்சுப் படைகள் ஜெர்மனியைத் தோற்கடிக்க முடியுமென்ற நம்பிக்கை முளைவிட ஆரம்பித்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக நேசநாட்டுப் படைகள் 1915 ஆம் ஆண்டிலிருந்ததைவிட அதிகவலிமை பெற்றிருந்தன. அத்துடன் உலகப் போர்முறைகளை நன்கறிந்த மிகப்பெரிய பிரிட்டிஷ்படை ஒன்று நேசநாடுகளுக்கு மேலும் வலுவூட்

டியது. அத்துடன் பிரிட்டிஷ் படைகளும், பிரஞ்சுப் படைகளுக்குத் தேவையான அளவு போர்க்கருவிகளை வழங்கியது. மேலும் இப்பொழுது இரஷ்யப்படைவீரர்களும் போதுமான அளவு போர்க்கருவிகளைப் பெற்று வலிமை பெற்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக நேசநாட்டுப் படைகள் தங்களிடையே நிலவிய கருத்து வேற்றுமைகளை மறந்து, ஒன்றுபட்டுத் தங்கள் இராணுவ முயற்சிகளை மத்தியப் பேரரசுப் படைகளுக் கெதிராக ஒருமுகப்படுத்தின. அத்துடன் 1916 ஆம் ஆண்டின் வசந்தகாலத்தில் பிரான்சு, பிரிட்டன், இரஷ்யா, இத்தாலி ஆகிய நேசநாடுகளின் படைத் தளபதிகள் ஜோஃப்ரேயின் தலைமையில் ஒன்றுகூடி, தங்கள் வலிமை முழுவதையும் ஒரே பகுதியில் செலுத்திப் பகைவர்களைப் படிப்படியாக முறியடிக்கும் திட்டத்தை ஏற்றுக் கொண்டனர். இத்தகைய தாக்குதல்கள் ஒரே சமயத்தில் ஒரே பகுதியில் பலமுனைகளிலிருந்து 1916 ஜூலையில் தொடங்கின.

வெர்டுன் பகுதியில் நேசநாடுகளின் படைகளுக்கும் மத்தியப் பேரரசுகளின் படைகளுக்கு மிடையே நடைபெற்ற கடுமையான போரில், பிரான்சு அளவற்ற படைவீரர்களை இழந்ததால் நேசநாடுகளின் கூட்டு முயற்சியில் பிரான்சு பெருமளவு பங்கு பெற வில்லை.

கிழக்குப் பகுதியில் ஆஸ்திரியத் தளபதி கொன்ராடு (Conrad) நேசநாடுகளின் திட்டத்தினுல் ஏற்பட்ட முயற்சிகளை நேரிடையாக எதிர்த்தார். இத்தாலியப் படைகளைத் தோற்கடித்து இத்தாலியப் போர்வீரர்கள் அனைவரையும் எளிதில் கைது செய்துவிடமுடியுமென்ற ஆசைக்கு இலக்காகி, இரஷ்யப் பகுதியிலிருந்த தன்னுடைய திறமையான போர்வீரர்கள் நிறைந்த படையையும், வலிமை மிகுந்த பீரங்கிப் படையையும் இத்தாலியப் பகுதிக்கு மாற்றி, டைரோல் (Tyrol) என்ற பகுதியில் தாக்குதல்களை மேற்கொண்டார். இத்தாலியர்கள் கொன்ராடு என்பவரின் தலைமையில் வந்த ஆஸ்திரியப் படைகளைத் தடுத்து நிறுத்தினர். இந்நிலையில் இரஷ்யப் படைகள் புருஸிலோவ் (Brusilov) என்பவரின் தலைமையின் கீழ் ஆஸ்திரியப் படைகளைக் கடுமையாகத் தாக்கின. இரஷ்ய எல்லைப் பகுதிகளை 1915ல் ஜெர்மனியர்கள் மிக எளிதாகக் கைப்பற்றியதைப் போல இப்பொழுது இரஷ்யர்கள் ஆஸ்திரியப் பகுதிகளைக் கைப்பற்றினர். இதனைத் தொடர்ந்து

இரஷ்யர்கள் கிழக்கு கலீஷியாவை மீண்டும் தங்கள் வசப் படுத்திக் கொண்டு, ஏராளமான எதிரிவீரர்களைப் போர்க் கைதி களாகப் பிடித்தனர்.

இந்நிலையில் மத்தியப் பேரரசுகளின் படைகள் பெரும் அளவில் கிழக்குப் பகுதிக்கு வந்ததால் ஃபால்கென் ஹெயின் இரஷ்யப் படையின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தி, கலீஷியாவில் புதிய எல்லைகளையும் நிர்ணயித்தார். ஜெர்மனி யின் பெரும்பான்மையான படை கிழக்குப் பகுதிக்குச் சென்று விட்டதால் மேற்குப் பகுதியில் பிரஞ்சுப்படைகளும், பிரிட்டிஷ் படைகளும் ஜெர்மனியின் முகாம்களை மிகக் கடுமையாகத் தாக்கின. முதலில் இவர்கள் ஜெர்மனியின் முகாம்களைத் தாக்கு வதில் அவ்வளவாக வெற்றியடைய முடியாமல் சிறிது சிறிதாகத் தாக்கினர். இதனால் நேச நாடுகளின் படைகளுக்கு அதிக சேத மேற்பட்டது. ஆனால் மேற்குப் பகுதியில் ஜெர்மனியர்களுக்குச் சாதகமாக இருந்த சூழ்நிலை வெகு விரைவில் நேசநாடுகளுக்குச் சாதகமாக மாறியது. மேற்குப் பகுதியில் கடுந் தாக்குதல்களுக் குள்ளானதால் ஜெர்மனியப் படைகள் வெர்டூனிலிருந்து பின் வாங்கின. மேலும் பல பகுதிகளை இழக்காமல் இருப்பதற்காக இப்படைகள் தற்காப்பு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய தாயிற்று. இது வரையில் ஆக்கிரமிப்பு முயற்சியில் ஈடுபட்டிருந்த ஜெர்மனியப் படை மேற்குப் பகுதியில் தற்காப்பு முயற்சி யில் ஈடுபட ஆரம்பித்தது.

இதனைத் தொடர்ந்து தளபதி காடோர்னுவின் தலைமையில் வந்த ஆஸ்திரியப் படைகளை இத்தாலியப்படை இஸ்திரியாவில் இஸான்ஸோ (Isonzo) என்ற பகுதியில் மிகக் கடுமையாகத் தாக்கி, கோரிஸியா (Gorizia) என்ற முக்கிய பகுதியைக் கைப் பற்றியது. இத்தாலியின் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாத ஆஸ்திரியப் படை மீண்டும் அழிந்துபடும் நிலையை அடைந்தது.

போர்ச்சுகல், ருமேனியா ஆகிய நாடுகள் நேச நாடுகளுடன் சேர்ந்து கொள்ளுதல்

இதற்கிடையில் 1916 மார்ச்சில் தன்னுடைய துறைமுகத்தி லிருந்த ஜெர்மனியக் கப்பல்களைக் கைப்பற்றுமாறும், ஜெர்மனி போர்ச்சுகல் நாட்டின் மீது போர்ப் பிரகடனம் செய்தால் நேச நாடுகளுக்கு ஆதரவாக உலகப் போரில் கலந்து கொள்ளு மாறும் போர்ச்சுகல் நாட்டை பிரிட்டன் தூண்டியது. அத்

துடன் ஜெர்மனியின் படைகள் மேற்குப் பகுதியில் வெர்டுனில் தாக்குப் பிடிக்க முடியாமல் பின்னடைந்ததாலும், ஆஸ்திரியப் படைகளின் வலிமை கணிசமான அளவு குறைக்கப்பட்டதாலும், ருமேனியத் தலைவர்கள் மத்தியப் பேரரசுக்குத் தங்கள் ஆதரவை அளிக்கத் தயங்கினர். இந்நிலையில் ருமேனியா மத்தியப் பேரரசுகளின் படைகளுக்கு ஆதரவாகப் போரில் ஈடுபட்டால் ஹாப்ஸ்பர்க் பேரரசு வெகு விரைவில் வீழ்ச்சி யடையு மென்று பல ருமேனியத் தலைவர்கள் கருதினர். இதனால் இத்தாலியர்கள் ஆஸ்திரியப் படைகளை முறியடித்து, ஜெர்மனியின் மீது போர்ப் பிரகடனம் செய்த அதேநாளில் மத்தியப் பேரரசுகளுக்கு எதிராக, ருமேனியாவும் போர்ப் பிரகடனம் செய்து, நேசநாடுகளுக்கு ஆதரவாக உலகப்போரில் கலந்து கொண்டது.

நேசநாடுகளிட மிருந்து அதிக பலன்களைப் பெறுவதற்காக ருமேனியா வெகுநாட்கள் காத்திருந்தது. பின்னர் 1916 மார்ச்சில் நேசநாடுகளுடன் ஓர் இரகசிய உடன்படிக்கை செய்து கொண்டது. அதன்படி உலகப்போரில் ருமேனியா நேசநாடுகளுக்கு உதவுவதற்காக டிரான்சில்வேனியா, புகோவினு ஆகிய பகுதிகளுடன் செர்பியாவின் பேனட் பகுதியையும், தியிஸ் (Thiess) ஆறு வரை பரவியுள்ள ஹங்கேரியச் சமவெளியையும் ருமேனியாவிற்குத் தருவதாக நேசநாடுகள் வாக்களித்தன.

கலீஷியாவில் புருஸிலோவ் ஆக்கிரமிப்பு நடவடிக்கையை மேற்கொண்ட பின்னர், ருமேனியா ஜெர்மனிக்கு எதிராக உலகப்போரில் ஈடுபட்டது. எனவே ஜெர்மனி மேலும் நெருக்கடிக் குள்ளாயிற்று. ஆனால் கலீஷியப் பகுதியில் ஜெர்மனி தன்னுடைய போர் நடவடிக்கைகளை நிறுத்திவைத்துக் கொண்டது. இதனையடுத்து, தன்னுடைய அரசால் எச்சரிக்கப்பட்ட பின்னர் ஃபால்கென்ஹெயின் ருமேனியாவிற்கு எதிராகச் செயல்படுவதற்குத் தயாரானர்.

இடிபோலத் தாக்கிவரும் பகைவர்களுக்கு எதிராகப் புதிய படையொன்றைத் திரட்டி, அதனை டிரான்சில்வேனியா போர்முனைக்கு ஜெர்மனியத் தளபதி அனுப்பி வைத்தார். இப்படை தக்க சமயத்தில் பகைவர்களைத் தாக்கி, டான்யூப் (Danube) நதிக்கு வடக்கே இருக்கக் கூடிய ருமேனியச் சமவெளி முழுவதையும் கைப்பற்றியது. ஹாப்ஸ்பர்க் பேரரசை அழிப்பதற்காக உலகப் போரில் ஈடுபட்ட ருமேனியா அப்பேரரசிடமே தன்னை இழந்தது. இதனால் கிரீஸ் நீங்கலாக ஏனைய பால்கன்

நாடுகள் அனைத்தும் மத்தியப் பேரரசுகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டன.

ஆனல் ருமேனியா போரில் ஈடுபட்டதால் ஜெர்மனியில் உடனடியாகப் பல பிரச்சினைகள் ஏற்பட்டன. மேற்குப் பகுதியிலும், கிழக்குப் பகுதியிலும் மத்தியப் பேரரசுகளின் படைகள் எதிரிகளின் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல் தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதாலும், இந்நிலையில் ருமேனியா உலகப்போரில் தங்களுக்கு எதிராக இறங்கியதாலும் பேரரசர் இரண்டாம் வில்லியம் சற்று அதிர்ச்சிக் குள்ளானர். மேலும் போரில் தனது படைகள் பின்வாங்குகின்றன என்பதைக் கேள்வியுற்ற பேரரசர் தன்னுடைய நாட்டுப்படைகள் நேசநாட்டுப் படைகளால் நிச்சயமாகத் தோற்கடிக்கப்பட்டு விடும் எனவும், அவ்வாறு தோற்கடிக்கப் பட்டால் அதன்விளைவுகள் மிகமோசமாக இருக்கும் எனவும்கருதி, உடனடியாகச் சமாதானம் செய்துகொள்ள வேண்டுமெனத் தன்னுடைய சகாக்களிடம் கூறினர். இந்நிலையில் ஜெர்மனியின் முதலமைச்சரான பெத்மென் ஹோல்வெக், மற்ற உயர்மட்ட அதிகாரிகளுடன் சேர்ந்து கொண்டு, பேரரசர் இரண்டாம் வில்லியத்தைச் சமாதானம் செய்து, ஃபால்கென்ஹெயினை நீக்கி விட்டு ஹிண்டென்பர்க் என்பவரையும், லூடென்டோர்ஃப் (Ludendorff) என்பவரையும் தலைமைத் தளபதிகளாக நியமிக்குமாறு ஆலோசனை கூறினர். ஆனல் 1913 ஆம் ஆண்டு முதற் கொண்டு பேரரசர் இரண்டாம் வில்லியத்திற்கும், லூடென்டோர்ஃப்புக்கும் தனிப்பட்ட முறையில் விரோதம் இருந்ததாலும், உலகப்போர் தொடங்கியது முதல் பேரரசர் இரண்டாம் வில்லியத்திற்கும், ஃபால்கென்ஹெயினுக்கும் எதிராக ஹிண்டென்பர்க்கை வளர்த்துப் புகழ்பெறச் செய்ததாலும் லூடென்டோர்ஃப்பைத் தளபதியாக்கப் பேரரசர் விரும்பவில்லை. மேலும் இவ்விருவரையும் தன்னுடைய படைத் தளபதிகளாக நியமித்தால் தன்னுடைய செல்வாக்கு பாதிக்கப்பட்டு, தன்னுடைய எதிரிகளுக்குத் தன்னுடைய அதிகாரத்தை விட்டுக்கொடுக்க நேரிடுமென்று பேரரசர் கருதினர். எனவே தனது முதலமைச்சரின் ஆலோசனைக்கு முதலில் மறுப்புத் தெரிவித்தாலும், பின்னர், நிர்ப்பந்தத்தின் காரணமாக, லூடென்டோர்ஃப் என்பவரையும், ஹிண்டென்பர்க் என்பவரையும் தனது புதிய தலைமைத் தளபதிகளாகப் பேரரசர் இரண்டாம் வில்லியம் நியமித்தார்.

ஹிண்டென்பர்க்கும், லூடென்டோர்ஃப்பும் தளபதிகளாக நியமிக்கப்பட்டதால் போரின் நோக்கத்திலும், தன்மையிலும்

எந்த ஒரு மாற்றமும் ஏற்படாவிட்டாலும், ஜெர்மனியில் ஓர் அரசியல் புரட்சி தோன்றும் நிலை உருவாகியது. இதனால் ஃபால்கென்ஹெயினின் கொள்கைகளும், திட்டங்களும் போரில் ஜெர்மனி வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தின என்றும், உலகம் முழுவதையும், மத்தியப் பேரரசுகளுக்கு எதிராக உலகப் போரில் ஈடுபடுத்தின என்றும் பலர் கருதினர்.

ஹிண்டென்பர்க் தளபதியாக நியமிக்கப்பட்டதும் முதல் வேலையாக லூடென்டோர்ஃப்புடன் மேற்குப் பகுதிக்குச் சென்றார். இவ்விரு தளபதிகளும் முதன் முறையாக மேற்குப் பகுதியில் தங்கள் படையின் நிலையை அறிந்து அதிர்ச்சியடைந்தனர். இவ்விருவரும் உடனடியாக "ஹிண்டென்பர்க் எல்லை" என்ற ஒன்றை ஏற்படுத்தி, அதனைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளைச்செய்தனர். அது முதற்கொண்டு பாதுகாப்புடனிருந்த ஜெர்மனியப் படைகள் பாதுகாப்பற்ற நிலையில் இப்பகுதியில் அடைக்கலம் புகுந்தன. அத்துடன் இவ்விரு தளபதிகளும் போர் நிலவரத்தை நன்கறிந்த பின்னர், நேசநாடுகள் தங்களுடை போர் முகாம்களுக்கு மிக அதிக அளவில் போர்க் கருவிகளைக் கொண்டு வந்து குவித்திருப்பதால், ஜெர்மனி தொடர்ந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதால் எவ்விதமான பலனும் இல்லை என்றும், போரில் ஜெர்மனி நேசநாடுகளைத் தோற்கடிப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்றும், பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் ஜெர்மனியப் படைகள் தொடர்ந்து நேசநாடுகளின் தாக்குதல்களைத் தாங்கிக் கொள்ள முடியாது என்றும், ஜெர்மனி போரில் வெற்றி பெறுவதற்கு இருக்கக்கூடிய ஒரேவழி போரில் நீர்மூழ்கிக் கப்பல்களைப் பயன்படுத்துவதுதான் என்றும் திட்டவட்டமாகக் கருதினர். நீர்மூழ்கிக் கப்பல்களைப் பயன்படுத்துவதன் மூலம் 1917ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் பிரிட்டன் தன்னுடைய நேச நாடுகளுக்கு உதவி புரிவதினின்றும் பிரித்துவிட முடியுமென்றும், அதனால் பிரிட்டன் வேறு வழியின்றி ஜெர்மனியுடன் சமாதானம் செய்து கொள்ளுமென்றும் இவர்கள் கருதினர். நேச நாடுகளின் வெற்றி வாய்ப்புக்கு பிரிட்டனே முக்கிய காரணம் என்று இவர்கள் கருதியதால், இவ்விரு தளபதிகளும் தங்களுடைய கருத்துக்களை ஜெர்மனிய அரசுக்குத் தெரிவித்தனர். ஜெர்மனிய அரசும் இவர்களின் ஆலோசனைகளையும், பரிந்துரைகளையும் பரிசீலிக்கத் தொடங்கியது.

4. பிரிட்டிஷ் கடற்படையின் வெற்றிகள் [1914 முதல் 1916 வரை]

பிரிட்டனின் கடற்படை வலிமையை நேசநாடுகள் 1914 முதல் 1916 வரை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டன. முதலில் பிரிட்டிஷ் கப்பற் படைகள் கப்பல் போக்குவரத்து அதிகமுள்ள கடல் பகுதிகளில் பகைவர்களின் கப்பல்கள் நடமாடுவதைத் தடை செய்தன. இம்முயற்சியில் ஒரு பிரிட்டிஷ் கடற்படைப் பிரிவு ஜெர்மனியப் போர்க்கப்பல் களால் 1914 நவம்பரில் தென்னமெரிக்காவில் சிசிலிக்கு அருகில் தோற்கடிக்கப் பட்டாலும், விரைந்து அனுப்பப்பட்ட மற்ருெரு கப்பற்படை ஃபாக்லாந்துத் (Falkland) தீவுகளுக்கருகில் அந்த ஜெர்மனியப் போர்க் கப்பலை மூழ்கடித்து அழித்தது. இதனல் பொதுவாக ஜெர்மனியப் போர்க் கப்பல்கள் பெரும்பாலும் நடுநிலை நாடுகளின் துறைமுகங்களிலும், தங்களுடைய நாட்டிற்கு அருகிலுள்ள கடல்களிலும் மட்டுமே பயந்து கொண்டு உலவி வந்தன. ஒருசில சமயங்களில் மட்டுமே ஜெர்மனியப் போர்க் கப்பல்கள் விரைந்து செயல்பட்டு, வடகடல் பகுதியில் சென்று, சில ஆங்கில நகரங்களைத் தாக்கி வந்தன. அதே போன்று ஒரு சில சமயங்களில் மட்டுமே ஜெர்மனியின் கடற் படை முக்கிய கடல்வழிகளில் சென்று வியாபாரக் கப்பல்களை அச்சுறுத்தி வந்தன. மற்ற சமயங்களிலெல்லாம் இப்படைகள் பிரிட்டிஷ் கப்பற்படைகளின் தாக்குதல்களுக்கு உள்ளாகி அல்லது நடுநிலை நாடுகளின் துறைமுகங்களில் முடங்கிச் செய லற்று இருந்தன.

பிரிட்டிஷ்காரர்கள் தங்கள் கடற்படையில் பெரும் பகுதியை வடக்கு ஸ்காட்லாந்துக்கு அருகில் இருந்த தங்கள் துறைமுகங்களில் தயார் நிலையில் தனியாக ஒதுக்கி வைத்திருந் தனர். இப்படைகள் ஜெர்மனிய நீர்மூழ்கிக் கப்பல்களின் திடீர்த் தாக்குதல்களையும், குண்டுவீச்சுக்களையும் கவனித்து வந்தன. இதனல் பிரிட்டிஷ்காரர்கள் தங்கள் பகைவர்களை நேரிடை யாகத் தாக்கி அச்சுறுத்துவதற்குப் பதிலாகத் தங்கள் கப்பற் படையின் நடமாட்டத்தினலும், ஒருபகுதி போர்க் கப்பல்களைத் தயார் நிலையில் வைத்திருந்ததன் வாயிலாகவும் அச்சுறுத்தி வந்தனர். போர் தொடங்கிய இரண்டாண்டுகளுக்குப் பின்னர் 1916 மே மாதம் ஜெர்மனியக் கப்பற்படை வடகடலில் ஜட் லாந்து (Jutland) என்ற பகுதியில் பிரிட்டிஷ் கப்பற்படையைத் தாக்கியது. இச்சமயத்தில் பிரிட்டிஷ்காரர்கள் பலர் கொல்லப்

பட்டனர். சில பிரிட்டிஷ் போர்க்கப்பல்கள் மூழ்கடிக்கப் பட்டன. ஆனால் மேலும் பல போர்க் கப்பல்களை இழக்கப் பிரிட்டன் தயாராக இருந்ததால் ஜெர்மனியப் போர்க் கப்பல்களை எதிர்த்துத் தாக்கி வெற்றி பெற்றது. எஞ்சிய ஜெர் மனியப் போர்க் கப்பல்கள் தங்கள் தாய் நாட்டின் துறைமுகங் களுக்குத் திரும்பின. இதன் பின்னர் அவை வடகடல் பகுதியில் போரிட வரவே இல்லை.

வடகடல் பகுதியில் ஜெர்மனியப் போர்க் கப்பல்கள் துரத்தி யடிக்கப்பட்டதால் பிரிட்டன், பிரான்சு ஆகிய நாடுகள் தங்க ளுடைய படைகளைத் தடையில்லாமல் கடற்பகுதிகளில் கொண்டு சென்றதுடன், வெளிநாடுகளிலிருந்து தங்களுக்குத் தேவையான போர்க் கருவிகளையும் தங்கு தடையின்றிப் பெற்று வந்தன. மேற்குப் பகுதியில் ஜெர்மனியப் படைகளை எதிர்த்துப் போரிடுவதற்கு தன்னுடைய குடியேற்ற நாடுகளான அல் ஜீரியா, செனிகல், இந்தோ-சீனு ஆகிய பகுதிகளிலிருந்த பிரஞ்சுப் படைகளைப் பிரான்சு எளிதாகக் கொண்டு வந்தது. அத்துடன் பிரான்சு பிரிட்டனிலிருந்து மட்டுமல்லாமல் கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, இந்தியா ஆகிய பிரிட்டிஷ் ஆதிக்கப் பகுதிகளிலிருந்தும் படைகளைப் பெற்றது. எனவே ஏராளமான பிரிட்டிஷ் படைகள், பிரிட்டிஷ் பாராளுமன்றம் 1916ல் கட்டாய இராணுவ சேவைக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வரை பிரான்சுக்கு அனுப்பப்பட்டன. இதனுல் பிரான்சில் இருந்த பிரிட்டிஷ் படைகளின் அளவு ஏறத்தாழ பிரஞ்சுப் படைகளின் அளவை ஒத்திருந்தது.

கட்டாய இராணுவ சேவை முறையை அயர்லாந்து எதிர்த்தது. ஆனுல் தீவிரவாதிகள் சிலரும் உழைப்பாளர் கட்சியும் 1916-ஆம் ஆண்டின் ஈஸ்தர் விழாக் கொண்டாட்ட வாரத்தினில் டப்ளின் (Dublin) என்ற இடத்தில் புரட்சி செய்து அயர்லாந்துக் குடியரசைப் பிரகடனப் படுத்தினர். ஆனுல் பெரும்பாலான அயர்லாந்து மக்கள் புரட்சியில் கலந்து கொள் ளாமல் அமைதியாக இருந்ததால், பிரிட்டன் தனது கடல் வலிமையாலும், படைவலிமையாலும் இப்புரட்சியை அடக் கியது. இச்சமயத்தில் நூற்றுக்கணக்கான பிரிட்டிஷ்காரர்கள் உயிரிழந்தாலும் புரட்சிக்குப் பின்னர் 15 புரட்சிக்காரர்கள் சிரச் சேதம் செய்யப்பட்டனர். மற்றவர்கள் கைது செய்யப் பட்டனர்.

தடையில்லாமலும், தளர்ச்சியடையாமலும், போர்வீரர் களையும், போர்க் கருவிகளையும் பிரிட்டிஷ்காரர்கள் 1915, 1916

ஆகிய ஆண்டுகளில் பிரான்சுக்குள் குவித்ததாலும், பிரஞ்சுத் தளபதிகளின் திறமையாலும், ஜெர்மனியர்களால் கிழக்குப் பகுதிகளில் வெற்றியடைந்ததைப் போல மேற்குப் பகுதிகளில் அதிக அளவு வெற்றிகளைப் பெற முடியவில்லை. ஆனால் மேற்கு ஐரோப்பாவில் மட்டும் பிரிட்டனின் கடல் வலிமையால் நேச நாடுகளின் படைகள் நன்மை யடையவில்லை. பிரிட்டிஷ் கப்பற் படைகள் வெளி நாடுகளிலிருந்து ஜெர்மனிக்குப் பொருள்கள் போவதைத் தடைசெய்ததுடன், ஜெர்மனியின் குடியேற்ற நாடுகளையும் நேசநாடுகள் கைப்பற்றின. பிரிட்டனின் கடற்படையே ஐரோப்பியப் போர் உலகப்போராக வளர்ச்சியடைவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது.

நேசநாடுகள் ஜெர்மனியக் குடியேற்ற நாடுகளைக் கைப்பற்றுதல்

ஆப்பிரிக்காவில் டோகோலாந்து என்ற ஜெர்மனியின் குடியேற்ற நாடு 1914 ஆகஸ்டில் கைப்பற்றப்பட்டது. இதனையடுத்து நேசநாடுகளின் ஆக்கிரமிப்புப் படைகள் ஜெர்மனியின் முக்கிய குடியேற்றநாடான காமரூன் என்ற பகுதியில் நுழைந்து, அங்கிருந்த படைகளைத் தோற்கடித்து 1915-ல் சரணடையச் செய்தன. இதற்கு முன்னரே தளபதி லூயி போதா (General Louis Botha) என்பவரின் தலைமையின் கீழ், தென்னாப்பிரிக்கப் படை ஒன்று ஜெர்மனியின் ஆதிக்கத்தில் இருந்த தென்னாப்பிரிக்காவைத் தாக்கியது. ஆனால் பிரிட்டிஷ்காரர்களின் எதிரிகளும், டச்சு மொழியைப் பேசிவந்தவர்களுமான போயர்கள் (Boers) தென்னாப்பிரிக்க யூனியனில் சேர்ந்து கொண்டு கிளர்ச்சி செய்தனர். தளபதி போதா தன்னுடைய தாக்குதல்களை நிறுத்தி வைத்துவிட்டு, தளபதி ஸ்மட்ஸ் (Smuts) என்பவருடன் ஒன்று சேர்ந்து தென்னாப்பிரிக்க யூனியனின் கிளர்ச்சிகளை அடக்கினர். இக்கிளர்ச்சிகளை அடக்கியதும் போதாவும் ஸ்மட்ஸும் சேர்ந்து ஜெர்மனியின் தென்னாப்பிரிக்காவைக் கைப்பற்றினர்.

நேசநாடுகளுக்கு ஜெர்மனியின் கீழிருந்த கிழக்கு ஆப்பிரிக்கப் பகுதிகளைக் கைப்பற்றுவது கடினமாக இருந்தது. இப்பகுதியில் பிரிட்டிஷ் கப்பற்படைகள் தார்-எஸ்-சலாம் (Dar-es-Salaam) என்ற துறைமுகத்தை 1914 ஆகஸ்டில் கைப்பற்றியபோது, அப்பகுதியிலிருந்த தளபதி வான் லெட்டோவ் ஓர்பெக் (Von Lettow Vorbeck) என்ற ஜெர்மன் ஆளுநர் அப்பகுதியிலிருந்த மக்களின் ஒத்துழைப்புடன் அதைத் திறமையாகப் பாதுகாத்தார். இருப்பினும் 1916-ல் தளபதி ஸ்மட்ஸ் ஜெர்

மனியின் கிழக்காப்பிரிக்காவின் பெரும்பகுதியைக் கைப் பற்றினர். ஆனால் ஜெர்மன் ஆளுநர் வான் லெட்டோவ் ஒர்பெக் 1918 நவம்பரில் தான் சரணடைந்தார்.

தெற்குப் பசிபிக் பெருங்கடல் பகுதியில் நியூசிலாந்தின் ஒருபடை ஜெர்மனியின் சமோவாவை (Samoa) 1914 ஆகஸ்டில் கைப்பற்றியது. இதனைத் தொடர்ந்து ஆஸ்திரேலியர்கள் படை யெடுத்து நியூகினியா, கெய்சர் வில்லியம்லாந்து, பிஸ்மார்க் தீவுக் கூட்டங்கள் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றினர். வடக்குப் பசிபிக் பெருங்கடல் பகுதியில், குறிப்பாக, கிழக்காசியப் பகுதி களில் பிரிட்டனின் நட்பு நாடான ஜப்பானின் கடற்படை லாட்ரோன்ஸ் (Ladrones) தீவுகளையும், கரோலின் (Caroline) தீவுகளையும் கைப்பற்றியது. இதனைத் தொடர்ந்து சீன ஒரு படையின் உதவியால் கியாசௌ துறைமுகத்தை 1914 அக் டோபரில் கைப்பற்றியது.

உதுமானியப் பேரரசின்மீது தாக்குதல்கள்

அண்டைக் கிழக்கு நாடுகளில் ஜெர்மனிக்கு ஆதரவாகப் போரிட்ட உதுமானியப் பேரரசைத் தண்டிப்பதற்கு, பிரிட்டன் தனது கடல் வலிமையைப் பயன்படுத்தியது. தொடக்கத்தில் துருக்கியப் பகைவர்களைத் தாக்கிய பொழுது 1914 அக்டோ பரில் சைப்ரஸ், எகிப்து ஆகிய பகுதிகளின் ஆட்சியாளர்களை உதுமானியப் பேரரசின் ஆதிக்கத்திலிருந்து விடுவித்தது. இவற்றில் சைப்ரஸ் பிரிட்டனின் குடியேற்ற நாடாக மாறியது. எகிப்து பிரிட்டனின் பாதுகாப்பின் கீழ் இயங்கி வந்தது. பின்னர் ஆங்கிலேய-எகிப்தியப்படை சூயஸ்கால்வாய்ப் பகுதி யில் துருக்கியைத் தாக்கிய பொழுது ஆங்கிலேய-இந்தியப் படை ஒன்று பாரசீக வளைகுடாவிற்கு வந்து மெசபடோமி யாவைக் கைப்பற்றியது.

இந்நிலையில் உலகப் போரில் பிரிட்டிஷ்காரர்களுக்கும் துருக் கியர்களுக்கும் நடைபெற்ற போரில் 1915-ல் துருக்கியர்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அத்துடன் சூயஸ் கால்வாயையும் தனித்துப் பாதுகாத்து வந்தனர். ஆங்கிலேய - இந்தியப் படையில் ஏறத்தாழ பாதியளவு 180 மைல் தொலைவு உள்ளே நுழைந்து, தைகிரிஸ் சென்றதும் வலிமைமிக்க பெரிய துருக்கியப் படைகளால் சூழ்ந்துகொள்ளப் பட்டது. இப்படை துருக்கியர்களிடம் குட்-ஆல்-அமாரா (Kut-al-Amara) என்ற இடத்தில் 1915 ஏப்ரலில் சரணடைந்தது

அதேபோல டார்னெல்ஸ் பகுதியிலும் நேச நாடுகளின் படைகள் தோல்வியடைந்தன.

1916ஆம் ஆண்டில் உலகப் போரில் வெற்றி திசை திரும்ப ஆரம்பித்தது. பிரிட்டிஷ்காரர்கள் உதுமானியப் பேரரசில் பல பகுதிகளைக் கைப்பற்றினர். முதலில் எகிப்து, பாலஸ்தீனம் ஆகிய நாடுகளுக்கிடையே உள்ள சைனெய் (Sinai) தீபகற்பத்தை ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய பகுதிப் படைகளின் உதவியுடன் ஆங்கிலேய - எகிப்தியப் படை கைப்பற்றியது. அடுத்து தைகிரிஸ் நதிக்கரையில் அமைந்துள்ள குட்-ஆல்-அமாரா என்ற நகரத்தை ஆங்கில-இந்தியப் படைகள் மீண்டும் கைப்பற்றின. பாக்தாத் நகரம் மே மாதத்தில் கைப் பற்றப்பட்டது. 1916ஆம் ஆண்டின் இறுதியில் ஏறத்தாழ மெசபடோமியாவின் பெரும் பகுதி பிரிட்டனின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது.

அடுத்து லாரன்ஸ் (Colonel Lawrence) என்ற ஆங்கி லேயத் தளபதி அரேபியர்களின் ஆதரவையும், மரியாதையை யும் பெற்றார். இவர் மெக்காவில் இருந்த அரேபிய அரசரான ஹுஸைன் என்பவரையும், அவரது மகனை ஃபெய்சல் (Feisal) என்பவரையும் துருக்கியர்களுக்கு எதிராக ஒரு புரட்சி செய்யு மாறு தூண்டினர். இதனைப் பயன்படுத்தி ஹுஸைன் 1916 ஜூனில் ஹெஜாஸ் என்ற பகுதியின் சுதந்திரத்தைப் பிரகடனப் படுத்தினர். இதன்பிறகு ஃபெய்சல், லாரன்ஸின் உதவியுடன் துருக்கியர்களைத் தாக்கியதுடன், தேசியக்கருத்துக்களைப் பாலஸ் தீனம், சிரியா ஆகிய பகுதிகளிலிருந்த அரேபியர்களிடத்தில் பரப்பினர். இவை யாவும் பிரிட்டனின் கடல்வலிமையாலேயே நடைபெற்றன.

ஜெர்மனியின் கடல் முற்றுகை

ஜெர்மனியின் வியாபாரிகளும், ஜெர்மனியக் கப்பல்களும் பிரிட்டனின் கடல்வலிமையால் கடலினின்றும் விரட்டப் பட்டன. பிரிட்டிஷ் கடற்படை தீவிரமான முறையில் ஜெர்மனி யின் துறைமுகங்களை முற்றுகையிட்டன. மேலும் இவை ஜெர்மனியைப் போட்டியில்லாமல் நியாயமான முறையில் கடல் வாணிபம் செய்யுமாறு வற்புறுத்தின. நெதர்லாந்து, ஸ்காண்டி நேவிய நாடுகள் ஆகியவற்றுடன் ஜெர்மனி தொடர்ந்து ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் செய்து வந்தது.

ஆனால் ஜெர்மனியின் கப்பல்கள் பிரிட்டிஷ் போர்க் கப்பல்களால் சோதனை செய்யப்பட்டன. இதனால் ஜெர்மனியில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களும், ஜெர்மனிக்கு விற்பனைக்குக் கொண்டு செல்லப்பட்ட பொருள்களும், பிரிட்டிஷ் கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்டன. எனவே ஜெர்மனி வெளிநாட்டு வாணிபத்தால் வரும் பெரும் இலாபத்தை இழந்ததுடன், தனக்குத் தேவையான கச்சாப் பொருள்களையும் பிற நாடுகளிலிருந்து பெற முடியாமல் போயிற்று.

இதனால் பிரிட்டனின் தொழிற்சாலைகள் ஊக்கமடைந்து அதிக அளவில் பொருள்களை உற்பத்தி செய்தன. குறிப்பாக ஜெர்மனியர்களின் வியாபாரப் போட்டி குறைந்த பிறகு பிரான்சின் தொழிற்சாலை நிறைந்த பகுதிகளை ஜெர்மனி கைப்பற்றியதாலும், நேசநாடுகள் போர்க் கருவிகளைத் தவிர இதர பொர்ருள்களை உற்பத்தி செய்வதைக் குறைத்துக் கொண்டதாலும், பிரிட்டன் அதிக இலாபம் ஈட்டியது. தொழில், வியாபாரம் ஆகிய துறைகளில் இலாபம் கிடைத்தபொழுது வெற்றித் தேவதை பிரிட்டிஷ்காரர்களை நோக்கிப் புன்முறுவல் செய்யத் தொடங்கினாள். இதனால் போர்க் காலத்தில் பிரிட்டன் உலக நாடுகளின் வங்கியாகவும், தொழிற்சாலையாகவும் விளங்கி, தன்னுடைய நட்பு நாடுகளுக்குத் தேவையான மூலதனத்தையும் போர்க் கருவிகளையும் கொடுத்து உதவியது.

ஐக்கிய அமெரிக்காவுடன் பிரிட்டன் தங்குதடையின்றி வியாபாரத் தொடர்பு கொண்டிருந்தது. மேலும் அமெரிக்கர்கள் ஜெர்மனியர்களுடன் வியாபாரம் செய்வதைத் தடைசெய்ததால், தன்னுடைய நட்பு நாடுகளில் அமெரிக்க வாணிபம் தொடர்ந்து நடைபெற பிரிட்டன் அனுமதி வழங்கியது. சுருங்கக் கூறின், பிரிட்டனின் கடற்படை வலிமையால் அமெரிக்க நாடுகள் தங்கள் பொருள்களை மத்தியப் பேரரசு நாடுகளைக் காட்டிலும் நேசநாடுகளுக்கு மிக அதிக அளவில் விற்பனை செய்தன. இதனால் நடுநிலை அமெரிக்க வியாபாரிகள் பலர் தங்கள் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட போர்க் கருவிகளை பிரிட்டன், பிரான்சு இத்தாலி போன்ற நேசநாடுகளுக்கு ரொக்கத்திற்கும், கடனுக்கும் விற்று அதிக இலாபம் சம்பாதித்தனர். எல்லாவற்றிற்கும் மேலாக, ஐக்கிய அமெரிக்கர்கள் ஜெர்மனியைக் காட்டிலும் நேசநாடுகளின் பிரசாரங்களுக்கு அதிக ஆதரவு கொடுத்தனர். பெரும்பாலான அமெரிக்கர்கள் இயற்கையாகவே மத்தியப் பேரரசுகளைக் காட்டிலும், நேசநாடுகளின்பால் அதிக இரக்கம் காட்டினர். அமெரிக்கர்கள் ஆங்கில

மொழியைப் பேசி வந்ததே இதற்கு முக்கிய காரணம் என்று சிலர் கருதுகின்றனர்.

இதனையடுத்து வேறொரு வகையிலும் பிரிட்டன் உலகப் போர்க் காலத்தில் அதிக இலாபமடைந்தது. உலகப் போர் தொடங்கியபொழுது ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி ஆகிய நாடுகளில் போதுமான உணவுப் பொருள்கள் இல்லை. இவ்வாறே பிரிட்டனிலும், அதன் நேச நாடுகளிலும் உணவுப் பொருள் பற்றுக்குறை இருந்தது. எனவே இந்நாடுகள் தங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை வெளிநாடு களிலிருந்து தருவித்துக் கொண்டன. ஆனால் உலகப் போர் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும்பொழுது பிரிட்டன் தனது கடல்வலிமையால் தனக்கும், தனது நட்பு நாடுகளுக்கும் தேவையான உணவுப் பொருள்களை ஐக்கிய அமெரிக்கா, கனடா, அர்ஜென்டைனா, ஆஸ்திரேலியா போன்ற நாடு களிலிருந்து பெற்றது. இதனால் மத்தியப் பேரரசுகள், குறிப்பாக ஜெர்மனி, பல இன்னல்களுக்குள்ளாயிற்று. போரின் பொழுது ஜெர்மனி விவசாயத்தை வளப்படுத்த முடியாததாலும், பிரிட்டன் கடல் வழியாக ஜெர்மனியை முற்றுகையிட்டதாலும், ஜெர்மனியப் படைகளும் மக்களும் போதுமான வசதிகளும் உணவுப் பொருள்களும் இல்லாமல் சோர்வடைந்தனர். பசிப் பிணி மத்தியப் பேரரசுகளை, குறிப்பாக ஜெர்மனியர்களை, வாட்டத் தொடங்கியது. இந்நிலையில் ஜெர்மனியின் புதிய தளபதிகளான ஹிண்டன்பர்க்கும், லூடென்டோர்ஃப்பும் நீர் மூழ்கிக் கப்பல்களைப் பயன்படுத்தி பிரிட்டிஷ் கப்பற்படைகளை அழிக்குமாறு அரசுக்கு ஆலோசனை கூறினர்.

ஜெர்மனியின் நீர்மூழ்கிக் கப்பலாயுதம்

ஜெர்மனி போரில் சோர்வுற்றுப் பசிப்பிணியால் வாடிய பொழுது அதன் கையிலிருந்த வலிமைமிக்க மற்றோர் ஆயுதம் நீர்மூழ்கிக் கப்பல்களாகும். இந் நீர்மூழ்கிக் கப்பல்களைப் பயன் படுத்தி பிரிட்டனின் கடல்வலிமையைக் குறைக்க ஜெர்மனி முயற்சி செய்தது. இவ்வாயுதத்தைப் பயன்படுத்தி, பிரிட்டனின் போர்க் கப்பல்களை மூழ்கடித்து, போர்க் கருவிகள் மூலமாகவும், படைகள்மூலமாகவும் பிரிட்டன் நேசநாடுகளுக்குஉதவுவதைத் தடுக்க முடியுமென ஜெர்மனி எண்ணியது. இவ்வாறு செய்தால் பிரிட்டன் தனித்து இருந்து இறுதியில் தன்னிடம் சரணடையு மென ஜெர்மனி கருதியது. அத்துடன் நீர்மூழ்கிக் கப்பல்களைப் பயன்படுத்தி உலகப் போரின் தொடக்கத்தில் (1916 ஜுனில்) ஜெர்மனி பல போர்க் கப்பல்களையும் மூழ்கடித்தது. எனவே

பிரிட்டனைத் தனித்திருக்கச் செய்ய, தனது நீர்மூழ்கிக் கப்பல்களைப் பயன்படுத்துவதே சிறந்த வழி என்று கருதிய ஜெர்மனி 1917-ல் பெருமளவில் நீர்மூழ்கிக் கப்பல்களைப் பயன்படுத்தி எதிரிகளின் போர்க் கப்பல்களை மூழ்கடிக்கத் தொடங்கியது.

ஆனால் ஜெர்மனி நீர்மூழ்கிக் கப்பல்களைப் பெருமளவில் பயன்படுத்தியமை ஜெர்மனிக்கும், பிரிட்டனுக்கும் பாதகமாக அமைந்தது. நீர்மூழ்கிக் கப்பல்களை ஜெர்மனி பயன்படுத்தியதால் பிரிட்டனின் வியாபாரக் கப்பல்களும், நடுநிலை நாடுகளின் கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன. இதனால் பாதிக்கப்பட்ட நடுநிலை நாடுகள் நேசநாடுகளுடன் சேர்ந்து கொண்டு ஜெர்மனியின் பகைவர்களை மேலும் வலுவடையச் செய்தன.

நடுநிலை நாடுகளிலேயே மிக வலிமை வாய்ந்த நாடாக விளங்கியது ஐக்கிய அமெரிக்க நாடு. இந்நாட்டிலிருந்து ஏராளமான அமெரிக்கர்கள் பிரிட்டிஷ் கப்பல்களில் அடிக்கடி இங்கிலாந்திற்கு வந்து போய்க்கொண்டிருந்தனர். மேலும் ஏராளமான அமெரிக்கர்கள் உணவுப் பொருள்களையும் போர்க் கருவிகளையும், நேசநாடுகளுக்கு விற்று அதிக இலாபம் சம்பாதித்து வந்தனர். மேலும் ஐக்கிய அமெரிக்க நாடு ஒன்றுதான் வல்லரசு நாடுகளிலேயே நடுநிலை வகித்து வந்தது.

இந்நிலையில் 1915 மே யில் ஜெர்மனின் நீர்மூழ்கிக் கப்பற்படை லூஸிடானியா என்ற பிரிட்டிஷ் வியாபாரக் கப்பலை அயர்லாந்துக் கருகில் கடலில் மூழ்கடித்தது. இக்கப்பல் ஐக்கிய அமெரிக்காவிலிருந்து சரக்குகளையும், 1200 பிரயாணிகளையும் ஏற்றிக் கொண்டு வந்து கொண்டிருந்தது. இவர்களில் சுமார் 100 பேர் அமெரிக்கர்கள். எனவே ஐக்கிய அமெரிக்காவின் அரசு ஜெர்மனியின் இச்செய்கைக்குக் கண்டனம் தெரிவித்ததுடன், ஜெர்மனியையும் கடுமையாக எச்சரித்தது. இதற்கிடையில், நேசநாடுகள் அமெரிக்கர்களின் இரக்கத்திற்குள்ளாயின. ஏறத்தாழ ஒரு வருடம் ஜெர்மனியும் ஐக்கிய அமெரிக்காவும் கடிதங்களின் மூலம் பேச்சுவார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டன. இறுதியாக 1916 மே மாதத்தில் ஜெர்மனி அமெரிக்காவின் வேண்டுகோளுக்கு ஒத்துக் கொண்டது. அதன்படி இனி தக்க எச்சரிக்கை கொடுக்காமலும், பிரயாணிகளுக்குத் தக்க பாதுகாப்பு கொடுக்காமலும், எந்த ஒரு வியாபாரக் கப்பல்களையும் நீர்மூழ்கிக் கப்பல்கள் மூழ்கடிக்காது என அமெரிக்காவிற்கு ஜெர்மனி உறுதி கூறியது.

இவ்வாறு அதிக அளவில் பயன்படுத்தப்பட்ட ஜெர்மனிய நீர்மூழ்கிக் கப்பல்களின் செயல்களை அமெரிக்கா தடுத்து நிறுத்தியது. இதனால் பிரிட்டன் இலாபமடைந்தது. இதற்கிடையில் பிரிட்டன் கடலிலும், தரையிலும் தன்னுடைய படைகளை மேலும் வலுப்படுத்தியது. மேலும் ஜெர்மனியின் துறைமுகங்கள் மீது தான் மேற்கொண்டிருந்த கடல் முற்றுகையைத் தீவிரப்படுத்தி, ஜெர்மனிய மக்களைப் பட்டினி போட்டுப் பயமுறுத்தியதுடன், ஐரோப்பாவில் ஜெர்மனிக்கான வெற்றி வாய்ப்புக்களையும் குறைத்தது.

5. உலகப் போரின் பிரச்சினைகள் (1917—1918)

மத்தியப் பேரரசுகள் இரஷ்யா, செர்பியா ஆகிய தங்களுடைய பகைநாடுகளுக்கு எதிராக 1915 ல் பல வெற்றிகளைப் பெற்றன. பின்னர் 1916 ல் ருமேனியாவை வென்றன. மேற்குப் பகுதிகளில் பிரான்சு, பிரிட்டன் ஆகிய நாடுகளின் படைகளையும் கணிசமான அளவு குறைத்தன. இருப்பினும் நேசநாடுகள் மேலும் மேலும் தங்களுக்குக் கிடைத்துக் கொண்டிருந்த உதவியின் காரணமாக 1916-1917 ஆகிய ஆண்டுகளின் குளிர்காலத்தில் வீராவேசமாகத் தாக்க ஆரம்பித்தன. இதனால் நேச நாடுகளின் நம்பிக்கை வளர்ச்சியடையத் தொடங்கியது. மேலும் மத்தியப் பேரரசுகளுக்கு நெருக்கடியான நிலைகள் ஏற்பட்ட பொழுதெல்லாம் நேச நாடுகளுக்கு நல்வாய்ப்புக்கள் ஏற்பட்டன. அத்துடன் பிரிட்டன் ஜெர்மனிக் கெதிராக அதன் துறைமுகங்களை முற்றுகையிட்டதால், ஜெர்மனி தனக்குத் தேவையான உணவுப் பொருள்களையும், கச்சாப் பொருள்களையும் பிற நாடுகளிலிருந்து பெற முடியாமல் போயிற்று. எனவே பிரான்சுக்கு எதிராகப் போரிட்டு வந்த ஜெர்மனியப் படைகள், தேவையான அளவு தளவாடங்கள் கிடைக்கப் பெறாமல் அதிக இன்னல்களுக் குள்ளாயின. இதனால் வெர்டுன் என்ற இடத்தில் போரிட்ட ஜெர்மனியப் படைகளை பிரஞ்சுப்படைகள் பின்வாங்கச் செய்தன. மேலும் புதிய தளபதிகள் மேற்குப் பகுதிகளுக்குச் சென்று "ஹிண்டன்பர்க் எல்லைக்கோடு" என்ற ஒன்றை ஏற்படுத்தினர். இதனால் ஜெர்மனியப் படைகள் மேலும் பின்னடைந்தன. இந்நிலையில் ஆஸ்திரியா – ஹங்கேரியில் மக்களின் பெருமதிப்பினைப் பெற்றிருந்த பேரரசரும், அரசருமான பிரான்சிஸ் ஜோஸப் என்பவர் 1916 நவம்பரில் இவ்வுலக வாழ்வை நீத்தார். இவரின் மறைவு ஹாப்ஸ்பர்க் பேரரசில் மேலும் குழப்பத்தை ஏற்படுத்திக் கிளர்ச்சிக்கு வழி

கோலியது. பிரான்சிஸ் ஜோஸப்பிற்குப் பின்னர் பட்டத்திற்கு வந்த, மறைந்த மன்னரின் நெருங்கிய உறவினரான முதலாம் சார்லஸ்(Charles I) நேச நாடுகளுடன் இரகசிய உடன்படிக்கை செய்து கொண்டு உலகப்போரிலிருந்து பின்வாங்கிக் கொள்ள முயற்சி செய்தார். இவர் நேசநாடுகளுடன் நட்பு பாராட்ட வேண்டுமென்று கருதியதே இவரது முயற்சிகளுக்கு முக்கிய காரணமாகும்.

இதனுல் பேரரசர் சார்லஸ் அல்சேஸ், லொரைன் ஆகிய பகுதிகளை பிரான்சு திரும்பப் பெறுவதற்கும், கான்ஸ்டாண்டி நோபிளை இரஷ்யா கைப்பற்றுவதற்கும், கடல் வழியாகச் செல்ல செர்பியாவிற்கு ஒரு துறைமுகத்தையும், அல்பேனி யாவின்ஒரு பகுதியையும் கைப்பற்றிக் கொள்வதற்கும் இத்தாலி டிரேண்ட் (Trent) என்ற இடத்தைக் கைப்பற்றிக் கொள் வதற்கும் விருப்பம் தெரிவித்தார். எனவே ஆஸ்திரியா விற்கும், நேசநாடுகளுக்குமிடையே 1917 ஜுனில் பேச்சு வார்த்தைகள் தொடங்கின. ஆனுல் ஜெர்மனியும், இத்தாலியும் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே பேச்சுவார்த்தை மே யில் முறிந்து போயிற்று. தன்னுடைய நாட்டில் இன்னும் ஒராண்டு காலத்தில் புரட்சி ஏற்படலாம் என்று கருதிய சார்லஸ் இப்பேச்சு வார்த்தைகள் முறிவடைந்ததால் வருத்தமடைந் தார்.

நீர்மூழ்கிக் கப்பல்களைப் பெருமளவில் பயன்படுத்தி, பிரிட் டனின் கடல்வலிமையைக் குறைத்து, நேசநாடுகளைத் தோற் கடிக்க முடியுமென ஜெர்மனி நம்பியதே சார்லஸின் அமைதிக் கான முயற்சிகளை ஜெர்மனி எதிர்த்ததற்கு முக்கிய காரண மாகும். அத்துடன் புதிய தளபதிகளான ஹிண்டன்பர்க்கும், லூடென்டோர்ஃப்பும் நீர்மூழ்கிக் கப்பல்களைப் பெருமளவில் பயன்படுத்துமாறு ஜெர்மனியப் பேரரசருக்கு ஆலோசனை வழங்கினர். மேலும் ஜெர்மனியக் கடற்படைத் தளபதி இப் போர் முறையின் மூலம் ஆறு மாதங்களுக்குள் இங்கிலாந்தைப் பட்டினி போட முடியுமெனக் கருதினுர். எனவே பேரரசர் இரண்டாம் சார்லஸும், ஜெர்மனியப் பாராளுமன்றமான ரீஷ்ஸ்டெக்கும் தளபதிகளின் ஆலோசனைகளை ஏற்று நீர்மூழ்கிக் கப்பல்களைப் பயன்படுத்தி பிரிட்டனுக் கெதிரான தனது கடற்போரைத் தொடங்கியது. ஜெர்மனியின் மக்களும் இதற்குப் பேராதரவு கொடுத்தனர்.

ஐக்கிய அமெரிக்காநாடு முதல் உலகப் போரில் கலந்து கொள்ளுதல்

நீர்மூழ்கிக் கப்பல்களைப் பயன்படுத்திக் கடற்போரை ஜெர்மனி துவக்கினால், ஐக்கிய அமெரிக்க நாடு உலகப்போரில் கலந்து கொள்ளுமெனப் பல அரசியல் தலைவர்களும், அறிஞர்களும் கருதினர். ஆனால் ஜெர்மனியின் நீர்மூழ்கிக் கப்பல்களின் வெற்றியை அமெரிக்காவின் தலையீடு பாதிக்காது எனவும் இவர்கள் கருதினர். மேலும் இவர்கள் ஐக்கிய அமெரிக்க நாடு உலகப்போரில் ஈடுபட்டால், பெருமளவில் தனது படைகளைக் கொண்டுவந்து ஐரோப்பாவில் குவிக்குமெனவும் எண்ணினர். ஆனால் ஜெர்மனி தனது நீர்மூழ்கிக் கப்பல்களின் உதவிகொண்டு அமெரிக்கர்களின் முயற்சியைத் தகர்த்துவிட முடியுமென்றும் இவர்கள் நம்பினர்.

ஹாப்ஸ்பர்க் பேரரசர் நேசநாடுகளுடன் சமாதானம் செய்து கொள்ள முயற்சிகளை மேற்கொண்ட பொழுது ஜெர்மனி 1917 ஜனவரியில் நீர்மூழ்கிக் கப்பல்களைப் பயன்படுத்திப் போரிடும் கடற்போரை மேற்கொண்டது. தக்க எச்சரிக்கை கொடுத்துவிட்டு, தனது பார்வையில் படும் கப்பல்களை மூழ்கடிப்பதில் சிரமமேற்பட்டதாலும், வாணிகக் கப்பல்களின் மூலம் அமெரிக்கப் போர்க்கருவிகள் நேசநாடுகளுக்கு வந்து சேர்ந்ததாலும் 1917 ஜனவரி 31 ல் தனது உறுதிமொழியைக் காப்பாற்றத் தன்னால் இயலவில்லை என ஜெர்மனி அறிவித்தது. அது முதற்கொண்டு எவ்வித முன்னறிவிப்புமின்றி எல்லா நாட்டுக் கப்பல்களையும் தான் மூழ்கடிக்கப் போவதாகவும் ஜெர்மனி அறிவித்தது. எனவே ஐக்கிய அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவராக இருந்த உட்ரோ வில்சன் (Woodrow Wilson) உடனடியாகச் செயல்பட்டு, தன்னுடைய நாடு ஜெர்மனியுடன் கொண்டிருந்த எல்லா உறவுகளையும் முறித்துக் கொண்டதாக அறிவித்தார். இதனைத் தொடர்ந்து ஐக்கிய அமெரிக்காவின் பாராளுமன்றமான காங்கிரஸ், பலத்த விவாதத்துக்குப் பின்னர் உலகப் போரில் ஈடுபட ஒப்புதலளித்தது. இதனால் 1917 ஏப்ரல் 6ஆம் தேதி ஐக்கிய அமெரிக்க நாடு ஜெர்மனிக் கெதிராகப் போர்ப் பிரகடனம் செய்தது.

கட்டுப்பாடற்ற முறையில் நீர்மூழ்கிக் கப்பல்களைப் பயன்படுத்தி எல்லா நாட்டுக்கப்பல்களையும், ஈவு இரக்கமற்ற முறையில் ஜெர்மனி மூழ்கடித்ததே ஐக்கிய அமெரிக்கா முதல் உலகப்போரில் ஈடுபட்டதற்கு முக்கிய காரணமாகும். ஐக்கிய

அமெரிக்கநாடு ஜெர்மனிக்கெதிராக உலகப் போரில் ஈடுபட்டதை நேசநாடுகள் விண்ணதிர முழக்கமிட்டு வரவேற்றன. ஐக்கிய அமெரிக்கநாடு உலகப் போரில் கலத்து கொண்டதால் இப்போரின் போக்கில் பல குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. அதனைப் பற்றி பின்னர்க் காண்போம். இனி இப்போரின் பொழுது இரஷ்யாவில் 1917ல் ஏற்பட்ட இரஷ்யப் புரட்சியைப் பற்றிச் சிறிது கவனிப்போம்.

இரஷ்யப் புரட்சி (மார்ச் 1917)

ஐக்கிய அமெரிக்கநாடு முதல் உலகப் போரில் ஈடுபட்ட அதே சமயத்தில், இரஷ்யாவில் ஓர் உள்நாட்டுப் புரட்சி ஏற்பட்டது. இரஷ்யாவினால் நேசநாடுகளுக்கு அதிக பலன்கள் ஏற்படா விட்டாலும், இரஷ்யாவில் ஏற்பட்ட இப்புரட்சியைக் கேட்டு நேசநாடுகள் அதிர்ச்சி யுற்றன. உலகப்போரின் பொழுது 1915ல் இரஷ்யப் படைகள் பெருமளவு பின்வாங்கியதால் இரஷ்யாவின் சீர்கேடுகள் மிக மோசமாயின. கிழக்கு கலீஷியப் பகுதிகளிலிருந்து இரஷ்யத் தளபதி புருஸிலோவ் தற்காலிகமாக 1916 ல் பின்வாங்கியது, ஸார் மன்னரின் தகுதியற்ற தன்மையை வெளிப்படுத்தியது. மேலும் இச்சமயத்தில் ஸார் மன்னரே இரஷ்யப் படைகளுக்குத் தலைமை தாங்கினர். இவர் படைக்குத் தலைமை தாங்கும் அளவுக்குத் தகுதி பெற்றிருக்கவில்லை. மேலும் ஸார் மன்னரின் விருப்பத்திற்குரிய மனைவியான ஸாரினா (Tsarina) இரஸ்புதீன் (Rasputin) என்ற கபட சந்நியாசியுடன் நட்புக் கொண்டிருந்ததாலும், இவ்வரசியார் தன்னுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான இரஸ்புதீனுடைய விருப்பப்படி (ஆலோசனைப்படி) கண்மூடித்தனமாகப் பழைய அதிகாரிகளை நீக்கிவிட்டுப் புதிய அதிகாரிகளைத் தன்னுடைய கணவரான இரண்டாம் வில்லியத்தின் மூலம் நியமித்ததாலும், தங்களது குறைகளை நிவர்த்தி செய்யுமாறு வேண்டிய இரஷ்யப் பொதுமக்களின் கோரிக்கைகளை இவ்வரசியார் பிரபுக்களுடன் சேர்ந்து கொண்டு இரக்கமற்ற முறையில் தீவிரமாக மறுத்துவிட்டதாலும், இரஷ்யமக்கள் அரசி ஸாரினவை வெறுத்தனர். அத்துடன் அரசி ஸாரினா இரஸ்புதீனுடன் நட்புக்கொண்டிருந்ததை விரும்பாத பிரபுக்கள் சிலர், ஸார் மன்னரின் நெருங்கிய உறவினர் ஒருவரின் தலைமையின் கீழ் ஒன்றுபட்டு 1916 டிசம்பரில் இரஸ்புதீனுக்கு எதிராக ஒரு சதி செய்தனர். இவரை இரஷ்ய அரசியலிருந்து நீக்குவதற்கு இச்சதிகாரர்களில் ஒரு பகுதியினர் இவருக்கு விஷம் கொடுப்பதற்கும், மற்றொரு பகுதியினர் இவரைக் குத்திக் கொலை செய்வதற்கும்

முயற்சி செய்து தங்கள் முயற்சியில் வெற்றியும் பெற்றனர். இரஸ்புதீன் கொலே செய்யப்பட்டதால் அரசி ஸாரினு மேலும் கோபமடைந்து பிரபுக்களேயும், மக்களேயும் புறக்கணித்தார். அரசரும் அரசியாரின் வேண்டுகோளுக்கிணங்கி அரசியின் விருப்பங்களை நிறைவேற்றினுர். இதனுல் இரஸ்புதீன் உயிருடன் இருந்த பொழுது அரசியால் இரஷ்யமக்களுக்கு ஏற்பட்ட தீமைகளை விட இப்பொழுது அதிக தீமைகள் ஏற்பட்டன.

இரஷ்யாவில் 1916, 1917 ஆகிய ஆண்டுகளின் குளிர் காலத்தில் இரஷ்ய மன்னரான ஸாருக்கு எதிரான கருத்துக்கள் மக்களிடையே மிக வேகமாகப் பரவியது. இதனுல் இரஷ்யப் போரில் அரசு ஜெர்மனிக்கு எதிராக நடத்திய போரில் தான் அடைந்த தோல்விகளேயும், நஷ்டத்தையும் மூடி மறைக்கிறது என நாட்டுப்பற்று மிக்க இரஷ்யர்கள் குறை கூறினர் அத்துடன் இவர்கள் இரஷ்ய அரசர் தங்களுடைய பகை நாடுகளுடன் இரகசிய உடன்படிக்கை வைத்துக் கொண்டிருக்கிருர் எனவும் கூறினர். எனவே தேசியவாதிகளும், நாட்டுப்பற்று மிக்கவர்களும் இரஷ்யாவில் கொதித்தெழுந்தனர். இந்நிலேயில் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும், தங்கள் நிலேயை உயர்த்துவதற்கு இரஷ்ய அரசு எவ்வித முயற்சிகளேயும் மேற்கொள்ளாததால் அரசைக் குறை கூறினர். எல்லாவற்றிற்கும் மேலாக விவசாயிகள் தங்கள் கோரிக்கைகளே நிறைவேற்றக் கோரி ஆங்காங்கே கிளர்ச்சிகள் செய்த பொழுது, நகர்ப்புறங்களில் தொழிற்சாலேகளில் தொழில் புரிந்த தொழிலாளர்களும் வேலே நிறுத்தங்களில் ஈடுபட்டனர்.

எனவே ஸார் மன்னரான இரண்டாம் நிக்கோலஸ் பெட்ரோகிராடில் வேலே நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களே வேலேக்குத் திரும்ப அனுப்புவதற்காகவும், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட "டுமா" என்ற சபையைக் கலேப்பதற்காகவும் 1917 மார்ச் 11 ல் ஓர் ஆணே பிறப்பித்தார். இவ்வாணேயினுல் கோபமடைந்த வேலே நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள், தங்கள் மன்னரது ஆணேக்குக் கீழ்ப்படிய மறுத்தனர். வேலே நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களே அடக்க மன்னர் இராணுவத்தை அனுப்பினுர். மன்னரது செய்கைகளால் முன்னரே வெறுப்படைந்திருந்த சில இராணுவ அதிகாரிகள் மன்னரது ஆணேகளே உதாசினம் செய்துவிட்டு, வேலே நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களுடன் சேர்ந்து கொண்டு, அவர்களுக்கு ஆதரவு கொடுத்தனர். வேலேநிறுத்தத்தில் ஈடுபட்டவர்களும் இவர்

களுக்கு ஆதரவாக இருந்த சில போர்வீரர்களும் ஒன்று சேர்ந்து புரட்சி இயக்கம் ஒன்றை ஆரம்பித்தனர். இது "சோவியத்" என வழங்கப்பட்டது. இவ்வாறே "டூமா" சபையில் இருந்த அங்கத்தினர்களும் மன்னரது ஆணைக்குக் கட்டுப்பட மறுத்தனர். அத்துடன் "டூமா" சபையின் தலைவர், மதவாதிகள் நிறைந்த புதிய அமைச்சரவை ஒன்றை அமைக்கத் தன்னை அழைக்குமாறு மன்னரைக் கேட்டுக் கொண்டு தந்தி ஒன்றை அனுப்பினர். மன்னர் இதற்கு மறுக்கவே 1917 மார்ச் 15 ல் டூமாவின் பிரதிநிதிகள் புஸ்கோவ் (Pskov) நகரில் மன்னரைச் சந்தித்துத் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கேட்டுக் கொண்டனர். மன்னர் இவர்களது கோரிக்கைகளை நிறைவேற்ற மறுக்கவே மன்னரை முடிதுறக்குமாறு இவர்கள் வலியுறுத்தினர். மன்னரும் தன்னுடைய சகோதரரான பெரிய டியூக் மைக்கேலுக்குச் (Grand Duke Michael) சாதகமாக முடிதுறந்தார். ஆனால் இரஷ்யாவில் ரோமர்னேவ் வம்சத்தைச் சேர்ந்த எந்த அரசரும் புரட்சியை அடக்கமுடியாது என்ற நிலை உருவாயிற்று. எனவே மைக்கேல் இரஷ்யாவின் மன்னர் பொறுப்பை ஏற்க மறுத்தார்.

அதன் பின்னர் டூமாவும், பெட்ரோகிராடில் இருந்த "சோவியத்" தும் ஒன்று சேர்ந்து தற்காலிக அரசாங்கம் ஒன்றை ஜார்ஜ் லவோப் (Prince George Lvov) என்பவரின் தலைமையின் கீழ் அமைத்தன. இவர் மிதவாத பிரபுவாக இருந்தார். மேலும் இவர் செம்ஸ்டோவ்களின் தலைவராகவும், ஜனநாயகக் கட்சியின் அங்கத்தினராகவும் இருந்தார். தற்காலிக அரசு கூட்டங்கள் நடத்துவதற்கு உடனடியாக அனுமதி வழங்கியதுடன், பத்திரிக்கைச் சுதந்திரம், மத சுதந்திரம் ஆகியவற்றையும் உடனடியாக மக்களுக்கு வழங்கியது. மேலும் இவ்வரசு சிறையிலிருந்த பல்லாயிரக் கணக்கான மிதவாதிகளை விடுதலை செய்ததுடன், அவர்களின் மீது விதிக்கப்பட்டிருந்த அரசியல் கட்டுப்பாடுகளையும் நீக்கியது. அத்துடன் இவ்வரசு ஃபின்லாந்திற்கு (Finland) முழு சுயாட்சி உரிமை வழங்கி, போலந்து வரை ஃபின்லாந்தின் எல்லைகளை விரிவுபடுத்துவதாகவும் உறுதி கூறியது. எல்லாவற்றிற்கும் மேலாக வயதுவந்த ஆண்கள் அனைவருக்கும் வாக்குரிமை என்ற முறையில், "தேசிய அரசியல் நிர்ணய சபை" ஒன்றைத் தேர்ந்தெடுத்து, இரஷ்யாவின் எதிர்கால அரசாங்கத்தை அமைக்கப் போவதாகவும் அறிவித்தது. இவ்வாறு பல மாறுதல்களை உள்நாட்டில் ஏற்படுத்திய இச்சமயத்தில் இவ்வரசு இரஷ்யப் படைகளுக்குப் புத்துயிரூட்டிப் போரைத் தொடர்ந்து நடத்தப் போவதாகவும் அறிவித்தது.

இரஷ்யாவில் புரட்சி ஏற்பட்டு முடியாட்சி நீக்கப் பட்டதால் இரஷ்யாவின் நட்பு நாடுகளும், ஐக்கிய அமெரிக் காவும் இதனைக்கண்டு மகிழ்ச்சியடைந்தன. இரஷ்யாவில் முடியாட்சி நீக்கப் பட்டதால், முடியாட்சியின் பொழுது போரிட்டதை விட அதிக வலிமையுடன் இரஷ்யப் படைகள் போரிடும் எனவும், இரஷ்யாவில் ஜனநாயக ஆட்சி ஏற்படு மென்றும் இவர்கள் நம்பினர். இதனால் ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக இருந்த உட்ரோ வில்சன் என்பவர் மத்தி யப் பேரரசுகளுக்கு எதிராக நடைபெற்ற போர் இனி உலகில் "ஜனநாயகத்தைப்பாதுகாப்பதற்கானபோராகமாற்றமடையும்" எனக் கூறினர். இரஷ்யப் புரட்சியை நேசநாடுகளும், ஐக்கிய அமெரிக்காவும் வரவேற்றதால், இரஷ்யாவில் உள்நாட்டில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளைக் கவனிப்பதை சற்று நிறுத்தி வைத்து விட்டு, இப்புரட்சியால் நேசநாடுகளிலும், மத்தியப் பேரரசு களிலும், குறிப்பாக ஜெர்மனியிலும் ஏற்பட்ட மாறுதல்களை இனிக் கவனிப்போம்.

இரஷ்யாவில் 1917 மார்ச்சில் புரட்சி ஏற்பட்ட பொழுது பிரிட்டன் மெசபடோமியாவில் துருக்கியர்களைத் தோற்கடித்து முக்கிய நகரமான பாக்தாத்தைக் கைப்பற்றியது. இதனையடுத்து ஐக்கிய அமெரிக்கா நாடு ஜெர்மனிக்கு எதிராக உலகப்போரில் இறங்கிய பொழுது பிரஞ்சுத்தளபதியான இராபர்ட் நிவேல் (Robert Nivelle) என்பவர் மேற்குப் பகுதியில் ஜெர்மனியர் களுக்கு எதிராகத் தீவிரமான முறையில் பாதுகாப்பு நட வடிக்கைகளை ஆஸ்னி நதி தீரம் முழுவதும் மேற்கொண்டார்.

இதே சமயத்தில் பால்கன் பகுதியில் சலோனிகா என்ற இடத்தில் நேசநாடுகள் மிகப் பரந்த அளவில் இராணுவ நட வடிக்கைகளை மேற்கொண்டு ஆக்கிரமிப்பு முயற்சிகளை மேற் கொண்டன. இப்பகுதியில் இருந்த நேசநாடுகளின் படைத்தள பதி சர்ரெயில் (Sarrail) என்பவரது தலைமையின் கீழ் ஏறத்தாழ ஆறு இலட்சம் போர்வீரர்களைக் கொண்டிருந்தது. அத்துடன் ஜெர்மனியின் நண்பரான கிரீஸ்நாட்டு மன்னர் நேசநாடுகளின் ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற் கொள்ளமாட்டார் என்று கருதிய நேசநாடுகள், கிரீஸைத் தங்க ளுக்கு எதிராகத் தூண்டும் வகையில் ஆங்கிலேய-பிரஞ்சுக் கப்பற்படை ஒன்றை ஏதென்ஸ் (Athens) நகரத்திற்கு அனுப்பி வைத்தது. இப்படை ஜூன் மாதத்தில் கிரீஸ்நாட்டு மன்ன ரான கான்ஸ்டன்டைன் என்பவருக்குப் பல உறுதிமொழிகளைக் கொடுத்து முடிதுறந்து நாட்டைவிட்டுப் போகுமாறு செய்தது.

கான்ஸ்டன்டைன் கிரீஸைவிட்டுச் சென்றவுடன் நேசநாடுகளின் நண்பரான வெனிஸீலோஸ் என்பவர் கிரீஸ் மன்னர் கான்ஸ்டன்டைனின் மகனுன முதலாம் அலெக்ஸாந்தரின் முதலமைச்சராக்கப் பட்டார்.

இதற்கிடையில் பனுமாவையும் (Panama), கியூபா (Cuba) வையும் ஜெர்மனிக் கெதிராகப் போர்ப் பிரகடனம் செய்யுமாறு ஐக்கிய அமெரிக்கா 1917 ஏப்ரலில் தூண்டியது. இதனைத் தொடர்ந்து ஜூலையில் சயாமும் (Siam), ஆகஸ்டில் லைபீரியா (Liberia), சீனு ஆகிய நாடுகளும் ஜெர்மனிக்கு எதிராக உலகப் போரில் ஈடுபட்டன. இதனுல் உலகநாடுகள் முழுவதும் மத்தியப் பேரரசுகளுக்கு எதிராக நேசநாடுகளின் பக்கம் சேர்ந்து கொண்டது போலத் தோன்றியது,

ஜெர்மனியின் போக்கு

உலகப் போரில் அமெரிக்கர்கள் ஈடுபட்டதன் காரணமாகவும், இரஷ்யாவில் புரட்சி ஏற்பட்டு, முடியாட்சி நீக்கப்பட்டு ஜனநாயக அடிப்படையில் மிதவாதிகள் ஒரு தற்காலிக அரசை நிறுவியதன் காரணமாகவும், நீர்மூழ்கிக் கப்பல்களைப் பயன்படுத்தி, கடற்படையில் இறங்கிய ஜெர்மனி இப்போரின் முடிவுகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தபொழுது, ஜெர்மனிய மக்களிடையே சில மாற்றங்கள் ஏற்பட்டன. இதன் பயனுக ஜெர்மனிய மக்கள் மிதவாதக் கருத்துக்களின் வளர்ச்சியின் காரணமாக அமைதிக் கொள்கையைப் பின்பற்ற முற்பட்டனர். எனவே 1916ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஜெர்மனியில் சோஷியலிச ஜனநாயகக் கட்சியினரிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. இதனுல் இக்கட்சியினர் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்தனர். இவர்களில் ஒரு பகுதியினர் ஃபிரெட்ரிக் எபெர்ட் (Friedrich Ebert), பிலிப்ஸீட்மென் (Philip Scheidemann) என்ற இரு தலைவர்களின்கீழ் ஒன்றுபட்டு ஜெர்மனிய அரசுக்குத் தங்கள் முழு ஒத்துழைப்பைக் கொடுத்து, போரைத் தொடர்ந்து நடத்தவேண்டுமென விரும்பினர். மற்ருெரு பிரிவினர் ஹூகோ ஹாஸி (Hugo Haase), எட்வர்டு பெர்ன்ஸ்டின் (Edward Bernstein) என்ற இரு தலைவர்களின்கீழ் ஒன்றுபட்டு இராணுவச் செலவிற்கு அதிகத் தொகை ஒதுக்கீடு செய்வதை எதிர்த்தனர். இந்நிலையில் இக்கட்சியினரில் ஒரு சிறுபான்மையினர் ஜெர்மனியில் உழைப்பாளர்களின் சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்த வேண்டுமெனக் கூறினர். எனவே ஜெர்மனிய அரசு இவர்களின் தலைவர்களைக் கைது செய்து சிறையிலடைத்தது.

ஆரம்பத்தில் எட்வர்டு பெர்ன்ஸ்டின், ஹூகோ ஹாஸி ஆகியோரின் தலைமையின்கீழ் இயங்கி வந்த சோஷியலிச ஜனநாயகக் கட்சியினர் சிறுபான்மையினராக இருந்தனர். ஆனால் 1917ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இக்கட்சியின் பெரும்பான்மையான மக்கள் இவர்களுடன் சேர்ந்துகொண்டனர். இவர்கள் சமாதான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும், ஜனநாயகச் சீர்திருத்தங்கள் பலவற்றை ஜெர்மனியில் ஏற்படுத்த வேண்டுமென்றும் தங்கள் அரசை வற்புறுத்தினர். இவர்கள் பின்னர் அமைதிவாதிகள் (Pacifist) என அழைக்கப்பட்டனர். அமைதிவாதிகளை இந்நாட்டின் சோஷியலிஸ்டுகளும், கத்தோலிக்க மத்தியக் கட்சியினரும் ஆதரித்தனர். ஆனால் அமைதிவாதிகளுக்கெதிராக ஹிண்டன்பர்க் என்பவரும், லூடென்டோர்ஃப் என்பவரும் பிடிவாதமாக இருந்தனர். இத் தளபதிகள் நீர்மூழ்கிக் கப்பல்களைப் பயன்படுத்தி இறங்கியுள்ள கடற்போரிலும், மேற்குப் பகுதியில் நடைபெறும் போரிலும் ஜெர்மனி நிச்சயமாக வெற்றியடையுமெனக் கூறினர். இவர்கள் சோஷியலிஸ்டுகளின் மீதும், கத்தோலிக்க மத்தியக் கட்சியினர் மீதும் இரக்கம் காட்டுகிறார் என்ற குற்றச்சாட்டை ஜெர்மனியின் முதலமைச்சராகப் பதவிவகித்த பெத்மென்ஹோல்வெக்கின் மீது சுமத்தி அவரைப் பதவி நீக்கம் செய்யுமாறும், பழமைவிரும்பியாகவும் இராணுவத்தினரின் ஏஜெண்டாகவும் இருந்த ஓர் அரசாங்க அதிகாரியை ஜெர்மனியின் முதலமைச்சராக நியமிக்குமாறும் பேரரசர் இரண்டாம் வில்லியத்தைக் கட்டாயப் படுத்தினர். புதிய முதலமைச்சரும், தளபதிகளும் ஒன்றுசேர்ந்து கொண்டு சோஷியலிஸ்டுகளையும், மத்தியக் கட்சியினரையும் எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளாமல் தடை செய்தனர். இருப்பினும் ஜெர்மனியின் நலன் கருதி "நாடுகளையும் பிடிக்கவேண்டாம், நஷ்டஈடுகளையும் கொடுக்க வேண்டாம்" என்ற கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு நேசநாடுகளுடன் ஜெர்மனி சமாதானம் செய்துகொள்ள வேண்டுமென அரசாங்கத்தை வற்புறுத்தும் தீர்மானம் ஒன்றைச் சோஷியலிஸ்டுகளும், மத்தியக் கட்சியினரும், ஜெர்மனியின் பாராளுமன்றமான ரீஷ்ஸ்டக்கில் 1917 ஜூலையில் நிறைவேற்றினர். ஜெர்மனியின் நிலை இவ்வாறு இருக்க ஜெர்மனியின் நட்பு நாடான ஹாப்ஸ்பர்க் பேரரசின் நிலையைச் சற்றுக் கவனிப்போம்.

ஹாப்ஸ்பர்க் பேரரசிலும் குழப்பநிலை உருவாகியது. ஆஸ்திரிய-ஹங்கேரியப் பேரரசின் இராணுவத்திலிருந்த செக்கோஸ்லாவ் பிரிவினரும், குரோஷியப் பகுதியினரும், போலந்துப் பிரி

வினரும் இராணுவத்தில் கலகங்களைச் செய்தனர். இவர்களில் பெரும்பாலோர் தக்க சமயத்தில் ஆஸ்திரிய-ஹங்கேரியப் பேரரசின் இராணுவத்தை உதறிவிட்டு நேசநாடுகளின் இராணு வத்தில் சேர்ந்தனர். இதனைத் தொடர்ந்து இப்பேரரசில் இருந்த யூகோஸ்லாவ் இனத்தைச் சேர்ந்த (குரோட்டுகள், ஸ்லவோனி யர்கள், செர்பியர்கள்) பிரதிநிதிகள் கிரேக்க நாட்டின் கர்ஃப்யூத் (Corfu) தீவில் 1917 ஜூலையில் ஒன்றுகூடி, செர்பியப் பிரதம ரான நிகோலஸ் பாஸிக்குடன் (Nicholas Pasic) ஓர் உடன் படிக்கை செய்துகொண்டனர். இதன்படி உலகப் போர் முடிந்த வுடன் தங்கள் இனத்தவர்கள் எல்லோரும் ஒருங்கிணைந்து ஜனநாயக நாடு ஒன்றைச் செர்பிய அரசரான பீட்டரின் தலைமை யில் ஏற்படுத்துவது என்றும், பீட்டரைத் தங்கள் ஜனநாயக அரசின் தலைவராக்குவது என்றும் உறுதி எடுத்துக்கொண்டனர்.

போப்பாண்டவரின் திட்டங்கள்

பல நாடுகளிலும் குழப்பமான சூழ்நிலைகள் நிலவியபொழுது போப் பதினைந்தாம் பெனிடிக்ட் (Pope Benedict XV) என்பவர் 1917 ஆகஸ்டு முதல் நாள் ஒருவரோடொருவர் போரிட்டு மடிவதை விட்டுவிட்டு, நிலையான அமைதியை ஏற்படுத்தக் கூடிய சமாதானம் ஒன்றைச் செய்துகொள்ளுமாறு போரில் ஈடு பட்டிருந்த நாடுகளைக் கேட்டுக்கொண்டார். பன்னாட்டுப் பிரச்சினைகளை, ஆயுதங்களைப் பயன்படுத்திப் போரிட்டுத் தீர்த் துக் கொள்வதைவிட ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து, பேச்சு வார்த்தைகளின் மூலம் உரிமைகளை நிலைநாட்டி, பிரச்சினைகளைத் தீர்த்துத்துக்கொள்ள முடியுமென இவர் கூறினார். இதன்படி கைப்பற்றிய எல்லாப் பகுதிகளையும் உரியவர்களிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்றும், தகராறுகளைச் சமாதான முறையில் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், எல்லாக் கடல் களையும் எல்லா நாட்டிற்கும் பொதுவானவைகளாக்க வேண்டு மென்றும்,எதிர்காலத்தில்ஏற்படும்தகராறுகளைப்பேச்சுவார்த்தை களின் மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், எல்லா நாடு களும் படைக் குறைப்புச் செய்யவேண்டுமென்றும் சிக்கலான பிரச்சினைகளை, குறிப்பாக அல்சேஸ், லொரைன், போலந்து, டிரெண்டினோ போன்றவற்றின் பிரச்சினைகளை வாக்கெடுப்பின் மூலம் மக்களின் கருத்தறிந்து தீர்த்துக்கொள்ள வேண்டு மென்றும், போப் பதினைந்தாம் பெனிடிக் கூறினார். மேலும் இத்திட்டங்களைப் பின்பற்றுவதன் மூலம் நிலையான அமைதியை ஏற்படுத்த முடியுமென்றும் இவர் கூறினார்.

ஆனல் போரிடும் நாடுகள் எதுவும் போப்பாண்டவரின் ஆலோசனைகளுக்குச் செவிசாய்க்கவில்லை. எனவே போர் சிக்கலான நிலையிலேயே இருந்தது. நீர்மூழ்கிக் கப்பல்களின் உதவியால் தாங்கள் பிரிட்டனையும் அதன் நேச நாடுகளையும் தோற்கடிக்க முடியுமென ஜெர்மனி நினைத்தது. அத்துடன் புதிய தளபதிகளான ஹிண்டன்பர்க்கும், லூடென்டோர்ஃப்பும் புதிய வேகத்துடன் போரிட முனைந்துள்ளனர் என்று கருதிய ஜெர்மனி அரசு வெற்றி தனக்கே என எண்ணியது. தான் வெற்றி பெறப் போவதால் போப்பாண்டவரின் ஆணைகளை ஏற்று நேசநாடுகளுடன் சமாதானம் செய்துகொள்ள வேண்டிய தில்லை என ஜெர்மனி கருதியது. ஜெர்மனியின் புதிய தளபதிகள் போரைத் தொடர்ந்து நடத்துவதில் தீவிரமாக இருந்ததாலும் ஐரோப்பாவின் பல பகுதிகளை ஜெர்மனி கைப்பற்றியிருந்த தாலும் ஜெர்மனியுடன் சமாதானம் செய்துகொள்ள நேச நாடுகள் விரும்பவில்லை. அத்துடன் இறுதியாக உலகப் போரில் கலந்துகொண்ட வல்லரசு நாடான ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் வில்சன், "நேசநாடுகளும், நேசநாடுகளுடன் சேர்ந்துள்ள நாடுகளும் ஜெர்மனியோடும் ஜெர்மனியைப் போன்ற நாடுகளோடும் சமாதானம் செய்துகொள்ளாது" எனக் கூறினர். இதனல் நேசநாடுகளும் போப்பாண்டவரின் ஆலேசனைக்குச் சிறிதும் செவிசாய்க்கவில்லை. எனவே போப் பதினைந்தாம் பெனிடிக்டின் திட்டங்கள் "பாறையில் ஊன்றிய விதையாகியது.

ஜெர்மனியப் படையில் ஃபால்கென்ஹெயினுக்குப் பதிலாக, புதிய தளபதிகள் நியமிக்கப்பட்டுப் போரைத் தொடர்ந்து தீவிர மாக நடத்தியதாலும், கடற்போரில் ஜெர்மனி நீர்மூழ்கிக் கப்பல் களைப் பயன்படுத்தியதாலும், நேசநாடுகளின் நிலை சற்று மோசமாகியது.

ஆஸ்னி பகுதியில் பாதுகாப்பு முயற்சிகளை மேற்கொண் டிருந்த பிரஞ்சுப் படையை, ஜெர்மனியப் படைகள் கடுமை யாகத் தாக்கியதால் பிரஞ்சுப் படைகளுக்குப் பெருத்த சேதம் ஏற்பட்டது. இத்துடன் பிரான்சு நாட்டில் தளபதி நிவேலுக்குப் பதிலாக, பெடெய்ன் (Petain) என்பவர் தளபதியாக நியமிக்கப் பட்டார். தளபதி ஃபோச் என்பவர் இவருடைய இராணுவ அதிகாரியாக நியமிக்கப்பட்டார். இவ்வித மாற்றங்களால் நேச நாடுகளின் படைகள் மேற்குப் பகுதியில் சற்று வலிமையிழந்த நிலையிலிருந்தன. இந்நிலையில் சர்ரெயில் என்ற தளபதியின்கீழ் பால்கன் பகுதியிலிருந்த நேசநாடுகளின் படை மேற்கொண்டு

வெற்றி எதுவும் பெறவில்லை. இதனால் நேசநாடுகளின் படையின் நிலை மோசமாக இருந்தது.

மத்தியப் பேரரசுகளின் படை ஐரோப்பாவில் பல வெற்றிகளை அடைந்து பல பகுதிகளைக் கைப்பற்றியபொழுது, ஜெர்மனி கடற்போரில் நீர்மூழ்கிக் கப்பல்களைப் பயன்படுத்தி, குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்று நேசநாடுகளை அச்சுறுத்தியது. ஜெர்மனியின் நீர்மூழ்கிக் கப்பல்கள் 1917ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை ஏறத்தாழ 40 இலட்சம் டன்கள் எடையுள்ள நேசநாடுகளின் கப்பல்களையும் படகுகளையும் மூழ்கடித்தன. இந்த அளவு 1917ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஜெர்மனியின் நீர்மூழ்கிக் கப்பல்களால் இரட்டிக்கப்பட்டிருந்தால் ஜெர்மனி இங்கிலாந்தைப் பட்டினி போட்டிருக்கலாம். அன்றியும் அமெரிக்கப் படைகள் பிரான்சு நாட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டதையும் தடுத்திருக்கலாம். ஆனால் விதியின் விளைவாக ஜெர்மனியால் அவ்வாறு செய்ய முடியவில்லை.

ஐக்கிய அமெரிக்க நாடு, ஜெர்மனிக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்தது முதல், நேசநாடுகளுக்கு மிகப் பெருமளவில் உதவியது. தன்னுடைய நாட்டின் வரிகளை உயர்த்தி அதனால் கிடைத்த அதிக வருவாயை நேசநாடுகளுக்குக் கொடுத்து உதவியது. தன்னுடைய நாட்டின் செல்வந்தர்கள் நேசநாடுகளுக்குத் தாராளமாக உதவலாம் என்றும், கடன் கொடுக்கலாம் என்றும் அமெரிக்க அரசு அறிவித்தது. போர்க் கருவிகளின் உற்பத்தியையும் இராணுவத்தினருக்குத் தேவையான மற்ற பொருள்களின் உற்பத்தியையும் தன்னுடைய நாட்டில், பெருக்கி அவற்றை நேசநாடுகளுக்கு அனுப்பி உதவியது. தன்னுடைய நாட்டில் நாற்பது இலட்சம் இளைஞர்களை இராணுவத்தில் புதிதாகச் சேர்த்து, அவர்களுக்குப் போர்ப் பயிற்சி யளித்து ஒரு பெரிய படையைத் தயார் செய்தது. தன்னுடைய கடற்படையை பிரிட்டிஷ் கடற்படையுடன் சேர்த்து, நேசநாடுகளின் கடற்படையை வலுப்படுத்தி, நூற்றுக் காணக்கான கப்பல்களைக் கட்டி, தன்னுடைய நாட்டிலிருந்து போர்வீரர்களையும், போர்க்கருவிகளையும் ஐரோப்பாவிற்குக் கொண்டு சென்றது. ஆனால் இவற்றைப் போன்ற செயல்களை எல்லாம் செய்வதற்கு ஜெர்மனிக்குப் போதுமான நேரம் தேவையாயிருந்தது. அமெரிக்கா உலகப்போரில் கலந்து கொண்டதால் போரில் சில மாற்றங்கள் ஏற்படுவதற்குக்

குறைந்தது ஓராண்டு காலமாவது தேவைப்பட்டது. இதற்குள் ஜெர்மனி கடற்படையில் நீர்மூழ்கிக் கப்பல்களைப் பயன்படுத்தியது அமெரிக்கர்களைச் சிறிது அதிர்ச்சியடையச் செய்தது.

பிரான்சு, இத்தாலி, இரஷ்யா ஆகிய நாடுகளின் அச்சநிலை

இதுவரை மத்தியப் பேரரசுகளிடம் இருந்த அச்சநிலை, ஜெர்மனியின் கடற்போரால் நேசநாடுகளுக்கு மாறியது. பிரான்சில் பல செல்வந்தர்களும், அரசியல்வாதிகளும் ஜெர்மனியுடன் போர் முடிவடைவதற்கு முன்னதாகவே பேச்சு வார்த்தைகள் நடத்தி, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் சமாதானம் செய்து கொள்ள வேண்டுமென்றனர். இந்த எண்ணம் பிரஞ்சு மக்களிடையே மிக வேகமாகப் பரவியது. இதனுல் பிரஞ்சு இராணுவத்தில் கலகங்கள் ஏற்பட்டன. இதேபோல 1917 ஆம் ஆண்டின் கோடைக்காலத்தில் இத்தாலிய மக்களிடையேயும் இத்தகைய கருத்துக்கள் பரவியதால் அந்நாட்டின் இராணுவத்திலும் கலகங்கள் ஏற்பட்டன.

இரஷ்யாவில் போர் முடிவதற்கு முன்னதாகவே ஜெர்மனியுடன் சமாதானம் செய்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் மிக வேகமாகப் பரவி இரஷ்யமக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. இரஷ்யாவில் 1917 மார்ச்சில் புரட்சி ஏற்பட்டு, முடியாட்சி நீக்கப்பட்டுத் தற்காலிக அரசு ஒன்று நிறுவப்பட்டதால் ஜனநாயகம் இரஷ்யாவில் மலரும் என்றும், போரில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படும் என்றும் கருதி பிரான்சு, பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகள் மகிழ்ச்சியடைந்தன என்று முன்னர்க் கண்டோம். ஆனுல் இவர்களின் மகிழ்ச்சி நிலைப்பதற்கான சாத்தியக் கூறுகள் விரைவில் மறையலாயின. பெரும்பாலான இரஷ்யப் போர்வீரர்கள் மத்தியப் பேரரசுகளின் படைகளுடன் போரிடுவதைக் காட்டிலும், தங்கள் நாட்டில் நிறுவப் பட்டிருந்த தற்காலிக அரசாங்கத்தின் வாயிலாகச் சில நன்மைகளைப் பெற விரும்பினர். ஆனுல் இரஷ்யாவிலிருந்த தற்காலிக அரசு போரைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று விரும்பியது. இந் நிலையில் இரஷ்யாவில் போர்வீரர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகிய மூன்று பிரிவினர்களும் ஒன்று சேர்ந்து கொண்டு தங்கள் அமைப்பான சோவியத்தின் மூலமாகப் போரைத் தொடர்ந்து நடத்துவதற்குப் பதிலாக, உள்நாட்டில் பல சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமெனத் தங்கள் நாட்டின் தற்காலிக அரசை

வற்புறுத்தினர். சோவியத்தின் கருத்துக்கள் இரஷ்ய மக்களி டையே வேகமாகப் பரவியது. எனவே பழைய அரசின் தலைவர் லவோப், சோவியத் கூறிய சீர்திருத்தங்களை நிறைவேற்றுமல் பதவி விலகினர். இவருக்குப் பதிலாகத் தீவிர கருத்துக்களைக் கொண்டிருந்த அலெக்ஸாந்தர் கெரென்ஸ்கி (Alexander Krensky) என்பவர் புதிய அரசாங்கத்தின் தலைவராகப் பதவி யேற்ருர். இவர் புதிய அரசாங்கத்தின் தலைவராகப் பதவியேற்ற தும் இரஷ்யாவில் கம்யூனிஸப் புரட்சி ஏற்பட்டது. இதனுல் உலகப் போரில் ஈடுபட முடியாமல் இரஷ்யா உள்நாட்டுப் பிரச்சினைகளைச் சமாளிக்க முயற்சி செய்தது. எனவே முதலில் இரஷ்யாவில் கம்யூனிஸப் புரட்சி ஏற்பட்டதைப் பார்த்து விட்டு, உலகப்போரின் போக்கினைப் பின்னர்க் கவனிப்போம்.

இரஷ்யாவில் கம்யூனிஸப் புரட்சி (1917 நவம்பர்)

புதிய இரஷ்ய அரசாங்கத்தின் தலைவராகத் தீவிரவாதியான அலெக்ஸாந்தர் கெரன்ஸ்கி பதவி யேற்றதால் அரசைக் குறை கூறுபவர்கள் தங்கள் குறைகூறும் பழக்கத்தை நிறுத்தவில்லை. தீவிர சோஷியலிஸ்டுகளும், தீவிர போல்ஷிவிக்குகளும் அரசாங் கத்தைத் தொடர்ந்து குறைகூறி வந்தனர். இத்தீவிர வாதிகளை உண்மையில் தலைமைதாங்கி நடத்திச் சென்றவர்கள் லெனின், டிராட்ஸ்கி என்பவர்களாவர். இவர்களில் முதலாமவர் ஸ்விட் சர்லாந்தில் தலைமறைவாக இருந்து தற்காலிக அரசு நியமிக்கப் பட்டவுடன் நாடு திரும்பியவராவார்; இரண்டாமவர் இதேபோல அமெரிக்காவிலிருந்து திரும்பியவர். இவர்கள் புரட்சிக் கருத்துக் களை இரஷ்ய மக்களிடையே வேகமாகப் பரப்பினர். புரட்சிக் காரர்கள் முதலாளித்துவத்துடனும் செல்வந்தர்களுடனும் சமாதானம் செய்து கொள்ளக்கூடாது என்றும், புரட்சியின் மூலமாகப் பாட்டாளிகளின் சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்த வேண்டு மென்றும், இத்தகைய சர்வாதிகார ஆட்சியைப் போல் ஷிவிக்குகள் மட்டுமே ஏற்படுத்த முடியுமெனவும் கூறிவந்தனர். அத்துடன் இவர்கள் வெளிநாட்டுடன் இரஷ்யா நடத்தும் போரை நிறுத்திஞல்தான் உள்நாட்டில் சீர்திருத்தங்களை ஏற் படுத்த முடியுமெனத் திட்டவட்டமாகக் கூறினர். லெனினும், டிராட்ஸ்கியும் பெட்ரோகிராடில் இருந்த சோவியத்திலும், மற்ற பகுதிகளில் இருந்த சோவியத்துகளிலும் அதிக செல் வாக்குப் பெற்றனர். இந்நிலையில் தொழிற்சாலைகளில் பணியாற் றிய தொழிலாளர்கள் பலர் போல்ஷிவிக்குகளின் கொள்கை களை ஆதரிக்கத் தொடங்கினர். இவர்களைத் தொடர்ந்து போர் முகாம்களில் இருந்த போர்வீரர்கள் பலரும் கம்யூனிஸப் பொரு

ளாதாரக் கொள்கைகளால் கவரப்பட்டனர். இவர்கள் தங்களைப் போர் முகாம்களினின்றும் அழைத்துக் கொள்ளும் எந்த ஒரு இரஷ்ய அரசுக்கும் ஆதரவு கொடுக்கத் தயாராக இருப்பதாக அறிவித்தனர். இரஷ்யப் போர்வீரர்கள் சிலரின் இத்தகைய பிரச்சாரங்களை ஜெர்மனிய அரசு தனக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டு, இவற்றைக் கிழக்குப் பகுதிகளில் அறிவித்தால் மேலும் பல இரஷ்யப் போர்வீரர்கள் தங்கள் நாட்டிற்குத் திரும்பிச் செல்ல விரும்புவர் எனக் கருதி அவ்வாறே செய்தது.

இந் நிலையில் புதிய அரசின் தலைவரான கெரன்ஸ்கி நாடுகளைச் சேர்த்துக் கொள்ளாமலும், நஷ்டஈடு கொடுக்காமலும் சமாதானம் செய்து கொள்ளுமாறு நேசநாடுகளைக் கேட்டுக் கொண்டார். அத்துடன் இவர் போல்ஷிவிக்குகளையும், ஜெர்மன் பிரச்சாரகர்களையும் தடை செய்து இரஷ்ய இராணுவத்தினரிடையே அமைதியை ஏற்படுத்துவதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டார். தன்னுடைய முயற்சிகள் தோல்வியடையவே கெரன்ஸ்கி 1917 ஜுலையில் ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய நாடுகளுக் கெதிராக ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதனால் இவரது கொள்கைகளை விரும்பாத சோவியத்திலிருந்த போர்வீரர்கள் இராணுவத்தில் கலகத்தை ஏற்படுத்தினர். இதனல் ஆஸ்திரியர்கள் கலீஷியா முழுவதையும் கைப்பற்றினர். ஜெர்மனியர்கள் ரிகா என்ற பகுதியைக் கைப்பற்றி எஸ்தோனியாவிற்குள் (Estonia) நுழைந்தனர். இந் நிலையில் கெரன்ஸ்கி வலதுசாரிகளின் உதவியை நாடி இராணுவ சர்வாதிகாரத்தை ஏற்படுத்தத் தான் தயாராக இருப்பதாக அறிவித்தார். இவருக்கும் இராணுவ அதிகாரிகளுக்குமிடையே யார் சர்வாதிகாரியாக இருப்பது என்பதில் உடன்பாடு ஏற்படாததால், கெரன்ஸ்கி இடதுசாரிகளின் உதவியை நாடி இரஷ்யாவில் சீர்திருத்தங்களை ஏற்படுத்தத் தான் தயாராக இருப்பதாக அறிவித்தார்.

கெரென்ஸ்கி வலிமையற்றவராக இருந்தாலும், செயல் வீராக இருந்தார். இவர் போல்ஷிவிக்குகளின் கிளர்ச்சிகளுக்கு அஞ்சாமல் நடவடிக்கைகளை மேற்கொண்டார். எல்லாவற்றிற்கும் மேலாகப் போரிட விரும்பாத போர்வீரர்களைப் போரிட வைத்தார். இருப்பினும் இவரை விரும்பாத தீவிரவாதிகள் இவரது அரசுக்கு எதிராக 1917 நவம்பரில் இரஷ்யாவில் இரண்டாவது புரட்சியை நடத்தினர். இதனல் கெரென்ஸ்கியினுடைய தற்காலிக அரசாங்கம் இரஷ்யாவில் நீக்கப்பட்டு லெனின் தலைமையில் ஒரு கம்யூனிஸ அரசு அமைக்கப்பட்டது.

லெனின்

விலாடிமிர் உலியானோவ் (Vladimir Ulyanov) என்ற போல்ஷிவிக் தலைவர் லெனின் என்ற பெயருடன் இரஷ்யாவில் கம்யூனிஸ அரசின் தலைவரானார். இவர் மத்தியதரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்; கஸான் பல்கலைக் கழகத்தில் சட்டம்பயின்ற பின்னர் கார்ல் மார்க்ஸின் சீடரானார். 1894 முதல் இவர் மார்க்ஸிஸக் கருத்துக்களை இரஷ்யாவில் பரப்பி வந்தார். இதற்காக இவர் கைது செய்யப்படவே சில காலம் சைபீரியாவில் தலைமறைவாக இருந்தார். இச்சமயத்தில் சோஷியலிஸ வாதிகளுடன் இவர் இரகசியத் தொடர்பு கொண்டிருந்தார்; பிறகு ஸ்விட்சர்லாந்தில் தலைமறைவாக இருந்த பின்னர், 1917 ஏப்ரலில் இரஷ்யாவிற்குத் திரும்பி, 1917 நவம்பரில் இரண்டாவது இரஷ்யப் புரட்சியைச் செய்து, கம்யூனிஸ அரசை அமைத்து அதன் தலைவரானார். இவரது முக்கிய தளபதியாக விளங்கியவர் டிராட்ஸ்கி. இவரது நெருங்கிய நண்பராக விளங்கியவர் ஸ்டாலின். இவ்விருவரின் உதவியுடன் லெனின் தொழிலாளர்களின் சர்வாதிகார அரசை இரஷ்யாவில் பிரகடனப் படுத்தினார்.

இவ்வரசில் தொழிலாளர்களுக்காகத் தனியார் தொழிற்சாலைகளை அரசுடைமையாக்கி, எல்லாத் தொழிற்சாலைகளையும் அரசாங்கமே நடத்தும் என்று அறிவித்தார்; விவசாயிகளுக்காக எல்லா நிலங்களையும் அரசுடைமையாக்கி அவற்றை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளித்தார்; போர் வீரர்களைத் திருப்திப்படுத்த மத்தியப் பேரரசுகளுடன் பிரெஸ்ட் - லிட்டோவ்ஸ்க் என்ற உடன்படிக்கையை 1918 மார்ச்சில் செய்து கொண்டு உலகப் போரிலிருந்து இரஷ்யாவை விலக்கிக் கொண்டார்.

லெனின் இரஷ்யாவில் கம்யூனிஸக் கோட்பாடுகளை மிக விரைவாகப் பிரச்சாரம் செய்தார். நாளடைவில் லெனினுடைய கருத்துக்களுக்கு எதிர்ப்புக்கள் தோன்றின. லெனினுடைய எதிர்ப்பாளர்கள் அரசியலமைப்புச் சபையில் அதிகமாக இருந்தனர். எனவே லெனினுடைய ஆணையின் பேரில் இச்சபையைப் போர்வீரர்கள் கலைத்து விட்டு லெனின் எதிர்ப்பாளர்களை நடுங்க வைத்தனர்.

இந்நிலையில் கம்யூனிஸ அரசு 1918 ஜனவரியில் ஓர் ஆணையைப் பிறப்பித்து, திருச்சபைகளைக் கலைத்தது. 1918 ஜூலையில் பழைய ஆட்சியின் சின்னங்களாகச் சிறையிலிருந்த இரண்டாம் நிக்கோலஸை, அவரது மனைவி, குழந்தைகளுடன்

சோவியத்துகள் படுகொலை செய்தனர். இதன் பின்னர் லெனின் கம்யூனிஸ சர்வாதிகாரியாக 1924 வரை இரஷ்யாவில் ஆட்சிபுரிந்தார்.

லெனின் இரஷ்யாவில் கம்யூனிஸ அரசை அமைத்ததும், தனது போர்வீரர்களைத் திருப்திப் படுத்துவதற்காக 1918 மார்ச்சில் மத்தியப் பேரரசுகளுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். இது பிரெஸ்ட்-லிடோவ்ஸ்க் உடன்படிக்கை என வழங்கப்படுகிறது. இவ்வுடன்படிக்கையை இரஷ்யாவும், ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி, பல்கேரியா, உதுமானியப் பேரரசு ஆகிய நாடுகளும் செய்து கொண்டன. இதன்படி போலந்து, லிதுவேனியா, கவுர்லாந்தின் லாட்விய மாநிலங்கள் ஆகியவற்றை இரஷ்யா ஜெர்மனிக்கு விட்டுக்கொடுத்தது; பெஸ்ஸரேபியாவை ருமேனியாவிடம் கொடுப்பதற்காக மத்தியப் பேரரசுகளிடம் ஒப்படைத்தது; காகஸஸ்க்குத் தெற்கேயிருந்த ஆர்மேனிய மாவட்டங்களை உதுமானியப் பேரரசுக்கு விட்டுக் கொடுத்தது; பின்லாந்து, எஸ்தோனியா, லிதுவேனியாவின் லாட்விய மாநிலங்கள், உக்ரெய்ன் ஆகிய பகுதிகள் இரஷ்யாவிலிருந்து பிரிக்கப்பட்டுச் சுதந்திரநாடுகளாக்கப் பட்டன.

இரஷ்யா மத்தியப்பேரரசுகளுடன் சமாதானம் செய்து கொண்டு உலகப்போரிலிருந்து விலகியதை யடுத்து, ருமேனியா மத்தியப் பேரரசுகளுடன் சமாதானம் செய்து கொள்ள விரும்பியது. இதனுல் புக்காரெஸ்ட் என்ற இடத்தில் 1918 மார்ச்சில் ருமேனியா மத்தியப் பேரரசுகளுடன் ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டது. இதன்படி டோப்ருஜா என்ற பகுதியைப் பல்கேரியாவிற்கும், ஹங்கேரியப் பகுதிக்கு அருகிலிருந்த சில மலைப்பாதைகளை ஹாப்ஸ்பர்க் பேரரசுக்கும் ருமேனியா கொடுத்தது. ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்குத் தான் உதவுவதாகவும் ருமேனியா வாக்களித்தது. இதனுல் பெஸ்ஸரேபியா ருமேனியாவிற்குக் கொடுக்கப்பட்டது.

இரஷ்யா, ருமேனியா ஆகிய நாடுகள் மத்தியப் பேரரசுகளுடன் சமாதனம் செய்துகொண்டதால், ஜெர்மனியின் வலிமை, மத்திய ஐரோப்பாவிலும், கிழக்கு ஐரோப்பாவிலும் மேலோங்கியது. இரஷ்யாவிடமிருந்து ஜெர்மனிக்குக் கிடைத்த கிழக்குப் பகுதிகள் ஜெர்மனியைச் சார்ந்து நிர்வகிக்கப்பட்டதால், ஜெர்மனி இப்பொழுது கிழக்குப் பகுதியில் தனது போர் நடவடிக்கைகளை முடித்துக் கொண்டது. இதன் பின்னர்

ஜெர்மனி தனது முழுபலத்தையும் ஒன்றுதிரட்டி மேற்கில் இத்தாலி, பிரான்சு, பிரிட்டன் ஆகிய நாடுகளின் படைகளை முறியடிக்க முயற்சிகளை மேற்கொண்டது. இதற்கிடையில் ஜெர்மனிய மக்களிடையே காணப்பட்ட வேறுபட்ட கருத்துக்கள் ஜெர்மனிய அரசை அலைக்கழிக்க ஆரம்பித்தன. ஆனால் ஜெர்மனியத் தளபதி ஹிண்டன்பர்க்கின் முயற்சியால் ஜெர்மனிய மக்கள் தங்கள் அரசுக்கு முழு ஒத்துழைப்பையும் கொடுத்து, "முதலில் வெற்றி, பின்னர் சமாதானம்" என்ற கொள்கைகளைப் பின்பற்ற ஆரம்பித்தனர்.

இரஷ்யா போரிலிருந்து விலகியதாலும், எதிரிகளின் நாடுகளில் மக்களிடையே அமைதிக் கருத்துக்கள் வலுவடைய ஆரம்பித்ததாலும், ஆஸ்திரியா-ஹங்கேரியப் படைகள் 1917 அக்டோபரில் இத்தாலியைப் போரினின்றும் விலகச் செய்தன. இப்படைகள் இத்தாலியப் படைகளை காபோரிட்டோ (Caporetto) என்ற இடத்தில் முறியடித்து ஆஸ்திரிய மண்ணிலிருந்து விரைவாக வெளியேறுமாறு கட்டாயப் படுத்தின. இதற்கிடையில் ஆஸ்திரியப் படைகளுக்குத் தேவையான பொருள்கள் சரியாகக் கிடைக்காமல் போகவே, பிரான்சு, பிரிட்டன் ஆகிய நாடுகள் இத்தாலியப் படைகளுக்குத் தக்க வலுவூட்டி மீண்டும் போரிடுமாறு செய்தன.

மேற்குப் பகுதியில் ஜெர்மனியின் பெருமுயற்சி

1917—1918 ஆம் ஆண்டின் குளிர்காலத்தில் ஜெர்மனியத் தளபதி லூடென்டோர்ஃப், மிகப்பெரிய அளவில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு, மேற்குப் பகுதியில் நேசநாடுகளின் படையைத் தோற்கடிக்கப் பாடுபட்டார். மேலும் பல புதிய ஜெர்மனியப் படைகள் மேற்குப் பகுதிக்கு அனுப்பப்பட்டன. தன்வசமிருந்த இயந்திரத் துப்பாக்கிகள், தோட்டாக்கள், குண்டுகள், பீரங்கிகள் ஆகிய அனைத்தையும் ஜெர்மனி இப்பகுதிக்கு அனுப்பியது. உலகம் இது வரை கண்டிராத அளவு பெரும்போர் ஒன்றை மேற்குப் பகுதியில் நடத்த ஜெர்மனி முடிவு செய்தது.

ஜெர்மனியர்கள் 1918 மார்ச்சில் பிரிட்டிஷ்காரர்களின் புதைகுழிகளை அழித்துவிட்டு முன்னேறி ஆமியன்ஸ் (Amiens) வரை சென்றனர். பின்னர் ஏப்ரல் மாதத்தில் பிரிட்டிஷ்காரர்களின் மேற்கு லில்லியைத் (Lille) தாக்கி 15 மைல்கள் உள்ளே சென்றனர். இதனையடுத்து மே மாதத்தில் பிரஞ்சுக்

காரர்களை ஆஸ்னி நகரத்தில் தாக்கி மேலும் முன்னேறி சாட்டியு தியெர்ரி (Chateau Thierry) வரை சென்றனர். (இப்பகுதி பாரிஸ் நகரத்திலிருந்து 40 மைல் தொலைவி லுள்ளது) ஜெர்மனியர்களின் இத்தகைய வீராவேசத் தாக்குதல் களால் ஒரு குறிப்பிடத்தக்க நிலப்பகுதி ஜெர்மனியர்களின் வச மாகியது. அத்துடன் மிகப் பெருமளவில் போர்க் கைதிகளையும் ஜெர்மனி சிறைப்படுத்தியது. இதனுல் 1914ல் தான் இருந்த மார்னி வரை ஜெர்மனி முன்னேறியது. ஆனுல் இந்நிலையை அடைவதற்கு ஜெர்மனி ஏராளமான தொகையைச் செலவு செய்து பல்லாயிரக்கணக்கான போர் வீரர்களின் உயிர்களையும் தியாகம் செய்ய வேண்டி யிருந்தது. அன்றியும் நாட்டின் பெரும்பகுதி விளைநிலங்கள் தரிசு நிலங்களாயின.

ஜெர்மனியர்கள் பிரஞ்சுப் படைகளை விரட்டியடித்த பொழுது, ஆஸ்திரியர்கள் 1918 ஜூனில் இத்தாலியப் படைகளை பியாவே (Piave) என்ற பகுதியில் தாக்கினர். இப்பகுதியில் இவர்கள் இத்தாலியப் படைகளைப் பல இடங்களில் விரட்டி யடித்தனர். ஒரு பகுதியில் ஐந்து மைல் தூரம் இத்தாலிய எல்லைக்குள் நுழைந்தனர். ஆனுல் பிரான்சு, பிரிட்டன் ஆகிய நாடுகளின் உதவியுடன் இத்தாலியப் படைகள் ஆஸ்திரியப் படைகளைத் திருப்பித் தாக்கவே, ஆஸ்திரியப் படைகளுக்குப் பெருத்த சேதம் ஏற்பட்டது. எனவே ஆஸ்திரியப் படைகள் பின்வாங்க ஆரம்பித்தன. பியாவே என்ற இடத்தில் ஆஸ்தி ரியப் படைகள் தோல்வி யடைந்து பின்வாங்க ஆரம்பித்தது உலகப் போரில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அது முதற்கொண்டு மத்தியப் பேரரசுகளின் பக்கமிருந்த வெற்றித் தேவதை நேசநாடுகளின் பக்கம் விரைந்து செல்ல ஆரம்பித் தாள். இது முதற்கொண்டு நேசநாடுகள் இறுதி வெற்றிகளைப் பெற ஆரம்பித்தன. எனவே இனி நேசநாடுகளின் வெற்றியைப் பற்றிக் கவனிப்போம்.

6. நேச நாடுகளின் வெற்றி

இரஷ்யா ஜெர்மனியுடன் உடன்படிக்கை செய்து கொண்டு உலகப்போரிலிருந்து விலகிய பின்னர், இரஷ்யாவைப் பின் பற்றி ருமேனியா மத்தியப் பேரரசுகளுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டு போரிலிருந்து விலகியது. இத்தாலியப் படைகள் பியாவே வரை துரத்தியடிக்கப்பட்டன. பிரஞ்சுப் படைகள் மார்னி வரை பின்னடைந்தன. இருப்பினும் மத்தியப்

பேரரசுப் படைகளால் உலகப் போரில் வெற்றியடைய முடிய வில்லை. நேசநாடுகள் இதற்கு முன்னர் இருந்ததை விட மிக அதிக வலிமையுடன் தங்கள் பகைவர்களைத் திருப்பித் தாக்க ஆரம்பித்தன. நேச நாடுகளின் மக்கள் ஜெர்மனியுடன் சமாதானம் செய்து கொள்ள வேண்டும் என்ற கருத்தில் சிறிது மாற்றத்தை ஏற்படுத்தி, உலகப் போரில் வெற்றியடைந்த பின்னரே சமாதானம் செய்து கொள்ள வேண்டுமென விரும் பினர். எல்லாவற்றிற்கும் மேலாக ஜெர்மனி கடற் போரில் நீர் மூழ்கிக் கப்பல்களைப் பயன்படுத்தியது எதிர்பார்த்த பலன் களைக் கொடுக்கவில்லை. நேசநாடுகள் ஜெர்மனியின் நீர் மூழ்கிக் கப்பல்களைச் சமாளிக்கத் தொடங்கின.

இதற்கு முன்னர் நேசநாடுகளின் அமைச்சரவைகளில் இருந்த அமைச்சர்கள், தங்கள் நாடுகளின் இராணுவ முயற்சி களுக்கும், நடவடிக்கைகளுக்கும் அடிக்கடி தடையாக இருந் தனர். அத்துடன் இந்நாடுகளில் இருந்த தளபதிகள் தங்க ளுடன் சேர்ந்து மத்தியப் பேரரசுகளின் படைகளுடன் போரிட, மற்ற நாட்டுத் தளபதிகளுடனும், படைகளுடனும் முழுமனத்துடன் ஒத்துழைக்கவில்லை. மேலும் இந்நேச நாடு களின் தளபதிகளிடையே அடிக்கடி கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. தங்கள் படைகளிடையே நிலவிய கருத்து வேறு பாடுகளை நீக்கி, அவற்றை ஒன்றுபடுத்தி, பகைவர்களை முறி யடிக்க நேசநாடுகள் விரும்பின. எனவே 1911 டிசம்பரில் பிரிட்டிஷ் அரசாங்கத்தில் மாற்றம் ஏற்பட்டு டேவிட் லாயிட் ஜார்ஜ் என்பவர் பிரிட்டிஷ் பிரதமரானார். கேபோரிட்டோ என்ற இடத்தில் இத்தாலியப் படைகள் மத்தியப் பேரரசுகளின் படைக ளால் 1917 நவம்பரில் முறியடிக்கப் பட்டமையால், இத்தாலிய அமைச்சரவையில் மாற்றம் ஏற்பட்டு, விட்டோரியோ ஆர் லாண்டோ (Vittorio Orlando) என்பவர் இத்தாலியின் பிரதம ராகப் பதவி ஏற்றார். இவர் ஏறத்தாழ ஒரு சர்வாதிகாரி போலவே செயல்பட்டார். இதே சமயத்தில் பிரான்சு நாட்டின் அரசாங் கத்திலும் மாற்றம் ஏற்பட்டு ஜார்ஜ் கிளெமென்ஸோ (George Clemenceau) என்பவர் பிரான்சின் முதலமைச்சராகப் பதவி ஏற்றார். இவர் அரசியலில் அதிக ஈடுபாடு கொண்ட தீவிர இடதுசாரியாவார். இவர் தனது கொள்கைகளில் தீவிர நம்பிக்கை கொண்டிருந்தார். எல்லாவற்றிற்கும் மேலாக ஐக்கிய அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவராக இருந்த உட்ரோ வில்சன் என்பவர் மிகச் சிறந்த அரசியல்வாதியாக இருந்ததுடன், தக்க முடிவுகளைத் தக்க சமயத்தில் மேற் கொள்ளும் திறமையும், தனது பேச்சாற்றலின் காரணமாகத்

தனது மக்களின் ஆதரவைப் பெறும் திறமையும் பெற்றிருந்தார்.

இத்தகைய திறமையான எல்லா நாட்டு அரசியல் தலைவர்களின் பெரு முயற்சியின் காரணமாக "நேசநாட்டுப் படைகளின் மாநாடு" ஒன்று 1917 நவம்பரில் கூட்டப்பட்டது. பிரான்சு, பிரிட்டன், இத்தாலி, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளின் இராணுவ வீரர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி அனைத்து நாடுகளின் வலிமையையும் ஒன்றுபடுத்திப் போர் நடவடிக்கைகளை மேற்கொள்வதைப் பற்றி இம்மாநாடு விவாதித்தது. மேற்குப் பகுதியில் ஜெர்மனியப் படைகள் நேச நாடுகளின் படையை மிகக் கோபமாகத் தாக்கிச் சிதற அடித்த பொழுது, 1918 மார்ச்சில் நேச நாட்டுப் படைகளின் தளபதிகள் ஒன்றுகூடி, பிரஞ்சுப்பகுதியில் ஒரே தளபதியின் கீழ் போரிடுவது என முடிவு செய்தனர். இப்படைக்குத் தலைமை தாங்கும் பொறுப்பை மார்ஷல் பெர்டினண்டு ஃபோச் என்பவரிடம் ஒப்படைத்தனர். இவர் உருவத்தில் குள்ளமாகவும், நரைத்த முடியினராகவும், 65 வயது நிரம்பிய முதியவராகவும் இருந்தார். ஆயினும் அச்சமயத்தில் போர் நுணுக்கங்களை அறிந்த இராணுவ அறிஞர்களிலேயே மிகச்சிறந்தவராகக் கருதப்பட்டார். ஃபோச்சுக்கு (Foch) உதவியாக பிரஞ்சுப் படைகளை மார்ஷல் பெடெய்ன் என்பவரின் தலைமையின் கீழும், பிரிட்டிஷ் படைகளை சர் டௌலஸ்கிளஸ் ஹெய்க் என்பவரின் தலைமையின் கீழும் போர் புரிய ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்வாறு உலகப் போர் தொடங்கிய நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் நேசநாடுகளின் படைகள் இறுதியாக ஒன்றுபட்டு ஒரே தலைமையின் கீழ் செயல்படத் தொடங்கின.

வில்சனின் பதினான்கு அம்சக் கோட்பாடுகள்

நேச நாடுகளின் மக்களிடையே, உலகப்போர் நடந்த சமயத்தில் கட்டுப்பாடும், ஒழுக்கமும், ஒத்துழைப்பும் அதிகரித்தது என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆனால் அதே சமயத்தில், மத்தியப் பேரரசுகளின் மக்களிடையே கட்டுப்பாடும், ஒத்துழைப்பும் சீர்குலையத் தொடங்கின. இந்நிலையில் ஐக்கிய அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவராக இருந்த உட்ரோ வில்சன் நேச நாடுகளின் போரை ஆதரித்துத் தான் நடத்திய பிரச்சாரங்களின் பொழுது 1918 ஜனவரியில் பதினான்கு அம்சங்கள் கொண்ட தனது கருத்தை வெளியிட்டார். இவை

வில்சனின் பதினான்கு அம்சக் கோட்பாடுகள் என்று சிறப்பாகக் கூறப்படுகின்றன. அவையாவன:

1. எல்லா நாடுகளும் வெளிப்படையாகத் தங்கள் அமைதி உடன்படிக்கைகளை வெளியிடுவதுடன், இனி எதிர்காலத்தில் எந்தவிதமான இரகசிய உடன்படிக்கைகளையும் செய்துகொள்ளக் கூடாது; 2. அந்தந்த நாடுகளின் எல்லைக்கு வெளியே உள்ள எல்லாக் கடல்களிலும் எல்லா நாட்டுக் கப்பல்களும், அமைதிக் காலத்தைப் போலவே, போர்க் காலங்களிலும், பன்னாட்டு உடன்பாடுகளின் மூலம் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டாலன்றி, தங்குதடையின்றிச் சென்றுவர அனுமதிக்கப்பட வேண்டும்; 3.பன்னாட்டு வணிகத்தின்மீது உள்ள எல்லாக் கட்டுப்பாடுகளையும் கூடியவரை நீக்கிவிட வேண்டும்; 4. தேசிய போர்க் கருவிகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும்; 5. குடியேற்ற நாடுகளின்மீது ஆதிக்கம் செலுத்துவதில் ஏற்படும் தகராறுகளைப் பாரபட்சமின்றி, அப்பகுதியில் வாழும் மக்களுக்குச் சமஅந்தஸ்து கொடுத்து, பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும்; 6. தன்னுடைய பகுதிகளின் முன்னேற்றத்திற்கான எல்லா நடவடிக்கைகளையும் இரஷ்யா மேற்கொள்ள வாய்ப்பளிக்கும் வகையில், இரஷ்யப் பகுதிகளிலிருந்து எல்லா அரசுகளும் விலகிக் கொள்ள வேண்டும்; 7. பல்கேரியப் பகுதிகளிலிருந்து எல்லா நாட்டின் படைகளும் வெளியேறுவதுடன், அவற்றைப் பல்கேரியாவிற்கே திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்; 8. பிரஞ்சுப் பகுதியிலிருந்து மற்ற நாட்டுப் படைகள் வெளியேறுவதுடன், பிரான்சின் பகுதிகள் முழுவதையும் அந்நாட்டிற்கே திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்; 1871-ல் ஜெர்மனி கைப்பற்றிய அல்சேஸ், லொரைன் ஆகிய பகுதிகளை பிரான்சிற்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்; 9. தேசிய இனத்தை அடிப்படையாகக் கொண்டு சிக்கல்கள் இல்லாமல் இத்தாலிய எல்லைகளை மாற்றியமைக்க வேண்டும்; 10. ஆஸ்திரியா-ஹங்கேரி ஆகிய நாடுகளில் வாழும் மக்கள் தனித்தனியாகச் சுயாட்சியுடன் விளங்க ஏற்பாடுகள் செய்யவேண்டும்; 11. செர்பியா, மான்டநெக்ரோ, ருமேனியா ஆகிய நாடுகளின் பகுதிகளிலிருந்து அந்நியப் படைகள் வெளியேற வேண்டியதுடன், இப்பகுதிகளை அந்தந்தப் பகுதி மக்களுக்கே வழங்க வேண்டும்; ஒற்றுமை, தேசிய இனம் ஆகிய வரலாற்றுப் பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்டு பால்கன் நாடு

களிடையே நல்லுறவுகள் வளர்ச்சியடையப் பாடுபட வேண்டும்; 12. உதுமானியப் பேரரசின் ஒரு பகுதியான துருக்கிக்கு இறைமையை (Sovereignty) வழங்குவதுடன், உதுமானியப் பேரரசின் பிற பகுதிகளுக்கு இப்பேரரசின் பகுதியிலுள்ள ஜலசந்திகளை எவ்விதக் கட்டுப்பாடும் இன்றிப் பயன்படுத்தும் உரிமையை அளிக்க வேண்டும்; 13. போலிஷ் மொழியைப் பேசும் போலந்து மக்கள் வாழ்கின்ற எல்லாப் பகுதிகளையும் ஒன்று சேர்த்து, துறைமுக வசதியுடன் சுதந்திர அந்தஸ்துடைய போலந்து நாட்டை ஏற்படுத்த வேண்டும்; 14. எவ்வளவு பெரிய நாடாக அல்லது சிறிய நாடாக இருந்தாலும் அந்நாட்டின் அரசியல் சுதந்திரம், தேசிய ஒற்றுமை ஆகியவற்றின் பாதுகாப்பிற்கு உறுதியளிக்கும் வகையில் சில அடிப்படை அமைப்புக்களைக் கொண்ட பன்னாடுகளின் கூட்டு நிறுவனம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

இப்பதினான்கு கோட்பாடுகளும் பொதுவாகத் தெளிவில்லாமலும், முழுவதும் கடைப்பிடிப்பதற்கு இயலாதனவாகவும் இருந்தாலும் எல்லா நாடுகளும் இதனை ஏற்றுக்கொண்டு அங்கீகரித்தன. அத்துடன் இப்பதினான்கு கோட்பாடுகளும், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, இத்தாலி ஆகிய நாட்டு மக்களிடையே மட்டுமில்லாமல் ஆஸ்திரியமக்களிடையேயும், உதுமானியப் பேரரசின் பல பகுதிகளில் வாழ்ந்த வெவ்வேறு இனத்தைச் சேர்ந்த மக்களிடையேயும் பல நம்பிக்கைகளை ஏற்படுத்தின. எல்லாவற்றிற்கும் மேலாக இக் கோட்பாடுகள் ஜெர்மனிய மக்களிடையேயும் மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தின. எனவே ஜெர்மனியர்கள் தங்கள் நாடு ஜனநாயக முறையில் இயங்க வேண்டுமாயின் உலகப்போர் நிறுத்தப்பட்டு வில்சனின் பதினான்கு அம்சக் கோட்பாடுகளும் நிறைவேற்றப்பட வேண்டுமென்று எண்ணினர்.

கடற் போரில் ஜெர்மனிய நீர்மூழ்கிக் கப்பல்கள் முறியடிக்கப்படுதல்

ஜெர்மனியத் தளபதிகளான ஹிண்டன்பர்க்கும், லூடென்டோர்ஃப்பும் எதிர்பார்த்தது போல, ஜெர்மனியின் நீர்மூழ்கிக் கப்பல்கள் நேசநாடுகளின் கடற்படைகளை அவ்வளவு எளிதாக வெற்றி கொள்ளவில்லை. பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா ஆகிய இரு நாடுகளின் கப்பற்படைகளும் ஒன்று சேர்ந்ததின் காரணமாகவும், இப்படைகளில் சில முக்கிய கப்பல்கள் எல்லாக் கடல்களிலும் எச்சரிக்கையாக உலாவி, எதிரிகளின் நடவடிக்கைகளையும், நிலைகளையும் நன்கறிந்து தங்கள் நாடு

களின் மற்ற போர்க்கப்பல்களுக்குத் தக்க சமயத்தில் அறிவித்ததின் காரணமாகவும், ஒரு சில போர்க்கப்பல்கள் தங்கள் நாடுகளின் கடற்படை பகைவர்களின் தாக்குதல்களுக்கு உள்ளாகாமல் பாதுகாப்பாக இருப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டதாலும் ஜெர்மனியின் நீர்மூழ்கிக் கப்பல்கள் நேசநாடுகளின் கடற்படையை எதிர்பார்த்தபடி தாக்கி மூழ்கடிக்க முடியாமல் போய்விட்டது. மேலும் ஜெர்மனியின் நீர்மூழ்கிக் கப்பல்களின் வலிமையும் திறமையும், படிப்படியாகக் குறைய ஆரம்பித்தன. இதன் காரணமாக 1917 ஆம் ஆண்டின் முதற் பாதியில் மொத்தத்தில் 40 இலட்சம் டன்கள் எடையுள்ள கடற்படைகளை மூழ்கடித்த ஜெர்மனி, 1917 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் 25 இலட்சம் டன்கள் எடையுள்ள கப்பற்படைகளையும், 1918 ஆம் ஆண்டின் முதற்பகுதியில் மொத்தத்தில் 20 இலட்சத்துக்கும் குறைவான எடையுள்ள கடற்படைகளையுமே மூழ்கடித்தது. இதற்கிடையில் கப்பல்கட்டும் தொழிலில் அதிகம் கவனம் செலுத்தப்பட்டதால் 1918 ஆம் ஆண்டில் மிக அதிக அளவில் வியாபாரக் கப்பல்கள் கட்டப்பட்டன. பழைய கப்பல்கள் அழிக்கப்பட்டன. எனவே ஜெர்மனி இங்கிலாந்தை பட்டினி போடவேண்டும் என்ற முயற்சியில் தோல்வியடைந்ததுடன், நேசநாடுகளிடையே கடல்வழியாக ஏற்பட்ட போக்குவரத்துக்களைத் தடை செய்யும் முயற்சிகளிலும் தோல்வியடைந்தது. இது ஒரு புறமிருக்க, ஐக்கிய அமெரிக்க நாட்டின் முழு ஒத்துழைப்புடன், பிரிட்டன் ஜெர்மனியத் துறைமுகங்களை முற்றுகையிடுவதை மேலும் தீவிரப் படுத்தியது. இதனால் ஜெர்மனி சிறிதும் எதிர்பாராத வகையில் பசிப்பிணியால் வாடியது. இந்நிலையில் ஐக்கிய அமெரிக்கா தன்னுடைய நாட்டிலிருந்து மிக அதிக அளவில் போர்வீரர்களையும், போர்க் கருவிகளையும் நேசநாடுகளுக்கு அனுப்பி உதவியதுடன், மற்ற நாடுகளையும் தூண்டி, ஜெர்மனிக்கு எதிராக, நேசநாடுகளுடன் உலகப் போரில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டது. ஐக்கிய அமெரிக்காவின் வேண்டுகோள்களுக்குச் செவி சாய்த்து 1917 அக்டோபரில் பிரேசிலும், 1918 ஏப்ரல், மே ஆகிய மாதங்களில் முறையே குவாடிமாலா, நிகாரகுவா ஆகிய நாடுகளும், ஜூலை மாதத்தில் ஹெய்டி, ஹோண்டுராஸ் ஆகிய நாடுகளும் ஜெர்மனிக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்து, உலகப்போரில் கலந்து கொண்டன. இதனைத் தொடர்ந்து 1918 ஆம் ஆண்டின் கோடைக்காலத்தில், 1917ல் ஜெர்மனியுடன் தங்கள் உறவுகளை முறித்துக் கொண்ட பொலீவியா, ஈகுவடார், பெரு, யுருகுவே, ஆகிய நாடுகளைச் சேர்த்து 25 சுதந்திர நாடுகளும், கனடா, ஆஸ்திரேலியா,

நியூஸிலாந்து, தென்னுப்பிரிக்கா, இந்தியா ஆகிய ஐந்து டொமினியின் அந்தஸ்து பெற்ற நாடுகளும், பெரும்பாலான தீவு நாடுகளும் ஜெர்மனிக்கும் அதன் நட்பு நாடுகளுக்கும் எதிராக உலகப் போரில் கலந்து கொண்டன. எனவே ஜெர்மனிய நீர்மூழ்கிக் கப்பல்களின் முயற்சிகள் படிப்படியாகத் தோல்வியடைந்தன. அத்துடன் மத்தியப் பேரரசுகளின் படைகள் ஐரோப்பாவில் அடைந்து கொண்டு வந்த வெற்றிகள் 1918 ஜூன் மாதம் முதல் முடியத்தொடங்கின. ஹாப்ஸ்பர்க் பேரரசின் படைகள் பியாவே என்ற இடத்தில் இத்தாலியப் படைகளால் திருப்பித் தாக்கப்பட்டு முறியடிக்கப்பட்டன. ஜெர்மனியப் படைகளை சோம்மி (Somme) என்ற இடத்தில் பிரிட்டிஷ் படைகளும், மார்னி என்ற இடத்தில் பிரஞ்சுப் படைகளும் தடுத்து நிறுத்தின. அமெரிக்க நாடுகளிலிருந்து ஆயிரக் கணக்கில் வந்து கொண்டிருந்த போர் வீரர்களும், போர்க் கருவிகளும், பிரஞ்சுப் படைகளுக்குப் புத்துயிரூட்டின.

இந்நிலையில் 1918 ஜூலை மாதத்தில் ஜெர்மனியப் படைகள் பிரஞ்சு முனையில் மார்னி என்ற பகுதியில் ஊடுருவல்களை ஏற்படுத்த முயற்சித்தன. நேசநாடுகளின் படையின் புதிய தளபதியான ஃபோச் (Foch) புதிய அமெரிக்கப் படைகளை பிரஞ்சுப் படைகளுக்கும் பிரிட்டிஷ் படைகளுக்கும் உதவியாக அனுப்பினர். இதனுல் இரண்டாவது முறையாக மார்னி என்ற இடத்தில் நேசநாடுகளின் படைகளுக்கும், மத்தியப் பேரரசுகளின் படைகளுக்கும் போர் ஏற்பட்டது. இப்போர் இரண்டு வாரங்கள் நடைபெற்றது. இப்போரில் ஜெர்மனியப் படைகளின் முன்னேற்றம் தடைசெய்யப்பட்ட தோடல்லாமல், பிரஞ்சுப் படைகள் ஜெர்மனியப் படைகளைத் தன்னுடைய நாட்டிற்கு வடக்கே அமைந்துள்ள ஆஸ்னி நதியின் வடகரை வரை விரட்டிச் சென்றன. இதே இடத்தில் 1914ல் நடைபெற்றதைவிட இப்பொழுது (1918 ல்) நடைபெற்ற போரில் ஜெர்மனியப் படைக்கு அதிக சேதம் ஏற்பட்டது. ஜெர்மனியப் படை 1914 ல் அதிக அளவில் போர்க்கருவிகளையும் பெரிய துப்பாக்கிகளையும் வைத்திருந்ததாலும், ஆஸ்னி நதியின் கரைகளில் மேடான இடத்தில் இருந்து கொண்டு தாழ்வான பகுதிகளிலிருந்த பிரஞ்சுப் படைகளைத் தாக்கியதாலும், ஜெர்மனியப்படைக்கு அதிக சேதம் ஏற்படவில்லை. ஆனுல் இம்முறை (1918-ல்) சூழ்நிலைகள் எந்த வகையிலும் ஜெர்மனிக்குச் சாதகமாக அமையவில்லை. மேலும் ஜெர்மனியப் படையின் சேதங்கள் நிவர்த்தி செய்யப்படாமல் இருந்தன.

இந்நிலையில் நேச நாடுகளின் படை மேலும் மேலும் வலிமை பெற்று வந்தது.

நேச நாடுகளின் படை தன்னுடைய வலிமையின் காரண மாகவும், ஃபோச்சின் சிறந்த ஆலோசனையின் காரணமாகவும் தொடர்ந்து வெற்றியடைந்து வந்தது. இதனால் இப்படையின் வலிமை மேலும் பெருகியதுடன், இப்படையின் போர் வீரர் களும் மிகுந்த உற்சாகத்துடன் போரிட்டனர். அத்துடன் நேச நாடுகளின் படை மார்னி என்ற இடத்தில், ஜெர்மனியப் படைக்கு எதிராக அடைந்த வெற்றியைத் தொடர்ந்து, மேலும் மேலும் ஜெர்மனியப் படையைத் தாக்கியது. இதனால் பிரஞ்சுப் பகுதி முழுவதும் ஜெர்மனிய படை மிகக் கடுமையான தாக்குதல்களுக் குள்ளாகியது. இச்சமயத்தில் பிரான்சு,பிரிட்டன் ஆகிய நாடுகளின் படைகள் காம்ராய், லில்லி ஆகிய பகுதிகளை மீண்டும் கைப்பற்றின. பிரான்சு, அமெரிக்கா ஆகிய நாடு களின் படைகள் வெர்டுனுக்குத் தெற்கே அமைந்துள்ள புனித மைஹீல் (St. Mihiel) என்ற இடத்தினின்றும் ஜெர்மனியப் படையை விரட்டி யடித்தன. இத்துடன் இப்படை மியூஸி நதி (Meuse) தீரத்தின் வடபகுதி முழுவதையும் கைப்பற்றியது. இதனால் 1918 அக்டோபர் இறுதியில் பிரஞ்சுப்பகுதி முழுவதி னின்றும் ஜெர்மனியர்கள் வெறியேறிதுடன் பெரும்பாலான பெல்ஜியப் பகுதிகளிலிருந்தும் வெளியேறுமாறு கட்டாயப் படுத்தப் பட்டனர்.

மத்தியப் பேரரசுகளின் படை மேற்குப் பகுதியில் தோல்வி யடைந்த பொழுது, நேச நாடுகளின் படை மற்ற பகுதிகளிலும் வெற்றியடைந்து கொண்டு வந்தது. முன்னதாகவே எகிப்தைக் கைப்பற்றி முன்னேறத் தொடங்கியிருந்த பிரிட்டிஷ் படைத் தளபதி எட்மன்ட் ஆலென் என்பவரின் தலைமையின் கீழ் 1917 அக்டோபரில் சினெய் (Senai) தீபகற்பத்தில் துருக்கியர்களைத் தோற்கடித்து பாலஸ்தீனத்தில் வெற்றிகரமாக நுழைந்தது. பிரிட்டிஷ் படையின் இம் முன்னேற்றத்திற்கு ஃபெய்சலின் (Feisal) அரேபியப் படைகளும் ஒத்துழைத்தன. இப்பகுதியில் முன்னேறிய பிரிட்டிஷ் படையை ஜெர்மனியத் தளபதியான ஃபால்கென்ஹெயினின் கீழ் இயங்கி வந்த துருக்கியப்படை தைரியமாக எதிர்த்துப் போராடியது. ஆனால் வலிமை மிக்க பிரிட்டிஷ் படையின் முன்னேற்றத்தைத் துருக்கியப் படை களால் தடுத்து நிறுத்த முடியவில்லை. எனவே 1917 நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் முறையே ஜாஃபா (Jaffa), ஜெரு

ஸலம் ஆகிய பகுதிகள் பிரிட்டிஷ் படையின் வசமாயின. இதன் பின்னர் பிரிட்டிஷ் படைகள் அரேபியப் படையின் ஒத்துழைப் புடன் பாலஸ்தீனம் முழுவதையும் கைப்பற்றியது. இதனை யடுத்து இப்படை ஜோபின் முழுவதையும் கைப்பற்றி, சிரியா விற்குள் நுழைந்தது. இப்படை மேலும் முன்னேறி 1918 அக்டோபரில் டமாஸ்கஸ் நகரைக் கைப்பற்றியது. இம்மாதத் தின் இறுதியில் அலெப்போ (Aleppo) முழுவதும் பிரிட்டிஷ் படை வசமாயிற்று. இதனால் பிரிட்டிஷ்காரர்கள் மொஸூல் (Mosul) என்ற இடத்தில் மெஸபடோமியாவில் இருந்த ஆங் கில-இந்தியப் படையுடன் இப்படையைச் சேர்த்து, பிரிட்டிஷ் படையை மேலும் வலுவடையச் செய்தனர்.

இதற்கிடையில் சலோனிகாவில் இருந்த நேச நாடுகளின் படை மேலும் வலுப்படுத்தப்பட்டு தளபதி பிரென்செட்-டி-யெஸ்பெரே (Frenchet d' Esperey) என்பவரின் தலைமையின் கீழ் 1918 செப்டம்பரில் பல்கேரியர்களுக்கு எதிராகப் பால்கன் தீபகற்பத்தின் வடபகுதியில் முன்னேறியது. பல்வேறு பகுதி களிலும் மத்தியப் பேரரசுகளின் படை முறியடிக்கப்பட்டதால் பல்கேரியர்கள் இச்சமயத்தில் ஜெர்மனியப் படையின் உதவியையோ, ஆஸ்திரியப் படையின் உதவியையோ பெற முடியாமல் போய் விட்டது. மேலும் மெஸபடோமியா வில் இப்படை வெகுவாக முறியடிக்கப் பட்டதால், பல்கேரியப் படை வீரர்களிடையே நம்பிக்கையும் நேர்மையும் குறைந்தது. இதனைத் தொடர்ந்து சலோனிகாவிலிருந்து நேச நாடுகளின் படை பல்கேரியப் படைகளைப் பலமாகத் தாக்கியதால் சில குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. இதனால் மாஸி டோனியா, செர்பியா ஆகிய பகுதிகளை இரண்டே வாரத்தில் கைப்பற்றிய நேச நாடுகளின் படை இப்பொழுது பல்கேரியா வைத் தன்னுடைய காலடியின் கீழ்க் கொண்டுவரத் தயாராக இருந்தது.

ஆஸ்திரியா — ஹங்கேரியின் தோல்வி

இவ்வாறு ஒரு புறம் ஜெர்மனியும், மறுபுறம் பல்கேரியாவும் தோல்வியை நோக்கி விரைவாகச் சென்ற பொழுது, இரட்டை முடியாட்சி அரசான ஆஸ்திரியா-ஹங்கேரியாவும் தோல்வியை நோக்கித் தனது நட்பு நாடுகளைப் பின் தொடர்ந்தது. நேச நாடுகளின் படை பால்கன் பகுதிகளில் வெற்றியடைந்ததின் காரணமாகவும், ஜெர்மனியப் படை மேற்கு முகாம்களில் தோல்வியைத் தழுவியதின் காரணமாகவும், ஆஸ்திரியப்

பாராளுமன்றத்திலிருந்த செக், யூகோஸ்லாவ் ஆகிய மொழி களைப் பேசிய மக்களின் பிரதிநிதிகள் தங்கள் மக்களுக்கு எல்லா உரிமைகளும் உண்டு என (1918 அக்டோபர் முதல் நாள்) அறிவித்தனர். இதனைத் தொடர்ந்து அக்டோபர் 18ல் செக்கோஸ்லேவேகியக் குடியரசு விடுதலையடைந்து அந்நாட்டில் தாமஸ் மஸாரிக் (Thomas Masaryk) என்ற நாட்டுப்பற்று மிக்க அறிஞர் ஒருவரின் தலைமையின் கீழ் ஒரு தற்காலிக அரசாங்கம் நிறுவப்பட்டது. செக்கோஸ்லேவேகியக் குடியரசு நிறுவப்பட்டு 12 நாட்களுக்குப் பின்னர் குரோஷிய சட்டப் பேரவை ஹங்கேரியாவுடன் தான் கொண்டிருந்த உறவுகளை முடித்துக் கொண்டு யூகோஸ்லாவ் இனத்தைச் சார்ந்தவர் களின் அமைப்பு ஒன்றைச் செர்பியாவின் தலைமையின் கீழ் ஏற்படுத்த முயற்சி செய்தது. ஆஸ்திரியா - ஹங்கேரியப் படைகள் குரோஷியா, பொஹிமியா ஆகிய இவ்விரு பகுதி களில் ஏற்பட்ட கிளர்ச்சிகளை அடக்க எவ்விதத்திலும் முடிய வில்லை. இந்நிலையில் தளபதி பிரென்செட்டியெஸ்பெரி என்ப வரின் தலைமையில் வெற்றியடைந்து வந்த நேச நாடுகளின் படை ஹங்கேரியைத் தெற்குப் பகுதியிலிருந்து தாக்க ஆரம் பித்தது. ருமேனியர்கள், முன்னர் மத்தியப் பேரரசுகளுடன் செய்து கொண்ட புக்காரெஸ்ட் உடன்படிக்கையை மீறி ஹங் கேரியின் மீது கிழக்குப் பகுதியில் படையெடுத்தனர். இத்தாலி யர்கள், தளபதி தியாஸ் என்பவரின் தலைமையின் கீழ் பியாவே பகுதியிலிருந்த படைகளைக் கலக்கி இஸ்திரியா வரை துரத்திச் சென்றனர்.

எதிரிகளின் தாக்குதல்களுக்குச் சற்றும் அசைந்து கொடுக் காத, ஸ்திரத் தன்மை வாய்ந்த மத்தியப் பேரரசுகளின் வலிமை மிக்க கோட்டை, இப்பொழுது நேசநாடுகளின் தாக்குதலால் தன்னிலை இழக்கத் தொடங்கி, இறுதியில் இடிந்து விழுந்தது. மத்தியப் பேரரசின் படைகள் அலைக்கழிக்கப்பட்டுத் தோற் கடிக்கப்பட்டன. இவற்றின் போர்வீரர்களும் ஊக்கத்தை இழந் தனர். இந்நாடுகளில் வாழ்ந்த மக்கள் நேசநாடுகளுடன் உடன் படிக்கை செய்து கொள்ளத் துடித்துக் கொண்டிருந்தனர். உலகப் போரில் இறுதியாக மத்தியப் பேரரசுகளின் பக்கம் சேர்ந்து கொண்ட பல்கேரியா இப்பொழுது முதலாவதாக மத்தியப் பேரரசுகளிலிருந்து விலகி, நிபந்தனையின்றி 1918 செப் டம்பர் 30–ல் நேசநாடுகளிடம் சரணடைந்தது. ஒரு மாதம் கழித்து உதுமானியப் பேரரசும், இரட்டை முடியாட்சி நாடான ஆஸ்திரியா–ஹங்கேரியும் மத்தியப் பேரரசிலிருந்து பிரிந்து நேச நாடுகளிடம் நிபந்தனையின்றிச் சரணடைந்தன. இந்நிலையில்

ஜெர்மனி மட்டும், முதல் உலகப் போரில் தனித்து விடப் பட்டது. தான் மட்டும் தனித்து நேசநாடுகளுக் கெதிராக உலகப் போரைத் தொடர்ந்து நடத்த இயலாத ஜெர்மனி, எவ் வளவு சிறப்பாகவும் விரைவாகவும் போரை முடித்துக் கொள்ள முடியுமோ, அவ்வளவு சிறப்பாகவும் விரைவாகவும் முடித்துக் கொள்ள முயன்றது.

இதற்கு முன்னதாகவே 1918 ஆகஸ்டில் போரில் ஜெர்மனி தோற்றுவிட்டது என்று தளபதி லூடென்டோர்ஃப் பேரரசர் இரண்டாம் வில்லியத்திற்கு அறிவித்துவிட்டார். செப்டம்பர் மாதத்தில் பல்கேரியர்கள் நேசநாடுகளிடம் நிபந்தனையின்றிச் சரணடைந்ததைக் கேட்டு நம்பிக்கையிழந்த ஜெர்மனியத் தளபதி லூடென்டோர்ஃப் நேசநாடுகளுடன் உடனடியாகச் சமாதானம் செய்து கொள்ளுமாறு பேரரசரை வேண்டிக் கொண்டார். பேரரசர் இரண்டாம் வில்லியமும் இவ்வேண்டு கோளுக்குச் செவி சாய்த்து மிதவாதக் கருத்துக்களை உடைய இளவரசர் மாக்ஸிமிலியன் என்பவரைத் தனது முதலமைச்சராக நியமித்து, நேசநாடுகளுடன் உடன்படிக்கை செய்து கொள்ளு மாறு பணித்தார், ஜெர்மனியின் புதிய முதலமைச்சரான மாக்ஸிமிலியன் என்பவர் சமாதனப் பேச்சுவார்த்தைகளை முன் னின்று நடத்துமாறு ஐக்கிய அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவரான உட்ரோ வில்சனைக் கேட்டுக் கொண்டார். ஜெர் மனியப் பேரரசின் போக்கை நம்பமுடியாது என்று கருதிய வில்சன் இளவரசர் மாக்ஸிமிலியனின் வேண்டுகோளுக்குச் செவி சாய்க்க இணங்காததால், ஜெர்மனியில் ஓர் உள்நாட்டுப் போர் ஏற்பட்டது. உள்நாட்டுப் போரில் மடிவதைக் காட் டிலும் போரைத் தொடர்ந்து நடத்தி மடிவது மேல் என்று கருதிய லூடென்டோர்ஃப், முதலமைச்சர் மாக்ஸிமிலியனை நீக்கிவிட்டுப் போரைத் தொடர்ந்து நடத்துமாறு பேரரசர் இரண் டாம் வில்லியத்தைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். ஆனால் போரைத் தொடர்ந்து நடத்தினாலும் தன்னுடைய நாட்டில் புரட்சியைத் தவிர்க்க முடியாது எனக் கருதி, பேரரசர் இரண் டாம் வில்லியம் தளபதி லூடென்டோர்ஃப்பின் வேண்டு கோளுக்குச் செவிசாய்க்காமலிருந்தார். தன்னுடைய வேண்டு கோள் பேரரசரால் நிராகரிக்கப்படவே கோபமடைந்த லூடென்டோர்ஃப் தனது பதவியைத் துறந்து ஸ்வீடன் நாட் டிற்குச் சென்றுவிட்டார். ஹிண்டன்பர்க் மேலும் தன்னுடைய நண்பருடைய வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து லூடென் டோர்ஃப்பைப் பின்தொடர்ந்து இராஜினாமாச் செய்யாமல் போர்க்களத்திலேயே தொடர்ந்து இருந்தார்.

ஏறத்தாழ ஒரு மாத காலம் அமைதிக்காக இளவரசர் மாக்ஸ்மிலியனும், குடியரசுத்தலைவர் வில்சனும் செய்திகளைப் பரிமாறிக் கொண்ட பின்னர் கடல்களைச் சுதந்திரமாகப் பயன் படுத்துதல், ஆஸ்திரிய-ஹங்கேரியின் எதிர்காலத்தை நிர்ண யித்தல், போரில் ஈடுபடாத நேசநாடுகளின் சாதாரண மக்க ளுக்குப் போரினுல் ஏற்பட்ட கஷ்டங்களுக்கு ஜெர்மனி ஈடு கொடுக்க வேண்டியதை நிர்ணயித்தல் ஆகிய மூன்றையும் போருக்குப் பின்னர் முடிவு செய்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் வில்சனுடைய பதினுன்கு அம்சக் கோட் பாடுகளை மையமாகக் கொண்டு உடன்படிக்கை ஒன்றை ஜெர் மனியுடன் செய்து கொள்ள நேசநாடுகள் உடன்பட்டன. இதன் அடிப்படையில் ஜெர்மனியும் நேசநாடுகளும் சமா தானப் பேச்சவார்த்தைகள் நடத்த 1918 நவம்பரில் கையெழுத் திட்டன. ஆனுல் இச்சமயத்தில் ஜெர்மனியில் புரட்சி ஊர் வலங்களும். இராணுவக் கிளர்ச்சிகளும் ஏற்பட்டுப் பேரரசர் இரண்டாம் வில்லியத்தையும், இவரது முதலமைச்சரான மாக்ஸிமிலியனையும், அரசாங்கத்தையும் நீக்கிவிட்டு, சோஷிய லிசக் குடியரசு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இக்குடியரசுதான் சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கான உடன்பாட்டில் இறுதி யாகக் கையெழுத்திட்டது.

சமாதான உடன்பாட்டின்படி நேசநாடுகள் ரைன் நதியின் இடது கரையைக் கைப்பற்றின. அல்சேஸ், லொரைன் ஆகிய பகுதிகளும், மெயன்ஸ் பகுதியும் பிரான்சிடம் ஒப்படைக் கப்பட்டன. அமெரிக்கப் படைகள் கோப்லென்ஸ் (Coblenz) என்ற இடத்திலும், பிரிட்டன், பெல்ஜியம் ஆகிய நாடுகளின் படைகள் கோலோன் (Cologne) என்ற இடத்திலும் தங்கி இருந்தன. இத்துடன் ஜெர்மனி தன்னுடைய எல்லாப் போர்க் கப்பல்களையும், நீர்மூழ்கிக் கப்பல்களையும் நேசநாடுகளிடம் ஒப்படைத்தது. மேலும் மிக அதிக அளவு துப்பாக்கிகளையும், நீராவி எஞ்சின்களையும், சரக்கு உந்து வண்டிகளையும் (Motor lorries), இரயில் கார்களையும் ஜெர்மனி நேசநாடுகளிடம் ஒப்படைத்தது. இதனுல் மத்திய ஐரோப்பாவில் ஜெர்மனியின் கீழ் இருந்த கூட்டமைப்பு அழிந்துபட்டு அது நிராயுதபாணி யாக நின்றது. ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி, பல்கேரியா, உதுமானியப் பேரரசு ஆகியவை வெற்றி பெற்ற நேசநாடு களுக்கு முன்னுல் தங்கள் செயல்களுக்கு வெட்கித் தலைகுனிந்து நின்றன.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்காக 1918 நவம்பர் 11-ல் கையெழுத்திட்ட உறுதிமொழிச் சாசனம் உலக மக்களிடையே

உடனடியாக மகிழ்ச்சியை ஏற்படுத்தியதுடன் பிரச்சினைகளி லிருந்து விடுதலையை அளித்தது. மேலும் இது எல்லா வகை யினரும் ஏறத்தாழ நான்காண்டுகளுக்கு மேலாக அனுபவித்து வந்த தொல்லைகளையும், துயர்களையும் நீக்கியது. போர் வீரர்கள் சிந்திய இரத்தத்தை நிறுத்தி, உலகப் போரை முடித்து அமைதியை ஏற்படுத்தியது.

உலக நாடுகள் முழுவதும் இப்போரில் பங்கு பெற்றதால் இப்போரை உலகப்போர் எனக் கூறுவதில் தவறேதுமில்லை. இப்போரில் எல்லா வல்லரசுகளையும் சேர்த்து மொத்தம் முப்பது நாடுகள் பங்கு பெற்றன; ஏறத்தாழ 650 இலட்சம் பேர் ஆயுதம் தாங்கிப் போரிட்டனர். இவர்களில் சுமார் 85 இலட்சம் பேர் கொல்லப்பட்டனர்; இப்போரில் காயமடைந்தவர்கள், ஊனமடைந்தவர்கள், காணமல் போனவர்கள் ஆகிய மூன்று வகையினரின் மொத்த எண்ணிக்கை சுமார் 200 இலட்சத்துக்கு மேலாக இருந்தது. கிழக்கு ஐரோப்பா, மத்திய ஐரோப்பா ஆகிய பகுதிகளில் வாழ்ந்தவர்கள் தங்கள் நெருங்கிய உறவி னர்களையும், தூரத்து உறவினர்களையும் இப்போரில் இழந்தனர். இதுபோலவே இத்தாலி, பிரான்சு, பிரிட்டிஷ் பேரரசு ஆகிய நாடுகளில் வாழ்ந்த ஒவ்வொரு குடும்பத்தினரும், அமெரிக்காவில் பல குடும்பத்தினர்களும் தங்கள் நெருங்கிய உறவினர்களையும், தூரத்து உறவினர்களையும் இப் போரின் வாயிலாக இழந்தனர். இப்போரில் நேரிடையாகச் செல வழிக்கப்பட்டிருக்கும் தொகை சுமார் 20,000 கோடி டாலர் கள் என்றும், மறைமுகமாகச் செலவழித்த தொகை 15,000 கோடி டாலர்கள் இருக்குமென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகையன்றிப் பல நூறுகோடிடாலர்கள் போர் வீரர்களின் வசதிக்காகவும், ஓய்வு கால நிதித்தொகைக்காகவும், உலகப் போருக்குப் பின்னர் செலவழிக்கப் பட்டிருக்குமென்று மதிப் பிட்டுள்ளனர். இவ்வளவு பெரிய போர் – இவ்வளவு உயிர் களைக் குடித்த போர்–இவ்வளவு செலவுத் தொகையில் நடை பெற்ற போர் முன்னர் எப்பொழுதும் நடந்ததில்லை. இத் தகைய கொடிய போரைப் பற்றி விவரித்த நாம் இனி இப் போரின் முடிவில் ஏற்பட்ட உடன்படிக்கைகளையும், அவற்றின் விளைவுகளையும் ஆராய்வோம்.

5. பாரிஸ் நகரத்தில் ஏற்பட்ட அமைதி உடன்படிக்கை (1919 - 1920)

1. உலகப்போரின் காரணமாக ஏற்பட்ட புரட்சிகள்

முதல் உலகப்போரில் மத்திய ஐரோப்பாவில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக 1918ஆம் ஆண்டின் இலையுதிர்காலத்தில் மத்தியப் பேரரசுகளின் உறுப்பு நாடுகளிடையே உடனடியாக அரசியல் புரட்சிகள் தோன்றின. இதற்கு முன்னர் பல சமயங்களில் சோஷியலிஸ்டுகள் புரட்சிகளை நடத்தினலும், இப்போது ஏற்பட்ட புரட்சிகள் அமைதியான முறையில் ஜனநாயக தேசியத்திற்காக எல்லா நாடுகளிலும் நடைபெற்றன. இப்புரட்சிகளின் மூலமாக இச் சமயத்தில் புரட்சிக்காரர்கள் சமூக சீர்திருத்தங்களைக் காட்டிலும் ஜனநாயக தேசியத்தையே அதிகம் விரும்பினர்.

ஜெர்மனி

ஜெர்மனியில் பேரரசர் இரண்டாம் வில்லியத்தால் நேச நாடுகளுடன் சமாதான முயற்சிகளை மேற்கொள்ளும் சிரமமான பொறுப்புக்களை ஏற்பதற்காக, நியமிக்கப்பட்ட மாக்ஸிமிலியன் புரட்சிக்காரர்களைத் திருப்திப் படுத்துவதற்காக 1918 அக்டோபரில் பல அரசியல் சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதாக உறுதி கூறினர். மாக்ஸிமிலியன் பெருமளவில் சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதாக உறுதி கூறிய பொழுது புரட்சிக்காரர்கள் ஜெர்மனியில் முடியாட்சியை முழுவதுமாக நீக்கிவிடவேண்டுமெனக் கோரினர். இவர்களுடைய கோரிக்கைகளின் பேரில் ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுத் தலைவரான உட்ரோ வில்சன் சில கோட்பாடுகளை வெளியிட்டார். இதனல் 1918 அக்டோபர் 28-ல் கீல் (Kiel) என்ற இடத்தில் கடற்படையினர் ஒரு புரட்சி செய்தனர். இதனையடுத்து மறுநாள் பெர்லினில் பேரரசர் இரண்டாம் வில்லியம் தன்னுடைய ஆதரவாளர்களுடன் தன்னையும், தன்னுடைய முடியையும் இராணுவம்காப்

பாற்றும் என நம்பி இராணுவத்தின் தலைமைச் செயலகம் இருந்த ஸ்பா (Spa) என்ற நகரத்திற்கு ஓடினார். பேரரசர் தனது தலைநகரைவிட்டுப் பயந்து ஓடியதாலும், கடற்படையினர் புரட்சியில் ஈடுபட்டதாலும் முடியாட்சியில் நம்பிக்கையிழந்தவர்கள் பலர் சோஷியலிஸ்டுகளுடன் சேர்ந்து கொண்டனர். இதனால் பேரரசர் பெர்லினைவிட்டு ஓடிய ஒரு வாரத்திற்குள் ஜெர்மனியப் பேரரசின் எல்லா நகரங்களிலும் தொழிலாளர்களின் புரட்சிக் கழகங்கள் அமைக்கப்பட்டு, சோஷியலிஸக் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. இந்நிலையில் மியூனிச், பவேரியா ஆகிய இரு முக்கிய நகரங்களில் கூடிய கட்டுக்கடங்காத புரட்சிக்காரர்கள் 1918 நவம்பர் 8-ல் சோஷியலிஸ்டுகளின் இடது சாரிக்கட்சியைச் சேர்ந்த குர்ட் ஐஸ்நெர் (Kurt Eisner) என்பவரின் தலைமையின் கீழ் "ஜனநாயக சோஷியலிஸக் குடியரசு" ஒன்றைப் பிரகடனப்படுத்தினர். இதனால் முதலமைச்சர் மாக்ஸிமிலியன் ஹோகன் ஸோலன் வம்சத்தை அழிவினின்றும் பாதுகாப்பதற்காகக் குழந்தையாக இருந்த பேரரசரின் பேரனைப் பேரரசராக நியமித்து, இரண்டாம் வில்லியத்தை முடிதுறக்குமாறு கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். தனது பாதுகாப்பிற்காக இராணுவத்தின் உதவியை நம்பியிருந்த பேரரசர் இரண்டாம் வில்லியம், தன்னுடைய முதலமைச்சரின் வேண்டுகோளை நிராகரித்தார். இச்சமயத்தில் இராணுவத்தினரும் முடியாட்சிக்கு எதிராகப் புரட்சி செய்யத் துடித்துக் கொண்டிருக்கின்றனர் என்று தளபதி ஹிண்டன்பர்க்கும், இராணுவத்தின் உயர்மட்ட அதிகாரிகளும் பேரரசர் இரண்டாம் வில்லியத்திடம் தயக்கத்துடன் அறிவித்தனர். தன்னுடைய முதலமைச்சரின் வேண்டுகோளை நிராகரித்ததால் மாக்ஸிமிலியனும் பேரரசரை விட்டு விலகினார். இதனால் ஆதரவற்ற நிலையில் பேரரசர் இரண்டாம் வில்லியம் 1918 நவம்பர் 9ஆம் தேதி ஜெர்மனியைவிட்டு நெதர்லாந்துக்குத் தப்பி ஓடினார். இரண்டாம் வில்லியத்தின் இச்செயல் அவரது பெருமையையும், புகழையும் குழிதோண்டிப் புதைத்தது. இதனால் முதலாம் வில்லியத்தின் (1871—1888) தலைமையின் கீழ் பிஸ்மார்க்கின் பெரு முயற்சியால் பெருமையடைந்த ஹோகன் ஸோலன் வம்சத்தின் ஆட்சி ஜெர்மனியப் பேரரசில் இரண்டாம் வில்லியத்தின் (1888—1918) ஆட்சிக் காலத்தில் மேலும் வலிவடைந்து, இப்பேரரசரின் இறுதிக் காலத்தில் திடீர் என்று அழிந்து விட்டது.

தன்னுடைய வேண்டுகோள் நிராகரிக்கப்படவே, மாக்ஸிமிலியன் ஃபிரெட்ரிக் எபெர்ட் (Friedrich Ebert) என்ற சோஷியலிஸ்ட் ஒருவரை ஜெர்மனியின் முதலமைச்சராக 1918 நவம்பர்

9-ல் நியமிக்குமாறு கூறிவிட்டுப் பதவி விலகினர். இதே நாளில் இரண்டாம் வில்லியம் ஜெர்மனியை விட்டு நெதர்லாந்துக்கு ஓடவே, ஃபிரெட்ரிக் எபெர்டின் ஆலோசனையின் கீழ் "பெர்லினில் மக்கள் பிரதிநிதிகளின் சபை" என்ற சோஷியலிஸ்டுகளின் அமைப்பு ஒன்று, இரஷ்யாவில் இருந்த புரட்சி நிர்வாக சபையைப் பின்பற்றி அமைக்கப்பட்டது. எபெர்ட்டும் அவரது சக சோஷியலிஸ்டுகளும் இரஷ்ய போல்ஷிவிக் அரசாங்கத்தில் இருந்த பெயர்களைத் தங்களுடைய நாட்டிலும் அப்படியே பின்பற்ற எண்ணினாலும், இரஷ்ய போல்ஷிவிக்குகளின் கொள்கைகளை அப்படியே பின்பற்ற விரும்பவில்லை. ஆனால் ஜெர்மனியில் ஒரு சில சோஷியலிஸ்டுகள் இரஷ்யாவில் நிறுவப்பட்ட கம்யூனிஸ ஆட்சிக்கு அதிக ஆதரவளித்துத் தங்கள் நாட்டிலும் தொழிலாளர்களின் சர்வாதிகார அரசு ஒன்றை ஏற்படுத்த விரும்பினர். இவர்கள் "ஸ்பார்டகன்கள்" (Spartacans) என்று கூறப்பட்டனர். ஆனால் ஜெர்மனிய மக்களில் பெரும்பாலோரும், தற்காலிக அரசாங்கத்தில் அங்கம் வகித்தவர்களில் பெரும்பகுதியினரும் தங்கள் நாட்டில் ஜனநாயக அமைப்பை ஏற்படுத்தும் எந்த ஒரு சர்வாதிகாரத்திற்கும் ஆதரவளிக்கத் தயாராக இருந்தனர்.

இந்நிலையில் ஜெர்மனியில் மத்தியாஸ் எர்ஸ்பெர்கர் (Mathias Erzberger) என்பவரின் தலைமையின் கீழ் இருந்த கத்தோலிக்க மத்தியக் கட்சியினரும், முன்னேற்றக் கட்சியினரும், தேசியமிதவாதக்கட்சியின் இடது சாரியினரும், சோஷியலிஸ்டுகளின் மிதவாதக் கொள்கைகளுக்கு ஆதரவளித்தனர். அத்துடன் இக்கட்சியினர் அனைவரும் தங்களிடையே நிலவிய கருத்து வேறுபாடுகளை மறந்து, 1977 ஆம் ஆண்டில் இந்தியாவில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் திருமதி இந்திரா காந்தியின் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சி தோற்கடிக்கப்பட்டு ஜனதா அரசு என்றபெயரில் புதிய அரசு பதவி ஏற்ற பின்னர் மே மாதத்தில் ஜனசங்கம், பாரதீய லோக்தளம், அகாலிதளக் கட்சி, ஸ்தாபன காங்கிரஸ், சோஷியலிஸ்டுக்கட்சி ஆகிய பல கட்சிகள் ஒன்றுசேர்ந்து ஜனதா கட்சி என்ற ஒன்றை அமைத்ததைப் போல, ஜனநாயகக் கட்சி (Democratic Party) ஒன்றை அமைத்தனர். இவர்கள் ஜெர்மனியில் மிதவாத ஜனநாயகக் குடியரசை ஏற்படுத்த வேண்டுமென முயற்சி செய்தனர். இந்த ஜனநாயகக் கட்சிக்கு எதிராக முடியாட்சியை விரும்பிய வலது சாரிகளும், கம்யூனிஸ இடது சாரிகளும் ஒன்று சேர்ந்தனர். இதனால் ஜெர்மனியில் முன்னர் இருந்த பழமை விரும்பிக் கட்சியும் ஒன்று சேர்ந்து, தேசியக்கட்சி என்ற ஒன்றை

அமைத்து முடியாட்சியை மீண்டும் ஜெர்மனியில் ஏற்படுத்த முயற்சி செய்தன. ஜெர்மனியில் தேசிய மிதவாதக் கட்சியின் வலது சாரிகள் பக்கமிருந்த மிதவாதிகள் கஸ்டாவ் ஸ்டிரெஸ்மேன் (Gustav Stresemann) என்ற செல்வந்தத் தொழிலதிபரின் தலைமையின் கீழ் "ஜெர்மன் மக்கள் கட்சி" (German Peoples' Party) என்ற ஒரு கட்சியைத் தோற்றுவித்துக் குடியரசையும், முடியரசையும் இணைத்து, குடியரசுக்குக் கட்டுப்பட்ட முடியாட்சி ஒன்றை ஏற்படுத்த முயற்சி செய்தனர். இந்நிலையில் இடது சாரியினரிடையே ஸ்பார்டகன்கள் அதிக அளவில் இருந்ததால், இவர்கள் பூஷுவாக்களுடன் அரசியலமைப்புக்கான தேர்தலில் கலந்து கொள்ள மறுத்து, தற்காலிக அரசுக்கெதிராக மக்களைப் புரட்சி செய்யுமாறு தூண்டினர்.

அரசியலமைப்புச் சபையின் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல்கள் நடைபெறும் சமயத்தில், 1919 ஜனவரியில் ஸ்பார்டகன்கள் பெர்லின் நகரத்தில் ஒரு புரட்சி ஊர்வலத்தை நடத்தினர். இவர்களின் தலைவர்கள் காரியங்களை நிறைவேற்றுவதைவிடப் பிடிவாதமாக இருப்பதில் அதிக கவனம் செலுத்தினர். தற்காலிக அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு ஸ்பார்டகன்களின் புரட்சியை அடக்கியது. ஆனால் பிப்ரவரி மாதத்தில் தற்காலிக அரசின் தலைவரான குர்ட் ஐஸ்நெர் என்பவர் கொலை செய்யப்பட்டார். இதனால் புதிய புரட்சி ஒன்று ஜெர்மனியில் ஏற்பட்டது. ஆனால் தக்க தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு மத்திய அரசு இக்கிளர்ச்சிகளை அடக்கியது.

இதற்கிடையில் 20 வயது நிரம்பிய ஆண், பெண் அனைவருக்கும் ஓட்டுரிமை என்பதன் அடிப்படையில், இரகசிய ஓட்டளிப்பு முறையில் புதிய அரசியலமைப்புச் சபை ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. இச்சபை 1919 பிப்ரவரி 6 ஆம் தேதி வெய்மர் (Weimar) நகரில் கூடியது. இவ்வரசியலமைப்புச் சபையில் சோஷியலிஸ்டுகளும், மத்தியக் கட்சியினரும், ஜனநாயகக் கட்சியினரும், பெரும்பான்மை பலம் பெற்றிருந்தனர். இவர்கள் மூவரும் ஒன்றுபட்டு நேசநாடுகளுடன் செய்து கொண்ட சமாதானத்திற்கான ஒப்பந்தத்தை 1919 ஜூனில் அங்கீகரித்தனர். அத்துடன் இவர்கள் ஜெர்மனிக்கு ஒரு புதிய அரசியலமைப்பை 1919 ஜூலையில் ஏற்படுத்தினர். இப் புதிய அரசியலமைப்பின்படி ஈபெர்ட் என்பவர் ஜெர்மனியின் புதிய குடியரசுத் தலைவராக நியமிக்கப்பட்டார். மற்றொரு சோஷியலிஸ்டான ஷீடிமென் (Scheidemann) என்பவர் ஜெர்மனியின் புதிய முதலமைச்சராக நியமிக்கப்பட்டார்.

ஜெர்மனியில் ஏற்பட்ட புரட்சி 1919 ஆகஸ்டில் வெற்றிகரமாக ஒடுக்கப்பட்டது. ஜெர்மனியில் ஹோகன்ஸோலன் வம்ச ஆட்சி முடிவுற்றது. ஜனநாயக் குடியரசு ஒன்று ஜெர்மனியில் நிறுவப்பட்டது. பெரும்பாலான ஜெர்மனியர்கள் இக்குடியரசுக்குத் தங்கள் முழு ஆதரவையும் நல்கினர். இவர்களிடையே பல கருத்து வேறுபாடுகள் நிலவினலும், கூட்டாட்சி ஜெர்மனியில் வெற்றிகரமாக நடைபெற்றது. இதனல் சிலகாலம் மிதவாதிகளால் நிறுவப்பட்ட ஜனநாயகக் குடியரசு ஜெர்மனியில் நிலைத்திருந்தது.

ஆஸ்திரியா-ஹங்கேரி

இரட்டை முடியாட்சி நடைபெற்ற ஆஸ்திரியா-ஹங்கேரியில் 1918-1919 ஆம் ஆண்டில் ஏற்பட்ட புரட்சி, ஜனநாயக அடிப்படையில் அமைந்ததோடல்லாமல் வேறுபல மாறுதல்களையும் ஏற்படுத்தியது. ஹாப்ஸ்பர்க் பேரரசில் ஏற்பட்ட இப் புரட்சியின் காரணமாக முதலாம் சார்லஸ் தன்னுடைய பேரரசைத் தேசிய அடிப்படையில் ஆஸ்திரியா, ஹங்கேரி ஆகிய இரு நாடுகளாகப் பிரித்து இரண்டும் தனித்தனியாக ஜனநாயகக் கூட்டமைப்பு அடிப்படையில் இயங்கும் என 1918 அக்டோபர் 16-ல் அறிவித்தார். பேரரசர் முதலாம் சார்லஸ் தன்னுடைய முடிவைக் காலம் தாழ்த்தி அறிவித்ததால் ஆஸ்திரியா, ஹங்கேரி ஆகிய இரு பகுதிகளிலும் இருந்த தலைவர்கள் தங்கள் பகுதியை ஹாப்ஸ்பர்க் பேரரசினின்றும் தனித்தனியாகப் பிரித்து விட எண்ணினர். ஒரே அமைப்பாக இருந்த ஆஸ்திரியா-ஹங்கேரியப்படை தேசிய அடிப்படையில் ஆஸ்திரியப்படை என்றும், ஹங்கேரியப் படை என்றும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டது. இதனல் ஒரே அமைப்பாக இருந்த ஹாப்ஸ்பர்க் பேரரசு ஆஸ்திரிய நாடு என்றும், ஹங்கேரிய நாடு என்றும் தேசிய இனத்தின் அடிப்படையில் இரு தனித்தனி நாடுகளாகப் பிரிந்து செயல்பட ஆரம்பித்தன.

செக்கோஸ்லாவியக் குடியரசு

ஹாப்ஸ்பர்க் பேரரசர் தனது பேரரசை ஆஸ்திரியா, ஹங்கேரி என இரண்டாகப் பிரித்து அதனை அறிவித்த இரண்டு நாட்களுக்குப் பின்னர் (1918 அக்டோபர் 18-ல்) நாட்டுப்பற்று மிக்க செக்கோஸ்லாவியர்கள். தாமஸ் மஸாரிக் (Thomas Masaryk), எட்வர்டு பீனெஸ் (Edward Benes) ஆகியவர்களுடன் சேர்ந்து கொண்டு பொஹிமியாவின் அரசரும், ஹாப்ஸ்பர்க் வம்சத்தைச் சேர்ந்தவருமான சார்லஸ் என்பவரை நீக்கிவிட்டு,

சுதந்திர "செக்கோஸ்லாவியக் குடியரசு" என்ற ஒன்றைப் பாரிஸில் அறிவித்தனர். இதனையடுத்து 1919 அக்டோபர் 28-ல் செக் மக்களின் "தேசிய சபை" ஒன்று பிராக்கில் (Prague) கூடி அரசியல் பொறுப்புக்களை ஏற்றது. இதற்கடுத்த நாளில் ஹங்கேரியில் ஸ்லாவ் மாநிலங்களில் வாழும் மக்கள் ஒன்று சேர்ந்து ஒரு தேசியசபையை அமைத்தனர். இச்சபை செக் மக்களையும், ஸ்லாவ் மக்களையும் ஒன்று சேர்த்து "செக்கோஸ் லாவாகியா" என்ற ஒரு புதிய அமைப்பை ஏற்படுத்த அனுமதி வழங்கியது. இதனால் புதிய தேசிய சபை ஒன்று மீண்டும் பிராக்கில் கூட்டப்பட்டது. இத் தேசியசபை செக் கோஸ்லாவாகியர்களின் செயல்களை அங்கீகரித்து 1919 நவம்ப ரில் செக்கோஸ்லாவாகியக் குடியரசை ஏற்படுத்தியது. தாமஸ் மஸாரிக் என்பவர் இக்குடியரசின் தலைவராகவும், எட்வர்டு பீனெஸ் என்பவர் இக்குடியரசின் வெளிநாட்டமைச்சராகவும் நியமிக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து இக்குடியரசு 1920 பிப்ரவரியில் பலத்த வாக்குவாதங்களுக்குப் பின்னர் ஒரு ஜனநாயக அரசியலமைப்பைப் பின்பற்றியது.

யூகோஸ்லாவிய அரசு

ஹாப்ஸ்பர்க் பேரரசின் வடக்குப் பகுதியில் செக்குகளும் (Czechs), ஸ்லோவக்குகளும், புரட்சி செய்த பொழுது இப் பேரரசின் தெற்குப் பகுதியில் இருந்த ஸ்லாவ்களும் புரட்சி செய்தனர். இதனால் 1918 அக்டோபர் 29-ல் குரோஷியாவின் சட்டசபை ஹாப்ஸ்பர்க் அரசரான சார்லசைப் பதவிநீக்கம் செய்து விட்டு, குரோஷியா-டால்மேஷியா அரசு ஹங்கேரியி லிருந்து தனியாகப் பிரிந்து விட்டதாக அறிவித்தது. இதனை யடுத்து குரோஷியா-டால்மேஷியா அரசினை நடத்தும் பொறுப் பைப் புரட்சியாளர்களைக் கொண்டிருந்த யூகோஸ்லாவ் காங்கிர சிடம் இச்சபை ஒப்படைத்தது. யூகோஸ்லாவியக் காங்கிரசில் பாஸ்னியா, ஹெர்ஸகோவினு ஆகிய பகுதிகளின் பிரதிநிதி களும், கர்னியோலா பகுதியின் ஸ்லாவ் மாநிலங்களின் பிரதி நிதிகளும் அங்கத்தினர்களாக இருந்தனர். ஆஸ்திரியா - ஹங் கேரியப் பகுதிகளில் வாழ்ந்த குரோட்டுகள், செர்பியர்கள், ஸ்லவோன்கள் என்ற மூன்று யூகோஸ்லாவ் இனத்தவர்களும் 1917 ஜூலையில் கிரேக்கத் தீவான கர்ஃப்யூவில் ஒன்று சேர்ந்து தாங்கள் செர்பிய அரசுடன் இணைய விரும்புவதாக அறிவித் ததை யூகோஸ்லாவியக் காங்கிரஸ் 1919 நவம்பர் 23-ல் அங் கீகரித்தது. இதனால் புதிய செர்பிய அரசின் மன்னராகத் தனது மகனை நியமித்து, மன்னரது பாதுகாவலராக மன்னர் பீட்டர் 1919 டிசம்பரில் பதவியேற்றார். மன்னருக்கு உதவியாக

செர்பிய அரசியல் வாதிகளுள் சிறந்தவராகக் கருதப்பட்ட நிகோலஸ் பாசிக் என்பவரின் தலைமையின் கீழ் ஒரு அமைச்சரவை அமைக்கப்பட்டது. புதிய யூகோஸ்லாவிய அமைப்புக்கு எதிராக ஆஸ்திரியா-ஹங்கேரியால் ஒன்றும் செய்ய இயலவில்லை. ஆனல் இப்புதிய யூகோஸ்லாவிய அமைப்பை மாண்டநெக்ரோவின் மன்னரான நிக்கோலஸ் எதிர்த்தார். எனவே செர்பியப் படைகள் மாண்டநெக்ரோவை எளிதாகக் கைப்பற்றித் தங்கள் புதிய அரசுடன் இணைத்துக் கொண்டன.

போலிஷ் குடியரசு

ஆஸ்திரிய கலீஷியாவில் இருந்த போலிஷ் மொழியைப் பேசிய மக்களும் ஹாப்ஸ்பர்க் பேரரசிலிருந்து பிரிந்து பிரஷ்யா, இரஷ்யா ஆகிய நாடுகளில் வாழ்ந்த போலிஷ் மொழியைப் பேசிய மக்களுடன் ஒன்று சேர்ந்து ஒரு தேசிய அரசை உருவாக்க எண்ணினர். இவர்களின் முயற்சிக்கு ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய நாடுகளில் இருந்த இராணுவத்தினருடன் இரஷ்ய இராணுவத்தினரும் உதவிபுரிந்தனர். முதல் உலகப் போரின் தொடக்கத்தில் போலிஷ்மொழியைப் பேசிவந்த நாட்டுப் பற்று மிக்கவர்களிடையே, எத்தகைய தந்திரங்களைக் கையாள்வதுஎன்பதிலும், அடிப்படைக் கருத்துக்களிலும்கருத்து வேறுபாடுகள் தோன்றின. இவர்களில் ஒரு பிரிவினர் சிறந்த இசை வல்லுநரான இக்நாஸ் பெடிரியூஸ்கி (Ignace Paderewski) என்பவரின் தலைமையின் கீழ் செயல்பட்டனர். இவர்கள் முதல் உலகப்போரில் நேசநாடுகள் வெற்றிபெறும் என்றும், அப்படி நேசநாடுகள் வெற்றிபெற்ருல் தங்களுடைய பகுதிகளை வெற்றிபெற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டிவரும் எனவும் நம்பினர். அத்துடன் இவர்கள் வெற்றி பெற்ற பிரான்சு, பிரிட்டன் ஆகிய வல்லரசுகள் தங்கள் நட்பு நாடான இரஷ்யாவை வற்புறுத்தி, முழுசுதந்திரமில்லாவிட்டாலும், சுயாட்சி உரிமையையாவதுவழங்குமாறுசெய்வர்என நம்பினர். மற்ருெரு பிரிவினர் ஜோஸப் பில்ஸுட்ஸ்கி (Joseph Philsudski) என்ற போர்வீரரின் தலைமையின் கீழ் செயல்பட்டுவந்தனர். இவர்கள் முதல் உலகப் போரில் நேசநாடுகள் வெற்றியடையாது என நம்பியதுடன் இரஷ்யர்கள் தங்களுடைய உரிமைகளுக்கு மதிப்பளிப்பார்கள் என்ருே, பிரான்சு, பிரிட்டன் ஆகிய நாட்டவர்கள் தங்கள் பால் இரக்கம் காட்டுவார்கள் என்ருே நம்ப மறுத்தனர். அத்துடன் இரஷ்யப்பகுதியில் இருந்த போலந்து மக்களைவிட ஆஸ்திரியப் பகுதியிலிருந்த போலந்து மக்கள் சிறப்பாக நடத்தப்பட்டனர் என இவர்கள் கருதினர்.

எனவே இவர்கள் இரஷ்யப் பகுதியில் இருந்த போலந்தைக் கைப்பற்றி, ஆஸ்திரியப் போலந்துடன் சேர்ப்பதற்காக மத்தியப் பேரரசுகளுக்கு உதவுவதே தங்களுடைய முதல் கடமை எனக் கருதினர். இதனால் பெடிரியூஸ்கி நேசநாடுகளுக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்து பிரான்சு, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு ஆதரவளிக்கத் தொடங்கிய பொழுது, தளபதி பில்ஸுட்ஸ்கி ஒரு போலந்துப் படையை நிறுவி மத்திய வில்லரசுகளுக்கு ஆதரவாகப் போரிட்டார்.

அதிர்ஷ்டவசமாக இவ்விரு பிரிவினரும் ஒவ்வொரு வகையில் வெற்றியடைந்தனர். உலகப் போரின் பொழுது இரஷ்யப் படைகள் 1915–1916-ல் வெகுவாக முறியடிக்கப்பட்டதாக பில்ஸுட்ஸ்கி திருப்தியடைந்தார். இரஷ்யப்படைகள் முறியடிக்கப்பட்டதால் ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய இரு நாடுகளும் "சுதந்திரப் போலந்து அரசு" ஒன்றை ஏற்படுத்துவதாக 1916 நவம்பர் 5-ல் இவருக்கு உறுதியளித்தன. இத்தகைய சுதந்திரப் போலந்து அரசின் மன்னராக தேசிய கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அரசியலமைப்புக்குட்பட்ட அரசர் ஒருவர் வாரிசுரிமை முறையில் நியமிக்கப்படுவார் எனவும், அவ்வரசர் தங்கள் நாடுகளுடன் நல்லுறவுகளைத் தொடர்ந்து வைத்துக் கொள்ளுவார் எனவும் இவை மேலும் உறுதி கூறின. இவ்வுறுதிமொழியைத் தொடர்ந்து வார்சாவில் இவர்களின் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்டார். இரஷ்யாவில் புரட்சி ஏற்பட்ட பொழுது இரஷ்யா மத்தியப் பேரரசுகளுடன் செய்துகொண்ட பிரெஸ்ட் லிடோவ்ஸ்க் (Brest Litovsk) உடன்படிக்கையின்படி (1918 மார்ச்சு) தன்னிடமிருந்த எல்லா போலந்துப் பகுதிகளையும் போலந்துக்கு விட்டுக்கொடுத்துவிட இரஷ்யா சம்மதித்தது.

இச்சமயத்தில் பில்ஸுட்ஸ்கி மத்தியப் பேரரசுகள் தனக்குக் கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்படாது என்பதை உணர ஆரம்பித்தார். அத்துடன் இப்பேரரசர் போலந்திற்குச் சுதந்திரமளிக்க விரும்பவில்லை என்பதையும், இரஷ்யப் பகுதியிலிருந்த போலந்தைத் தன்னுடைய நாட்டுடன் சேர்த்துக் கொள்ள விரும்பவில்லை என்பதையும் இவர் நன்குணர்ந்தார். எனவே பில்ஸுட்ஸ்கி ஜெர்மனிக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சித்தார். இதனால் இவர் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டார். பில்ஸுட்ஸ்கி சிறையிலடைக்கப் பட்டதால் நேசநாடுகளுக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்து வந்த பெடிரியூஸ்கி, போலந்து மக்கள் அனைவரையும்

ஒன்றுதிரட்டி மத்தியப் பேரரசுகளுக்கு எதிராகவும், நேச நாடுகளுக்கு ஆதரவாகவும் போரிட முடிவு செய்தார். இந் நிலையில் 1918-ல் ஆஸ்திரிய கலீஷியா, பிரஷ்ய போசென் (Posen) ஆகியவை ஜெர்மனிக்கு எதிராகப் போலந்துடன் கலந்து கொண்டன. போலந்தின் போர் வீரர்கள் பெருமளவில் நேச நாட்டுப் படைகளுடன் ஒன்று சேர்ந்து கொண்டு ஜெர்மனிக்கு எதிராகப் போரிடத் தொடங்கினர். போரில் நேசநாடுகள் வெற்றியடைந்ததாலும், உட்ரோவில்சன் உறுதிமொழிகள் வழங் கியதாலும் போலந்து நாட்டின் சுதந்திரம் நிச்சயமாயிற்று.

மத்திய ஐரோப்பா முழுவதும் புரட்சிகள் நடந்துகொண் டிருந்த பொழுது, ஹாப்ஸ்பர்க் பேரரசிலும் புரட்சி ஏற்பட்டு, இப்பேரரசு ஆஸ்திரியா, ஹங்கேரி என இரு தனி நாடுகளாயின என்பதை முன்னர்க் கண்டோம். இச்சமயத்தில் கலீஷியா சுதந் திரப் போலந்தை நிறுவவேண்டுமெனக் கோரியது. ஜெர்மனி நேச நாடுகளிடம் சரணடைந்த பொழுது போசென், மேற்கு பிரஷ்யா, மேல் சைலீஷியா ஆகிய பகுதிகளில் வாழ்ந்து வந்த போலிஷ் மொழியைப் பேசிய மக்களும் சுநந்திரப் போலந்தை நிறுவ முயற்சி செய்தனர். இச்சமயத்தில் ஜெர்மனியில் சிறை வைக்கப்பட்டிருந்த பில்ஸுட்ஸ்கி விடுதலையடைந்து 1918 நவம்பரில் வார்சா வந்து ஆஸ்திரியா ஜெர்மனி ஆகிய நாடுகள் கூட்டாக நியமித்திருந்த பிரதிநிதிகளிடமிருந்து போலந்தின் தற்காலிக அரசைக் கைப்பற்றினர். பின்னர் 1919 ஜனவரியில் தன்னைத் தலைவராகவும், பெடிரியூஸ்கியைப் பிரதமராகவும் வெளிநாட்டமைச்சராகவும் நியமித்துப் "போலிஷ் குடி யரசை"ப் பிரகடனப்படுத்தி, ஒற்றை மாற்று ஓட்டு முறையை அடிப்படையாகக் கொண்டு, இரகசிய முறையில் தேர்ந்தெடுக் கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஓர் அரசியலமைப்புச் சபையை ஏற்படுத்தினர்.

சுதந்திரப் போலந்து உருவாகிய இதே சமயததில் அரசியல் ஒற்றுமை ஏற்பட்டு செக்கோஸ்லாவாகியா, யூகோஸ்லாவியா, ஆகிய நாடுகளும் சுதந்திரமடைந்தன. இவ்வாறே இரஷ்யா விடமிருந்து பெஸ்ஸரேபியாவும், ஹங்கேரியிடமிருந்து டிரான் சில்வேனியாவும், ஆஸ்திரியாவிடமிருந்து பொஹீமியாவும் பிரிந்து சுதந்திரமடைந்தன. ருமேனிய மொழி பேசும் மக் களிடையே ஒற்றுமை ஏற்பட்டதும், ஹாப்ஸ்பர்க் பேரரசு சிதறுண்டு போனதும் முதல் உலகப் போருக்குப் பின்னர் மத் திய ஐரோப்பாவில் ஏற்பட்ட புரட்சியின் முக்கியமான நிகழ்ச்சிகளாகும்.

ஹங்கேரியக் குடியரசு

ஹாப்ஸ்பர்க் பேரரசு சிதறுண்ட சமயத்தில் இரட்டை முடியரசில் முக்கியப் பங்கு வகித்த ஹங்கேரியாவில் இருந்த மாகியர்களும் (Magyar), ஆஸ்திரியாவிலிருந்த ஜெர்மனியர்களும் புரட்சி செய்தனர். இதனால் இச்சமயத்தில் ஹங்கேரியாவின் முடியாட்சியைக் குறைகூறிய கவுண்ட் மைக்கல் கரோலி (Count Michael Karolyi) என்பவர் 1918 அக்டோபர் 24,25 தேதிகளில் ஹங்கேரியின் தற்காலிக அரசின் தலைவரானார். இதனைத் தொடர்ந்து இரு வாரங்களுக்குப் பின்னர் இவர் ஹங்கேரி சுதந்திரக் குடியரசாக மாறிவிட்டது எனப் பிரகடனப் படுத்தினார். பின்னர் தன்னை ஹங்கேரியக் குடியரசின் ஆளுநர் என அறிவித்து, ஹங்கேரியில் ஜனநாயக முறைகளைச் செயல்படுத்தி, மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றப் போவதாக அறிவித்தார். ஆனால் ஹங்கேரிய மக்கள் இவரது அரசை அங்கீகரிக்கவில்லை. அத்துடன் குரோட்டுகள், ஸ்லாவுக்கள் ஆகியவர்கள் ஹங்கேரியிலிருந்து பிரிந்து சென்றதையும், டிரான்சில்வேனியாவை ருமேனியப் படைகள் கைப்பற்றியதையும் கரோலியினுடைய புதிய அரசால் தடை செய்ய முடியவில்லை. எனவே இவருடைய புதிய குடியரசு சொல்லொணாத் தொல்லைகளுக் குள்ளாகியது.

பின்னர் ருமேனியா, யூகோஸ்லாவியா. செக்கோஸ்லாவாகியா ஆகியவை ஹங்கேரியின் செலவில் பிரிந்து செல்வதை நேசநாடுகள் ஆதரித்தன. இதனை உணர்ந்த கரோலி 1919 மார்ச்சில் சோஷியலிஸ்டுக் கட்சியின் இடதுசாரியினரைச் சேர்ந்த பெலாகுன் (Belakun) என்பவரிடம் தனது அரசை ஒப்படைத்துவிட்டுத் தான் பதவியிலிருந்து விலகினார். ஹங்கேரியக் குடியரசில் புதிதாகப் பதவியேற்ற பெலாகுன் என்பவர் யூதர்களின் ஒரு செய்தித்தாளின் ஆசிரியராகப் பணியாற்றியவர். இவர் உலகப் போரின் பொழுது போர்க் கைதியாகப் பிடிக்கப்பட்டு இரஷ்யாவில் சிறைவைக்கப்பட்டார். இரஷ்யாவில் போர்க் கைதியாக இருந்த பொழுது இவர் தீவிரக் கம்யூனிஸ்டு வெறியரானார். இவர் விடுதலையாகி நாடு திரும்பியதும் அரசாங்கப் பொறுப்புக்களை ஏற்றதால் ஹங்கேரியை உழைப்பாளர்களின் சர்வாதிகார நாடாக அறிவித்தார். இதனையடுத்து கம்யூனிஸ்டு ஆணைகளைப் பிறப்பித்து அவற்றை மாகியர்களின்மீது திணித்தார். இதே சமயத்தில் தேசியவாதிகளின் புரட்சிக்கு எதிராக இராணுவத்தைப் பயன்படுத்தினார். பின்னர் செஞ்சட்டை வீரர்களின் படை ஒன்றை நிறுவி அதனை ஸ்லாவக்குகளுக்கு எதிராகவும், ருமேனியர்களுக்கு எதிராகவும்

செயல்படச் செய்தார். இதில் ஸ்லவானியர்களுக்கு எதிராகச் சென்ற செஞ்சட்டை வீரர் படை ஓரளவு வெற்றி பெற்றாலும், ருமேனியர்களுக்கு எதிராகச் சென்ற படையும், போர்க்கருவிகளைப் போதிய அளவு பெறாத ஹங்கேரியப் படையும் ருமேனியர்களின் எதிர்த் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல் பின்வாங்கியதால் ருமேனியப் படைகள் முன்னேறின. இந்நிலையில் உள்நாட்டிலும் பெலாகுன்னுக்கு எதிராகச் சதித்திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டமையால் 1919 ஆகஸ்டு முதல் நாள் பெலாகுன் பயந்து ஆஸ்திரியாவிற்கு ஓடினார். தப்பி ஓடிய இவர் ஆஸ்திரியாவில் அகதியாக இருந்தார். இதற்கிடையில் ருமேனியப் படைகள் புடாபெஸ்ட் (Budapest) வரை முன்னேறி அப்பகுதியைக் கைப்பற்றின. இச்சமயத்தில் ஹங்கேரியில் நிகோலஸ் ஹார்த்தி (Nicholas Harthy), கவுண்ட் ஸ்டீஃபென் பெத்லென் (Count Stephen Bethlen) போன்ற செல்வந்தர்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். ருமேனியப் படைகள் திரும்பிச் சென்ற பின்னர் ஹங்கேரியில் 1920 ஜனவரியில் பொதுத் தேர்தல்கள் நடைபெற்று, முடிவுகள் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக வெளிவந்தன. இதன் காரணமாக ஹார்த்தி என்பவர் ஹங்கேரியின் பாதுகாவலரானார். கவுண்ட் பெத்லென் 1921 ஏப்ரலில் பத்தாண்டுகளுக்குப் பிரதமராகப் பதவியேற்று, சர்வாதிகாரியாகச் செயல்பட்டார்.

ஜெர்மனிய-ஆஸ்திரியக் குடியரசு

இதற்கிடையில் ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னாவில் புரட்சி ஏற்பட்டது. உலகப் போரில் ஆஸ்திரியப் படைகள் முறியடிக்கப்பட்ட பின்னர் ஆஸ்திரிய அரசும், அதன் படைகளும் வலிமை குன்றின. இந்நிலையில் ஆஸ்திரியாவில் இருந்த தொழிலாளிகளும், மாணவர்களும் தங்கள் அரசுக்கு எதிராக 1918 அக்டோபர் 30-ல் புரட்சி ஊர்வலங்களை நடத்தினர். நாளடைவில் இவர்களின் இயக்கங்கள் வலுவடைந்தன. உலகப்போரில் வலிமையிழந்த பேரரசர் சார்லஸ் இவ்வியக்கங்களுக்கு எதிராக எந்த ஒரு நடவடிக்கையிலும் ஈடுபடமுடியாமல் செயலற்ற நிலையிலிருந்தார். மேலும் இவரது ஆணைகள் யாவும் புறக்கணிக்கப்பட்டன. எனவே 1918 நவம்பர் 11-ல் பேரரசர் சார்லஸ் முடிதுறந்து ஜெர்மனிக்கு ஓடினார். பின்னர் முடியாட்சியில் நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் ஹங்கேரிய அரசில் வலிமை பெறவே 1921 ஆம் ஆண்டு மார்ச்சு, அக்டோபர் ஆகிய இரு மாதங்களில் இருமுறை ஹங்கேரியின் ஆட்சியைக் கைப்பற்ற நாட்டைவிட்டு ஓடிய சார்லஸ் முயற்சி

செய்தார். இவர் இரண்டாம் முறையாக ஆட்சியைக் கைப் பற்ற முயற்சி செய்த பொழுது நேசநாடுகள் இவரை மடீராவுக்கு (Madeira) நாடுகடத்தின. அங்கு இவர் 1920 ஏப்ரலில் இவ் வுலக வாழ்வை நீத்தார்.

சார்லஸ் முடிதுறந்த மறுநாள் (1918 நவம்பர் 12) சோஷியல் ஜனநாயக வாதிகளும், கிறிஸ்தவ சோஷியலிஸ்டுகளும் தேசியக் கட்சியினரும் ஒன்று சேர்ந்து ஒரு தற்காலிக அரசை நிறுவி, "ஆஸ்திரியக் குடியரசை"ப் பிரகடனப்படுத்தினர். இதனையடுத்து 1919 பிப்ரவரியில் அரசியலமைப்புச் சபை ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. இச்சபை ஜெர்மனியில் ஏற்பட்ட வெய்மர் அரசியலமைப்பைப் பின்பற்றி ஒரு புதிய அரசிய லமைப்பை ஏற்படுத்தியது.

முதல் உலகப் போர் 1914 ஜூலையில் தொடங்கிய பொழுது இரட்டை முடியாட்சியான ஆஸ்திரியா-ஹங்கேரி மிகப் பெரிய வல்லரசாகக் கருதப்பட்டது. ஆனால் (உலகப்போர் தொடங் கிய) ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் செர்பியா தனியாகப் பிரிந்து சென்றது. இரட்டை முடியாட்சியாக விளங்கிய ஆஸ்திரியா-ஹங்கேரியிலிருந்து இப்பொழுது செக்கோஸ்லாவாகியா, ஹங்கேரி, ஜெர்மனிய-ஆஸ்திரியா என்ற மூன்றுநாடுகள் பிரிந்து தனித் தனி நாடுகளாயின. இத்துடன் எஞ்சிய ஆஸ் திரியா-ஹங்கேரியப் பகுதிகளில் எல்லாம் புரட்சிகள் ஏற் பட்டன. இதன்பயனாக ஆஸ்திரியாவில் ஒரு குடியரசு நிறுவப் பட்டது. இச்சமயத்தில் பல்கேரியா, உதுமானியப் பேரரசு ஆகிய பகுதிகளிலும் புரட்சிகள் ஏற்பட்டன.

பல்கேரியாவில் அதிகார மாற்றம்

பல்கேரியாவில் ஆட்சி புரிந்து வந்த மன்னர் பெர்டினாண்டு தன்னுடைய நாட்டின் நிலைகளை நன்குணர்ந்து 1918 அக்டோ பரில் முடிதுறந்தார். இவருக்குப் பின்னர் பல்கேரியாவின் மன்ன ரான மூன்றும் போரிஸ் நாட்டின் எல்லா அதிகாரங்களையும் அலெக்ஸாந்தர் ஸ்டாம்புலின்ஸ்கி (Alexander Stambulinsky) என்பவரிடம் ஒப்படைத்தார், விவசாயியின் மகனாகப் பிறந்த ஸ்டான்புலின்ஸ்கி பல்கேரியாவில் விவசாயிகளின் கட்சிக்குத் தலைவராக விளங்கினார், முதல் உலகப்போரின் பொழுது அரசர் பெர்டினாண்டுக்கு எதிராகச் செயல்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டார். மூன்றாண்டு சிறை வாசத்திற்குப் பின்னர் விடுதலையடைந்த இவரை மூன்றும் போரிஸ் தனது அதிகாரியாக நியமித்தார். இவர் மூன்றும் போரி

ஷிடம் தலைமை அதிகாரியாகப் பணியாற்றியபொழுது பல சீர் திருத்தங்களை ஏற்படுத்தியதுடன், பல்கேரியர்களின் பொருளா தார மேம்பாட்டிற்காகவும் பாடுபட்டார்.

துருக்கியக் குடியரசு

உதுமானியப் பேரரசராக இருந்த சுல்தான் ஐந்தாம் முகமது 1918 ஜூலையில் மரணமடைந்தார். இதனையடுத்து ஆரும் முகம்மது என்பவர் உதுமானியப் பேரரசின் பேரரசரானார். நேச நாடுகளின் படை அரேபியர்களின் உதவியால் பாலஸ்தீனம், சிரியா, மெஸபடோமியா ஆகிய பகுதிகளைக் கைப்பற்றிய பொழுது, ஜெர்மனிக்கு ஆதரவளித்து உதுமானியப் பேரரசின் அழிவுக்குக் காரணமாக விளங்கிய என்வெர் பாஷாவும், அவரது சம அமைச்சர்களும் தங்கள் பதவிகளை இராஜினமா செய்தனர். இவர்களின் இராஜினமாவைப் பேரரசர் ஆரும் முகம்மது ஏற்றுக் கொண்டு எஞ்சிய உதுமானியப் பேரரசின் அரசராகத் தொடர்ந்து பதவி வகித்தார். இச்சமயத்தில் முதல் உலகப் போரின் பொழுது, என்வெர் பாஷா மேற்கொண்ட கொள்கை களை விரும்பாத இளந்துருக்கியர்களின் இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்த முஸ்தஃபா கமால் என்பவர் அனடோலியா (Anatolia) என்ற இடத்தில் 1919 ஆம் ஆண்டின் வசந்த காலத்தில் 'தேசிய துருக்கிய அரசு' என்ற ஒன்றை நிறுவினர். இராணுவ வலிமையின் காரணமாகவும், தன்னுடைய திறமை யின் காரணமாகவும் உதுமானியப் பேரரசில் இருந்த துருக்கிய மாநிலங்களில் வாழ்ந்த மக்களிடையே படிப்படியாக ஒற்றுமையை ஏற்படுத்தி, துருக்கியின் விடுதலைக்காக இவர் பாடு பட்டார். பின்னர் இவர் 1923-ல் கான்ஸ்டான்டிநோபிளைக் கைப்பற்றி, ஆரும் முகம்மதை நீக்கிவிட்டு, உதுமானியப் பேரரசைத் தேசிய துருக்கியக் குடியரசில் இணைத்து, அங்காரா (Ankara) என்ற நகரைத் துருக்கியக் குடியரசின் தலைநகராக் கினர்.

2. பாரிஸ் மாநாடும் வார்சே உடன்படிக்கையும்

மத்திய ஐரோப்பாவில் ஏற்பட்ட புரட்சிகளும், இவற்றைத் தொடர்ந்து ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி ஆகிய நாடுகளில் அமைக்கப்பட்ட குடியரசுகளும், நேசநாடுகளின் அமைதி உடன்படிக்கைகள் நியாயமான முறையில் அமையும் என்ற நம்பிக்கையை, தோல்வியடைந்து நிராயுத பாணிகளாக நின்ற நாடுகளின் மக்களின் மனத்தில் தோற்றுவித்தன. ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக இருந்த உட்ரோ வில்சனும் நேசநாடுகள் வழங்கும் தண்டனைகள் நேசநாடு

களுக்கு எதிராகப் போராடிய நாடுகளின் மக்களுக்கு எதிராக அமையாது என்றும், எதேச்சாதிகார அரசுக்கு எதிராகவே அமையும் என்றும் கூறினர். மேலும் வில்சனுடைய பதினன்கு அம்சக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டே ஜெர்மனி 1918 நவம்பர் 11-ல் தன்னுடைய போர்க்கருவிகளைத் தூக்கி எறிந்துவிட்டுச் சமாதானத்திற்கு ஒப்புக்கொண்டது. இவை எல்லாம் தோல்வியடைந்த நாடுகளில் வாழ்ந்த மக்களின் மனத்தில் நல்ல நம்பிக்கையை வளர்த்தன.

தோல்வியடைந்த மக்களின் நம்பிக்கைக்கு வெற்றி பெற்ற நாடுகள் அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. நேச நாடுகளின் தலைவர்கள் வில்சனுடைய பதினன்கு அம்சக் கோட்பாடுகளுக்கு உதட்டளவிலேயே மதிப்புக் கொடுத்தனர். மேலும் இக்கோட்பாடுகள் தெளிவாக இல்லை என்றும், செயல்படுத்துவதற்கு உகந்தனவாக இல்லை என்றும் இவர்கள் கருதினர். எல்லாவற்றிற்கும் மேலாக நேசநாடுகள் உலகப் போரின் பொழுது பல இரகசிய உடன்படிக்கைகளைச் செய்துகொண்டு தங்களுக்கு உதவி செய்த நாடுகளுக்குப் பல உதவிகளை அளிப்பதாக வாக்களித்திருந்தன. எனவே தோல்வியடைந்த மக்களின் நம்பிக்கைக்கு ஏற்ப நேசநாடுகள் செயல்படுவது இயலாமற்போயிற்று. இந்நிலையில் நேசநாடுகளில் சிலர் வில்சனுடைய பதினன்கு அம்சக் கோட்பாடுகளுக்கும், இரகசிய உடன்படிக்கைகளுக்கும் ஓரளவு மதிப்புத் தர நினைத்தாலும், வெற்றியடைந்த மக்கள் தங்கள் பகைவர்களின்மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று எண்ணினர். பெரும்பாலான மக்கள் முதல் உலகப்போருக்கு ஜெர்மனியே முக்கிய காரணம் என்றும், அதற்கு ஜெர்மனி பதில் சொல்லியே தீரவேண்டுமென்றும் கருதினர். அத்துடன் இரஷ்யா, ருமேனியா ஆகிய நாடுகள் ஜெர்மனியுடன் சமாதானம் செய்து கொண்டபொழுது ஜெர்மனி விதித்த நிபந்தனைகளை மனத்தில் கொண்டு மேற்குப் பகுதியில் ஜெர்மனி வெற்றியடைந்திருந்தால் நேசநாடுகளை இரக்க சிந்தனையுடன் நடத்துமா என்பதைச் சிந்திக்க வேண்டுமென்றும், ஜெர்மனி இரக்க சிந்தனையுடன் நடந்துகொள்ளாது எனக் கருதினல் நாம் மட்டும் ஏன் ஜெர்மனியிடம் இரக்கம் காட்டவேண்டுமென்றும் நேசநாடுகளின் மக்கள் தங்கள் தலைவர்களைக் கேட்டனர்.

ஃபிரான்சு நாட்டின் பிரதிநிதியான கிளமென்ஸோவும், இத்தாலியின் பிரதிநிதியான ஆர்லாண்டோவும் மத்தியப் பேரரசுகளைக் கடுமையாகத் தண்டிக்கவேண்டுமெனக் கூறினர்.

பிரிட்டனில் 1918 டிசம்பரில் நடைபெற்ற பொதுத்தேர்தலின் பொழுது 'கெய்சரைத் தூக்கிலிடு, ஜெர்மனியைக் கொடுக்கு மாறு செய்' என்று கூறிய லாயிட் ஜார்ஜின் கருத்துகள் வலுவடைந்தன. ஐக்கிய அமெரிக்காவிலும் மக்கள் வில்சனுடைய கருத்துகளுக்கு அதிக ஆதரவு காட்டாமல் எல்லாவற்றையும் மாநாட்டின் வாயிலாகவே நிர்ணயிக்க வேண்டுமெனக் கூறினர்.

பின்னர் எல்லா நாடுகளும் சேர்ந்து ஒரு மாநாட்டைக் கூட்டி எல்லா முடிவுகளையும் தீர்மானிப்பது என முடிவு செய்யப் பட்டது. இச்சமயத்தில் நேசநாடுகள் தங்களுக்கிடையே ஒரு முடிவுக்கு வரும்வரை, தோல்வியடைந்த நாடுகளை அமைதி மாநாட்டில் சேர்த்துக்கொள்வது இல்லை என முடிவு செய்யப் பட்டது. அதே சமயத்தில் எல்லா உடன்பாடுகளையும் ஜெர்மனியின் பகைநாடான ஃபிரான்சின் தலைநகரிலேயே மேற் கொள்ள வேண்டுமென நேசநாடுகள் முடிவு செய்தன. ஹோஹன்ஸோலன் வம்சத்துப் பிரஷ்ய அரசரான முதலாம் வில்லியம் 1871 ஜனவரி 18-ல் ஃபிரான்சுடன் போரிட்டு வெற்றி கொண்டு, வார்சே மாளிகையில் தனது தளபதிகளும் அமைச்சர் களும் சூழ, ஜெர்மனியப் பேரரசர் என முடிசூடிக் கொண்டதால், நாற்பத்தெட்டாண்டுகள் கழித்து, ஜெர்மனி முதல் உலகப் போரில் முறியடிக்கப்பட்டபின் நேசநாடுகள் அதே வார்சே மாளிகையில், முதலாம் வில்லியம் முடிசூடிக் கொண்ட அதே சபையில் கூடி, ஹோஹன்ஸோலன் வம்சமும், பிஸ்மார்க்கும் ஜெர்மனியில் செய்ததை அழிக்க முடிவு செய்தன. இதன்படி அமைதி மாநாடு 1919 ஜனவரி 18-ல் வார்சே மாளிகையில் தனது முதல் கூட்டத்தைத் தொடங்கியது.

இரஷ்யாவைத் தவிர மற்ற எல்லா நேசநாடுகளிலிருந்தும் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர். இரஷ்யாவில் ரோமனோஷ் வம்சத்து ஸார் மன்னர் உலகப் போரில் சிறப்பாக ஈடுபடாததால், போர் முடிவதற்கு முன்னதாகவே ஸார் மன்னர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு இரஷ்யாவில் கம்யூனிஸப் புரட்சி ஏற்பட்டது. இதனால் இரஷ்யா இம்மாநாட்டில் கலந்துகொள்ள வில்லை. ஆனால் நேசநாடுகளும், நேசநாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்த மற்ற எல்லா நாடுகளும் இம்மாநாட்டில் கலந்து கொண்டன. இம்மாநாட்டில் கலந்துகொண்ட நாடுகளில் 32நாடு கள் மிகச் சிறப்பாகப் பங்கு பெற்றன. ஃபிரஞ்சு அரசியலில் 'கிழட்டுப் புலி' என அழைக்கப்பட்டவரும், ஃபிரான்சின் பிரதம ராக விளங்கியவரும் ஆகிய கிளமென்ஸோ இம்மாநாட்டிற்குத்

தலைமை வகித்தார். இம்மாநாட்டில் மார்ஷல் ஃபோச என்பவரும் பங்குபெற்றார். ஐக்கிய அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவரான உட்ரோ வில்சனும் அமெரிக்க முறையில் இம்மாநாட்டில் கலந்து கொண்டார். பிரிட்டனில் சிறந்த சமூக சீர்திருத்தவாதி எனப் புகழ் பெற்ற லாயிட் ஜார்ஜும், இருமுறை ஜப்பானின் பிரதமராக இருந்த செய்யான்ஜியும் (Saionji), கிரீஸின் சிறந்த தலைவராக இருந்த வெனிஸீலஸும், பிரிட்டனின் வெளிநாட்டுச் செயலாளராக இருந்தவரும் பெர்லின் மாநாட்டில் 1878-ல் கலந்து கொண்டவருமான ஆர்தர் பால்ஃபரும், தளபதிகள் போதா, ஸ்மட்ஸ் ஆகியவர்களும், ஆஸ்திரேலியா, கனடா, நியூஸிலாந்து ஆகிய நாடுகளின் பிரதம அமைச்சர்களும், இந்தியா, அரேபியா ஆகிய நாடுகளிலிருந்து சில சிற்றரசர்களும், பிரேசில் நாட்டுக் குடியரசுத் தலைவரும், பெல்ஜியம், போர்ச்சுகல், ருமேனியா, யூகோஸ்லாவியா, போலந்து, செக்கோஸ்லாவாகியா ஆகிய நாடுகளின் பிரதம அமைச்சர்களும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். இம்மாநாட்டில் சிறந்த அறிஞர்கள், புவியியல் வல்லுநர்கள், வரலாற்றாசிரியர்கள், பொருளாதார நிபுணர்கள் வழக்கறிஞர்கள், நிர்வாகிகள் ஆகியோர் பங்குபெற்றனர். இவர்களுடன் இவர்களின் பிரதிநிதிகளாகவும், உதவியாளராகவும் பலர் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

இம்மாநாட்டின் வேலைகள், பெரும்பாலும் நிபுணர் குழுக்களால் தனித்தனியாகக் கவனிக்கப்பட்டன. இவர்களால் தயாரிக்கப்பட்ட முடிவுகளே அமைதி மாநாட்டிற்கு அனுப்பப்பட்டு, மாநாட்டுப் பிரதிநிதிகளால் விவாதத்திற்குப் பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்டன. பல சமயங்களில் கிளமென்ஸோ, லாயிட் ஜார்ஜ், ஆர்லாண்டோ, வில்சன் ஆகிய நான்கு பெருந்தலைவர்களே இம்மாநாட்டின் முடிவுகளைத் தீர்மானித்தனர்.

இம்மாநாட்டில் எல்லா நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டதாலும், கருத்து வேறுபாடுகள் நிலவியதாலும் இம்மாநாட்டுப் பிரதிநிதிகளிடையே ஒற்றுமை ஏற்படுத்துவது சற்றுச் சிரமமான காரியமாயிற்று. வில்சன் சர்வதேச சங்கத்தை ஏற்படுத்த வேண்டுமெனக் கருதியதால், தம்முடைய கருத்தை நிறைவேற்றிக் கொள்ள, பல சலுகைகளை மற்ற நாடுகளுக்கு வழங்கினார். மேலும் இவர் சர்வதேசச் சங்கம் என்ற ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென முயன்றதால், தம்முடைய மற்ற 13 கோட்பாடுகளையும் அவ்வளவாக வலியுறுத்த முடியாமல் போயிற்று. அத்துடன் ஃபிரான்சு ரைன் நதிக்கரை முழுவதையும்

தனக்கே கொடுக்க வேண்டுமென வற்புறுத்தியது. ஆனல் ஃபிரான்சின் இக்கோரிக்கையை வில்சனும், லாயிட் ஜார்ஜும் எதிர்த்தனர். இவ்வாறே இத்தாலி ஏட்ரியாடிக் கடலில் அமைந்துள்ள ஃப்யூம் துறைமுகத்தைத் தன்னிடம் கொடுக்க வேண்டுமென வாதாடிப் பெற்றது.

இம்மாநாட்டில் சிறிய நாடுகளான போலந்து, செக்கோஸ்லாவாகியா, ருமேனியா, யூகோஸ்லாவியா, கிரீஸ் போன்ற நாடுகளைத் திருப்திப்படுத்துவது மிகச் சிரமமான ஒன்ருக இருந்தது. கிழக்கு மத்திய ஐரோப்பாவிலும், தெற்கு ஐரோப்பாவிலும் பல்வேறுபட்ட இனத்தவர்கள் எல்லா நாடுகளிலும் வாழ்ந்துவந்ததால் அவர்களை ஒரு குறிப்பிட்ட தேசிய இனம் சார்ந்த நாட்டில் கட்டுப்படுத்துவது சிரமமாக இருந்தது. உதாரணமாக, போலிஷ் மொழியைப் பேசியவர்கள் அனைவரும் போலந்து நாட்டில் சேர்க்கப்பட்டனர்; இவர்களுடன் குறிப்பிட்ட அளவு ஜெர்மானியர்களும் இருந்தனர். இவ்வாறே பிற நாடுகளிலும் பிற இனத்தவர்கள் இருந்தனர். இதனல் பகைவர்களுக்கும், நேச நாடுகளுடன் சேர்ந்த நாடுகளுக்கும் பாதகமான முடிவுகளை இம்மாநாடு மேற்கொள்ள வேண்டியதாயிற்று. ஆனல் இம்மாநாடு பகைவர்களுக்கு மட்டுமே பாதகமான முடிவுகளை மேற்கொண்டது. சில சமயங்களில் நேச நாடுகளின் நட்பு நாடுகளுக்கிடையே அடிக்கடி எல்லைத் தகராறுகள் ஏற்பட்டன. இதனல் மாநாட்டின் பிரதிநிதிகள் சில சமயங்களில் கடுமையான முறையை மேற்கொண்டு இம்மாநாட்டின் முடிவுகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

நேசநாடுகள் ஜெர்மனியுடன் செய்து கொள்ள வேண்டிய அமைதி உடன்படிக்கை (80,000 சொற்கள் கொண்டது) தயாரிக்கப்பட்டு, அது நான்கு பெருந்தலைவர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர் இவ்வுடன்படிக்கை 1919 மே 6-ல் அமைதி மாநாட்டின்முன் வைக்கப்பட்டது. இதற்கு அடுத்த நாள் ஜெர்மனியின் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர். இதனையடுத்து, தயார் செய்யப்பட்ட உடன்படிக்கையின் நகல் ஜெர்மானியப் பிரதிநிதிகளிடம் கொடுக்கப்பட்டது. இவ்வுடன்படிக்கை நியாயமற்றதாகவும் தாங்கமுடியாத அளவு தங்களைக் கொடுமைப்படுத்துவதாகவும் அமைந்திருக்கிறது என்று ஜெர்மானியப் பிரதிநிதிகள் கூறி இதனை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். இத்துடன் தாங்கள் வில்சனுடைய பதினன்கு அம்சக் கோட்பாடுகளுக்கு மதிப்பளித்தே அமைதிக்கு உடன்பட்டனர் என்றும், இவ்வுடன்

படிக்கை வில்சனுடைய பதினான்கு அம்சக் கோட்பாடுகளுக்கு எதிராக உள்ளது என்றும் கூறி இவ்வுடன்படிக்கையில், பெருமளவு மாற்றம் செய்ய வேண்டுமெனக் கூறினர்.

ஜெர்மானியப் பிரதிநிதிகளின் கோரிக்கைகளுக்கு நேச நாடுகளின் பிரதிநிதிகள் சிறிதும் செவிசாய்க்கவில்லை. இதனால் ஜெர்மனியில் பல புரட்சிகள் தோன்றின. நேசநாடுகள் உடன்படிக்கையின் நிபந்தனைகளை ஜெர்மனி ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்தினர். இதனால் பெர்லினில் இருந்த அமைச்சரவை பதவி விலகியது. பின்னர் பலத்த எதிர்ப்புகளுக்கிடையே வெய்மரில் இருந்த ஜெர்மனியின் அரசியலமைப்புச் சபை 1919 ஜூன் 23-ல் நிபந்தனை எதுவுமின்றி நேசநாடுகள் தயாரித்த உடன்படிக்கையை இறுதியாக ஏற்றுக்கொண்டது.

வார்சே உடன்படிக்கை

இதனால் பதினான்காம் லூயியினால் கட்டப்பட்ட வார்சே மாளிகையின் அரசவையில், ஜெர்மானியப் பிரதிநிதிகளும் ஜெர்மனிக் கெதிரான 31 நாடுகளின் பிரதிநிதிகளும் 1919 ஜூன் 28-ல் நேசநாடுகளால் தயாரிக்கப்பட்ட உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டு அதில் கையொப்பமிட்டனர். இவ்வுடன் படிக்கை வார்சே மாளிகையில் ஏற்றுக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப் பட்டதால் இது வார்சே உடன்படிக்கை என்று சிறப்பாகப் பெயர் பெற்றது. இவ் வுடன்படிக்கை யின்படி ஜப்பானுக்குச் சில சலுகைகளை வழங்கியதால் சீனா இவ்வுடன்படிக்கையில் கையெழுத்திட மறுத்துவிட்டது. தென்னாப்பிரிக்காவின் சார்பில் இவ்வுடன்படிக்கையில் கையெழுத்திட்ட தளபதி ஸ்மட்ஸ் இவ்வுடன்படிக்கை எதிர் பார்த்தபடி தாராள மனப்பான்மையுடன் இல்லை எனக் குறை கூறினார். இவ்வுடன்படிக்கை ஆஸ்திரியாவின் பட்டத்து இளவரசரான பிரான்சிஸ் பெர்டினாண்டு கொலை செய்யப்பட்ட அதே தினத்தில் (ஜூன் 28) கையெழுத்தாகியதும், இவ்வுடன் படிக்கையை இருபிரிவினரும் ஒத்துக் கொண்டு கையெழுத் திட்ட நிகழ்ச்சியும் முதலாம் வில்லியம் வார்சே மாளிகையில் ஜெர்மானியப் பேரரசராக முடிசூட்டிய நிகழ்ச்சியை நினைவுறுத் தும் வகையில் அமைந்தது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். 'பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்' என்பதற்கு இவ்வுடன்படிக்கை வார்சே மாளிகையில்

கையெழுத்தாகியது ஓர் எடுத்துக்காட்டாக அமைந்தது. இவ்வுடன்படிக்கையின் காரணமாக, உலகப்போர், ஏற்பட்ட ஐந்தாவது ஆண்டில் முற்றிலும் முடிவடைந்தது.

இவ்வுடன்படிக்கையின்படி ஜெர்மனி அல்சேஸ், லொரைன் ஆகிய பகுதிகளை ஃபிரான்சுக்கும், யூபென், மால்மெடி ஆகிய நகரங்களை பெல்ஜியத்திற்கும், மேமெல் துறைமுகத்தை லிதுவேனியாவிற்கும், போசன் மாநிலங்கள், மேற்குப் பிரஷ்யப் பகுதி ஆகியவற்றைப் போலந்துக்கும் விட்டுக் கொடுத்தது. (ஆனல் மேமல் துறைமுகம் 1939-ல் ஜெர்மனியால் மீண்டும் கைப்பற்றப்பட்டது.) இத்துடன் பன்னடுகளின் சார்பில் மேல் சைலீஷியா, கிழக்குப் பிரஷ்யா ஆகிய பகுதிகளில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டு மேல் சைலீஷியாவைப் போலந்தும், ஸ்லீஷ்விக்கை டென்மார்க்கும் இணைத்துக் கொள்ள இவ்வுடன்படிக்கை வழிவகை செய்தது. இத்துடன் ஜெர்மனியின் வசமிருந்த முக்கிய துறைமுகமான டான்ஸிக் (Danzig) பன்னட்டு நிறுவனத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டதுடன், சார் (Saar) பகுதியில் இருந்த வளப்பமான நிலக்கரிச் சுரங்கங்களும் பதினைந்து ஆண்டுகளுக்குச் சர்வதேசச் சங்கத்தின் நிர்வாகத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டன. பதினைந்தாண்டுகள் கழித்துப் பொது வாக்கெடுப்பின்மூலம் இப்பகுதி ஜெர்மனியுடன் இணைய வேண்டுமா அல்லது சர்வதேசச் சங்கத்தின் கீழே தொடர்ந்து இருக்க வேண்டுமா எனத் தீர்மானிக்க வேண்டும் எனவும் இவ்வுடன்படிக்கை கூறியது. மேலும் இவ்வுடன்படிக்கையின் வாயிலாக ஜெர்மனியின் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் ஃபிரான்சிடம் ஒப்படைக்கப்பட்டது.

மேலும் ஜெர்மனி இவ்வுடன்படிக்கையின்படி பல ஐரோப்பியப் பகுதிகளை இழந்ததோடு மட்டுமல்லாமல், வெளிநாடுகளில் தனதாதிக்கத்தின் கீழ் இருந்த பகுதிகளையும் இழந்தது. கியாசௌ என்ற ஜெர்மனியிடமிருந்த சீனத் துறைமுகத்தையும், ஷாண்டங் மாநிலத்தையும், பசிபிக் பெருங்கடலில் பூமத்திய ரேகைக்கு வடக்கே இருந்த சில தீவுகளையும் ஜெர்மனி ஜப்பானுக்குக் கொடுத்தது. இத்துடன், சோமா என்ற பகுதியை நியூஸிலாந்திற்கும், பசிபிக் பெருங்கடலில் பூமத்திய ரேகைக்குக் கிழக்கே இருந்த மற்றப் பகுதிகளை ஆஸ்திரேலியாவிற்கும், ஜெர்மனிய தென்மேற்கு ஆப்பிரிக்காவைத் தென்னுப்பிரிக்கக் கூட்டமைப்பிற்கும், ஜெர்மனியின் கிழக்கு ஆப்பிரிக்காவை பிரிட்டனுக்கும் ஜெர்மனி வழங்கியது. ஜெர்மனியின் கிழக்காப்பிரிக்காவில் ஒரு பகுதி பெல்ஜியத்திற்கு விட்டுக்

கொடுக்கப்பட்டது. காமரூன், டோகோலாந்து ஆகிய ஜெர் மானியப் பகுதிகள் பிரிட்டன், ஃபிரான்சு ஆகிய நாடுகளால் பகிர்ந்து கொள்ளப்பட்டன. இவ்வாறு பிரிந்து சென்ற பல ஜெர்மானியப் பகுதிகள் சர்வதேசச் சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்தன. இப்பகுதிகளின் வரவு செலவுகளைச் சர்வதேசச் சங்கம் தணிக்கை செய்தது.

மேலும் வார்சே உடன்படிக்கையின்படி பெல்ஜியம், போலந்து, செக்கோஸ்லாவாகியா, ஜெர்மானிய ஆஸ்திரியா ஆகியவற்றின் சுதந்திரத்தை ஜெர்மனி அங்கீகரித்தது. இத்துடன் 1918 மார்ச்சில் ஜெர்மனி இரஷ்யாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளை விட்டுக் கொடுத்து விடவும், அவ்வுடன்படிக்கைகளை நேசநாடுகள் தங்கள் விருப்பம்போல் மாற்றிக்கொள்ள அனுமதி வழங்கவும் ஜெர்மனி உடன் பட்டது.

இராணுவத்தைப் பொறுத்த அளவில் வார்சே உடன் படிக்கையின்படி ஜெர்மனி தன்னுடைய இராணுவத்தை 1,00,000 பேர்கள் கொண்டதாகக் குறைத்துக் கொள்ளவும், மேற்கொண்டு தனது இராணுவத்தைப் பலப்படுத்தாமல் இருக் கவும், மேற்குப் பகுதியில் உள்ள தனது எல்லாக் கோட்டை களையும் இடித்துவிடவும், இராணுவத் தளவாடங்களை ஏற்றுமதி இறக்குமதி செய்வதை நிறுத்திக் கொள்வதோடு அவற்றை உற்பத்தி செய்வதை முழுதும் நிறுத்திக் கொள்ளவும், தன் னுடைய கடற்படையை 6 போர்க்கப்பல்களையும், 6 சிறு கப்பல் களையும், 12 போர்ப்படகுகளையுமே கொண்ட ஒரு சிறு அமைப் பாகக் குறைத்துக் கொள்ளவும், நீர்மூழ்கிக் கப்பல்கள் எதையும் வைத்துக்கொள்ளாமல் இருப்பதற்கும், இராணுவக் கடற்படைப் பயிற்சிகளை விட்டுவிடவும் ஒப்புக்கொண்டது. இத்துடன் ஹெலிகோலந்தில் இருந்த தனது இராணுவக் கோட்டைகளை அழித்துவிடவும், சீல் கால்வாயை எல்லா நாடுகளும் சுதந்திர மாகப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கவும், பால்டிக் கடல் பகுதியில் எந்த ஒரு புதிய கோட்டையையும் கட்டாமல் இருப்ப தற்கும், கடல் கடந்து தான் கொண்டிருந்த செய்தித் தொடர் புகளைச் சர்வதேசச் சங்கத்திடம் ஒப்படைத்துவிடவும், உலகப் போருக்குக் காரணமான இரண்டாம் வில்லியத்தின் மீது பன் னாட்டு நீதிமன்றம் விசாரணை நடத்துவதற்குத் தன்னுடைய ஒப்புதலை வழங்கவும், ஜெர்மனி இவ்வுடன்படிக்கையின்படி ஒப்புக்கொண்டது. டச்சுக்காரர்கள் தங்கள் நாட்டில் தஞ்சம் புகுந்த இரண்டாம் வில்லியத்தைப் பன்னாட்டு நீதிமன்றம்

விசாரிக்கவோ, தண்டனை வழங்கவோ உரிமையில்லை என்று கூறி, சர்வதேசச் சங்கத்திடம் ஒப்படைக்க மறுத்து விட்டனர். எனவே நேசநாடுகள் இம்முயற்சியைக் கைவிட்டன.

அடுத்து நேசநாடுகள் முதல் உலகப் போருக்கு ஜெர்மனியே முழுதும் காரணமென்றும், இதனால் நேசநாடுகளுக்கும் அந்நாடுகளின் மக்களுக்கும் ஏற்பட்ட எல்லா நஷ்டங்களுக்கும் தானே நஷ்ட ஈடு கொடுக்கக் கடமைப்பட்டது என்றும் ஜெர்மனியை ஒத்துக்கொள்ள வைத்தன. எனவே ஜெர்மனி நஷ்ட ஈட்டின் முதல் தவணையாக 500 கோடி டாலர்கள் (சுமார் 4500 கோடி ரூபாய்) கொடுக்க வேண்டுமென்றும், மற்ற தவணைகளை நேசநாடுகளின் ஆலோசனையின் பேரில் ஒரு தனிக் கமிட்டி நிர்ணயிக்க வேண்டுமென்றும் இவ்வுடன்படிக்கையின்படி ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்கிடையில் ஜெர்மனி தன்னுடைய நீர்மூழ்கிக் கப்பல்களின் மூலம் மூழ்கடித்த கப்பல்களுக்காக ஜெர்மனியின் எல்லா வியாபாரக் கப்பல்களையும் புதிதாகக் கட்டப்பட்ட கப்பல்களையும் நேசநாடுகள் இவ்வுடன்படிக்கையின் படி எடுத்துக் கொண்டன. இத்துடன் பிரான்சின் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகள் போரின்பொழுது அழிக்கப்பட்டமையால் அவற்றை மீண்டும் புதுப்பிப்பதற்காகவும், பிரான்சு, பெல்ஜியம், இத்தாலி ஆகிய நாடுகளுக்கு நிலக்கரி வழங்கவும் ஃபிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய நாடுகளிலிருந்து எடுத்துச்சென்ற கலைப் பொருள்களைத் திருப்பிக் கொடுப்பதற்கும் பெல்ஜியத்தின் லோவைன் பல்கலைக்கழகத்திலிருந்து கைப்பற்றிய புத்தகங்களையும், கைப்பிரதிகளையும் மீண்டும் தருவதற்கும் ஜெர்மனி ஒப்புக்கொண்டது.

வார்சே உடன்படிக்கை முழுவதுமாக நிறைவேற்றப்படும் வரை நேசநாடுகளின் படைகள் ரைன் நதியின் இடக் கரையிலும், காப்ளின்ஸ், கோலோக்னி, மெயின்ஸ் ஆகிய நதிகளின் வலக் கரையிலும் ஜெர்மனியின் செலவில் தங்கி இருக்கவும் இவ்வுடன்படிக்கை வழிவகை செய்தது. ஜெர்மனி இவ்வுடன்படிக்கையை நிறைவேற்றினால் கோலோக்னி நதிக்கரை ஐந்தாண்டுகள் கழித்தும், காப்ளின்ஸ் நிதிக்கரை பத்தாண்டுகள் கழித்தும், மெயின்ஸ் நதிக்கரை பதினைந்தாண்டுகள் கழித்தும் நேசநாடுகளின் படைகளால் காலி செய்யப்படும் எனவும் இவ்வுடன்படிக்கை கூறியது.

எனவே இவ்வுடன்படிக்கையின் வாயிலாக ஜெர்மனியும் அதன் மக்களும் ஈவு இரக்கமின்றித் தொல்லைகளுக்குள்ளா

யினர். ஜெர்மனியின் பெரும்பகுதியும், அதன் மக்களும் ஐரோப்பிய நாடுகளால் கொடுமைப்படுத்தப்பட்டனர். வெளி நாட்டில் இருந்த தன்னுடைய பெரும்பகுதிகளை ஜெர்மனி இழந்தது. மேலும் ஜெர்மனி நிராயுதபாணியாகத் தனித்து விடப்பட்டதுடன், இந்நாட்டின் பகுதிகள் நேசநாடுகளிடம் அடகு வைக்கப்பட்டன. அன்றியும் ஜெர்மனி வெற்றி யடைந்த நாடுகளின் ஆதிக்கத்தின் கீழும், கண்காணிப்பின் கீழும் வந்தது.

3. பிற அமைதி உடன்படிக்கைகள்

பாரிஸில் நடைபெற்ற அமைதி மாநாட்டில் ஜெர்மனியிடம் நேசநாடுகள் வார்சே உடன்படிக்கையைச் (ஜூன் 1919) செய்துகொண்ட பின்னர், நேசநாடுகள் உலகப்போரின் பொழுது ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டு தங்களுக்கு எதிரா கப் போரிட்ட ஆஸ்திரியா, ஹங்கேரி, பல்கேரியா, உதுமானியப் பேரரசு ஆகிய நாடுகளுடன் தனித்தனியே அமைதி உடன் படிக்கைகள் செய்து கொண்டன. அத்துடன் இம் மாநாடு கிழக்கு மத்திய ஐரோப்பாவில் தேசியக் கருத்துகளின் வளர்ச் சியின் காரணமாக உருப்பெற்ற போலந்து, செக்கோஸ்லா வாகியா, யூகோஸ்லாவியா, ருமேனியா போன்ற புதுநாடு களின் தனித்தன்மையையும், சுதந்திரத்தையும் 1919—1920-ல் அங்கீகரித்தன. நேசநாடுகளின் நிபந்தனைகள் அடங்கிய வார்சே உடன்படிக்கையை ஜெர்மனியின் தலைவர்கள் அடங்கிய பிரதிநிதிக் குழுவை ஏற்றுக் கொள்ளுமாறு செய்தது போலத் தங்களுக்கு எதிராக உலகப்போரின் பொழுது போரிட்ட பிற நாடுகளின் மீதும் தங்கள் நிபந்தனைகளை உடன் படிக்கைகள் என்ற பெயரில் நேசநாடுகள் திணித்தன. இதனால் நேசநாடுகள், புனித ஜெர்மயின் உடன்படிக்கையை ஆஸ்திரி யாவுடன் 1919 செப்டம்பர் 10-லும், நியூல்லி உடன்படிக் கையைப் பல்கேரியாவுடன் 1919 நவம்பர் 27-லும், டிரயனுன் உடன்படிக்கையை ஹங்கேரியுடன் 1920 ஜூன் 20 லும், செவ் ரெஸ் உடன்படிக்கையை உதுமானியப் பேரரசுடன் 1920 ஆகஸ்டு 10-லும் செய்துகொண்டன.

புனித ஜெர்மயின் உடன்படிக்கை (1919)

நேசநாடுகள் ஜெர்மனியுடன் செய்து கொண்ட வார்சே உடன்படிக்கையை அடுத்து ஜெர்மனியின் நட்பு நாடான ஆஸ் திரியாவுடன் உடன்படிக்கை என்ற பெயரில் பல நிபந்தனைகளை

விதித்தன. இந் நிபந்தனைகளை ஆஸ்திரிய நாட்டின் பிரதிநிதிகள் புனித ஜெர்மயின் என்ற இடத்தில் 1919 செப்டம்பர் 10-ல் ஏற்றுக் கொண்டனர். எனவே, இது புனித ஜெர்மயின் உடன்படிக்கை என வழங்கப்படுகிறது. இவ்வுடன்படிக்கையின்படி ஹங்கேரி, செக்கோஸ்லாவாகியா, போலந்து, யூகோஸ்லாவியா ஆகியவற்றின் சுதந்திரத்தை ஆஸ்திரியா அங்கீகரித்ததுடன் அவற்றின் பகுதிகளையும் விட்டுக் கொடுத்தது. இத்துடன் ஆஸ்திரியா-ஹங்கேரியில் ஹாப்ஸ்பர்க் பேரரசின் கீழ் இருந்த கணிசமான பகுதிகளை இத்தாலி, ருமேனியா ஆகிய நாடுகளுக்கு விட்டுக்கொடுத்தது. இதன்படி ஜெர்மனியர்கள் வாழ்ந்துவந்த ஒரு சிறிய ஆஸ்திரியப் பகுதி ஜெர்மன்-ஆஸ்திரியா என்ற தனி நாடாகப் பிரிக்கப் பட்டது. இப்பகுதி போர்ச்சுகல் நாட்டைவிடச் சிறியதாக இருந்தது. ஆஸ்திரியா-ஹங்கேரியப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்த ஜெர்மன் மொழியைப் பேசி வந்த டைரோல் (Tyrol) என்ற மற்றொரு பகுதி ஆஸ்திரியாவினின்றும் பிரிக்கப்பட்டு இத்தாலியுடன் இணைக்கப்பட்டது. இத்துடன் ஆஸ்திரியா எதிர்காலத்தில் ஜெர்மனியுடன் இணைவதில்லை என்றும் உறுதி கூறியது. எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னுடைய இராணுவத்தை 30,000 பேர்களை மட்டுமே கொண்ட ஒரு சிறிய இராணுவமாக வைத்துக் கொள்வதற்கும், நஷ்டஈடுகளை நிர்ணயிக்கும் குழு சிபாரிசு செய்யும் தொகையை நேசநாடுகளுக்கு நஷ்டஈடாகக் கொடுப்பதற்கும் ஆஸ்திரியா உடன்பட்டது. இத்துடன் ஆஸ்திரியா தன் துறைமுகங்களை நேசநாடுகளுக்கு விட்டுக்கொடுத்தது.

நியூல்லி உடன்படிக்கை (நவம்பர் 1919)

நேசநாடுகள் ஜெர்மனியின் மற்றொரு நட்பு நாடான பல்கேரியாவுடன் 1919 நவம்பர் 27-ல் நியூல்லி என்ற இடத்தில் மற்றோர் அமைதி உடன்படிக்கையைச் செய்து கொண்டன. இவ்வுடன்படிக்கையின்படி பால்கன் போரின் (1912—1913) பொழுது பல்கேரியா கைப்பற்றிய பெரும் பகுதிகளையும் உலகப் போரின்பொழுது கைப்பற்றிய பகுதிகளையும் பல்கேரியா இழந்தது. இதனால் டோப்ருஜா என்ற பகுதி ருமேனியாவிற்கும், மாசிடோனியாவின் பெரும் பகுதி யூகோஸ்லாவியாவிற்கும், தெராஸியக் கடற்கரை கிரீஸுக்கும் கொடுக்கப் பட்டது. இத்துடன் தனது இராணுவத்தை 33,000 பேர்கள் கொண்ட ஓர் இராணுவமாகக் குறைத்துக் கொள்ளவும், சுமார் 50 கோடி டாலர்கள் நஷ்ட ஈடாகக் கொடுப்பதற்கும் பல்கேரியா ஒப்புக்கொண்டது.

டிரயனுன் உடன்படிக்கை (1920 ஜூன் 4)

பல்கேரியாவுடன் உடன்படிக்கை செய்துகொண்ட பின்னர் நேசநாடுகள், தங்கள் கவனத்தை ஹங்கேரியின் பக்கம் திருப்பியது. இதனுல் இந்நேச நாடுகள் தங்கள் நிபந்தனைகளை டிரய்னுன் என்ற இடத்தில் ஹங்கேரியப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தனர். ஹங்கேரியப் பிரதிநிதிகளும் இந் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு நேசநாடுகளுடன் டிரயனுன் உடன்படிக்கையை 1920 ஜூன் 4-ல் செய்துகொண்டனர். இவ் வுடன்படிக்கையின்படி மாகியரல்லாதவர்கள் வாழ்ந்து வந்த ஹங்கேரியப் பகுதி தனியாகப் பிரிக்கப்பட்டது. ஹங்கேரியின் ஸ்லோவக் மாநிலங்கள் செக்கோஸ்லாவாகியாவுடன் இணைக்கப்பட்டன. டிரான்சில்வேனியாவும் இதனைச் சேர்ந்த மேற்குப் புறமாக இருந்த ஒரு நீண்ட பகுதியும் ருமேனியாவுடன் இணைக்கப்பட்டது. குரோஷியா என்ற ஹங்கேரியப் பகுதி, யூகோஸ்லாவியாவிற்கு வழங்கப்பட்டது; பேனட் என்ற பகுதியை யூகோஸ்லாவியாவும் ருமேனியாவும் தங்களிடையே பகிர்ந்து கொண்டன. இதனுல் 1,25,000 சதுரமைல் பரப்பளவினையும், 2,20,00,000 பேர்களையும் கொண்டு, கடல் வாணிபத்தில் ஈடுபட்டுப் பேரரசாக விளங்கிய ஹங்கேரி, நான்கு புறங்களிலும் தேசிய இனம் சார்ந்த நாடுகளால் சூழப்பட்டு, 36,000 சதுரமைல்களையும் 80 இலட்சம் மக்களையும் மட்டுமே கொண்ட ஒரு தேசிய நாடாகச் சுருங்கியது. இத்துடன் இந் நாட்டின் இராணுவத்தினரின் எண்ணிக்கை 35,000 பேர்களாகக் குறைக்கப்பட்டது.

செவ்ரெஸ் உடன்படிக்கை (1919 ஆகஸ்டு 10)

நேசநாடுகள் உதுமானியப் பேரரசுடன் நிபந்தனைகள் விதித்து உடன்படிக்கை செய்துகொள்ளச் சிறிது காலம் தாழ்த்தின. நேச நாடுகளிடையே நிலவிய கருத்து வேற்றுமைகள்தாம் இதற்கு முக்கிய காரணமாகும். குறிப்பாக பிரான்சு, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கிடையேயும், இத்தாலி, கிரீஸ் ஆகிய நாடுகளுக்கிடையேயும், துருக்கியிடமிருந்து கைப் பற்றிய பகுதிகளையும் பொருள்களையும் பகிர்ந்து கொள்வதில் அதிகக் கருத்து வேறுபாடுகள் நிலவின. இத்துடன் துருக்கியில் துருக்கிய சுல்தான் கான்ஸ்டான்டிநோபிளைத் தலைநகராகக் கொண்டும், முஸ்தஃபா கமால் அங்காராவைத் தலைநகராகக் கொண்டும் இரு போட்டி அரசாங்கங்களை நிறுவினர். இதனுலும் உதுமானியப் பேரரசுடன் நேசநாடுகள் உடன் படிக்கை செய்து கொள்வதில் காலதாமதம் ஏற்பட்டது. இருப்

பினும் சில மாதங்களுக்குப் பின்னர் நேசநாடுகள் உதுமானியப் பேரரசுடன் செவ்ரெஸ் என்ற இடத்தில் தங்கள் நிபந்தனைகளை விவாதித்தன. இதன் பயனாக சுல்தானுடைய அரசு 1920 ஆகஸ்டு 10-ல் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டது. இது செவ்ரெஸ் உடன்படிக்கை என வழங்கப்படுகிறது. இவ்வுடன் படிக்கையின்படி செங்கடலுக்குக் கிழக்குப் பகுதியில் அமைந் துள்ள ஹெசாப்பினுடைய அரேபிய நாட்டிற்குச் சுதந்திரம் வழங்கவும், பன்னாட்டுப் பாதுகாப்பின் கீழ் ஆர்மேனியாவை ஒரு கிறிஸ்தவ சுதந்திரக் குடியரசாக இருக்க அனுமதிப்பதற்கும், பாலஸ்தீனம், தற்பொழுது ஈராக் எனப்படும் மெசபடோமியா, டிரான்ஸ்ஜோர்டான் ஆகிய மூன்று பகுதிகளும் உதுமானியப் பேரரசிலிருந்து பிரிக்கப்பட்டு பிரிட்டனின் கண்காணிப்பின் கீழ்ச் செயல்படுவதற்கும், சிரியா ஃபிரான்சின் கீழ்ச் செயல்படு வதற்கும், சைலீஷியாவில் பிரான்சின் ஆதிக்கம் வளர்ச்சியடை வதற்கும், அனடோலியா என்ற பகுதியிலும், அடாலியா என்ற பகுதியிலும் இத்தாலியின் ஆதிக்கம் வளர்ச்சியடைவதற்கும், ஸ்மிர்னா என்ற பகுதியும், இதனைத் தொடர்ந்து உள்ள ஆசியா மைனர் கடற்கரைப் பகுதியும், தெராஸ், ஏட்ரியானோபிள், கலி போலி தீபகற்பம் ஆகியவற்றையும், ஈஜியக் கடலில் உள்ள மற்ற தீவுகளையும் கிரீஸுக்கு விட்டுக்கொடுப்பதற்கும் உதுமா னியப் பேரரசு ஒப்புக் கொண்டது. இத்துடன் மத்தியதரைக் கட லுக்கும், கருங்கடலுக்குமிடையே அமைந்துள்ள டார்டனல்ஸ், பாஸ்பரஸ் ஜலசந்திகளை எல்லா நாடுகளும் பயன்படுத்த அனுமதிப்பதற்கும் துருக்கியப் பேரரசு ஒப்புக் கொண்டது. இதனால் ஒரு காலத்தில் வலிமையுடன் திகழ்ந்த உதுமானியப் பேரரசு, இப்பொழுது மிகச் சுருங்கி, துருக்கி என்ற பெயரில் கான் ஸ்டான்டிநோபிள் என்ற நகரத்தையும், ஆசியா மைனர் பகுதியையும் மட்டுமே கொண்டதாக இருந்தது. இத்துடன் துருக்கி தனது கடன்களைக் குறைத்துக் கொள்ளவும், வெளி நாடுகள் தன்னுடைய நாட்டின் பொருளாதாரத்தில் தலையிட அனுமதிப்பதைக் குறைத்துக் கொள்ளவும் இவ்வுடன்படிக்கை யின்படி ஒப்புக்கொண்டது.

கான்ஸ்டான்டிநோபிளில் இருந்த சுல்தான் ஆறும் முகம்மதுவினுடைய அரசு செவ்ரெஸ் உடன்படிக்கையை ஏற் றுக் கொண்டது. ஆனால் அங்காராவில் முஸ்தஃபா கமாலின் தலைமையின் கீழ் இருந்த துருக்கியத் தேசிய சபை இவ்வுடன் படிக்கையை அங்கீகரிக்க மறுத்தது. அத்துடன் நேசநாடு களின் படைகள் திரும்பப் பெறப்பட்டதையும், தளர்ச்சியடைந் திருந்ததையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு

முஸ்தஃபா கமால் தம்முடைய படையின் உதவியால் அமெரிக்கக் குடியரசைக் குறை கூறியதுடன், இத்தாலியப் படைகளை அனடோலியா என்ற இடத்தில் முறியடித்தார். அத்துடன் சைலீஷியாவைத் துருக்கியப் படைகள் கைப்பற்றுவதையும் தடுத்து நிறுத்தினர். இதனால் செவ்ரெஸ் உடன்படிக்கையின்படி பிரிட்டன், கிரீஸ் ஆகிய நாடுகள் அதிக இலாபம் பெற்றதை விரும்பாத ஃபிரான்சு, இத்தாலி ஆகிய நாடுகளின் அரசுகள் இவ்வுடன்படிக்கையை மறுபரிசீலனை செய்ய ஆதரவளித்தன. இச்சமயத்தில் மாஸ்கோவிலிருந்த இரஷ்யக் கம்யூனிஸ்டு அரசு, செவ்ரெஸ் உடன்படிக்கையைக் குறைகூறி, துருக்கியத் தேசியவாதிகளுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டது. இதன்படி கார்ஸ், ஆர்தஹான் ஆகிய பகுதிகளைத் துருக்கி திரும்பவும் பெற்றது. துருக்கி, இரஷ்யா ஆகிய இரு நாடுகளும் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஒன்றுபட்டுச் செயல்பட ஒன்றுக்கொன்று ஒப்புக்கொண்டன.

இதற்கிடையில், செவ்ரெஸ் உடன்படிக்கையை மறுபரிசீலனை செய்தால், தான் பல பகுதிகளைப் பெறமுடியாமல் போய்விடும் எனக் கருதிய பிரிட்டிஷ் அரசு, கிரீஸ் நாட்டிலிருந்த அரசர் கான்ஸ்டன்டைனையும், வெனிஸலஸ் என்ற அரசியல் தலைவரையும் துருக்கியத் தேசியவாதிகளுக்கு எதிராகப் போரிடுவதற்கும், செவ்ரெஸ் உடன்படிக்கையைச் செயல்படுத்துவதற்கும் தூண்டியது. இதனால் கிரேக்கப்படை கான்ஸ்டன்டைன் என்பவரது தலைமையின் கீழ் 1921 ஜூலையில் முஸ்தஃபா கமாலுக்கு எதிராக ஸ்மிர்னு என்ற இடத்திலிருந்து புறப்பட்டது. இப் படை தொடக்கத்தில் சில வெற்றிகளை அடைந்தாலும், பின்னர் துருக்கியப் படைகளால் துரத்தப்பட்டுப் பின்வாங்கியது. இச்சமயத்தில் செவ்ரெஸ் உடன்படிக்கையால் அதிக நன்மையைப் பெறமுடியாத பிரான்சும் இத்தாலியும் துருக்கியப் படைகளுக்கு உதவின. ஆனால் பிரிட்டிஷ்காரர்களிடமிருந்து தனக்கு உதவி கிடைக்குமென எதிர்பார்த்த கான்ஸ்டன்டைன் ஏமாந்தார். இதனால் முஸ்தஃபா கமாலின் படைகள் ஆசியா மைனர் முழுவதையும் கைப்பற்றிய பின்னர், 1922 நவம்பரில் கான்ஸ்டான்டிநோபிளைக் கைப்பற்றியது. முஸ்தஃபா கமாலின் இவ் வெற்றி செவ்ரெஸ் உடன்படிக்கையைச் செயலற்றதாக்கிவிட்டு, வேறு ஒரு புதிய உடன்படிக்கைக்கு வழிவகை செய்தது.

இதன்படி பலத்த வாக்கு வாதங்களுக்குப் பின்னர் துருக்கிக்கும் நேசநாடுகளுக்குமிடையே ஸ்விட்சர்லாந்து

நாட்டிலுள்ள லௌசேன் என்ற இடத்தில் 1923 ஜூலை 24-ல் ஓர் உடன்படிக்கை கையெழுத்தாயிற்று. இவ்வுடன்படிக்கையின்படி ஹெலாஸ், பாலஸ்தீனம், டிரான்ஸ்ஜோர்டான், ஈராக், சிரியா ஆகிய பகுதிகளைத் துருக்கி முழுவதுமாக விட்டுக் கொடுத்தது. ஆனால் அனடோலியா, சைலீஷியா, அடாலியா, ஸ்மிர்னா, கான்ஸ்டான்டிநோபிள், கிழக்கு தெராஸ் ஆகிய பகுதிகள் முழுவதையும் துருக்கி தன்னிடம் வைத்துக்கொண்டது. இத்துடன் பாஸ்பரஸ் ஜலசந்திப்பைச் சுதந்திரமாக எல்லா நாடுகளும் பயன்படுத்த அனுமதிப்பதற்கும், அப் பகுதியில் இருந்த துருக்கியப் படைகளைத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கும் துருக்கி ஒப்புக் கொண்டது. ஆனால் துருக்கியில் எந்த ஒரு நாடும் அதன் உள்நாட்டுப் பிரச்சினைகளில் ஈடுபட அனுமதிக்கப்படவில்லை.

லௌசேன் உடன்படிக்கையினால் அதிக நஷ்டமடைந்த நாடு கிரீஸ். இவ்வுடன்படிக்கையின்படி ஸ்மிர்னா, கலிபோலி, கிழக்கு தெராஸ் ஆகிய பகுதிகளை கிரீஸ் துருக்கிக்கு விட்டுக் கொடுத்ததுடன், ஈஜிக்கடலில் அமைந்திருந்த டோடிகனீஸ் என்ற தீவுகளை இத்தாலிக்குக் கொடுக்க வேண்டியதாயிற்று. இத்துடன் கிரீஸும் துருக்கியும் செய்து கொண்ட வேறொரு தனி ஒப்பந்தம் ஆசிய மைனரில் இருந்த கிரேக்க கிறிஸ்தவர்களைக் கிரீஸிலும் கிரீஸில் இருந்த முஸ்லிம் துருக்கியர்களைத் துருக்கியிலும் குடியமர்த்துவதற்கு வழிவகை செய்தது.

1919—1920 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பாரிஸ் அமைதி உடன்படிக்கைகளில் துருக்கி, ஹங்கேரி, பெல்ஜியம், ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய நாடுகளுடன் நேசநாடுகள் செய்து கொண்ட உடன்படிக்கைகளோடு, நேசநாடுகள் பின்பற்றிய சில நடவடிக்கைகளும் தங்களுக்குள் செய்து கொண்ட ஏற்பாடுகளும், ஒப்பந்தங்களும், இவ்வுடன்படிக்கைகளில் அடங்கும்.

நேசநாடுகள் தங்களுக்குள் செய்துகொண்ட உடன்படிக்கைகள்

நேசநாடுகள் மத்தியப் பேரரசு நாடுகளுடன் உடன்படிக்கை செய்து கொண்ட பின்னர் தங்களுக்கிடையே போரின் பொழுது ஏற்பட்டிருந்த இரகசிய உடன்படிக்கைகளின் காரணமாகச் சில கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு, பின்னர் தங்களுக்குள் சில உடன்படிக்கைகள் செய்து கொண்டன. உலகப் போர் முடிந்தவுடன் இத்தாலிக்கும் யூகோஸ்லாவியாவிற்குமிடையே எல்லைகளை நிர்ணயிப்பதில்

சில சிரமங்கள் ஏற்பட்டன. இஸ்திரியா ஏட்ரியாடிக் கடல் தீவுகள், டால்மேஷியாவின் ஒரு பகுதி ஆகியவற்றை இத்தாலி பெற விரும்பியதுடன் ஃப்யூம் என்ற துறைமுகத்தையும் பெற விரும்பியது. ஆனால், இத் துறைமுகத்தை யூகோஸ் லாவியாவும் பெற விரும்பியது. யூகோஸ்லாவியாவின் விருப் பத்திற்கு ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுத் தலைவரான உட்ரோ வில்சனும், ஃபிரஞ்சுக்காரர்களும் ஆதரவளித்தனர். இருப்பினும் இத்தாலி தனது படைவலிமையின் மூலம் ஃப்யூம் துறைமுகத்தைக் கைப்பற்றியது. இதனைத் தொடர்ந்து ரபேலோ (Rapallo) என்ற ஓர் உடன்படிக்கை 1920 நவம்பரில் ஏற்பட்டது. இவ்வுடன்படிக்கையின்படி ஃப்யூம் நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றும் சுதந்திர நகரமாயிற்று. டால்மேஷியக் கடற்கரையின் ஒரு பகுதியும் (இஸ்திரியாவுக்குத் தெற்கே ஃப்யூம் வரை உள்ள பகுதி), ஸ்ஸாரா நகரமும் இத்தாலிக்குக் கொடுக்கப்பட்டது; எஞ்சிய டால்மேஷியப் பகுதி யூகோஸ்லாவியாவிற்குக் கொடுக்கப்பட்டது. பின்னர் 1924 ஜனவரியில் ஏற்பட்ட மற்றோர் உடன்படிக்கையின்படி (ரோம் உடன்படிக்கை) ஃப்யூம் துறைமுகம் முழுவதையும் இத்தாலியும், ஃப்யூம் நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளை யூகோஸ்லாவியாவும் பெற்றன.

இதற்கிடையில் நேசநாடுகளின் வல்லரசு நாடுகள் புதிதாக உருப்பெற்ற தேசிய நாடுகளான யூகோஸ்லாவியா, போலந்து, செக்கோஸ்லாவாகியா, ருமேனியா போன்ற நாடுகளுடன் பல உடன்படிக்கைகளைச் செய்து கொண்டன. இவ்வுடன் படிக்கைகள் எல்லாம் பெரும்பாலும் புதிய நாடுகளுக்கிடையே யான எல்லைகளையும், இந்நாடுகளுடன் இணைத்துக் கொள்ளப் பட்ட பகுதிகளின் பழைய கடன்களையும், வியாபாரக் கொள் கைகளையும் பொறுத்தே இருந்தன. பெரும்பாலான சமயங் களில் இவ்வுடன்படிக்கைகள் தேசியம், இனம், மதம் ஆகிய வற்றின் அடிப்படையில் பல நாடுகளில் வாழ்ந்துவந்த சிறுபான்மையினருக்குப் பல உரிமைகளை வழங்கின.

சிறுபான்மையினரின் உரிமைகளுக்காகச் செய்யப்பட்ட ஏற் பாடுகளுள் மிக முக்கியமானது யூதர்களின் நிலை பற்றியதாகும். கிழக்கு மத்திய ஐரோப்பாவில் தேசிய நாடுகள் வளர்ச்சி யடைந்தபொழுது யூதர்கள் சற்று அஞ்சினர். இருப்பினும் பிரிட் டிஷ் அரசாங்கமும், அமெரிக்க அரசாங்கமும் யூதர்களுக்கு ஆதரவளித்தன. இதனால் சிறுபான்மையினரான யூதர்களின் உரிமைகள் காப்பாற்றப்பட்டன. இருப்பினும், 1920-க்குப்

பின்னர் யூதர்களுக்கும், அரேபியர்களுக்குமிடையே அடிக்கடி தகராறுகளும், மோதல்களும் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. இதே போன்று உலகப்போரின் முடிவுகளால் ஏற்பட்ட தேசிய நாடுகளான ஜெர்மனிய ஆஸ்திரியா, போலந்து, செக்கோஸ் லாவேகியா, யூகோஸ்லாவியா, ருமேனியா ஆகிய நாடுகளிலும் இச்சிறுபான்மையினரின் உரிமைப் பிரச்சினைகள் ஏற்பட்டுச் சில உடன்பாடுகள் ஏற்பட்டன.

பாரிஸ் அமைதி உடன்படிக்கையின்பொழுது நேசநாடுகள் ஜெர்மனியுடன் உடன்படிக்கை செய்து கொள்ள முயற்சிகளை மேற்கொண்ட அதே சமயத்தில், நேசநாடுகள் கம்யூனிஸ்டு இரஷ்யாவில் இராணுவப் புரட்சி ஒன்றைத் தொடங்கவும் முயற்சிகளை மேற்கொண்டன. ஆனால் அடிப்படையாகக் கம்யூ னிஸ்டுகள் இரஷ்யாவில் பலம் பொருந்தியவர்களாக இருந் தமையால் இவர்கள் தங்களுக்கு அருகிலிருந்த கம்யூனிஸ்டு அல் லாத நாடுகளுடன் 1920-1921 ஆம் ஆண்டில் பல உடன் படிக்கைகளைச் செய்து கொண்டனர். இவ்வுடன்படிக்கைகள் யாவும் முன்னர் இரஷ்யப் பேரரசில் இருந்து தற்பொழுது தனித் தியங்கி வரும் நாடுகளான பின்லாந்து, எஸ்தோனியா, லாட்வியா, லிதுவேனியா ஆகிய நாடுகளுடன் 1920-ல் செய்து கொள்ளப் பட்டன.

முதல் உலகப் போருக்குப் பின்னர் இரஷ்யாவிற்கும் போலந்துக்கு மிடையே சிலகாலம் தகராறுகள் நிலவின. இவ் விரு நாடுகளும் வெள்ளை இரஷ்யா எனப்படும் பைலோரஷ்யா வையும், உக்ரெயின் பகுதிகளையும் பெற விரும்பின. இவ்விரு நாடுகளுக்கு மிடையே ஓர் உடன்பாட்டைச் செய்து வைக்க பிரிட்டிஷ் பிரதமராக இருந்த கர்சான் பிரபு முயற்சி செய்தார். ஆனால் இம்முயற்சி பலனளிக்காமல் போகவே போலந்தும், இரஷ்யாவும் இராணுவ நடவடிக்கைகளில் இறங்கின. தொடக் கத்தில் போலந்து சில வெற்றிகளைப் பெற்றாலும் இரஷ்யர்கள் பிரஷ்யப் படைகளைக் கடுமையாக எதிர்த்தனர். ஆனால் போலந் துக்காரர்கள் பிரெஞ்சுப் படையின் உதவியுடன் இரஷ்யப் படைகளை வார்சா என்ற இடத்தில் முறியடித்தனர். இதனால் இவ் விரு நாடுகளுக்குமிடையே 1921 மார்ச் 18-ல் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. இது ரிகா உடன்படிக்கை (Treaty of Rega) என வழங்கப்படுகிறது. இவ்வுடன்படிக்கையின்படி போலந்தின் சுதந்திரத்தையும் இரஷ்யா அங்கீகரித்தது; கர்சான் கோடுகள் என்ற பகுதிகளுக்குள் இருந்த பைலோரஷ்யா, உக்ரெயின்

ஆகிய பகுதிகளைப் போலந்து பெற்றது; இத்துடன் இவ்விரு நாடுகளும் தங்களுக்குள் எவ்வித இராணுவ நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவது இல்லை என்றும், ஒருநாடு மற்றொரு நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினைகளில் தலையிடுவது இல்லை என்றும் உறுதி கூறின. இருப்பினும் போலந்து, லிதுவேனியா ஆகிய இருநாடுகளும் வில்னு (Vilna) என்ற நகரத்தைப் பெற விரும்பின. இந்நகரத்தை 1920 அக்டோபரில் போலந்து இரஷ்யாவிற்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்ட பொழுது கைப்பற்றியது. இருப்பினும் இரஷ்யாவிற்கும் அதன் அருகிலிருந்த நாடுகளுக்குமிடையே உடன்படிக்கைகள் ஏற்பட்டுப் பின்னர் அமைதி நிலவியது. இதற்காக 1922 மார்ச்சில் வார்சா என்ற இடத்தில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. இம் மாநாட்டில் போலந்து, எஸ்தோனியா, பின்லாந்து ஆகிய நாடுகள் கலந்து கொண்டு தங்களிடையே நிலவிய உடன்பாடுகளை மதித்து நடப்பதற்கும், எதிர்காலத்தில் தங்களுக்கிடையே ஏற்படும் தகராறுகளைப் பேசித் தீர்த்துக் கொள்வதற்கும் ஒப்புக் கொண்டன.

4. சர்வதேசச் சங்கம்

உலகப் போருக்குப் பின்னர், பாரிஸில் அமைதி உடன்படிக்கைகள் ஏற்பட்டபொழுது எல்லா நாடுகளுக்கிடையேயும் தனியாக ஒரு பொது உடன்படிக்கை, வில்சனின் 14-வது கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்டது. இதன் பயனாக, சர்வதேசச் சங்கம் (League of Nations) என்ற ஒரு பொது அமைப்பு ஏற்படுத்தப்பட்டுச் செயல்படத் தொடங்கியது. இவ்வமைப்பில் பன்னாட்டு நீதிமன்றமும் அடங்கியிருந்தது. இவ்வுடன்படிக்கையில் ஒரு பிற்சேர்க்கையின் மூலம் எதிர்காலத்தில் போர்கள் ஏற்படாமல் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வு காண பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம் ஒன்றும் இவ்வமைப்பின் கீழ்ச் செயல்படத் தொடங்கியது. எதிர்காலத்தில் போர்கள் ஏற்படாமல் பேச்சுவார்த்தைகளின் மூலம் தகராறுகளைத் தீர்த்துக் கொள்வதற்காகவும், உலக அமைதியை நிலைநாட்டுவதற்காகவுமே இச் சங்கம் பொதுவாகத் தோற்றுவிக்கப்பட்டது. இத்தகைய பன்னாட்டு நிறுவன உணர்வு தோன்றுவதற்கு முக்கிய காரணமாக விளங்கியது 1899, 1907 ஆகிய ஆண்டுகளில் ஹேக் என்ற இடத்தில் கூட்டப்பட்ட அமைதி மாநாடேயாகும். இம்மாநாடு தோற்றுவித்த உணர்வினை உலகப் போரும், அதனால் ஏற்பட்ட

விளைவுகளும் மேலும் வளர்த்தன. மேலும் உலகப் போரில் எல்லா நாடுகளும் சேர்ந்து போரிடுவதில் தங்கள் வலிமையை ஒன்றுபடுத்த முடியுமாயின், உலகில் அமைதியை ஏற்படுத்துவதற்காகவும், அதனைக் காப்பாற்றி வளர்ச்சியடையச் செய்வதற்காகவும் உலக நாடுகள் ஒன்றுபட முடியும் என்ற உணர்வு இச்சமயத்தில் உலக மக்களிடையே வளர்ச்சியடைந்தது. அத்துடன் அமைதியைக் காக்கும் பன்னாட்டு நிறுவனம் ஒன்று 1914-ல் இருந்திருக்குமாயின் உலகப் போர் ஏற்பட்டிருக்காது என்றும் பலர் கருதினர். மக்களின் இக்கருத்துக்கு மக்களின் தலைவர்களும், அரசியல் தலைவர்களும் அதிக முக்கியத்துவம் கொடுத்து முயற்சிகளை மேற்கொள்ளத் தொடங்கினர். ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுத்தலைவராக இருந்த உட்ரோ வில்சன் உலக அமைதியைக் காக்க வெளியிட்ட தன்னுடைய பதினான்கு அம்சக் கோட்பாடுகளில் பதினான்காவதாகப் 'பன்னாட்டு அமைதி நிறுவனம்' என்ற ஒன்றை ஏற்படுத்த வேண்டும் எனக் கூறினார். மேலும் வில்சன் பன்னாட்டு நிறுவனம் ஒன்றை ஏற்படுத்துவதில் நேசநாடுகளும், மத்தியப் பேரரசு நாடுகளும் ஒன்றுபட்டுச் செயல்பட்டால் எதிர்காலத்தில் போர் ஏற்படாமல் இருப்பதுடன், முதல் உலகப்போரின் காரணமாக ஏற்பட்ட சில பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் என்றும் கூறினார். இதனால் "பன்னாட்டு அமைதி நிறுவனம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும்" என மக்களிடையே நிலவிய கருத்து மேலும் வளர்ச்சியடைந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, சர்வதேசச் சங்கத்தை ஏற்படுத்த வில்சன் பாரிசில் நடைபெற்ற அமைதி மாநாட்டில் பெருமளவில் பாடுபட்டார்.

சர்வதேசச் சங்கம் செயல்படுவதைப் பற்றிப் பல கருத்து வேறுபாடுகள் நிலவின. ஹேக் என்ற இடத்தில் இருந்த பன்னாட்டு நீதிமன்றத்தை விட, இப்புதிய அமைப்பு எந்த வகையிலும் மேம்பட்டு இருக்காது என அமெரிக்கப் பிரதிநிதி ஒருவர் கருத்துத் தெரிவித்தார். சர்வதேசச் சங்கம் அமைதியை நிலைநாட்டுவதற்காக ஏற்படக்கூடிய இராணுவ உடன்படிக்கை என்று பிரஞ்சுப் பிரதமரான கிளமென்ஸோ கூறினார். இறுதியாகப் பாரிஸ் மாநாட்டின் பிரதிநிதிகள் சர்வதேசச் சங்கம் என்ற அமைப்பை ஏற்படுத்த உடன்பட்டனர்.

இப்புதிய உடன்பாட்டின்படி அசெம்பிளி (Assembly) என்ற பொதுச்சபையும், கவுன்சில் (Council) என்ற சிறப்புச் சபையும் ஆகிய இரண்டு உறுப்புக்களைக் கொண்ட சர்வதேசச் சங்கம் ஒன்று நிறுவப்பட்டது. இவற்றில்

அசெம்பிளி என்ற பொதுச் சபையில், உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் அங்கம் வகித்தன. இச்சபைக்கு ஒவ்வோர் உறுப்பு நாடும் மூன்று பிரதிநிதிகளை அனுப்பியது. ஆனால் ஒவ்வோர் உறுப்புநாடும் ஒவ்வொரு வாக்கை மட்டுமே பெற்றிருந்தது. இது நடுநிலை நாடான ஸ்விட்சர்லாந்து நாட்டின் ஜெனீவா நகரில் கூடித் தனது முடிவுகளை மேற்கொண்டது. இரண்டாவதாக இருந்த கவுன்சில் என்ற சிறப்புச்சபை எண்ணிக்கையில் குறைந்த உறுப்பினர்களைப் பெற்றிருந்தது. இதில் பிரிட்டன், பிரான்சு, இத்தாலி, ஜப்பான், ஐக்கிய அமெரிக்கநாடு ஆகியவை நிரந்தர உறுப்பு நாடுகளாகவும், பெல்ஜியம், பிரேசில், ஸ்பெயின், கிரீஸ் ஆகியவை காலவரம்பிற்குட்பட்ட தற்காலிக உறுப்பு நாடுகளாகவும் இருந்தன. இவ்விரு அமைப்புக்களைத் தவிர அசெம்பிளி, கவுன்சில் ஆகிய இரண்டிற்கும் கட்டுப்பட்ட செயலகம் ஒன்றும் சர்வதேசச் சங்கத்தில் இருந்தது. இதில் பல நாடுகளிலிருந்து திறமையான நிர்வாக அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுச் செயலாற்றினர். செயலகத்தின் தலைமையகம் ஜெனீவாவில் அமைக்கப்பட்டது. பின்னர் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளின் படி பன்னாட்டு நீதிமன்றம் ஒன்றும், பன்னாட்டுத் தொழிலாளர்களின் நிறுவனம் ஒன்றும், இச்சர்வதேசச் சங்கத்தின் அமைப்புக்களாகச் சேர்க்கப்பட்டுச் செயல்பட ஆரம்பித்தன.

எதிர்காலத்தில் போர்கள் ஏற்படாமல் தடைசெய்வதும், அமைதியை நிலைநாட்டுவதும், 1919–1920 ஆம் ஆண்டின் உடன்படிக்கைகளில் சொல்லப்பட்ட சில நிபந்தனைகளை நிறைவேற்றுவதும், உலக நாடுகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதும் சர்வதேசச் சங்கத்தின் முக்கிய நான்கு நோக்கங்களாகக் கருதப்பட்டன. இவற்றில் போர்கள் ஏற்படாமல் தடைசெய்வதுதான் மிக முக்கியம் வாய்ந்ததாக உறுப்பு நாடுகளால் கருதப்பட்டது.

சர்வதேசச் சங்கத்தின் சாசனத்தில் முதல் 9 பிரிவுகளும் அசெம்பிளி, கவுன்சில், செயலகம் ஆகியவை எப்படி அமைக்கப்பட்டுச் செயல்பட வேண்டுமெனக் கூறின. இதில் 10ஆம் பிரிவு ஒவ்வொரு நாடும் மற்றொரு நாட்டின் சுதந்திரத்தை மதித்து நடப்பதுடன், வெளிநாட்டின் படையெடுப்புக்களிலிருந்தும் அந்நாட்டைப் பாதுகாக்க வேண்டுமென்றும், 11ஆம் பிரிவு உலக நாடுகளின் அமைதிக்குச் சர்வதேசச் சங்கம் தன்னாலான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாமென்றும் கூறியது. இத்துடன் எல்லா உறுப்பு நாடுகளும்,

உலக அமைதியைக் குலைக்கும் எந்த ஒரு நாட்டின் நடவடிக்கையையும் சர்வதேசச் சங்கத்தின் பொதுச்சபையின் கவனத்திற்கு அல்லது கவுன்சிலின் கவனத்திற்குக் கொண்டு வரலாம் என 11ஆம் பிரிவு அதிகாரங்களை வழங்கியுள்ளது. இத்துடன் 12ஆம் பிரிவு உறுப்பு நாடுகள் தங்களுக்கிடையே உள்ள தகராறுகளைப் பேச்சுவார்த்தையின் மூலமாக அல்லது சர்வதேசச் சங்கத்தின் கவுன்சிலின் மூலமாகத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்றும், எந்த ஒரு பிரச்சினையும் சர்வதேசச் சங்கத்தின் பரிசீலனையில் இருக்கும்பொழுது, அப் பிரச்சினைகளில் சம்பந்தப்பட்ட நாடுகள் எக்காரணத்தைக் கொண்டும் போர் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்றும், தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்ட மூன்று மாதங்கள் கழித்தே அதில் திருப்தியடையாவிட்டால் போர் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்றும் கூறிற்று. மேலும் 13ஆம் பிரிவு இச்சங்கத்தின் உறுப்பு நாடுகள் அமைதியைக் காப்பதற்கு நம்பிக்கையுடன் எந்த ஒரு நாட்டையும் போர் செய்யத் தூண்டக்கூடாது என்றும் கூறிற்று. இத்துடன் 15ஆம் பிரிவு எந்த ஒரு நாடும் தனது பிரச்சினையைப் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துக்கொள்ள முடியாவிட்டால் கவுன்சிலிடம் முறையிட வேண்டுமென்றும், 16ஆம் பிரிவு எந்த ஓர் உறுப்பு நாடும் சர்வதேசச் சங்கத்தின் சாசனத்தை மீறி மற்றொரு நாட்டின்மீது போர்தொடுத்தால் அது எல்லா நாடுகளின்மீதும் போர் தொடுத்ததாக உறுப்பு நாடுகளால் கருதப்படுமென்றும் கூறியது. இறுதியாக 17ஆம் பிரிவு எந்த ஒரு தனி நாடும் உறுப்பு நாட்டின் மீது போர் தொடுத்தால், அல்லது சர்வதேசச் சங்கத்தின் நிபந்தனைகளை மதித்து நடக்காவிட்டால் அது எல்லா உறுப்பு நாடுகளையும் அவமதித்ததாகக் கருதப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமெனக் கூறியது.

ஆனால் சர்வதேசச் சங்கம் ஒரு நாட்டின் உள்நாட்டுப் போர்களிலும் இராணுவப் புரட்சிகளிலும் தலையிடக்கூடாது என்றும், இச்சங்கம் பிரச்சினைகளுக்கு ஏகோபித்த முடிவுகளை மேற்கொள்ள முடியாதபோது, பாதிக்கப்பட்ட நாடுகள் போரில் ஈடுபடலாம் என்றும், முறையில்லாத போர்களைத் தடுப்பதற்கு இச்சங்கம் நேசநாடுகளின் ஒத்துழைப்பையே நாடவேண்டு மென்றும் இச்சங்கத்தின் சாசனம் கூறியது.

சர்வதேசச் சங்கச் சாசனத்தை மீறி நடக்கும் உறுப்பு நாடுகளின் மீதும், உறுப்பினரல்லாத நாடுகளின் மீதும் சர்வதேசச்

சங்கம் தனது நடவடிக்கைகளை மேற்கொள்ள இச்சாசனம் அதிகாரம் வழங்கியுள்ளது. இத்துடன் இச்சாசனத்தின் 16-வது பிரிவின்படி ஏதாவது ஒரு நாடு சர்வதேசச் சங்கத்தை மீறி, போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டால், மற்ற உறுப்பு நாடுகள் போர் நடவடிக்கைகளில் ஈடுபட்ட நாட்டுடன் தாங்கள் கொண்டிருக்கும் வியாபார உறவுகளையும், பிற பொருளாதார உறவுகளையும் முறித்துக்கொள்ள வேண்டுமெனவும், சர்வதேசச் சங்கத்தின் உறுப்பு நாடுகள் போர் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள நாட்டிற்கு எதிராக என்ன இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது. ஆனால் இத்தகைய சமயங்களில் சர்வதேசச் சங்கம் ஓர் உலகப் போர் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமெனவும் சர்வதேசச் சங்கச் சாசனத்தில் கூறப்பட்டுள்ளது. இத்துடன் சர்வதேசச் சங்கம் போரைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுவதுடன் போர் ஏற்படுவதற்கான காரணங்களைக் கண்டு, அதனைத் தடுத்து நிறுத்துவதுடன், நிலையான அமைதியை ஏற்படுத்துவதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமெனவும் இச்சாசனத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனால் சர்வதேசச் சங்கத்தின் முக்கிய உறுப்புக்களான அசெம்பிளி என்ற பொதுச்சபை, கவுன்சில் என்ற சிறப்புச் சபை, செயலகம் ஆகிய மூன்றும் எதிர்காலத்தில் போரே ஏற்படாமல் செய்வதற்காகப் பாடுபட்டன. இவ்வாறே சர்வதேசச் சங்கத்தின் மற்றோர் உறுப்பான பன்னாட்டு நீதி மன்றமும் (சர்வதேச நீதிமன்றம்) போரைத் தடுத்து அமைதியை நிரந்தரமாகக் காப்பாற்ற 1921-ல் நிறுவப்பட்டது. இந்நீதி மன்றம் ஏறத்தாழ 1899-ல் ஹேக் என்ற இடத்தில் நிறுவப்பட்ட நீதிமன்றத்தை ஒத்திருந்தது. 1921-ல் சர்வதேசச் சங்கத்தின் ஓர் அங்கமாக நிறுவப்பட்ட இந்நீதிமன்றம் ஹேக் என்ற இடத்தில் அமைந்து நீதித்துறையிலேயே தனது கவனத்தைச் செலுத்தியது. மேலும் இந்நீதிமன்றம் சர்வதேசச் சங்கத்தின் ஒரு நிரந்தர உறுப்பாக இருந்தது. இந்நீதிமன்றத்தில் மொத்தம் 15 நீதிபதிகள் வழக்குகளை விசாரித்தனர். இவர்கள் அசெம்பிளி, கவுன்சில் ஆகிய இரு சபைகளாலும் ஒன்பதாண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்டனர். இவ்விரு சபைகள் விரும்பினால் ஒருமுறை நீதிபதியாக இருந்தவர் மீண்டும் நீதிபதியாக நியமிக்கப்படும் தகுதியைப் பெற்றிருந்தார். இந்நீதிமன்றம் தன்னிடம் கொண்டு வரப்படும் நாடுகளுக்கிடையேயான வழக்குகளை விசாரிக்கவும்,

தீர்ப்பு வழங்கவும் அதிகாரம் பெற்றிருந்தது. இத்துடன் பொதுச் சபை அல்லது சிறப்புச் சபை (கவுன்சில்) வழங்கிய தீர்ப்புக்களை மறுபரிசீலனை செய்து சபைகளின் தீர்ப்புக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கவும் இந்நீதிமன்றம் அதிகாரம் பெற்றிருந்தது.

இரகசிய உடன்படிக்கைகள் முதல் உலகப் போருக்குக் காரணமாக இருந்தன என்று கருதப்பட்டமையால் இரகசிய உடன்படிக்கைகள் செல்லுபடியாகக் கூடியவை அல்ல என்று சர்வதேசச் சங்கத்தின் சாசனம் கூறிற்று. அத்துடன் எந்த ஒரு நாடும் மற்றெரு நாட்டுடன் தான் செய்துகொள்ளும் உடன் படிக்கையை அல்லது ஒப்பந்தத்தைச் சர்வதேசச் சங்கத் தின் செயலகம் அங்கீகரிக்க வேண்டுமென்றும், செயலகம் அங்கீகரிக்காத உடன்படிக்கைகள் செல்லுபடியாகா என்றும் செய்ய இச்சாசனத்தில் வழிவகை செய்யப்பட் டுள்ளது. இத்துடன் சர்வதேசச் சங்கத்தின் உறுப்பினர்கள் இச் சங்கத்தின் வெற்றிக்காக முழுமனத்துடன் பாடுபடுவதுடன், இச்சங்கத்தின் முடிவுகளை நிறைவேற்றவும் உறுதி எடுத்துக் கொள்ள இச்சாசனம் வழிவகை செய்தது. ஆனல் ஒரு நாடு தன்னுடைய வளர்ச்சியையும், உள் நாட்டு ஒற்றுமையையும் கருதிப் பின்பற்றும் கொள்கைகளில் இச்சங்கம் தலையிட அதிகாரங்கள் வழங்கப்பட வில்லை. உதாரணமாக அமெரிக்க ஐக்கிய நாடு பின்பற்றிய மன்ரோக் கொள்கையில் இச்சங்கம் தலையிட அதிகார மற்றதாக இருந்தது.

சர்வதேசச் சங்கத்தின் சாசனத்தில் எதிர்காலத்தில் ஏதாவது மாற்றம் செய்யவேண்டியிருப்பின், அந்த மாற்றத்தைச் செய்வ தற்கு அசெம்பிளி என்ற பொதுச்சபைக்கு இச்சாசனம் அதிகாரம் வழங்கியது. அத்துடன் நிறைவேற்றப்பட முடியாத சில நிபந்தனைகளை அமைதியைக் கருதி மறுபரிசீலனை செய்ய பொதுச்சபையான அசெம்பிளிக்கு இச்சாசனம் உரிமை வழங்கியது.

அத்துடன் போர்க் கருவிகளும், பிற போர்த்தளவாடங் களும் பெருமளவில் உற்பத்தி செய்யப்படுவது முதல் உலகப் போருக்கு ஒரு காரணமாக அமைந்தது எனக் கருதிய அமைதிக் குழுவினர், எதிர்காலத்தில் இராணுவ தளவாடங்களை உற்பத்தி செய்வதைத் தடைசெய்வதற்காக இச்சாசனத்தில் வழிவகை செய்தனர். இதனல் இச்சங்கத்தின் உறுப்பு நாடுகள் தங்கள்

நாட்டின் இராணுவத்தைக் குறைத்துக்கொள்வதற்கும், போர்க் கருவிகள் உற்பத்தி செய்வதைக் குறைத்துக் கொள்வதற்கும், உள்நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்குத் தேவையான படைகளை மட்டுமே வைத்துக் கொள்வதற்கும் ஒப்புக்கொண்டன. அத்துடன் தனியார் நிறுவனங்கள் போர்க் கருவிகளையும் போர்த் தளவாடங்களையும் தயார் செய்வதைத் தடைசெய்வதற்குச் சர்வதேசச் சங்கச் சாசனம் வழிவகை செய்தது. மேலும் இச் சாசனம், படைக் குறைப்புச் செய்வதற்குத் தக்க வழிமுறைகளைப் பாகுபாடின்றி வகுக்கும் அதிகாரத்தையும், கெட்ட முயற்சிகளைத் தடுக்கும் அதிகாரத்தையும் சிறப்புச் சபையான கவுன்சிலுக்கு வழங்கியது.

போர்தடுப்பு நடவடிக்கைகளையும், அமைதியைக் காக்கும் முயற்சிகளையும் சர்வதேசச் சங்கம் மேற்கொண்டதுடன், 1919–1920 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அமைதி உடன்படிக்கையின்படி நடைபெற்ற சில நிகழ்ச்சிகளை மேற்பார்வை செய்யும் அதிகாரமும் இச்சங்கத்திற்கு வழங்கப்பட்டது. இதன்படி ஸ்லீஷ்விக், கிழக்குப் பிரஷ்யா, மேல் சைலீஷியா ஆகிய பகுதிகளில் நடைபெற்ற பொது வாக்கெடுப்பை இச் சங்கம் மேற்பார்வை செய்ய வேண்டியதாயிற்று. இத்துடன் டான்ஸிக் என்ற சுதந்திர நகரத்தையும் இச்சங்கம் நிர்வகிக்க வேண்டியதாயிற்று. இதனையடுத்து, சார் பள்ளத்தாக்கை 15 ஆண்டுகள் நிர்வகித்துப் பின்னர் இப்பகுதி ஜெர்மனியுடன் சேர விரும்புகிறதா? அல்லது பிரான்சுடன் சேர விரும்புகிறதா? அல்லது சர்வதேசச் சங்கத்தின் கீழேயே தொடர்ந்து இருக்க விரும்புகிறதா? என்பதை நிர்ணயிக்கும் பொறுப்பை இச்சங்கம் பெற்றிருந்தது. சிறுபான்மையினரின் உரிமைகள் சரியான முறையில் மதிக்கப் படுகின்றனவா? என்பதையும் இச்சங்கம் கண்காணித்து வந்தது. ஜெர்மனி, உதுமானியப் பேரரசு ஆகிய பழைய வல்லரசுகளை நேசநாடுகள் நடத்தி வந்த முறையைக் கண்காணிக்கும் அதிகாரத்தை இச்சங்கம் பெற்றிருந்தது. இவ்வாறு சர்வதேசச் சங்கத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இருந்த பகுதிகள் தங்களின் எல்லா நடவடிக்கைகளையும் இச்சங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தன.

இறுதியாக இச்சங்கம், மனித இனத்தின் நலன் கருதி, உலக மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தப் பாடுபட்டது. இதனால் ஒவ்வொரு நாட்டின் நடவடிக்கைகளும் சர்வதேசச் சங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டன. உறுப்பு

நாடுகளில் தொழிலாளர்களின் நிலை, பழங்குடியினரின் நிலை, ஆகியவற்றை இச்சங்கம் கவனித்து வந்ததுடன், இவர்களின் மேம்பாட்டிற்காகவும் தக்க முயற்சிகளை மேற்கொள்ள முயன்றது. அத்துடன் செய்தித் தொடர்பு, வியாபாரம் ஆகிய வற்றிற்குத் தக்க ஆதரவளிக்கவும் இச்சங்கம் பாடுபட்டது. எல்லாவற்றிற்கும் மேலாகப் பெண்கள், குழந்தைகள் ஆகியவர் நிலையை உயர்த்துவதற்கும், மக்கள் மத்தியில் தீமையை ஏற் படுத்தும் அபின், குடிப்பழக்கம் போன்றவற்றைத் தக்க நட வடிக்கைகளை மேற்கொண்டு கட்டுப்படுத்துவதற்கும், கொடிய நோய்களிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கும், செஞ்சிலுவைச் சங்கங்களின் மூலம் ஒற்றுமையை ஏற்படுத்தி ஆபத்துக்களி னின்றும் மக்களைப் பாதுகாக்கவும் இச்சங்கம் தக்க முயற்சிகளை மேற்கொண்டது. சுருங்கக் கூறின் சர்வதேசச் சங்கம் மனித இன மேம்பாட்டிற்கான எல்லா முயற்சிகளையும் மேற் கொண்டது.

உலகத் தொழிலாளர் நிறுவனம்

சர்வதேசச் சங்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு அதன் ஒரு பிரிவாக இருந்து, தொழிலாளர்களின் பிரச்சினை களுக்குத் தீர்வு கண்டு, அவர்களின் மேம்பாட்டிற்காகப் பாடு பட்டு வந்த மற்றொரு நிறுவனம் உலகத் தொழிலாளர் நிறுவனம் ஆகும். சர்வதேசச்சங்கச் சாசனத்தைப்போலவே உலகத்தொழி லாளர் நிறுவனமும் 1919-ல் பாரிஸ் அமைதி மாநாட்டின் மூலம் நிறுவப்பட்டு, பின்னர் சர்வதேசச் சங்கத்துடன் இணைக்கப்பட் டது. இந்நிறுவனம் உலகத் தொழிலாளர்களிடையே காணப் பட்ட பொதுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், உலகத் தொழிலாளர்களின் நிலையை உயர்த்தவும், முதலாளி தொழி லாளி ஆகியோர்களிடையே நல்லுறவுகளைப் பலப்படுத்தவும் பாடுபட்டு வந்தது.

இதனால் சர்வதேசச் சங்கம் ஓர் அடிப்படை நிறுவனமாக இருந்து உலக அமைதி, ஒற்றுமை, வளர்ச்சி ஆகியவற்றை ஏற்படுத்தப் பாடுபட்டதுடன், இவற்றின் பாதுகாப்பிற்காகவும், மேம்பாட்டிற்காகவும் பாடுபட்டு வந்தது. ஆனால் இச்சங் கத்தின் வெற்றி தோல்விகள் முழுவதும், இதன் உறுப்பினர் களின் ஒத்துழைப்பைப் பொறுத்தே அமைந்திருந்தது. இச்சங் கத்தின் உறுப்பு நாடுகள் மட்டுமின்றி, பிற நாடுகளும் இதில் அங்க நாடுகளாகச் சேர இச்சங்கச் சாசனத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால் புதிய நாடுகளை இச்சங்கத்தில்

சேர்த்துக் கொள்வதற்குப் பொதுச்சபையான அசெம்பிளியில் 2/3 பங்கு உறுப்பினர்கள் ஆதரவளிக்க வேண்டும் எனவும் அச்சாசனத்தில் வழி செய்யப்பட்டிருந்தது. இச்சங்கத்தி லிருந்து ஏதாவது ஒரு நாடு விலகிக் கொள்ள விரும்பினலும் அது விலகிக் கொள்ளலாம். ஆனல் அந்நாடு தான் இச்சங்கத் திலிருந்து விலகிக் கொள்வதை இச்சங்கத்திற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அறிவிக்க வேண்டும்.

இவ்வாறு பாரிஸில் ஏற்பட்ட அமைதி உடன்படிக்கையின் பொழுது நிறுவப்பட்ட சர்வதேசச் சங்கம் வில்சனுடைய பெரும் முயற்சியால் தற்காலிகமாகப் பாரிஸில் கூடி 1920 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் செயல்படத் தொடங்கியது. சர்வ தேசச் சங்கத்தின் உறுப்புக்களில் ஒன்ருன அசெம்பிளியின் முதல் கூட்டம் 1920 நவம்பரில் ஜெனீவா நகரில் கூட்டப் பட்டது. முதல் உலகப் போரில் கலந்து கொண்ட எல்லா நேசநாடுகளுக்கும், எல்லா நடுநிலை நாடுகளுக்கும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு அனுப் பப்பட்டது. நேசநாடுகள் அல்லது நேசநாடுகளுடன் சேர்ந்த நாடுகளான பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து, தென்னுப்பிரிக்கா, இந்தியா, பிரான்சு, இத்தாலி, ஜப்பான், போர்ச்சுகல், போலந்து, செக்கோஸ்லாவேகியா, ருமேனியா, யூகோஸ்லாவியா, கிரீஸ், சீன, சையாம், லைபீரியா, பிரேசில், கியூபா, பனமா, கெய்ட்டி, குவாடிமாலா, நிகாராகுவா, ஹோண்டுராஸ், பெரு, பொலீவியா, யுருகுவே என்ற 29 நாடுகளும், ஸ்பெயின், நெதர்லாந்து, ஸ்விட்சர்லாந்து, டென்மார்க், ஸ்வீடன், நார்வே. பாரசீகம், அர்ஜெண்டைன, சிலி, கொலம்பியா, வெனிஸூலா, பராகுவே, சால்வடோர் ஆகிய 13 நடுநிலை நாடுகளுமாக மொத்தம் 42 நாடுகள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டன. நேசநாடுகளின் எதிர்நாடு களும், இரஷ்யாவும் தக்க சமயத்தில் இக்கூட்டத்தில் கலந்து கொண்டன. எனவே 1935-ல் சர்வதேசச் சங்கத்தில் ஐரோப்பாவிலிருந்து 28 நாடுகளும், அமெரிக்காவிலிருந்து 21 நாடுகளும், ஆசியாவிலிருந்து 8 நாடுகளும், ஆப்ரிக்காவிலி ருந்து 3 நாடுகளும், ஆஸ்திரேலியாவிலிருந்து 2 நாடுகளுமாக மொத்தம் 62 நாடுகள் உறுப்பு நாடுகளாக விளங்கின.

பெரும்பாலான உலக நாடுகள் இச்சங்கத்தில் உறுப்பு நாடுகளாக விளங்கினலும், ஐக்கிய அமெரிக்க நாடு இச்சங் கத்தில் கலந்து கொள்ளாதது ஒரு பெரும் குறையாகவே விளங் கியது. உலகப் போரில் ஐக்கிய அமெரிக்காவின் உதவியால்

நேசநாடுகள் வலிமையுடன் போரிட்டதும், இந்நாட்டின் குடியரசுத் தலைவரான உட்ரோ வில்சனின் பெரும் முயற்சியால் இச்சங்கம் நிறுவப்பட்டதும் முன்னர்க் கண்டோம். எனவே இச்சங்கத்தைத் தோற்றுவிப்பதற்காகப் பாடுபட்ட வல்லரசு இச்சங்கத்தில் உறுப்பு நாடாக விளங்காதது இச்சங்கத்திற்கு ஒரு பெரும் குறையாகவே கருதப்பட்டது. இருப்பினும் இச்சங்கத்தின் தோற்றத்திற்கு முக்கிய பங்கு வகித்த ஐக்கிய அமெரிக்காவின் நிலையைப் பற்றி இச்சமயத்தில் சிறிது கவனிப்பது சிறப்புடையதாகும்.

முதல் உலகப் போர் நடந்து கொண்டிருந்த பொழுது நேசநாடுகள் ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுத் தலைவரான உட்ரோ வில்சனின் தலைமையின் கீழ் ஒன்றுபட்டு, அவருடைய சொற்களுக்கு மதிப்புக் கொடுத்து நடந்து கொண்டமை அமெரிக்கர்களுக்குப் பெருமையைத் தேடிக் கொடுத்தது. ஆனால் வில்சனுடைய போர்க் கொள்கைகளில் சிலவற்றையும், போர் முறைகளையும் விரும்பாத சில அமெரிக்கர்கள் இவரைக் குறை கூற ஆரம்பித்தனர். உலகப் போரில் ஜெர்மனி தோல்வியடைந்தவுடன் ஐக்கிய அமெரிக்காவின் அரசியல்வாதிகளிடையே பிளவு ஏற்பட ஆரம்பித்தது. இதனால் ஜனநாயகக் கட்சியைக் குடியரசுக் கட்சியினர் குறை கூற ஆரம்பித்தனர். வில்சன் உலகப்போரில்மேற்கொண்ட போர் நடவடிக்கைகளை மக்கள் முன்வைத்து, 1918 நவம்பரில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் குடியரசுக் கட்சியினர் மேல்சபையான செனட் சபையில் பெரும்பான்மை பலத்தைப் பெற்றனர். இதனால் ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுத் தலைவரான வில்சனுக்கும், செனட் சபைக்குமிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றின. எனவே வில்சன் பாரிஸ் அமைதி மாநாட்டில் கலந்து கொண்ட பொழுது குடியரசுக் கட்சியினர் எவரும் இவருடன் அமெரிக்கப் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளவில்லை. இதனைத் தனக்குச் சாதகமாக வைத்துக் கொண்டு குடியரசுக் கட்சி வில்சனின் புகழையும் பெருமையையும் குலைக்கத் தொடங்கியது. முதலில் வில்சன் பகை நாடான ஜெர்மனியுடன் நட்புறவு பாராட்ட விரும்பினர் என்றும், பின்னர் அமெரிக்கக் கொள்கைகளுக்கு முரணாக, ஐரோப்பியப் போரில் ஐக்கிய அமெரிக்காவை ஈடுபடுத்தி, நேர்மையாக நடந்து கொள்ளாமல் பழி தீர்த்துக் கொள்ளும் மனப்பான்மையுடன் நடந்து கொண்டார் என்றும் இவர் மீது குடியரசுக் கட்சியினர் குறை கூறினர்.

அமைதி மாநாட்டில் கலந்து கொண்டு, 1919 ஜூலையில் வில்சன் தன்னுடைய நாட்டிற்குத் திரும்பி, சர்வதேசச் சங்கச் சாசனத்தையும், வார்சே உடன்படிக்கையையும் அங்கீகரிக்குமாறு செனட் சபையைக் கேட்டுக் கொண்டார். ஆனல் செனட் சபை வில்சனுடைய நடவடிக்கைகளை அங்கீகரிக்க மறுத்து விட்டது. குடியரசுத் தலைவருடைய ஆலோசகர்கள் சிலர் சர்வதேசச் சங்கம் அமெரிக்காவின் இறைமைத் தன்மையைப் பாதிப்பதுடன் அமெரிக்கப் பாராளுமன்றத்தின் உரிமைகள் சிலவற்றையும் கட்டுப்படுத்துகிறது என்றும், ஐக்கிய அமெரிக்காவின் தந்தையான ஜார்ஜ் வாஷிங்டனின் கொள்கைகளுக்கு இழுக்குத் தேடுவதாக உள்ளது என்றும் குறை கூறினர். மற்றவர்கள் வில்சன் செய்துகொண்ட வார்சே உடன்படிக்கையைக் குறை கூறினர். நாட்டுப் பற்றுமிக்க அமெரிக்கர்கள் அமைதி உடன்படிக்கைகளில் ஜப்பான், பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு வழங்கிய சலுகைகளைப் பற்றிக் குறை கூறினர். அமெரிக்காவிலிருந்த ஜெர்மனியர்கள் தங்கள் தந்தை நாட்டின் பெருமை வார்சே உடன்படிக்கையால் சீர்குலைவதைக் கண்டு வருத்தமடைந்தனர். எனவே இவர்களும் வார்சே உடன்படிக்கையைக் குறை கூறினர். இத்தாலி அமைதி மாநாட்டில் சரியான முறையில் நடத்தப்படவில்லை என அமெரிக்க இத்தாலியர்கள் குறை கூறினர். அயர்லாந்து அமெரிக்கர்கள் அமைதி மாநாடு பிரிட்டிஷ்காரர்களுக்கு அதிக சலுகைகளை வழங்கிவிட்டது என்று குற்றம் சாட்டினர். எனவே ஐக்கிய அமெரிக்க செனட் பாரிஸில் நடைபெற்ற அமைதி மாநாட்டில் மேற்கொள்ளப் பட்ட அமைதி உடன்படிக்கைகளை அங்கீகரிக்க மறுத்தது.

ஐக்கிய அமெரிக்காவில் குடியரசுத் தலைவருக்கும், பாராளுமன்றத்தின் மேல்சபையான செனட் சபைக்குமிடையே நிலவிய கருத்து வேற்றுமைகள் ஏறத்தாழ இரண்டு வருடங்கள் தொடர்ந்தன. இதனல் செனட் சபை சர்வதேசச் சங்கத்தின் சாசனத்தை அங்கீகரிக்க மறுத்தது. எனவே தன்னுடைய கருத்துக்களுக்கு மக்களிடையே ஆதரவு திரட்டுவதற்காக 1919 செப்டம்பர் முதல் வில்சன் தன்னுடைய நாட்டில் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டார். இச்சமயத்தில் இவர் முடக்கு வாத நோயினல் கடுமையாகப் பாதிக்கப்பட்டார். இவ்வாறு சர்வதேசச் சங்கத்திற்காக முழு மூச்சுடன் பாடுபட்ட பெருமகனர், தன்னுடைய முயற்சிகள் வெற்றியடைவதற்கு முன்னதாகவே, அமெரிக்க நாட்டின் பெருமையைக் குலைத்துவிட்டார் என்ற அவப் பெயருடன் மறைந்தார். ஆனல் இவர் மறைந்த சில மாதங்களுக்குப் பின்னர் இவருடைய ஆதரவாளர்கள் சிலர் தொடர்ந்து செனட் சபையில் முயன்று வெற்றி பெற்றனர்.

இதனால் சர்வதேசச் சங்கத்தின் சாசனம் 1920 மார்ச்சில் ஐக்கிய அமெரிக்காவின் செனட் சபையால் சில மாற்றங்களுக்குட்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

ஆனால் 1920-ல் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் அமெரிக்க மக்கள் வில்சனுடைய நெருங்கிய நண்பரும் ஆதரவாளருமான ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரைப் பெரும்பான்மையான வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்து, குடியரசுக் கட்சியைச் சேர்ந்த வாரன் ஹார்டிங் (Warren Harding) என்பவரைக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். புதிய குடியரசுத் தலைவர் பதவி ஏற்றவுடன், மக்கள் தீர்ப்பிற் கிணங்க, ஐக்கிய அமெரிக்கா சர்வதேசச் சங்கத்தில் உறுப்பு நாடாகச் சேராது என அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ஐக்கிய அமெரிக்கா 1922 ஆம் ஆண்டில் ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி ஆகிய நாடுகளுடன் தனித்தனியாக உடன்படிக்கைகள் செய்து கொண்டது. சில காலம் தனித்திருந்த பின்னர் ஜெனீவாவிலிருந்த அமெரிக்கர்கள் சர்வதேசச் சங்கத்தின் வெற்றிக்கு ஆதரவு காட்டத் தொடங்கினர். இதனைத் தொடர்ந்து பல அமெரிக்கப் பிரதிநிதிகள் சர்வதேசச் சங்கத்தின் குழுக்களில் இடம் பெற்றனர். அடுத்து சர்வதேசச் சங்கத்தால் கூட்டப்பட்ட படைக் குறைப்பு மாநாடுகளிலும் அமெரிக்கர்கள் பங்கு பெற்றனர். 1934-ல் ஐக்கிய அமெரிக்கா சர்வதேசச் சங்கத்திலும், இச் சங்கத்தின் தொழிலாளர் நிறுவனத்திலும் அங்கம் வகிக்கத் தொடங்கியது.

ஐக்கிய அமெரிக்காவின் இந்நிலையினால் சர்வதேசச் சங்கம் பல இன்னல்களுக் குள்ளாகியது. ஆனால் நாளடைவில் இதன் உறுப்பினர்கள் தாங்கள் முன்னர் எடுத்துக் கொண்ட உறுதி மொழிக் கெதிராக, சர்வதேசச் சங்கத்தின் வெற்றிக்குத் தங்கள் ஒத்துழைப்பை நல்கத் தயங்கினர். இதனாலும் சர்வதேசச் சங்கம் பெரும் இன்னல்களுக் குள்ளாகியது. ஜெர்மனி காலம் கடந்து இச்சங்கத்தில் உறுப்பு நாடாகியது. ஏறத்தாழ 14 ஆண்டுகள் இரஷ்யா சர்வதேசச் சங்கத்தில் சேராமல் தனித்து இருந்தது. சர்வதேசச் சங்கம் முதலாளிகளின் பிரதிநிதி என்று கம்யூனிஸத் தலைவர்கள் கருதியதும், சர்வதேசச் சங்கத்தின் பிரதிநிதிகள் இரஷ்யாவிடம் கொண்டிருந்த விரோத மனப்பான்மையுமே இதற்கு முக்கிய காரணமாகும். ஆனால் 14 ஆண்டுகளுக்குப்

பின்னர் இரஷ்யா இச்சங்கத்தில் ஓர் உறுப்பு நாடாயிற்று. இருப்பினும் இச்சங்கத்தின் வெற்றி பெரும்பாலும் உறுப்பு நாடுகளின் ஒத்துழைப்பையே சார்ந்திருந்ததால் பிற்காலத்தில் உறுப்புநாடுகளிடையே ஏற்பட்ட போட்டிகளின் காரணமாகவும், போலித் தன்மைகளின காரணமாகவும் சர்வதேசச் சங்கம் சரியான முறையில் செயல்பட முடியாமல் போய்விட்டது. இத்துடன் உறுப்பு நாடுகள் இச்சங்கத்தில் அதிக அக்கறை காட்டாததும் சர்வதேசச் சங்கத்தின் தோல்விக்கு ஒரு காரணமாகும். எனினும் முதல் உலகப் போருக்குப் பின்னர் இச்சங்கம் உலக நாடுகளிடையே அமைதியை நிலைநாட்டப் பெருமுயற்சி செய்ததையும், சில சமயங்கள் தனது நடவடிக்கைகளை வெற்றிகரமாக நடத்தியதையும் யாரும் மறுக்க இயலாது. அத்துடன் சர்வதேசச் சங்கம் உலக மக்களிடையே ஒற்றுமை மனப்பான்மையை ஓரளவு ஏற்படுத்தியது என்பதும் மறுக்க இயலாத உண்மையாகும்.

5. அமைதி உடன்படிக்கைகளை நடைமுறைப் படுத்துதல்

முதல் உலகப்போர் மிகப் பெரிய அளவில் சுமார் 5 ஆண்டுகள் நடைபெற்றாலும்,வெற்றிபெற்ற நாடுகள் தோல்வியடைந்த நாடுகளுடன் அமைதி உடன்படிக்கைகளைப் பாரிஸில்கூடி ஒரே ஆண்டில் ஏற்படுத்திக் கொண்டன. இவ்வுடன்படிக்கைகளை இவற்றில் கையெழுத்திட்ட எல்லா நாடுகளும் உடனடியாக ஒப்புக்கொண்டு இவற்றை முழுமனத்துடன் செயல்படுத்தத் தொடங்கின. இதனல் உடன்படிக்கைகளில் குறிப்பிட்டிருந்தபடி பொது வாக்கெடுப்புக்கள் நடத்தப்பட்டன. நாடுகளுக்கிடையே புதிய எல்லைகள் அமைதியான முறையில் நிர்ணயிக்கப்பட்டன. போலந்து, இரஷ்யா ஆகிய நாடுகளுக்கிடையேயும், கிரீஸ், துருக்கி ஆகிய நாடுகளுக்கிடையேயும் இரண்டு சமயங்களில் போர் ஏற்பட்டு, முறையே 1921, 1923 ஆகிய ஆண்டுகளில் உடன்படிக்கைகள் ஏற்பட்டன. இதனல் அரசியல் துறையில், பழைய தெய்வீக அரசுரிமைக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு ஆட்சிபுரிந்து வந்த பேரரசுகள் வீழ்ச்சியடைந்து, தேசியம், ஜனநாயகம், குடியரசு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட புதிய நாடுகள் வளர்ச்சியடைந்து தற்கால ஐரோப்பா உருவாகியது.

இச்சமயத்தில் சர்வதேசச் சங்கம், ஐக்கிய அமெரிக்கா தன்னுடன் ஓர் உறுப்பு நாடாகச் சேராவிட்டாலும், ஜெர்மனி

இரஷ்யா ஆகிய நாடுகள் தற்காலிகமாக விலகி இருந்ததால், 1920 ஆம் ஆண்டு முதல் மிகச் சிறந்த முறையில் பணி யாற்றத் தொடங்கியது. இச்சங்கத்தின் ஓர் உறுப்பான செயலகம் உலகநாடுகளின் அரசியல், பொருளாதாரம், சமுதாயம், பண்பாடு ஆகியவற்றைப் பற்றிய செய்திகளைச் சேகரித்துப் பயனுள்ள வகையில் குறிப்புக்களை வெளியிட்டது. அத்துடன் இச்சங்கம் தன்னுடைய குழுக்களின் மூலம் தைபஸ் (Typhus) என்ற நோய் பரவுவதையும், பன்னாட்டு அபின் வியாபாரத்தையும் கட்டுப்படுத்தியது. இச்சங்கத்தின் மற்றோர் உறுப்பான உலகத் தொழிலாளர் நிறுவனம் தன்னுடைய பிற அமைப்புக்களின் மூலமாகவும், மாநாடுகளின் மூலமாகவும், தொழில் துறையில் தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கு மிடையே நிலவிவந்த பொதுவான பல பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டது. அத்துடன் சர்வதேசச் சங்கத்தின் மற்றோர் அமைப் பான பன்னாட்டு நீதிமன்றம் பல சிக்கலான பிரச்சினைகளை வெற்றிகரமாகத் தீர்த்து வைத்தது. எல்லாவற்றிற்கும் மேலாக இச்சங்கம் வேறுபல குழுக்களின் மூலம் உலக நாடுகளுக்குப் பொதுவான பன்னாட்டுச் சட்டம் ஒன்றை இயற்றுவதற்கும் பாடுபட்டு ஓரளவு வெற்றியும் பெற்றது.

பல நாடுகளுக்கிடையே ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு அமைதியான முறையில் தீர்வுகாண, பல சிரமமான முயற்சிகளை யும், நடவடிக்கைகளையும் சர்வதேசச் சங்கம் தன்னுடைய பல குழுக்களின் மூலமும், வேறுபல கிளை நிறுவனங்களின் மூலமும் மேற்கொண்டது. மேலும் தனது முக்கிய முடிவுகளால் மக்களி டையே அமைதிக் கருத்துக்கள் வளர்ச்சியடையத் தொடங்கின. அத்துடன் இச்சங்கம் சிறுநாடுகளிடையே ஏற்பட்ட தகராறு களை வெற்றிகரமாகத் தீர்த்து வைத்தது. உதாரணமாகப் பால்டிக் கடலில் அமைந்துள்ள ஆலாந்து (Aland) தீவுகளின் உரிமையின் காரணமாக, பின்லாந்துக்கும் ஸ்வீடனுக்குமிடையே 1920-ல் நடைபெற்ற தகராறுகள் சர்வதேசச் சங்கத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன. இச்சங்கம் தனது சிறப்புச் சபையான கவுன் சிலின் சிறப்புக் குழுவின் மூலமாக ஆராய்ந்து இறுதியாக ஆலாந்து தீவு பின்லாந்திற்கே சொந்தமானது எனத் தீர்ப்பு வழங்கியது. பின்னர் மேல் சைலீஷியாவின் எல்லைகளை நிர்ண யிப்பதில் ஒரு பொது வாக்கெடுப்பின் மூலம் பிரச்சினைகள் தீர்க்க முடியாமல் போகவே, போலந்து ஜெர்மனி ஆகிய நாடு களுக்கிடையே நிலவிய இப்பிரச்சினை 1921-ல் சர்வதேசச் சங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இப்பிரச் சினையில் சர்வதேசச் சங்கத்தின் சிறப்புச் சபையான கவுன்சில்

மீண்டும் தலையிட்டு இருநாடுகளும் ஏற்றுக் கொள்ளும் வகையில் எல்லைகளை மாற்றியமைத்தது. இதனையடுத்து 1925-ல் எல்லைத் தகராறுகளின் காரணமாக கிரீஸ் பல்கேரியாவின் மீது படையெடுத்த பொழுது சர்வதேசச் சங்கம் தனது கவுன்சிலின் மூலமாகத், தலையிட்டு கிரீஸுடன் பொருளாதார உறவுகளை முறித்துக் கொள்ளுமாறு உறுப்பு நாடுகளைக் கேட்டுக் கொண்டு, கிரீஸை அச்சுறுத்தி, இவ்விரு நாடுகளுக்கு மிடையே ஓர் உடன்பாட்டை ஏற்படுத்தியது.

ஆனால் வல்லரசுகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் சர்வதேசச் சங்கம் அவ்வளவு சிறப்பாக வெற்றி பெறவில்லை. உதாரணமாக 1923-ல் வில்னு நகரத்தின் காரணமாகப் போலந்துக்கும் லிதுவேனியாவுக்குமிடையே சச்சரவுகள் ஏற்பட்டன. இப்பிரச்சினையில் பிரான்சு போலந்து நாட்டிற்கு ஆதரவளித்தது. இருப்பினும் இப்பிரச்சினை சர்வதேசச் சங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இச்சங்கமும் சில ஆலோசனைகளை வழங்கியது. ஆனால் இப்பிரச்சினையில் சர்வதேசச் சங்கத்தின் தீர்ப்பைப் போலந்து மதிக்காமல் ஒதுக்கி வைத்துவிட்டு, இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வில்னு நகரைக் கைப்பற்றியது. போலந்தின் இச்செய்கையை பிரான்சு, பிரிட்டன், இத்தாலி ஆகிய வல்லரசுகள் தனியாக அங்கீகரித்தன. எனவே இப்பிரச்சினையில் சர்வதேசச் சங்கம் மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்தது. இதேபோன்று மற்றொரு சமயத்தில் இதே ஆண்டில் (1923) இத்தாலிக்கும் கிரீஸுக்குமிடையே ஒரு பிரச்சினை எழுந்தது. அல்பேனியாவின் எல்லையை நிர்ணயிக்கும் குழுவில் இருந்த சில இத்தாலியர்கள் ஆயுதம் தாங்கிய கிரேக்கர் சிலரால் கொல்லப்பட்டனர். இதனால் கோபமடைந்த இத்தாலி, சர்வதேசச் சங்கத்தின் உதவியை நாடாமல், கிரீஸ் நாடு மன்னிப்புக் கோர வேண்டுமென்றும், ஒரு பெருந் தொகையை நஷ்ட ஈடாகக் கொடுக்க வேண்டுமென்றும் கோரியது. தன்னுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு இத்தாலி உடனடியாக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு, கிரீஸுக்குச் சொந்தமான கார்ஃப்பூ தீவைத் தாக்கி அதனைக் கைப்பற்றியது. இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண கிரீஸ் சர்வதேசச் சங்கத்தின் உதவியை நாடியது. இதனால் சர்வதேசச் சங்கம் இவ்விரு நாடுகளுக்குமிடையே உடன்பாடு ஏற்பட சில ஆலோசனைகளை வழங்கியது. ஆனால் இத்தாலி சர்வதேசச் சங்கத்தின் ஆலோசனைகளை உதாசினம் செய்தது. இந்நிலையில் பிரிட்டன், பிரான்சு ஆகிய வல்லரசுகள் தலையிட்டு இத்தாலி கார்ஃப்பூ தீவிலிருந்து வெளியேற வேண்டு மென்றும்,

கிரீஸ் இத்தாலியின் நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டு மென்றும் தனிப்பட்ட முறையில் கூறி, இவ்விரு நாடுகளுக்கு மிடையே சமாதானம் செய்து வைத்தன. இருப்பினும் இப் பிரச் சினையிலும் சர்வதேசச் சங்கத்தின் முயற்சி வெற்றி பெற வில்லை.

சர்வதேசச் சங்கத்தின் சில அலுவலகங்கள் 1926-ல் வேறு சில பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப் பயன்படுத்தப் பட்டன. எடுத்துக்காட்டாக, 1926-ல் மொஸுல் (Mosul) என்ற இடத்தில் உள்ள எண்ணெய்க் கிணறுகளின் உரிமை யின் காரணமாக ஈராக்கிற்கும், துருக்கிக்கு மிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றின. இதில் ஈராக் பிரிட்டனின் ஆதர வைப் பெற்றது. இப்பிரச்சினையில் சர்வதேசச் சங்கம் தலையிட்டு இரு சாராருக்கும் சில சலுகைகளை வழங்கிப் பிரச்சினையை அமை தியான முறையில் தீர்த்து வைத்தது. இருப்பினும் இது சர்வதேசச் சங்கத்தின் முயற்சிக்கு ஏற்பட்ட ஒரு பெரும் வெற்றி என்று கருதிவிட முடியாது. ஏனெனில் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொழுது பிரிட்டனுக்கும் ஈரானுக்கும் சலுகைகளை அதிக அளவிலும், துருக்கிக்குக் குறைந்த அளவிலுமே சலுகைகளை இச் சங்கம் வழங்கியது.

பிரான்சின் பாதுகாப்பு முயற்சி

முதல் உலகப் போருக்குப் பின்னர் பிரான்சு, பிரிட்டன், இத்தாலி ஆகிய ஐரோப்பிய வல்லரசு நாடுகளிடையே ஏற் பட்ட கருத்து வேறுபாடுகளின் காரணமாகப் பாரிஸில் ஏற்பட்ட அமைதி உடன்படிக்கைகளை நிறைவேற்றுவதில், குறிப்பாக சர்வதேசச் சங்கத்தின் சாசனப்படி நடப்பதில் பல தடைகள் ஏற்பட்டன. நேசநாடுகளின் பக்கம் இத்தாலி, பிரிட்டன் ஆகிய வல்லரசுகளைக் காட்டிலும், பிரான்சு தோல்வியடைந்த ஜெர் மனியைக் கண்டு அஞ்சியது. வார்சே உடன்படிக்கையின்படி ஜெர்மனியின் வலிமை குறைந்தாலும், ஜெர்மனி பிரான்சைக் காட்டிலும், மக்கள்தொகை, இயற்கைவளம், தொழில் ஆகிய துறைகளில் வலிமைபெற்றே விளங்கியது. எனவே தன்னைவிட வலிமையான ஜெர்மனி எப்படியும் தான் இழந்த பகுதிகளைத் தன்னிடமிருந்து கைப்பற்ற தக்க முயற்சிகளைக் குறித்த நேரத் தில் மேற்கொள்ளுமென்று பிரான்சு கருதியது. இதனால் பிரான்சு 1918 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளப் பல முயற்சிகளை மேற்கொண்டது. பிரான்சின் முயற் சிகளுக்கு ஐரோப்பிய வல்லரசுகள் எதுவும் அதிகத் தடையாக இருக்க வில்லை.

பாரிஸில் அமைதி மாநாடு நடந்து கொண்டிருந்த பொழுது எதிர்காலத்தில் தங்கள் பாதுகாப்பிற்குத் தக்க முயற்சிகளை மேற்கொள்ளுமாறு பிரஞ்சு அரசாங்கமும், மார்ஷல் ஃபோச்சும் பிரதிநிதிகளைக் கேட்டுக் கொண்டனர். இதனால் ரைன் நதிப் பகுதி முழுவதும் ஜெர்மனியிடமிருந்து பிரிக்கப்பட்டு பிரான்சுக்குக் கொடுக்கப்பட்டது. பிறகு ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுத்தலைவர் சர்வதேசச் சங்கம் என்ற ஒரு பன்னாட்டு நிறுவனத்தை ஏற்படுத்தப் பாடுபட்ட பொழுது மிகுந்த வலிமை யுடைய படை ஒன்றை இச்சங்கம் பெற்றிருக்குமாறு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பிரஞ்சுப் பிரதிநிதிகள் வில்சனைக் கேட்டுக்கொண்டனர். மேலும் வலிமை வாய்ந்த படையைச் சர்வதேசச் சங்கம் பெற்று இருந்தால்தான் இச்சங்கத்தின் தீர்ப் புக்களைச் செயல்படுத்துவதற்கு வசதியாக இருக்குமெனவும் பிரான்சு கூறியது. ஆனால் வில்சனோ பிரிட்டிஷ் பிரதமரான லாயிட் ஜார்ஜோ இதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் வேறுவகையில் இம்மாநாடு பிரான்சுக்கு ஆதரவு கொடுத்ததால் இறுதியாக பிரான்சு, வில்சன், லாயிட் ஜார்ஜ் ஆகியோரின் கருத்துக்களை ஏற்றுக்கொண்டது. இத்துடன் பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா ஆகிய இரு நாடுகளும் பிரான்சில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கும், போர் ஏற்பட்டால் ஜெர்மனிக்கு எதிராகப் பிரான்சுக்கு இராணுவ உதவியளிக்கவும் உறுதியளித்தன. எனவே பிரான்சு பாரிஸின் அமைதி உடன்படிக்கைகளை ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்டதுடன், அல்சேஸ், லொரைன் ஆகிய பகுதிகளை ஜெர்மனியிடமிருந்து திரும்பப் பெற்றுக் கொண்டு சர்வதேசச் சங்கச் சாசனத்திலும் கையெழுத்திட்டது. ஆனால் வில்சன் ஐரோப்பிய நாடுகளுடன் செய்துகொண்ட உடன்படிக்கைகளை ஐக்கிய அமெரிக்காவின் செனட் சபை அங்கீகரிக்காததாலும், பிரிட்டனும் சர்வதேசச் சங்கத்தின் செயல்களில் அவ்வளவாக ஆர்வம் காட்டாததாலும் தன்னுடைய பாதுகாப்பிற்கு வேறு நடவடிக்கைகளை பிரான்சு மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

இந்நிலையில் சிறிய நாடுகள் ஏதாவது ஓர் ஐரோப்பிய வல்லரசுடன் பாதுகாப்பு உடன்படிக்கைகளைச் செய்துகொள்ள வேண்டுமென விரும்பின. அத்துடன் இந்நாடுகள் அமைதி உடன்படிக்கைகளை அப்படியே நிறைவேற்ற வேண்டு மென்றும், அமைதி உடன்படிக்கைகளை மறுபரிசீலனை செய்ய அனுமதிக்கக் கூடாது என்றும் கருதின. பிரான்சும் இவ்வாறே விரும்பியதால், இந்நாடுகள் பிரான்சுடன் பாதுகாப்பு உடன் படிக்கைகளைச் செய்துகொண்டன. இதனால் பிரான்சு 1920-ல்

பெல்ஜியத்துடனும், 1921-ல் போலந்துடனும், 1924-ல் செக்கோஸ்லாவாகியாவுடனும் இராணுவ ஒப்பந்தங்களைச் செய்துகொண்டது. இதற்கு முன்னதாகவே செக்கோஸ்லா வாகியா ஹங்கேரியிலிருந்து பிரிந்த தனி நாடுகளான ருமேனியா, யூகோஸ்லாவியா ஆகிய நாடுகளுடன் தனது பாதுகாப்பிற்காக முறையே 1920, 1921 ஆகிய ஆண்டுகளில் "சிறு நாடுகளின் உடன்படிக்கைகள்" என்ற ஓர் உடன் படிக்கையைச் செய்துகொண்டது. இதனுல் 1926-ல் ருமேனி யாவும், 1927-ல் யூகோஸ்லாவியாவும் பிரான்சுடன் இராணுவ ஒப்பந்தங்கள் செய்துகொண்டன. இந்நாடுகளின் இச்செய்கை சர்வதேசச் சங்கத்தின் தோல்விக்கும், இரண்டாவது உலகப் போருக்கும் வழிவகுத்துக் கொண்டிருந்தது.

பிரான்சு சிறிய நாடுகளுடன் இராணுவ ஒப்பந்தங்களைச் செய்துகொண்டதால், பிரான்சிற்குச் சில தீமைகள் ஏற்பட்டன. இச்சிறு நாடுகளை அடிக்கடி கடன்வழங்கி பிரான்சு வலுப்படுத்த வேண்டியிருந்தது. இருப்பினும் இந்நாடுகள் நம்பத் தகுந்தன வாக இல்லை. மேலும் பிரான்சைத் தவிர மற்ற நாடுகள் மிகச் சிறியனவாக இருந்ததுடன் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறி இருந்தன. அத்துடன் முதல் உலகப் போரின்பொழுது முதலில் ஜெர்மனியின் பக்கமிருப்பதாக வாக்களித்த இத்தாலி, நேச நாடுகளுடன் இரகசிய உடன்படிக்கை செய்துகொண்டு, இறுதியில் ஜெர்மனிக்கு எதிராக நேசநாடுகளுடன் சேர்ந்து கொண்டு உலகப் போரில் போரிட்டது. இதனுல் இத்தாலி நம்பிக்கைக்குப் பாத்திரமான நாடு அன்று என்ற எண்ணம் உலக நாடுகளிடையே பரவியது. அதே அச்சம் இப்பொழுது பிரான்சிலேயும் பரவ ஆரம்பித்தது. அத்துடன் இத்தாலி தன்னுடைய பேராசையின் காரணமாக ஹங்கேரி ஆஸ்திரியா, பல்கேரியா ஆகிய நாடுகளைத் தூண்டி, அமைதி உடன் படிக்கைகளை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொண்டது. இத்தாலியின் இச்செய்கையால் பிரான்சு தான் ஆபத்திலிருப்ப தாக உணர்ந்து பாதுகாப்பு முயற்சிகளை மேற்கொள்ள மேலும் பல வழிகளை ஆராய்ந்தது.

ஜெனீவா உடன்படிக்கை

பாதுகாப்பு முயற்சிகளை மேற்கொண்ட பிரான்சு, சர்வதேசச் சங்கத்தை வலுப்படுத்த எண்ணியது. இதனுல் சர்வதேசச் சங்கச் சாசனம் எந்த நடவடிக்கை ஆக்கிரமிப்பாகக் கருதப்படவேண்டுமென்பதைப் பற்றியும், ஆக்கிரமிப்புகளுக்கு

எதிராக எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டு மென்பதைப் பற்றியும் தெளிவாகக் குறிப்பிடாததால் இவ்விரு குறைபாடுகளையும் நீக்க பிரான்சு முயன்றது. எனவே 1923-ல் பல நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்றை ஏற்படுத்தி ஒரு நாடு மற்றொரு நாட்டிற்குப் பரஸ்பரமாக உதவ வழி செய்யும் மசோதா ஒன்றைத் தயார் செய்தது. இம்மசோதா 1924-ல் மறு பரிசீலனை செய்யப்பட்டு, "ஜெனீவா உடன் படிக்கை" என்ற பெயரில் சர்வதேசச் சங்கத்தின் அங்கீகாரத் திற்காக அனுப்பப்பட்டது.

பன்னாட்டுப் பிரச்சினைகள் அனைத்தையும், நட்பு முறையில் பேச்சுவார்த்தைகளின்மூலமே தீர்த்துக்கொள்ளவேண்டுமென்று இவ்வுடன்படிக்கை கூறியது. இத்துடன் எந்த ஒரு நாடு பொது வான தீர்ப்புக்களை ஏற்றுக்கொள்ள மறுக்கிறதோ அந்த நாடும், அமைதியையும், அமைதிக்கான நடவடிக்கைகளையும் எந்த ஒரு நாடு குலைக்க முயற்சிக்கிறதோ அந்த நாடும், ஆக்கிரமிப்பு நாடு களாகக் கருதப்படவும், ஆக்கிரமிப்பு நாடுகளின் மீது இவ்வுடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ள எல்லா நாடுகளும் ஒன்று சேர்ந்து, சூழ்நிலைகளுக்கு ஏற்ப இராணுவ நடவடிக்கை களை மேற்கொள்ள அனுமதிக்கவும் ஜெனீவா உடன்படிக்கை வழிவகை செய்தது.

பிரான்சுக்கும் பிரிட்டனுக்கு மிடையே கருத்து வேற்றுமை

ஜெனீவா உடன்படிக்கையின் வாயிலாகப் பாரிஸ் அமைதி உடன்படிக்கைகளை முழுவதுமாகச் செயல்படுத்தவும், அதற்கு உறுப்பு நாடுகளின் ஒத்துழைப்பை, குறிப்பாக பிரிட்டனின் ஒத்துழைப்பைப் பெறவும் பிரான்சு விரும்பியது. ஆனால் பிரான்சு நாடோ, ஐரோப்பாவில் உள்ள பிரான்சு நாட்டின் வேறு எந்த நட்பு நாடுகளோ பிரான்சுடன் பன்னாட்டு அமைப்புக்களில் சேர்ந்து கொண்டு சில விதிமுறைகளை ஏற்படுத்தி, அவற்றைத் தன்மீது திணிப்பதையோ, அவ் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்குமாறு தன்னைக் கட்டாயப் படுத்துவதையோ பிரிட்டன் விரும்பவில்லை. மேலும் பிரிட்டனிலும், பிரிட்டனின் ஆதிக்கத்தின்கீழ் இருந்த நாடு களிலும் பிரான்சுக்கு எதிரான கருத்துக்கள் வளர்ச்சியடைந்தன. எனவே பிரிட்டன் "ஜெனீவா உடன்படிக்கையை" இருவகை களில் குறை கூறியது. ஜெனீவா உடன்படிக்கை ஐக்கிய அமெரிக்க நாட்டின் சமாதான முயற்சிகளைக் குலைத்து, அந் நாட்டிற்கு எதிராகச் சர்வதேசச் சங்க உறுப்பு நாடுகளைப்

போரிடத் தூண்டுமென்றும், இதனல் உறுப்பு நாடுகளிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படுமென்றும் பிரிட்டன் கூறியது. மேலும் இவ்வுடன்படிக்கை, பிரிட்டனை உலகம் முழுவதையும் காவல் காக்க வழிசெய்கிறது என்றும், தனக்குக் கிழக்கு ஐரோப்பாவில் நாட்டமில்லாததால் தன்னல் அது இயலாது என்றும் பிரிட்டன் கூறியது. பிரிட்டன் கூறிய முதல் குறைக்கு ஐக்கிய அமெரிக்காவிற்கு மட்டும் விலக்கு அளித்துவிடலாம் என்று கூறிய பிரான்சு,பிரிட்டனின் இரண்டாவதுகுறைக்குப்பதிலேதும் கூறமுடியாததால், பிரிட்டன் "ஜெனீவா உடன்படிக்கையை" அங்கீகரிக்க மறுத்தது. சர்வதேசச் சங்கத்தின் நிரந்தர உறுப்பு நாடான பிரிட்டன் ஜெனீவா உடன்படிக்கையை அங்கீகரிக்க மறுக்கவே இவ்வுடன்படிக்கை செயல்படவில்லை. பிரான்சின் முயற்சி பிரிட்டனுடைய மறுப்பால் தோல்வியடைந்ததால் பிரிட்டனுக்கும், பிரான்சிற்குமிடையே நிலவிய கருத்து வேறு பாடுகள் மேலும் வளர்ந்து வலிவடைந்தன.

நேசநாடுகளின் போர்க்காலக் கடன் சுமை

முதல் உலகப் போர் முடிந்தவுடன் போர்க்காலக் கடன்கள் ஒரு சிக்கலான பிரச்சினையாக இருந்தது. முதல் உலகப் போர் 1914-ல் தொடங்கியவுடன் உலகின் வங்கி என்று கருதப்பட்ட பிரிட்டன், ஐரோப்பாவில் இருந்த தனது நேசநாடுகளுக்குப் பெருமளவில் கடன் வழங்கியது. இதனல் ஐரோப்பாவிலிருந்த நேசநாடுகள் தங்கள் பொருளாதாரச் சுமையிலிருந்து விடுபட்டு ஜெர்மனிக் கெதிராகத் துணிவுடன் போரிட வசதி ஏற்பட்டது. பின்னர் ஐக்கிய அமெரிக்கா, ஜெர்மனிக்கு எதிராக நேசநாடு களுடன் உலகப் போரில் கலந்துகொண்டவுடன் பிரிட்டன், பிரான்சு, இத்தாலி ஆகிய ஐரோப்பிய வல்லரசுகளுக்கும், பிற ஐரோப்பியச் சிறு நாடுகளுக்கும் மிக அதிக அளவில் கடன் வழங்கியது. இக்கடன் முழுவதும் பெரும்பாலும் முதல் உலகப் போரின் இறுதியாண்டிலேயே ஐக்கிய அமெரிக்காவால் நேச நாடுகளுககு வழங்கப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவால் நேச நாடுகளுக்கு வழங்கப்பட்ட கடன் சுமார் 1,100 கோடி டாலர் களாகும்.

ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய வல்லரசுகளிடம் பிரான்சு பெருமளவில் கடன் வாங்கியதால் அந்நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி ஒருபுறமிருக்க, உலகப் போரின்பொழுது அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி ஆகிய மூன்று வல்லரசுகளும் அனுபவிக்காத அளவிற்கு எதிரியின்

போர் நடவடிக்கைகளால் ஏற்பட்ட அழிவுகளை பிரான்சு அனுபவித்தது. பிரான்சின் பெரும்பாலான பகுதிகள் அழிக்கப்பட்டு விளைநிலங்களில் பெரும்பகுதி சாகுபடிக்குத் தகுதியில்லாத நிலங்களாயின. மேலும் பிரான்சின் தொழில் வளர்ச்சியும் பெருமளவில் பாதிக்கப்பட்டது. எனவே, தன்னுடைய நிலங்களைச் சாகுபடிக்கு ஏற்றதாகச் சீர்திருத்தி அமைக்கவும், அழிந்த பகுதிகளை மீண்டும் புதுப்பிக்கவும், மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், தன்னுடைய கடன்களைத் திருப்பிக் கொடுக்கவும் பிரான்சு தன்னுடைய அழிவுக்குக் காரணமான ஜெர்மனியிடமிருந்தும், ஜெர்மனியின் நட்பு நாடுகளிடமிருந்தும் மிக அதிக அளவில் நஷ்டஈட்டுத் தொகையைக் கோரியது. பிரான்சின் நியாயமான கோரிக்கைகளுக்குச் செவிசாய்த்த வெற்றி பெற்ற நாடுகளும், பாரிஸ் அமைதி உடன்படிக்கைகளில் தக்க ஏற்பாடுகளைச் செய்து, ஜெர்மனி மிக அதிகமான தொகையைப் போர் நஷ்ட ஈடாகக் கொடுக்க வேண்டுமெனக் கூறின.

போர் நஷ்ட ஈட்டுத் தொகையைக் கொடுக்கத் தோல்வியடைந்த நாடுகளை ஒப்புக் கொள்ள வைப்பதும், தோல்வியடைந்த நாடுகள் கூறிய உறுதிமொழிகளை நிறைவேற்றி வைப்பதும் சிரமமானதாக இருந்தன. நேசநாடுகள் தோல்வியடைந்த நாடுகளின்மீது நிர்ணயித்த நஷ்டஈட்டுத்தொகையை ஆஸ்திரியா, ஹங்கேரி, பல்கேரியா போன்ற நாடுகள் ஓரளவு சிரமத்தின் பேரில் கொடுத்து விட்டன. இந்நாடுகளின் பரப்பளவு வெகுவாகக் குறைக்கப்பட்டதுடன், இந்நாடுகளின் வருவாய்க்கான வழிகளும் சுருக்கப்பட்டு விட்டன. இந்நாடுகளுக்கு எதிராக அண்டை நாடுகள் சுங்கவரியை விதித்தன. இந்நாடுகளின் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க இந்நாடுகள் நஷ்டஈட்டுத் தொகையைக் கொடுப்பதற்குப் பதிலாக வெளிநாடுகளிலிருந்து மேலும் கடன்தொகைகளைப் பெறும்நிலையில் இருந்தன. இவற்றுள் பல்கேரியா மிக ஏழை நாடாக இருந்தது. ஆஸ்திரியா–ஹங்கேரி பேரரசாக இல்லாததுடன், இதன் வளப்பமான பகுதிகளும் இந்நாட்டிலிருந்து பிரிந்து சென்றன. ஹங்கேரி மிகச்சிறிய விவசாய நாடாக இருந்தது. இந்நாட்டிற்குத் துறைமுகமோ, சிறந்த சந்தையோ இல்லை. இந்நிலையில் ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னாவில் நகர மக்களின் தொகை பெருமளவில் அதிகரித்தது. எனவே வெகு விரைவில் ஆஸ்திரியா, ஹங்கேரி ஆகிய நாடுகளின் பொருளாதார நிலை மோசமடைந்ததால் இந்நாடுகளுக்குக் கடன் வழங்குமாறு வெளிநாடுகளைச் சர்வதேசச் சங்கம் கேட்டுக்கொண்டது.

இந்நிலையில் ஆஸ்திரியா, ஹங்கேரி, பல்கேரியா போன்ற நாடுகள் நஷ்டஈட்டுத் தொகையை வெற்றி பெற்ற நாடு களுக்குக் கொடுப்பது மிகச் சிரமமாக இருந்தது.

ஜெர்மனி கொடுக்க வேண்டிய நஷ்டஈடு

பெரும்பாலும் வெற்றியடைந்த நாடுகள் அனைத்தும் உலகப் போருக்கு ஜெர்மனியே முக்கிய காரணம் எனக் கருதின. எனவே நேசநாடுகளுக்கு ஏற்பட்ட நஷ்டங்களுக்கு ஜெர் மனியே பொறுப்பு என்று கருதிய நேசநாடுகள், ஜெர்மனி மிக அதிக அளவில் நஷ்டஈட்டுத் தொகையைக் கொடுக்க வேண்டுமெனக் கூறின. ஜெர்மனியை இந் நஷ்ட ஈட்டைக் கொடுக்க வைப்பதில் பல சிக்கல்கள் ஏற்பட்டன. போர் நஷ்ட ஈடுகளை நிர்ணயிப்பதற்காக அமைக்கப்பட்ட குழு ஜெர்மனிய மக்களின் சக்தியைச் சிறிதும் சிந்திக்காமல், நஷ்டஈட்டுத் தொகையை நிர்ணயித்தது. அத்துடன் ஜெர்மனியர்கள் நஷ்ட ஈட்டுத் தொகையைக் கொடுக்க ஒப்புக் கொள்ளுமாறு கட்டாயப் படுத்தப்பட்டனர்.

நஷ்டஈட்டுத் தொகையை நிர்ணயித்த பின்னர் ஜெர்மனி உடனடியாகத் தன்னாலியன்ற வரை நஷ்டஈட்டுத் தொகை யைக் கொடுக்க வேண்டுமென நேசநாடுகள் விரும்பின. ஆனால் ஜெர்மனியால் இந்த நஷ்டஈட்டைக் கொடுக்க முடியுமா? முடியாதா? என்பதைப் பற்றி நேசநாடுகள் சிறிது கூடச் சிந்திக்கவில்லை. இத்துடன் ஜெர்மனியால், வெற்றி யடைந்த நாடுகளுக்கு எவ்வளவு நஷ்டஈட்டுத் தொகையைக் கொடுக்க முடியும் என்பது பற்றியும் நேசநாடுகள் சிந்திக்க வில்லை. பெரும்பாலும் அரசியல் தலைவர்கள் எதிர்பார்த்த நஷ்டஈட்டுத் தொகையைவிட, பொருளாதார வல்லுநர்கள் நிர்ணயித்த நஷ்ட ஈட்டுத் தொகையின் அளவு அதிகமாக இருந்தது. அத்துடன் ஜெர்மனியுடன் செய்து கொண்ட வார்சே உடன்படிக்கையில் ஜெர்மனி எவ்வளவு நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்பதும் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. மேலும் வெற்றியடைந்த நாடுகள் தங்கள் திறமைக்கு ஏற்ப எவ்வளவு தொகைகளை நஷ்ட ஈடாகப் பெறமுடியுமோ அவ்வளவு தொகைகளை நஷ்டஈடாகப் பெற இவ்வுடன்படிக்கை வாய்ப் புக்களை ஏற்படுத்தியது. இதனால் ஜெர்மனியின் பொருளாதார நிலை சீர்குலைவதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டு, ஜெர்மனி இந்நஷ்டஈடுகளைக் கொடுப்பதற்கான சக்தியையும் இழக்கத் தொடங்கியது. மேலும் ஜெர்மனியிடமிருந்து நஷ்டஈட்டுத்

தொகையைப் பெறுவது பற்றி நேசநாடுகளிடையே கருத்து வேறுபாடுகள் தோன்ற ஆரம்பித்தன. இதனால் 1920-ல் ஸ்பா (Spa) என்ற இடத்தில் ஒரு மாநாட்டைக் கூட்டி ஜெர்மனி கொடுக்கும் நஷ்டஈட்டுத் தொகையிலிருந்து எந்தெந்த (வெற்றி பெற்ற) நாடுகள் எவ்வளவு தொகையை எடுத்துக் கொள்ள வேண்டுமென நிர்ணயம் செய்யப்பட்டது. ஸ்பா என்ற இடத்தில் கூடிய மாநாடு ஜெர்மனி கொடுக்கும் மொத்த நஷ்டஈட்டுத் தொகையில் பிரான்சு 52 விழுக்காடும், பிரிட்டன் 22 விழுக்காடும், இத்தாலி 10 விழுக்காடும், பெல்ஜியம் 8 விழுக்காடும், மற்ற நாடுகள் எஞ்சிய 8 விழுக்காடுமாகப் பகிர்ந்து எடுத்துக் கொள்ள வேண்டுமென முடிவு செய்தது. இதனை எல்லா நேசநாடுகளும் ஒப்புக் கொண்டன. இதிலும் சில பிரச்சினைகள் ஏற்படவே நஷ்டஈட்டுத் தொகை நிர்ணயக் குழு 1921-ல் ஜெர்மனி கொடுக்க வேண்டிய நஷ்டஈட்டுத் தொகையை 3200 கோடி டாலர்கள் என நிர்ணயம் செய்தது.

ஜெர்மனி 3200 கோடி டாலர்களை நஷ்டஈடாகக் கொடுக்க முடியுமா என்பதையும், உண்மையில் ஜெர்மனியால் எவ்வளவு தொகையை நஷ்டஈடாகக் கொடுக்க முடியுமென்பதையும் எந்த ஒரு வெற்றி பெற்ற நாடும் சிந்திக்கவில்லை. ஆனால் ஒரு குறிப்பிட்ட நஷ்டஈட்டுத் தொகையை ஜெர்மனி பொருளாகக் கொடுக்க நேசநாடுகள் அனுமதித்தன. எனவே நிலக்கரி, நீராவி எஞ்சின்கள், நூற்பாலைகள், மற்ற தொழிற்சாலைப் பொருள்கள், சுரங்கப் பொருள்கள் எனப் பெருமளவு பொருள்களை ஜெர்மனி நேசநாடுகளுக்குக் கொடுத்தது. இதனால் ஒரு குறிப்பிட்ட அளவு நஷ்டஈட்டுத் தொகையைப் பொருள்களாக ஜெர்மனி கொடுத்தது. ஆனால் ஜெர்மனி தான் கொடுக்க வேண்டிய நஷ்டஈட்டுத் தொகையைப் பொருள்களாகக் கொடுத்ததால் தங்களுடைய பொருள்களுக்குச் சந்தைகள் கிடைக்காமல் போய்விட்டன என்று சில நேசநாடுகள் குறை கூறவே, ஜெர்மனியிடமிருந்து நஷ்டஈட்டுத் தொகையைப் பொருள்களாக வாங்குவது நிறுத்தப் பட்டது.

இதனால் நஷ்டஈட்டின் பெருந்தொகையை ஜெர்மனி பணமாகக் கொடுக்க வேண்டி நேர்ந்தது. ஜெர்மனியின் ஏற்றுமதி இறக்குமதியைக் காட்டிலும் அதிக அளவில் இருந்தால் மட்டுமே, ஜெர்மனியால் நஷ்டஈட்டுத் தொகையைப் பணமாகக் கொடுக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டது. ஆனால் அவ்வளவு அதிக அளவு பொருள்களை ஜெர்மனி ஏற்றுமதி செய்ய முடியாத நிலையிலிருந்தது. ஜெர்மனியின் வளப்பமான

பகுதிகளும், தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகளும் வார்சே உடன்படிக்கையின்படி நேசநாடுகளின் ஆதிக்கத்திற்குள்ளானமையே ஜெர்மனியின் இந்நிலைக்கு முக்கிய காரணமாகும். அத்துடன் ஜெர்மனியின் பொருள்கள் பெருமளவில் விற்கப் பட்டு வந்த இரஷ்யாவில் அப்பொழுது புரட்சி ஏற்பட்டுக் குழப்பமான நிலை ஏற்பட்டதால் பிறநாடுகள் இரஷ்யப் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்துவது தடை செய்யப்பட்டது. எனவே ஜெர்மனி தனது பொருள்களை இரஷ்யாவில் விற்பனை செய்ய முடியவில்லை. அடுத்து ஜெர்மனியின் ஆதிக்கத்தின்கீழ் இருந்த வெளி நாட்டுப் பகுதிகளும், குடியேற்ற நாடுகளும் அப்பொழுது ஜெர்மனியின் ஆதிக்கத்தின்கீழ் இல்லை. அதனாலும் ஜெர்மனி தனது பொருள்களை இப்பகுதிகளில் விற்பனை செய்ய முடியாமல் போய்விட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக ஜெர்மனியின் அண்டை நாடான போலந்து பொருளாதாரத் துறையில் ஜெர்மனியுடன் போட்டியிட்டது; ஜெர்மனியில் இருந்து தன்னுடைய நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் மீது அதிக அளவு சுங்கவரியை விதித்தது. அத்துடன் வழக்கமாக ஜெர்மனியால் பயன்படுத்தப்பட்டு வந்த வியாபார வழிகளைவிடச் சிறந்த புதிய வழிகளைக் கண்டறிந்து போலிஷ் தாழ்வாரங்களில் தன்னுடைய வியாபாரத்தைப் போலந்து துவக்கியது. இவ்வாறு எல்லாத் துறைகளிலும் வியாபாரம் பாதிக்கப் பட்டதால் ஜெர்மனியில் பணவீக்கம் ஏற்பட்டது. இத்துடன் ஜெர்மனி தன்னுடைய பொருள்களை பிரிட்டன் பிரான்சு, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு எதிராகக் குறைந்த விலையில் விற்பனை செய்ய வேண்டியதாயிற்று. மேலும் ஜெர்மனி தனது பொருள்களைத் தனது உள்நாட்டுச் சந்தைகளிலேயே மிகக் குறைந்த விலையில் விற்க வேண்டியதாயிற்று. ஜெர்மனி தனது பொருள்களைக் குறைந்த விலையில் விற்க ஆரம்பித்ததால் பிற ஐரோப்பிய நாடுகள் ஜெர்மனியப் பொருள்களுக்குத் தங்களுடைய சுங்கவரியை அதிகப்படுத்தின. இதனால் ஜெர்மனியின் பண வீக்கம் மேலும் வளர்ச்சியடைந்து ஜெர்மனியில் பிராங்குகள் மதிப்பிழக்கும் அளவிற்குப் பொருளாதார நிலை மோசமடைந்தது. ஜெர்மனியே முதல் உலகப் போருக்கு முழுவதும் காரணம் எனக் கருதி, ஒரு பெரும் தொகையை ஜெர்மனியின் மீது போர் நஷ்டஈட்டுத் தொகையாகச் சுமத்தினலும், அந்நஷ்டஈட்டுத் தொகையை ஜெர்மனி கொடுக்க முடியாமல் போனதற்கு வெற்றி பெற்ற நாடுகளே பெரும்பாலும் முக்கிய காரணங்களாயின.

ரூர் பள்ளத்தாக்கு பிரான்சு வசமாதல்

ஜெர்மனி தனது மோசமான பொருளாதார நிலையின் காரணமாக நஷ்டஈட்டுத் தொகையைக் கொடுக்க முடியாமல் போகவே, இரண்டாண்டுகளுக்கு நஷ்டஈட்டுத் தொகையைக் கொடுக்காமல் இருப்பதற்கு அனுமதி வழங்குமாறு 1922-ல் ஜெர்மனி நேசநாடுகளைக் கேட்டுக்கொண்டது. ஜெர்மனியுடன் தனது வியாபார உறவு வளர வேண்டுமெனக் கருதிய பிரிட்டன் ஜெர்மனியின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்தது. ஆனல் பிரஞ்சு அரசு இதற்கு உடன்படாமல் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவு செய்தது. இதனல் 1923 ஜனவரியில் பிரான்சின்படை ரைன் நதியைக் கடந்து தொழிற்சாலைகளுக்குப் பெயர் பெற்றதும், சுரங்கங்கள் நிறைந்திருந்ததுமான ஜெர்மனியின் ரூர் பள்ளத்தாக்கைக் கைப்பற்றியது. எல்லா நாடுகளும் ஜெர்மனியின் நிலைக்கு இரக்கம் காட்டின. பிரான்சின் இராணுவ நடவடிக்கைகளால் ஜெர்மனியர்கள் கோபமடைந்தாலும், எத்தகைய இராணுவ நடவடிக்கைகளிலும் ஈடுபட முடியாத நிலையிலிருந்தனர். இருப்பினும் பிரஞ்சுக்காரர்களின் செயல் ஜெர்மனிய மக்களிடையே நாட்டுப்பற்றை வலுவடையச் செய்தது. இதனல் இன்னும் தொல்லைமிக்க பொருளாதார நிலைக்குச் சென்ருலும், பிரான்சின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில்லை என ஜெர்மனியர்கள் முடிவு செய்தனர். இந்நிலையில் பிரான்சு கைப்பற்றிய ரூர் பள்ளத்தாக்கிலிருந்த ஜெர்மனியத் தொழிலாளர்கள் பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனல் ரூர் பள்ளத்தாக்கில் தொழில் ஸ்தம்பித்துவிடவே பிரான்சின் எண்ணம் ஈடேருமல் போய்விட்டது. இத்துடன் பிரான்சு ரூர் பள்ளத்தாக்கைக் கைப்பற்றி அடைய நினைத்த பொருளாதார இலாபத்தைவிட, அதிக அளவு தொகையைத் தனது படையெடுப்பிற்காக பிரான்சு செலவிட வேண்டியதாயிற்று. மேலும் பிரான்சு ரூர் பள்ளத்தாக்கைக் கைப்பற்றியதன் காரணமாக ஜெர்மனியின் பொருளாதாரம் மேலும் சீர்குலைந்ததால் ஜெர்மனி கொடுக்க வேண்டிய நஷ்டஈட்டுத் தொகையை மறுபரிசீலனை செய்ய வேண்டியதாயிற்று.

தவே திட்டம்

ஜெர்மனியின் பொருளாதார நிலை மோசமாகவே அந்நாடு கொடுக்க வேண்டிய நஷ்டஈட்டுத் தொகையை மறுபரிசீலனை செய்வதற்காகவும், ஜெர்மனிக்கும் நேசநாடுகளுக்குமிடையே சமரசம் செய்து வைப்பதற்காகவும் அமெரிக்கச் செல்வந்தரான சார்லஸ் தவே (Charles Dewes) என்பவரின் தலைமையின் கீழ்

பொருளாதார நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்று 1924-ல் நியமிக்கப்பட்டது. இக்குழு ஜெர்மனி கொடுக்க வேண்டிய நஷ்டஈட்டுத் தொகையின் அளவில் எந்த மாற்றமும் செய்யவில்லை. ஆனால் நஷ்டஈட்டுத் தொகை கொடுக்க வேண்டிய கால அளவில் சில மாற்றங்களைச் செய்தது. அத்துடன் ஒவ்வோர் ஆண்டும் ஜெர்மனி எவ்வளவு தொகையை நஷ்டஈடாகக் கொடுக்க வேண்டுமென்றும், இத்தொகையை எவ்வாறு கொடுப்பது என்றும் இக்குழு பரிந்துரை செய்தது. அதே சமயத்தில் ஜெர்மனியின் பொருளாதார நிலை ஸ்திரப்படுவதற்காகவும், ஜெர்மனியின் பிராங்குகளின் மதிப்பை உயர்த்துவதற்காகவும், ஜெர்மனிய மக்களின் உழைப்பால் ஜெர்மனி பழைய நிலையை அடைவதற்காகவும் புதிய வரிகளை ஜெர்மனியில் புகுத்துவதற்காகவும், இக்குழு ஏற்பாடுகளையும் பரிந்துரைகளையும் செய்தது. எல்லாவற்றிற்கும் மேலாக ரூர் பள்ளத்தாக்கினின்றும் பிரெஞ்சுப் படைகள் வெளியேற வேண்டுமெனக் கூறி, ஜெர்மனியின் செல்வம் வெளிநாடுகளுக்கு முறையின்றிச் செல்வதை இக்குழு தடுத்து நிறுத்தியது. இக்குழுவின் பரிந்துரைகள் "தவே திட்டம்" என வழங்கப்படுகிறது.

தவேயின் திட்டத்தின் காரணமாக 1925-ல் ஜெர்மனிக்கும் பிரான்சுக்குமிடையே நட்புறவு ஓரளவு வளர்ச்சியடைந்தது. இதற்கு பிரான்சின் வெளிநாட்டமைச்சராக இருந்த அரிஸ்டைடு பிரையாண்டும், ஜெர்மனியின் வெளிநாட்டமைச்சராக இருந்த குஸ்டாவ் ஸ்ட்ரெஸ்மேனும் ஓரளவு காரணமாவார்கள். இவ்விரு நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களும் நேரடி உடன்படிக்கைகளின் மூலம் தத்தம் நாட்டின் பாதுகாப்பிற்கு வழி தேடிக் கொள்ள முடியுமென நம்பினர். இவர்களுடைய நம்பிக்கைக்கு பிரிட்டனின் பிரதமராக இருந்த ஆஸ்டின் சேம்பர்லெனும் தூண்டுகோலாக இருந்தார். அத்துடன் சேம்பர்லென் இத்தாலிய அரசைத் தூண்டி ஜெர்மனிக்கும் இத்தாலிக்குமிடையே நட்புறவை வலுப்படுத்தினர்.

லொகார்னோ உடன்படிக்கை

பிரான்சு, இத்தாலி ஆகிய நாடுகள் ஜெர்மனியுடன் நட்புறவை வளர்த்துக் கொண்டதன் விளைவாகவும், பிரிட்டன் ஜெர்மனியிடம் இரக்கம் காட்டியதன் காரணமாகவும் 1925 அக்டோபரில் பல உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டன. இவை ஒட்டுமொத்தமாக லொகார்னோ உடன்படிக்கை என்று வழங்கப்படுகிறது. அதன்படி ஜெர்மனி சர்வதேசச் சங்கத்தின் கவுன்சிலில் ஐரோப்பாவின் வல்லரசு என்ற முறையில், ஒரு

நிரந்தர உறுப்பு நாடாயிற்று. அதே சமயத்தில் எந்த ஓர் உடன்படிக்கையையும் மறுபரிசீலனை செய்ய இராணுவத்தைப் பயன்படுத்துவது இல்லை என்றும் ஜெர்மனி உறுதி கூறியது. அத்துடன் பிரான்சு, பெல்ஜியம், செக்கோஸ்லாவாகியா, போலந்து ஆகிய நாடுகளுடன் தனக்கு ஏற்படும் பிரச்சினைகளையும், கருத்து வேற்றுமைகளையும் பேச்சு வார்த்தைகளின் மூலம் நட்பு முறையில் தீர்த்துக் கொள்ள ஜெர்மனி ஒப்புக் கொண்டது. ஜெர்மனியின் கிழக்கு எல்லைகளை அமைதியான முறையில் மாற்றியமைத்துக் கொள்ள ஜெர்மனிக்கு உரிமைகள் வழங்கப்பட்டன. அன்றியும் புதிதாக ஏற்படுத்தப்பட்ட அதன் மேற்கெல்லைகளை ஏற்றுக் கொள்ள ஜெர்மனி சம்மதித்தது. அத்துடன் இவ்வுடன்படிக்கையின்படி ஜெர்மனி, பிரான்சு, பெல்ஜியம் போன்ற நாடுகள் ஒவ்வொன்றும் தங்களுடைய எல்லைகளை மதித்து நடப்பதுடன், தங்கள் எல்லைகளின் காரணமாகப் போரிட்டுக் கொள்வதில்லை என்றும், சர்வதேசச் சங்கத்தின் சாசனத்தை மதித்து நடப்பது என்றும் உறுதி கூறின. எல்லாவற்றிற்கும் மேலாக பிரிட்டன், இத்தாலி ஆகிய இரண்டு நாடுகளும் லொகார்னோ உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்குத் தேவையான இராணுவ உதவிகளை அளிப்பதாக உறுதி கூறின. அத்துடன் பிரிட்டன், பிரான்சு, இத்தாலி, ஜெர்மனி ஆகிய நான்கு நாடுகளில் ஏதாவது ஒரு நாடு இவ்வுடன்படிக்கையை மீறி நடந்தால் மற்ற மூன்று நாடுகளும் ஒன்று சேர்ந்து, உடன்படிக்கையை மீறிய நாட்டின் மீது தக்க இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளுவது எனவும் மேற்கூறிய நான்கு நாடுகளும் உறுதி கூறின.

ஜெர்மனி, பிரான்சு ஆகிய நாடுகளில் தீவிரவாதிகள் லொகார்னோ உடன்படிக்கை பலகாலம் நிலைத்திருக்கக் கூடியது என்று புகழ்ந்து கூறினர். மேலும் இவ்வுடன்படிக்கை வெற்றி பெற்ற நாடுகளுக்கும் தோல்வியடைந்த நாடுகளுக்குமிடையே நட்புறவை வளர்ப்பதாக அமைந்துள்ளது எனவும், உலக அமைதியை நோக்கி மேலும் ஒருபடி முன்னேறும் வகையில் உள்ளது எனவும் பலவாறு புகழ்ந்துரைத்தனர். இவ்வாறு அமைதிக்கான முயற்சிகள் வளர்ந்து கொண்டிருந்த பொழுது அமெரிக்காவின் மாநிலத் தலைமைச் செயலாளராக இருந்த பிராங்க் கெல்லாக் (Frank Kellogg) என்பவர் பிரையாண்டு (Briand) என்பவரின் தூண்டுதலின் பேரில் உலக நாடுகள் எல்லாம் இனி போரில் ஈடுபடுவதில்லை என உறுதி எடுத்துக் கொள்ளும் வகையிலும், போர் தேசியக் கொள்கைகளின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது என்று கூறும் வகையிலும் ஓர்

உடன்படிக்கையைத் தயார் செய்தார். ஆனால் பிரையாண்டு இவ்வுடன்படிக்கையை முழுவதுமாக ஏற்றுக் கொள்ளவில்லை எனவே கெல்லாக் இவ்வுடன்படிக்கை கொள்கையளவிலே இருக்கும் என்றும் இது நிறைவேற்றப்படுவது இவ்வுடன் படிக்கையில் கையெழுத்திடும் நாடுகளின் நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் பொறுத்தே அமையுமென்றும் கூறினர். இறுதியாக இவ்வுடன்படிக்கை 1928 ஆகஸ்டில் பாரிஸ் நகரத்தில் கையெழுத்தாயிற்று. இவ்வுடன்படிக்கைக்கு கெல்லாக்கும் பிரையாண்டும் காரணமாக இருந்ததால், கெல்லாக்-பிரையாண்டு உடன்படிக்கை (Kellogg-Briand Pact) என வழங்கப்படுகிறது.

லொகார்னோ உடன்படிக்கையும், கெல்லாக்-பிரையாண்டு உடன்படிக்கையும் பாதுகாப்புப் பிரச்சினைகள் முழுவதையும் தீர்த்து வைத்துவிடவில்லை. லொகார்னோ உடன்படிக்கையை பிரான்சு, ஜெர்மனி ஆகிய இரு நாடுகளும் வெவ்வேறு விதமாக விமரிசித்தன. லொகார்னோ உடன்படிக்கை ஜெர்மனியை வார்சே உடன்படிக்கையை ஒப்புக்கொள்ள வைத்தது என்று இந்நாடுகள் கருதின. ஜெர்மனி வார்சே உடன்படிக்கையை மறுபரிசீலனை செய்ய இது வழி வகுத்துள்ளது எனக் கருதியது. ஆனால் பிரான்சு ஜெர்மனி ஆகிய இரு நாடுகளுமே லொகார்னோ உடன்படிக்கையைத் தவறாகப் புரிந்து கொண்டன.

இதனால் ஜெர்மனி மிக நெருக்கடியான நிலையில் இருந்த பொழுது வார்சே உடன்படிக்கையின்படி தன் மீது சுமத்தப் பட்டுள்ள சுமைகளைக் குறைக்க வேண்டுமெனக் கோரியது. ஆனால் பிரான்சு வார்சே உடன்படிக்கையின் நிபந்தனைகளை மாற்ற இயலாது எனத் தீவிரமாக இருந்ததுடன், மேலும் சலுகைகளை வழங்க பிரான்சு தயாராக இல்லை. எனவே பிரிட்டன், இத்தாலி ஆகிய நாடுகளை பிரான்சு உதவிக்கு அழைத்தது. ஆனால் லொகார்னோ உடன்படிக்கையின்படி ஜெர்மனியின் மேற்கு எல்லைகளில் எவ்வித மாற்றமும் ஏற் படுத்த வாய்ப்பில்லாததால் பிரான்சு தன்னுடைய எல்லைகளின் பாதுகாப்பிற்காகப் போலந்து, செக்கோஸ்லாவாகியா ஆகிய நாடுகளுடன் தான் செய்து கொண்ட இராணுவ ஒப்பந்தங்களை மீண்டும் புதுப்பித்துக் கொண்டது. அத்துடன் பிரான்சு 1941-ல் இத்தாலியின் ஒத்துழைப்பின் பேரில் ஜெர்மனி ஆஸ் திரியாவுடன் செயது கொண்ட சுங்கவரி அமைப்பைத் தடுக்க முயற்சி செய்தது.

இதற்கிடையில் தவேயின் திட்டப்படி போர் நஷ்டஈட்டுத் தொகையை ஜெர்மனியால் கொடுக்க இயலாமல் போகவே, தாங்கள் கொடுக்க வேண்டிய நஷ்டஈட்டுத் தொகையின் அளவை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று ஜெர்மனி கோரியது. ஆனால் பிரான்சு மீண்டும் இதற்கு மறுக்கவே, ஜெர்மனி மேலும் கோபமடைந்தது. இதனால் தன்னுடைய உள்நாட்டு விவகாரங்களில் அந்நியர்கள் தலையிடுவதை ஜெர்மனி தடை செய்தது. அத்துடன் தான் போர் நஷ்டஈடாகக் கொடுக்க வேண்டிய 3200 கோடி டாலர்கள் தன்னுடைய சக்திக்கு அப்பாற்பட்டது எனவும் ஜெர்மனி கூறியது. இதனால் பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகள் ஜெர்மனியின் நிலையை உணர்ந்து அதன்பால் இரக்கம் காட்டின. ஆனால் பிரான்சு மட்டும் எக்காரணத்தைக் கொண்டும் ஜெர்மனி கொடுக்கவேண்டிய நஷ்டஈட்டுத் தொகையை மறுபரிசீலனை செய்ய விரும்பவில்லை. அத்துடன் ஜெர்மனி கொடுக்க வேண்டிய நஷ்டஈட்டுத் தொகையைக் குறைத்தால் நேசநாடுகள் கொடுக்க வேண்டிய கடன்களையும் குறைக்க வேண்டுமென்று பிரான்சு கூறியது. ஆனால் ஐக்கிய அமெரிக்காவின் மக்களும், அரசாங்கமும் நேசநாடுகள் தங்களுக்குக் கொடுக்க வேண்டிய கடன்களைத் தள்ளிக் கொடுக்க விரும்பாததுடன், ஜெர்மனியின் சுங்கவரிக் கொள்கைகளுக்கும் ஆதரவளித்தனர்.

எனவே ஜெர்மனியர்களின் வேண்டுகோளுக்கிணங்க இரண்டாவது முறையாக ஓவென் யங் (Owen Young) என்ற அமெரிக்கச் செல்வந்தரின் தலைமையின்கீழ் பொருளாதார நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்று 1929-ல் ஜெர்மனி கொடுக்க வேண்டிய நஷ்டஈட்டுத் தொகையை நிர்ணயிப்பதற்காக நிறுவப்பட்டது. இக்குழு பாரிஸில் கூடி தவேயின் திட்டங்களில் பெருமளவில் மாற்றங்களைச் செய்தது. இதன்படி ஜெர்மனி கொடுக்கவேண்டிய நஷ்டஈட்டுத் தொகையில் $\frac{3}{4}$ பங்கைத் தள்ளுபடி செய்து எஞ்சிய $\frac{1}{4}$ பங்கை அந்நியர்களின் மேற்பார்வைக்கு உட்படாமல் 58 ஆண்டுகளில் ஜெர்மனி கொடுக்க வேண்டுமென்று பரிந்துரை செய்தது. இதன்படி 3200 கோடி டாலர்கள் கொடுக்கவேண்டிய ஜெர்மனி 800 கோடி டாலர்கள் மட்டுமே நஷ்டஈடாகக் கொடுக்க வேண்டியிருந்தது. அத்துடன் ரைன் நதிப் பகுதி முழுவதிலிருந்தும் நேசநாடுகளின் படைகள் வெளியேற வேண்டுமென்றும் இக்குழு பரிந்துரை செய்தது. இக்குழுவின் பரிந்துரையின் பேரில் ஓர் உடன்

படிக்கை தயாரிக்கப்பட்டு அது 1930-ல் ஹேக் என்ற இடத்தில் கையெழுத்தாயிற்று.

ஆனால் 1930ஆம் ஆண்டிற்குப் பின்னர் உலக நாடுகளிடையே ஒரு பெரிய பொருளாதார மந்தம் நிலவியது. இதனால் ஜெர்மனி மக்களிடையே மேற்கொண்டு போர் நஷ்ட ஈட்டுத் தொகையைக் கொடுக்க முடியாது என்ற எண்ணம் உருவாகியது. மேலும் பொருளாதார மந்தநிலையின் காரணமாகக் கடன் கொடுத்த நாடுகள் 1931ஆம் ஆண்டில் தங்கள் கடன்களை வசூலிப்பதைத் தள்ளிவைத்தன. அடுத்து 1932-ல் லௌசேன் என்ற இடத்தில் ஒரு மாநாட்டைக்கூட்டி ஜெர்மனி கொடுக்கவேண்டிய தொகையை இறுதியாக நிர்ணயிக்க வேண்டுமென்று பெரும்பாலான நாடுகள் விரும்பின. அத்துடன் நேசநாடுகள் அமெரிக்காவிற்குக் கொடுக்கவேண்டிய கடன் தொகையைக் கணிசமான அளவு தள்ளுபடி செய்து கொடுக்க அமெரிக்கா ஒப்புக்கொண்டால், ஜெர்மனி கொடுக்கவேண்டிய போர் நஷ்டஈட்டுத் தொகையை 7000 இலட்சம் டாலர்களாகக் குறைத்துக்கொள்ள மற்ற நேசநாடுகள் விருப்பம் தெரிவித்தன. ஆனால் அமெரிக்கா, நேசநாடுகளிடமிருந்து தனக்கு வரவேண்டிய கடன்களைத் தள்ளிக் கொடுக்க விரும்பவில்லை. எனினும் தொழில்துறையில் நிலவிய மந்தநிலையின் காரணமாக நேசநாடுகள் அமெரிக்காவிற்குக் கொடுக்கவேண்டிய கடனைத் திருப்பிக் கொடுக்காததுடன், ஜெர்மனியிடமிருந்தும் போர் நஷ்டஈட்டுத் தொகையைப் பெறவில்லை. இதனால் போர் நஷ்ட ஈட்டுத் தொகையும், நேசநாடுகள் கொடுக்கவேண்டிய கடனும் பன்னாட்டு வருவாய்க் கணக்கிலிருந்து நீக்கப்பட்டது. ஆனால் இதன் பிறகு உலகப் பொருளாதார நிலையில் ஒரு மாற்றம் ஏற்பட்டு நிலையான பொருளாதாரநிலை ஏற்படத் தொடங்கியது. பாரிஸ் அமைதி உடன்படிக்கையும் ஓரளவு பின்பற்றப்பட்டது.

படைக் குறைப்புப் பிரச்சினை

பாரிஸ் அமைதி மாநாட்டில் ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுத் தலைவரான வில்சன் வாதாடியதற்கு இணங்க சர்வதேசச் சங்கத்தின் சாசனத்தில் படைக் குறைப்புக்கு வழி செய்யப்பட்டது. ஆனால் படைக் குறைப்பு முயற்சி சில பிரச்சினைகளை ஏற்படுத்தியது. பொதுவாகப் படைக் குறைப்பு முயற்சி வெற்றி பெறவில்லை என்றே கூறலாம். சர்வதேசச் சங்கத்தின் சாசனத்திற்கு ஏற்ப, பிரான்சு தன்னுடைய நாட்டு இராணுவத்தைப் பாதியாகக் குறைத்துக் கொண்டதுடன்

தன்னுடைய நாட்டில் கட்டாய இராணுவ சேவையை மூன்றாண்டுகளிலிருந்து 1½ ஆண்டுகளாகக் குறைத்துக் கொண்டது. இதனைத் தொடர்ந்து ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, பல்கேரியா ஆகிய நாடுகள் தங்கள் நாட்டின் இராணுவத்தைக் கணிசமான அளவு குறைத்துக் கொண்டன. இருப்பினும் தங்கள் பாதுகாப்பிற்காக எல்லா நாடுகளும் (1914ஆம் ஆண்டிற்கு முன் இருந்த நாடுகளும், புதிதாகத் தோன்றிய நாடுகளும்) ஒரு நிலையான இராணுவத்தை வைத்திருந்தன. கம்யூனிஸப் புரட்சி ஏற்பட்ட இரஷ்யாவும் முதல் உலகப் போருக்கு முன்னர் இருந்ததைவிடத் திறமையும், வலிமையும் மிக்க ஓர் இராணுவத்தை வைத்திருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, பிரிட்டன் உலகப் போருக்கு முன்னர் இருந்ததை விடக் குறைந்த அளவில் கப்பற் படையை வைத்திருந்தாலும், அக் கப்பற் படை எல்லா நாட்டுக் கப்பற் படைகளையும்விட வலிமை பெற்றதாக இருந்தது. அவ்வாறே ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளின் கப்பற்படைகள் முன்னர் இருந்ததைவிட வலிமை வாய்ந்தனவாக இருந்தன. எனவே அமைதி மாநாட்டிற்குப் பின்னரும் எல்லா நாடுகளின் இராணுவமும் எப்பொழுதும் தயார் நிலையில் இருந்தன. இராணுவங்களுக்காக உலக நாடுகள் செலவழித்த தொகையும் அதிகமாக இருந்தது. இதனால் பெரும்பாலான நாடுகளில் அரசுகள் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கவேண்டிய நிலையிலிருந்த பொழுது, தங்கள் வருவாயில் பெருந்தொகையை இராணுவத்திற்காகச் செலவிடவேண்டிய நிலையிலும் இருந்தன. இதனால் 1871-க்கும் 1914-க்குமிடையே ஐரோப்பிய நாடுகளிடையே போர்க் கருவிகளை வைத்திருப்பதில் போட்டிகள் ஏற்பட்டாற் போல, மீண்டும் உலக நாடுகளிடையே இராணுவத் துறையில் போட்டிகள் ஏற்பட்டன. இதனால் மீண்டும் அபாய நிலை உருவாகும் சூழ்நிலை ஏற்பட்டது.

இருப்பினும் ஒவ்வொரு நாடும் பிற நாட்டின் படையைக் குறைக்க வேண்டுமென்று கூறியது. ஆனால் எந்த ஒரு நாடும் தன்னுடைய படையைக் குறைக்க முன் வரவில்லை. மேலும் ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளின் படைவலிமை தன்னுடைய பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிக்கும் என்று கூறி வந்தன. ஆனால் தங்கள் நாட்டின் படைவலிமை பிற நாடுகளின் தேசியப் பாதுகாப்பைக் குலைக்கும் என்பதைச் சிந்திக்கத் தவறி விட்டன. அத்துடன் பிரான்சு, போலந்து ஆகிய இரு நாடுகளும் வெளிநாடுகளுக்குத் தாங்கள் கொடுக்க வேண்டிய கடன் தொகைகளை அந்நாடுகளுக்குக் கொடுக்காமல் அத்

தொகையைத் தங்கள் இராணுவத்தைப் பலப்படுத்தப் பயன் படுத்துகின்றன என்று ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் தொடர்ந்து குறைகூறி வந்தன. ஆனால் ஜெர்மனி தங்களுக்கு எதிராகப் படையெடுத்து வரும்பொழுது ஐக்கிய அமெரிக்காவும் பிரிட்டனும் தங்களுக்கு உதவுவதாக உறுதியளித்தாலும், ஆங்கில மொழியைப் பேசும் வல்லரசுகள், தங்கள் கடற்படை வலிமையைக் குறைத்துக் கொண்டால்தான், தாங்களும் தங்கள் படை வலிமையைக் குறைத்துக்கொள்ள இயலும் என்று பிரான்சும் போலந்தும் கூறின.

இந் நிலையில் படைக்குறைப்பின் காரணமாகப் பாதுகாப்புப் பிரச்சினை எழுந்தது. தேசியப் படைகளை வைத்திருப்பது எதிர் காலத்தில் ஆபத்தை விளைவிக்கும், என்று பலர் கருதினர். அதனுடன் பிரான்சும், போலந்தும் தங்கள் படைவலிமையை ஜெர்மனியின் வலிமையளவிற்குக் குறைத்துக்கொண்டால், அது ஜெர்மனியை வார்சே உடன்படிக்கையை மீறி நடக்குமாறு தூண்டி, உலகப்போரை மீண்டும் புதுப்பிப்பதற்கு வழிகோலும் என்று சிலர் கருதினர். வேறு சிலர் போலந்தும், பிரான்சும் தங்கள் படைகளைக் குறைத்துக் கொள்ளாவிட்டால், ஜெர்மனி மட்டும் ஏன் தனது பாதுகாப்பைத் தியாகம் செய்து, தனது படையைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று கருதினர்.

எனவே, ஒவ்வொரு நாடும் தனது படையின் மூலம் தங்கள் நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்ததால், படைக்குறைப்பு இயலாத ஒன்றாக ஆகி விட்டதுடன், அது ஒரு பிரச்சினையாகவும் மாறிவிட்டது ஆனால் இந் நிலையில் தோல்வியடைந்த நாடுகள் தங்கள் போர்க் கருவிகளைப் பயன்படுத்தாமல் பார்த்துக் கொள்ளுவதும், பிற நாடுகள் தங்கள் இராணுவ வலிமையைச் சமநிலையில் வைத்துக் கொள்ளுமாறு பார்த்துக் கொள்ளுவதும், தேசியப் படைகளையும் கடற்படையையும் வைத்திருந்த வல்லரசுகளுக்கிடையே போட்டிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுவதுமே இயலக் கூடிய ஒன்றாக இருந்தது.

கடற்படை மாநாடுகள்

கடற்படை வைத்திருந்த நாடுகள் கடற்படையைக் குறைப்பதற்காக 1921-1922ஆம் ஆண்டில் வாஷிங்டனில் ஒரு மாநாட்டைக் கூட்டின. இதில் கடற்படை வைத்திருந்த ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், பிரான்சு, இத்தாலி, சீனா நெதர்லாந்து, போர்ச்சுகல், பெல்ஜியம் ஆகிய நாடுகளின்

பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இம் மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் தங்கள் கடல் வலிமையை மேலும் வலுப்படுத்தாமல் அப்படியே 10 ஆண்டுகளுக்கு வைத்திருப்பது என இம்மாநாட்டில் முடிவு செய்தனர். இம் மாநாட்டில் சிறிய போர்க்கப்பல்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு ஐக்கிய அமெரிக்கா முயற்சி செய்து தோல்வியடைந்தது. அவ்வாறே நீர்மூழ்கிக் கப்பல்களைப் பயன்படுத்துவதற்குத் தடைவிதிக்க முயன்று பிரிட்டன் தோல்வியடைந்தது. இருப்பினும் இம் மாநாடு போர்க் கப்பல்கள் கட்டுவதை 10 ஆண்டுகளுக்குத் தடைசெய்தது. இம் மாநாட்டில் ஐக்கிய அமெரிக்காவும், பிரிட்டனும் தங்கள் முயற்சிகளில் தோல்வியடைந்ததால் கடற் படை வலிமையைக் குறைக்கும் முயற்சியில் இம் மாநாடு அவ்வளவாக வெற்றி யடையவில்லை. இதனைத் தொடர்ந்து 1927-ல் ஜெனீவாவிலும், 1930-ல் இலண்டனிலும் இரு கடற் படை மாநாடுகள் கூட்டப்பட்டன. இம்மாநாடுகளிலும் கடற் படையைக் குறைக்கும் முயற்சி அவ்வளவாக வெற்றி பெற வில்லை. எனவே இக் கடற்படை மாநாடுகளின் தோல்வியின் காரணமாக, கடற்படை வைத்திருந்த நாடுகளிடையே தங்கள் கடற்படையைப் பெருக்குவதில் போட்டிகள் ஏற்பட்டன. இதனல் பிற நாடுகளின் தேசியப் பாதுகாப்பு பாதிக்கப்பட்டது.

அதேபோன்று 1925-ல் சர்வதேசச் சங்கம் உலக நாடு களின் இராணுவ வலிமையைக் குறைக்க முயற்சிகளை மேற் கொண்டு தோல்வியடைந்தது. அதனலும் மேலும் சில பிரச்சினை களும், இராணுவத் துறையில் போட்டிகளும் உலக நாடு களிடையே ஏற்பட்டன.

இவ்வாறு பாரிஸ் அமைதி மாநாட்டில் 1919, 1920 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட, பாரிஸ் அமைதி உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதில் பல தோல்விகள் ஏற்பட்டாலும், இவ் வமைதி உடன்படிக்கைகளின் காரணமாக அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய கண்டங்களில் வாழ்ந்த மக்களிடையே அமைதியை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை வளர்ச்சி யடையத் தொடங்கியது. மேலும் இவ் வுடன்படிக்கைகளின் காரணமாக மக்கள் சமுதாயத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. உலக வரலாற்றில் ஒரு புதிய யுகம் தோன்றியது. உலக மக்களிடையே ஒற்றுமையும், சகோதர மனப்பான்மையும் வளர்ச்சியடைந்ததால், அழிவினின்றும் உலகையும், உலக மக்களையும் காப்பாற்ற முடியுமென்று எல்லோருக்கும் தெளிவாயிற்று.

வம்சாவளி

1. **அயர்லாந்து**

    1921ஆம் ஆண்டு வரை பிரிட்டனின் ஒரு பகுதியாக இருந்தது.

2. **அல்பேனியா**

    1913ஆம் ஆண்டுவரை ஆட்டொமன் பேரரசின் பகுதியாக இருந்தது.
    இளவரசர் வில்லியம் (1913-1914)
    குடியரசு (1918-1928)

3. **ஆட்டொமன் பேரரசு**

    சுல்தான் அப்துல் அஜீஸ் (1861-1876)
    ஐந்தாம் மூரட் (1876)
    இரண்டாம் அப்துல் ஹமீது (1909-1918)
    ஆறும் முகமது (1918-1922)

4. **ஆஸ்திரியா**

    பேரரசர் பிரான்சிஸ் ஜோஸப் (1848-1916)
    முதலாம் சார்லஸ் (1916-1918)
    குடியரசு (1919-1938)

5. **இங்கிலாந்து**

    a) **அரசர்கள்**

    விக்டோரியா அரசியார் (1837-1901)
    அரசர் ஏழாம் எட்வர்டு (1901-1910)
    ஐந்தாம் ஜார்ஜ் (1910-1936)

    b) **பிரதம அமைச்சர்கள்**

    கிளாட்ஸ்டோன் (1868-1874)
    பெஞ்சமின் டிஸ்ரேலி (1874-1880)
    கிளாட்ஸ்டோன் (1880-1885)

சாலிஸ்பரியின் பிரபு (1885-1886)
கிளாட்ஸ்டோன் (1886)
சாலிஸ்பரியின் பிரபு (1886-1892)
கிளாட்ஸ்டோன் (1892-1894)
ரோஸ்பரியின் பிரபு (Earl) (1894-1895)
சாலிஸ்பரியின் பிரபு (1895-1902)
ஆர்தர் ஜே. பால்ஃபர் (1902-1905)
சர் ஹென்றி காம்பெல் பேனர்மென் (1905-1908)
ஹெர்பர்ட் அஸ்க்யுத் (1908-1916)
டேவிட் லாயிட்ஸ் ஜார்ஜ் (1916-1922)

6. இத்தாலி

இரண்டாம் விக்டர் இமானுவேல் (1861-1878)
முதலாம் ஹம்பர்ட் (1878-1900)
மூன்றும் விக்டர் இமானுவேல் (1900-1946)

7. ஐஸ்லாந்து

1944ஆம் ஆண்டு வரை டென்மார்க்குடன் இணைந்து இருந்தது.

8. கிரீஸ்

முதலாம் ஜார்ஜ் (1863-1913)
முதலாம் கான்ஸ்டன்டைன் (1913-1917)
முதலாம் அலெக்ஸாந்தர் (1917-1920)

9. க்ரோஷியா

1918ஆம் ஆண்டு வரை ஹங்கேரியாவின் ஒரு பகுதியாக இருந்தது.

1918ஆம் ஆண்டு முதல் யூகோஸ்லாவியாவின் ஒரு பகுதியாக உள்ளது.

10. செக்கோஸ்லாவாகியா

1918ஆம் ஆண்டு வரை ஆஸ்திரிய-ஹங்கேரியின் ஒரு பகுதியாக இருந்தது.

1918ஆம் ஆண்டு முதல் 1939 ஆம் ஆண்டுவரை குடியரசாக விளங்கியது.

(இச்சமயத்தில் தாமஸ் மார்ஸரிக் குடியரசு தலைவராக இருந்தார்)

11. **டென்மார்க்**

ஒன்பதாம் கிறிஸ்டியன் (1863-1906)
எட்டாம் ஃபிரடெரிக் (1906-1912)
பத்தாம் கிறிஸ்டியன் (1912-1947)

12. **நார்வே**

1905ஆம் ஆண்டு வரை ஸ்வீடனுடன் சேர்ந்து இருந்தது. அரசர் ஏழாம் ஹாக்கன் (1905-1957)

13. **நெதர்லாந்து**

மூன்றும் வில்லியம் (1849-1890)
வில்ஹெல்மினு அரசியார் (1890-1948)

14. **பல்கேரியா**

1878ஆம் ஆண்டு வரை ஆட்டொமன் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது.

இளவரசர் அலெக்ஸாந்தர் ஃகூசா (1879-1886)
இளவரசர் முதலாம் ஃபெர்டிணண்டு (1887-1908)
அரசர் முதலாம் ஃபெர்டிணண்டு (1908-1918)
அரசர் மூன்றும் போரிஸ் (1911-1943)

15. **பெல்ஜியம்**

அரசர் இரண்டாம் லியோஃபோல்டு (1865-1909)
முதலாம் ஆல்பர்ட் (1909-1934)

16. **பைலோருஷ்யா (Byelorussia)**

1917ஆம் ஆண்டு வரை இரஷ்யப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது.

1917ஆம் ஆண்டு முதல் ஐக்கிய சோவியத் சோஷியலிசக் குடியரசின் ஒரு பகுதியாக உள்ளது.

17. பொஹீமியா

1918ஆம் ஆண்டுவரை ஆஸ்திரியாவின் ஒரு பகுதியாக இருந்தது.

1918ஆம் ஆண்டு முதல் செக்கோஸ்லாவாகியாவின் பகுதியாக உள்ளது.

18. போப்பாண்டவரின் ஆட்சிப் பகுதி

போப் ஒன்பதாம் பயஸ் (1846-1878)
போப் பதின்மூன்றும் லியோ (1878-1903)
போப் பத்தாம் பயஸ் (1903-1914)
போப் பதினைந்தாம் பெனிடிக்ட் (1914-1922)

19. போலந்து

1918 ஆம் ஆண்டு வரை பிரிவினையின் காரணமாக ஒரு பகுதி இரஷ்யாவுடனும், ஒரு பகுதி ஜெர்மனியுடனும், மூன்றும் பகுதி ஆஸ்திரியாவுடனும் இருந்தது.

குடியரசு (1918-1940). (ஜோஸப் பில் சூட்ஸ்கி (1918-1922) குடியரசு தலைவர்)

20. போர்ச்சுகல்

முதலாம் லூயிஸ் (1861-1889)
முதலாம் சார்லஸ் (1889-1908)
இரண்டாம் மேனுவேல் (1908-1910)
குடியரசு (1910 முதல்)

21. மாண்டெநெக்ரோ

இளவரசர் முதலாம் நிக்கோலஸ் (1860-1910)
அரசர் முதலாம் நிக்கோலஸ் (1910-1918)
1918 ஆம் ஆண்டு முதல் யூகோஸ்லாவியாவின் ஒரு பகுதியாக இருந்தது.

22. யுக்ரெய்னியா

1917 ஆம் ஆண்டு வரை இரஷ்யப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது.

1919 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய சோவியத் சோஷியலிசக் குடியரசின் ஒரு பகுதியாக உள்ளது.

23. யூகோஸ்லாவியா

முதலாம் பீட்டர் (1918-1921).
முதலாம் அலெக்ஸாந்தர் (1921-1934)

24. லாட்வியா

1918 ஆம் ஆண்டு வரை இரஷ்யப் பேரரசில் இருந்தது.
1918 ஆம் ஆண்டு முதல் 1940 ஆம் ஆண்டு வரை குடியரசாக இருந்தது.


25. லெக்ஸிம்பர்க்

மூன்றும் வில்லியம் (1849-1890)
அடால்ஃபஸ் (1890-1905)
நான்காம் வில்லியம் (1905-1912)
அடிலெய்டி (Adelaide) (1912-1919)
கார்லோட் (Charlotte) (1919 முதல்)


26. ஹங்கேரி

பிரான்ஸிஸ் ஜோஸப் (1867-1916)
சார்லஸ் (1916-1918)
குடியரசு (1918-1920)


படங்கள்




படம் 1


ஆப்பிரிகாவில் ஐரோப்பியரின் ஆதிக்கம் (1914)
ரியோடிரோ
மொராக்கோ
அல்ஜீரியா
சூடான் பிரான்ஸ்
லிபியா
நைஜீரியா
காமரூன்
எகிப்து
சூடான் (ஆங்கில-எகிப்து)
காங்கோ (பெல்ஜியம்)
அங்கோலா
தெற்கு ஆப்பிரிக்கா (ஜெர்மனி)
கிழக்கு ஆப்பிரிக்கா (ஜெர்மனி)
மடகாஸ்கர் (பிரா)
ஆரஞ்சு பிரிஸ்டேட்
கேப்காலனி
ஸ்பெயின்
பிரிட்டன்
போர்ச்சுகீஸ்
பிரான்ஸ்
பெல்ஜியம்
ஜெர்மனி

படம் 2



வடக்கு
இலத்தீனமெரிக்கா
(20 ஆம் நூற்றுண்டின்
தொடக்கத்தில்)
ஐக்கிய அமெரிக்கா
மெக்ஸிகோ
மெக்ஸிகோ
வளைகுடா
கியூபா
சாண்டோமிங்கோ
விர்ஜின் (தீவு)
ஜமாய்கா
ஹெய்டி
ஹாண்டூராஸ்
குவாடிமாலா
நிகாராகுவா
எல்சால்வடார்
கோஸ்டா
ரிகா
பனாமா
கொலம்பியா
வெனிசூலா
பசிபிக் பெருங்கடல்
ஸ்பெயின்
நாட்டுக்காரர்கள்

படம் 3




தெற்கு
இலத்தீன மெரிக்கா
(20 ஆம் நூற்றாண்டின்
தொடக்கத்தில்)
கரீபியன் கடல்
வெனிஸூலா
கயானா
டச்
பிரெஞ்
கொலம்பியா
ஈக்வடார்
பெரு
பிரேசில்
பொலீவியா
சிலி
பராகுவே
அர்ஜெண்டைனா
உருகுவே
பசிபிக்
பெருங்கடல்
அட்லாண்டிக்
பெருங் கடல்
மெகல்லன்
ஜலசந்தி
பிரான்சு
போர்ச்சுகீஸியர்
பிரஞ்சுக்காரர்கள்
டச்சுக்காரர்கள்
ஆங்கிலேயர்கள்
ஸ்பெயின்
நாட்டுக்காரர்கள்


படம் 4



படம் 5



படம் 6


ஐரோப்பா
(பாரிஸ் அமைதி
உடன்படிக்கையின் படி)
1919 – 1920
ரஷ்யா
ஜெர்மனி
பிரான்ஸ்
ஸ்பெயின்
இத்தாலி
போலந்து
ருமேனியா
துருக்கி
மத்தியத் தரைக் கடல்
ஆர்க்டிக் கடல்

படம் 7